நூல் தேட்டம்

(தொகுதி 6)

தாயகத்திலும் புகலிடத்திலும்
வெளியிடப்பெற்ற
ஈழத்துத் தமிழ் நூல்கள்

குறிப்புரையுடனான

நூல்விபரப்பட்டியல்

என்.செல்வராஜா

அயோத்தி நூலக சேவைகள்
மே 2010

© Copy Right 2010 by N.Selvarajah
All Rights Reserved. No part of this publication may be reproduced or utilised, stored in a retrieval system, or transmitted in any form or by any means, electronic, mechanical, photocopying, recording or otherwise, without the prior written permission of the author.

நன்றி

நூல்தேட்டத்தின் ஆறாவது தொகுதியை உங்கள் கரங்களில் இன்று கையளிப்பதற்குத் தோன்றாத் துணையாக இருந்த அனைவருக்கும் முதலில் நன்றிகூறுவது என் தலையாய பணியாகும்.
நூல்தேட்டம் அன்று என் மனதில் கருக்கொண்ட வேளை, தன் பல்கலைக்கழக வாழ்வின் நெருக்கடிகளுக்குள்ளும் ஓடித்திரிந்து நூல்களைத் தேடித்தந்து என்னை ஆர்வத்துடன் செயற்படவைத்து மகிழ்ந்துவிட்டு இன்று எம்மிடையே இல்லாது இளமையிலேயே காலன்

வசப்பட்டு, என்றும் இளமையாக எங்கள் மனதில் நிலை கொண்டுவிட்ட எம் இனிய மருமகள் சுகந்தியையே எப்பொழுதும் முதலில் நினைவுகூர்வதுண்டு.
ஆறாவது தொகுதிக்கான தேடலில் இறங்கியிருந்த வேளையில் தமது நூற்சேர்க்கையைப் பார்வையிட மனமுவந்து அனுமதியளித்தவர்கள், தமது நூல்களை பதிவின்பொருட்டு, அன்பளிப்பாக வழங்கியவர்கள், எனது பணிகள் பற்றிய கட்டுரைகளை எழுதி தாயக, புகலிட ஊடகங்களில் பதிவாக்கியவர்கள், எழுத்தாளர்களுடனான ஒன்றுகூடல்களை தன்னார்வ முனைப்புடன் ஒழுங்குசெய்தவர்கள் என்று இப்பட்டியல் நீளும். சிலரின் பெயர்கள் தவறுதலாக விடுபட்டிருக்கலாம். மனதில் நிலைத்தவர்களை முடிந்தவரையில் இங்கு மீட்டிருக்கின்றேன்.
ஐந்தாவது தொகுதியை உரியகாலத்தில் செவ்வையாக்கம் செய்து, அழகுற அச்சிட்டுத் தந்ததுடன், அத்தொகுதியை இலங்கையில் பரவலாக விநியோகம் செய்யும் பொறுப்பினையும் கலாபூஷணம் பீ.எம்.புன்னியாமீன் ஏற்றிருந்தார். ஆறாவது தொகுதியையும் அச்சேற்றி விநியோகித்துத் தரும் பொறுப்பினையும் அவரே ஏற்றிருந்தார். அவருக்கு என் நன்றி.
இலண்டன், ஐரோப்பிய, ஸ்கன்டிநேவிய நகரங்களில் தங்கள் அரிய நூற்சேர்க்கைகளிலிருந்து தேவைப்பட்ட நூல்களை இத்தொகுதிக்காக நான் பயன்படுத்த அனுமதியளித்ததுடன் மேலும் பலரின் தொடர்புகளையும் தாயகத்திலும் புகலிடத்திலும் ஏற்படுத்தித் தந்தவர்கள் பலர். இலண்டனிலிருந்து திரு. ஐ.தி.சம்பந்தன், தேசம் த.ஜெயபாலன், அ.மயூரன், எஸ்.கே.ராஜென் ஆகியோர் குறிப்பிடத் தகுந்தவர்கள்.
பாரிசில் உள்ள பல நூல்சேகரிப்பாளர்களை எனக்கு அடையாளம்காண வைத்தவர் புகலிடத்தின் ஊடகத்துறையில் தனித்துவமான ஒலிபரப்பாளராகவும் நிகழ்ச்சித் தயாரிப்பாளராகவும் இயங்கும் எஸ்.கே.ராஜென் அவர்கள். தனது உலகளாவிய அறிமுகங்களுக்கூடாக நூல்தேட்டப் பதிவுக்காக நூல்களையும் ஆர்வத்துடன் சேகரித்துத் தந்திருக்கிறார். அவருக்கும் எனது நன்றி.
ஆறாவது தொகுதிக்கான நூல்பதிவுக்கான எனது பிரான்ஸ் பயணத்தின்போது பாரிஸ் அறிவாலய அதிபர் நண்பர் முருகையா சிவதாஸ் தனது வர்த்தக நிலையத்திலிருந்த ஈழத்துத் தமிழ் நூல்களைப் பதிவுசெய்ய அனுமதியளித்து அதற்கான உதவிகளையும் வழங்கியிருந்தார். அவருக்கு என் நன்றி. பாரிஸ் நகரத்தில் வாழும் மாணி. நாகேஷ், ஸ்ரீபாரதி பதிப்பக உரிமையாளர் ஸ்ரீதரன், தமிழாலயம் பாலச்சந்திரன், மற்றும் அசோக் ஆகியோரின் சேகரிப்பிலிருந்த அரிய நூல்களை ஆறாவது தொகுதிக்காக என்னால் பதிவுசெய்ய முடிந்தது. அதற்கு உதவிய இவர்களுக்கும் என் நன்றி.
நோர்வேயில் புலம்பெயர்ந்து வாழும் கார்மேகம் நந்தாவின் அழைப்பின்பேரில் ஒஸ்லோ நகரத்திற்குச் சென்றிருந்த வேளை, அங்கு சகோதரிகள் மேர்சி மார்கிரற், தி.தயாநிதி (சக்தி சஞ்சிகை) ஆகியோர் தமது சேகரிப்புகளிலுள்ள பல நூல்களை பார்வையிடத் தந்தும் எமது நூலகத்திற்காக நூல்களையே வழங்கியும் உதவினார்கள். இவர்கள் இருவருக்கும் எனது நன்றி.
இலங்கையில் தாம் அச்சிடும் நூல்கள் அனைத்திலும் ஒரு பிரதியை எனது பணிக்காக வழங்கிவரும் சேமமடு பொத்தகசாலை உரிமையாளர் பத்மசீலன் கொழும்பு குமரன் புத்தக இல்ல உரிமையாளர் கணேசலிங்கம் குமரன், ஆகியோருக்கும் எனது உளம்நிறைந்த நன்றிகள்.
இவர்களின் வழியில் ஈழத்துத் தமிழ் நூல் வெளியீட்டாளர்கள் அனைவரும் நூல்தேட்டப் பதிவுக்காகத் தமது வெளியீடுகளை வழங்க எதிர்காலத்தில் சமூகப் பொறுப்புடன் முன்வருவார்கள் என்றும் நம்புகின்றேன். குமரனின் அறிமுகத்தினால் ஓ.எஸ்.எம்.அலி என்ற பெரியாரின் தொடர்பு எனக்குக் கிட்டியது. எழுபதுகளில் அவர் U.S.Library of Congress நூலகத்திற்கு இலங்கைத் தமிழ்நூல்களை சேகரித்து வழங்கும் பணியில் ஈடுபட்டிருந்த வேளையில், அரிதான அந்நூல்கள் பற்றிய விரிவான குறிப்பினைக் கையெழுத்துப் பிரதியாகத் தொகுத்து வைத்திருந்தார். இத்தொகுப்பை குமரன் அவரிடமிருந்து பெற்று எனக்கு அனுப்பிவைத்திருந்தார். அதிலிருந்த விரிவான குறிப்புகளைப் பயன்படுத்தியே 315 நூல்களை நூல்தேட்டம் தொகுதி 6இல் சேர்த்துக்கொள்ள முடிந்தது. திரு அலி அவர்களின் பணி ஈழத்துத் தமிழ் நூல் விநியோக வரலாற்றில் பதிவுசெய்யப்படவேண்டியதாகும். அதனால் இத்தொகுதியில் அப்பெரியார் பற்றிய வாழ்வும் பணியும் பற்றிய விரிவான கட்டுரையொன்றினை திரு பீ.எம்.புன்னியாமீன் அவர்களின் வாயிலாக எழுதுவித்து இணைத்திருக்கிறேன். இத்தொகுப்பில் பயன்படுத்தியிருக்கும் பதிவுகளில் திரு அலியின் தகவல்கள் இடம்பெற்றுள்ள பதிவுகளில்

“நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14” என்ற குறிப்பினையும் நன்றியுடன் குறிப்பிட்டிருக்கிறேன்.
தாயகத்திலும், புகலிடத்திலும் காலத்துக்குக் காலம் எனது நூல்தேட்டம் தொகுப்பு முயற்சிகளுக்கு ஆதரவான செய்திகளைப் பிரசுரித்தும், விமர்சனக் கட்டுரைகளை வெளியிட்டும் எனக்கு ஆதரவை வழங்கிய சிறுசஞ்சிகை ஆசிரியர்களுக்கும், பத்திரிகையாளர்களுக்கும் எனது நன்றிகள்.
எனது வாழ்வின் பெரும்பகுதி நேரத்தை விழுங்கிவிடும் நூல்தேட்டம் தொகுப்புக் கடமைகளின்போது எமது குடும்பச்சுமைகளை முழுமையாகத் தாங்கி என்னைச் சுதந்திரமாக இயங்கவிட்டதுடன் எனக்குத் துணையாகவிருந்து நூலாக்கக் கடமைகளிலும் முடிந்தவரை உதவிவரும் என் அன்புத் துணைவி விஜிக்கு நன்றி செலுத்தத் தவறினால் மிக முக்கியமான பதிவொன்றினை இங்கு மேற்கொள்ளத் தவறியவனாவேன். குடும்பத்தின் நிதி நிலைமையை மிகச் சிக்கனமாகக் கையாண்டு ஒவ்வொரு நூல்தேட்டம் தொகுதிக்கும் தேவையான மேலதிக நிதியை சேமித்து வழங்கும் இமாலயப்பணியும் இவருடையதாகும். இந்நூலைக் கணணியில் பொறிக்கும்வேளை என் அறியாமையினால் நான் விடும் இமாலயத்தவறுகள் அனைத்தையும் பல்கலைக்கழகம், மற்றும் வீட்டுவேலைக் கடமைக்கிடையேயும் முகம்கோணாது சீர்செய்து விட்டு, எனக்குக் கணணியறிவைச் சிறிது புகட்ட எத்தனித்துத் தோற்றுப்போகும் என் மகன் கௌதமனுக்கும் எனது நன்றிகள்.
இறுதியாக, நிறுவனரீதியான நிதியுதவிகள் ஆதரவுகள், எதுவுமின்றி, தனிமனிதமுயற்சியாக மேற்கொள்ளப்படும் இந்த ஆவணப்பதிவின் அவசியத்தையும், ஆழத்தையும் புரிந்துகொண்டு, இந்நூலைக் கொள்வனவுசெய்து எனது முயற்சியின் நிதிச் சுமையைக் குறைக்கும்வகையில் தங்களாலான பங்களிப்பை நல்கிவரும் இனிய தமிழ் உறவுகளுக்கு என் மனம் கனிந்த நன்றிகள். உங்கள் ஆதரவில் நம்பிக்கைவைத்து, நூல்தேட்டத்தின் ஏழாவது தொகுதியுடன் அடுத்த ஆண்டில் உங்களைச் சந்திப்பேன் என்ற உறுதியுடன் விடைபெறுகிறேன்.

-என்.செல்வராஜா-
05.05.2010

முன்னுரை

நூல்தேட்டம்
(ஓர் அறிமுகம்)

ஈழத்துத் தமிழ் நூல்களுக்கான நூல்விபரப்பட்டியலான நூல்தேட்டத்தின் முதலாவது தொகுதி 2002இலும் இரண்டாவது தொகுதி 2004இலும் மூன்றாவது தொகுதி 2005இலும் நான்காவது தொகுதி 2006இலும் ஐந்தாவது தொகுதி 2008 இலும் வெளியிடப்பட்டன. அதன் தொடர்ச்சியான ஆறாவது தொகுதி இதுவாகும். இதில் ஈழத்துத் தமிழ் எழுத்தாளர்களினதும், வெளியீட்டாளர்களினதும் ஆயிரம் நூல்கள் பற்றிய அடிப்படை நூலியல் குறிப்புகளும் அதனையடுத்து நூல் பற்றிய சிறு அறிமுகக் குறிப்பும் இடம்பெற்றுள்ளன. தொடர் இலக்கங்கள் முதலாவது தொகுதியிலிருந்து தொடர்ச்சியாக வழங்கப்பட்டுள்ளன. அவ்வகையில் ஆறாவது தொகுதியில் இடம்பெறும் நூல்களுக்கு 5001இலிருந்து 6000வரை தொடரிலக்கமிடப்பட்டுள்ளன.

தொகுப்பும் தவிர்ப்பும்

இது ஒரு தேர்ந்த நூற்பட்டியலன்று. இங்கு பட்டியலாக்கப்பட்டுள்ள தனி நூல்கள் (Monographs) எவையும் எவ்வித தரக்கட்டுப்பாட்டுக்கும் உட்படவில்லை. இன்று பார்வையிடக்கூடிய ஈழத்துத் தமிழ் நுல்கள் அனைத்தையும், ஒரு தொகுதிக்கு 1000 நூல்கள் என்ற எண்ணிக்கையில் பட்டியலிடுவதே நூல்தேட்டத்தின் அடிப்படை நோக்கமாகும். வெளியீட்டின் பௌதிகத் தன்மை கருதி சில பிரசுரங்கள் நூல்தேட்டத்தில் சேர்த்துக்கொள்ளப்படவில்லை. துண்டுப்பிரசுரங்கள், வரைபடங்கள், அச்சிடப்படாத கையெழுத்துப் பிரதிகள், ஒலி, ஒளிப்பதிவு நாடாக்கள், இறுவெட்டுகள் என்பன இத்தொகுப்பில் சேர்க்கப்படவில்லை.
பெரும்பான்மையான கல்வெட்டுகள், ஞாபகார்த்த மலர்கள், சஞ்சிகைகள், என்பனவும் இத்தொகுதியில் தவிர்க்கப்பட்டுள்ளன. ஆயினும், தனி ஆவணமாகக் கருதும்வகையில் வெளியிடப்பட்டிருக்கும் சஞ்சிகைகளின் சிறப்புமலர்கள் இத்தொகுதியில் இடம்பெற்றுள்ளன. மேலும், சில கல்வெட்டுக்களும், ஞாபகார்த்த மலர்களும் தனிநூலின் வகைக்குள் அடங்கக்கூடியதான கனதியான அம்சங்களுடன் வெளிவந்திருப்பதால் அவற்றையும் இத்தொகுதியில் சேர்த்துக்கொண்டுள்ளோம்.
இதில் தொகுக்கப்பட்டுள்ள நூல்கள் எவ்வித கால எல்லைகளுக்கும் வரையறுக்கப்படவில்லை. ஒரு நூலின் பின்னைய பதிப்புகள் வெளிவரும்போது அவை புதுக்கியோ, சுருக்கியோ, வெளிவரும் வாய்ப்பிருப்பதாலும், முற்றிலும் வேறான நூலியல் தகவல்களை அவை கொண்டிருப்பதாலும் குறித்தவொரு நூலின் பல்வேறு பதிப்புகளும் இங்கு ஒரே பதிவிலக்கத்தின் கீழ் இடம்பெறுகின்றன.
முன்னைய பதிவிலக்கத்தைப் பெற்ற நூல்களின் மீள்பதிப்புக்கள் பின்னிணைப்பில் தரப்பட்டுள்ளன.

பதிவுகளின் ஒழுங்கமைப்பு

நூல்தேட்டம் ஒரு உசாத்துணை நூலாகும். ஒரு நூலைப் பற்றிய நூலியல் தகவல்களைக் குறுகிய நேரத்தில் வாசகர் கண்டறிய வகைசெய்யும் வண்ணம் இத்தொகுதி மூன்று பிரிவுகளாகப் பதியப்பட்டுள்ளது.
முதற்பிரிவில், நூல் பற்றிய பிரதான பதிவுகள் பாடஒழுங்கில் வகைப்படுத்தப்பட்டு தொடரெண்கள் மூலம் அடையாளமிடப்பட்டுள்ளன. பாடவாரியாக ஒரு நூலைத்தேடும் வாசகர் இப்பிரிவின் மூலம் பயனடைவர்.
இரண்டாவது பிரிவு, தலைப்பு வழிகாட்டியாகும். முதற்பகுதியில் நூல்கள் பாடவாரியாக முதலில் ஒழுங்குபடுத்தப்பட்டு, பின்னர் அகரவரிசையில் காணப்படுவதால் ஒரு நூலின் தலைப்பைக் கொண்டு நூலைத் தேடவிழையும் வாசகர் இரண்டாவது பிரிவில் அகரவரிசையில் காணப்படும் தலைப்பு வழிகாட்டியின் வாயிலாக நூலின் தொடர் இலக்கத்தைக் கண்டறிந்து முதற்பகுதியில்

உள்ள பிரதான பதிவைப் பார்வையிட முடியும். இங்கு தலைப்புக்கள் அகரவரிசை எழுத்தொழுங்கில் அல்லாது சொல்லொழுங்கிலேயே அகரவரிசைப்படுத்தப்பட்டுள்ளமை அவதானிக்கத்தக்கது.
ஆசிரியர், பதிப்பாசிரியர், தொகுப்பாசிரியர், மூல ஆசிரியர் ஆகியோரின் விபரங்களைக் கொண்டு ஒரு நூலைத்தேடும் வாசகர் மூன்றாவது பிரிவின் மூலம் பயனடைவர். இங்கு ஆசிரியர் அகர வரிசையில் நூல்களின் தொடர் எண்களைக் கண்டறிந்து அதன் மூலம் தான் தேடும் நூலைச் சென்றடைய முடியும். ஆசிரியர் அகரவரிசையில் புனைபெயர்களும் இடம்பெறுகின்றன. ஒரு நூலாசிரியர் இயற்பெயரிலும் புனைபெயரிலும் நூல்களை எழுதுவதால் புனைபெயரின் கீழ் நூலைத்தேடும் வாசகர் ஆசிரியரின் இயற்பெயரிலும் அவற்றைத் தேட உதவும் வகையில், **பார்க்க, மேலும் பார்க்க** போன்ற வழிகாட்டி அம்சங்கள் தேவை கருதிச் சேர்க்கப்பட்டுள்ளன. இரு ஆசிரியர்கள் ஒரே புனைபெயரில் வலம் வருவதையும் இங்கு காணமுடிவதால் புனைபெயரில் நூலைத்தேடும் வாசகர்கள் அவதானமாக இருக்க வேண்டும். வாசகரின் தேடுகை நேரத்தை குறைக்கும் வகையில் புனைபெயரிலும் இயற்பெயரிலும் எழுதும் ஆசிரியரின் பிரபல்யமான ஒரு பெயரின்கீழ் மட்டும் இயன்றவரை அவரது நூல்களின் தொடர்எண்களைக் குறித்துள்ளோம்.

நூலியல் பதிவுகள்

பிரதான பகுதியில் நூல் பற்றிய தகவல் மூன்று பகுதிகளாகத் தரப்பட்டுள்ளன. முதற்பகுதியில் நூலின் தலைப்பு, உப தலைப்பு, அந்நூலின் ஆக்கத்துக்கு அதிகாரபூர்வ உரித்துடைய ஆசிரியர், தொகுப்பாசிரியர், பதிப்பாசிரியர் விபரங்கள், வெளியீட்டு விபரம், பதிப்பு விபரம், ஆகியனவும் அடைப்புக்குறிக்குள் குறிப்பிட்ட நூலின் குறித்த பதிப்பிற்கான அச்சகத்தின் விபரமும் தரப்பட்டுள்ளன. கிடைக்கப்பெறுமிடத்து சர்வதேச தராதர நூல் எண்களும் இப்பகுதியில் இடம்பெறுகின்றன.
ஆசிரியர் பற்றிய தகவலில் ஆசிரியரின் இயற்பெயர், புனை பெயர் பற்றிய குறிப்புகளும் அறியமுடிந்தால் தரப்பட்டுள்ளன. பதிவுக்குள்ளாகும் நூலின் உரித்தாளர் மூலநூலாசிரியராக இல்லாதவிடத்து, அவரின் பங்களிப்புப் பற்றிய தகவல் அவரது பெயரையடுத்து அடைப்புக்குறிக்குள் குறிப்பிடப்பட்டுள்ளது.
நூலின் வெளியீட்டாளர் பற்றிய தகவல் குறிப்பில் வெளியீட்டாளரின் இயங்குதளம், வெளியீட்டகத்தின் பெயர், முகவரி என்பன குறிப்பிடப்பட்டுள்ளன. ஒரு வெளியீட்டகம் ஒன்றுக்கு மேற்பட்ட நாடுகளில் தனது கிளைகளைப் பரப்பியிருக்கும் வேளை, பதிவுக்குள்ளாகும் நூலில், குறிப்பாக ஒரு இயங்குதளத்தை மட்டும் வெளிப்படுத்தியிருந்தாலன்றி, பதிவுத்தேவை கருதி, நூல் அச்சிடப்பட்ட நாட்டில் உள்ள வெளியீட்டகத்தின் கிளை அமைந்த ஊரே அதன் இயங்குதளமாகப் பதியப்பட்டுள்ளது. ஆசிரியரே வெளியீட்டாளராகவும் இருக்கும்போது, நூலில் காணும் ஆசிரியரின் முகவரி வெளியீட்டக முகவரியாகக் கொள்ளப்பட்டுள்ளது.
நூலின் பதிப்பு விபரத்தில், பதிவுக்குப் பெறப்பட்ட நூலின் பதிப்பு விபரமும், அப்பதிப்பு வெளியிடப்பட்ட திகதியும் குறிப்பிடப்பட்டுள்ளன. குறிப்பிட்ட நூல் முதற்பதிப்பு அல்லாதவிடத்து முன்னைய பதிப்புகள் பற்றிய திகதி விபரங்களும் நூலில் தரப்பட்டவாறாகப் பதியப்பட்டுள்ளன. சில வெளியீட்டாளர்கள், மறுபதிப்பு நூல்களையும் முதற்பதிப்பாகக் குறிப்பிட்டுள்ளமை சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. குறிப்பிட்ட வெளியீட்டாளரின் முதற் பதிப்பாகவே அது கொள்ளப்பட வேண்டியுள்ளது. இவ்விபரங்கள் நூலியல் நேர்மை கருதி, பதிப்பு நூலில் குறிப்பிடப்படவேண்டியது அவர்களது கடமையாகும் என்பதை இங்கு வலியுறுத்துதல் அவசியமாகின்றது.
பெரும்பான்மையான தமிழக மீள்பதிப்புக்களில் இத்தவறுகள் காணப்படுகின்றன.
நூலின் அச்சக விபரம் அடைப்புக்குறிக்குள் தரப்பட்டுள்ளது. இந்த விபரம் பதிவுக்குரிய நூலின் குறித்த பதிப்புக்கு மட்டும் உரியதாகும் என்பதும் கவனத்துக்குரியது.
நூலியல் பதிவின் இரண்டாவது பகுதியாக அமைவது நூலின் பௌதீகத் தகவல்களாகும். இதில் நூலின் பக்கங்கள், சிறப்பம்சங்கள், விலை, அளவு, தராதர எண் ஆகியன உள்ளடக்கப்பட்டுள்ளன.
நூலின் பக்கங்கள் மூன்று வகையில் குறிப்பிடப்படுகின்றன. அவை ரோமன் இலக்கமிடப்பட்ட பக்கங்கள், இலக்கமிடப்படாத பக்கங்கள், அரேபிய இலக்கமிடப்பட்ட பக்கங்கள் என்பனவாகும். ரோமன் இலக்கமும், அரேபிய இலக்கமும் இடப்பட்ட பக்கங்களின் எண்ணிக்கை

அவ்வவ்விலக்கங்களாலேயே சுட்டப்பட்டுள்ளன. இலக்கமிடப்படாத பக்கங்கள் அடைப்புக்குறிக்குள் தரப்பட்டுள்ளன. (உதாரணம்: VII, (12), 243 பக்கம்). பெரும்பான்மையான தமிழ் நூல்களில் முகவுரைப் பக்கங்கள் இலக்கமிடப்படாவிடினும் அவை பின்னர் அரேபிய இலக்கங்களாகத் தொடர்கின்றன. அத்தருணங்களில் அவை அரேபிய இலக்கமிடப்பட்ட பக்கங்களாகவே கருதப்பட்டுள்ளன.

பக்கங்கள் பற்றிய குறிப்பை அடுத்த அமைவது சிறப்பம்சங்களாகும். இங்கு வரைபடங்கள், புகைப்படங்கள், விளக்கப்படங்கள், தகடுகள் பற்றிய குறிப்புகள் காணப்படும். விலை விபரம் காலவரையறைக்குட்பட்டதாக அமைவதாயினும் வரலாற்றுத்தேவை கருதி மட்டுமே நூல்தேட்டத்தில் அவை சேர்க்கப்பட்டுள்ளது. நூலில் குறிப்பிடப்படும் விலை அந்நாட்டு நாணய அலகின் மூலம் குறிப்பிடப்பட்டுள்ளது. இலங்கை ரூபாவுக்கு மாத்திரம் நாடு குறிப்பிடப்படவில்லை. இது ஒரு வர்த்தக நூற்பட்டியல் இல்லையென்பதால் தேவைப்படுமிடத்து நூலின் தற்போதைய விலை பற்றிய தகவலை அதன் விற்பனையாளர்களிடமே வாசகர் உறுதிப்படுத்திக்கொள்ளல் வேண்டும்.

நூலின் பௌதீக விபரங்களில் அடுத்ததாக வருவது, நூலின் அளவாகும். இது சதம மீற்றரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இப்பிரிவில் இறுதியாக அமைவது நூலுக்கான சர்வதேச தராதர நூல் எண் (International Standard Book Number) பற்றிய தகவலாகும். ஈழத்துத் தமிழ் நூல்களில் விரல்விட்டு எண்ணக்கூடிய நூல்களே இவ்விலக்கத்தைத் தாங்கி வெளிவந்திருப்பினும் அதிகரித்து வரும் அதன் முக்கியத்துவம் கருதி இவ்விலக்கம் இப்பிரிவில் இடம்பெறுகின்றது. எழுத்தாளர்கள், வெளியீட்டாளர்களின் பயன்பாடு கருதி ISBN பற்றிய விரிவான கட்டுரையொன்று முதலாவது தொகுதியில் xiv-xviii பக்கங்களில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

நூலியல் தகவலின் மூன்றாவது, இறுதிப்பிரிவு நூல்பற்றிய சுருக்கக் குறிப்பாகும். இது ஒரு திறனாய்வுக் குறிப்பாகவோ, விளம்பரமாகவோ அல்லாது நூலினதும் நூலாசிரியரினதும் சிறு அறிமுகமாக மாத்திரம் அமைவது குறிப்பிடத்தக்கது. அரியநூல்களின் வைப்பிடம் பற்றிய குறிப்பு 3வது தொகுதியிலிருந்து வழங்கப்படுகின்றது. உதாரணமாக பெறுதற்கரிய சில ஈழத்து நூல்கள் பிரித்தானிய நூலகங்களிலும், மலேயாப் பல்கலைக்கழக இந்திய ஆய்வியல்துறையிலும் காணமுடிந்தது. அவை பற்றிய இருப்பு விபரம் இப்பகுதியில் அடைப்புக்குறிக்குள் தரப்பட்டுள்ளன.

பகுப்பாக்கம்

இந்நூலின் பிரதான பகுதியில் நூல்கள் பாட ஒழுங்கில் தொகுக்கப்பட்டுள்ளன. இதற்கென நாம் தேர்ந்தெடுத்துள்ள பாட ஒழுங்கு வரிசை, டூவியின் தசாம்சப்பகுப்பு முறையாகும். (Dewey Decimal Classification Scheme) தென்னாசியாவிலும் ஐரோப்பாவிலும் நூலகங்களில் பரவலாகப் பயன்படுத்தப்படும் இப்பகுப்பு முறை தமிழ் வாசகர்களுக்குப் பரிச்சயமானதொன்றென்ற வகையில் இப்பகுப்பாக்கத்தைப் பின்பற்றத் தீர்மானித்தோம். இப்பகுப்பாக்கத்தின் சிறப்பியல்புகளில் ஒன்று பிராந்தியத் தேவைகருதி இப்பகுப்பு முறையில் தேவைப்படும் மாற்றத்தைப் புகுத்தமுடியும் என்பதாகும். ஈழத்துத் தமிழ்நூல்களின் பகுப்புத்தேவை கருதி இப்பகுப்பு முறை சில மாற்றங்களுடன் பயன்படுத்தப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. இப்பகுப்பாக்கம் அறிவுத்தேட்டத்தை முதலில் பத்துப் பெரும்பிரிவுக்குள் அடக்குகின்றது. பின்னர் ஒவ்வொரு பெரும்பிரிவும் பத்து உபபிரிவுகளாகின்றன. அந்த உப பிரிவுகள் மேலும் பத்து உபபிரிவுகளாகின்றன. இத்தகைய ஒரு தசாம்சப்பகுப்பு முறை பற்றிய விரிவான விளக்கத்தை இங்கே தரமுடியாவிடினும் வாசகரின் தேவை கருதி இந்நூலில் பயன்படுத்தும் பகுப்புத் திட்டம் சுருக்கமாக இந்த அறிமுகப் பகுதியையடுத்துத் தரப்பட்டுள்ளது.

வாழ்க்கை வரலாறு

பகுப்பாக்க ஒழுங்கில் இறுதிப்பிரிவாக அமைவது வரலாறாகும். இதில் பிரதேச வரலாற்றுடன், வாழ்க்கை வரலாற்று நூல்களும் ஞாபகார்த்த மலர்களும் இடம்பெறுகின்றன. பகுப்பாக்கத்தின் போது பன்முகத்தோற்றம் பெற்ற பெரியார்களின் வரலாற்று நூல்களைத் தரம்பிரிக்கும்போது பிரதான பதிவை ஏதாவது ஒரு பிரிவுக்குள் பதிய வேண்டிய கட்டாயத்தேவை ஏற்பட்டது. ஒருவரது ஆளுமை எத்துறையில் பிரகாசித்தது என்பதை விட குறிப்பிட்ட நூலில் அவரது

பன்முகப்பட்ட ஆளுமையின் எப்பகுதி ஆய்வுக்கெடுக்கப்பட்டது என்ற அடிப்படையிலேயே அவரது நூலுக்கான பகுப்புப் பிரிவு தேர்ந்தெடுக்கப்பட்டது. அதனால் இப்பிரிவைப் பார்வையிடும் வாசகர்கள் தயவு செய்து பல்வேறு வாழ்க்கை வரலாற்றுப் பிரிவுகளிலும் கண்ணோட்டம் செலுத்துமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இலங்கை தொடர்பான பன்னாட்டவரின் தமிழ்ப்படைப்புக்கள்

இரண்டாம் தொகுதியிலிருந்து மேலதிக அம்சமாகச் சேர்க்கப்பட்டிருக்கும் பகுதி இதுவாகும். இன்றைய ஈழத்து இனப்பிரச்சினையின் சர்வதேசமயப்படுத்தல் காரணமாக ஈழத் தமிழரல்லாத பன்நாட்டவர்களிடையே உருவாகிவரும் ஈழத்தமிழர் சிக்கல் பற்றிய தேடலின் விளைவாக, தமிழகத்திலும் மலேசியாவிலும் ஐரோப்பாவிலும் ஈழத்தமிழர் பற்றிய நூல்களின் வரவு அதிகரித்திருப்பதைக் காணமுடிகின்றது. இவற்றில் பல தமிழிலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. இதன்விளைவாக, நூல்தேட்டத்தில் இவ்வாக்கங்களுக்கான ஆவணமாக்கலும் அவசியம் என்று கருதியதால், தனியானதொரு பிரிவாக அவை இடம்பெறுகின்றன.

முன்னைய பதிவுகளுக்கான மேலதிக தகவல்கள்

நூல்தேட்டம், ஈழத்தமிழரின் நூலியல் முயற்சிகளில், இயன்றவரை நிறைவான ஆவணமாக்கலையே மேற்கொள்ள விழைகின்றது. முன்னைய தொகுதியில் இடம்பெற்ற ஒரு நூல் திருத்திய மறுபதிப்பாக வெளியிடப்பட்டால், அதுபற்றிய தகவலையும் இத்தொகுதியில் தந்திருக்கின்றோம். தொகுப்பு முயற்சியில் குழப்பங்களைத் தவிர்க்கும் பொருட்டு இவை கொள்கையளவில் புதிய பதிவாகக் கருதப்பட மாட்டாது. இதனால் அப்பதிவிற்குத் தனியான தொடர் இலக்கத்தை வழங்காது, அதை பின்னிணைப்பாகச் சேர்த்துள்ளோம். வாசகர்களின் பயன்கருதி குறிப்பிட்ட இந்நூற்பதிவின் மூலப்பதிப்பின் தொடர் இலக்கத்தையும் குறிப்புப் பகுதியில் தந்துள்ளோம்.

நிறைவுக் குறிப்பு

நூல்தேட்டத்தின் முன்னைய தொகுதிகளை எமது சக்திக்கெட்டியவரை சர்வதேச நூற்பட்டியல்களின் சிறப்பம்சங்களைக் கூர்ந்து கவனத்துக்கெடுத்துத் தொகுத்திருந்தோம். இத்தொகுதிகளில் காணப்படும் தவறுகளைச் சுட்டிக்காட்டி, காத்திரமான ஆலோசனைகளைப் பலர் வழங்கியிருந்தனர். அவற்றில் நாம் ஏற்றுக்கொண்ட பல விடயங்களை இத்தொகுதியிலும் சேர்த்திருக்கின்றோம். அடுத்து வரவுள்ள ஏழாவது தொகுதி மேலும் சிறந்ததாக அமைய உங்கள் மேலான ஆதரவை எதிர்பார்க்கின்றோம்.

இத்தொகுதி வர்த்தக நோக்கமற்றதொரு தனிமனித முயற்சியாகும். நிறுவனரீதியில் மேற்கொள்ளப்படவேண்டிய இத்தகைய உசாத்துணை வெளியீட்டு நடவடிக்கைகள் தனிமனித முயற்சியாக மலரும்போது நிதி, காலம், நிபுணத்துவ உதவி என்பன எப்பொழுதும் வரையறைக்குட்பட்டதாகவே அமைகின்றன. இதை மனதில் கொண்டு, இத்தொகுதியின் பரந்துபட்ட அறிமுகத்திற்கும் விநியோகத்திற்கும், விற்பனைக்கும் உங்களாலான பங்களிப்பை வழங்குவீர்கள் என்று நம்புகின்றோம். இதன் விற்பனை மூலம் பெறப்படும் நிதி எமது அடுத்த தொகுதியின் துரித உருவாக்கத்துக்கு உறுதுணையாக அமையும் என்று எதிர்பார்க்கின்றோம். உலகெங்கும் பரந்துவாழும் ஈழத்தமிழர்கள் தாம் புலம்பெயர்ந்துவாழும் நாடுகளிலுள்ள நூலகங்களையும் நூல்தேட்டத்தின் அனைத்துத் தொகுதிகளும் சென்றடைவதற்குத் தங்களாலான பங்களிப்பினை நல்குவதைத் தார்மீகக் கடமையாகக் கொள்வீர்கள் என்றும் எதிர்பார்க்கின்றோம்.

நூல்தேட்டத்தில் பயன்படுத்தப்பட்டுள்ள வகுப்புப் பிரிவு

(டுவி தசாம்சப் பகுப்பை அடிப்படையாகக் கொண்டது)

பிரதான பிரிவுகள்

000-099 பொதுப்பிரிவு
100-199 மெய்யியல்துறை
200-299 சமயங்கள்
300-399 சமூக விஞ்ஞானங்கள்
400-499 மொழியியல்
500-599 தூய விஞ்ஞானங்கள்
600-699 பிரயோக விஞ்ஞானம், தொழில்நுட்பம்
700-799 கலைகள், நுண்கலைகள்
800-899 இலக்கியம்
900-999 புவியியல், வரலாறுகள்

விரிவான பிரிவுகள்

000 பொதுப்பிரிவு
000 பொது அறிவு 5001-5004
010 நூலியல், நூல்விபரப்பட்டியல் 5005-5006
020 நூலகவியல், தகவல் விஞ்ஞானம் 5007-5009
050 பொதுப் பருவஇதழ்கள், சிறப்பிதழ்கள், வழிகாட்டிகள், சுட்டிகள் 5010
051 பருவஇதழ் சிறப்பிதழ்கள் 5011-5017
053 வழிகாட்டிகள் 5018-5019
070 ஊடகவியல், வெளியீட்டுத்துறை 5020-5028

100 மெய்யியல்துறை
100 தத்துவவியல் 5029- 5031
150 உளவியல் 5032-5038
158.1 மானிட மேம்பாடு 5039-5041
160 தர்க்கவியல் 5042
170 ஒழுக்கவியல் 5043-5049
180 இந்து தத்துவம் 5050-5079
190 சோதிடம், வானசாஸ்திரம் 5080-5081

200 சமயங்கள்
210 பொதுச்சமயம் சார்பானவை 5082-5083
220 கிறிஸ்தவம் 5084-5086
294.3 பௌத்தம் 5087-5088
294.5 இந்து சமயம் 5089-5197
294.5(1) இந்து நிறுவனங்கள், மாநாடுகள், மலர்கள் 5198-5224
297 இஸ்லாம் 5225-5234

300 சமூக விஞ்ஞானங்கள்
301 சமூகவியல் 5235-5247
301.1 பண்பாடு 5248-5250
302 பெண்ணியம் 5251-5265
305.5 சாதியம் 5266-5274
306 கலாச்சாரம் 5275
310 புள்ளிவிபரவியல் 5276
320 அரசறிவியல் 5277-5291
323 மனித உரிமை 5292-5293

327 சர்வதேசத் தொடர்புகள் 5294
330 பொருளியல் 5295- 5297
331.88 தொழிற் சங்கங்கள் 5298-5299
334 கூட்டுறவு 5300
335.4 கம்யூனிசம் 5301
338 பொருளாதார வளங்கள், மீன்வளம் 5302-5303
340 சட்டவியல் 5304-5308
342 அரசியலமைப்புச் சட்டம் 5309-5310
350 பொது நிர்வாகம் 5311-5313
355 போரியல் விஞ்ஞானம், இராணுவ விஞ்ஞானம் 5314
360 சமூக சேவை நிறுவனங்கள் 5315-5321
364 பொதுப் பாதுகாப்பு நடைமுறைகள் 5322-5323
369.4092 சாரணர் இயக்கம் 5324
370 கல்வியியல் 5325-5353
370.1 கல்வி நிறுவனங்கள், மாணவர் சங்கங்கள் 5354-5358
381 வர்த்தகம் 5359
392.5 திருமணங்கள், சடங்கு முறைமைகள் 5360-5363
398 கிராமிய இலக்கியங்கள் 5364-5368
398.1 பழமொழிகளும் விடுகதைகளும் 5369

400 மொழியியல்
400 மொழியியல் 5370
439.81 டெனிஷ் மொழி 5371
440 பிரெஞ்சு மொழி 5372-5374
491.48 சிங்கள மொழி 5375
494.8 தமிழ் மொழி 5376-5377
494.8(1) தமிழ் இலக்கணம் 5378-5383
494.8(2) தமிழ்ப் பாடநூல்கள் 5384-5394

500 தூய விஞ்ஞானங்கள்
500 தூய விஞ்ஞானம் 5395
520 வானியல் விஞ்ஞானம் 5396
550 புவியியல் விஞ்ஞானம் 5397-5399
551.47 சுனாமி 5400-5401

600 தொழில்நுட்பம், பிரயோக விஞ்ஞானம்
610 மருத்துவம் 5402-5403
613 பொது உடல்நலவியல் 5404-5406
614 பொதுச் சுகாதாரம் 5407-5411
616 நோய்கள் 5412-5414
618 பெண்நோயியல், மகப்பேற்று மருத்துவம் 5415-5416
619 கீழைத்தேய மருத்துவம் 5417-5418
619.1 சித்த மருத்துவம் 5419-5421

700 கலைகள், நுண்கலைகள்
750 ஓவியக்கலை 5422
780 இசைக்கலை 5423-5439
791 நாட்டியக் கலை 5440-5442
792 அரங்கியல், நாடகக்கலை 5443-5446
793 திரைப்படக்கலை 5447-5449

800 இலக்கியத் துறைகள்

800 இலக்கியம் 5450
801 சிறுவர் இலக்கியங்கள் 5451
801.(1) சிறுவர் பாடல்கள், கவிதைகள் 5452-5461
801.(4) சிறுவர் கதைகள் 5462-5472
801.(5) சிறுவர் நாவல்கள் 5473-5483
801.(6) சிறுவர்க்கான கட்டுரைகள் 5484-5486
801.(7) சிறுவர்க்கான பலவின நூல்கள் 5487
891.2 சமஸ்கிருத இலக்கியம் 5488-5489
894.8 தமிழ் இலக்கியம் 5490-5493
894.8(1) தமிழ்க் கவிதைகள் 5494-5581
894.8(2) தமிழ் நாடகங்கள் 5582-5628
894.8(3) தமிழ்க்கவிதை நாடகங்கள்-காவியங்கள் 5629-5635
894.8(4) தமிழ்ச் சிறுகதைகள் 5636-5703
894.8(5) தமிழ் நாவல்கள், குறுநாவல்கள் 5704-5739
894.8(6) இலக்கியக் கட்டுரைகள், திறனாய்வுகள் 5740-5790
894.8(7) பலவினத் தொகுப்பு 5791-5801
899 பிறமொழி இலக்கியங்கள்
899.(1) பிறமொழிக் கவிதைகள் 5802
899.(2) பிறமொழி நாடகங்கள் 5803
899.(3) பிறமொழிக் கவிதை நாடகங்கள், காவியங்கள் 5804
899.(4) பிறமொழிச் சிறுகதைகள் 5805-5808
899.(5) பிறமொழி நாவல்கள், குறுநாவல்கள் 5809-5812
899.(6) மொழிபெயர்ப்புக் கட்டுரைகள் 5813

900 புவியியல், வரலாறுகள்

900 புவியியல், வரலாறு 5814
909 நாகரீகங்கள் 5815-5817
910 பொதுப் புவியியல் 5818-5819
911 பிரயாண நூல்கள், வழிகாட்டிகள் 5820-5827
915 பிரதேசப் புவியியல் 5828-5829
920 வாழ்க்கை வரலாறு, ஞாபகார்த்த மலர்கள் 5830
920.01 துறைசாரா வாழ்க்கை வரலாறுகள் 5831-5832
920.1 ஊடகவியலாளர், ஒலிபரப்புத்துறையினர் 5833-5837
922 சமயத் தலைவர், சிந்தனையாளர் 5838-5843
923 சமூகவியல்துறை சார்ந்தோர் 5844
923.2 அரசியல் துறையினர் 5845-5852
923.6 சமூக சேவகர்கள் 5853-5856
923.61 விடுதலைப் போராளிகள் 5857-5861
923.7 கல்வியியலாளர்கள் 5862
923.8 வர்த்தகர்கள் 5863
924 மொழியியலாளர்கள் 5864
926 பிரயோக விஞ்ஞானிகள், மருத்துவர்கள் 5865-5866
927 கலைஞர்கள் 5867
927.8 இசைக்கலைஞர்கள் 5868
927.91 நாட்டியக் கலைஞர்கள் 5869
927.92 நாடகக் கலைஞர்கள் 5870
927.94 விளையாட்டு வீரர்கள், பிரமுகர்கள் 5871-5872
928 இலக்கிய அறிஞர்கள் 5873-5893

941 பிரித்தானிய வரலாறு 5894
954 இந்திய வரலாறு 5895-5899
954.93 இலங்கை வரலாறு
954.93(1) இலங்கையின் பொது வரலாறு 5900-5904
954.93(2) இலங்கை இனப்பிரச்சினை வரலாறு 5905-5936
954.93(3) இனங்கள் இன உறவுகள் 5937-5947
954.93(4) பிரதேச வரலாறு 5948-5960
954.93(5) தொல்லியலாய்வு 5961

999 இலங்கை தொடர்பான பன்னாட்டவரின் தமிழ்ப் படைப்புகள் 5962-6000
பின்னிணைப்பு 01-55

நூல்தேட்டம் தொகுதி 6
வகுப்புப் பிரிவு

000 பொதுப்பிரிவு

000 பொது அறிவு

5001
அறிவியல் சிந்தனை அலைகள். பா.தனபாலன். யாழ்ப்பாணம்: பா.தனபாலன், தொல்புரம் கிழக்கு, சுழிபுரம், 1வது பதிப்பு, 1994. (பண்ணாகம்: ராஜா பதிப்பகம், பிரதான சாலை).
(10), 80 பக்கம், விலை: ரூபா 48., அளவு: 20.5x14 சமீ.

இந்நூலிலுள்ள 12 கட்டுரைகளின் வாயிலாகவும் ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் பயன்படும் வகையில் அறிவியல் விஞ்ஞான சாதனைகளும் அவற்றின் விளைவுகள் சமூகத்தில் ஏற்படுத்தும் தாக்கங்களும் விபரிக்கப்பட்டுள்ளன. அண்டவெளி, சூரியக் குடும்பம், செயற்கைக் கோள்கள், கிரகணங்கள், அணுசக்தி, மின்சக்தி, தொலைக்காட்சி, கணனி, திரைப்படவியல், அபிவிருத்தியும் சூழல் பாதுகாப்பும் போன்ற விடயங்களில் இக்கட்டுரைகள் எழுதப்பட்டுள்ளன. நூலாசிரியர் பா.தனபாலன், யாழ்-வட்டு. பிளவத்தை அமெரிக்க மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையின் ஆசிரியராகப் பணியாற்றியவர்.

5002
அறிவுக் கட்டுரைகள்: பகுதி 1. ந.சி.கந்தையாபிள்ளை. சென்னை 1: ஆசிரியர் நூற்பதிப்புக் கழகம், 53-56, பவழக்காரத் தெரு, 1வது பதிப்பு, மார்ச் 1956. (சென்னை 1: The Progressive Printers).
108 பக்கம், விலை: ரூபா 1.00

பல்வேறு ஆங்கிலக் கட்டுரைகளைத் தழுவி எழுதப்பட்ட சுவையான அறிவியல் கட்டுரைகளின் தொகுப்பு. பேசும் படத்தின் கதை, கல்லெண்ணெய், இந்தியாவில் பழங்காலக் கல்விமுறை, புகையிலையின் கதை, நல்ல பெரிய பழங்களைப் பெறும்வகை, பட்டுப்புழு வளர்த்தல், இரப்பரின் கதை, மிகச்சிறிய பறவைகள், தேனீக்கள், குளவிகளின் வியப்புமிக்க வாழ்க்கை, காகிதத்தின் கதை, சீனப் பெருஞ்சுவர், காந்தத்தின் வியப்பு, பறவைக் குஞ்சுகளின் பள்ளிக்கூடம், பழங்கால இந்திய நாணயங்கள், வைட்டமின்னும் அது இல்லாமையால் தோன்றும் நோய்களும், உயிர்களின் வியப்புமிகு தற்காப்பு முறைகள், ஓடும் உயிர் ஆறு, தங்கத்தின் கதை, தேயிலையின் கதை, அஜந்தா குகை ஓவியங்கள், ஒரு பழைய காடு, நெருப்பில் நடத்தல், சப்பாத்தின் கதை, ஆகிய தலைப்புகளில் பொருட்செறிவும், சுவையும் மிக்க பலவினக் கட்டுரைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5003
அறிவுச் சுரங்கம். இ.சிறிஸ்கந்தராசா. கொழும்பு 6: இராமசாமி சிறிஸ்கந்தராசா, 93, பீட்டர்சன் லேன், E15, பீட்டர்சன் தொடர்மாடி, வெள்ளவத்தை, 1வது பதிப்பு, ஏப்ரல் 2007. (கொழும்பு 6: Techno Print).
100 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 150., அளவு: 19x12.5 சமீ.

அகில இலங்கை நகைச்சுவை மன்றத்தின் விழாவினையொட்டி 22.04.2007 அன்று கொழும்புத் தமிழ்ச்சங்கத்தில் வைத்து வெளியிடப்பட்ட ஆசிரியரின் 13ஆவது நூல். அறிவூட்டும் கேள்வி பதில்கள், பயனுள்ள தகவல்கள் மற்றும் சினிமாப் புதிர்கள் என 1180 பதிவுகளை இந்நூலில் உள்ளடக்கியுள்ளார். சுவையான உலகச் செய்திகள், புதுமைத் தகவல்கள், மற்றும் பல்சுவைக் கதம்பமாக இந்நூல் அமைகின்றது.

5004

பொது அறிவுடன் சமகால நிகழ்வுகள். எஸ்.எல்.எம்.மஹ்ரூப். உடத்தலவின்ன 20802: சிந்தனை வட்டம், 14, உடத்தலவின்ன மடிகே, 5வது பதிப்பு, ஆகஸ்ட் 2008 (உடத்தலவின்ன: அச்சீட்டுப் பிரிவு, சிந்தனை வட்டம்).
viii, 256 பக்கம், விலை: ரூபா 330., அளவு: 20.5x14 சமீ., ISBN: 978-955-1779-14-6.

சமகால நிகழ்வுகளை உள்ளடக்கியதாக **பொது அறிவுச் சுடரின் Current Affairs: நிகழ்கால நிகழ்தரவுகள்** என்ற தலைப்பில் நான்கு தொகுதிகளை ஏற்கெனவே வெளியிட்டுள்ள நூலாசிரியரின் ஐந்தாவது நூல் இது. 1999, 2002, 2003, 2005ம் ஆண்டுகளில் அவ்வக்காலத்து பொது அறிவுத் தகவல்களை உள்ளடக்கியதாக இருந்தது. 2007-2008ம் ஆண்டுகளுக்கான சமகால விடயங்கள் சுருக்கமாகவும் சுவையாகவும் நூலின் தலைப்பு மாற்றத்துடனான இந்நூலில் 29 பிரிவுகளில் தகவல்கள் வகைப்படுத்தித் தொகுக்கப்பட்டுள்ளன. இலங்கை பற்றியும், உலக நடப்பு விவகாரங்கள், விஞ்ஞானம், தொழில்நுட்பம், மருத்துவம், வானியல், விளையாட்டுத்துறை, கலை, கலாசார பண்பாட்டு நிகழ்வுகள் பற்றியும் இந்நூல் சுருக்கமாக விளக்குகின்றது. கண்டி மாவட்டத்தின் எலதத்த மேற்கைச் சேர்ந்த சின்ன லெப்பை முகமத் மஹ்ரூப் தேசியக் கல்லூரி, கம்பளை சாஹிராக் கல்லூரிகளில் ஆரம்ப இடைநிலைக் கல்வியைக் கற்று, கலைமாணிப் பட்டத்தை கொழும்பு பல்கலைக்கழகத்திலும், கல்வி டிப்ளோமா பட்டத்தை தேசிய கல்வி நிறுவனத்திலும் பெற்றுக்கொண்டவர். சிந்தனை வட்டத்தின் 293வது நூலாக வெளியிடப்பட்டுள்ள இத்தொகுப்பு, பொது சாதாரண பரீட்சைக்கும் Common General Test உட்பட சகல போட்டிப் பரீட்சைகளுக்கும் ஏற்றவகையில் நிகழ்கால நிகழ்தரவுகளை உள்ளடக்கிய வழிகாட்டி நூலாகும்.

010 நூலியல், நூல்விபரப்பட்டியல்

5005

நூல்தேட்டம்: தகவல் கையேடு. தம்பிராஜா ஜெயபாலன் (தொகுப்பாசிரியர்). ஐக்கிய இராச்சியம்: அயோத்தி நூலக சேவைகள், ஐக்கிய இராச்சியக் கிளை, 1வது பதிப்பு, ஜுலை 2005. (கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், 201, டாம் வீதி).
48 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22x14.5 சமீ.

ஈழத்துத் தமிழ் நூல்களை ஆவணப்படுத்தும் நோக்கில் உருவாக்கப்பட்ட நூல்தேட்டம் பற்றிய அறிமுக நூல். நூல்தேட்டத் தொகுப்புமுறை பற்றிய தகவல்களுடன், அதன் தொகுப்பாளர் திரு. என்.செல்வராஜா பற்றிய பின்னணித் தகவல்களையும், நூல்தேட்டத்தில் பயன்படுத்தப்பட்டுள்ள நூல்களின் பகுப்பு முறை பற்றியும் இந்நூல் விரிவான தகவல்களை அறிமுகநோக்கில் வழங்குகின்றது.

5006

நூல்தேட்டம்: தொகுதி 5. என்.செல்வராஜா. ஐக்கிய இராச்சியம்: அயோத்தி நூலக சேவைகள், 1வது பதிப்பு, ஜுலை 2008. ((உடத்தலவின்ன 20802: அச்சிட்டுப் பிரிவு, சிந்தனை வட்டம், 14, உடத்தலவின்ன மடிகே).
xxii, 467 பக்கம், விலை: ஸ்டேர்லிங் பவுண் 10., அளவு: 21x14.5 சமீ., ISBN 978-0-9549440-7-0.

தாயகத்திலும் புகலிடத்திலும் வெளியிடப்பட்ட ஈழத்துத் தமிழ்நூல்களுக்கான குறிப்புரையுடன் வெளிவந்துள்ள நூல்விபரப்பட்டியலின் ஐந்தாவது தொகுதி. இத்தொகுதியில் மேலும் 1000 நூல்களுக்கான பதிவுகள் தொகுக்கப்பட்டுள்ளன. பிரதான பதிவு தூவி தசாம்சப் பகுப்புமுறையைத் தழுவிப் பகுப்பாக்கம் செய்யப்பட்டு, பாடவாரியாகப் பதியப்பட்டுள்ளது. பதிவுகள் 4001-5000 வரை தொடர் இலக்கமிடப்பட்டுள்ளன. நூல் தலைப்பு வழிகாட்டி, ஆசிரியர் வழிகாட்டி என்பவற்றுடன் இலங்கை தொடர்பான பன்னாட்டவரின் படைப்புக்களும், முன்னைய தொகுதியின் பதிவுகளுக்கான மேலதிக தகவல்களும் தரப்பட்டுள்ளமை இந்நூலின் சிறப்பம்சமாகும்.

020 நூலகவியல், தகவல் விஞ்ஞானம்

5007

நூலக தகவல் அறிவியல் ஆய்வுக்கோவை. அருளானந்தம் ஸ்ரீகாந்தலட்சுமி. கொழும்பு 11: சேமமடு பொத்தகசாலை, U.G.50, Peoples Park, 1வது பதிப்பு, கார்த்திகை 2008. (கொழும்பு 11: சேமமடு பதிப்பகம்).
296 பக்கம், விலை: ரூபா 750., அளவு: 21x14.5சமீ., ISBN: 978-955-1857-26-4.

நூலக முகாமைத்துவம்: ஓர் அறிமுகம், நூலக தகவல் நிறுவனங்களினது உருவாக்கத்தில் திட்டமிடலும் அதன் முக்கியத்துவமும், ஆரம்பத் திட்டமிடல் செயல்முறையின் முக்கிய அம்சங்களும் நூலக உருவாக்கத்தில் அதன் பங்கும், தகவலும் ஈழத் தமிழ்ச் சமூகத்தில் தகவல் அணுகுகையும், தகவல் வள அபிவிருத்திக் கொள்கை, அறிவாலயம் வழங்கும் அறிவுக் கருவூலங்கள், தகவல் பிரபஞ்சத்தை அணுகுவதில் பாவனையாளர் எதிர்கொள்ளும் தடைகள், வாசிப்பும் சமூக மேம்பாடும், பொது நூலகங்களினால் வழங்கப்படக்கூடிய சேவைகள், இணுவில் பொதுநூலகம்: தகவல் யுகமொன்றில் சுடர்விடும் நம்பிக்கை ஒளி, சனசமூக நிலைய நூலகங்கள்: சமூக மேம்பாட்டின் குவிமையங்கள், நூலக அலுவலர்களுக்கான மக்கள் பொதுசனத் தொடர்புக்கலை, உசாத்துணை சேவை, சர்வதேச நூல்விபரக் கட்டுப்பாடும் சர்வதேசரீதியில் வெளியீடுகளின் பயன்பாடும்: IFLAவின் நூலக செயல்திட்டங்கள், தூயி தசமப் பகுப்பாக்கத் திட்டம், தமிழ் சமூகத்தின் இன்றைய கல்விநிலையும் பாடசாலை நூலகங்களின் வகிபாகமும், பாடசாலை நூலகங்கள்: புதுயுகம் தரும் பெரும் பொறுப்புகள், தகவல் வளங்கள்: புதிய கருத்துருவாக்கம், நூல்களுள் நுழைய ஆகிய தலைப்புகளில் அமைந்த 19 நூலகவியல் கட்டுரைகளை இந்நூல் உள்ளடக்குகின்றது.

5008

நூலகர் கைந்நூல்: சிறுவர், பாடசாலை, கிராம நூலகர்களுக்கு. என்.செல்வராஜா. கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், 361, ½ டாம் வீதி, 1வது பதிப்பு, 2008. (கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், 361, 1/2, டாம் வீதி).
x, 150 பக்கம், விலை: ரூபா 400., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-955-659-139-7.

கிராமிய நூலகங்கள், பாடசாலை நூலகங்கள் மற்றும் சிறு நூலகங்களை நடாத்தும் பெரும்பான்மையானோர் எதிர்நோக்கும் பொதுவானதொரு பிரச்சினை, தத்தம் நூலகங்களை முறையாகவும் எளிமையாகவும் நிர்வகிப்பதற்கும், அங்குள்ள நூல்களை ஒழுங்குபடுத்திப் பாதுகாத்து வைப்பதற்கும் தேவையான ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்வதாகும். தமது சேவைப் பரப்பிற்கு ஏற்றவண்ணம் நூல்களை எவ்வாறு தரம்பிரிக்கலாம், எத்தகைய இரவல் வழங்கும் முறைகளைக் கைக்கொள்ளலாம் என்பன போன்ற இன்னோரன்ன சந்தேகங்களை நிவர்த்தி செய்வதில் இவர்கள் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். இத்தகைய பிரச்சினைகளைத் தீர்க்கும் வழிகாட்டியாக இக்கைந்நூல் அமைகின்றது. 19 கட்டுரைகளைக் கொண்ட இந்நூல் கிராம நூலகப் பயிற்சித் திட்டங்களையோ, சிறு நூலக நிர்வாகம் தொடர்பான அடிப்படை அறிவையோ, பாடசாலை நூலகங்களைப் பற்றிய அடிப்படை அறிவையோ பெற்றுக்கொள்ள விளையும் எவருக்கும் பயனுள்ளதாக அமையும்.

5009

யாழ்ப்பாண நூலகம் அதன் சாம்பலிலிருந்து எழுகின்றது. வி.எஸ்.துரைராஜா (ஆங்கில மூலம்), காவலூர் இராசதுரை (தமிழாக்கம்). தமிழ்நாடு: மித்ர ஆர்ட்ஸ் அன்ட் கிரியேஷன்ஸ், 32/9 ஆற்காடு சாலை, கோடம்பாக்கம், 1வது பதிப்பு, ஏப்ரல் 2009. (தமிழ்நாடு: மித்ர ஆர்ட்ஸ் அன்ட் கிரியேஷன்ஸ், 32/9 ஆற்காடு சாலை, கோடம்பாக்கம்).
92 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 17.5x23 சமீ., ISBN: 978-81-89748-74-6

ஆங்கில மொழியில் The Jaffna Public Library Rises from its ashes என்ற தலைப்பில் டிசம்பர் 2007இல் வெளிவந்த நூலின் தமிழாக்கம் இதுவாகும். இந்நூலாசிரியர், யாழ்ப்பாணப் பொது நூலகத்தின் உருவாக்கத்திலும், வளர்ச்சியிலும், சந்திரிகா பண்டாரநாயக்காவின் ஆட்சியின்போது மேற்கொள்ளப்பட்ட மீள் புனரமைப்பிலும் முக்கிய பங்கு கொண்டவர். பல்வேறு வண்ணப் புகைப்படங்களுடன், யாழ்ப்பாணப் பொது நூலகத்தின் வரலாற்றை இந்நூலில் விபரித்துள்ளார். கொழும்பில் இயங்கும் துரைராஜா அசோஷியேற்ஸ் என்னும் பட்டயம்பெற்ற கட்டடக் கலைஞர்கள் நிறுவனத்தின் தாபகரான இவர், இலங்கையின் பிரபல்யமான தமிழ்க் கட்டடக் கலைஞராவார். ஈழத்துத் தமிழ்த் திரைப்படத்துறையிலும் ஈடுபட்டுழைத்தவர்.

050 பொதுப் பருவஇதழ்கள், சிறப்பிதழ்கள், வழிகாட்டிகள், சுட்டிகள்

5010

சுட்டும் சுடரொளி 99. மலர் வெளியீட்டுக் குழு. நோர்வே: கத்தோலிக்க தமிழ் இளைஞர் ஒன்றியம், Tamilsk Katolsk Ungdomslag, Enerhaugen 4, 0651 Oslo, 1வது பதிப்பு, 1999. (அச்சக விபரம் தரப்படவில்லை).
46 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 26x18 சமீ.

1996ம் ஆண்டு தொடங்கப்பட்ட கத்தோலிக்க தமிழர் நலன்புரி மன்றத்தின் சார்பில் வெளியாகியுள்ள இந்த மலரின் மலர்வெளியீட்டுக்குழுவில் அன்ரனி எம்.தியோப்ளஸ், யோ.ரட்ணராஜா, பா.ஸ்ரீபன், சே.யோன்சன் ஆகியோர் இணைந்து செயற்பட்டுள்ளனர். அன்னை திரேசா, அரசாங்கப் படைவீரரின் பயங்கரவாத அடிமைகளாக வாழும் எம்மக்கள், தமிழர் சமூகத்தில் விதவைகள், கே.டானியல், நெல்சன் மண்டெலா, காந்தி, 2000ம் ஆண்டை உற்று நோக்குகையில் அழிவின் விளிம்பில் உலகம் ஆகிய கட்டுரைகள் இம்மலரை அலங்கரிக்கின்றன.

051 பருவஇதழ் சிறப்பிதழ்கள்

5011

ஞானம் 100ஆவது இதழ்: ஈழத்து நவீன இலக்கியச் சிறப்பிதழ். தி.ஞானசேகரன் (பதிப்பாசிரியர்). கொழும்பு 6: ஞானம் பதிப்பகம், 3B, 36வது ஒழுங்கை, 1வது பதிப்பு, செப்டெம்பர் 2008. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ் பிரைவேட் லிமிட்டெட், 48 B, புளுமெண்டால் வீதி).
272 பக்கம், புகைப்படங்கள், சித்திரங்கள், விலை: ரூபா 200., அளவு: 25x17.5 சமீ.

06.06.2000 அன்று தனது முதலாவது இதழை வெளியிட்டுவைத்த ஞானம் கலை இலக்கியச் சஞ்சிகையின் 100ஆவது இதழ் ஈழத்து நவீன இலக்கியச் சிறப்பிதழாக வெளிவந்துள்ளது. தாயகத்திலும் புகலிடத்திலும் வாழும் படைப்பாளிகளை எவ்வித வேறுபாடுகளுமின்றி அரவணைத்துப் பயணிக்கும் இச்சஞ்சிகையின் 100ஆவது இதழில், 42 இலக்கியக் கட்டுரைகளும், 33 கவிதைகளும், ஒரு நாடகமும், 16 சிறுகதைகளும் இடம்பெற்றுள்ளன. கௌதமன், மதிபுஷ்பா ஆகியோரின் ஓவியங்கள் படைப்புக்களை அலங்கரிக்கின்றன.

5012

நீங்களும் எழுதலாம்: ஓராண்டுச் சிறப்பிதழ். எஸ்.ஆர்.தனபாலசிங்கம் (இதழ் ஆசிரியர்). திருக்கோணமலை: நீங்களும் எழுதலாம், 103/1, திருமால் வீதி, 1வது பதிப்பு, பங்குனி 2008. (திருக்கோணமலை: அஸ்ரா பிரின்டர்ஸ்).
44 பக்கம், தனிப்பிரதி ரூபா 25., ஆண்டு சந்தா ரூபா 200., அளவு: 20x14 சமீ., ISSN: 1800-3311.

நீங்களும் எழுதலாம் என்ற தலைப்பில் இருமாத கவிதை இதழ் 2007 முதல் திருக்கோணமலையிலிருந்து வெளியிடப்பட்டு வந்துள்ளது. எஸ்.ஆர்.தனபாலசிங்கம் அவர்கள் வெளியிடும் இச்சஞ்சிகை தனது ஓராண்டுப் பூர்த்தியை குறிக்கும் முகமாக வெளியிடப்பட்ட சிறப்பிதழ் இதுவாகும். சஞ்சிகையின் ஆறாவது இதழ் இது. வழமையான கவிதைகளுடன், கவிதையின் பணி (ந.பார்த்திபன்), நீங்களும் எழுதலாம் சில குறிப்புக்கள் (செ.யோகராசா), கற்றால் வருமோ கவித்துவம் (சில்லையூர் செல்வராசன்), மலையகக் கவிதைகள் ஓர் அவசரக் குறிப்பு (அந்தனி ஜீவா), கவிதை அன்றும் இன்றும் (தாமரைத் தீவான்) ஆகிய கவிதை சம்பந்தமான கட்டுரைகளும், குறிப்புரைகளும், இச்சிறப்பிதழில் இடம்பெற்றுள்ளன.

5013

மணல் வீடு: கே.டானியல் சிறப்பிதழ். மு.ஹரிகிருஷ்ணன் (ஆசிரியர்). சேலம் மாவட்டம் 636453: மணல்வீடு, ஏர்வாடி, குட்டப்பட்டி அஞ்சல், மேட்டூர் வட்டம், 1வது பதிப்பு, மார்ச்-ஜுன் 2009. (தமிழ்நாடு: சரவணா அச்சகம், நங்கவள்ளி).
62 பக்கம், விலை: இந்திய ரூபா 20., அளவு: 21x16.5 சமீ.

தமிழகத்தின் சிற்றிலக்கிய ஏடுகளில் ஒன்றான மணல்வீடு இருமாத இதழ் மு.ஹரிகிருஷ்ணனை இதழாசிரியராகக் கொண்டு வெளிவருகின்றது. மார்ச் 22இல் ஈழத்து இலக்கியவாதி கே.டானியலின் நினைவு தினத்தையொட்டி மணல்வீடு கே.டானியல் சிறப்பிதழாக வெளியிடப்பட்டுள்ளது. இதில் வழமையான கவிதைகள், கட்டுரைகள் மற்றும் இலக்கிய அம்சங்களுடன் டானியல் என்னும் கலைஞன் (பொ.வேல்சாமி), எனது படைப்புகள் (பஞ்சமர் நாவல் குறித்து கே.டானியல்), கே.டானியலின் தண்ணீர் நாவலிலிருந்து ஒரு பகுதி, தெய்வ பரம்பரை (கே.டானியல்), இரத்தத்தாலல்ல (கே.டானியல்), கே.டானியலுடன் ஒரு செவ்வி (செவ்வி கண்டவர் அ.மார்க்ஸ்) ஆகிய சிறப்பு அம்சங்களும் இடம்பெற்றுள்ளன.

5014

மல்லிகை: 44ஆவது ஆண்டு மலர். டொமினிக் ஜீவா (ஆசிரியர்). கொழும்பு 13: மல்லிகை, 201-1/1, ஸ்ரீ கதிரேசன் வீதி, 1வது பதிப்பு, ஜனவரி 2009. (கொழும்பு 13: Vanica Print Solutions அச்சகம், 103 விவேகானந்தா மேடு).
152 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 200., அளவு: 25X19.5 சமீ.

15.08.1966 அன்று ஈழத்துத் தமிழ்ச் சஞ்சிகை உலகில் கால்பதித்து 44 ஆண்டுகளைக் கடந்துவிட்ட மல்லிகை மாத இதழின் 2009க்கான சிறப்பிதழை திக்குவல்லை கமால், மல்லிகா நாராயணன் ஆகியோரின் உதவியுடன் ஆசிரியர் டொமினிக் ஜீவா உருவாக்கியுள்ளார். இவ்விதழை கடந்த 2008 இதழை அலங்கரித்தவர்களுள் க.சட்டநாதன், ஸ்ரீ பிரசாந்தன், தெணியான், செங்கை ஆழியான், மு.பஷீர், செ.யோகராஜா, இ.ஜெயராஜ், வசந்தி தயாபரன், ப.ஆப்டீன், சுதாராஜ், மேமன்கவி, பத்மா சோமகாந்தன், ஆனந்தி, ந.இரவீந்திரன், கெக்கிராவ சுலைஹா, உடப்பூர் வீரசொக்கன், தெளிவத்தை ஜோசப், ஆகியோருடன் அன்புமணி, வை.சாரங்கன், அன்னலட்சுமி இராஜதுரை, யோகேஸ்வரி சிவப்பிரகாசம், வதிரி சி.இரவிந்திரன், பா.இரகுவரன், கெக்கிராவ சஹானா, எல்.வஸீம் அக்ரம், கே.எஸ்.சுதாகர், எஸ்.எச்.எம்.ஜமீல், ஸ்ரீரஞ்சனி, பா.சிவாகரன், இப்னு அஸுமத், பிரகலாத ஆனந்தன், லெ.முருகபூபதி, ஆகியோரும் இணைந்து தமது படைப்புக்களைப் பிரசுரித்து இவ்விதழை அலங்கரிக்கின்றனர்.

5015

வீரகேசரி ஆண்டு மலர்: 2002 நிகழ்வுகள். வி.தேவராஜ் (தொகுப்பாசிரியர்). கொழும்பு 14: வீரகேசரி வெளியீடு, எக்ஸ்பிரஸ் நியுஸ்பேப்பர்ஸ் (சிலோன்) லிமிட்டெட், 185 கிரான்ட்பாஸ் வீதி, 1வது பதிப்பு, டிசம்பர் 2002. (கொழும்பு 14: எக்ஸ்பிரஸ் நியுஸ்பேப்பர்ஸ் (சிலோன்) லிமிட்டெட், 185 கிரான்ட்பாஸ் வீதி).
240 பக்கம், புகைப்படம், விலை: ரூபா 200., அளவு: 29.5x21.5 சமீ.

2002ம் ஆண்டில் இடம்பெற்ற முக்கிய நிகழ்வுகளை வரலாற்றுப் பதிவாக்கும் நோக்கத்துடன், 2002ம் ஆண்டு வீரகேசரியில் வெளியிடப்பட்ட பல்வேறு துறைசார்ந்த ஆக்கங்களைத் தொகுத்து இவ்வாண்டு மலர் வெளியிடப்பட்டுள்ளது. மொத்தம் 70 தேர்ந்த படைப்புக்கள் இத்தொகுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

5016

ஜீவநதி: முதலாம் ஆண்டு நிறைவு மலர். சி.விமலன், க.பரணீதரன் (இணையாசிரியர்கள்). பருத்தித்துறை: கலாநிதி த.கலாமணி, கலையகம், அல்வாய், 1வது பதிப்பு, வைகாசி-ஆனி 2008. (பருத்தித்துறை: சதாபொன்ஸ் நிறுவனம்).
110 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 25x18 சமீ.

அல்வாய் கலையகத்தினால் வெளியிடப்படும் கலை இலக்கிய இருதிங்கள் ஏட்டின் முதலாவது ஆண்டின் நிறைவாக வெளியான சிறப்பு மலர் இது. கட்டுரைகள், சிறுகதைகள், கவிதைகள், பத்தி எழுத்துக்கள், மதிப்பீட்டுரைகள் என்பன மலரை அலங்கரிக்கின்றன. 18 கட்டுரைகளையும் செ.கிருஷ்ணராஜா, அ.சண்முகதாஸ், எம்.கே.முருகானந்தன், செ.யோகராசா, அன்புமணி, சி.விமலன், செங்கை ஆழியான், திலகநாதன், நடராசா, அஜந்தகுமார், பொ.அரவிந்தன், இராஜேஸ்கண்ணன், அநாதரட்சகன், பரணிதரன், செல்வ அம்பிகை நடராஜா, பெரிய ஐங்கரன், வே.கமலநாதன், லலீசன் ஆகியோர் எழுதியுள்ளனர். க.சட்டநாதன். தெணியான், த.கலாமணி, குப்பிழான் ஐ.சண்முகன், ச.முருகானந்தன், பி.கிருஷ்ணானந்தன், தனா ஆகியோர் இதிலுள்ள 7 சிறுகதைகளையும் எழுதியுள்ளனர். கவிதைகளை மேமன் கவி, சோ.பத்மநாதன், ச.முருகானந்தன் உள்ளிட்ட 14 கவிஞர்களும், பத்தி எழுத்துக்களை விஷ்ணு, பா.ரகுவரன் ஆகியோரும் மதிப்பீட்டுரைகளை தனலட்சுமி நகுலேசபிள்ளை, அ.விந்தன் ஆகியோரும் எழுதியுள்ளனர்.

5017

ஜீவநதி: இரண்டாம் ஆண்டு நிறைவு மலர். க.பரணீதரன், சி.விமலன் (இணையாசிரியர்கள்). பருத்தித்துறை: கலாநிதி த.கலாமணி, கலையகம், அல்வாய், 1வது பதிப்பு, வைகாசி-ஆனி 2009. (பருத்தித்துறை: சதாபொன்ஸ் நிறுவனம்).
122 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 25x18 சமீ.

அல்வாய் கலையகத்தினால் வெளியிடப்படும் கலை இலக்கிய இருதிங்கள் ஏட்டின் இரண்டாவது ஆண்டின் நிறைவாக வெளியான சிறப்பு மலர் இது. இதில் சபா.ஜெயராசா, ம.இரகுநாதன், அநாதரட்சகன், அ.யேசுராசா, அன்புமணி, செ.கிருஷ்ணராஜா, ம.பா.மகாலிங்கசிவம், கெக்கிறாவ சஹானா,

இராஜேஸ்கண்ணன், திலகநாதன், குணேஸ்வரன், பா.தனபாலன், துஷ்யந்தன், ஜெயமோகன், அஜந்தகுமார், செ.க.தர்மதேவன், யோகேஸ்வரி சிவப்பிரகாசம், ந.சத்தியபாலன் ஆகியோரின் 18 கட்டுரைகளும், செங்கை ஆழியான், கண.மகேஸ்வரன், தாட்சாயணி, குந்தவை, சி.கதிர்காமநாதன், சி.சிவாகர், சண்முகம் சிவகுமார், க.பரணீதரன், கார்த்திகாயினி சுபேஷ், தீபிகா ஆனந்தநேசன், கயிலை ஆகியோரின் 11 சிறுகதைகளும், மேமன்கவி, த.ஜெயசீலன், இ.சு.முரளிதரன், க.சுதர்சன், சின்னராஜன், கண.எதிர்வீரசிங்கம், த.கலாமணி, ஆரையூர்த் தாமரை, தியத்தலாவ எச்.எப்.ரிஸ்னா, ரிம்ஸ் முகம்மத், தெ.இந்திரகுமார், கெக்கிராவை ஸாலைஹா, பி.கிருஷ்ணானந்தன், சி.நிமலன். வேல்நந்தன், ஆ.மு.சி.வேலழகன், வசீம் அக்ரம், மாரிமுத்து சிவகுமார், சிவதர்சினி, சூசை எட்வேர்ட் ஆகியோரின் 20 கவிதைகளும், பேராசிரியர் கா.சிவத்தம்பியுடனான சந்திப்பும், ஐ.சண்முகன், எம்.கே.முருகானந்தன் ஆகியோரின் இரு மதிப்பீட்டுரைகளும், க.இ.கமலநாதனின் "வானத்து ராசாவே" நாடகமும் இம்மலரில் இடம்பெற்றுள்ளன.

053 வழிகாட்டிகள்

5018

உலகத் தமிழர் கையேடு. சிவனடியான் ஸ்ரீபதி. ஜேர்மனி: World Tamils Directory, Multi Marketing Ltd., Darmstaedter Landstrasse 199, 60598 Frankfurt, 1வது பதிப்பு, 2004. (India: Joh Graphics, Chennai).
xvi, 168 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14 சமீ.

உலகத்தமிழர்களின் சமூக, கலை இலக்கிய வர்த்தக அமைப்புகளின் முகவரி விபரங்களுடன் தனிப்பட்டவர்களின் முகவரிகளையும் கொண்டதாகவும் இந்த வர்த்தக வழிகாட்டி உருவாக்கப்பட்டுள்ளது. பரந்த பிரதேசத்தை எட்டமுயலும் முயற்சியின் முதற்படிநிலை இதுவாகக் கருதமுடிகின்றது.

5019

பிரான்ஸ் தமிழர் வழிகாட்டி 2008. கிருஷ்ணா வெளியீடு. பிரான்ஸ்: கிருஷ்ணா அச்சகம், 73 Rue Doudeauville 75018, Paris, 2வது பதிப்பு, மார்ச் 2008, 1வது பதிப்பு, 2006. (பாரிஸ்: கிருஷ்ணா அச்சகம், 73 Rue Doudeauville 75018).
208 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x15 சமீ.

பிரான்ஸ் தமிழர் வழிகாட்டி என்ற தலைப்பில் வெளிவந்துள்ள இவ்வர்த்தக வழிகாட்டி இரு ஆண்டுகளுக்கு ஒருமுறை வெளிவரும் என்ற குறிப்புடன் வெளியாகியுள்ளது. ஆரம்பத்தில் பாரிஸ் நகரில் வாழும் தமிழர்களை மையப்படுத்தி வெளியிடப்பட்ட இவ்வழிகாட்டியின் இரண்டாவது பதிப்பு பாரிசின் மையப்பகுதியிலிருந்து தன் எல்லைகளைப் பிறநகர்களுக்கும் விரித்துள்ளது. பிரான்சின் தேசிய கீதம், நாட்காட்டி 2008, தமிழர் பெருநாட்கள், உபயோகத்திற்குரிய தொலைபேசி இலக்கங்கள், சர்வதேச தொலைபேசிச் சுட்டெண்கள், சர்வதேச நேர வித்தியாசம், முக்கியத்தர் முகவரிகள், குழந்தைகள் மருத்துவமனைகள், தூதரகங்கள், வழிபாட்டுத் தலங்கள், ஆணையர் அலுவலகங்கள், நகரசபை, ஆவணங்கள் பாதுகாக்கப்படவேண்டிய காலம், தடுப்பூசிகள், மண்டப முகவரிகள், தமிழர் அமைப்புகள், வர்த்தக நிறுவனங்கள் என இன்னோரன்ன விபரங்கள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன.

070 ஊடகவியல், வெளியீட்டுத்துறை

5020

அச்சு ஊடக செய்தி அறிக்கையிடல். ரூபன் மரியாம்பிள்ளை. யாழ்ப்பாணம்: பிஷப் சவுந்தரம் மீடியா சென்டர், இல.891, ஆஸ்பத்திரி வீதி, 1வது பதிப்பு, டிசம்பர் 2006. (யாழ்ப்பாணம்: புனித வளன் கத்தோலிக்க அச்சகம், 360, பிரதான வீதி).
xvi, 202 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 21.5x16 சமீ., ISBN: 955-1395-02-6.

ஒரு செய்தி அதனை வாசிப்பவர் அல்லது கேட்பவர் அல்லது நோக்குபவர் மீது ஏற்படுத்தும் தாக்கம்- அச்செய்தி எவ்வாறு தலைப்பிடப்படுகின்றது – எவ்வாறு அறிக்கையிடப்படுகின்றது அல்லது கூறப்படுகின்றது என்பதில் பெரிதும் தங்கியிருக்கும். அச்சு ஊடக செய்தி அறிக்கையிடல் என்ற தலைப்பிலான இந்நூல் ஆசிரியரின் பத்திரிகைத்துறை சார்ந்த ஏழாவது நூலாகும். செய்தியின் வரைவிலக்கணம், செய்திக் கூறுகள், செய்தி அடிப்படைகள், செய்தி மதிப்பு, செய்தியின் வகைகள், செய்தியாளர்களின் பாதுகாப்பு, செய்தி அமைக்கும் முறைகள், களச் செய்தி அறிக்கையிடல் ஆகிய எட்டு இயல்களில் இந்நூலை எழுதிமுடித்துள்ளார். பத்திரிகைத்துறையில் முதுகலைமாணிப் பட்டத்தைப்

பெற்ற நூலாசிரியர் அருட்திரு ரூபன் மரியாம்பிள்ளை, பிரித்தானியாவில், ஷெபீல்ட் ஹாலம் பல்கலைக்கழகத்தில் கலாநிதிப் பட்டத்திற்கான ஆய்வில் ஈடுபட்டுவருகிறார்.

5021

இலங்கை: விமர்சனக் கருத்துகளை ஒடுக்குதல். சர்வதேச பொது மன்னிப்புச் சபை. London WC1X ODW: Amnesty International, Peter Benenson House, 1, Easton Street, London, 1வது பதிப்பு, 2008. (ஐக்கிய இராச்சியம்: சர்வதேச பொதுமன்னிப்புச் சபை, சர்வதேச செயலகம்).
70 பக்கம், வரைபடம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 30x21 சமீ.

இலங்கையில் அண்மைக் காலத்தில் நிலவிய ஊடக அடக்குமுறை தொடர்பான சர்வதேச பொது மன்னிப்புச் சபையின் அறிக்கை இதுவாகும். கருத்துச் சுதந்திரம் பற்றிய சர்வதேச தர அளவுகோல்கள், இலங்கை இனப்பிரச்சினையின் பின்னணியில் பத்திரிகையாளர்கள் மற்றும் பிற ஊடகப் பணியாளர்களுக்கு எதிரான மனித உரிமை மீறல்கள், விடுதலைப் புலிகளின் அத்துமீறல்கள், சுடர் ஒளி மற்றும் தினக்குரல் நாளிதழ்களை கருணா குழுவினர் அச்சுறுத்தியமை, ஊடகங்கள் மீதான அதிகரித்துவரும் அரசாங்கக் கட்டுப்பாடுகள், பொறுப்பேற்கவைக்கும் தன்மை மற்றும் சட்ட நடவடிக்கைகள் இல்லாத சூழ்நிலை, அபிப்பிராயம் மற்றும் கருத்துச் சுதந்திரத்தை மதிப்பதும் அவை மதிக்கப்படுவதை உறுதிசெய்வதும் ஆகிய அம்சங்கள் இவ்வறிக்கையில் விரிவாகப் பதிவுக்குள்ளாகியுள்ளன. (சர்வதேச பொது மன்னிப்புச் சபை வரிசை இலக்கம் ASA 37/001/2008)

5022

இன்றைய இதழியல். சந்திரிகா சுப்பிரமணியன். சென்னை 600 026: குமரன் பப்ளிஷர்ஸ், 79, முதல் தெரு, குமரன் காலனி, வட பழநி, 1வது பதிப்பு, டிசம்பர் 1998. (சென்னை 600 006: சுமதி லேசர்).
80 பக்கம், விலை: இந்திய ரூபா 25., அளவு: 18x12 சமீ.

இதழியல் ஓர் அறிமுகம், சிறு பத்திரிகை தொடங்குவது எப்படி, செய்தியின் முக்கியத்துவம், எது செய்தி, எங்கிருந்து செய்திகள் வருகின்றன, செய்தி சேகரிப்பு கலை, செய்திக்குப் பின்னால், ஆசிரியரின் பணிகள், செய்திப்பட்டறை, தொலைக்காட்சி, வானொலி செய்திகள், நவீன இதழியல் ஆகிய தலைப்புகளின்கீழ் ஒரு பத்திரிகையாளர் தெரிந்திருக்கவேண்டிய இதழியல் செய்திகள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன.

5023

ஈழத்து இதழியலின் வரலாறும் மதிப்பீடும்: ஆய்வரங்கக் கட்டுரைகள் 2003. கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை இளைஞர் விவகார அமைச்சு. திருக்கோணமலை: சீ.ஏ.மோகன் றாஸ், கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை இளைஞர் விவகார அமைச்சு, வடக்கு கிழக்கு மாகாணம், 1வது பதிப்பு, ஒக்டோபர் 2003. (திருக்கோணமலை: ரெயின்போ மினிலாப், 361 B, நீதிமன்ற வீதி).
126 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14.5 சமீ.

வடக்கு-கிழக்கு மாகாண அரசு நடத்திய தமிழ் இலக்கிய விழாவின்போது *இதழியலின் வரலாறும் மதிப்பீடும்* என்ற தலைப்பிலான கருத்தரங்கு இடம்பெற்றது. அக்கருத்தரங்கில் படிக்கப்பெற்ற கட்டுரைகளின் தொகுப்பு இதுவாகும். **பத்திரிகைகள்** என்ற தலைப்பில் இலங்கையின் இதழியல் வரலாறும் மதிப்பீடும் (க.அருளானந்தன்), இலங்கைத் தமிழ்ப் பத்திரிகை வரலாறு ஒரு நோக்கு (அம்மன்கிளி முருகதாஸ்), ஈழத்து இதழியலில் தேசியத் தமிழ் நாளிதழ்களின் தோற்றமும் இலக்கியப் பங்களிப்பும் (புரட்சிபாலன்), சுதந்திரத்துக்குப் பின் ஈழத்தில் தமிழ்ப் பத்திரிகைத்துறை வளர்ச்சி: ஒரு நோக்கு (வல்வை ந.அனந்தராஜ்) ஆகிய நான்கு கட்டுரைகளும், பருவகால இதழ்கள் என்ற தலைப்பின்கீழ் ஈழத்து இலக்கியச் சஞ்சிகைகள் ஒரு நோக்கு (செ.யோகராசா), ஈழத்தில் பெண்கள் சார் தமிழ் சஞ்சிகைகள் வரவும் தேவையும் குறித்த நோக்கு (றூபி வலன்ரீனா பிரான்சிஸ்), இலங்கைத் தமிழாய்வுச் சஞ்சிகைகளில் பண்பாடு (வே.செவ்வேட்குமரன்), ஈழத்து சஞ்சிகை வரலாற்றிலே மூன்று நகைச்சுவை ஏடுகள் (திக்கவயல் சி.தர்மகுலசிங்கம்) ஆகிய நான்கு கட்டுரைகளும் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன.

5024

உலகின் மூன்றாவது கண். காவலூர் இ.விஜேந்திரன். கொழும்பு: இரா-வின் பதிப்பகம், 1வது பதிப்பு, டிசம்பர் 2008. (கொழும்பு: விஜயா என்ரர்பிரைசஸ்).
x, 222 பக்கம், விலை: ரூபா 280., அளவு: 21x14 சமீ., ISBN: 978-955-51228-4-9.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பட்டதாரியான இ.விஜேந்திரன், நீர்கொழும்பு விஜயரத்தினம் இந்து மத்திய கல்லூரியில் ஆசிரியராகப் பணியாற்றுபவர். மனித நேயம் மற்றும் வினைத்திறன் மிக்க பாடசாலை ஊடக கலாச்சாரம் என்ற தொனிப்பொருளில் இலங்கைப் பாடசாலைகளிலும் ஊடக கலாச்சாரம் ஒன்றை ஏற்படுத்த கல்வி அமைச்சு மேற்கொண்ட நடவடிக்கைகளில் ஒன்றான **தொடர்பாடலும் ஊடகக் கற்கையும்** என்ற பாடத்திட்டத்திற்கான ஊடகக் கல்வியை அங்கு இவர் போதித்து வருகிறார். ஊடகவியல்துறை பற்றிய இந்த நூல் ஊடகவியல் பற்றிய பல்வேறு அடிப்படைத் தகவல்களைக் கொண்டுள்ளது. ஊடகத்திற்கு உரமிட்டோரும் உரமானோரும் என்ற பகுதியில் வாழும் ஊடகவியலாளர்களையும், வாழ்ந்து மறைந்த ஊடகவியலாளர்களையும் உள்ளடக்கிய ஈழத்துத் தமிழ் ஊடகவியலாளர்கள் பலரையும் பற்றிய பதிவுகள் தொகுக்கப்பட்டுள்ளமை சிறப்பம்சமாகும்.

5025

கிம் இல் சுங். எச்.எம்.பீ.முஹிதீன் (தமிழாக்கம்). கொழும்பு 4: தோழர் கிம் இல் சுங் அவர்களின் புரட்சிகர ஆக்கங்களின் ஆராய்வுகளுக்கும் வெளியீட்டிற்குமான இலங்கைக் கமிட்டி, 21, புதிய புல்லர்ஸ் ரோடு, 1வது பதிப்பு, செப்டெம்பர் 1970. (கொழும்பு 2: சிலோன் பிரின்டர்ஸ் லிமிட்டெட், 20, சேர் சிற்றம்பலம் ஏ.கார்டினர் மாவத்தை).
21 பக்கம், விலை: சதம் 40.

ஐக்கிய அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் ஆக்கிரமிப்பை எதிர்த்துப் போராடும் உலகப் பத்திரிகை எழுத்தாளர் சங்கத்தின் கடமைகள் குறித்த அனைத்துலக மாநாட்டில் 1969 செப்டெம்பர் 18 அன்று தோழர் கிம் இல் சுங் ஆற்றிய விரிவுரை. (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14)

5026

சித்திரிப்பு எழுத்துக்கள்: ஓர் அறிமுகம். ரூபன் மரியாம்பிள்ளை. யாழ்ப்பாணம்: பிஷப் சவுந்தரம் மீடியா சென்டர், இல.891, ஆஸ்பத்திரி வீதி, 1வது பதிப்பு, டிசம்பர் 2007. (யாழ்ப்பாணம்: புனித வளன் கத்தோலிக்க அச்சகம், 360, பிரதான வீதி).
vi, 238 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 21 x14.5 சமீ., ISBN: 955-1395-05-0.

Bishop Savundram Media Centre மூலமாக வெளியிடப்படும் பத்திரிகையியல் சார்ந்த எட்டாவது நூல் இது. சித்திரிப்பு எழுத்துக்கள் என்றால் என்ன, சித்திரிப்பு எழுத்துக்களை எழுதுவது எப்படி, சித்திரிப்பு எழுத்துக்களின் வகைகள், சித்திரிப்பு எழுத்துக்கான ஆய்வு, செய்திக்கும் சித்திரிப்பு எழுத்துக்குமான வித்தியாசம், சித்திரிப்பு எழுத்தில் என்ன இருக்கவேண்டும், சித்திரிப்பு எழுத்துக்களை எழுதுதல், சித்திரிப்பு எழுத்துக்கான நேர்காணல், இந்தியப் பத்திரிகைகள் -சில கண்ணோட்டம் ஆகிய 9 இயல்களில் இந்நூல் விரிகின்றது. பத்திரிகைத்துறையில் முதுகலைமாணிப் பட்டத்தைப் பெற்ற ஆசிரியர் அருட்திரு ரூபன் மரியாம்பிள்ளை, பிரித்தானியாவில், ஷெபீல்ட் ஹாலம் பல்கலைக்கழகத்தில் கலாநிதிப் பட்டத்திற்கான ஆய்வில் ஈடுபட்டுவருகிறார். பாதுகாவலன் பத்திரிகையின் பிரதம ஆசிரியராகவும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மையத்தின் இணைப்பாளராகவும் பணியாற்றிய இவர், யாழ். ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் அவர்களின் நினைவாக, Bishop Savundram Media Centre என்ற பத்திரிகையியல் கல்வி நிறுவனத்தை உருவாக்கி இயக்கி வருகின்றார்.

5027

செய்தித் தலைப்புக்கள் ஓர் அறிமுகம். ரூபன் மரியாம்பிள்ளை. யாழ்ப்பாணம்: பிஷப் சவுந்தரம் மீடியா சென்டர், இல.891, ஆஸ்பத்திரி வீதி, 1வது பதிப்பு, டிசம்பர் 2005. (யாழ்ப்பாணம்: புனித வளன் கத்தோலிக்க அச்சகம், 360, பிரதான வீதி).
viii, 269 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 21.5x16 சமீ., ISBN: 955-1395-00-X.

Bishop Savundram Media Centre மூலமாக வெளியிடப்படும் பத்திரிகையியல் சார்ந்த ஆறாவது நூல் இது. இந்நூல் 2005ம் ஆண்டுக்கான வடக்கு கிழக்கு மாகாண அரசின் சாகித்திப் பரிசினை பல்துறை நூலுக்காகப் பெற்றது. செய்திகளின் கவனயீர்ப்பில் முதன்மைபெறும் தலையங்கங்கள் பற்றியும் அவற்றை எவ்வாறு தேர்ந்தெடுக்கவேண்டும் அல்லது எவ்வாறு தேர்ந்தெடுக்கக்கூடாது என்று ஏராளமான உதாரணங்களுடன் இந்நூல் விளக்குகின்றது. பத்திரிகைத்துறையில் முதுகலைமாணிப்பட்டத்தைப் பெற்ற ஆசிரியர் அருட்திரு ரூபன் மரியாம்பிள்ளை, பிரித்தானியாவில், ஷெபீல்ட் ஹாலம் பல்கலைக்கழகத்தில் கலாநிதிப் பட்டத்திற்கான ஆய்வில் ஈடுபட்டுவருகிறார். பாதுகாவலன் பத்திரிகையின் பிரதம ஆசிரியராகவும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மையத்தின் இணைப்பாளராகவும் பணியாற்றிய இவர், யாழ். ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் அவர்களின்

நினைவாக, Bishop Savundram Media Centre என்ற பத்திரிகையியல் கல்வி நிறுவனத்தை உருவாக்கி இயக்கி வருகின்றார்.

5028

தொலைக்காட்சிச் செய்திகள்: தொழில்நுட்பங்களும் பயிற்சிகளும். அருணா செல்லத்துரை. கொழும்பு 8: அருணா வெளியீட்டகம், A15/1/1, Maning Town Housing Complex, Mangala Road, 1வது பதிப்பு, 2008. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ் பிரைவேட் லிமிட்டெட், 48 B, புளுமெண்டால் வீதி).
xiv, 118 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 300., அளவு: 22x14.5 சமீ., ISBN: 978-955-1347-04-8.

11 இயல்களில் விரியும் இந்நூலில் தொலைக்காட்சியின் தோற்றத்தை விபரிக்கும் அறிமுகத்துடன் தொடங்கி, ஊடகங்கள் பின்பற்றவேண்டிய ஒழுக்கக் கோவை பற்றி விளக்கி, செய்திகள் என்ற எண்ணக்கரு பற்றிய சுருக்கமான பகுப்பாய்வுடன் தொடர்கிறார். ஊடகவியலாளர்கள் நவீன மின்னியல் கருவிகளைப் பயன்படுத்தித் தகவல்களையும் செய்திகளையும் சேகரிக்கும் முறைபற்றி விளக்கும் ஆசிரியர், அக்கருவிகளின் விளக்கப் படங்களையும் இணைத்துள்ளார். செய்தித் தயாரிப்பு பற்றிய இயலில் செய்தித் தயாரிப்பின் பல்வேறு படிகள், அதன் தொழில்நுட்ப அம்சங்கள், என்பனவற்றை விரிவாக ஆராய்கின்றார். செய்தி அறிவிப்பாளரின் தகைமைகள், அவர்களிடம் காணப்படவேண்டிய அல்லது அவர்களால் வளர்த்துக்கொள்ளப்படவேண்டிய பண்புகள் பற்றியும் அறிவுறுத்தியுள்ளார். தொலைக்காட்சித்துறையில் பணிபுரியும் அறிமுக ஊழியர்களுக்கும், அத்துறையில் ஆர்வம் மிக்கவர்களுக்கும் சிறந்ததொரு கைநூல் இது.

100 மெய்யியல்துறை

100 தத்துவவியல்

5029

அழகியல். சோ.கிருஷ்ணராஜா. கொழும்பு 11: சேமமடு பொத்தகசாலை, U G 50, People's Park, 1வது பதிப்பு, தை 2008. (கொழும்பு 11: சேமமடு பதிப்பகம்).
124 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-955-1857-06-6.

அழகியல் என்ற எண்ணக்கரு பற்றிய அடிப்படைகளை கலைக் கோட்பாட்டியல் பின்னணியில் இருந்து நுண்ணியதான விளக்கத்தை, தெளிவை ஏற்படுத்தும் நோக்கில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. அழகியல் பற்றிய அறிவுபூர்வமான கண்ணோட்டத்தை வளர்த்துக்கொள்வதற்கான தடங்களையும் சுட்டிக்காட்டுகின்றது. கலை-இலக்கியங்களின் மையப் பிரச்சினையான அழகியல் பற்றி முழுமையான பார்வையொன்றைத் தர இந்நூல் முயல்கிறது. கலைஞனை மையமாகக் கொண்ட அழகியல் பிரச்சினைகள், நுகர்வோனை மையமாகக் கொண்ட அழகியற் பிரச்சினைகள், கலையும் மொழியும், எப்பொழுதும் எது, எப்படி, கலையின் உருவாக்கம், இருப்புப் பற்றிய விளக்கங்கள், விளக்கமும் விமர்சனமும், அழகியற் பெறுமானங்கள் என்ற தலைப்புகளிலே இவ்வாய்வு நூல் ஆக்கப்பட்டுள்ளது. இந்நூலின் முதலாவது பதிப்பு 1996இல் தமிழகத்தில் சவுத் ஏஷியன் புக்ஸ் நிறுவனத்தினரால் வெளியிடப்பட்டது. அதில் இடம்பெற்ற **இந்தியக் கலைக் கொள்கை** என்ற இயல் இப்பதிப்பில் தவிர்க்கப்பட்டுள்ளது.

5030

இந்திய அழகியல். ஏ.என்.கிருஷ்ணவேணி. கொழும்பு: குமரன் புத்தக இல்லம், 361, ½ டாம் வீதி, 1வது பதிப்பு, 2008. (கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், 361, 1/2, டாம் வீதி).
(8), 128 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 22x15 சமீ., ISBN: 978-955-659-149-1.

கலை அழகு பற்றிய தத்துவார்த்த ரீதியான கொள்கை விளக்கங்கள் அழகியல் என்ற வரையறைக்குள் இடம்பெறுகின்றன. இந்திய பாரம்பரியத்தில் அழகு பற்றிய எண்ணக்கரு மிகத் தொன்மை வாய்ந்ததாயினும் அதன் வளர்ச்சி சமஸ்கிருத அலங்கார சாஸ்திரங்களின் ஊடாகவே அறியப்படுகின்றது. இந்திய அழகியல், இருக்கு வேதம் தொட்டு இற்றைவரை நீண்ட கலை இலக்கிய வரலாற்றுப் பின்னணியைக் கொண்டது. இந்திய அழகியலின் அடிப்படை அம்சங்களை இலகுவாக அறிந்துகொள்ளும் வகையில் இந்திய அழகியல் என்ற இந்நூல் வெளியிடப்படுகின்றது. சமஸ்கிருதக் கவிதையியல், ரஸக் கொள்கை, அலௌகீக ரசங்கள், துவனிக் கொள்கை, தமிழர் அழகியல் சிந்தனையில் தொல்காப்பியப் பொருளதிகாரம், மெய்ப்பாடு, கவிதை உத்தியாக உவமை, பெரிய புராணம் வெளிப்படுத்தும் பக்திரசம்

தொடர்பான கருத்துகள் இந்நூலில் தரப்பட்டுள்ளன. பல்கலைக்கழக நுண்கலை மாணவர்களுக்கும், இத்துறையில் ஆர்வம் மிக்கவர்களுக்கும் இந்நூல் ஏற்றது. கலாநிதி ஏ.என்.கிருஷ்ணவேணி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் நுண்கலைத்துறை முதுநிலை விரிவுரையாளராவார். அத்துறையின் தலைவராகவும் பணிபுரிபவர். சென்னைப் பல்கலைக்கழகத்தில் மெய்யியலில் உயர்நிலை ஆய்வுக்கான இராதாகிருஷ்ணன் நிறுவனத்தில் இரு முதுநிலைப் பட்டங்களையும், அதன் பின்னர் கலாநிதிப் பட்டத்தையும் பெற்றவர்.

5031

பிரயோக விவேகம். குருகூர்ச் சுப்பிரமணிய தீக்ஷிதர் (மூலமும் உரையும்), நல்லூர் ஸ்ரீ ஆறுமுக நாவலர் (பரிசோதித்தவர்). சிதம்பரம்: வி.கந்தசுவாமி, தருமபரிபாலகர், சிதம்பர சைவப்பிரகாச வித்தியாசாலை, 4வது பதிப்பு, ஏவிளம்பி வருடம், கார்த்திகை 1957. (சென்னை 1: ஆறுமுக நாவலர் வித்தியாநுபாலன யந்திரசாலை, நெ.300, தங்கசாலை வீதி).
134 பக்கம், விலை: ரூபா 1.00.

இந்நூல் காரக படலத்தில் 17 செய்யுள்களையும், சமாச படலத்தில் 10 செய்யுள்களையும், தத்தித படலத்தில் 6 செய்யுள்களையும், திங்ஙப் படலத்தில் 16 செய்யுள்களையும், உள்ளடக்கியுள்ளது. பல்வேறு மூலப் பிரதிகளையும் கொண்டு நல்லூர் ஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்களால் பரிசோதிக்கப்பெற்று வெளியிடப்பட்டுள்ளது. (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

150 உளவியல்

5032

உளவியல் முகங்கள். சபா.ஜெயராசா. கொழும்பு 11: சேமமடு பொத்தகசாலை, U.G.50, Peoples Park, 1வது பதிப்பு, ஆடி 2008. (கொழும்பு 11: சேமமடு பதிப்பகம்).
120 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 22x15 சமீ., ISBN: 978-955-1857-15-8.

மரபுவழி உளவியல் தொடக்கம், நவீன உளவியல் ஈறாக நாம் விளங்கிக் கொள்வதற்கான படிமலர்ச்சிகளை இந்நூல் நமக்கு அடையாளம் காட்டுகின்றது. சமகால உளவியல் சிந்தனைகளில் மையம்கொண்டுள்ள சில போக்குகளை நமக்கு அடையாளம்காட்டும் இந்நூல், தமிழ் நிலைப்பட்ட சிந்தனைக்கும் தேடலுக்கும் புதுவெளிச்சம் பாய்ச்சுகின்றது. நாட்டார் உளவியல், மெஸ்மெரிஸம் மற்றும் உளங்கவர் முறை, உளவியலின் உயிரியல் இணைப்புகள், உளப்பகுப்பு இயலின் பின்னைய வளர்ச்சிகள், சமூக உளவியல், மார்க்சிய உளவியல், பிறழ்நிலை உளவியல், விளையாட்டு உளவியல், அழகியல் உளவியல், உளவியலிற் பெண்கள், கோளமய உளவியல், பின்னவீனத்துவ உளவியல், உளவியல்-மெய்யியல் இடைவினைகள், உலக வரலாற்றில் நிகழ்ந்த சிறப்பார்ந்த உளவியல் நிகழ்ச்சிகள், ஆகிய 14 தலைப்புகளில் இந்நூல் சுவைபட விரிகின்றது.

5033

குடும்ப ஆற்றுப்படுத்தல். எஸ்.ஜே.இராஜநாயகம். யாழ்ப்பாணம்: அகவொளி வெளியீடு, குடும்ப வளத்துணை நிலையம், சென்.பற்றிக்ஸ் ரோட், 1வது பதிப்பு, ஒக்ரோபர் 2009. (யாழ்ப்பாணம்: புனித வளன் கத்தோலிக்க அச்சகம், இல. 360, பிரதான வீதி).
xii, 105 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 21x14.5 சமீ.

அருட்பணி எஸ்.ஜே.இராஜநாயகம் கனடா ஒட்டாவா பல்கலைக்கழகத்தில் பயின்று குடும்ப ஆற்றுப்படுத்தலில் (Family Therapy) முதுகலைமானிப் பட்டம் பெற்றவர். 1993ம் ஆண்டு தொடக்கம் யாழ்ப்பாணப் பலகலைக் கழகத்தில் உளவியற் கற்கைநெறியில் பகுதிநேர விரிவுரையாளராகவும், மருத்துவப் பிரிவில் உளநோயியல் கற்கைநெறியில் பகுதிநேர விரிவுரையாளராகவும் செயலாற்றியவர். அகவொளி ஆற்றுப்படுத்தும் உளவியல் நிறுவன அதிபராகவும் இயங்கிவருகின்றார். குடும்ப ஆற்றுப்படுத்தலை தொழில்முறையில் பிரயோகிக்கமுனையும் ஆற்றுப்படுத்துநர்களுக்கான கைநூலாக இது பல்வேறு அம்சங்களையும் 10 இயல்களில் தாங்கி வெளிவந்துள்ளது.

5034

சிறுவர் உளவியல்: பாகம் 1. ஆதில் ஹசன். கொழும்பு 10: I R O இஸ்லாமிய ஆய்வு அமைப்பு, 2வது பதிப்பு, மார்ச் 2009, 1வது பதிப்பு, பெப்ரவரி 2009. (கல்ஹின்ன: Wings Graphics Ltd., 262 A, Kandy Road).
92 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 200., அளவு: 18x12 சமீ.

சிறுவர்களுடன் பெற்றோர் வைத்திருக்கவேண்டிய ஆரோக்கியமான உளவியல்ரீதியான தொடர்புபற்றி இந்நூல் விரிவாகப் பேசுகின்றது. அவர்களின் ஆரோக்கியமான மூளை வளர்ச்சிக்கு பெற்றோர் கடைப்பிடிக்கவேண்டிய ஒழுங்குவிதிகள், அவர்களது விருப்பு வெறுப்புகளைப் புரிந்துகொள்ளல், அவர்களது சுதந்திரம், தேவை, கலந்துரையாடல், ஆளுமை விருத்தி என்பன போன்ற பல அம்சங்கள் இந்நூலில் எளிமையாக விபரிக்கப்பட்டுள்ளன. மருதானையைச் சேர்ந்த நூலாசிரியர் ஆதில் ஹசன் இஸ்லாமிய ஆய்வு அமைப்பின் தலைவராகவும், I R O கல்விக் கல்லூரியின் பணிப்பாளராகவும் இயங்குபவர்.

5035

தியான காலம். ஸ்ரீ இராமகிருஷ்ண மடத்தார். யாழ்ப்பாணம்: சிவதொண்டன் நிலையம், 434-436, காங்கேசன்துறை வீதி, 2வது பதிப்பு, 1956, 1வது பதிப்பு, 1925. (யாழ்ப்பாணம்: இராசகுமாரன் அச்சகம், 290 காங்கேசன்துறை வீதி).
194 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை.

முப்பது அத்தியாயங்களில் தியான அனுபவங்களைக்கூறும் திவ்வியமான கருத்துக்களைக் கொண்ட இந்நூல், ஸ்ரீ இராமகிருஷ்ண மடத்தாரினால் பிரசுரிக்கப்பட்ட ஆங்கில நூலின் மொழிபெயர்ப்பாகும். (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5036

மன பலம். ஆதில் ஹசன். கொழும்பு 10: I R O இஸ்லாமிய ஆய்வு அமைப்பு, 2வது பதிப்பு, செப்டெம்பர் 2008, 1வது பதிப்பு, ஓகஸ்ட் 2008. (தெகிவளை: A.J.Prints, 44 Station Road).
94 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 18x12.5 சமீ.

மாபோல, வத்தளையை இருப்பிடமாகக் கொண்ட நூலாசிரியர் ஆதில் ஹசன் இஸ்லாமிய ஆய்வு அமைப்பின் தலைவராகவும், I R O கல்விக் கல்லூரியின் பணிப்பாளராகவும் இயங்குபவர். தமது மனபலத்தைப் புரிந்துகொள்ளாத பல மனிதர்கள் மன நோயாளிகளாகவும், புத்தி தடுமாறி உலகை வெறுத்தவர்களாகவும் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள் என்று கூறும் ஆதில் ஹசன், இந்நூலில் உள்ள கட்டுரைகளின் வழியாக, மக்களின் உளவுறுதியை மேம்படுத்த வழிகாட்ட முயல்கின்றார். தன்நம்பிக்கையை வளர்த்தெடுக்கும் பயிற்சிகளை இந்நூலில் ஆங்காங்கே அறிமுகப்படுத்தியிருக்கிறார்.

5037

மனம் எங்கே போகிறது? பொ.கனகசபாபதி. தெல்லிப்பழை: தெல்லிப்பழைக் கலை இலக்கியக் களம், 1வது பதிப்பு, ஜனவரி 2008. (தெகிவளை: ECWays Ltd., 4-1/1, Vanderwert Place).
xii, 85 பக்கம், விளக்கப்படங்கள், புகைப்படங்கள், விலை: ரூபா 200., அளவு: 21x14.5 சமீ.

இந்நூலில் உள்ள 13 உளவியல் கட்டுரைகளிலும் போதனையின் சாயல்கள் எதுவுமில்லாமல், அழகு மொழியில் எம் குழந்தைகளை நாம் எப்படி அணுகவேண்டும், பழக வெண்டும், புரிந்துகொள்ளவேண்டும், ஊடாட வேண்டும், அவர்களின் பிரச்சினைகளுக்கான தீர்வுகளில் எம் வகிபாகமென்ன என்பதை எம்மோடு இந்நூலினூடாக வெகு எளிமையாகவும் விளக்கமாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. மனம், புரிதல், தூக்கம், கனவு, நனவு, அச்சம், கற்றல், பெற்றோரியம், தொடர்பாடல் பிரச்சினைகள், அவை மீதான அறிவியல் ரீதியிலான அணுகுமுறைகள், இலக்கியம்- கவிதைகளிலிருந்து எடுத்துக்காட்டுக்களென ஒவ்வொரு கட்டுரையும் கவிதைச் சுவையுடன் இந்நூலில் விரிகின்றது.

5038

மனமெனும் தோணி. கோகிலா மகேந்திரன். கொழும்பு 11: சேமமடு பொத்தகசாலை, U.G.50, Peoples Park, 1வது பதிப்பு, ஆடி 2008. (கொழும்பு 11: சேமமடு பதிப்பகம்).
132 பக்கம், விலை: ரூபா 240., அளவு: 21.5x14.5சமீ., ISBN: 978-955-1857-19-6.

17 அத்தியாயங்கள் கொண்ட உளவியல் அறிவுநூல். பெண்களின் உளநலம், பாடசாலை செல்வதற்கு முன் குழந்தைகளுக்குக் கற்பித்தல், இலட்சிய ஆரம்பப் பாடசாலை ஒரு கனவு, கல்வி ஒரு பயனுள்ள ஆயுதம், பிள்ளைப் பருவத்து உளப்பிரச்சினைகள், பிள்ளைகளின் ஆளுமை விருத்தியில் குடும்பத்தின் பங்கு, மனித உறவுகளை மேம்படுத்தல், விழிப்பு மாற்ற நிலை தூக்கம், இந்து நேர்த்திக்கடன்களும் மேலைத்தேய உளவியலும், சமூக சேவையில் ஈடுபடும் மனிதர்கள் ஓர் உளவியல் பார்வை போன்ற இன்னும் பல முக்கிய அம்சங்களை இந்நூல் தாங்கி வந்திருக்கின்றது. சிறந்த கல்வி நிர்வாகி, ஈழத்தின்

முக்கியமான எழுத்தாளர், நாடகாசிரியர், உளவியலாளர் என்று பன்முக ஆளுமை கொண்டவர் கோகிலா மகேந்திரன்.

மேலும் பார்க்க: 5341, 5343, 5405, 5687

158.1 மானிட மேம்பாடு

5039

தலைமைத்துவக் கோட்பாடுகள். தை.தனராஜ். கொழும்பு 11: சேமமடு பொத்தகசாலை, U.G.50, Peoples Park, 1வது பதிப்பு, ஆவணி 2008. (கொழும்பு 11: சேமமடு பதிப்பகம்).
152 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 21.5x15 சமீ., ISBN: 978-955-1857-17-2.

தலைமைத்துவம் ஓர் அறிமுகம், தலைமைத்துவம் பற்றிய வரைவிலக்கணங்கள், தலைமைத்துவ வகைகள், தலைமைத்துவமும் விளைதிறனும், தலைமைத்துவமும் முகாமைத்துவமும், தலைமைத்துவமும் வலுவாண்மையும், பண்புக்கூறுகள் அணுகுமுறை, திறன்சார் அணுகுமுறை, நடத்தைசார் அணுகுமுறை, சூழ்நிலைசார் அணுகுமுறை, சூழ்நிலைசார் தலைமைத்துவம், வழி-இலக்கு கோட்பாடு, தலைவர்-பணியாளர் பரிமாற்று தலைமைத்துவக் கோட்பாடு, நிலைமாற்று தலைமைத்துவம், பணியாள் தலைமைத்துவம், பெண் தலைமைத்துவம், வாழ்வில் வெற்றியடைய ஏழு பழக்கங்கள் ஆகிய 17 இயல்களில் தலைமைத்துவக் கோட்பாடுகள் இந்நூலில் விளக்கப்பட்டுள்ளன. தையல்முத்து தனராஜ் மாணவ ஆசிரியராகத் தனது கல்விப்பணியை ஆரம்பித்தவர். தொடர்ந்து ஆசிரியர் கலாசாலை, பல்கலைக் கழகம் போன்ற உயர்கல்வி நிறுவனங்களில் பட்டங்கள் பெற்றவர். கல்வியியல்துறையில் முதுநிலை விரிவுரையாளராகப் பணியாற்றுபவர்.

5040

மனித மேம்பாட்டுச் சிந்தனைகள். குமாரசாமி சோமசுந்தரம். தெகிவளை: ரஜி வெளியீடு, 29, முதலாம் ஒழுங்கை, 1வது பதிப்பு, டிசம்பர் 2000. (ஹோமகம: எலெக்ட்ரோ டெக் அச்சகம், 230/5, கிரிவட்டுதுவ).
(5), 159 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 20.5x14.5 சமீ.

மானுடம், மனிதாபிமானம், மனுதர்மம், மனித விழுமியங்கள், மனச்சாட்சி இவை யாவும் மனிதர்களுக்கு இயல்பானவையும் உரித்துடையவையும் என்பதை எவரும் ஏற்றுக்கொள்வர். உலகின் அமைதியும் நிம்மதியும் சாந்தியும் சமாதானமும் பறிபோய்க்கொண்டிருப்பதற்கு மனிதாபிமானம் புறக்கணிக்கப்படுவதே காரணம் என்று குறிப்பிடும் நூலாசிரியர், மானுடம் தழுவிய தன் கருத்துக்களை 35 கட்டுரைகளின் உருவில் வழங்கியுள்ளார். கலாபூஷணம் கு.சோமசுந்தரம் ஆசிரியராகத் தன் கல்விப் பணியை ஆரம்பித்தவர். இலங்கைக் கல்வி, நிர்வாக சேவையில் கல்வியதிகாரி, பிரதம கல்வி அதிகாரி, கல்விப் பணிப்பாளர் போன்ற பல பதவிகளையும் வகித்தவர்.

5041

வாழ்வு நலம்பெற நற்சிந்தனைகள். குமாரசாமி சோமசுந்தரம். சென்னை 600017: மணிமேகலைப் பிரசுரம், தபால் பெட்டி எண் 1447, இல.7 (ப.எ.4), தணிகாசலம் சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2005. (சென்னை 600094: ஸ்கிரிப்ட் ஆ.ப்செட்).
viii, 292 பக்கம், விலை: இந்திய ரூபா 75., அளவு: 18x12 சமீ.

இந்நூலில் இடம்பெறும் முப்பத்திமூன்று கட்டுரைகளிலும் மானுடம், மனிதம், மனித தர்மம், மனித விழுமியங்கள் தழுவிய வாழ்வியல் கருத்துகள் என்பன முன்வைக்கப்படுகின்றன. அவற்றை வாசகர்கள் கருத்தூன்றி வாசித்து, சிந்தித்துத் தெளிந்து வாழ்க்கையிலும் அவற்றைக் கடைப்பிடித்து ஏனையோரையும் வழிநடத்தவேண்டும் என்பது நூலாசிரியரின் எதிர்பார்ப்பாக உள்ளது. கொழும்புத் தமிழ்ச்சங்கத் தலைவராகப் பணியாற்றிய குமாரசாமி சோமசுந்தரம் பட்டதாரி ஆசிரியராகத் தன் பணியை ஆரம்பித்தவர். பல மாவட்டங்களிலும் கல்வி நிர்வாகத்துறையில் பணியாற்றியவர்.

160 தர்க்கவியல்

5042

தருக்க சங்கிரகமும் அதனுரையாகிய தருக்க சங்கிரக தீபிகையும். திருவாவடுதுறைச் சிவஞான சுவாமிகள் (மொழிபெயர்ப்பு), நல்லூர் ஸ்ரீ ஆறுமுக நாவலர் (பரிசோதித்தவர்). சிதம்பரம்: தியாகராஜபிள்ளை, தருமபரிபாலகர், சிதம்பர சைவப்பிரகாச வித்தியாசாலை, 7வது பதிப்பு, சுக்கில வருடம், 1929. (சென்ன பட்டணம்: வித்தியாநுபாலன யந்திரசாலை).
64 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை.

மகாபண்டிதராகிய தெலுங்கரான அன்னம்பட்டர் ஏறக்குறைய 220 வருடங்களுக்கு முன்னர் தருக்க சங்கிரகம் எனப் பெயர்கொண்ட ஒரு நூலும், அதற்குத் தருக்க சங்கிரக தீபிகை எனப் பெயரில் ஒரு வியாக்கியானமும் இயற்றினார். இத்தருக்க சங்கிரகம் எளியமுறையில் சுருக்கமாக தர்க்க சாஸ்திரத்தை விளக்குவதால் இது பின்னாளில் பெயர்பெற்ற நூலாகிற்று. இந்நூலை கைலாச பரம்பரைத் திருவாவடுதுறைச் சித்தாந்தபானுவாகிய நமச்சிவாய மூர்த்திகண் மரபில் வந்த சிவஞான சுவாமிகள் தமிழில் மொழிபெயர்த்திருந்தார். அரிய இந்நூல் இராமநாதபுர சமஸ்தானம் ஸ்ரீ பொன்னுச்சாமித் தேவரவர்களின் வேண்டுகோளின்படி நல்லூர் ஆறுமுகநாவலரினால், பரிசோதிக்கப்பட்டது. (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

170 ஒழுக்கவியல்

5043

அமுத மொழிகள் ஆயிரம் (மேற்கோளாயிரம்). வ.கந்தசுவாமி, சு.மகாலிங்கம் (தொகுப்பாசிரியர்கள்). கொழும்பு 13: பூபாலசிங்கம் புத்தகசாலை, 202 செட்டியார் தெரு, 2வது பதிப்பு, ஆனி 2009, 1வது பதிப்பு, பங்குனி 1961. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ் பிரைவேட் லிமிட்டெட், 48 B, புளுமெண்டால் வீதி).
viii, 100 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 22x14.5 சமீ., ISBN: 978-955-9396-32-1.

1961ஆம் ஆண்டு மாதகல் வ.கந்தசுவாமி அவர்களுடன் இணைந்து மேற்கோளாயிரம் என்ற நூலை ஏ.எஸ்.மகாலிங்கம் (சாமஸ்ரீ தேசமான்ய வைத்திய கலாநிதி) வெளியிட்டிருந்தார். மாதகல் வ.கந்தசுவாமி சுன்னாகம் ஸ்கந்தவரோதய கல்லூரியின் முன்னாள் ஆசிரியரும், சீனா பீகிங் (பீஜின்) வானொலியின் தமிழ் ஒலிபரப்பின் முன்னோடியுமாவார். அந்நூலின் மீள்பதிப்பு இதுவாகும். பல்வேறு நூல்களிலும் காணப்படும் கருத்துக்களை 107 தலைப்புகளில் தொகுத்து வழங்குவதாக இந்நூல் அமைந்துள்ளது.

5044

இதோபதேசம். அ.நாகநாத பண்டிதர் (தமிழாக்கம்), அ.குமாரசுவாமிப் புலவர் (சுருக்கி இயற்றியவர்). சுன்னாகம்: வட இலங்கைத் தமிழ்நூற் பதிப்பகம், 3வது பதிப்பு 1949, 2வது பதிப்பு, 1940, 1வது பதிப்பு, 1920. (சுன்னாகம்: திருமகள் அழுத்தகம்).
93 பக்கம், விலை: சதம் 75.

தமிழ் நாட்டு அறிஞர்களான தி.கனகசுந்தரம்பிள்ளை, எஸ்.அநவரதவிநாயகம்பிள்ளை ஆகியோரின் கருத்துரையுடன் வெளியாகியுள்ள நூல். இதோபதேசம் என்பது சமஸ்கிருத மொழியில் சகல நீதிசாத்திரங்களையும் நன்கு கற்றுப் பண்டிதராய் விளங்கிய விட்டுணு சர்மர் எனும் வேதியரால் சுதர்சனன் என்னும் அரசனுடைய மகனுக்கு அரசியல் உணருமாறு உபதேசிக்கப்பட்ட நீதிச் சுலோகங்களும் அவற்றுக்கியைந்த கதைகளும் அமைந்துள்ள ஒரு நீதி நூல். சுன்னாகம் அ.நாகநாத பண்டிதரால் 1886இல் தமிழில் இது மொழிபெயர்க்கப்பட்டது. அதில் காணப்பெற்ற பெரும்பான்மையான வடமொழிச் சொற்களை நீக்கி, இலங்கைப் பாடசாலை மாணவர்களுக்கேற்ற வகையில் சுருக்கி எழுதப்பட்ட இப்பதிப்பு 1920இல் முதற்பதிப்பைக் கண்டிருந்தது. மித்திரலாபம், சுகிர்ப்பேதம், விக்கிரகம், சந்தி ஆகிய நான்கு பிரிவுகளுக்குள் இதோபதேசக் கதைகள் சொல்லப்பட்டுள்ளன. (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14)

5045

கீதை அமுதம். செ.தனபாலசிங்கன். யாழ்ப்பாணம்: செ.தனபாலசிங்கன், 1வது பதிப்பு, 1970. (சுன்னாகம்: திருமகள் அழுத்தகம்).
292 பக்கம், விலை: ரூபா 5.

இந்நூல் கீதையிலுள்ள சுலோகங்களில் ஒவ்வொன்றையும் தனித்தனியே சொல்லி அவற்றிற்கு விரிவுரையும் விளக்கவுரையும் கூறவரவில்லை. மாறாக கீதைக் கருத்தை மனதில் இருத்தி, அந்தக் கருத்துக்குச்

சார்பான பல செய்திகளையும் சேர்த்து கட்டுரை வடிவில் அவற்றை எழுதி, வேறு பல நூல்களின் கருத்துக்களையும் இடையிடையே எடுத்துக்காட்டி கண்ணபிரானுடைய திருவாக்கையும் வாசகருக்குத் தெளிவாக எடுத்துக்காட்டுகின்றது. இந்நூலுக்கு அணிந்துரையை சென்னையிலிருந்து கலைமகள் ஆசிரியர் கி.வா.ஜகந்நாதன் வழங்கியிருக்கிறார். (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14)

5046

திருக்குறளில் இருந்து திருமந்திரம் வரை. K.T.பெரியதம்பி. வல்வெட்டித்துறை: சிவசக்தி, சிவன்கோவில் தெரு, 1வது பதிப்பு, ஜனவரி 2009. (Canada: Apex Creations, 50 Nashdene Road, Unit 103, Scarborough, Ontario, M1V 5J2).
(8), 135 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18.5X13.5 சமீ.

நூலாசிரியர் யாழ்ப்பாணக் குடாநாட்டில் அச்சுவேலிப் பிரதேசத்திலுள்ள கதிரிப்பாய் கிராமத்தைச் சேர்ந்தவர். 1988ம் ஆண்டு முதல் குடும்பத்தினருடன் புலம்பெயர்ந்து கனடாவில் வாழ்ந்துவருகின்றார். திருக்குறளிலிருந்து திருமந்திரம் வரையிலான சங்க நூல்களிலிருந்து கடைந்தெடுத்த பல்வேறு சமூக ஒழுக்கவியல் கருத்துக்களை, சமகால வாழ்விடச் சூழலுடன் பொருத்திப் பார்ப்பதுடன் அவ்வொழுக்கவியல் சிந்தனைகள் தொடர்பாக தனது தனிப்பட்ட கருத்துக்களையும் இந்நூலில் கலந்து படைத்துள்ளார்.

5047

பகவத் கீதை விளக்க வசனம். சி.சுந்தரம்பிள்ளை. யாழ்ப்பாணம்: சி.சுந்தரம்பிள்ளை, நல்லூர், 1வது பதிப்பு, விரோதி வருடம், 1949. (யாழ்ப்பாணம்: ஸ்ரீசண்முகநாத அச்சியந்திரசாலை).
416 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை.

வேத வியாசர் என்னும் ஸ்ரீவாதராயண முனிவர் நூறாயிரஞ் சுலோகங்களை அடக்கியதும் ஐந்தாம் வேதமெனக் கூறப்படுவதுமான மகாபாரதம் என்னும் இதிகாசத்தை இயற்றியருளினார். அதனுள் 700 சுலோகங்களில் அடங்கிய மெய்ஞ்ஞானக் களஞ்சியமான ஸ்ரீ பகவத் கீதையையும் வைத்தருளினார். பகவத் கீதையின் 700 சுலோகங்களிலும் பொதிந்து கிடக்கும் ஆழக்கருத்தினை எளிய நடையில் தமிழில் இந்நூலில் கூறியிருக்கிறார். யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணையில் எழுந்தருளியிருந்த ஸ்ரீமத் சுவாமி மகாதேவா அவர்களின் திருவடித்தொண்டனான நூலாசிரியர் எழுதிய இந்நூலுக்கு சு.நடேசபிள்ளை அவர்கள் மதிப்புரை வழங்கியுள்ளார். (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5048

பகவத் கீதை வெண்பா: முதலாம் பாகம்: கரும யோகம் விளக்கக் குறிப்புடன். ஏ.பெரியதம்பிப்பிள்ளை. கொழும்பு 13: அரசு வெளியீடு, 231 ஆதிருப்பள்ளித் தெரு, 1வது பதிப்பு, நவம்பர் 1962. (கொழும்பு 13: ரெயின்போ அச்சகம், 231 ஆதிருப்பள்ளித் தெரு).
172 பக்கம், விலை: ரூபா 3.50.

மட்டக்களப்பு புலவர்மணி ஏ.பெரியதம்பிப்பிள்ளை எழுதியுள்ள இந்நூலில் அருச்சுன விஷாதயோகம், சாங்கிய யோகம், கரும யோகம், ஞான யோகம், கரும சந்நியாச யோகம், தியான யோகம் ஆகியவை இடம்பெற்றுள்ளன. இல்லற வாழ்வுக்கும் துறவற வாழ்வுக்கும் பொதுவாக நிற்கின்ற கருமயோகம் எல்லோரும் அனுசரிக்கத்தக்கதென்ற காரணத்தால் பகவத் கீதை வெண்பாவின் கருமயோகப் பகுதியை முதலில் வெளியிடுவதாக ஆசிரியர் குறிப்பிடுகின்றார். மகாகவி பாரதியார், சேர்.பொன் இராமநாதன், ஸ்ரீராமகிருஷ்ண சங்கம், மு.குமாரசுவாமி ஆகியோரின் மொழிபெயர்ப்புகளைத் துணையாகக் கொண்டு முதல் ஆறு அத்தியாயங்களுக்கும் பொழிப்புரையும், ஆங்காங்கு விளக்கக் குறிப்பும் எழுதிச் சேர்த்துள்ளதுடன், ஒவ்வோர் அத்தியாயத்தின் முதலிலும் அத்தியாயப் பொருளைத் தொகுத்து அமைத்தும் இந்நூல் பூர்த்திசெய்யப்பட்டுள்ளது. (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5049

விட்டுணு சன்மா செய்த பஞ்சதந்திரம். நவாலியூர் சோ.நடராசன். யாழ்ப்பாணம்: கலைவாணி புத்தக நிலையம், 1வது பதிப்பு, சித்திரை 1962. (யாழ்ப்பாணம்: கலைவாணி அச்சகம், 10 பிரதான வீதி).
157 பக்கம், விலை: ரூபா 2.25.

விட்டுணு சன்மா இயற்றிய பஞ்ச தந்திரத்தில் வரும் ஐந்து தந்திரங்களுள் ஒன்றான மித்திரபேதம் (நண்பரைப் பிரித்தல்) என்ற முதற் கதைத் தொகுதி இது. ஆப்பிழுத்த குரங்கின் கதை, கோமாயு துந்துபி கதை, தந்தில கோரம்பர் கதை, விட்டுணு வேடத்தில் வந்த கைகோளன் கதை, நீர்க்குருவியும்

சமுத்திரமும், தடியிலிருந்து விழுந்த ஆமை, யானையும் சிட்டுக்குருவியும், சிங்கமும் நரியும், ஊசிமுகனும் குரங்குகளும், குரங்கும் சிட்டுக் குருவியும், தருமபுத்தியும் பாவ புத்தியும், மூட நாரையும் கீரிப் பிள்ளையும், இரும்பைத் தின்ற எலி, அரசனுக்குச் சேவகனான குரங்கு ஆகிய 14 கதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

180 இந்து தத்துவம்

5050

ஆபஸ்தம்ப பூர்வப்பிரயோகம் (முதற் பாகம்). க.சாம்பசிவ சிவாச்சாரியார். யாழ்ப்பாணம்: பிரம்மஸ்ரீ சா.சண்முகநாத சர்மா, 1வது பதிப்பு, ஐப்பசி 1964. (யாழ்ப்பாணம்: ஸ்ரீ சாரதா அச்சகம்). 74 பக்கம், விலை: ரூபா 1.50

வடமொழியில் அமைந்த பழமையான தர்மசூத்திர நூல்களுள் ஒன்று ஆபஸ்தம்ப பூர்வப்பிரயோகம் ஆகும். இந்நூலை நல்லூர் வைரவர் கோயில் குருக்களான சிவஸ்ரீ ச.கந்ததாசக் குருக்களின் புத்திரன் நாயன்மார்கட்டு மாந்திரீக பூஷணம் க.சாம்பசிவ சிவாச்சாரியார் தமிழில் உரையாக்கம் செய்திருந்தார். அதனை, யாழ்ப்பாணம் ஆயுர்வேதக் கல்லூரி மாணவராயிருந்த உரையாசிரியரின் புத்திரர் பிரம்மஸ்ரீ சா.சண்முகநாத சர்மா அவர்கள் பதிப்பித்திருக்கிறார். இந்நூலில் மஹா சங்கல்ப பொழிப்புரை, ஜாதகர்மம்-மந்திரப் பதவுரை, நாமகரணம், அன்னப்பிராசனம் ஆகிய தலைப்புகளில் உரையாக்கம் செய்யப்பட்டுள்ளது. (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5051

இறையியல் தத்துவமும் வழிபடும் முறைகளும்: பகுதி 2: பவமதனை அறமாற்றும் பாங்கினில் ஓங்கிய ஞானம். சிவசிதம்பரம் திருநாவுக்கரசு. இளவாலை: பழனி ஆனந்த இல்லம், சித்திரமேழி, இளவாலை, 1வது பதிப்பு, 2001. (மானிப்பாய்: சௌந்தரம் அச்சகம், ஆலடிச் சந்தி). (16), 100 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 21X14.5 சமீ.

Principles and Practice of Theology (Tamil Medium) என்ற ஆங்கிலத் தலைப்புடனும் வெளிவந்துள்ள தொடர் நூலின் இரண்டாவது பாகம் இது. முதற்பாகம் 1999இல் சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம் என்ற உப தலைப்பில் வெளிவந்தது. ஈழத்து நகுலேஸ்வர, வட இலங்கை வலய மேழியூர் சைவப்புலவர் சி.திருநாவுக்கரசு அவர்கள் எழுதிய இந்நூலின் இரண்டாவது பாகம், பவமதனை அறமாற்றும் பாங்கினில் ஓங்கிய ஞானம் என்ற உப தலைப்புடன் வெளிவந்துள்ளது. சிவஞானப் பேற்றைப் பெறுவதற்கு இன்றியமையாது தேவைப்படும் உறுதிப் பொருட்களாகிய நீர், விபூதி, உருத்திராட்சம் பற்றியும், மற்றும் நித்திய கர்மம், அகண்ட சக்தி தியானம், உணவு பற்றிய தியானம், கடமை, நித்திரை, விழிப்புணர்வு ஆகிய தியானங்கள் பற்றிய சிந்தனைகளை உள்ளடக்கியதாகவும் இந்நூல் அமைகின்றது. சைவநெறியில் நாம் எவ்வாறு நிற்கவேண்டும் என்று அறிய விழைபவர்களுக்கு சிறந்த விளக்கந்தரும் ஒரு கைநூல் இது.

5052

இறையியல் தத்துவமும் வழிபடும் முறைகளும்: பகுதி 3: உவமையில்லாக் கலைஞானம். சிவசிதம்பரம் திருநாவுக்கரசு. இளவாலை: பழனி ஆனந்த இல்லம், சித்திரமேழி, இளவாலை, 1வது பதிப்பு, 2007. (மானிப்பாய்: சௌந்தரம் அச்சகம், சங்கரப்பிள்ளை வீதி). xxii, 520 பக்கம், விலை: ரூபா 500., அளவு: 21X14 சமீ.

Principles and Practice of Theology (Tamil Medium) என்ற ஆங்கிலத் தலைப்புடனும் வெளிவந்துள்ள தொடர் நூலின் மூன்றாவது பாகம் இது. முதற்பாகம் 1999இலும், இரண்டாம் பாகம் 2001இலும் வெளிவந்தன. ஈழத்து நகுலேஸ்வர, வட இலங்கை வலய மேழியூர் சைவப்புலவர் சி.திருநாவுக்கரசு அவர்கள் எழுதிய இந்நூலின் மூன்றாவது பாகம், உவமையில்லாக் கலைஞானம் என்ற உப தலைப்புடன் வெளிவந்துள்ளது. சைவசித்தாந்தக் கருத்துக்களும், யோக சாதனை முறைகளும், வேறுபல தத்துவங்களும் விரிவாக இந்நூலில் ஆராயப்பட்டுள்ளன. சைவசமய வாழ்வு, சமூக வாழ்வு, செந்தமிழின் சிறப்பு, வைதீக சைவத் தமிழ்ச் சங்கத்தின் செயற்பாடுகள் ஆகிய விடயங்களைத் தெளிவுபடுத்தி, சமய சாஸ்திரப் பிரமாணங்களின் துணைகொண்டு ஆசிரியர் தாம் எடுத்துக்கொண்ட பொருளை நன்கு விளக்க முயன்றுள்ளார். சைவநெறியில் நாம் எவ்வாறு நிற்கவேண்டும் என்று அறிய விழைபவர்களுக்கு சிறந்த விளக்கந்தரும் ஒரு கைநூல் இது.

5053

உண்மை நெறி விளக்கம். உமாபதி சிவாசாரியார் (மூலம்), இ.செல்லத்துரை (உரையாசிரியர்). யாழ்ப்பாணம்: அகில இலங்கைச் சைவப்புலவர் சங்க வெளியீடு, 20, சிவம்ஸ், ஸ்ரான்லி வீதி, 1வது பதிப்பு, செப்டெம்பர் 1966. (யாழ்ப்பாணம்: ஸ்ரீ சுப்பிரமணிய அச்சகம்).
17 பக்கம், விலை: சதம் 50.

சைவ சித்தாந்த சாத்திரம் பதினான்காகக் கருதப்படுகின்றது. அவற்றுள் கொற்றவன்குடி உமாபதி சிவாசாரியார் அருளிச்செய்தவை எட்டாகும். அவற்றினுள் ஒன்றான உண்மைநெறி விளக்கத்தின் மூலமும் உரையுமே இந்நூலாகும். (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5054

உபநிடதச் சிந்தனைகள். செ.தனபாலசிங்கன். உரும்பராய்: சிதம்பர சுப்பிரமணிய சுவாமி கோவில், 1வது பதிப்பு, 1966. (யாழ்ப்பாணம்: ஸ்ரீ சண்முகநாத அச்சகம்).
129 பக்கம், விலை: ரூபா 2.

தினகரன் வார மலரில் தொடராக வெளிவந்த கட்டுரைகளின் தொகுப்பு இது. தமிழ்த் திருமுறைகள் உபநிடதக் கருத்துக்களைத் தமக்குரிய பாணியில் தெளிவாக விளக்குகின்றன. திராவிட உபநிடதங்களாகக் குறிப்பிடப்படும் ஆன்மீகம் சார்ந்த கட்டுரைகள் இவை. உபநிடதம் காட்டுவது உந்நத வாழ்க்கையின் இலட்சியம், உபநிடதம் உரைப்பது பிறவாப் பெருநெறி, உபநிடதத்தின் உட்பொருள், மரணத்தின்பின் ஆத்மாவின் நிலை யாது? கல்யாண மரணம், எண்ணத்தின் தூல அமைப்பு இனி வரும் பிறப்பு, அன்னம் இரண்டுள ஆற்றங்கரையிலே, ஓம் என்னும் ஒலி, சந்ததியாகிய நூலை அறுத்துவிடாதே, அன்னம் பிரம்மம், வாழ்க்கையின் குறிக்கோள் சிற்றறிவைப் பேரறிவாக்குவது, உலர்ந்த கட்டையும் உயிர்பெறும் வித்தை, சொந்த ஊருக்குப் போகும் வழி, பலகற்றோம் பயனில்லை, காதல் கனிந்தால் கடவுள் தெரியும், சும்மா இரு சிவம் தெரியும் ஆகிய தலைப்புகளில் அமைந்த 16 உபநிடதக் கட்டுரைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. இந்நூலுக்கான அணிந்துரையை தெ.பொ.மீனாட்சிசுந்தரனாரும் முன்னுரையை T.M.P.மகாதேவனும் வழங்கியுள்ளனர். (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5055

உமாபதி சிவாசாரியார் அருளிய திருவருட்பயன்: உரையுடன். உமாபதி சிவாசாரியார் (மூலம்), க.வச்சிரவேல் முதலியார் (உரையாசிரியர்). பேராதனை: இந்து மாணவர் சங்கம், இலங்கைப் பல்கலைக்கழகம், 1வது பதிப்பு, செப்டெம்பர் 1967. (யாழ்ப்பாணம்: ஸ்ரீ சண்முகநாத அச்சகம்).
60 பக்கம், விலை: ரூபா 1.00

இந்நூல் பதிமுதுநிலை, உயிரவை நிலை, இருள்மல நிலை, அருளது நிலை, அருளுரு நெறி, அறியும் நெறி, உயிர் விளக்கம், இன்புறுநிலை. ஐந்தெழுத்தருள் நிலை, அணைந்தோர் தன்மை ஆகிய தலைப்புகளில் திருவருட்பயன் விளக்கப்பட்டுள்ளது. திருவருட்பயனுக்குப் பல உரைகள் உள. அவற்றுள் பிரமாணமாகக் கொள்ளக்கூடியது நிரம்ப அழகிய தேசிகர் எழுதிய உரையாகும். தேசிகர் எழுதிய உரையைப் பிரமாணமாகக் கொண்ட பாடபேதங்களை ஆராய்ந்து சரியான மூல பாடங்களை அமைத்துக்கொள்ளுதல் அவசியம். சரியான மூல பாடங்களை அமைத்துக் கொள்ளாவிடில் பாட்டுக்கும் உரைக்கும் உள்ள சம்பந்தத்தை அறியாது மாணவர் இடர்ப்படுவர். சைவசித்தாந்த கலைச் செல்வர் க.வச்சிரவேல் முதலியாரவர்கள் பாடபேதங்களை ஆராய்ந்து மூல பாடங்களைச் செப்பஞ்செய்து யாவரும் எளிதில் உணரக்கூடிய அரியதோர் உரையை எழுதியுள்ளார். அவ்வரையின் திட்ப நுட்பங்களைச் சைவ அன்பர்கள் படித்தறிந்து கொள்ளும் வகையில் ஒவ்வோர் அதிகாரப் பொருளையும் திரட்டித் தொகுப்புரை என்ற தலைப்பில் பத்துக் கட்டுரைகள் இந்நூலின் இறுதியில் சேர்க்கப்பட்டுள்ளன. (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5056

கந்தபுராண கலாசாரம். சி.கணபதிப்பிள்ளை. யாழ்ப்பாணம்: பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை, திருநெல்வேலி, 1வது பதிப்பு, கார்த்திகை 1959. யாழ்ப்பாணம்: ஸ்ரீசண்முகநாத அச்சகம்).
83 பக்கம், விலை: ரூபா 1.00

இது யாழ்ப்பாணத்தில், திருநெல்வேலி பரமேசுவராக் கல்லூரியில் நடந்த லக்ஷிய ஜயந்தி ஒன்றில் "யாழ்ப்பாணக் கலாசார மூலம் கந்தபுராணம்" என்ற தலைப்பில் பண்டிதமணியவர்கள் ஆற்றிய உரையின் விரிவாகும். இவ்வுரை, கந்தபுராணப் பெருமை (1), கந்தபுராணப் பெருமை (2), கண்ணூறு, வித்துவ

சிரோமணி பொன்னம்பலபிள்ளை, புராண படனம், பெறுபேறு, ஏகாத்மவாதம், சைவசித்தாந்த கலாநிதி செந்திநாதையர், செந்திநாதையர் நிறுவிய உண்மை, சூதசங்கிதையில் ஏகாத்மவாதிகளின் விளையாட்டு ஆகிய தலைப்புகளில் வகுக்கப்பட்டுள்ளது. (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5057

சதுர்வேத தாற்பரிய சங்கிரகம் (மூலம்): விருத்தம் உஅஎ (287). அரதத்தாசாரியர் (மூலம்), க.குருமூர்த்தி ஐயர் (பதிப்பாசிரியர்). யாழ்ப்பாணம்: த.கைலாசபிள்ளை, நல்லூர், 1வது பதிப்பு, 1930, (யாழ்ப்பாணம்: செந்தமிழ்ப் பரிபாலன யந்திரசாலை, வண்ணார்பண்ணை).
66 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை.

வைணவ மதத்தைக் கண்டித்துச் சைவத்தை நிலைநாட்டப் பிறந்தவர்களுள் அரதத்தாசாரியரும் ஒருவர். இவர் கஞ்சனூரிலிருந்த வாசுதேவரென்னும் ஐயங்காருடைய பிள்ளை. இவருக்குப் பெற்றோரால் இடப்பட்ட பெயர் சுதர்சனர் என்பதாகும். சிவலிங்க பூபாலர் என்னும் அரசர் அரதத்தாசாரியரை அடைந்து வணங்கி அவருக்குச் சீடராகி **சுருதி சூக்திமாலை**யின் பொருள் முழுவதையும் விரிவாகக் கேட்டுத் தெளிந்து, சதுர்வேத தாற்பரிய சங்கிரகமென்னும் இந்நூலைச் செய்வித்தார். இந்த நூலிலே வேதங்கள், புராணங்கள், இதிகாசங்கள், மிருதிகள், தலமான்மியங்கள், அமரம் முதலிய பல நூல்களினின்றும் பிரமாணங்கள் எடுத்துக்காட்டப் பட்டிருக்கின்றன. அவற்றை நோக்கும்போது அரதத்தாசாரியர் பேரறிஞர் என வியக்கமுடிகின்றது. இந்நூலை செய்யுள்நடையில் மொழிபெயர்த்தவரின் பெயர் எங்கும் பதிவிலில்லை. இந்நூல் யாழ்ப்பாணத்து நல்லூர் த.கைலாசபிள்ளையவர்களின் அனுமதிப்படி நல்லூர் க.குருமூர்த்தி ஐயரால் பதிப்பிக்கப்பெற்றுள்ளது. (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14)

5058

சமய ஒழுக்கம் (The Practice of religion). சே.வேல்முருகு. பருத்தித்துறை: வைத்திய கலாநிதி சே.வேல்முருகு, மேலைப் புலோலி, 1வது பதிப்பு, 1984. (யாழ்ப்பாணம்: விவேகானந்தா அச்சகம்).
xvi, 331 பக்கம், விலை: ரூபா 160., அளவு: 22x14 சமீ.

அரச சேவையிலிருந்து ஓய்வுபெற்ற ஒரு ஆங்கில வைத்தியரின் பார்வையில் சமய ஒழுக்கம் என்பது கண்டுகொள்ளப்படுகின்றது. தனது உடல்நூல் அறிவை சமய ஒழுக்க ஆய்வுக்குப் பயன்படுத்தியுள்ளமை நூலின் சிறப்பு. ஒன்பது இயல்களில் விரியும் சமய ஒழுக்கத்தின் முதல் அத்தியாயத்தில் சமய உணர்ச்சி மனித சமுதாயத்தில் எவ்வாறு உருவானது என்றும் அது எவ்வாறு இன்று வைதீக சைவ சமயமாகத் தொடங்கி நின்றதெனவும் அறிமுகப்படுத்துகின்றார். அடுத்த இயல்களில் முறையே புறப்பொருளுக்கும் மனிதனுக்கும் இடையிலுள்ள தொடர்பு எத்தகையதெனவும், மனிதனின் உடலமைப்பும் அதன்கண் உள்ள ஆறு ஆதாரங்களும் எவ்வியல்பின எனவும், உள்ளுணர்வின் சொரூபம் எத்தன்மையதெனவும், கன்ம பக்குவமடைதல் முத்தியடைவதற்கு வழியெனவும், முத்தியடைதற்கு முயலும் ஆன்மாவின் இலக்கணமும் சிறப்பியல்புகளும் எத்தன்மையவெனவும், தொண்டு நிலை, அன்பு நிலை, தவநிலை, அறிவுநிலை என்னும் சாதனைகள் எவ்வண்ணம் செய்யப்படுமெனவும் மெய்யுணர்தல் எவ்வாறு நிகழுமென்பதையும் ஆசிரியர் தெளிவாக விபரித்திருக்கின்றார். (இந்நூல் School of Oriental and African Studies (SOAS), University of London நூலகத்தில் பார்வையிடப்பட்டது. பதிவிலக்கம் 534376).

5059

சிவஞானபோத சாரம். சித்தாந்த மாணவன் (புனைபெயர்). வட்டுக்கோட்டை: ஆசிரியர், 1வது பதிப்பு, ஏவிளம்பி வருடம், சித்திரை 1957. (யாழ்ப்பாணம்: விவேகானந்த அச்சகம்).
135 பக்கம், விலை: ரூபா 1.80

சைவ சமய நூல்கள் பலவாக இருத்தலால் அவற்றை ஆராய்ந்து ஒற்றுமை காண வாழ்க்கைமுறை இடமளிப்பதில்லை. ஒரு சிலவற்றைப் படிப்பதால் முரண்பாடுகளும் சிக்கல்களும் உண்டாகின்றன. அவற்றை நீக்க எழுந்த சாஸ்திரங்களுள் மெய்கண்ட சாஸ்திரங்கள் முதன்மை பெறுகின்றன. அவற்றுள் முதன்மையானதும் சித்தாந்த சைவநெறியின் ஞானபாதப் பொருளிதுவெனத் திட்டவட்டமாகக் கூறுவதுமாயுள்ளது மெய்கண்டர் அருளிய சிவஞான போதம் என்ற நூலாகும். அது பதி, பசு, பாசம் ஆகிய முப்பொருளையும் தெளிவாக விளக்குகின்றது. ஆயினும் வேதம், ஆகமம் முதலாய நூல்களைக் கற்று, சரியை, கிரியை, யோக நெறிகளில் கைவரப்பெற்று முத்தியை விரும்பி நின்றார்க்கு ஞானபதப் பொருளை விளக்குவதற்கென உருவாக்கப்பட்ட நூலாதலால் அதனை சாமான்யர் இலகுவில் கற்றுத்தெளிய முடியாத நிலையும் உள்ளது. இந்நிலையைப் போக்கி, நூலாசிரியர் தான் கண்ட சில

உண்மைகளை பலரும் அறியும் வண்ணம் எளியநடையில் இந்நூலை இயற்றியுள்ளார். கருத்து முரண்பாடு தோன்றுமாயினும் அதுவே வாசிப்போரின் சிந்தனையைத் தூண்டும் என்ற நம்பிக்கையில் எழுதப்பட்ட இந்நூலின் ஆசிரியர் தனது இயற்பெயரை நூலில் குறிப்பிடாது விட்டுள்ளார். இந்நூல் மாதவச் சிவஞான சுவாமிகளின் கருத்துகளைப் பெரும்பான்மையும் தழுவி எழுதப்பட்டதாக நூலாசிரியர் குறிப்பும் உண்டு. (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5060

சுத்தானந்த மலர் 2: ஆத்ம நாதம். சுத்தானந்த பாரதியார். நாவலப்பிட்டி: ஆத்மஜோதி நிலையம், 1வது பதிப்பு, ஓகஸ்ட் 1962. (நாவலப்பிட்டி: ஆத்மஜோதி அச்சகம்).
231 பக்கம், விலை: ரூபா 3.

கவியோகி மகரிஷி சுத்தானந்த பாரதியார் நாவலப்பிட்டி ஆத்மஜோதி நிலையத்திற்கு 25.11.1961இல் வந்து தியானமும் கவிதையும் அருட்பணியுமாக மூன்று நாட்கள் இருந்தார். அவர் வரவின் நினைவாக ஆத்மநாதம் என்ற இந்நூல் வெளியிடப்படுகின்றது. இந்நூலில் ஆத்மநாதம் (முற்பகுதி), ஆத்மநாதம் (பிற்பகுதி-குருநாதம்), இதயதாகம், பக்தி பரவசம், ஞான முழக்கம், வாழ்த்து ஆகிய அம்சங்கள் இடம்பெற்றுள்ளன. ஆத்மநாதம் சுத்தானந்தரின் இதய ஒலி. இதயக் குகையிலிருந்து அவரது சுத்தாத்மா மனித சமுதாயத்திற்கு இசைக்கும் அனுபவ உண்மைகளே ஆத்மநாதம். ஆத்மநாதத்தின் இரண்டாம் பகுதி குருநாதம். 1926இல் சுத்தயோக சமாஜம் கவியோகியின் உள்ளத்தில் எழுந்தது. இதயதாகம் என்னும் பாமலர்கள் அடிகளின் கடவுளார்வத்தினின்று மலர்ந்தவை. (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5061

சுவேதாசுவதரம் (உபநிடதம்) மூலமும் உரையும். ஏழாலை ஐ.பொன்னையா (உரையாசிரியர்), சி. முருகவேள் (பதிப்பாசிரியர்). கொழும்பு: குமரன் புத்தக இல்லம், 361, ½ டாம் வீதி, 1வது பதிப்பு, 2007. (கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், 361, 1/2, டாம் வீதி).
xviii, 182 பக்கம், விலை: ரூபா 600., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-955-659-111-7.

வேதங்கள், பிராமணங்கள், ஆரணியங்கள் உட்பட முக்கிய உபநிடதங்கள் சைவசித்தாந்தப் பொருள் நுதல்வனவாகும். மிகப்பழமைவாய்ந்த முக்கிய உபநிடதங்களுள் சுவேதாசுவதரமும் ஒன்று. சுவேதாசுவதரம் யசுர்வேத தைத்திரீய சாகையைச் சார்ந்தது. ஆறு அத்தியாயங்களில் 113 மந்திரங்களைக் கொண்டது. காரணமாகிய பிரமம் யாது என்ற வினாவிக்கொண்டு தொடங்கி, நித்தியமான அடிப்படையான சமய மெய்யியற் கருத்துக்களை விளக்க முயல்கின்றது. இந்நூலுக்கான உரையை 1943ம் ஆண்டு தொடக்கம் 1945ம் ஆண்டு வரைக்கும் இடைப்பட்ட காலத்தில் வாராந்தம் இந்த சாதனத்தில் ஏழாலை அருளானந்தசிவமென்னும் ஐயம்பிள்ளை பொன்னையா பதவுரை, குறிப்புரை, பொழிப்புரை ஆக அமைந்த ஒரு சிற்றுரையாக எழுதிவந்தார். அதனை தேவநாகரி அல்லது கிரந்த மூலத்துடன் நூலுருவில் இந்நூல்வழியாக முன்னாள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பிரதம நூலகரான திரு. சி.முருகவேள் அவர்கள் பதிப்பித்திருக்கின்றார்.

5062

சைவ சித்தாந்த சங்கிரகம். நா.கதிரைவேற்பிள்ளை. திருமயிலை: சே.வெ.ஜம்புலிங்கம்பிள்ளை, 2வது பதிப்பு, 1933, 1வது பதிப்பு, 1903. (சென்னை: சாது அச்சுக்கூடம், இராயப்பேட்டை).
168 பக்கம், விலை: அணா 10.

சிவஞானபோதம், சிவஞானசித்தியார், சிவப்பிரகாசம் ஆகிய சாத்திரங்களின் கருத்துக்களை விளக்கமாகவும் மிக விரிவின்றியும் எடுத்துரைக்கும் இவ்வசனநூல், பதார்த்த நிச்சயம், பதி இலக்கணம், ஆன்ம இலக்கணம், மல இலக்கணம், கன்ம இலக்கணம், மாமாயை இலக்கணம், அசுத்தமாயா இலக்கணம், சிவஞானசாதன இலக்கணம், முத்தி இலக்கணம் ஆகிய தலைப்புக்களில் விரிகின்றது. இதனை இயற்றியவர் யாழ்ப்பாணத்து மேலைப்புலோலி சதாவதானம் நா.கதிரைவேற்பிள்ளையாவார். இதற்கான அரும்பொருளகராதியையும் சிறப்புரையையும் யாழ்ப்பாணத்துப் புலோலி சு.சிவபாதசுந்தரம்பிள்ளையும், சிறப்புப் பாயிரத்தை ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத பண்டிதரும் வழங்கியுள்ளனர். (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14)

5063

சைவ சித்தாந்தம்: ஓர் அறிமுகம். ஏ.என்.கிருஷ்ணவேணி. கொழும்பு 11: சேமமடு பொத்தகசாலை, U G 50, People's Park, 1வது பதிப்பு, சித்திரை 2008. (கொழும்பு 11: சேமமடு பதிப்பகம்).
180 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-955-1857-08-0.

சைவசித்தாந்தம் உயிர்கள் வாழும் நெறியைக் கூறி அவ்வாழ்க்கை அனுபவத்தினூடு பெறும் விடுதலையைக் கூறுவதன் மூலம் மெய்ப்பொருளை விளக்கும் தத்துவமாகவும், மக்கள் அனுஷ்டிக்கத்தக்க சமயநெறியாகவும் விளங்குகின்றது. இக்கருத்துக்களை உள்ளடக்கிய வகையில் இந்நூல் அமைந்துள்ளது. இந்திய தத்துவம்: ஓர் அறிமுகம், சைவசித்தாந்த அறிவாராய்ச்சி, திருமுறைகளிற் சைவசித்தாந்தம், சிவஞானபோதம் விளக்கும் தத்துவம், ஆணவம், கன்மம் பற்றிய கருத்துகள், சைவசித்தாந்தத்திற் சீவன் முத்திக் கொள்கை, சைவநாற்பாதங்கள், அத்துவைதத்திலும் சைவசித்தாந்தத்திலும் மாயைக் கோட்பாடு ஆகிய எட்டுத் தலைப்புகளில் இந்நூல் விரிகின்றது. சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் 83ஆவது பிறந்ததினத்தை முன்னிட்டுப் பயன்பெறும் வகையில் வெளியிடப்பட்ட நூல் இது. நூலாசிரியர் கலாநிதி திருமதி ஏ.என்.கிருஷ்ணவேணி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் நுண்கலைத்துறைத் தலைவராகப் பணியாற்றுபவர்.

5064

சைவ வேதாந்த சித்தாந்த ஆராய்ச்சி. சி.மு.முத்தையன். சித்தன்கேணி: சி.மு.முத்தையன், உறுநாவளை, 1வது பதிப்பு, சௌமிய வருடம், ஆவணி 1969. (சங்கானை: ஸ்ரீ இலங்காதேவி அச்சகம்).
28 பக்கம், விலை: சதம் 60.

மெய்கண்ட நாயனார் சூத்திரங்களையும், திருமுறைகள், சித்தர் நூல்கள், திருமந்திரம், திருக்குறள், தொல்காப்பியம் முதலிய நூல்களுடன் 1923ம் ஆண்டு முதல் சைவ சித்தாந்தத்துடன் ஆராய்ந்து கண்ட தீர்க்கமாக வெளிவரும் இந்நூல், உறுநாவளை சித்தன்கேணியைச் சேர்ந்த சி.மு.முத்தையன் அவர்களால் எழுதப்பட்டது. இதற்கான அணிந்துரையை வழக்கம்பரை, சுழிபுரத்தைச் சேர்ந்த இளைப்பாறிய தலைமை ஆசிரியர் கி.பரராஜசிங்கமும், பதிப்புரையை பொ.மகாதேவனும் வழங்கியுள்ளனர். (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5065

ஞானயோகம். சித்ரமுத்தடிகள் (மூலம்), ச.கார்த்திகேசு சுவாமிகள் (தொகுப்பாசிரியர்). கொழும்பு 2: அருளொளி இயக்க வெளியீடு, 31/21 டோசன் வீதி, 1வது பதிப்பு 1969. (கொழும்பு 2: அருளொளி அச்சகம்).
88 பக்கம், விலை: சதம் 75., அருளொளி இயக்க வெளியீடு -1.

அருளொளி என்னும் தனது நூலில் தவத்திரு ஸ்ரீசத் சித்ரமுத்தடிகள் (ஆத்மசாந்தி நிலையம், பனைக்களம் அஞ்சல், இராமநாதபுரம்) கூறிய யோகமுறைகளை ஒன்று திரட்டி ஞானயோகம் என்ற தலைப்பில் சிறு நூலாக தொகுத்து வெளியிட்டிருக்கின்றார். உணவு, உறக்கம், ஆசனம், நம்பிக்கை, சாதனை, யோகம், ஞானம், போதம், சிதாகாயம், தியானம், நிஷ்டை, இறை, யோகாசனங்கள் ஆகிய தலைப்புகளில் சித்ரமுத்தடிகளின் கருத்துக்கள் இங்கு தொகுக்கப்பட்டுள்ளன. (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5066

ஞானாமிர்தம். சபாபதி நாவலர். கோலாலம்பூர்: அ.சிவகுருநாதபிள்ளை, காரியதரிசி, மலைய சைவ சித்தாந்த சங்கம், 1வது பதிப்பு, அக்ஷய வருடம், 1926. (சென்னை: சாது அச்சுக்கூடம்).
24 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை.

ஞானாமிர்தம் பத்திரிகையில் வெளிவந்த "சமயம்", "பரமாசாரிய சுவாமிகள் நால்வர் பிரபாவம்" ஆகிய இரண்டு கட்டுரைகளினதும் மீள்பதிப்பினைக் கொண்ட நூல். சபாபதி நாவலர் (1846-1903) யாழ்ப்பாணத்தில் வடகோவை என்ற ஊரில் பிறந்தவர். இளமைக் காலத்தில் நீர்வேலி சிவசங்கர பிள்ளையிடம் தமிழ்மொழியும் வடமொழியும் கற்றவர். 19ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பெரும்புலவராய் இலங்கையில் மட்டுமல்லாது தமிழ்நாட்டிலும் செல்வாக்குப் பெற்றிருந்தவர். (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5067

தவயோகி ஸ்ரீ சத். சித்ரமுத்து அடிகளார் திருவாய் மலர்ந்தருளிய அருளொளி. சித்திரமுத்தன் அடிகள் (மூலம்), அ.நடராசா (பதிப்பாசிரியர்). கொழும்பு: அருளொளி நிலையம், 1வது பதிப்பு, டிசம்பர் 1954. (கொழும்பு 11: இராஜேஸ்வரி அச்சகம், 16-18 குமார வீதி).
336 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை.

அடிகளாரின் இலங்கை விஜயத்தை முன்னிட்டு 10.12.1954 அன்று வெளியிடப்பட்ட தொகுப்பு நூல். இதில் சித்திரமுத்து அடிகளார் பாடியருளிய குருமதி மாலை, திருப்புகழ் திரவியம், பேரின்பக் குறள், நன்மதிகளும் மௌனானந்த மணிமொழிகளும், மரண சிந்தனையின் மௌனம், ஞான பண்டிதன், நிறைநெறி மொழிகள், சீர்திருந்து மனிதா, கருணைக் கண்ணீர், கிருபைப் பிரகாசப் பொக்கிஷம், தேசத் தந்தை காந்திஜியின் திருவருட் புலம்பல், அருளொளி மலர் ஆகிய படைப்புக்கள் தொகுக்கப்பட்டுள்ளன. "நெடிய கடல் சூழ்ந்த இந்நில உலகின்கண் உருப்பொருளாகத் தோன்றிய யாவிலும் உட்பொருளாக இயங்காநிற்கும் இயற்கையழகை அகக்கண் திறந்து காண முயற்சித்து அருந்தவமியற்றிய காலையில் நமது உள்ளத்திலிருந்து அவ்வப்போது உதயமாகிய மதிமொழிகளை சிதறவிடாது சேகரித்து அறப்பணிபுரிந்த அன்பர்கள் சுவடி வடிவிலாக்கி மக்கட்கு உதவியுள்ளனர். அத்தகைய குறுஞ்சுவடிகளில் பொதிந்து கிடக்கும்வரிவடிவங்களை கற்க முனைந்த அறிஞர் பலரின் ஆன்ம மெய்ஞ்ஞானம் சிலரிடமேனும் அணுகி ஆக்கமளிக்கும் என்பதில் ஐயமில்லை" என்று மூலநூலாசிரியர் குறிப்பிட்டுள்ளார். (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5068

திருமந்திர விளக்கம்: சன்மார்க்கப் பகுதி. யோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார். கொழும்பு 3: சுத்தானந்தப் பதிப்பகம், 60 டீல் இடம், 2வது பதிப்பு, விஜய வருடம், மார்கழி 1953, 1வது பதிப்பு, விக்கிரம வருடம், ஆவணி 1940. (யாழ்ப்பாணம்: ஸ்ரீ சண்முகநாத அச்சகம்).
230 பக்கம், விலை: ரூபா 2.50.

திருமூலர் சிவராஜயோகத்தில் பல ஆண்டுகள் அமர்ந்திருந்து அருளிய திருமந்திரத்தில் பல்வேறு யோகசாதனைகள் கூறப்பட்டுள்ளன. இந்நூல் மந்திர சாதனையை விதந்தோதுகின்றது. பிரணவம், பஞ்சாட்சரம் முதலிய மந்திரங்களின் மகிமையும் இதில் விளக்கப்படுகின்றது. சிவ வழிபாட்டுடன் சக்தி வழிபாடும் இதில் விபரித்துக் கூறப்படுகின்றது. பதினோராவது சைவத்திருமுறையாகப் போற்றப்படும் திருமந்திரத்தின் சாரத்தை உள்ளடக்கி, தமிழ்ப் பேரறிஞர் வி.கலியாணசுந்தர முதலியாரின் வேண்டுகோளுக்கிணங்க யோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார் ஆன்மீகக் கட்டுரைகளாக எழுதினார். இதன் முதற்பதிப்பு அன்பு நிலையத்தின் 34ஆவது வெளியீடாக விக்கிரம ஆண்டில் (1940) வெளிவந்திருந்தது. பிரதிகள் தீர்ந்த நிலையில் இலங்கையில் அதன் இரண்டாம் பதிப்பு வெளிவந்திருந்தது. பரம்பொருள் விளக்கம், வேதாகம விளக்கம், பரமுத்தி விளக்கம், திருநெறி விளக்கம், உயிர்மெய் விளக்கம், அருளுபதேச விளக்கம், சிருட்டி விளக்கம் ஆகிய ஏழு பிரிவுகளுக்குள் இவை விளக்கப்படுகின்றன. இந்நூலுக்கு முன்னுரையை திரு கந்தையா வைத்தியநாதனும், அணிந்துரையை சு.நடேசபிள்ளையும் வழங்கியுள்ளனர். (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5069

திருவுந்தியார் சிவப்பிரகாசர் உரை விளக்கம். திருவியலூர் உய்யவந்த தேவ நாயனார் (மூலம்), பொன். அ.கனகசபை (உரையாசிரியர்). யாழ்ப்பாணம்: கூட்டுறவுத் தமிழ்நூற் பதிப்பு விற்பனைக் கழகம், 411/1, காங்கேசன்துறை வீதி, 1வது பதிப்பு, 1970. (யாழ்ப்பாணம்: கூட்டுறவு அச்சகம்).
101 பக்கம், விலை: ரூபா 1.50.

திருவுந்தியார் என்னும் இந்த நூல் சைவசித்தாந்த சாஸ்திரங்களுள் காலத்தால் முந்தியது. கி.பி.1148இல் இயற்றப்பட்டதென்பர். பல்வேறு காலகட்டங்களில் இதற்கான உரைகள் பல எழுதப்பட்டதெனினும் இந்நூல் திருவாவடுதுறை ஆதீனத்துத் தில்லைச் சிற்றம்பலவர் என்னும் சிவப்பிரகாசரின் உரையும் விளக்கமும் கொண்டது. அதற்கான உரை விளக்கத்தையும் பொழிப்பையும் வித்துவான் பொன்.அ.கனகசபை எழுதியிருக்கிறார். (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5070

திருவுந்தியார் மூலமும் உரையும். திருவியலூர் உய்யவந்த தேவ நாயனார் (மூலம்), வை.இராமகிருஷ்ண ஐயர் (உரையாசிரியர்). யாழ்ப்பாணம்: கணேசையர் நினைவு மலர், அகில இலங்கைச் சைவப் புலவர் சங்கம், 20, சிவம்ஸ், ஸ்டான்லி வீதி, 1வது பதிப்பு, நவம்பர் 1968. (யாழ்ப்பாணம்: கூட்டுறவு அச்சகம்).

20 பக்கம், விலை: ரூபா 1.00.

திருத் தருமையாதினம் 25ஆவது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிய பரமாச்சாரிய சுவாமிகளால் எழுதப்பட்டு சாத்திரம் 1 என்ற தொடரில் ஞானசம்பந்தம் என்ற திங்கள் வெளியீடான சமய சஞ்சிகையில் வெளியான கட்டுரையின் பிரதான பகுதிகளை முற்றாகத் தொகுத்து, திருவுந்தியார் கற்கப் புகுவோருக்கு அந்நூலை இனிதாக அறிமுகஞ்செய்யும் நோக்கில் இந்நூல் உரையுடன் வெளியிடப்பட்டுள்ளது. (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5071

திருவெண்ணெய் நல்லூர் மெய்கண்டதேவர் அருளிச்செய்த சிவஞானபோதமும் வார்த்திகமென்னும் பொழிப்புரையும். ஆறுமுகநாவலர். சென்னை: தி.க.இராசேசுவரன், சைவப்பிரகாச வித்தியாசாலை, சிதம்பரம், 5வது பதிப்பு, பிலங்க வருடம் 1968. (சென்னை 1: ஆறுமுகநாவலர் வித்தியாநுபாலன அச்சகம், 300 தங்கசாலைத் தெரு).
276 பக்கம், விலை: ரூபா 2.75

மெய்கண்டதேவர் அருளிய சிவஞானபோதத்திற்கான வார்த்திகமென்னும் பொழிப்புரையும், திருவாவடுதுறைச் சிவஞான சுவாமிகள் அருளிச்செய்த சிற்றுரையும் இந்நூலில் இடம்பெறுகின்றன. இதனை யாழ்ப்பாணம் நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பரிசோதித்து வெளியிட்டுள்ளார். இந்நூலினுள் பொதுவியல்பு என்ற பிரிவில் பிரமாணவியல், இலக்கணவியல் ஆதியனவும், சிறப்பியல்பு என்ற பிரிவில் சாதனவியல், பயனியல் ஆதியனவும் காணப்படுகின்றன. (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5072

தெய்வீக வாழ்வு. இராஜேஸ்வரி தம்பு. யாழ்ப்பாணம்: செல்வி இராஜேஸ்வரி தம்பு, 1வது பதிப்பு, 1949. (சுன்னாகம் திருமகள் அழுத்தகம்).
320 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை.

இந்நூல் சுவாமி இராமதாசர் ஆங்கிலத்தில் எழுதிய Divine Life என்ற நூலைத் தழுவி எழுதப்பெற்றது. வாழ்க்கையும் வாழ்வின் பிரச்சினைகளும், சமயமும் அதன் அவசியமும், இறைவனில் வாழ்தல், நித்திய வாழ்வு, சக்தி அல்லது ஆத்ம பலம், இரட்சகர்களும் மகாத்மாக்களும், மனித வர்க்கத்தின் ஒற்றுமை, பொழிப்புரை- கீதையின் முழக்கம் ஆகிய தலைப்புகளில் இந்நூல் அமைகின்றது. (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5073

பகவான் சிவானந்தரின் ஞானவிருந்து. சுவாமி சிவானந்தா (ஆங்கில மூலம்), சுவாமி இராமானந்தா (தமிழாக்கம்). ஹிமாலயம்: தெய்வநெறிக் கழகம், சிவானந்த நகர், ரிஷிகேசம், 1வது பதிப்பு, 1959. (சுன்னாகம்: திருமகள் அழுத்தகம்).

இந்நூலில் பகவான் சிவானந்தர் தான் சுவானுபூதியிற் கண்டறிந்த பேருண்மைகளைத் தெள்ளிய நடையில் 753 உபதேச மொழிகள் வாயிலாகத் தந்துள்ளார். இவ்வுபதேச மொழிகள் யாவும் ஞானப் பொக்கிஷங்களாக அருட்பசி கொண்டவர்களுக்கு இனிய விருந்தாகும். கடவுளும் மனித வாழ்க்கையின் இலட்சியமும், விசுவாசமும் முழுஷேத்வமும், வைராக்கியமும் துறவும், சத்குரு, சாதனா மார்க்கம், நற்குணங்களைப் பயிலுதல், மனதும் ஆசைகளும், தன்னடக்கம்- முதல் தேவை, யோகம், கர்மயோகம், பக்தியோகம், வேதாந்தம், மோட்சம், ஒன்றித்த யோகம், மதம், அனுபந்தம்: பிரம்மச்சரியம் ஆகிய தலைப்புகளில் இவரது அருள்மொழிகள் அமைந்துள்ளன. சுவாமி சிவானந்தரின் 73ஆவது பிறந்ததின வெளியீடாக வெளிவந்துள்ள இத்தமிழ்ப் பதிப்பு சுவாமி சிவானந்தரின் Feast of Wisdom என்ற ஆங்கில நூலின் மொழிபெயர்ப்பாகும். இந்நூலுக்கான முகவுரையை தெல்லிப்பழை, மயிலிட்டி தெற்கைச் சேர்ந்த க.பொன்னம்பலம் வழங்கியுள்ளார். இந்நூல் வெளியீட்டுக்குரிய (கடதாசிக்குரிய) பண உதவியை கொழும்பு இந்து சமய ஆலோசனைச் சபை வழங்கியுள்ளது. (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5074

பிராசாத சட்சுலோகி: கிரந்த மூலமும் தமிழ் உரையும். இ.ஞானசேகரக் குருக்கள். (பதிப்பாசிரியர்), யாழ்ப்பாணம்: சிவஸ்ரீ இ.ஞானசேகரக் குருக்கள், 134 கண்டி வீதி, புங்கங்குள வீதி, 1வது பதிப்பு, 1956. (யாழ்ப்பாணம்: ஸ்ரீ சாரதா அச்சியந்திரசாலை, வண்ணார் பண்ணை).

27 பக்கம், விலை: சதம் 50.

பிராசாத சட்சுலோகி என்பது பிராசாத மந்திரத்தை உணர்த்துகின்ற ஆறு சுலோகங்களின் தொகுதியாகும். மண்டைதீவில் வாழ்ந்த பதிப்பாசிரியரின் பெரியதந்தையாரும், நாவலரின் மாணாக்கர்களுள் ஒருவருமாகிய சிவஸ்ரீ இராமசுவாமி ஐயர் எழுதிவைத்த ஏட்டுப்பிரதியைப் பார்த்து இ.ஞானசேகரக் குருக்கள் இந்நூலை பதிப்பித்திருக்கிறார். பழனி ஈசான சிவாசாரியார், வண்ணார்பண்ணை ம.வே.திருஞானசம்பந்தபிள்ளை ஆகியோர் மதிப்புரை வழங்கியுள்ளனர். (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5075

பிராசாத சட்சுலோகித் தமிழுரை: மூலமும் தமிழுரையும். சிவ.சங்கர பண்டிதர் (உரை ஆசிரியர்), ச.குமாரசுவாமிக் குருக்கள் (குறிப்புரை). யாழ்ப்பாணம்: சங்கர பண்டிதர் ஞாபகார்த்த சபை வெளியீடு, நீர்வேலி, 1வது பதிப்பு, 1956. (பருத்தித்துறை: கலாநிதியந்திரசாலை).
(23) பக்கம், விலை: சதம் 25.

பிராசாத மந்திர செபம் யோக மார்க்கமாகிய சகமார்க்கம் எனப்படும். அவ்வாகம வழித்தாய் இந்த யோகநெறியைக் கூறும் கிரந்தங்களுள் பிராசாத சட்சுலோகி ஒன்றாகும். இது ஆறு சுலோகங்களின் தொகுதி. இதற்குத் தமிழ் வியாக்கியானம் செய்தவர் யாழ்ப்பாணத்து நீர்வேலியில் வசித்த வடமொழி தென்மொழி அறிஞரான பாசிலஸ்ரீ சிவ-சங்கர பண்டிதர். இப்பெரியார் சிவபதமடைந்த தினத்தை நினைவுகூரும் நோக்கில் இவரது வாழ்க்கைச் சரிதத்தையும் இவரது நூல்களையும் வெளியிடும் நோக்கில் 14.2.1954இல் சிவ.சங்கர பண்டிதர் ஞாபகார்த்த சபை தாபிக்கப்பட்டது. இவரது வாழ்க்கைச் சரித்திரம் மேற்படி சபையின் முதலாவது நூலாக முன்னைய வருடம் (ஐய வருடம்) வெளியிடப்பட்டது. இச்சபையின் காரியதரிசியாக சி.அப்புத்துரை பணியாற்றிய வேளையில் மேற்படி சபையின் இரண்டாவது வெளியீடாக 85 ஆண்டுகளுக்கு முன்னர் சிவ.சங்கர பண்டிதர் எழுதிய இந்நூல் வெளியிடப்பட்டது. (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5076

பிராயச்சித்த சமுச்சயம். த.கைலாசபிள்ளை (பரிசோதித்தவர்). யாழ்ப்பாணம்: த.கைலாசபிள்ளை, நல்லூர், 1வது பதிப்பு, விகாரி வருடம், சித்திரை 1959. (யாழ்ப்பாணம்: விவேகாநந்த யந்திரசாலை).
39 பக்கம், விலை: சதம் 15.

சம்ஸ்கிருதத்திலிருந்து மொழிபெயர்க்கப்பட்ட இந்நூலை பரிசோதித்து பதிப்பித்தவர் ஆறுமுக நாவலரின் மருமகனாகிய தமிழறிஞர் த.கைலாசபிள்ளை அவர்கள். சமுச்சயம் என்பதன் பொருள் ஐயம், சந்தேகம், என்பதாகும். வடமொழியில் வெளிவந்த ஆன்மீக நூலின் தமிழாக்கம் இது. (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14)

5077

முப்பொருள் விளக்கம். ச.குமாரசுவாமிக் குருக்கள். யாழ்ப்பாணம்: சிவஸ்ரீ கு.வைத்தீசுவரக் குருக்கள், 2வது பதிப்பு, விகாரி வருடம், 1960. (யாழ்ப்பாணம்: ஸ்ரீ சண்முகநாத அச்சகம்).
151 பக்கம், விலை: ரூபா 1.50.

இந்நூல் வேதாகம சாரமாகவுள்ள இறை உயிர் தளை என்னும் முப்பொருள்களின் இயல்பை முறைப்படுத்தி விளக்குகின்றது. சித்தாந்த சைவத்தின் பிரமாண நூல்கள், பொருள் நிலை, சாதனம், பயன் என்பவற்றைக் குற்றமற, ஓரளவு நிறைவுடன் எளிதில் உணர்ந்துகொள்ள விரும்புவோருக்கு உதவும் வகையில் எழுதப்பட்டுள்ளது. நூலாசிரியர் யாழ்ப்பாணம் அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலை முகாமையாளராவார். முதற்பதிப்பு விபரம் அறியமுடியவில்லையாயினும் இந்நூலுக்கான அணிந்துரையை பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை 13.9.1955இல் வழங்கியுள்ளார் என்ற குறிப்பிடப்பட்டுள்ளது. இரண்டாம் பதிப்பினை 1960இல் பதிப்பித்தவர் நூலாசிரியரின் மகனாவார். (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5078

மெய்ஞ்ஞான போத தீபிகை. சி.சுந்தரம்பிள்ளை. யாழ்ப்பாணம்: சி.சுந்தரம்பிள்ளை, நல்லூர், 1வது பதிப்பு, நந்தன வருடம், 1952. (யாழ்ப்பாணம்: ஸ்ரீசண்முகநாத அச்சகம்).
311 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை.

இந்நூல் வேதத்தின் அந்தமான நான்கு மகாவாக்கியங்களினது விரிவுரையாகிய உபநிடதங்களின் சாரத்தையே எடுத்து விளக்கிக் கூறுகின்றது. அன்றியும் இது சிறுபான்மையாக வீட்டிற்குரிய பரம்பரா சாதனங்களையும் பெரும்பாலும் அப்பரநிலைக்குரிய நேர் சாதனத்தையுமே தெளிவுற வற்புறுத்திக் கூறுகின்றது. அவ்வகையில் மாயை, சர்வேஸ்வரன், அவித்தையும் அதன் காரியமும், சீவான்மா, தத்துவங்களின் தோற்ற ஒடுக்கங்கள், தூலவுடல், மனமும் அதன் தொழிலும், ஆசை, வினையும் வினைப் பயனும், பெண்ணாசை விலக்கல், தீநெறிச்சேறல், பொறுமை நெறி (தவம்), நல்லொழுக்கம், இல்வாழ்க்கையின் தன்மை, பாசவிராகம், துறவு, நால்வகை ஞானசாதனங்கள், குருபக்தி, பன்மையிலொருமை, பஞ்சகோச விவேகம், இதோபதேச மொழிகள், அத்வைத இலகுபோதம், அத்வைத அறுதியுரை, பரம ஆன்மா, போத ஆகார விருத்தியின் முன்னான்கு நிலைகள், பிரஹ்மஞானி, ஒரு சீடனின் சுவானுபவம் ஆகிய தலைப்புகளில் மெய்ஞ்ஞான போத தீபிகை விரிகின்றது. யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணையில் எழுந்தருளியிருந்த ஸ்ரீமத் சுவாமி மகாதேவா அவர்களின் திருவடித்தொண்டனான நூலாசிரியர் எழுதிய இந்நூலுக்கு மதிப்புரையை ராகம அரசினர் பயிற்சிக் கல்லூரி விரிவுரையாளர் கலாநிதி வ.பொன்னையா அவர்கள் வழங்கியுள்ளார்கள். (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5079

விவேகானந்த சுவாமிகள் சொற்பொழிவின் சாரம். சுவாமி விவேகானந்தர். யாழ்ப்பாணம்: சிவதொண்டன் வெளியீடு, 1வது பதிப்பு, 1955. (யாழ்ப்பாணம்: ஸ்ரீலங்கா அச்சகம்).
44 பக்கம், விலை: அன்பளிப்பு.

விவேகானந்த சுவாமிகள் பலம், சேவை, பூரணப் பொருளும் அதன் தோற்றமும், மூலகாரணமான நம்பிக்கை ஆகிய பொருள்களில் வழங்கிய விரிவான ஆன்மீகச் சொற்பொழிவுகளின் சாரம் இந்நூலில் தொகுக்கப்பெற்றுள்ளன. (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

190 சோதிடம், வானசாஸ்திரம்

5080

சாத்திரி: ஓர் அரிய சோதிடநூல். செ.சோதிநாதன். யாழ்ப்பாணம்: பண்டிதர் செ.சிவப்பிரகாசம், தாவடி, கொக்குவில், 1வது பதிப்பு, 1960. (யாழ்ப்பாணம்: சுதந்திரநாத அச்சகம், திருநெல்வேலி).
253 பக்கம், விலை: ரூபா 3.00, அளவு: 18x12 சமீ.

இலங்கை அரசாங்க கணக்காளர் சேவையில் பணியாற்றிய இந்நூலாசிரியர், சிறந்த சோதிட விற்பன்னராக விளங்கியவர். இந்நூலில் 21 அத்தியாயங்களும், 23 அனுபந்தங்களும் உள்ளன. ஒருவன் தனக்கு ஒரு குழந்தை பிறந்தவுடன் அதனுடைய ஆயுள், உடற்சுகம், கல்வி, செல்வம், வீடு, தொழில், உறவினர், கல்யாணம், புத்திரப்பேறு, புகழ் முதலியவற்றை முன்கூட்டியே அறிய மிகவும் விரும்புவது இயல்பு, இந்நூல் அவற்றைத் தானாக வாசித்து கணிப்பிட்டு அறியக்கூடியமுறையில் விளக்குகின்றது. ஜாதகம் கணித்து வைத்திராதவர்கள் தத்தமது கைரேகைகளைப் பார்த்துத் தங்கள் பலாபலன்களை அறிந்து கொள்ளலாம். இந்நூலின் அனுபந்தங்கள் புறக்குறிப்பாக மாத்திரம் அமையாது, அத்தியாய விஷயங்களை நன்கு விளக்கவுங் கூடியனவாய் ஒழுங்குபடுத்தி வழங்கப்பட்டுள்ளன.

5081

ஜாதக பாஸ்கரன். வி.சபாபதி ஐயர். யாழ்ப்பாணம்: இ.சி.இரகுநாதையர், சோதிட பரிபாலன மடம், கொக்குவில், 4வது பதிப்பு, ஆனி 1955, 1வது பதிப்பு, 1909.(யாழ்ப்பாணம்: சோதிடப்பிரகாச யந்திரசாலை, கொக்குவில்).
239 பக்கம், விலை: ரூபா 5., அளவு: 21.5x14 சமீ.

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை ஸ்ரீமத் வி.சபாபதி ஐயர் அவர்களால் பல சோதிட நூல்களின் துணைகொண்டும் தனது அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டும் எழுதப்பட்டு கீலக வருடத்தில் (1909) முதற் பதிப்பினைக் கண்ட நூல் இது. இதன் இரண்டாம் பதிப்பு அவரது புத்திரர் வீ.எஸ்.ஸ்ரீபதி ஐயரினால் 1916ம் ஆண்டும், 3ம் பதிப்பு 1934ம் ஆண்டும் வெளியிடப்பட்டன. ஸ்ரீபதி ஐயர் சந்நியாச ஆச்சிரமம் பெற்று ஸ்ரீ சுமாமி ஸ்த்யானந்த ஸரஸ்வதிஜீ ஆகி விக்கிரம வருடத்தில் (1940இல்) மகாசமாதி அடைந்துவிட்டதால், அவரது புத்திரர் ஸ்ரீ ராதாகிருஷ்ணன் அவர்களிடம் பதிப்புரிமையைப் பெற்று இந்நான்காம் பதிப்பு வெளிவந்துள்ளது. சோதிடத்தில் பொதுவாக அறியவேண்டியவைகளாகிய ஒவ்வொருவருடைய ஜன்ம நட்சத்திரம், உதயலக்கினம், சந்திரலக்கினம், ஆதியாயுள்ளவைகளின்

பலன்களும், ஒன்பது கிரகங்களும் பன்னிரண்டு இராசிகள் தோறும் சஞ்சரித்தலால் வரும் நூற்றெட்டு விதமாகும் ஸ்தான பலன்களும், மகாதெசை ஒன்பதாலும் வரும் எண்பத்தொரு புத்திகளின் பலன்களும், காலசக்கர புத்திகளின் பேதமான இருநூற்றுப் பதினாறுவித புத்திகளின் பலன்களும், அஷ்டகவர்க்க பலன்களும், கிரகநிலைகளைக்கொண்டு அறியும் இராசயோக முதலிய யோகங்களின் பலன்களும், மேலும் விசேஷ பலன்களை அறிவதற்கு வேண்டிய கிரகங்களின் சமயநிலை, அங்கநிலை, கிரியாகமனம், அவஸ்தை, கதி முதலியவைகளையும் இன்னோரன்ன ஜாதக கணிப்பீட்டு முறைகளையும் இந்நூல் விபரமாகத் தருகின்றது.

200 சமயங்கள்

210 பொதுச்சமயம் சார்பானவை

5082

தமிழ் மக்களும் தழுவிய மதங்களும். சிவ.தியாகராஜா. சென்னை 600017: மணிமேகலைப் பிரசுரம், தபால் பெட்டி எண் 1447, இல.7, தணிகாசலம் சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, ஆகஸ்ட் 2008. (சென்னை 15: எம்.கே.என்டர்பிரைஸஸ்).
xvi, 232 பக்கம், விலை: இந்திய ரூபா 115., அளவு: 21x14 சமீ.

இற்றைக்கு 5000 ஆண்டுகளுக்கு முன் தோன்றிய சிந்து சமவெளி நாகரிகத்தில் (ஹரப்பா) சிவன், தாய்க்கடவுள், சிவலிங்கம் ஆகிய உருவ வழிபாடுகள் இடம்பெற்றுள்ளன. இன்றைய சைவசமயம் அங்கேதான் உருவாகியது என்பதற்கான ஆதாரங்கள் இவை என்கின்ற சைவமத ஆய்வாளர்கள் கூற்றும், ஆரியர்கள் சிந்து சமவெளியில் தான் முதலில் வாழ்ந்து இந்து மதத்தை ஆரம்பித்தார்கள் என்ற முடிவும் தவறானவை என்று நூலாசிரியர் இந்நூலில் விளக்குவதுடன், கி.மு.3000 முதல் கி.பி.2000 வரையிலான சமய வரலாற்றை சுருக்கமாகவும், சுவையாகவும், தெளிவாகவும் இந்நூலில் பதிவுசெய்கிறார். தமிழ் மொழி பேசும் மக்களின் மூதாதையர்கள் இந்தியாவிலும் இலங்கையிலும் கடந்த 30000 ஆண்டுகளாக வாழ்ந்து வந்திருக்கிறார்கள். இன்றுவரை அவர்கள் கடைப்பிடித்த பல்வேறு வழிபாட்டு முறைகளையும், தெய்வங்களையும், சமய சிந்தனைகளின் தோற்றங்களையும் இந்நூலில் நடுநிலை நின்று ஆய்வு செய்திருக்கிறார்.

5083

பாம்பு வணக்கம். ந.சி.கந்தையாபிள்ளை. சென்னை 1: முத்தமிழ் நிலையம், 75, வரதாமுத்தியப்பன் தெரு, 1வது பதிப்பு, ஏப்ரல் 1947. (Madras: T V C Press).
30 பக்கம், விலை: 4 அணா.

இந்நூல் உலகளாவியரீதியில் கடைப்பிடிக்கப்பட்ட பாம்பு வணக்கத்தைப் பற்றிக் கூறுகின்றது. உலக மக்களுக்குப் பொதுவான பல கொள்கைகளுள் பாம்பு வணக்கமும் ஒன்று. இந்திய மக்களுக்கே உரியதாகக் கருதப்பட்டுவந்த நாக வழிபாடு, உலகின் பல்வேறு நாடுகளிலும் பின்பற்றப்பட்டு வந்துள்ளதென்பதை ஆதாரபூர்வமாக இந்நூல் பதிவுசெய்கிறது. இந்நூல் பாம்பு வழிபாட்டின் பழமை, பாம்பு வணக்கத்தின் தொடக்கம், பாம்பு வழிபாட்டின் வியாபகம், உயிர்ப் பாம்புகளை வழிபடல், பாம்பும் ஞாயிறும், பாம்பு வணக்கம் சீனாவும் ஜப்பானும், ஜாவா, அராபியா, சிரியா, சின்ன ஆசியா, ஆபிரிக்கா, ஐரோப்பா, அமெரிக்கா ஆகிய இயல்களின் வழியாக பல்வேறு வரலாற்றுத் தகவல்களையும் பதிவுசெய்கின்றது. (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

220 கிறிஸ்தவம்

5084

அன்னை மாமரி வியாகுல புலம்பலும் ஒப்பாரியும் துக்கராகமும் ஒப்பும். ஸ்ரீ சவிரிக் குருஸ். மன்னார்: ஸ்ரீ சவிரிக் குருஸ், பறப்பாங்கண்டல், மாதோட்டம், 1வது பதிப்பு, 1939. (யாழ்ப்பாணம்: ஏ.கே.பிரஸ், வயாவிளான்).
16 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை.

மாதோட்டம் பறப்பாங்கண்டல் ஸ்ரீ.அ.மடுத்தீனுக் குருஸ் அவர்களின் மூத்த புதல்வர் ஸ்ரீ சவிரிக் குருஸ் எழுதிய 89 செய்யுள்கள் அடங்கிய இக்கிறிஸ்தவ இலக்கியம் நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசரினதும்

(O.M.I) சுவாமி ஜே.எமிலியானுஸ்பிள்ளையினதும் (O.M.I., V.G.) அனுமதியுடன் வெளியிடப்பட்டுள்ளது. (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5085

தண்ணீருக்குள் தாகமா: இறைவனின் இனிய இயல்புகள். தமிழ்நேசன். (இயற்பெயர்: பாவிலு கிறிஸ்து நேசரட்ணம்). மன்னார்: மன்னா வெளியீடு, மறைக் கல்வி நிலையம், புனித செபஸ்தியார் பேராலய வீதி, 1வது பதிப்பு, ஜனவரி 2007. (கொழும்பு 13: நந்தா அச்சகம், புளுமண்டால் வீதி).
xviii, 103 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 955-1627-00-8.

இறைவனின் இனிய இயல்புகளை விவிலியக் கண்ணோட்டத்தில் வெளிக்கொணரும் நூல். அருட்திரு தமிழநேசன் அவர்கள் தன்னால் அவதானிக்கப்பட்டு உணரப்பட்ட பல்வேறு உணர்வுகளையும் உண்மைகளையும் விவிலியப் பரப்பில் பொருத்தி காய்தல் உவத்தலற்ற நிலையில் விவிலியத்திற்கும் சமூகத்திற்கும் இடையே உள்ள இயங்கியல் தொடர்புகளை நிறுவ முயற்சித்துள்ளார். காந்தி, அன்னை தெரெசா, வின்சன்ட் சேர்ச்சில் எனப் பல்வேறுபட்டவர்களையும் பல்துறைசார்ந்தவர்களின் வாழ்க்கைச் சம்பவங்களையும் குறிப்பிட்டு அச்சம்பவங்களில் உள்ளடக்கியுள்ள தர்மங்களைச் சுட்டிக்காட்டி, அவை விவிலியத்தில் எவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளன என்பதை விளக்கியுள்ளார். தமிழ்நேசன் அடிகளார் முருங்கன் கிராமத்தில் 1969இல் பிறந்தவர். யாழ்.புனித பத்திரிசியார் கல்லூரியில் உயர் கல்வியைக் கற்று 1986ம் ஆண்டில் யாழ். புனித மார்ட்டினார் ஆரம்பக் குருமடத்திலும், கண்டி அம்பிட்டிய தேசிய குருத்துவக் கல்லூரியிலும், யாழ். புனித பிரான்சிஸ் சவேரியார் உயர் குருத்துவக் கல்லூரியிலும் தனது இறையியல் கல்வியைத் தொடர்ந்தவர்.

5086

வெளிச்சத்தின் வேர்கள். தமிழ்நேசன். (இயற்பெயர்: பாவிலு கிறிஸ்து நேசரட்ணம்). மன்னார்: மன்னா வெளியீடு, மறைக் கல்வி நிலையம், புனித செபஸ்தியார் பேராலய வீதி, 1வது பதிப்பு, ஜுன் 2007. (கொழும்பு 13: நந்தா அச்சகம், புளுமண்டால் வீதி).
xx, 184 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 21x14 சமீ.

அருட்தந்தை தமிழ்நேசன் எழுதிய கிறிஸ்தவ சமயநூல். செபம் பற்றிய புரிதல்களை விவிலிய இறையியல் பார்வையில் வழங்கும் இந்நூலில் மதம் சார்ந்த உள்ளடக்கங்களைக் கருச்சிதைவின்றி இலகுபடுத்தி சாதாரண மக்களுக்குப் புரியக்கூடியவகையில் கூறியுள்ளார். செபம் என்ற ஒரு சொல்லை பத்து பிரதான இயல்களாகப் பிரித்து, அந்தப் பத்து இயல்களையும் 43 உப பிரிவுகளாக்கி, பிரிக்கப்பட்ட 43 உப பிரிவுகளையும் மேலும் 168 சிறு தலைப்புகளுக்குட்படுத்தி விவிலியம் என்ற எல்லைக் கோட்டுக்குள் நின்று துறைசார் புலமையுடனும் மொழிவாண்மையுடனும் இந்நூலை எழுதியுள்ளார்.

மேலும் பார்க்க: 5119

294.3 பௌத்தம்

5087

புத்த தர்மச் சுருக்கம். பிக்கு நாரத (ஆங்கில மூலம்), பிக்கு சோமானந்த (தமிழாக்கம்). கொழும்பு: Indian Maha Bodhi Propaganda Board, Post Box No 250, 1வது பதிப்பு, 1947. (Madras: The Nehru Press, Perambur).
34 பக்கம், விலை: அணா 8.00

இந்திய மகாபோதி பிரச்சார சபையின் தலைவராக திரு. ஆர்.ஹேவா வித்தாரண பணியாற்றிய வேளையில் வெளியிடப்பட்ட நூல் இது. புத்தர், பௌத்தம் என்றால் என்ன, பௌத்தம் ஒரு மதமா? பௌத்தம் என்பது நீதி ஒழுக்கமா? பௌத்தத்தினுடைய சில முக்கிய உறுப்புக்கள், கர்மம் அல்லது காரணத்துவ விதி, மறு பிறப்பு, படிச்ச சமுப்பாதம், அநாத்மம் அல்லது நிலைபெற்ற உயிர் இன்மை, நிர்வாணம், நிர்வாண மோக்ஷ வழி ஆகிய அத்தியாயங்களில் பௌத்த தர்மம் பற்றி இந்நூல் போதிக்கின்றது. (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5088

ஸ்ரீ புத்தர் புராணம்: முதற் காண்டம். கே.கோவிந்தசாமி. யாழ்ப்பாணம்: மூ.க.மீனாட்சிசுந்தரம்பிள்ளை, வல்வை நகர், 1வது பதிப்பு, 1939. (கண்டி: பேலின் அன் கொம்பனி).

96 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை.

இலங்கையில் சுமார் ஐயாயிரம் வருடங்களுக்கு முன்னர் பொதிந்து கிடந்த **ஜினராஜ வம்சம்** (Jinaraja wansaya) என்ற மகிமையும், பெருமையும், கீர்த்தியும் வாய்ந்த இக் கிரந்தத்தை புத்தமத போதகர் திரு. கே.கோவிந்தசாமி அவர்கள் எளியநடையில் வசனரூபத்தில் தமிழில் மொழிபெயர்த்துள்ளார். இதில் தரும விதிகளை மூன்று விதமாக உபதேசித்திருக்கின்றனர். அதாவது இல்லறவாசிகளுக்கு கிஹிவினையும், துறவிகளுக்கு அபி-தர்மமும், தேவர்களுக்கு சூத்ரோபதேசமும் ஆக மூன்றாகும். இந்நூலை மிகுந்த ஈடுபாட்டுடன் பாளி, சிங்களம் ஆகிய மொழிகளிலிருந்து தமிழில் மொழிபெயர்த்து ஆக்கியுள்ளார். இந்நூலுக்கான அறிமுகத்தை கொழும்பு-மருதானை புகையிரத நிலைய அதிகாரியான சு.தேவசிகாமணி வழங்கியுள்ளார். (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

294.5 இந்து சமயம்

5089

அக்கினி காரிய விதி: மூலமும் உரையும். கு.வைத்தீஸ்வரக் குருக்கள். அச்சுவேலி: ஆசிரியர், 1வது பதிப்பு, சித்திரை 1964. (யாழ்ப்பாணம்: ஸ்ரீ சாரதா அச்சகம்).
125 பக்கம், விலை: ரூபா 2.00

ஆகமங்களுள் நமக்கு மிகவும் சூக்குமமாக அறியவேண்டிய விடயமே அக்கினி காரிய விதியாகும். இந்நூலில் தமிழ் உரையுடன் இவை விளக்கப்பட்டுள்ளன. அக்கினி குண்டத்திற்குச் செல்லும் முறை, குண்டசுத்தி விதி, வாகீசுவரி-வாகீசுவரர்களை ஆவாகனம் செய்தல், அக்கினி சம்ஸ்கார விதி, அக்கினியை வைத்தபின்னர் செய்யவேண்டுவன, கருப்பாதான முதலிய சம்ஸ்காரவிதி, சுருக்கு சுரவம் என்னுமிவற்றின் சம்ஸ்காரம், நெய்ச் சுத்தி, பெயரிடுதல் முதலிய ஸம்ஸ்காரங்கள், பூரணாகுதி பண்ணும் முறை, பவித்திரீகரணம்-புனிதமாக்குதல், சோமசம்பு பத்ததி இன்னும் பிற அக்கினி காரிய விதிகள் பற்றி இந்நூல் விபரிக்கின்றது. (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5090

அக்கினி காரியம். இ.கு.பூர்ணானந்தேசுவரக் குருக்கள். மட்டக்களப்பு: பிராமண சமூக சேவா சங்கம், 8, பழைய வாடிவீட்டுத் தெரு, 1வது பதிப்பு, சோபகிருது 1964. (யாழ்ப்பாணம்: ஸ்ரீ சாரதா அச்சகம்).
124 பக்கம், விலை: ரூபா 2.50.

இந்நூலாசிரியரான திருக்கோணமலை சிவாகம வித்யாபூஷணம் இ.கு.பூர்ணானந்தேசுவரக் குருக்கள், திருக்கோணமலை கந்தசாமி கோவில் ஆதீன பிரதம குருவாவார். தேவாலயங்களிலே நிகழும் கிரியைகளையும் அவற்றின் விதிமுறைகளையும் அர்த்த ஞானத்துடன் நன்கு உணர்ந்து முறைதவறாது கிரியைகளை அனுஷ்டித்தால் பன்மடங்கு பலன் பெறலாம் என்பது நம்பிக்கை. ஆகையினால் ஆகமக் கிரியைகளில் முக்கிய பாகம் வகிக்கும் **அக்கினி காரியம்** என்ற கிரியைமுறையை பலரும் பயன்பெறும் வண்ணம் உரை விளக்கங்களுடன் இந்நூலில் தொகுத்து வெளியிட்டுள்ளார். (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5091

அடியார் கதைத் தொகுதி 1. சிவானந்தவல்லி கனகநாயகம். சுன்னாகம்: வட இலங்கைத் தமிழ்நூற் பதிப்பகம், 1வது பதிப்பு, 1948. (சுன்னாகம்: திருமகள் அழுத்தகம்).
44 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை.

நம்பியாரூரர், நம்பியாரூரர்-2, திருநீலகண்டர், திருநீலகண்டர்-2, இயற்பகையார், இளையான்குடிமாறனார், மெய்ப்பொருளார், விறன்மிண்டர், அமர்நீதியார், எறிபத்தர், ஏனாதிநாதர், கண்ணப்பர், கண்ணப்பர் -2 ஆகிய சமய அடியார்கள் பற்றிய குறிப்புகள் இந்நூலில் அடங்கியுள்ளன. முன் அட்டைப்படம் ஓவியர் சானாவினால் வரையப்பட்டுள்ளது. நூலுக்கான முன்னுரையை வெள்ளவத்தை, பத்மாசனி இராஜேந்திரம் வழங்கியுள்ளார். (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14)

5092

அடியார் கதைத் தொகுதி 2. சிவானந்தவல்லி கனகநாயகம். சுன்னாகம்: வட இலங்கைத் தமிழ்நூற் பதிப்பகம், 1வது பதிப்பு, 1948. (சுன்னாகம்: திருமகள் அழுத்தகம்).
44 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை.

குங்கிலியக் கலயனார், மானக்கஞ்சாறர், அரிவாட்டாயர், ஆனாயனார், மூர்த்தியார், திருநாளைப்போவார், திருக்குறிப்புத் தொண்டர், சண்டேசுரர், திலகவதியார், திலகவதியார்-2, திருநாவுக்கரசர், காரைக்காலம்மையார், காரைக்காலம்மையார்-2, அப்பூதியடிகள், திருநீலநக்கர் ஆகிய சமய அடியார்கள் பற்றிய குறிப்புகள் இந்நூலில் அடங்கியுள்ளன. முன் அட்டைப்படம் ஓவியர் சானாவினால் வரையப்பட்டுள்ளது. நூலுக்கான முன்னுரையை வெள்ளவத்தை, பத்மாசனி இராஜேந்திரம் வழங்கியுள்ளார். (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14)

5093

அடியார் கதைத் தொகுதி 3. சிவானந்தவல்லி கனகநாயகம். சுன்னாகம்: வட இலங்கைத் தமிழ்நூற் பதிப்பகம், 1வது பதிப்பு, 1948. (சுன்னாகம்: திருமகள் அழுத்தகம்).
44 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை.

சிவபாதவிருதையர், திருஞானசம்பந்தர், திருஞானசம்பந்தர்-2, சிவநேசர், நம்பியாரூரர்-3, ஏயர்கோன் கலிக்காமர், திருமூலர், தண்டி அடிகள், சிறுத்தொண்டர், சாக்கியர், சேரமான் பெருமாள்-1, சேரமான் பெருமாள்-2, புகழ்ச் சோழர் ஆகிய சமய அடியார்கள் பற்றிய குறிப்புகள் இந்நூலில் அடங்கியுள்ளன. முன் அட்டைப்படம் ஓவியர் சானாவினால் வரையப்பட்டுள்ளது. நூலுக்கான முன்னுரையை வெள்ளவத்தை, பத்மாசனி இராஜேந்திரம் வழங்கியுள்ளார். (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5094

அடியார் கதைத் தொகுதி 4. சிவானந்தவல்லி கனகநாயகம். சுன்னாகம்: வட இலங்கைத் தமிழ்நூற் பதிப்பகம், 1வது பதிப்பு, 1948. (சுன்னாகம்: திருமகள் அழுத்தகம்).
60 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை.

கலிக்கம்பர், கலியர், கணம்புல்லர், கழற்சிங்கர், இடங்கழியார், கோட்புலியார், பூசலார், மங்கையர்க்கரசியார், கோச்செங்கட்சோழர், திருநீலகண்ட யாழ்ப்பாணர், நம்பியாரூரர்-4, தொண்டரடிப்பொடி ஆழ்வார்-1, தொண்டரடிப்பொடி ஆழ்வார்-2, ஸ்ரீ ஆண்டாள், திருப்பாணாழ்வார், ஸ்ரீ கபீர்தாசர்-1, ஸ்ரீ கபீர்தாசர்-2, ஸ்ரீ ராமதாசர்-1, ஸ்ரீ ராமதாசர்-2 ஆகிய சமய அடியார்கள் பற்றிய குறிப்புகள் இந்நூலில் அடங்கியுள்ளன. முன் அட்டைப்படம் ஓவியர் சானாவினால் வரையப்பட்டுள்ளது. நூலுக்கான முன்னுரையை வெள்ளவத்தை, பத்மாசனி இராஜேந்திரம் வழங்கியுள்ளார். (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5095

அடியார்க்கு நல்லார் வரலாற்று ஆராய்ச்சி. பொ.செகந்நாதன். யாழ்ப்பாணம்: பொ.செகந்நாதன், ஆசிரியர், சரஸ்வதி உயர்நிலைப் பள்ளி, வேலணை, 1வது பதிப்பு, மார்ச் 1944. (மதுரை: விவேகானந்தா அச்சுக்கூடம், எக்ஸெல்ஸியர் பவர் அச்சுக்கூடம்).
92 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை.

முத்தமிழ்க் கருவூலமாகிய சிலப்பதிகாரத்திற்கு உரை கண்ட கொங்கு மண்டலத்திலுள்ள நிரம்பை என்னும் நகரில் பிறந்த அடியார்க்கு நல்லாரது சரித்திரம் சம்பந்தமாக இதுவரை அறியப்பெறாத முக்கிய தகவல்களை இந்நூல் ஆதாரங்களுடன் விளக்குகின்றது. கொங்கு மண்டலத்தில் பிறந்த அடியார்க்கு நல்லார் ஈழமண்டலத்தில் அமைச்சுரிமை பூண்டு வாழ்ந்தாரென்றும், அவ்வாறு வாழ்ந்த காலத்தில்தான் சிலப்பதிகாரத்திற்கு அவரால் உரை எழுதப்பெற்றதென்றும் யாழ்ப்பாணத்தில் கிடைத்த சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்நூலுக்கான மதிப்புரையை திருநெல்வேலி பரமேஸ்வரக் கல்லூரித் தலைமைப் பேராசிரியர் சு.நடேசபிள்ளையும், மானிப்பாய் இந்துக் கல்லூரித் தலைமைப் பேராசிரியர் வி.வீரசிங்கம் அவர்களும் வழங்கியுள்ளனர். (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5096

அபிராமியந்தாதி மூலமும் உரையும். அபிராமிப் பட்டர் (மூலம்), ம.க.வேற்பிள்ளை (உரையாசிரியர்). திருக்கடவூர்: அ.சுவாமிநாத ஓதுவார் மூர்த்தி, திருக்கடவூர்த் தேவஸ்தானம், 2வது பதிப்பு, ஸ்ரீமுக வருடம் 1933. (சென்னபட்டணம்: வித்தியாநுபாலன யந்திரசாலை).
80 பக்கம், விலை: அணா 4.

அபிராமி தேவியருள் பெற்று விளங்கிய அபிராமிப்பட்டர் அருளியது அபிராமி அந்தாதியாகும். இந்நூலுக்கான உரையை வழங்கியவர் சிதம்பர சைவப்பிரகாச வித்தியாசாலைத் தலைமைப் போதகாசிரியராவார். இந்நூலின் முதற்பதிப்பு விபரம் அறியமுடியவில்லை. (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5097

அருட்பா (மூலம்). ஆறுமுக நாவலர். சிதம்பரம்: தி.இராசநாயகம், தருமபரிபாலகர், சிதம்பர சைவப்பிரகாச வித்தியாசாலை, 16வது பதிப்பு, 1958. (சென்னப் பட்டணம்: ஆறுமுக நாவலர் வித்தியாநுபாலன யந்திரசாலை).
338 பக்கம், விலை: இந்திய ரூபா 3.00

அகத்திய மகாமுனிவர் திரட்டியருளிய தேவாரத் திரட்டு, மாணிக்கவாசக சுவாமிகள் அருளிச்செய்த திருவாசகம், திருவிசைப்பா, சேந்தனார் அருளிச்செய்த திருப்பல்லாண்டு, பெரியபுராண செய்யுட்திரட்டு, அருணகிரிநாதர் அருளிச் செய்த திருப்புகழ் ஆகியன இந்நூலில் தொகுக்கப்பெற்றுள்ளன. (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5098

அருள் படைத்த வேலவா. க.வாமதேவன் (தொகுப்பாசிரியர்). சுழிபுரம்: வழக்கம்பரை சனசமூக நிலையம், 1வது பதிப்பு, 1963. (யாழ்ப்பாணம்: ஸ்ரீ முருகன் அச்சகம், 104, கஸ்தூரியார் வீதி, கன்னாதிட்டிச் சந்தி).
8 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை.

மெய்கண்டான் அச்சகத்தினர் கடந்த வருடங்களில் நல்லூர்க் கந்தன் தேர்த்திருவிழாவின்போது வெளியீடு செய்த பிரசுரங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட தேர், தீர்த்த, தத்துவ விளக்கங்களையும் வேறு சில துதிப்பாடல்களையும் சேர்த்து இந்நூல் வெளியிடப்பட்டுள்ளது. இந்நூலில் அருள் படைத்த வேலவா, தேரோட்டத் தத்துவம், தீர்த்த உற்சவத் தத்துவம், அபிராமியந்தாதி, கந்தரனுபூதி ஆகிய தலைப்புகளில் இவை அடங்கியுள்ளன. (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5099

அருளமுத வள்ளம். பண்டிதர் அ.ஆறுமுகம். வட்டுக்கோட்டை: வட்டுக்கோட்டைத் தொகுதித் தமிழ்ச் சங்கம், 1வது பதிப்பு, ஜுன் 1994. (யாழ்ப்பாணம்: ஆனந்தா அச்சகம், 226, காங்கேசன்துறை வீதி).
xiv, 128பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22X14.5 சமீ.

வட்டுக்கோட்டைத் தொகுதியில் சுழிபுரம், பண்ணாகத்தைச் சேர்ந்த பண்டிதர் அ.ஆறுமுகனார் 20க்கும் அதிகமான பக்தி இலக்கியங்களைச் சிறுநூல்களாக வெளியிட்டவர். அவரது நூல்களுள் 10 நூல்களைத் தொகுத்து இந்நூல் ஆக்கப்பெற்றுள்ளது. திருப்பள்ளியெழுச்சி, பதிகம், பிள்ளைத்தமிழ், மும்மணிமாலை, ஊஞ்சல் என்ற வகைகளுக்குள் அடங்கும் பிரபந்தங்கள் இவை. வள்ளம் என்ற பதத்தை நூலாசிரியர் கிண்ணம் என்ற பொருளில் பயன்படுத்தியிருக்கிறார். 1964இல் வட்டுக்கோட்டைத் தொகுதியில் தாபிக்கப்பட்ட வட்டுக்கோட்டைத்தொகுதித் தமிழ்ச்சங்கம் இத்தொகுதியை வெளியிட்டுள்ளது.

5100

அன்னை லலிதாம்பிகை அருட்பேராயிரம். க.வை.ஆத்மநாத சர்மா. கொழும்பு: பிரம்மஸ்ரீ ஆ.வைத்தியநாத சர்மா, அதிபர், கிங்ஸ்லிக் கல்லூரி, 1வது பதிப்பு, பங்குனி 1964. (சுன்னாகம்: கலாதேவி அச்சகம், புகையிரத நிலைய வீதி).
(28), 78 பக்கம், விலை: ரூபா 2.00.

நாதன் வெளியீடு என்ற தொடரில் முதலாவதாக வெளியிடப்பட்ட இந்நூல் அன்னை வழிபாட்டிற்குரிய லலிதா சஹஸ்ரநாமமாகும். இதன் மூலநூல் வடமொழியில் அமைந்தது. அதனைத் தமிழில் ஆசிரியப்பாவினால் மொழிபெயர்ப்பாக இந்நூலில் அமைத்திருக்கிறார். மேலும் ஆசிரியப்பாவின் அடிகள் குறிக்கும் வடமொழி நாமாக்களை ஒவ்வொரு பக்கத்திலும் அடிக்குறிப்பாகத் தமிழில் தந்திருக்கிறார். முதல் அத்தியாயத்தில் அடங்கிய 51 சுலோகங்களுள் முதல் ஐம்பதும் அகஸ்தியர், சூதர், ஹயக்ரீவர், தேவி ஆகிய ஐவரின் திருவாக்குகள் கொண்டவை. இவை குறித்த ஸஹஸ்ர நாமத்திற்கு முகவுரையாக அமைந்துள்ளன. 51ஆவது இறுதிச் சுலோகம் தியான சுலோகமாகும். இரண்டாம் அத்தியாயத்தில் நூற்றெண்பத்திரண்டரை சுலோகங்கள் நாமங்களை அடக்கியுள்ளன. மூன்றாம் அத்தியாயத்தில் உள்ள

எண்பத்தாறரை சுலோகங்கள் பலசுருதியென அழைக்கப்படும். நூலாசிரியர் யாழ்ப்பாணம் வண்ணை ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலைப் பிரதம ஆசிரியர் பாரத்துவாஜி பிரம்மஸ்ரீ க.வை.ஆத்மநாத சர்மா அவர்களாவர். (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5101

ஆதிசங்கரர் அருளிய சிவானந்த லகரி. ஆதி சங்கரர் (வடமொழி மூலம்), ச.சுப்பிரமணியம் (மொழிபெயர்ப்பு). யாழ்ப்பாணம்: அமரபாரதீ பரீக்ஷா ஸமிதி, இலங்கைக் கிளை, 1வது பதிப்பு, ஆகஸ்ட் 1968. (யாழ்ப்பாணம்: ஸ்ரீ சண்முகநாத அச்சகம்).
123 பக்கம், விலை: சாதாரண பதிப்பு ரூபா 2.50, பரிசுப் பதிப்பு ரூபா 3.25

"பரமேஸ்வரனைத் துதிக்கும் சிவானந்த லஹரீ என்னும் இந்த ஸ்தோத்திரமானது, பக்தியின் ஸ்வரூபத்தினையும், ஹாலாஹல விஷத்தை உண்டமை- வேடன் போன்ற எல்லா ஜனங்களும் பறிக்கக் கூடிய எளிமை- முதலிய பரமேச்வரனின் விஷேட குணங்களையும், சம்ஸ்கிருதத்தில் அர்த்த புஷ்டியுள்ள லலிதமான பதங்கள் பலவிதமான விருத்தங்கள் அடங்கிய நூறு ச்லோகங்களில் விளக்குகிறது. மூலத்தையும், ஆவரங்கால் பண்டிதர் ச.சுப்பிரமணியத்தின் தமிழ்ச் செய்யுள் மொழிபெயர்ப்பினையும் கொண்டது. இந்நூலுக்கான ஸ்ரீமுகத்தினை நெல்லூர் ஜில்லா, வேங்கடகிரி ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சாரிய ஸ்வாமிகளும், முகவுரையை யாழ்ப்பாணம் பரமேஸ்வரக் கல்லூரி முன்னாள் விரிவுரையாளர் வியாகரண சிரோமணி பிரம்மஸ்ரீ கி.சீதாராம சாஸ்திரிகளும், அணிந்துரைகளை தமிழ்ப்புலவர் வச்ரவேல் முதலியாரும், வட மாநில முன்னாள் வித்தியாதிபதி ஸ்ரீமதி இரத்தினா நவரத்தினமும் வழங்கியுள்ளனர். (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5102

ஆருத்திரா தரிசனம் (சூரியோதய வழிபாடு). கந்தழி தியாகராசா. கொழும்பு 7: க.தியாகராசா, 14, 25th Lane, Green Path, 1வது பதிப்பு, விகாரி வருடம், மார்கழி 1959. (கொழும்பு 12: சுதந்திரன் அச்சகம், 194 ஏ- தட்டா தெரு).
16 பக்கம், விலை: ரூபா 1.00.

ஆருத்திரா தரிசனம் மனோதத்துவ சித்தாந்தப்படியும், பிராகிருதிக சாஸ்திரப்படியும் எழுதப்பட்ட முதல் நூல். சந்திரன் வானில் திருவாதிரை நட்சத்திரங்களுக்கிடையே மிதுனராசியில் சஞ்சாரம் செய்வான். பௌர்ணமி மிருகசீரிடத்திற் தொடங்கி திருவாதிரையில் (67-80 பாகையில்) முடிவடையும். இந்தக் காலத்தில் சந்திரன் சூரியனுக்கும் பூமிக்கும் அப்பால் நேரெதிரில் (168-180 பாகையில்) வருகின்றான். திருவாதிரையின் கதிர்கள் பூரண சந்திரனிற் பட்டுப் பூமிக்குப் பிரதிபலிக்கின்றன. அந்தப் புண்ணிய காலத்தில் ஸ்ரீ நடராஜப் பெருமானை வழிபடுதலையே நாம் ஆருத்திரா தரிசனம் என்று அழைக்கின்றோம். இந்நூலாசிரியர் ஸ்ரீ நாகபூஷணி அம்மனைத் தாபித்துப் பூசித்த நயினார் பட்டர் வமிசாவழி வந்த காலஞ்சென்ற நடுவகாடு சி.கணபதிப்பிள்ளை அவர்களின் மகனாவார். 12.1.1960இல் இந்நூல் யாழ்ப்பாணம் நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணியம்மன் கோவிலில் அரங்கேற்றப்பட்டது. (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14)

5103

ஆறுமுகமான பொருள். செ.தனபாலசிங்கன். உரும்பிராய்: சிதம்பர சுப்பிரமணிய சுவாமி கோவில், 1வது பதிப்பு, ஆவணி 1961. (யாழ்ப்பாணம்: ஸ்ரீ சண்முகநாத அச்சகம்).
120 பக்கம், விலை: ரூபா 2.00.

ஆறுமுகமான பொருள், மயிலேறி விளையாடு முருகன், மனக்கவலை மாற்றும் மாமருந்து, மாணிக்கக் கல், சல்லாப விநோதன் முருகன், புரையுநர் இல்லாப் புலமையோன் முருகன், முருகன் புகழ்ப் பாமாலை, இது தெரியுமா?,ஆராய்ச்சி தொடங்கலாம் ஆகிய ஒன்பது தலைப்புகளில் வெளியாகிய கட்டுரைகள் இதில் இடம்பெற்றுள்ளன. இவற்றில் சுப்பிரமணியக் கடவுளின் ஆறு முகங்களின் செயல், அப்பெருமான் சங்கப் புலவராக இருந்தமை, அவர் பழைய தமிழ் நூல்களில் பாராட்டப் பெற்றமை, திருமுருகாற்றுப்படையின் பெருமை, திருப்புகழின் மகத்துவம் முதலியவற்றை விளக்குவதோடு சுப்பிரமணியர் திரு அவதார வரலாறு, சூரன் மயில்வாகனமாய் அமைந்தது, நக்கீரருக்கு அருளியது, ஔவையாருக்கு கிருபை செய்தது, கந்த புராணம் அரங்கேற்றிய வரலாறு, பிரம்மாவைக் குட்டிச் சிறை வைத்தது முதலிய விருத்தாந்தங்களையும் பிரமாணங்களுடன் காட்டி எளிமையாக எழுதப்பட்டுள்ளது. (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5104

இந்து சமய வரலாறு. ந.சி.கந்தையாபிள்ளை. சென்னை: ந.சி.கந்தையாபிள்ளை, 1வது பதிப்பு, பிப்ரவரி 1960. (சென்னை 1: புரோகிரசிவ் அச்சகம்).
115 பக்கம், விலை: இந்திய ரூபா 1.50, அளவு: 18x12 சமீ.

இந்து சமய வரலாறு. ந.சி.கந்தையாபிள்ளை (மூலம்), தொ.பரமசிவன் (கருத்துரை). சென்னை 600019: விழுதுகள் பதிப்பகம், 18, திருநகர் முதல் தெரு, திருவொற்றியூர், 2வது பதிப்பு, 2003., 1வது பதிப்பு, 1960. (சென்னை 600005: சேகர் ஆப்செட்).
(10), 75 பக்கம், விலை: இந்திய ரூபா 40., அளவு: 21.5x14 சமீ.

யாழ்ப்பாணத்து நவாலியூர் ந.சி.கந்தையாபிள்ளை அவர்களால் பல்வேறு ஆங்கில நூல்களையும் ஆய்வுகளையும் ஆதாரமாகக் கொண்டு எழுதப்பட்ட நூல். 34 சிறு தலைப்புகளில் விரிவாக இந்து சமய வரலாற்றை விளக்குகின்றது. தமிழர் சமயம் எது, ஆரியர் சமயம் எது என்று பிரித்தறிய முடியாதபடி கலந்து இன்று தமிழர் சைவசமயம் தன் அடையாளத்தை இழந்து இந்து சமயமாக விளங்குகின்றது. கடந்த காலங்களில் மறைமலை அடிகள், தேவநேயப் பாவாணர் போன்றோர், தமிழர் சமயம் எது என்பதை நிறுவ முயன்றனர். இந்து சமய வரலாறு என்ற இந்நூலில் ந.சி.க. அவர்கள் தமிழர் சமயம் எவ்வாறு ஆரிய சமயத்துடன் கலந்து இந்து சமயமாக மாறியது என்பதை விரிவாக ஆய்வுசெய்துள்ளார்.

5105

இந்துத்துவம், இந்துசமயம், சமூக மாற்றங்கள். ந.இரவீந்திரன். சென்னை 600006: சவுத் விஷன், 5, குலாம் அபாஸ் அலிகான் 5ஆவது தெரு, ஆயிரம் விளக்கு, 1வது பதிப்பு, ஜுலை 2003. (சென்னை: மகேந்திரா கிராப்பிக்ஸ்).
336 பக்கம், விலை: இந்திய ரூபா 125., அளவு: 21x13.5 சமீ.

இந்துமத வரலாற்றில் கேடுகள் தான் மலிந்து கிடந்ததா? சமூக மாற்றங்களை எதிர்த்து வரலாற்று வளர்ச்சியைத் தடுக்கும் விலங்காகத்தான் எல்லாக் காலங்களிலும் இந்துநெறி விளங்கியதா, அல்லது மாற்றங்களின் கருவியாகவும் வளர்ச்சியின் வழிகாட்டியாகவும் இந்து மதத்தால் இருக்க முடிந்ததா என்பதைக் கண்டறிய இவ்வாய்வு முயல்கிறது.

5106

இன்பத் திருப்புகழ். யோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார். கொழும்பு: சுத்தானந்தப் பதிப்பகம், 2வது பதிப்பு, 1952. (சுன்னாகம்: திருமகள் அழுத்தகம்).
38 பக்கம், விலை: சதம் 50.

கால்நூற்றாண்டு மௌனத் தவத்தின் பயனாய்ச் சித்திபெற்று வெளிவந்த கவியோகி, கீழைத்தேய ஆசிய நாடுகள் பலவும் சுற்றித்திரிந்து சன்மார்க்க யோகக் கலையைப் பரப்பிவந்தபோது 72 பாடல்களைக்கொண்ட இந்தச் சந்தக் கவி மாலையைத் தொடுத்து வழங்கியிருந்தார். சுத்தானந்தர் மலாய் நாட்டு விஜயத்தின்போது நினைவு மலராக முதற்பதிப்பு வெளிவந்திருந்தது. இரண்டாம் பதிப்பு இலங்கைப் பதிப்பாக இப்போது வெளிவருகின்றது. (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5107

ஈச்சுர நிச்சயம். ச.சபாரத்தின முதலியார். தமிழ்நாடு: சே.வெ.ஜம்புலிங்கம்பிள்ளை, திருமயிலை, 1வது பதிப்பு, 1954. (சென்னை 5: கிரீன் அண்டு கொம்பெனி, பார்வதி அச்சுக்கூடம்).
228 பக்கம், விலை: ரூபா 3-8-0.

“ஈச்சுர நிச்சயத்திற்கு மறுதலையாயுள்ள மதங்கள் பூர்வத்திலுள்ள உலோகாயதம், நிரீச்சுர சாங்கிதம், பௌத்தம் முதலியனவும், தற்காலத்தனவாகிய பௌதிகவாதம், சந்தேகவாதம், நிரீச்சுரவாதம், மித்தியாவாதம் முதலியனவுமாம். இவற்றின் கண்ணே ஈச்சுரவுண்மைக்கு விரோதமாயுள்ள துறைகளை மாத்திரம் எடுத்துக் கண்டித்துச் சுபஷத்தைத் தாபித்து இதனை முதற்பாகமாகப் பிரசுரிக்கின்றோம்”- நூலாசிரியர். இந்நூல் பொதுவியல் என்ற பிரிவினுள் முதலிரு சூத்திரங்களையும், சிறப்பியல் என்ற பிரிவுக்குள் மூன்றாம், நான்காம், ஐந்தாம் சூத்திரங்களையும், அனுபந்தத்தில் சைவசித்தாந்தம் பற்றிய பகுதியினையும் உள்ளடக்குகின்றது. யாழ்ப்பாணத்துக் கொக்குவில் குகதாசர் ச.சபாரத்தின முதலியார் ஆக்கிய இந்நூல் திருவாவடுதுறை மீனாட்சிசுந்தரம்பிள்ளை அவர்களின் சிறப்புப் பாயிரத்துடனும், சே.வெ. ஜம்புலிங்கம்பிள்ளை எழுதிய நூலாசிரியர் சரித்திரத்துடனும், ஆசிரியரின் மருமகன் புரொக்டர் வே.

மாணிக்கவாசகர் அவர்களின் வேண்டுகோளின்பேரில் பதிப்பிக்கப்பட்டுள்ளது. இந்நூல் 1896ம் வருடம் முதலில் ஆசிரியரால் அச்சிடப்பெற்றது. ஈச்சுர நிச்சயத்தின் இரண்டாம் பாகமாக 1918இல் ஆசிரியர் வெளியிட்ட பிரபஞ்ச விசாரம் என்னும் சிறிய நூலில் சைவசித்தாந்தமே சற்சமயமென்று நிலைநாட்டப்பெற்றுள்ளது. அப்பாகத்தை மட்டும் இப்பதிப்பில் அனுபந்தமாக இணைத்துள்ளார். (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5108

ஈழ நாட்டுத் திருப்புகழ்த் திருவமுதம். வே.க.ப.நாதன் (கருத்துரை, விளக்கவுரை). சென்னை 1: மருணீக்கியார் பதிப்பகம், விற்பனை உரிமை: பாரிநிலையம், 59 பிராட்வே, 1வது பதிப்பு, 1959. (சென்னை 14: மங்கை அச்சகம், 25 மாவடி விநாயகர் கோவில் தெரு, இராயப்பேட்டை).
83 பக்கம், விலை: ரூபா 1.50.

வாக்கிற்கு அருணகிரியார், கண்டோர் காமுறும் கதிர்காமம், வேடர்குல மாதை நாடுகதிர் காமன், பாடிப் பரிசில் தேடி மாயாதபடி பாராய் வடவையாறுசூழ் கதிர்காமப் பெருமாளே, அமடுபடுவேனுக்கும் அருள் கூரவேணுமே அரிய கதிர்காமத்தில் உரிய அபிராமா, எனதுளே சிறக்க அருள்வாயே வழுதிகூன் நிமிர்த்த பெருமாளே, கண்ணுக்கு ஆனமுத்தே கதிர்காம முற்றார் முருகோனே, ஆசையை மறப்பித்த கால்களை மறக்கைக்கும் வருமோதான், மயல்கொளா நிற்கும் இவளை வாழ்விக்க வரவேணும், விகடமாதை நீ அணைக்க வரவேணும், தீது அகல ஓதிப் பணியார் தீநரக மீதில் திகழ்வார், வழிவழி தமர் என வழிபடுகிலன், கிருபைச் சித்தமும் ஞான போதமும் அழைத்துத் தரவேணும், ஈறற்ற சொற்சுக சொரூபத்தை உற்று அடைவேனோ, கழற்குளாகவே சிறப்பானதாய் அருள்தரவேணும் நினைத்த காரியம் அநுக்கூலமேபுரி பெருமாளே, பலித்து நோய் பிணி கிடத்து பாய்மிசை பசித்துத் தாகமும் எடுத்திட உயிருழல்வேனே, ஞானம் பெற்றினி வழிபட அருளாயோ ஆகிய தலைப்புகளில் விளக்கவுரைகள் அமைகின்றன. உரையாசிரியர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர். (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5109

ஈழ மண்டலத் திருத்தல தேவாரமும் திருப்புகழும். நா.பொன்னையா. சுன்னாகம்: தனலக்குமி புத்தகசாலை, 1வது பதிப்பு, ஸ்ரீமுக வருடம், 1934. (சுன்னாகம்: திருமகள் அழுத்தகம்).
35 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை.

தக்ஷிண கைலாசமாகிய திருகோணமலை, திருக்கேதீச்சுரம், திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் தேவாரம், சுந்தரமூர்த்தி நாயனார் தேவாரம், அருணகிரிநாதர் திருப்புகழ், திருக்கோணமலை கொழிப்பு, கதிர்காமம் கொழிப்பு, யாழ்ப்பாணத்து நல்லூர் கொழிப்பு, கந்தவனம் ஆகிய தலைப்புகளில் இந்நூல் அமைகின்றது. இலங்கையின் விஷேட திருத்தலங்களாகிய சிவத்தலங்கள் மேலும், சுப்பிரமணியத் தலங்கள் மேலும் சைவசமயாசாரியர்களாகிய சம்பந்தர், சுந்தரர், அருணகிரிநாதர் போன்றோரால் அருளப்பட்ட தேவாரங்களையும், திருப்புகழ்களையும் கொண்ட இந்நூல் திருக்கோணமலை த.கனகசுந்தரம்பிள்ளை அவர்களால் சாதாரண வருடத்தில் (1910) பதிப்பித்த பிரதிக்கிணங்க இப்பதிப்பு வெளியிடப்பட்டுள்ளது. (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5110

கடவுள் வாழ்த்துப் பா. பிரான்சிஸ் கிங்ஸ்பரி. கொழும்பு: கலைமாணி பிரான்சிஸ் கிங்ஸ்பரி, 1வது பதிப்பு, 1940. (சாவகச்சேரி: இலங்காபிமானி அச்சியந்திரசாலை).
50 பக்கம், விலை: சதம் 25.

தமிழில் உள்ள அருட்பாக்கள் போன்றே மேலை நாட்டு மொழிகளிலும் அருட்பாக்கள் உண்டு. ஆங்கில மொழியில் காணப்படும் Isaac Watts, John Henry Newman, George Matheson, Charlotte Elliott, Henry Francis Lyte, John Keble, Sarah Fuller Adams, Frances Ridley Havergal, Minot Judson savage, Henry Wadsworth Longfellow ஆகியோரின் பாக்களைத் தேர்ந்து தமிழில் யாப்பிலக்கணத்திற்கேற்ப அவ்வருட்பாக்களை இந்நூலில் மொழிபெயர்த்துள்ளார். முதற்பிரிவில் மொழிபெயர்ப்புப் பாக்களையும், இரண்டாவது பிரிவில் கடவுள் அலங்கல்களையும், மூன்றாவது பிரிவில் திருமுறை திருமொழிகளின் தொகுப்பினையும் இடம்பெறச்செய்துள்ளார். இந்நூலிலுள்ள பல பாடல்களுக்கு இராக தாளங்கள் அமைத்து உதவியவர் ஆசிரியரின் மகள் பாடினிமணி சுபத்திரை அம்மையார். (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5111

கதிர்காம மாலை. நெ.வை.செல்லையா. கொழும்பு: செ.அருணகிரிநாதன், 1வது பதிப்பு, விக்கிரம ஆண்டு, 1940. (கொழும்பு: அன்புடையார், குமரன் பிரஸ், 201 டேம் ஸ்ட்ரீட்).
14 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை.

யாழ்ப்பாணம், வண்ணைநகர், பண்டிதர் நெ.வை.செல்லையா (2.8.1878-7.9.1940) அவர்கள் இயற்றிய 107 பாடல்கள் கொண்ட இப்பாமாலையை கொழும்பு, நான்காம் குறுக்குத்தெரு, தனலட்சுமி கம்பெனியின் உரிமையாளர் தெ.ச.க.மாணிக்கவாசகம்பிள்ளையின் நிதி உதவியுடன் ஆசிரியரது மகன் வெளியிட்டுள்ளார். "கலியுகத்தின் கண்கண்ட தெய்வமான முருகப்பெருமான் ஞானபோதகஞ் செய்யவல்லவர். அவரது உபதேசத்தைப் பெற்றோரல்லாது மெய்ஞ்ஞானம் பெறமுடியாது. அஞ்ஞானம் நிறைந்த உலகினர்க்கு இந்த உண்மையை உதாரணத்துடன் வெளிப்படுத்தவே சர்வேஸ்வரனான சிவபெருமானுக்கும், பிரமதேவருக்கும், அகத்திய மாமுனிவருக்கும் பிரணவப்பொருளை உபதேசித்த திருவிளையாடல்கள் நடந்தன. இந்தப் பாமாலையும் அதே உண்மையை வற்புறுத்துகிறது."-ஆசிரியர். (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5112

கதிரேசன் பாமாலை. மு.க.சூரியன். தொளொஸ்பாகை: மு.க.தங்கையா, ஆலய நிர்வாகி, டோட்டல் ஓயா, 1வது பதிப்பு, ஐப்பசி 1955. (யாழ்ப்பாணம்: விவேகானந்த அச்சகம்).
37 பக்கம், விலை: சதம் 50.

BD/Beauvais T M School, Idalgashinna பாடசாலையின் தலைமையாசிரியரான மு.க.சூரியன், தொளஸ்பாகையைச் சேர்ந்த டோட்டல் ஓயா என்னும் தோட்டத்தில் எழுந்தருளியிருக்கும் கதிரேசன் பேரில் பாடிய பாமாலை இதுவாகும். கதிரேசன் வெண்பா, கதிரேசன் அகவல், கதிரேசன் பதிகம், கதிரேசன் விருத்தம், கதிரேசன் கும்மி, கதிரேசன் ஊஞ்சல், கதிரேசன் சரணம், கதிரேசன் வாழி, அரும்பத விளக்கம் ஆகியவற்றை உள்ளடக்கியது. இந்நூலுக்கு, இளைப்பாறிய வித்தியாதிகாரி வி.க.நாதன், திருக்கேதீச்சர திருப்பணிச்சபைத் தலைவர் கந்தையா வைத்தியநாதன், பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை, பண்டிதர் பொன் கிருஷ்ணபிள்ளை, ம.ஸ்ரீகாந்தா, செள.தொண்டமான், சி.உ.சோமசுந்தரம் ஆகியோர் வழங்கியுள்ளனர். (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5113

கதிரைச் சிலேடை வெண்பா: உரையுடன். க.சோமசுந்தரப் புலவர். யாழ்ப்பாணம்: சி.ஜே.இளையதம்பி, சென்.ஜோன்ஸ் கல்லூரி, இணை வெளியீடு, சுன்னாகம்: பண்டிதர் சோ. இளமுருகனார், உடுவில் மகளிர் கல்லூரி, 1வது பதிப்பு, மன்மத வருடம், சித்திரை 1955. (யாழ்ப்பாணம்: நாமகள் அச்சகம்).
203 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை.

யாழ்ப்பாணத்து நவாலியூர் க.சோமசுந்தரப் புலவர் இயற்றிய இந்நூலுக்கு அவரது மகன் சோ.இளமுருகனாரின் மனைவி பண்டிதை பரமேசுவரியார் பதவுரையும் விருத்தியுரையும் வழங்கியுள்ளார். அணிந்துரைகளை பருத்தித்துறை, க.சி.அருணந்தியாரும், பண்டிதர் கா.பொ.இரத்தினமும் வழங்கியுள்ளனர். கதிரைச் சிலேடை வெண்பா, கதிர்காமத்தையும் அங்கே எழுந்தருளியிருக்கும் முருகக் கடவுளையும் பற்றிப் பாடப்பெற்றது. கதிர்காமம் கதிரையெனவும் வழங்கப்படும். புலவரவர்களின் இளைய சகோதரர் சரவணமுத்து அவர்களுக்குக் கண்ணிலே நோயுண்டாகி ஓராண்டு வரையும் மாறாதிருந்தமை கண்ட புலவரவர்கள் கதிர்காம வேலவர் பதிகத்தைப் பாடி நாற்பது நாள் தொடர்ந்து அதனைப் படித்துப் பூசை செய்ய தம்பியாரின் பிணி நீங்கிற்று. ஆயின் ஓராண்டில் புலவரின் கண்ணில் அப்பிணி ஏற்பட்டது. அதனை நீக்கும்பொருட்டு கதிரை முருகன்மீது இச்சிலேடை வெண்பாவைப் பாடினார். முருகன் அருளால் தனது கண்ணோய் தீர்ந்த செயலை 90ஆவது வெண்பாவில் புலவரவர்கள் குறிப்பிடுகின்றார். இந்நூலிலுள்ள வெண்பாக்களின் முதலிரண்டு அடிகள் கதிர்காமத்தின் பெருமையினையும் கடைசி இரண்டடிகள் முருகப்பெருமானின் சிறப்பியல்புகளையும் கூறுகின்றன. கடைசி இரண்டடிகளும் பல வெண்பாக்களில் மடக்காகவும், ஏனையவற்றிலே திரிபாகவும் அமைந்துள்ளன. 2, 36, 45ஆம் செய்யுள்களில் முப்பொருட் சிலேடையும் ஏனையவற்றில் இருபொருட் சிலேடையும் அமைந்துள்ளன. கதிர்காமம் பற்றிய அரிய பல செய்திகள் இவ்வெண்பாவினுள் பொதிந்துள்ளன. (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5114

கந்த புராண போதனை. சி.கணபதிப்பிள்ளை. தெல்லிப்பழை: வே.சங்கரப்பிள்ளை, காரியதரிசி, அகில இலங்கை சைவ இளைஞர் மத்திய மகாசபையினர், 1வது பதிப்பு, மே 1960. (சுன்னாகம்: திருமகள் அழுத்தகம்).
99 பக்கம், விலை: ரூபா 1.25.

பண்டிதமணியவர்கள் நாவலர் மண்டபத்திலே கந்த புராணம் பற்றித் தொடர்ந்து பேசிய பேச்சுக்கள் சில திருத்தங்களுடன் நூலுருவாகியுள்ளன. சமய வகுப்பு (காசிபர் உபதேசம். சுக்கிரன் உபதேசம், கச்சியப்ப சிவாசாரியாரின் போதனை), சமயத்தைப் பற்றிய சில கருத்துக்கள், நூல்களின் ஒருமையும் பிறழ்வும், சமயங்கள், வைதீக சைவம், புறச்சமயங்கள், சூரபன்மன், அறம், பொருள், இன்பம், களவு, கற்பு, கந்தபுராண சமுத்திரம், தோத்திரம் ஆகிய தலைப்புகளில் கந்தபுராண போதனைகள் அடங்கியுள்ளன. (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5115

கந்த புராணம் யுத்த காண்டம். க.கார்த்திகேசு யோகி (உரையாசிரியர்). யாழ்ப்பாணம்: இந்து மாமன்ற வெளியீடு, கொழும்புத்துறை ஆசிரிய கலாசாலை, 2வது பதிப்பு, அக்டோபர் 1995, 1வது பதிப்பு 1971. (சென்னை 600005: நடராஜ் ஓப்செட் பிரஸ்).
xii, 560 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14 சமீ.

கச்சியப்ப சிவாசாரிய சுவாமிகள் அருளிச்செய்த கந்த புராணத்தின் நான்காவது காண்டம் சிங்கமுகாசுரன் வதைப்படலம்- மீட்சிப்படலம் மூலமும் உரையும் கொண்ட நூல். சுழிபுரத்தைச் சேர்ந்த க.கார்த்திகேசு யோகி அவர்கள் எழுதிய உரையே இந்நூலில் இடம்பெற்றுள்ளது. இவரது சீடரும் கொழும்பு மகசீன் சிறைச்சாலை ஜெயிலருமான சுழிபுரம் கிழக்கைச் சேர்ந்த சி.மாதவர் மார்க்கண்டு இந்நூலை இரண்டாம் பதிப்பாக மீள்பதிப்புச் செய்திருக்கிறார்.

5116

கந்தக் கதம்பம். நா.முத்தையா (தொகுப்பாசிரியர்). லண்டன் N6 5BA: பிரித்தானிய இந்து ஆலய அறக்கட்டளைப் பிரசுரம், உயர்வாசற் குன்று முருகன் கோவில், 200 ஏ, ஆர்ச்வே வீதி, 1வது பதிப்பு, ஆவணி 1995. (கொழும்பு: மெய்கண்டான் அச்சகம்).
178 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14.5 சமீ.

முருகப்பெருமானின் சிறப்பினைக் கூறும் இத்தொகுப்பு நூல், ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி பேரில் பாடப்பெற்ற தோத்திரங்களைக் கொண்டது. இதன் முதற் பதிப்பு 1976இல் நாவலப்பிட்டி ஆத்மஜோதி நிலையத்தினரால் கையடக்க நூலாக வெளியிடப்பட்டது.

5117

கல்வளையந்தாதி. மூலமும் உரையும். சின்னத்தம்பிப் புலவர் (மூலம்), ம.வே.திருஞானசம்பந்தபிள்ளை (உரையாசிரியர்). யாழ்ப்பாணம்: சைவ பரிபாலன சபையார், 1வது பதிப்பு, பவ வருடம், 1934. (யாழ்ப்பாணம்: சைவப்பிரகாச யந்திரசாலை).
70 பக்கம், விலை: சதம் 50.

சண்டிருப்பாயிலுள்ள புராதன தலமாகிய கல்வளைப்பதியில் எழுந்தருளிய விநாயகர்மீது பாடப்பெற்ற அந்தாதி இதுவாகும். இதைப்பாடிய நல்லூர் சின்னத்தம்பிப் புலவர், ஒல்லாந்தர் இலங்கையை ஆண்ட காலத்தில் யாழ்ப்பாணத்து நல்லூரில் வாழ்ந்த வில்லவராய முதலியாரென்னும் பிரபுவின் மகனாவார். இந்நூலுக்கான பதவுரை, கருத்துரை, விஷேடவுரை மற்றும் நூலாசிரியர் வரலாறு ஆகியவற்றை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரித் தமிழ்ப் போதகாசிரியரும் இந்து சாதனம் பத்திராசிரியருமான ம.வே.திருஞானசம்பந்தபிள்ளை எழுதியுள்ளார். சிவசம்புப் புலவரின் மாணாக்கருள் ஒருவரான வல்வை சி.வைத்தியலிங்க பிள்ளையவர்கள் இவ்வந்தாதிக்கு ஒரு நுட்பமான உரையை முன்னர் எழுதியிருந்தார். அவ்வுரையையே **பழைய உரை** என்னும் பெயரோடு சென்னை எஸ்.அநவரதவிநாயகம்பிள்ளை அவர்கள் பரிசோதித்து ரிப்பன் அச்சியந்திரசாலையில் அச்சிட்டு வெளியிட்டிருந்தார். வைத்தியலிங்கம்பிள்ளை எழுதிய உரையைத் தழுவியே இப்பொழுது இவ்விரிவுரையும் எழுதப்பெற்றுள்ளது. (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5118

காசியாற்றுப் படை. கு.முத்துக்குமாரசுவாமிப் பிள்ளை. சுன்னாகம்: புலவரக வெளியீடு, மயிலணி, 1வது பதிப்பு, 1963. (யாழ்ப்பாணம்: ஸ்ரீ சண்முகநாத அச்சகம்).
17 பக்கம், விலை: சதம் 35.

நூலாசிரியர் 1957இல் விமான மூலமாகவும், புகைவண்டி மூலமாகவும் காசி யாத்திரை செய்தபோது கண்ட காட்சிகளையும், தரிசித்த தலங்களையும், பெற்ற அனுபவங்களையும் திரட்டிக் காசியாற்றுப்படை என்னும் இந்நூலை இயற்றியுள்ளார். காசி யாத்திரை சென்று திரும்பிய ஒருவர் அங்கே செல்லக் கருதிய தன் நண்பன் ஒருவனை அத்தலத்திற்கு ஆற்றுப்படுத்தும் முகமாக இயற்றப்பட்டமையினால் இந்நூல் காசியாற்றுப்படை என்று பெயரிடப்பட்டுள்ளது. இந்நூலுக்கான சிறப்புப்பாயிரத்தை மட்டக்களப்பு பேராசிரியர் புலவர்மணி ஏ.பெரியதம்பிப்பிள்ளையும், தெல்லிப்பழை தமிழ்ப் புலவர் பண்டிதர் சி.கதிரிப்பிள்ளை அவர்களும் வழங்கியுள்ளனர். இது 12ஆவது புலவரக வெளியீடாக வெளிவந்துள்ளது. (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5119

கிறீஸ்துவர் ஆராய்ச்சியும் சைவநன்மக்கள் கொள்கையும்: இரண்டாம் பாகம். த.ஆறுமுக நயினார்பிள்ளை. யாழ்ப்பாணம்: இலங்கைச் சைவ பரிபாலன சபை, 1வது பதிப்பு. 1921. (கொழும்பு: மெய்கண்டான் அச்சியந்திரசாலை, ஆதிருப்பள்ளித் தெரு).
105 பக்கம், விலை: ரூபா 1.00.

மிருகபலி ஆராய்ச்சி, சைவரும் மச்ச மாமிசமும், புதுச் சைவம் ஆகிய மூன்று துண்டுப் பிரசுரங்களின் பேரில் எழுந்த கண்டனக் கட்டுரை இதுவாகும். சைவத்தையும் தமிழையும் வளர்க்கும் நோக்குடன் 29.4.1888 இல் தாபிக்கப்பட்டதே இலங்கைச் சைவ பரிபாலன சபையாகும். சைவம் பற்றிய எதிர்ப்பிரசாரங்களை காலனித்துவ ஆட்சியில் மதமாற்ற நோக்குடன் மேற்கொண்ட கிறீஸ்தவபீடங்களின் கருத்தியல் போரை முறியடிக்கும் பணிகளுள் ஒன்றாக இந்நூல் வெளியிடப்பட்டது. (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5120

குமரகுருபர சுவாமிகள் அருளிச்செய்த திருச்செந்தூர்க் கந்தர் கலிவெண்பா. குமர குருபர சுவாமிகள் (மூலம்), நா.ஏகாம்பரம் (உரையாசிரியர்). வட்டுக்கோட்டை: பண்டிதர் நா.ஏகாம்பரம், மயிலகம், 1வது பதிப்பு, 1955. (யாழ்ப்பாணம்: இராசகுமாரன் அச்சகம்).
58 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை.

திருச்செந்தூரில் எழுந்தருளியிருக்கும் சண்முகப் பெருமான்மீது கலிவெண்பா என்னும் பாவினால் பாடப்பெற்றது. இதைப் பாடியவர் பாண்டிவள நாட்டில் ஸ்ரீ வைகுண்டம் என்னும் திருப்பதிக்கு வடபாலுள்ள ஸ்ரீ கைலாசம் என்னும் ஊரில் பிறந்த குமரகுருபர சுவாமிகளாவார். இச்செய்யுள் 122 கண்ணிகளைக் கொண்டது. இந்நூல் சிவபெருமானின் சொரூபலக்கணம் முதலாகிய சைவசித்தாந்த நுட்பங்களையும் முருகப்பெருமானின் சொரூபநிலையையும், அவரின் திருமுகங்களின் செயல்களையும், அவரின் திருக்கரங்களின் செயல்களையும், அவரின் அலங்காரத்தையும் அவர் பற்பல உருவாய் விளங்கும் தன்மையையும் அவரின் திருவவதாரத்தையும், அவரின் திருவிளையாடல்களையும், அவர் எழுந்தருளியிருக்கும் திருப்பதிகளையும் அவர் அடியாரின் வேண்டுகோளையும், தன்னகத்தே கொண்டு மிளிர்வது. கந்தபுராணச் சரித்திரத்தைச் சுருக்கமாகக் கூறுவது. இந்நூலுக்குப் பல அறிஞராற் செய்யப்பட்ட உரைகளிருந்த போதிலும் உரையாசிரியரான வட்டுக்கோட்டை வழக்கறிஞரும், சைவப்புலவருமாகிய பண்டிதர் நா.ஏகாம்பரம் அவர்களின் இவ்வுரை, பாராயணம் பண்ணுவோருக்குப் பயன்பெறும் பொருட்டுச் சந்தி பிரியாது சீர்பிரித்து, மூலம் தொடர்ச்சியாக வெளியிடப்பட்டுள்ளது. உரைப்பகுதியிலுள்ள மூலத்தைப் படிப்போர் எளிதில் உணரும்வகையில் சந்திபிரித்து பொருளுக்கேற்றவாறு பகுதிகளாகப் பிரித்து வெளியிட்டிருக்கிறார். பதவுரை, கருத்துரை, விசேடவுரை மூன்றையும் ஒருங்கே வழங்கியுள்ளமையும் இந்நூலின் சிறப்பாகும். (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5121

சக்தி: அவள் தோற்றமும் மாற்றமும். சி.வே.சிவகுரு. கொழும்பு: நவராத்திரி வெளியீடு, பதிப்பு விபரம் தரப்படவில்லை. (கொழும்பு 12: சுதந்திரன் அச்சகம்).
70 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை.

இந்நூலில் நவராத்திரிப் பாட்டு. விசையும் வேலையும், சக்தியின் வேறுவேறு தோற்றங்கள், இருளும் ஒளியும், அலையும் ஒலியும், சூரியன், சூரியனும் நாமும், முத்துமாரி ஆகிய தலைப்புகளில் அடங்கிய நவராத்திரிகாலக் கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14)

5122

சகலகலாவல்லி மாலை. ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் (மூலம்), நா.ஞானசம்பந்தன் (உரையாசிரியர்). வட்டுக்கோட்டை: இலக்கியப் புதையல் பதிப்பகம், 1வது பதிப்பு 1968. (யாழ்ப்பாணம்: ஸ்ரீ சண்முகநாத அச்சகம்).
13 பக்கம், விலை: சதம் 60.

ஸ்ரீ கைலசம் என்ற பதியில் வாழ்ந்திருந்த சண்முக சிகாமணிக் கவிராயரின் மகனாகப் பிறந்தவர் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள். தன் ஐந்தாம் வயதுவரை பேசும் ஆற்றலற்றிருந்தவர். இறைவன் அருளால் பின்னர் பேச்சு மட்டுமன்றி சிறந்த கவித்துவமும் கைவரப்பெற்றவர். இவர் கந்தர் கலிவெண்பா, கைலைக் கலம்பகம், திருவாரூர் நான்மணிமாலை மற்றும் திருமலை நாயக்கர் முன்னிலையில் மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் ஆகியவற்றைப் பாடியவர். இவர் காசியில் இருந்தபோது, தமிழார்வம் மிக்க டில்லி பாதுஷாவின் தொடர்பினையும் நட்பினையும் பெற்றார். பாதுஷாவின் தாய்மொழியான ஹிந்துஸ்தானியை கற்கும் ஆற்றலை வேண்டி இவர் கலைமகள்மீது பாடியதே சகலகலாவல்லி மாலையாகும். இதற்கான உரையை தமிழறிஞர் நா.ஞானசம்பந்தன் எழுதி இந்நூலுருவில் கொண்டுவந்துள்ளார். (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5123

சமயக் கட்டுரைகள். சி.கணபதிப்பிள்ளை. திருநெல்வேலி: பழைய மாணவர்கள், திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலை, 1வது பதிப்பு, 1961. (சுன்னாகம் திருமகள் அழுத்தகம்).
234 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை.

பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை அவர்கள் "சமயம்" பற்றித் தினகரன் பத்திரிகையில் தொடர்ச்சியாக எழுதிவந்த 27 கட்டுரைகளின் தொகுப்பு இந்நூலாகும். இந்தச் சரீரம் நமக்குக் கிடைத்தது நாம் கடவுளை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டேயாகும், காமியம் வேறு நிஷ்காமியம் வேறு, மகான் அரவிந்தர் எப்பொழுது சமயி ஆனார்?, நாம் செய்கின்ற நம் செயல் கடவுள் செயல் ஆகாது, சமயி, உண்மைச் சமய இயல்பு, மெய்ச் சமயமே சமரச சமயம், மனிதர் மூவகையர், இன்று சங்கற்ப நிராகரணஞ்செய்ய நேர்ந்தால், பிராசீனர் நவீனர் வகுத்த சமயங்கள், உண்டிருந்து வாழ்வதற்கு வழிகாணும் மடசைவம், உபநிஷதம் ஓதியும் பயன்பெறாதவர் யாவர்?, ஆசனம் அறிந்தவன் யோகி, நாம் இந்தச் சரீரமா?, இது என்ன வேடிக்கை, ஆத்மாவும் சரீரமும், சிவோகம் சித்தாந்த வாக்கியம், அது நான் ஆனேன் வேதாந்தம், சுத்தமான அத்வைதமே வேதாந்த சித்தாந்தம், வேதாந்தத் தெளிவாம் சைவசித்தாந்தம், பழுக்கக் காய்ச்சிய இரும்பும் துருப்பிடித்த இரும்பும், மாயாவாதத்தின் கிளையான பிரமவிவர்த்தன வாதம், மாயாவாதம், உலோகாயதம், ஆராய்ந்து மெய்ப்பொருள் காணுதல் வேண்டும், அந்தச் சிவசக்தியே ஆதிபகவன், சிவசத்தியைச் சாராது உண்மையைக் காணமுடியாது, சுவதர்மம், சுதர்மம், பூர்வ மீமாஞ்சை, உத்தர மீமாஞ்சை, ஒரு பதிக்குப் பலவழிகள் உளவானாற் போல ஆகிய தலைப்புகளில் இக்கட்டுரைகள் அமைந்துள்ளன. அநுபந்தமாக வள்ளுவர் உபதேசம், மெய்கண்ட பரம்பரையில் உமாபதி சிவம், கச்சியப்ப சிவாசாரியாரின் தருமோபதேசம் ஆகிய மூன்று மேலதிகக் கட்டுரைகள் உள்ளன. (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5124

சமயங்களின் தாயனைய சிவநெறி. ச.தியாகராசா. யாழ்ப்பாணம்: சிவதொண்டன் நிலையம், 1வது பதிப்பு, நவம்பர் 1966. (யாழ்ப்பாணம்: ஸ்ரீலங்கா அச்சகம்).
123 பக்கம், விலை: ரூபா 1.60.

உயிர் வாழ்க்கையின் உண்மைத் தன்மையை உள்ளவாறுணர்த்தும் தனிப்பெருமை வாய்ந்தது சிவநெறி அல்லது சைவசமயம். சிவநெறி நூற்பொருளை ஒருவாறு எளிதில் அறிந்துகொள்ள உதவும்வகையில் சிவதொண்டன் இதழில் "சமயங்களின் தாயனைய சிவநெறி" என்ற தலைப்பில் தொடர்ச்சியாக வெளிவந்த கட்டுரைகளின் தொகுப்பு இதுவாகும். சைவசமயம், சற்காரியவாதம், முப்பொருள், பதியுண்மை, பதியிலக்கணம், பசுவுண்மை, பசு இலக்கணம், பாசம், ஆணவம், கன்மம், மாயை, அவத்தைகள், கேவலாவத்தை, சகலாவத்தை, சுத்தாவத்தை, பதியின் அருட்செயல், ஒழுக்கம், பஞ்சமாபாதகங்கள், சாதி, அறவாழ்வு, சைவசாதனை, ஞானத்தின் வேறுபாடு, பாச பசு ஞானங்கள், பதிஞானம், சரியையாதி

சாதனைகள், சரியை, கிரியை, யோகம், ஞானம், கேவல, சகல, சுத்தாவத்தைகள் பற்றிய ஒரு விளக்கம், சிவஞானப்பேற்றுக்குத் தடையாயுள்ள இரு பெருந்திரைகள், ஆன்ம அறிவு விளங்கும் முறை, இருவினையொப்பு மலபரிபாகம், சத்திநிபாதம், ஞானகுருபரன், பரமவஞ்செழுத்து மொன்றாம் பராபரம், திருவைந்தெழுத்தின் தனிச்சிறப்பு, திருவைந்தெழுத்தின் வகை, பஞ்சாக்கரத் திருமேனி, பஞ்சாக்கரம் ஏகாக்கரமாதல், பஞ்சாக்கரம் ஓதுதல், திருநீறு, உருத்திராக்கம், பாசநீக்கமும் திருவடிப் பேறும், சீவன்முத்தர் எதுசெய்வர், வேதாந்த சித்தாந்தங்களும் அத்வைதமும், தாயாய் விளங்கும் சிவநெறிப் பண்பு ஆகிய தலைப்புகளில் இக்கட்டுரைகள் அமைந்துள்ளன. (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5125

சித்திரச் சுடரொளி: கலைமகள் விளக்கம். நா.செல்லப்பா. யாழ்ப்பாணம்: நா.செல்லப்பா, 41 பிரவுண் வீதி, 1வது பதிப்பு, புரட்டாதி 1967. (யாழ்ப்பாணம்: சைவப்பிரகாச அச்சியந்திரசாலை).
156 பக்கம், விலை: ரூபா 2.00

சரஸ்வதியின் தத்துவ விளக்கத்தை அடிப்படையாகக் கொண்டு மேல்நாட்டு உளவியலையும், வள்ளுவன் கூறிய மெய்யுணர்தலையும், சைவசித்தாந்த உண்மைகளையும் தொடர்புறுத்தி உருவாக்கப்பட்ட நூல் இதுவாகும். கலைமகளின் சித்திரத்தை அநேக ஓவியர்கள் வரைந்துள்ளனர். இவற்றுள் இரவி வர்மா தீட்டிய சித்திரத்திற்குத் தனிப்பெரும் மதிப்பு உண்டு. அவர் வரைந்த சித்திரத்தை ஆதாரமாகக் கொண்டு இந்நூல் எழுதப்பட்டுள்ளது. அவர் தமது சித்திரத்தின் தத்துவங்களைப் பற்றிக் கூறிய சில உயர்ந்த கருத்துக்கள் இதில் இடம்பெறுகின்றன. இந்நூலில் உள்ளக்கிழியில் உரு எழுதுதல், இயற்கை அன்னையின் அருட்சக்தி வியாபகம், உருவில் விளையும் சிந்தனைக் கருவூலம், கல்லாசனத்திலிருக்கும் கலைவாணியின் கருணை, கையில் ஏந்திய ஏட்டின் மகிமை, சிந்தையிற் பதியும் செபமாலை, வாணி எழுப்பும் வீணையின் நாதம், களங்கமற்ற வெள்ளைக் கலை, களிநடம்புரியும் கலாப மயில், சிந்தையிற் பாயும் இன்பாற்று வெள்ளம் ஆகிய தலைப்புக்களின் கீழ் சரஸ்வதியின் தத்துவ விளக்கம் விபரிக்கப்பட்டுள்ளது. (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5126

சிதம்பர மும்மணிக் கோவை. குமரகுருபர சுவாமிகள் (மூலம்), ஆறுமுக நாவலர் (பரிசோதித்தவர்). சிதம்பரம்: விசுவநாதபிள்ளை, தருமபரிபாலகர், சைவப்பிரகாச வித்தியாசாலை, 4வது பதிப்பு, துந்துபி ஆண்டு, 1922. (சென்னை: வித்தியாநுபாலன அச்சகம், நெ. 300 தங்கசாலைத் தெரு).
18 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை.

தருமபுர ஆதீனத்தைச் சேர்ந்த காசிமடம் குமரகுருபர சுவாமிகள் அருளிச்செய்த சிதம்பர மும்மணிக்கோவை 30 செய்யுள்களைக் கொண்டது. (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5127

சிவநெறிச் சிந்தனைகள். வை.அநவரதவிநாயக மூர்த்தி. கொழும்பு 06: சிவகாமி அம்மாள் பப்ளிகேஷன், இலக்கம் 39, 36ஆவது ஒழுங்கை வெள்ளவத்தை, 1வது பதிப்பு, டிசம்பர் 2000. (கொழும்பு 13: யுனிஆர்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் 48B. புளுமெண்டால் வீதி).
80 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 20.5x13.5 சமீ.

சைவ சித்தாந்தத்தின் போதனைகளையும், சிவனின் பெருமைகளையும் எடுத்துரைக்கும் நூல் இது. இந்நூலாசிரியர் சைவசமயம் சம்பந்தமாக 8 நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார். சர்வதேச சமய சுதந்திரத்துக்கான நிறுவனத்தின் கொழும்பு பிரிவின் துணைத் தலைவராகப் பணியாற்றி வரும் இவர், 31.08.1923இல் இணுவிலில் பிறந்தவர். ஆரம்ப காலங்களில் இணுவை மூர்த்தி எனும் பேரில் எழுதி வந்த இவர் கலாபூஷணம் சிவநெறிச் செம்மல் ஆகிய பட்டங்களைப் பெற்றுள்ளார்.

5128

சிவபூசாவிதி. ச.குமாரசுவாமிக் குருக்கள் (பரிசோதித்தவர்). பருத்தித்துறை: சிவஸ்ரீ வைத்தீஸ்வரக் குருக்கள், 2வது பதிப்பு, துர்முகி ஆண்டு, ஆவணி 1956. (பருத்தித்துறை: கலாநிதி அச்சியந்திரசாலை).
39 பக்கம், விலை: சதம் 50.

சூரிய பூசை, சிவபூசை, சண்டேசுரபூசை ஆகிய விடயங்களை உள்ளடக்கிய நூல். சிவபூசை செய்யும் முறைகளை அகோரசிவாசாரியர் பத்ததியின் சாரமாகப் பலர்க்கும் உபயோகமாகும் வகையில் தமிழில்

உருவாக்கிய மூல ஆசிரியரின் விபரம் அறியமுடியவில்லை. சிதம்பரம் ஸ்ரீ உலகமூர்த்தி தேசிகர் மடத்தில் பழைய கையெழுத்துப் பிரதியாகப் பெறப்பட்ட மூலநூலினைப் பரிசோதித்து, வேறும் பல நூல்களில் காணக்கிடக்கும் விதிகளுடன் ஒப்பிட்டு இந்நூல் தயாரிக்கப்பட்டுள்ளது. இந்நூலைப் பரிசோதித்தவர் அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலை முகாமையாளர் சிவஸ்ரீ வைத்தீஸ்வரக் குருக்களாவார். (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5129

சிவபெருமான் திருநடனம். பண்டித நடராஜபிள்ளை. கொழும்பு 13: பண்டித நடராஜபிள்ளை, 38, கொட்டபோம் தெரு, 1வது பதிப்பு, 1962. (கொழும்பு: மெய்கண்டான் அச்சியந்திரசாலை).
92 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை.

இந்நூலாசிரியர் யாழ்ப்பாணத்து நீர்வேலிச் சங்கர சிவப்பிரகாச பண்டிதரவர்களின் புதல்வராவார். சிவபண்டித நடராஜா என்றும் வழங்கப்படுபவர். சிவபெருமானின் திருநடன சரித்திரம் கூறும் இந்நூலில் வெள்ளியம்பலத் திருக்கூத்துங் கான்மாறியாடிய நடனமும், பாண்டரங்க நடனம், கொடுகொட்டி, சந்தியா நிருத்தம். சண்டதாண்டவம், திருக்குற்றால நடனம். கௌரி தாண்டவம், வீராட்டகாசம், அனவரதானந்தத் தாண்டவம், பிரதமாமகா சங்கார நிருத்தம் ஆகியவை பற்றிய கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. சரியை, கிரியை, யோகம், ஞானமெனவும், அவ்வந் நெறிகளில் நிற்போர் குணங்குறி செயல்களும், அவற்றின் பலாபலன்களும், சிவத்தலங்களின் மகிமையும், ஈகையின் அத்தியாவசியமும், ஈயாதாரிழிவும், ஞானிகளின் உயர்வும், ஞானகுருவை அடையும் முறைமையும் முத்தியிலட்சணமுமாதியவற்றைப் பற்றிச் சுருக்கியும் விரித்தும் கூறப்பட்டிருக்கின்றன. (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5130

சிவராத்திரி விரத மகிமை. க.ந.வேலன். யாழ்ப்பாணம்: கலைவாணி புத்தக நிலையம், 1வது பதிப்பு, பெப்ரவரி 1965. (யாழ்ப்பாணம்: கலைவாணி அச்சகம், 10, மெயின் வீதி).
63 பக்கம், விலை: ரூபா 1.00

கச்சியப்ப சிவாச்சாரியாரின் கட்டளைப்படி அவரது மாணாக்கர் கோனேரியப்ப நாவலர், உபதேச காண்டத்தைத் தமிழில் பாடியருளினார். உபதேச காண்டம் நாற்பத்தொரு சுருக்கங்களையுடையது. இவற்றுள் ஒன்பதாவது சுருக்கம், சிவவிரத மான்மியச் சுருக்கமாகும். இச்சுருக்கத்தில் சிவபெருமானுக்குரிய சோமவார விரதம் முதல் அஷ்டமி விரதம் வரையுள்ள எட்டு விரதங்கள் பற்றிக் கூறப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்றே இங்கு கூறப்படும் சிவராத்திரி விரதமாகும். வித்துவான் வேலன் அதனை எளிய நடையில் நூலுருவில் வழங்கியுள்ளார். (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5131

சிவன். ந.சி.கந்தையாபிள்ளை. சென்னை 1: திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், திருநெல்வெலி 6, 3வது பதிப்பு, மார்ச் 1968, 1வது பதிப்பு, மார்ச் 1947, 2வது பதிப்பு, மார்ச் 1958. (சென்னை 1: அப்பர் அச்சகம், 2/140, புரோட்வே).
108 பக்கம், விலை: ரூபா 2.00

யாழ்ப்பாணத்து நவாலியூர் ந.சி.கந்தையாபிள்ளை எழுதிய இந்நூல், மனு ஞாயிற்றின் புதல்வன், வரலாற்று ஆரம்ப காலத்தில் உலக மக்களுக்கிடையே காணப்பட்ட தொடர்பு, ஞாயிற்றின் வழிபாடே சிவன் வழிபாடு, சிவன் என்னும் சொற்பிறப்பு, முற்கால இடப்பெயர்கள், சிவன் என்னும் பாலைநிலப் பசுந்தரை, பாபிலோனில் சிவன் என்னும் பட்டினம், வட அமெரிக்காவில் சிவன் ஆலயம், கிரேத்தாவில் சிவன் நகர், சின்ன ஆசியாவில் சிவாஸ் என்னும் நகர், வட இந்தியாவில் சிவபுரம், இலங்கையிற் சிவன் மலை, சிவன்-மாதப் பெயர், விசன் பின்லாந்து மக்களின் காத்தற் கடவுள், விவிலிய மறையில் சிவன் கடவுள், அக்கேடிய மக்களின் விண்மீன் சிவன், ஜப்பானிய மக்களின் சிவோ, சன் (Sun) சிவன் என்பதன் திரிபு, சிவன் மக்கட்பெயர், சிவன் வணக்கம் சிவலிங்க வணக்கமாக மாறுதல், பௌத்த மதத்தினரும் இலிங்க வழிபாட்டினரே, சிவலிங்க வணக்கத்தின் வெவ்வேறு வகை வளர்ச்சிகள், இன்னொரு வகையில் தாய் தந்தைக் கடவுளரின் தொடக்கம், ஞாயிறும் திங்களும் கணவனும் மனைவியும், பூமியையும் வானத்தையும் தாய்-தந்தைக் கடவுளராய்க் கொண்ட மக்கள் கற்றூண்களையும் மரத்தூண்களையும் ஆண் பெண் வல்லமைகளாகக் கொண்டனர், இலிங்கதாரணம், இலிங்கம் என்னும் சொல், சிவன் மக்கள் வடிவினராதல், அரசன் அரசி வடிவான அப்பர் அம்மை வழிபாடு இந்திய நாட்டிலேயே முதலில் தோன்றிற்று, இடப ஊர்தி, பாம்பு, சூலம், முற்காலக் கடவுளர் வடிவங்களுக்கு இரண்டு கைகளே இருந்தன, முற்காலக் கடவுளர்க்கு கொம்புகள், சிவப்பு உடை, சங்கு, சிரியா நாட்டில் சிவன் கடவுள், கிதைதி நாட்டில் சிவன் கடவுள்,

ஆரியர் சிவ வணக்கத்தைத் தமிழரிடமிருந்து பெற்றார்கள், சம்புத்தீவு, நாவல்தீவு அன்று – சிவன்தீவு, சிவனும் தமிழும், சாவகம், மலாயா, கம்போதியா, பசிபிக் தீவுகளில் சிவன், ஹெராஸ் பாதிரியாரின் பார்வையில் சிவன் வழிபாடு ஆகிய பல்வேறு குறிப்புகளினூடாக சிவ வழிபாடு பற்றிய உலகளாவிய நிலைப்பாட்டினை ஆசிரியர் இந்நூலில் வழங்கியுள்ளார். (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5132

சிவஷேத்திராலய மகோத்ஸவ உண்மை விளக்கம். நா.கதிரைவேற்பிள்ளை. சிதம்பரம்: ச.பொன்னுஸ்வாமி, தருமபரிபாலகர், சைவப்பிரகாச வித்தியாசாலை, 2வது பதிப்பு, துன்முகி வருடம் பங்குனி 1957. (சென்னை 1: ஆறுமுக நாவலர் வித்தியாநுபாலன அச்சகம், நெ.300 தங்கசாலைத் தெரு). 155 பக்கம், விலை: அணா 12.

யாழ்ப்பாணத்து மேலைப் புலோலி சதாவதானம் நா.கதிரைவேற்பிள்ளை அவர்கள் எழுதியுள்ள இந்நூல் சிவவிளக்கம், ஷேத்திர ஆலய விளக்கம், மகோற்சவ விளக்கம் ஆகிய மூன்று விடயங்களை உள்ளடக்குகின்றது. கோவில்களில் நடக்கும் பூசைகளும் திருவிழாவும் ஆகமத்தின் விதிப்படி அமைந்தவை. அவ்வாகமக் கருத்துக்களை எல்லோரும் உணரும்பொருட்டு 50 ஆண்டுகளுக்கு முன் இந்நூல் வெளிவந்திருந்தது. பிரதிகள் தீர்ந்த நிலையில் 50 ஆண்டுகளின் பின்னர் தற்போது மீள்பதிப்புக்கண்டுள்ளது. (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5133

சிவாலய தரிசன விதி. ஆறுமுக நாவலர். சிதம்பரம்: தி.க.இராசேசுவரன், நற்பொறுப்பாளர், சிதம்பர சைவப்பிரகாச வித்தியாசாலை, 13ம் பதிப்பு, விசுவாசுவ ஆண்டு 1965. (சென்னை 1: ஆறுமுகநாவலர் வித்தியாநுபாலன அச்சகம், 300 தங்கசாலைத் தெரு).
39 பக்கம், விலை: சதம் 25.

ஆறுமுக நாவலரின் பிரசுரங்களுள் முக்கியமான நூல்களிலொன்று இதுவாகும். இவ்வுரைநடை நூலினுள்ளே சைவசமய நெறி-பொது, உருத்திராக்கவிசிட்டம், உபதேச காண்டம்-உருத்திராக்ஷ மான்மியம், அருணகிரி புராணம்-வலம்புரிச் சருக்கம், திருமந்திரம்-திருக்கோயிலழிவு, சிவதருமோத்தரம்-சுவர்க்க நரகசேடவியல், கடம்பவன புராணம்-இலீலாசங்கிரகம், சிவதருமோத்தரம்-பாவவியல், வருத்தமறவுய்யும் வழி, சிவதருமோத்தரம்-சிவஞானதானவியல், திருநாவுக்கரசு நாயனார் தேவாரம்-திருவாரூர், திருக்கடவூர் வீரட்டம், தனித்திருநேரிசை, சைவசமய நெறி-மாணாக்கர், உபதேச காண்டம்-சிவபுண்ணிய மான்மியம், சிவபுராண மான்மியம், கடம்பவன புராணம்-வேதாகமங்கள் நீயவனமானது, சிதம்பர புராணம்-சோமநாதச் சருக்கம், சிதம்பர புராணம்-நியமச்சருக்கம், சேது புராணம்-சேதுபலச் சருக்கம் ஆகிய அம்சங்கள் இடம்பெற்றுள்ளன. (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5134

சுன்னாகம் சந்திரசேகரப் பிள்ளையார் இரட்டைமணி மாலை: மூலம்.
கு.முத்துக்குமாரசுவாமிப்பிள்ளை. சுன்னாகம்: புலவரக வெளியீடு, மயிலணி, 1வது பதிப்பு, 1959. (சுன்னாகம்: திருமகள் அழுத்தகம்).
7 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை.

11 நேரிசை வெண்பாக்களையும் 10 கட்டளைக் கலித்துறையினையும் கொண்ட செய்யுள் நூல். புலவரவர்கள், சுன்னாகம் அ.குமாரசுவாமிப் புலவரின் மகனாவார். (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5135

செல்வச் சந்நிதியான் கும்மி. காவலூர் ஞா.ம.செல்வராஜன். கரம்பொன்: கரம்பனூர் நா.குலசேகரம், 1வது பதிப்பு, 1960. (அச்சக விபரம் தரப்படவில்லை).
6 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை.

இச்சிறு நூலில் வடபுலத்தின் பிரபல முருகன் திருத்தலமான செல்வச்சந்நிதி முருகன் கோவில்மீது பாடப்பெற்ற கும்மி, காவடிச் சிந்து, கண்ணிகள் என்பன இடம்பெற்றுள்ளன. (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5136

சைவ காலப் பகுப்பு. ச.குமாரசுவாமிக் குருக்கள். யாழ்ப்பாணம்: உசன் கந்தசுவாமி கோவில் கும்பாபிஷேக வெளியீடு, 1வது பதிப்பு, பங்குனி 1968. (சுன்னாகம்: கலாதேவி அச்சகம்). 32 பக்கம், விலை: சதம் 75.

ஆகமங்களிலிருந்து மொழிபெயர்க்கப்பட்ட சைவகாலப் பகுப்பு என்ற இந்நூலில் கால அளவைகளைப் பிரமகால அளவை, தேவர் அளவை, பிதிரர் அளவை, மக்கள் அளவை எனப் பிரித்துக்காட்டி அவரவர்கள் இறைவனை வழிபாட்டிற்குக் கொள்ளும் காலை நண்பகல் மாலை முதலிய பொழுதுகளைச் செம்மையாக விளக்கி, நாம் செய்துகொள்ளும் சங்கற்பத்தின் பொருளை விபரித்து நித்திய பூசைகளும் விழாக்களும் நிகழ்த்தும் காலங்களை விபரமாக விளக்கி காலந்தவறின் அதற்கும் கழுவாயும் கூறுகின்றது. இந்நூலை தமிழாக்கம் செய்தவர் அச்சுவேலி சிவாகமஞானபானு சிவஸ்ரீ ச.குமாரசுவாமிக் குருக்களாவார். இந்நூலுக்கான அணிந்துரையை தருமையாதீனப் புலவர் சித்தாந்தக் கலைசெல்வர் க.வச்சிரவேல் முதலியாரும், சிறப்புரையை கொக்குவில் புலவர் த.குமாரசுவாமிப்பிள்ளையும் வழங்கியுள்ளனர். (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5137

சைவ சமய புண்ணியகாலம். த.சுப்பிரமணியம். யாழ்ப்பாணம்: பண்டிதர் த.சுப்பிரமணியம், பாக்கியவாசம், சித்தன்கேணி, 1வது பதிப்பு, 1957. (யாழ்ப்பாணம்: ஸ்ரீ காந்தா அச்சகம்). 138 பக்கம், விலை: ரூபா 1.50.

சைவ சமய புண்ணியகாலம் என நூற்பெயர் அமைந்தாலும், சைவ-வைஷ்ணவத் தொடர்புடையவையாயும் பெருவழக்காய் மக்களால் கொண்டாடப்படுபவையுமான விஷேட தினங்கள் பற்றி இந்நூல் விளக்குகின்றது. தைப்பொங்கல், சூரியப் பொங்கல், பட்டிப் பொங்கல், போகிப் பண்டிகை, தைப்பூசம், புதிதுண்ணல், மகா சிவராத்திரி, மாசி மகம், மாமாங்கம், பங்குனித் திங்கள், பங்குனி உத்திரம், சித்திரை வருடப்பிறப்பு, போர்த்தேங்காய் அடித்தல், சித்திரா பௌர்ணமி, சித்திரபுத்திர நாயனார் கதை, சித்திரா புத்திரன் கணக்குப் பார்த்தல், வைகாசி விசாகம், அக்கினி நாள், ஆனி உத்திரம், ஆடிப்பிறப்பு, ஆடிப் பூரம், ஆடி அமாவாசை, ஆடிவேல், விநாயக சதுர்த்தி, ஆவணி மூலம், ஆவணி ஞாயிறு, நான்காம் பிறை, ஏகாதசி விரதம், மாளயம், மாசியம், புரட்டாதிச் சனி, நவராத்திரி விரதம், கேதாரீஸ்வரர் விரதம், உமாமகேச்சுர விரதம், திருவாதிரை விரதம், சூல விரதம், இடப விரதம், உமா சுக்கிரவார விரதம், விநாயகர் சுக்கிரவார விரதம், ஐப்பசி வெள்ளி, விநாயகர் சஷ்டி விரதம், துவாதசியின் மகிமை, பிரதோஷ விரதம், கந்த சஷ்டி, சூரன் போர்த் திருவிழா, வைரவர் விரதம், வீரபத்திரர் விரதம், தீபாவளி, சோமவாரம், சோமவார விரத மகிமை, திருக்கார்த்திகைத் தீப மகிமை, திருவெம்பாவை, மார்கழிப் பிள்ளையார், மார்கழி ஞாயிறு, மார்கழி மாதம், ஆருத்திரா தரிசனம், சர்வ சங்காரகாலம் ஆகிய தினங்களின் மகிமை பற்றி இந்நூல் விபரிக்கின்றது. (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5138

சைவ சமய வரலாறு. ந.சி.கந்தையாபிள்ளை. சென்னை 1: ஆசிரியர் நூற்பதிப்புக் கழகம், 53-56, பவழக்காரத் தெரு, 1வது பதிப்பு, மே 1958. (சென்னை 1: புரோகிரசிவ் அச்சகம்). 105 பக்கம், விலை: ரூபா 1.50.

தோற்றுவாய், சமயத் தோற்றம், வெள்ளப் பெருக்குமுன் ஞாயிற்று வழிபாடு, சிவன், சிவலிங்கம், திங்கள் வணக்கமும் தீ வணக்கமும், தாய்க் கடவுள் வழிபாடு, மால் வழிபாடு, முருக வழிபாடு, மும்மூர்த்திகள், கோயிலும் கோயிற் கிரியையும், ஆகமங்கள், யோகமார்க்கம், வேத மார்க்கமும் ஆகம மார்க்கமும், சைவ மடங்கள், வேதாந்த சித்தாந்த சமரசம், சமயத்தின் நோக்கம், சங்கரர், புதுமுறை இந்து மதம், அத்வைதம், சந்தான குரவர், வசவர், வீரசைவம், வைதீக சமயம், வேதங்கள், பிராமணங்கள், உபநிடதங்கள், தரிசனங்கள், ஆத்திகமும் நாத்திகமும், சூத்திர வடிவில் தத்துவஞான நூல்கள், சாங்கியம், யோகம், வைசேடிகம், நியாயம், பூர்வமீமாம்சை, வேதாந்த சூத்திரம், வேதாந்தம், பகவத் கீதை, சமணம், மகாவீரர், புத்தர், மகாபாரதம், இராமாயணம், புராணங்கள், இராமானுசர், மாதவர், ஸ்கந்த வழிபாடு, விட்டுணு மதம், வைணவ சமய வளர்ச்சி, சாந்தம், உருத்திர சிவன், காசுமீர சைவம், இந்து சமயம், சைவத்துக்கும் தமிழுக்குமுள்ள தொடர்பு ஆகிய தலைப்புகளினூடாக சைவ சமயத்தின் பெரு வரலாறு எளிய நடையில் சுவாரஸ்யமாக விபரிக்கப்பட்டுள்ளது. (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5139

சைவ சிரார்த்த விதி: கிரந்த மூலம். சிவ. சங்கரபண்டிதர் (மூலம்), ச.குமாரசுவாமிக் குருக்கள் (தொகுப்பாசிரியர்). யாழ்ப்பாணம்: கு.வைத்தீஸ்வரக் குருக்கள், சிவமணி சேர். கந்தையா வைத்தியநாதன் அவர்களின் சபிண்டீகரண சிரார்த்த தின வெளியீடு, 1வது பதிப்பு, 1965. (யாழ்ப்பாணம்: ஸ்ரீ சாரதா அச்சகம்).
90 பக்கம், விலை: ரூபா 2.00

கிரந்த மூலத்தில் எழுதப்பட்ட சபிண்டீகரணச் சிரார்த்த விதியின் மொழிபெயர்ப்பு இந்நூலாகும். சிரார்த்தம் செய்யும் கிரியாகிரமங்களை அகோர சிவாசாரியர் தமது பத்ததியில் அறிவுறுத்தியிருக்கின்றார்கள். அதனையே சார்பாகக் கொண்டு மாணாக்கர்களுக்கு எளிதில் பயன்படும் பொருட்டு சைவ சிரார்த்த விதி என்னும் இந்நூல் தொகுத்து எழுதப்பெற்று பிரமாண வாக்கியங்களுடன் வெளிவருகின்றது. (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5140

சைவ தூஷண பரிகாரம். ஆறுமுக நாவலர். சிதம்பரம்: ச.பொன்னுஸ்வாமி, தர்மபரிபாலகர், சிதம்பர சைவப்பிரகாச வித்தியாசாலை, 8வது பதிப்பு, துன்முகி ஆண்டு, ஆவணி 1956. (சென்னை 1: ஆறுமுகநாவலர் வித்தியாநுபாலன அச்சகம், நெ.300, தங்கசாலைத் தெரு).
114 பக்கம், விலை: அணா 8.

"நமது சிவசாத்திரங்களைச் சிறிதும் அறியாதவர்களும், கிறிஸ்துவ பாதிரிகளது பொய்ந்நூலாகிய விவிலிய நூலை முற்றும் வாசியாதவர்களும், தருக்க நூலிலே அற்பமேனும் பயிலாதவர்களுமாகிய சில சனங்கள் (பாதிரிமார்களின்) அத் தூஷணங்கள் ஒக்குமென்று மதிமயங்கி, கிறிஸ்து சமயப் படுகுழியில் வீழ்ந்து கெடுகின்றார்கள். யாம் அதனைக் கண்டிரங்கி, சைவத்தின்மேல் அப்பாதகர்களால் ஏற்றப்படும் தூஷணங்களாலேயே ஒருவரும் கெடாது சைவத்தின் வழியே நின்று உய்யும்பொருட்டு, அத்தூஷணங்கள் எல்லாவற்றையும் நியாயமாகவே களைந்து மெய்யறிவுச்சுடர் கொளுத்துகின்ற இந்தச் சைவதூஷண பரிகாரம் என்னும் பிரபந்தத்தை, பரமகாருணிகராகிய பரமசிவனது திவ்வியப் பிரசாதத்தினாலேயே செய்தோம்" – ஆறுமுகநாவலர் (உபோற்காதம்). (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5141

சைவ வாழ்வியற் சிந்தனைகள். குமாரசாமி சோமசுந்தரம். கொழும்பு: ரஜி வெளியீடு, 29, முதலாவது ஒழுங்கை, தெகிவளை, 1வது பதிப்பு, 1999. (கொழும்பு 12: J and S Services, 115 Messenger Street).
(8), 96 பக்கம், விலை: ரூபா 75., அளவு: 20.5x14 சமீ.

இந்நூல் சிவ சம்பந்தம் பற்றிய ஒரு அருட்சியை வாசகர் உள்ளங்களில் ஏற்படுத்தும் நோக்கில் உருவாக்கப்பட்டுள்ளது. மனம் வாக்கிற்கு மேற்பட்டதான பரம்பொருளாம் சிவத்தை அன்பு, நீதி, உண்மை, நன்மை, செம்மை, அழகு, தூய்மை ஆக ஏற்று எம்முடன் சம்பந்தப்படுத்தி வாழ்வதே சைவ வாழ்வு ஆகும். சைவ வாழ்வியல் சிந்தனைத்துளிகள் 40 இந்நூலில் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளன. இவை முன்னர் இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபனத்தின் ஒலியலையில் நற்சிந்தனைகளாக வெளிவந்தவை.

5142

சைவக் களஞ்சியம் 4ம் பாகம்: இந்து சமய மாத மகத்துவ மான்மியம் அல்லது இந்து சமய விசேட புண்ணியங்களின் கால வரலாறு. கா.அருணாசல ஆசிரியர். மட்டக்களப்பு: கங்கேஸ்வரி கந்தையா (செயலாளர்), இந்து மகளிர் மன்றம், 15, மேல்மாடித் தெரு, 1வது பதிப்பு, ஏப்ரல் 1961. (மட்டக்களப்பு: கத்தோலிக்க அனாத அச்சகம்).
68 பக்கம், விலை: ரூபா 1.00.

சைவப்புலவர் தேசிகமணி கா.அருணாசல ஆசிரியர், மாதந்தோறும் வரும் புண்ணிய தினங்களை இந்நூலில் விரிவாக விளக்கியிருக்கின்றார். சித்திரையில் வரும் வருடப்பிறப்பு, சித்திரக்கதை, இராம நவமி, வைகாசியில் வரும் வைகாசிவிசாகம், கண்ணகி அம்மன் விழா, கஞ்சன் கதை, ஆனி மாதத்து ஆனி உத்திரம், ஆடி மாதத்தின் ஆடி அமாவாசை, ஆடிப்பூரம், ஆடிச் செவ்வாய், ஆவணியில் வரும் ஆவணிச் சதுர்த்தி, ஆவணி ஓணம், ஆவணி மூலம், கோகிலாட்டமி, ஆவணி ஞாயிறு, புரட்டாதி மாதத்தின் விசேட தினங்களான நவராத்திரி, விஜயதசமி, மகாளயம், புரட்டாதிச் சனிக்கிழமை, துரோபதி அம்மன் விழா, ஐப்பசி மாதத்து தீபாவளி, கந்தர் சஷ்டி, சுக்கிரவார விரதம், கௌரி விரதம், கார்த்திகை மாத விஷேட தினங்களான கார்த்திகை விளக்கீடு, திருக்கார்த்திகை விரதம், விசாயகர் சஷ்டி விரதம்,

மார்கழி மாதத்து திருவெம்பாவை, திருவாதிரை, தை மாதத்து பொங்கல், போகி பண்டிகை, பட்டிப் பொங்கல், கன்னிப் பொங்கல், தைப்பூசம், அர்த்தோதயம், மகோதயம், மாசி மாதத்து சிவராத்திரி, ஏகாதசி, வீம ஏகாதசி, மாசி மகம், மகாமகம் ஆகியவற்றுடன் பங்குனி மாதத்தின் சைவச் சிறப்பு தினங்களான பங்குனி உத்திரம், திருப்பொன்னூசல் ஆகியன பற்றி இந்நூலில் விரிவான தகவல்கள் தரப்பட்டுள்ளன. (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5143

சைவக் களஞ்சியம் 6ம் பாகம்: சைவ சமய சிந்தாமணி. கா.அருணாசல ஆசிரியர். மட்டக்களப்பு: சைவப்புலவர் தேசிகமணி கா.அருணாசல ஆசிரியர், 1வது பதிப்பு, ஏப்ரல் 1960, (கொழும்பு: ஏ.வீ.ஆர்.ஏ. அச்சகம்).
240 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை.

சமயவியல், ஆலய அமைப்பியல், கடவுளியல், திரு அங்கவமைப்பியல், திரு நடனவியல், தல தீர்த்தவியல், கிரியையியல். மகோற்சவவியல், சிவத்திரவியவியல். ஆன்மவியல், பாசவியல். சைவ சமயிகள் இலட்சணவியல், அன்பியல், ஆலய தரிசனவியல், கடவுளை அடையும் வழியியல், குரு சங்கமவியல், விரதவியல், திருமுறைப் பிரார்த்தனையியல் ஆகிய இயல்களில் அமைந்த இந்நூல் கடவுளையும் ஆன்மாவையும் அதனை மறைக்கின்ற பாசத்தையும் பற்றி எவ்வாறு விளங்கக் கூற வேண்டுமோ, அவ்வாறெல்லாம் மிகவும் தெளிவாகக் கூறுகின்றது. தொன்னூற்றாறு தத்துவங்களின் பெயர்களையும் சுத்த மாயை, அசுத்த மாயையின் பாற்பட்டன இவையிவையெனவும், ஓர் ஆன்மா அசுத்த மாயையின் நின்றும் மேற்போந்து சிவநெறியான சுத்த மாயையுங் கடந்து, இறைவன் திருவருள் பதியப்பெற்று, மலத் தொடர்பு நீங்கி, ஞானம் பெற்று, என்றும் அழியாப் பெருவாழ்வை எய்தி இன்புறும் எனவும், இந்நூல் விளக்கிச் சொல்கின்றது. இந்நூல் மட்டக்களப்பு தமிழ்க் கலை மன்றம் 1954ம் ஆண்டு ஜுலை மாதம் 9-11 வரை நடத்திய மன்றத்தின் 13ம் ஆண்டுக்குரிய நான்காம் தமிழ் விழாவில் முன்னர் அரங்கேற்றப்பட்டது. (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5144

சைவக் கிரியைகள். சி.சுப்பிரமணிய தேசிகர். யாழ்ப்பாணம்: சி.சிவசுப்பிரமணிய தேசிகர், காரைநகர், 1வது பதிப்பு, செப்டெம்பர் 1964. (யாழ்ப்பாணம்: ஸ்ரீ சண்முகநாத அச்சகம்).
97 பக்கம், விலை: ரூபா 1.50.

பரார்த்தம், கிரியாபத்ததி, பூர்வக் கிரியை, அபரக்கிரியை ஆகிய தலைப்புகளிள் அமைந்த நூல். இவ்வரிய நூல் சைவ நன்மக்கள் ஆன்ம ஈடேற்றத்தின் பொருட்டு மேற்கொள்ளவேண்டிய பூர்வ, அபரக் கிரியைகளின் நுண்பொருள்களையும் விளக்கங்களையும் கூறுவதோடமையாது அக்கிரியைகளைச் செய்யும் முறையினையும் சிறப்பாகவும், முறையாகவும் எடுத்துக் கூறுகின்றது. இந்நூலுக்கான மதிப்புரையை சுன்னாகம் ப.சுவாமிநாத சர்மாவும், நல்லூர் தேவஸ்தான வித்துவான் சீ.எஸ்.எஸ். மணிபகவதரும், அணிந்துரையை பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளையும் வழங்கியுள்ளனர். இந்நூலின் அச்சிடலுக்கான பொருளுதவியை மலாயா- கோலாலம்பூரில் பணியாற்றும் காரைநகர் மு.பொன்னம்பலபிள்ளை வழங்கியுள்ளார். (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5145

சைவத் தோத்திர மஞ்சரி. சு.திருச்சிற்றம்பலம். சுன்னாகம்: வட இலங்கைத் தமிழ் நூற் பதிப்பகம், 1வது பதிப்பு, 1949. (சுன்னாகம்: திருமகள் அழுத்தகம்).
139 பக்கம், விலை: ரூபா 1.25.

பண், கட்டளைகள், பண்களும் அவற்றிற்குரிய இராகங்களும், நடைகள், பன்னிரு திருமுறைகள், பண்களுக்குரிய தாள விபரம், சுருதிகளின் விபரம், பண் தேவாரங்கள் (1-7 திருமுறைகள்), (8ம் திருமுறை) திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு (9ம் திருமுறை), திருமந்திரம் (10ம் திருமுறை), 11ம் திருமுறை, பெரியபுராணம் (12ம் திருமுறை), புராணம், திருப்புகழ், பட்டினத்தார் பாடல், தாயுமானவர் பாடல், சில தேவாரங்களும் அவற்றின் பொழிப்புரைகளும், வகைக்கொன்றாகச் சுரமமைக்கப்பெற்ற தேவாரப் பண்கள் என்பன இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இந்நூலின் தொகுப்பாசிரியர், சுத்தபோசனபாக சாத்திரம், வைத்தியக் கைமுறைகள் ஆகிய நூல்களின் பதிப்பாசிரியருமாவார். (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5146

தசாவதார புருஷோத்தமா: ஓர் அறிமுகம். B.S.பர்சினி. கொழும்பு 6: B.S.பர்சினி, 55, ஹம்டன் லேன், வெள்ளவத்தை, 1வது பதிப்பு, டிசம்பர் 2007. (தெகிவளை: காயத்திரி பப்ளிக்கேஷன்ஸ், தபால் பெட்டி எண் 64).
100 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 21.5x14.5 சமீ.

கிருஷ்ண லீலைகளும் வதங்களும், துளசி, தசாவதாரம், பகவத் கீதையிலிருந்து, கிருஷ்ணனைத் தியானிக்கும் மந்திரம், கிருஷ்ணருக்கு ஜபம் செய்யும் முறை போன்ற இன்னோரன்ன தலைப்புக்களில் கிருஷ்ணரைப் பற்றி ஒரு கிருஷ்ண பக்தையின் தேடல்கள் சிறு கட்டுரைகளாக இந்நூலில் பதிவுக்குள்ளாகியுள்ளன. வாயினால் பாடி மனதினால் சிந்தித்து இறைவனின் அருளைப் பெறவேண்டுமென எவர் எண்ணகின்றார்களோ அவர்களுக்கு கிருஷ்ணரின் அருள் கிட்டும் என்பதைப் பல கோணங்களில் சொல்லியிருக்கிறார். தன் ஆரம்பக்கல்வியை வவுனியாவிலும், பின்னர் கொழும்பிலும் கற்றுத்தேர்ந்த B.S.பர்சினி, இளம் வயதிலேயே எழுத்துத் துறையில் ஈடுபாடு கொண்டவர். இளம் வயதிலிருந்தே ஆன்மீக ஈடுபாடுகொண்ட கிருஷ்ண பக்தை இவர்.

5147

தமிழர் வாழ்வில் சைவநெறி. செல்லத்துரை ஸ்ரீகந்தராஜா. (புனைபெயர்: கங்கை மகன்). டென்மார்க் சைவத் தமிழ்ப் பண்பாட்டுப் பேரவை, 1வது பதிப்பு, தை 2009. (லண்டன்: வாசன் அச்சகம், மிச்செம்).
222 பக்கம், விலை: 15 யூரோ, அளவு: 21x14.5 சமீ.

இந்நூல் தமிழரின் வாழ்க்கையோடு இணைந்த முக்கிய நன்நெறிகளையும், அவற்றைக் கற்றுணர்வதற்கான வாய்ப்புக்களையும் அவற்றை அறிந்துகொள்வதற்கான அறநூல் கருத்துக்களையும் உள்ளடக்கியுள்ளது. தமிழ் இலக்கிய வரலாற்றில் வகுக்கப்பட்டுள்ள காலவரையறைகளைத் தவிர்த்து சைவநெறி வளர்ச்சியில் காலங்கள் வேதகாலம், புராண காலம், இதிகாசகாலம், நீதிநூற்காலம் என்ற கணிப்பில் விடயங்கள் தொகுக்கப்பட்டுள்ளன. நூலின் ஆரம்ப ஆய்வுக் கட்டுரைப் பகுதிகள் ஆரம்பகால மனித வர்க்கத்திலிருந்து தற்காலச் சமுதாயம் வரை அதன் படிமுறை வளர்ச்சியைக் காட்டும் வகையில் ஆய்வுசெய்யப்பட்டுள்ளன. நூலாசிரியர் நயினாதீவைப் பிறப்பிடமாகக் கொண்டவர். பொருளாதாரத்துறையில் பல்கலைக்கழகப் பட்டம் பெற்றவர். 1992முதல் 1997 வரை சுவிஸ் நாட்டில் சுவிஸ் தமிழர் என்ற பத்திரிகையினை நடத்திவந்தவர். ஊடகங்களில் ஆன்மீகக் கட்டுரைகள் எழுதியும், புலம்பெயர் நாடுகளில் ஆன்மீக உரையாற்றியும் வந்தவர். போதிமரம் என்ற இவரது முன்னைய நூலை அடுத்து இது இரண்டாவது நூலாக வெளிவந்துள்ளது.

5148

திருக்கருவைப் பதிற்றுப்பத்தந்தாதி. அதிவீரராம பாண்டியர் (மூலம்), சதாசிவப்பிள்ளை (பதிப்பாசிரியர்). யாழ்ப்பாணம்: சதாசிவப்பிள்ளை, நல்லூர், 2வது பதிப்பு, பிரமோதூத வருடம் 1930. (சென்னை: ஆ.ம.து.வே., ஆரியர் முத்தமிழ் வாணிபீடவச்சுக் கூடம்).
16 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை.

16ம் நூற்றாண்டில் வாழ்ந்த அதிவீரராம பாண்டியர் கவியரசராகவும் புவியரசராகவும் விளங்கியவர். இவர் நைடதம், நறுந்தொகை, வெற்றிவேற்கை, திருக்கருவை வெண்பா, திருக்கருவை கலித்துறை, கூர்ம புராணம், இலிங்க புராணம், மகா புராணம், காசி காண்டம், வாயு சங்கீதை உள்ளிட்ட 10 நூல்களை யாத்தவர். திருக்கருவைப் பதிற்றுப்பத்தந்தாதியில் 100 செய்யுள்கள் இடம்பெற்றுள்ளன. இந்நூலின் முதற்பதிப்பு வருடம் பற்றிய தகவல் இல்லை. (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5149

திருக்கேதீச்சர நாதர் கிள்ளைவிடு தூது. சி.இ.சதாசிவம்பிள்ளை. மன்னார்: ஈழத்துச் சிவனடியார் திருக்கூட்டத்தார், திருவாசகம், திருக்கேதீச்சரம், 1வது பதிப்பு, 1963. (யாழ்ப்பாணம்: கலைவாணி அச்சகம், 10, பிரதான வீதி).
10 பக்கம், விலை: சதம் 50.

கிளியொன்றைக் கேதீச்சரநாதரிடம் தூதனுப்பி, போகும் வழியில் முறிகண்டிப் பிள்ளையாரைத் தரிசிக்கவைத்தும், கேதீச்சரத்தில் பாலாவித் தீர்த்தத்தில் நீராடச்செய்தும் மகிழ்கிறார். இறைவன் சந்நிதானத்தில் விழுந்து வணங்கியபின் விநாயகர், மகாலிங்கம், சுப்பிரமணியர், அம்பலவாணர், ஆகியோரைத் தரிசிக்கச் செய்து, கௌரியம்மை சமேத கேதீச்சரநாதர் திருமுன்பு பாடிப்பணிவித்து, கேதீச்சரத்தின் வெளிப்பிரகாரத்தில் காணவேண்டிய காட்சிகளையும் பணியவேண்டிய பக்தர்களையும்

காட்டியும், இறைவன் அருள்பெற்றுய்ய வழிகாட்டுகிறார் நூலாசிரியர். திருக்கேதீச்சர பக்தரான ஆசிரியர் புங்குடுதீவைப் பிறப்பிடமாகக் கொண்டவர். இந்நூலுக்கு முகவுரையை திருக்கேதீச்சரத் திருப்பணித் தலைவர் சேர. கந்தையா வைத்தியநாதனும், சிறப்புப் பாயிரத்தை பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளையும் வழங்கியுள்ளனர். (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14)

5150

திருக்கேதீச்சரத் திருப்பதிகம் மூலமும் உரையும். சிவநாயகி சிவகுரு-தையல்நாயகி. திருக்கேதீச்சரம்: திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணி வெளியீடு, 1வது பதிப்பு, 1971. (கொழும்பு: குமரன் அச்சகம், 201 டாம் வீதி).
14 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை.

உள்ளே திருஞானசம்பந்த மூர்த்தி சுவாமிகள் அருளிச்செய்த திருக்கேதீச்சரத் தேவாரத் திருப்பதிகங்கள் பதினொன்றும், சம்பந்தமூர்த்தி சுவாமிகள் அருளிச்செய்த திருக்கேதீச்சரத் தேவாரத் திருப்பதிகம் பத்தும் இடம்பெற்றுள்ளன. (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5151

திருஞானசம்பந்த மூர்த்தி நாயனாரும் சுந்தரமூர்த்தி நாயனாரும் அருளிச்செய்த திருக்கேதீச்சரத் திருப்பதிகங்கள்: உரையுடன். க.வச்சிரவேலு முதலியார் (உரையாசிரியர்), ந.சுப்பையபிள்ளை (உரைக்குறிப்பு). வட்டுக்கோட்டை: யாழ்ப்பாணக் கூட்டுறவுத் தமிழ்நூற் பதிப்பு விற்பனைக் கழகம், செட்டியார் மடம், 1வது பதிப்பு, 1968. (யாழ்ப்பாணம்: கூட்டுறவு அச்சகம், 57, பிரதான வீதி).
24 பக்கம், விலை: சதம் 60.

தருமபுர ஆதீனத் தமிழ்ப் புலவரும் சைவ சித்தாந்தச் செம்மலுமாகிய சைவத் திருவாளர் காஞ்சிபுரம் க.வச்சிரவேலு முதலியார் உரைசெய்த திருக்கேதீச்சரப் பதிகங்களுக்கு வண்ணை நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலையின் முன்னாள் தலைமையாசிரியரும் வித்துவானுமாகிய பண்டிதமணி ந.சுப்பையபிள்ளை உரைக்குறிப்புகளை வழங்கியுள்ளார். (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5152

திருப்பள்ளியெழுச்சியுரை. சிவசங்கர சுப்பிரமணிய தேசிகர். யாழ்ப்பாணம்: காரைநகர்க் கலைமகள் மன்ற வெளியீடு, காரைநகர், 1வது பதிப்பு, 1960. (யாழ்ப்பாணம்: நாமகள் அச்சகம்).
18 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை.

திருப்பள்ளியெழுச்சியென்பது திருவாதவூரடிகள் திருவாய் மலர்ந்தருளிய திருவாசகத்திலுள்ள ஒரு திருப்பதிகமாகும். "பள்ளியெழுந்தருளாயே" என்பதை ஈற்றில் கொண்டு முடிதலால் திருப்பள்ளியெழுச்சி என்னும் பெயருடையதாயிற்று. இது திருப்பெருந்துறையில் அருளிச் செய்யப்பட்டது. இந்நூலுக்கான அணிந்துரையை பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை வழங்கியுள்ளார். (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5153

திருமுருகாற்றுப்படை ஆராய்ச்சியுரை. சு.அருளம்பலம். காரைநகர்: சு.அருளம்பலம், திருமகள் விலாசம், 1வது பதிப்பு, 1937. (யாழ்ப்பாணம்: ஸ்ரீ சண்முகநாத அச்சியந்திரசாலை).
136 பக்கம், விலை: ரூபா 1.00.

சங்கநூல்களுள் முதன்மையாகிய பத்துப்பாட்டுகளுள் தலைமை பெற்றது திருமுருகாற்றுப்படையாகும். கடைச்சங்கப் புலவர்களுள் ஒருவரான நக்கீரரால் இது அருளப்பட்டது. முருகனின் திருவருளைப் பெற வழிப்படுத்துவதாய் அமைந்த பாடல்களைக் கொண்டது. முருகப்பெருமானின் திருப்படை வீடுகளான திருப்பரங்குன்றம், திருச்சீரலைவாய், திருவாவினன்குடி, திருவேரகம், குன்றுதோறாடல், பழமுதிர்ச் சோலை மலை ஆகியவற்றில் முருகன் எழுந்தருளியிருக்கும் வகையை மிக அழகாக எடுத்துக்கூறுவது. காரைநகர் மதுரைத் தமிழ்ச்சங்கப் பண்டிதரான நூலாசிரியர் எழுதியுள்ள இவ்வாராய்ச்சிக் கட்டுரையில் நக்கீரனார் வரலாறு, திருமுருகாற்றுப்படை எழுந்த வரலாறு, திருமுருகாற்றுப்படையின் இயல்பு, இப்பாட்டின் பொருட்சுருக்க வரலாறு, திருமுருகாற்றுப்படை செய்யுள், பொருட்பாகுபாடு, பாட்டின் பொருள்நலம், பாவும் பாட்டின் நடையும், வழிபாட்டு முறை, வழக்க ஒழுக்க வரலாற்றுக் குறிப்புகள், விளக்க உரைக்

குறிப்புகள், அருஞ்சொற் பொருள் ஆகிய தலைப்புகளில் அமைந்துள்ளது. (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5154

திருமுருகாற்றுப்படை: மூலமும் உரையும். நக்கீர தேவர் (மூலம்), ஆறுமுக நாவலர் (உரையாசிரியர்). சிதம்பரம்: G.சுப்பிரமணியம், தருமபரிபாலகர், சைவப்பிரகாச வித்தியாசாலை, 16ஆவது பதிப்பு, சர்வசித்து வருடம், மார்கழி 1947. (சென்னை 1: நாவலர் பிரசுரம், ஆறுமுகநாவலர் வித்தியாநுபாலன அச்சகம், நெ. 300 தங்கசாலைத் தெரு).
59 பக்கம், விலை: அணா 5.

மதுரைக் கடைச்சங்கத்து மகாவித்துவானாகிய நக்கீரதேவர் அருளிச்செய்தது திருமுருகாற்றுப்படை. இது பத்துப்பாட்டிலுள்ள மற்றைய ஆற்றுப்படைகளினின்றும் வேறுபட்ட தனிச் சிறப்பினையுடையது. அவற்றைப் போன்று ஆற்றுப்படுத்தப்பட்டார் பெயரால் வழங்காமல், பாட்டுடைத் தலைவன் பெயரால் விளங்குகின்றது. அத்துடன், ஆற்றுப்படையின் நோக்கத்தையே மாற்றி, அவ்வகை நூல்களுக்குப் புதியதோர் மேம்பாட்டை உண்டாக்கிய பெருமை வாய்ந்தது. மேலும் பாட்டுடைத் தெய்வத்தின் பெயரால் வழங்கி, வீடுபேறு அடைவதற்குச் சமைந்தவர் ஒருவரை அத்தெய்வத்தின்பால் ஆற்றுப்படுத்துதலால் பத்துப்பாட்டிற்குக் கடவுள் வாழ்த்தாகக் கொள்ளத்தக்க மாண்புடன் விளங்குகின்றது. பாட்டுடைத் தலைவன் திருமுருகன். ஆற்றுப்படுத்தப்பட்டவன் அத்தெய்வத்தின் அருள் பெறுதற்குரிய புலவன். இக்காரணம் பற்றியே பத்துப்பாட்டில் திருமுருகாற்றுப்படை முதலில் வைக்கப்பட்டது என்றும் கருதப்படுகின்றது, பெரும்பான்மையும் நச்சினார்க்கினியர் உரைக் கருத்தைத் தழுவி யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுக நாவலர் செய்த உரை இது. பக்கந்தோறும் மூலத்தின் ஒரு பகுதியும் அதற்கடியில் அதன் உரையும் கொடுக்கப்பட்டுள்ளன. (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5155

திருமுறைக் காட்சி: பகுதி 1. நா.முத்தையா. நாவலப்பிட்டி: ஆத்மஜோதி வெளியீடு, 1வது பதிப்பு, 1960. (சென்னை 1: முத்துக்குமரன் பிரஸ், 14 ஏ, குப்பையார் தெரு).
167 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை.

திருமுறைக் காட்சியில் பல்வகைக் காட்சிகளை நாம் காணலாம். இக்காலப்போக்கிற்கிசைந்த உவமைகள், எடுத்துக்காட்டுகள் விளங்குகின்றன. மிக எளிமையான விளக்கமளிக்கும் கதைகள் காணப்படுகின்றன. இறைவன் திருமேனியின் அழகு தெளிவாகப் படம்பிடித்துக் காட்டப்படுகின்றது. இனிமையான, இலகுவான தமிழ்நடை சிறுவர்களையும் கவரும்தன்மையைக் கொண்டுள்ளது. ஆத்மஜோதியில் மாதாந்தம் திருமுறைக்காட்சிகள் என்ற தலைப்பில் இவை தொடராக வெளிவந்துள்ளன. என் வாழ்முதலாகிய பொருள், அடியார்க்கு நடுவிலிருக்கும் அருளைப் புரியாய், பால்நினைந்தூட்டுந் தாய், ஈதே எம்தோழி பரிசு, என்ன குறையும் இலோம், உன் நாமம் என் நாவில் மறந்தறியேன், தாயினும் நல்ல தலைவர், என்னிலும் இனியான், கல்லா நெஞ்சில் நில்லான் ஈசன், நீதியால் வாழமாட்டேன், திருநாமம் எனக்கு ஒருகாற் பேசாயோ, அளியற்றார் பிறந்தவாறு ஏதோ, சிந்தையில் திகழும் சிவன், ஒல்லை விடையானைப் பாடுதுங்காண். தருவாய் சிவசக்தி நீ, ஏத்துவார் துன்புறுவாரல்லர், கரும்பினிற் கட்டி போல்வார், அருமறை சொன்னது என்ன? குற்றமே செய்யினும் குணமெனக் கொள்ளும் கொள்கை, அன்பருக்கு உரியன் ஆக்கினாய், அடியனேன் வந்தவாறு, முயல்விட்டுக் காக்கை பின்போனவாறு, முத்தி ஆகுமே ஆகிய தலைப்புகளில் இக்காட்சிகள் பக்தி இலக்கியச் சுவைததும்ப விரிகின்றன. (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5156

திருவாசக மணிகள். சு.சிவபாதசுந்தரம். கொழும்பு: விவேகானந்த சபை, 4வது பதிப்பு, 1954, 1வது பதிப்பு மாசி 1934. (கொழும்பு: மெய்கண்டான் அச்சியந்திரசாலை, 79, பார்பர் வீதி).
68 பக்கம், விலை: சதம் 70.

திருவாசக மணிகள். சு.சிவபாதசுந்தரம். கொழும்பு: விவேகானந்த சபை, 2வது பதிப்பு, 1937, 1வது பதிப்பு, மாசி 1934. (கொழும்பு: மெய்கண்டான் அச்சியந்திரசாலை, 79, பார்பர் வீதி).
76 பக்கம், விலை: சதம் 20.

மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய திருவாசகப் பதிகங்களிலிருந்து தேர்ந்து வெளியிடப்பட்ட இந்நூலை புலோலியூர் சு.சிவபாதசுந்தரனார் தொகுத்து அதற்கான உரையெழுதியுமுள்ளார். இதில் சிவபுராணம்,

கீர்த்தித் திருவகவல் முதலிய மூன்று பதிகங்கள், திருச்சதகம், நீத்தல் விண்ணப்பம். திருவெம்பாவை முதலிய ஒன்பது பதிகங்கள், திருக்கோத்தும்பி முதலிய நான்கு பதிகங்கள், திருப்பள்ளியெழுச்சி முதலிய மூன்று பதிகங்கள், கோயிற்றிருப் பதிகம் முதலிய நான்கு பதிகங்கள், அடைக்கலப் பத்து முதலிய எட்டுப் பதிகங்கள், வாழாப் பத்து முதலிய பதினேழு பதிகங்கள் ஆகியன இடம்பெற்றுள்ளன. (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5157

திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, பெரியபுராணச் செய்யுட்டிரட்டு: உரையுடன். காஞ்சி இராமசாமி நாயுடு (உரையாசிரியர்). சிதம்பரம்: ச.பொன்னுஸ்வாமி, தருமபரிபாலகர், சிதம்பர சைவப்பிரகாச வித்தியாசாலை, 1வது பதிப்பு, மன்மத வருடம் (கார்த்திகை 1955). (சென்னை 1: ஆறுமுக நாவலர், வித்தியாநுபாலன யந்திரசாலை, நெ.300, தங்கசாலைத் தெரு).
292 பக்கம், விலை: ரூபா 3.00.

திருமாளிகைத் தேவர், சேந்தனார், கருவூர்த் தேவர், பூந்திருத்திநம்பி, காடநம்பி, கண்டராதித்தர், வேணாட்டடிகள், திருவாலியமுதனார், புருடோத்தமநம்பி, சேதிராயர், ஆகியோரருளிய திருவிசைப்பா 288 பாசுரங்களும், சேந்தனார் அருளிய திருப்பல்லாண்டின் 13 பாசுரங்களும், பெரியபுராணச் செய்யுட்டிரட்டின் 36 செய்யுள்களும் உரையுடன் தொகுக்கப்பெற்றுள்ளது. இவற்றுக்கான உரையை வைஷ்ணவரான காஞ்சி இராமசாமி நாயுடு அவர்கள் சைவத்தின்மேற்கொண்ட பற்றுதல் காரணமாக 1938இல் எழுதிப் பிரசுரித்திருந்தார். அந்நூலின் மீள்பதிப்பு இதுவாகும். (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5158

திருவிளையாடற் புராணம்: வசனம். பரஞ்சோதி முனிவர் (மூலம்), ஆறுமுகநாவலர் (உரையாசிரியர்). சிதம்பரம்: T.K.இராசேசுவரன், தருமபரிபாலகர், சைவப்பிரகாச வித்தியாசாலை, 17வது பதிப்பு, பெப்ரவரி 1960. (சென்னை 1: நாவலர் பிரசுரம், ஆறுமுகநாவலர் வித்தியாநுபாலன அச்சகம், நெ. 300 தங்கசாலைத் தெரு).
315 பக்கம், விலை: ரூபா 2.00.

கூடலம்பதி நாயகன் அருள்மிகு சொக்கேசப் பெருமானது திருவிளையாடல்களைக் கூறுவதாக வடமொழியில் 360 ஆண்டுகளுக்கு முன்னர் எழுதப்பட்ட புராணத்தை தமிழில் பரஞ்சோதி முனிவர் தந்திருந்தார். மதுரைக்காண்டம், கூடற் காண்டம், ஆலவாய்க் காண்டம் என மூன்றாகப் பிரித்து, 65 படலங்களாக, 3363 விருத்தப் பாக்களாக அவர் அதை எழுதியிருந்தார். இதனை இலகுநடையில் வசனநூலாக 65 திருவிளையாடல்களையும் தொகுத்து ஆறுமுக நாவலர் 1875-1878 இடைப்பட்ட காலகட்டத்தில் வெளியிட்டிருந்தார். (மூலநூல் தகவல் கிடைக்கவில்லை) அதன் 17ஆவது பதிப்பு இதுவாகும். (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5159

திருவெம்பாவை உரை. சி.சுப்பிரமணிய தேசிகர். காரைநகர்: மணிவாசகர் சபை, 2வது பதிப்பு, மார்கழி 1959, 1வது பதிப்பு, ஆவணி 1959. (யாழ்ப்பாணம்: ஸ்ரீ சண்முகநாத அச்சகம்).
38 பக்கம், விலை: சதம் 75.

யாழ்ப்பாணம் காரைநகர் ஸ்ரீமத் சி.சுப்பிரமணிய தேசிகர், திருவாசகத்தின் ஒரு பகுதியாகிய திருவெம்பாவைக்கு வழங்கிய உரையின் நூல்வடிவமே இதுவாகும். 1957ம் ஆண்டில் மணிவாசகர் சபையினர் வெளியிட்ட மணிவாசகர் விழா மலருக்கு சி.சுப்பிரமணிய தேசிகர் எழுதியுதவிய விளக்கவுரையைத் தழுவிப் பதவுரை, விஷேடவுரைகளுடன் இந்நூல் வெளிவந்துள்ளது. உரைப்பாயிரம் காரைநகர் பிரம்மஸ்ரீ ப.சுவாமிநாத சர்மா, பண்டிதர் சு.அருளம்பலம் ஆகியோரால் வழங்கப்பட்டுள்ளது. (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5160

திவ்யவதார புருஷோத்தமா. B.S.பர்சினி. கொழும்பு 6: B.S.பர்சினி, 55, ஹம்டன் லேன், வெள்ளவத்தை, 1வது பதிப்பு, மார்ச் 2009. (தெகிவளை: காயத்திரி பப்ளிக்கேஷன்ஸ், தபால் பெட்டி எண் 64).
100 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 22x15 சமீ.

கண்ணா வழிகாட்டு, உலகப் படைப்பின் பிரிவுகள், கிருஷ்ண பக்தித் தொண்டின் சிறப்பியல்புகள், கண்ணன் ஏன் நீலமானான், மயிலிறகுத் தத்துவம், மறுபிறவித் தத்துவம் போன்ற இன்னோரன்ன தலைப்புக்களில் கிருஷ்ணரைப் பற்றி ஒரு கிருஷ்ண பக்தையின் தேடல்கள் சிறு கட்டுரைகளாக இந்நூலில் பதிவுக்குள்ளாகியுள்ளன. தன் ஆரம்பக்கல்வியை வவுனியாவிலும், பின்னர் கொழும்பிலும் கற்றுத்தேர்ந்த B.S.பர்சினி, இளம் வயதிலேயே எழுத்துத் துறையில் ஈடுபாடு கொண்டவர். இளம் வயதில் தான் கொண்ட ஆன்மீக ஈடுபாடு காரணமாக, கிருஷ்ண பக்தையாகத் தன்னை கிருஷ்ணபகவானுக்காக அர்ப்பணித்து வாழ்ந்துவருகின்றார்.

5161

தெய்வத் தன்மை விளங்கிய குகை நமசிவாய தேவர் அருளிச்செய்த அருணகிரியந்தாதி: மூலம். குகை நமசிவாயதேவர் (மூலம்), ஆறுமுகநாவலர் (பரிசோதித்தவர்). சிதம்பரம்: விசுவநாதபிள்ளை, தருமபரிபாலகர், சைவப்பிரகாச வித்தியாசாலை, 9வது பதிப்பு, சித்தார்த்தி வருடம் 1919. (சென்னை 1: நாவலர் பிரசுரம், ஆறுமுகநாவலர் வித்தியாநுபாலன அச்சகம், நெ. 300 தங்கசாலைத் தெரு).
15 பக்கம், விலை: சதம் 25.

இவ்வந்தாதி, மல்லிகார்ச்சுனத்திலிருந்து தெற்கே சிவத்தல யாத்திரை செய்துவருகிறேனென்று தமது குருவினனுமதி பெற்றுக்கொண்டு சஞ்சரிக்கும்போது தமது குருவுருவாக எழுந்தருளிய அண்ணாமலையார் சொற்படி திருவண்ணாமலையிலே குகையினிடத்து மகிமையுடனிருந்த கன்னட மூர்த்தியாகிய குகை நமசிவாய தேவர் அவ்வண்ணாமலையார் வரப்பிரசாதத்தினாலே அவரைத் தோத்திரஞ் செய்து இயற்றியது. (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5162

தொண்டமானாறு செல்வச்சந்நிதி தோத்திரப் பாமாலை. சி.ஆ.வேதநாயகம்பிள்ளை. பருத்தித்துறை: இ.இராசவேன்மணியம்மா, 1வது பதிப்பு, 1964. (பருத்தித்துறை: வாணி அச்சகம்).
26 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை.

செல்வச்சந்நிதி தேவஸ்தான சொந்தக்காரர் பரம்பரையினரும், பக்தசிரோண்மணியுமாகிய தொண்டமானாறு சி.ஆ.வேதநாயகம்பிள்ளை இயற்றிய இப்பாமாலையை அவரது ஏக புத்திரி இ.இராசவேன்மணியம்மா பதிப்பித்துள்ளார். இந்நூலில் திருச்சந்நிதிப் பதிகம், திருச்சந்நிதித் தோத்திரமாலை, வேலாயுதக் கண்ணி, தெய்வயானையம்மை வள்ளியம்மை துதி, வயிரவக் கடவுள் துதி, சனீஸ்வரன், நாகதம்பிரான் துதி, மற்றும் கீர்த்தனைகள் என்பன இடம்பெற்றுள்ளன. (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5163

தோத்திர மஞ்சரி. கு.முத்துக்குமாரசுவாமிப் பிள்ளை. சுன்னாகம்: புலவரக வெளியீடு, புலவரகம், மயிலணி, 2வது பதிப்பு 1949, 1வது பதிப்பு 1933. (யாழ்ப்பாணம்: ஸ்ரீ சண்முகநாதன் அச்சியந்திரசாலை).
146 பக்கம், விலை: ரூபா 1.25.

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் தேவாரம், திருநாவுக்கரசு நாயனார் தேவாரம், சுந்தரமூர்த்தி நாயனார் தேவாரம், மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய திருவாசகம், சிவார்ச்சனை மந்திரம், போற்றி 108, திருவெம்பாவை, திருப்பொற்சுண்ணம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருமந்திரம், திவ்யப்பிரபந்தம், பட்டினத்தடிகள் பாடல்கள், திருப்புகழ், தாயுமானவர் பாடல், புராணம், விநாயகர் திரு அகவல், விநாயகர் அர்ச்சனை மந்திரம், நமச்சிவாயமாலை, சரஸ்வதி தோத்திரம், சகலகலாவல்லி மாலை, பிள்ளைத் தமிழ், அருட்பா, தனிப்பாடல்கள், அரும்பத பொருள் ஆகியவை இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5164

நந்திக் கொடியின் முக்கியத்துவமும் பெருமைகளும். சின்னத்துரை தனபாலா. சென்னை 600017: மணிமேகலைப் பிரசுரம், தபால் பெட்டி எண் 1447, இல.7, தணிகாசலம் சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2008. (சென்னை 14: பி.வி.ஆர்.ஆப்செட்).
404 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 500., இந்திய ரூபா 175., அளவு: 22x15 சமீ.

பல்லவர் காலம் முதல் பட்டொளி வீசிப் பறந்த நந்திக்கொடி, சேர, சோழ, பாண்டிய மன்னர்களின் அரச சின்னங்களாகச் சிறப்புப்பெற்றது. அரசாட்சி மங்க நந்திக்கொடியின் புகழ்குன்றவாரம்பித்தது. இன்று

நந்திக்கொடியின் வரலாறும், வகிபாகமும் புத்துயிர் பெற்றுள்ள ஈழமண்ணலிருந்து இந்நூல் வெளிவந்துள்ளது. ஞானத்தின் குறியீடாக- சைவசமயத்தின் சின்னமாக விளங்கிய நந்திக்கொடியின் பெருமையினையும் அதன் பூர்வீகத்தையும் விளக்கும் 56 கட்டுரைகளின் பாரிய தொகுப்பாக இந்நூல் வெளிவந்துள்ளது. ஈழத்திலிருந்தும், தமிழகத்திலிருந்தும், புகலிட மண்ணிலிருந்தும் பல்வேறு தமிழன்பர்கள் எழுதி ஊடகங்களில் பிரசுரமான படைப்புக்கள் இவை. நந்திக்கொடியின் தற்கால எழுச்சியையும் பயன்பாட்டையும் விளக்கும் நிகழ்வுப் புகைப்படங்களும் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. நூலாசிரியர் யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வாழிடமாகவும் கொண்டவர். அகில இலங்கை இந்து மாமன்றத்தின் துணைத்தலைவராகவும், கொழும்பு சைவ முன்னேற்றச்சங்கம், கதிர்காம யாத்திரீகர் தொண்டர் சபை ஆகியவற்றின் தர்மகர்த்தாவாகவும் தொண்டாற்றுபவர்.

5165

நல்லூர்க் கந்தன் பாமாலை. சி.இராசரத்தினம். யாழ்ப்பாணம்: அகிலம் வெளியீடு, 07, இரத்தினம் ஒழுங்கை, காங்கேசன்துறை வீதி, 1வது பதிப்பு, ஆவணி 2001. (யாழ்ப்பாணம்: டெக்னொவா கிராப்பிக்ஸ்). (4), 12 பக்கம், விலை: அன்பளிப்பு, அளவு: 21x15 சமீ.

அகிலம் நிறுவனத்தின் நல்லூர்க்கந்தன் விழாக்கால அன்பளிப்பாக பதிப்பித்து வழங்கப்பெற்ற இந்நூல் இறைமணி என்ற புனைபெயர்கொண்ட வைத்திய கலாநிதி சிதம்பரப்பிள்ளை இராசரத்தினம் அவர்களால் நல்லூர்க் கந்தன்மேற் பாடப்பெற்ற பாமாலையை உள்ளடக்கியது. ஆசிரியராகவும், அதிபராகவும், வைத்தியராகவும் சமூக சேவையாளராகவும் பிரசித்தமானவர் நூலாசிரியர்.

5166

நல்லைச் சண்முக மாலை. நெ.வை.செல்லையா. யாழ்ப்பாணம்: நெ.வை.செல்லையா, வண்ணார்பண்ணை, 1வது பதிப்பு, 1924. (அச்சக விபரம் தரப்படவில்லை).
34 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை.

100 செய்யுள்கள் அடங்கியது நல்லைச் சண்முக மாலை. இந்நூலுக்கான அணிந்துரை யாழ்ப்பாணம் பரமேஸ்வராக் கல்லூரி போதகாசிரியர் தஞ்சை வித்துவான் சு.நடேசபிள்ளை அவர்களால் வழங்கப்பட்டுள்ளது. சாத்துப்பாட்டுக்களை வித்துவான் சி.கணேசையர், சு.நவநீதகிருஷ்ண பாரதி, ச.பொன்னம்பலபிள்ளை, சுன்னாகம் சி.மாணிக்கத் தியாகராச பண்டிதர், வ.சு.இராசையனார், க.வைத்தியலிங்கம்பிள்ளை ஆகியோர் வழங்கியுள்ளனர். (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5167

நவராத்திரி மாலை. தொகுப்பாசிரியர் குழு. சுன்னாகம்: வட-இலங்கைத் தமிழ்நூற் பதிப்பகம், 1வது பதிப்பு, ஒக்டோபர் 1964. (சுன்னாகம்: திருமகள் அழுத்தகம்).
48 பக்கம், விலை: சதம் 70.

நவராத்திரி தத்துவம், நவராத்திரிப் பாக்கள், நவராத்திரிக் கதைகள் ஆகிய மூன்று பிரிவுகளாக இந்நூல் பிரிக்கப்பட்டுள்ளது. சரஸ்வதி வணக்கம், சகலகலாவல்லி மாலை, சரஸ்வதியந்தாதி, சரஸ்வதி சிந்தனை, கலைமகளின் புகழ், இலக்குமி துதி, இலக்குமியைச் சரண்புகுதல், இலக்குமி தோத்திரம், பராசக்தி வணக்கம், அபிராமி அந்தாதி, பராசக்தி ஆகிய தலைப்புகளில் நவராத்திரிப் பாக்கள் தொகுக்கப்பெற்றுள்ளன. நவராத்திரிக் கதைகள் என்ற பிரிவுக்குள் மகிஷாசுர மர்த்தனி, மதுகைடபர் வதை, தேவியின் அருளாற் கிடைத்த வாழ்வு ஆகிய கதைகள் இடம்பெற்றுள்ளன. (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5168

நித்திய பாராயண சைவத் திருமுறைத் தொகுப்பு: மலர் 1. த.குமாரசுவாமிப் பிள்ளை. யாழ்ப்பாணம்: இலங்கை இந்துசமய விவகார ஆலோசனைச் சபை, 1வது பதிப்பு, 1960. (யாழ்ப்பாணம்: ஸ்ரீலங்கா அச்சகம், காங்கேசன்துறை வீதி).
33 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை.

திருமுறைகளைத் தொகுத்தும் பொழிப்புரை எழுதியும் வழங்கியுள்ளவர் சைவப் புலவர் த.குமாரசுவாமிப்பிள்ளை அவர்கள். இந்நூலுக்கான ஆசியுரையை அச்சுவேலி சிவஸ்ரீ ச.குமாரசுவாமிக் குருக்கள் வழங்கியுள்ளார். (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5169

நிலையக் குரல்: அறிஞர் கி.வா.ஜெகநாதன் அவர்களின் சொற்பொழிவுத் தொகுப்பு. க.வாமதேவன் (தொகுப்பாசிரியர்). சுழிபுரம்: வழக்கம்பரை சனசமூக நிலையம், 1வது பதிப்பு,1963. (யாழ்ப்பாணம்: ஸ்ரீ முருகன் அச்சகம், 104, கஸ்தூரியார் வீதி, கன்னாதிட்டிச் சந்தி).
13 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை.

தமிழக அறிஞர் கி.வா.ஜெகநாதன் அவர்கள் யாழ்ப்பாணம் வந்திருந்தபோது ஆற்றிய சொற்பொழிவுகளின் தொகுப்பு. இந்நூலில் கந்தனும் கண்ணனும் பஜனைக்குரியவர்கள் (வண்ணை வெங்கடேசப் பெருமாள் கோவிலில் ஆற்றிய சொற்பொழிவு), இறைவன் சிந்தனையே பேரின்பத்தை அளிக்கும் (இணுவில் கந்தசுவாமி கோவிலில் ஆற்றிய சொற்பொழிவு), கவலை இல்லாது வாழ சும்மா இரு (கோப்பாயில் ஆற்றிய சொற்பொழிவு), கலை நிறைந்த வாழ்வே இன்பம் (யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் ஆற்றிய சொற்பொழிவு) ஆகிய நான்கு உரைகளின் எழுத்துரு அடங்கியுள்ளது. (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5170

படைவீடு உடைய பரமன். செ.தனபாலசிங்கன். யாழ்ப்பாணம்: செ.தனபாலசிங்கன், 1வது பதிப்பு, ஆவணி 1968. (யாழ்ப்பாணம்: ஸ்ரீ சண்முகநாத அச்சகம்).
132 பக்கம், விலை: ரூபா 3.00.

வீரப் பெருங் கடவுளான தேவசேனாபதியின் படைவீடுகளின் சிறப்பினைப் பக்தி மணமும் இலக்கிய மணமும் இணைய இந்த நூலாசிரியர் எழுதியிருக்கிறார். திருமுருகாற்றுப்படையும், திருப்புகழும், கந்தபுராணமும், பரிபாடலும், அக-புற நானூறுகளும், சிலப்பதிகாரமும், வேண்டிய இடங்களில் எடுத்தாளப்பட்டுள்ளன. தலபுராணப் பாடல்களும், முருகன் துதிப்பாடல்களும் தனிப்பாடல்களும் உரிய இடங்களில் கேட்கின்றன. தினகரன் வார மஞ்சரியில் வெளியான கட்டுரைகளின் தொகுப்பு இது. இதில் படைவீடு உடைய பரமன், பரங்குன்றிற் பெருமான், திருச்செந்தூர்க் குமரன், அலைவாய் உகந்த வடிவேலன், பழநி ஆண்டவன், சுவாமிமலைச் சுவாமிநாதன், குன்றுதோறாடும் குமரன், குரவை ஆடும் கூத்தன், சோலைமலை நின்ற பெருமான், அழகர்மலை அழகன் ஆகிய தலைப்புகளில் முருகன் தொடர்பான பக்தியியல் கட்டுரைகள் காணப்படுகின்றன. கி.வா.ஜெகந்நாதன், சா.கணேசன் ஆகியோரின் அணிந்துரையுடன் கூடியது. (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5171

பறாளை விநாயகர் பள்ளு. சின்னத்தம்பிப் புலவர். தமிழ்நாடு: சே.வே.ஜம்புலிங்கம்பிள்ளை, திருமயிலை, 3வது பதிப்பு, 1956, 1வது பதிப்பு, 1889, 2வது பதிப்பு, 1932, (சென்னை 1: ஆறுமுகநாவலர் வித்தியாநுபாலன அச்சகம், நெ. 300 தங்கசாலைத் தெரு).
64 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை.

யாழ்ப்பாணத்து நல்லூர் சின்னத்தம்பிப் புலவர் இயற்றிய இத் தலபுராணம் முதற் பதிப்பாக சுழிபுரம் ச.சிவப்பிரகாச பண்டிதரால் 1889இல் சென்னை நாவலர் அச்சகத்தில் அச்சிடப்பட்டது. பின்னர் 2வது பதிப்பு சபாபதி நாவலரின் மருகரான அ.சிவகுருநாதன் அவர்களால் 1932இல் சென்னையில் அச்சிடப்பெற்றது. (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5172

பாவாரம். வி.கந்தவனம். சென்னை 600002: காந்தளகம், 68 (834), அண்ணாசாலை, 1வது பதிப்பு, கார்த்திகை 2007. (அச்சக விபரம் தரப்படவில்லை).
368 பக்கம், புகைப்படம், விலை: இந்திய ரூபா 200., அளவு: 23x15 சமீ., ISBN: 978-81-89708-17-7.

தமிழகத்திலும், ஈழத்திலும் உள்ள சிவாலயங்களில் கவிஞர் கந்தவனத்தின் அநுபவத் தளங்களாயமைந்த 108 தலங்களை (தமிழகத்தில் 63, ஈழத்தில் 45) இச் சொற்றமிழ் மாலையிலே தொகுத்துள்ளார். இவற்றில் திருப்பேரூர் என்ற தலம் 3 பதிகங்களையும், திருக்கழுக்குன்றம், திருவான்மியூர், திருமயிலாப்பூர், திருக்கச்சியேகம்பம், திருநகுலேச்சுவரம், திருக்காரைநகர், திருமட்டுவில் ஆகிய தலங்கள் ஒவ்வொன்றும் இரண்டு பதிகங்களையும் கொண்டுள்ளன. இவ்வகையில் மொத்தம் 117 பதிகங்களை இத்தொகுப்பு உள்ளடக்குகின்றது.

5173

பிரமோத்தர காண்டம்: வசனம். க.குருமூர்த்தி ஐயர். கொழும்பு: பிரம்மஸ்ரீ சி.பத்மநாப ஐயர், அதிபர், சரஸ்வதி புஸ்தகசாலை, 175 செட்டியார் தெரு, 1வது பதிப்பு, 1948. (சுன்னாகம்: திருமகள் அழுத்தகம்).
40 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை.

இந்நூலில் ஸ்ரீ பஞ்சாட்சர மான்மியச் சருக்கம், பிரதோஷ விரதச் சருக்கம், சோமவார விரதச் சருக்கம், சிவயோகியர் மகிமைச் சருக்கம், விபூதிச் சருக்கம், சிவபூசைச் சருக்கம், உமாமகேசுர விரதச் சருக்கம், உருத்திராட்ச மான்மியச் சருக்கம், ஸ்ரீ ருத்திர மான்மியச் சருக்கம், புராண சிரவணச் சருக்கம் ஆகியவை இடம்பெற்றுள்ளன. வடமொழியிலிருந்து தமிழிலே பத்தியரூபமாகப் பாடியவர் திருநெல்வேலித் தென்காசியைச் சார்ந்த சங்கர நயினார் கோயில் என்னுமிடத்தின் அண்மையிலுள்ள கரிவலம் வந்த நல்லூரிலே அவதரித்து அரசு வீற்றிருந்த வரதுங்கராம பாண்டியர். வசனரூபமாகச் செய்தவர் யாழ்ப்பாணத்து வட்டுக்கோட்டை, க.குருமூர்த்தி ஐயரவர்கள். (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5174

பிள்ளையார் வழிபாடு. தெ.ஈஸ்வரன் (தொகுப்பாசிரியர்). கொழும்பு 13: ஸ்ரீ வரதராஜ விநாயகர் கோவில், 105 கொட்டாஞ்சேனை வீதி, 1வது பதிப்பு, ஓகஸ்ட் 1992. (சென்னை 600002: காந்தளகம், 4 முதல்மாடி, ரகிசா கட்டிடம், 834 அண்ணாசாலை).
(4), 155 பக்கம், சித்திரங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14 சமீ.

பிள்ளையார் வழிபாடு பற்றிய இத்தொகுப்பு ஆங்கிரச ஆவணிச் சதுர்த்தி நாளன்று வெளியிடப்பட்டுள்ளது. ஓங்கார ஒலி, பிள்ளையார் சுழி ஆகியவற்றின் கருத்துக்களை எளியமுறையில் விளக்கி, பிள்ளையார் திருவுருவம், பிள்ளையாரின் தோற்றம், ஆகியவற்றின் வரலாற்றையும் விளக்கி, நாம் காணும் பிள்ளையார் என்ற பகுதியில் சித்திரங்களின் துணையுடன் பல்வேறு நாமங்கள் கொண்ட விநாயகர் திரு உருவங்களை விளக்குகின்றார். பிள்ளையார் ஆயுதங்கள் என்ற பகுதியில் விளக்கப்படங்களுடன் கக்தி, கேடயம், தீ அகல் உள்ளிட்ட பல ஆயுதங்களையும் விளக்கியிருக்கிறார். சிறந்த விநாயகர் திருத்தலங்களின் பட்டியலும் காணப்படுகின்றது. விநாயகர் பேரில் பாடப்பெற்ற பதிகங்களையும் பிரதான பிரிவாக இந்நூலில் தொகுத்திருக்கின்றார். இந்நூலின் உருவாக்கத்திற்கு திருவாவடுதுறை ஆதீனம், சைவசித்தாந்தப் பெருமன்றம் மற்றும் பல சமய நூல்வெளியீடுகளை பயன்படுத்தியுள்ளனர். தொகுப்பாசிரியர் ஸ்ரீ வரதராஜ விநாயகர் கோவில் அறங்காவலர்களுள் ஒருவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

5175

புதுச் சைவம். வண.எஸ்.ஞானப்பிரகாசர் (பதிப்பாசிரியர்). Jaffna: Catholic Tract No. 15, 2வது பதிப்பு, 1924. (யாழ்ப்பாணம்: C.Andrew, St. Joseph's Catholic Press).
16 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை.

சத்தியவேத பாதுகாவலன் என்ற யாழ்ப்பாணத்துக் கத்தோலிக்க சஞ்சிகையில் புலாலுண்ணாமையையும், சூத்திரப் பிரசங்கத்தையும் பற்றி நடந்த தர்க்கத்தை மீள்பிரசுரமாக-சிறு புத்தகரூபமாய் வெளிப்படுத்தியிருக்கிறார். புதுச் சைவமும் புலாலுண்ணாமையும், புதுச்சைவமும் சூத்திரப் பிரசங்கமும் ஆகிய இரு தலைப்புகளில் இக்கட்டுரைகள் இதில் தொகுக்கப்பட்டுள்ளன. (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5176

மகாவுக்கிர வீரபத்திராஸ்திரம். ஸ்ரீகாசிவாசி செந்திநாதையர். தமிழ்நாடு: சாம்பசிவ ஸ்ரீ சதாசிவ பண்டித சிவாசாரியார், திருச்செங்கோடு, 1வது பதிப்பு, 1915. (தென் இந்தியா: வைஜயந்தி அச்சுக்கூடம், சென்னை).
111 பக்கம், விலை: அணா 0-8-0.

திருச்செங்கோட்டு மடாதிபதியும் எழுகரைநாட்டு நம்பியுமாகிய சாம்பவஸ்ரீ சதாசிவ பண்டித சிவாசாரியார் பதிப்பித்துள்ள இக்கண்டன நூலை எழுதியவர் ஆறுமுக நாவலரின் நன்மாணாக்கராவார். ஸ்ரீ காசிவாசி செந்திநாதையர் தனது நூல் வெளியீட்டின் நோக்கம் பற்றிப் பின்வருமாறு குறிப்பிடுகின்றார். "சிவாகம சிவாசாரிய தூஷணஞ் செய்த யதி ஒருவரது போலி நியாயங்களை "வச்சிரதண்ட"ங்கொண்டு தகர்த்தவர்க்கு "வாய்ப்பூட்டு" என்று பெயர் வரைந்து சிவபக்த தூஷணஞ் செய்தவரதும் குயுக்தி வாக்கியங்களை உடைத்துத் தூளியாக்கி ஆகாயத்தில் ஊதித் தூற்றிவிடுமாறு இந்தப் பத்திராஸ்திரம்

உதித்ததாமாதலின், இதற்கு "மகா உக்கிர வீரபத்திராஸ்திரம்" என்னும் மகுடஞ் சூட்டப்பட்டதாம். **சங்கரதிக்கு விஜயம்** என்னும் சுவடியில் வித்தியாரணியர் எழுதிவைத்த கதையை மெய்யெனக் கடைப்பிடித்துக் கிளர்ந்த "சங்கராசாரிய நீலகண்டாசாரிய சம்வாதம் என்னும் ஆஸ்திக பாஸ்கரன்" எனப்படும் சுவடி வாயிலாக ஒருவர் சிவாசாரிய தூஷணமும் **அத்வைதார்த்தப் பிரகாசிகை என்னும் சங்கரத் துவேஷியின் வாய்ப்பூட்டு** என்னும் பத்திரிகை வாயிலாக ஒருவர் சிவனடியார் தூஷணமும் பொதிந்துவைத்தாராக, அவ்விரு விஷயமும் ஏகான்மவாதக் குரவரையுற்றே பிறந்தமையின், அவ்விருவர் தூஷணங்களுக்கும் கண்டனம் இந்தப் பத்திராஸ்திர வாயிலாக வரையப் புகுந்தோம்" (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5177

மகோற்சவ சந்திரிகை. ச.குமாரசுவாமிக் குருக்கள். சுன்னாகம்: நா.பொன்னையா, ஈழகேசரி பத்திரிராதிபர், தனலக்குமி புத்தகசாலை, 1வது பதிப்பு, 1932. (சுன்னாகம்: திருமகள் அச்சியந்திரசாலை). 86 பக்கம், விலை: சதம் 30.

ஈழகேசரி பத்திரிகையில் **மகோற்சவம்** என்ற தலைப்பில் தொடராக வெளிவந்த கட்டுரைகளின் திருத்திய தொகுப்பு. அச்சுவேலி பிரமஸ்ரீ ச.குமாரசுவாமிக் குருக்கள் இந்நூலில் சிவபுண்ணியம், உற்சவ விதி, உற்சவ பஞ்ச கிருத்தியம், முக்குற்றம் ஆகிய தலைப்புகளில் சைவ ஆலயங்களின் மகோற்சவங்கள் பற்றி விபரித்து எழுதியிருக்கிறார். (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5178

மகோற்சவ விளக்கம். ச.குமாரசுவாமிக் குருக்கள். சென்னை: சே.வே.ஜம்புலிங்கம்பிள்ளை, திருமயிலை, 1வது பதிப்பு. விளம்பி வருடம், ஆடி 1958. (சென்னை 1: ஆறுமுக நாவலர் வித்தியாநுபாலன அச்சகம், நெ. 300 தங்கசாலைத் தெரு).
123 பக்கம், விலை: ரூபா 1.00.

சைவசித்தாந்த சரபம் நா.கதிரைவேற்பிள்ளை 50 ஆண்டுகளுக்கு முன் *சிவஷேத்திராலய மகோற்சவ உண்மை* விளக்கம் என்ற பெயரில் ஒரு நூலை வெளியிட்டார். அவரது அகால மரணத்தின் பின்பு அந்நூலும் அரிதாகிவிட்டது. அதன் 2வது பதிப்பினை 1957இல் நாவலர் அச்சுக்கூடத்தில் பதிப்பித்தனர். பின்னர் வைதிக சைவசிகாமணி அச்சுவேலி ச.குமாரசுவாமிக் குருக்கள் சிறிது விரிவாக *மகோற்சவ சந்திரிகை* என்ற நூலை 1932இல் வெளியிட்டார். அந்நூலில் சுருக்கமாகத் தெரிவிக்கப்பட்ட கருத்துக்களை விரிவாக்கியும், அதில் கூறப்படாத விடயங்களைச் சேர்த்தும் இந்நூலை வெளியிட்டிருக்கிறார். காமிகம், காரணம், விம்பம் முதலிய சிவாகமங்களின் சாரமாயமைந்துள்ள இந்நூல் கோயில் வழிபாட்டின் மேன்மையையும் உற்சவங்களின் தத்துவங்களையும் விளக்குகின்றது. (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5179

மயிலணி முருகவேள் மும்மணிக் கோவை. கு.முத்துக்குமாரசுவாமிப் பிள்ளை. சுன்னாகம்: புலவரக வெளியீடு, மயிலணி, 1வது பதிப்பு, 1961. (யாழ்ப்பாணம்: திருமகள் அழுத்தகம், சுன்னாகம்).
12 பக்கம், விலை: சதம் 25.

அமரர் பண்டிதர் தென்கோவை ச.கந்தையாபிள்ளையின் வேண்டுகோளின்பேரில் ஆசிரியரின் குலதெய்வமான சுன்னாகம் மயிலணி முருகக்கடவுள் மீது பாடப்பெற்ற மும்மணிக்கோவை இது. மும்மணிக்கோவை, தொன்றுதொட்டு வழங்கிவரும் தொன்னூற்றாறு பிரபந்தங்களில் ஒன்றாகும். முருகவேள் மும்மணிக்கோவை பாவினும் பாவினங்களினும் மும்மணிகளாகச் சிறந்து விளங்கும் வெண்பா, கட்டளைக் கலித்துறை, ஆசிரியப்பா என்னும் பாக்களால் அந்தாதித் தொடை மருவக் கோவை செய்து முருகக் கடவுளின் பாதகமலங்களிற் சூட்டப்பெற்றமையால் அப்பெயர் பெறலாயிற்று. இந்நூலுக்கான சிறப்புப் பாயிரங்களை பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை, பண்டிதர் சி.கதிரிப்பிள்ளை, பண்டிதர் கா.நமசிவாயம் ஆகியோர் வழங்கியுள்ளனர். இது 10ஆவது புலவரக வெளியீடாக வெளிவந்துள்ளது. (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5180

மறுபிறப்புத் தூஷண பரிகாரம். சி.சுந்தரம்பிள்ளை. யாழ்ப்பாணம்: சி.சுந்தரம்பிள்ளை, திருநெல்வேலி, 1வது பதிப்பு, அக்ஷய வருடம், 1926. (யாழ்ப்பாணம்: சோதிடப் பிரகாச யந்திரசாலை, கொக்குவில்).

192 பக்கம், விலை: சதம் 75.

யாழ்ப்பாணத்தில் வசிக்கும் கத்தோலிக்க குருமாருள் ஒருவர் சைவசமய தூஷணத்தையே தமது சீவிய ஆதாரமாகக் கொண்டு வெளியிட்ட **மறுபிறப்பு ஆட்சேபம்** (1906), **மறுபிறப்பு சமாதானம்** (1911), என்னும் இரண்டு துண்டுப்பிரசுரங்களின் பேரில் எழுதப்பட்ட கண்டனம் இது. (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5181

மறுபிறப்புத் தூஷண பரிகாரக் கிலிகோலம். பீ.எம்.யாக்கோபு. சுன்னாகம்: பரம்பரைப் பறையர் சபை, 1வது பதிப்பு, 1926. (அச்சுவேலி: ஞானப்பிரகாச யந்திரசாலை).
60 பக்கம், விலை: சதம் 50.

யாழ்ப்பாணத்துத் திருநெல்வேலி சி.சுந்தரம்பிள்ளையவர்களது மறுபிறப்புத் தூஷண பரிகாரம் என்ற நூல் பற்றிய மறுப்பு நூலாக இது வெளிவந்துள்ளது. முன்னைய நூல் வெறும் கிலிக்கோலமே என்று காட்டும் மறுப்புரைகள் இந்நூலில் இடம்பெறுகின்றன. இந்நூலை ஆக்கியோன் இலங்கை வலங்கைமுக வள்ளுவகுல திலகன் சாம்புவத் திருவாளன் பீ.எம்.யாக்கோபு எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம்.அலி, கொழும்பு 14).

5182

மாணிக்கவாசக சுவாமிகள் அருளிச்செய்த திருவாசகம். சி.முருகுப்பிள்ளை (பதிப்பாசிரியர்). லண்டன் IG1 1LD: Ramakrishna Cottage, 19, Grosvenor Road, Ilford, Essex, 1வது பதிப்பு, 2008. (கொழும்பு 13: லக்ஷ்மி அச்சகம், 195, ஆட்டுப்பட்டித் தெரு).
x, 218 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18.5x13.5 சமீ.

திரு.சி.கடவுள் முருகுப்பிள்ளை அவர்களின் பிறந்தநாள் பவளவிழாவையொட்டி அன்னாரால் வெளியிடப்பட்ட நூல். திருப்பெருந்துறையில் மணிவாசகர் அருளிச்செய்த திருவாசகம் ஐம்பத்தியொரு திருப்பதிகங்களுடன் திகழ்வது. அவற்றில் அடங்கியுள்ள பாடல்களின் எண்ணிக்கை அறுநூற்று ஐம்பத்தெட்டு. அனைத்தினதும் தொகுப்பாக இந்நூல் அமைகின்றது.

5183

மாணிக்கவாசக சுவாமிகள் சரித்திரம். ம.வே.திருஞானசம்பந்த பிள்ளை. யாழ்ப்பாணம்: ம.வே. திருஞானசம்பந்த பிள்ளை, ஆசிரியர், இந்து சாதனம், வண்ணார்பண்ணை, 1வது பதிப்பு, 1936. (யாழ்ப்பாணம்: ஸ்ரீ சண்முகநாத யந்திரசாலை).
112 பக்கம், விலை: சதம் 50.

மாணிக்கவாசக சுவாமிகள் சரித்திரம். ம.வே.திருஞானசம்பந்த பிள்ளை. யாழ்ப்பாணம்: வீ.சண்முகரத்தினம், வண்ணார்பண்ணை, 7வது பதிப்பு, 1960, 1வது பதிப்பு, 1936. (யாழ்ப்பாணம்: ஸ்ரீ காந்தா அச்சகம்).
96 பக்கம், விலை: ரூபா 1.25.

இந்நூலாசிரியர் ம.வே.திருஞானசம்பந்த பிள்ளை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரித் தமிழ்ப் போதகாசிரியரும், இந்து சாதனம் பத்திராசிரியருமாவார். தனது தந்தையார் இயற்றிய திருவாதவூரடிகள் புராண விருத்தியுரையை ஆதாரமாகக் கொண்டு ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரவர்கள் எழுதிய பெரியபுராண வசனத்தின் முறைமையையும் நடையையும் இயன்றவரையில் பின்பற்றி எழுதப்பெற்றதாகும். இந்நூலின் இறுதியில் சேர்க்கப்பட்டுள்ள திருவாசகத் திரட்டில் சிவபுராணம், திருவெம்பாவை, திருப்பொற்சுண்ணம், திருப்பள்ளியெழுச்சி. திருப்படையாட்சி முதலான பாராயணத்துக்கு இன்றியமையாத திருவாசகங்கள் தொன்னூறுக்கு மேற்பட்டவையும் அடங்கியுள்ளன. (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5184

மாவைப் பதிகம், மாவை இரட்டைமணி மாலை. அ.குமாரசுவாமிப் புலவர். சுன்னாகம்: புலவரக வெளியீடு, மயிலணி, 3வது பதிப்பு, 1950, 1வது பதிப்பு, 1888, 2வது பதிப்பு, 1900. (யாழ்ப்பாணம்: ஸ்ரீ சண்முகநாத அச்சியந்திரசாலை).
12 பக்கம், விலை: சதம் 12.

மாவைப்பதிகம், மாவை இரட்டை மணிமாலை என்னும் இரு நூல்கள் புலவரவர்களால் மாவிட்டபுரத்தில் கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் சுப்பிரமணிய சுவாமி பேரில், 1883ஆம் ஆண்டு இயற்றப்பட்டன. மாவை என்பது மாவிட்டபுரம் என்பதன் மரூஉ மொழியாகும். சோழன் மகளாகிய மாருதப்புரவீகவல்லி என்னும் இராசகன்னிகையின் குதிரைமுகம் போன்ற முகமும், உடல்நோயும் இத்தலத்தில் நீங்கிய காரணமாக இதற்கு மாவிட்டபுரம் என்னும் பெயர் உண்டாயிற்று. (மா-குதிரை). இது புலவரக வெளியீடாக வரும் மூன்றாவது நூலாகும். புலவரின் மகனார் கு.முத்துக்குமாரசுவாமிப்பிள்ளை இதனை பதிப்பித்திருக்கிறார். (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5185

முருக வணக்கம்: ஆய்வு நூல். மாவை.செ.நவரத்தினம். கொழும்பு 4: செல்லப்பா நவரத்தினம், இல. 6, டெய்சி வில்லா அவென்யு, 1வது பதிப்பு, செப்டெம்பர் 2007. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ் பிரைவேட் லிமிட்டெட், 48 B, புளுமெண்டால் வீதி).
xxxiv, 158 பக்கம், விலை: இந்திய ரூபா 350., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-955-50437-0-0.

ஆரம்பகாலம் தொடக்கம் 9ம் நூற்றாண்டு இறுதி வரை கடைப்பிடிக்கப்பட்ட முருக வணக்கம் பற்றிய ஆய்வு இந்நூலாகும். இலங்கைப் பல்கலைக்கழகத்தின் பேராதனை வளாகத்தில் தமிழ் முதுமாணிப் பட்டத்திற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக்கட்டுரை இது. முருக வணக்கத்தின் தோற்றமும் வளர்ச்சியும், போர்க் கடவுளாக முருகன், முருகனின் பெயர்களும் அவற்றிற்கான காரணங்களும், வழிபாட்டு முறைகள் ஆகிய நான்கு இயல்களில் முருக வழிபாடு இவ்வாய்வில் விளக்கப்பட்டுள்ளது.

5186

முருகன் திருப்புகழ்மாலை. மு.கமலாம்பிகை (தொகுப்பாசிரியர்). சுன்னாகம்: புலவரக வெளியீடு, புலவரகம், மயிலணி, 1வது பதிப்பு, விரோதி வருடம், ஜுலை 1949. (யாழ்ப்பாணம்: ஸ்ரீ சண்முகநாதன் அச்சியந்திரசாலை).
112 பக்கம், விலை: ரூபா 1.00

அருணகிரிநாதர், நக்கீரர் முதலானோரினால் இயற்றப்பட்ட அருட்பாடல்களில் பக்திச்சுவை ததும்பும் பாடல்கள் சிலவற்றைத் தினமும் பாராயணம் பண்ணும் வகையில் இந்நூலில் தொகுத்து பதவுரையுடன் கூடியதாக வெளியிட்டுள்ளார். நக்கீரர் அருளிய திருமுருகாற்றுப்படை, அருணகிரிநாதர் அருளிய கந்தரலங்காரம், கந்தரனுபூதி, திருப்புகழ், சேந்தனார் அருளிய திருவிசைப்பா, முருகன் அர்ச்சனை 108 புராணமும் பிறவும், புராணம், பிள்ளைத் தமிழ், திருச்செந்தூர், வைத்தீஸ்வரன் கோவில் திருவிரிஞ்சை, திருத்தணிகை, திருப்போரூர், திருமலை, இராமலிங்க சுவாமி திருவருட்பா, தனிப்பாடல்கள், சுப்பிரமணிய விருத்தம், காசி கதிர்காமவேலர், பழநி, குன்றக்குடி, திருப்போரூர், திருச்செந்தூர், மாவிட்டபுரம், வதுளை, அகத்தியர் பஞ்சகம், முருகன் வாழ்த்து, அரும்பதப் பொருள் ஆகிய தலைப்புகளில் இவை தொகுக்கப்பட்டுள்ளன. நூலாசிரியர் சுன்னாகம் குமாரசுவாமிப் புலவரின் மருமகளாவார். (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5187

முருகன் மணவாளன். செ.தனபாலசிங்கன். கொழும்பு: உரும்பராய் சிதம்பரசுப்பிரமணிய சுவாமி கோவில், கொழும்புக் கிளையினர், 1வது பதிப்பு, வைகாசி 1964. (யாழ்ப்பாணம்: ஸ்ரீ சண்முகநாத அச்சகம்).
128 பக்கம், விலை: ரூபா 2.00

ஆசிரியர் எழுதிய பன்னிரு ஆன்மீகக் கட்டுரைகளின் தொகுப்பு. முருகன் மணவாளன் என்ற முதலாவது கட்டுரையில் முருகன் ஆன்மநாயகன் என்ற கருத்தையும், வரவழைத்தால் வாராதிருக்க வழக்குண்டா? என்ற கட்டுரையில் அழுதால் இறைவன் அருளைப் பெறலாம் என்ற கருத்தையும், இன்னமும் சின்னவன் தானோ? என்ற கட்டுரையில் முருகன் சின்னஞ்சிறியவன்-விளையாட்டுப்பிள்ளை- ஆயினும் அவன் விளையாட்டு உய்வார்கள் உய்யும் விளையாட்டு என்ற கருத்தையும், தெய்வம் உண்டென்றிரு என்ற கட்டுரையில் முருகனை நம்பினோர் கைவிடப்படமாட்டார் என்ற கருத்தையும், சிந்தையிற் சிவன் என்ற கட்டுரையில் உன் சிந்தையைக் கோயிலாக்கு இறைவன் அதில் குடியிருப்பான் என்ற கருத்தையும், கண்டவர் விண்டிலர் விண்டவர் கண்டிலர் என்ற கட்டுரையில் இறைவனின் மாண்பும் அருளும் வண்ணமும் அளவைக்கு எட்டாதவை- அவனைக் கண்டாரைக் கேட்டறியோம்- கண்டவர் விண்டிலர் என்ற கருத்தையும், தலையெழுத்து அழிந்தது என்ற கட்டுரையில் அழியவேண்டியவைகளின் அழிவே ஆக்கம் என்ற கருத்தையும், யமனுக்குச் சவால் என்ற கட்டுரையில் இறைவன் பக்தர்களுக்கு மரணபயம் இல்லை என்ற

கருத்தையும், குதிரைக்கார (இராவுத்த) முருகன் என்ற கட்டுரையில் வாசியருளியவை வாழ்விக்கும் வாசிதான் காரியம், வாசிக்காரன் முருகன் என்ற கருத்தையும், இரு கண்கள் என்ற கட்டுரையில் அருட்கண்களே கண்கள் அவை காணும் காட்சிகள் நவையறு காட்சிகள் என்ற கருத்தையும், நடமாடுங் கோயில்கள் என்ற கட்டுரையில் தொண்டர்தம் பெருமையைக் கூறுதல் அரிது என்ற கருத்தையும், சும்மா இரு என்ற பன்னிரண்டாவது கட்டுரையில் நீ ஆட்டுவான் வழிநில் அவன் எடுத்துச் சுமப்பான் என்ற கருத்தையும் ஆசிரியர் பக்தி இலக்கிய நயத்துடன் வெளிப்படுத்துகிறார். (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5188

யாழ்ப்பாணம் உரும்பராய் பரத்தைப்புலக் கருணாகர விநாயகர் தோத்திரப் பாமாலை: 1ம்பாகம். க.வேலுப்பிள்ளை. உரும்பிராய்: மலாய் யூனியன் வாலிப பிரமுதிதர்கள், 1வது பதிப்பு, 1926. (பருத்தித்துறை: கலாநிதியந்திரசாலை).
32 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை.

உரும்பிராய், வயாவிளானைச் சேர்ந்தவரும் சுதேச நாட்டியம் என்ற பத்திரிகையின் ஆசிரியராகவும் முகாமையாளருமாக இருந்த ஸ்ரீ க.வேலுப்பிள்ளையவர்கள் இயற்றிய இப்பாமாலைக்கான சூசனவக்கணையை உரும்பிராய் தெற்கு ச.முத்துத்தம்பிப் பிள்ளையும், சாற்றுகவிகளை புலோலி பிரமஸ்ரீ ம.முத்துக்குமார சுவாமிக் குருக்கள், பிரமஸ்ரீ ச.சுப்பிரமணிய சாஸ்திரிகள், சுதேச நாட்டியப் பத்திராதபர் ஸ்ரீ சி.நல்லதம்பி ஆகியோரும் வழங்கியுள்ளனர். (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5189

யுகவதார புருஷோத்தமா: ஓர் அறிமுகம். B.S.பர்சினி. கொழும்பு 6: B.S.பர்சினி, 55, ஹம்டன் லேன், வெள்ளவத்தை, 1வது பதிப்பு, ஜுன் 2008. (தெகிவளை: காயத்திரி பப்ளிக்கேஷன்ஸ், தபால் பெட்டி எண் 64).
100 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 21.5x14.5 சமீ.

பகவான் ஸ்ரீகிருஷ்ணரைப் பற்றி ஒரு கிருஷ்ண பக்தையின் தேடல்கள் சிறு கட்டுரைகைளாக இந்நூலில் பதிவுக்குள்ளாகியுள்ளன. கிருஷ்ண பகவானின் மகிமைகளை விளக்கமாகத் தரும் இந்நூலில் கலியுகத்தில் வாழும் கிருஷ்ண பக்தர்கள் பற்றியும் கிருஷ்ணரைத் தொழும் முறைமை பற்றியும் இதிலுள்ள 23 கட்டுரைகளின் வழியாக ஆங்காங்கே குறிப்பிடுகின்றார். தன் ஆரம்பக்கல்வியை வவுனியாவிலும், பின்னர் கொழும்பிலும் கற்றுத் தேர்ந்த B.S.பர்சினி, இளம் வயதிலேயே எழுத்துத் துறையில் ஈடுபாடு கொண்டவர்.

5190

வசன இரத்தினாமிர்தம்: கடவுள், அன்பு, அறம், கல்வி. வ.மு.இரத்திநேசுவரையர். தமிழ்நாடு: விவேகானந்தர் கல்விக் கழக வெளியீடு, ஆவினிப்பட்டி, 1வது பதிப்பு, 1935. (சென்னை: சாது அச்சுக்கூடம், இராயப்பேட்டை).
25 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை.

தமிழ்நாடு, ஆவினிப்பட்டி விவேகானந்தர் கல்விக் கழக ஆசிரியர், யாழ்ப்பாணத்து உடுவில் பண்டிதர் வ.மு.இரத்திநேசுவரையர் எழுதிய கட்டுரைத் தொகுப்பு இதுவாகும். நூலாசிரியரின் செந்தமிழ்க் குரு யாழ்ப்பாணத்துச் சுன்னாகம் வித்வசிரோமணி அ.குமாரசுவாமிப் புலவர், அண்ணாமலைப் பல்கலைக்கழக தமிழ்ப்பகுதித் தலைவர் எஸ்.சோமசுந்தர பாரதியார், மற்றும் மேற்படி பல்கலைக்கழக தமிழ் விரிவுரையாளர் மகிபாலநகர் பண்டிதமணி மு.கதிரேசச் செட்டியார் ஆகியோரின் கருத்துரையுடன் கூடியது. (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5191

வரதபண்டிதம். வரத பண்டிதர் (மூலம்), க.இரகுபரன் (பதிப்பாசிரியர்). கொழும்பு 7: இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், 98 வோட் பிளேஸ், 1வது பதிப்பு, டிசம்பர் 1998. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ் பிரைவேட் லிமிட்டெட், 48 B, புளுமெண்டால் வீதி).
xii, 306 பக்கம், சித்திரம், விலை: ரூபா 100., அளவு: 21.5x14 சமீ.

வட இலங்கையிலுள்ள சுன்னாகத்தில் 300 ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்திருந்த அறிஞர் வரகவிப் புலவர் வரதபண்டிதர் (1656-1716) அவர்களால் இயற்றப்பட்ட ஆறு நூல்களின் மீள்பதிப்பு

இத்தொகுப்பாகும். இதில் பிள்ளையார் கதை, பிள்ளையார் புராணம், சிவராத்திரி புராணம், ஏகாதசிப் புராணம், குருநாதசுவாமி கிள்ளை விடுதூது, அமுதாகரம் ஆகிய நூல்கள் இடம்பெற்றுள்ளன.

5192

விக்னேசுவர பூஜாவிதி. (ஸ்ரீ விக்கினேசுவர ஸ்நபந கும்பபூஜா விதி).
இ.கு.பூர்ணானந்தேசுவரக் குருக்கள். மட்டக்களப்பு: பிராமண சமூகசேவா சங்கம், 8 பழைய வாடிவீட்டுத் தெரு, 1வது பதிப்பு, 1963. (மட்டக்களப்பு: ஸ்ரீ சாரதா அச்சியந்திரசாலை).
46 பக்கம், விலை: ரூபா 2.00

கணபதி பூஜை, பஞ்சகவ்ய பூஜை, புண்யாகவாசனம், தீபாராதன மந்திரம், அஷ்டோத்தரசத(108) நாமார்ச்சனை முதலியனவும் சேர்ந்த நூல். இந்நூலைத் தொகுத்தவர் ஆரிய திராவிடபாஷா விற்பன்னர், திருக்கோணமலை வில்லூன்றி சிவஸ்ரீ இ.கு.பூர்ணானந்தேசுவரக் குருக்கள். திருக்கோணமலை கந்தசுவாமி கோவில் ஆதீன பிரதமகுருவாவார். (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5193

விநாயக பரத்துவம். ச.குமாரசுவாமிக் குருக்கள். தமிழ்நாடு: சே.வெ.ஜம்புலிங்கம் பிள்ளை, திருமயிலை, 2வது பதிப்பு, துன்முகி ஆவணி 1956, 1வது பதிப்பு, 1934. (சென்னை 1: ஆறுமுக நாவலர் வித்தியாநுபாலன அச்சகம், நெ.300, தங்கசாலைத் தெரு).
104 பக்கம், விலை: சதம் 60.

அச்சுவேலி ச.குமாரசுவாமிக் குருக்களால் எழுதப்பெற்றுள்ள இந்நூலுக்கான நூன்முகத்தை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் தமிழ்ப் போதகாசிரியர் ம.வே.திருஞானசம்பந்தனும், முகவுரையை பிரம்மஸ்ரீ சி.கணேசையர், கும்பகோணம் ஸ்ரீமத் அ.கந்தசாமிப் பிள்ளை ஆகியோரும் எழுதியுள்ளனர். விநாயக பரத்துவம் விநாயகரின் கடவுள் தன்மையை உணர்த்துவது. பிரணவப் பொருளாய் விளங்கும் விநாயகக் கடவுள் தம்மை வழிபட்ட அடியார்களுக்கு அவர்களின் இடரை நீக்கி அருள்செய்தமை காரணமாகப் பல்வேறு காரணப் பெயர்களையும் தாங்கியுள்ளார். அவற்றுள் 30 பெயர்களின் (நாமங்களின்) காரணத்தை விளக்கும் சரித்திரங்களைத் தொகுத்து இந்நூலை ஆசிரியர் எழுதியுள்ளார். தேவர்களுக்கு இடர்செய்த கயமுகாசுரனைச் சங்கரித்துத் தேவர்களைக் காத்தற் பொருட்டு அவதரித்த விநாயகருக்கு கயமுகாசுர சங்காரமூர்த்தி என்று பெயர் வந்தது. அப்பெயர்க் காரணத்தை விளக்குவதுடன் தொடங்கும் இந்நூலில் தொடர்ந்தும் விநாயகரின் பல்வேறு நாமங்கள் பற்றிய விளக்கத்தை தாமறிந்த பல்வேறு சமய நூல்களின் வாயிலாக விளக்குகின்றார். (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5194

விநாயக மஹோற்சவ விளக்கம். க.வை.ஆத்மநாத சர்மா. மட்டக்களப்பு: பிராமண சமூக சேவா சங்கம், 8, பழைய வாடிவீட்டுத் தெரு, 1வது பதிப்பு, ஆனி 1964. (சுன்னாகம்: கலாதேவி அச்சகம், புகையிரத நிலைய வீதி).
150 பக்கம், விலை: ரூபா 3.00.

இந்த நூல், ஆலய தருமகர்த்தா-உற்சவாசாரியரை வரித்தல் முதற்கொண்டு, மகோற்சவம் தொடர்பான பல பொது விஷயங்களையும் உள்ளடக்குகின்றது. மேலும் ஐம்பத்தொன்பது உறுப்புக்களை உடையதாய்க் கிரியாபாகங்களைக் கூறுவதுடன் வேதாகமங்களிலிருந்தும் திருமுறைகளிலிருந்தும் உண்மை விளக்கம் முதலிய அறநூல்களிலிருந்தும் எடுக்கப்பட்ட பிரமாணங்களுடன் அக்கிரியைகளின் விரிவான உண்மை விளக்கத்தையும் இந்நூல் தன்னகத்தே கொண்டு விளங்குகின்றது. இந்நூலை ஆக்கியோன் யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலைப் பிரதம ஆசிரியராவார். இந்நூலுக்கான சிறப்புரைகளை கா.கைலாசநாதக் குருக்கள், ச.குமாரசுவாமிக் குருக்கள், தி.கி.சீதாராம சாஸ்திரிகள், மற்றும் வண்ணார்பண்ணை நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலை தலைமை ஆசிரியர் இ.திருநாவுக்கரசு ஆகியோர் வழங்கியுள்ளனர். (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5195

வேதமாதா காயத்ரி மந்திர மகிமைகள். துரையப்பா ஜெயக்கிருஷ்ணன். கொழும்பு 7: சத்யசாயி சேவா நிறுவனம், இல. 22, பான்ஸ் பிளேஸ், 1வது பதிப்பு, ஆகஸ்ட் 2009. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ் நிறுவனம், 48B, புளுமெண்டால் வீதி).
vi, 76 பக்கம், விலை: ரூபா 90., அளவு: 21.5x14.5 சமீ.

இது காயத்ரி மந்திரம் பற்றியதொரு ஆய்வு நூல். வேதமந்திரங்களில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த மந்திரம் காயத்திரி மந்திரமாகும். காலம் காலமாக ஜெபிக்கப்பட்டுவரும் இம்மந்திரம் மூன்று பகுதிகளைக் கொண்டது. முதலாவது பிரணவ மந்திரமாகிய ஓம். அடுத்து வருவது பிரணவ மந்திரத்தின் விரிவாகிய வியாக்கிருதிகள். இவை தெய்வீக ஆற்றல்மிக்க சொற்கள். ஸ்தூல நிலையில் இவை பூமி (பூர்), முன்னோர்கள் வாழும் உலகம் (புவ), தேவலோகம் (ஸுவ) ஆகிய மூன்று உலகங்களைக் குறிக்கின்றது. நுண்நிலையில் நமது உணர்வின் மூன்று தளங்களை, அதாவது உடல், மனம், உயிர் என்ற மூன்று நிலைகளிலும் செயற்பட்டு வாழ்வை வளம்படுத்துகின்றது. இந்நூலில் காயத்ரி மஹாமந்திரம், உச்சாடன முறைகள், ஜெபம் பற்றிய ஆய்வு, ஸாயி-த்ரி மந்திரங்கள், எல்லாத் தெய்வங்களுக்கும் உரிய காயத்ரி மந்திரங்கள், சாதகர்களின் சொந்த அனுபவங்கள், மஹான்களின் கருத்து வெளிப்பாடுகள், மற்றும் பல விஷேட அம்சங்களையும் காணமுடிகின்றது.

5196

வேதாகம நிரூபணம்: முதலாம் பாகம். ச.குமாரசுவாமிக் குருக்கள். கரணவாய்: சைவ ஆராய்ச்சிச் சங்கத்தார், 1வது பதிப்பு, டிசம்பர் 1950. (பருத்தித்துறை: கலாநிதி யந்திரசாலை).
76 பக்கம், விலை: ரூபா 1.00

சைவசமயத்துக்கு மாறான பல கிளர்ச்சிகளும் கொள்கைகளும் பரப்பி வருவதாலும், சைவப் புலவர் திரு வேந்தனார் முதலியோரும் பல பிரசுரங்கள் வெளியிட்டிருப்பதாலும் அவற்றை நியாயவாயிலானே மறுத்து உண்மையை வெளிப்படுத்துமாறு சைவாபிமானிகள் பலர் வேண்டியதன் பிரகாரம் இந்நூல் வெளிவருகின்றது. தமது தொல்லாசிரியர்கள் அருளிய பொன்மொழிகளை விரோதித்து வேதாகமங்களை அநியாயமாகத் தூஷித்து நவமார்க்கத்தை மேற்கொண்டுள்ளாரை நியாயத்தினால் மறுத்து வேத சிவாகமங்களே சுத்தாத்துவித வைதீக சைவசித்தாந்த முதனூல்களாமென்று விளக்குதலின் இந்நூல் வேதாகம நிரூபணமென்று பெயர்பெற்றது. இந்த நூலில் மறுக்கப்பட்டவர்கள் யாவர் எனில் வித்துவானும் பண்டிதரும் சைவப்புலவரும் ஆகிய திரு.க.வேந்தனார் அவர்களும் வித்துவானும் பண்டிதருமாகிய திரு.கா.பொ.இரத்தினம், கொக்குவில் திரு வே.விசுவலிங்கம், திரு நவரத்தினம் ஆகியோரும் அவர்களையுள்ளிட்ட பிறருமாவர். இந்நூல் ஆரியமும் தமிழும் என்பது முதல் அருணகிரிநாத சுவாமிகள் என்பதிறுதியான 97 தலையங்கங்கள் கொண்ட கூறுகளாக எழுதப்பெற்றுள்ளது. (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5197

வேதாகம நிரூபணம்: இரண்டாம் பாகம். ச.குமாரசுவாமிக் குருக்கள். கரணவாய்: சைவ ஆராய்ச்சிச் சங்கத்தார், 1வது பதிப்பு, ஆகஸ்ட் 1951. (பருத்தித்துறை: கலாநிதி யந்திரசாலை).
88 பக்கம், விலை: ரூபா 1.00

யாழ்ப்பாணத்து வேதாகம சைவசித்தாந்த சங்கத்தாரும், கரணவாய் சைவ ஆராய்ச்சி சபையாரும் மற்றும் சிவநெறிச் செல்வர்களும் விரும்பியவாறு, சைவப் புலவனார் திரு.க.வேந்தனார், பண்டிதர் கா.பொ.இரத்தினம் முதலியோர் எழுதிய சைவ விரோதமான கொள்கைகளை மறுத்து ச.குமாரசுவாமிக் குருக்களவர்களால் எழுதப்பெற்ற வேதாகம நிரூபண முதற்பாகம் சில மாதங்களுக்கு முன்னதாக கரணவாய் சைவ ஆராய்ச்சி சபையாரால் பதிப்பிக்கப்பெற்று வெளிவந்தது. முதற்பாகத்திலே நிரூபிக்கப்படாத பகுதிகளை ஆராய்ந்து உண்மைநிலை நிறுத்த வேண்டுமென்று சைவாபிமானச் செல்வர்கள் கேட்டுக்கொண்டபடி இவ்விரண்டாம் பகுதி வெளிவந்துள்ளது. இது சுதந்திரப் பிரமாண நூல்கள் என்பது முதல் புராணப் பெருமை என்பதிறுதியான தலையங்கங்கள் கொண்ட பல்வேறு கூறுகளாக எழுதப்பெற்றுள்ளது. இவ்விரண்டாம் பாகத்தில் பெரும்பான்மை “தாவரம் இல்லை” என்ற சொற்பொழிவுக் கட்டுரையிலுள்ள பொருந்தாக் கருத்துக்களை ஆராய்ந்து உண்மை நிலைநாட்டப்பெற்றிருக்கின்றன. நூலாசிரியர் யாழ்ப்பாணம் வேதாகம சைவசித்தாந்த சபைத் தலைவராகப் பணியாற்றியவர். (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14)

294.5(1) இந்து நிறுவனங்கள், மாநாடுகள், மலர்கள்

5198

இந்து ஒளி: அகில இலங்கை இந்து மாமன்றம் பொன்விழா சிறப்பு மலர் பாகம் 1. கந்தையா நீலகண்டன், எம்.ஆர்.இராஜ்மோகன், அ.கனகசூரியர். கொழும்பு 2: அகில இலங்கை இந்து

மாமன்றம், இல. 91/5, சேர் சிற்றம்பலம் ஏ. கார்டினர் மாவத்தை, 1வது பதிப்பு, ஜுலை 2007. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ் பிரைவேட் லிமிட்டெட், 48 B, புளுமெண்டால் வீதி).
512 பக்கம், வண்ணப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 29x21 சமீ., ISBN: 978-955-1133-01-6.

கொழும்பு அகில இலங்கை இந்து மாமன்றத்தின் பொன்விழாவையொட்டி இரு பெரும் பாகங்களில் வெளியிடப்பட்டுள்ள சைவச் சிறப்பு மலர் இதுவாகும். இறை வணக்கத்துடன் தொடங்கும் இம்மலரில் 20 பிரமுகர்களின் ஆசியுரைகளும், மாமன்றத்தின் வரலாற்றுப் பதிவுகளைக்கொண்ட 9 கட்டுரைகளும், யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற மாநாட்டில் வாசிக்கப்பட்ட 23 ஆய்வுக் கட்டுரைகளும், மட்டக்களப்பு மாநாட்டில் வாசிக்கப்பட்ட 9 ஆய்வுக்கட்டுரைகளும் இடம்பெற்றுள்ளன. இப்பாகத்தின் இறுதியாக இலங்கையில் இயங்கிவரும் இந்து சமயச் சங்கங்களும் அவற்றின் பணிகளும் பதிவுக்குள்ளாகும் வகையில் அமைந்த 31 கட்டுரைகளும், முகாமைப்பேரவை உறுப்பினர்களின் விபரங்களும் இடம்பெற்றுள்ளன. இம்மலரின் வெளியீட்டுக்குழுவில் உதவியாளர்களாக ம.பாலகைலாசநாத சர்மா, திருமதி பத்மா சோமகாந்தன், பால. இந்திரசர்மா ஆகியோரும் பணியாற்றியுள்ளனர்.

5199

இந்து ஒளி: அகில இலங்கை இந்து மாமன்றம் பொன்விழா சிறப்பு மலர் பாகம் 2. கந்தையா நீலகண்டன், எம்.ஆர்.இராஜ்மோகன், அ.கனகசூரியர். கொழும்பு 2: அகில இலங்கை இந்து மாமன்றம், இல. 91/5, சேர் சிற்றம்பலம் ஏ.கார்டினர் மாவத்தை, 1வது பதிப்பு, ஜுலை 2007. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ் பிரைவேட் லிமிட்டெட், 48 B, புளுமெண்டால் வீதி).
பக்கம் 513-980, வண்ணப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 29x21 சமீ., ISBN: 978-955-1133-01-6.

கொழும்பு அகில இலங்கை இந்து மாமன்றத்தின் பொன்விழாவையொட்டி இரு பெரும் பாகங்களில் வெளியிடப்பட்டுள்ள சைவச் சிறப்பு மலர் இதுவாகும். இம்மலரின் இரண்டாம் பாகத்தில் பொன்விழாவையொட்டி நடாத்தப்பெற்ற போட்டிக் கட்டுரைகளில் தேர்ந்த 10 கட்டுரைகள் முதலாவதாக இடம்பெறுகின்றன. அதையொட்டி 34 சிறப்புக் கட்டுரைகள் தமிழிலும், 28 கட்டுரைகள் ஆங்கிலத்திலும், இறுதியாக 10 கவிதைகளும் இடம்பெற்றுள்ளன. இம்மலரின் வெளியீட்டுக்குழுவில் உதவியாளர்களாக ம.பாலகைலாசநாத சர்மா, திருமதி பத்மா சோமகாந்தன், பால.இந்திரசர்மா ஆகியோரும் பணியாற்றியுள்ளனர்.

5200

இந்துத்துவமும், இந்து விடுதலை நெறியும். ந.இரவீந்திரன். சென்னை 600 002: சவுத் விஷன், 6, தாயார் சாகிப் 2வது சந்து, 1வது பதிப்பு, டிசெம்பர் 2001. (சென்னை 600 014: Mother Board).
128 பக்கம், விலை: இந்திய ரூபா 50., அளவு: 21x14 சமீ.

இந்நூல் இந்து சமயத்தின் பல்வேறு பிரிவுகள், அவற்றின் தோற்றம், வளர்ச்சி, இன்றைய நிலை ஆகியவற்றை ஒரு வரலாற்றுப் பார்வையோடு எடுத்துரைக்கிறது. இவற்றை சாதுர்யமாக எப்படி இந்துத்துவம் தனது இலக்குக்காக திருத்திக் கூறுகின்றது, தன்வசப்படுத்திக் கொள்கின்றது, மக்களைத் திசைதிருப்புகின்றது என்பதை மிக அருமையாக விபரிக்கின்றது. நூலாசிரியர் இரவீந்திரன் ஏற்கெனவே பாரதியின் மெய்ஞ்ஞானம் (1985), ஏன் சிறுகதைத் தொகுதி (1992), கலாசாரம், எதிர்க் கலாசாரம், புதிய கலாசாரம் (1999), பின் நவீனத்துவமும் அழகியலும் (2001) ஆகிய நூல்களை எழுதியவர். அடைப்புக்குறிக்குள் வெளியிட்ட ஆண்டுகள் குறிப்பிடப்பட்டுள்ளன.

5201

இலங்கையின் புராதன சைவாலயங்கள்: நயினை நாகேஸ்வரி. குல.சபாநாதன். கொழும்பு 6: குல.சபாநாதன், முருகன் அருள், 3/2 இராமகிருஷ்ண ரெறெஸ், வெள்ளவத்தை, 1வது பதிப்பு, 1962. (கொழும்பு 11: மெய்கண்டான் அச்சியந்திரசாலை, செட்டியார் தெரு).
52 பக்கம், விலை: ரூபா 1.00

இலங்கையில் சைவசமயத்தில், சக்தி வழிபாட்டின் பழமைக்கும் மகிமைக்கும் இணையற்ற அத்தாட்சியாக விளங்குவது நயினாதீவு நாகபூஷணி அம்பாள் ஆலயம். அதன் பழைய வரலாற்றையும், அற்புத சிற்ப வேலைப்பாட்டையும், அதில் அமைந்துள்ள சித்திரங்களின் தத்துவங்களையும் இந்நூல் சுவையாக விளக்குகின்றது. இரு பாகங்களிலமைந்த இந்நூலில் முதற்பகுதி கோவில் வரலாற்றையும் இரண்டாம்

பகுதி தோத்திரத் திரட்டையும் கொண்டுள்ளது. கோவில் வரலாற்றில் நாகம் அர்ச்சனை செய்தது, பழைய துறைமுகம், சீனத்துச் சாடிகள், மணிமேகலா சம்பந்தம், கோயிலை இடித்தல், கோயிற் புனரமைப்பு, இப்போதுள்ள கோயிலமைப்பு, விமானப் புனரமைப்பு, தியானஞ்செய்வதற்கு ஏற்ற ஆலயம், ஆலய பூசையும் விழாவும், ஆலய நிர்வாகம், அம்பிகையின் அருள் ஒழுகு வடிவம், அம்பாள் அலங்காரத் தேரில் வீற்றிருக்கும் அற்புதக் காட்சி, புதிய தேர், சித்திரத் தேரின் வெள்ளோட்டமும் மலர் வெளியீடும், தேரின் உறுப்புகள், அம்பாள் அருள்பாலிக்குந் திறன், தீர்த்தோற்சவம், தெப்போற்சவம், பாமாலை சூட்டிய பாவலர் ஆகியவை இடம்பெற்றுள்ளன. தோத்திரத்திரட்டில் மனோன்மணி மாலை (சுத்தானந்த பாரதியார்), நயினை ஊஞ்சல் (ம.அமரசிங்கப் புலவர்), நயினாதீவு நாகேஸ்வரியம்மை பதிகம் (முத்துக்குமாருப் புலவர்), நயினை மான்மியம், மாணிக்கவாசக சுவாமி அவையடக்கம், ஈழமண்டலச் சருக்கம், மூர்த்தி விசேடச் சருக்கம் (வரகவி க.நாகமணிப் புலவர்), திருநாகதீபப் பதிகம் (வேலணையூர் ம.தம்பு உபாத்தியாயர்), தேவி பஞ்சகம் (க.இராமச்சந்திரன்), நயினைத் தபால், பாலர்களும்-நாகம்மாவும் (ஞா.ம.செல்வராஜன்) ஆகியவை தொகுக்கப்பெற்றுள்ளன. (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5202

இலங்கையின் புராதன சைவாலயங்கள்: கதிர்காமம். குல.சபாநாதன். சென்னை 1: பாரி நிலையம், பிராட்வே, திருத்திய 2வது பதிப்பு, அக்டோபர் 1965. (சென்னை 17: சௌந்தரா பிரிண்டர்ஸ்). 110 பக்கம், விலை: ரூபா 2.00

இலங்கையின் புராதன சைவாலயங்கள்: கதிர்காமம். குல.சபாநாதன். கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், 361, 1/2, டாம் வீதி, 3வது பதிப்பு, 2007, 1வது பதிப்பு, 1947, 2வது பதிப்பு, 1965. (கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், 361, 1/2, டாம் வீதி).
xvi, 92 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 300., அளவு: 21.5x15 சமீ., ISBN: 978-955-9429-83-3.

இந்நூலில் முருக வழிபாடு, கதிர்காமம், கதிரை யாத்திரை ஆகிய தலைப்புகளிலான சிறு அறிமுகங்களும், கதிர்காம வேலவர் தோத்திரத் திரட்டும் இடம்பெற்றுள்ளன. தோத்திரத் திரட்டில், கதிர்காமம் மாணிக்கப்பிள்ளையார் திருவருட்பா, கதிர்காமக் கலம்பகம், கதிரைமலைப் பள்ளு, கதிர்காம வேலவர் திருவருட்பா, கதிர்மலைக் குமரவேள் துதி, கதிர்காமசுவாமி பேரில் மாலை, தனித் தமிழ்த் தலைமைக் கதிரமலைக் காந்திவேன் முருகன் திருப்பள்ளியெழுச்சி, கதிரைமலைப் பேரின்பக் காதல், கதிர்காமத் தாண்டகம், கதிர்காம வேலவர் பதிகம், முருகன் அருள்வேட்டல், முருகன் சந்நிதி முறை, கதிர்காமப் பிள்ளைத் தமிழ், கதிர்காம வேலவர் பதிகம், கதிர்காம வேலவர்மேல் பத்திக் கவிகள், கதிரைநான்மணிமாலை, கதிர்காம சுவாமி பஞ்சரத்தினம், கதிர்காம மாலை, கந்தனிருக்கும் கதிரைமலை, கதிர்காமநாதன் திருப்பள்ளியெழுச்சி, கதிரை யாத்திரை விளக்கம், கதிர்காமக் காட்சி அழைப்பு ஆகியன தொகுக்கப்பெற்றுள்ளன. இந்நூலுக்கான அணிந்துரையை பரமேஸ்வராக் கல்லூரி அதிபர் சு.நடேசபிள்ளையும், சிறப்புப் பாயிரத்தை கொழும்பு விவேகானந்த சபை இயற்றமிழாசிரியர் சிவங்.கருணாலய பாண்டியனாரும் வழங்கியுள்ளனர். குல.சபாநாதன் (1907-1986) "ஈழத்திலே அறிவாற் சிறந்து புலமை எய்தியோரின் வரலாற்றை முறைப்படி எழுதக்கூடிய ஒருவர்" என வண.சுவாமி ஞானப்பிரகாசர் அவர்களால் விதந்து போற்றப்பட்டவர். யாழ்ப்பாணம் கரம்பொன்னைச் சேர்ந்த இப்பெரியார் இலங்கை அரசின் தலைமை தமிழ் மொழிபெயர்ப்பாளராகப் பணியாற்றிய வேளையில் வித்தியாபோதினி, ஸ்ரீ லங்கா, முதலிய பத்திரிகைகளைத் திறம்பட நடத்திய பெருமைக்குரியவர். ஆண்டுதோறும் ஆடி மாதத்திற் பல்லாயிரக்கணக்கான மக்கள் பக்திப் பரவசராய் யாத்திரை சென்று வழிபடும் இலங்கையின் மிகப் புராதன தலமாகிய கதிர்காமத்திற்கு ஓர் அறிமுகமாக இந்நூல் அமைந்துள்ளது

5203

இலண்டன் சைவ மாநாடு (பதினொராவது) சிறப்புமலர். பொன்.பாலசுந்தரம் (மலர் ஆசிரியர்). இலண்டன் SE13 5ES: பிரித்தானிய சைவத் திருக்கோயில்கள் ஒன்றியம், 4A, Clarendon Rise, Lewisham, 1வது பதிப்பு, ஓகஸ்ட் 2008. (இலண்டன்: வாசன் அச்சகம், மிச்செம்).
144 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 30x21 சமீ.

பிரித்தானிய சைவத் திருக்கோயில்கள் ஒன்றியத்தின் பதினொராவது சைவமாநாடு 2008 ஓகஸ்ட் 23-24ம் திகதிகளில் இலண்டனில் இடம்பெற்றது. அதன்போது வெளியிடப்பட்ட இந்தச் சிறப்புமலரில் தலைவருரை, ஆசியுரைகள், வாழ்த்துரைகள் என்பனவற்றுடன், பல்வேறு இந்து சமயக் கட்டுரைகளும் இடம்பெற்றுள்ளன. இம்மாநாடு, 23.8.2008 அன்று ஸ்ரீ கணபதி ஆலயத்திலும் (125-133, Effra Road, Wimbledon, London SW19 8PU), 24.8.2008 அன்று லண்டன் சிவன் கோவிலிலும் (4A Clarendon Rise, Lewisham, London SE13 5ES) இடம்பெற்றது.

5204

ஈழத்துச் சிதம்பரம். ச.கணபதீசுவரக் குருக்கள். காரைநகர்: சுந்தரேசுவரர் தேவஸ்தானம், திண்ணபுரம், 1வது பதிப்பு, 1961. (சுன்னாகம்: கலாதேவி அச்சகம்).
100 பக்கம், 21 படங்கள், விலை: ரூபா 2.50

ஈழத்தின் பெருமையும், யாழ்ப்பாணத்தின் சிறப்பும், காரைநகரின் கவினும், தினகரன் என்னும் அந்தணரின் ஞாபகமாகத் திண்ணபுரம் என்னும் பெயர் வந்த வகையும், ஈழத்துச் சிதம்பரம் என்று போற்றப்படும் எழின்மிகு சிவத்தலத்தின் மாண்பும், வரலாறும், பிறவும் படிப்போருள்ளத்தில் படம் வரைந்தாற்போலப் பதியுமாறு இந்நூல் எழுதப்பெற்றுள்ளது. ஈற்றில் திண்ணபுரவந்தாதி, திண்ணபுரச் சுந்தரேசர் திருப்பதிகம், திண்ணபுரத் திருவூஞ்சல், திண்ணபுர வெண்பா என்னும் பக்திச் சுவை நிறைந்த பிரபந்தங்களும் பிற்சேர்க்கைகளாக இடம்பெற்றுள்ளன. (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5205

கதிர்காம மான்மியம். அ.சின்னையா சிவம். யாழ்ப்பாணம்: கஸ்தூரியா காந்தி பதிப்பகம், காலையடி, வேல்முருகன் ஸ்தலம், மேலைச் சங்கானை, 2வது பதிப்பு, ஜுன் 1954, 1வது பதிப்பு, மார்ச் 1954. (கொழும்பு 11: வி.பரநிருபசிங்கம், Stangard Printers Ltd., 196 Sea Street).
67 பக்கம், விலை: ரூபா 1.00

முருகன் திருத்தலமான கதிர்காமத்தைப் பற்றியும், அங்கு நடைபெறும் திருவிழா பற்றியும் இந்நூல் விரிவாக எடுத்துரைக்கின்றது. பெயரின் தாற்பரியம், பூசை முறை, ஆறுமுக இரகசியம், அரோஹரத் தாற்பரியம், தீச்சட்டி முறை, முருக ஸ்தலங்கள், முருகன் பெருமை, முருகன் திருவிளையாடல். உற்சவ காலம், யாத்திரை முறை, அன்ன சத்திரங்கள், மாணிக்க கங்கா மான்மியம், பாம்புப் புதுமை, விபூதி மான்மியம், தீர்த்த மான்மியம், சுவாமி தரிசனம். கதிரை மலை, விபூதி மலை, செல்லக் கதிர்காமம், கதிர்காமப் புராதனம். முத்துலிங்க சுவாமிகள், வள்ளி தெய்வானைப் பூர்வீகம், சமரச வழிபாடு, யாத்திரைப் பலன், உருத்திராக்க மான்மியம், கதிர்காம யாத்திரை விளக்கம், யான் பெற்ற இன்பம், கதிர்காமத் திருப்புகழ், கதிர்காம மான்மியக் கீர்த்தனைகள் ஆகிய தலைப்புகளில் நூல் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது. இந்நூலாசிரியர், கொழும்பு விவேகானந்த வித்தியாலயத்தின் ஆசிரியராவார். (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5206

கந்தவனநாதர் நான்மணிமாலையும் பதிகமும் திருப்பள்ளி எழுச்சியும். நவாலியூர் க.சோமசுந்தரப் புலவர். கனடா: வல்வை வரலாற்று ஆவணக் காப்பகம், 2வது பதிப்பு, ஏப்ரல் 2009, 1வது பதிப்பு, 1928. (கனடா: அச்சக விபரம் தரப்படவில்லை).
64 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18x12 சமீ.

கோலாலம்பூர் இலட்சுமி பிரசுராலயம் 1928இல் வெளியிட்ட மூலநூலின் மீள்பதிப்பு இதுவாகும். கந்தவன வரலாறு, நவாலியூர் க.சோமசுந்தரப் புலவர் வரலாறு, கந்தவனநாதர் நான்மணிமாலை, கந்தவனநாதர் பதிகம், கந்தவனநாதர் திருப்பள்ளி எழுச்சி முன்னுரை, கந்தவனநாதர் திருப்பள்ளி எழுச்சி ஆகிய ஆறு விடயங்கள் இந்நூலில் இடம்பெறுகின்றன. கந்தவனம் என்னும் பழமைபெற்ற திருத்தலம் யாழ்ப்பாணத்து வல்லிபட்டித்துறைக்குக் (வல்வெட்டித்துறை) கிழக்கே பருத்தித்துறைக்குப் போகும் வழியில் பொலிகண்டி என்னும் ஊரில் கடலருகே அமைந்துள்ளது.

5207

கற்பூர விநாயகர். கிருஷ்ணபிள்ளை சிவநேசன். பருத்தித்துறை: சுதர்சன் வெளியீடு, வியாபாரி மூலை, 1வது பதிப்பு, 2002. (கொழும்பு 6: எஸ்.பிரின்ட், வெள்ளவத்தை).
(14), 54 பக்கம், விளக்கப்படங்கள், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x15 சமீ.

பருத்தித்துறை- வியாபாரிமூலை, இன்பர்சிட்டி சித்திவிநாயகர் ஆலய வரலாற்று ஆய்வு நூல். கற்பூரம் விளைவித்து மகிமை பெற்றதால் கற்பூர விநாயகர் என்றும் போற்றப்படும் புனித தலம் இதுவாகும். ஆலயத்தின் தொடக்கம், வளர்ச்சி, அந்நியர் ஆட்சிக்கால அழிவு, இடைக்கால வளர்ச்சி, இப்போதைய சிறப்பு, கோவில் வளர்ச்சிக்கு ஊர் மக்களின் பங்களிப்பு போன்ற பல்வேறு அம்சங்களும் இந்நூலில் விரிவாகத் தரப்பட்டுள்ளன. வாய்மொழித் தகவல்களுக்கு மேலாக, குறைந்தது 400 வருடங்களுக்கு மேற்பட்ட வரலாற்றை பொருத்தமான ஆதாரக் குறிப்பகளுடன் இந்நூல் பதிவுசெய்கின்றது.

5208

கனடா துர்க்கேசுவரம் அன்னை துர்க்கை அடிதொழு வெண்பா. ச.வே.பஞ்சாட்சரம். கனடா: யாதவி சண்முகானந்தம், லோரன்ஸ் அன் பார்மசி, 1வது பதிப்பு, ஆடி 2006. (கனடா: அச்சக விபரம் தரப்படவில்லை).
16 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 10x13 சமீ.

கனடாவில் புலம்பெயர்ந்து வாழும் ஈழத்துக் கவிஞர் பண்டிதர் ச.வே.பஞ்சாட்சரம் அவர்கள் கனடாவில் ஸ்காபரோ நகரில் எழுந்தருளியிருக்கும் துர்க்கை அம்மன் பேரில் பாடிய வெண்பா.

5209

காரைநகர் களபூமி திக்கரை முருகன் இராஜகோபுர கும்பாபிஷேக மலர் 2008. பொன்.பாலசுந்தரம் (மலர் ஆசிரியர்). இலண்டன்: திக்கரை முருகன் கோபுரத் திருப்பணிச்சபை, ஐக்கிய இராச்சியக் கிளை, 1வது பதிப்பு, ஜனவரி 2008. (லண்டன், அச்சக விபரம் தரப்படவில்லை).
146 பக்கம், வண்ணப் புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 29.5X21.5 சமீ.

ஈழத்துக் காரைநகர், களபூமியில் கோயில்கொண்டெழுந்தருளியிருக்கும் திக்கரை முருகமூர்த்தி கோவிலின் இராஜகோபுரம் கட்டப்பெற்று கும்பாபிஷேகம் நிகழ்வதையொட்டி லண்டனில் 27.01.2008 அன்று வெளியிடப்பெற்ற சிறப்பு மலர் இது. சைவசமயம் மற்றும் காரைநகர் சார்ந்த 41 கட்டுரைகள் இம்மலரில் இடம்பெற்றுள்ளன.

5210

காரைநகர் திண்ணபுர மான்மியம். இ.வைத்தியலிங்கம். யாழ்ப்பாணம்: அமரர் இராமநாதர் பதஞ்சலி அவர்களின் நினைவு ஞாபகார்த்த வெளியீடு, 1வது பதிப்பு, விகாரி வருடம் 1960. (யாழ்ப்பாணம்: ஆனந்தா அச்சகம்).
16 பக்கம், விலை: சதம் 50.

ஈழத்துச் சிதம்பரம் என்றழைக்கப்படும் காரைநகர் சுந்தரேஸ்வரர் ஆலயம் வரலாற்றுச் சிறப்புப்பெற்றது. திண்ணபுர மான்மியம் என்னும் சுந்தரேசுவரர் ஆலய வரலாற்றை நூலாக எழுதிய ஆசிரியர், காரைநகர் கிழக்கு முன்னைநாள் தலைமைக்காரராவார். (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5211

சிதம்பர மான்மியம். ஆறுமுக நாவலர். சிதம்பரம்: ச.பொன்னுஸ்வாமி, தர்மபரிபாலகர், சிதம்பர சைவப்பிரகாச வித்தியாசாலை, 10வது பதிப்பு, ஹேவிளம்பி வருடம், சித்திரை 1957. (சென்னப் பட்டணம்: நாவலர் வித்தியாநுபாலனயந்திரசாலை)
44 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் வசன கட்டுரைகள் அடங்கிய நூல். சிதம்பர மகிமைச் சருக்கம், வியாக்கிரபாதச் சருக்கம், பதஞ்சலிச் சருக்கம், நடராசச் சருக்கம், இரணியவன்மச் சருக்கம், திருவிழாச் சருக்கம், தீர்த்தச் சருக்கம், நியமச் சருக்கம், சிவத்துரோகச் சருக்கம் ஆகிய தலைப்புகளில் ஆறுமுக நாவலரின் கட்டுரைகளும், அனுபந்தமாக சிதம்பர மகிமை என்ற தலைப்பில் பதிப்பாசிரியர் ச.பொன்னுஸ்வாமி அவர்களின் கட்டுரையும் இடம்பெற்றுள்ளன. (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5212

சிவயோகம்: கும்பாபிஷேக மலர் 2008. nghd;.ghyRe;juk; (kyu; Mrpupau;;). yz;ld; SW17 7EJ: &l;bq; mUs;kpF ,yz;ld; Kj;Jkhup mk;kd; jpUf;Nfhtpy;> 180-186> Upper Tooting Road, Tooting, 1tJ gjpg;G> khu;r; 2008. (சென்னை 600 094: உலகத் தமிழர் பதிப்பகம், 4, சௌராட்டிரா நகர், 7ஆம் தெரு, சூளைமேடு).
184 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 27.5x21 சமீ.

21.03.2008 அன்று வெளியிடப்பட்ட இம்மலரில் பல்வேறு சைவ சமயக் கட்டுரைகளும் கலை, பண்பாட்டு உணர்வினை புகலிடத் தமிழர் மத்தியில் ஊக்குவிக்கும் வகையில் அமைந்த பலவினக் கட்டுரைகளும் இடம்பெற்றுள்ளன.

5213

திருக்கேதீச்சரம். ஆ.கந்தையா. யாழ்ப்பாணம்: திருக்கேதீச்சர மகா கும்பாபிஷேக வெளியீடு, மு.கணபதிப்பிள்ளை, ஸ்ரீகாந்தா அச்சகம், காங்கேசன்துறை வீதி, 1வது பதிப்பு, ஓகஸ்ட் 1968. (யாழ்ப்பாணம்: ஸ்ரீகாந்தா அச்சகம், காங்கேசன்துறை வீதி).
112 பக்கம், விலை: ரூபா 3.00

திருக்கேதீச்சர வரலாறு பற்றி அரும்பெரும் விபரங்களையும், நாயன்மாருடைய பாசுரங்களிலேயுள்ள குறிப்புகளையும் பின்னாளில் நடைபெற்ற திருப்பணி விபரங்களையும் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. நூலாசிரியர் ஆ.கந்தையா எழுதிய கட்டுரைகளுடன் சேர். கந்தையா வைத்தியநாதன் எழுதிய ஆங்கிலக் கட்டுரைகளின் தமிழாக்கமும், திருக்கேதீச்சரம் பற்றிய அறிஞர்களின் கட்டுரைகளும், கொக்குவில் புலவர் த.குமாரசுவாமிப்பிள்ளை யாத்த ஊஞ்சற்பாட்டும் இந்நூலில் இடம்பெறுகின்றன. ஈற்றில் திருக்கேதீச்சரப் பதிகங்களும் அவற்றிற்கு விளக்கமாக எழுதப்பெற்ற பதவுரை-பொழிப்புரை என்பனவும் அமைந்துள்ளன. (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5214

திருக்கேதீஸ்வர வெளியீடுகள். கந்தையா வைத்தியநாதன். மன்னார்: திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணிச்சபை, திருக்கேதீச்சரம், 1வது பதிப்பு, 1957. (கொழும்பு 11: ஸ்டான்காட் பிரிண்டர்ஸ் லிமிட்டெட், 196 செட்டியார் தெரு).
72 பக்கம், விலை: ரூபா 2.00.

வரலாற்று முக்கியத்துவமான பல்வேறு திருக்கேதீச்சர தேவஸ்தான வெளியீடுகளின் தொகுப்பாக, இந்நூல் வெளிவந்துள்ளது. The New Lanka சஞ்சிகையின் ஒக்டோபர் 1954 இதழில் வெளிவந்த Thiruketheeswaram (The Story of an ancient Siva Temple) என்ற ஆங்கிலக் கட்டுரை, பி.குமாரசுவாமி 15.11.1893இல் யாழ்ப்பாணத்து எஸ்.நாகலிங்கம் என்பவருக்கு எழுதிய முக்கிய ஆங்கிலக் கடிதம், திருக்கேதீஸ்வரம் புராதன சிவாலயத்தின் வரலாறு (கந்தையா வைத்தியநாதன்), தேவாரகாலங்கண்ட மாதோட்ட வரலாறு (க.வைத்தியநாதன்), அப்பர் சுவாமிகள் திருத்தாண்டகத்தில் திருக்கேதீச்சரம், திருக்கேதீச்சர காணி விற்பனவு (13.12.1893இல் இந்துசாதனம் பத்திரிகையில் பிரசுரமான கட்டுரை), திருத்தொண்டர் புராணத்தில் திருக்கேதீச்சரம், வித்துவசிரோன்மணி ந.ச.பொன்னம்பலபிள்ளை அவர்கள் செய்த உரையோடு கூடிய திருக்கேதீச்சரத் தேவாரத் திருப்பதிகங்களும், திருக்கேதீச்சர மகிமை என்னும் சிறு நூலும் சேர்த்து 1935இல் திருப்பி அச்சிடப்பட்டபொழுது நல்லூர் ஸ்ரீமான் சு.கைலாசபிள்ளை அவர்கள் எழுதிய முகவுரை, திருக்கேதீச்சர மகிமை, மாணிக்கவாசகரின் திருவாசகத்தில் திருக்கேதீச்சரம், திருஞானசம்பந்த மூர்த்தி சுவாமிகள் அருளிச்செய்த திருக்கேதீச்சரத் தேவாரத் திருப்பதிகம், சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிச்செய்த திருக்கேதீச்சரத் தேவாரத் திருப்பதிகம், Jambukola (Kankesanthurai) and Mahatittha (Mantota) as ports of ancient Ceylon (B.J.Perera), Excavations at Tirukketisvaram: Appendix 1 of Report on the Archaeological Survey of Ceylon for 1950 (S.Sanmugaratnam), முப்பது ஆண்டுகளுக்கு முன் திருக்கேதீச்சர நிலைமை (குல.சபாநாதன் அவர்கள் 30 ஆண்டுகளுக்கு முன்னர் எழுதி கலைமகளில் பிரசுரமான கட்டுரையின் மீள்பதிப்பு), Mantota in early history and literature (Mudaliyar C.Rasanayagam) ஆகிய பிரசுரங்கள் இத்தொகுப்பில் ஒருங்கிணைக்கப்பெற்றுள்ளன. (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5215

திருக்கேதீஸ்வரம். ஸ்ரீ விசுவாம்பா விசாலாட்சி மாதாஜி. ஏழாலை: ஸ்ரீ விசுவாம்பா விசாலாட்சி மாதாஜி, குப்பிளான், 2வது பதிப்பு, மே 2004, 1வது பதிப்பு, மே 2002. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ் பிரைவேட் லிமிட்டெட், 48 B, புளுமெண்டால் வீதி).
(8), 36 பக்கம், விலை: ரூபா 75., அளவு: 22x14 சமீ.

ஈழத்தின் வரலாற்றுப் பெருமைபெற்ற திருக்கேதீச்சரத்தலம் பற்றி எழுதப்பட்ட நூல். கடந்த 13 வருடங்களாக இராணுவ நடவடிக்கைகளின் காரணமாகப் பூட்டப்பட்டுக் கிடந்த கோவிலைத் தரிசிப்பதற்காக, சமாதான காலத்தில் 11.04.2002 அன்று சிவராத்திரி தினத்தில் திருக்கேதீஸ்வரத்துக்குச் சென்று கோவிலின் நிலைமைகளைக் கண்டு, அங்கு பக்தர்களால் மேற்கொள்ளப்பட்டு வந்த புனருத்தாரணப் பணிகளைக்கண்டு ஊர் திரும்பிய பின்னர் இந்நூல் எழுதப்பட்டுள்ளது.

5216

திருக்கோணமலைத் திருவுருவங்கள். குல.சபாநாதன். கொழும்பு: குல.சபாநாதன், வெள்ளவத்தை, 1வது பதிப்பு, 1954. (கொழும்பு: நடராஜா அச்சகம்).
15 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை.

திருக்கோணமலை வெண்கலத் திருவுருவங்கள் Trincomalee Bronzes என்னும் பொருள்பற்றி டாக்டர் W.பாலேந்திரா அவர்கள் ரோயல் ஆசியச் சங்கத்தில் (Royal Asiatic Society) ஆங்கில மொழியில் ஒரு கட்டுரை வாசித்தார். பின்னர் அது நூலுருவிலும் வெளியாகியது. கோணேசர் ஆலயத்தின் பூர்வீக வரலாற்றையும், திருக்கோணமலையில் கண்டெடுக்கப்பட்ட விக்கிரகங்களின் சிறப்பையும் பற்றி டாக்டர் W.பாலேந்திராவின் கருத்துக்களையும், தான் சேகரித்த ஆதாரக் குறிப்புகளையும் இணைத்து இந்நூலை ஆக்கியுள்ளார். (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5217

துர்க்காபுரம்-தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தான நிர்வாகசபை 25 ஆண்டு நிறைவு வெள்ளிவிழா மலர். மலர் வெளியீட்டுக் குழு. தெல்லிப்பழை: ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், துர்க்காபுரம், 1வது பதிப்பு, ஆகஸ்ட் 1991. (சுன்னாகம்: திருமகள் அழுத்தகம்).
(10), 132 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25x19 சமீ.

30.08.1991 அன்று வெளியிடப்பெற்ற இம்மலரின் வெளியீட்டுக்குழுவில் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, நம.சிவப்பிரகாசம், சு.சிவவாகீசர், நா.தவநாதன், அ.சண்முகநாதன், சு.ஏழூர்நாயகம், ந.சிவபாலகணேசன், திருமதி ந.ஞானலிங்கம், புலவர் ம.பார்வதிநாதசிவம், கா.சிவபாலன் ஆகியோர் இடம்பெற்றிருக்கின்றனர். நிர்வாக சபை அறிக்கைகளுடன், துர்க்கை வழிபாட்டின் தொன்மையும் பெருமையும் (துர்க்காதாசன்), தத்துவம் நிறைந்த முக்கிய திருப்பணிகள் மூன்று (ந.சிவபாலகணேசன்), கோவிற் கலைகளின் நிலைக்களம் ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம் (ஏ.ரி.பொன்னுத்துரை), துர்க்கா தேவஸ்தான வளர்ச்சியில் பத்திரிகைகளின் பங்களிப்பு (கோகிலா மகேந்திரன்), சைவப் பெரியார் இ.நம.சிவப்பிரகாசம் அவர்கள் (ம.சி.சிதம்பரப்பிள்ளை) ஆகிய கட்டுரைகளும் இன்னும் பல சமயக் கட்டுரைகளும் இடம்பெற்றுள்ளன.

5218

துர்க்கேஸ்வரம் தல புராணம். ச.வே.பஞ்சாட்சரம். கனடா: சமய வளர்ச்சிப் பிரிவு, துர்க்கேஸ்வரம் தேவஸ்தானம், 30 Carnforth Road, Toronto, Ontario, M4A 2K7, ரொரன்ரோ, 1வது பதிப்பு, 2009. (கனடா: விவேகா அச்சகம்).
32 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14 சமீ.

யாழ்ப்பாணம் இணுவிலில் பிறந்த பண்டிதர் ச.வே.பஞ்சாட்சரம் 37 ஆண்டுகள் ஆசிரியராகப் பணியாற்றியவர். 54 நூல்கள் வரை வெளியிட்டுள்ள பன்னூலாசிரியரான இவர் பக்தி இலக்கியங்கள் படைப்பதில் அதிக ஈடுபாடுகொண்டவர். இதுவரை 25க்கும் அதிகமான சைவக் கோவில்களின் பேரில் பாடல்கள் இயற்றியுள்ளார். இவரது பணி கடல்கடந்தும் கனடாவில் தொடர்கின்றது. அவ்வகையில் கனடா ஒன்ராரியோவிலுள்ள துர்க்கேஸ்வரம் ஆலயத்தின் துர்க்கை அம்மன் மீது பாடப்பட்ட தலபுராணமே இதுவாகும். காப்பு, கடவுள் வாழ்த்து, நாட்டுப்படலம், நகரப்படலம், உற்பத்திப் படலம், தலப்படலம், உற்சவப் படலம், அற்புதப்படலம், ஆற்றுப்படலம், நூற்பயன் ஆகிய 10 பகுதிகளாக இந்நூல் வகுக்கப்பெற்றுள்ளது.

5219

நெதர்லான்ட் முதலாவது சைவ மாநாடு சிறப்புமலர். மலர் வெளியீட்டுக் குழு. The Netherlands: Vereneiging Sri Varatharaja Selvavinayagg.denhelder, 1வது பதிப்பு, மே 2007. (இலண்டன்: ஜே.ஆர்.அச்சகம்).
100 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 29.5x21 சமீ.

நெதர்லாந்து ஸ்ரீ வரதராஜ செல்வ விநாயகர் ஆலயம் நடத்தும் முதலாவது சைவ மாநாட்டையொட்டி வெளியிடப்பட்ட சிறப்பு மலர் இது. மேற்படி ஆலயத்தினர் 2007 மே மாதம் 18ம் திகதி முதல் 20ம் திகதி வரையிலான மூன்று நாட்கள் தமது கலாச்சார மண்டபத்தில் இம்மகாநாட்டை நடாத்தியிருந்தனர். இம்மாநாடு தொடர்பான வாழ்த்துச் செய்திகளும், சைவ சமயம் சார்ந்த கட்டுரைகளும் இம்மலரில் இடம்பெற்றுள்ளன.

5220

பன்றித் தலைச்சியில் கண்ணகி வழிபாட்டுக் கோலங்கள். ஆ.நடராசா. மட்டுவில்: கா.சிவபாலன், 1வது பதிப்பு, மார்ச் 2008. (கொழும்பு 6: டெக்னோ பிரின்ட், 55 டாக்டர் ஈ.ஏ. குரே மாவத்தை).
68 பக்கம், புகைப்படம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x15 சமீ.

இலங்கையில் பிரபல கண்ணகை அம்மன் வழிபாட்டுத் தலங்களுள் ஒன்றான மட்டுவில் பன்றித் தலைச்சி அம்மன் கோவில் பற்றிய நூலாக மேலோட்டமாகக் காட்சியளிப்பினும், ஈழத்துக் கண்ணகி வழிபாட்டுத் தலங்கள், மட்டக்களப்பில் கண்ணகி வழிபாட்டு முறைகள், சிலப்பதிகாரம் தரும் செய்திகள் போன்ற பல அம்சங்களை இந்நூல் கொண்டுள்ளது. ஆலயத்தின் புறநோக்கு, பன்றித்தலைச்சி, பத்தினித் தெய்வம், கண்ணகை கதைகள், கண்ணகை வழிபாட்டில் நாவலர் ஏற்படுத்திய தாக்கங்கள், மாறிவரும் நிகழ்வுகள் ஆகிய ஆறு தலைப்புகளில் இந்நூல் உருவாக்கப்பட்டுள்ளது. ஓய்வுபெற்ற ஆசிரியரான இந்நூலாசிரியர் இதுவரை சந்திரமௌலீசர் ஆலய வரலாறு, ஆனைவிழுந்தான் விநாயகர் வரலாறு கந்த புராணச் சிந்தனைகள் உள்ளிட்ட 10 நூல்களுக்கு மேல் எழுதியுள்ளார். இவரது சிவப்பிரகாசம் உரை 2001 ஆவணியிலிருந்து தொடர்ச்சியாக 26 மாதங்கள் சைவநீதி சஞ்சிகையில் வெளிவந்திருந்தது.

5221

ஸ்ரீ முன்னேஸ்வர மான்மியம். மு.சோமாஸ்கந்தக் குருக்கள். சிலாபம்: சி.பாலசுப்பிரமணியக் குருக்கள், ஆதீன பரிபாலன தர்மகர்த்தா, ஸ்ரீ முன்னேஸ்வர தேவஸ்தானம், 2வது பதிப்பு, 1949. (கொழும்பு: வீரகேசரி அச்சியந்திரசாலை, 123 1வது டிவிஷன், மருதானை).
44 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை.

இலங்கையின் வடமேல் மாகாணம் சிலாபம் பகுதியில் முன்னேஸ்வரம் தேவஸ்தானம் அமைந்துள்ளது. ஸ்ரீ தட்சிண கைலாச புராணத்தின் 15, 16ம் அத்தியாயங்களில் கூறப்பட்டுள்ள ஸ்ரீ முன்னேஸ்வர வைபவத்தையும், மேற்படி தேவஸ்தானத்திலுள்ள ஏட்டுப் பிரதிகளிலுள்ள குளக்கோட்டு மகாராசா முதலிய அரசர்களின் சரித்திரங்களையும், பிரம்மஸ்ரீ நா.குமாரஸ்வாமிக் குருக்களவர்களின் சரித்திரத்தையும் சேர்த்து இந்நூல் விரிவாக வெளியிடப்பட்டுள்ளது. (உள்ளடக்கம்: ஸ்ரீ ராமஸ்வாமி அருச்சித்த படலம், வியாசர் அருச்சித்த படலம், சூரிய குலோத்துங்க ஸ்ரீ வரராமதேவ சோழமகாராசாவின் குமாரன் குளக்கோட்டு மகாராசன் வழிபாட்டுப் படலம், இலங்கா சக்கரவர்த்தியான ஆறாவது ஸ்ரீ பராக்கிரமபாகு மகாராசன் வழிபாட்டுப்படலம், தாமிர சாசனப்படி இலங்கையையாண்ட கீர்த்திஸ்ரீ ராஜசிங்க மகாராசன் வழிபாட்டுப்படலம், பிரம்மஸ்ரீ குமாரஸ்வாமிக் குருக்கள் பூசித்த படலம், ஸ்ரீ வடிவாம்பிகா சமேத முன்னைநாதஸ்வாமி நவதுதி, சுந்தர சண்முகர் துதி). இந்நூலாசிரியர் ஸ்ரீ முன்னேஸ்வர தேவஸ்தான ஆதீன பரிபாலன தர்மகர்த்தா என்பதும் குறிப்பிடத்தக்கது. (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5222

ஸ்ரீ முன்னேஸ்வர வரலாறு. பா.சிவராமகிருஷ்ண சர்மா. சிலாபம்: ப.சிவராமகிருஷ்ண சர்மா, 144 முன்னேஸ்வரம், 1வது பதிப்பு, ஆகஸ்ட் 1968. (Colombo 2: The Colombo Co-operative Printers' Society Ltd., Commercial Building).
73 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை.

முன்னேஸ்வரர் கோவிலின் வரலாற்றை விபரிக்கும் இந்நூலில் கோயிலின் சூழலும் எல்லைகளும், இதிகாச, புராண வரலாறுகளும் கர்ணபரம்பரைக் கதைகளும், சரித்திரப் பின்னணி, முன்னேஸ்வரக் கோவிலின் சிறப்பு அம்சங்கள், பூஜைகளும் விழாக்களும், உற்சவங்கள், முன்னேஸ்வரம் கோவிலில் நடைபெற்ற முக்கிய விழாக்கள், மகா கும்பாபிஷேகம், கோவிலும் சமூகமும், கோவிலும் இசையும் ஆகிய விடயங்கள் தனித்தலைப்புகளில் விபரிக்கப்பட்டுள்ளன. இந்நூலுக்கான அணிந்துரையை ஸ்ரீமுன்னேஸ்வர தேவஸ்தான ஆதீன பரிபாலனகர்த்தா சி.பாலசுப்ரமணியக் குருக்களும், சிறப்புப் பாயிரத்தை கி.வா.ஜகந்நாதனும், ஆசியுரையை கா.கைலாசநாதக் குருக்களும் வழங்கியுள்ளனர். (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5223

ஸ்ரீ முன்னேஸ்வர ஷேத்திர (வயல்) விநாயகர் கோவில் மகா கும்பாபிஷேக மலர். பா.சிவராமகிருஷ்ண சர்மா (பதிப்பாசிரியர்). சிலாபம்: ஷேத்திர விநாயகர் கோவில், முன்னேஸ்வரம், 1வது பதிப்பு பெப்ரவரி 2007. ((கொழும்பு 6: Techno Print).
(10), 132 பக்கம், வண்ணப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 30x21 சமீ.

மேற்படி ஆலயத்தின் கும்பாபிஷேகம் 05.02.2007 அன்று இடம்பெற்றபோது வெளியிடப்பட்ட சிறப்புமலர். கும்பாபிஷேக மகிமை பற்றியும், விநாயகர் பெருமை பற்றியும், இலங்கையின் விநாயகர் ஆலயங்கள் பற்றியும் அரிய பல தகவல்களைத் தாங்கி இம்மலர் வெளிவந்துள்ளது. 35 தமிழ்க் கட்டுரைகளும், 3 சிங்களக் கட்டுரைகளும் 3 ஆங்கிலக் கட்டுரைகளும் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன.

5224

ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய வரலாறு. வை.அநவரதவிநாயக மூர்த்தி. கொழும்பு – 06: சிவகாமி அமம்மாள் பப்ளிகேஷன். இல.39, 36ஆவது ஒழுங்கை, வெள்ளவத்தை, 1வது பதிப்பு, டிசம்பர் 1999. (கொழும்பு – 13: யுனிஆர்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் 48B. புளுமெண்டால் வீதி).
112 பக்கம், விலை: ரூபா 60., அளவு: 20.5x13.5 சமீ.

திருநெல்வேலி பழங்கிணற்றடி அருள்மிகு ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலயத்தின் வரலாற்றினையும், சிறப்புகளையும் இந்நூல் விளக்குகின்றது. வரலாற்று புகழ்மிக்க ஆலயத்தின் கட்டிட அமைப்பு முதல் தெய்வீக சக்திகள் வரை நூலாசிரியர் தெளிவாக எடுத்துரைத்துள்ளார். இந்நூலாசிரியர் தமிழ் புலமைப் பாரம்பரியத்தில் வந்தவர். பவள விழா கண்ட முதுபெரும் எழுத்தாளர். 50களில் வெளிவந்த உதயன் பத்திரிகையின் ஆசிரியர். கல்வியமைச்சின் நிர்வாக அதிகாரியாகக் கடமையாற்றியதுடன், கல்வியமைச்சின் இந்துமன்றத் தலைவராகவும் பணிபுரிந்தவர். சந்நிதி சமய சஞ்சிகையின் மதியுரைஞர்களில் ஒருவராவார். இந்த நூல் இந்து சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பரிசு பெற்றது.

மேலும் பார்க்க: 5318

297 இஸ்லாம்

5225

அருட்கொடை: நபி பெருமானாரின் பொன்மொழிக் களஞ்சியம். எஸ்.எம்.ஜவுபர். கண்டி: ரஹ்மத் பதிப்பகம், பிரவுன்ரிக் வீதி, 1வது பதிப்பு, ஜுலை 1965. (கொழும்பு 13: ரெயின்போ பிரிண்டர்ஸ், 231 ஆதிருப்பள்ளித் தெரு).
106 பக்கம், விலை: ரூபா 2.25

நபி பெருமானின் பொன்மொழிகளின் தொகுப்பு நூல். கவிஞர் புரட்சிக் கமாலின் வாழ்த்துரையுடன் கூடியது. (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5226

ஆசாரக் கோவை. மு.அ.க.அப்துல் மஜீது (மூலம்), அல்லாமா ம.முகம்மது உவைஸ் (பதிப்பாசிரியர்). அட்டாளைச்சேனை: கலை அமுத வெளியீடு, அரசினர் முஸ்லிம் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை, 1வது பதிப்பு, ஆண்டு விபரம் இல்லை. (காலி: அல்பியன் பிரஸ் லிமிடெட்).
34 பக்கம், விலை: ரூபா 1.25.

ஆசாரக்கோவை ஒழுக்க முறைகளையும் ஆசாரங்களையும் கூறுவது. இந்நூல் இஸ்லாமிய ஆசாரங்களையும், ஒழுக்க முறைகளையும், வாழ்க்கை வழிகளையும் எடுத்துரைக்கின்றது. இந்நூல் கீழக்கரை முகம்மது அப்துல் கறீம் மரைக்காயர் குமாரர் இயற்றமிழ் வித்துவான் மு.அ.க.அப்துல் மஜீது அவர்களால் எழுதப்பட்டுள்ளது. கல்பிட்டி மகா ரா.ரா.ஸ்ரீஉமறு கத்தாபு மரைக்காயர் குமாரர் ஸ்ரீமான் முகம்மது தம்பி மரைக்காயர் முயற்சியினால் சென்னை கலாரத் நகரம் அச்சுக்கூடத்தில் 1902இல் இதன் மூலநூல் பதிப்பிக்கப்பட்டுள்ளது. இம்மறுபதிப்பு 1970க்கு முன்னர் வெளியிடப்பட்டிருக்கலாம். (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5227

ஈமானின் கிளைகள். ஓட்டமாவடி அறபாத். வாழைச்சேனை: சுஹா பப்ளிகேஷன்ஸ், இல.159, எம்.பி.சீ.எஸ். முன் வீதி, மாவடிச்சேனை, 1வது பதிப்பு, செப்டெம்பர் 2006. (சென்னை 600001: சஜிதா கிராப்பிக்ஸ்).
128 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 17x12 சமீ., ISBN: 955-8409-20-0.

ஈமான் என்ற அரபுப் பதம் நம்பிக்கை என்ற கருத்தை புலப்படுத்தும். இந்நூல் இஸ்லாமிய அக உணர்வினை கனதிப்படுத்தும் ஆன்மீக விடயம் சார்ந்த கட்டுரைகளின் தொகுப்பாகும். இ.ஃ.திகாபும் அதன் சிறப்புகளும், மஸ்ஜித் நிர்வாகிகளிடம் இருக்கவேண்டிய பண்பு, சத்தியம் செய்தல், கடன் வழங்கலும் அவற்றின் சட்டங்களும், சீரழியும் தலைநகர், ஒரு பாலுறவு: இஸ்லாமியக் கண்ணோட்டம், காழி நீதவான்களின் பண்புகள், தொழுகையில் சுத்ரா (தடுப்பு), திறந்தவெளி நீராடல், வெட்கம் ஈமானின் ஒரு பகுதி, ரமழானும் தேர்தலும், போன்ற தலைப்புக்களில் எழுதப்பட்ட 22 கட்டுரைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன.

5228

சூபித்துவத்தின் உண்மை நிலை. அஷ்ஷெய்க் ஸாலிஹ் பின் பௌஸான் பின் அப்துல்லாஹ் அல்பௌஸான் (மூலம்), ஓட்டமாவடி அறபாத் (தமிழாக்கம்). வாழைச்சேனை: சுஹா பப்ளிகேஷன்ஸ், இல.159, எம்.பி.சீ.எஸ். முன் வீதி, மாவடிச்சேனை, 1வது பதிப்பு, டிசம்பர் 2002. (பொரல்லை: ஷபாப் பிரின்ட்ஸ், 18, கிரினியர் வீதி).
42 பக்கம், விலை: ரூபா 30., அளவு: 19x12.5 சமீ., ISBN: 955-8409-03-0.

இஸ்லாமிய வரலாற்றில் 3ம் நூற்றாண்டுக்குப் பின் தோன்றிய சூ.ஃபிகள் பற்றிய நூல் இது. தவறான துறவறக் கொள்கைகளை இனம் காட்டி, இஸ்லாத்தின் சூபித்துவம் என்பது இல்லை என்பதைத் தகுந்த ஆதாரங்களுடன் இந்நூல் விளக்குகின்றது. துறவறத்தை இஸ்லாம் வெறுத்து, சமூக வாழ்வு குடும்ப வாழ்வுடன் இணைந்து கடவுளுக்குச் செய்யும் பணியே உன்னதமான பணி எனச் சொல்கின்றது. சில துறவிகளின் இஸ்லாமிய விரோதச் செயற்பாடுகள், மற்றும் சித்தாந்தங்களையும் வரலாற்று ஆதாரத்துடன் இந்நூல் பேசுகின்றது.

5229

தப்லீக் அன்றும் இன்றும்: பாகம் 2: த.ஃலீம் தொகுப்பு குர் ஆனுக்கு எதிரானதா? ஓட்டமாவடி அறபாத். வாழைச்சேனை: இஸ்லாமிய புத்தக நிலையம், ஓட்டமாவடி எம்.பி.சீ.எஸ். வீதி, மாவடிச்சேனை, 2வது பதிப்பு, 1999, 1வது பதிப்பு, 1998. (தெகிவளை: ஏ.ஜே. பிரின்ட்ஸ், ஸ்டேஷன் வீதி).
58 பக்கம், விலை: ரூபா 30., அளவு: 19.5x13.5 சமீ., ISBN: 955-96317-2-1.

புனித குர் ஆன் ஏக அல்லாஹ்வால் ஜிப்ரயீல் என்ற வானவர் மூலம் முஹம்மது நபிக்கு வழங்கப்பட்ட வேதமாகும். இதில் மாற்றமோ, திருத்தமோ செய்ய அனுமதியில்லை. குர் ஆனுக்கு நிகராக, அதன் கருத்து கொள்கை, விசுவாசக் கோட்பாடுகளுக்கு முரணாக இஸ்லாமிய வரலாற்றில் சுமார் 50 வருடங்களுக்கு முன் தோன்றிய தப்லீக் என்ற இயக்கம், த.ஃலீம் என்ற புத்தகத்தை எழுதியுள்ளது. இதனை அவர்கள் செறிந்து வாழும் பள்ளிவாயில்களில் வாசித்து வருகின்றனர். த.ஃலீம் என்ற புத்தகத்திற்கு எதிரான தர்க்க விமர்சனங்களை ஆதாரபூர்வமாக இந்நூலில் ஆசிரியர் முன்வைத்திருக்கிறார். அல் குர்ஆனின் கருத்துக்களுடன் இது எங்ஙனம் மோதி சிதைவடைகின்றது என்பதை இந்நூல் விளக்குகின்றது. (இந்நூலின் முதலாவது பாகத்தின் நூல்தேட்டம் பதிவிலக்கம் 4143)

5230

தலைசிறந்த தலைப்புகள். முகம்மது சலாஹுத்தீன். பிரான்ஸ்: நண்பன் வெளியீடு, 5 Alle Irene Jolie Curie, Appt 144, 94200, Ivry Sur Seine, 1வது பதிப்பு, டிசம்பர் 1994. (பாரிஸ்: நியு மெய்கண்டான் அச்சகம்).
(42) பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x14.5 சமீ.

இஸ்லாமிய வரலாறு, கலாச்சாரம், இராணுவம், சட்டம், சமயம் ஆகியவை தொடர்பான 81 தலைப்புகளில் இந்நூல் தொகுக்கப்பட்டுள்ளது. முகம்மது நபியின் வாழ்க்கை வரலாற்று நிகழ்வுகளை இவை சுருங்கக் கூறுகின்றன. தலைசிறந்த வரலாற்று நாயகர், தலைசிறந்த இராணுவத் தளபதி, தலைசிறந்த அரசியல் அகதி, மிகப்பெரிய அரசியல் செல்வாக்கு எனப் பல்வேறு தலைப்புகளில் முகம்மது நபி அவர்களின் பெருமைகளை இந்நூல் ஒவ்வொரு தலைப்பிலும் பதிவுசெய்கின்றது.

5231

நபிகள் நாயகம் சல்லல்லாகு அலைகிவசல்லம் அவர்களின் பேரில் பிள்ளைத் தமிழ். செய்யிது அனபிய்யா சாஹிபுப் புலவர் (மூலம்), சி.நயினார் முகம்மது (உரையாசிரியர்). கொழும்பு 11: செட்டியார் தெரு மிலாத் இயக்கப் பிரசுரக் குழுவினர், 2வது பதிப்பு, 1975, 1வது பதிப்பு, 1883. (கொழும்பு 10: அல்பியன் அச்சகம், 157 ஜயந்த வீரசேகர மாவத்தை).

viii, 250 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22.5x15 சமீ.

தமிழில் இஸ்லாமிய நாகரீகம் பற்றிப் படிப்பவர்களுக்கு தகுதியான நூல் கிடைக்காத குறையை நிவர்த்திசெய்யும் வகையில் இலங்கையில் உருவான நூல். நூலின் அட்டையில் **நபிகள் நாயகம் பிள்ளைத் தமிழ்** என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இந்நூலின் முதல் பதிப்பு, திருவெண்காடு ஆறுமுகசாமிகளால் பார்வையிடப்பட்டு திருவொற்றியூர் இருசப்ப முதலியார் குமாரர் பரசுராம முதலியார் அவர்களின் பரப்பிரம முத்திராட்சரசாலையில் 1883ம் ஆண்டில் பதிப்பிக்கப்பட்டது. இலங்கை அரச தேர்வுத் திணைக்களத்தினால் நடாத்தப்படும் (1975-1978) பல்கலைக்கழகப் புகுமுகத் தகைமைகாண் கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தரத்) தேர்வுக்கான தமிழ்ப் பாடத்துக்குரிய பாடநூலாகவும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. (இந்நூல் School of Oriental and African Studies (SOAS), University of London நூலகத்தில் பார்வையிடப்பட்டது. பதிவிலக்கம் 544444.)

5232

நபிமொழி நாற்பது: மூலமும் உரையும். ஆ.மு.ஷரிபுத்தீன். கொழும்பு 13: அரசு வெளியீடு, 231, ஆதிருப்பள்ளித் தெரு, 1வது பதிப்பு, மார்ச் 1968. (கொழும்பு 13: ரெயின்போ பிரிண்டர்ஸ், 231, ஆதிருப்பள்ளித் தெரு).
76 பக்கம், விலை: ரூபா 1.50,

புலவர்மணி ஏ.பெரியதம்பிப்பிள்ளையின் அணிந்துரையுடனும், வித்துவான் வி.சி.கந்தையாவின் வாழ்துரையுடனும் வெளிவந்துள்ள இந்நூல் 15ஆவது அரசு வெளியீடாக வெளிவந்துள்ளது. இந்நூலிலுள்ள மூலக் கவிதைகள் 28.10.1067இல் ஸ்ரீலங்கா சாகித்திய மண்டலத்தின் இக்காலக் கவிதைக் குழு நடத்திய கவியரங்கில் அரங்கேற்றம் கண்டவை. வெண்பா யாப்பு முறையில் அமைக்கப்பெற்ற இக்கவிதைகள் வாழ்க்கையில் கடைப்பிடிக்கத் தக்கதாக ஏற்றுக்கொள்ளப்பட்ட ஹதீது கிரந்தங்களிலிருந்து தெரிந்தெடுக்கப்பட்ட நாற்பது நபிமொழிகள் வெண்பாக்களுக்கு ஏற்ற பொருளாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளன. நபிமொழிப் பொருள் பொதிந்த வெண்பாக்களுக்கு பொருளுரையும் விளக்கக் குறிப்புகளும் தெளிவாகத் தரப்பட்டுள்ளன. (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5233

பத்று வீரர்கள். எஸ்.எம்.முஸ்தபா மௌலானா. மருதமுனை: மத அறிஞர் மன்றம், உலமா சபை, 1வது பதிப்பு, 1967. (கொழும்பு 13: சென்ட்ரல் அச்சகம், 147, ஆட்டுப்பட்டித் தெரு).
62 பக்கம், விலை: ரூபா 1.00

இஸ்லாமிய மார்க்க அறிஞராக, பன்னூலாசிரியராக, மொழிபெயர்ப்பாளராக இயங்கியவர் அமரர் முஸ்தபா மௌலானா (06.04.1924-12.02.2009). அரபு மொழிப் பாண்டித்தியம் பெற்ற இவர் அம்மொழியிலிருந்து தமிழுக்கு வழங்கிய நூல் பத்று வீரர்களின் வரலாறு கூறும் இந்நூலாகும். இறைத்தூதர் முஹம்மது நபி (ஸல்) மதீனாவின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றதன் பின்னர் இடம்பெற்ற பிரதானமான போர் பத்று போராகும். பத்று போர்க்களத்தில் 313 போர்வீரர்களைக் கொண்ட இஸ்லாமிய படை, 1000 பேர்கொண்ட எதிரிப்படையுடன் சமர் புரிந்து வென்ற வரலாறு இது. (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5234

விசுவாசமாலை, போதனைமாலை, றமழான்மாலை, பதிஞானக்கீதம். கா.பு.மு.யூ.செய்யிது முஹம்மது அப்துற் றஹ்மான் புகாரி மௌலானா. கொழும்பு 11: புகாரி அன் கோ, நிர்.154, 2ம் குறுக்குத் தெரு, 1வது பதிப்பு, 1954. (கொழும்பு: என்.எஸ்.ஆர்.அச்சகம்).
120 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை.

காயல்பட்டினம் செய்யிதூல் சாதாத்துல் ஹுசைனி வரகவி அரசர் காசிம் புலவர் ஒலி நாயகம் கால் வழியுதித்த கா.பு.மு.யூ செய்யிது முஹம்மது அப்துற் றஹ்மான் புகாரி மௌலானா அவர்கள் எழுதிய இஸ்லாமிய செய்யுள்நூல் தொகுப்பு இது. விசுவாச மாலையில் கலிமாவின் ஷறுத்துக் கடமை நான்கின் விபரப்பாடல் முதலாக தொழுகையில் அறியவேண்டிய கடமைகளின் விபரப்பாடல்கள் ஈறாக 23 பாடல்களின் வழியாக இஸ்லாமிய வழிபாட்டு முறைகளை விளக்கப்படுகின்றது. போதனை மாலையில் சுத்தன் ஜோதி உத்தம தூதரின் முத்தான வாக்கியம், நவமணி மாலை, கலிபா அபூபக்கர் சித்திக்கு(றலி) அவர்களின் பொன்மொழிகளின் பாடல் ஆகியவை இடம்பெற்றுள்ளன. றமழான் மாலையில் நோன்பின் மகிமை, றமழானின் மன்றாட்டம், தறாவீஹுத் தொழுகை பலன் றமழானில் குர்ஆன் ஓதும் பலன்

ஆகியவை இடம்பெறுகின்றன. இறுதித் தொகுப்பான பதிஞானக் கீதத்தில் எல்லாம் வல்ல அல்லாஹுத்த ஆலாவை அறிந்து ஒருமைப் படுத்தத்தக்க ஆனந்தக் களிப்பு, மனிதச் சமூகம் யாவும் நன்மீட்சியுறும் அறிவையூட்டும் ஆரிய ஆனந்தக் களிப்பு, சுவர்க்கம் நரகம் இவைகள் மீதுள்ள சந்தேக தவிர்ப்பு பாடல், புனித அல்லாஹுவின் புகழுதயப் பதம் ஆகியவையும் இடம்பெற்றுள்ளன. (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

மேலும் பார்க்க: 5275, 5360

300 சமூக விஞ்ஞானங்கள்

301 சமூகவியல்

5235

இராமாயண சமூகம். ஆனந்த குருகே (ஆங்கில மூலம்), நா.இராமலிங்கம் (தமிழாக்கம்). யாழ்ப்பாணம்: கலைவாணி புத்தக நிலையம், 1வது பதிப்பு, ஜுன் 1966. (யாழ்ப்பாணம்: கலைவாணி அச்சகம்).
240 பக்கம், விலை: ரூபா 2.50

இது The Society of Ramayana என்ற ஆங்கில நூலின் தமிழாக்கம். கலாநிதி ஆனந்த பீ குருகே இலங்கையின் காலியில் 28.12.1928இல் பிறந்தவர். சம்ஸ்கிருதத்தையும் இந்திய வரலாற்றையும் கற்று 1947இல் இலங்கைப் பல்கலைக்கழகத்தில் சிறப்புத்தேர்ச்சி பெற்றவர். இந்நூலில் இவர் இராமாயண காலத்தில் இருந்த பாரத மக்களின் அடையாளமும் இடவமைவும், பொருளாதார வளங்கள், சமூக அமைப்பு, அன்றாட வாழ்வுமுறைகள், பெண்களும், திருமணமும், காதல் வாழ்வும், நம்பிக்கைகள், பழக்கவழக்கங்கள், சமயமும், தத்துவவியலும், கல்விமுறைகள் என்பன பற்றி விரிவாக ஆராய்ச்சிசெய்திருக்கிறார். இந்நூலை மொழிபெயர்த்துள்ள நா.இராமலிங்கம் தெல்லிப்பழை, வீமன்காமம் வடக்கைச் சேர்ந்தவர். (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5236

உலகமயம் பண்பாடு சமூக மாற்றம்: கட்டுரைத் தொகுப்பு. சவுத் விஷன். சென்னை 600 002: சவுத் விஷன், 6, தாயார் சாகிப் 2வது சந்து, 1வது பதிப்பு, ஜுலை 2001. (சென்னை 5: மணி ஆப்செட்).
128 பக்கம், விலை: இந்திய ரூபா 50., அளவு: 21x13.5 சமீ.

தி.சுந்தர்ராமன், கே.என்.பணிக்கர், அசோக் மித்ரா, சீத்தாராம் யெக்சூரி, மாலினி பட்டாச்சார்யா ஆகிய இந்திய எழுத்தாளர்களுடன், ந.இரவீந்திரன், சி.சிவசேகரம் ஆகிய ஈழத்து எழுத்தாளர்களின் கட்டுரைகளையும் கொண்ட நூல் இது. சாதியமும் சமூக மாற்றமும் என்ற கட்டுரையை ந.இரவீந்திரனும், உலகமயமாதலின் பண்பாட்டுச் சவாலும் தென் ஆசியக் கலைஞர்களும் என்ற தலைப்பிலான கட்டுரையை சி.சிவசேகரம் அவர்களும் எழுதியுள்ளனர்.

5237

காந்திய நோக்கு. நா.சிவபாதசுந்தரன். யாழ்ப்பாணம்: அகில இலங்கைக் காந்தீய சேவா சங்கம், நீர்வேலி, 1வது பதிப்பு, சித்திரை 1951. (யாழ்ப்பாணம்: ஸ்ரீ பார்வதி அச்சகம்).
64 பக்கம், விலை: சதம் 50.

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரித் தலைமைத் தமிழாசிரியரான தொல்புரக்கிழார் புலவர் நா.சிவபாதசுந்தரனார் ஆக்கிய இந்நூலுக்கு அகில இலங்கை காந்தீய சேவா சங்கத் தலைவர் மானிப்பாய் திரு. ச.பேரின்பநாயகம் மதிப்புரை வழங்கியுள்ளார். காந்தியை உலகம் அரசியல் மேதாவி என்றே கருதுகின்றது. உண்மையில் அவர் தோன்றிய காலகட்டத்தில் அரசியல் தொண்டு இன்றியமையாததாக இருந்துள்ளது. மக்கள் வாழ்க்கையின் பூரண வளர்ச்சிக்கு அரசியல் துறையில் இந்திய மக்கள் சுயாதீனம் கட்டாயமாக வேண்டுமென்று அவர் உணர்ந்தார். சுயாதீனமற்ற அடிமைகள் கலை வாழ்க்கையிலோ, சமய வாழ்விலோ அல்லது ஆன்மாவின் பரிபூரண பண்பாட்டிலோ, நிறைந்த வெற்றிபெற முடியாத நெருக்கடி நிலையிலேயே எப்போதும் வாழவேண்டும் என்பதை அறிந்து மகாத்மாவின் உள்ளம் புண்பட்டது. இதனால் தான் அவர் அரசியலில் ஈடுபட முன்வந்தார். அரசியலை அவர் இகழவோ, பூரண நிறைவானதாகக் கொள்ளவோ இல்லை என்பது முக்கியமானதாகும். இவற்றை அறிவாலும் அனுபவத்தாலும் அறிந்த

நூலாசிரியர் இந்நூலில் விளக்கியிருக்கின்றார். சமய நோக்கு, சமூக நோக்கு, சத்தியம், அகிம்சை, பிரமச்சரியம், அரசியல் நோக்கு, பொருளியல் நோக்கு ஆகிய தலைப்புகளில் புலவரவர்கள் காந்தி பற்றிய தனது கருத்துக்களை இந்நூலில் விளக்கியிருக்கிறார். (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5238

குடும்ப உறவுகள். கா.வைத்தீஸ்வரன். கொழும்பு 13: ராணி வெளியீடு, காயத்திரி புத்தகாலயம், 7, அல்பேர்ட் பிளேஸ், 1வது பதிப்பு, பெப்ரவரி 2008. (கொழும்பு 13: கீதா பதிப்பகம்).
132 பக்கம், விலை: ரூபா 235., அளவு: 22x15 சமீ., ISBN: 978-955-97793-8-4.

குடும்பங்களுக்கிடையே ஏற்படும் நெருக்கீடுகளின் பாதிப்பினால் குடும்ப உறவுகள் பலகோணங்களிலும் தாக்குதலுக்குள்ளாகிச் சிதைவுறுகின்றன. பிணைப்புகள் அறுந்து, பாசமும் நேசமும் பணத்தளவிலும் பேச்சளவிலும் நின்றுவிடுகின்றன. இந்நிலையில் ஆத்திசூடி, திருக்குறள் முதலான நீதிநூல்களின் துணையுடனும், அறிவுபூர்வமாகவும் தான் சார்ந்த உளவளத்துணை அறிவியலின் துணையுடனும் குடும்பப் பிரச்சினைகளின் மூலம் நாடி, பிரச்சினைகளைக் கையாளும் முறைகளை பல்வேறு உண்மைச் சம்பவங்களின் (case studies) ஆதரவுடன் விளக்கியிருக்கிறார். திருமண உறவில் தூய்மையான அன்பு, ஆரோக்கிய வாழ்வில் பாலுறவு, உறவுகளின் பாதிப்பு, தகாத உறவகளின் விபரீதம், விரும்பத்தகாத குடும்ப உறவுகள், வழிதவறும் பருவம் அடையாத பிள்ளைகளின் மனநிலை, என்று பவ்வேறு விடயங்கள் இந்நூலில் ஆராயப்பட்டுள்ளன.

5239

சமூக விஞ்ஞான ஆய்வுகள். வை.எம்.விக்கிரமசிங்க (சிங்கள மூலம்), செ.ரூபசிங்கம் (தமிழாக்கம்). வவனியா: திரு. எஸ்.ரூபசிங்கம், வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயம், 1வது பதிப்பு, 2004. (கொழும்பு 13: கௌரி அச்சகம், 207, ஆட்டுப்பட்டித் தெரு).
(14),113 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 200., அளவு: 22x15 சமீ., ISBN: 955-98588-1-5.

சமூக விஞ்ஞானத்துறை சார்ந்தவர்களுக்கும், கல்வியியில் ஆய்வுகள் முதலான பாடங்களில் பரீட்சைகளுக்குத் தோற்றுபவர்களுக்குமான வழிகாட்டி. இலங்கை இரஜரட்டை பல்கலைக்கழக விவசாயபீட சிரேஷ்ட விரிவுரையாளரான மூல நூலாசிரியர் சிங்களத்தில் எழுதி 2002இல் வெளியிட்ட நூலின் தமிழ் மொழிபெயர்ப்பு இதுவாகும். ஆய்வுகள் தொடர்பான அறிமுகம், ஆய்வுப் பிரச்சினைகளும் ஆய்வுகளும், ஆய்வுகள் மேற்கொள்ளப்படும் முறைகள், சமூக விஞ்ஞான ஆராய்ச்சிகள், விஞ்ஞான முறை, தரவுகளைச் சேகரித்தலும் அறிக்கைப்படுத்தலும், மாதிரியெடுத்தலும் பயன்பாடும், களநிலை அளவை ஆய்வகள் ஆகிய எட்டு அலகுகளில் இந்நூல் விரிகின்றது.

5240

சமூகக் கல்வியும் வரலாறும்: தரம் 11. இ.க.சிவஞானசுந்தரம். கொழும்பு 6: தென்றல் பப்ளிக்கேஷன்ஸ், 135, கனல் பாங்க் வீதி, 1வது பதிப்பு, வைகாசி 2001. (சென்னை 600001: மாணவர் மறுதோன்றி மையம்).
iv, 188 பக்கம், விளக்கப்படங்கள், சித்திரங்கள், விலை: ரூபா 130., அளவு: 22x14 சமீ.

க.பொ.த. சாதாரண தரப் புதிய பாடத்திட்டத்திற்கு (2001) அமைவான பரீட்சைக்குரிய முன்னோடி வினாவிடை. பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் பாடப்பகுதியை இலகுவாக விளங்கிக் கிரகிக்கவும், மனனம் செய்துகொள்ளவும் பொருத்தமான வினாவிடை தரப்பட்டுள்ளது. இடவிளக்கப் படங்களின் முக்கிய குறியீடுகள், இடங்கள், பரீட்சைக்கான மாதிரி வினாக்கள், விடைகள் ஆகியவற்றைக் கொண்டுள்ள நூல் இதுவாகும்.

5241

சமூகவியல் கோட்பாட்டு மூலங்கள்: அமைப்பும் இயங்கியலும். என்.சண்முகலிங்கன். தெல்லிப்பழை: நாகலிங்கம் நூலாலயம், நகுலகிரி, மைலிட்டி தெற்கு, 1வது பதிப்பு, டிசம்பர் 2008. (யாழ்ப்பாணம்: ஹரிகணன் பிரிண்டர்ஸ்).
(12), 127 பக்கம், விலை: ரூபா 350., அளவு: 22x15 சமீ., ISBN: 978-955-51560-0-4.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சமூகவியல் பேராசிரியர் நா.சண்முகலிங்கனின் இந்நூல் தமிழ்ச் சூழலில் சமூகவியல் சொல்லாடலை விரிவுபடுத்திக்கொள்ள துணைபுரிகின்றது. நேர்க்காட்சிவாத

கோட்பாட்டின் மூலவர், சமூகங்களின் படிமலர்ச்சி, இயங்கியல் பொருள்முதல்வாதம், சமூக ஒருங்கிணைவின் அறிவியலாக சமூகவியல், சமூக செயல் பற்றிய அகவய புரிதல், இடைவினைகளின் வடிவமாக சமூகம், பண்பாட்டு மனப்பாங்கின் இயக்கவியல் ஆகிய ஏழு இயல்களினூடாக சமூகவியல் கோட்பாட்டின் மூலங்களை தொடக்ககால சிந்தனையாளர்களின் கருத்துநிலைகளினூடாக விளக்கும்வகையில் இந்நூல் உருவாக்கப்பட்டுள்ளது.

5242

சமூகவியல் கோட்பாட்டுத் தடங்கள்: பாகம் 1. இ.இராஜேஸ்கண்ணன். யாழ்ப்பாணம்: சுனிதா இராஜேஸ்கண்ணன், சாத்வீக சுருதி, சாத்வீக பிரஸ்தம், இமையாணன் கிழக்கு, உடுப்பிட்டி, 1வது பதிப்பு, ஜனவரி 2005. (யாழ்ப்பாணம்: Small things and Services).
(8), 69 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 20x14.5 சமீ.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் சமூகவியலை சிறப்புத் துறையாகப் பயின்று பட்டம் பெற்று, அதே பல்கலைக்கழகத்தில் உதவி விரிவுரையாளராகப் பணியாற்றியவர் இந்நூலாசிரியர். சமூகவியல் கோட்பாட்டை மாணவர்களுக்குப் போதித்த அனுபவத்தின் வழியாக, சில கோட்பாட்டுத் தடங்களை மாணவர் தெளிவுறும்வண்ணம் இச்சிறு நூலுருவில் தந்துள்ளார். சமூகவியலின் உண்மையான தேட்டத்தை விளங்கிக்கொள்ளவும், சமூகவியலாளரின் சிந்தனைகளை விளங்கிக்கொள்ளவும், பிரயோக சமூகவியல் ஆய்வுகளின் வலிமையை நிலைநாட்டிக்கொள்ளவும், தற்காலத்தில் முனைப்புப் பெறுகின்ற கோட்பாட்டு இணைத்துருவாக்க முயற்சிகளை சரிவரப் புரிந்துகொள்ளவும் இந்நூல் துணைபுரிகின்றது. சமூகவியல் கோட்பாடுகளின் தோற்றம், தொழிற்பாட்டுவாதக் கோட்பாடுகள், முரண்பாட்டுக் கோட்பாடுகள், விமர்சனக் கோட்பாடு ஆகிய நான்கு பிரிவுகளில் இந்நூல் விளக்கப்படுகின்றது.

5243

நவீனத்துவத்தின் நெருக்கடிகளும் சிறந்த மானுட உலகை நிர்மாணிப்பதற்கான வாய்ப்புகளும். சுனில் விஜேசிறிவர்த்தன (ஆங்கில மூலம்), எஸ்.சிவகுருநாதன் (தமிழாக்கம்). கொழும்பு 6: கைலாசபதி ஆய்வு வட்டம், 29, 42ஆவது ஒழுங்கை, 1வது பதிப்பு, மாசி 2006. (கொழும்பு 6: டெக்னோ பிரின்ட், 55 டாக்டர் ஈ.ஏ. குரே மாவத்தை).
34 பக்கம், விலை: ரூபா 50., அளவு: 19.5x12 சமீ.

2006ம் ஆண்டுக்கான பேராசிரியர் கைலாசபதி நினைவுப் பேருரை இது. இன்றைய உலகில் சமாதானம் நிலவும் ஒரு பிரதேசத்தை தேடிக் கண்டுபிடிப்பதென்பது இயலாத காரியமாகப் படுகின்றது. அழிவின் விளிம்பை நோக்கி நகரும் இவ்வுலக மனித நடவடிக்கைகள் எதிர்காலத்தை கேள்விக்குரியதாக்கியுள்ளது. இந்நிலையிலும் நிலையான அமைதிக்கான சமூகத்திற்குரிய விதைகள் ஆங்காங்கே இப்பூமிப்பந்தில் ஊன்றப்பட்டு முளைத்தெழுந்து வருவதையும் காணமுடிகின்றது. மாபெரும் யுகமாற்றம் Great Turning என்ற பெயரில் பல அறிவாளர்கள் குழுக்கள் இம்மாற்றத்தை அழைக்கின்றனர். கைத்தொழில் வளர்ச்சியடைந்த ஒரு சமூகத்திலிருந்து, உயிர் பேண்தகு சமூகத்தை நோக்கி Life sustaining Society மனித இனம் இடம்பெயரும் என இவ்வொன்றியங்கள் நம்புகின்றன. இம்மாற்றம் பற்றிய எண்ணக்கருவை விளக்குவதாக இவ்வுரை அமைகின்றது.

5244

படித்தவர்கள். மு.நடேசபிள்ளை. யாழ்ப்பாணம்: மு.நடேசபிள்ளை, இந்துக் கல்லூரி தமிழ் வித்தியாசாலை, வண்ணார்பண்ணை, 1வது பதிப்பு, 1959. (யாழ்ப்பாணம்: ஸ்ரீகாந்தா அச்சகம்).
54 பக்கம், விலை: சதம் 50.

நம் நாட்டின் மக்கள் சமுதாயம் பலகாலமாகப் படுகுழியிற் தள்ளப்பட்டு வந்துள்ளது என்று கூறும் நூலாசிரியர், படித்த அறிவாளிகள், பணக்காரர்கள் என்ற சிறிய கூட்டத்துக்கும் பாடுபட்டுழைக்கும் படியாத பாமர மக்களுக்கும் வாழ்வின் தேவைகளில், வாழ்க்கைமுறைகளில் என்னென்ன வேற்றுமைகள்-வித்தியாசங்கள்-மாறுபாடுகள் காணப்படுகின்றன என்பதை மக்களுக்கு எடுத்துக்காட்டும் நோக்கத்துடன் இந்நூலைத் தான் எழுதியுள்ளதாகக் குறிப்பிடுகின்றார். சமூக வானிலே, உரிமை வானிலே, பொருளாதார வானிலே, அரசியல் வானிலே, நாகரீக வானிலே என்று குறிப்பிட்ட சில பிரிவுகளுக்குள் அதைப் பதிவுசெய்ய முனைந்துள்ளார். இந்நூலுக்கான அணிந்துரையை பருத்தித்துறை பொன்னம்பலம் கந்தையா (பாராளுமன்ற உறுப்பினர்) வழங்கியுள்ளார். (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5245

முதுமை. சா.சிவயோகன், தயா சோமசுந்தரம். யாழ்ப்பாணம்: சாந்திகம், 15, கச்சேரி நல்லூர் வீதி, 1வது பதிப்பு, மே 2001. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ் (பிரைவேட்) லிமிடெட், 48B, புளுமெண்டால் வீதி). xi, 86 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 22x14 சமீ., ISBN: 92-95012-02-X.

சுகமாகச் செயலாற்றும் முதியவர்கள் உள்ள ஒரு சமூகத்தில் முதுமையின் அனுபவம், அறிவு, பக்குவம், ஆசிர்வாதம் ஆகியவற்றின் பயன்கள் பக்கபலமாக அமைகின்றன. எனவே முதுமை ஒரு சமூகத்திற்கு அனுகூலமாக இருப்பதற்கு அந்தச் சமூகமும் உதவுதல் முக்கியமானதாகும். ஆரோக்கியமான முதுமையை இலக்காகக் கொண்ட பத்துக் கட்டுரைகளை இந்நூல் கொண்டுள்ளது. ஆரோக்கியமான முதுமை, முதுமைப்பருவம் ஒரு பொது சுகாதார நோக்கு, தமிழ் மரபில் முதுமை, முதுமை மருத்துவம், முதுமையில் உளவியல் பிரச்சினைகள், அறளை பெயர்தல், குடும்ப அமைப்பில் முதியவர்கள், முதுமையின் சவால்களை எதிர்கொள்ளல், அழகாக முதுமை எய்துதல், இறத்தல் ஆகிய தலைப்புக்களில் இக்கட்டுரைகள் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன.

5246

மூத்தோர் பராமரிப்பு. கா.வைத்தீஸ்வரன். தெகிவளை: கா.வைத்தீஸ்வரன். காயத்திரி அகம், 7 அல்பேர்ட் பிளேஸ், 1வது பதிப்பு, ஒக்டோபர் 2007. (கொழும்பு 13: கீதா பப்ளிக்கேஷன்ஸ்). 160 பக்கம், புகைப்படம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22x15 சமீ., ISBN: 978-955-97793-5-4.

21.08.2007இல் மறைந்த தனது துணைவியார் திருமதி செல்வராணி வைத்தீஸ்வரன் அவர்களின் நினைவாக வெளியிடப்பட்டுள்ள இந்நூலில், மூத்தோர் தனிமை, மனநிலை, எதிர்பார்ப்புகள், முதுமையில் சுறுசுறுப்பு போன்றவற்றையும், மூத்தோரைப் பராமரிப்போர், அவர்களுடனான அன்பான உபசரிப்பு, சமூகத்தில் அவர்களுக்கான அந்தஸ்து, அவர்களது தேவைகளை இனம்கண்டு பூர்த்திசெய்தல் போன்ற தகவல்களை 10 அத்தியாயங்களில் வழங்கியுள்ளார். இணுவிலைச் சேர்ந்த வைத்தீஸ்வரன் 1933இல் பிறந்தவர். கொக்குவில் இந்துக் கல்லூரியில் தன் இடைநிலைக்கல்வியை மேற்கொண்ட இவர் 1955இல் இலங்கை சுகாதாரத் திணைக்களத்தில் பொதுச் சுகாதாரப் பரிசோதகராகப் பணியில் இணைந்தவர். 1968முதல் சுகாதாரக் கல்வியாளராகப் பணியாற்றியவர். தன் 41 வருடகால சுகாதார சேவையிலிருந்து 1996இல் ஓய்வுபெற்றவர். தொடர்ந்தும் பல நூல்களை எழுதிவருகின்றார்.

5247

மெல்லச் சாகுது மனிசம். மலர் வெளியீட்டுக் குழு. பிரான்ஸ்: வெளியீட்டு விபரம் தரப்படவில்லை, 1வது பதிப்பு, 1999. (அச்சக விபரம் தரப்படவில்லை). 32 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x15 சமீ.

12.02.1999 அன்று பாரிஸ் மண்ணில் நிதர்சினி என்ற 12 வயது இலங்கைத் தமிழ்ச் சிறுமி குரூரமாகக் கொலைசெய்யப்பட்ட சம்பவத்தையொட்டி வெளியிடப்பட்ட மலர். அ.சி.பாலன், அ.இயல்வாணன், தி.உமாகாந்தன், ஞானி, அருந்ததி, நளாயினி தாமரைச்செல்வன், க.அசோக், கோசல்யா சொர்ணலிங்கம், சி.புஷ்பராஜா, ஜெயந்தி சாம்சன், ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம், அ.தேவதாசன், T.இராஜகோபாலன், நவாஜோதி, ரூபி ஜெயசீலன், உதயகுமார், வல்வை சுஜேன், நஞ்சினி, கலையரசி, நக்கீரன், முகத்தார் ஜேசுரத்தினம் கபில் தேவ் ஆகிய பன்னாட்டு கலை இலக்கிய சமூகநலன் விரும்பிகளின் கருத்துரைகள், கவிதைகள், உணர்வு வெளிப்பாடுகள் என்பனவற்றுடன், பெண்களின் குரல் (ஜேர்மனி), உயிர் நிழல் (எக்சில், பிரான்ஸ்) ஆகிய ஊடகங்களின் கருத்துக்களும் இச்சிறு நூலில் தொகுக்கப்பட்டுள்ளன. அனைத்தும் புகலிட மண்ணில் நிகழ்ந்ததும், ஈழத்தமிழர்களாலேயே நிகழ்த்தப்பட்டதுமான இந்த மனிதாபிமானமற்ற இக்கொடூரமான பாலியல் வன்முறைக் கொலை பற்றிய கண்டனக் கருத்துக்களைக் கொண்டமைந்தன.

மேலும் பார்க்க: 5758

301.1 பண்பாடு

5248

தமிழர் வரலாறும் பண்பாடும்: தெரிந்ததும் தெரியாததும். சி.மௌனகுரு. இலங்கை: பேராசிரியர் சி.மௌனகுரு, நுண்கலைத்துறை, கிழக்குப் பல்கலைக்கழகம், 1வது பதிப்பு, ஆவணி 2005. (கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், 361, 1/2, டாம் வீதி).

56 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22x14.5 சமீ.

மறைந்த இரா.சிவலிங்கம் நினைவுப்பேருரையின் நூல் வடிவம். இவ்வுரையில் தமிழர் வரலாறு, பண்பாடு, பற்றி செல்வாக்குச் செலுத்தும் நமக்குத் தெரிந்த கருத்துக்களும், நம்மிற் சிலருக்குத் தெரிந்தும் பலருக்குத் தெரியாததுமான செல்வாக்குச் செலுத்தாத கருத்துக்களும், செல்வாக்குச் செலுத்தாத கருத்துக்களை எவ்வாறு மேலும் வளர்த்தெடுத்து அனைத்துத் தமிழர்க்குமான ஒரு வரலாற்றையும் பண்பாட்டையும் கட்டமைக்கலாம் என்ற கருத்துக்களும் இவ்வுரையில் சுவைபடக் கூறப்பட்டுள்ளன.

5249

பண்பாடு: வேரும் விழுதும். சுப்பிரமணியம் இராசரத்தினம். கனடா: Tamil Heritage Association, 38 Balaclava Drive, Toronto, ONT. M1P 1E6, 1வது பதிப்பு, ஜுன் 2007. (கனடா: விவேகா அச்சகம், ரொரன்டோ).
(4), viii, 264 பக்கம், விலை: கனேடிய டொலர் 20., அளவு: 20.5x14 சமீ., ISBN: 978-0-9783337-0-6.

அறிமுகம், உயிரினங்களிற் பண்பாடு, பண்பாட்டின் தோற்றம், பண்பாட்டு வளர்ச்சி, பண்பாடு ஓர் அமைப்பு, பண்பாட்டின் கோலம், பொருளாக்கப் பண்பாடு, பண்பாடும் மேம்பாடும், பண்பாட்டின் பணிகள், சிந்தனை பண்பாட்டின் ஆணிவேர், உலக வளர்ச்சியும் பண்பாடும், மரபுவழிப் பண்பாட்டின் இன்றைய நிலை ஆகிய பன்னிரண்டு இயல்களினூடாக பண்பாடு என்றால் என்ன? அது எதன் அடிப்படையில் உலகில் வேறுபட்டுக் காணப்படுகின்றது? நாம் ஏன் தொடர்ந்தும் அதே பண்பாட்டைக் கடைப்பிடிக்கவேண்டும், பண்பாடு எமது பலமா பலவீனமா? போன்ற பல கேள்விகளுக்கு இந்நூலின் வாயிலாக ஆசிரியர் பதில் தேடுகின்றார். கனடாவில் கடந்த 19வருடங்களுக்கு மேலாகச் சமூக சேவையிலும், தமிழ் மொழி கற்றல் கற்பித்தல் பணிகளிலும் முழுமையாக ஈடுபட்டுழைத்து வருபவர் இந்நூலாசிரியர். இவரது **தமிழீழம் நாடும் அரசும்** என்ற நூல் 1995இல் வெளிவந்து மிகுந்த வரவேற்பைப் பெற்றிருந்தது.

5250

பிறந்த மண்ணும் புகலிடமும்: சில அவதானிப்புகள். கலைவளன் சிசு.நாகேந்திரன். அவுஸ்திரேலியா: அவுஸ்திரேலிய தமிழ்-இலக்கிய கலைச் சங்கம், ATLAS, P.O.Box 620, Preston, Victoria 3072, 1வது பதிப்பு, பங்குனி 2008. (கொழும்பு 6: கிரிப்ஸ்).
213 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22x15 சமீ.

மலையகத்தில் பிறந்து, யாழ்ப்பாணத்தில் வளர்ந்து இன்று புலம்பெயர்ந்து அவுஸ்திரேலியாவில் வாழும் நூலாசிரியரின் இந்த நூல் எமக்கு ஈழத்தமிழினத்தின் புலம்பெயர் வாழ்வியலை, கூட இருந்து அவதானித்து ஒரு நேர்முக வர்ணனையாகத் தருகின்றது. அதைத் தாயகத்திலிருப்போர்க்கு வெளிச்சம்போட்டுக் காட்டுகின்றது. ஈழத்தமிழராகப் புலம்பெயர்ந்து இன்று ஐரோப்பிய, அமெரிக்க, கனேடிய, அவுஸ்திரேலியத் தமிழர்களாக மாற்றம்பெற்றுவரும் உலகத் தமிழர் பற்றிய சமூகவியல் வாழ்வை ஆராயப்போகும் எதிர்காலத்துப் புத்திஜீவிகளின் ஆய்வுத் தேவைகளுக்கு இந்த உள்வீட்டுப்பிள்ளையின் கருத்துக்கள், அவதானிப்புகள் மிக அவசியமானதாகும். புகலிட வாழ்வில் லண்டனில் ஒன்பது ஆண்டுகளும், அவுஸ்திரேலியாவில் 13 ஆண்டுகளுமாக மொத்தம் 22 ஆண்டுகளைக் கழித்த நிலையில் இந்நூலை திரு நாகேந்திரன் எழுதியிருக்கிறார். இவரது பரந்த அவதானிப்பினதும் அனுபவத்தினதும் வெளிப்பாடாக இதிலுள்ள சம்பவங்கள் அமைகின்றன. ஒரு கதைசொல்லியாக மாத்திரமல்லாது ஆங்காங்கே தன் தனிப்பட்ட கருத்துக்களையும் தனது பார்வையில் பட்டவாறு வெளிப்படையாகச் சொல்லியிருக்கிறார். தமிழர் புலம்பெயர்ந்து வாழும் பல மேலைத்தேய நாடுகளுக்கும் இவர் சென்று வந்திருக்கிறார். அத்துடன் லண்டனிலும் அவுஸ்திரேலியாவிலும் தன் அவதானிப்புகளையும் சேர்த்துத் தொகுத்து ஒரு பொதுமைப்பாட்டுடனேயே தன் கருத்துக்களை இந்நூலில் முன்வைத்திருக்கிறார்.

302 பெண்ணியம்

5251

ஆணாதிக்கமும் சமூக ஒடுக்குமுறைகளும். பி.இரயாகரன். சென்னை 600002: கீழைக்காற்று வெளியீட்டகம், 10, அவுலியா சாஹிபு தெரு, எல்லீசு சாலை, 1வது பதிப்பு, டிசம்பர் 2002. (சென்னை 600024: எழில் பிரிண்ட்ஸ்).
368 பக்கம், விலை: இந்திய ரூபா 135., அளவு: 21.5x14 சமீ.

ஆணாதிக்கமும் பெண்ணியமும் என்ற முன்னைய நூலின் இரண்டாவது பாகமாக இந்நூல் விரிகின்றது. தனிச் சொத்துரிமையின் விளைவாகத் தோன்றிய ஆணாதிக்கம் பொருளாதார வகையில் மட்டுமின்றி, திருமணம், சடங்கு, குடும்ப ஒழுங்கு எனப் பண்பாட்டு வகையிலும் பெண்களை ஒடுக்குமுறைக்கு உள்ளாக்குகின்றது. இவை மட்டுமின்றி முதலாளித்துவ ஜனநாயகப் பசப்பல்களான அழகியல் நுகர்வு, பாலியல் சுதந்திரம், குழந்தைகள் தத்தெடுப்பு போன்ற நிலைகளின் கீழும் பெண்கள் சுரண்டப்பட்டு ஒடுக்கப்படுவதை இந்நூலிலுள்ள 38 கட்டுரைகளிலும் விரிவாக ஆராய்ந்துள்ளார்.

5252

ஆணாதிக்கமும் மார்க்சியமும். பி.இரயாகரன். சென்னை 600002: கீழைக்காற்று வெளியீட்டகம், 10, அவுலியா சாஹிபு தெரு, எல்லீசு சாலை, 1வது பதிப்பு, டிசம்பர் 2003. (சென்னை 600024: எழில் பிரிண்ட்ஸ்).
404 பக்கம், விலை: இந்திய ரூபா 150., அளவு: 21.5x14 சமீ.

பெண்களின் மீதான ஆணாதிக்கம் மற்றும் சமூக ஒடுக்குமுறையின் தொடர்ச்சியான வரலாற்று நிகழ்வுகள், காரணங்கள் என்பன இந்நூலின் முதல் இரண்டு பாகங்களான ஆணாதிக்கமும் பெண்ணியமும், ஆணாதிக்கமும் சமூக ஒடுக்குமுறைகளும் என்னும் இரண்டு நூல்களில் விரிவாகத் தொகுத்தளிக்கப்பட்டுள்ளன. மூன்றாவது பாகமாக வெளிவரும் இந்நூலில் முதலாளித்துவம் மற்றும் எகாதிபத்தியத்தின் கோரமான சுரண்டலின் விளைவாகத் தோற்றுவிக்கப்படும் பெண்களின் மீதான பிரச்சினைகள், பாலியல் நுகர்வு வெறி, மார்க்சியமில்லாத பெண்ணியவாதிகளின் நோக்கம், வர்க்கக் கண்ணோட்டத்தைப் புறக்கணித்துவிடும் தலித்தியவாதிகளின் ஆணாதிக்கப்போக்கு, பெண் சுதந்திரம் என்னும் பெயரில் வைக்கப்படும் உலகமயமாதலின் ஏகாதிபத்திய வக்கிரங்கள் ஆகியவை பற்றி விவாதிப்பதுடன் ஒட்டுமொத்த சமுதாய விதிகளுடன் பெண்கள் தவிர்க்கவியலாமல் இணைக்கப்பட்டிருக்கும் உண்மையை எடுத்துச்சொல்வதிலும் இதிலுள்ள 30 கட்டுரைகளும் வெற்றிகாண்கின்றன.

5253

1999ம் ஆண்டு சர்வதேச மகளிர் தினவிழா சிறப்பு மலர். இந்திராணி மகாலிங்கம் (மலர்க்குழு சார்பாக). அக்கரைப்பற்று: அம்பாரை மாவட்ட பெண்கள் அபிவிருத்தி நிறுவனம், ஆர்.கே.எம்.வீதி, 1வது பதிப்பு, 1999. (அக்கரைப்பற்று: செலெக்ஷன் அச்சகம்).
(13), 43 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24x18 சமீ.

அம்பாரை மாவட்ட பெண்கள் அபிவிருத்தி நிறுவனம், 1999ம் ஆண்டுக்கான சர்வதேச பெண்கள் தினத்தையொட்டி வெளியிடும் சிறப்பு மலர் இது. பல்வேறு அமைப்புகளின் ஆசிச் செய்திகளுடன், மகளிர்தின விழாவையொட்டி நடத்தப்பட்ட கவிதை,கட்டுரைப்போட்டிகளில் வெற்றிபெற்றோரின் படைப்புகளையும், அன்றைய நிகழ்வில் கௌரவிக்கப்படுவோர் பற்றிய விபரங்களையும் நிகழ்ச்சிநிரலையும், மேற்படி அபிவிருத்தி நிறுவனத்தின் பணிகள் பற்றிய புகைப்படங்களையும் இம்மலர் கொண்டுள்ளது.

5254

பீஜிங் பிரகடனமும் செயற்பாட்டுக்கான களமும். எம்.டி.ராஜதுரை (தமிழாக்கம்). கொழும்பு 5: இலங்கை அரசசார்பற்ற பெண்கள் அமைப்புகளின் கூட்டு, 12 1/1 எஸ்கொட் மாவத்தை, 1வது பதிப்பு, 1996. (அச்சக விபரம் தரப்படவில்லை).
(4), 281 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14 சமீ.

நான்காவது சர்வதேச பெண்கள் மகாநாடு சீனாவின் பீஜிங் நகரில் 4-15 செப்டெம்பர் 1995 இல் நடந்தது. அதன்போது, ஐக்கிய நாடுகள் சபையின் மக்கள் தகவல் பிரிவு, நியுயோர்க்கிலிருந்து வெளியிட்ட நூலின் தமிழாக்கம் இதுவாகும். இந்நூலின் வெளியீட்டுக்கான நிதியுதவியை நோர்வே அபிவிருத்தி நிறுவனம் (NORAD) வழங்கியுள்ளது.

5255

பெண். மலர் வெளியீட்டுக்குழு. மட்டக்களப்பு: சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம், 63, லேடி மனிங் ட்ரைவ், 1வது பதிப்பு, மார்ச் 1995. (அச்சக விபரம் தரப்படவில்லை).
(30) பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x17.5 சமீ.

1995 சர்வதேச பெண்கள் தின நிகழ்ச்சிகளையொட்டி சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையத்தினர் 11-12 மார்ச் 1995 அன்று வெளியிட்ட மலர். கனேடிய உலக பல்கலைக்கழக சேவையின் (WUSC)

மட்டக்களப்புப் பிராந்திய அலுவலகத்தின் ஆதரவுடன் இம்மலர் வெளியிடப்பட்டது. சிவரமணியின் கவிதையொன்றுடன் தொடங்கும் இம்மலரின் ஆக்கங்களில் சர்வதேச பெண்கள் தினம் பற்றிய வரலாற்றுத் தகவல், 1995ம் ஆண்டு சர்வதேச பெண்கள் தினத்தையொட்டி சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம் ஒழுங்குசெய்த விளையாட்டுப்போட்டி பற்றிய தகவல், கட்டுரைப் போட்டியில் முதற்பரிசுபெற்ற சோமசுந்தரம் ரங்கநாதன் எழுதிய சமூக கலாசார தளங்களில் பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் என்ற தலைப்பிலான கட்டுரை, சாருமதி யோகநாதன் எழுதிய எமது சமூக கலாசாரத் தளங்களில் பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் என்ற கட்டுரை, கவிதைப் போட்டியில் பரிசுபெற்ற நாவலப்பிட்டி மி.ஃருன் நிஸா அஸீஸ் எழுதிய கவிதை, மற்றும் சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையத்தின் பணிகள் பற்றிய விரிவான அறிக்கைகள் என்பன இம்மலரில் காணப்படுகின்றன.

5256

பெண்கள் சந்திப்பு மலர் 1995. மலர் வெளியீட்டுக் குழு. ஜேர்மனி: பெண்கள் சந்திப்பு, Mehringhof, Gneisenaustr – 2a, Aufgang iii, 2.stock, 10961, Berlin, 1வது பதிப்பு, 1995. (அச்சகவிபரம் அறியமுடியவில்லை).
40 பக்கம், ஓவியங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 29.5x21 சமீ.

ஒரு புதிய பெண் விம்பத்தை நோக்கி (மைத்திரேயி), பெண் குழந்தைகளும் பாலினத் தெரிவும் (ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம்), தென்னாசியாவின் பெண்கள் (குமுதினி ரோசா), ஸ்ரீலங்காவின் இன்றைய நிலைமைகள் பெண்கள் மீது ஏற்படுத்தும் பாதிப்பு (சுனிலா அபயசேகர), மத அடிப்படைவாதமும் இலங்கைப் பெண்களும் (மல்லிகா), மரணப்பிடியில் ஒரு உரிமைக் குரல் (உமா), நானும் என் எழுத்தும் (தஸ்லிமா நஸ்ரீன்), சப்பாற்றிஸ்ரா தேசிய விடுதலை இயக்கத்தில் பெண்கள், உயிர்ப்பின் துளிகள் (தேவா) ஆகிய கட்டுரைகள் இம்மலரில் இடம்பெற்றுள்ளன.

5257

பெண்கள் சந்திப்பு மலர் 5: 1996. மலர் வெளியீட்டுக் குழு. ஜேர்மனி: மலர் வெளியீட்டுக் குழு, Penkal Chanthippu Mehringhof, Tamil Women's Forum, Gneisenau str 29, Aufgang III, 2, Stock, 10961 Berlin, 1வது பதிப்பு, 1996. (அச்சக விபரம் தரப்படவில்லை).
54 பக்கம், சித்திரம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14.5 சமீ.

பேர்லினில் Tamil Women's Forum பெண்கள் அமைப்பினால் 1996இல் நடத்தப்பட்ட ஐந்தாவது பெண்கள் சந்திப்பின்போது வெளியிடப்பட்ட மலர் இது. ஒன்பது கட்டுரைகளையும், இரு சிறுகதைகளையும், நான்கு கவிதைகளையும் உள்ளடக்கிய இம்மலரின் படைப்புக்களை தயாநிதி, றஞ்சி, உமா, வ.கீதா, தேவா, ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம், விஜி, பாமதி, மல்லிகா, ரோகிணி முத்தையா, கமலா ஆகியோர் வழங்கியுள்ளனர். 17.3.1990இல் தன் முதலாவது சந்திப்பை நிகழ்த்திய தமிழ்ப்பெண்கள் சந்திப்பு அமைப்பின் 5வது சந்திப்பு மலரில், குழந்தை வளர்ப்பில் பால் வேறுபாடு (தயாநிதி, நோர்வே), பெண்கள் தொடர்பான கருத்தியல்கள், மீறல்கள் (றஞ்சி, சவிஸ்), ஒத்தைத் தண்டவாளமும் ஒரு கறுப்பு நீளமுடியும், பெண்களை இழிவுபடுத்தும் சொற்பதங்கள் பழமொழிகள் (உமா), குரல் -வ.கீதாவுடன் நேர்காணல் (றஞ்சி, சுவிஸ்), வன்முறைக்கு ஆதரவளிக்கும் நீதியின் கரங்கள் (தேவா), சினிமாவும் பெண்களும் (ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம், லண்டன்) தீவிரப் பெண்ணியம் (விஜி), வளரும் குழந்தை (மல்லிகா), பச்சோந்திகள் (ரோகிணி முத்தையா, நாவலப்பிட்டி), என்ன செய்யலாம் (கமலா) ஆகிய தலைப்புகளில் பெண்ணியவாதிகளின் சிந்தனைகள் பதிவுசெய்யப்பட்டுள்ளன.

5258

பெண்கள் சந்திப்பு மலர் 2002: பால்வினைத் தொழிலாளர்கள். லக்சுமி, தயாநிதி (மலர் வெளியீட்டுக் குழு சார்பாக). ஜேர்மனி: பெண்கள் சந்திப்பு, Tamil women's Forum, C/o SALZ, Waliblingerstr 59, 70372 Stuttgart, 1வது பதிப்பு, மே 2002. (அச்சகவிபரம் அறியமுடியவில்லை).
60 பக்கம், புகைப்படங்கள், ஓவியங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 30x21 சமீ.

ஏழாவது பெண்கள் சந்திப்பு மலராக வெளிவந்திருக்கும் இச்சிறப்பிதழ் பால்வினைத் தொழிலாளர்கள் சம்பந்தப்பட்ட வாதப்பிரதிவாதங்களை உள்ளடக்கிய சமூகவியல் ஆய்வுகளையும் ஆக்க இலக்கியங்களையும் கொண்டுள்ளது. 25.5.2002 அன்று தமிழ்ப் பெண்கள் கூட்டமைப்பினால் வெளியிடப்பட்ட இம்மலரில் பால்வினைத் தொழிலை சட்டபூர்வமாக்கலாமா? (பிரெற் லெவி), பால்வினைத் தொழில் மறுபக்கம் (ஜெயந்தி மாலா), பால்வினை (சந்திரவதனா செல்வகுமாரன்), உலகமயமாக்கலும் தென்கிழக்காசியாவின் பால்வினை வர்த்தகமும் (சிந்துக் கரையாள்), பால்வினை பரிணாமம் (தீபா), சில

முரண்கள்: குறிப்புகள் (தேவா), சென்னையில் ஒரு சின்னவீடு (ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம்), மானிடராய் வாழ (உமா), பால்வினைத் தொழில் பெண்ணிய நோக்கு (ரஞ்சி), பாலியல் சிக்கல்களா உரிமை மறுப்புக்களா? (பார்வதி கந்தசாமி), பால்வினைத் தொழிலும் ஆண் மேலாதிக்கமும் (அந்திரியா ட்வார்கின்), எனது பார்வையில் பெண்கள் சந்திப்பு மலர் 2001 (சந்திரவதனா செல்வகுமாரன்), பயந்தாங்கொள்ளி (நிருபா) ஆகிய படைப்புக்கள் இம்மலரில் இடம்பெற்றுள்ளன.

5259

பெண்கள் சந்திப்பு மலர் 9: 2005. தேவா, ரஞ்சி, உமா (மலர் வெளியீட்டுக் குழு). ஜேர்மனி: Tamil Women's Forum, c/o SALZ, Waibling erstrasse 59, 70372 Stuttgart, 1வது பதிப்பு, ஒக்டோபர் 2005. (சென்னை 5: மணி ஒப்செட்).
187 பக்கம், புகைப்படம், சித்திரம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24x18 சமீ.

1990 மார்ச் மாதத்தில் தனது முதலாவது சந்திப்பினை மேற்கொண்ட Tamil Women's Forum தனது 24ஆவது சந்திப்பை லண்டனில் மேற்கொண்ட வேளையில் இம்மலர் வெளியிடப்பட்டது. இத்தொடரில் வெளியிடப்படும் 9ஆவது மலர் இதுவாகும். சாம்பராக மௌனித்திருக்கும் ஒவ்வொரு பெண்ணுக்குள்ளும் கனன்றுகொண்டிருக்கும் ஒடுக்குமுறையின் தணல்கள், கவிதைகள், ஓவியங்கள், கதைகள், கட்டுரைகளாகச் சுவாலைகளாகி இம்மலரில் பதிவாகின்றன. இம்மலரின் சிறப்பம்சமாக அமையும் ஓவியங்களை வாசுகி (இலங்கை), மோனிகா (அமெரிக்கா), அருந்ததி (லண்டன்), சுகந்தி, பிங்கலை (ஜேர்மனி), ஆரதி (சுவிஸ்) ஆகியோர் தீட்டியுள்ளனர்.

5260

பெண்ணிலைவாதமும் தேசியவாதமும். குமாரி ஜெயவர்த்தனா (மூலம்), பத்மா சிவகுருநாதன் (தமிழாக்கம்). கொழும்பு 5: சமூக விஞ்ஞானிகள் சங்கம், 425/ 15, திம்பிரிகஸ்யாய வீதி, 1வது பதிப்பு, 2000. (கொழும்பு 06: Forward graphics, 31/10 Rohini Road).
(8), 64 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 125., அளவு: 20.5x14.5 சமீ.

"மூன்றாம் உலக நாடுகளில் பெண்ணிலைவாதமும் தேசியவாதமும்" என்ற ஆங்கில நூலில் காணப்பட்ட இந்தியா, இலங்கை பற்றிய பகுதிகளின் தமிழாக்கம் இந்த நூலாகும். இந்தியாவிலும் இலங்கையிலும் தமது விடுதலைக்கும் முன்னேற்றத்திற்குமாகப் பெண்கள் நடத்திய அரசியல் சமூக போராட்டங்கள் பற்றி அதிகம் அறியப்படாத வரலாறுகள் இந்த நூலில் விபரிக்கப்பட்டுள்ளன. தேசத்தின் விடுதலைக்காகவும் தமது விடுதலைக்காகவும் பெண்களால் நடத்தப்பட்ட தீரம் மிகுந்த புரட்சிகரமான போராட்டங்கள் பற்றியும் பெண்ணிலைவாதத்தின் வளர்ச்சி பற்றியும் ஆசிரியர் நன்கு விபரித்திருக்கிறார்.

5261

பெண்மையின் சுவடுகள். க.தணிகாசலம். கொழும்பு: திருமதி கந்தையா சின்னம்மா நினைவு வெளியீடு, 1வது பதிப்பு, நவம்பர் 2001. (கொழும்பு: Guru Printers and Nantha Graphics).
28 பக்கம், விலை: அன்பளிப்பு, அளவு: 18.5x12.5 சமீ.

ஈழத்துப் படைப்பாளியும், இலங்கை தேசிய கலை இலக்கியப் பேரவையின் செயற்பாட்டாளருமான க.தணிகாசலம் அவர்களின் அன்னை திருமதி கந்தையா சின்னம்மா (28.03.1913 - 01.10.2001) அவர்களின் மறைவை ஒட்டிய முதல்மாத நிகழ்வின்போது வெளியிடப்பட்ட இந்நினைவு மலரில், பெண்விடுதலை பற்றிய அவரது கருத்துக்களைத் தாங்கிய இரு கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. பெண்விடுதலை வேண்டும் (சமகாலப் பார்வை), சீதனமும் பெண்ணடிமையும் (தாயகம் 1994) ஆகிய இரு கட்டுரைகளும், கனலாக நின்றாள் (தாயகம் 1994) என்ற கவிதையும் இந்நூலில் மீள்பிரசுரமாகியுள்ளன.

5262

மார்க்சீயமும் பெண்நிலைவாதமும்: மிக முற்போக்கான ஒரு கூட்டிணைவை நோக்கி.... ஹெய்டி ஹார்ட்மன் (மூலம்), மௌ.சித்திரலேகா (தமிழாக்கம்). மட்டக்களப்பு: சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம், 46/2, பழைய வாடிவீட்டு வீதி, 1வது பதிப்பு, ஜனவரி 1999. (கொழும்பு 6: நியு கார்த்திகேயன் பிரின்டர்ஸ், 501/2 காலி வீதி, வெள்ளவத்தை).
(4), 38 பக்கம், விலை: ரூபா 60., அளவு: 21x14.5 சமீ.

The unhappy Marriage between Marxism and Feminism: Towards a Progressive Union என்ற தலைப்பில் பொருளியல் அறிஞரும் பெண்நிலைவாதியுமான Heidi Hartman எழுதிய நூலின் தமிழாக்கம் இது. பெண்கள் ஒடுக்குமுறை பற்றிய மார்க்சீய விளக்கத்திற்கும், பெண்நிலைவாத விளக்கத்திற்கும் இடையேயுள்ள வேறுபாடுகளும் இவை தொடர்பாக எழுந்த விவாதங்களும் இந்நூலில் முன்வைக்கப்பட்டுள்ளன.

5263

மூன்றாம் உலகில் பெண்ணியமும் தேசியமும்: 1ம் பாகம். குமாரி ஜெயவர்த்தன (மூல ஆசிரியர்), பத்மா சிவகுருநாதன் (தமிழாக்கம்). கொழும்பு 5: சமூக விஞ்ஞானிகள் சங்கம், 425/ 15, திம்பிரிகஸ்யாய வீதி, 1வது பதிப்பு, ஒக்டோபர் 2003. (கொழும்பு 13: ஈ-குவாலிட்டி கிராப்பிக்ஸ், 315, ஜம்பெட்டா வீதி).
xii, 69 பக்கம், விலை: ரூபா 125., அளவு: 22x15 சமீ., ISBN: 955-9102-68-0.

இந்நூல் நெதர்லாந்து சமூக கற்கைகள் நிறுவனத்தின் பெண்கள் மற்றும் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் 1982இல் வெளியிடப்பட்ட 19ம் நூற்றாண்டிலும் 20ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் மூன்றாவது உலகில் பெண்நிலைவாதமும் தேசியவாதமும் என்ற நூலின் திருத்தி விரிவாக்கப்பட்ட ஒரு பதிப்பாகும். இந்நூலில் பெண்நிலைவாதத்தின் ஆரம்ப வருடங்களையும் பல கீழைத்தேய நாடுகளில் "புதிய பெண்ணின்" எழுச்சியையும் விரிவாக எடுத்து விளக்கியுள்ளார்கள்.

5264

மூன்றாவது கண்: சமகால விவகாரங்களில் பெண்ணியலாளர்களின் கண்ணோட்டம். மோகனா பிரபாகரன் (பதிப்பாசிரியர்), பத்மா சிவகுருநாதன், மோகனா பிரபாகரன் (தமிழாக்கம்). கொழும்பு 5: Cats Eye Publications, 425/15, திம்பிரிகஸ்யாய வீதி, 1வது பதிப்பு, 2001. (கொழும்பு 6: Gnanam Graphics, 7-2/3, (2nd Floor), Orchard Shopping Complex, Wellawathe).
(8), 156 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x14.5 சமீ., ISBN: 955-9102-41-9.

மதமும் பெண்களும் (6), உழைக்கும் பெண்கள் (4), பெண்களும் உரிமைகளும் (6), பெண் என்ற பால்நிலையும் உயிர்துடிக்கும் இம்சைகளும் (9), பெண்களும் அரசியலும் (9), பெண் சாதனையாளர்கள் (5) ஆகிய ஆறு அத்தியாயங்களில் விரியும் இக்கட்டுரைத் தொகுப்பில் சமகால விவகாரங்களில் பெண்ணியலாளர்களின் கண்ணோட்டம் பதிவுசெய்யப்படுகின்றது. Cats Eye ஆங்கிலக் கட்டுரைகளில் தெரிவுசெய்யப்பட்ட கட்டுரைகளின் தமிழாக்கம் இவை. அடைப்புக்குறிக்குள் கட்டுரைகளின் எண்ணிக்கை தரப்பட்டுள்ளது.

5265

மைவிழிப் பார்வையில்: மாதர் கட்டுரைகள். ஷாமலா ஸ்டீவன். கொழும்பு 6: ஞானம் பதிப்பகம், 3B, 46ஆவது ஒழுங்கை, 1வது பதிப்பு, ஜனவரி 2008. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ் பிரைவேட் லிமிட்டெட், 48 B, புளூமெண்டால் வீதி).
viii, 68 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 22x14 சமீ., ISBN: 978-955-8354-19-3.

30 தலைப்புகளில் உருவான பெண்கள் சார்ந்த கட்டுரைகளின் தொகுப்பு இது. முன்னர் நவமணி பத்திரிகையில் வெளிவந்த இக்கட்டுரைகள் பெண்ணின் பெருமையையும், சமூக அரங்கில் அவர்கள் சந்திக்கும் பிரச்சினைகளையும் அவற்றிற்கான தீர்வுகளையும் ஓரளவு பேசுகின்றன. விளம்பரங்களில் பெண்கள் ஆபாசமாகப் பயன்படுத்தப்படுவதைச் சாடும் இவர், பெண்களுக்குப் பெண்களே எதிரிகளாக அமைந்துவிடும் போக்கையும் விமர்சிக்கின்றார். புரவலர் புத்தகப் பூங்காவின் மாதம் ஒரு நூல்திட்டத்தின் கீழ் வெளிவந்த ஐந்தாவது நூல்.

மேலும் பார்க்க: 5274, 5293, 5304, 5308, 5368, 5449, 5454, 5517, 5523, 5689 5792

305.5 சாதியம்

5266

சாதித் தாயின் சிலம்பொலி. சி.சரவணனார். வேலணை: சி.சரவணனார், திருவருள் நிலையம், 1வது பதிப்பு, 1928. (சங்கானை: சச்சிதானந்த யந்திரசாலை).

18 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை.

“ஒரு காலம் இந்திய நாட்டின் புறங்களிலே சொற்பெருக்காலும் உரைப் பதிப்பாலும் சாதியுலகிற்கு காந்திக் கழகத்தை ஒன்றி வெளியிடல் செய்துமுள்ளேன். பின்னை, சில அன்பர்கள் மேற்குறித்த பணிப் பெருக்கில் சிறிது முகந்து இச்சிற்றுரையாய் ஆக்கல் வேண்டுமெனக் கேட்டமையால் அவாவுடையோர் பெறுகவென இவ்வெளியீடு செய்தோம்” - நூலாசிரியர் குறிப்பு, 09.03.1928. (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5267

சாதியா சதியா? ஆ.மு.சி.வேலழகன். (இயற்பெயர்: சி.வேல்முருகு). மட்டக்களப்பு: பாக்கியம் பதிப்பகம், 25, முனைத் தெரு, 1வது பதிப்பு, தை 1973. (மட்டக்களப்பு: இராஜன் அச்சகம், 25. முனை வீதி).
50 பக்கம், விலை: ரூபா 7., அளவு: 17.5x12 சமீ.

தமிழரின் சாபக்கேடாக அமைந்துவிட்ட தீண்டாமை, முதலாளித்துவத்தின், நிலப்பிரபுத்துவத்தின் மாற்றமுடியாத சக்தியாக உருக்கொண்டுவிட்டது. ஈழத்தில் இதன் தாக்கம் குறையாத நிலையில், சிறு குழுக்கள் சாதியத்திற்குத் தூபமிட்டு சுயலாபத்திற்காக மக்கள் மத்தியில் பிளவுகளை ஏற்படுத்த முனைந்த வேளையில் இந்நூல் சாதியத்திற்கு எதிராக எழுதப்பட்டது.

5268

சாதியின்மையா சாதிமறைப்பா? காலிங்க டியுடர் சில்வா, பி.பி.சிவப்பிரகாசம், பரம்சோதி தங்கேஸ் (பதிப்பாசிரியர்கள்), மேனகா வேலாயுதம், பரம்சோதி தங்கேஸ் (தமிழாக்கம்). கொழும்பு: குமரன் புத்தக இல்லம், 361, ½ டாம் வீதி, இணை வெளியீட்டாளர்கள், புதுடில்லி: தலித் கற்கைகளுக்கான இந்திய நிறுவனம், கோபன்ஹேகென், டென்மார்க்: சர்வதேச தலித் கூட்டொருமைப்பாட்டு வலைப்பின்னல், 1வது பதிப்பு, 2009. (கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், 361, 1/2, டாம் வீதி).
xxii, 220 பக்கம், விலை: ரூபா 600., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-955-659-165-1.

இலங்கையில் மறைந்து காணப்படும் சாதிப்பாகுபாடு, சமூக விலக்கு மற்றும் எதிர்ப்பு நடவடிக்கைகளின் இயங்குநிலைகள் பற்றிய அறிதலை மேம்படுத்தும் வகையில் இடம்பெற்ற ஆய்வுக் கட்டுரைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. அறிமுகம் (காலிங்க டியுடர் சில்வா, பரம்சோதி தங்கேஸ், பி.பி.சிவப்பிரகாசம்), இலங்கையில் சாதிப்பாகுபாடு: ஒரு பொது நோக்கு (காலிங்க டியுடர் சில்வா, பரம்சோதி தங்கேஸ்), சிங்களச் சமூகத்தில் சாதிப்பாகுபாடு (காலிங்க டியுடர் சில்வா, பி.கொடிகபத்தே, டி.எம்.நிலங்க சந்திமா அபேவிக்ரம), யுத்தத்தால் பாதிக்கப்பட்ட யாழ்ப்பாணச் சமூகத்தில் சாதிப்பாகுபாடு (காலிங்க டியுடர் சில்வா, பரம்சோதி தங்கேஸ்), இலங்கையிலுள்ள இந்தியத் தமிழ்த் தோட்டத் தொழிலாளர்களிடையே சாதிப்பாகுபாடு (சசிகுமார் பாலசுந்தரம், ஏ.எஸ்.சந்திரபோஸ், பி.பி.சிவப்பிரகாசம்), நகர்ப்புறத் தீண்டாமை: கண்டி நகரிலுள்ள சுத்திகரிப்புத் தொழிலாளர்களின் நிலைமைகள் (காலிங்க டியுடர் சில்வா, பி.பி.சிவப்பிரகாசம், பரம்சோதி தங்கேஸ்), முடிவுரையும் சிபார்சுகளும் (காலிங்க டியுடர் சில்வா, பி.பி.சிவப்பிரகாசம், பரம்சோதி தங்கேஸ்) ஆகிய ஏழு அத்தியாயங்களுடன், றொடியாக்களின் தோற்றக் கதை, உள்ளூரில் இடம்பெயர்ந்து அகதிமுகாமில் வாழும் பஞ்சமர்களுடைய பிரச்சினைகளை விளக்கும் ஒரு தனிநபர் கற்கை, 27.05.2007 அன்று பேராதனைப் பல்கலைக்கழகத்தில் நடத்தப்பட்ட இலங்கையில் சாதி அடிப்படையிலான பாகுபாடு பற்றிய தேசிய ஆலோசனைப் பயிற்சிப் பட்டறை அறிக்கை ஆகியன பின்னிணைப்பாகவும் தரப்பட்டுள்ளன.

5269

தீண்டாமை. க.சோமசுந்தரம். யாழ்ப்பாணம்: சைவாபிமான சங்க வெளியீடு, 1வது பதிப்பு, கலியப்தம் 5035 (1933). (சங்கானை: சச்சிதானந்த யந்திரசாலை).
14 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை.

யாழ்ப்பாணம் வேதாகம சைவசித்தாந்த சபையார் பவ வருடம் சித்திரை மாதம் கந்தவன ஆலயத்தில் நடத்திய வருடாந்தக் கூட்டத்திலே சண்டிருப்பாய் ஸ்ரீ க.சோமசுந்தரம் அவர்கள் செய்த பிரசங்கத்தின் நூல்வடிவம் இதுவாகும். (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5270

பஞ்சமரும் சமூகத் தொடர்புகளும். பெஞ்சமின் ஜெயராஜா. யாழ்ப்பாணம்: அருட்திரு பென்ஜமின் ஜெயராஜா, கிறிஸ்தவ இறையியல் கல்லூரி, மருதனார் மடம், 1வது பதிப்பு, மார்ச் 2004. (யாழ்ப்பாணம்: ஏ.சீ.எம்.பிரஸ்).
(10), 136 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 20x14.5 சமீ., ISBN: 955-98324-0-9.

அருட்திரு. பெஞ்சமின் ஜெயராஜா அவர்கள் தனது இறையியல் முதுநிலைக் கல்விப் பட்டத்தின் ஆய்வுத் தேவைக்காகச் சமர்ப்பித்த "இலங்கையிலுள்ள பஞ்சமர்களின் வரலாறும் யாழ் தென்னிந்திய திருச்சபைத் தொடர்புகளும்" என்ற தலைப்பிலான ஆய்வு இதுவாகும். பஞ்சம மக்களின் ஒடுக்குமுறைக்கு எதிரான போராட்டம் வெகுஜனப் போராட்டமாக மேற்கிளம்பிய 1960களை மையப்படுத்தி அதற்கு முன்னரும் பின்னரும் திருச்சபை பஞ்சம மக்களோடு எற்படுத்தியிருந்த ஊடாட்டங்களை ஜெயராஜா அவர்கள் தெளிவு படுத்த முனைந்துள்ளார். 2004ம் ஆண்டுக்கான வடகிழக்கு மாகாண சாகித்தியப் பரிசினை பல்துறை நூலுக்காகப் பெற்றது.

5271

மட்டுநகரின் மருத்துவச் சமூகம்: பேசப்படாத வரலாறு. செபஸ்தியான் கவுரியல். மட்டக்களப்பு: மக்கள் மறுமலர்ச்சி அபிவிருத்திச் சங்கம், 205 திருக்கோணமலை வீதி, 1வது பதிப்பு, ஏப்ரல் 2009. (மட்டக்களப்பு: வனசிங்க அச்சகம்).
iv, 116 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 21x15 சமீ., ISBN: 978-955-0125-00-5.

மட்டக்களப்பு சமூகம், மருத்துவச் சமூகம், மருத்துவச் சமூகம் மழித்தல் சமூகமானமை, மட்டுநகரில் சாதியமும் பாதிப்புகளும், மட்டக்களப்பில் கத்தோலிக்க திருச்சபை, தேவாலயங்கள், ஆலயத்தில் சாதியம், ஆங்கிலேயர் ஆட்சியும் அரசியல் மாற்றங்களும், போராட்டங்கள், சமூக அமைப்புகள். உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள், சந்தித்த அநர்த்தங்கள், சமூக வளர்ச்சியில் கல்வியின் பங்களிப்பு ஆகிய தலைப்புகளில் மட்டக்களப்பின் சமூக வரலாற்றை நூலாசிரியர் விரிவாகவும், மருத்துவச் சமூகமாக பீடுடன் விளங்கிய ஒரு சமூகம் பின்னாளில் சிகையலங்கரிப்போர் சமூகமாகி - பரிகாரிகள் எனவும், அம்பட்டர் எனவும் சாதிய அமைப்புகளால் உள்வாங்கப்பட்ட வரலாற்றைக் குறிப்பாகவும் பதிவுசெய்திருக்கிறார். இச்சமூகத்தின் பின்னணி, அவர்கள் மருத்துவர்களாகவும், மந்திரவாதிகளாகவும், கூத்துக் கலைஞர்களாகவும் செயற்பட்ட விதம், அவர்களைப் பற்றிய விபரங்கள், அச்சமூகத்தின் தொழில்முறை, மட்டக்களப்புச் சமூகத்தில் அவர்களின் நிலைபதியாய் இருந்த இடம், அவர்கள் கிறிஸ்தவ சமயத்தில் இணைந்தமை, அதனால் கல்வியில் அச்சமூகத்தில் ஏற்பட்ட மாற்றங்கள், அவர்கள் எதிர்கொண்ட சவால்கள், அடக்கு முறைகள், அதற்கெதிரான போராட்டங்கள், இன்று அச்சமூகத்தின் நிலை என்ற சமூகக் குரலின் வரலாறும் செய்திகளும் இந்நூலில் விபரிக்கப்படுகின்றன. நூலாசிரியர் கவுரியல் 78 வயது நிரம்பியவர். கணக்காளராயிருந்து ஓய்வுபெற்றவர்.

5272

யாழ்ப்பாணச் சமூகம்: சாதி, இனத்துவம் முதலாய கட்டுரைகள். பரம்சோதி தங்கேஸ். இலங்கை: மலர் வெளியீடு, 1வது பதிப்பு, ஓகஸ்ட் 2007. (Colombo 12: Kribs, 162, Dam Street).
159 பக்கம், விலை: ரூபா 350., அளவு: 22x14.5 சமீ., ISBN: 978-955-50359-0-3.

யாழ்ப்பாணத்தில் சாதி: மரபும் மாற்றமும், யாழ்ப்பாணத்தில் சாதியும் இனத்துவமும்: அடையாளக் கட்டுமானங்கள், யாழ்ப்பாணச் சமூகத்தில் விதவைகள் உருவாக்கம்: மனப்பாங்குகள், பிரச்சினைகள், சவால்கள் ஆகிய தலைப்புகளிலான மூன்று சமூகவியல் கட்டுரைகளின் தொகுப்பு.

5273

வட இலங்கையில் ஆலயப் பிரவேச இயக்கம். த.சிவலிங்கம் (ஆங்கில மூலம்), கு.அம்பலவாணர், சி.நாகலிங்கம் (தமிழாக்கம்). யாழ்ப்பாணம்: அகில இலங்கைச் சைவ அனுட்டான பாதுகாப்புச் சபை, 1வது பதிப்பு, 1968. (சுன்னாகம்: திருமகள் அழுத்தகம்).
52 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை.

வட இலங்கையில் சிறுபான்மைத் தமிழரின் (பஞ்சமர்) ஆலயப் பிரவேச இயக்கம் 1966ம் ஆண்டின் பிற்பகுதியில் சில அரசியல்வாதிகளாலும், கம்யூனிஸ்ட் கட்சியினராலும் ஆரம்பிக்கப்பட்டது. இவ்வியக்கம் சைவ சமயத்திற்கு இடையூறுகளை விளைவிக்கும் என அஞ்சி அது வலுப்படாவண்ணம் அகில இலங்கைச் சைவ அனுட்டான பாதுகாப்புச் சபை வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துள்ளது. ஆனால் சில தினசரிப் பத்திரிகைகள், ஒருதலைப்பட்சமான செய்திகளை மேற்படி சபை தொடர்பாகப் பிரசுரித்து

வந்துள்ளது. இந்நிலையில் சபைத்தலைவர் த.சிவலிங்கம், யாழ்ப்பாணக் கச்சேரியில், யாழ்ப்பாண மாவட்ட அதிபர் தலைமையில் ஆலயப் பிரவேசத்தைப் பற்றி 28.3.1967, 10.9.1967 ஆகிய தினங்களில் நடைபெற்ற இரு மகாநாடுகளில் ஆங்கிலத்தில் எடுத்துரைத்த கருத்துக்கள் இவை. ஆங்கிலப் பிரதிகளிலிருந்து தமிழாக்கம் செய்யப்பட்டுள்ள இந்நூலின் முதலாவது அத்தியாயத்தை சுன்னாகம் கு.அம்பலவாணர் அவர்களும், இரண்டாம் மூன்றாம் அத்தியாயங்களை தெல்லிப்பழை சி.நாகலிங்கம் அவர்களும் மொழிபெயர்த்துள்ளனர். (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5274

வர்க்கம் சாதி பெண்நிலை பண்பாடு: பெரியாரின் சிந்தனைகள் பற்றிய ஒரு சமூக நோக்கு. செல்வி திருச்சந்திரன் (பதிப்பாசிரியர்). கொழும்பு 6: பெண்கள் கல்வி ஆய்வு நிறுவனம், 1வது பதிப்பு, கார்த்திகை 1998. (கொழும்பு: கருணாரத்ன அன் சன்ஸ்).
viii, 126 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 22x14 சமீ., ISBN: 955-9261-03-7.

இத்தொகுப்பில் சமூகவியல் சார்ந்த நான்கு ஆய்வுக் கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. பெரியாரின் பெண் விடுதலைக் கருத்துக்கள் (சித்திரலேகா மௌனகுரு), தமிழ்க் கலாச்சாரத்தில் பெரியாரின் கடவுள் மறுப்புக் கொள்கையின் தாக்கம் (ந.இரவீந்திரன்), வர்க்க முரண்பாடுகளைப் புறக்கணித்து சாதியத்தை அடிப்படையாகக் கொண்டு பெரியார் வேண்டிநின்ற சமூக உருமாற்றம் சாத்தியப்படுமா? (செல்வி திருச்சந்திரன்), மொழியும் இலக்கியமும்: பெரியாரின் சிந்தனைகள் (எம்.ஏ. நு.ஃமான்) ஆகியவை அவை.

மேலும் பார்க்க: 5897

306 கலாச்சாரம்

5275

இஸ்லாமிய கலாச்சாரம். முகம்மது சமீம். கொழும்பு 12: ஸபீனா பதிப்பகம், 39, டயஸ் பிளேஸ், 1வது பதிப்பு, ஜுன் 1962. (கொழும்பு 12: ஸபீனா அச்சகம்).
102 பக்கம், விலை: ரூபா 2.00

இஸ்லாமிய கலாச்சாரம் தொடர்பான எட்டுக் கட்டுரைகளைக் கொண்ட நூல். ஈழத்து தமிழ், இஸ்லாமிய அறிஞர்களிடையே அதிகம் பேசப்படும் ஒருவரான சமீம், மார்க்சிய சித்தாந்தங்களில் சிறுவயது முதலே ஈடுபாடு கொண்டவர். தமிழ் இலக்கியம் தொடர்பாகவும், இஸ்லாமிய இலக்கியம் தொடர்பாகவும் அவரது புலமை இக்கட்டுரைகளில் துலங்குகின்றது. (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

310. புள்ளிவிபரவியல்

5276

புள்ளிவிபரவியல்: அலகு 01. இ.த.பாஸ்கரன் (தொகுப்பாசிரியர்). யாழ்ப்பாணம்: இ.த.பாஸ்கரன், கைதடி குமர நகர், கைதடி, 1வது பதிப்பு, மார்ச் 2005. (யாழ்ப்பாணம் சரவணா அச்சகம்).
vi, 88 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x14.5 சமீ.

தனது 22 வருடகால கற்றல், கற்பித்தல் அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்ட கணித நூல். தரம் எட்டு தொடக்கம் தரம் பதினொன்று வரையிலுமுள்ள மாணவர்களுக்கான புதிய பாடத்திட்டத்தை அடிப்படையாகக்கொண்டு இந்நூல் உருவாக்கப்பட்டுள்ளது.

320 அரசறிவியல்

5277

அரசறிவியல். ஏ.சீ.எம்.பளீல். கல்முனை: ஏ.சீ.எம்.பளீல், தென் கிழக்கு மனிதவள அமைப்பு, கல்விப் பிரிவு, 1வது பதிப்பு, 2004. (சாய்ந்தமருது 9: ரோயல் ஒப்செட் பிரிண்டர்ஸ், பிரதான வீதி).
(4), 98 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 20x14 சமீ.

க.பொ.த. (உயர்தர) வகுப்பு மாணவர்களுக்கும் பல்கலைக்கழக உள்வாரி, வெளிவாரி பட்டப்படிப்பு மாணவர்களுக்கும் உகந்த நூல். அரசியல் எண்ணக் கருக்கள், உரிமையும் மனித உரிமையும், அரசியல் சமூக மூலக் கோட்பாடு ஆகிய விடயங்கள் இந்நூலில் விளக்கப்படுகின்றன.

5278

அரசறிவியல். வேலுப்பிள்ளை குணரத்தினம். கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், 361, 1/2, டாம் வீதி, 1வது பதிப்பு, 2009. (கொழும்பு 12: குமரன் பிரின்டர்ஸ், 361, 1/2, டாம் வீதி).
(x), 181 பக்கம், விலை: ரூபா 325., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-955-659-182-8.

ஓர் அரசு தோன்றும் முறை தொடக்கம் அதில் பின்பற்றப்பட வேண்டிய எண்ணக்கருக்கள் வரை அரசியல் துறையில் காணப்படும் மூலதத்துவங்களை சிறப்பாக விபரிப்பதாக இந்நூல் அமைந்துள்ளது. அரசறிவியலுக்கான விளக்கம், அதனை கற்பதற்கான வழிமுறைகள் என்பன தெளிவாக விளக்கப்படுவதுடன் அரசினுடைய தோற்றம், அதனுடைய தன்மை, அதன் எதிர்காலம் என்பன பற்றிய பல கோட்பாடுகளையும் தர்க்கரீதியாக இந்த நூல் விளக்குகின்றது. அத்துடன் நவீன அரசு பற்றிய கோட்பாடுகளையும் விளக்கி லிபரல்வாதம், மார்க்சியம், பாசிசம் பற்றிய அண்மைக்கால மாற்றங்களையும் ஆய்வுசெய்கின்றது. அத்துடன் அரசறிவியல் எண்ணக்கருக்களான சட்டம், இறைமை, அதிகாரப் பிரிவினை, உரிமைகள், சுதந்திரம், சமத்துவம், ஜனநாயகம், நல்லாட்சி, சிவில் சமூகம், அரசியலமைப்பு வாதம், ஜனநாயகம், நல்லாட்சி, சிவில் சமூகம், அரசியலமைப்பு வாதம், ஜனாதிபதித்துவ ஆட்சிமுறை, மந்திரிசபை ஆட்சிமுறை, அரசியலமைப்பு, பிரதிநிதித்துவம் முதலான விடயங்கள் தொடர்பிலும் கோட்பாட்டு ரீதியான விளக்கங்களை சிறப்பாக இந்நூல் முன்வைக்கிறது. நூலாசிரியர் கிழக்கிலங்கைப் பல்கலைக்கழகத்தில் சமூக விஞ்ஞானத்துறை தலைவராகப் பணியாற்றுகின்றார்.

5279

அரசறிவியலின் அடிப்படைத் தத்துவங்கள். குமாரலிங்கம் ரஞ்சகுமார். யாழ்ப்பாணம்: ஸ்ரீ லங்கா புத்தகசாலை, 234, காங்கேசன்துறை வீதி, 1வது பதிப்பு, டிசம்பர் 1995. (கொழும்பு 12: ஸ்ரீ லங்கா வெளியீடு, F.L. 1/14, டயஸ் பிளேஸ், குணசிங்கபுர).
vii, 171 பக்கம், விலை: ரூபா 125., அளவு: 21x14 சமீ.

அரசறிவியலும் அதன் அணுகுமுறைகளும், அரசும் அதன் தோற்றம் பற்றிய கோட்பாடுகளும், இறைமை, வலுப் பிரிவினையும் அதன் பிரயோகமும், அரசியல் திட்டமும் அதன் வகைப்பாடுகளும், சமஷ்டி ஆட்சிமுறை ஆகிய ஆறு இயல்களினூடாக அரசறிவியலின் அடிப்படைத் தத்துவங்கள் இந்நூலில் விளக்கப்பட்டுள்ளன.

5280

அரசியல் அறிக்கை: தமிழீழ தேசிய விடுதலை முன்னணி. மத்திய குழு. இலங்கை: தமிழீழ தேசிய விடுதலை முன்னணி (National Liberation Front of Tamil Eelam), 1வது பதிப்பு, 1983. (அச்சக விபரம் தரப்படவில்லை).
85 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18x12.5 சமீ.

தமிழீழ தேசிய விடுதலை முன்னணியின் 1வது தேசிய மாநாடு 1983ம் ஆண்டு செப்டெம்பர் 3ம், 4ம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது. NLFT விடுதலைப் போராட்ட அமைப்பின் கடந்த மூன்றாண்டு நடைமுறை வேலைத்திட்டத்தின் அனுபவத் தொகுப்பாக அமைந்த இவ்வறிக்கை அன்றைய மாநாட்டில் வாசிக்கப்பட்டு, பின்னர் வழங்கப்பட்ட ஆலோசனைகளையும் உள்வாங்கித் திருத்தி எழுதப்பட்டது. அவ்வறிக்கையின் திருத்திய பதிப்பு இதுவாகும்.

5281

இலங்கை அரசியலும் பொருளாதாரமும். ஏ.ஜே.உவில்சன் (ஆங்கில மூலம்), F.X.C.நடராசா (தமிழாக்கம்). கொழும்பு: ஸ்ரீலங்கா பப்ளிஷிங் கொம்பனி, 1வது பதிப்பு, 1965. (அவிசாவளை: G.P.D. ஜினதாச அன்.சன்ஸ், 142, வெல்லம்பிட்டிய).
219 பக்கம், விலை: ரூபா 5.00.

இந்நூலில் இலங்கை அரசியல் அமைப்பு விதிகளும் அரசாட்சியும், குறூ-மக்கலம் அரசியற் சீர்திருத்தம் (1912-1921), 1924-1931 மானிங் அரசியல் அமைப்புத் திட்டத்தில் தேசாதிபதி, 1924இன் மானிங்கு அரசியல் திட்டத்தின் கீழ் நிதிக்குழு, 1947-1959 ஆண்டுகளில் இலங்கை அமைச்சர்கள், அவர்களின் அரசியல் பொருளாதார சமூகப் பின்னணி, இலங்கையில் அமைச்சரவை ஆட்சி 1947-1959 என்பன விரிவாக ஆராயப்பட்டுள்ளன. (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5282

இலங்கையின் அரசியலும் அரசியற் கட்சிகளும்: பொதுமக்கள் கைநூல். W.L.ஜெயசிங்கம். யாழ்ப்பாணம்: ஜே.ஜீ.அரசரெட்டினம், மத சமுதாய ஆராய்ச்சி நிலையம், 76 ஏ, கோவில் வீதி, 1வது பதிப்பு, மே 1970. (யாழ்ப்பாணம்: ஆசீர்வாதம் அச்சகம், 32. கண்டி வீதி).
98 பக்கம், விலை: ரூபா 1.75.

யாழ்ப்பாணம் இல.8, சம்பத்திரிசியார் வீதியிலுள்ள றோக் ஜோசப் அவர்களால் பதிப்பிக்கப்பெற்ற இந்நூலில் இலங்கை அரசியலில் கட்சி ஆட்சி, நாட்டின் அரசியலின் பிரச்சினைகள், சில முக்கிய கட்சிகளின் இலக்குகளும் கொள்கைகளும் போன்ற அத்தியாயங்கள் அடங்கியுள்ளன. இலங்கையிலே கட்சி ஆட்சிமுறை பற்றியும், இலங்கை அரசியலில் பல்வேறு கட்சிகளின் ஆட்சிமுறைமைகளின் போக்குப் பற்றியும், இலங்கை அரசியலில் காணப்படும் பிரச்சினைகள், அரசியல் அமைப்புத் திட்டத்தில் ஆதார உரிமைப் பட்டியல் ஒன்று இல்லாதிருத்தலின் சிக்கல்கள் என்பன பற்றியும் இந்நூலில் விரிவான அறிவியல் தகவல்கள் காணப்படுகின்றன. (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5283

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி: கட்சியின்- ஸ்தாபன அமைப்பு, ஒழுங்குமுறைகள், சட்டங்கள் தொடர்பான அடிப்படை விதிகள். ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி. கொழும்பு: வெளியீட்டுத்துறை, ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (EPRLF), 1வது பதிப்பு, செப்டெம்பர் 1993. (தெகிவளை: Wasala Publications).
(4), 96 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 13.5x9.5 சமீ.

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி அமைப்பின் இரண்டாவது கட்சிக் காங்கிரஸ்சினால் 1993 மாசி 05-09 திகதிகளில் இடம்பெற்ற கூட்டங்களில் அங்கீகரிக்கப்பட்ட மேற்படி கட்சியின் ஸ்தாபன அமைப்பு, ஒழுங்கு முறைகள், சட்டங்கள், தொடர்பான அடிப்படை விதிமுறைகள் கொண்ட நூல் இது.

5284

கூட்டாட்சி பரிமாணங்களும் இலங்கை சிறுபான்மையினரும். சமூகநிலை மாற்ற நிறுவனம். (மூலம்), எஸ்.முத்தையா (தமிழாக்கம்). கொழும்பு: சமூகநிலை மாற்ற நிறுவனம், 1வது பதிப்பு, 2001. (கொழும்பு: தனம் அச்சகம்).
(4), 160 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22x15 சமீ.

2001ம் ஆண்டு மே 24இல் "அரசியல் சீர்திருத்த ஆலோசனைகளும் பிரதேசம் சாராத மக்களின் உரிமைகளும் மற்றும் அதிகார பரவலாக்கல்" என்ற தொனிப்பொருளில் கொழும்பில் இடம்பெற்ற கருத்தரங்கில் சமர்ப்பிக்கப்பட்ட கட்டுரைகள். சமூக நிலை மாற்ற நிறுவனம் (FCT), பிரடெரிக் ஈபர்ட் மன்றம் (FES), தெற்காசிய கழகம் (SAI) ஆகிய மூன்று நிறுவனங்களும் இணைந்து இக்கருத்தரங்கை ஏற்பாடு செய்திருந்தன. எஸ்.விஜேசந்திரன், எம்.சின்னத்தம்பி, மு.வாமதேவன், டியட்மார் நைட்ஷெல் (Dietmar Kneitschel), கலாநிதி பெர்ஜிட் மேயர் கொனி (Dr. Birgit Mayer-Konig), ஜெயதேவ உயங்கொட, போல் லிம், ஏ.எஸ்.சந்திரபோஸ், டெஸ்மண்ட் பெர்னாண்டோ, சிவாஜி பிலிக்ஸ் ஆகிய புத்திஜீவிகளின் ஆய்வுக் கட்டுரைகள் இந்நூலில் தொகுக்கப்பட்டுள்ளன.

5285

செல்லக்கை கொடுத்தல். குன்ரர் கிராஸ் (ஜேர்மன் மூலம்), நடராஜா சுசீந்திரன் (தமிழாக்கம்). ஜேர்மனி: நூல், Brunsbuetteler Damm 21, 1000 Berlin 20, 1வது பதிப்பு, ஆண்டு விபரம் தரப்படவில்லை. (ஜேர்மனி: அச்சக விபரம் தரப்படவில்லை).
34 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20x14 சமீ.

சல்மான் ருஷ்டிக்கு மரண தண்டனை பிறப்பித்த 3ஆவது ஆண்டையொட்டி பீ.பீ.சீ. தொலைக்காட்சியில் குன்ரர் கிராஸ் (Guenter Grass) ஆற்றிய உரையின் தமிழாக்கம். Salman Rushdie 1947இல் பம்பாயில் பிறந்தவர். செப்டெம்பர் 1988இல் சாத்தானின் வேதங்கள் (Satanic Verses) என்ற நூலை இவர் வெளியிட்டதன் பின்னர் பெப்ரவரி 1989இல் ஈரானிய ஆன்மீகத் தலைவர் அயத்துல்லா கொமெய்னி இவருக்கு மரண தண்டனை பிறப்பித்தார். இதன்காரணமாக வெளி உலகுடன் தொடர்பு துண்டிக்கப்பட்ட நிலையில் மறைந்து வாழ்கின்றார். இப்பிரசுரம் Pfoetchen geben என்னும் தலைப்பில் மாசி 1992இல் TAZ என்னும் ஜேர்மன் தினசரியில் வெளியாகிய கட்டுரையின் தமிழாக்கமாகும். துணைக் குறிப்புகளுடன் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இரண்டாம் உலக யுத்தத்திற்குப் பின்னதான மேற்கு ஜெர்மன்

இலக்கிய வரலாற்றில் குன்ரர் கிராஸ் முக்கியமானவர். 16.10.1927இல் போலந்தில் பிறந்த கிராஸ் Die Blechtrommel என்ற நாவலின் மூலமும் அறுபதுகளில் அவரது தீவிர அரசியல் விமர்சனங்களின் மூலமும் பிரபல்யமானவர். உலகெங்கும் ஒடுக்கப்படும் எழுத்தாளர்களுக்காகக் குரல்கொடுப்பவர்.

5286

தென்னாசியாவின் அரசியல் கலாசாரம். கே.ரீ.கணேசலிங்கம். கொழும்பு 11: சேமமடு பொத்தகசாலை, U.G.50, Peoples Park, 1வது பதிப்பு, கார்த்திகை 2008. (கொழும்பு 11: சேமமடு பதிப்பகம்).
120 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 22x15 சமீ., ISBN: 978-955-1857-25-7.

இந்நூலில் பிராந்திய அரசியல் ஓட்டங்களைப் புரிந்துகொள்வதற்கான அறிகை மரபொன்றினை அறிமுகப்படுத்தியிருக்கிறார். நமக்கான அரசியல், அதற்கான பாதை, போன்றவற்றை பரந்தவொரு பிரதேசப் பரப்பில்நின்று தெளிவாகப் புரிந்துகொள்வதற்கு இந்நூல் உதவுகின்றது. இன, மத, மொழி, சாதி, குல மரபுகளுக்குள்ளால் கட்டப்பட்டுள்ள தென்னாசிய அரசியலின் பங்கு எப்படி ஆதிக்க சக்திகளின் வடிவமாக எழுச்சிபெற்றது, அவ்வகை எழுச்சிக்குள் நிகழ்ந்த நவீனத்துவ சிந்தனை மீதான மூழ்கடிப்பின் விளைவு மீளமுடியாத முரண்பாட்டைத் தோற்றுவித்ததென்பதை இந்நூல் தெளிவாக அளவீடுசெய்து விளக்குகின்றது. கே.ரீ.கணேசலிங்கம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் அரசறிவியல் துறையில் விரிவுரையாளராகப் பணியாற்றுகிறார்.

5287

நவீன இராசதந்திரம்: Modern Diplomacy Part 3. தமிழீழ விடுதலைப் புலிகள். தமிழீழம்: அனைத்துலகத் தொடர்பகம், தமிழீழ விடுதலைப் புலிகள், 1வது பதிப்பு, மார்ச் 2003. (அச்சக விபரம் தரப்படவில்லை).
(12), 161 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24.5x17.5 சமீ.

தமிழீழ விடுதலைப் புலிகளின் அனைத்துலகத் தொடர்பகம் முன்னர் வெளியிட்ட அனைத்துலக ஒழுங்கமைப்பும் வெளியுறவுக் கொள்கையும் என்ற நூலின் திருத்திய மறுபதிப்பாக இந்நூல் வெளிவந்துள்ளது. போர், மற்றும் அமைதி, அனைத்துலக மற்றும் பிராந்திய மேலாதிக்கம், செல்வப் பெருக்கம், வர்த்தகம் போன்றவற்றை முன்னெடுப்பதற்குப் பொருத்தமான வெளியுறவுக் கொள்கையை நாடுகள் நடைமுறைப்படுத்துகின்றன. உற்நாட்டுத் தேவைகளுக்கு உகந்ததாக அமைவது வெளியுறவுக்கொள்கையின் இயல்பு. இத்தகைய வெளியுறவுக்கொள்கையின் பல்வேறு பரிமாணங்களையும் இந்நூல் எடுத்துக்கூறுகின்றது.

5288

புதிய ஜனநாயகப் புரட்சி ஏன்? சமுத்திரன். யாழ்ப்பாணம்: ஆய்வகம், 1வது பதிப்பு, பங்குனி 1986. (யாழ்ப்பாணம்: அச்சக விபரம் தரப்படவில்லை).
(6), 28 பக்கம், விலை: ரூபா 5.00, அளவு: 18x12.5 சமீ.

ஆய்வக வெளியீட்டுத் தொடரில் 2ஆவது நூல் இது. சோஷலிசத்திற்கான முன் நிபந்தனைகளான உற்பத்தி சக்தியின் வளர்ச்சி, அரசியல் சமூக, கலாச்சார வளர்ச்சி ஆகியவற்றைப் பூர்த்திசெய்யும் இடைக்கட்டமே புதிய ஜனநாயகப் பரட்சியின் காலகட்டம் என்று கூறும் இந்நூல், தமிழீழ விடுதலைப் போராட்டத்தை வெற்றிகரமாக முன்நகர்த்துவதற்காக புதிய ஜனநாயகப் புரட்சி பற்றிய சிந்தனைகள் ஏன், எப்படி வளர்த்தெடுக்கப்படவேண்டும் என்று விளக்குகின்றது.

5289

புதிய ஜனநாயகம் பற்றி. மீகொட பத்திரனகே தயானந்த. கொழும்பு 10: பிரஜா பிரசுராலயம், 19, ஜயந்த வீரசேகர மாவத்தை, 1வது பதிப்பு, 1960. (கொழும்பு: பிரஜா பிரசுராலய அச்சகம்).
91 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை.

இக்கட்டுரை ஜனவரி 1940இல் எழுதப்பட்டது. இதன் தமிழாக்கம் ஆகஸ்ட் 1952இல் பீகிங் மக்கள் பிரசுராலயம் சீன மொழியில் வெளியிட்ட மா-ஓ-சே துங் தேர்ந்த கட்டுரைகள் பாகம் 2, இரண்டாம் பதிப்பிலிருந்து மொழிபெயர்த்து பீகிங் அன்னிய மொழிகள் அச்சகத்தால் 1960ம் ஆண்டில் பிரசுரிக்கப்பட்டது. சீனா எவ்வழி, ஒரு புதிய சீனாவை நிர்மாணிக்க, சீனாவின் சரித்திரரீதியான குணாம்சம், உலகப் பரட்சியின் பகுதியாக சீனப் புரட்சி, புதிய ஜனநாயக அரசியல், புதிய ஜனநாயகப்

பொருளாதாரம், முதலாளித்துவ சர்வாதிகாரம், அசாத்தியம், இடதுசாரி வாய்ப் பந்தல் போடுதலுக்கு மறுத்துரை, ஊறின பிற்போக்காளர்களுக்கு மறுப்புரை, பழைய மூன்று மக்கள் கோட்பாடுகளும் புதிய மூன்று மக்கள் கோட்பாடுகளும், புதிய ஜனநாயகக் கலாச்சாரம், சீனாவின் கலாச்சாரப் புரட்சியின் சரித்திர ரீதியான தன்மைகள், நான்கு காலகட்டங்கள், கலாசாரத்தின் இயல்பு பற்றிய தவறான கருத்துக்கள், தேசிய விஞ்ஞான ரீதியான வெகுஜன கலாச்சாரம் ஆகிய தலைப்புகளில் புதிய ஜனநாயகம் பற்றிக் கூறப்பட்டுள்ளது. (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5290

பொது ஆட்சிஇயல். ச.கா.சண்முகநாதன், கே.ரீ.கணேசலிங்கம். யாழ்ப்பாணம்: ஸ்ரீ லங்கா புத்தகசாலை, 234, காங்கேசன்துறை வீதி, 2வது பதிப்பு, பங்குனி 2004, 1வது பதிப்பு விபரம் இல்லை. (Colombo 12: Kribs, 162, Dam Street)
154 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 22x15 சமீ., ISBN: 955-1013-08-5.

இரண்டு பகுதிகளில் பொது ஆட்சியியல் இந்நூலில் பிரித்து விளக்கப்பட்டுள்ளது. முதலாம் பகுதியில் பொது நிர்வாகம் பற்றிய அறிமுகமும், பணி அமைப்பு, திணைக்களங்கள், முகாமைத்துவம், சிவில் சேவை, பொது நிர்வாகத்துக்கு ஆட்சேர்ப்பு, பொது நிர்வாகத்தின் மீதான கட்டுப்பாடு, நிதி நிர்வாகம், பொது ஆட்சியியலில் சில முக்கிய விடயங்கள், அபிவிருத்தி நிர்வாகம், பணிக்குழுவும் அபிவிருத்தியும் ஆகிய விடயங்களும் பேசப்படுகின்றன. இரண்டாம் பகுதியில் அதிகாரப் பரவலாக்கல் பற்றிய விரிவான அறிமுகமும், பண்டா செல்வா-உடன்படிக்கை, மாவட்ட அபிவிருத்திச் சபையின் கீழான அதிகாரப் பரவலாக்கல், மாகாண சபை முறைமையும் அதிகாரப் பகிர்வும், பொதுஜன ஐக்கிய முன்னணி அரசின் அதிகாரப் பகிர்வுத் திட்டம் என்பனவும் விரிவாக விளக்கப்பட்டுள்ளன.

5291

மக்கள் மத்தியிலான முரண்பாடுகளைச் சரியாகக் கையாள்வது பற்றி (தோழர் மாஓ சே-துங் அவர்களின் சொற்பொழிவின் நூலாக்கம்). மாஓ சே-துங் (மூலம்). கொழும்பு 10: பிரஜா பிரசுராலயம், 19 ஜயந்த வீரசேகர மாவத்தை, 1வது பதிப்பு, ஒக்டோபர் 1967. (கொழும்பு 10: பிரஜா பிரசுராலய அச்சகம்).
72 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை.

1957 ஜூனில் பீகிங் மக்கள் பிரசுராலயத்தினரால் பிரசுரிக்கப்பட்ட முதலாவது பதிப்பில் கண்டுள்ள சீன வாசகத்தை மொழிபெயர்த்துப் பீகிங் அந்நிய மொழிகள் அச்சகத்தினர் 1957இல் ஆங்கிலத்தில் பிரசுரித்தனர். இதன் நான்காவது பதிப்பு 1960இல் வெளியாகியது. இப்பதிப்பின் தமிழ்மொழிபெயர்ப்பு இந்நூலாகும். கடந்த 1957 பெப்ரவரி 27ம் திகதி உயர் அரசு மாநாட்டில் பதினோராவது (விரிவுபடுத்தப்பட்ட) கூட்டத் தொடரில் ஆற்றப்பட்ட உரை இதுவாகும். (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

323 மனித உரிமை

5292

மனித உரிமைகள்: ஓர் அறிமுகம். வி.அமீர்தீன். பேராதனை: தகவல்-நலன்புரி அமைப்பு, 72, பல்கலைக்கழக விடுதி, மீவத்துறை, 1வது பதிப்பு, டிசம்பர் 2003. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ் பிரைவேட் லிமிட்டெட், 48 B, புளுமெண்டால் வீதி).
x, 150 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 22x14 சமீ., ISBN: 955-8641-02-2.

நூலாசிரியர் வி.அமீர்தீன் கிழக்கிலங்கையின் மட்டக்களப்புப் பிரதேசத்தைச் சார்ந்த ஏறாவூரைப் பிறப்பிடமாகக் கொண்டவர். பேராதனைப் பல்கலைக்கழகத்தின் அரசியல் விஞ்ஞானத்துறையில் முதுநிலை விரிவுரையாளராகக் கடமையாற்றுகின்ற அவர் புதுடில்லி ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தில் கலாநிதிப் பட்டத்திற்கான ஆய்வை மேற்கொண்டிருந்த வேளையில் இந்நூல் வெளிவந்துள்ளது. மனித உரிமை குறித்த அறிவைப் பெறவும், உரிமைகளைப் பாதுகாக்கவும் தமிழ்மொழி மூலமான நூல்களின் பற்றாக்குறையை நிவர்த்திசெய்யும் வகையில் இந்நூல் உருவாக்கப்பட்டுள்ளது.

5293

மனித, பெண், சிறுவர் உரிமைகள்: சமூக முன்னோடிகளுக்காக ஓர் கைநூல். என்.மணிவாசகன் (தொகுப்பாசிரியர்). அக்கரைப்பற்று: மகாசக்தி வெளியீட்டகம், சாகாமம் வீதி, 1வது பதிப்பு, ஆண்டு விபரம் தரப்படவில்லை. (அக்கரைப்பற்று: நியு செலெக்ஷன் பிரின்ரர்ஸ்).
(2), 51 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x14.5 சமீ.

மனித உரிமை பற்றிய கவிதையுடன் தொடங்கும் இத்தொகுப்பில், பல்வேறு மனித உரிமைகள் பற்றிய அறிமுகக் கட்டுரையும், அனைத்துலக மனித உரிமைகள் பிரகடனத்தின் உள்ளடக்கக் கூறுகள், அதன் ஆங்கில மூலம், பெண்கள் உரிமைகள், சிறுவர் உரிமைகள் பற்றிய அறிமுகக் கட்டுரைகள் என்பன இடம்பெற்றுள்ளன. மனித உரிமை என்றால் என்ன என்ற அடிப்டை வினாவுக்கு விடைகாண இந்நூல் முற்படுகின்றது.

327 சர்வதேசத் தொடர்புகள்

5294

சர்வதேச தாபனங்களும் ஒப்பந்தங்களும். ஏ.சி.ஜோர்ஜ். கொழும்பு 11: சேமமடு பொத்தகசாலை, U.G.50, Peoples Park, 1வது பதிப்பு, 2009. (கொழும்பு 11: சேமமடு பதிப்பகம்).
124 பக்கம், விலை: ரூபா 260., அளவு: 21 x15 சமீ., ISBN: 978-955-1857-45-5.

GATT அமைப்பும் சர்வதேச ஒப்பந்தங்களும், இலங்கை-பாக்கிஸ்தான் சுதந்திர வர்த்தக ஒப்பந்தம், இந்தியா-இலங்கை சுதந்திர வர்த்தக ஒப்பந்தம், தென்னாசிய முன்னுரிமை வர்த்தக உடன்பாடும் தென்னாசிய சுதந்திர வர்த்தக உடன்பாடும் உள்ளிட்ட பல்வேறு சர்வதேச தாபன ங்களும் அவற்றுடனான இலங்கையின் ஒப்பந்தங்களும் பற்றி இந்நூல் பேசுகின்றது. ஒவ்வொரு அமைப்புக்கும் ஒரு இயல் என்ற வகையில் இந்நூல் வடிவமைக்கப்பட்டுள்ளது. பொதுநலவாய சுதந்திரநாடுகள் CIS, ஆபிரிக்க ஐக்கியத்துக்கான அமைப்பு OAU, குழு 8 G-8, பொருளாதார ஒத்துழைப்பு அபிவிருத்திக்கான தாபனம் OECD, குழு 77 G-77, ஐரோப்பிய சமூகம் EU, அணிஆசேரா இயக்கம் NAM, சர்வதேச இஸ்லாமிய மகாநாட்டு நாடுகள், தென்கிழக்காசிய ஒப்பந்த அமைப்பு SEATO, வட அமெரிக்க சுதந்திர ஒப்பந்தம் NAFTA, குவாம் குழு GG, மத்திய ஐரோப்பிய சுதந்திர வர்த்தக உடன்பாடு (CEFTA), குழு 11 G-11, பிம்ஸ்டெக் நாடுகளின் அமைப்பு BC, இந்துசமுத்திர கரையோர நாடுகளின் பிராந்திய ஒத்துழைப்பு அமைப்பு, போவா போரம் BF, மத்திய ஆசிய கூட்டுறவு அமைப்பு OCAC, யூரேறிசியன் பொருளாதார சமூகம் EAEC, ஆபிரிக்க ஒன்றியம் AU, சார்க் அமைப்பு SAARC, தெற்கு பொதுச் சந்தை MERCOSUR, குழு20 G20, விரிவான பொருளாதார ஒத்துழைப்பு உடன்படிக்கை, ரியோ குழு (Rio Group), சிறிய நாடுகளின் கூட்டமைப்பு AOSIS, சங்காய் கூட்டுறவு அமைப்பு SCO, ஆசியான் அமைப்பு ACEAN, ஆசிய-பசிபிக் பொருளாதார ஒத்துழைப்பு மாநாடு APEC, தென் ஆபிரிக்க அபிவிருத்தி சமூகம் SADC, ஒபெக் அமைப்பு OPEC, பொதுநலவாயம் CC, நேட்டோ NATO, கொழும்புத் திட்டம் Colombo Plan, G5 நாடுகளின் அமைப்பு ஆகிய 38 சர்வதேச அமைப்புகள் பற்றி, அவற்றின் உருவாக்கம், அமுலுக்கு வந்த ஆண்டு, அங்கத்துவ நாடுகள், மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தங்கள் போன்ற முக்கிய விபரங்களை இந்நூல் பதிவுசெய்கின்றது.

330 பொருளியல்

5295

அறிவுசார் பொருளாதாரமும் கல்வியும். சோ.சந்திரசேகரன், மா.கருணாநிதி. கொழும்பு 11: சேமமடு பொத்தகசாலை, U.G.50, Peoples Park, 1வது பதிப்பு, மார்கழி 2008. (கொழும்பு 11: சேமமடு பதிப்பகம்).
136 பக்கம், விலை: ரூபா 340., அளவு: 22x15 சமீ., ISBN: 978-955-1857-27-1.

அறிவுசார் பொருளாதாரம் பற்றிய வரையறை, அப்பொருளாதார முறையின் சில பரிமாணங்கள் என்பனவற்றை விளக்குவதுடன், இந்நூல் சீனா, இந்தியா, தென் கொரியா, சிங்கப்பூர், துபாய். இலங்கை, தாய்லாந்து, பின்லாந்து, ஐக்கிய அமெரிக்கா ஆகிய நாடுகளின் அறிவுசார் பொருளாதார வளர்ச்சி பற்றித் தனித்தனி இயல்களில் விளக்குகின்றது. பேராசிரியர் சோ.சந்திரசேகரன், ஆசிரியராகப் பணியை ஆரம்பித்து இன்று கொழும்பு பல்கலைக்கழகத்தின் கல்விப்பீடப் பிடாதிபதியாக அமர்ந்துள்ளார். கலாநிதி மா.கருணாநிதி, கொழும்புப் பல்கலைக்கழகத்தின் கல்வியியல்துறை முதுநிலை விரிவுரையாளராகப் பணியாற்றுகின்றார்.

5296

கட்டுநாயக்க ஏற்றுமதி பதனிட்டு வலயத்தின் உழைப்புப் படை முகங்கொடுக்கும் சமூக பொருளாதார பிரச்சினைகள் பற்றிய அறிக்கை. ரி.ஹெட்டி ஆராய்ச்சி (ஆங்கில மூலம்), செ.லோகநாதன், (தமிழாக்கம்). கனடா: இலங்கையின் ஜனநாயகத்திற்கான அமைப்பு, Campaign for Democracy in Sri Lanka, 320 Mc Cowan Road #1804, Scarborough, Ontario, M1J 2NZ, 1வது பதிப்பு, மே 1993. (அச்சக விபரம் தரப்படவில்லை).
24 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x17.5 சமீ.

கொழும்பு பல்கலைக்கழக சமூகவியல் திணைக்களத்தின் தலைவர் பேராசிரியர் ரி.ஹெட்டி ஆராய்ச்சி அவர்களால் பாரிய கொழும்பு பொருளாதார ஆணைக்குழுவிற்காக 1990 ஜுன் மாதம் நடாத்தப்பெற்ற வெளிக்கள ஆய்வு அறிக்கையே இந்நூலாகும். இக்கட்டுரை 1991 டிசம்பர் மாதம் வெளியிடப்பட்ட University of Colombo Review Special Issueஇல் இருந்து தமிழாக்கம் செய்யப்பட்டது.

5297

சார்புநிலைப் பொருளாதாரம்: ஓர் அறிமுகம். ம.மகா உத்தமன் (ஆங்கில மூலம்), எஸ்.வி.இராஜதுரை (தமிழாக்கம்). சென்னை 600 033: ரோசா லக்சம்பர்க் படிப்பு வட்டம், எம். 23/10 முத்தாலம்மன் கோயில் தெரு, மேற்கு மாம்பலம், 1வது பதிப்பு, ஜனவரி 1989. (சென்னை 600 004: மிதிலா அச்சகம்).
46 பக்கம், விலை: இந்திய ரூபா 4.00, அளவு: 21.5x14 சமீ.

மூன்றாம் உலக நாடுகள், குறைவளர்ச்சி நாடுகள், முன்னாள் காலனி நாடுகள், புதிதாகச் சுதந்திரமடைந்த நாடுகள் என்று பல்வேறு விதமாக அழைக்கப்படுகின்ற உலகின் பெரும்பான்மையான நாடுகளின் குறைவளர்ச்சி, பொருளாதாரச் சீர்கேடுகள், வறுமை ஆகியவற்றுக்கான காரணங்களை விளக்கவும் இந்நிலையிலிருந்து அந்நாடுகளை விடுவிக்கவும் 1960களில் சார்புநிலைப் பொருளாதாரம் பற்றிய விளக்கங்கள் எழுந்தன. அவை எழுப்பிய பிரச்சினைகளும், ஏகாதிபத்தியச் சுரண்டல் பற்றிய பார்வைகளும் இன்றும் கவனஈர்ப்பைப் பெறுபவை. லண்டனில் புலம்பெயர்ந்து வாழ்ந்து மறைந்த மகா உத்தமன் அயர்லாந்து தேசியப் பல்கலைக்கழகத்தில் சமூகவியல் துறையில் பணியாற்றியவர். லண்டனிலிருந்து மூன்று இதழ்கள் வரை வெளிவந்திருந்த Journal of Eelam Studies என்ற சமூக அரசியல் சஞ்சிகையின் ஆசிரியராக இருந்தவர். மார்க்சியத்தில் ஆழ்ந்த அக்கறை கொண்டவர். இவர் சார்புநிலைப் பொருளாதாரம் என்ற விளக்கத்தின் அடிப்படையில் இலங்கையின் பொருளாதாரத்தை விரிவாக ஆய்வுசெய்து ஆங்கில நூலொன்றை எழுதும் முயற்சியில் ஈடுபட்டிருந்தார். அதற்காக அவர் எழுதிய முன்னுரையின் தமிழாக்கமே இச்சிறு நூலாகும்.

331.88 தொழிற் சங்கங்கள்

5298

இலங்கைப் பெருந்தோட்ட தொழிற்சங்க இயக்கங்கள். தனபாலசிங்கம் கிருஷ்ணமோகன். கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், 361 ½ டாம் வீதி, 1வது பதிப்பு, 2008. (கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், 361 ½ டாம் வீதி).
xx, 96 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 22 x14 சமீ., ISBN: 978-955-659-124-9.

ஏனைய தெழிற்துறைகளுடன் ஒப்பிடும்போது மிகக்குறைந்த வேதனத்தைப் பெறும் மலையகத் தோட்டத் தொழிலாளர்கள் அதனைப் பெறுவதற்குக்கூட பல வேலை நிறுத்தங்களையும், போராட்டங்களையும் செய்யவேண்டியுள்ளது. இவ்வாறான சந்தர்ப்பங்களில் தொழிற்சங்கங்கள் இவ் வேலைநிறுத்தங்களையும், போராட்டங்களையும் முன் நின்று வழிநடாத்துகின்றன. பின்னர் தமது நலன்களையும் இணைத்து தொழிலாளர்கள் சார்பில் வேதன உயர்வு ஒப்பந்தங்களைச் செய்கின்றன. இந்நிலையில் பெருந்தோட்டத் தொழிலாளர்கள் எதிர்நோக்கும் வேதனம், வேலை நேரம், சமூகப் பிரச்சினைகள் தொடர்பாகவும், தொழிற்சங்கங்கள், அதன் தலைமைத்துவம், அது மேற்கொண்ட நடவடிக்கைகள் தெடர்பாகவும் இந்நூல் ஆராய்கின்றது. த.கிருஷ்ணமோகன் 1988ம் ஆண்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அரசறிவியல் துறையில் சிறப்புக் கலைமாணிப் பட்டத்தையும் 2001இல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் முது தத்துவமாணிப்பட்டத்தையும் பெற்றவர். கிழக்குப் பல்கலைக்கழகத்தின் அரசறிவியல் துறையில் முதுநிலை விரிவுரையாளராகக் கடமையாற்றுகிறார்.

5299

முதலாளித்துவத்தின் மரண ஓலமும் நான்காம் அகிலத்தின் பணிகளும்: இடைமருவு வேலைத்திட்டம். லியொன் ட்ரொட்ஸ்கி (மூலம்), எஸ்.இராசேந்திரன் (தமிழாக்கம்). கொழும்பு: தொழிலாளர் பாதை வெளியீடு, 90, 1வது மாளிகாகந்தை ஒழுங்கை, 1வது பதிப்பு, மார்ச் 1991. (மஹரகம: பியதாச அச்சகம், 51, நாகஹவத்தை வீதி, மஹரகம).
xii, 84 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14 சமீ., ISBN: 955-9123-00-9.

1938 செப்டெம்பரில் பாரிஸ் நகரில் நடைபெற்ற நான்காம் அகிலத்தின் ஸ்தாபக மாநாட்டின் பொருட்டு தோழர் லியொன் ட்ரொஸ்கியால் தயார் செய்யப்பட்டது. ட்ரொஸ்கிஸ்டுகளுக்கு எதிரான ஸ்டாலினிசக் கொலைகாரர்களின் வேட்டைகள் உச்சகட்டத்தில் இருந்த அவ்வேளையில் ட்ரொஸ்கியால் நேரடியாக அறிக்கை கையளிக்கப்படாவிடினும், இந்த வேலைத்திட்டமே அங்கு புரட்சிகர வேலைத்திட்டமாக அங்கீகரிக்கப்பட்டு, திருத்தவோ மாற்றவோ முடியாத ஒரு வரலாற்று ஆவணமாகிவிட்டது.

334 கூட்டுறவு

5300

கூட்டுறவு அல்லது ஐக்கிய வாழ்வு. அ.அருளம்பலம். யாழ்ப்பாணம்: அ.அருளம்பலம், நீராவியடி, 1வது பதிப்பு, 1952. (யாழ்ப்பாணம்: திருமகள் அழுத்தகம்).
224 பக்கம், விலை: ரூபா 3.00

வழக்கறிஞரும் ஐக்கியதீபம் ஆசிரியரும், யாழ்ப்பாணக் கூட்டுறவு மாகாண வங்கிக் காரியதரிசியும், வடபகுதி ஐக்கிய மேற்பார்வைச் சபைக் காரியதரிசியுமான நூலாசிரியரின் கூட்டுறவு தொடர்பான 14 கட்டுரைகள் கொண்ட தொகுப்பு இது. இந்நூலுக்கான முகவுரையை மானிப்பாய் தொகுதி பாராளுமன்ற உறுப்பினரும் வடபகுதி ஐக்கிய மேற்பார்வைச் சபைத் தலைவருமான மானிப்பாய் வி.வீரசிங்கம் வழங்கியுள்ளார். கூட்டுறவு இயக்கத்தின் தன்மை, ஆரம்பம், வளர்ச்சி முதலியனவும், கூட்டுறவுச் சங்கங்களின் அமைப்பு முறைகளும், புள்ளி விபரங்களும், கூட்டுறவுச் சட்டங்கள், உபவிதிகள் ஆதியனவும் இப்புத்தகத்திற் சேர்க்கப்பட்டிருக்கின்றன. மேலும் புத்தக வாயிலாகவும், நேர்முகமாகவும், தான் கற்றறிந்த பல தேசங்களிலுமுள்ள கூட்டுறவு இயக்கத்தைப் பற்றியும் சுருக்கமாக எழுதியுள்ளார். (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

335.4 கம்யூனிசம்

5301

வீழ்ச்சிப் பாதையில் ஸ்டாலினிசம். வி.காராளசிங்கம். யாழ்ப்பாணம்: புரட்சிப் பதிப்பகம். 409, காங்கேசன்துறை வீதி, 1வது பதிப்பு, 1963. (யாழ்ப்பாணம்: ஸ்ரீ சண்முகநாத அச்சகம்).
18 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை.

வரலாற்றின் வஞ்சம், இரகசியப் பொலிசின் வீழ்ச்சி, தொழிற் சங்கங்கள், புதிய பொருளாதாரக் கொள்கை, இலக்கியம், சட்டச் சீர்திருத்தம், சரித்திரவியல், இராணுவம், ரொட்ஸ்கியின் பாதையில், குறிப்புகள் ஆகிய பிரிவுகளில் ஸ்டாலின் பற்றியும் அவரது அரசியல் கொள்கைகள் பற்றியும் இந்நூல் ஆராய்கின்றது. லெனின் மறைவுக்குப் பின் சோவியத் ஒன்றியத்தின் பொதுவுடைமைக் கட்சியின் மத்திய குழுவின் பொதுச் செயலாளராக 1922 முதல் அவர் மறைந்த 1953 வரை பணியாற்றியுள்ளார். இவரது திட்டமிட்ட பொருளாதாரக் கொள்கை புதிய பொருளாதாரக் கொள்கையுடன்கூடிய ஐந்தாண்டுத் திட்டங்களால் ரஷ்யா மிகப்பெரிய தொழிற் புரட்சியைக் கண்டிருந்தது. (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

338 பொருளாதார வளங்கள், மீன்வளம்

5302

இலங்கையின் வளங்களும் பயன்பாடுகளும். மா.செ.மூக்கையா. சென்னை 600098: நியு செஞ்சுரி புக் ஹவுஸ், 41B சிட்கோ இன்டஸ்ட்ரியல் எஸ்டேட், அம்பத்தூர், 1வது பதிப்பு, ஜனவரி 2005. (சென்னை 600081: ஸ்ரீ சரவணன் ஓப்செட் பிரின்டிங், புதிய இல. 77 (பழைய இல. 37), வரதராஜப் பெருமாள் கோவில் வீதி, தண்டையார் பேட்டை).
xiv, 279 பக்கம், விலை: இந்திய ரூபா 95., அளவு: 21.5X14சமீ., ISBN: 81-234-0897-8.

இலங்கையில் கிடைக்கக்கூடிய மூலவளங்கள், அண்மைக்காலத்தில் அதன் குடித்தொகை அதிகரிப்பு, மேலதிக பயன்பாடு, வறுமை என்பன காரணமாக வேகமாகப் பாதிப்படைந்து வருகின்றன. இதனை

முதன்மைப்படுத்தும்வகையில், இலங்கையின் குடித்தொகை என்னும் அத்தியாயத்துடன் இந்நூல் ஆரம்பமாகின்றது. இலங்கை முற்றிலும் ஒரு விவசாய நாடு அதற்கு ஆதாரமாக உள்ளவை இயற்கை மூலவளங்கள். இவற்றைத் தொடர்புபடுத்த இலங்கையின் பல்வேறுபட்ட விவசாய முயற்சிகள், மீன்பிடி, கால்நடை வளர்ப்பு என்னும் தலைப்புகளில் அண்மைக்கால தரவுகளுடன் அடுத்து வரும் அத்தியாயங்கள் சிறப்பாக எழுதப்பட்டுள்ளன. பல்வேறு அதிகாரபூர்வ மூலங்களிலிருந்து பெறப்பட்ட பல தகவல்கள் இந்நூலின் இயல்கள்தோறும் அணிசேர்க்கின்றன. பேராதனைப் பல்கலைக்கழக புவியியல் துறையில் பட்டம் பெற்ற மா.செ.மூக்கையா, அங்கு புவிவியல்துறைப் பேராசிரியராகவும் பணியாற்றுகின்றார்.

5303

உணவாதாரம் உயர உழைப்போம். தமிழீழ விடுதலைப் புலிகள். தமிழீழம்: பிரச்சார வெளியீட்டு வாரியம், தமிழீழ விடுதலைப் புலிகள், 1வது பதிப்பு, புரட்டாதி 1984. (பாரிஸ்: தமிழர் ஒருங்கிணைப்புக் குழு).
(6), 24 பக்கம், அட்டவணை, விலை: 3 பிராங், அளவு: 21x15 சமீ.

இலங்கையின் வடகிழக்கு மாகாணங்கள் வளமற்றவை என்ற கூற்று அரசியல்வாதிகளால் நெடுங்காலமாக முன்னெடுக்கப்பட்டு வந்துள்ளது. (Hansard 1955-6, Vol.23, Col.622). நாம் அநுபவிக்கும் பிரச்சினைகள் செயற்கையாகத் தோற்றுவிக்கப்பட்டவை எனவும், பிரித்தானிய காலனித்துவ ஆதிக்கத்தின் விளைவாகவும், நவகாலனித்துவத்துடன் கூடிய சிங்கள பௌத்த பேரினவாதத்தின் பிரதிபலிப்பாகவும் தோன்றிய பல்வேறு பிரச்சினைகளினாலும் வட கிழக்கின் பொருளாதாரப் பிரச்சினை தோற்றுவிக்கப்பட்டதாக இந்நூல் நிறுவுகின்றது. நெல்லுற்பத்தி, மீன்பிடி, கைத்தொழில் வளங்களை எமது பயன்பாட்டுக்கு அதிகமாகவே உற்பத்தி செய்யும் வலிமையை நாம் கொண்டுள்ளோம் என ஆதாரங்களுடன் இந்நூல் நம்பிக்கையூட்டுகின்றது.

340 சட்டவியல்

5304

சட்டமும் சமூகமும்: பெண்களின் உரிமைகள். B.N.தம்பு, P.பிறேம்நாத் (தொகுப்பாசிரியர்கள்). கொழும்பு 6: மனித உரிமைகள் நிலையம், 453/1, ஹவ்லொக் வீதி, 1வது பதிப்பு, நவம்பர் 1998. (Colombo: Felix Printing Ltd.)
8 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14 சமீ.

மனித உரிமைகள் நிலையத்தின் அனுசரணையுடன் இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தின் தமிழ் தேசிய சேவையில் பிரதி வியாழன் தோறும் இடம்பெற்றுவந்த **சட்டமும் சமூகமும்** என்ற சட்ட விளக்க, சட்ட உதவி நிகழ்ச்சிகளில் இடம்பெற்ற, பெண் உரிமை தொடர்பான சட்ட விளக்கங்களின் தொகுப்பு இச்சிறுநூலில் இடம்பெறுகின்றது.

5305

சட்டமும் தமிழும். கு.பூரணானந்தா, செ.சிறீக்கந்தராசா. கொழும்பு 13: ஆ.நடராசா, இரஞ்சனா அச்சகம், 98 விவேகானந்தர் மேடு, 1வது பதிப்பு, டிசம்பர் 1971. (கொழும்பு 13: இரஞ்சனா அச்சகம்).
(14), xx, 190 பக்கம், விலை: ரூபா 6., அளவு: 17.5x12.5 சமீ.

சட்டத்துறை சார்ந்து இலங்கையில் தமிழில் வெளிவந்த முதலாவது நூல் என்ற பெருமையை இந்நூல் பெற்றது. 1971இலிருந்து சட்டக் கல்லூரிகளிலும், பல்கலைக்கழகங்களிலும் சட்டக்கல்வியை தமிழிலும் கற்பிக்க ஏற்பாடு செய்யப்பட்ட வேளையில் அப்பணியை எளிதாக்கும் வகையில் இந்நூல் வெளியிடப்பட்டுள்ளது. சட்டச் சிந்தனை, சட்டத் தொழிலும் வழக்குரையும், நீதிமன்றங்கள், சட்டம் பலவிதம், அரசியலமைப்புச் சட்டம், திருமணங்களும் சமூகங்களும், குற்றவியல் சட்டம், உரிமை இயல் ஆகிய பிரிவுகளில் சட்டவியல் இந்நூலில் விளக்கப்பட்டுள்ளது. இறுதியில் சிறப்புச் சொற்களுக்கான சொற்றொகுதி (Glossary) ஒன்றும் தரப்பட்டுள்ளது. (இந்நூல் School of Oriental and African Studies (SOAS), University of London நூலகத்தில் பார்வையிடப்பட்டது. பதிவிலக்கம் 353732).

5306

சுப்ரீம் கோட்டுக்குப் புதிய இடம். வெளியீட்டுப் பிரிவினர். கொழும்பு: இலங்கை பிரசுர கட்டுப்பாட்டுப் பகுதியினர், 1வது பதிப்பு, 1950. (கொழும்பு: இலங்கை அரசினர் அச்சியந்திரசாலை).
24 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை.

இலங்கையில் கொழும்பின் சுப்ரீம் கோர்ட்டை பம்பலப்பிட்டிக்கு இடம் மாற்றி அமைப்பது பற்றிய விபரங்களைத்தரும் பிரசுரம். பிரித்தானிய ஆட்சியின் ஆரம்பத்தில் கொழும்புக் கோட்டையிலுள்ள கோர்டன் கார்டன்ஸ் பூந்தோட்டத்துக்கு எதிரேயுள்ள இடத்தில் சுப்ரீம் கோர்ட் இருந்தது. கோர்டன் கார்டன்ஸ் பூந்தோட்டத்தை உபயோகிப்பது பற்றிய வாதம் சுப்ரீம் கோர்ட்டாருக்கும் பிரித்தானிய இராணுவ அதிகாரிகளுக்குமிடையே ஏற்பட்டது. அப்போது கவர்னராக இருந்த நோர்த் அவர்கள் கோட்டையிலிருந்த சுப்ரீம் கோர்ட்டினை ஹல்ஸ்டோப்பில் அமைக்க முடிவுசெய்தார். இதற்கு நீதவான்கள் பலமாக எதிர்த்துப் போராடினார்கள். இருப்பினும் உச்ச நீதிமன்றம் ஹல்ஸ்டோப்பில் நிறுவப்பட்டது. இந்நிலையில் இந்நூல் அதனை மீண்டும் பம்பலப்பிட்டிப் பகுதிக்கு மாற்றுவது பற்றிய சாதக பாதகங்களை எடுத்து விளக்குகின்றது. (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5307

தெரிந்திருக்க வேண்டிய சட்டங்கள். A.L.M.பளீல். இலங்கை: பல்கலைக் கல்வி நிலையம், 1வது பதிப்பு, ஆண்டு விபரம் தரப்படவில்லை. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், இல. 48 B, புளுமெண்டால் வீதி). 249 பக்கம், விலை: ரூபா 235., அளவு: 20.5x14.5 சமீ., ISBN: 955 580 082 0.

அன்றாடம் தேவைப்படும் மிக அத்தியாவசியமான சட்ட விளக்கங்கள் யாவும் இந்நூலில் விபரிக்கப்பட்டுள்ளன. அரசியல்துறை சார்ந்தவர்களுக்கான சட்ட விளக்கங்கள் உத்தியோகத்தர்களுக்கும், அதிகாரிகளுக்கும் உதவக்கூடிய சட்ட வழிகாட்டல்கள், தடைதாண்டல் பரீட்சைக்குத் தோற்றுவோருக்கான பரீட்சைக் குறிப்புகள். சட்டத்துறை மாணவர்களுக்குப் பயன்தரக்கூடிய விபரங்கள் யாவும் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன. ஏதாவது ஒரு விடயத்தில் சட்டரீதியான நிலைப்பாட்டை அறிய விரும்பினாலும் சரி, கடமைகளின்போது ஏற்படும் சந்தேகங்களை நிவர்த்தி செய்வதானாலும்சரி உடன் புரட்டிப்பார்த்து விளக்கங்களைப் பெறக்கூடிய வகையில் சிறு தலைப்புக்களில் இவை எழுதப்பட்டுள்ளன.

5308

பெண்களுக்கான சட்டவியல் விளக்கம். அயூப்கான், சுகந்தி கந்தசாமி, ரொக்கி ஆரியரட்ன, திலானி ராஜபக்ஷ. கொழும்பு 6: பெண்கள் கல்வி ஆய்வு நிறுவனம், 58, தர்மராம வீதி, 1வது பதிப்பு, ஆண்டு விபரம் தரப்படவில்லை. (கொழும்பு 12: Perfect Printers, 130, Dias Place).
(8), 60 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22x14 சமீ., ISBN: 955-9261-10-X.

தமிழ்ப் பெண்களுக்கு அவர்களுடன் தொடர்புடைய சட்டமூலங்கள், சட்டபூர்வ உரிமைகள் போன்றவை பற்றிய விழிப்புணர்வினை ஏற்படுத்தும் நோக்கில் உருவாக்கப்பட்ட நூல். கருத்தரங்குகளில் சமர்ப்பிக்கப்பட்ட கட்டுரைகளான **ஆட்கள் பற்றிய சட்டம்: ஓர் அறிமுகம்** (சுகந்தி கந்தசாமி), **மனித உரிமைகள் சட்டமும் பெண்களும்** (அயூப்கான்), **குற்றவியல் சட்டம்** (ரொக்கி ஆரியரட்ண), **ஆதனச் சட்டமும் வழியுரிமைச் சட்டமும்** (திலானி ராஜபக்ஷ) ஆகிய நான்கு ஆய்வுக் கட்டுரைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன.

342 அரசியலமைப்புச் சட்டம்

5309

இலங்கையின் அரசியற் திட்டங்களின் பரிணாம வளர்ச்சி. வேலுப்பிள்ளை குணரத்தினம். கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், 361, 1/2, டாம் வீதி, 1வது பதிப்பு, 2008. (கொழும்பு 12: குமரன் பிரின்டர்ஸ், 361, 1/2, டாம் வீதி).
(x), 163 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 21.5x15 சமீ., ISBN: 978-955-659-172-9.

சுமார் நான்கு நூற்றாண்டுகளுக்கு மேலாக ஐரோப்பாவின் மேலாதிக்கத்தின் கீழிருந்த இலங்கை 1948இல் சுதந்திரம் பெற்றது. ஆங்கிலேயர் அறிமுகப்படுத்திய ஜனநாயக நிறுவனங்களினூடாக சுதந்திரத்தின் பின் சுமார் 60 ஆண்டுக்காலத்தையும் தாண்டி இந்நாடு ஆட்சிசெய்யப்பட்டு வந்தாலும் இலங்கை நாட்டைக் கட்டியெழுப்பவதில் நாம் எந்தளவு தூரம்வெற்றியடைந்துள்ளோம் என்பதை அரசியல் திட்ட வளர்ச்சியினூடாக ஆராய்வதை இந்நூல் பிரதான இலக்காகக் கொண்டுள்ளது. இலங்கையின் அரசியல் திட்டங்களின் வளர்ச்சியை வரலாற்றுரீதியாக ஆய்வுசெய்யும் இந்நூல் அரசியலமைப்புப் பற்றிய பொது விளக்கம், இலங்கையில் தேசியவாத இயக்கம், பிரித்தானிய காலனித்துவ ஆட்சியில் இலங்கையின் அரசியல் நிலை (1833-1931), டொனமூர் அரசியல் சீர்திருத்தங்கள் (1931), சோல்பரி அரசியலமைப்பு (1947), முதலாம் குடியரசு யாப்பு (1972), இரண்டாம் குடியரசு யாப்பு (1978), மாகாணசபையும்

உள்ளூராட்சி மன்றங்களும், இலங்கையில் இளைஞர் அமைதியின்மையும் இனமுரண்பாடும், சுதந்திர இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கை ஆகிய பத்து அத்தியாயங்களைக் கொண்டுள்ளது. நூலாசிரியர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அரசறிவியல் துறையில் தனது இளங்கலைமாணி சிறப்புப் பட்டத்தினையும், முதுதத்துவமாணிப் பட்டத்தையும் பெற்றவர். கிழக்கிலங்கைப் பல்கலைக்கழகத்தில் சமூக விஞ்ஞானத்துறை தலைவராகப் பணியாற்றுகின்றார்.

5310

நீலன் திருச்செல்வத்தின் கட்டுரைகள்: மனித உரிமைகள், அரசமைப்புவாதம், பன்மைத்துவமும் பல்வகைமையும். நீலன் திருச்செல்வம். கொழும்பு 8: இனத்துவ கற்கைகளுக்கான சர்வதேச நிலையம், 2, கின்சி தெரஸ், 1வது பதிப்பு, 2002. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ் பிரைவேட் லிமிட்டெட், 48 B, புளுமெண்டால் வீதி).
105 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 22x14.5 சமீ., ISBN: 955-580-072-3.

இத்தொகுப்பில் மனித உரிமைகள்: வியன்னா மாநாட்டுக்குப் பின்னர் கொள்கை மற்றும் ஆய்வுகளுக்கான ஒரு நிகழ்ச்சி நிரல், சிறுபான்மையினரும் அபிவிருத்தியும், சிறுபான்மையினர் மீதான ஐக்கிய நாடுகள் பணிக்குழு, அரசமைப்புவாதமும் பல்வகைமையும், தென்னாசியாவில் சகிப்பத் தன்மை, சனநாயகம் மற்றும் மனித உரிமைகள் ஆகிய 5 கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன.

350 பொது நிர்வாகம்

5311

ஒப்பியல் பொதுநிர்வாகம்: தெரிவுசெய்யப்பட்ட நாடுகளின் சிவில் நிர்வாக முறைமை. தனபாலசிங்கம் கிருஷ்ணமோகன். கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், 361, 1/2, டாம் வீதி, 1வது பதிப்பு, 2007. (கொழும்பு 12: குமரன் பிரின்டர்ஸ், 361, 1/2, டாம் வீதி).
(xii), 88 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-955-659-091-9.

அரசறிவியலில் பொதுநிர்வாகம் ஒரு பிரதான பரிமாணமாகும். ஆயினும் ஆளணி நிர்வாகம் என்ற பிரிவுக்குள் சிவில் சேவையை உள்ளடக்கிச் சுருக்கமாகவே நோக்கிவருகின்றன. இந்நிலையில் வெளிவந்துள்ள இந்நூல் பொதுநிர்வாகத்தின் மகுடம் போன்ற சிவில் சேவையைக் கருப்பொருளாக்கி ஒப்பீட்டுரீதியாக விரிவான ஆய்வை மேற்கொள்கின்றது. பிரிட்டன், பிரான்ஸ், அமெரிக்கா, இந்தியா, இலங்கை ஆகிய ஐந்து நாடுகளின் சிவில் நிர்வாக சேவைகளின் வரலாற்று அபிவிருத்தியையும் கோட்பாட்டு நடைமுறை அம்சங்களையும் விமர்சன ரீதியாக இந்நூல் அணுகமுனைகின்றது. சிக்கலான விடயங்களையும், பதங்களையும் எளிமையாகவும் தெளிவாகவும் ஆழமாகவும் விளக்குவது இந்நூலின் குறிப்பிடத்தக்க சிறப்பியல்பாகும். நூலாசிரியர் 1988இல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அரசறிவியல் துறையில் சிறப்புக் கலைமாணிப்பட்டம் பெற்றவர். 2001இல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் முதுதத்துவமாணிப்பட்டத்தைப் பெற்றார். 1989-1993 காலப்பகுதியில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராகக் கடமையாற்றிய இவர் பின்னாளில் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் அரசறிவியல்துறையில் சிரேஷ்ட விரிவுரையாளராகப் பணியாற்றுகின்றார்.

5312

நேர முகாமைத்துவம். சொ.அமிர்தலிங்கம். கொழும்பு 10: Godage International Publishers Ltd., 675, P.De S.Kularatne Mawathe, 1வது பதிப்பு, 2007. (வெல்லம்பிட்டிய: சதுர பிரின்டர்ஸ், 142, அவிசாவளை வீதி).
xx, 254 பக்கம், விலை: ரூபா 750., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 955-20-8908-5.

நேரம் என்ற மூலவளம் மிக அரிதானது. அதனை முகாமைத்துவப்படுத்த முடியாவிடில் வேறு எந்தவொரு செயற்பாட்டையும் முகாமைசெய்ய முடியாது என்ற முகாமைத்துவ சிந்தனையாளர் Peter Drucker தெரிவித்த கருத்தினை உறுதிப்படுத்துவதாக இந்நூலின் உள்ளடக்கம் அமைகின்றது. நேரத்தை மிகவும் சிறப்பாக நடைமுறைப் படுத்துவதும், நேர முதலீட்டின் வருவாயை அதிகரித்தலுமே தனது படைப்பின் முக்கிய நோக்கம் என்று கூறும் இந்நூலாசிரியர், இலங்கை நிர்வாகசேவையில் 37 ஆண்டுகளாகப் பணியாற்றுகின்றார். தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் பழைய மாணவரான இவர், பேராதனைப் பல்கலைக்கழகப் புவியியல் பட்டதாரியாவார்.

5313

முகாமைத்துவக் கொள்கைகள்: ஓர் அறிமுகம். சோ.சந்திரசேகரம், மா.கருணாநிதி. கொழும்பு 11: சேமமடு பொத்தகசாலை, U G 50, People's Park, 1வது பதிப்பு, பங்குனி 2008. (கொழும்பு 11: சேமமடு பதிப்பகம்).
132 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 22x14.5 சமீ., ISBN: 978-955-1857-07-3.

இந்நூல் 19ஆம் நூற்றாண்டின் பெருமுக்கியத்துவம் பெற்ற விஞ்ஞானப் பாங்கான முகாமைத்துவ அணுகுமுறை தொடங்கி மனித தொடர்புக் கொள்கை, சமூக அறிவியல் கொள்கை, ஊக்கல் கொள்கை, திறந்த முறைமைக் கொள்கை என்பவற்றைப் பற்றி விளக்குகின்றது. கல்வி முகாமைத்துவத்தைப் பல்கலைக்கழக மட்டத்திலும் தேசிய நிறுவகக் கற்கை நெறிகளிலும் சேர்ந்து பயிலும் ஆசிரியர்கள், அதிபர்கள், கல்வி அதிகாரிகள், மற்றும் கல்வி முகாமைத்துவப் பணியில் ஈடுபட்டிருப்போருக்கும் இந்நூல் பெரும் பயனுள்ளதாக அமையும். பேராசிரியர் சந்திரசேகரம் கல்வித்துறையில் ஏராளமான கட்டுரைகளையும் நூல்களையும் எழுதியவர். பல்கலைக்கழகத்தின் கல்விப் பீடாதிபதியாகப் பணியாற்றுபவர். முனைவர் மா.கருணாநிதி கொழும்புப் பல்கலைக்கழகத்தின் கல்வியியல்துறையின் முதுநிலை விரிவுரையாளராகப் பணியாற்றுபவர்.

355 போரியல் விஞ்ஞானம், இராணுவ விஞ்ஞானம்

5314

கெரில்லாப் போர் விரகுகள். பண்டிதர். வி.பரந்தாமன். தருமபுரம்: தமிழ்த்தாய் வெளியீடு, மாறன் பதிப்பகம், முல்லை வீதி, 1வது பதிப்பு, ஆண்டு விபரம் தரப்படவில்லை. (தருமபுரம்: தமிழ்த்தாய் பதிப்பகம், முல்லை வீதி).
(8), 38 பக்கம், விலை: ரூபா 25., அளவு: 12.5x10 சமீ.

விரகுகள் என்ற பதம் தந்திரோபாயத்தைக் குறிக்கின்றது. போரியல் பற்றிய காத்திரமான கருத்துக்கள் பலவற்றை உள்ளடக்கமாகக் கொண்ட கையேடு இதுவாகும். விடுதலை இயக்கப் போராளிகள் ஒவ்வொருவரும் எளிதாகக் காவித்திரியக்கூடியதான கையடக்கப் பதிப்பாக வெளிவந்துள்ளது.

360 சமூக சேவை நிறுவனங்கள்

5315

அனைவரின் மேம்பாடு அல்லது சர்வோதயம். நா.சிவபாதசுந்தரன் (புனைபெயர்: தொல்புரக்கிழார்). யாழ்ப்பாணம்: அகில இலங்கை முதற் சர்வோதய தினம் வெளியீடு, காரை இளைஞர் சங்கம், காரைநகர், 1வது பதிப்பு, வைகாசி 1953. (யாழ்ப்பாணம்: ஸ்ரீகாந்தா அச்சகம்).
46 பக்கம், விலை: ரூபா 1.00

உலகம், அறத்தின் அடிநிலை, பொருளின் பொதுநிலை, இன்பத்தின் இறுதிநிலை ஆகிய தலைப்புகளில் அமைந்த சமூக விழிப்புணர்வூட்டும் கட்டுரைத் தொகுதி. இன்று பேசப்படும் சர்வதேசியம் என்பது உலக இணக்கத்தை உருவாக்கப் போவதில்லை. சர்வோதய சித்தாந்தமே அதை உருவாக்கும் என்ற கருத்தை வலியுறுத்தும் தொல்புரக்கிழார், சர்வோதயம்- தனிமனித சுதந்திரத்தை நன்றாகக் காப்பதால் இத்தகைய உலக நாகரீகத்தைச் செயல்வடிவில் காண ஆங்காங்கே உலக மக்கள் விழைகின்றார்கள் என்றும் குறிப்பிடுகின்றார். இதன் விளைவால் உந்தப்பட்டுத் தமிழ்ப் பண்பாட்டினூடே தான் சிந்தித்தபோது எழுந்த கருத்துக்களே இந்த நூலில் பதிவுசெய்துள்ளதாக தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரித் தமிழ் விரிவுரையாளரான நூலாசிரியர் நா.சிவபாதசுந்தரனார் குறிப்பிடுகின்றார். (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5316

சுடர்: கிளிநொச்சி மாவட்ட சமூக, சுகாதார அபிவிருத்திச் சபையின் 5ஆவது ஆண்டு நிறைவுச் சிறப்பிதழ். மலர் வெளியீட்டுக் குழு. கிளிநொச்சி: இதழாக்கக் குழு, கிளிநொச்சி மாவட்ட சமூக சுகாதார அபிவிருத்திச் சபை, மாவட்ட வைத்தியசாலை, 1வது பதிப்பு, மே 2002. (வவுனியா: நிலம் வெளியீட்டகம், 87, வியாசர் வீதி, தோணிக்கல்).
(6), 101 பக்கம், புகைப்படங்கள், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 29x20 சமீ.

19.03.2002இல் தனது ஐந்தாண்டு சேவையைப் பூர்த்திசெய்கின்ற கிளிநொச்சி மாவட்ட சமூக சுகாதார அபிவிருத்திச் சபை, அதனை நினைவுகூரும் முகமாக இம்மலரை வெளியிட்டிருக்கிறது. அதன் கடந்த

கால செயற்பாடுகளையும், வைத்தியசாலையின் பணிகளையும் ஒரே பார்வையில் வெளிக்கொணரும் ஓர் மலராக இது அமைந்துள்ளது.

5317

தமிழர் புனர்வாழ்வுக் கழகம் 1985-1995: 10ஆவது ஆண்டு நிறைவு மலர். தமிழர் புனர்வாழ்வுக் கழகம். யாழ்ப்பாணம்: தமிழர் புனர்வாழ்வுக் கழகம், 83/2 காங்கேசன்துறை வீதி, கொக்குவில், 1வது பதிப்பு, 1995. (யாழ்ப்பாணம்: சாந்தி அச்சகம்).
(16), 38 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 28x22 சமீ.

10ம் ஆண்டு நிறைவில் தமிழர் புனர்வாழ்வுக் கழகம், பாதிப்புகளின் பின்பான அபிவிருத்தித் திட்டங்கள், முன்னேற்றப் பாதையில் சுயசார்பு தொழில்முயற்சி நிதியம், அரச சார்பற்ற நிறுவனம் என்றால் என்ன?, அரச வங்கிகளுடன் நாம் இணைந்து, எமது சூழலைப் பாதுகாப்பதில் இளைய தலைமுறையினர், பாலர் கல்வியும் போசாக்குப் புனர்வாழ்வும், பாலர் கல்வியில் முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிலையம், வறிய மாணவர் கல்வி மேம்பாட்டிற்கு ஒரு தத்தெடுக்கும் திட்டம், இடப்பெயர்வுகளின்போது அம்மக்களுடன் தமிழர் புனர்வாழ்வுக் கழகம், எமது புனர்வாழ்வுப் பணிகள், ஒளி தெரிகின்றது (சிறுகதை), ஜேர்மன் சமஷ்டிக் குடியரசின் இடம்பெயர்ந்தோருக்கான உதவி அகிய 13 தலைப்புகளில் அமைந்த கட்டுரைகளுடன் வாழ்த்துச் செய்திகளும் இம்மலரை அலங்கரிக்கின்றன.

5318

துர்க்காபுரம் மகளிர் இல்லம்: பதினைந்து ஆண்டுகள் நிறைவு விழா சிறப்பு மலர். மலர் வெளியீட்டுக் குழு. தெல்லிப்பழை: துர்க்காபுரம் மகளிர் இல்லம், துர்க்காபுரம், 1வது பதிப்பு, பெப்ரவரி 1997. (சுன்னாகம்: திருமகள் அழுத்தகம்).
62 பக்கம், புகைப்படத் தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25x18.5 சமீ.

துர்க்காபுரம்-தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானத்தின் ஆதரவில் இயங்கும் துர்க்காபுரம் மகளிர் இல்லம் 03.02.1982இல் ஆரம்பிக்கப்பட்டது. கடந்த 15 ஆண்டுகளில் 500க்கும் மேற்பட்ட ஆதரவற்ற சிறுமியர் இணைந்து வளர்ந்து வேலைவாய்ப்பு, திருமணம் போன்ற காரணங்களால் வெளியேறியிருக்கிறார்கள். ஆதரவற்ற சிறுமியரைப் பராமரித்து சமூகத்திற்கு மீளவழங்கும் இவ்வரிய பணியை கோவில் நிதியில் மேற்கொண்டு முழுச் சைவ உலகிற்குமே முன்மாதிரியாக அமைந்திருக்கும் இச்சமூக நல அமைப்பின் பின்னணியில் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி இருந்துள்ளார். மகளிர் இல்லத்தின் பல்வேறு பணிகளையும் அறிக்கைகளாகவும், வாழ்த்துரைகளாகவும் பதிவிலிடும் இம்மலரில் பெண்மை வாழ்கென்று கூத்திடுவோமடா (புலவர் சி.விசாலாட்சி அம்மையார்), சைவசமயத்தின் வளர்ச்சியில் மங்கையரின் பங்களிப்பு (ஆறு.திருமுருகன்) ஆகிய கட்டுரைகளும் இடம்பெற்றுள்ளன.

5319

வடக்கில் இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மாணவர்களுக்கான கல்வி நிவாரணச் செயற்திட்டம். பீ.எம்.புன்னியாமீன், த.ஜெயபாலன். உடத்தலவின்னை: சிந்தனை வட்டம், 14, உடத்தலவின்னை மடிகே, 1வது பதிப்பு, செப்டெம்பர் 2009. (Udatalawinna: C.V.Publishers Ltd., Printing Division, 14 Udatalawinna Madige).
120 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25.5X18 சமீ.

வடக்கு யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு தற்போது நலன்புரி நிலையங்கள் என்ற பெயரில் இயங்கும் தடுப்பு முகாம்களில் உள்ள சிறுவர்களின் கல்வி மேம்பாட்டுக்கான செயற்திட்டமொன்றினை இலங்கையில் உடத்தலவின்னையிலிருந்து பீ.எம்.புன்னியாமீன் அவர்களும், லண்டனிலிருந்து தேசம் இணையத்தள நிர்வாகி த.ஜெயபாலனும் இணைந்து மேற்கொண்டிருந்தனர். 29.4.2009 முதல் 10.8.2009 வரையிலான காலகட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட இத்திட்டம் பற்றிய நடவடிக்கை அறிக்கை, அது பற்றிய பத்திரிகை செய்திகள் உள்ளிட்ட முழுமையான உதவி ஆவணங்களுடன் இந்நூலில் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

5320

வடக்கில் இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மாணவர்களுக்கான கல்வி நிவாரணச் செயற்திட்டம்: கட்டம் 2. பீ.எம்.புன்னியாமீன், த.ஜெயபாலன். உடத்தலவின்னை: சிந்தனை வட்டம், 14, உடத்தலவின்னை மடிகே, 1வது பதிப்பு, டிசம்பர் 2009. (Udatalawinna: C.V/Publishers Ltd., Printing Division, 14 Udatalawinna Madige).
80 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25.5X17.5 சமீ., ISBN: 978-955-1779-28-3.

வன்னி முகாம்களிலுள்ள க.பொ.த.சாதாரண தர மாணவர்களுக்கான தேசம்நெற், சிந்தனை வட்ட கல்வி நிவாரண செயற்றிட்டத்தின் கீழ் கணிதம், வரலாறு, தமிழ்மொழியும் இலக்கியமும், ஆங்கிலம். விஞ்ஞானம் ஆகிய ஐந்து பாடங்களுக்குமான 06 மாதிரி வினாத்தள்களை உள்ளடக்கி 6290 மாணவர்களுக்கும் வழங்கியுள்ளதுடன், தனது 2009ம் வருடத்திற்கான நிவாரண செயற்றிட்டத்தை 21.11.2009 அன்று நிறைவு செய்தகொண்டது. இவ்வுதவித் திட்டத்தை இலங்கையில் உடத்தலவின்னையிலிருந்து பீ.எம்.புன்னியாமீன் அவர்களும், லண்டனிலிருந்து தேசம் இணையத்தள நிர்வாகி த.ஜெயபாலனும் இணைந்து மேற்கொண்டிருந்தனர். இத்திட்டம் பற்றிய நடவடிக்கை அறிக்கை, அது பற்றிய பத்திரிகை செய்திகள் உள்ளிட்ட முழுமையான உதவி ஆவணங்களுடன் இந்நூலில் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

5321

வன்செயல்களின் பாதிப்புகளை மதிப்பீடு செய்தலும் அவற்றிற்கான புனர்வாழ்வு நடவடிக்கைகளை இனங்காணலுக்குமான ஆய்வுப் பட்டறை. தமிழர் புனர்வாழ்வுக் கழகம். யாழ்ப்பாணம்: தமிழர் புனர்வாழ்வுக் கழகம், 83/2 காங்கேசன்துறை வீதி, கொக்குவில், 1வது பதிப்பு, செப்டெம்பர் 1991. (யாழ்ப்பாணம்: சென். ஜோசப் கத்தோலிக்க அச்சகம்).
81 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 28x22 சமீ.

1991 செப்டெம்பர் மாதம் 6ம் 7ம் திகதிகளில் நடாத்தப்பட்ட வன்செயல்களின் பாதிப்புகளை மதிப்பீடு செய்தலும், புனர்வாழ்வு நடவடிக்கைகளை இனங்காணலுக்குமான ஆய்வுப் பட்டறையின் முழு நிகழ்ச்சிகளையும் ஆவணப்படுத்தி வெளியிடப்பட்ட பிரசுரம் இது, இவ்வாவணம் இரு பகுதிகளை உள்ளடக்கியுள்ளது. முதலாவது பகுதி ஆய்வுப் பட்டறையின் நிகழ்ச்சிகளின் நடைமுறைத் தொகுப்பாகவும், இரண்டாம் பகுதி துறைசார் குழுக்களின் அறிக்கைகள், ஆய்வுப் பட்டறையிலிருந்து மேலெழுந்த பிரச்சினைகள், கருத்துக்கள், ஆலோசனைகள், முன்மொழிவுகள் என்பவற்றின் அடிப்படையில் தொடர்நடவடிக்கைக் குழுவினால் ஆராயப்பட்ட மதிப்பாய்வும், பாதிப்புகள், தேவைகள், புனர்வாழ்வு நடவடிக்கைகள் ஆகியவற்றுடன் தொடர்புடைய அடிப்படைப் புள்ளி விபரங்கள்-இயலுமானவரை சேகரிப்பதற்கான வழிகாட்டியும் கொண்டதாக உள்ளது. இவ்வாவணம், நிவாரணம், புனர்வாழ்வு, அபிவிருத்தி என்னும் துறைகளுடன் தொடர்புடைய சகல தரப்பினருக்கும் ஓர் அடிப்படை ஆதாரமாகவும் இருப்பதுடன், அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள் திட்டங்களை இனங்காணுவதற்கும், உருவாக்குவதற்கும், நடைமுறைப் படுத்துவதற்கும் ஒரு வழிகாட்டியாகவும் அமைந்துள்ளது.

மேலும் பார்க்க: 5356, 5410

364 பொதுப் பாதுகாப்பு நடைமுறைகள்

5322

அனர்த்த முகாமைத்துவ திட்டம். நூலாக்கக் குழு. யாழ்ப்பாணம்: சுகாதாரத் திணைக்களம், 1வது பதிப்பு, 2006. (யாழ்ப்பாணம் ஹரிகணன் அச்சகம்).
24 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5X15 சமீ.

புலம்பெயர்தலுக்கான சர்வதேச நிறுவனத்தின் அனுசரணையுடன் வெளியாகியுள்ள இச்சிறுநூல், இயற்கையாகவும் செயற்கையாகவும் நேரும் அனர்த்தங்களின்போது அவற்றைக் கையாளும் வகையில் மேற்கொள்ளப்படவேண்டிய நடவடிக்கைகள் பற்றிய தகவல்களைத் தருகின்றது. அனர்த்த முகாமைத்துவப் பணியாளர்களுக்கு ஏற்ற வகையில் இவை சுருக்கமாகவும் தெளிவாகவும் எழுதப்பட்டுள்ளன.

5323

அனர்த்த முகாமைத்துவம் ஒரு அனுபவ அணுகுமுறை. ச.அருளானந்தம். (புனைபெயர்: கேணிப்பித்தன்). திருக்கோணமலை: அருள் வெளியீட்டகம், 37/7, மத்திய வீதி, உவர்மலை, 1வது பதிப்பு, செப்டெம்பர் 2008. (கொழும்பு: நிஷான் பிரின்டர்ஸ்).
(6),72 பக்கம், விளக்கப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x15 சமீ., ISBN: 978-955-98211-9-9.

Christian Aid, OfERR (Ceylon) ஆகிய தொண்டர் அமைப்புகளின் அனுசரணையுடன் வெளியிடப்பட்டுள்ள இந்நூல், அநர்த்தம் பற்றிய செய்திகளையும் விபரங்களையும், அவற்றை வருமுன் காக்கும் திட்டங்களையும் சுனாமித் தாக்கத் தரவுகள், அநர்த்தங்களுக்கு உள்ளான நாடுகள் போன்றவை பற்றியும்

விபரிக்கின்றன. கேணிப்பித்தன் ச.அருளானந்தன் திருக்கோணமலை மாவட்டத்திலுள்ள ஆலங்கேணிக் கிராமத்தில் பிறந்தவர். இலங்கை கல்விச்சேவையில் நீண்டகாலம் பணியாற்றியவர்.

369.4092 சாரணர் இயக்கம்

5324

ஓநாய்க் குருளை. தமிழ்மணி தெல்லியூர். யாழ்ப்பாணம்: தெல்லியூர் செ.ந.கனகவேல்ராசா, தமிழ்மணிப் பதிப்பகம், குமாரசுவாமி வீதி, 1வது பதிப்பு, 1962. (யாழ்ப்பாணம்: அர்ச்.சூசைமா முனிவர் அச்சகம்).
10 பக்கம், விலை: 20 சதம்.

இளைஞருக்கு நற்குடிமுறையைப் பயிற்றுவிப்பதற்குச் சிறந்த இயக்கம் சாரணீயமாகும். சாரணிய இளைஞர் படையில் சேர்ந்தவர்களை ஓநாய்கள் (wolf) என்றும், அப்படையில் சேர்வதற்குத் தக்க பராயமடையாத இளைஞர்களை ஓநாய்க் குருளைகள் (wolf cubs) என்றும் அழைப்பார்கள். இவ்வியக்கத்தின் முதற்படியான ஓநாய்க் குருளைகளுக்கு தமிழில் போதிய நூல்கள் இல்லாத நிலையில் இச்சிறுநூல் ஒரு அறிமுகமாக வெளிவருகின்றது. (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

370 கல்வியியல்

5325

அபிவிருத்தியும் கல்வியும். சோ.சந்திரசேகரன். கொழும்பு 6: தர்ஷனா பிரசுரம், 58- 1/3, 37 ஆவது ஒழுங்கை, 1வது பதிப்பு, நவம்பர் 1996. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ் பிரைவேட் லிமிட்டெட், 48 B, புளுமெண்டால் வீதி).
iv, 43 பக்கம், விலை: ரூபா 80., அளவு: 21.5x14 சமீ.

அபிவிருத்திக் கோட்பாட்டை ஒரு வரலாற்று நோக்கில் ஆராய்வதாகவும், அரசியல் அபிவிருத்தி நோக்கு, பொருளாதார அபிவிருத்தி நோக்கு, எழுத்தறிவும் அபிவிருத்தியும், மாற்றுச் சிந்தனைகள் ஆகிய அம்சங்களை விரிவாக ஆராய்வதாகவும் இந்நூல் அமைந்துள்ளது. அபிவிருத்திக் கோட்பாடுகளை- பரிணாமக் கோட்பாடு, அமைப்பியல்- செயற்பாட்டுவாதம், நவீனமயக் கோட்பாடு, பொருளியல் கோட்பாடு, மார்க்சிய சிந்தனை, சார்புநிலைக் கோட்பாடு, விடுதலைக் கோட்பாடு ஆகியவற்றை இந்நூல் விளக்குகின்றது.

5326

ஆசிரியத் தொழில். நா.வரதராசா. பருத்தித்துறை: திருமதி செ.வரதராசா, பிராமண தெரு, தும்பளை, 1வது பதிப்பு, மார்ச் 2001. (யாழ்ப்பாணம்: டெக்னோவா டிசைனர்ஸ் அன்ட் பிரின்டர்ஸ்).
vi, 90 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 20x14.5 சமீ.

ஆசிரியத் தொழிலில் புதிதாக இணைந்துகொள்பவர்களுக்கு இத்தொழிலைப்பற்றிய அறிமுகத்தை இந்நூல் வழங்குகின்றது. தனிநபர் நிலைமை, வகுப்பறை நிலைமை, அமைப்புசார் நிலைமை, சமூக அரசியல் நிலைமை, வாண்மைசார் நிலைமை ஆகிய ஐந்து இயல்களில் இந்நூல் ஆசிரியர் தொழில் பற்றியும், அது இன்று எதிர்நோக்கும் சவால்கள் பற்றியும் விளக்குகின்றது.

5327

ஆசிரியரை விளைதிறன் மிக்கவராக்கல். மா.சின்னத்தம்பி. கொழும்பு 11: சேமமடு பொத்தகசாலை, U.G.50, Peoples Park, 1வது பதிப்பு, தை 2009. (கொழும்பு 11: சேமமடு பதிப்பகம்).
160 பக்கம், விலை: ரூபா 400., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-955-1857-30-1, CBCN: 2009-01-01-031.

ஆசிரியர்கள் பாடசாலைக் கல்விமுறையின் மையவிசையாகக் கருதப்படுகிறார்கள். ஆசிரியர்கள் தம்மளவிலும் பாடசாலை மட்டத்திலும் வினைத்திறனுடன் செயற்படவேண்டியது மிக அவசியமாகும். இவை தொடர்பான அம்சங்கள் இந்நூலில் ஆராயப்பட்டுள்ளன. ஆசிரிய விளைதிறன், சுயமுகாமைத்துவம், சுயகற்றல், பாடசாலை வகிபாகம், பாடசாலையில் வழிகாட்டல், சமூக அந்தஸ்து, சமூக தலைமைத்துவம், தொழில்சார் அறைகூவல்கள், நெருக்கடிகளைக் கையாளுதல், நேரமுகாமைத்துவம், தொழில்வாண்மை, எதிர்கால முன்னேற்றம் ஆகிய பன்னிரு அத்தியாயங்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. மாரிமுத்து சின்னத்தம்பி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கல்வியியல் துறையில் முதுநிலை விரிவுரையாளராகப் பணியாற்றுகிறார்.

5328

இலங்கையில் உயர்கல்வி: பல்கலைக்கழகக் கல்வியின் வளர்ச்சியும் பிரச்சினைகளும். சோ.சந்திரசேகரன். கொழும்பு 11: சேமமடு பொத்தகசாலை, U.G.50, Peoples Park, 1வது பதிப்பு, செப்டெம்பர் 2009. (கொழும்பு 11: சேமமடு பதிப்பகம்).
112 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 22 x14.5 சமீ., ISBN: 978-955-1810-08-5.

இலங்கையின் பல்கலைக்கழக கல்வியின் வளர்ச்சியும் பிரச்சினைகளும், பல்கலைக்கழக வளர்ச்சியின் சில பிற அம்சங்கள், மாகாண ரீதியாகப் பல்கலைக்கழகங்கள், பட்டமேற்படிப்பு, விசேட துறைகளுக்கான பல்கலைக்கழகங்கள், பாலினமும் பல்கலைக்கழகக் கல்வியும், கற்கை நெறிகள், பல்கலைக்கழக வகைப்படி மாணவர் தொகை, வெளிவாரிப் பட்டங்கள், பல்கலைக் கழகங்களுக்கான அரசாங்கச் செலவு, பல்கலைக்கழக அனுமதிக் கொள்கை, உயர்கல்வியின் பொருளாதாரப் பயன், பல்கலைக்கழக ஆசிரியர்கள், வன்செயலும் விரயமும், பல்கலைக்கழகக் கல்வியின் தராதரமும் பொருத்தப்பாடும், தரமேம்பாட்டுக்கான அண்மைக்காலச் சீர்திருத்தங்கள், பல்கலைக்கழகக் கல்வியின் தர உறுதிப்பாட்டுக்கான நடவடிக்கைகள், பல்கலைக்கழகங்களின் ஆராய்ச்சிப் பணிகள், பல்கலைக்கழக-வெளிஉலகத் தொடர்புகள், பல்கலைக்கழகக் கல்வி வாய்ப்புகள் தொடர்பான பிரச்சினைகள், திறந்த பல்கலைக்கழகம், பட்டதாரிகளின் வேலைவாய்ப்புப் பிரச்சினைகள், சிறுபான்மையினரின் உயர்கல்வி வாய்ப்புகள் ஆகிய 23 தலைப்புகளில் இலங்கையின் உயர்கல்வி சார்ந்த பிரச்சினைகள் ஆராயப்படுகின்றன.

5329

இலங்கையின் கல்வி வரலாறு. சபா.ஜெயராசா. கொழும்பு 11: சேமமடு பொத்தகசாலை, U G 50, People's Park, 1வது பதிப்பு, சித்திரை 2008. (கொழும்பு 11: சேமமடு பதிப்பகம்).
124 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-955-1857-09-7.

இலங்கையின் கல்வி வரலாறு பல்வேறு திருப்புமுனைகளுக்கூடாக வளர்ந்து வந்துள்ளது. இன்று இலங்கையில் 89சதவீதமானோர் கல்வியறிவு பெற்றவர்களாக இருக்கின்றனர். இலங்கையின் கல்வியியலிலும் கலைத்திட்டத்திலும் வரலாற்றின் முக்கியத்துவம் மீள் எழுச்சிகொள்ளத் தொடங்கியுள்ள வேளையில் இலங்கையின் கல்வி வரலாற்றை- அதன் சுவடுகளை குருகுலக் கல்வி, நிலாப் பள்ளிகள் போன்ற மரபுவழிக் கல்விமுறைகள் தொடங்கி, இன்றைய நவீன கல்வித்திட்டம் வரையிலான அதன் நீண்ட பாதையினை இந்நூல் 19 இயல்களில் திறனாய்வு செய்கின்றது.

5330

கல்வி செயற்பாட்டில் புதிய செல்நெறிகள். சோ.சந்திரசேகரன். மதுரை 625020: கவிதா பதிப்பகம், 4/825, நேரு வீதி, 1வது பதிப்பு, ஜனவரி 1996. (மதுரை 625001: விவேகானந்தா அச்சகம், 48 தெற்கு மாசி வீதி).
(8), 56 பக்கம், விலை: இந்திய ரூபா 80., அளவு: 21.5x14 சமீ.

முன்னைய 20 ஆண்டுகள் கல்வியியல் விரிவுரையாளராகப் பணியாற்றிய அனுபவம் கொண்டு எழுதப்பட்ட 11 கல்விசார் கருத்துரைகள் இந்நூலில் கட்டுரை வடிவில் தரப்பட்டுள்ளன. கல்விச் செயற்பாடும் எதிர்காலவியல் நோக்கும், புதிய தகவல்மைய நூற்றாண்டுக்கான மாணவர் திறன்கள், கல்விச் செயற்பாட்டில் தகவல் திறன்கள், நவீன யுகத்துக்கான விஞ்ஞானக் கல்வியும் தொழில்நுட்பக் கல்வியும், மறைநிலைப் பாட ஏற்பாட்டுச் சிந்தனை, கல்வி நிர்வாகத்தில் புதிய அணுகுமுறைகள், அறிவாக்கத்தில் விஞ்ஞான ஆய்வுமுறை – சில மாற்றுக் கருத்துக்கள், கற்பதற்குக் கற்றல் - புதிய கல்விக் குறிக்கோள், உழைக்கும் உலகமும் பாடசாலைக் கல்வியும், வளர்முக நாடுகளில் தொழிற்கல்வி ஏற்பாடுகள், கல்வித்துறையில் சமவாய்ப்புக்கள், இக்கோட்பாட்டின் தோற்றம் ஆகிய 11 தலைப்புகளின்கீழ் சே.சசந்திரசேகரனின் கருத்துக்கள் இந்நூலில் பதிவுசெய்யப்படுகின்றன.

5331

கல்வி நிர்வாகமும் முகாமைத்துவமும். சபா.ஜெயராசா. கொழும்பு 11: சேமமடு பொத்தகசாலை, U.G.50, Peoples Park, 1வது பதிப்பு, 2009. (கொழும்பு 11: சேமமடு பதிப்பகம்).
124 பக்கம், விலை: ரூபா 260., அளவு: 21.5 x14.5 சமீ., ISBN: 978-955-1857-36-3.

கல்வி முகாமைத்துவம் மற்றும் நிர்வாகம் தொடர்பான திறனாய்வு நிலைப்பட்ட நூல்களின் தேவை காலத்தின் பணிப்பாக எழுச்சிகொண்டுள்ளது. கோட்பாட்டு நிலையிலும் நடைமுறை நிலையிலும் எதிர்கொள்ளப்படும் பிரச்சினைகளும் மாற்றுவகை நோக்கும் நூலின் உட்பொதிவில் அடங்கியுள்ளன. கல்வி முகாமைத்துவம்-முன்னெழு நோக்கும் முறைசார் சிந்தனா கூடங்களும், அறிவு வளர்ச்சியும் முகாமைத்துவச் சிந்தனைகளின் எழுகோலங்களும், கல்வி முகாமைத்துவக் கோட்பாட்டு மாதிரிகைகள், மனிதவள முகாமைத்துவம், விஞ்ஞான முகாமைத்துவம், கல்வித் திட்டமிடல், மனிதவளத் திட்டமிடல், நிறுவன ஒழுங்கமைப்பு நடத்தை, நெறிப்படுத்தலும் மேற்பார்வையும், கல்விச் சொற்றொகுதியும் நிகழ்முனைப்பு ஆய்வும், பணியாட்சி முறைமை, வினையாற்றல் குன்றியோரை முகாமை செய்தல், முழுநிலைத் தர முகாமைத்துவம், இலங்கையின் கல்வி நிர்வாகக் கட்டமைப்பு, கல்வியின் தரமேம்பாட்டு முகாமைத்துவம் ஆகிய 15 தலைப்புகளில் இந்நூல் விரிகின்றது. கலைச்சொற்களுக்காக தனியொரு பிரிவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

5332

கல்விச் சமூகவியல். சபா.ஜெயராசா. கொழும்பு 11: சேமமடு பொத்தகசாலை, U G 50, People's Park, 1வது பதிப்பு, 2008. (கொழும்பு 11: சேமமடு பதிப்பகம்).
124 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 21x14.5 சமீ., ISBN: 978-955-1857-03-5.

மார்க்சியம், நவமார்க்சியம், மற்றும் தொல்சீர் சமூகவியல், மார்க்சிய சமூகவியல், பின் நவீனத்துவம் போன்ற பல்வேறு சிந்தனை மரபுகளையும் உள்ளடக்கியதாக இந்நூல் வெளிவந்துள்ளது. நவீன சமூகவியல் நோக்கில் பழந்தமிழர்களின் சமூகவியல் சிந்தனை நோக்கப்பட்டுள்ளது. இது கலை, இலக்கியம், நாட்டார் வழக்கியல் போன்ற துறைகளை மீள்வாசிப்புக்குள்ளாக்கும் தேவையை வலியுறுத்தியுள்ளது. புதிய எண்ணக்கருக்களால் தமிழ்ச் சிந்தனையின் ஓட்டத்தை வளப்படுத்திப் புதிய திசைமாற்றும் நோக்கில் 19 தலைப்புகளில் இந்நூலினை பேராசிரியர் சபா.ஜெயராசா வழங்கியுள்ளார்.

5333

கல்விச் சமூகவியல். மா.கருணாநிதி. கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், 361, 1/2, டாம் வீதி, 1வது பதிப்பு, 2008. (கொழும்பு 12: குமரன் பிரின்டர்ஸ், 361, 1/2, டாம் வீதி).
xii, 145 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-955-659-140-0.

ஆசிரியர் கல்விக்கான பாடப்பொருள் என்ற வகையில் கல்விச் சமூகவியல் பெரு முக்கியத்துவம் பெறுகின்றது. கல்விச் சமூகவியலானது கல்விக் கொள்கை வகுப்போர், கல்வி நிர்வாகிகள், அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர் எனக் கல்வித்துறை சார்ந்த பல்வகைப் பயனாளிகளின் கல்விசார் பணிகளுக்குப் பெரிதும் உதவக்கூடியது. இவ்வகையில் முக்கியத்துவம்பெறும் இந்நூல் கல்விச் சமூகவியல், கல்வியும் சமூகமயமாக்கலும், சமூக அடுக்கமைப்பு, சமூக வகுப்பு, கல்வி, கல்வியும் சமூக நகர்வும், கல்வியும் சமூக மாற்றமும், சமூகக் குழுக்களும் கல்விச் செயற்பாடுகளும் ஆகிய ஆறு இயல்களில் கல்விச் சமூகவியல் பற்றி ஆராய்கின்றது. நூலாசிரியர் கலாநிதி மார்க்கண்டு கருணாநிதி 1949இல் பிறந்தவர். பேராதனை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகங்களில் கற்று கொழும்புப் பல்கலைக்கழகத்தின் கல்வியியல் பீடத்தின் முதுநிலை விரிவுரையாளராகப் பணியாற்றுகின்றார்.

5334

கல்வியியலும் கணிப்பீட்டியலும். சபா.ஜெயராசா. கொழும்பு 11: சேமமடு பொத்தகசாலை, U.G.50, Peoples Park, 1வது பதிப்பு, ஆவணி 2008. (கொழும்பு 11: சேமமடு பதிப்பகம்).
100 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 21.5x15சமீ., ISBN: 978-955-1857-23-3.

கணிப்பீடு தொடர்பான தெளிவான புலக்காட்சியை ஏற்படுத்தும் வண்ணமும் அதனை அடியொற்றிக் கற்றல்-கற்பித்தல் செயற்பாட்டினை சிறப்பாக ஒழுங்கமைக்கும் நோக்குடனும் கல்வியியலும் கணிப்பீட்டியலும் என்னும் இந்நூலினை முனைவர் சபா ஜெயராஜா வழங்கியுள்ளார். கணிப்பீட்டியலின் வரலாறு, கணிப்பீட்டியல், கற்றலுக்கான கற்றலும் சுயகணிப்பீடும், கற்றலை வளம்படுத்துதலும் பொதுப் பரீட்சைகளும், வினைத்திறன் மிக்க கற்றலை உருவாக்குதல், கணிப்பீடும் புள்ளிவிபரவியலும், பாடத் திட்டமிடல், பாடத்திட்டமிடலில் நடைமுறைப் பிரச்சினைகள், வகுப்பறை முகாமைத்துவம், கணிப்பீடும் தொடர்தொழில் ஆற்றுப்படுத்தலும், கணிப்பீடு தொடர்பான பின்னவீனத்துவ அணுகுமுறைகள், சமகாலக் கணிப்பீட்டியல், கணிப்பீடும் ஊக்கலும் சீர்மியமும் ஆகிய 13 இயல்களில் இந்நூல் விரிகின்றது.

5335

கல்வியியலும் நிகழ்பதிவுகளும். சபா.ஜெயராசா, சோ.சந்திரசேகரன். கொழும்பு 11: சேமமடு பொத்தகசாலை, U.G.50, Peoples Park, 1வது பதிப்பு, 2009. (கொழும்பு 11: சேமமடு பதிப்பகம்). 172 பக்கம், விலை: ரூபா 340., அளவு: 21 x14.5 சமீ., ISBN: 978-955-1857-43-1.

இலங்கையின் கல்வித்துறையின் இருபெரும் துறைசார் அறிஞர்களான பேராசிரியர்கள் சபா ஜெயராசா, சோ.சந்திரசேகரன் ஆகியோரின் கட்டுரைகளின் தொகுப்பு. கல்வியியலும் நிகழ்பதிவுகளும் (Education and Contemporary Impressions) என்ற தலைப்பில் இவர்களின் கட்டுரைகள் இருபிரிவுகளாக அமைகின்றன. சமூக உளவியல் நோக்கில் அந்நியமாதல் என்ற தோற்றப்பாடு, மார்க்சிய நவமார்க்சிய உளவியற் சிந்தனைகள், அறிகை உளவியல் விரிவில் புறானரும் நவீன கல்வியும், கோளமய உளவியலும் வளர்முக நாடுகளும், கோளமயமாக்கலும் இலங்கையின் கல்வியும், கல்விச் செயற்பாடுகளை தொழிற்சந்தைகளோடு ஒன்றிணைத்தல் ஆகிய ஆறு கட்டுரைகளை முனைவர் சபா ஜெயராசா அவர்களும், கைத்தொழில் சமூகங்களின் எழுச்சியும் புதிய கல்விச் செயற்பாடுகளும், சில விஞ்ஞான சமூகவியல் கருத்துக்கள், சமூகவியல் நோக்கில் கல்வி, அறிவு, விஞ்ஞானம், சீனாவின் அறிவுப் புரட்சி, இணையத்தளங்கள் ஒரு மாற்றுப் பார்வை, இனத்துவக் கணித சிந்தனை: சில அறிமுகக் குறிப்புகள் ஆகிய ஆறு கட்டுரைகளை பேராசிரியர் சோ.சந்திரசேகரனும் வழங்கியுள்ளனர்.

5336

கல்வியியற் பதிவுகளும் பண்புசார் விருத்தியும். தி.கமலநாதன். கொழும்பு 11: சேமமடு பொத்தகசாலை, U.G.50, Peoples Park, 1வது பதிப்பு, 2009. (கொழும்பு 11: சேமமடு பதிப்பகம்). 164 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 21 x15 சமீ., ISBN: 978-955-1857-47-9.

நீண்டகால கற்பித்தல் அனுபவங்கள், மற்றும் கல்வி முகாமைத்துவ அனுபவம் மிக்கவர் இந்நூலாசிரியர். இந்நூல் இவரது கல்விசார் அனுபவப் பதிவுகள் பலவற்றை உள்ளடக்கிய அதே வேளை சிறார் கல்வி, ஆசிரியர் கல்வி, சிறப்புத் தேவைக்குரியோருக்கான கல்வி, அவசரகாலக் கல்வி, வழிகாட்டற் செயற்பாடுகள், தேசிய கல்வியியற் கல்லூரிகளின் நடைமுறைகள், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்குரிய கல்விப் பிரச்சினைகள் முதலியவற்றைப் பற்றிய விரிவானதும் விளக்கமானதுமான 10 கட்டுரைகள் இந்நூலின் இரு பிரிவுகளிலும் தொகுக்கப்பட்டுள்ளன.

5337

கல்வியும் உளவியலும் பகுதி 2. ச.முத்துலிங்கம். கொழும்பு 12: ச.முத்துலிங்கம், முன்னாள் பேராசிரியர், கல்வி உளவியல் துறை, கல்விப்பீடம், கொழும்புப் பல்கலைக்கழகம், 3வது பதிப்பு, 2002, 1வது பதிப்பு, 1980, 2வது பதிப்பு, 1995. (கொழும்பு 12: லங்கா புத்தகசாலை, F L 1-14, டயஸ் பிளேஸ், குணசிங்கபுர).
112 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 22x15 சமீ., ISBN: 955-97847-1-4.

கல்வி உளவியலும் அதன் ஆய்வு முறைகளும், பரம்பரையும் சூழலும், முதிர்வு, வளர்ச்சிக் கோலங்கள், குழந்தைப் பருவமும் பிள்ளைப் பருவமும், கட்டிளமைப் பருவம், சிந்தனை-பியாஜேயின் கருத்துக்கள், நுண்மதி, இயல்பூக்கம், நனவிலி ஊக்கல், சமூக ஊக்கல், உளவியல் தேவைகள், பொருத்தப்பாடு, ஆளுமை, மனப்பான்மை, கவர்ச்சி, வழிகாட்டல் முறைகள், விசேட உதவி வேண்டிய பிள்ளைகள் ஆகிய 14 அத்தியாயங்களில் கல்வி உளவியல் சார்ந்த கருத்துகள் முதலாவது தொகுதியில் இடம்பெற்றிருந்தது. (நூல்தேட்டம் பதிவிலக்கம் 4209). இந்த இரண்டாவது தொகுதியில் அத்தியாயம் 15 முதல் 25 வரையிலும், 11 இயல்களில் கவனமும் புலக்காட்சியும், ஞாபகம், தூண்டி-துலங்கல்சார் நிபந்தனைப்பாடு, தொழில்சார் நிபந்தனைப்பாடு, அகக்காட்சி, கற்றலில் இடமாற்றம், எண்ணக்கருவாக்கம், பிரச்சினை விடுவித்தல், சிந்தனையும் மொழியும், வகுப்பறைக் கற்பித்தல், நிரலித்த கற்பித்தல் ஆகிய தலைப்புகளில் கல்வியும் உளவியலும் விபரிக்கப்பட்டுள்ளன.

5338

கல்வியும் பால்நிலைச் சமத்துவமும். சபா.ஜெயராசா. கொழும்பு 7: அகவிழி, 3, டொறிங்டன் அவென்யு, 1வது பதிப்பு, மார்ச் 2007. (கொழும்பு 6: டெக்னோ பிரின்ட், 55 டாக்டர் ஈ.ஏ.கூரே மாவத்தை). 132 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 22x14.5 சமீ., ISBN: 978-955-1674-00-7.

பால்நிலையும் கல்வியும், முன்பிள்ளைப் பருவக் கல்வியும் பால்நிலையும், பால்நிலையும் இரண்டாம் நிலைக் கல்வியும், ஆசிரியத்துவமும் பால்நிலையும், கற்பித்தலியலை மீளாய்வு செய்தல், வினைத்திறன் கொண்ட கற்பித்தல், அறிவொழுக்கமும் கற்பித்தலியலும் பால்நிலையும், தன்முனைப்புக் கற்றலும்

சமகாலச் சூழலின் பிரதிபலிப்பும், பிரச்சினைத் தளக் கற்றலும் பால்நிலைச் சமத்துவமும், வறுமையும் வகுப்பறை மாற்று நடவடிக்கைகளும், வளம் குன்றிய பாடசாலைகளும் வறிய பெண்களின் கல்வியும், பெருந்தோட்டத்துறைப் பெண்களின் கல்வி, பால்நிலையும் இலங்கையின் கல்வியும், மேலைப் புலத்துப் பெண்கள் கல்வியின் வளர்ச்சி, பால்நிலையும் உளப்பகுப்பு ஆய்வும், பின்நவீனத்துவமும் பெண்கல்வி பற்றிய நோக்கும், தன்நிலை உருவாக்கம், மார்க்சிய மனிதமும் இருப்பிய மனிதமும், புதிய ஆசிரியரும் யுகமலர்ச்சியும்: அண்மைக்காலப் போக்குகள், ஆற்றல்மிகு மாணவர்களை உருவாக்குவதற்குரிய ஆசிரியத்துவம், பால்நிலையும் சீர்மியமும் ஆகிய 21 தலைப்புகளில் இந்நூல் கல்வியும் பால்நிலைச் சமத்துவமும் பற்றி ஆராய்கின்றது.

5339

கலைத் திட்டம். சபா. ஜெயராசா. கொழும்பு 7: அகவிழி வெளியீடு, 3 டொறிங்டன் அவெனியு, 1வது பதிப்பு, ஒக்டோபர் 2007. (கொழும்பு 6: டெக்னோ பிரின்ட், 55 டாக்டர் ஈ.ஏ. குரே மாவத்தை).
168 பக்கம், விலை: ரூபா 225., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-955-1674-00-7.

நவீன கல்வி முறைமையின் உருவாக்கம், கலைத்திட்டம் சார்ந்த கருத்து, மற்றும் கோட்பாடாக்கம் சார்ந்த அகல்விரி சிந்தனையின் தொகுப்பாகவே அமைந்துள்ளது. கற்றல்-கற்பித்தல் செயற்பாட்டில் உள்ளவர்களுக்கு கலைத்திட்டம் பற்றிய அறிவு இன்றியமையாது வேண்டப்படுகின்றது. கலைத்திட்டம் பற்றிய கோட்பாட்டுரீதியான விளக்கத்தினை வழங்கும் நோக்குடன் இந்நூல் உருவாக்கப்பட்டுள்ளது.

5340

கற்றல் கற்பித்தல்: மேம்பாட்டுக்கான வழிமுறைகள். மா.கருணாநிதி. கொழும்பு 11: சேமமடு பொத்தகசாலை, U G 50, People's Park, 1வது பதிப்பு, 2008. (கொழும்பு 11: சேமமடு பதிப்பகம்).
148 பக்கம், விலை: ரூபா 240., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-955-1857-04-2.

ஆசிரியர் கல்வியும், தொழில்சார் கல்வியில் வழங்கப்படும் அணுகுமுறைகளும், நுட்பங்களும் மட்டும் கற்றல்-கற்பித்தலின் மேம்பாட்டுக்கு உதவுவதில்லை. இவற்றோடு, கல்விச் சூழல், பாடசாலைகளில் அதிபரின் தலைமைத்துவம், பெற்றோரின் ஒத்துழைப்பு, வகுப்பறைக் கட்டுப்பாடுகளை மேற்கொள்ளுதல், ஆசிரியர் தொழில்சார் பயிற்சியின் கூறுகளை இற்றைப்படுத்தல் என்பனவும் அத்தியாவசியமானவை. இந்நூலில் இத்தகைய விடயம் பற்றிய கருத்துக்களை ஆசிரியர் 15 கட்டுரைகளின் வாயிலாகத் தந்துள்ளார். அகவிழி உள்ளிட்ட பல்வேறு கல்வியியல் சஞ்சிகைகளில் இவை பிரசுரமாகியுள்ளன. நூலாசிரியர் கொழும்புப் பல்கலைக்கழகத்தில் கல்வியியல்துறை முதுநிலை விரிவுரையாளராகப் பணியாற்றி வருகின்றார்.

5341

குழந்தை உளவியலும் கல்வியும். சபா.ஜெயராசா. கொழும்பு 13: பூபாலசிங்கம் புத்தகசாலை, 202 செட்டியார் தெரு, 3வது பதிப்பு, பெப்ரவரி 2009, 1வது பதிப்பு, நவம்பர் 2005, 2வது பதிப்பு, மார்ச் 2006. (வத்தளை: Page and Image, 202/2B Royal Pearl Garden).
vi, 186 பக்கம், விலை: ரூபா 350., அளவு: 21x14.5 சமீ., ISBN: 955-9396-09-9.

இந்நூல், குழந்தை உளவியல், குழந்தைக் கல்விச் சிந்தனைகள், தமிழ் மரபில் சிறார் கல்விச் சிந்தனைகள் என்னும் மூன்று பகுதிகளாக உள்ளடக்கம் அமைந்துள்ளன. மேலைத்தேய அறிஞர்கள் முதல், தமிழ் மரபில் முகிழ்ந்த சிந்தனையாளர்கள் வரை நூலின் மையப் புள்ளி இழையோடுகின்றது. உளவியல் சிந்தனைப் புலத்தின் பிரயோகத் தன்மையும் தமிழ் மரபு சார்ந்த தேடல் ஆய்வு நூலின் பொதுப் போக்காகவும் உள்ளது. பாரதியார், தேசிக விநாயகம்பிள்ளை, அழ வள்ளியப்பா, சோமசுந்தரப் புலவர் ஆகியோர் குறித்து நமக்கு வேறுபட்ட தரிசனம் இந்நூலின் மூலம் கிடைக்கின்றது. குழந்தை உளவியலுக்கு நமது தமிழ் மரபும் புதுவளங்களைக் கொடுத்துள்ளது என்பதை இந்நூல் தெளிவுபடுத்துகின்றது.

5342

சமகால கல்வி முறைகள் ஒரு விரிநிலை நோக்கு. சோ.சந்திரசேகரன். கொழும்பு 11: சேமமடு பொத்தகசாலை, U.G.50, Peoples Park, 1வது பதிப்பு, 2009. (கொழும்பு 11: சேமமடு பதிப்பகம்).
128 பக்கம், அட்டவணைகள், விலை: ரூபா 330., அளவு: 21.5 x14.5 சமீ., ISBN: 978-955-1857-44-8.

உலகளாவிய கல்வித்துறை ஊழல்கள், பிள்ளைநேயப் பாடசாலைகளை நோக்கி, இலங்கையின் உயர்கல்வியின் எதிர்காலம், ஐக்கிய அமெரிக்காவின் காந்தப் பாடசாலைகளும் பட்டயப் பாடசாலைகளும், மெய்நிகர் பல்கலைக்கழகம், ஜப்பானியர்களைக் கவர்ந்திழுக்கும் இந்தியப் பாடசாலைகள், வளர்முக நாடுகளின் பல்கலைக்கழகங்களுக்கு நிபுணர்களின் எச்சரிக்கை, ஜப்பான் ஜுக்கு கல்வி நிலையங்கள், அமெரிக்கக் கல்வியும் ஜப்பானியக் கல்வியும், புதிய கல்விச் செல்நெறிகள் சர்வதேச மதிப்பீட்டுப் பரீட்சைகள், புதிய அறிவுப் பிரவாகமும் வாசிப்புப் பண்பாடும், தனியார் உயர்கல்வி-உலகளாவிய செல்நெறிகள், வளர்ச்சியடைந்த நாடுகளில் வீட்டுப் பாடசாலைகள், முன்பள்ளிக் கல்வியின் உலகளாவிய முக்கியத்துவம், அறிவுசார் பொருளாதாரமும் வாழ்க்கை நீடித்த கல்வியும், பொதுப் பரீட்சைகளும் தேசியப் பரீட்சைகளும் ஆகிய 16 தலைப்புகளில் பேராசிரியர் சந்திரசேகரம், சமகாலக் கல்விமுறை பற்றி விரிநிலை நோக்கினை இந்நூலில் எளிய முறையில் கல்வியியில்துறை மாணவர்களுக்காக வழங்கியுள்ளார்.

5343

சீர்மிய உளவியல். சபா.ஜெயராசா. கொழும்பு 11: சேமமடு பொத்தகசாலை, U.G.50, Peoples Park, 1வது பதிப்பு, கார்த்திகை 2008. (கொழும்பு 11: சேமமடு பதிப்பகம்).
116 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-955-1857-24-0.

Counselling Psychology என வழங்கப்படும் உளவளத்துணை அல்லது சீர்மிய உளவியல் பற்றிய இந் நூல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கல்வித்துறையில் பேராசிரியராகவிருந்து ஓய்வுபெற்ற கலாநிதி சபா.ஜெயராசா அவர்களின் படைப்பாகும். சீர்மியம் பண்பாட்டு வேர்களுடன் ஒன்றிணைந்தது. மேலைத்தேயப் பண்பாடு தழுவிய சீர்மிய அணுகுமுறைகள் எம்மிடையே பின்னடைவுகளையும் தோல்விகளையுமே ஏற்படுத்தியுள்ளன. இன்று பெருந்தொகையான நிதி பொருத்தமற்ற சீர்மியச் செயல்முறைகளால் வீணடிக்கப்பட்டு வருகின்றன. இந்நிலையில் இத்துறைசார்ந்த ஆரோக்கியமான ஆழ்ந்த நகர்வை இந்நூல் ஏற்படுத்த விழைகின்றது. பாடசாலைகளையும் கல்விச் செயற்பாடுகளையும் குவியப்படுத்தி தமிழில் வெளிவரும் முன்னோடி நூலாகவும் இது அமைந்துள்ளது.

5344

தாய்மொழிக் கல்வியும் கற்பிக்கும் கலையும். சபா.ஜெயராசா. கொழும்பு 11: சேமமடு பொத்தகசாலை, U.G.50, Peoples Park, 1வது பதிப்பு, 2009. (கொழும்பு 11: சேமமடு பதிப்பகம்).
140 பக்கம், விலை: ரூபா 260., அளவு: 21 x14.5 சமீ., ISBN: 978-955-1857-46-2.

தாய்மொழிக் கல்வியை உளவியல், மொழியியல், கற்பித்தலியல், மெய்யியல் முதலாம் பரிமாணங்களில் ஆராய்ந்து அதன் முக்கியத்துவம் இந்நூலிலே தருக்க நிலையிலே சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. மொழியின் கோலங்கள், மெய்யியல் நோக்கில் மொழி, கல்விக் கோட்பாட்டு நிலைகளில் தாய்மொழி, மொழித் திரட்டல் முயற்சிகள், தாய்மொழியின் தனித்துவம், உளமொழியியல், கல்வியும் சமூக மொழியியலும், மொழி கற்பித்தலும் சீர்மிய நுட்பங்களும், மொழிக் கலைகளும் கற்பித்தல் அணுகுமுறைகளும், வாய்மொழி அணுகுமுறையும் சந்தர்ப்பநிலை மொழி கற்பித்தலும், தொடர்பாடல் நிலைப்பட்ட மொழி கற்பித்தல், கற்பித்தலின் ஒலி மொழிமுறை, கருத்தேற்றக் கற்பித்தல், மொழிக் கற்பித்தலின் இயற்கை அணுகுமுறை, மொழியும் முழுநிலை உடற்கூற்றுத் துலங்கலும், வாசிப்பும் கற்றலும், எழுத்துக் கற்பித்தல், கட்டுரை கற்பித்தல், கவிதையும் கற்பித்தலும், தமிழ் இலக்கிய வரலாறு கற்பித்தல், மொழிவளமும் மொழிபெயர்ப்பும், நிறைவுரையின் தொடக்கம் ஆகிய 22 இயல்களில் இந்நூல் விளக்கப்படுகின்றது.

5345

நவீன இலக்கியங்களைக் கற்பித்தல். அராலியூர் ந.சுந்தரம்பிள்ளை. யாழ்ப்பாணம்: அராலியூர் ந.சுந்தரம்பிள்ளை, 30, கடைச்சாமி வீதி, நீராவியடி, 1வது பதிப்பு, ஒக்டோபர் 2008. (யாழ்ப்பாணம்: கங்கை பிறின்டேர்ஸ், 781 கே.கே.எஸ். வீதி, சிவலிங்கப் புளியடி).
xiv, (4), 250 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 20x14 சமீ.

இலங்கையில் தமிழ்பேசும் பிள்ளைகளுக்கு நவீன இலக்கியங்களைக் கற்பிக்க வழிகாட்டும் நூல் என்ற ஆசிரியரின் குறிப்புரையுடன் வெளிவந்துள்ள இந்நூலில், முதலாவது பிரிவு, கற்றல் கற்பித்தல் பின்னணியில் நவீன இலக்கியங்களைத் தமிழ்ச் சிறார்களுக்குக் கற்பித்தல் பற்றிய கருத்துக்களை ஒன்பது தலைப்புகளில் பதிவுசெய்கின்றது. தொடர்ந்து வரும் மூன்று பிரிவுகளிலும் புதிய பாடப் புத்தகங்களில் இடம்பெற்றுள்ள சிறுகதைகள், நாடகங்கள், கூத்துகள் மற்றும் ஏனைய பாடங்கள் பற்றிய விமர்சனமாகவும், தவறுகளைச் சுட்டிக்காட்டுவதாகவும் அமைந்த 36 தலைப்புகளில் அமைந்த கட்டுரைகள்

இடம்பெற்றுள்ளன. பின்னிணைப்பில் இலங்கை வானொலிக்கான நூலாசிரியரின் நேர்காணல் ஒன்றும், தினக்குரலில் 11.6.2006 அன்று பிரசுரமான அவரது கெட்டிக்காரர்கள் நூல் விமர்சனமும், ஞானம் சஞ்சிகைக்கு ஓகஸ்ட் 2007இல் நூலாசிரியர் எழுதிய கடிதம் ஒன்றும் இடம்பெற்றுள்ளன.

5346

நவீன கற்றல் கற்பித்தல் முறையியல்கள். பாலசுப்பிரமணியம் தனபாலன். கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், 361, 1/2, டாம் வீதி, 1வது பதிப்பு, 2008. (கொழும்பு 12: குமரன் பிரின்டர்ஸ், 361, 1/2, டாம் வீதி).

(10), 127 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-955-659-153-8.

உலகளாவிய ரீதியில் மறுசீரமைக்கப்பட்ட ஆசிரியர் கல்வி அபிவிருத்திக் கருத்தியல்களையும் பின் நவீனத்துவ சிந்தனைகளையும் இணைத்து நவீன கற்றல் கற்பித்தல் முறையியல்கள், ஆசிரியர் செயற்பங்கு, கற்பவர் மைய அணுகுமுறைகள், போதனா முகாமைத்துவமும் பாடசாலையும், கற்றல்-கற்பித்தல் பிரச்சினைகளும் தீர்வுகளும், கலைத்திட்டம், கல்வியின் பூரணத்துவம் பற்றிய காட்சி போன்ற எண்ணக்கருக்கள் ஊடாக நவீன கற்றல்-கற்பித்தல் அணுகுமுறைகள் இந்நூலில் விபரிக்கப்பட்டுள்ளன. பா.தனபாலன் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் இளங்கலைமாணிப் பட்டத்தினையும், இலங்கைத் தேசிய கல்வி நிறுவகத்தில் பட்டப்பின் கல்வி டிப்ளோமாவையும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கல்வியியல் முதுதத்துவமாணிப் பட்டத்தையும் பெற்றவர். தற்பொழுது யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரியின் உபபீடாதிபதியாகப் பணியாற்றிவருகிறார்.

5347

பரீட்சையில் சித்தி எய்துவது எப்படி? இப்படி. முல்லை றிஸானா. புத்தளம்: ஏ.ஆர்.றிஸானா றஹீம், இல.81, கடுமையாங்குளம் வீதி, 1வது பதிப்பு, ஓகஸ்ட் 2008. (கொழும்பு 13: Sai Printers, 93/3, Wolfendhal Street).

(10), 31 பக்கம், விலை: ரூபா 120., அளவு: 21x15 சமீ.

இன்று பெரும்பான்மையான ஆசிரியரும் பெற்றோரும் பிள்ளைகள் எப்போதும் படித்துக்கொண்டிருக்க வேண்டுமென விரும்புகின்றார்களேயொழிய எவ்வாறான வழிமுறைகளைக் கைக்கொண்டு படிக்கவேண்டும் என்றும் பரீட்சைக்கு ஆயத்தம் செய்யும் உளவியல் நுணுக்கங்களையும் பிள்ளைகள் அறிந்துகொள்ள வழிசெய்வதில்லை என்று கூறும் இந்நூலாசிரியை, பிள்ளைகள் பரீட்சையில் சித்தியெய்துவதுடன், வகுப்பறையில் படித்ததை நீண்டகாலம் மனதில் வைத்திருக்கவும், தேவைக்கேற்ப அவற்றை மீட்டு பரீட்சை விடைத்தாளில் தெளிவாகவும் சுருக்கமாகவும் பதிவுசெய்யவும் தேவைப்படும் தொழில்நுட்பத்தினை உளவியல்ரீதியாக விளங்கவைக்க முனைகின்றார். ஏ.ஆர்.றிஸானா றஹீம் (முல்லை றிஸானா) புத்தளம் மாவட்டத்தைச் சேர்ந்தவர். நீண்டகாலம் கற்பித்தல் அனுபவம் கொண்டவர். புத்தளம் ஸாஹிரா தேசிய பாடசாலையில் ஆசிரியராகப் பணிபுரிபவர். கல்வித்துறையில் உயர்கல்வித் தேர்ச்சிபெற்று கொழும்புப் பல்கலைக்கழகத்தில் உயர் சித்தி பெற்றவர். குழந்தைகளுக்கான பல நூல்களை எழுதி வெளியிட்டுள்ளவர்.

5348

பாடசாலை மேம்பாட்டுப் பங்குதாரர்களுக்கான கைந்நூல். W.G.குலரத்ன (மூலம்), எஸ்.சந்திரசேகரன் (தமிழாக்கம்). பத்தரமுல்லை: கல்வி அமைச்சு, இசுருபாயா, 1வது பதிப்பு, ஜனவரி 2008. (கொழும்பு: குணரத்ன ஒப்செட் லிமிட்டெட்).

iv, 140 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 29x20 சமீ.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் இடைநிலைக் கல்வி நவீனமயமாக்கல் செயல்திட்டத்தின் கீழ் இந்நூல் வெளியிடப்பட்டுள்ளது. கல்வி அதிகாரிகளுக்கும் மற்றும் பாடசாலை மட்டத்தில் பணிபுரியும் முகாமையாளர்களுக்கும் நாளாந்தப் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வதற்கான புதிய நுட்பங்களையும், முறைகளையும் எட்டுத் தலைப்புகளில் இந்நூல் வழங்குகின்றது.

5349

பாடசாலைகளை முகாமை செய்தல்: சமகால அணுகுமுறை. மா.சின்னத்தம்பி. கொழும்பு 11: சேமமடு பொத்தகசாலை, U.G.50, Peoples Park, 1வது பதிப்பு, மாசி 2009. (கொழும்பு 11: சேமமடு பதிப்பகம்).

132 பக்கம், விலை: ரூபா 340., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-955-1857-32-5., CBCN: 2009-02-01-033.

இலங்கையில் பாடசாலை முகாமைத்துவம் பற்றிய பொதுவான அதிருப்தி நிலையை காணக்கூடியதாக உள்ள இன்றைய சூழலின் பின் விளைவுகளாக, தனியார் பாடசாலைகளும் தனியார்கல்வி நிறுவனங்களும் மாணவர்களையும் பெற்றோரையும் அதிகம் ஈர்க்கின்றன. இந்நிலையில் சமகால முகாமைத்துவ அறைகூவல்களை எதிர்கொள்ளும் புதிய தகைமை மற்றும் திறன்கள் பற்றி அதிக கவனத்துடன் இந்நூல் பேசுகின்றது. பாடசாலை முகாமைத்துவ தேவை, பாடசாலை முகாமைத்துவம் எண்ணக்கரு, பாடசாலை முகாமைத்துவமும் அதிபரும், கலைத்திட்ட முகாமைத்துவம், பாடசாலைக்கான நேர முகாமைத்துவம், கல்வி தகவல் முகாமைத்துவம், முரண்பாடுகளை முகாமை செய்தல், அனர்த்த நிலைமைகளில் பாடசாலைகளை முகாமைசெய்தல் ஆகிய எட்டு அத்தியாயங்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. அதிபர்களுக்கும், பகுதித் தலைவர்களுக்கும் ஏனைய ஆசிரியர்களுக்கும் பயனுள்ள நூல். மாரிமுத்து சின்னத்தம்பி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கல்வியியல் துறையில் முதுநிலை விரிவுரையாளராகப் பணியாற்றுகிறார்.

5350

பாடசாலையும் சமூகமும். மா.சின்னத்தம்பி. கொழும்பு: குமரன் புத்தக இல்லம், 361, ½ டாம் வீதி, 1வது பதிப்பு, 2008. (கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், 361, 1/2, டாம் வீதி).
(6), 112 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-955-659-138-9.

கிராமிய வறிய சமூகங்களுடன் பாடசாலைகள் எத்தகைய தொடர்பினைக் கொண்டுள்ளன என்பதையும், அவற்றிற்கிடையிலான பொருந்தாத் தன்மைகள் எவை என்பதையும், சமூகத்திற்கும் பாடசாலைக்கும் இடையிலான ஊடாட்டத்தினையும் கிராமிய சமூகமும் பாடசாலையும், சமூக நிதியும் பாடசாலையும், பெற்றோர் சமூகமும் பாடசாலையும், பாடசாலை முறைமையில் மாற்றங்கள், பாடசாலைகளும் நெருக்கடிகளும், கவன ஈர்ப்புக்குரியவர்களும் கல்வியும், வறியோரும் கல்வியும், வறியவர்களும் பாடசாலைகளும் ஆகிய எட்டு இயல்களில் விரிவாக ஆராய்ந்துள்ளார். மாரிமுத்து சின்னத்தம்பி தனது இளமாணி, சிறப்பு மெய்யியல் இளமாணிப் பட்டங்களை கொழும்புப் பல்கலைக் கழகத்திலும், கல்வி பட்டப்பின் படிப்பு டிப்ளோமா, பொருளியல் முதுமாணிப் பட்டம், கல்வி மெய்யியல் முதுமாணிப் பட்டம் ஆகியவற்றை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும் பெற்றவர். தற்போது யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் கல்வியியல்துறையில் முதுநிலை விரிவுரையாளராகப் பணியாற்றுகின்றார்.

5351

பாலர் கல்வியும் நவீன செல்நெறிகளும். பாலசுப்பிரமணியம் தனபாலன். கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், 361, 1/2, டாம் வீதி, 1வது பதிப்பு, 2009. (கொழும்பு 12: குமரன் பிரின்டர்ஸ், 361, 1/2, டாம் வீதி).
xii, 119 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 300., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-955-659-154-5.

பாலர் கல்வி தொடர்பான சமகால அணுகுமுறைகளுக்கு வலுவூட்டும் வகையிலும், உலக தரிசனங்களையும், உள்நாட்டு நிலவரங்களையும் கருத்திற்கொள்ளும் வகையிலும் இந்நூல் உருவாக்கப்பட்டுள்ளது. பாலர் கல்விச் சிந்தனைகள், பாலர் உளவியல், கலைத்திட்ட விருத்தி, கற்பித்தலியல் நுட்பங்கள், வள ஆக்கங்கள், புலப்பாடுகளின் கணிப்பீடுகள், ஆசிரியத்துவ வாண்மை முதலிய பல்வேறு பரிமாணங்கள் தழுவிய அகல்நிறை (comprehensive) ஆக்கமாக இந்நூல் அமைந்துள்ளது. நூலாசிரியர் பா.தனபாலன் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் இளங்கலைமாணிப் பட்டத்தினையும், இலங்கைத் தேசிய கல்வி நிறுவகத்தில் பட்டப்பின் கல்வி டிப்ளோமாவையும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கல்வியியல் முதுதத்துவமாணிப் பட்டத்தையும் பெற்றவர். தற்பொழுது யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரியின் உபபீடாதிபதியாகப் பணியாற்றிவருகிறார்.

5352

மாணவரின் மறுபக்கம். நூர்தீன் யாகூப் (அமீனி). பஸ்யாலை: மௌலவி நூர்தீன் யாக்கூப் (அமீனி), 234 D, நாம்புளுவை, 1வது பதிப்பு, ஓகஸ்ட் 2007. (கொழும்பு 11: A 1 Printers).
xvi, 80 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 22x15 சமீ., ISBN: 978-955-50497-0-2.

பள்ளிப் பருவச் சிறார்கள் எதிர்நோக்கும் பல்வேறு உளரீதியான பிரச்சினைகள் பற்றிய ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்குடன் எழுதப்பட்டதே மௌலவி நூர்தீன் யாகூப் அவர்களின் இந்த நூல். சிறார்களுடன் தொடர்பான உண்மைச் சம்பவங்களை அடிப்படையாக வைத்து எழுதப்பட்ட இந்நூலின் ஒவ்வொரு சம்பவத்தையும் குறிப்பிட்டு அதன் மூலம் பெற்றோர், ஆசான்கள் உட்பட

சமூகத்தின் எல்லாத் தரப்பினர்களும் பெறவேண்டிய பாடங்களையும் படிப்பினைகளையும் சுட்டிக்காட்டும் விதத்தில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது.

5353

யாழ்ப்பாணத்து மரபுக் கல்வியும் பண்பாடும். சபா.ஜெயராசா. கொழும்பு 11: சேமமடு பொத்தகசாலை, U.G.50, Peoples Park, 1வது பதிப்பு, 2009. (கொழும்பு 11: சேமமடு பதிப்பகம்). 108 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 240., அளவு: 21 x15 சமீ., ISBN: 978-955-1857-48-6.

யாழ்ப்பாணத்து மரபுவழிக் கல்விச் செயற்பாடுகளை விளக்கும் முறைமையின் ஓர் அம்சமாக இந்நூல் அமைந்துள்ளது. யாழ்ப்பாணச் சமூகத்தை ஆழமாகவும் நுணுக்கமாகவும் ஆராய்வதற்கு நாட்டார் வழக்காற்றியல் மற்றும் மரபுக் கல்விப் பாரம்பரியம் தொடர்பான ஆழ்ந்த வேர்களைத் தேடுதல் முக்கியமாகின்றது. இந்த ஆய்வு மரபுக்கு ஆய்வாளர் சபா.ஜெயராசா புதுத்தடம் அமைத்திருக்கின்றார். சமூகக் கட்டமைப்பும் மரபுவழிக் கல்வியும், மரபுவழிப் பெண்கல்வி, மரபுவழி அறிகைச் செயல்முறையில் சட்டம் ஒழுங்கும் கருவிக் கையாட்சியும், மரபுவழி இசை நடனக் கல்வி, உளவியலும் உளநெருக்கீட்டு முகாமையும், நாட்டார் மரபு வாயிலான அறிவுக் கையளிப்பு- எருதும் நரியும் நெருப்புச் சட்டிக் கதைகள், மரபுவழிக் கல்வி உளவியல், கல்வியியல் நோக்கிற் கனவுகள் ஆகிய எட்டு தலைப்புகளின்கீழ் இந்நூல் விரிகின்றது.

370.1 கல்வி நிறுவனங்கள், மாணவர் சங்கங்கள்

5354

அல்-ஹிக்மா: வெள்ளிவிழா மலர். ஜனாப் ஏ.ஸீ.நஜுமுத்தீன் (மலராசிரியர்). யாழ்ப்பாணம்: ஒஸ்மானியாக் கல்லூரி, 1வது பதிப்பு, 1988. (யாழ்ப்பாணம்: சென்.ஜோசப் கத்தோலிக்க அச்சகம்). (18), 156 பக்கம், புகைப்படத் தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24x18.5 சமீ.

யாழ்ப்பாணத்தில் இயங்கிய முஸ்லிம் கல்லூரியான ஒஸ்மானியாக் கல்லூரியின் வெள்ளிவிழா ஆண்டை முன்னிட்டு வெளியிடப்பட்ட சிறப்பு மலர். A.H.ஹமீம் அவர்களை அதிபராகக் கொண்டு 731 மாணவர்களுடன் இவ்வுயர் கல்லூரி இயங்கியது. இம் மலர்க்குழுவில் M.S.A.M.முஹ்தார், K.M.S.ஹமீத், M.A.C.M.புஆத், L.S.மன்சூர், M.C.M.ரசீத், M.A.C. காலித், எஸ்.தங்கராஜா, ஆர். இராதாகிருஷ்ணன், M.S.M.கியாரத் ஆகியோர் அங்கம் வகித்திருந்தனர். 1990இல் வடபகுதி முஸ்லிம்கள், தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பினால் துரத்தப்படும் முன்னர் அவர்களிடையே காணப்பட்ட கல்வித்துறைச் செழுமையை இம்மலர் கணிசமாகப் பதிவுசெய்துள்ளதால் இம்மலர் வரலாற்று முக்கியத்துவம் பெறுகின்றது.

5355

அழியாத கோலங்கள் 2006. மலர் வெளியீட்டுக் குழு. லண்டன்: மல்லாவி மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கம் (ஐக்கிய இராச்சியம்), 1வது பதிப்பு, 2006. (லண்டன்: பிரின்ட் டோன்). (64) பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14.5 சமீ.

வன்னிப் பிராந்தியத்தின் மல்லாவி மத்திய கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தினரால் மூன்றாவது ஆண்டாகத் தமது பாடசாலையின் வளர்ச்சி நிதிக்காக ஏற்பாடு செய்யப்பட்ட அழியாத கோலங்கள் 2006 நிகழ்வின்போது வெளியிடப்பட்ட மலர், வாழ்த்துச் செய்திகளும், 2004, 2005ஆம் ஆண்டு நிகழ்வுகளின்போது எடுக்கப்பட்ட புகைப்படங்களின் தொகுப்பும், பொதுக்கட்டுரைகளும் இம்மலரில் வர்த்தக விளம்பரங்களுக்கிடையே கலந்து காணப்படுகின்றன.

5356

ஊராண்மை: சென் ஜோன்ஸ் முதலுதவி அணி ஆண்டு மலர் 1992. மலர்க்குழு. யாழ்ப்பாணம்: க.குமாரசாமி, பிரிவு அத்தியட்சகர், சென் ஜோன்ஸ் முதலுதவி அணி, யாழ். வைத்தீஸ்வரா கல்லூரி, 1வது பதிப்பு, 1992. (யாழ்ப்பாணம்:அச்சக விபரம் தரப்படவில்லை). (78) பக்கம், புகைப்படத் தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14.5 சமீ.

யாழ்ப்பாணம் வைத்தீஸ்வராக்கல்லூரி, அகில உலக சென் ஜோண்ஸ் முதலுதவிப்படைப் பிரிவு புனரமைக்கப்பெற்ற இரண்டாம் ஆண்டு நிறைவை முன்னிட்டு வெளியிடப்பட்ட மலர். கல்லூரியில் ஆரம்பிக்கப்பட்ட இம்மாணவர் படை யாழ்ப்பாண மாவட்டத்தின் பல்வேறு சமூக அபிவிருத்திப் பணிகளிலும்

சிறப்புடன் செயற்பட்டிருந்தது. இம்மலரில், மேற்படி முதலுதவிப்படை பற்றிய தகவல்களுடன் உலகில் நாம், மூச்சடைப்பா (என்.சிவராஜா), நெருக்கீட்டில் துணைநிற்றல் (சி.சிவசங்கர்), உடம்பில் எத்தனை விந்தை, உலகில் பெரியன, ஒலிம்பிக் போட்டிகள், ஆய்வு கூடத்தினுள் (எஸ்.முகுந்தன்), தெரிந்து கொள்வோம், விலகுங்கள் விபத்து எதிரில் (எட்வின் அரசு), புத்தகம் எப்படி வந்தது, நாட்டுப்புறப் பாடல் வகைகள், விளையாட்டு விபத்துகள் (ம.பத்மநாதன்), குசினி வைத்தியம் ஆகிய தலைப்புக்களில் அறிவியல் கட்டுரைகளும் இடம்பெற்றுள்ளன.

5357

பூபாள ராகங்கள் 2008. மகாலிங்கம் சுதாகரன் (பிரதம ஆசிரியர்). ஐக்கிய இராச்சியம்: யாழ். கம்பர்மலை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை, கொம்மந்தறை பழைய மாணவர் சங்கம், செல்வ சிகரம், 72, Minterne Waye, Hayes, Middlesex, UB4 OPF, 1வது பதிப்பு, ஜுன் 2008. (இலண்டன்: வாசன் அச்சகம், மிச்செம்).
192 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 21X14.5 சமீ.

பழைய மாணவர் சங்கத்தின் ஆதரவில் 9ஆவது ஆண்டாக 28.06.2008 சனிக்கிழமை அன்று நடத்தப்பட்ட பூபாளராகங்கள் கலை நிகழ்ச்சின்போது வெளியிடப்பட்ட மலர். வர்த்தக விளம்பரங்களும், வாழ்த்துச் செய்திகளும், பரிசுக் கதைகள், கவிதைகள் உள்ளிட்ட கலை இலக்கிய சமூக அறிவியல் கட்டுரைகளும், புகலிட அனுபவங்களும் செறிந்த ஆக்கங்கள் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன. வானொலிக் கலையும் இன அடையாளமும் (சுபா.ஈஸ்வரதாசன்), அன்றும் இன்றும்: வீட்டினுள் வந்த நவீனங்கள் (சீதாதேவி மகாதேவா), தமிழர் சமையலில் மருத்துவ மகத்துவங்கள் (நித்தி கனகரத்தினம்), ஆபிரிக்கா முதல் அகிலம் முழுவதும் மனித யாத்திரை (எஸ்.தியாகராஜா), ஆகிய முக்கிய கட்டுரைகளும் பரிசுக் கதைகளும், வாழ்த்துரைகளும் இவ்விதழை அலங்கரித்துள்ளன.

5358

யாழ் கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயம் 125ஆவது ஆண்டு நிறைவு விழா மலர் வெளியீடு. மலர் வெளியீட்டுக் குழு. யாழ்ப்பாணம்: கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயம், 1வது பதிப்பு, ஆகஸ்ட் 1999. (யாழ்ப்பாணம்: யாழ் மாவட்டக் கூட்டுறவுச் சபை அச்சகம், 40/1, நாவலர் வீதி, ஐந்து சந்தி அருகாமை).
(32), 96 பக்கம், புகைப்படங்கள், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25x19 சமீ.

22.6.1999 அன்று 125ஆவது விழாவைக் கொண்டாடுவதை முன்னிட்டு வெளியிடப்பட்ட மலர் இது. உப அதிபர் திருமதி த.ஞானப்பிரகாசம் அவர்களைப் பொறுப்பாசிரியராகக் கொண்டு உருவாக்கப்பட்ட இம்மலரில் கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயம் பற்றிய வரலாற்றுக் கட்டுரைகளும், மலருக்கான வாழ்த்துகளும், அறிக்கைகளும் இடம்பெற்றுள்ளன. 22.06.1874 அன்று நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் மறுமலர்ச்சி இயக்கத்தின் ஒரு சின்னமாக இப்பாடசாலை வெற்றிவேலு முதலியார் சிவகுருநாதபிள்ளை என்பவரால் தாபிக்கப்பட்டது. 1963இல் அரசாங்கம் பொறுப்பேற்கும் வரையில் தனிப்பட்ட முகாமையாளர்களால் வளர்த்தெடுக்கப்பட்டது. கொழும்புத்துறை சைவப்பிரகாச வித்தியாசாலை, கொழும்புத்துறை இந்து தமிழ் கலவன் பாடசாலை ஆகிய பெயர்களிலும் இது இயங்கிவந்துள்ளது.

380 வர்த்தகம், தொடர்புகள், போக்குவரத்து

381 வர்த்தகம்

5359

இக்கால வாணிபமுறை. க.நவரத்தினம். சுன்னாகம்: வட இலங்கைத் தமிழ்நூற் பதிப்பகம், 1வது பதிப்பு, 1961. (சுன்னாகம்: திருமகள் அழுத்தகம்),
397 பக்கம், விலை: ரூபா 6.50

கலைப்புலவர் க. நவரத்தினம் எழுதியுள்ள இந்நூல், இக்கால வாணிப முறையையும் அதனோடு தொடர்புடைய கணக்குப் பதிவு முறையையும், தனது 35 ஆண்டுக்கால கற்பித்தல் அனுபவத்தையும், பொருளாதார நூல்களையும் அதனோடு தொடர்புடைய பிறநூல்களையும் படித்துப்பெற்ற அறிவையும் ஆதாரமாகக் கொண்டு எழுதப்பட்டுள்ளது. பொருளாதாரமும் விதிகளும், ஆக்கமும் அதன் சாதனங்களும், தொழில்களின் வகைகள், வாணிபமும் அதன் பிரிவுகளும், வியாபாரம், பிறநாட்டு வியாபாரம், ஏற்றுமதி-இறக்குமதி வியாபாரம், தொழினிலையங்கள், தனித்தொழினிலையம், கூட்டுப் பங்குத்தொகுதிக் கம்பெனி,

கூட்டுறவுப் பண்டகசாலைகள், தொழிலின் நோக்கமும் அமைப்பும், போக்குவரத்து, நில-நீர்ப் போக்குவரத்து, அஞ்சலகம், பணம், வங்கிகள், வங்கித் தொழிலும் காசோலையும், உண்டியல்கள், உண்டியல் மாற்றல், பிறநாட்டுண்டியல், பிறநாட்டு நாணயமாற்று, நட்ட ஈடு, கடலபாய-தீயபாய-விபத்து நட்டஈடுகள், ஆயுளுறுதி, பண்டகசாலையிலிடல், பொறிவழி ஆக்கத் தொழிலமைப்பு, பங்கு முதற்சந்தை, பொது முதல் அல்லது மூலதனம் ஆகிய விடயங்கள் இந்நூலில் அழகு தமிழில் விரிவாக விளக்கப்பட்டுள்ளன. (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14)

390 நாட்டாரியலும் பழக்க வழக்கங்களும்

392.5 திருமணங்கள், சடங்கு முறைமைகள்

5360

இல்லறச் சோலையில் கணவன் - மனைவி. காயல்நகர் A.H.N.M. இஸ்மாயீல். கொழும்பு 12: ஜுனைது புக் ஸ்டால், 240, பழைய சோனகத் தெரு, 1வது பதிப்பு, ஆண்டு விபரம் தரப்படவில்லை. (கொழும்பு 11: தவ்பீக் அச்சகம், 143-147, குமார வீதி, புறக்கோட்டை).
240 பக்கம், விலை: ரூபா 3.00

இஸ்லாமிய இல்வாழ்வின் இரகசியம் என்ற குறிப்புடன் வெளியாகியுள்ள இந்நூல், திருமணம், குடும்பம், கணவனின் கடமைகளும் சேவைகளும், ருது, சாமர்த்தியம் அல்லது மகளிர் முதற்பூப்பு, பிள்ளைப்பேறு, விவாக விடுதலை ஆகிய ஆறு அத்தியாயங்களில் இஸ்லாமியச் சட்டமான ஷாபியீ மத்ஹபைத் தழுவி விளக்கப்பட்டுள்ளது. திருக்குர் ஆன், ஹதீஸ், பிக்ஹு, இஜ்மாஉ, கியாஸ் இவ்வைந்தின் அடிப்படையில் பலதரப்பட்ட அரபு, உர்து, தமிழ், பாரிஸி, நூல்கள், மற்றும் உலக மேதைகளின் கருத்துக்கள், சீர்திருத்தவாதிகளின் அபிப்பிராயங்கள் ஆகியவற்றைத் துணையாகக் கொண்டு இந்நூல் எழுதப்பட்டுள்ளது. (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5361

சங்ககாலத் திருமண நடைமுறைகள். மனோன்மணி சண்முகதாஸ். கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், 361, 1/2, டாம் வீதி, 1வது பதிப்பு, 2007. (கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், டாம் வீதி).
xii, 83 பக்கம், விலை: ரூபா 350., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-955-659-067-6.

சங்ககாலத் திருமண நடைமுறைகளும் சங்க இலக்கியங்களும், சான்றுகளின் வகைப்பாடு, திருமண நடைமுறைகளின் பதிவும் விளக்கமும், சங்ககாலத்துப் பண்பாட்டில் திருமணம் பெறும் இடம், மனித வாழ்வியலில் திருமண நடைமுறைகளின் தேவை ஆகிய 5 இயல்களினூடாக சங்ககாலத்தில் நிலவிய திருமண நடைமுறைகள் ஆராயப்பட்டுள்ளன.

5362

சிராத்த தீபிகை. ச.குமாரசுவாமிக் குருக்கள். சென்னை: சே.வே.ஜம்புலிங்கம், திருமயிலை, 2வது பதிப்பு. விகாரி வருடம், வைகாசி 1959. (சென்னை 1: ஆறுமுக நாவலர் வித்தியாநுபாலன அச்சகம், நெ. 300 தங்கசாலைத் தெரு).
44 பக்கம், விலை: சதம் 60.

சிராத்தம் என்பது சிரத்தையாகச் செய்வதென்பதைக் குறிக்கும். சிராத்த தீபிகையென்பது சிராத்தம் என்னும் அபரக்கிரியையைச் செய்யத்தக்க முறைமைகளை அகோர சிவாசாரியர் பத்ததி முதலிய நூல்களிலிருந்து எடுத்து விளக்குவது. சிராத்த நாளை திவசம், திதி, குருபூசை என்று கூறுவர். எமது தாய் தந்தை முதலிய பெரியோர்களுக்கு வருடாந்தம் செய்யவேண்டிய நன்றியை இச்சிறு நூல் விளக்குகின்றது. நூலாசிரியர் அச்சுவேலியைச் சேர்ந்த பன்னூலாசிரியராவார். (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5363

சைவத் திருமணம். கு.பாலசுந்தரக் குருக்கள். யாழ்ப்பாணம்: ஸ்ரீலங்கா சைவ ஆதீனம், கஸ்தூரியார் வீதி, 1வது பதிப்பு, 1வது பதிப்பு 1961. (யாழ்ப்பாணம்: ஸ்ரீலங்கா அச்சகம், காங்கேசன்துறை வீதி).
43 பக்கம், விலை: ரூபா 1.50.

இந்நூலின் முதலாம் பாகம் திருமண விளக்கம் என்ற பகுதியையும், இரண்டாம் பாகம் சைவ ஆலயங்களில் திருமண வைபவம் நடாத்தக்கூடாது என்ற பகுதியையும் கொண்டுள்ளது. சைவத்தின் உயர்தனிக் கோட்பாடு பற்றியும் அவை எங்ஙனம் சைவசமயிகளுக்கு ஆலய தரிசனத்தின் பயனைப்பெறச் சிவநெறிகளாய் அமைந்துள்ளன என்பது பற்றியும் அங்ஙனம் விதிமுறை வழுவாது ஒழுகுவோர் அடையும்பேறுகள் பற்றியும் கூறி அதன் பின்னர் சங்கச் சான்றோர்கள் காலந்தொட்டு இற்றைவரை தெய்வச் செந்நெறித் தமிழ்மக்கள் தம் திருமண விழாக்களை எம்முறையிற் கொண்டாடி மகிழ்ந்தனர் என்பது பற்றியும், அதற்கு இளங்கோவடிகள் தெய்வச் சேக்கிழார், கம்பநாட்டாழ்வார், கச்சியப்ப சிவாச்சாரியார், ஆறுமுக நாவலர் முதலியோர் எங்ஙனம் எமக்குச் சான்று பகர்கின்றனர் என்பது பற்றியும் நாம் எமக்கு வழிகாட்டிகளாகக் கொண்டு போற்றி உச்சிமேற்கொள்ளும் நால்வர் பெருமக்கள் தம் வாழ்க்கை மூலம் எங்ஙனம் எங்களுக்கு உண்மைகளை வாழ்ந்து காட்டினார்கள் என்பன பற்றியும் அவற்றோடு பொருந்தாத நெறிகள் எங்ஙனம் ஆகம விரோதமாகுமென்பதையும் இயன்ற அளவு மக்களுக்கு அறிவுறுத்தியுள்ளார். இது நான்காவது சைவ ஆதீன வெளியீடாக வெளிவந்துள்ளது. (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

398 கிராமிய இலக்கியங்கள்

5364

ஈழத்து நாட்டார் பாடல்கள். எப்.எக்ஸ்.சி.நடராஜா. சென்னை 600024: மித்ர வெளியீடு, 375/8-10, ஆற்காடு சாலை, கோடம்பாக்கம், 1வது பதிப்பு, நவம்பர் 2002. (சென்னை 600024: மித்ர ஆர்ட்ஸ் அன் கிரியேஷன்ஸ், 375/8-10, ஆர்க்காடு சாலை, கோடம்பாக்கம்).
160 பக்கம், விலை: இந்திய ரூபா 55., அளவு: 17.5x12 சமீ.

கதைகள், கவிதைகள், இசைப்பாடல்கள், பழமொழிகள், விடுகதைகள் அல்லது நொடிகள், ஒப்பாரிக் கவிகள், தாலாட்டுகள், கும்மிப் பாடல்கள், ஊஞ்சற் பாடல்கள், கப்பற் பாட்டுகள், பாலர் விளையாட்டுப் பாடல்கள், இவை அனைத்தும் ஈழத்து நாட்டார் பாடல்களில் அடங்குகின்றன. மக்களின் பாரம்பரியம், பண்பாடு, கலைகள் போன்றவற்றை நமக்கு அவை புலப்படுத்தி மக்களின் வரலாற்றினை அறிய உதவுகின்றன. மக்களின் பழக்க வழக்கங்களை அவை புலப்படுத்துகின்றன. மக்கள் அநுபவித்த இன்ப துன்பங்களை நாட்டார் பாடல்கள் எடுத்துக் காட்டுகின்றன. ஈழத்து நாட்டார் பாடல்களின் சிறப்பினையும் மேன்மையினையும் மகாவித்துவான் எப்.எக்ஸ்.சி.நடராசா நயம்பட இந்நூலில் பதிவுசெய்துள்ளார்.

5365

ஈழத்து நாடோடிப் பாடல்கள். F.X.C.நடராசா. மட்டக்களப்பு: F.X.C.நடராசா, 53, மத்திய வீதி, 1வது பதிப்பு, மாசி 1962. (யாழ்ப்பாணம்: ஆசீர்வாதம் அச்சகம், 32 கண்டி வீதி).
134 பக்கம், விலை: ரூபா 1.50.

மக்களின் பாரம்பரியம், பண்பாடு, கலைகள் போன்றவற்றை நமக்கு நாடோடிப் பாடல்கள் புலப்படுத்தி மக்களின் வரலாற்றினை அறிய உதவுகின்றன. மக்களின் பழக்க வழக்கங்களை அவை புலப்படுத்துகின்றன. மக்கள் அநுபவித்த இன்ப துன்பங்களை நாட்டார் பாடல்கள் எடுத்துக் காட்டுகின்றன. இந்நூலில் ஈழத்தில் வழக்கிலிருந்த ஒன்பது கவிகளையும், 20 நாட்டுப் பாடல்களையும் ஆசிரியர் தொகுத்திருக்கின்றார். (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5366

எண்ணெய்ச் சிந்து: மூலம். எப்.எக்ஸ்.சி.நடராசா (பதிப்பாசிரியர்). சென்னை: இ.மா.கோபாலகிருஷ்ணக்கோன், மதுரை, 1வது பதிப்பு 1953. (மதுரை: எக்ஸெல்ஸியர் பவர் பிரஸ்).
15 பக்கம், விலை: சதம் 50.

பாடலின் கதாநாயகன் எண்ணெய் என்றும் அ.ஃது சிந்து வகையில் அமைக்கப்பட்டபடியால் **எண்ணெய்ச் சிந்து** என்றும் பெயர் பெற்றுத் தொன்றுதொட்டு வழங்கப்பட்டு வந்துள்ள இச்சிந்தின் ஆக்கியோன் பற்றிய தகவல் இல்லை. இந்நூலில் தந்தையும் தாயும் மக்கட்பேறு கருதி வழிபடு தெய்வத்தை வேண்டுதல், சிசு உற்பத்தியாகி மாசந்தோறும் வளர்ந்து வளரும் பாங்கையும், பத்தாம் மாதத்தில் பிரசவிக்கும் தன்மையையும் அறியச்செய்தல், உடன் துணையாளர் தாய்க்கும் பிள்ளைக்கும் செய்யும் பராமரிப்பைக் கூறல், சாதக கருமம் முதலிய அகக்கருமங்கள் செய்தல், பாலப் பருவம் முடிந்து பள்ளிப்பருவம் வந்தவுடன் நல்லாசிரியனையழைத்து வித்தியாரம்பம் செய்யும் முறைகளை விளக்கல், கற்றோர் பெருமைகளையும் கல்லார் சிறுமைகளையும் கூறல், இப்பொழுது தாங்கள் வீட்டுக்கு வந்திருக்கும்

நோக்கங்களையும், அதை நிறைவேற்றி மகிழ்ச்சியாய் வேண்டியன ஈந்து கடமையாய் அனுப்பி வைத்தல் வேண்டும் எனவேண்டல் ஆகிய இன்னோரன்ன பொருள்கள் எல்லாம் எளிய, இனிய, தெளிவான தமிழில் அழகுற ஆக்கப்பட்டிருக்கின்றன. இந்நூலுக்கான முன்னுரையை தேசிகமணி கா.அருணாசலம் வழங்கியுள்ளார். (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5367

தென்கிழக்கு முஸ்லிம் தேசத்தாரின் நாட்டாரியல். மருதூர் ஏ.மஜீத். கல்முனை: மருதூர் வெளியீட்டுப் பணிமணை, 436, பழைய சந்தை வீதி, சாய்ந்தமருது 3, 1வது பதிப்பு, ஓகஸ்ட் 2007. (கொழும்பு 10: UDH Compuprint, 51/42, Mohideen Masjid Road).
240 பக்கம், விலை: ரூபா 350., அளவு: 21x15 சமீ., ISBN: 978-955-1058-02-9.

ஓய்வுபெற்ற கல்விப் பணிப்பாளரும், ஓய்வுபெற்ற வடக்கு கிழக்கு மாகாண முஸ்லிம் கலாசாரப் பணிப்பாளருமான நூலாசிரியரின் 11ஆவது நூல். இலங்கையின் தென்கிழக்குப் பிரதேச முஸ்லிம் மக்களின் பண்பாட்டு முறைமை, நடைமுறைமை, பழக்க வழக்கம், ஆடை அணிகள் போன்றவற்றை அடிப்படையாகக்கொண்டு பூவல் கிணற்றுக் காலம், கொட்டுக் கிணற்றுக் காலம், கற்கிணற்றுக் காலம் எனப் பிரித்து அவற்றுக்கு ஆதாரமாக வாய்மொழிப் பாடல்களைக் கொடுத்துள்ளமை சிறப்பம்சமாகும். நூலாசிரியரின் இசைப்புலமை காரணமாக நாட்டார் பாடலுக்குரிய இராகத்தை வெகு சிறப்பாக ஆய்வுக் கண்ணோட்டத்தில் குறிப்பிட்டுள்ளார். ஒன்பது இயல்களாக வகுக்கப்பட்டுள்ள நாட்டாரியல் ஆய்வில் ஆசைக்கவி, பிரிவும் இரங்கலுமான கவி, தூதுக்கவி, அறக்கவி, வசைக்கவி, கேலியும் கிண்டலுமான அங்கதக் கவி, தாலாட்டுக் கவி, பொதுக்கவி ஆகியனவும், தாலாட்டுப் பாடல்கள், அறப்பாடல்கள், விளையாட்டுப் பாடல்கள், வசைப் பாடல்கள் ஆகியனவும் விரிவாகத் தொகுத்து விளக்கப்பட்டுள்ளன.

5368

பெண்களின் வாய்மொழி இலக்கியம்: தாலாட்டு ஒப்பாரி பற்றிய ஒரு சமூகவியல் நோக்கு. செல்வி திருச்சந்திரன். கொழும்பு 6: பெண்கள் கல்வி ஆய்வு நிறுவனம், 58, தர்மராம வீதி, 1வது பதிப்பு, டிசம்பர் 2001. (சென்னை 600026: குமரன் பதிப்பகம், 3 மெய்கை விநாயகர் தெரு, குமரன் காலனி, 7வது தெரு, வடபழநி).
viii, 130 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 22x15 சமீ., ISBN: 955-9261-21-5.

இசை மருவிய இன்ப மெல்லுணர்ச்சியின் வெளிப்பாடாக வரும் தாலாட்டு-முஸ்லிம் பெண்கள் மத்தியிலும், வடபுலத்தாரிடையேயும், மலையகப் பெண்கள் மத்தியிலும் எவ்வாறு இயங்குகின்றது என்பதையும், இலக்கியப் புலம்பல் வழியே துன்பியல் வெளிப்பாடாக வரும் ஒப்பாரியின் பொதுப் பண்புகளையும், சாவீட்டு ஒப்பாரிகள், கணவனை இழந்த பெண்களின் ஓலம், மகளின் புலம்பல், கன்னிப் பெண் புலம்பல், அரச ஒடுக்குமுறைக்கு எதிரான ஒப்பாரி போன்ற தனித்துவமான ஒப்பாரி வகைகளையும் விரிவாக இந்நூல் நோக்குகின்றது. நூலாசிரியர் செல்வி திருச்சந்திரன் யாழ்ப்பாணம் மானிப்பாயைப் பிறப்பிடமாகக் கொண்டவர். பேராதனைப் பல்கலைக்கழகத்தில் தன் கலைமானிப் பட்டப்படிப்பினையும் அம்ஸ்டர்டாம் Vrije பல்கலைக்கழகத்தில் கலாநிதிப் பட்டத்தையும் மேற்கொண்டவர். தற்போது கொழும்பு பெண்கள் கல்வி ஆய்வு நிறுவனத்தின் நிறைவேற்று இயக்குநராகப் பணியாற்றுகின்றார்.

398.1 பழமொழிகளும் விடுகதைகளும்

5369

இணைப் பழமொழிகள் (சிங்களம்-தமிழ்). தம்பிஐயா தேவதாஸ். கொழும்பு 13: வித்தியாதீபம் பதிப்பகம், 90/9, புதிய செட்டித்தெரு, 1வது பதிப்பு, ஏப்ரல் 2009. (கொழும்பு: எஸ்.எம்.எஸ்.பிரின்ட் கெயார்).
xxii, 94 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 17.5x12.5 சமீ., ISBN: 978-955-96785-5-7.

நூலாசிரியர் தேவதாஸ், யாழ்ப்பாணம், புங்குடுதீவைப் பிறப்பிடமாகக் கொண்டவர். ஏற்கெனவே சிங்கள-தமிழ்ச் சினிமா பற்றியும் சிங்களப் பழமொழிகள் பற்றியும் நூல்கள் எழுதியிருக்கிறார். இந்நூலில் தமிழ்-சிங்கள மொழிகளில் ஒத்த கருத்துடைய பழமொழிகளை பட்டியலிட்டுள்ளார். சிங்களப் பழமொழிகளை சிங்கள மொழியிலேயே வழங்கி அதன் கருத்தை தமிழில் தந்து அந்தக் கருத்துக்கு நிகரான தமிழ்ப் பழமொழியையும் தந்திருக்கிறார். சிங்கள மொழி தெரியாதவர்களுக்கும் அதன் நேரடி அர்த்தம் தமிழில் உள்ளதால் வாசித்து ருசிக்க இலகுவாக அமைகின்றது. மொத்தம் 369 பழமொழிகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன.

400 மொழியியல்

400 மொழியியல்

5370

மொழியும் பிற துறைகளும். அ.சண்முகதாஸ். கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், 361, 1/2, டாம் வீதி, 1வது பதிப்பு, 2006. (கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், டாம் வீதி).
viii, 124 பக்கம், விலை: இந்திய ரூபா 70., அளவு: 21.5x14 சமீ., ISBN: 955-9429-85-x.

நாம் தாய்மொழி பேசுகின்றோம். அம்மொழி பற்றி ஆராயாமலே அதனையும் நாம் பேசிவருகின்றோம். ஒரு நாளில் பல ஆயிரம் சொற்களைப் பயன்படுத்துகின்றோம். இதனைப் புறநிலையிலேயே வைத்து ஆராய முற்படும்பொழுது இம்மொழி பற்றிய வியப்பான செய்திகள் வெளிப்படுகின்றன. மொழியியல் என்றொரு புதிய துறையும் தோன்றியது. இத்துறைக்கும் பல சமூக அறிவியல் துறைகளுக்கும் உள்ள தொடர்புகள் இனம்காணப்பட்டன. சமூகம், பண்பாடு, தகவல் தொழில்நுட்பம், மருத்துவம், பொறியியல் ஆகியவற்றுடன் மொழி தொடர்புடையதாக உள்ளது. இத்தொடர்புகள் இந்நூலில் விளக்கப்பட்டுள்ளன. மொழியின் அடிப்படைகள் இனவழி அடிப்படையிலே கடத்தப்படுகின்றன என்பதை எண்ணுமிடத்து மொழிக்கும் உயிரியல், உளவியல் ஆகிய துறைகளுக்குமிடையேயுள்ள தொடர்பினை அறியமுடிகின்றது. இதுபோன்ற பல்வேறு தொடர்புகளை இந்நூல் கண்டறிகின்றது.

420 ஆங்கில மொழி

மேலும் பார்க்க: 5402

439.81 டெனிஷ் மொழி

5371

டெனிஸ்-தமிழ் அகராதி: Dansk-Tamilsk Ordbog. அ.பாலமனோகரன் (மொழி பெயர்ப்பு), ரோபன் ரூசென் (பதிப்பாசிரியர்). டென்மார்க்: Special – paedagogist Forlag, 1வது பதிப்பு, 1993. (Denmark: Special-trykkeriet, Viborg).
352 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22x16 சமீ., ISBN: 87-7399-256-9.

டென்மார்க்கில் குடியேறியோருக்கான அகராதித் தொடர் வரிசையில் ஒன்பதாவது குடியேற்ற மொழிக்காக (தமிழ்மொழிக்காக) உருவாக்கப்பட்ட டெனிஸ்-தமிழ் அகராதி இது. 12000 பிரதான டேனிஸ் சொற்களையும் பெருமளவிலான வசன உச்சரிப்புகளையும் உதாரணங்களையும் கொண்டதுமான நூல் இது. Lillian Fannike Hansen, Hanne Schyth Brondum ஆகிய இருவராலும் தொகுக்கப்பட்ட இவ்வகராதி முக்கிய சொற்களுக்கான தமிழ் மொழிக்குரிய அர்த்தத்தைக் கொண்டுள்ளது. துருக்கி, வியட்நாமிய, பேர்சிய, அராபிய, போலிஷ், குர்திஷ் மொழிகளுக்கான அகராதிகள் இத்தொடரில் ஏற்கெனவே வெளிவந்துள்ளன.

மேலும் பார்க்க: 5402

440 பிரெஞ்சு மொழி

5372

நடைமுறை பிரஞ்சு Le Francais Courant. வசந்தி பிரகலாதன், தேவராஜா பிரகலாதன். பிரான்ஸ்: Association Socio culturelle Educative Srilankaise (ASCES), 9, rue desLoirs, 77380 Combslaville, 4வது பதிப்பு, வைகாசி 2004, 1வது பதிப்பு விபரம் தரப்படவில்லை. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ் பிரைவேட் லிமிட்டெட், 48 B, புளுமெண்டால் வீதி).
222 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 27x18 சமீ.

பிரான்சில் புலம்பெயர்ந்து வாழும் தமிழ்ப் பெற்றோர்களுக்கு உதவியாக வைத்திய, மருத்துவச் சொற்கள், குழந்தைக் காப்பகம் பற்றிய விளக்கங்கள், மாணவர்களுக்குதவியாக சக மாணவர்களுடன் பேசும் முறை,

எமது கலாச்சாரம், பிரெஞ்சு இலக்கணம் பற்றிய விளக்கம், தொழில் புரிபவர்களுக்கு தொழில் சம்பந்தமான சொற்கள், தொலைபேசி உரையாடல்கள், கடிதங்கள், வங்கி, தபால் பொலிஸ் அலுவலக உரையாடல்கள், சமயத்துறை-கோவில் பற்றிய உரையாடல்கள் என்பன இந்நூலில் வகைமாதிரிகளாகத் தரப்பட்டுள்ளன. தினக்குரல் பத்திரிகையில் தொடர் கட்டுரையாக வெளியிடப்பட்டு பரவலாக பேசப்பட்ட கட்டுரைத் தொடர் தனி நூலுருவில் வெளியிடப்பட்டுள்ளது. பிரெஞ்சு பாடசாலைகளில் சேரும் தமிழ் மாணவர்களுக்கு ஆரம்பகால வழிகாட்டியாக இந்நூல் உதவுகின்றது.

5373

விளக்கமான நல்ல பிரெஞ்சு: அடங்கல் 1. ச.சச்சிதானந்தன். France: S.Sachchithananthan, 34 Avenue de la Pierrerie, 77680 Roissy en Brie, 1வது பதிப்பு, ஆவணி 2002. (அச்சக விபரம் தரப்படவில்லை).
(5),269 பக்கம், விளக்கப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5X14.5 சமீ.

Le Bon Francais Detaille en 35n heures (35 மணிகளில் விளக்கமான நல்ல பிரெஞ்சு) என்ற பிரெஞ்சு மொழித் தலைப்புடன் வெளியாகியுள்ள இம்மொழி அறிவு நூலின் முதலாம் பாகம் இது. உச்சரிப்பு, எழுத்தமைப்பு, உரையாடல், இலக்கணம், வினைத் திரிபு, அகராதி, கடிதம் வரைதல், பழமொழி, மொழிபெயர்ப்பு, ஆவணம், இலக்கியம், 360 பயிற்சிகள் என்று பல்வேறு அம்சங்களை உள்ளடக்கியதாக இந்நூல் வெளிவந்துள்ளது.

5374

விளக்கமான நல்ல பிரெஞ்சு: அடங்கல் 2. ச.சச்சிதானந்தன். France: S.Sachchithananthan, 34 Avenue de la Pierrerie, 77680 Roissy en Brie, 1வது பதிப்பு, ஆவணி 2002. (அச்சக விபரம் தரப்படவில்லை).
(10), 270-494 பக்கம், விளக்கப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5X14.5 சமீ.

Le Bon Francais Detaille en 35n heures (35 மணிகளில் விளக்கமான நல்ல பிரெஞ்சு) என்ற பிரெஞ்சு மொழித் தலைப்புடன் வெளியாகியுள்ள இம்மொழியறிவு நூலின் இரண்டாம் பாகம் இது. பாரிய நுணுக்கமான தகவல் நிறைந்த பிரெஞ்சு மொழி அறிவு நூல். சொல்லகராதி, இலக்கணம், ஒலியியில், மரபுத் தொடர்கள் முதலாக பல விடயங்களை இந்நூல் ஆராய்கின்றது. பாடக்கூறுகள், புலம்பெயர் தமிழரின் அன்றாட வாழ்வில் இருந்து உதாரணங்களை எடுத்து விளக்குகின்றன. மொழியியல், சொற்பிறப்பியல் மேல்நோக்கு பிரெஞ்சுமொழி அமைப்பை அறிய வழிவகுக்கிறது. சில மாபெரும் பிரெஞ்சு எழுத்தாளர்களின் நூல்களிலிருந்து சில உதாரணங்களையும் நூலாசிரியர் சுவைக்கத் தந்துள்ளார்.

491.48 சிங்கள மொழி

5375

சிங்கள தமிழ் பேச்சுப் பயிற்சி 1. B.ஹென்றி லெஸ்லி. கொழும்பு 11: எம்.டி.குணசேனா, 217, ஒல்கொட் மாவத்தை, 1வது பதிப்பு, 2003. (கொழும்பு 11: எம்.டி.குணசேனா, 217, ஒல்கொட் மாவத்தை).
(8), 63 பக்கம், விலை: ரூபா 85., அளவு: 21.5x14 சமீ., ISBN: 955-21-0046-1.

தமிழ்மூலம் சிங்கள மொழியை கற்க முற்படுவோருக்கும், சிங்கள மொழி மூலம் தமிழ்மொழியைக் கற்றுக்கொள்ள விரும்புவோருக்கும் ஏற்றவகையில் உருவாக்கப்பட்டுள்ள ஆரம்ப பேச்சுப் பயிற்சிக்கான நூல்.

494.8 தமிழ் மொழி

5376

தொன்மைச் செம்மொழி தமிழ். பி.இராமநாதன். கொழும்பு 11: சேமமடு பொத்தகசாலை, U.G.50, Peoples Park, 1வது பதிப்பு, 2009. (கொழும்பு 11: சேமமடு பதிப்பகம்).
113 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 240., அளவு: 21.5x15 சமீ., ISBN: 978-955-1857-40-0.

பி.இராமநாதன் மொழியியல் வரலாறு, அகழ்வாய்வு முதலிய துறைகளில் ஈடுபாடு கொண்டவர். சிந்துவெளித் தொல் தமிழ் நாகரிகம், A New Account of the History and Culture of the Tamils ஆகிய நூல்களை இவர் எழுதியிருக்கிறார். தமிழின் பழைமையை நிலைநாட்டும் வகையில் அதன்

தொன்மையையும், பண்டைத் தமிழ் இலக்கியங்களின் தனிச் சிறப்புகளையும், ஆய்வுரீதியாக இந்நூலில் எடுத்து விளக்கியுள்ளார். தமிழ்ச் செம்மொழித் திட்டத்தின் இன்றைய செயற்பாடுகள், தமிழ் செம்மொழியே: கருத்துரைகள், கோரிக்கைகள் பற்றிய ஒரு வரலாற்றுப் பார்வை, செம்மொழித் தமிழ் இலக்கியங்களின் (சங்க இலக்கியங்களின்) தனிச் சிறப்பு, செம்மொழித் தமிழ் நூல்களைப் பிறமொழிகளில் பெயர்த்தல், தமிழின் தொன்மை: பிற அறிவுப் புலங்களுடன் இணைந்த ஆய்வு (சிந்துவெளி நாகரீக ஆய்வு-அந்நாகரீக எழுத்தாய்வு உட்பட), இந்திய மொழிக் குடும்பங்களிடையே தமிழியக் கூறுகள், தமிழின் எதிர்காலம்: ஒரு தொலை நோக்கு ஆகிய ஏழு இயல்களில் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

5377

யாழ்ப்பாண அகராதி 1. சந்திரசேகரப் பண்டிதர், சரவணமுத்துப் பிள்ளை. சென்னை 600017: தமிழ்மண் பதிப்பகம், 2, சிங்காரவேலர் தெரு, தியாகராய நகர், 2வது பதிப்பு, 2005. 1வது பதிப்பு, 1842. (சென்னை 600006: வெங்கடேசுவரா ஆப்செட் பிரிண்டர்ஸ், ஆயிரம் விளக்கு).
xxxii, 488 பக்கம், விலை: சாதாரண பதிப்பு ரூபா 400., சிறப்புப் பதிப்பு ரூபா 500., அளவு: 21.5x14 சமீ.

1842இல் முதலில் வெளிவந்த இவ்வகராதியின் மீள்பிரசுரம். 58500 சொற்களுடன் கூடியது. 19ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் கிறிஸ்தவ மதப்பாரம்பரியத்தின் விரிவாக்கத்தின் அவசியம் கருதி ஆங்கிலத்துக்கு தமிழ்ப்பத விளக்கங்கள் தேடப்புறப்பட்டதன் விளைவே இவ்வகராதியின் உருவாக்கமாகும். தமிழ்மொழியின் சொல்வளத்தை அகரவரிசையில் முழுமையாகத் தரும் முதல் முயற்சியாக இது கருதப்படுகின்றது. 1வது பாகத்தில் அ.ஃகரம் முதல் ஞொள்கல், ஞௌகுதல் வரை அகரவரிசைப்படுத்தப்பட்ட சொற்கள் இடம்பெற்றுள்ளன.

யாழ்ப்பாண அகராதி 2. சந்திரசேகரப் பண்டிதர், சரவணமுத்துப் பிள்ளை. சென்னை 600017: தமிழ்மண் பதிப்பகம், 2, சிங்காரவேலர் தெரு, தியாகராய நகர், 2வது பதிப்பு, 2005. 1வது பதிப்பு, 1842. (சென்னை 600006: வெங்கடேசுவரா ஆப்செட் பிரிண்டர்ஸ், ஆயிரம் விளக்கு).
xxxii, 488 பக்கம், விலை: சாதாரண பதிப்பு ரூபா 400., சிறப்புப் பதிப்பு ரூபா 500., அளவு: 21.5x14 சமீ.

2வது பாகத்தில் தகசு முதல் வௌவால் வரை அகரவரிசைப்படுத்தப்பட்ட சொற்கள் இடம்பெற்றுள்ளன.

யாழ்ப்பாண அகராதி. சந்திரசேகரப் பண்டிதர், சரவணமுத்துப் பிள்ளை. கொழும்பு 11: சேமமடு பொத்தகசாலை, U.G.50, Peoples Park, 3வது பதிப்பு, 2008, 2வது பதிப்பு, 2006. 1வது பதிப்பு, 1842. ((கொழும்பு 11: சேமமடு பதிப்பகம்).
xxxviii, 486+ 488 பக்கம், விலை: ரூபா 4500., அளவு: 23x15 சமீ., ISBN: 978-955-1857-14-1.

முன்னைய பதிப்புகளில் இரு பாகங்களாக வெளியிடப்பட்ட இவ்வகராதியின் 3வது பதிப்பு தனித்தொகுதியாக முழுமையான பதிப்பாக இலங்கையில் வெளியிடப்பட்டுள்ளது.

மேலும் பார்க்க: 5374, 5402

494.8(1) தமிழ் இலக்கணம்

5378

இலக்கணத் தொகுப்பு. றீற்றா பற்றிமாகரன். Oxford OX4 3HZ: அலன் பற்றிமாகரன், 39, நேப்பியர் வீதி, 1வது பதிப்பு, ஆவணி 2008. (சென்னை 600002: காந்தளகம், 68 (834), அண்ணா சாலை).
vii, 100 பக்கம், விலை: இந்திய ரூபா 50., அளவு: 21.5x14 சமீ., ISBN: 978-81-89708-21-4.

தமிழ் இலக்கணத்தை இலகுவாகக் கற்பதற்கு உதவும் நூல். பேராதனைப் பல்கலைக்கழகத்தில் தமிழ், பொருளியல், புவியியல், கலைமாணிப் பட்டதாரியாகிய நூலாசிரியை, கொழும்பு புனித ஜோசப் கல்லூரி, தமிழகத்தின் ஆசியக் குடும்ப ஆய்வுகள் மற்றும் சேவைகள் மையம், இலண்டன் பிளம்ஸ்டட் அருண உதயம் தமிழ்ப் பாடசாலை, ஒக்ஸ்போர்ட் தமிழ்க் கல்வி கலைகளுக்கான மையம் ஆகியவற்றில் தமிழ் படிப்பித்தலில் 25 ஆண்டுகால அனுபவத்தைப் பெற்றவர். இவர் தனது கல்வித் தகைமைகள், அனுபவங்களின் அடிப்படையில் பல தமிழ் இலக்கண நூல்களையும் வாசித்துப் படித்து அவற்றுள் இலகு முறையில் தமிழ் இலக்கணத்தைக் கற்பதற்குத் தேவையானவை எனத் தான் கருதியவற்றை இங்கு நூலாகத் தந்துள்ளார். நூலின் மேலட்டையில் **தமிழ் இலக்கணத் தொகுப்பு** என அச்சாகியுள்ளது.

5379

செந்தமிழ் இலக்கண விளக்கம்: 1ம் பாகம். க.நாகலிங்கம். அளவெட்டி: பண்டிதர் க.நாகலிங்கம், ஆசிரியர், 1வது பதிப்பு, ஏப்ரல் 2000. (யாழ்ப்பாணம்: ஏழாலை மகாத்மா அச்சகம், இந்து மகளிர் கல்லூரி ஒழுங்கை, கந்தர்மடம்).
xli, 308 பக்கம், விலை: ரூபா 200, அளவு: 22.5x15 சமீ.

இரு பகுதிகளாகத் தரப்பட்டுள்ள இந்நூலில் முதற்பகுதியில் எழுத்திலக்கணமும், இரண்டாம் பகுதியில் சொல்லிலக்கணமும் விபரிக்கப்படுகின்றன. எழுத்திலக்கணத்தில் எழுத்தியல், பதவியல், புணரியல், உயிரீற்றுப் புணரியல், மெய்யீற்றுப் புணரியல், உருபு புணரியல் ஆகியவையும், சொல்லிலக்கணத்தில் பெயர்ச்சொல்லியல், வினைச்சொல்லியல், தொடர் மொழியியல், பொதுவியல், இடைச்சொல்லியல், உரிச்சொல்லியல் ஆகியவையும் விபரிக்கப்பட்டுள்ளன. இந்நூலின் ஆசிரியர், புலவர்மணி க.சு.நவநீத கிருஷ்ண பாரதியாரின் மாணாக்கர்களில் ஒருவர். தொல்காப்பியம் முதலாய பழந்தமிழ் இலக்கியங்களில் ஆழ்ந்த அறிவும் தெளிவும் கொண்டவராகத் திகழ்ந்தவர். பண்டித ஆசிரியப் பயிற்சி பெற்றவரும், நெடுங்காலமாகப் பாடசாலை மேல் வகுப்புகளில் தொடர்ந்து தமிழ் கற்பித்தவரும், பிரவேச பண்டித, பால பண்டித, பண்டித வகுப்புகளில் படிப்பித்த அனுபவம் மிக்கவருமாவார். **(மேலும் பார்க்க: *செந்தமிழ் இலக்கண விளக்கம்: 2ம் பாகம், முதற் பகுதி: செய்யுளியலும் அணியியலும்*.** நூல்தேட்டம் பதிவிலக்கம்: 2286)

5380

செந்தமிழ் இலக்கண விளக்கம்: 3ம் பாகம், அகத்திணையியலும் புறத்திணையியலும். க.நாகலிங்கம். அளவெட்டி: பண்டிதர் க.நாகலிங்கம், 1வது பதிப்பு, மார்ச் 2005. (யாழ்ப்பாணம்: பாரதி பதிப்பகம், 430, காங்கேசன்துறை வீதி).
xvii, 293 பக்கம், விலை: ரூபா 250, அளவு: 21x15 சமீ.

தமிழ் இலக்கணத்தில் அகத்திணையியலும், புறத்திணையியலும் சிறப்பாகவும் ஆழமாகவும் விளக்கப்பட்டுள்ள இந்நூலின் ஆசிரியர், புலவர்மணி க.சு.நவநீதகிருஷ்ண பாரதியாரின் மாணாக்கர்களில் ஒருவர். தொல்காப்பியம் முதலாய பழந்தமிழ் இலக்கியங்களில் ஆழ்ந்த அறிவும் தெளிவும் கொண்டவராகத் திகழ்ந்தவர். தொல்காப்பியம், இறையனார் களவியல், நம்பியகப்பொருள், புறப்பொருள் வெண்பாமாலை என்ற இலக்கண நூல்களில் தாம் படித்துப்பெற்ற அனுபவத்தை இந்நூலில் இலகுதமிழில் வெளியிட்டுள்ளார்.

5381

தமிழ் இலக்கணம்: வினா-விடை. த.துரைசிங்கம். (தொகுப்பாசிரியர்). கொழும்பு 6: உமா பதிப்பகம், 521/1B காலி வீதி, 1வது பதிப்பு, நவம்பர் 2003. (கொழும்பு 12: Perfect Printers, 130 டயஸ் பிளேஸ், குணசிங்கபுர).
(2), 90 பக்கம், விலை: ரூபா 120., அளவு: 22x15 சமீ.

இந்நூல் 9,10,11 ஆந் தரங்களில் கற்போருக்கும் க.பொ.த.ப (சா/த) பரீட்சைக்குத் தோற்றுவோருக்கும் பயன்தரும் வகையில் கடந்தகாலப் பரிட்சை வினாக்களைத் தழுவி ஆக்கப்பெற்றது. இணை மொழிகள், தொடர்ச் சொற்கள், பழமொழிகள், உவமைகள், உவமைச் சொற்றொடர்கள், அனைத்தும் கொண்டது. நூலாசிரியர் கவிஞர் த.துரைசிங்கம், ஓய்வுபெற்ற கல்விப் பணிப்பாளராவார்.

5382

தொட்டிக்கலை ஸ்ரீ சுப்பிரமணிய முனிவர் இயற்றிய கலைசைச் சிலேடை வெண்பா. ஸ்ரீ சுப்பிரமணிய முனிவர் (மூலம்), அ.குமாரசுவாமிப் புலவர் (குறிப்புரை). சுன்னாகம்: கு.அம்பலவாணபிள்ளை, 1வது பதிப்பு, 1939. (சுன்னாகம்: திருமகள் அழுத்தகம்).
30 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை.

இந்தக் கலைசைச் சிலேடை வெண்பா நிகண்டும் இலக்கணமும் கற்ற பின்னர் இலக்கியம் கற்கத் தொடங்கும் மாணவர்கள் சொற்களையும் சொற் புணர்ச்சிகளையும் அப்பியாசஞ் செய்வதற்குத் தக்கதொரு நூல். இதில் நூறு செய்யுள்கள் உள்ளன. அனைத்துச் செய்யுள்களிலும் இரண்டாம் அடிகள் எல்லாம் இரண்டு அல்லது மூன்று பொருட்கள் கொள்ளும்படியாக சிலேடையாகவும் பின்னிரண்டடிகளும் யமக திரிபுகளாகவும் பாடப்பட்டிருக்கின்றன. (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5383

தொல்காப்பியம்: எழுத்ததிகார மூலமும் மதுரையாசிரியர் பாரத்துவாசி நச்சினார்க்கினியருரையும். சி.கணேசையர் (பதிப்பாசிரியர்). மயிலிட்டி தெற்கு: நா.பொன்னையா, ராவ் பகதூர் சி.வை.தாமோதரம்பிள்ளை ஞாபகார்த்த வெளியீடு, 2வது பதிப்பு ஜனவரி 1952, 1வது பதிப்பு ஜனவரி 1937. (சுன்னாகம்: திருமகள் அழுத்தகம்).
364 பக்கம், விலை: ரூபா 7.00.

மகாவித்துவான் புன்னாலைக்கட்டுவன் பிரம்மஸ்ரீ சி.கணேசையர் அவர்களின் உரைவிளக்கக் குறிப்புகளுடன் வெளியாகியுள்ள இந்நூல் ராவ் பகதூர் சி.வை.தாமோதரம்பிள்ளை ஞாபகார்த்த வெளியீடாக வெளியிடப்பட்டுள்ளது. (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

494.8(2) தமிழ்ப் பாடநூல்கள்

5384

இராமாயணச் சுருக்கம்: பாலபோதினி உப பாடப் புத்தகம் -4. பண்டிதை த.இராஜேஸ்வரி. சுன்னாகம்: வட இலங்கைத் தமிழ்நூற் பதிப்பகம், 6வது பதிப்பு, 1964. (சுன்னாகம்: திருமகள் அழுத்தகம்).
50 பக்கம், விலை: சதம் 60., அளவு: 21x14 சமீ.

சுன்னாகம், இராமநாதன் கல்லூரி ஆசிரியையான பண்டிதை த.இராஜேஸ்வரி எழுதியுள்ள இந்நூல் பரந்துபட்ட இராமாயணம் என்னும் காவியத்தின் கதையை சுவையாகவும், எளிமையாகவும் இளஞ்சிறார்களுக்கு வழங்க முற்படுகின்றது. பாலபோதினி உப பாடநூல் வரிசையில் நான்காவதாக இது வெளிவருகின்றது.

5385

இராஜா தேசிங்கு: பாலபோதினி உப பாடப் புத்தகம் -2. ஆசிரியர் பெயர் தரப்படவில்லை. சுன்னாகம்: வட இலங்கைத் தமிழ்நூற் பதிப்பகம், 8வது பதிப்பு, 1962. (சுன்னாகம்: திருமகள் அழுத்தகம்).
52 பக்கம், விலை: சதம் 60., அளவு: 21x14 சமீ.

நூலாசிரியர் பெயர் குறிப்பிடப்படாத இந்நூல் பரந்துபட்ட இந்திய அரச பரம்பரைக் கதையான தேசிங்குராசனின் கதையை சுவையாகவும், எளிமையாகவும் இளஞ்சிறார்களுக்கு வழங்கமுற்படுகின்றது. பாலபோதினி உப பாடநூல் வரிசையில் இரண்டாவதாக இது வெளிவருகின்றது.

5386

கண்ணகி: மணிவாசக உப பாட புத்தகம். சம்பந்தன். யாழ்ப்பாணம்: எஸ்.எஸ்.சண்முகநாதன் அன் சன்ஸ், 2வது பதிப்பு, 1960, 1வது பதிப்பு, 1954. (யாழ்ப்பாணம்: ஸ்ரீ சண்முகநாத அச்சகம்).
60 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை.

இந்நூலில் கண்ணகி, கண்ணகியும் கோவலனும், மாதவி, மாதவி பெற்ற வாழ்வு ஆகிய தலைப்புகளில் கோவலன்-கண்ணகி கதை சிறுவர்களுக்கேற்ற எளிய நடையில் கூறப்பட்டுள்ளது. மணிவாசகம் பாடநூல் வெளியீட்டுத் தொடரில் வெளிவந்துள்ள உப-பாடநூல்களுள் இதுவுமொன்று. (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14)

5387

கண்ணன் கதை: மணிவாசகம் உப பாட புத்தகம். சம்பந்தன். யாழ்ப்பாணம்: எஸ்.எஸ்.சண்முகநாதன் அன் சன்ஸ், 3வது பதிப்பு, 1955, 1வது பதிப்பு, 1950, 2வது பதிப்பு, 1954. (யாழ்ப்பாணம்: ஸ்ரீ சண்முகநாத அச்சகம்).
19 பக்கம், விலை: சதம் 35.

தேவகி கலியாணம், கண்ணன் பிறப்பு, பூதனை வதம், குழந்தைக் கண்ணன், குறும்புக் கண்ணன், கண்ணனும் அசுரர்களும், காளிங்கன், மலைக்குடை, பிருந்தாவனத்தில் கண்ணன், கண்ணனும் ராதையும், கம்சனும் கண்ணனும், கண்ணனும் சராசந்தனும், ருக்மிணி கல்யாணம், கண்ணன் மறைவு ஆகிய தலைப்புகளில் கண்ணனின் கதை இங்கு சிறுவர்களுக்கேற்ற வகையில் சொல்லப்பட்டுள்ளது. (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5388

சகுந்தலை சரிதை: பாலபோதினி உபபாட புத்தகம்-10. பண்டிதர் வ.நடராஜன். சுன்னாகம்: வட இலங்கைத் தமிழ்நூற் பதிப்பகம், 4வது பதிப்பு, 1966, 1வது பதிப்பு, 1956, 2வது பதிப்பு, 1958, 3வது பதிப்பு, 1962. (சுன்னாகம்: திருமகள் அழுத்தகம்).
98 பக்கம், விலை: ரூபா 1.25., அளவு: 21x14 சமீ.

காளிதாசர் வடமொழியின் மகாகவி. அவரது பருவ வர்ணனைகளும், காவிய நடையும் உயர்தரமானவை. உலகக் கவிஞர்களுள் அவரை வைத்துப் பார்க்கத் தூண்டியது அவரது சாகுந்தல காவியமாகும். காளிதாசரின் சாகுந்தல நாடகம் பல மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டது. தமிழில் மொழிபெயர்த்தவர்களுள் மறைமலையடிகள் முக்கியமானவர். மறைமலை அடிகளின் மொழிபெயர்ப்பு நூலை ஆதாரமாகக் கொண்டு சகுந்தலை சரிதை என்ற இந்நூல் வெளிவருகின்றது. இந்நூலுக்கு பாயிரத்தை திருநெல்வேலிச் சைவாசிரிய கலாசாலைத் தலைமைத் தமிழ் விரிவுரையாளர் பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை வழங்கியுள்ளார்.

5389

சாவித்திரி: பாலபோதினி உபபாட புத்தகம்-8. நவாலியூர் க.சோமசுந்தரப் புலவர். சுன்னாகம்: வட இலங்கைத் தமிழ்நூற் பதிப்பகம், 6வது பதிப்பு, ஜுன் 1966. (சுன்னாகம்: திருமகள் அழுத்தகம்).
56 பக்கம், விலை: சதம் 75., அளவு: 21x14 சமீ.

“கற்புத் தெய்வங்களுள் ஒரு தெய்வம் சாவித்திரி. பெண்ணுலகம் பின்பற்றவேண்டியதொரு சூளாமணி சாவித்திரி. இப்படிப்பட்ட சாவித்திரியின் கதை மகாபாரதத்தில் வருகின்றது. வசன மரபு செய்யுள் மரபு இரு மரபுந்துய்ய இச்சாவித்திரி கதை, படித்து முதிர்ந்தோரேயன்றிப் பள்ளிச் சிறுவர்களும் நன்கு பயிலும் பொருட்டுச் சிறுச்சிறு பாடங்களாய் அமைந்திருக்கின்றது. அன்றிப் பக்க இறுதிகளில் அரும்பதங்கள் தொடர்களுக்கு விளக்கம் கொடுக்கப்பட்டுமிருக்கின்றது” இவ்வாறு இந்நூலுக்கு அணிந்துரை வழங்கியுள்ள பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை குறிப்பிடுகிறார்.

5390

தமயந்தி: பாலபோதினி உபபாட புத்தகம்-3. ஆசிரியர் பெயர் தரப்படவில்லை. சுன்னாகம்: வட இலங்கைத் தமிழ்நூற் பதிப்பகம், 12வது பதிப்பு, 1964, (சுன்னாகம்: திருமகள் அழுத்தகம்).
50 பக்கம், சித்திரங்கள், விலை: சதம் 60., அளவு: 21x14 சமீ.

மகாபாரதத்தில் பல கிளைக் கதைகள் இருக்கின்றன. அவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு விஷேட சம்பவத்தை விளக்க எழுந்த உபகதைகளாகும். அவற்றுள் நளன் கதை, சூதாடலின் தீமையை விளக்க எழுந்தது. அக்கதையைத் தமிழில் செய்யுளாக இருபெரும் புலவர்கள் பாடியுள்ளார்கள். நளன் கதையை தமயந்தி என்னும் பெயரில் நான்காம் வகுப்பு மாணவர்களுக்கு உபயோகிக்கவென வட இலங்கைத் தமிழ்நூற் பதிப்பகம் உரைநடை நூலாக வெளியிட்டிருந்தது. வண்ணச் சித்திரப் படங்களுடன் அழகுற இந்நூல் வெளியிடப்பட்டுள்ளது.

5391

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கான அடிப்படைக் கல்வி. V.N.S.உதயசந்திரன். கொழும்பு 11: பூபாலசிங்கம் புத்தகசாலை, 340, செட்டியார் தெரு, 4வது பதிப்பு, பெப்ரவரி 2001. 1வது பதிப்பு, செப்டெம்பர் 1995, 2வது பதிப்பு மே 1996, 3வது பதிப்பு, பெப்ரவரி 2000. (கொழும்பு 13: Page Setters, 113 ஜிந்துப்பிட்டி வீதி).
208 பக்கம், விளக்கப்படம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 28x22 சமீ., ISBN: 955-9396-00-5.

இந்நூலாசிரியர் ஆரம்பக் கல்வித்துறை வல்லுநர்களான ஜே.பெனடிக்ற் பாலன், பீ.சுப்பிரமணியம் ஆகியோரின் வழிநடத்தலோடு கடந்த 10 ஆண்டுகளாக ஆண்டு 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கு மாணவர்களைத் தயார்செய்து வெற்றிகண்டவர். தமிழ் அரிச்சவடி, ஒத்த கருத்துச் சொற்கள், எதிர்க் கருத்துச் சொற்கள், எதிர்ப்பாற் சொற்கள், எதிர்மறைச் சொற்கள், அடிப்படை இலக்கணம், பெயர்ச் சொற்கள், வினைச் சொற்கள், வசனங்கள், ஒலி வேறுபாடுகள், அடைமொழிகள், பழமொழிகள், கவிதைகள், கணிதம், சுற்றாடற் கல்வி, அடிப்படை விஞ்ஞானம், மனிதனும் அவன் சம்பந்தப்பட்ட பொருட்களும், ஆங்கிலம், முதலுதவி, வீதி ஒழுங்கு போன்ற பல்வேறு விடயங்களை இந்நூல் உள்ளடக்குகின்றது.

5392

திருமாவளவன்: சோழர் குலக்கொழுந்து. இரா.சிவ.சாம்பசிவ சர்மா. சுன்னாகம்: வட இலங்கைத் தமிழ்நூற் பதிப்பகம், 9வது பதிப்பு, 1964. (சுன்னாகம்: திருமகள் அழுத்தகம்).
120 பக்கம், விலை: ரூபா 1.25., அளவு: 18x12.5 சமீ.

சரித்திரக் கதைகளைச் சுவைபடச் செந்தமிழில் எழுதுவதில் தமிழ்ப் பண்டிதர் இலந்தையடிக் கவுணிய இரா.சிவ.சாம்பசிவ சர்மா குறிப்பிடத்தகுந்தவர். சோழர் குல தீபம் என்ற தொடர் தலைப்பில் ஏற்கெனவே இரண்டு நூல்களை வெளியிட்ட இவரது மூன்றாவது நூல் இதுவாகும். இந்நூல் 1939ஆம் ஆண்டு கனிஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திர வகுப்புத் தமிழ் இலக்கிய பாடமாக இலங்கை வித்தியாபகுதியாரால் நியமிக்கப்பட்டிருந்தது.

5393

பாண்டவர் கதை. பிரான்சீஸ் கிங்ஸ்பரி. யாழ்ப்பாணம்: பிரான்சீஸ் கிங்ஸ்பரி, 8வது பதிப்பு, 1960, 1வது பதிப்பு, 1939. (சாவகச்சேரி: இலங்காபிமானி அச்சியந்திரசாலை).
84 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 1.00.

இயற்றமிழ்ப் போதகாசிரியர் கலைமாணி பிரான்சீஸ் கிங்ஸ்பரி சிறுவர் சிறுமியருக்கு எழுதிய தமிழ் வசன நூல் இதுவாகும். தமிழில் வசன நடையில் உள்ள பாரதக்கதை நூல்களிற் சில மிக விரிந்தவை. சில மிகச் சுருங்கியவை. மிக விரிக்காதும் மிகச் சுருக்காதும் மாணவர்க்குப் பயன்படுமாறு எழுதப்பட்டது இந்நூல் என்றால் அது மிகையாகாது. நூலாசிரியர் ராவ் பகதூர் சீ.டபிள்யூ. தாமோதரம்பிள்ளையின் மகனாவார். (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5394

பால பாடம்: இரண்டாம் புத்தகம். ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர், சிதம்பரம்: ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர், சைவப்பிரகாச வித்தியாசாலை, 15வது பதிப்பு, பிரமாதி வருடம், 1940. (சென்னை: வித்தியாநுபாலன யந்திரசாலை, நெ.300, தங்கசாலை வீதி).
89 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை.

ஆறுமுக நாவலரவர்கள் இரண்டு பிரிவுகளில் எழுதிய இந்நூலில், நீதி வாக்கியங்கள், கதைகள், பூமி, மிருகம், காற்று, தேசங்கள், மாடு, பக்ஷி, தாவரம், வஸ்திரம், யானை, உலோகங்கள், வேளாண்மை, வியாபாரம், மெய்ம்மை, யுகம், வருஷம், அயனம், ருது, மாசம், வாரம். பக்கம். திதி, நட்சத்திரம், யோகம், கரணம், இராசி, இராசி மாசம், கிரகம், திக்கு, திக்குப்பாலகர், தாய் செய்த நன்றி, நித்தியக் கரும விதி, பெரியோரை வழிபடுதல் ஆகியவை முதலாம் பிரிவிலும், ஔவையார் அருளிச்செய்த ஆத்திச்சூடி, மூலமும் உரையும், கொன்றை வேந்தன் மூலமும் உரையும், கடிதம் எழுதுகிற முறை, பெருக்கல் வாய்ப்பாடு, எண் மானம், பின்னவெண்கள், பொன்னிலக்கம் ஆகியவை இரண்டாம் பிரிவிலும் இடம்பெறுகின்றன. (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம்.அலி, கொழும்பு 14).

500 தூய விஞ்ஞானங்கள்

500 தூய விஞ்ஞானம்

5395

ஏன், எப்படி? நாளாந்த விஞ்ஞான சாஸ்திர விளக்கம். இ.ஸாங்கி ஆல்பன் றோயிட்ஸ் (மூல நூலாசிரியர்), இலங்கை வித்தியா பகுதியார் (தமிழாக்கம்). மதராஸ்: லாங்மன்ஸ் க்ரீன் அண்ட் கம்பெனி லிமிட்டெட், 36 ஏ, மௌண்ட் ரோட், 1வது பதிப்பு, 1932. (Madras: Diocesan Press).
206 பக்கம், 123 விளக்கப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை.

ஏன்? எப்படி? என்னும் வினாக்களே எமது மூல பாடமாகும். ஏன் அது அவ்விதம்? எப்படி அது? எனச் சிறுவர்கள் எப்போதும் வினாவுகின்றனர். இவைபோன்ற வினாக்கள் பல தொகுத்துப் பாகுபடுத்தப்பட்ட பின்னர் இந்நூலுக்கு ஆதாரமாகக் கொள்ளப்பட்டுள்ளன. சேர்க்கைத் தன்மையும் உறுதித் தன்மையும், ஊறுதற் தன்மையும் கேசாகர்ஷணமும், ஸ்தித ஸ்தாபகத் தன்மை அல்லது துவட்சி, குருத்துவ ஆகர்ஷணம்: பாரம், நிறை, குருத்துவ மையம், ஸ்திரத் தன்மை, இருக்கை நிலையில் சடத்துவத் தன்மை, இயக்க நிலையில் தாமதத் தன்மை, மிண்டி: திரவப்பொருள் நெருக்கம், ஆர்க்கிமிடீசின் விதி, பவன நெருக்கமும் வாயுமானியும், சூடான திடப்பொருள்களின் பெருக்கம், வாயு, திரவப் பொருள்கள் சூட்டினால் தாக்கப்பட்ட போது பெருக்கமடைவது, உஷ்ணமானி, உஷ்ண வியாபகம், திரவப்பொருட்களில் சூடான

அணுக்கள் இடம்மாறிச் செல்லுதல், உஷ்ண வியாபகப் பிரயாணம், வாயுப் பொருட்களின் அணுக்கள் இடம்மாறிச் செல்லுதல் ஆகிய விடயங்கள் இந்நூலில் விஞ்ஞான பூர்வமாகத் தெளிவாக விளக்கப்பட்டுள்ளன. (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

520 வானியல் விஞ்ஞானம்

5396

வான வெளியிலே...! தேவன்-யாழ்ப்பாணம். யாழ்ப்பாணம், தேவன்-யாழ்ப்பாணம், 274, நாவலர் வீதி, 1வது பதிப்பு, ஆகஸ்ட் 1958. (யாழ்ப்பாணம்: ஸ்ரீ சண்முகநாத அச்சகம்).
76 பக்கம், விலை: ரூபாய் 1.00., அளவு: 18.5x12.5 சமீ.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் ஆசிரியரும், யாழ்ப்பாணத் தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் உபதலைவர்களுள் ஒருவருமான நூலாசிரியர், தான் செயற்கைக்கோள் தொடர்பாக ஆங்கிலத்தில் கற்ற நூல்களின் துணைகொண்டு தமிழில் அதுபற்றிய விழிப்புணர்வினை இளைஞர்களிடையே ஊட்டும் வகையில் அவ்வப்போது ஈழகேசரியில் பிரசுரித்த கட்டுரைகளின் நூல் வடிவம் இது. கனவு கண்டவர்கள், பூமியிலிருந்து புறப்பாடு, ஆகாய நிலையத்தில் அவதி, வானம் நமக்கல்ல, வான வீதியில் மேடு பள்ளங்கள், புவியீர்ப்பு பூச்சியம், சந்திர மண்டலத்திற்கு, பறக்கும் தட்டுக்களைப் படைத்தோர், உள் கிரகங்கள், கண் சிமிட்டும் தாரகைகள் கைக்கெட்டுமா? அகண்ட பிரபஞ்சத்தில் ஆறடி மனிதன் ஆகிய தலைப்புகளில் இவை தொகுக்கப்பட்டுள்ளன. செயற்கைச் சந்திரன் ஸ்புட்னிக் வானத்தில் பவனிவரத் தொடங்கிய காலத்தில் இந்நூல் எழுதப்பட்டது.

550 புவியியல் விஞ்ஞானம்

5397

இயற்கை அனர்த்தங்களும் இடர் முகாமைத்துவமும். கேந்திரேஸ்வரி இராதாகிருஷ்ணன். திருக்கோணமலை: திரு முத்துக்குமாரு இராதாகிருஷ்ணன், மதுஷா வெளியீடு, 164/1, திருஞானசம்பந்தர் வீதி, 1வது பதிப்பு, மே 2007. (திருக்கோணமலை: ரெயின்போ மினிலாப், 113, வித்தியாலயம் வீதி).
84 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 200., அளவு: 20x14 சமீ., ISBN: 978-955-50378-0-8.

திருக்கோணமலை ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரியில் ஆசிரியராகப் பணிபுரியும் இரா. கேந்திரேஸ்வரி, ஒரு புவியியல் சிறப்புக் கலைப் பட்டதாரியாவார். இயற்கைப் பேரிடர்கள் பற்றிய அறிவை வழங்குவதும், இயற்கையின் எழுச்சிகளையும் சீற்றங்களையும் மக்கள் எவ்வாறு எதிர்கொள்ளலாம்? அழிவுகளை எவ்வாறு எளிதாக்கிக் கொள்ளலாம் என்பன போன்ற வினாக்களுக்கு இந்நூல் விடைபகர்வதாயுள்ளன. இயற்கை அனர்த்தங்கள், இலங்கையில் நிகழக்கூடிய இயற்கை ஆபத்துகளும் பாதுகாப்பற்ற பிரதேசங்களும், இயற்கை அனர்த்தங்களையும் விளைவுகளையும் இழிவளவாக்கும் நுட்பங்கள், இயற்கை அனர்த்தங்களும் இடர் முகாமைத்துவமும் செயலமைப்பு அணுகுமுறை, அனர்த்தங்களிலிருந்து பாடசாலைகளைப் பாதுகாத்தல், ஆகிய ஐந்து இயல்களையும், சுனாமிப் பேரலையினால் இலங்கைக் கரையோர கடலக அமைப்புகளில் ஏற்பட்டுள்ள பாதிப்புக்கள் என்ற தலைப்பிலான பின்னிணைப்பையும் இந்நூல் கொண்டுள்ளது.

5398

புவியியல்: சூழலியல் முகாமைத்துவம். சூசைப்பிள்ளை அன்ரனி நோர்பேட். கொழும்பு 11: சேமமடு பொத்தகசாலை, U.G.50, Peoples Park, 1வது பதிப்பு, மார்கழி 2008. (கொழும்பு 11: சேமமடு பதிப்பகம்).
164 பக்கம், விலை: ரூபா 350., அளவு: 21.5x15சமீ., ISBN: 978-955-1857-29-5.

கொழும்புப் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராகப் பணிபுரியும் நூலாசிரியர், புவியியல் கற்கையின் சமகாலச் செல்நெறிகளையும் மாற்றங்களையும் உடனுக்குடன் உள்வாங்கி, கற்றல்-கற்பித்தல் செயற்பாட்டில் புதிய நுட்பங்களை விருத்திசெய்து வருபவர். தமிழ்மொழி மூலமான புவியியல் கற்கைசார் புலமையின் விரிவாக்கத்திற்கு வளம்சேர்த்து வருபவர். இந்நூலில், சூழலியலுக்கு ஓர் அறிமுகம், வளங்களின் நிலைபேண் அபிவிருத்தி, நகராக்க மற்றும் கைத்தொழில் சூழல் பிரச்சினைகள், விவசாய வளங்களும் பயன்பாட்டுப் பிரச்சினைகளும், மண்வளமும் பேணுகையும், காட்டு வளங்களின் பயன்பாடும் பேணுகையும், பாலைவனமாகுதலும் நிலச்சீரழிவுகளும், வளிமண்டலத்தின் பச்சைவீட்டு வாயுக்களும் தாக்கமும், வளிமண்டலத்தில் ஓசோன் சிதைவும் தாக்கங்களும், பூகோள வெப்பமடைதலும் கடல்மட்ட

மாற்றமும், முருகைக் கற்பார் அகழ்வும் சூழல் பிரச்சினைகளும், இலங்கையில் நிலச்சரிவுகள், வனவிலங்குகளின் பாதுகாப்பும் முகாமைத்துவமும், இலங்கையின் கரையோர வலயத்தின் முகாமைத்துவம், இலங்கையின் ஈரநிலங்களின் முகாமைத்துவம், உயிரினப் பல்வகைமையும் பேணிப் பாதுகாத்தலும், சூழல் முகாமைத்துவம் நோக்கிய சர்வதேச மாநாடுகள் ஆகிய தலைப்புகளின் கீழ் அமைந்த 17 கட்டுரைகள் இடம்பெறுகின்றன.

5399

வளிமண்டலவியலும் காலநிலையியலும். சூசைப்பிள்ளை அன்ரனி நோர்பேட். கொழும்பு 11: சேமமடு பொத்தகசாலை, U.G.50, Peoples Park, 1வது பதிப்பு, ஆடி 2008. (கொழும்பு 11: சேமமடு பதிப்பகம்).
225 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 350., அளவு: 21.5x15சமீ., ISBN: 978-955-1857-12-7.

கொழும்புப் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராகப் பணிபுரியும் நூலாசிரியர், புவியியல் கற்கையின் சமகாலச் செல்நெறிகளையும் மாற்றங்களையும் உடனுக்குடன் உள்வாங்கி, கற்றல்-கற்பித்தல் செயற்பாட்டில் புதிய நுட்பங்களை விருத்திசெய்த வருபவர். வளிமண்டலவியலும் காலநிலையியலும் (Meteorology and Climatology) என்ற இந்நூலில், வளிமண்டலவியலும் காலநிலையியலும் ஓர் அறிமுகம், காலநிலை மூலகங்களை அளவிடுதல், வானிலை அவதானிப்பும் பகுப்பாய்வும், வளிமண்டலச் சூழலில் செய்மதித் தொலையுணர்வு, அயனப் பிரதேச வானிலை ஒழுங்குகள், அயனப் பிரதேசத்தின் பொதுப்பார்வை அளவுத்திட்டக் குழப்பங்கள், அயனச் சூறாவளிகள், மொன்சூன் சுற்றோட்டம், வளிமண்டலப் பொதுச் சுற்றோட்டம், தோண்வைற்றின் காலநிலைப் பாகுபாடு ஆகிய 10 தலைப்புகளில் வளிமண்டலவியலும் காலநிலையியலும் என்ற விடயப்பரப்பு விரிவாக விளக்கப்பட்டுள்ளது.

551.47 சுனாமி

5400

சுனாமி சொல்லாத சோகங்கள். செபமாலை அன்புராசா. யாழ்ப்பாணம்: அமலமரித் தியாகிகள் வெளியீடு, 1வது பதிப்பு, டிசம்பர் 2005. (கொழும்பு 14: யுனைட்டெட் பிரின்டெக், 23, டிவாஸ் லேன், கிராண்ட்பாஸ்).
vi, 85 பக்கம், விலை: ரூபா 140., அளவு: 22x15 சமீ., ISBN: 955-1389-00-3.

26.12.2004 இலங்கைக் கடற்பிரதேசங்களைத் தாக்கிய சுனாமியின் பின்விளைவுகள் பற்றிப் பேசும் நூல். துன்பியல் வழியாக வாழ்வின் உண்மைகளைக் கண்டறிய மேற்கொண்ட முயற்சி இதுவாகும். சுனாமி பற்றிய நல்ல பல கட்டுரைகளையும் கவிதைகளையும் கொண்டுள்ளன. கடல்கோளுக்கு விளக்கம் கொடுத்தும், பாதிக்கப்பட்டவர்களின் சோகக்கதைகளைக் கேட்டறிந்து பதிவுசெய்தும், உடனடி உதவிக்கரம் நீட்டியவர்களை நன்றியுடன் சுட்டிக்காட்டியும், சுனாமியால் ஏற்படக்கூடிய உளவியல் பிரச்சினைகள், எதிர்விளைவுகள் என்பவற்றை எடுத்துரைத்து எதிர்காலத்திற்கு எச்சரிக்கை விடுத்தும் இந்நூலை அன்புராசா அடிகளார் உருவாக்கியுள்ளார்.

5401

பேரலையும் பேரழிவும் 2004. பாக்கியராசா ஜெயப்பிரபா, சிதம்பரப்பிள்ளை அமலநாதன். மட்டக்களப்பு: கிழக்கிலங்கை மனிதவள மேம்பாட்டு நிலையம், 52, வெபர் வீதி, 1வது பதிப்பு, 2005. (மட்டக்களப்பு: சண் அச்சகம், 5, இருதயபுரம் மேற்கு).
viii, 228 பக்கம், புகைப்படங்கள், அட்டவணை, விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x14.5 சமீ.

கிழக்குப் பல்கலைக்கழக உதவி விரிவுரையாளர் செல்வி பா.ஜெயபிரபாவும், மண்முனைப் பற்று பிரதேச செயலாளர் திரு.சி.அமலநாதனும் இணைந்து எழுதிய இந்நூல் ஆழிப்பேரலை தொடர்பான உணர்வூட்டத்தினையும் பேரழிவின் தாக்கங்களையும் குறிக்கும் வரலாற்றுப் பதிவாகும். சுநாமிப் பேரலையின் உருவாக்கம், அது ஏற்படுத்தக்கூடிய தாக்கம், அத்தாக்கத்திலிருந்து மீள்வதற்கான மார்க்கம் முதலான விடயங்களை உணர்வூட்டும் வகையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் 2004 டிசம்பர் 26இல் சுநாமி ஏற்படுத்திய தாக்கங்கள் தொடர்பாகவும், மாவட்டத்தில் நடைபெறும் மீள்கட்டுமானம் தொடர்பான செயற்பாடுகளையும் வெளிப்படுத்தும் வகையில் இந்நூல் உருவாக்கப்பட்டுள்ளது. புவியியல், பொருளியல், உளவியல், சூழலியல், சார்ந்த கண்ணோட்டமாக இந்நூல் அமைகின்றது.

மேலும் பார்க்க: 5405, 5909

600 தொழில்நுட்பம், பிரயோக விஞ்ஞானம்

610 மருத்துவம்

5402

டெனிஸ்-ஆங்கில-தமிழ் மருத்துவக் கையேடும் அகராதியும். வி.ஜீவகுமாரன், ஜென்ஸ் ஓகொட் ஹன்சன். Denmark: Meeraa Tolke Service, Egegardsparken 59, 4000 Roskilde, 1வது பதிப்பு, 1998. (அச்சக விபரம் தரப்படவில்லை).
(8), 209 பக்கம், விளக்கப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24x17 சமீ., ISBN: 87-986403-0-5.

டென்மார்க்கில் புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களின் மருத்துவத்துறைத் தொடர்பாடல்களுக்கு உதவும்வகையில் தயாரிக்கப்பட்ட மருத்துவக் கையேடும் அகராதியும் இணைந்த நூல். நான்கு பாகங்களைக் கொண்ட இந்நூலில் முதலாம் பாகத்தில் உடலின் தனித்தனி அவயவங்கள், தொகுதிகளின் உடற்கூற்றியல், அதில் வரக்கூடிய நோய்கள், அதற்கான மருத்துவ முறைகள் என்பன தரப்பட்டுள்ளன. 2ம் பாகத்தில் முதற்பாகத்தில் அடங்கியுள்ள அனைத்துச் சொற்களையும் டேனிஷ் மொழியிலுள்ள 29 எழுத்துக்களின் அகர வரிசையில் ஆங்கில டேனிஷ் தமிழ் அகராதியாக வரிசைப்படுத்தியுள்ளார்கள். மூன்றாம் பாகத்தில் இதே சொற்களை ஆங்கில மொழியின் 26 எழுத்துக்களின் அகரவரிசையில் பட்டியலிட்டுள்ளார்கள். நான்காம் பாகம், தமிழ் அகர வரிசையில் இச்சொற்களுக்கான டேனிஷ் ஆங்கில மூலங்களைக் கொண்ட பட்டியலாகும்.

5403

மருத்துவம். க.மு.பத்மநாதன், ஆ.சிவபாலன் (இதழாசிரியர்கள்). யாழ்ப்பாணம்: வட பிராந்திய யாழ்.ஆங்கில மருந்து வணிகர் மன்றம், 1வது பதிப்பு, ஆகஸ்ட் 1994. (சுன்னாகம்: திருமகள் அழுத்தகம்).
(166) பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24x19 சமீ.

வட பிராந்திய யாழ் ஆங்கில மருந்து வணிகர் கழகம் உருவாக்கப்பட்டு நான்காண்டுகள் பூர்த்தியாகியதை முன்னிட்டு வெளியிடப்பட்ட மலர். (இதழ் 1, 1994) போர்க்காலச் சூழ்நிலையினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்குத் தேவையான ஆங்கில மருந்துகளை விற்பனை செய்துவந்த இம்மன்றம், மருத்துவத்துறையில் பிரபல்யம் மிக்கவர்களது ஆக்கங்களை உள்ளடக்கி இம்மலரைப் பிரசுரித்துள்ளது. கண்தானம் (கண் வைத்தியர் எஸ்.குகதாசனுடனான நேர்காணல்), நாற்கூற்றே மருந்து (வி.எம்.கருணாகரன்), மூலநோயும் மலச்சிக்கலும் (இந்துமதி), Prescribing in Pregnancy (V.Karunakaran), பாலியல் தொடர்பான நோய்கள் (இ.கிருஷ்ணமூர்த்தி), சோதிட வைத்திய சாஸ்திரம் (கே.சி.இராமநாதன்), நீரினால் பரவும் நோய்களும் தடுப்பு நடவடிக்கைகளும் (யாழ். மாநகராட்சி மன்றம்), கசரோகத் தடுப்பு முறை (கே.மகேசன்), மக்களும் மருந்தும் (க.மு.பத்மநாதன்), ஆத்ம சக்தி (கே.சி.இராமநாதன்), செப்ற்றிமீசியா ஏற்படும் காரணிகளும் தடுப்பும் (எஸ்.பி.ஆர்.சீர்மாறன்), கொடுக்கல் வாங்கல்களை வர்த்தக நிறுவனங்கள் பதிவுசெய்ய வேண்டியதன் அவசியமும், கணக்கு வைக்கும் முறைகளும் (நா.வன்னியசிங்கம்), நீரிழிவுடன் சுகமாக வாழலாம் (எம்.கே.முருகானந்தன்), மலேரியாவிலிருந்து எம்மைக் காப்போம் (க.ச.சிவகுரு), குழந்தைகளில் வலிப்பு நோய்கள் (பத்மலோஜனி), பற்களின் தற்சுகாதாரம் (சாந்தி) ஆகிய கட்டுரைகள் இம்மலரில் இடம்பெற்றுள்ளன.

613 பொது உடல்நலவியல்

5404

உடல்நல தொகுப்பு: உடல்நல மேம்பாட்டுத் திட்டம். சண்முகலிங்கம் கதிர்காமு. London NW10 2JJ: தமிழ் அகதிகள் நடவடிக்கைக் குழு, Moran House, 2nd Floor, 449/451 High Road, Willesden, 1வது பதிப்பு, செப்டெம்பர் 2006. (லண்டன்: பிரின்ட் டோன்).
132 பக்கம், விளக்கப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21X15 சமீ.

தமிழ் அகதிகள் நடவடிக்கைக் குழு (Tamil Refugee Action Group, TRAG) வின் அனுசரணையுடன் வெளியிடப்பட்ட சுகாதாரக் கைநூல். 45 தலைப்புகளில் அமைந்த தமிழ் ஆங்கில இருமொழிக் கட்டுரைகளில் நீரிழிவு, இதயத் தசைக் குருதி விநியோக வியாதி, இரத்த அழுத்தம், கொலஸ்ரோல், பாரிசவாதம், புற்றுநோய், மார்பகம் பற்றிய விழிப்புணர்வு, HIVயும் எயிட்ஸ் நோயும், காச நோய்,

புகைத்தல், மதுபானம், போதை வஸ்து, மன அமைதியின்மையும் மனச் சோர்வும், மூட்டுவாதம், தொய்வு, ஜலதோஷம், அலர்ஜி (ஒவ்வாமை), உடற் பயிற்சியின் முக்கியத்துவம், உடற் பருமன், உப்பின் பாவனை, தாவர உணவை அதிகளவில் உண்பதால் எற்படும் நன்மைகள், ஆரோக்கியமான உணவு, தேசிய சுகாதார சேவையினரால் கிடைக்கும் சேவைகள் ஆகிய தலைப்புகளில் 25 விளக்கக் கட்டுரைகள் தமிழில் உள்ளன.

5405

கடல்கோள் காவுகொண்ட சமூக உளம். சி.யமுனாநந்தா. யாழ்ப்பாணம்: கலாநிதி சி.யமுனாநந்தா, மாவட்ட காசநோய்க் கட்டுப்பாட்டு அதிகாரி, மார்புநோய்ச் சிகிச்சை நிலையம், பண்ணை, 1வது பதிப்பு, ஆண்டு விபரம் தரப்படவில்லை. (யாழ்ப்பாணம்: சுந்தர் வெளியீட்டகம், 844 ஆஸ்பத்திரி வீதி).
iv, 64 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18.5x14 சமீ.

கடல்கோள் அனர்த்த நிவாரணம், பொதுக் கட்டமைப்பு இலங்கையில் சட்டபூர்வமாகத் தடுத்துவைக்கப்பட்ட நிலையில், வெளியிடப்பட்ட இந்நூல் சுயமான வழிகளில் தமிழர்கள் தத்தமது புனர்நிர்மாணத்தை ஓரளவிலாவது மேற்கொள்ள உதவுகின்றது. சமூக உளத்தை மேம்படுத்தும் நடவடிக்கைகள், கடல்கோள் அனர்த்தமும் உளநல மேம்படுத்தலும், சமாதானத்திற்கான ஆள்கூறுகளும், கடல்கோளினால் அவற்றில் ஏற்பட்ட மாற்றங்களும், பொங்கிய கடலலை மன அலைகளில் புதைந்த தாக்கங்களை அகற்றுவோம், கடல்கோள் அனர்த்தமும் சிறுவர்களின் நலன்பேணலுக்கான திட்டங்களும், கடல்கோளுக்குப் பின்னர் மூன்று மாதங்கள் கழிந்த நிலையில் சமூக உளத் தேவைகளும் தாமதமாகும் புனர்வாழ்வும், கடல்கோள் எதிர்வுகூறலும் எதிர்கொள்ளலும், உளவளத்துணைப் புலனீர்ப்புப் பட்டியல் ஆகிய எட்டு தலைப்புகளில் இந்நூல் விரிகின்றது.

5406

போதையின் பிடியில் பேதைகள். நூலாக்கக் குழு. யாழ்ப்பாணம்: யாழ் சமூக செயற்பாட்டு மையம், (ஜெசாக்), இல.159 4ம் குறுக்குத் தெரு, 1வது பதிப்பு, ஆண்டு விபரம் இல்லை. (யாழ்ப்பாணம்: ஹரிகணன் பிரின்டர்ஸ், 424, காங்கேசன்துறை வீதி).
32 பக்கம், சித்திரங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x14.5 சமீ.

யாழ்ப்பாணம்: யாழ் சமூக செயற்பாட்டு மையம் (ஜெசாக்), கடந்த 2002 முதல் மக்களுக்கான சமூக சேவைகள் பலவற்றைச் செய்துவருகின்றது. இதன் பணிகளில் ஓர் அங்கமாக மதுபாவனையால் ஏற்படும் பாதிப்பு பற்றியும், சிறுவர் உரிமைகளை, கடமைகளை விளக்கி சமூகத்தில் சிறவர்களின் பங்கு பற்றியும் இரு நூல்களை வெளியிட்டுள்ளனர். மதுபானம் பற்றிய தவறான நம்பிக்கைகளும் விசுவாசங்களும் இந்நூலில் எடுத்துக் கூறப்பட்டுள்ளன. குடியைத் தவிர்ப்பதற்கு பின்பற்றக்கூடிய வழிமுறைகள் என்பவற்றை விளக்கி, ஆங்காங்கே குடிபோதையின் தாக்கம், பிரச்சினைகள், பற்றி விளக்கும் சித்திரங்களும் இடம்பெற்றுள்ளன. ஓவியங்களை யாழ். மத்திய கல்லூரி சித்திர ஆசிரியர் டானியல் வரைந்துள்ளார். போதை பற்றிய விழிப்புணர்வினை ஏற்படுத்தும் நூல்.

மேலும் பார்க்க: 5866

614 பொதுச் சுகாதாரம்

5407

சுக வாழ்க்கை பாகம் 3. கா.வைத்தீஸ்வரன். தெகிவளை: ஆற்றுப்படுத்தல் நிலையம், 7, அல்பேர்ட் பிளேஸ், 1வது பதிப்பு, ஓகஸ்ட் 2009. (கொழும்பு 13: கீதா பதிப்பகம்).
135 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 22.5x15 சமீ., ISBN: 955-97793 - 7-0.

அர்த்தமுள்ள வாழ்க்கை வாழ்வதற்கு உடல், உள, சமூக, ஆத்மீக நலன்களைப் பேணுவது அவசியம். இந்நான்கு நலன்களையும் பேணுவதற்கான வழிவகைகளே ஏற்கெனவே வெளிவந்திருக்கும் இரு தொகுதிகளிலும், இத்தொகுதியிலும் வலியுறுத்தப்பட்டுள்ளன. நலப்பணியாளர், ஆசிரியர், சமூகசேவையாளர், மற்றும் குடும்பத்தினருக்கான ஆரோக்கிய வழிகாட்டி நூல். (மேலும் பார்க்க: **சுக வாழ்க்கை,** பாகம் 1. பதிவு இலக்கம் 1296, பாகம் 2, பதிவு இலக்கம் 4330).

5408

சுக வாழ்வு: சிறப்பு மலர். ஆ.பேரின்பநாதன் (மலராசிரியர்). பருத்தித்துறை: மந்திகை அரசு மருத்துவமனை, 1வது பதிப்பு, மே 1980. (பருத்தித்துறை: குமார் அச்சகம்).
(102) பக்கம், புகைப்படத் தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24.5x19 சமீ.

பருத்தித்துறை (மந்திகை) அரசு மருத்துவமனை, விநாயகர் ஆலயம்-மனநல விடுதி ஆகியவற்றின் புனரமைப்பு சிறப்பு மலராக 25.5.1980இல் வெளியிடப்பட்டது. மலராக்கத்திற்கான ஆலோசகர்களாக வைத்தியர் எஸ்.யோகநாதன், எஸ்.கதிரவேற்பிள்ளை ஆகியோர் பணியாற்றியுள்ளனர். இம்மலரில் பல்வேறு குடும்பநல சுகாதாரம், நோயியல் மற்றும் மருத்துவக் கட்டுரைகள் நிறைந்துள்ளன.

5409

சுகமான வாழ்விற்கு நிறைவான போசாக்கு: குடும்பத்திற்கான கைந்நூல். கல்விசார் பொருள்கள் தயாரிப்பு அலகு. யாழ்ப்பாணம்: சமுதாய மருத்துவத்துறை, மருத்துவ பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், 1வது பதிப்பு, ஜுன் 2006. (அச்சக விபரம் தரப்படவில்லை).
19 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5X12.5 சமீ.

மனித வாழ்விற்கு ஆரோக்கியமானமுறையில் உணவுப்பழக்க வழக்கங்களை மேற்கொள்ளத்தூண்டும் சுகாதாரக் கைநூல். போசணைக் குறைவால் ஏற்படும் நோய்கள், காபோவைதரேற்று, புரதம், விற்றமின்கள், இரும்புச்சத்து, அயடின், கல்சியம் போன்ற போசணைச் சத்துக்களின் அவசியம் பற்றியும் அவற்றின் குறைபாட்டால் ஏற்படும் பாதிப்புகள் பற்றியும் அதிலிருந்து மீளும் எளிய வழிமுறைகளும் இந்நூலில் இரத்தினச் சுருக்கமாகத் தரப்பட்டுள்ளன. உலக சுகாதார நிறுவனத்தின் அனுசரணையுடன் இந்நூல் வெளியிடப்பட்டுள்ளது.

5410

தமிழர் புனர்வாழ்வுக் கழக நோர்வேக் கிளையின் உதவியுடனான கோப்பாய் போஷாக்குப் புனர்வாழ்வு நிலையம்: செய்திட்ட விபரம். தமிழர் புனர்வாழ்வுக் கழகம். நோர்வே: தமிழர் புனர்வாழ்வுக் கழகம், நோர்வேக் கிளை, P.O.Box4742, Sofienberg, 0506, Oslo, 1வது பதிப்பு, மே 1993. (நோர்வே: அச்சகவிபரம் தரப்படவில்லை).
20 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x15 சமீ.

கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலுள்ள சுமார் 1200 குழந்தைகளைப் பாதுகாக்கும் அரிய பணியை தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் நோர்வேக் கிளை பொறுப்பேற்றிருந்தது. போஷாக்குப் புனர்வாழ்வு நிலையம் எனப்படும் இத்திட்டம் 01.04.1993 தொடக்கம் இவர்களது பொறுப்பில் இயங்கத் தொடங்கியது. வருடாந்தம் 2.5 மில்லியன் ரூபாவை எதிர்பார்த்து மக்களிடம் தமது வேலைத்திட்டத்தினைச் சமர்ப்பித்து நிதி ஆதரவு கோரிய வேளையில் இவ்வாவணம் வெளியிடப்பட்டது. Oslo, Forus, Bergen ஆகிய நகரங்களிலுள்ள தமிழர் புனர்வாழ்வுக் கழக அலுவலகங்களினூடாக இவ்வேண்டுகோள் பிரசுரம் விநியோகிக்கப்பட்டது.

5411

வன்னிப் பெருநிலப் பரப்பில் நுளம்புகளில் ஆய்வு. பொன்மயில் இராசதுரை. (இயற்பெயர்: பொன்னையா மயில்வாகனம் இராசதுரை). கிளிநொச்சி: பொ.ம.இராசதுரை, பூச்சிஇயல் ஆய்வாளர், 1வது பதிப்பு, 2003. (கொழும்பு 13: ஜெயா ஒப்செட் பிரிண்டர்ஸ், B1,S1, Bloemendhal Flats, Kotahena).
52 பக்கம், விளக்கப்படங்கள், அட்டவணைகள், விலை: ரூபா 60., அளவு: 21.5x15 சமீ.

வன்னிப் பிராந்தியத்தில் பூச்சியியல் ஆய்வாளராகப் பணியாற்றிய ஓய்வுபெற்ற நூலாசிரியரின் மலேரியா எதிர்ப்புப் பணிகள் குறிப்பிடத்தக்கவை. 1999ம் ஆண்டு வன்னிப்பிராந்தியத்திற்கு வந்து, அங்கு அனோபிலஸ் கியுலிசிபேசிஸ் (Anopheles culicifacies) நுளம்பினத்தினால் பாதிப்படைந்திருந்த வன்னிமக்களுக்குச் சேவையாற்றியவர். அரச சுகாதாரசேவையின் முழுமையான ஆதரவின்றி இருந்த போர்க்கால சூழலில், இந்நுளம்பை அழிக்க உள்ளூர் இயற்கைவளத்தைப் பயன்படுத்தி பல உத்திகளை முன்வைத்து வெற்றிகண்டவர். அவரது நூலில் மலேரியா பற்றிய அறிவியல் தகவல்களும் வன்னிப்பிராந்திய சுகாதார புள்ளிவிபரங்களும் விரவிக்காணப்படுகின்றன.

மேலும் பார்க்க: 5539

5412

காசத்தினை நிறுத்தும் உத்தி. சி.யமுனானந்தா. யாழ்ப்பாணம்: காசநோய் தடுப்புச் சங்கம், 1வது பதிப்பு, ஜுன் 2008. (யாழ்ப்பாணம்: ஹரிகணன் பிரிண்டர்ஸ்).
(8), 60 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14.5 சமீ.

நூலாசிரியர் கலாநிதி சி.யமுனானந்தா, மாவட்ட காசநோய்க் கட்டுப்பாட்டு அதிகாரியாக, யாழ்ப்பாணத்தில் பண்ணை, மார்புநோய்ச் சிகிச்சை நிலையத்தில் பணியாற்றுகிறார். இந்நூல் உலக சுகாதார நிறுவனத்தின் அனுசரணையுடன் வெளியிடப்படுகின்றது. **நடைமுறைக் காசநோய்க் கட்டுப்பாடு** என்ற தலைப்பில் இவர் முன்னர் எழுதி வெளியிட்ட நூலின் உள்ளடக்கமான முதல் மூன்று அத்தியாயங்களுடன், காசத்தினை நிறுத்தும் உத்தி, காசநோய், நான் காச நோயினை நிறுத்துகின்றேன் (கவிதை) ஆகிய மேலதிக மூன்று பகுதிகள் இந்நூலில் காணப்படுகின்றன.

5413

சுகவலம்புரி. சி.யமுனானந்தா. யாழ்ப்பாணம்: கலாநிதி சி.யமுனானந்தா, மாவட்ட காசநோய்க் கட்டுப்பாட்டு அதிகாரி, மார்புநோய்ச் சிகிச்சை நிலையம், பண்ணை, 1வது பதிப்பு, ஆண்டு விபரம் தரப்படவில்லை. (அச்சக விபரம் தரப்படவில்லை).
(4), 48 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14.5 சமீ.

அடிப்படை மருத்துவ அறிவினை வளர்க்கும் மருத்துவ விளக்கங்களைக் கேள்வி-பதில் வடிவில் தமிழில் இந்நூல் விளக்குகின்றது. மாரடைப்பு, உயர் குருதி அமுக்கம், கருப்பை நோய்கள், வலிப்பு நோய், தொய்வு நோய், பறவைக் காய்ச்சல், புற்றுநோய், உளப்பிளவு நோய், உளவியல்சார் நோய்கள், குருதிச்சோகை, வயிறெறிவு, நீரிழிவு, காசம், தைபஸ் காய்ச்சல். மூட்டுநோய்கள், நெருக்கீட்டுத் தாக்கங்கள் போன்ற வடபுலத்து மக்களுக்கு அதிகம் பரிச்சயமான நோய்கள் பற்றிய பொதுவான கேள்விகளுக்கு இந்நூல் பதில் தருகின்றது. 18 தலைப்புகளில் நோய்வாரியாக இக்கேள்வி-பதில்கள் பிரிக்கப்பட்டுள்ளன.

5414

நடைமுறைக் காசநோய்க் கட்டுப்பாடு. சி.யமுனானந்தா. யாழ்ப்பாணம்: கலாநிதி சி.யமுனானந்தா, மாவட்ட காசநோய்க் கட்டுப்பாட்டு அதிகாரி, மார்புநோய்ச் சிகிச்சை நிலையம், பண்ணை, 1வது பதிப்பு, மே 2006. (யாழ்ப்பாணம்: சிவரஞ்சனம் ஒப்செற் பிரின்டர்ஸ், பலாலி வீதி, கோண்டாவில்).
(4), 48 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14.5 சமீ.

யாழ்ப்பாண மாவட்டத்தில் அதிகரித்து வரும் காசநோயாளர் தொகையைக் கட்டுப்படுத்தும் வகையில் இவ்வறிவு நூல் எழுதப்பட்டுள்ளது. யாழ்ப்பாண மாவட்டப் புள்ளிவிபரங்களின் படி ஆண்டொன்றுக்கு புதிதாக 350க்கும் அதிகமான காசநோயாளர்கள் கண்டுபிடிக்கப்படுகிறார்கள். இவர்களை ஆரம்பத்திலேயே இனம்காணத்தவறினால் இந்நோயை அவர்கள் பலருக்கும் பரப்பும் வாய்ப்பு உள்ளது. நோயாளரை இனம்காணுதலும், அதற்கான சிகிச்சைகள் பற்றிய அறிவை வழங்குதலும் இந்நூலின் முக்கிய நோக்கமாக உள்ளது. காசநோய் பற்றிய அறிமுகம், ஆய்வுகூடத்தில் காசநோய்க் கிருமிகளைக் கண்டறிதல், மாவட்ட மட்டத்தில் காசநோய்க் கட்டுப்பாட்டில் சுகாதார உத்தியோகத்தர்களின் செயற்பாடுகள் ஆகிய மூன்று பிரதான பிரிவுகளின்கீழ் காசநோய்க் கட்டுப்பாடு பற்றிய மிக முக்கியமான தகவல்கள் இந்நூலில் தரப்பட்டுள்ளன.

மேலும் பார்க்க: 5865

618 பெண்நோயியல், மகப்பேற்று மருத்துவம்

5415

கட்டிளம்பருவம்: வாழ்வில் ஒரு வசந்தகாலம். சேவாலங்கா. யாழ்ப்பாணம்: சேவா லங்கா பவுண்டேஷன், இல.250, கோவில் வீதி, நல்லூர், 1வது பதிப்பு, ஆண்டு விபரம் தரப்படவில்லை. (யாழ்ப்பாணம் ஹரிகணன் அச்சகம்).
32 பக்கம், வண்ணப் படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 19.5X13.5 சமீ.

இந்நூல் கட்டிளம்பருவத்தினர் மத்தியில் இனப்பெருக்க சுகாதாரம் தொடர்பாகவும், அவர்களுடன் தொடர்புடைய சமூக விடயங்கள் தொடர்பாகவும், விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில்

வடிவமைக்கப்பட்ட கல்விசார் நூலாகும். யாழ்ப்பாணப் பிராந்தியத்தில் போரின் பின் விளைவுகளான இளையோர்களின் பாலியல் ரீதியான குழப்பநிலையினை தவிர்க்கும் வகையில் பாலியல் தொடர்பான சுகாதார அறிவுரைகளை வழங்கும்பொருட்டு செவாலங்கா அமைப்பினர் ஏற்படுத்திய உதவித்திட்டத்தின் பயன்பாட்டிற்காக வெளியிடப்பட்டது.

5416

தாயும் சேயும். சி.சி.டி. சில்வா (மூலம்), நாலிஸ் விசுவநாதன் (தமிழாக்கம்). கொழும்பு: நாலிஸ் விசுவநாதன், டி.சொய்சா மருத்துவ நிலையம், 1வது பதிப்பு, ஆண்டு விபரம் தரப்படவில்லை. (கொழும்பு: கூட்டுறவு மொத்த விற்பனை அச்சக நிலையம்).
61 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை.

தாய்ப்பால் ஊட்டல், போத்தலில் உணவூட்டல், பொதுப் பராமரிப்பு, தாய்ப்பால் மறத்தலும் பின்பும், குழந்தையின் நாளாந்த ஒழுங்கு, குறைமாதக் குழந்தை ஆகிய தலைப்புகளில் மகப்பேற்று மருத்துவ, குழந்தை பராமரிப்புத் தகவல்களை இந்நூல் வழங்குகின்றது. இலங்கை பல்கலைக்கழகச் சிசு நோய்ப் பேராசிரியரும், லேடி ரிஜ்வே சிசு வைத்தியசாலை வைத்தியரும், கொழும்பு டி சொய்சா மருத்துவ நிலையப் பல்கலைக்கழகப் பகுதியின் சிசுநோய் நிபுணருமான நூலாசிரியரின் ஆங்கில மூல நூலினை, கொழும்பு டி சொய்சா மருத்துவ நிலையச் சிசுநோய்த் தாதியான நாலிஸ் விசுவநாதன் தமிழாக்கம் செய்துள்ளார். இந்நூல் 1967க்கு முன்னர் வெளியாகியிருக்கலாம். (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14)

619 கீழைத்தேய மருத்துவம்

5417

அதிபர் உயர்திரு அம்பலவாணர் விஸ்வநாதர் இராசரத்தினம் அவர்தம் மாட்சிமை நல்கும் பொன்விழா மலர் 1939-1989. மலர்க்குழு. யாழ்ப்பாணம்: சித்த ஆயுள்வேத வைத்திய மாணவர் மன்றம், லங்கா சித்த ஆயுள்வேத வைத்தியக் கல்லூரி, 127 ஸ்டான்லி வீதி, 1வது பதிப்பு, 1989. (யாழ்ப்பாணம்: புதிய சித்திரா பதிப்பகம்).
(12), 50 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24x18.5 சமீ.

ஐந்து தசாப்தங்களாக யாழ்ப்பாணம் லங்கா சித்த ஆயர்வேத வைத்தியக் கல்லூரியில் விரிவுரையாளராகவும் அதிபராகவும் பணியாற்றிய ஏ.வி.இராஜரத்தினம் அவர்களை கௌரவிக்கும் வகையில் வெளியிடப்பெற்ற மலர். வாழ்த்துரைகளையும், சித்தவைத்தியக் கட்டுரைகளையும் தாங்கி வெளிவந்துள்ளது. Ayurveda Today (Suhanthan Innasithamby), மருத்துவப் பெயர்பெற்ற கீழ்க்கணக்கு நூல்கள் (சந்திரமதி ஜெயராஜா), மூலரோகமும் கைமருந்தும் (ஊர்மிளா ஸ்ரீஸ்கந்தராஜா), பிள்ளை வளர்த்தி மூலிகைகள் (பி.எஸ்.மகிழ்மலர்), புற்றுநோய் (தேவரஞ்சனி அருளிங்கம்), ஆயுர்வேத மருத்துவ வளர்ச்சியில் எதிர்நோக்கும் பிரச்சினைகள் (சா.சந்திரபாலன்), மலர்களின் மருத்துவ மகத்துவம் (மா.கிருஷாந்தி), தந்த ரோகங்கள் (க.ஜீவானந்தம்), நோயற்ற வாழ்வு வாழ (ப.சத்தியநாதன்) ஆகிய சித்த வைத்தியக் கட்டுரைகள் இம்மலரில் சிறப்பிடம்பெற்றுள்ளன.

5418

மூலிகைகளை அறிவோம். நீலாம்பிகை கந்தப்பு (தொகுப்பாசிரியர்). கரவெட்டி: விக்னேஸ்வராக் கல்லூரி, 1வது பதிப்பு, ஜுலை 2001. (நெல்லியடி: மல்ட்டிவிஷன் ஒப்செட் பிரிண்டர்ஸ்).
xvi, 118 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 150., அளவு: 21x15 சமீ., ISBN: 955-8531-00-6.

தமது பிராந்தியத்தில் காணப்படும் மூலிகைகளின் மகத்துவத்தையும் பெருமைகளையும் வெளிக்கள ஆய்வின் மூலமும், ஆழ்ந்தகன்ற தேடல்மூலமும் பெற்றுக்கொண்ட கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரியின் உயர்தர வகுப்பு மாணவர்களின் மூலிகை விளக்கக் குறிப்புகளின் தொகுப்பு இதுவாகும். உயர்தர வகுப்பு மாணவர்களின் செயற்றிட்ட செயற்பாட்டின் வெளிப்பாடாக மலர்ந்துள்ள இவ்வாய்வு ஆசிரியை நீலாம்பிகை கந்தப்புவின் நெறிப்படுத்தலின்கீழ் மூலிகைகளை அடையாளம் காணும் நல்லதொரு உசாத்துணை நூலாக உருவாக்கப்பட்டுள்ளது. மூலிகைகளின் பொருத்தமான விவரண உருவப்படங்களை சி.குமரேசன், ச.அனிதன் ஆகியோர் வரைந்துள்ளனர்.

619.1 சித்த மருத்துவம்

5419
அகத்திய முனிவர் அருளிச்செய்த வைத்திய பூரணம் -205 செய்யுள் (மூலம்): வைத்திய பூரணம் வடகோவை 205ற் சூத்திரம் 25, செய்யுள் 25 (மூலம்). அகத்திய முனிவர் (மூலம்), ஐ.பொன்னையா (பதிப்பாசிரியர்). யாழ்ப்பாணம்: யாழ்ப்பாணத்து வைத்திய நூல் வெளியீடு, ஏழாலை, 1வது பதிப்பு, வெகுதானிய வருடம் 1938. (மல்லாகம்: திருஞானசம்பந்தர் அச்சுக்கூடம்).
70 பக்கம், விலை: சதம் 50.

இந்நூலில் கூறப்பட்டிருக்கும் பற்பங்கள், சிந்தூரங்கள், நீறுகள், தைலங்கள் முதலியன எளிதிற் செய்யத்தக்கவையும் குணத்தில் மிகச்சிறந்தவையாயுமிருத்தல் நோக்கி யாழ்ப்பாணத்திலிருந்த சிறந்த வைத்தியர்கள் பலர் இந்நூலைப் பெரிதும் கையாண்டு வந்தனர். அக்காரணத்தால் இதன் கையெழுத்துப் பிரதிகள் நூற்றுக்கணக்காக இங்கு கிடைக்கின்றன. பிரதிகள் சிலவற்றில் செய்யுட்கள் வேறுபட்டிருப்பினும் பொருளில் எவ்வித வேறுபாடுமில்லை. சூத்திரம் 25இல் பூரணம் 205ற் கூறியுள்ள பற்பங்கண் முதலியவற்றின் லோகமாரண முறைகளும் தைலங்கள் சிலவற்றின் மேல் மருந்துகள் சிலவும் கூறப்பட்டிருக்கின்றன. – பதிப்பாசிரியர். (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5420
செட்டியார் இயற்றிய வைத்தியத் தெளிவு (202 செய்யுள்) அனுபந்தத்துடன். இருபாலைச் செட்டியார் (மூலம்), அ.பொன்னையாபிள்ளை (பரிசோதித்தவர்). யாழ்ப்பாணம்: ஐ.பொன்னையாபிள்ளை, சுதேச வைத்தியர், ஏழாலை, 1வது பதிப்பு, பிரமோதூத வருடம் 1930. (யாழ்ப்பாணம்: திருமகள் அச்சியந்திரசாலை, சுன்னாகம்).
52 பக்கம், விலை: 50 சதம்.

இந்நூல் ஏறக்குறைய 500 செய்யுள்களை உடையதென்பர். ஆசிரியரிடம் கிடைக்கப்பெற்ற பகுதியை மட்டும் (202 செய்யுள்கள்) பரிசோதித்து அச்சிட்டு வெளியிட்டுள்ளார். யாழ்ப்பாணத்து ஏழாலை சுதேச வைத்தியர் அருளானந்தசிவம் என்றழைக்கப்படும் அ.பொன்னையாபிள்ளை இந்நூலின் பதிப்பாசிரியர். (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14)

5421
யாழ்ப்பாணம் இருபாலைச் செட்டியார் இயற்றிய வைத்திய விளக்கம் என்னும் அமிர்தசாகரம், பதார்த்த சூடாமணி-மூலம். இருபாலைச் செட்டியார் (மூலம்), அ.பொன்னையாபிள்ளை (பரிசோதித்தவர்). யாழ்ப்பாணம்: யாழ்ப்பாணத்து வைத்திய நூற் பிரசுரம், 1வது பதிப்பு, பிரபவ வருடம் 1927. (யாழ்ப்பாணம்: சைவப்பிரகாச யந்திரசாலை).
144 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை.

வைத்திய விளக்கம் என்னும் அமிர்தசாகரமானது நாடிகளின் தோற்றம், தொழில் ஆகியவற்றையும் சுரவகை, அவற்றின் குணம் சிகிச்சை முதலியவற்றையும், சூரணம் மாத்திரை வகைகளையும் பதார்த்த சூடாமணியானது உடம்போடு இயைந்து பயன்தரும் பொருள்களின் குணங்களையும் நன்கு விளக்குவது. இன்னும் இது நல்லன தீயன என்பவற்றைப் பகுத்துக் காட்டுவது. பஞ்சபூதம், சாதவகை, தாவரப் பொருட்கள், முலைப்பால் வகை, மிருகப் பொருட்கள், பறவை வகை, மீன் வகை, கடைச்சரக்கு வகை, உலோக வகை ஆகிய பிரிவுகளுள் அடங்கப்பெற்றவை. இருபாலைச் செட்டியாரின் மூலநூலை யாழ்ப்பாணத்து ஏழாலை சுதேச வைத்தியர் அருளானந்தசிவம் என்றழைக்கப்படும் அ.பொன்னையாபிள்ளை அவர்கள் பரிசோதித்து வழங்கியுள்ளார். (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

700 கலைகள், நுண்கலைகள்

750 ஓவியக்கலை

5422
ஓவிய அறநெறி. க.இராசரத்தினம். யாழ்ப்பாணம்: சித்திரலேகா, Temple View, நவாலி தெற்கு, மானிப்பாய், 1வது பதிப்பு, ஜுன் 2003. (யாழ்ப்பாணம்: திருச்செல்வி அச்சகம், மானிப்பாய்).
(10), 146 பக்கம், புகைப்படம், விலை: ரூபா 200., அளவு: 19.5x14 சமீ.

காரைநகரைச் சேர்ந்த கலைமாமணி கலாபூஷணம் க.இராசரத்தினம் பிரபல பிரதிமைக் கலைஞர். இக்கலைநெறியின் நுணுக்கங்களை இந்நூலில் எளிய நடையில் தந்துள்ளார். உலக வரலாற்றில் ஓவியக்கலையானது என்னென்ன விதமாக உருவாகி வளர்ந்து விரிந்தது என்ற பூர்வகதைச் சுருக்கத்தை எழுத்துருவில் இந்நூல் தருகின்றது. இக்கலையின் பொதுவான வளர்ச்சியில் பிரதிமைக் கலை பெற்றிருந்த மதிப்பையும், அதன் பொற்காலத்தையும் இந்நூல் நினைவுகூர்கின்றது. ரெம்பிராண்ட், டோமிர், ஹேல்ஸ், கோயா, மெம் லிங், வெலாஸ்குவெஸ், வின்சென்ட் வான் கொஹ் போன்ற சாதனைக் கலைஞர்களையும் அவர்கள் பெற்றிருந்த உள்ளொளி பற்றியும் இந்நூல் நுணுக்கமாகக் கூறுகின்றது. இந்நூலாசிரியரது **பிரதிமைக் கலை** என்ற மற்றொரு நூல் 1999இல் வடக்கு-கிழக்கு மாகாணத்தின் கல்வி-பண்பாட்டலுவல்கள் அமைச்சினால் வெளியிடப்பட்டிருந்தது.

780 இசைக்கலை

5423

அம்பாள் கீர்த்தனைகள். ம.த.ந.வீரமணி ஐயர். சுன்னாகம்: வீர கிருஷ்ணா வெளியீட்டகம், இணுவில் தெற்கு, இணுவில், 1வது பதிப்பு, 2004. (சுன்னாகம்: கணனியியல் கல்லூரி, காங்கேசன்துறை வீதி, இணுவில்).
(12), 200 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20x14.5 சமீ.

அரை நூற்றாண்டுக் காலக் கலைப்பணியில் பிரம்மஸ்ரீ மா.த.ந.வீரமணி ஐயர் அவர்கள், குறிப்பிட்ட சில அம்பாள் ஆலயங்களின் மூலதெய்வமான அம்மன்பேரில் பாடியருளிய கீர்த்தனைகளைத் தொகுத்து அவரது மறைவின் பின்னர் அவரது துணைவியார் திருமதி சுசீலா வீரமணி ஐயரவர்கள் இந்நூலை வெளியிட்டுள்ளார். இணுவில் ஸ்ரீ பரமானந்தவல்லி அம்பாள் கீர்த்தனைகள், சிலாபம் முன்னீஸ்வர ஸ்வாமி கீர்த்தனைகள், யாழ்.நல்லூர் வீரமாகாளி அம்பாள் கீர்த்தனைகள், இறக்குவானை ஸ்ரீ முத்துமாரி அம்பாள் கீர்த்தனைகள், மாவிட்டபுரம் வீணியவரை ஸ்ரீ ராஜராஜேஸ்வரி அம்பாள் கீர்த்தனைகள், கனடா ரொரன்ரோ ஸ்ரீ நாகபூஷணக் கருமாரி அம்பாள் கீர்த்தனைகள், வற்றாப்பளை ஸ்ரீ கண்ணகி அம்பாள் கீர்த்தனைகள், நாவலடி நல்லதண்ணீர் கிணற்றடி ஸ்ரீ பத்ரகாளி அம்பாள் கீர்த்தனைகள், ஸ்ரீபர்வதவர்த்தினி அம்பாள் சமேத ஸ்ரீ ராமலிங்கேஸ்வரர் கீர்த்தனைகள், டென்மார்க் பிரண்டா அபிராமி அம்பாள் கீர்த்தனைகள், தாவடியூர் ஸ்ரீபத்ரகாளி அம்மாள் கீர்த்தனைகள், வழக்கம்பரை ஸ்ரீ முத்துமாரி அம்பாள் கீர்த்தனைகள், நாவலப்பிட்டி ஸ்ரீமுத்துமாரி அம்பாள் கீர்த்தனைகள், திருக்கோணமலை ஸ்ரீபத்ரகாளி அம்பாள் கீர்த்தனைகள், சங்கரத்தை பிட்டியம்பதி ஸ்ரீ பத்ரகாளி அம்பாள் கீர்த்தனைகள், ஊரெழு கிழானைப்பதி ஸ்ரீ மனோன்மணி அம்பாள் கீர்த்தனைகள், நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் கீர்த்தனைகள், இணுவில் கண்ணகா பரமேஸ்வரி அம்பாள் கீர்த்தனைகள், இணுவில் சிவகாமி அம்பாள் கீர்த்தனைகள், சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் கீர்த்தனைகள், ஈலிங் ஸ்ரீ கனகதுர்க்பை அம்பாள் கீர்த்தனைகள் ஆகிய 21 அம்மன் கீர்த்தனைகள் இந்நூலில் தொகுக்கப்பெற்றுள்ளன.

5424

இசையால் இளகா இதயமெது. சிவனடியான் ஸ்ரீபதி. வெளியீட்டு விபரம் தரப்படவில்லை, 1வது பதிப்பு, 2008. (அச்சக விபரம் தரப்படவில்லை).
144 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14 சமீ.

135 தமிழ்த் திரைப்படப் பாடல்களின் தொகுப்பு. பாடல்களின் முதல் அடி அகரவரிசை ஒழுங்கில் பாடல்கள் பதிவுசெய்யப்பட்டுள்ளன. பாடகர் பெயர், பாடலாசிரியர் பெயர், திரைப்படத்தின் பெயர் போன்ற அடிப்படைத் தகவல்கள் எதுவுமற்று பாடல்கள் மட்டும் இந்நூலில் பதிவுசெய்யப்பட்டுள்ளன. நூலுக்கு முக்கியமான தலைப்புப் பக்கம் இல்லாததால் போதிய நூலியல் தகவல்களும் பெற்றுக்கொள்ள முடியவில்லை.

5425

இசையும் சமூகமும். சபா.ஜெயராஜா. கொழும்பு 11: சேமமடு பொத்தகசாலை, U.G.50, Peoples Park, 1வது பதிப்பு, மார்கழி 2008. (கொழும்பு 11: சேமமடு பதிப்பகம்).
120 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 21.5x15 சமீ., ISBN: 978-955-1857-28-8.

தொல்சமூகங்கள் உணவுப்பொருள் சேமிக்கவும் வேட்டையாடவுமான கருவிக்கு அடுத்தபடியாக இசைக் கருவிகளைக் கண்டுபிடித்திருக்கின்றன. மனிதர்களை ஒருங்கிணைக்கும் முறைமையில் இசைக்கருவிகள் முக்கிய பங்கு வகித்துவந்துள்ளன. தனிமனித உணர்வுகளையும் மீறிய ஒரு சமூகப் படிமமாகவே இசை

விளங்குகின்றது. இசையை பயன்பாட்டு இசை மற்றும் அழகியல் இசை என இருபெரும் பிரிவுகளாக வகுக்கின்றனர். இதுவரையில் இசையியல் குறித்த ஆய்வு *இசை இசைக்காக* என்ற ஒற்றைப் பரிமாணத்திலேயே முன்னெடுக்கப்பட்டு வந்துள்ளது. இசையும் சமூகமும் என்ற இந்நூலில் இசையின் சமூகப் பரிமாணம், அரசியல் பரிமாணம், உளவியல் பரிமாணம், கல்விப் பரிமாணம் போன்ற பன்முகப் பரிமாணத் தளங்களில் ஆய்வு செய்யப்பட்டுள்ளன. இவ்வாய்வு தமிழ் போன்ற தொல் சமூகங்களின் பண்பாட்டு வேர்களை, இசையின் அதிகார முகங்களைத் தேடுவதற்கான உந்துதலை வழங்குகின்றது. மரபு ரீதியான ஆய்வுச் சட்டக வழியில் இருந்து விடுபட்டு மாற்று ஆய்வுக்கான களங்களை இந்நூல் நமக்கு அடையாளம் காட்டுகின்றது.

5426

கர்நாடக சங்கீதம்: பகுதி 1. கா.பரமேஸ்வரன். சாவகச்சேரி: க.சிவசங்கரநாதன், சிவம் மெடிக்கல் பொத்தகசாலை, கச்சாய் வீதி, 1வது பதிப்பு, செப்டெம்பர் 1999. (யாழ்ப்பாணம்: கங்கை கொம்பியூட்டர் பிரின்ட்ஸ், பிரவுண் வீதிக்கு அருகாமையில், நாவலர் வீதி).
(5), 75 பக்கம், விலை: ரூபா 90., அளவு: 20.5x14 சமீ.

தரம் 9, 10, 11 வரையுள்ள மாணவர்கட்குரிய வினாக்களும் விடைகளும் கொண்ட தொகுப்பு. இந்நூலாசிரியர் சங்கீத பூஷணம் கா.பரமேஸ்வரன், விஷேட பயிற்சி பெற்ற சங்கீத ஆசிரியர். யாழ்ப்பாணம், கைதடி நாவற்குழி அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் ஆசிரியராகப் பணியாற்றுகின்றார்.

5427

கர்னாடக சங்கீதம்: தரம் 10: வழிகாட்டற் குறிப்புகள். கிருஷ்ணவேணி மயில்வாகனம். யாழ்ப்பாணம்: கீதவாஹினி இசைக் கல்லூரி, கொழும்புத்துறை, 4வது பதிப்பு, 2003, 1வது பதிப்பு, 1998. (யாழ்ப்பாணம்: உயர்கல்விச் சேவை பதிப்பகம்).
(2), x, 124 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x15 சமீ.

மேல் வகுப்புகளில் இசை கற்கும் மாணவர்களுக்கு மட்டுமின்றி, வட இலங்கைச் சங்கீத சபையினர் நடத்தும் பரீட்சைகளுக்குத் தோற்றும் மாணவர் அனைவருக்கும், கற்பிக்கும் ஆசிரியர்களுக்கும் இந்நூல் சிறந்த வழிகாட்டியாகின்றது. 2001 பாடத் திட்டத்திற்கு அமைவாக எழுதப்பட்டுள்ள வழிகாட்டற் குறிப்புகள் இவை.

5428

கர்னாடக சங்கீதம்: வழிகாட்டற் குறிப்புகள். கிருஷ்ணவேணி மயில்வாகனம். யாழ்ப்பாணம்: கீதவாஹினி இசைக் கல்லூரி, கொழும்புத்துறை, 3வது பதிப்பு, நவம்பர் 2001, 1வது பதிப்பு, 1999, 2வது பதிப்பு, ஏப்ரல் 2001. (யாழ்ப்பாணம்: உயர்கல்விச் சேவை பதிப்பகம்).
x, 164 பக்கம், விலை: ரூபா 180., அளவு: 22x14.5 சமீ.

மேல் வகுப்புகளில் கர்னாடக சங்கீதத்தை ஒரு பாடமாகக் கற்கும் மாணவர்களுக்கு மட்டுமின்றி, வட இலங்கைச் சங்கீத சபையினர் நடத்தும் பரீட்சைகளுக்குத் தோற்றும் மாணவர் அனைவருக்கும், கற்பிக்கும் ஆசிரியர்களுக்கும் இந்நூல் சிறந்த வழிகாட்டியாகின்றது. செய்முறை, அறிமுறை விடயங்களுடன் கடந்த 6 வருடகால க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை வினாக்களும் விடைகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன. 2001 பாடத் திட்டத்திற்கு அமைவாக எழுதப்பட்டுள்ள வழிகாட்டற் குறிப்புகள் இவை.

5429

கிறீஸ்தவக் கீர்த்தனைகள். ம.த.ந.வீரமணி ஐயர். சுன்னாகம்: வீர கிருஷ்ணா வெளியீட்டகம், இணுவில் தெற்கு, இணுவில், 1வது பதிப்பு, 2004. (கோண்டாவில்: சிவரஞ்சனம் ஒப்செட் பிரிண்டர்ஸ், இல. 183, பலாலி வீதி).
viii, 36 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 17x12 சமீ.

பிரம்மஸ்ரீ மா.த.ந.வீரமணி ஐயர், ஈழத்து மண்ணின் இசை வரலாற்றில் முக்கியமானவர். அமரர் வீரமணி ஐயர் அவர்கள் யாழ்ப்பாண மாவட்டத்தில், இணுவிலில் 15.10.1931இல் பிறந்தவர். ஆரம்பக் கல்வியை இணுவில் சைவ மகாஜனா வித்தியாசாலையிலும், உயர் கல்வியை மானிப்பாய் இந்துக் கல்லூரியிலும் பயின்றவர். இலங்கை வானொலி நாட்டிய நாடக இயக்குநராகவும், கோப்பாய், பலாலி, நல்லூர், கொழும்புத்துறை, மட்டக்களப்பு ஆகிய ஆசிரிய பயிற்சிக் கல்லூரிகளில் பரத நாட்டிய

போதனாசிரியராகவும் கல்வித்திணைக்களம், வட இலங்கை சங்கீத சபை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், கொழும்பு பல்கலைக்கழகம் ஆகியவற்றின் பரத நாட்டிய பரீட்சகராகவும் பணியாற்றியவர். அரை நூற்றாண்டுக் காலக் கலைப்பணியில் அவர் வழங்கிய கிறீஸ்தவக் கீர்த்தனைகளைத் தொகுத்து அவரது மறைவின் பின்னர் அவரது துணைவியார் திருமதி சுசீலா வீரமணி ஐயரவர்கள் இந்நூலை வெளியிட்டுள்ளார். 32 கீர்த்தனைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன.

5430

தமிழிசையின் அடிப்படைகள்: புலம்பெயர்ந்த தமிழ் மாணவர்களுக்கான கைநூல். வாசுகி ஜெயபாலன். நோர்வே: ஒஸ்லோ நுண்கலைக் கழகம், Rodtvetveien-75, 0955 Oslo, 1வது பதிப்பு, ஏப்ரல் 2000. (நோர்வே: ஆர்ட்டிஸ்டிக், ஒஸ்லோ).
68 பக்கம், விளக்கப் படங்கள், விலை: 100 குரோணர், அளவு: 20.5x14.5 சமீ.

இந்நூல் புலம்பெயர்ந்த தமிழ் மாணவர்களுக்கு சங்கீதம் கற்பிப்பதற்கான அடிப்படை வழிகாட்டியாக உருவாக்கப்பட்டுள்ள நூல். நோர்வேயில் இசை ஆசிரியையாகப் பணியாற்றும் இந்நூலாசிரியர் வடஇலங்கை சங்கீத சபை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நுண்கலைப்பீடம், தமிழ்நாடு அரசினர் இசைக் கல்லூரி ஆகியவற்றில் கற்றுத் தேர்ந்தவர். இசைத்துறையின் எண்ணக்கரு விளக்கம், சங்கீதம் எழுதும் முறையில் உபயோகிக்கப்படும் குறிகள், சப்தஸ்வரங்களின் விபரம், இராகங்கள், தாளத்தில் வரும் ஐந்து ஜாதிகளின் விபரங்கள், 12 ஸ்வரஸ்தானங்களும் அவற்றின் 16 பெயர்களும், லகுவின் ஐந்து ஜதிபேதங்களும் 35 தாளங்களும் உண்டாகும் விதம், இராகங்களின் இலட்சணங்கள் ஆகிய அம்சங்களை விரிவாக விளக்கும் இந்நூலின் இறுதியில் இசைப்பூர்வாசிரியர்கள் வரலாறு என்ற பகுதியில் தியாகராஜ சுவாமிகள், கோபாலகிருஷ்ண பாரதியார், திருஞானசம்பந்தர் ஆகிய மூவர் பற்றிய சுருக்கமான விபரங்கள் இடம்பெற்றுள்ளன.

5431

தமிழீழ எழுச்சிப் பாடல்கள்: பாகம் 1. வெளியீட்டுப் பிரிவு. தமிழீழம்: வெளியீட்டுப் பிரிவு, தமிழீழ விடுதலைப் புலிகள், 1வது பதிப்பு, ஆனி 1991. (அச்சக விபரம் தரப்படவில்லை).
(6), 110 பக்கம், விலை: ரூபா 40., அளவு: 20x13.5 சமீ.

ஈழத்திலும் தமிழகத்திலும் குரல்வளம் மிக்க இளம் பாடகர்களுடன் புகழ்பூத்த பாடகர்களும் இணைந்து பாடிப் பிரபல்யமான தமிழீழ எழுச்சிப்பாடல்களின் தொகுப்பு. பௌசியன், தேனிசை செல்லப்பா, சியாமளா, சொர்ணலதா, சாந்தன், மலேசியா வாசுதேவன், மிதிலா, ரி.எல். மகாராஜன், வாணி ஜெயராம், குணமலர், தினேஷ், எம்.எஸ்.ராஜேஸ்வரி, ஜெயச்சந்திரன், பீ.சுசீலா, டி.எம்.சௌந்தரராஜன், பொன் சுந்தரலிங்கம், நாகூர் பாபு, மனோ, தீபன் சக்கரவர்த்தி, ராகவேந்தர் ஆகியோரின் குரல்களில் ஒலித்துப் பிரபல்யமான இப்பாடல்களை காசி ஆனந்தன், வ.மு.சேதுராமன், புலமைப்பித்தன், புதுவை இரத்தினதுரை, இன்குலாப், காளிமுத்து, மெய்யப்பன், செ.இராஜநாயகன், பங்காரு, இரும்பொறை, ரவி, கந்தராசா ஆகியோர் இயற்ற, தேனிசை செல்லப்பா, தேவேந்திரன், எல்.வைத்தியநாதன், கண்ணன் ஆகியோர் இசையமைத்துள்ளனர்.

5432

தமிழீழ எழுச்சிப் பாடல்கள்: பாகம் 4. வெளியீட்டுப் பிரிவு. தமிழீழம்: வெளியீட்டுப் பிரிவு, தமிழீழ விடுதலைப் புலிகள், 1வது பதிப்பு, ஆடி 1993. (அச்சக விபரம் தரப்படவில்லை).
(4), 64 பக்கம், விலை: ரூபா 30., அளவு: 20x13.5 சமீ.

ஒலிநாடாக்களில் வெளிவந்த தளபதி கிட்டு நினைவுப் பாடல்கள், செஞ்சோலைப் பாடல்கள், கூவு குயிலே பாடல்கள், விழித்தெழுவோம் பாடல்கள், விடியலைத் தேடும் பறவைகள் பாடல்கள், கரும்புலிகள் பாடல்கள் ஆகிய தலைப்புகளிலான தொகுப்புகளின் எழுத்து வடிவம். தன் தேசத்தின் மீதான பற்றுணர்வை, எதிரிக்கெதிரான போர்க்குணத்தை, இப்பாடல்கள் ஊட்டிவிடுகின்றன. போர் ஏற்படுத்திவரும் தாக்கங்கள் அனைத்தையும் எதிர்கொண்டபடி எழுச்சிகொள்ளவைக்கும் கலை வடிவமாக இந்தப் பாடல்கள் ஒலிக்கின்றன.

5433

தமிழீழ எழுச்சிப் பாடல்கள்: பாகம் 5. வெளியீட்டுப் பிரிவு. தமிழீழம்: வெளியீட்டுப் பிரிவு, தமிழீழ விடுதலைப் புலிகள், 1வது பதிப்பு, ஆடி 1995. (அச்சக விபரம் தரப்படவில்லை).
(4), 44 பக்கம், விலை: ரூபா 25., அளவு: 20.5x14 சமீ.

பூநகரிப் பாடல்கள், விடியலின் பாடல்கள், கடலிலே காவியம் படைப்போம், விடுதலைப் போர் முரசு ஆகிய நான்கு தலைப்புக்களில் அமைந்த தமிழீழ எழுச்சிப்பாடல்களின் தொகுப்பு.

5434

திருக்குறள் கீர்த்தனைகள். ம.த.ந.வீரமணி ஐயர். சுன்னாகம்: வீர கிருஷ்ணா வெளியீட்டகம், இணுவில் தெற்கு, இணுவில், 1வது பதிப்பு, 2005. (கோண்டாவில்: சிவரஞ்சனம் ஓப்செட் பிரிண்டர்ஸ், இல. 183, பலாலி வீதி).
xxx, 140 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 20x14.5 சமீ.

திருக்குறளின் கருப்பொருளை மிக அழகாக கீர்த்தனைகளாக்கித் தந்திருக்கிறார். இக்கீர்த்தனைகள் தனது அரை நூற்றாண்டுக் காலக் கலைப்பணியின் ஆரம்பகாலங்களில் பிரம்மஸ்ரீ மா.த.ந.வீரமணி ஐயர் அவர்கள், இயற்றியதாகக் குறிப்பிடுகின்றார். ஆன்மீகம், பக்தி, தேசியம், சமுதாயம், தமிழ் எனப் பல முகங்களைக் கொண்டதாக இவரது திருக்குறள் கீர்த்தனைகள் அமைகின்றன. அமரர் வீரமணி ஐயர் அவர்கள் யாழ்ப்பாண மாவட்டத்தில், இணுவிலில் 15.10.1931இல் பிறந்தவர். ஆரம்பக் கல்வியை இணுவில் சைவ மகாஜனா வித்தியாசாலையிலும், உயர் கல்வியை மானிப்பாய் இந்துக் கல்லூரியிலும் பயின்றவர். இலங்கை வானொலி நாட்டிய நாடக இயக்குநராகவும், கோப்பாய், பலாலி, நல்லூர், கொழும்புத்துறை, மட்டக்களப்பு ஆகிய ஆசிரிய பயிற்சிக் கல்லூரிகளில் பரத நாட்டிய போதனாசிரியராகவும் கல்வித்திணைக்களம். வட இலங்கை சங்கீத சபை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், கொழும்பு பல்கலைக்கழகம் ஆகியவற்றின் பரத நாட்டிய பரீட்சகராகவும் பணியாற்றியவர்.

5435

திருச்செந்தூர் முருகன் கீர்த்தனைகள். ம.த.ந.வீரமணி ஐயர். கனடா: துரையப்பா நடராசா, மயில்வாகனம் இராஜகுலசூரியர், 1வது பதிப்பு, பெப்ரவரி 2002. (கனடா: குவாலிட்டி பிரின்டர்ஸ், ஒன்ராரியோ).
(10), 57 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22x13.5 சமீ.

ம.த.ந.வீரமணி ஐயர் அவர்கள், திருச்செந்தூர் முருகன் கீர்த்தனைகள் என்னும் பெயரில் 108 கீர்த்தனைகளைக் கொண்ட இந்நூலை 1972இல் இயற்றியிருந்தார். இணுவில் ஆறு.திருமுருகனின் வேண்டுகோளின்பேரில் கனடாவில் புலம்பெயர்ந்து வாழும் இணுவில் கிழக்கைச் சேர்ந்த து.நடராசா, ம.இராஜகுலசூரியர் ஆகியோர் இணைந்து இந்நூலைப் பதிப்பித்துள்ளனர். அமரர் ம.த.ந.வீரமணி ஐயர் அவர்கள் யாழ்ப்பாண மாவட்டத்தில், இணுவிலில் 15.10.1931இல் பிறந்தவர். ஆரம்பக் கல்வியை இணுவில் சைவ மகாஜனா வித்தியாசாலையிலும், உயர் கல்வியை மானிப்பாய் இந்துக் கல்லூரியிலும் பயின்றவர். இலங்கை வானொலி நாட்டிய நாடக இயக்குநராகவும், கோப்பாய், பலாலி, நல்லூர், கொழும்புத்துறை, மட்டக்களப்பு ஆகிய ஆசிரிய பயிற்சிக் கல்லூரிகளில் பரத நாட்டிய போதனாசிரியராகவும் கல்வித்திணைக்களம். வட இலங்கை சங்கீத சபை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், கொழும்பு பல்கலைக்கழகம் ஆகியவற்றின் பரத நாட்டிய பரீட்சகராகவும் பணியாற்றியவர்.

5436

தீராத மயக்கத்திலே: சந்தப் பாடல்கள். கார்மேகம் நந்தா. கோயம்புத்தூர் 641001: விஜயா பதிப்பகம், 20 ராஜ வீதி, 1வது பதிப்பு, ஜனவரி 2009. (சென்னை 5: ஜோதி எண்டர்பிரைசஸ்).
212 பக்கம், விலை: இந்திய ரூபா 200., அளவு: 22.5x14.5 சமீ.

மூன்று தசாப்தங்களுக்கும் மேலாக இலங்கை வானொலியில் ஆயிரத்துக்கும் அதிகமான மெல்லிசைப்பாடல்களை எழுதி வானலையில் வழங்கிய கார்மேகம் நந்தாவின் 170 தேர்ந்த பாடல்களின் தொகுப்பாக இந்நூல் வெளிவந்துள்ளது. இவை 1977-2008 காலப்பகுதியில் எழுதப்பட்டவை. கவிப்பதியம், பெற்ற தாயும் பிறந்த மண்ணும் பேசும் மொழியும், அன்பின் வழி, பேரின்பம், காதலின் உணர்வுகள், இயற்கையின் தோற்றங்கள், வாழ்வும் கலையும் ஆகிய பிரிவுகளுக்குள் இப்பாடல்கள் வகைபிரித்துத் தரப்பட்டுள்ளன. பின்னிணைப்பில் இப்பாடல்கள் ஒவ்வொன்றும் இயற்றப்பட்ட காலம், இசையமைத்தவர், மெட்டமைத்தவர், பின்னணி பாடகர் ஆகியோரின் விபரங்களும் பட்டியலிடப்பட்டுள்ளன.

5437

பக்திரசக் கீர்த்தனைகள். கிருஷ்ணவேணி மயில்வாகனம். யாழ்ப்பாணம்: கீதவாஹினி இசைக்கல்லூரி, கொழும்புத்துறை, 1வது பதிப்பு, 2002. (யாழ்ப்பாணம்: குரு அச்சகம், திருநெல்வேலி).
(8), 51 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x17 சமீ.

யாழ்ப்பாணக் கல்வி வலயத்தில் இசைத்துறை தொடர்பான சேவைக்கால ஆலோசகராக விளங்கும் செல்வி கிருஷ்ணவேணி மயில்வாகனம் இசைத்துறை தொடர்பாக முன்னர் இரு நூல்களை வெளியிட்டவர். தனது இசைத்துறைப் போதனையின் 25ஆவது ஆண்டு நிறைவின் நினைவாக இந்நூலை உருவாக்கியிருக்கிறார். மாணவர்களுக்கேற்ற 25 கீர்த்தனைகளைத் தாங்கிவருகின்ற இந்நூல் இசைத்துறையில் பயிலும் மாணவர்களுக்கு ஒரு வழிகாட்டியாக விளங்குகின்றது.

5438

போர்ப்பறைப் பாடல்கள். முல்லைச் செல்வன். தமிழீழம்: கொள்கை முன்னெடுப்புப் பிரிவு, தமிழீழ விடுதலைப் புலிகள், 1வது பதிப்பு, ஆண்டு விபரம் தரப்படவில்லை. (புதுக்குடியிருப்பு: சந்திரன் பதிப்பகம்). 10 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14 சமீ.

முல்லைச் செல்வன் எழுதிய தமிழீழ எழுச்சிப்பாடல்களின் தொகுப்பு. தமிழீழ இசைக்குழுவின் இசையமைப்பில் வெளியாகிப் பிரபல்யமான 10 பாடல்கள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன.

5439

முருகன் கீர்த்தனைகள். ம.த.ந.வீரமணி ஐயர். சுன்னாகம்: வீர கிருஷ்ணா வெளியீட்டகம், இணுவில் தெற்கு, இணுவில், 1வது பதிப்பு, 2004. (சுன்னாகம்: Bobby Computer Graphics, Inuvil East). (6), 76 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20x15 சமீ.

அரை நூற்றாண்டுக் காலக் கலைப்பணியில் பிரம்மஸ்ரீ மா.த.ந.வீரமணி ஐயர் அவர்கள், குறிப்பிட்ட சில முருகன் ஆலயங்களின் மூலதெய்வமான முருகன்பேரில் பாடியருளிய கீர்த்தனைகளைத் தொகுத்து அவரது மறைவின் பின்னர் அவரது துணைவியார் திருமதி சுசீலா வீரமணி ஐயரவர்கள் இந்நூலை வெளியிட்டுள்ளார். காரைநகர் களபூமி திக்கரை முருகன் கீர்த்தனைகள், பறாளாய் முருகன் கீர்த்தனைகள், நெல்லியடி தடங்கன் புளியடி ஸ்ரீ முருகன் கீர்த்தனைகள் உள்ளிட்ட பல்வேறு முருகன் கீர்த்தனைகள் இந்நூலில் தொகுக்கப்பெற்றுள்ளன.

790 நிகழ்கலைகளும் பொழுதுபோக்குக் கலைகளும்

791 நாட்டியக் கலை

5440

பரத நாட்டியம் கற்பித்தல் முறைகள். லீலாம்பிகை செல்வராஜா. கொழும்பு 3: இல.F34, அரச தொடர்மாடி, புனித அந்தோனியார் மாவத்தை, கொள்ளுப்பிட்டி, 1வது பதிப்பு, ஜுன் 2002. (கொழும்பு 13: யு.கே.பிரிண்டர்ஸ், 98A, விவேகானந்தா மேடு).
vii, 149 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 22x14 சமீ., ISBN: 955-97350-1-2.

பயிற்றப்பட்ட நடன ஆசிரியரான லீலாம்பிகை, சென்னை கலாஷேத்திராவின் பரத நாட்டிய டிப்ளோமா பட்டத்தினைப் பெற்றவர். நடன ஆசிரியையாக நிறைந்த அனுபவம் பெற்றவர். இந்நூலில், குரு இலட்சணம், நடன ஆசிரியரின் கடமைகளும் பொறுப்பும் பணிகளும், ஆசிரியரும் உளவியல் அறிவும், அழகியல் கல்வியில் நடனத்தின் பங்கு, மனித ஆளுமை வளர்ச்சியில் பரத நாட்டியம், கற்றல் கொள்கைகளும் நடனம் கற்பித்தல் முறைகளும், பாலர் அபிநயப் பாடல் போதிக்கும் முறைகள், மதிப்பீடு, பொது மதிப்பீடு, தொடர் மதிப்பீடு, கணிப்பீடு, செய்முறை மதிப்பீடு ஆகிய ஒன்பது இயல்களில் பரத நாட்டியத்தைக் கற்பிக்கும் வழிமுறைகள் எடுத்து விளக்கப்பட்டுள்ளன.

5441

மொழிக் காலனித்துவமும் பரத நாட்டியமும். சபா.ஜெயராஜா. கொழும்பு 11: சேமமடு பொத்தகசாலை, U.G.50, Peoples Park, 1வது பதிப்பு, ஆவணி 2008. (கொழும்பு 11: சேமமடு பதிப்பகம்). 112 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-955-1857-20-2.

ஆடலின் ஆற்றுகைப் பரிமாணங்கள் உன்னத வளர்ச்சிடைந்த அளவுக்கு அதன் ஆய்வுப் பரப்புகளின் வளர்ச்சி எழுச்சிகொள்ளவில்லை. இந்நிலையை மாற்றும் நோக்குடன், ஆய்வறிவுநிலைப்பட்ட காரணங்களை வரலாற்றுரீதியிலும் புலமைத்துவரீதியிலும் முன்வைக்கும் நுண்ணாய்வுக்கூறுகளை, சிந்தனை மரபுகளை ஆடலியல் முறைகளை இந்நூலில் நமக்கு ஆசிரியர் அடையாளம் காட்டுகின்றார். தமிழகத்தில்

ஏற்பட்ட சமூக, பொருளாதார, அரசியல் பண்பாட்டு மாற்றங்கள் மற்றும் கல்வியியல் நிகழ்ச்சிகள் பரதநாட்டியத்தில் சமஸ்கிருதத்தின் செல்வாக்குக்கு வழியமைத்திருந்தது. ஐரோப்பிய காலனித்துவத்திற்கு முற்பட்ட இந்தியப் பண்பாட்டில், குறிப்பாக மேல்வர்க்கத்தினரின் மொழியாக சம்ஸ்கிருதம் இருந்துள்ளது. வேதமரபுகள், காவியங்கள், இலக்கியங்கள், கலைகளின் மொழியாக சமஸ்கிருதம் கோலோச்சியது. விஜயநகர நாயக்கர் மன்னர்களின் ஆட்சிக்காலத்தில் தமிழகத்தில் சமஸ்கிருத ஊடுருவல் பெருமளவில் நிகழ்ந்துள்ளது. இந்திய சுதந்திரப் போராட்டம் இந்திய சமூகத்தின் உயர்நிலையில் இருந்த சுதேசிகளினால் முன்னெடுக்கப்பட்ட போது, சுதேசக் கலைகளின் மீட்டெடுப்பும் இடம்பெற்றது. இவ்வேளையில் பரத நடனமும் மீட்புக்குள்ளானது. மேல்நிலைமக்கள் புலக்காட்சிகளுக்கு ஏற்றவாறு பரதநடனத்தை கட்டுமானம் செய்தனர். இவ்வியக்கத்தை ஈ.கிருஷ்ண ஐயர், ருக்மணி போன்றோர் தமிழகப் பின்புலத்திலே முன்னெடுத்தனர். இவர்கள் உயர் சமூகக் குழாமிலிருந்து வந்தவர்கள். அதனால் அவ்வகுப்பிற்குரிய புலக்காட்சி பரதநாட்டியத்தில் செல்வாக்குச் செலுத்தியது. இதனால் சமஸ்கிருதமும் அக்கலையில் உள்வாங்கப்பட்டது. ஆக பரதநாட்டியம் மீது மொழிக் காலனித்துவம் எவ்வாறு ஆதிக்கம் செலுத்தத்தொடங்கியது என்பதை இந்நூல் துல்லியமாக வெளிப்படுத்துகின்றது.

5442

யாழ்ப்பாணத்து நாட்டிய மரபுகள். வலன்ரீனா இளங்கோவன். ஜேர்மனி: வெற்றிமணி வெளியீடு, Brinker Hohe 13, 58507, Ludenscheid, 1வது பதிப்பு, ஆவணி 2008. (Germany: Seltmann GmbH).
126 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x15 சமீ.

திருமதி வலன்ரீனா இளங்கோவன் கலைமாணி சிறப்புப்பட்டம் பெற்றவர். நுண்கலை, நாடகமும் அரங்கியலும், இந்துநாகரிகம் போன்ற கற்கைநெறிகளை மேற்கொண்டமையால் கலை பற்றிய தேடல் உணர்வு மிக்கவர். கிராமியக் கலைகளில் அதீத ஈடுபாடு கொண்டவர், ஆடவல்லான் என அனைவரும் போற்றிவணங்கும் சிவனுக்கு ஆடல்மடை செய்த பெண்களின் பண்பாட்டு நிலையை உலகறிய வைக்கும் உயர்ந்த நோக்கை இந்நூல் தன்னகத்தே கொண்டது. சின்னமேளம் என்று பெயர்பெற்ற இந்நாட்டிய மரபின் வரலாறு பற்றிய அய்வுக் கட்டுரைகள், தகவல்கள் எழுத்தில் போதியளவு இல்லாத நிலையில் இந்நூல், பல கலைஞர்களின் நேரடி வாக்குமூலங்களையும், இன்று அழிந்துசெல்லும் பாரம்பரியக் கலைவடிவமொன்றின் எச்சமாக இருக்கும் சின்னமேளக் கலைலஞர்களின் நினைவினை மீட்டெடுக்கும் நேர்காணல்களையும் அடிப்படையாகக்கொண்டு இவ்வாய்வு உருவாக்கப்பட்டுள்ளது.

792 அரங்கியல், நாடகக்கலை

5443

ஈழத்தில் நாடகமும் நானும். க.சொர்ணலிங்கம். இலண்டன் N4 1LU: ஈழவர் திரைக்கலை மன்றம், 39, Hermitage Road, 2வது பதிப்பு, 2008, 1வது பதிப்பு, 1968. (சென்னை 600091: பொன்னி).
XLVIII, 216 பக்கம், 24 தகடுகள், விலை: இந்திய ரூபா 220., அளவு: 21.5x14 சமீ.

ஈழத்து நாடகத்துறையின் தந்தை எனக் கருதப்படும் கலையரசு க.சொர்ணலிங்கம் (30.3.1889-26-7-1982) அவர்கள் "ஈழத்தில் நாடகமும் நானும்" என்ற தலைப்பில் கொழும்பு தினகரன் பத்திரிகையில் தொடராக எழுதிய கலைத்துறை வாழ்க்கை வரலாற்றுப்பதிவு நூலுருவில் வெளிவந்துள்ளது. முன்னதாக இலங்கை இளம் நடிகர் சங்கத்தினால் இது 1968இல் முதற்பதிப்பாக வெளியிடப்பட்டது. இது ஈழத்தின் நவீன மேடை நாடக வரலாற்றினை எழுத்துருவில் வழங்கிய முதல் நூலாகக் கருதப்படுகின்றது. 40 ஆண்டுகள் கழிந்த நிலையில் வெளிவரும் அந்நூலின் மீள்பதிப்பு இதுவாகும். நடிகர்கள், நாடகங்கள், நாடக ஆசிரியர்கள், மக்களின் வரவேற்பு மற்றும் ரசனை முறைகள் குறித்தெல்லாம் நூல் முழுவதும் பேசப்பட்டுள்ளன.

5444

நாடக அரங்கியலுக்கான ஆற்றுப்படை. இரா.ஜெகநாதன். மட்டக்களப்பு: அகரம் வெளியீடு, 82, பார் வீதி, 1வது பதிப்பு, 2005. (மட்டக்களப்பு: ஆதவன் அச்சகம், அரசடி).
x, 105 பக்கம், விலை: ரூபா 190., அளவு: 20x14.5 சமீ.

நாடகமும் அரங்கியலும் என்னும் பாடப்பரப்பு இன்று பாடசாலைகளில் இரண்டாம் நிலைக் கல்விமுறையில் ஒரு அங்கமாக மாற்றப்பட்டுள்ளது. களுதாவளையைச் சேர்ந்த இராமலிங்கம் ஜெகநாதனுடைய முயற்சியில் க.பொ.த. உயர்தர மாணவர்களினதும் ஆசிரியர்களினதும் நன்மை கருதி இந்நூல் ஆக்கப்பட்டுள்ளது. நாடக அரங்கு பற்றிய அறிமுகமும், மேற்கத்தைய அரங்க மரபுமாக இது வெளிவந்துள்ளது. இதில் நாடகமும் அரங்கியலும் என்னும் கற்கை நெறியின் பாடப்பரப்பு, கலை பற்றிய

எண்ணக்கரு, நாடக அரங்கு பற்றிய எண்ணக்கரு போன்ற நாடக அரங்கு சார்ந்த பல்வகைப்பட்ட விடயங்கள் தெளிவுபடுத்தப்படுவதுடன் கிரேக்ககால அரங்க முறைமை, மத்தியகால அரங்க முறைமை, எலிசபெத்தியன் கால அரங்க முறைமை, மேற்கத்தைய, நவீன கால அரங்க முறைமை என்பனவும் தெளிவாக விளக்கப்பட்டுள்ளன.

5445

நாடக வழக்கு: அரங்கக் கட்டுரைகளும் நேர்காணல்களும். குழந்தை ம.சண்முகலிங்கம் (மூலம்), கந்தையா ஸ்ரீகணேசன் (தொகுப்பாசிரியர்). இணுவில்: கலை இலக்கிய வட்டம், 1வது பதிப்பு, டிசம்பர் 2003. (வவுனியா: மல்ரி விஷன்).
xiii, 334 பக்கம், விலை: ரூபா 350., அளவு: 22x14 சமீ., ISBN: 955-97524-2-1.

அரங்கியல் கலைஞர் ம.சண்முகலிங்கம் எழுதிய 16 கட்டுரைகளினதும் தேன்பொழுது, ஆதவன், லியோ நியுஸ் லெட்டர், வெளிச்சம், சரிநிகர், ஆற்றுகை, கட்டியம், தினக்குரல் ஆகிய இதழ்களுக்கு வழங்கிய எட்டு நேர்காணல்களும் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. குழந்தை ம.சண்முகலிங்கத்தின் நாடக உலகு, **மண் சுமந்த மேனியர்** ஊடாக 1985இல் உலகமெங்கணும் விரிந்த ஒன்றாக மாறியது. எந்தையும் தாயும், அன்னை இட்ட தீ, யார்க்கெடுத்துரைப்பேன், வேள்வித் தீ, நீ செய்த நாடகமே, நரகொடு சுவர்க்கம் போன்ற நாடகங்களினூடாக உலகப் பொதுக் கருத்துக்களான போர், இடப்பெயர்வு, முதியோர் கைவிடப்படல், அகதி வாழ்வு, போர் வழங்கிய உளவியல் நெருக்கடிகள், படையினரின் பாலியல் வல்லுறவும் பண்பாட்டின் வன்முறையும், வீடிழப்பு ஆகியவை பேசப்பட்டுள்ளன.

5446

மன்னார் மாதோட்ட கத்தோலிக்க நாடகங்கள்: ஓர் ஆய்வு. செபமாலை அன்புராசா. யாழ்ப்பாணம்: அமலமரித் தியாகிகள் வெளியீடு, தொடர்பகம், ஆஸ்பத்திரி வீதி, 1வது பதிப்பு, புரட்டாதி 2007. (கொழும்பு 13: நந்தா அச்சகம், புளுமண்டால் வீதி).
xxiv, 275 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 200., அளவு: 22x15 சமீ., ISBN: 978-955-1769-03-1.

நூலாசிரியர் தனது முதுகலைமாணித் தேர்வின் ஒரு பகுதியாக மேற்கொண்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்குச் சமர்ப்பித்த ஆய்வின் நூல்வடிவம் இதுவாகும். மன்னார் மாதோட்டம் பற்றிய அறிமுகம், மன்னார் மாதோட்ட புலவர்களும், நாடக மரபுகளும், "நாடகம"களும், மன்னார் மாதோட்ட கத்தோலிக்க நாடக அமைப்பு, மன்னார் மாதோட்ட நாடகப் பாடுபொருளின் மூலங்களும் நாடக வகைகளும், மன்னார் மாதோட்ட நாடகங்களின் ஊடாக நற்செய்திப் பணிகள் ஆகிய ஐந்து இயல்களில் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. நூலாசிரியர் அருட்திரு செ.அன்புராசா முருங்கனைச் சேர்ந்தவர்.

793 திரைப்படக்கலை

5447

இலங்கையில் தமிழ்ப் படங்கள். சி.சிவஞானசுந்தரம். ஏழாலை: அழகு வெளியீடு, 1வது பதிப்பு, ஆண்டு விபரம் குறிப்பிடப்படவில்லை. (அளவெட்டி: மொழியரசி அச்சகம்).
20 பக்கம், விலை: ரூபா 1.00.

இந்நூலில் இந்தியத் தமிழ்ப் படங்களும் இலங்கைத் தமிழரும், தமிழ்ப் படங்கள் ஏன் தயாரிக்கப் படுகின்றன? கலைப் படைப்புக்களை வரவேற்போம், ஈழத் திரை வளர, ஆகிய தலைப்புகளின் கீழ் இலங்கையின் தமிழ்த் திரைப்படத்துறை வளர்ச்சி பற்றி இந்நூல் பேசுகின்றது. பதிப்பித்த ஆண்டு விபரம் தரப்படாவிட்டாலும், இந்நூல் 60களில் வெளிவந்திருக்கக்கூடிய சாத்தியம் உள்ளது. (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5448

புகலிடத் தமிழ் சினிமா. அருந்ததி, யமுனா ராஜேந்திரன் (தொகுப்பாசிரியர்கள்). பிரான்ஸ்: முகம் பதிப்பகம், இல. 2, Rue Charles Fourrier, 93700 France, இணை வெளியீட்டாளர்கள், லண்டன் E12 6BT: தமிழர் தகவல் நடுவம், 720, Romford Road, 1வது பதிப்பு, ஓகஸ்ட் 2000. (சென்னை 5: மணி ஓப்செட்).
176 பக்கம், விலை: இந்திய ரூபா 60., அளவு: 21.5x14 சமீ.

புகலிடத் தமிழ்த் திரைப்பட உலகம் சார்ந்த 21 விமர்சனக் கட்டுரைகளைக் கொண்ட தொகுப்பு நூல். இதிலுள்ள கட்டுரைகளை மு.புஷ்பராஜன், அருந்ததி, ஜீவன், அபிநயன், சுவிஸ் றஞ்சி, கதிர்காமநாதன்,

அழகு குணசீலன், புவனன், எஸ்.பி.ஜெகாதரன், யமுனா ராஜேந்திரன் ஆகியோர் புகலிட தமிழ் சினிமா எதிர்கொள்ளும் பிரச்சினைகள் பற்றி இங்கு எழுதியுள்ளனர். புலம்பெயர் சினிமாவுக்கான கருப்பொருள் பற்றியதாகவும், வாழ்வுக்கும் கலைக் கருத்தேர்வுக்கும் இருக்கவேண்டிய தர்க்கபூர்வமான உறவு பற்றியதாகவும் கட்டுரைகள் அமைகின்றன. மேலும் சினிமா வரலாற்றை அரசியல்ரீதியாகவும், புகலிட வாழ்க்கையை அதனது தொடர் அரசியலாகவும் பார்க்கும் கட்டுரைகளாகவும் இவை அமைந்துள்ளன.

5449

பெண்களும் சினிமாவும்: சினிமா பற்றிய கட்டுரைகள். செ.யோகநாதன். சென்னை 600014: திவ்யா பதிப்பகம், 17, லட்சுமிபுரம் தெரு, 2வது மாடி, இராயப்பேட்டை, 1வது பதிப்பு, செப்டெம்பர் 1992. (சென்னை 600094: ஜென்னிராம் பிரிண்டர்ஸ்).

215 பக்கம், விலை: இந்திய ரூபா 28., அளவு: 17.5x12.5 சமீ.

அறிவியல், உலகத்துக்கு வழங்கிய உன்னத கலைகளில் ஒன்று சினிமா. பண்பாட்டுத் துறையில் சினிமா-பாரிய பாதிப்பை உண்டாக்கி, மாற்றங்களை ஏற்படுத்திற்று. மனித குலத்தில் பாதியாகிய பெண்ணை அது திரையின் முன்னாலும் பின்னாலும் வெகுவாகப் பாதித்தது. உலகின் பல்வேறு பகுதிகளிலும் பெண்கள் மீது சினிமா உண்டாக்கிய தாக்கத்தையும், சினிமா மீது பெண்கள் தோற்றுவித்த மாற்றங்களையும் இந்நூல் ஆராய்கின்றது. பெண்களும் சினிமாவும், திரையில் ஒரு காவியம், கனவுக் கன்னிகள் ஆகிய மூன்று கட்டுரைகள் இத்தொகுதியில் இடம்பெற்றுள்ளன. "வண்ணத்திரை" இதழில் தொடர்ந்து வெளிவந்த இக்கட்டுரைகள் உலக சினிமாவின் போக்கினை விபரிப்பன. சினிமாவில் பெண் வகித்த பாத்திரத்தையும், வகிக்கின்ற நிலைமையையும் இவை ஆராய்கின்றன.

800 இலக்கியத் துறைகள்

800 இலக்கியம்

5450

தமிழ் இலக்கியக் களஞ்சியம்: சங்ககாலம் முதல் இக்காலம் வரையான தகவல்களின் தொகுப்பாக்கம்: பாகம் 1. த.துரைசிங்கம். கொழும்பு 6: உமா பதிப்பகம், 521/1B, காலி விதி, 1வது பதிப்பு, ஆவணி 2008. (கொழும்பு 6: உமா பதிப்பகம்).

(10), 322 பக்கம், விலை: ரூபா 400., அளவு: 22x14.5 சமீ., ISBN: 978-955-1162-1-3.

கலைக்களஞ்சியப் பண்புகளுடன் அகரமுதலியாக ஆயிரக்கணக்கான சொற்கள், சொற்றொடர்களுக்குப் பொருள் விளக்கத்தினை இந்நூல் வழங்குகின்றது. அறிவியல் சொற்களைவிட தமிழ்மொழி, இந்து சமயம் சார்ந்த சொற்கள் பெருமளவில் காணப்படினும், தமிழர் வாழ்வியற் கோலங்களுடன் பின்னிப் பிணைந்த தமிழ் வடமொழிச் சொற்களின்பாலும் கவனம் செலுத்தப்பட்டுள்ளன. ஓரிரு சொற்களிலும், சிலசமயம் ஒன்றுக்கு மேற்பட்ட பக்கங்களிலும் விளக்கம் காணப்படுகின்றன. நூலின் பின்னிணைப்பாக மறைந்த தமிழ் நூல்களும் நூலாசிரியர்களும், இந்திய சாகித்திய அக்கடமி விருது பெற்ற தமிழ் நூல்கள், தமிழ் இணைய இதழ்கள், இலங்கைப் பேச்சு வழக்குச் சொற்களும் அவற்றின் பொருளும் என்றவாறாகப் பல விடயங்கள் சேர்க்கப்பட்டுள்ளன. ஏராளமான தமிழ் அறிஞர்களின் அரிய புகைப்படங்களும் இடம்பெறுகின்றன. 184ம் பக்கத்தில் நூல்தேட்டம் தொகுப்புக்கும் ஒரு பதிவு வழங்கப்பட்டுள்ளது.

801 சிறுவர் இலக்கியங்கள்

5451

ஈழத்துச் சிறுவர் இலக்கியக் களஞ்சியம். செ.யோகராஜா (தொகுப்பாசிரியர்). கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், 361, 1/2, டாம் வீதி, 1வது பதிப்பு, 2007. (கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், டாம் வீதி).

xiv, 189 பக்கம், விலை: ரூபா 450., அளவு: 22x14.5 சமீ., ISBN: 978-955-659-083-8.

ஈழத்துச் சிறுவர் இலக்கியம் தொடர்பான கட்டுரைகள், முன்னுரைகள், நேர்காணல்கள் ஆகியவற்றின் தொகுப்பு. 2003 ஜூலை 7இல் தினகரன் பத்திரிகையில் வெளிவந்த கவிஞர் அம்பியுடனான சதாசிவம் ஜீவாவின் நேர்காணலும், பல்வேறு சிறுவர் இலக்கிய நூல்களில் வெளிவந்த 9 முன்னுரைகளும், 17 கட்டுரைகளும் இத்தொகுப்பில் அடங்குகின்றன. இப்படைப்புகளை கே.எஸ்.அருணந்தி, இ.அம்பிகைபாகன், ஏ.இக்பால், சி.கணபதிப்பிள்ளை, செ.கணேசலிங்கன், கல்வயல் வே. குமாரசாமி, க.கைலாசபதி,

கா.சிவத்தம்பி, எஸ்.சிவலிங்கராஜா, கனக செந்திநாதன், வே.செவ்வேட்குமரன், த.துரைசிங்கம், மயிலங்கூடலூர் பி.நடராஜன், க.நவசோதி, சே.பத்மநாதன், மு.பொன்னம்பலம், இ.முருகையன், செ.யோகநாதன், செ.யோகராஜா, அழ.வள்ளியப்பா ஆகியோர் வழங்கியுள்ளனர்.

801.(1) சிறுவர் பாடல்கள், கவிதைகள்

5452

ஈழத்துச் சிறுவர் பாடல் களஞ்சியம். செ.யோகராஜா (தொகுப்பாசிரியர்). கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், 361, 1/2, டாம் வீதி, 1வது பதிப்பு, 2007. (கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், டாம் வீதி).
x, 182 பக்கம், சித்திரம், விலை: ரூபா 300., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-955-659-030-7.

ஈழத்தில் வெளிவந்த குழந்தைப் பாடல்களிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட 113 பாடல்களைக் கொண்ட தொகுதியாக இது வெளிவந்துள்ளது. ஈழத்திலும் தமிழகத்திலும் ஈழத்துக் கவிதைகளின் தொகுப்பாக அவ்வப்போது சிறு நூல்கள் வெளிவந்துள்ளன. எனினும் ஈழத்துச் சிறுவர் பாடல்களின் தொகுப்பு எதுவுமே ஈழத்திலோ தமிழ்நாட்டிலோ வெளிவந்திருப்பதாகத் தகவல் இல்லாத நிலையில் இப்பாரிய முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. செல்லையா யோகராஜா (1949), யாழ்ப்பாணத்தில் கரணவாய் கிராமத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர். கிழக்குப் பல்கலைக்கழகத்தில் மொழித்துறையில் முதுநிலை விரிவுரையாளராகப் பணியாற்றுகின்றார்.

5453

குருவும் சீடர்களும். மணிக்கவிராயர் (இயற்பெயர்: என்.மணிவாசகன்). அக்கரைப்பற்று: மகாசக்தி வெளியீட்டகம், சாகாமம் வீதி, 1வது பதிப்பு, 2004. (அக்கரைப்பற்று: நியு செலெக்ஷன் பிரின்ரர்ஸ்).
x, 55 பக்கம், விலை: ரூபா 90., அளவு: 20.5x14.5 சமீ.

குழந்தைகளுக்கான சிந்தைக்கு விருந்தளிக்கும் 40 கவிதைகளின் தொகுப்பு. சிறுவர்களின் அறிவுக்கு விருந்தாகவும், நல்வழி புகட்டுவனவாகவும், குட்டிக் கதைகளாகவும் இவை அமைந்திருக்கின்றன.

5454

கூடியே முன்னேறுவோம். லக்ஷ்மி சிவபாதம், திலகா விவேகானந்தன். கொழும்பு 5: பெண்கள் ஆராய்ச்சி நிலையம் (சென்வோர்), 12, 1/1 அஸ்கொட் மாவத்தை, 1வது பதிப்பு, 1995. (கொழும்பு 10: யுனிவோக்கர் பக்கேஜிங் லிமிட்டெட், 114 நொறிஸ் கனால் வீதி).
(6), 16 பக்கம், சித்திரங்கள், விலை குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14 சமீ., ISBN: 955-9052-38-1.

இச்சிறு நூலில் உள்ள சிறுவர் பாடல்கள் அனைத்தும் ஆண்-பெண் வேறுபாடின்றி தத்தம் திறமைகளுக்கேற்ப அவர்களுடைய குடும்ப வேலைகளையும். சமூகப் பங்களிப்புகளையும் பகிர்ந்துகொள்ளும் பிரதிமையை பிரதிபலிக்கின்றன. இப்பாடல்கள் சிறுவர்களை குடும்பத்திலும், வளர்ந்ததும் வேலைத்தலங்களிலும் சம பங்காளிகளாக பால்வேறுபாடின்றி பங்கெடுக்க வழிகோலுகின்றன. இதிலுள்ள 10 பாடல்களில் ஆடிப்பாடுவோம், கூரை வேய்தல், விருந்து ஆகிய மூன்றும் திலகா விவேகானந்தனாலும், சமையல் செய்வோம், சைக்கிள் ஓடுவோம், பழம் பறிப்போம், அரிய சேவையாற்றுவோம், ஆண்டியும் அரசனாவான், பெண் கோழி கூவியும் விடியும், பெண் எழுச்சிக் கும்மி ஆகியவை லக்ஷ்மி சிவபாதத்தினாலும் எழுதப்பட்டவை. இப்பாடல்களுக்கான சித்திரங்களை ரஜினி கணேசரட்ணம் வரைந்துள்ளார்.

5455

சிறுவர் பா அமுதம்: சிறுவர் பாடல்கள். செ.ஞானராசா. திருக்கோணமலை: சர்வீனா வெளியீட்டகம், 993 அன்புவழிபுரம், 1வது பதிப்பு, டிசம்பர் 2006. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48 B, புளுமெண்டால் வீதி).
vi, 50 பக்கம், வண்ணச் சித்திரங்கள், விலை: ரூபா 140., அளவு: 22x14 சமீ., ISBN: 955-50038-0-7.

2006ம் ஆண்டு தேசிய சிறுவர் ஆண்டை முன்னிட்டு இலங்கை தேசிய நூலபிவிருத்திச் சபையின் உதவித் திட்டத்தின்கீழ் தெரிவுசெய்யப்பட்ட நூல். எளிய நடையில் எளிதில் புரியக்கூடிய வகையில் எந்த மெட்டிலும் பாடக்கூடிய விதமாக 30 பாடல்களைக் கொண்டதாக இந்நூல் அமைகின்றது. பாடல்களுக்கேற்ற கருத்து விளக்கப் படங்களையும் கொண்டுள்ளது. திருக்கோணமலை, தம்பலகாமம்

சிவசக்தி அரச தமிழ் கலவன் பாடசாலை அதிபராகப் பணியாற்றும் செபஸ்தியாம்பிள்ளை ஞானராசா ஏற்கெனவே எதிர்பார்ப்பு, பாடி மகிழ்வோம் ஆகிய இரு கவிதை நூல்களை வெளியிட்டவர். மன்னார் மாவட்டம், முருங்கன்- செம்மண்தீவு பிரதேசத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர்.

5456

தங்கக் கலசம்: சிறுவர் பாடல்கள். சபா.அருள்சுப்பிரமணியம் (புனைபெயர்: மாதகலான்). கனடா: கனடா தமிழ்ப் பூங்கா, 95, Dairis Crescent, Markham, Ontario, L3S 1S6, 2வது பதிப்பு, ஜூலை 2007. 1வது பதிப்பு, ஜனவரி 2007. (அச்சக விபரத் தரப்படவில்லை).
28 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22x14 சமீ.

கனடாவில் புலம்பெயர்ந்து வாழும் நூலாசிரியர் தன் தாயின் நினைவஞ்சலியாக வெளியிட்ட நூலின் இரண்டாவது பதிப்பு இது. தாய், தெய்வம், நீதிநூல்கள், செய்தித்தாள், நட்பு, வாழும் தமிழ் தொழிற்சிறப்பு வீட்டுத்தோட்டம், நூல்நிலையம் என்று இன்னோரன்ன 22 தலைப்புக்களில் எழுதிய சிறுவர் பாடல்கள் தொகுக்கப்பட்டுள்ளன.

5457

தமிழ் மலர்: சிறுவர் பாடல்கள். சபா.அருள்சுப்பிரமணியம்.(புனைபெயர்: மாதகலான்) கனடா: மாதகல் கல்வி அபிவிருத்திச் சங்கம், 1வது பதிப்பு, ஆகஸ்ட் 2005. (கொழும்பு 6: எஸ்.பிரின்ட்).
24 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 50., அளவு: 30x21.5 சமீ.

கனடாவில் புலம்பெயர்ந்து வாழும் நூலாசிரியர் எழுதியுள்ள 19 சிறுவர் பாடல்கள் கொண்ட தொகுப்பு. தமிழ் படிப்போம், திருவள்ளுவர், பட்டம் பார், பாட்டி, காலையில் எழுவோம், மாதங்கள், மெய் எழுத்து, செல்லப்பிராணி, என் அம்மா, என் அப்பா, வார நாட்கள், வாண வேடிக்கை, பூமழை பொழியுது, மிருகக் காட்சி சாலை, கரடியாரே, தோத்தரித்தோம், வெள்ளிப்பனி ஆகிய தலைப்புகளில் சித்திரங்களுடன் கூடியதாக இச்சிறுவர் பாடல்கள் அமைகின்றன.

5458

தேன் கூடு: பாலர் கவிதைகள். கல்லொளுவை பாரிஸ். கொழும்பு 6: ஞானம் பதிப்பகம், 3B, 46ஆவது ஒழுங்கை, 1வது பதிப்பு, டிசம்பர் 2007. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ் பிரைவேட் லிமிட்டெட், 48 B, புளுமெண்டால் வீதி).
viii, 72 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 150., அளவு: 22x14 சமீ., ISBN: 978-955-8354-18-6.

35 வருட காலமாக எழுதிவரும் நூலாசிரியர் கம்பஹா மாவட்டத்தின் மினுவாங்கொடையைச் சேர்ந்தவர். இந்நூலிலுள்ள பாடல்கள் சிறுவர்களை மையமாக வைத்து, அவர்களின் சிந்தனையைத் தூண்டும் வகையில் உருவாக்கப்பட்டவை. இவை ஒழுக்க மேம்பாட்டையும், மானிட நேயத்தையும், சந்தத்துடன் வலியுறுத்துகின்றன. பிள்ளைகள் தாள லயத்தோடு ஆடிப்பாடக்கூய 71 கவிதைகள் இதில் உள்ளன. இவை எளிய தமிழில் இலகுவில் மனனஞ்செய்து பாடக்கூடியதாகவும் இருப்பது சிறப்பம்சமாகும். புரவலர் புத்தகப் பூங்காவின் மாதம் ஒரு நூல்திட்டத்தின் கீழ் வெளிவந்த நான்காவது நூல்.

5459

பாடியாடு பாப்பா: மழலையர் பாடல்கள். சபா.அருள்சுப்பிரமணியம். (புனைபெயர்: மாதகலான்) கனடா: செஞ்சோலை- அறிவுச்சோலை, 1வது பதிப்பு, ஆவணி 2006. (கனடா: VIA Graphics).
48 பக்கம், வண்ணச் சித்திரங்கள், விலை: கனேடிய டொலர் 10., அளவு: 28x21.5 சமீ.

கனடாவில் புலம்பெயர்ந்து வாழும் நூலாசிரியர் எழுதியுள்ள 34 மழலைப் பாடல்கள் கொண்ட தொகுப்பு. 25 ஆண்டுகளுக்கும் மேலாக ஆசிரியராகப் பணிபுரிந்து பெற்ற பட்டறிவு மழலையருக்கு பாடியாட பாப்பா என்ற நூலை வழங்கக் காரணமாயுள்ளது. தமிழ் படிப்போம், தாயகம், குட்டிப் பாப்பா, என் தம்பி, பொம்மை பார், வெண்பனி பார், வெள்ளிப் பனியே வா வா, பனி மனிதன், தொப்பி பார், காலணி, மீன்குஞ்சு, கோழி, கோழிக்குஞ்சு, அணில், மகிழுந்து, மிதிவண்டி, பாட்டிமார், வானூர்தி, என்று மழலையர் விரும்பும் விடயங்களை இப்பாடல்கள் கருவாகக் கொண்டுள்ளன.

5460

மழலைப் பா. மலர்க்குழு. யாழ்ப்பாணம்: திருமதி பரமேஸ்வரி பார்வதிநாதசிவம் நினைவு மலர், மயிலங்கூடல், இளவாலை, 1வது பதிப்பு, நவம்பர் 2002. (யாழ்ப்பாணம்: பாரதி பதிப்பகம், 430 காங்கேசன்துறை வீதி).
20 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14 சமீ.

ஈழத்தின் மூத்த கவிஞர்களினால் எழுதப்பட்டதும், 3 முதல் 5 வயதுவரையுள்ள மழலைகளுக்கானவையுமான மழலைப் பாடல்கள் இவை. நவாலியூர் சோமசுந்தரப் புலவர், மா.பீதாம்பரம். மு.நல்லதம்பி, கனக.செந்திநாதன், வை.இளையதம்பி, சேந்தன், க.வீரகத்தி, அம்பி, சபா.ஜெயராசா, கல்வயல் வே.குமாரசாமி, ச.வே.பஞ்சாட்சரம், மு.பொன்னம்பலம், சிதம்பரபத்தினி, பா.மகாலிங்கசிவம் ஆகியோர் எழுதிய பாடல்களில் மாதிரிக்கொன்றாக இச்சிறு நூலில் தொகுக்கப்பட்டுள்ளன.

5461

மனதுக்கினிய பாட்டு: சிறுவர் பாடல்கள். ச.அருளானந்தம். திருக்கோணமலை: அருள் வெளியீட்டகம், மத்திய வீதி, உவர்மலை, 1வது பதிப்பு, ஜனவரி 2001. (திருக்கோணமலை: அருள் வெளியீட்டகம்).
(6), 34 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 65., அளவு: 20.5x15 சமீ.

இந்நூல் 34 சிறுவர் பாடல்களைக் கொண்டது. தம்மைச் சூழவுள்ள பொருள்பொதிந்த பல விடயங்களை எளிமையான பாடல்வரிகளினூடாக வழங்கிச் சிறுவர்களின் அறிவாற்றலை விரிவுபடுத்த நூலாசிரியர் முயன்றுள்ளார். மாகாண மட்டத்திலும் தேசிய மட்டத்திலும் பல விருதுகளைப்பெற்ற இந்நூலாசிரியர், கிழக்கிலங்கையின் ஆலங்கேணியைப் பிறப்பிடமாகக் கொண்டவர். கேணிப்பித்தன் என்ற புனைபெயரிலும் இலக்கிய உலகில் உலவிவருபவர்.

801.(4) சிறுவர் கதைகள்

5462

இராமன் கதை. பிரான்சிஸ் கிங்ஸ்பரி. சாவகச்சேரி: ஜே.டபிள்யு.ஏ.கதிர்காமர், 1வது பதிப்பு, 1938. (சாவகச்சேரி: இலங்காபிமானி அச்சியந்திரசாலை).
92 பக்கம், விலை: சதம் 60.

இயற்றமிழ்ப் போதகாசிரியர் கலைமாணி பிரான்சீஸ் கிங்ஸ்பரி சிறுவர் சிறுமியருக்கு எழுதிய தமிழ் வசன நூல் இதுவாகும். தமிழில் வசன நடையில் உள்ள இராமாயண நூல்களிற் சில மிக விரிந்தவை. சில மிகச் சுருங்கியவை. மிக விரிக்காதும் மிகச் சுருக்காதும் மாணவர்க்குப் பயன்படுமாறு எழுதப்பட்டது இந்நூல் என்றால் அது மிகையாகாது என்பது நூலாசிரியரின் கருத்தாகின்றது. 1838 ஜனவரி 13இல் பிறந்த ஆசிரியரின் குரு வில்லியம் மில்லர் தேசிகர் அவர்களின் நூற்றாண்டு ஞாபகார்த்தமாக 1938இல் இந்நூல் பிரசுரிக்கப்பட்டுள்ளது. (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5463

கண்ணனும் இராமனும்: சிறுவர் கதைகள். ச.அருளானந்தம். (புனைபெயர்: கேணிப்பித்தன்). திருக்கோணமலை: அருள் வெளியீட்டகம், 37/7, மத்திய வீதி, உவர்மலை, 1வது பதிப்பு, ஜனவரி 2007. (வத்தளை: கிறிப்ஸ் பிரிண்டேர்ஸ் பிரைவேற் லிமிட்டெட், 70/7, கனல் வீதி, ஹெந்தளை).
40 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 75., அளவு: 21.5x15 சமீ., ISBN: 955-98211-3-x.

கண்ணனும் இராமனும், இலவங்கிளிகள், சின்னச் சிலந்தி ஆகிய மூன்று சிறுவர் கதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. ச.அருளானந்தன் திருக்கோணமலை மாவட்டத்திலுள்ள ஆலங்கேணிக் கிராமத்தில் பிறந்தவர். இலங்கை கல்விச்சேவையில் நீண்டகாலம் பணியாற்றியவர். மாகாண மட்டத்திலும் தேசிய மட்டத்திலும் பல விருதுகளைப்பெற்ற இந்நூலாசிரியர், கேணிப்பித்தன் என்ற புனைபெயரிலும் இலக்கிய உலகில் உலவியவர்.

5464

கதைக் கோலங்கள். வி.அரியநாயகம். கொழும்பு 11: சேமமடு பொத்தகசாலை, U.G.50, Peoples Park, 1வது பதிப்பு, 2009. (கொழும்பு 11: சேமமடு பதிப்பகம்).
124 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 21 x15 சமீ., ISBN: 978-955-1857-38-7.

இந்நூலில் சிறுவர்களுக்கான 45 கதைகள் இடம்பெறுகின்றன. இவற்றில் சில தத்துவங்களை வெளிப்படுத்துவதற்காக சமகால நிகழ்வுகளைக் கொண்டு எழுதப்பட்டன. சில கதைகள் விலங்குகளினூடாக மானிடத்துக்கான தத்துவங்களை வெளிப்படுத்தும் வகையில் அமைந்துள்ளன. சில ஆங்கிலக் கதைகளும் தழுவல்களாக மீளுருவாக்கம் பெற்றுள்ளன. மொத்தத்தில் சிறுவர்களின் சுவையறிந்து அவர்களின் வாசிப்பினை ஊக்குவிக்கும் வகையிலும், நல்லொழுக்கத்தைப் போதிக்கும் வகையிலும் இக்கதைத் தொகுதி உருவாக்கப்பட்டுள்ளது. நூலாசிரியர் சுன்னாகம் வரியப்பாலத்தில் பிறந்தவர். அனலைதீவு சதாசிவ ஆங்கிலப் பாடசாலையில் உதவி ஆசிரியராகச் சேர்ந்து, பல்வேறு பாடசாலைகளிலும் ஆசிரியப் பணியில் ஈடுபட்டு பின்னாளில் செங்குந்தா இந்துக் கல்லூரியின் அதிபராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர். ஓய்வின் பின்னர் புலம்பெயர்ந்து அவுஸ்திரேலியாவில் குடும்பத்தினருடன் வாழ்ந்து வருகின்றார்.

5465

காற்றின் குழந்தைகள். செ.யோகநாதன். சென்னை 600017: திருமகள் நிலையம், 55, வெங்கட்நாராயணா ரோடு, தி.நகர், 1வது பதிப்பு, டிசம்பர் 1986. (சென்னை 600017: தமிழோசை அச்சகம், 84, ஹபிபுள்ளா சாலை, தி.நகர்).
296 பக்கம், விலை: இந்திய ரூபா 28., அளவு: 18x12.5 சமீ.

குழந்தைகள் படிப்பதற்கான 19 அற்புதக் கதைகள் (Fairy Tales) இத்தொகுப்பில் மொழிபெயர்த்துத் தரப்பட்டுள்ளன. உலகப் புகழ்பெற்ற கிறிம் (Grimm) சகோதரர்களின் கதைகளோடு, இந்திய, ரஷ்ய, சீன, ஐரோப்பிய நாட்டுக் கதைகளும் இந்தத் தொகுதியிலே அடங்கியுள்ளன. குழந்தைகள் கதைக்களஞ்சியம், சூரியனைத் தேடியவன் ஆகிய இரண்டு சிறுவர் நூல்களைத் தொடர்ந்து தமிழ் சிறுவர் இலக்கியத்துக்கு யோகநாதன் வழங்கியுள்ள மூன்றாவது படையல் இது.

5466

சிறகு வைத்த கதைகள்: சிறுவர் இலக்கியம். ச.அருளானந்தம். (புனைபெயர்: கேணிப்பித்தன்). திருக்கோணமலை: அருள் வெளியீட்டகம், 37/7, மத்திய வீதி, உவர்மலை, 1வது பதிப்பு, ஜூலை 2008. (கொழும்பு: நிஷான் பிரின்டர்ஸ்).
(6), 78 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 22x15 சமீ., ISBN: 955-98211-6-4.

விழியழகி, இவள்தான் இளவரசி, சுட்டிப்பையன் நந்து, தம்பை நிலா, சௌந்தர்யாவும் ஏழு குள்ளர்களும், கடல் இளவரசி, அவரைக்கொடி, பூனைக்குட்டி ஆகிய எட்டு சிறுவர் கதைகளை இந்நூல் உள்ளடக்கியுள்ளது. இக்கதைகளில் நூலாசிரியர் கல்வி உலகிற்கும் சமுதாயத்துக்கும் சிறுவர்களினூடாக பல நல்ல கருத்துக்களைச் சொல்ல முனைந்துள்ளார். மாகாண மட்டத்திலும் தேசிய மட்டத்திலும் பல விருதுகளைப்பெற்ற இந்நூலாசிரியர், கிழக்கிலங்கையின் ஆலங்கேணியைப் பிறப்பிடமாகக் கொண்டவர்.

5467

சின்னத் தேவதைகள்: சிறுவர் கதைகள். ச.அருளானந்தம். திருக்கோணமலை: அருள் வெளியீட்டகம், 37/7, மத்திய வீதி, உவர்மலை, 1வது பதிப்பு, ஜனவரி 2006. (வத்தளை: கிறிப்ஸ் பிரிண்டேர்ஸ் பிரைவேற் லிமிட்டெட், 70/7, கனல் வீதி, ஹெந்தளை).
vi, 44 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 125., அளவு: 25x19.5 சமீ., ISBN: 955-1400-00-3.

தேசிய மட்டத்திலும் பல விருதுகளைப்பெற்ற இந்நூலாசிரியர், கிழக்கிலங்கையின் ஆலங்கேணியைப் பிறப்பிடமாகக் கொண்டவர். கேணிப்பித்தன் என்ற புனைபெயரிலும் இலக்கிய உலகில் உலவிவருபவர். சின்னத் தேவதைகள், மைனாக் குஞ்சு, அந்த அணிற் குஞ்சுகள், நிமேசிக்காவின் துணிச்சல், சின்னஞ் சிறுசுகள், சுனாமி உறவுகள் ஆகிய ஆறு சிறுவர் கதைகள் இந்நூலில் தொகுக்கப்பட்டுள்ளன. சிறுவர்களின் துணிச்சலையும் செயற்பாடுகளையும் விபரிப்பதுடன், இயற்கையோடு சிறுவர்கள் எவ்வாறு பின்னிப்பிணைந்து தமது கற்றலை விரிவுபடுத்துகிறார்கள் என்பதையும் இக்கதைகளின் வாயிலாக ஆசிரியர் புரியவைக்கிறார்.

5468

செல்லையா தாத்தாவும் செல்லக் குழந்தைகளும். சு.ஸ்ரீகுமரன். (புனைபெயர்: இயல்வாணன்). யாழ்ப்பாணம்: சமூக விஞ்ஞான மன்றம், பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை, 1வது பதிப்பு, ஆடி 2008. (யாழ்ப்பாணம்: ஜே.எஸ்.பிரிண்டர்ஸ், பண்டத்தரிப்பு).
viii, 48 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 21x14.5 சமீ.

இயல்வாணன் என்ற புனைப்பெயரில் பல படைப்புகளை எழுதிவந்தவர் சுப்பிரமணியம் ஸ்ரீகுமரன். சிறுவர்களின் அறிவு விருத்தியைத் தூண்டும் வகையில் உதயன் பத்திரிகையில் பாபு அண்ணா என்ற மற்றொரு புனைபெயரில் இவர் எழுதிய தொடரின் நூல் வடிவம் இதுவாகும். பத்திரிகைகளில் தொடர்ச்சியாக வெளிவந்த சிறுவர்களுக்கு அறிவூட்டும் பல்துறை அறிவை வழங்கும் கதைகள். வழமையான போதனைக் கதைகளாக இல்லாமல், சிறுவர்களுக்குச் சலிப்பை ஏற்படுத்தாத பல அறிவியல் விடயங்களை இக்கதைகள் உள்ளடக்கியுள்ளன. வெய்யில் காலத்தில் ஏன் அதிகம் களைக்கின்றது? கறுப்பு வெள்ளை நிற வேறுபாடு, மழை வரக் காரணம், பொலித்தீன் பாவனையைத் தடை செய்தல், மரநடுகையை ஊக்குவித்தல், வாசிப்புப் பழக்கத்தை விருத்திசெய்தல், சூழல் மாசடைதலைத் தடுத்தல், மரநடுகையை ஊக்குவித்தல், நுண்ணங்கிகளின் தாக்கத்தைத் தடுத்தல் எனச் சிறுவர்கள் அறிய வேண்டிய பல அம்சங்களையும் பாரதி பாடல், ஔவையார் பாடல், வள்ளுவர் வரிகள் போன்றவற்றின் ஊடாக இலகு தமிழில் கதைகளாகக் கூறியிருக்கிறார்.

5469

தங்க மாம்பழம். ச.அருளானந்தம் (புனைபெயர்: கேணிப்பித்தன்). திருக்கோணமலை: அருள் வெளியீட்டகம், 37/7, மத்திய வீதி, உவர்மலை, 1வது பதிப்பு, ஒக்டோபர் 2002. (கொழும்பு 13: கீதா பப்ளிக்கேஷன்ஸ்).

(6), 48 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 80., அளவு: 20.5x14 சமீ., ISBN: 955-97106-9-9.

அன்பு, கருணை, கொடை மனிதநேயம் முதலான உயர் பண்புகளை உணர்த்தும் 9 சிறுவர்களக்கான கதைகள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. வண்ணத்துப் பூச்சி, சூரியனும் சிறுவர்களும், காகமும் செயலும், ஒற்றுமை, தங்க மாம்பழம், நன்றியுணர்வு, யானைக்குட்டி, காகமும் பாடமும், கரடியும் குட்டிகளும் ஆகிய இந்த ஒன்பது கதைகளும் சிறுவர்களுக்கு ஏதோவொரு சமூகநீதியையோ நல்லொழுக்கத்தையோ போதிப்பதாக அமைந்துள்ளன. இந்நூலாசிரியர், கிழக்கிலங்கையின் ஆலங்கேணியைப் பிறப்பிடமாகக் கொண்டவர். கேணிப்பித்தன் என்ற புனைபெயரிலும் இலக்கிய உலகில் உலவியவர்.

5470

நல்ல தீர்வுகள்: சிறுவர்க்கான உத்திக் கதைகள். அநு.வை. நாகராஜன். யாழ்ப்பாணம் வைரமான் வெளியீடு, தென் மயிலை, தெல்லிப்பழை, 1வது பதிப்பு, மே 2007. (கொழும்பு 12: நிசான் பிரின்டர்ஸ், 64என். பீர்சாஹிப் வீதி).

48 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 25.5x20 சமீ., ISBN: 978-955-98393-8-5.

ஆசிரியர், அதிபர், கல்வி நிர்வாகி (SLEAS) எனப் பலநிலைகளில் 35 ஆண்டுகள் கல்விப்பணியாற்றியவர் நூலாசிரியர். சிறுவர் இலக்கியத்திலும், சமயத்துறையிலும் ஈடுபாடு கொண்டவர். 20 நூல்களுக்குமேல் எழுதியுள்ளார். இது இவர் எழுதிய 11ஆவது சிறுவர் நூல். உலகின் பல்நாட்டவர்களாலும், பயிலப்பட்டு, நெடுங்காலம் வாய்மொழி வழக்கிலிருந்த பல்வேறு சிறுவர் கதைகளுள் யுக்தி சார்ந்ததும், சமூக நீதி சார்ந்ததுமான 16 கதைகளை இந்நூலில் தொகுத்திருக்கிறார். இக்கதைகள் பல்லுருவில், பல கோணங்களில் புத்திசாதுரியமான கருத்துக்களை சிறுவர்களின் மனதைத் தூண்டும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளன. இக்கதைகளுக்கான ஓவியத்தை எஸ்.டீ.சாமி வரைந்துள்ளார்.

5471

நீதிக்கதைகளில் ஆத்திசூடி. வல்வை கமலா பெரியதம்பி. வல்வெட்டித்துறை: சிவசக்தி, சிவன் கோயில் தெரு, 1வது பதிப்பு, ஜுன் 1995. (சென்னை 14: அலமு பிரிண்டிங் ஓர்க்ஸ், 5, அய்யா முதலி தெரு, இராயப்பேட்டை).

xxii, 198 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18x12 சமீ.

ஔவையார் அருளிய ஆத்திசூடி இலக்கணப்படி மூன்று சீர்களைக் கொண்ட ஒருவரிப் பாடல்களாக அமைந்தது. உலகம் தழுவிய நீதிநெறிகளை இளம்பிராயத்திலேயே சிறியவர்களிடம் பதியம் வைக்கும் வகையில் படைக்கப்பட்டது ஆத்திசூடி. இதில் கடவுள் வாழ்த்து நீங்கலான 109 வரிகளிலிருந்து தேர்ந்த ஒவ்வொரு வரியையும் வைத்து அதன் கருத்துச்செறிவை சிறுகதையுருவில் வழங்கும் முயற்சியொன்றை ஈழமுரசு பத்திரிகையின் வாயிலாக கனடாவில் வல்வைக்கமலா மேற்கொண்டிருந்தார். அங்கு பிரசுரமான சிறுகதைகளில் **அறம் செய்ய விரும்பு** தொடங்கி **பருவத்தே பயிர் செய்** என்பது வரையிலான 22 ஆத்திசூடி வரிகளுக்கான சிறுகதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன.

5472

வாழ நினைத்தால் வாழலாம்: சிறுவர் கதைகள். சோ.ராமேஸ்வரன். கொழும்பு 5: செல்வி ராமேஸ்வரன், E – 2/4, அண்டர்சன் தொடர்மாடி, 1வது பதிப்பு, 2005. (மஹரகம: தரஞ்ஜி பிரின்ட்ஸ், 501, ஹைலெவல் வீதி, நாவின்ன).
viii, 32 பக்கம், விலை: ரூபா 90., அளவு: 24.5x18.5 சமீ., ISBN: 955-99222-0-3.

தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபையின் சுனாமி சிறுவர் நூல் வெளியீட்டுச் செயற்றிட்டத்தின் அனுசரணையுடன் 2005-2006ம் ஆண்டுக்குரிய உதவித்திட்டத்தின்கீழ் வெளியிடப்பட்ட நூல். 2004 டிசம்பர் 26ம் திகதி ஏற்பட்ட ஆழிப்பேரலை அழிவுகள் சிறுவர்களின் மனதில் ஆறாத காயங்களை ஏற்படுத்திச் சென்றுள்ள நிலையில் நிர்க்கதியாய் நிற்கும் அவர்கள் வாழ்வில் விரக்தியடையாது துணிச்சலுடன் முன்னேறத்தூண்டும் வகையில் இதிலுள்ள கதைகளை ஆசிரியர் படைத்துள்ளார். கதைகள் அனைத்தும் சுனாமிப் பேரலையை மையமாகக் கொண்டு எழுதப்பட்டிருந்த போதிலும் பல்வேறு கதைத் தளங்களில் அவை சொல்லப்படுகின்றன. 2005ம் ஆண்டுக்கான வடக்கு கிழக்கு மாகாண அரசின் சாகித்தியப் பரிசினை சிறுவர் இலக்கிய நூலுக்காகப் பெற்றது.

801.(5) சிறுவர் நாவல்கள்

5473

அண்டவெளியிலே அதிசய யாத்திரை. கிருஷ்ணசந்தர். (ஹிந்தி மூலம்), சீ.எம்.ஏ.அமீன் (தமிழாக்கம்). திஹாரிய 11875: ரேஷ்மா பதிப்பகம், 348/1 வரபலான ரோட், 1வது பதிப்பு, நவம்பர் 2002. (கொழும்பு 12: நிசான் பிரின்டர்ஸ், 64N, பீர் ஸாஹிப் வீதி).
(6), 122 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 21x14.5 சமீ., ISBN: 955-95661-5-6.

வீரகேசரி வார இதழில் 1979ம் ஆண்டில் தொடராக வெளிவந்த சிறுவர் நாவல். ஹிந்தி மொழியில் கிருஷ்ணசந்தர் (1914-1977) எழுதிய **ஸிதாரோங் ஸே ஆகே** (நட்சத்திரங்களுக்கு முன்னால்) என்ற நூலின் தமிழ் வடிவம் இதுவாகும். 50 வருடங்களுக்குப் பின்னர் நிகழப் போகும் சம்பவங்களைப் பற்றிய ஒரு விஞ்ஞானக் கற்பனைக் கதையாக இதை கதாசிரியர் சுவையாகவும் சிறுவர்க்கேற்ற விறுவிறுப்புடனும் வளர்த்திருந்தார்.

5474

உல்லாசப் பயணம்: சிறுவர் நாவல். ச.அருளானந்தம் (புனைபெயர்: கேணிப்பித்தன்). திருக்கோணமலை: அருள் வெளியீட்டகம், 37/7, மத்திய வீதி, உவர்மலை, 1வது பதிப்பு, ஜனவரி 2004. (வத்தளை: கிறிப்ஸ் பிரிண்டேர்ஸ் பிரைவேற் லிமிட்டெட், 70/7, கனல் வீதி, ஹெந்தளை).
106 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 175., அளவு: 22x15 சமீ., ISBN: 955-98211-0-5.

மாகாண மட்டத்திலும் தேசிய மட்டத்திலும் பல விருதுகளைப்பெற்ற இந்நூலாசிரியர், கிழக்கிலங்கையின் ஆலங்கேணியைப் பிறப்பிடமாகக் கொண்டவர். கேணிப்பித்தன் என்ற புனைபெயரிலும் இலக்கிய உலகில் உலவியவர். இச்சிறுவர் நாவலில் காடுகள், மலைகள், அருவிகளைப் பின்னணியாகக் கொண்ட கிழக்கு மாகாணத்தின் சம்பூர் பிரதேசத்தைக் களமாகக்கொண்டு கதையை நகர்த்திச்செல்கின்றார். கடல் மார்க்கமாக உல்லாசப் பயணம் செல்லும் சிறுவர்கள் சிலர் ஒரு தீவில் தங்க நேரிடுகின்றது. அங்கிருந்த பயங்கர மிருகம் ஒன்றுடன் மோதி அம்மிருகத்தை அத்தீவிலிருந்து விரட்டும் துணிச்சலான கதையமைப்பு நூலை விறுவிறுப்பாக நகர்த்திச் செல்கின்றது.

5475

காட்டில் கலவரம். ச.அருளானந்தம். திருக்கோணமலை: அருள் வெளியீட்டகம், 37/7, மத்திய வீதி, உவர்மலை, 1வது பதிப்பு, ஒக்டோபர் 1999. (கொழும்பு 13: பேசும் பேனா பப்ளிக்கேஷன்ஸ், 169 ஜோர்ஜ் ஆர்.டி.சில்வா மாவத்தை).
64 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 70., அளவு: 20x13.5 சமீ.

சிறுவர்களுக்கான படைப்புக்களின் வரிசையில் வெளிவந்த நாவல். நூலாசிரியர் கல்வி உலகிற்கும் சமுதாயத்துக்கும் பல நல்ல கருத்துக்களைச் சொல்ல முனைந்துள்ளார். காட்டில் வாழும் மிருகங்களையும் நாட்டில் வாழும் மனிதர்களையும் கொண்டு இந்நாவல் மட்டக்களப்பு மாவட்டத்தைப் பின்புலமாகக் கொண்டு புனையப்பட்டுள்ளது. மனிதன் சுயநல நோக்கத்திற்காக காட்டினுள் புகுந்து நடத்தும் அடாவடித் தனங்களை எதிர்த்து காட்டு விலங்குகள் ஒன்றிணைந்து போராடி வெல்லுவதை கதை

கூறுகின்றது. வனச்சூழல் பாதுகாப்பு பற்றிய விழிப்புணர்வூட்டும் கதை. மாகாண மட்டத்திலும் தேசிய மட்டத்திலும் பல இலக்கிய விருதுகளைப்பெற்ற இந்நூலாசிரியர், கேணிப்பித்தன் என்ற புனைபெயரிலும் இலக்கிய உலகில் உலவிவருபவர்.

5476

கிரிஜா: சிறுவர் கதை. சி.ஜெயசங்கர். மட்டக்களப்பு: மூன்றாவது கண், உள்ளூர் அறிவுதிறன் செயற்பாட்டுக் குழு, 1வது பதிப்பு, மார்கழி 2005. (அச்சக விபரம் தரப்படவில்லை).
18 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x15 சமீ.

கிராமியக் கதை, கிரிஜா குறும்படம், குறும்பட ஆங்கில உபதலைப்புக்கள் என்பவற்றை ஆதாரமாகக் கொண்ட தழுவலாக்கம் இது. பாடினிகள் மூவர் ஊர்வீதி வழியே பாடியபடி வருகின்றனர். வானத்தில் முகில்களுக்குள் இருந்து மழையைப் பொழிவிக்கும் மழைப் பழத்தை களவாடி ஒரு அரக்கன் வைத்திருக்கிறான். கிரிஜா என்ற சிறுமி துணிச்சலுடன் அந்த மழைப்பழத்தை மீட்டு நாட்டில் மழையை மீண்டும் வரச்செய்கிறாள். ஆணாதிக்கச் சமூகச் சிந்தனைகளுக்கெதிரான கதாம்சம்.

5477

சதியை வென்ற சாதுரியம். சோ.ராமேஸ்வரன். கொழும்பு 5: சோ.ராமேஸ்வரன், E 2/4, அன்டர்சன் தொடர்மாடி, 1வது பதிப்பு, ஜுன் 2001. (மஹரகம: தரஞ்ஜி பிரின்ட்ஸ், 501, ஹைலெவல் வீதி, நாவின்ன).
(4), 44 பக்கம், விலை: ரூபா 70., அளவு: 21.5x13.5 சமீ., ISBN: 955-96039-7-9.

10-15 வயதுக்கிடைப்பட்ட சிறுவர்களை மனதில் இருத்தி எழுதப்பட்ட சிறுவர் நாவல். மூடநம்பிக்கைகள், மாயாஜாலக்கதைச் சோடனைகளற்ற யதார்த்தமான கதையம்சம். சமகால இலங்கை மண்ணில் நிகழக்கூடியதொரு சம்பவத்தை வைத்து சாகசம் நிறைந்த, விறுவிறுப்பான காட்சிப் படிமங்களுடன் நகர்த்தப்பட்டுள்ளது. சிறுவர்களைக் கடத்திக் கப்பம் பெற்றுவந்த ஒரு கும்பலிடமிருந்து அவர்களைப் பாதுகாக்கும் வீரதீரக் கதை இது.

5478

சான்றோன் எனக்கேட்ட தாய். என்.சண்முகலிங்கன். தெல்லிப்பழை: நாகலிங்கம் நூலாலயம், நகுலகிரி, மைலிட்டி தெற்கு, 1வது பதிப்பு, ஒக்டோபர் 1993. (கொழும்பு: லக்சு கிரப்பிக்ஸ்).
vi, 41 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 19.5x12 சமீ.

பரிசுபெற்ற சிறுவர் நாவல். இது 1978 நவம்பர் 23இல் கிழக்கிலங்கையில் வீசிய சூறாவளி அனர்த்தங்களை உள்வாங்கி, அதன் பகைப்புலத்தில் நகர்த்திச்செல்லப்படும் சிறுவர் நாவல் ஒன்றினூடாக அந்த அநர்த்தத்தைப் பதிவாக்கும் முயற்சி இதுவாகும்.

5479

நாலு கோழிக் குஞ்சுகள். S.F.L.மொஹிடீன் ரஜா. புத்தளம்: V4U, Kids World International, 47/85, J.P.Road, 1வது பதிப்பு, டிசம்பர் 2004. (பாணந்துறை: V4U Books, இல. 25, கருணாரட்ண மாவத்தை, பள்ளிமுல்லை).
24 பக்கம், வண்ணப் படங்கள், விலை: ரூபா 150., அளவு: 18x12.5 சமீ., ISBN: 955-1072-23-5.

தமிழ் ஆங்கிலம் சிங்களம் ஆகிய மும்மொழிகளிலும் வெளிவந்துள்ள இச்சிறுவர் நூல், 4முதல் 6 வயதுவரையான சிறார்களை மனதில் இருத்தி வண்ணப் படங்களுடன் வெளியாகியுள்ளன. நூலாசிரியர் பாணந்துறை, பள்ளிமுல்லையைச் சேர்ந்தவர். சிறுவர்களுக்கேற்ற முறையில் பல வர்ணங்களில் பக்கங்கள் ஒழுங்கமைக்கப்பட்டு கவர்ச்சிகரமான முறையில் படங்களும் சேர்க்கப்பட்டு இந்நூல் வெளிவந்துள்ளது.

5480

பயங் கொள்ளலாகாது பாப்பா: சிறுவர் நாவல். ச.அருளானந்தம். திருக்கோணமலை: அருள் வெளியீட்டகம், 37/7, மத்திய வீதி, உவர்மலை, 2வது பதிப்பு, 2003, 1வது பதிப்பு, 2000. (வத்தளை: கிறிப்ஸ் பிரிண்டேர்ஸ் பிரைவேற் லிமிட்டெட், 70/7, கனல் வீதி, ஹெந்தளை).
119 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 100., அளவு: 21.5x15 சமீ., ISBN: 955-97106-1-3.

பாடசாலைச் சிறுவர்களது துணிகரச் செயல்களைச் சித்திரிக்கும் இந்நாவல் தினக்குரல் வார இதழில் முன்னர் தொடராக வெளிவந்தது. மன உறுதியையும் இன ஒற்றுமையையும் வலியுறுத்துகிறது.

திருக்கோணமலை மாவட்டத்தில் அந்நியர் ஆட்சியின்போது விட்டுச்சென்ற சில தடயங்களையும், இயற்கைத் துறைமுகத்தைச் சூழ்ந்துள்ள நகர், கிராமங்களையும் பின்னணியாகக் கொண்டு பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்களை கதாமாந்தர்களாகக் கொண்டு இந்நாவல் விறுவிறுப்பாக வளர்க்கப்படுகின்றது. இந்நூலாசிரியர், கிழக்கிலங்கையின் ஆலங்கேணியைப் பிறப்பிடமாகக் கொண்டவர். கேணிப்பித்தன் என்ற புனைபெயரிலும் இலக்கிய உலகில் உலவியவர்.

5481

மனதினிலே உறுதி வேண்டும்: சிறுவர் நாவல். ச.அருளானந்தம். திருக்கோணமலை: அருள் வெளியீட்டகம், 37/7, மத்திய வீதி, உவர்மலை, 1வது பதிப்பு, ஜனவரி 2006. (வத்தளை: கிறிப்ஸ் பிரிண்டேர்ஸ் பிரைவேற் லிமிட்டெட், 70/7, கனல் வீதி, ஹெந்தளை).
(vi), 159 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 175., அளவு: 21x15 சமீ., ISBN: 955-97106-6-4.

இந்நாவலில் பல்லின பண்பாட்டு வழக்கங்களை மதித்து மூவினங்களும் ஒற்றுமையாக வாழவேண்டும் என்ற கருத்தை முன்வைத்துள்ளார். இன ஒற்றுமையை வலியுறுத்துவதுடன் மலையக மக்களின் பண்பாட்டுக்கூறுகளையும் ஆங்காங்கே பதிவுசெய்கின்றார். இந்நூலாசிரியர், கிழக்கிலங்கையின் ஆலங்கேணியைப் பிறப்பிடமாகக் கொண்டவர். கேணிப்பித்தன் என்ற புனைபெயரிலும் இலக்கிய உலகில் உலவியவர்.

5482

வாக்கினிலே இனிமை வேண்டும்: இளைஞர் நாவல். ச.அருளானந்தம். திருக்கோணமலை: அருள் வெளியீட்டகம், 37/7, மத்திய வீதி, உவர்மலை, 1வது பதிப்பு, நவம்பர் 2006. (வத்தளை: கிறிப்ஸ் பிரிண்டேர்ஸ் பிரைவேற் லிமிட்டெட், 70/7, கனல் வீதி, ஹெந்தளை).
90 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 21.5x15 சமீ., ISBN: 955-98211-5-6.

ஒரு பிற்போக்கான கிராமம் அங்கு வரும் இளம் ஆசிரியர் ஒருவரால் உயிர்ப்போடு விழித்தெழுந்து முழுமையான வசதிகள் கொண்ட ஒரு கிராமமாக மாற்றமுறுவதை இந்நாவல் சித்திரிக்கின்றது. மக்களால் எதுவும் முடியும். சரியான வழிகாட்டல் அமையும்போது உருவாகும் சமூகப் புரட்சி கிராமத்தின் அபிவிருத்தியை முன்னெடுக்கும் ஆற்றலாக மாறுவதை இந்நாவலில் காணலாம். தேசிய மட்டத்திலும் பல விருதுகளைப்பெற்ற இந்நூலாசிரியர், கிழக்கிலங்கையின் ஆலங்கேணியைப் பிறப்பிடமாகக் கொண்டவர். கேணிப்பித்தன் என்ற புனைபெயரிலும் இலக்கிய உலகில் உலவிவருபவர்.

5483

வினோதனின் சாகசம். கார்லோ கொலொடிக்கே (மூல ஆசிரியர்), நவாலியூர் சோ.நடராசன் (தமிழாக்கம்). கொழும்பு: எம்.டீ.குணசேனா அண்ட் கொம்பெனி லிமிட்டெட், 217 ஒல்கொட் மாவத்தை, 1வது பதிப்பு, ஜுன் 1966. (கொழும்பு: எம்.டீ.குணசேனா அச்சகம்).
243 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 5.00, அளவு: 18x12 சமீ.

புகழ்பெற்ற இத்தாலிய சிறுவர் நவீனமொன்றின் தமிழாக்கம். ஈழநாடு பத்திரிகையில் தொடராகப் பிரசுரமானது. இதற்கான சித்திரங்களை விமலா குணசேகர வரைந்துள்ளார்.

மேலும் பார்க்க: 5811

801.(6) சிறுவர்க்கான கட்டுரைகள்

5484

அற்புதமான வானம்: சிறுவர் சிந்தனைக் கதைகள். ச.அருளானந்தம். (புனைபெயர்: கேணிப்பித்தன்). திருக்கோணமலை: அருள் வெளியீட்டகம், 37/7, மத்திய வீதி, உவர்மலை, 1வது பதிப்பு, செப்டெம்பர் 2009. (கொழும்பு: நிஷான் பிரின்டர்ஸ்).
(8), 117 பக்கம், சித்திரங்கள், விளக்கப்படங்கள், விலை: ரூபா 200., அளவு: 21x15 சமீ., ISBN: 955-98211-7-2.

தனது பட்டப் படிப்பில் புவியியலை ஒரு பாடமாகக் கற்ற நூலாசிரியர் இந்நூலில் புவியியல், வானியல், பௌதீகவியல், இரசாயனவியல், உயிரியல் ஆகிய அனைத்திலும் தான் கொண்ட ஆழ்ந்த அறிவினை சிறுவர்களுக்கு உகந்த எளிய வசனநடையில் சுவையாக 58 சிறு கட்டுரைகளில் வழங்கியுள்ளார்.

பிரபஞ்சத்தினை அப்படியே தொலைநோக்கியூடாக நமக்குக் காண்பிக்கிறார். வாயுக்கோளங்களையும், கற்கோளங்களையும், கிரகங்களின் அமைப்புக்களையும் எடுத்து விளக்கும் அவர், விஞ்ஞானரீதியாகவும், புவியியல்ரீதியாகவும் பல விடயங்களை முன்வைக்கிறார். விஞ்ஞானத்திற்கும் சோதிடக்கலைக்குமிடையே தொடர்புகளை விளக்குகின்றார். கிரகணங்கள் தோன்றுவதற்கான காரணங்களைப் புராண, இதிகாசங்களில் இருந்து எடுத்துக்காட்டி, அதன் பின்னணியில் உலகில் நடந்தேறிய சில நிகழ்வுகளையும் விபரித்துள்ளார். கேணிப்பித்தன் ச.அருளானந்தன் திருக்கோணமலை மாவட்டத்திலுள்ள ஆலங்கேணிக் கிராமத்தில் பிறந்தவர். இலங்கை கல்விச்சேவையில் நீண்டகாலம் பணியாற்றியவர்.

5485

இளமைப் பருவத்திலே. எம்.ஏ.ரஹ்மான். சென்னை 600024: மித்ர வெளியீடு, 375/8-10, ஆற்காடு சாலை, கோடம்பாக்கம், 1வது பதிப்பு, ஜனவரி 2001. (சென்னை 600024: மித்ர ஆர்ட்ஸ் அன் கிரியேஷன்ஸ், 375/8-10, ஆர்க்காடு சாலை, கோடம்பாக்கம்).
104 பக்கம், சித்திரங்கள், விலை: இந்திய ரூபா 35., அளவு: 18x12.5 சமீ.

மகாத்மா காந்தி, மேரி கியுரி, ஸ்டாலின், சர்ச்சில், ஆசாத், ஹோசிமின், போப்பாண்டவர், சார்ள்ஸ் டிக்கன்ஸ், காமராஜர், சார்ளி சப்ளின், ஜவஹர்லால் நேரு, ஹென்றி போர்ட், சி.வி.வேலுப்பிள்ளை, ஈன்ஸ்டின் ஆகிய பல்துறை பிரபலங்களின் வாழ்வின் இளமைக்காலத்தில் நிகழ்ந்ததாகக் கூறப்படும் சுவையான சம்பவங்கள் இந்நூலில் தொகுக்கப்பட்டுள்ளன.

5486

நாவலர்கோன். தி.ச.வரதராசன். சுளிபுரம்: வரப்பிரசாதி நிலையம், பொன்னாலை, 1வது பதிப்பு, நவம்பர் 1941. (யாழ்ப்பாணம்: சைவப்பிரகாச அச்சகம்).
22 பக்கம், விலை: சதம் 15.

இளமையும் படிப்பும், பிரசங்க மேகம், ஒரு பெரிய இலட்சியம், கண்டனப் புலி, சில பொதுக் காரியங்கள், சில சம்பவங்கள், திரு நிழலில் ஒரு இடம் ஆகிய தலைப்புக்களின் கீழ் நாவலரின் வரலாறு ஒரு 15 வயதுச் சிறுவனின் பார்வையில் பதிவாகியுள்ளது. பெரியார்களின் வாழ்க்கை வரலாறுகளை வாசிப்பதனால் சிறுவர்கள் பிற்காலத்தில் நல்ல நிலைமையை அடைவார்கள் என்பது தன் அபிப்பிராயம் என்றும், அதற்காகவே இதை மிகவும் சிறிய கட்டுரை வடிவில் எழுதியுள்ளதாகவும் இளம் ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார். வரதர் தனது 15வது வயதிலே (1939இல்) எழுதிய "நாவலர்கோன்" என்ற நூலின் மூலப் பதிப்பு இதுவாகும். த.கைலாசபிள்ளையின் நாவலர் சரித்திரம் நூலின் தழுவலாக அவர் இதை எழுதியுள்ளார். பின்னர் சுமார் 10 ஆண்டுகளுக்குப் பின் திருத்திய பதிப்பாக நாவலர் என்ற பெயரில் மீண்டும் வெளியாகியதுடன், சுமார் 30 ஆண்டுகளுக்குப் பின் நாவலர் சபையின் நாவலர் நூற்றாண்டுவிழா நினைவாக சிறுவர்களுக்கான நாவலர் வரலாறு ஒன்றின் தேவைகருதி, பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளையின் முன்னுரையுடன் இது மீண்டும் வெளிவந்திருந்தது. (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

801.(7) சிறுவர்க்கான பலவின நூல்கள்

5487

புள்ளி: சித்திரக்கதை. மதுரம் (கதை), மாகம சேகர (சித்திரங்கள்). கொழும்பு: எம்.டீ.குணசேனா அண்ட் கொம்பெனி லிமிட்டெட், 217 ஒல்கொட் மாவத்தை, 1வது பதிப்பு, 1968. (கொழும்பு: எம்.டீ.குணசேனா அச்சகம்).
12 பக்கம், விலை: ரூபா 1.50.

புள்ளி என்ற ஒரு பூனையின் கதை. கெட்டவன் கெட்டவனே. தீயாரைக் காண்பதுவும் தீதே. தீயார் சொற் கேட்பதுவும் தீதே என்ற நீதி வாக்கியத்தை அடிப்படையாகக் கொண்டு நகரும் கதையமைப்பு. சிறுவர்களுக்கான சித்திரக்கதை. (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

891.2 சமஸ்கிருத இலக்கியம்

5488

இருது சங்கார காவியம்: குறிப்புரையுடன். தி.சதாசிவ ஐயர். யாழ்ப்பாணம்: எஸ்.முத்து குமாரசுவாமி ஐயர், அளவெட்டி, சுன்னாகம், 1வது பதிப்பு, 1950. (சுன்னாகம்: திருமகள் அழுத்தகம்).

60 பக்கம், விலை: ரூபா 1.50.

இருது சங்கார காவியம் என்பது வடமொழியில் காளிதாசர் இயற்றிய "இருது ஸம்ஹார" என்னும் சிறு காப்பியத்தைத் தமிழில் மொழிபெயர்த்து அதர்ப்பட யாத்த நூலாகும். இருது ஸம்ஹாரமென்பது இருதுக்களின் (பருவகாலங்களின்) கூட்டம் எனப் பொருள்படும். ஒவ்வொரு பருவ காலத்திலும் இயற்கை அன்னையளிக்கும் காட்சிகளை வர்ணனை செய்வதற்கென்று இலக்கிய உலகில் முதன்முதல் (இற்றைக்கு 2000 ஆண்டுகள் வரையில்) எழுதப்பட்ட காவியம் இவ்விருது சங்காரமே என்று கருதப்படுகின்றது. இக்காவியத்தில் ஆறு பருவகாலத் தோற்றங்களும் அவற்றாற் காதலர் உள்ளத்தில் எழும் உணர்ச்சிகளும் அழகான வர்ணனைகளாகின்றன. ஆறு சருக்கங்களைக் கொண்ட இக்காவியம் சிருங்கார ரசத்தைப் பிரதானமாகக் கொண்டது. ஒவ்வொரு சருக்கத்திலும் ஒவ்வொரு பருவகாலம் வர்ணனைக்குள்ளாகும். இது காதலன் காதலியை விழித்துச் சொல்வதாக அமைகின்றது. முதுவேனிற் பருவ வர்ணனை (செய்யுள் 28), கார்ப் பருவ வர்ணனை (செய்யுள் 28), கூதிர்ப் பருவ வர்ணனை (செய்யுள் 26), முன்பனிப் பருவ வர்ணனை (செய்யுள் 18), பின்பனிப் பருவ வர்ணனை (செய்யுள் 16), இளவேனிற் பருவ வர்ணனை (செய்யுள் 28) என்பதாக இச்செய்யுள்கள் அமைகின்றன. (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5489

கிராதார்ச்சுனீயம் (காப்பியம்). வை.இராமசாமி சர்மா. சுன்னாகம்: வட இலங்கைத் தமிழ்நூற் பதிப்பகம், 4வது பதிப்பு, 1948. (சுன்னாகம்: திருமகள் அழுத்தகம்).
100 பக்கம், விலை: ரூபா 1.00.

இந்நூல் வடமொழியிலுள்ள ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்றாகும். இதனை இயற்றியவர் பாரவி என்னும் பெரும்புலவர். முதனூல் பதினெட்டுச் சருக்கங்களாக வகுக்கப்பட்டுள்ளதேனும், கதையின் போக்கைத் தழுவி இம்மொழிபெயர்ப்பு நான்கு அத்தியாயங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றது. முதனூலிலுள்ள செய்யுட்கள் யாவும் சுவைகெடாமலும் தொடர்பு அறாமலும் இயன்றவரை மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. தகுதி நோக்கி சில வருணனைப் பகுதிகளே தவிர்க்கப்பட்டன. படிப்போர்க்குத் துணைசெய்யும் பொருட்டு இதன் இறுதியில் அரும்பதவுரை ஒன்று எழுதிச் சேர்க்கப்பட்டுள்ளது. இந்நூலாசிரியர், யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி வியாஹரண மகோபாத்தியாயர் பிரமஸ்ரீ வை.இராமசாமி சர்மா அவர்களாவார். (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

894.8 தமிழ் இலக்கியம்

5490

இராம காதை: கம்பராமாயணக் கதைச் சுருக்கம். அ.சே.சுந்தரராஜன். சுன்னாகம்: அ.சே.சுந்தரராஜன், கல்லூரி அகம், இராமநாதன் கல்லூரி, 8ஆவது பதிப்பு, டிசம்பர் 1959, 1வது பதிப்பு, ஓகஸ்ட் 1953. (தமிழ்நாடு: சாரதா விலாஸ பிரஸ், கும்பகோணம்).
144 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x13.5 சமீ.

இராம காதை: கம்பராமாயணக் கதைச் சுருக்கம். அ.சே.சுந்தரராஜன். சுன்னாகம்: அ.சே.சுந்தரராஜன், கல்லூரி அகம், இராமநாதன் கல்லூரி, 9ஆவது பதிப்பு, மார்ச் 1963, 1வது பதிப்பு, ஓகஸ்ட் 1953. (யாழ்ப்பாணம்: ஸ்ரீ சண்முகநாத அச்சகம்).
120 பக்கம், விலை: ரூபா 1.50., அளவு: 21.5x13.5 சமீ.

இராம காதை என்ற இவ்வுரைநடை நூல், கம்பர் வகுத்த கதைப்போக்கைத் தழுவி எழுதப்பட்டிருக்கின்றது. கம்பராமாயணத்தைக் கற்பதற்கு இது முதற்படியாக அமைந்துள்ளது என்று கூறலாம். கம்பர் ஆண்ட செஞ்சொற்கள் பல இந்நூலிற் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. இந்நூலுக்கான முன்னுரையை முன்னாள் இலங்கை மந்திரியும், சுன்னாகம் இராமநாதன் கல்லூரி நிர்வாகியுமான சு.நடேசபிள்ளை வழங்கியுள்ளார்.

5491

கண்ணகி கதை. அ.குமாரசுவாமிப் புலவர். சுன்னாகம்: கு.அம்பலவாணபிள்ளை, 3வது பதிப்பு, 1931, 1வது பதிப்பு, 1900. (சுன்னாகம்: திருமகள் அச்சியந்திரசாலை).
14 பக்கம், விலை: சதம் 10.

சிலப்பதிகாரக் கதையை அனுசரித்து எழுதப்பட்ட இந்நூல் பிரித்தானிய காலனித்துவ இலங்கையில் தமிழ் இலக்கியம் செழிக்கத் தன் வாழ்வையே அர்ப்பணித்தவர்களுள் ஒருவரான சுன்னாகம் அ.குமாரசுவாமிப் புலவர் (1854-1922) அவர்களால் 1900இல் படைக்கப்பட்டது. இப்பதிப்பு அவரது மூன்று பிள்ளைகளில் (அம்பலவாணபிள்ளை, முத்துக்குமாரசுவாமிப்பிள்ளை, விசாலாட்சியம்மை) ஒருவரான அம்பலவாணபிள்ளையினால் மறுபதிப்புச் செய்யப்பட்டுள்ளது. (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5492

மதனரதி ஒப்பாரி என்னும் பெரிய நவரத்தின ஒப்பாரி-மூலம்: எரிந்த காட்சி எரியாத காட்சி அடங்கியது. ஆக்கியோன் விபரம் அறியப்படவில்லை. கொழும்பு: சரஸ்வதி புத்தகசாலை, 175 செட்டியார் தெரு, 1வது பதிப்பு, ஆண்டு விபரம் தரப்படவில்லை. (கொழும்பு: மெய்கண்டான் பிரஸ், 161 செட்டியார் தெரு).
106 பக்கம், விலை: ரூபா 1.50.

சமூகத்தில் முக்கியமான மனிதர்கள் மறைந்தால் உறைசொல்லி ஒப்பாரிபாடும் ரதி-மன்மதன் கதைப்பாடல்கள் வழக்கிலிருந்துள்ளன. மதன நூல்கள் என்றழைக்கப்படும் இத்தகைய நூல்களில் இதுவும் ஒன்று. இந்நூலில் பெரிய நவரத்தின ஒப்பாரி, மன்மத தகன சல்லாப இலாவணி, சிங்காரம் ஆகிய மூன்று பிரிவுகளில் இப்பாடல்கள் அடங்கியுள்ளன. (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5493

யாழ்ப்பாணத்து நல்லூர் சின்னத்தம்பிப் புலவர் அருளிச்செய்த மறைசையந்தாதி. நல்லூர் சின்னத்தம்பிப் புலவர் (மூலம்), ஆறுமுக நாவலர் (பரிசோதித்தவர்). சிதம்பரம்: தியாகராஜ பிள்ளை, சிதம்பர சைவப் பிரகாச வித்தியாசாலைத் தரும பரிபாலகர், 11வது பதிப்பு, 1930. (சென்னபட்டணம்: வித்தியாநுபாலனயந்திரசாலை).
14 பக்கம், விலை: நயா பைசா 12., அளவு: 21x13.5 சமீ.

100 செய்யுள்களைக் கொண்டமைந்த மறைசையந்தாதி வேதாரணியேசுரர் மேற் பாடப்பெற்றது. இதை இயற்றிய நல்லூர் சின்னத்தம்பிப் புலவர் 18ம், 19ம் நூற்றாண்டைச் சேர்ந்தவர். தனது ஏழு வயதிலேயே பாடல் இயற்றும் வல்லமை பெற்றிருந்தார். பதினைந்தாவது வயதில் சிதம்பரம் சென்று தலயாத்திரை மேற்கொண்டு மீளும் வழியில் வேதாரணியத்தை அடைந்து அங்கு வீற்றிருந்த வேதாரணியேசுரர் மேல் மறைசையந்தாதியைப் பாடியருளினார். மறைசை அந்தாதிக்கு உரையை உடுப்பிட்டி அ.சிவசம்புப் புலவரும், மதுரை மகாவித்துவான் சபாபதி முதலியாரும் எழுதியுள்ளார்கள்.

894.8(1) தமிழ்க் கவிதைகள்

5494

அண்ணல் வருவானா? எஸ்.முத்துமீரான். சென்னை 600024: நேர்நிரை வெளியீடு, D1/15, TNHB, தெற்கு சிவன் கோவில் தெரு, கோடம்பாக்கம், 1வது பதிப்பு, டிசம்பர் 2008. (அச்சக விபரம் தரப்படவில்லை).
126 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 18x11 சமீ., ISBN: 978-81-903665-2-6.

இலங்கையில் அம்பாறை மாவட்டத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட முத்துமீரான் தொழில்ரீதியில் வழக்கறிஞராகப் பணியாற்றிவருகின்றார். கவிதை, சிறுகதை, வானொலி நாடகம், கிராமிய இலக்கிய ஆய்வு எனப் பல துறைகளில் காலூன்றியவர். யாப்பு மரபையும் புதுக்கவிதை மரபையும் ஒன்றிணைக்கும் முயற்சியில் வெளிவந்திருக்கும் இவரது கவிதைத் தொகுப்பு இதுவாகும். மட்டக்களப்பு முஸ்லிம்களின் மொழிவழக்கை கவிதைகளில் கையாள்வது இவருடைய சிறப்பம்சமாகும். போரினால் அழிந்து சிதைந்துவிட்ட தன் கிழக்கிலங்கைக் கிராமத்தையும், உயிரினும் மேலான தன் மக்களையும் அவர்கள் படும் துன்பங்களையும் வேதனைகளையும் தன் கவிதைகளில் கொட்டியிருக்கும் முத்துமீரான், கானக்குயிலோசையும் பட்சிகளின் இனிய கீதமும் கேட்ட தன் கிராமங்கள் எல்லாம் பேய்களின் சுடுகாடாய்ப் வதங்கிவிட்ட உண்மையையும் தன் கவிதை வரிகளில் யதார்த்தமாகச் சித்திரிக்கின்றார்.

5495

அந்த நாளை அடைவதற்காய்: பாகம் 1. கா.சுஜந்தன். மாங்குளம்: மலரன்னை, மலராலயம், 1வது பதிப்பு, வைகாசி 2000. (வன்னேரிக்குளம்: சர்வசக்தி அச்சகம், குருகுலம்).

(6), 175 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21X13.5 சமீ.

ஈழவிடுதலைப் போராட்டத்தை மையப்படுத்திய கவிதைகளின் தொகுப்பாக இந்நூல் வெளிவந்துள்ளது. இக் கவிதைத் தொகுதி மூலம் படைப்பிலக்கியத்துறையில் தடம் பதிக்கும் சுஜந்தன் சுகாதார மருத்துவ அதிகாரியாகவும், அதே சமயம் போராளி மருத்துவராகவும் பணியாற்றியவர்.

5496

அம்மா என் ஹைக்கூ: ஹைக்கூ கவிதைகள். விக்னா பாக்கியநாதன். ஜேர்மனி: கலைவிளக்கு, Droote 19, 44328 Dortmund, 1வது பதிப்பு, 2007. (மதுரை 625 001: ஆர். ஆர். டிசைனர், 23, கோபாலக் கொத்தன் தெரு).
67 பக்கம், படங்கள், விலை: இந்திய ரூபா 40., அளவு: 21.5x13.5 சமீ.

ஆழமாகச் சிந்தனையைத் தூண்டி அழுத்தமாக ஒரு கேள்விக்கணையைத் தொடுத்து ஆணித்தரமாகப் பதிலையும் தரும் புதியவகைக் கவிதை ஹைக்கூ. கடுகு வயல் என்ற தன் ஹைக்கூ கவிதைத் தொகுப்பினையடுத்து நூலுருவில் வெளிவரும் இவரது இரண்டாவது ஹைக்கூ கவிதைத் தொகுப்பு இது. மனிதநேயம், ஏழைதாசன், இனிய நந்தவனம் ஆகிய இதழ்களில் பிரசுரமானவை. ஒவ்வொரு கவிதைகளுக்கும் ஏற்ற புகைப்படங்கள் ஹைக்கூவுடன் இணைகின்றன.

5497

அம்மா: தேர்ந்த கவிதைகள் சில. சு.குணேஸ்வரன். அல்வாய்: விஜயநாதன் கௌரி, வரதன் நிர்மலாதேவி, கொக்கட்டியவளவு, 1வது பதிப்பு, ஜனவரி 2007. (அல்வாய்: மதுரன் கிராப்பிக்ஸ்).
ix, 38 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 19x12 சமீ.

திருமதி பொன்னத்துரை இராசம்மாவின் 31ஆவது நாள் நினைவுமலராக 20.01.2007 அன்று வெளியிடப்பட்டுள்ள இந்நூலில் உள்ள கவிதைகள் இலங்கை என்ற புவியியல் வரையறைகளுக்குள் தனது தேர்வினை அடக்கிக்கொள்ளாமல் தமிழ்நாட்டுக்கு அப்பாலும் பிரபல்யம் பெற்ற பதினைந்து கவிஞர்களின் கவிதைகளையும். மூன்று மொழிபெயர்ப்புக் கவிதைகளையும் கொண்டுள்ளது. அனைத்தும் தாய், தாய்மை ஆகிய பொருள் சார்ந்தவை.

5498

அழகியது: பாட்டும் குறிப்பும். சிவங். கருணாலய பாண்டியனார். கொழும்பு: புலவர் பாண்டியனார், செம்மலர்த் தோட்டம், இரத்மலானை, 1வது பதிப்பு, 1965. (கொழும்பு 11: மெய்கண்டான் அச்சகம், செட்டியார் தெரு).
141 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை.

"அழகியதெனப் பெயரிய இப்பாட்டுப் பனுவல் உடன் பாட்டானும் எதிர்மறையானும் அழகென்பது பற்றிக் கூறு முந்நூற்றிருபத்தேழ் பாடல்களின் றொகுதி. அழகிய தென்பது தொகுதியொருமை யாதலானே இப்பனுவலகத்துக் கூறப்படுவன அழகியவையாதலொக்கும். பாட்டெல்லாம் நெடுவெண் பாட்டுக்களுள்ளே நேரிசை வெண்பா வெனப்படும். அழகியவை யெனப்பட்டன அறம் பொருளின்ப மென்னு மும்முதற் பொருளினும்படு மொருசாரன. அவை இதனகத்துத் தனித்தனிக் கோவைப்படச் செல்லாது தாய்த் தாய்ச் செல்லாநிற்கு மாதலின் இது பதினெண்கீழ்க் கணக்குப் போலத் தூய பனுவலென்னும் வகையிற் படுவதாம்" – ஆக்கியோன். கொழும்பில் தமிழ்க் கல்வியூட்டி தமிழ் நூல்கள் வெளியிட்டுத் தமிழ் வளர்த்த புலவர் சிவங். கருணாலய பாண்டியனார் 9.8.1903இல் தமிழகத்தில் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள சிற்றூரான மலையடிக் குறிச்சியில் பிறந்தவர். மதுரைத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் பாலபண்டிதர் பரீட்சையில் முதன்மையாகத் தேறி, இலங்கை வந்து 30.6.1976இல் அமரத்துவம் அடையும் வரை தமிழ் வளர்த்தவர். (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5499

அழகு: கவிதைகள். ச.அமிர்தநாதர். நுவரேலியா: எஸ்.ஏ.பெர்ணாண்டோ ஸ்தாபனம், 1வது பதிப்பு, 1965. (கொழும்பு 13: ஐலண்ட் அச்சகம், 126 புதுச்செட்டித் தெரு).
114 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18.5x13.5 சமீ.

இந்நூலில் அழகு, சமூகம், வாழ்த்து ஆகிய தலைப்புகளில் ஆசிரியரின் பல்வேறு கவிதைகள் தொகுத்தளிக்கப்பட்டுள்ளன. அழகு என்ற தலைப்பின்கீழ் இன்பம் அளிப்பவா, தமிழ், தமிழ்க் கலையே,

மலர்கள், தென்றல், கடற்கரை, அழகுப்பெண், அன்னம், என்னை அழைத்தான், குறிஞ்சி மகள், மலைநாடு ஆகிய கவிதைகளும், சமூகம் என்ற தலைப்பின் கீழ் ஏனோ அச்சம், சிரிக்கும் எழிலே, மனம், ஆய்ந்து சொல்வீர், சாவை வெல்வோம், அறிவுக்கு, கடவுளும் மனிதனும், வென்றானா, அம்மா, வயது, ஒற்றுமை, குழந்தையாய் இருந்தால், என்ன குணம், தாவணியைக் கண்டாள், அன்பு, அறிஞரும் படகோட்டியும், பெண் அழகு, அறிவு காண்போம், உயர்ந்திடுவோம், திருந்திய நல்லாள், மலர்ந்திடாய் புதிய ஆண்டே, கருகிய மொட்டு, சோமசுந்தரனார், சுவாமி ஞானப்பிரகாசர், விபுலானந்த அடிகள், வீரமாமுனிவர், புலமை சக்தி ஆகிய கவிதைகளும் இடம்பெற்றுள்ளன. வாழ்த்து என்ற தலைப்பின்கீழ், தாய்மை மற்றும் இறைவன் குறித்துப் பாடப்பெற்ற 10 பாடல்கள் இடம்பெற்றுள்ளன. இந்நூலுக்கான அணிந்துரையை யாழ்ப்பாணம், பரமேஸ்வரா கல்லூரி தமிழ் விரிவுரையாளர் வித்துவான் க.வேந்தனார் வழங்கியுள்ளார்.

5500

அறுவடை. மணிக்கவிராயர் (இயற்பெயர்: என்.மணிவாசகன்). அக்கரைப்பற்று: மகாசக்தி பப்ளிக்கேஷன்ஸ், சாகாமம் வீதி, ஆலையடி வேம்பு, 1வது பதிப்பு, ஜுன் 2001. (அக்கரைப்பற்று: மல்ட்டி ஓப்செட் அச்சகம், A.V.V. வீதி).
92 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 20x14.5 சமீ.

கல்முனையைப் பிறப்பிடமாகக் கொண்ட நூலாசிரியர் 1967இல் ஈழத்துக் கவிதை உலகில் பிரவேசித்தவர். சமுதாயம், சிந்தனை, கல்வி, பொது ஆகிய நான்கு பிரிவுகளுக்குள் 55 கவிதைகளை இவர் உள்ளடக்கியிருக்கின்றார். இவரது கவிதைகளின் உள்ளடக்கம், தமிழர் வாழ்வு, சமாதானம், பெண்ணுரிமை, ஏழைகளின் உயர்வு, சமூகம், தத்துவம், திருநாள், கல்வி, கடமை போன்ற பல விடயங்களை வெளிப்படுத்தியிருக்கின்றது.

5501

இதய மொழி. வசந்தன். மன்னார்: மருசலீன் வசந்தன் குரூஸ், பேசாலை 8, 1வது பதிப்பு, ஆகஸ்ட் 2009. (தமிழ்நாடு: நந்தினி பதிப்பகம், 169, 6ஆவது வீதி தொடர்ச்சி, காந்திபுரம், கோவை 12).
72 பக்கம், விலை: இந்திய ரூபா 30., அளவு: 18x12 சமீ.

இலங்கையில் மன்னாரில் பிறந்து தமிழகத்தில் உயர்கல்விபெறச்சென்று பின்னர் பங்களாதேஷில் மருத்துவக் கல்வியைத் தொடரும் இளம் கவிஞர் வசந்தனின் கவிதைத் தொகுப்பு இது. தனது கனதியான கவிதைகளில் கருத்தைக் கலந்து சிந்திக்க வைக்கிறார். முத்தத்தின் விலையாகின்ற ஓய்வூதியமும் அடுத்த தெருக் குப்புசாமியின் தாலாட்டும் நமக்குள் முரண்பட்டு நிற்கும் தலைமுறை இடைவெளியில் காவோலையின் துயரத்தையும் குருத்தோலையின் சயநலத்தையும் முன்னிறுத்தி சமகால சமுதாயத்தின் கொடிய வன்முறையைத் தணிந்து சாடுகின்றார். முதியோர் இல்லங்களுக்கு பெற்றோரை அனுப்பிவிட்டு தன் வீட்டுக்கு அன்னை இல்லம் என்று பொய்யெழுதும் பிள்ளைகளைச் சாடும் கவிதைகளும் இதிலுண்டு.

5502

இதயமுள்ள பாரதி (கவிதைகள்). பொன் பூபாலன். கொழும்பு 6: புரவலர் புத்தகப் பூங்காவுக்காக ஞானம் பதிப்பகம், 3B, 46ஆவது ஒழுங்கை, 1வது பதிப்பு, மார்ச் 2009. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ் பிரைவேட் லிமிட்டெட், 48 B, புளுமெண்டால் வீதி).
xiii, 66 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 22x14.5 சமீ., ISBN: 978-955-8354-30-8.

அறுபதுகளில் மலையகத்தில் உருவாகிய ஒரு முதன்மைக் கவிஞர் இவர். அறுபது வயதைத் தாண்டிய நிலையில் இவரது முதலாவது நூல் புரவலர் புத்தகப் பூங்காவின் நூல்வெளியீட்டுத் திட்டத்தில் 15ஆவது பிரசுரமாக வெளிவருகின்றது. எளிமையான சொற்பிரயோகமும், தெம்மாங்குப் பாணியிலமைந்த பாடல் அமைப்பும் ஓசைநயமும் இவரது கவிதைகளில் தூக்கலாகக் காணப்படுகின்றன. இத்தொகுப்பில் பொன். பூபாலனின் 24 கவிதைகள் இடம்பெறுகின்றன. இவரது கதை, கவிதை, நாடகம் அனைத்துமே மலையகம் என்ற தனித்துவ அடையாளத்தை நிரூபிக்க முயலும் உத்வேகம் மிக்கவையாக அமைந்துள்ளன.

5503

இது ஒரு வாக்குமூலம். வி.ரி.இளங்கோவன். பிரான்ஸ்: ஐரோப்பிய கீழைத்தேய தொடர்பு மையம், C.D.C. Europe Orient, 5, Rue Denfert Rochereau, 31000 Toulouse, 1வது பதிப்பு, மாசி 2000. (France: C.D.C. Europe Orient, 5, Rue Denfert Rochereau, 31000 Toulouse).
(6), 76 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20x14 சமீ.

பாரிசில் புலம்பெயர்ந்துவாழும் ஆசிரியரின் கவிதைத் தொகுப்பு இது. இத்தொகுப்பிலுள்ள பல கவிதைகள் புலம்பெயர்வாழ்வியலின் குறிப்பாக ஈழத்தமிழரின் பிரான்ஸ் நிலைப்பட்ட வாழ்க்கை அனுபவங்களின் பதிவுகளாகின்றன. சமூகத்தில் உறவாடி, மக்களுடன் வாழ்ந்துபெற்ற அனுபவங்கள் உணர்வுபூர்வமாக கவிதைகளில் பதிவாக்கியுள்ளார். C.D.C. Europe Orient அமைப்பின் ஐந்தாவது வெளியீடு. சித்த மருத்துவம், இலக்கியம், சிறுசஞ்சிகை வெளியீடு, ஊடகவியல் என்று பரந்துபட்ட இலக்கியப்பரப்பில் இளங்கோவனின் ஊடாட்டம் குறிப்பிடத்தக்கதாக இருந்துவந்துள்ளது. தனது பொது வாழ்வின் பெரும்பகுதியில் ஈழத்தின் புகழ்பூத்த இலக்கியவாதியான கே.டானியல் அவர்களுடன் நெருங்கிய தொடர்பினைக் கொண்டிருந்தவர் இளங்கோவன். இவரது பிற படைப்புக்களிலும் டானியலின் வழியொற்றித் தான் ஒரு பண்பட்ட மார்க்சியவாதி என்ற தளத்தில் அவர் சமூக அக்கறையில் கருத்தூன்றி நிற்பதைக் கற்றணர முடிகின்றது.

5504

இது நதியின் நாள். பெண்ணியா. (இயற்பெயர்: எம்.ஐ.நஜீபா). கொழும்பு: சிறகுநுனி வெளியீடு, 1வது பதிப்பு, டிசம்பர் 2008. (அச்சக விபரம் தரப்படவில்லை).
78 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 17.5x12.5 சமீ., ISBN: 978-955-0054-00-8.

2006இல் வெளியான *என் கவிதைக்கு எதிர்த்தல் என்று தலைப்பு வை* என்ற தனது முதலாவது கவிதைத் தொகுப்பையடுத்து வெளிவரும் இரண்டாவது கவிதைத் தொகுதி இதுவாகும். காலத்தின் இயங்குவிசை அவசரத்தில் தவறவிட்டுச் சென்ற ஒரு யுகத்தின் வலிமையான கவிதைச் செல்நெறியின் எஞ்சிய கருத்தாடலை, பெண்ணியாவின் இத்தொகுப்பிலுள்ள கவிதைகள் இன்னுமொரு பரிமாணத்தில் நிகழ்த்துகின்றன. பெண்ணியா உரையாடல் செய்யும் பிரச்சினைகளில் அதிகமானவை தமிழ்ச் சூழலில் ஏற்கெனவே நன்கு பரிச்சயமானவை. பெண்ணியா என்ற புனைபெயரில் அறிமுகமாகியுள்ள எம்.ஐ.நஜீபா கிழக்கிலங்கையின் காத்தான்குடியைச் சேர்ந்தவர்.

5505

இருண்ட காலத்தில் தொடங்கிய என் கனவுகளும் எஞ்சி இருப்பவைகளும். தேவ அபிரா (இயற்பெயர்: தெட்சணாமூர்த்தி புவனேந்திரன்). யாழ்ப்பாணம்: புக்லாப் பதிப்பகம், கௌரி வாசம், இணுவில், 1வது பதிப்பு, வைகாசி 2007. (கொழும்பு 6: டெக்னோ அச்சகம், வெள்ளவத்தை).
76 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14.5 சமீ.

“காலத்துக்கும் எனக்குமிடையிலான போரின் விளைவையும் வாழ்க்கையின் முரண்பாடுகளையும் கவிதைகளாக்கும் துணிவில் தொடங்குகிறது என் இருப்பு” என்று தொடங்கும் இக்கவிதைத் தொகுதியில் விடுதலை பற்றிய பிரக்ஞையுடன் இலக்கியமும் அரசியலும் கைகோர்த்துச் செல்கின்றன. சரிநிகர் பத்திரிகையின் வாயிலாக ஈழத்தின் படைப்பிலக்கிய உலகில் கால் பதித்தவர் தேவ அபிரா. பின்னர் களம், திசை, ழகரம், மூன்றாவது மனிதன், பெயர், ஒளி, காலச்சுவடு ஆகிய சிற்றிலக்கிய ஏடுகளிலும் வார்ப்பு. திண்ணை, பதிவுகள், ஊடறு ஆகிய இணையத்தளங்களிலும் வலம்வந்தவர். நூலுருவில் வெளிவரும் இவரது முதலாவது கவிதைத் தொகுப்பு இதுவாகும். எக்ஸ் கதிர் தொழில்நுட்பவியலாளராகப் பணியாற்றியபின் புலம்பெயர்ந்து நெதர்லாந்தில் வசித்துவருகின்றார். அங்கும் வைத்தியசாலையொன்றில் நோய் நிர்ணய எக்ஸ் கதிர்த் தொழில்நுட்பவியலாளராகப் பணியாற்றுகின்றார்.

5506

இலையுதிர் வசந்தம். விவேக். யாழ்ப்பாணம்: மணி ஓசை வெளியீடு, 12 பற்றிக்ஸ் வீதி, 1வது பதிப்பு, செப்டெம்பர் 1991. (யாழ்ப்பாணம்: மணி ஓசை அச்சகம், 12 பற்றிக்ஸ் வீதி).
40 பக்கம், விலை: ரூபா 30., அளவு: 18.5x12 சமீ.

மணியோசையின் முதலாவது வெளியீடாக வந்துள்ள இக்கவிதைத் தொகுதியில் சமகால நிகழ்வுகளை கவிதைகளாக எம் மனப்பரப்பில் பதிவுசெய்கின்றார். கவிஞனின் மன உணர்வுகள் பாதிக்கப்படும்போது, இயற்கையும் இயற்கை வழங்கிவந்த உயர்ந்த பண்பார்ந்த உவம உருவகப் படிமங்கள் எல்லாம் விகாரமடைகின்றன. கவிதைத் தொகுப்பின் தலைப்பு மட்டுமல்லாது, உள்ளே காணப்படும் துரோக நிலவு, கோர முகம் காட்டும் நிலவு, தோட்டாக் குருவிகள், விசும்பலாய் ஒலிசெய்யும் வாய்க்கால், என்பன போன்ற படிமங்களும் இதற்கு உதாரணங்களாகின்றன.

5507

இனந்தெரியாதவர்கள்: கவிதைகள். இப்னு அஸுமத். கொழும்பு 5: இப்னு அஸுமத், 121 பூங்கா வீதி, 1வது பதிப்பு, மார்ச் 2008. (கொழும்பு 12: தேவா ஒப்செட் பிரின்டர்ஸ், 3. டயஸ் பிளேஸ்).
72 பக்கம், விலை: ரூபா 120., அளவு: 20.5x14 சமீ., ISBN: 978-955-50912-0-6.

நூலாசிரியர் 3 தசாப்தங்களுக்கும் மேலாக கவிதைத் துறையில் ஈடுபட்டுள்ளவர். கொழும்பு வலம்புரி கவிதா வட்டத்தின் மூலம் புடம்போட்டு வளர்க்கப்பட்டவர். ஈழத்தில் புதுக்கவிதை மேம்பாடடைவதற்கு முன்னோடிகளுள் ஒருவராகத் திகழ்ந்தவர். சமூக அக்கறைகொண்ட இவரது கவிதைகளின் தொகுப்பாக இந்நூல் அமைகின்றது. சமூகப் பற்று, விடுதலை விருப்பம், அநியாயங்களைக் கண்டு கொதித்தெழும் போக்கு என்பன இக்கவிதைகளினூடாகப் புலப்படுத்தப்படுகின்றன. எங்கு பார்த்தாலும் மரணத்தின் ஓலங்கள், கடத்தல்கள், காணாமல் போதல்கள் இவற்றையெல்லாம் கவிதைப் படிமங்களாக்கியுள்ளார்.

5508

உணர்வுகள். நாவல் நகர் ப.உதயகுமார். நாலப்பிட்டி: நாவல் நகர் நற்பணி மன்றம், இல. 59/1, கம்பளை வீதி, பின் ஒழுங்கை, 1வது பதிப்பு, நவம்பர் 2007. (நாவலப்பிட்டி: மிட்லண்ட் பிரின்டர்ஸ்).
51 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 17.5x13 சமீ.

சிறந்த அறிவிப்பாளரும் நாடக இயக்குநரும் நடிகருமான ப.உதயகுமாரின் முதலாவது கவிதைத் தொகுதி. இந்நூல் த.திரேஸ்குமாரின் **புதைந்துவிட்ட புலமை** என்ற 49 பக்க கவிதைத் தொகுப்புடன் இணைந்ததாக வடிவமைக்கப்பட்டு இரட்டை நூலாக வெளிவந்துள்ளது. மொத்த பக்க எண்ணிக்கை 100.

5509

உராய்வு. எல்.சஞ்சீவ் காந்த். திருக்கோணமலை: வி.ஜே.பதிப்பகம், 33, புனித மரியாள் வீதி, 1வது பதிப்பு, ஜுன் 2005. (கொழும்பு 13: ஈக்வாலிட்டி கிராப்பிக்ஸ், 315 ஜெம்பட்டா வீதி).
128 பக்கம், விலை: இந்திய ரூபா 150., அளவு: 19.5x13 சமீ.

ஐ.பீ.சி. அனைத்துலக ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் வானொலியின் பிரசவகளத்தினூடாக அறிமுகமாகிய எல்.சஞ்சீவ் காந்த்தின் 54 கவிதைகளைக் கொண்ட கவிதைத் தொகுதி இது. புலம்பெயர்ந்து பிரான்சில் வாழும் இவ்விளம் கவிஞனின் கவிதைகளின் சாரத்தை "பழையதை மென்று புதிதாகத் துப்பு" என்னும் வரிகள் உணர்த்தி நிற்பதாகவும், அதே வேளையில் தொகுப்பு முழுவதும் இதுவே பாடுபொருளாகவும் துருத்தி நிற்பதாக இந்நூலுக்கு அணிந்துரை வழங்கியுள்ள கவிஞர் கி.பி.அரவிந்தன் குறிப்பிட்டுள்ளார்.

5510

உள்மன யாத்திரை. நவீனன். ரஷ்யா: வைகறை வெளியீட்டகம், த.பெ.எண் 45, Smolensk 214019, 1வது பதிப்பு, நவம்பர் 2000. (அச்சக விபரம் தரப்படவில்லை).
84 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20x14 சமீ.

நவீனன் தான் ரஷ்யாவில் மொஸ்கோ நகரில் கல்வி கற்றுக்கொண்டிருக்கும் போது எழுதிய கவிதைகளின் தொகுப்பு. இடைநிலைக் கல்வியைக் கற்கும் போதே சார்ள்ஸ் என்ற புனைபெயரில் இவர் அணையாத அறிவாலயம், விடியலின் கானம், இன்னமும் இருட்டினிலே போன்ற கவிதைத் தொகுதிகளை வெளியிட்டவர். மொத்தம் 13 நூல்களை இவர் தன் இளம் வயதிலேயே வெளியிட்ட பெருமையைப் பெற்றவர்.

5511

உள்ளுக்குள்: குறுங்கவிதைத் தொகுப்பு. வீமன் ராஜு. நாவலப்பிட்டி: கட்டபுலா பௌர்ணமி கலை இலக்கிய வட்டம், குயின்ஸ்பெரி, கட்டபுலா, 1வது பதிப்பு, ஜுன் 2008. (நாவலப்பிட்டி: ராஜா அச்சகம், இல. 6, தியேட்டர் வீதி).
(6), 58 பக்கம், விலை: ரூபா 140., அளவு: 17.5x12.5 சமீ.

குயின்ஸ்பெரி ராஜு என்றும் இலக்கிய உலகில் அழைக்கப்பெறும் மலையக இளங்கவிஞரின் இரண்டாவது புதுக்கவிதைத் தொகுதி. இவர் கல்வி பயிலும் காலத்தில் கட்டபுலா தமிழ் மகாவித்தியாலய இலக்கிய மன்றத்தின் மூலம் உதயம் என்ற கவிதைத் தொகுப்பின் மூலம் அறிமுகமானவர். மலையக மக்களின் மன உணர்வுகளைப் பிரதிபலிப்பதுடன், இக்கவிதைகள் நட்பு, பொருளாதாரம், நகைச்சுவை, பாலியல், பெண்ணியம், மனித உரிமை என்று பல விடயங்களையும் பேசுகின்றன.

5512

ஊறும் அமைதி. கந்தையா நவரேந்திரன். பிரான்ஸ்: க.நவரேந்திரன், 23 rue CDT Rolland, 93350 Le Bourget, 1வது பதிப்பு, ஜுன் 2001. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ் பிரைவேட் லிமிட்டெட், 48 B, புளுமெண்டால் வீதி).
viii, 104 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14 சமீ.

சட்டம், ஆங்கிலம் கற்பிக்கும் ஆசிரியரான கந்தையா நவரேந்திரனை இக்கவிதைத் தொகுதி தமிழ் கவிதாரசிகர்களுக்கு ஒரு நல்ல கவிஞராக அறிமுகப்படுத்துகின்றது. ஜித்து கிருஷ்ணமூர்த்தியின் சிந்தனைகளின் சாரத்தைத் தனது **விழிப்புணர்வு பற்றிய விளக்கங்கள்** என்ற நூலின் வாயிலாகத் தமிழ் வாசகர்களிடம் கொண்டு சேர்த்ததன்மூலம் ஏற்கெனவே தமிழ் இலக்கிய உலகில் அறிமுகமானவர் இவர்.

5513

எங்கள் வழி. என்.மணிவாசகன். (புனைபெயர்: மணிக்கவிராயர்). அக்கரைப்பற்று: மகாசக்தி வெளியீட்டகம், சாகாமம் வீதி, 1வது பதிப்பு, 2008. (அக்கரைப்பற்று: நியு செலெக்ஷன் பிரின்டர்ஸ்).
(7), 93 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 20.5x14.5 சமீ.

கல்முனையைப் பிறப்பிடமாகக் கொண்ட நூலாசிரியர் 1967இல் ஈழத்துக் கவிதை உலகில் பிரவேசித்தவர். மணிக்கவிராயரின் கவிதைகளின் தொகுப்பான இந்நூலில் 56 மரபுக்கவிதைகள் இடம்பெற்றுள்ளன.

5514

எண்ணங்களின் வண்ணங்கள். பாலரவி. London E 17 4SA: பாலரவி, 61 Hoe Street, 1வது பதிப்பு, 2009. (லண்டன்: ஜே.ஆர்.பிரின்ட்)
104 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 19.5x14 சமீ.

லண்டன் ஜே.ஆர்.அச்சகத்தின் உரிமையாளரான பாலரவி ஒரு கவிஞரும்கூட. வோல்த்தம்ஸ்ரோ தமிழ்ப் பாடசாலையின் தமிழாசிரியராகவும் சேவையாற்றுகிறார். அவ்வப்போது இவர் எழுதிய கவிதைகளின் தொகுப்பாக இந்நூல் வெளிவந்துள்ளது. இந்த நூலுக்கு நூலியல் விபரங்களைத் தரும் தலைப்புப் பக்கம் இல்லாமை பிரதான நூலியல்குறைபாடாக அமைகின்றது.

5515

எரிச்சல்: கவிதைத் தொகுப்பு. பிரபா. ஸ்பிரிங் வெளி: சிறுதுளி பதிப்பகம், 1வது பதிப்பு, ஆண்டு விபரம் தரப்படவில்லை. (பதுளை: ஊவா பிரிண்டர்ஸ்).
64 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 19.5x11.5 சமீ.

மலையகக் கவிஞர் சிறுதுளி-பிரபாவின் குறும்பாக்களினதும், புதுக்கவிதைகளினதும் தொகுப்பு. இவை முன்னர் தினமுரசு, ஜனனி, சங்கமம், சூடாமணி, யாத்ரா, கவிதைக் கலசம், இதய சங்கமம், சூரியன், சக்தி ஆகியவற்றில் வெளிவந்தவை.

5516

எரிநெருப்பிலிருந்து. ஓட்டமாவடி அரபாத். வாழைச்சேனை: S.H.M.அரபாத், 71, பஸீர் வீதி, மாவடிச்சேனை, 1வது பதிப்பு, ஒக்டோபர் 1996. (திஹாரியா: திஹாரி இஸ்லாமிய அங்கவீனர் நிலைய அச்சகம்).
45 பக்கம், விலை: ரூபா 40., அளவு: 17.5x10.5 சமீ.

இலங்கையில் இடம்பெற்ற போரினால் தமிழ்-முஸ்லிம் இரு இனங்களும் சிங்கள இராணுவத்தின் ஆக்கிரமிப்புக்குட்பட்டு பல இழப்புகளையும் சோகங்களையும் சந்தித்து வருகின்றனர். போரின் தாக்கங்கள், ஆக்கிரமிப்புக்கு எதிரான போர்க்குரலின் எதிரொலி என்பன இக்கவிதைகளில் மேலோங்கி நிற்கின்றன. கிழக்கிலங்கை அவ்வப்போது சந்தித்த குண்டுவீச்சு, ரயர் எரிப்பு, அகதி நிலை, திடீர் புத்தர் சிலை, சேதனைச் சாவடி, காணாமல் போதல், இனவெறி எதிர்ப்பு என்பன இக்கவிதைகளின் பாடுபொருள்களாகின்றன.

5517

எழுதாத உன் கவிதை: தமிழீழப் பெண்கள் கவிதைகள். அரசியல்துறை. தமிழீழம்: கப்டன் வானதி வெளியீட்டகம், அரசியல்துறை-மகளிர், 1வது பதிப்பு, ஆவணி 2001. (முல்லைத்தீவு: சந்திரன் பதிப்பகம், புதுக்குடியிருப்பு)
x, 72 பக்கம், விலை: ரூபா 125., அளவு: 21x14 சமீ.

தமிழீழ விடுதலைப்புலிகளின் பெண்போராளிகளாலும் விடுதலைப்புலிகளின் பவ்வேறு அமைப்புகளில் பணிபுரியும் பெண்களாலும் எழுதப்பட்ட 37 கவிதைகள் இடம்பெறுகின்றன. 26 பேரின் படைப்புக்கள் இவை. ஆயுதப்போராட்டம், அந்தச் சூழலின் வாழ்நிலை, உயிர்வாழ்தலின் நிச்சயமின்மை, தியாகத்துக்குத் தயாராகிக் களத்தில் நிற்கின்ற உறுதி, விடுதலை வேட்கை, காதல், தாயன்பு, சமூகக் கருத்துக்கள் மீதான விமர்சனம் மற்றும் பெண்விடுதலை எனப் பல்வேறு கருத்துக்களினதும் உணர்வுகளினதும் வெளிப்பாடாக இந்தத் தொகுப்பிலுள்ள கவிதைகள் அமைந்துள்ளன. களமுனையில் நிற்கும் பெண்கள், சமூகத்தளத்தில் நிற்கும் பெண்கள் எனப் பலமுகம் கொண்ட பெண்கள் இலக்கியம் என்ற ஒரு முகத்தில் சந்தித்துக்கொள்கின்றார்கள். தம் உணர்வுகளை கவிதைமொழியில் பேசிக்கொள்கின்றார்கள். எழுதாத உன்கவிதையை எழுதத் தொடங்கிவிட்டோம் என்ற சபதத்துடன் தமிழீழத்தின் புதிய ஒளியில் கலக்க விரைகின்றனர். கப்டன் வானதி வெளியீட்டகத்தின் முதலாவது பிரசுரமாக இது வெளிவந்துள்ளது.

5518

என் பிரிய ராஜகுமாரிக்கு. வி.மைக்கல் கொலின். திருக்கோணமலை: தாகம் கலை இலக்கிய வட்டம், 156, கிறீன் வீதி, 1வது பதிப்பு, ஜுலை 1992. (திருக்கோணமலை: விஸ்டம் பிரிண்டர்ஸ்).
xiv, 42 பக்கம், விலை: ரூபா 50., அளவு: 22x14.5 சமீ.

ஐந்தாவது தாகம் வெளியீடாக வெளிவந்துள்ள கவிதைத் தொகுதி. காதலும் அரசியலும் இன்றி இன்று மனிதன் வாழ்ந்துவிடமுடியாத நிலையில், காதலையும் விடுதலைப் போராட்டத்தையும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்களாகக் காணும் இக்கவிஞனின் கவிதைகளில் காதலும் இருக்கின்றது. தேசத்தின் விடுதலை நோக்கிய வேகமும் இருக்கின்றது. தாகம், தினகரன், மஞ்சரி, மாணவன், தொண்டன், குமரன், இனிமை, கோணைத்தென்றல் ஆகிய ஊடகங்களில் அவ்வப்போது பிரசுரமான கவிதைகள் இவை.

5519

ஏனிந்தப் பெருமூச்சு? வி.கந்தவனம். யாழ்ப்பாணம்: யாழ். இலக்கிய வட்டம், 1வது பதிப்பு, ஆகஸ்ட் 1967. (கொழும்பு 13: ரெயின்போ பிரின்டர்ஸ், 231 ஆதிருப்பள்ளித் தெரு).
57 பக்கம், விலை: ரூபா 1.30

அரங்கக் கவிதைகளின் இத்தொகுப்பு, யாழ். இலக்கிய வட்டத்தின் ஆறாவது வெளியீடாக பிரசுரமாகியுள்ளது. இத்தொகுப்பில் 5 மேடைகளில் அரங்கேற்றப்பட்ட 5 பாடல்கள் இடம்பெற்றுள்ளன. மலையகத் தமிழரின் பெருமூச்சை முதலாவதாக ***ஏனிந்தப் பெருமூச்சு*** என்ற கவிதையில் புலமைத்திறத்துடன் வெளிவிடுகின்றார். இது அட்டன் ஹைலண்ட்ஸ் கல்லூரித் தமிழ் விழாவில் 16.3.1963 அன்று மேடையேறியது. இரண்டாவதாக வீர சுதந்திரம் வேண்டிநின்ற பாரதியாரின் கனவை ***பாரதி*** என்ற கவிதையில் பாடி நெகிழ்கிறார். இது மாத்தளை இலக்கிய வட்டம் பாரதி விழாவில் புனித தோமையர் கல்லூரியில் 6.10.1963இல் அரங்கேறியது. ***கனவுலகம்*** என்ற மூன்றாவது கவிதை வாழ்வாங்கு வாழ வழிகாட்டும் வள்ளுவன் திருக்குறள் பற்றியது. இது யாழ்ப்பாணம், திருநெல்வேலி செங்குந்த இந்துக் கல்லூரித் தமிழ்விழாவில் 12.9.1964இல் அரங்கேறியது. **வள்ளல் நல்லதம்பி** என்ற நான்காவது கவிதை நீர்கொழும்பு இந்து வாலிபர் சங்கத் தமிழ் விழாவில் 30.1.1965இல் அரங்கேறியது. மு.நல்லதம்பி-நீர்கொழும்பின் பிரபல வர்த்தகர், இந்துவாலிபர் சங்கத்தின் தலைவர்களுள் ஒருவர். இறுதியாக இடம்பெற்றிருப்பது இலங்கை முஸ்லிம் கவிஞர் அருள்வாக்கி அப்துல் காதிறுப் புலவர் பற்றிய பாக்களாகும். கனக செந்திநாதனின் அணிந்துரையும், யாழ்வாணனின் பதிப்புரையும் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5520

ஒரு அகதியின் கைரேகை. இணுவை சக்திதாசன். டென்மார்க்: இணுவை இளந்தென்றல் வெளியீடு, Kiledvangsparken 36, 4390 vipperod, 1வது பதிப்பு, ஏப்ரல் 2009. (டென்மார்க்: சத்யன் லே அவுட்).
128 பக்கம், விலை: ரூபா 70., அளவு: 21.5x14 சமீ.

டென்மார்க்கிலிருந்து வெளியிடப்படும் இணுவை இளந்தென்றல் பதிப்பகத்தின் முதலாவது வெளியீடு. புலம்பெயர் வாழ்விலும் தமிழின் செவ்விய உயிரோட்டம் கொண்டு ஆற்றலுடன் கவிதை எழுதும் இளம்

படைப்பாளிகளுள் சக்திதாசன் குறிப்பிடத்தக்கவர். இவரது கவிதைகள் புலம்பெயர்ந்த வாழ்வின் வேதனைகளை வெளிப்படுத்தும் அதே வீச்சில் அன்றாடம் இலங்கையில் நடக்கும் இன அழிப்பைக் கண்டு மனம் கொதிக்கிறார். உடல் புகலிடத்திலும், ஆன்மா புலத்திலுமாக அவலப்படும் இருதலைக்கொள்ளி எறும்பின் நிலை அவரது கவிதைகளில் பிரதிபலிக்கின்றன. ஏற்கெனவே காற்றைக் கானமாக்கிய புல்லாங்குழல் என்ற தலைப்பில் இவரது கவிதைநூல் வெளிவந்தது.

5521

ஒரு வட்டத்துள் சில புள்ளிகள். அறநிலா (இயற்பெயர்: ஏ.ஆர்.நிஹ்மத்துல்லா). மருதமுனை: பட்டதாரிகள் சங்கம், வாய்ப்பாடு 2, 1வது பதிப்பு, மே 1988. (கல்முனை: அஸீஸ் பிரிண்டிங்).
40 பக்கம், விலை: ரூபா 15., அளவு: 18x12.5 சமீ.

அறநிலா என்ற புனைபெயருள் இலக்கிய உலகில் உறவாடும் கிழக்கிலங்கைக் கவிஞர் ஏ.ஆர்.நிஹ்மத்துல்லாவின் கவிதைத் தொகுப்பு இது. புதுக்கவிதையின் முரண்நிலைக் கருத்தேற்றங்கள் அறநிலாவின் ஒரு முக்கிய கவிதையாக்க முறையாக இருக்கின்றது. கற்பனாவாத அதி மனோரதிய சோடனை வகைகளின்றி, அவை தவிர்ந்த விகடத் துணுக்குகள், படிம வரைவுகள், வசனச் சொரியல்கள், முரண்நிலைக் கூற்றுகள் ஆகியன இவரது புதுக்கவிதைகளில் பரவலாகக் காணக்கிடைக்கின்றன.

5522

கடமையே கண்ணாக: கவிதைகள். மஞ்சுளா கிருஷ்ணசாமி. சென்னை 600017: மணிமேகலைப் பிரசுரம், தபால் பெட்டி எண் 1447, இல.7, தணிகாசலம் சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2007. (சென்னை 94: பி.வி.ஆர். ஆப்செட்).
xii, 84 பக்கம், விலை: இந்திய ரூபா 30., அளவு: 18X12 சமீ.

1985முதல் எழுதப்பட்ட மரபுக் கவிதைகளும் புதுக்கவிதைகளும் கொண்ட தொகுப்பு. தனது எண்ணங்களையும் ஆதங்கங்களையும் பகிர்ந்துகொள்ள கவிதையை ஊடகமாக்கிக் கொண்டுள்ள ஒரு மலையகத்துப் பெண் கவிஞரின் கன்னிப்படைப்பு இது. காதல், இயற்கை, மலை, மழை, மரம், பறவை, நீரோடை, தான் சார்ந்த சமூகம் என்று அனைத்தையும் தன் கவிதை வரிகளுக்குள் கொண்டுவந்துள்ளார்.

5523

கண்ணாடி முகங்கள்: பெண்களின் கவிதைகள். விஜயலட்சுமி சேகர். மட்டக்களப்பு: சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம், இல. 20, டயஸ் லேன், 1வது பதிப்பு, 2009. (மட்டக்களப்பு: வனசிங்கா பிரிண்டர்ஸ், இல.126/1, திருமலை வீதி).
(4),75 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 18.5 x13 சமீ., ISBN: 978-955-8695-05-0.

மட்டக்களப்பு சூரியா பெண்கள் அபிவிருத்தி நிறுவனத்தின் வெளியீடான **பெண்** சஞ்சிகையில் எழுதும் படைப்பாளிகளின் கவிதைகளின் தொகுப்பு. குமுதினி, T.உருத்திரா, அனார், ஜெயந்தி தளையசிங்கம், விஜயலட்சுமி சேகர், கலைமகள், குகநிதி, ஆரையூர் தாமரை, வாசுகி குணரத்தினம், இராமையா அருள்ஜோதி, சுகன்யா, சுதாகினி சுப்பிரமணியம், இலங்கேஸ்வரி, தம்பிலுவில் ஜெகா, சுமி, மஹுரா ஆகியோரின் படைப்புகள் இதில் இடம்பெற்றுள்ளன.

5524

கண்ணீர்ப் பயணங்கள்: கவிநூல் பாகம் இரண்டு. ம.யாழ் ஆன்சிலின். யாழ்ப்பாணம்: தமிழ்த்தாய் வெளியீடு, 1வது பதிப்பு, ஒக்டோபர் 2004. (கிளிநொச்சி: நிலா பதிப்பகம்).
(2), 113 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 21x15 சமீ.

ஈழ விடுதலைப் போராட்டம் பற்றியும், போராளிகள் பற்றியும் எழுதப்பட்ட 45 உணர்ச்சிக் கவிதைகளின் தொகுப்பு. சூழ்ச்சிகள், மாவீரர்கள், தலையாட்டிகள், ஊனம், பதுங்குகுழிகள், சகுனிகள், கண்ணிவெடிகள், என்று சமகால நிகழ்வுகளின் கவிதைப் பதிவாக இவை அமைகின்றன.

5525

கவிதைகளால் அர்ச்சனைப் பூக்கள். என்.மணிவாசகன். (புனைபெயர்: மணிக்கவிராயர்).அக்கரைப்பற்று: மகாசக்தி வெளியீட்டகம், சாகாமம் வீதி, 1வது பதிப்பு, ஜனவரி 2009. (அக்கரைப்பற்று: நியு செலெக்ஷன் பிரின்ரர்ஸ்).
(2), 34 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x14.5 சமீ.

அக்கரைப்பற்று, ஆலையடி வேம்பு பிரதேச செயலக கலாசாரப் பேரவையால் கௌரவிக்கப்பட்ட கலைஞர்களுக்கும், அக்கரைப்பற்று, ஆலையடி வேம்புப் பிரதேச மகாசக்தி அமைப்பினால் கௌரவிக்கப்பட்ட சமூக சேவையாளர்களுக்கும் கவிதையால் வாழ்த்தி அர்ச்சிக்கும் ஒரு புதிய முயற்சி இது. லயன் டாக்டர் அருணகுலசிங்கம், கல்விமான் க.கதிர்காமத்தம்பி, ஆசிரியை சோதிமுத்து வேலுப்பிள்ளை, அதிபர் கதிரேசபிள்ளை கந்தையா, அண்ணாவிமணி கவிஞர் க.வடிவேலர், சோதிடக்கலைஞர் கு.கணபதிப்பிள்ளைக் குருக்கள், முறிவு வைத்தியர் மனோன்மணி மயில்வாகனம், விஷக்கடி வைத்தியர் முதியான்கலாகே சந்தரத்ன, சைவப்புலவர் எஸ்.சாமித்தம்பி, வைத்தியர் வ.தயானந்தராஜா, கவிஞர் வைரமுத்து ஞானமாணிக்கம், கவிஞர் என்.மணிவாசகன், ஊடகவியலாளர் வி.பி.சிவப்பிரகாசம், இறைபணியாளர் தம்பியப்பா கைலாயபிள்ளை, சமூகஜோதி சண்முகம் செந்தூராஜா, வைத்தியர் அருளம்மா சுப்பையா, மத்தளக் கலைஞர் வீரக்குட்டி சுந்தரலிங்கம், சிற்பக் கலைஞர் கணேசன் ஐயர், கூத்துக் கலைஞர் சுந்தண் பத்தக்குட்டி, கூட்டுறவு உதவி ஆணையாளர்கள் எஸ்.கே.அனந்தராஜா, எஸ்.தனபாலசிங்கம், சைவ நூலாசிரியர் கந்தையா லோகநாதக் குருக்கள், கவிஞர் கே.பாக்கியயராஜா, நா.நவநாயகமூர்த்தி, மூத்தான்குட்டி அருள்ராஜா, முதலாளி கே.ஜி.ஆரியதாசா, வெள்ளைக்குட்டி ஞானமுத்து ஆகியோர் மேற் பாடப்பெற்ற வாழ்த்துக் கவிதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன.

5526

கவிதைச் செல்வம். ச.வே.பஞ்சாட்சரம் (தொகுப்பாசிரியர்). சுன்னாகம்: சி.சரவணபவன், ஆசிரியர்-கலைச்செல்வி, யாழ். தமிழ் இலக்கிய மன்றம், கந்தரோடை, 1வது பதிப்பு, ஆண்டு விபரம் குறிப்பிடப்படவில்லை. (சுன்னாகம்: கலாதேவி அச்சகம்).
44 பக்கம், விலை: ரூபா 1.00

கவிஞர் இ.முருகையனின் முன்னுரையுடன் கூடிய இக்கவிதைத் தொகுப்பில் இலங்கையின் இருபத்தொன்பது இளம் கவிஞர்களின் கவிதைகள் இடம்பெற்றுள்ளன. திமிலைக்கண்ணன். ஆ.லோகேஸ்வரன், பா.சத்தியசீலன், பசீல் காரியப்பர், முகிலன், துரைசிங்கம், ஆரையூர் அமரன், ஆடலிறை, ஆ.காமாட்சி, மு.பொன்னம்பலம், ஆ.ச.கண்ணன், சபா.ஜெயராசா, கரவைக் கபிலன், திமிலை மகாலிங்கம், புரட்சிமாறன், வ.கோவிந்தபிள்ளை, இளங்குமரன், ஏ.இக்பால், செ.து.தெட்சிணாமூர்த்தி, முத்து சிவஞானம், மு.சுந்தரம், வெ.இராமநாதன், ஜீவா, ச.வே.பஞ்சாட்சரம், குமரன், ஐயன்னா, மணியம், க.உமாமகேஸ்வரன், சோ.பரமசாமி ஆகிய கவிஞர்களின் கவிதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. இந்நூல் 1970க்கு முன்னர் வெளியிடப்பட்டுள்ளது. (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5527

கனகி புராணம். நட்டுவச் சுப்பையனார் (மூலம்), சிவங். கருணாலய பாண்டியனார் (விரிவுரை). வட்டுக்கோட்டை: மு.இராமலிங்கம், 1வது பதிப்பு, 1961. (கொழும்பு 12: சுதந்திரன் அச்சகம்).
25 பக்கம், விலை: சதம் 50.

25 செய்யுள்கள் கொண்ட இத்தொகுப்பு க.ச.அருள்நந்தி அவர்களின் முன்னுரையுடனும், புலவர் சிவங்.கருணாலய பாண்டியனார் வழங்கிய விரிவுரையுடனும் கூடியது. (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5528

கனலாய் எரிகிறது: கவிதைத் தொகுதி. கே.எம்.ஏ.அஸீஸ். கொழும்பு 6: ஞானம் பதிப்பகம், 3B, 46ஆவது ஒழுங்கை, 1வது பதிப்பு, கார்த்திகை 2007. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ் பிரைவேட் லிமிட்டெட், 48 B, புளுமெண்டால் வீதி).
x,80 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 22x14.5 சமீ., ISBN: 978-955-8354-16-2.

1976களில் இருந்து நேரடியாகக் கண்ட பல அநுபவங்களின் சங்கமத்தில் அவை தனது இதயக் கனல்கலாக எரிந்தபோது ஏற்பட்ட உணர்வுக் கருவூலங்களே இக் கவிதைத் தொகுப்பின் வெளிப்பாடாகும் என்று கூறும் கவிஞரின் இந்நூல், 1984ம் ஆண்டு வர்த்தக கப்பல்துறை அமைச்சின் ஆதரவில் ஆக்கவுரிமை வியாபாரக் குறி பதிவகத்தினால் தேசிய ரீதியிலான ஊக்குவிப்பு இரண்டாம் வருட இலக்கியப் போட்டியில் முதற்பரிசுபெற்ற ஒருநூலின் விரிவாக்கிய பதிப்பாகும். புரவலர் புத்தகப் பூங்காவின் மாதம் ஒரு நூல்திட்டத்தின் கீழ் வெளிவந்த இரண்டாவது நூல்.

5529

காசி ஆனந்தன் பக்திப் பாடல்கள். காசி. ஆனந்தன். மட்டக்களப்பு: காசி ஆனந்தன் கவிதைத் தொகுப்பு வெளியீட்டுக் குழு, 1வது பதிப்பு, ஜுலை 1965. (மட்டக்களப்பு: பாத்திமா அச்சகம்).
10 பக்கம், விலை: சதம் 25.

இந்நூலில், உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தன் (இயற்பெயர்: காத்தமுத்து சிவானந்தன்) பாடிய பக்திப் பாடல்கள் இடம்பெற்றுள்ளன. ஒரு முகம் பார்ப்பானா, இறைவன் எண்ணம் எதுவோ, தெள்ளு தமிழ் இறைவா, அணைத்தாண்ட அழகுத் தெய்வம், முருகையா கொஞ்சம் உருகையா, முல்லை நிலத்து முகில்வண்ணன், மண்ணை மதிப்பதில்லை உன்னை மறப்பதில்லை, தேடி வருவேன், வடிவேலன் இன்னும் வரவில்லை, கந்தன் எங்கள் தந்தை ஆகிய பாடல்கள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5530

காற்றைக் கானமாக்கும் புல்லாங்குழல். இணுவை க.சக்திதாசன். கொழும்பு 13: மல்லிகைப் பந்தல், 201/4, ஸ்ரீ கதிரேசன் வீதி, 1வது பதிப்பு, ஜுன் 2008. (கொழும்பு 12: Happy Digital Centre (Pvt) Ltd, 75, 1/1 Sri Sumanatissa Mawathe).
xxii, 72 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 22x15 சமீ., ISBN: 978-955-8250-41-9.

டென்மார்க்கில் புலம்பெயர்ந்து வாழும் சக்திதாசன் யாழ்ப்பாணத்தில் இணுவிலைப் பிறப்பிடமாகக் கொண்டவர். பத்திரிகைகளிலும், புகலிட வானலையிலும் ஒலிபரப்பான கவிதைகளின் தொகுப்பாக இந்நூல் வெளிவந்துள்ளது. ஆச்சியின் வளவு முதற்கொண்டு, தாழ்வாரத்தில் குந்தியிருந்து இயற்கையோடு இரண்டறக் கலந்த வாழ்வு தொலைந்துபோய், தாழ்வார அளவேயான ஒரு வீட்டில் சிறைப்பட்டுப்போன இருப்புகளின் குரல்களாய் சக்திதாசனின் கவிதைகள் அமைகின்றன. இக்கவிதைச் சித்திரங்களின் மூலம் நாம் ஒரு ஸ்கன்டினேவிய நாட்டின் நிலப்பரப்பின் வரைபடங்களையும் தரிசிக்க முடிகின்றது. அவ்வரைபடங்களை அவர் உள்ளடக்க வழியாக மட்டுமன்றி, அவற்றை எடுத்துச் செல்லும் மொழியில் அந்நிலப்பரப்பின் வாசனையும் கலந்து ஒன்றிப்போக வைக்கின்றார்.

5531

குடையும் அடைமழையும். கிண்ணியா ஏ.எம்.எம்.அலி. கிண்ணியா 5: ஹாஜரா வெளியீட்டகம், அடப்பனார் வயல், 1வது பதிப்பு, ஒக்டோபர் 2005. (தெகிவளை: ஏ.ஜே.பிரின்ட்ஸ், 44, புகையிரத நிலைய வீதி).
xx, 183 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 22x14.5 சமீ., ISBN: 955-99389-0-8.

70களில் இலக்கிய உலகில் காலடி வைத்த ஆசிரியர் மரபுக்கவிதைகள் எழுதுவதில் ஆர்வம் கொண்டவர். இது இவரது முதலாவது கவிதைத் தொகுதி. சமுதாயத்தில் நடக்கும் அராஜகங்களை ஈனத் தனங்களைக் கண்டு கவிஞரின் உள்ளம் கொதிக்கின்றது. பிந்துனுவெவ முகாம் காடையர்களின் வெறியாட்டம் குறித்த அவரது கவிதை இதற்கு உதாரணமாகின்றது, குடையும் அடைமழையும் என்ற தலைப்புக் கவிதை இன்றைய நாகரீக வாழ்வைச் சாடுகின்றது.

5532

குருதி வரையும் தேசம். பா.உதயகுமார். நோர்வே: பா.உதயகுமார், நோர்வே தமிழர் கலை பண்பாட்டுக் கழகம், Dr. Dedichens V 84, 0675 Oslo, 1வது பதிப்பு, நவம்பர் 2007. (அச்சக விபரம் தரப்படவில்லை).
(7), 66 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14 சமீ.

இக்கவிதைத் தொகுதியில் உள்ள கவிதைகள் நான்கு வகைக்குள் அடங்குகின்றன. கொட்டிய குருதியால் கட்டப்படும் தேசமென ஈழத்துக் கவிஞன் பாடிய தேசத்தின் துயர் உணராத உலகமென்ன உலகம் என்று சர்வதேசத்தின் இரண்டகத்தினை விழிப்பது ஒரு வகை. விடுதலைக்காக வித்தான வீரர்கள் பற்றிய நலம் பாராட்டல் இரண்டாம் வகை. மாறும் இந்த உலகில் மாறாமல் பழமைப்பிடிப்போடு வாழும் எமது புலம்பெயர் தமிழ்ச் சமூகம் பற்றிய மடமை விளம்பல் ஒரு வகை, அலைந்துலை வாழ்வின் பிரிவுத் துயரைப் பாடும் கவிதைகள் நான்காம் வகை. இந்நால்வகைக் கவிதைகளின் சங்கமமாகவே இத்தொகுப்பு அமைந்துள்ளது. தாயகத்தில் யாழ்ப்பாண மாவட்டத்தில் சரவணையில் பிறந்து வளர்ந்து வேலணை மத்திய மகா வித்தியாலயத்தில் கல்வி பயின்ற உதயகுமார் 1988ம் ஆண்டு முதல் நோர்வே தலைநகர்

ஒஸ்லோவில் வாழ்ந்து வருகின்றார். ஒஸ்லோ பல்கலைக்கழகத்தில் சமூகவியல்துறையில் உயர்கல்வி முடித்து, நோர்வேயின் தொழில்வாய்ப்புத் திணைக்களத்தில் அதிகாரியாகக் கடமையாற்றுகின்றார்.

5533

குறள் கூறும் மலையகம். க.ப.லிங்கதாசன். அக்கரப்பத்தனை: வினாஸ் வெளியீடு, பசுமலை, 1வது பதிப்பு, வைகாசி 1967. (நாவலப்பிட்டி: ஸ்ரீ ஆத்மஜோதி அச்சகம்).
26 பக்கம், விலை: சதம் 70.

தெய்வ வழிபாட்டில் மலையகம், இல்லற வாழ்வின் இனிய பண்புகள், மழலைச் செல்வங்கள், கல்விக் கண்ணோட்டத்தில் ஒரு துளி, பழமையும் புதுமையும் ஆகிய ஐந்து தலைப்புகளில் அமைந்த மலையகம் சார்ந்த கவிதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. ஓவியர் கிரிஜாவின் ஓவியத்தை முன்னட்டைப் படமாகக்கொண்டு வெளிவந்துள்ள இந்நூலுக்கான மதிப்புரையை ஆத்மஜோதி ஆசிரியரும் நாவலப்பிட்டி கதிரேசன் குமார மகாவித்தியாலயத் தலைமை ஆசிரியருமான நா.முத்தையா வழங்கியுள்ளார். (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5534

குறிஞ்சித் தென்னவன் கவிச்சரங்கள். குறிஞ்சித்தென்னவன் (மூலம்), சாரல்நாடன் (தொகுப்பாசிரியர்). கொட்டகலை: சாரல் வெளியீட்டகம், 7, ரொசிட்டா பல்கூட்டுச் சந்தைத் தொகுதி, 1வது பதிப்பு, டிசம்பர் 2007. (கொழும்பு 6: டெக்னோ பிரிண்டர்ஸ், 55 டாக்டர் ஈ.ஏ. குரே மாவத்தை).
xxxii, 160 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 22x14.5 சமீ., ISBN: 978-955-8589-15-1.

மலையகக் கவிஞர் குறிஞ்சித் தென்னவன் (இயற்பெயர்: சுப்பையா வேலு) 12.3.1934இல் பிறந்தவர். 19.01.1998 இல் மறைந்தவர். அவர் மறைந்து பத்தாண்டுகளின் பின்னர் வெளிவரும் அவரது கவிதைகளின் தொகுப்பு இது. ஏற்கெனவே குறிஞ்சித் தென்னவனின் கவிதைகள் அவ்வப்போது சிறு நூல்களாக இடம்பெற்றுள்ளன. இந்நூல் தென்னவனின் அச்சு ஏறாத கவிதைகள், சஞ்சிகைகளில் எழுதியவைகள் அனைத்தையும் தொகுத்து கால வரிசை விபரங்களுடன் வெளியிடப்பட்டுள்ளது. காட்சிப்படுத்தும் திறன் அவரது கவிதைகளிலும் பாடல்களிலும் நிறைந்து காணப்படுகின்றன. இத்தொகுப்பில் மலையகப் பெண்கள், புதிய உலகம், தொழிலாளத் தோழர்கள், இரங்கற் பாக்கள், இன வன்முறைகள், புதுக்கவிதை, குறும்பா என்று அவரது பரந்து விரிந்த ஆக்கங்களின் செழுமையை உணரமுடிகின்றது. 96 கவிதைகள் இத்தொகுப்பில் இடம்பெறுகின்றன. கவிதைகளின் முதல் அடியின் அகர வரிசை ஒழுங்கும் ஆரம்பத்தில் தரப்பட்டுள்ளன. *கவிஞரும் வாழ்வும் கவிதையும்* என்ற தலைப்பில் குறிஞ்சித் தென்னவன் பற்றிய தொகுப்பாசிரியரின் கட்டுரையும் பதிவுக்குள்ளாகியுள்ளது.

5535

கேணிப் பித்தன் கவிதைகள். ச.அருளானந்தம். (புனைபெயர்: கேணிப்பித்தன்). திருக்கோணமலை: அருள் வெளியீட்டகம்: 37/7, மத்திய வீதி, உவர்மலை, 1வது பதிப்பு, ஜனவரி 2002. (கொழும்பு 13: கீதா பப்ளிக்கேஷன்ஸ், 38/4, சிவானந்தா வீதி).
x, 97 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 20.5x14.5 சமீ., ISBN: 955-97106-6-4.

அகத்துறை என்ற பிரிவில் 20 கவிதைகளும், சமுதாயம் என்ற பிரிவில் 30 கவிதைகளும், பல்துறை என்ற பிரிவில் 30 கவிதைகளுமாக மொத்தம் 80 கவிதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. தமிழரினதும் தமிழ்ச் சமுதாயத்தினதும் இன்னல்கள், மனோபாவங்கள், அவலங்கள் என்பவற்றை அனுபவரீதியாக உணர்நது எழுதிய கவிதைகள் இவை. 1990இல் கேணிப்பித்தனின் முன்னைய படைப்புக்கள் அனைத்தும் அவரது இல்லம் அரச வன்முறைக்கு இலக்காகியபோது அழிக்கப்பட்டதன் பின்னர் எஞ்சியவற்றைக் கொண்டு இத்தொகுப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

5536

சம்மதமில்லாத மௌனம். அக்கரையூர் அப்துல் குத்தூஸ். அக்கரைப்பற்று: எச்.எல்.அப்துல் குத்தூஸ், றஸீ டேல், மத்திய சாலை, 3வது பதிப்பு, செப்டெம்பர் 2001, 1வது பதிப்பு, நவம்பர் 2000, 2வது பதிப்பு, பெப்ரவரி 2001. (அக்கரைப்பற்று: செலெக்ஷன் அச்சகம்).
xvi, 124 பக்கம், விலை: ரூபா 140., அளவு: 18x13.5 சமீ.

இத்தொகுதியிலுள்ள அக்கரையூர் அப்துல் குத்தூசின் படைப்புக்கள், புதுக்கவிதைக்குரிய படிமங்களையும் மரபுக் கவிதைக்குரிய மாண்புகளையும் இணைத்து வெளியான 44 கவிதைகளைக் கொண்டுள்ளன.

வானொலி தொலைக்காட்சிகளில் இவரது பல பாடல்கள் ஏற்கெனவே ஒலிபரப்பாகியுள்ளன. இவரது முதலவாவது நூல் ஸ்ருதி தேடும் சந்தங்கள் என்ற தலைப்பில் இவரது இசைப்பாடல்களைக் கொண்டதாக 1999இல் வெளிவந்திருந்தது.

5537

சமாதானத்தின் பகைவர்கள். அருந்ததி. பிரான்ஸ்: மக்கள் கலை இலக்கிய அமைப்பு, OPAL – Organisation peuple d'art et de Litterature 45 bis, Rue de la Republique Puteaux – 92800, 1வது பதிப்பு, செப்டெம்பர் 1989. (சென்னை 600 020: இராசகிளி பிரிண்டர்ஸ், 12, முதல் பிரதான சாலை, நேரு நகர், அடையாறு).
(4), 78 பக்கம், விலை: இந்திய ரூபா 10., அளவு: 17.5x12.5 சமீ.

சிங்களப் பேரினவாத ஒடுக்குமுறை அரசின் கைக்கூலிகளினாலும், முதலாளித்துவ ஏகாதிபத்திய நாடுகளின் கூட்டுச் சதிகளினாலும், மக்கள் விரோத எதிர்ப் புரட்சிச் சக்திகளின் அராஜகத்தினாலும் சிதைக்கப்பட்ட ஈழ தேசத்தையும் அதன் மக்களையும், அவர்களின் போராட்ட வாழ்வையும் ஏதோ வகையில் பிரதிபலிக்கும் கவிதைகள் இவை. மரணத்துள் வாழ்ந்துகொண்டிருக்கும் ஈழதேசத்து மக்களின் இரத்தத்தினால் தீட்டப்பட்டு, போர்க்கால இலக்கியங்கள் என்னும் பெறுமானத்துக்குள் நிரந்தர வாசஞ்செய்யும் இன்றைய எமது ஈழத்து இலக்கிய வெளிப்பாடுகளுடன் சமாதானத்தின் பகைவர்கள் என்ற இந்தக் கவிதைத் தொகுப்பும் இணைகின்றது.

5538

சின்னச் சித்திரங்களில் சூரியன். ராஜகவி றாஹில். (இயற்பெயர்: ஏ.சி.றாஹில்). நிந்தாவூர் 05: நிந்தவூர் ஆர்.கே.மீடியா, 318, புதிய நகர், 1வது பதிப்பு, ஏப்ரல் 2009. (அக்கரைப்பற்று: நியு செலக்ஷன் பிரின்டர்ஸ்).
138 பக்கம், புகைப்பட ஓவியங்கள், விலை: ரூபா 175., அளவு: 12x17 சமீ.

தமிழகக் கவிஞர் வைரமுத்துவின் ஆசியுடனும், அவருடன் சேர்ந்தெடுத்த புகைப்படத்தை அட்டையில் தாங்கியும் வெளிவந்திருக்கும் இப்புதுக்கவிதைத் தொகுப்பின் குறுங்கவிதை வரிகள் தோறும் சொற்கள் கற்கண்டாகியிருக்கின்றன. "ஒளி விதைக்கின்ற சூரியனாக / என் எழுதுகோல் / தலைகுனிந்திருக்கிறது இங்கே / எனது உயிர் / இந்தக் காகிதங்களில் / உதிர்ந்து கிடக்கிறது / என் கவி வரலாறு / புதைந்துவிடக்கூடாது என்பதற்காக / இங்கே என் மின்மினி எழுத்துக்கள் / சிறகடித்திருக்கின்றன / என் மொழி அழகாகியிருக்கின்றது / உயிர்வெளியை / நான் திறந்தபோது / இது ஒரு கல்வெட்டு." இவை கவிஞனின் அறிமுகக் குறிப்புகள். கவிதைகளிலும் தமிழகக் கவிஞர் வைரமுத்துவின் பாதிப்பு வெளிப்படையாகக் காணப்படுகின்றன.

5539

சுகாதாரக் கும்மி. நவாலியூர் க.சோமசுந்தரப் புலவர். யாழ்ப்பாணம்: சைவ பரிபாலன சபை, 1வது பதிப்பு, 1938. (யாழ்ப்பாணம்: சைவப் பிரகாச யந்திரசாலை).
16 பக்கம், விலை: சதம் 10.

வீடும் அயலும், உடம்பைப் பேணுதல், நோய்கள், பொது ஆகிய நான்கு தலைப்புகளில் அமைந்த 91 செய்யுள்கள் இந்நூலில் இடம்பெறுகின்றன. சுகாதார நன்முறை வாழ்க்கையைச் செந்தமிழால் கும்மிப் பாடல்களினூடாக ஜனரஞ்சகப்படுத்தும் முயற்சி இது. இந்நூல் இலங்கை மாநகர் அதி உத்தம தேசாதிபதி சேர் அன்ட்று கால்டி கொற் K.C.M.G., C.B.E. அவர்கள் அருளிய உத்தரவுப்படி அவர்களுக்கு ஆக்கியோனால் உரிமையாக்கப்பட்டது என்ற குறிப்பும் நூலில் காணப்படுகின்றது. இந்நூல் யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையினரின் 52ஆவது பிரசுரமாகும். (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5540

சுதந்திர வாழ்வின் விடிவலைகள். கதிர் சரவணபவன். வட்டுக்கோட்டை: திருவடி நீழல், கண்ணகை அம்மன் 1ம் ஒழுங்கை, வட்டு மேற்கு, 1வது பதிப்பு, ஏப்ரல் 1995. (யாழ்ப்பாணம்: அச்சக விபரம் தரப்படவில்லை).
(18), 66 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14 சமீ.

41 கவிதைகள் கொண்ட இத்தொகுப்பின் ஆசிரியர் கவிஞர் கதிர். சரவணபவன், ஈழத்து முதுதமிழ்ப் புலவர் மு.நல்லதம்பியின் பேரனார். தேச விடுதலைப் பாடல்களும், பிற உணர்வுப் பாடல்களும், மரபுக் கவிதைகளாக இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. விடுதலைப் போராளிகளான தியாகி திலீபனையும், கேர்ணல் கிட்டுவையும் கரும்புலிகளான மாவீரர்களையும், மாத்திரமன்றி களத்தில் நின்று போரிடும் விடுதலைப் போராளிகளையும், யுத்தத்தால் சிதைந்துபோன மண்ணையும் அதன் மக்களையும் இவர் தன் பாடுபொருளாகக் கொண்டுள்ளார். இத்தொகுப்பில் பதிவுபெற்ற பெரும்பாலான கவிதைகள் இவரால் பல்வேறு கவியரங்குகளில் பாடப்பெற்றவை.

5541

செட்டை கழற்றிய நாங்கள். ரவி (இயற்பெயர்: பாலமோகன்). கோவை 641015: விடியல் பதிப்பகம், 3, மாரியம்மன் கோவில் வீதி, உப்பிலிப் பாளையம், 1வது பதிப்பு, டிசம்பர் 1995. (சென்னை 600005: மனோ அச்சகம்).
(14), 70 பக்கம், விலை: இந்திய ரூபா 20., அளவு: 18X12.5 சமீ.

கவிஞனின் உணர்வுநிலை உயர்ந்தது. அதை அர்த்தப்படுத்துவதற்கு வாழ்வியல் விதிமுறைகள் மீதான புரிதல்கள், தேவையாயின் அதன் மீதான தாக்குதல்கள் கூடத்தேவை. ஆதிக்க சக்திகள் மற்றும் அரசு, மதம், குடும்பம், பாடசாலை, போன்ற அதன் நிறுவனங்களால் கட்டமைக்கப்பட்ட கருத்தியல்கள், புனைவுகள் மற்றும் வாழ்வியல் விதிமுறைகள் எல்லாவற்றையும் இயல்பானது என ஏற்றுக்கொள்ளும் ஒருவனின் உணர்வு நிலை கவலையையும், விரக்தியையும் தாண்டிவிடப்போவதில்லை. இந்தக் கவிதைகள் இப்படியான ஒரு மனநிலையின் வெளிப்பாடுகள், கூட்டுவாழ்க்கை முறையில் வளர்ந்த ஈழத்தமிழர்கள் புலம்பெயர் நாடுகளின் சமூகங்களோடு ஒட்டவும் முடியாமல். வெட்டவும் முடியாமல் அவதியுறும் மனநிலை சொற்களுக்கு அப்பாற்பட்டது. அத்தகையதொரு நிலையை வார்த்தைகளில் வரையமுனையும் முயற்சியே இத் தொகுப்பிலுள்ள கவிதைகள்.

5542

தடயங்கள்: கவிதைகள். மருதூர் ஜமால்தீன். கொழும்பு 6: ஞானம் பதிப்பகம், 3B, 46ஆவது ஒழுங்கை, 1வது பதிப்பு, ஓகஸ்ட் 2008. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ் (பிரைவேட்) லிமிடடெட், 48B, புளுமெண்டால் வீதி).
70 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 22.5X14.5 சமீ., ISBN: 978-955-8354-26-1.

சாய்ந்தமருதைப் பிறப்பிடமாகவும் சம்மாந்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட மீரா மொஹிதீன் ஜமால்தீன் கல்முனை ஸாஹிரா தேசிய பாடசாலையில் உயர்கல்வியைப் பெற்றவர், பின்னர் தர்காநகர் மு.அய்யிதுல் இஸ்லாம் அரபுக் கல்லூரியில் தனது மார்க்கக் கல்வியைப் பூர்த்தி செய்தார். இவர் எழுதிய புதுக்கவிதைகளின் தொகுப்பு இது. தேசிய நாளேடுகளிலும், வார, மாத, சஞ்சிகைகளிலும் பிரசுரமானவை. 1983இல் அல்ஹுதா சஞ்சிகையில் இஸ்லாத்தின் வழி வாழ்வோம் என்ற கவிதையின் ஊடாக இவரது எழுத்துப் பயணம் தொடங்கியது. தடயங்கள் இவரது முதலாவது நூல். இதில் 66 கவிதைகள் இடம்பெற்றுள்ளன. இத்தொகுப்பு புரவலர் புத்தகப் பூங்காவின் பிரசுரத் தொடரில் பத்தாவது வெளியீடாகும்.

5543

தமிழ் எங்கள் ஆயுதம். யாழ்ப்பாணத் தமிழ் எழுத்தாளர் சங்கம் (தொகுப்பு). யாழ்ப்பாணம்: இ.மகாதேவா, தலைவர், யாழ்ப்பாணத் தமிழ் எழுத்தாளர் சங்கம், 274, நாவலர் வீதி, 1வது பதிப்பு, ஜுன் 1962. (பருத்தித்துறை: கலாபவன அச்சகம், வியாபாரி மூலை).
44 பக்கம், விலை: ரூபா 1.00

37 ஈழத்துக் கவிஞர்களின் இனஎழுச்சிக் கவிதைகளைக் கொண்ட தொகுப்பு நூல். யாழ். மாநகர முதல்வர் தா.ச.துரைராசாவின் சிறப்புரையுடனும், யாழ். தமிழ் எழுத்தாளர் சங்கச் செயலாளர் இ.முருகையனின் முன்னுரையுடனும் வெளியாகியுள்ள கவிதைத் தொகுப்பு இது. யாழ்ப்பாணன், மகாகவி, வேந்தனார், நயினைக் கவி, அம்பி, கதிரேசன், சங்கிலி, விடிவெள்ளி, முருகையன், முகிலன், அமுது, துமிலன், மு.செல்லையா, தவம் ஜோசெப், பாண்டியூரான். மனோ காசிப்பிள்ளை, நாவேந்தன், நீலாவணன், இளந்தையன், இராஜேஸ்வரி, செ.நடராஜன், பஞ்சாட்சரம், ஆறுமுகன், கரவைக்கிழான், செல்வரத்தினம், நாகராஜன், சிவபாதசுந்தரம், தங்கம்மா, நாகலிங்கம், க.இராசையா, இணுவிலான், நா.ஆறுமுகம், இதம், சி.செல்லத்துரை, வையூரன், இளமுருகனார், ஆகியோரது கவிதைகள் இதில் அடங்கியுள்ளன. (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5544

தமிழ் நடந்த தடங்கள். வீ.பரந்தாமன். யாழ்ப்பாணம்: இராசன் பதிப்பகம், அருச்சுனா வீதி, 1வது பதிப்பு, ஐப்பசி 1995. (யாழ்ப்பாணம்: இராசன் பதிப்பகம்).
xiii, 96 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20x15 சமீ.

பண்டிதர் வீ.பரந்தாமன் எழுதிய 62 கவிதைகளின் தொகுப்பாக வெளிவந்துள்ள நூல். விடுதலை வேட்கைகொண்ட அனைத்துக் கவிதைகளும், நேரடியாகவும், மறைமுகமாகவும் ஈழ விடுதலைப் போராட்டம் சார்ந்தவை. தமிழ் அன்னை வாழி என்று தொடங்கி, ஆணை சொல்வீர், தென்னிலங்கை மூட்டிவரும் தீ, தமிழ்த் தாய் தலைகுனிந்து நாணவோ, புரட்சி நெருப்பு மூள்கின்றது என்று தொடர்ந்து, உள்ளவரை இவர் பேரும் நிலவும், உலகமெல்லாம் ஆளுவாள் என்று நம்பிக்கையுடன் தன் கவிதைகளை நிறைவுசெய்கின்றார்.

5545

தமிழர் திருநாள். வசீகரன். சென்னை 600 002: காந்தளகம், முதல் மாடி, ரகிசா கட்டடம், 68 அண்ணா சாலை, 1வது பதிப்பு, தை 2009. (சென்னை 600078: அடவி வரைகலை).
104 பக்கம், விலை: இந்திய ரூபா 50., அளவு: 21.5x14 சமீ.

நோர்வே நாட்டில் ஒஸ்லோ நகரில் புலம்பெயர்ந்து வாழும் ஈழத்துப் படைப்பாளி வசீகரன் சிவலிங்கம். இவரது இன்ரநெற் யுகமும் 21ம் நூற்றாண்டும் என்ற கவிதைத் தொகுப்பு எட்டு ஆண்டுகளுக்கு முன்னர் வெளிவந்தது. இக்கவிதை நூலுக்கு வாழ்த்துரை வழங்கிய கவிஞர் காசி ஆனந்தனின் வரிகள் “எரிமலை எண்ணங்கள் - வசீகரன் எழுத்துக்களாய் நெருப்பு வீசி எழுகின்றன. தமிழீழத்தில் பொங்கும் செந்நீரில் மூழ்கித் தலைநிமிரும் தமிழ். வசீகரனின் செஞ்சோலைப் படுகொலைகள் பற்றிய வரிகள் சீற்றமானவை” என்பதிலிருந்து இக்கவிதைநூலின் உள்ளடக்கத்தை உணர்ந்துகொள்ளலாம்.

5546

தளிர்கள். க.மயில்வாகனம் (தொகுப்பாசிரியர்). யாழ்ப்பாணம் யாழ். இலக்கிய நண்பர்கள் கழகம், 1வது பதிப்பு, புரட்டாதி 1970. (யாழ்ப்பாணம்: விக்னேஸ்வரா அச்சகம், தட்டாதெரு, வண்ணார்பண்ணை).
52 பக்கம், விலை: ரூபா 1.00

இலங்கையின் 23 இளம் கவிஞர்களின் 36 கவிதைகளின் தொகுப்பாக இந்நூல் வெளிவந்துள்ளது. குப்பிழான் ஐ.சண்முகம், திமிலைக் கண்ணன், மாவை.தி.நித்தியானந்தன், கல்முனைப் பூபால், சாரணா கையூம், ஆ.மகாதேவன், ஈழமேகம், நவாலியூர்க் கவிராயர், குமரன், நிலவின் தாசன், பொலிகை வேந்தன், சி.யோகேஸ்வரி, நிமலன். மலைமதி சந்திரசேகரன். எஸ்.இராஜம் புஷ்பவனம், நெல்லை க.பேரன், ச.பாலதேவி, கே.கே.ரி.சர்மா, பூ.செல்லத்துரை, ஐ.சாந்தன், துரை மனோகரன், காந்தன் ஆகியோரின் கவிதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5547

திமிலைத்துமிலன் கவிதைகள்: காதல். திமிலைத்துமிலன். சென்னை 600017: மணிமேகலைப் பிரசுரம், தபால் பெட்டி எண் 1447, இல.7, தணிகாசலம் சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2005. (சென்னை 94: ஸ்கிரிப்ட் ஆப்.ஃசெட்).
viii, 160 பக்கம், விலை: இந்திய ரூபா 150., அளவு: 17.5x12 சமீ.

ஈழத்தின் புகழ்பூத்த கவிஞர் திமிலைத்துமிலன் படைத்த கற்பனைவளம் மிக்க கவிதைகளுள் காதல் பற்றிய 65 கவிதைகளின் தொகுப்பு. அழகு தமிழ், பழகு தமிழ், இலகு தமிழ் என்பன இவரது கவிதைகளின் தனித்துவம். தான் மானசீகமாக, உணர்வுபூர்வமாகப் பெற்ற அனுபவ வெளிப்பாடுகளாகவே இவரது கவிதைகள் அமைகின்றன. 1950களிலிருந்து 1970களி வரை திமிலைத்துமிலனால் படைக்கப்பட்ட கவிதைகள் இவை என்பதால் இன்றைய கவிதைகளில் காணப்படும் ஈழத்தமிழர் அவலங்கள் பற்றிய வாசனையே அற்று முற்றிலும் வித்தியாசமானதொரு உலகில் அவை வாசகனைச் சஞ்சரிக்க வைக்கின்றன.

5548

திமிலைத்துமிலன் கவிதைகள்: சமூகம். திமிலைத்துமிலன் (இயற்பெயர்: சின்னையா கிருஷ்ணபிள்ளை). மட்டக்களப்பு: எழுத்தாளர் ஊக்குவிப்பு மையம், இல. 64, கதிர்காமர் வீதி, அமிர்தகழி, 1வது பதிப்பு, செப்டெம்பர் 2007. (தெகிவளை: ஏ.ஜே.பிரின்ட்ஸ், 44, ஸ்டேஷன் வீதி).

224 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 21x14.5 சமீ., ISBN: 978-955-8715-44-4.

சமூகம் பற்றிய கருத்தியலுடன்கூடிய தனது 107 கவிதைகளை இத்தொகுப்பில் சேர்த்திருக்கிறார். இலங்கையில் சாகித்திய மண்டலப் பரிசு பெற்ற நூல் இது. கவிஞரின் 74ஆவது வயதில் எழுத்தாளர் ஊக்குவிப்பு மையத்தினால் வெளியிடப்படும் இந்நூல் அவ்வமைப்பின் 40ஆவது வெளியீடாகும். மகாகவி, நீலாவணன், முருகையன் போன்ற கவிஞர்கள் வரிசையில் வைத்து எண்ணக்கூடியவராக இவர் விளங்குகின்றார். 1978ஆம் ஆண்டில் ஏற்பட்ட சூறாவளியினால் இவரது ஆக்கங்கள் பல இழக்கப்பட்டுள்ளமை ஒரு சோகமான சம்பவமாகும்.

5549

தூரத்து விடிவெள்ளி. M.அரியநாயகம் (பதிப்பாசிரியர்). பிரான்ஸ்: ஐரோப்பிய தமிழ் எழுத்தாளர் ஒன்றியம், Association des Ecrlvains Tamouls Dans L'Europe, 30, Rue de Tourville, 93600, Aulnay Sous Bois, 1வது பதிப்பு, மே 1987. (சென்னை 600014: மூவேந்தர் அச்சகம், 29/2, ஸ்ரீநிவாசப் பெருமாள் சந்நிதி வீதி, இராயப்பேட்டை).
(4), 87 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18x12.5 சமீ.

ஐரோப்பியத் தமிழ் கவிஞர்களின் கவிதைகளின் தொகுப்பாக இந்நூல் வெளிவந்துள்ளது. சீனி லோகன் (மேற்கு ஜேர்மனி), என்.யு.மூர்த்தி (சுவிஸ்), குகதாசன் (மேற்கு ஜேர்மனி), எஸ்.நிதி- பூநகரியான் (மேற்கு ஜேர்மனி), அ.திருச்செல்வம் (மேற்கு ஜேர்மனி), ஜே.நிக்சன் (மேற்கு ஜேர்மனி), பாரதிதாசன் (பாரிஸ்), எஸ்.ஆர்.பாரதிதாசன், இரத்தினரூபதாசன் (பாரிஸ்), ஹெலன் ரோசித்தா (பாரிஸ்), டில்லிராணி சுப்பிரமணியம் (பாரிஸ்), வண்ணைதெய்வம் (பாரிஸ்), மதன் (பாரிஸ்), மலர் (ரோம்), இ.வசந்தி (பாரிஸ்) ஆகிய புலம்பெயர் கவிஞர்களின் தேர்ந்த கவிதைகள் இதில் இடம்பெறுகின்றன.

5550

தூவானம். கவிஞர் குமரன். (இயற்பெயர்: மா.சின்னத்தம்பி குமார்). பதுளை: குறிஞ்சிப் பண்ணை, 25, லோங்டன் வீதி, 1வது பதிப்பு, ஐப்பசி 1967. (பசறை: ஜோதி அச்சகம்).
94 பக்கம், விலை: ரூபா 1.50

பதுளை, அ.சா.மல்லிகைக் காதலனின் முன்னுரையுடனும் ப.வடிவழகனின் அறிமுகத்துடனும் வெளிவந்துள்ள இந்த மலையகக் கவிதைத் தொகுப்பு வெளிமடைத் தோட்டத்திலிருந்து கவிஞர் வெளிமடைக் குமரனின் எழுபது கவிதைகளைக் கொண்டுள்ளது. தமிழே, இனிது இனிது, கொடுத்துவிடு, முத்துச்சர விளக்கு, பரிசு, தமிழ்ச்செல்வம், தமிழர் நாடு, அழைப்பு, புறப்படுங்கள், அறைகூவல், முடிவென்ன?, நாம், வாழமுடியாதவர்கள், மலையக மக்கள், ஓட்டம், அந்த அறைக்குள், புல்லுருவி, பேச்சுவார்த்தை, பயன், பாலம், கவித்தொகை, தைப்பாவை, விடுதி, புதைகுழி, சொந்தம், தீர்ப்பு, இருளில், பனித்துளிகள், ஏன், கொடுமை, நெஞ்சப் புதிர்கள், உள்ளும் புறமும், துரோகம், இதுதான் உலகம், குற்றம் குற்றமே, சொர்க்கத்தின் வாசல், உலகத்தின் கைகள், புதுமை, முத்தம், ஒரே முத்தம், நிர்வாண மனம், காட்சிகள், காலம், நூல், விளக்கு, அன்னை நெஞ்சம், பசி, எல்லாம் வல்லவன், மயக்கம், காத்திருப்பேன், மஞ்சள் குளித்தவன், தீ, போர்ப்படை, காலமெல்லாம் மகிழ்வோம், அவள் ஆடுகின்றாள் என்னை ஆட்டுகின்றாள், விருந்து, கண்ணே, புதிர், தலைவியானாள், நினைக்காதே, மணமேடை, அவள், படுக்கை அறை, ஜீவபூமி, பகை, செங்கரும்பு, இடைவெளி, பித்தம், வானத்து மின்னல், தூவானம் ஆகிய தலைப்புகளில் பிரசுரமான அவரது கவிதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5551

தென்றல் வரும் தெரு. தங்கவேலு சரீஸ். பிரான்ஸ்: த.சரீஸ், Route de Stalingrad 93700, Drancy, Paris, 1வது பதிப்பு, 2002. (பாரிஸ் 75010: ஸ்ரீ பாரதி பதிப்பகம், 18 Rue cail).
92 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 17.5x12 சமீ.

தாய்மை பற்றிய கவிதைகளில் தாய்மையின் நியாயங்களை உணர்த்தியுள்ள கவிஞர் சரீஸ், சராசரி ஆண் வர்க்கம் பார்க்கும் பார்வையிலேயே பெண்மையை மென்மையாக நோக்கியிருக்கிறார்.

5552

தோரணங்களின் நிலைகள். த.தனசீலன். வவுனியா: கலை இலக்கிய நண்பர்கள் வட்டம், 1வது பதிப்பு, டிசம்பர் 2007. (வவுனியா: மல்ரிவிஷன் அச்சுக் கலையகம், குடியிருப்பு).

xii, 54 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 20x14.5 சமீ., ISBN: 978-955-1862-00-8.

அ.செ.முருகானந்தம், மகாகவி உருத்திரமூர்த்தி, போன்றோரைத் தமிழ் இலக்கியத்திற்குத் தந்த அளவெட்டியிலிருந்து உதயமாகியுள்ள மற்றுமொரு படைப்பாளி தனசீலன். இளந்தலைமுறைக் கவிஞர்களுள் ஈழத்தமிழரின் இடப்பெயர்வு பற்றியதும் அகதிமுகாம் வாழ்க்கை பற்றியதுமான பல்வேறு பரிமாணங்களைத் தனது கவிதைகளுக்குள் அகப்படுத்தியுள்ளார். யுத்தம், காதல், காமம், பல்கலைக்கழக வாழ்வு, சுநாமி, சமாதானம், அகதி வாழ்வு, கிராம வாழ்வு பற்றியெல்லாம் இவை பேசுகின்றன. கவிதைச்செறிவு, மொழிப் பிரயோகம், மொழிக்குப் பின்னாலுள்ள மௌனம், அதிர்வு, படிமம் என்பவை இவரது கவிதைகளுக்கு வலுவூட்டுகின்றன. வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டத்தின் 17ஆவது நூல்.

5553

நகை. பா.சிவபாலன். யாழ்ப்பாணம்: பா.சிவபாலன், 214/4C, இராமநாதன் வீதி, 1வது பதிப்பு, ஒக்டோபர் 2000. (யாழ்ப்பாணம்: கங்கை ஓப்செட் பிரின்ட்ஸ்).
(2), 46 பக்கம், கருத்தோவியங்கள், விலை: ரூபா 50., அளவு: 19x14 சமீ.

ஓவியர் வரதராஜனின் கருத்தோவியங்களுடன் வெளிவரும் குறும்பாவகையைச் சேர்ந்த குறுங்கவிதைகளின் தொகுப்பு. நளினமாகவும், சிலேடையாகவும் Limerick பாவகையை அடியொற்றி சிவபாலன் தனது கவிதைகளைப் படைத்துள்ளார்.

5554

நாடற்றவனின் குறிப்புகள். இளங்கோ. கனடா: அம்பனா வெளியீடு, 330, McCowan Road, #1306, Toronto, Ontario, M1J 3N3, 1வது பதிப்பு, 2007. (சென்னை 600005: மணி ஓப்செட்).
102 பக்கம், விலை: ரூபா 100., இந்திய ரூபா 60., அளவு: 22X14 சமீ.

ஈழத்து இளம் படைப்பாளியான இளங்கோ, யாழ்ப்பாணம் அம்பனையில் பிறந்தவர். போர் மூர்க்கமாய் எற்றித்தள்ள உள்நாட்டிலேயே அகதியாக அலைந்து தன் பதினாறாவது வயதில் கனடாவுக்குப் புலம்பெயர்ந்தவர். போர்க்கால அவலங்களினதும், புலம்பெயர் வாழ்வின் அலைக்கழிதல்களினதும் மௌன சாட்சியமாக விளங்குவன இத்தொகுதியில் இடம்பெற்றுள்ள இவருடைய 53 கவிதைகள். இளங்கோ **டிசே தமிழன்** என்ற புனைபெயருடன் பல இதழ்களிலும், இணையத் தளங்களிலும் கவிதைகள், கட்டுரைகள் மற்றும் விமர்சனங்கள் எழுதியுள்ளார்.

5555

நிகரிலா நெஞ்சன். மாணவன் வெளியீட்டுக் குழு. பிரான்ஸ்: Tamoul Cholai, 10 bis AV Paul valery, 95200, Sarcelles, 1வது பதிப்பு, நவம்பர் 2004. (பாரிஸ்: ஸ்ரீ பாரதி அச்சகம், 18, rue cail 75010).
88 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14.5 சமீ.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர், வே.பிரபாகரன் அவர்களது ஐம்பதாவது ஆண்டு அகவையை முன்னிட்டு வெளியிடப்பட்ட சிறப்புக் கவிதைத் தொகுப்பு. விடுதலைப் புலிகள் இயக்கத்தையும், அதன் தலைமையையும் புகழ்ந்து பாடும் 50 கவிதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன.

5556

நிஜங்கள். வி.எஸ்.சிவகரன். மன்னார்: வி.எஸ்.சிவகரன், முதலியார் கமம், இலுப்பைக் கடவை, 1வது பதிப்பு, ஆவணி 2007. (வவுனியா: ஆகாஷ் கிராப்பிக்ஸ்).
xii, 88 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 19x12.5 சமீ.

சமூக வளர்ச்சியை மையமாகக் கொண்ட சீர்திருத்தக் கருத்துக்களைத் தாங்கி வெளிவந்துள்ள கவிதைத் தொகுதி. நூலாசிரியர் சிவகரன் இலுப்பைக் கடவையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். சமூக சேவகராகப் பணியாற்றிவருபவர். தனது வாழ்வனுபவங்களை இக்கவிதைத் தொகுதியில் நிஜங்களாக எமக்குக் காட்சிப்படுத்தியிருக்கிறார்.

5557

நெஞ்சுருத்தும் கனல். ஜெ.டானியல். மட்டக்களப்பு: நுண்கலைத்துறை, கலைகலாசார பீடம், கிழக்குப் பல்கலைக் கழகம், 1வது பதிப்பு, நவம்பர் 2005. (மட்டக்களப்பு: வணசிங்க அச்சகம், 26/1 திருமலை வீதி).
(4), vi, 44 பக்கம், விலை: ரூபா 130., அளவு: 20.5x14.5 சமீ.

சமகால சமூகப் பிரச்சினைகளினூடாக எழுகின்ற உணர்ச்சிகளின் வெளிப்பாடாக இத்தொகுப்பிலுள்ள கவிதைகள் அமைகின்றன. மக்களின் துன்ப துயரங்களை தனது உணர்ச்சிகளின் மூலம் நூலாசிரியர் கவிதையாக்கியுள்ளார்.

5558

பகிர்வு. ஜெ.சுபாஷினி. யாழ்ப்பாணம்: ஜெ.சுபாஷினி, 122, செம்மணி வீதி, நல்லூர், 1வது பதிப்பு, பெப்ரவரி 2006. (யாழ்ப்பாணம்: ஸ்மார்ட் பிரின்டர்ஸ்).
(2), vi, 62 பக்கம், விலை: ரூபா 175., அளவு: 20x14 சமீ.

சுபாஷினி ஜெகந்நாதனின் கன்னிப்படைப்பு இது. யாழ்ப்பாணம் அச்சுவேலி மகாவித்தியாலயத்தில் தன் ஆரம்பக் கல்வியையும், யாழ்ப்பாணம் சுண்டுக்குளி மகளிர் கல்லூரியில் உயர் கல்வியையும் பெற்ற இவர், யாழ் பல்கலைக்கழகத்தின் இராமநாதன் நுண்கலைக்கழகத்தின் இசைப்பட்டதாரியுமாவார். இவரது கவிதைகளில் தன்னுணர்ச்சிக் கவிதைகள் அதிகமாயுள்ளன. சமூகப் பிரச்சினைகளையும், பாடுபொருளாக்கியுள்ளார். சீதனம், சாதியம், மூடநம்பிக்கை, பகட்டு வாழ்க்கை, முரண்பாடுகள் ஆகியவற்றைக் கண்டு குமுறும் இக்கவிஞர் வாசிப்பவரின் மனங்களில் தன் கருத்துக்களை அழகாகவும் திறமையாகவும் தன் கவிதைகளினூடாக விதைத்து விடுகின்றார்.

5559

பந்திக்கு வராத பந்திகள். நாகதர்மா. பாரிஸ் 75010: ஸ்ரீ பாரதி பதிப்பகம், 18 Rue cail, 1வது பதிப்பு, ஆவணி 1996. (பாரிஸ் 75010: ஸ்ரீ பாரதி பதிப்பகம், 18 Rue cail).
(20), 120 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20x14 சமீ.

1980களில் பாரிசுக்குப் புலம்பெயர்ந்த ஈழத்துத் தமிழ்க் கவிஞர் நாகதர்மாவின் கவிதைகளின் தொகுப்பு இது. தமிழின நேசிப்பு, புலம்பெயர்ந்த போதிலும் மறந்துவிட முடியாத தாயக உணர்வு என்பன கவிதைகளில் உணர்வுபூர்வமாக வெளிவந்துள்ளன.

5560

புதிய வண்டுவிடு தூது. மு.செல்லையா. பருத்தித்துறை: மனோகரா வாலிபர் மன்றம், அல்வாய், 1வது பதிப்பு, 1963. (பருத்தித்துறை: ஊழியன் அச்சகம்).
7 பக்கம், விலை: சதம் 25.

அல்வாயூர்க் கவிஞர் மு.செல்லையா அவர்கள் 1958இல் நடந்த இலங்கை வானொலிக் கவிதைப் போட்டியில் முதற்பரிசான தங்கப் பதக்கத்தை வென்ற நெடுங் கவிதை இதுவாகும். 26 செய்யுள்கள் கொண்ட இந்நெடுங்கவிதையின் கரு சென்னை நகரில் உத்தியோகம் பார்க்கும் ஒரு தமிழ்க் கணவன், கொழும்பு-வெள்ளவத்தையில் வசிக்கும் தன் மனைவியிடம் வண்டொன்றைத் தூதனுப்பியதாகக் கற்பனையில் வார்க்கப்பட்டது. (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14)

5561

புதைந்துவிட்ட புலமை. த.திரேஸ்குமார். நாலப்பிட்டி: நாவல் நகர் நற்பணி மன்றம், இல. 59/1, கம்பளை வீதி, பின் ஒழுங்கை, 1வது பதிப்பு, நவம்பர் 2007. (நாவலப்பிட்டி: மிட்லண்ட் பிரின்டர்ஸ்).
49 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 17.5x13 சமீ.

பசறையூர் த.திரேஸ்குமார் தனது கவிதைகளில் தனது அனுபவங்களையும் தான் சார்ந்த சமூக அவலங்களையும் வெளிக்கொண்டுவர முனைந்துள்ளார். இதுதான் மலையகம் என்ற நூலில் தொடங்கி மூன்று கவிதை நூல்களை வெளியிட்டுள்ள இவர் கஸ்தூரி என்ற தலைப்பில் காலாண்டிதழ் ஒன்றையும் வெளியிட்டவர். இந்நூல் ப.உதயகுமாரின் **உணர்வுகள்** என்ற 51 பக்க கவிதைத் தொகுப்புடன் இணைந்ததாக வடிவமைக்கப்பட்டு இரட்டை நூலாக வெளிவந்துள்ளது. மொத்த பக்க எண்ணிக்கை 100.

5562

பூவை விடு தூது. ஸ்ரீ ராகுல மகாதேரர் (சிங்கள மூலம்), நவாலியூர் சோ.நடராஜன் (தமிழாக்கம்). கொழும்பு: ஸ்ரீலங்கா சாஹித்திய மண்டலம், 1வது பதிப்பு, மே 1963. (கொழும்பு: கொழும்பு அப்போத்திக்கரீஸ்).
42 பக்கம், விலை: ரூபா 2.50.

ஸ்ரீ ராகுல மகாதேரர் சிங்களத்தில் வழங்கிய **செலலிஹினி சந்தேசய** என்ற சிங்கள சந்தேச காவியத்தினை தமிழில் கவிதைவடிவில் மொழிபெயர்த்து விளக்கக் குறிப்புகளுடன் நவாலியூர் சோ. நடராசன் வழங்கியுள்ளார். செலலிஹினி சந்தேசய ஆறாம் பராக்கிரமபாகுவின் மகளான உலகுடைய தேவிக்கு ஓர் ஆண் மகவு பிறக்கவேண்டுமென்று வரங்கேட்டு கழனியிலுள்ள இராஜமகா விகாரையில் அமர்ந்திருக்கும் விபீடணக் கடவுளுக்குப் புலவர் ஒரு நாகணவாய்ப் பறவையைத் தூதாக விடும் செய்தியைக் கொண்டது அது. இப்பிரபந்தம் வடமொழியில் புகழ்பெற்ற காளிதாசரின் மேகதூதத்தைப் பெரிதும் அடியொற்றி எழுதப்பட்டது. இந்நூலுக்கான சிறப்புப் பாயிரம் புலவர்மணி ஏ.பெரியதம்பிப்பிள்ளையால் பாடப்பெற்றது. முன்னுரையை சுன்னாகம் இராமநாதன் கல்லூரி அதிபர் சு.நடேசபிள்ளையும் வழங்கியுள்ளனர். (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5563

பொன் சிவானந்தன் கவிதைகள். பொன்.சிவானந்தன். மண்டூர்: கலை இலக்கிய அவை, 1வது பதிப்பு 1999. (மருதமுனை: இளம்பிறை அச்சகம்).
100 பக்கம், விலை: ரூபா 70., அளவு: 21x14.5 சமீ.

மண்டூரில் பிறந்தவரான கவிஞர் பொன் சிவானந்தன், காரைதீவு கம்பன் கழகத்தின் போஷகராகப் பணியாற்றியவர். மரபுக் கவிதையிலிருந்து புதுக்கவிதை வரை புகும் வல்லமைபெற்ற இவர் மண்வளச் சொற்களையும், உவமை, உருவக அணிகளையும் கையாள்வதில் வல்லவர் என்பதற்கு இத்தொகுதியிலுள்ள கவிதைகள் சான்று பகர்கின்றன. இங்கே கவிதைகளினூடாக வெளிச்சத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ள சமூகவிரோதச் செயல்களால் ஈழத்தமிழர்களின் வாழ்வும், வளமும் கொச்சைப்படுத்தப்படுகின்றதென்ற உண்மையை அழுத்தமாகப் பதிவுசெய்திருக்கிறார்.

5564

போர்வைக்குள் வாழ்வு. இ.இராஜேஸ்கண்ணன். உடுப்பிட்டி: சுனிதா இராஜேஸ்கண்ணன், சாத்வீக சுருதி, இமையாணன், 1வது பதிப்பு. 2007. (யாழ்ப்பாணம்: மதுரன் கிராப்பிக்ஸ், அல்வாய்).
xii, 24 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 16.5x12.5 சமீ.

இதிலுள்ள கவிதைகள் புலம்பெயர் வாழ்வு, மனித வாழ்வின் சுயம் இழந்த நிலை, மானுடத்தின் வீழ்ச்சி, திசை மாறிப்போன வாழ்வு, காணிச் சண்டை, ஊரடங்கு வாழ்வு, சிறுவர் ஊதியம், போர்க்கால இடர், அகதி வாழ்வு என்பவற்றைப் பேசும் 12 கவிதைகள் இத்தொகுதியில் இடம்பெற்றுள்ளன. முதுசொமாக என்ற தனது முதலாவது சிறுகதைத் தொகுதியுடன் அறிமுகமான இராஜேஸ்கண்ணன் கல்வி டிப்ளோமா துறையில் ஈடுபட்டுள்ளவர். யாழ். வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலையின் ஆசிரியர். மானிடவியலை ஒரு பாடமாகக் கொண்டு தன் சமூகவியல் பட்டப்படிப்பை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் மேற்கொண்டவர்.

5565

மனிதனோடு நடந்தபடி. உவைஸ் கனி. இலங்கை: யாத்ரா வெளியீடு, ம.ஃரிபா ம.ஃசூர், முல்லை இல்லம், பிரதான வீதி, பெருக்குவற்றான், கொத்தாந்தீவு, 1வது பதிப்பு, 2002. (கொழும்பு 12: Printcom pvt. Ltd.,134 Hulftsdorp Street).
xvi, 102 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 100., அளவு: 19x13.5 சமீ., ISBN: 955-8683-00-0.

உறுத்தல் மிகுந்த வாழ்வை ஊடறுத்துப் பார்க்கும் இக்கவிஞனின் கவிதைத் தொகுதி சிரித்திரன் சுந்தர் நினைவு இலக்கிய விழாவில் 2002ம் ஆண்டுக்கான விருதுபெற்றது. வாழ்வோடு சேர்த்து வளர்க்கப்பட்டதால், வாலிபத்தை ஆக்கிரமித்த நெருஞ்சிக் காடுகள் எத்தனையோ ஆற்றல்மிக்க இளம் மனதுகளை கீறிக் கிழித்து துவம்சம் பண்ணியுள்ளன. உவைஸ் கனி அந்தக் கீறல்களின் இரத்தத்தோடு அவற்றைச் சிலுவைச் சுமையாய் தாங்கி எம்முன் நிற்கின்றார் என்று இந்நூலுக்கு முன்னுரை வழங்கிய பேராசிரியர் கா.சிவத்தம்பி குறிப்பிட்டுள்ளார்.

5566

மீறல்கள்: கவிதைத் தொகுதி. இதயராசன். கொழும்பு 11: தேசிய கலை இலக்கியப் பேரவை, இல.44, 3ம் மாடி, கொழும்பு மத்திய சந்தைத் தொகுதி, 1வது பதிப்பு, பெப்ரவரி 2008. (கொழும்பு 6: டெக்னோ பிரின்ட், 55 டாக்டர் ஈ.ஏ. குரே மாவத்தை).
xxiv, 84 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 150., அளவு: 22x14.5 சமீ., ISBN: 978-955-8637-24-1.

இதயராசனின் மனித ஆசைகளும் அவற்றை நிறைவேற்றுவதற்கான போராட்டங்களும் இங்கே கவிதைகளாகின்றன. இத்தொகுப்பிலுள்ள 50 கவிதைகளும் தம்மால் முடிந்தவரை யுத்த எதிர்ப்பு, ஏகாதிபத்திய எதிர்ப்பு, பெண் விடுதலை, சாதி வர்க்க ஒழுங்கு முறைக்கு எதிரான சிந்தனை, இன ஐக்கியம் போன்றவற்றுக்கூடாகச் சமூகப்பொறுப்பினை நமக்கு வலியுறுத்துகின்றன. இது தேசிய கலை இலக்கியப் பேரவையின் 108 ஆவது நூலாகவும் இவ்வமைப்பின் 32ஆவது கவிதை நூலாகவும் வெளிவந்துள்ளது.

5567

முதுமை நினைவு: செய்யுள்-பதவுரை-விளக்கம். பொ.கந்தையா. கொழும்பு: கந்தையா நவரேந்திரன், 1வது பதிப்பு, செப்டெம்பர் 1966. (கொழும்பு 12: சுதந்திரன் அச்சகம், 194 ஏ, பண்டாரநாயக்க வீதி).
126 பக்கம், விலை: ரூபா 4.00.

இந்நூலாசிரியர் ஊர்காவற்றுறையைச் சேர்ந்தவர். கொழும்பு ஸாஹிராக் கல்லூரித் தமிழாசிரியராகப் பணியாற்றியவர். முதுமைப் பருவத்தே பண்பட்ட உள்ளமுடைய ஒருவரிடமிருந்து வீறுகொண்டெழும் சிந்தனை அலைகளையும் மெய்ப்பாடுகளையும் இந்நூல் பதிவுசெய்கின்றது. அறியாமை இருளைப்போக்கி மெய்யறிவை வளர்க்கும் பண்டைத் தமிழ் நூல்கள் சிலவற்றின் தகைமைகளும் அவற்றுட் பொதிந்துள்ள அரிய கருத்துக்களும் இந்நூலில் அமைகின்றன. தனது இளமைக்காலத்து நிகழ்வுகளின் பின்புலத்தில் எழுந்த முதுமை நினைவுகளையும் சேர்த்து வெண்பாவாக இந்நூலின் வழியாக வழங்கியிருக்கின்றார். "சிந்தனைத் துளிகள்" என்ற தலைப்பில் தினகரன் வார ஏட்டில் இச்செய்யுட்கள் வெளிவந்து பாராட்டைப் பெற்றிருந்தன. 125 வெண்பாக்களையுடைய இந்நூலுக்குத் தாமே விளக்கமான உரையுஞ் செய்துள்ளார். இவ்வுரைகள் ஆசிரியரின் செவ்விய புலமைத் திறத்தை எடுத்துக்காட்டுவதாக அமைந்துள்ளன. இந்நூலுக்கான சிறப்புப் பாயிரத்தை கலைமகள் ஆசிரியர் வித்துவான் கி.வா.ஜகந்நாதனும், அணிந்துரைகளை புலவர் சிவங். கருணாலய பாண்டியனார், பண்டிதர் க.பொ.இரத்தினம், ம.பொ.சிவஞானம் ஆகியோரும் வழங்கியுள்ளனர். (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5568

மூச்சுக்காற்றால் நிறையும் வெளிகள். துவாரகன் (இயற்பெயர்: சு.குணேஸ்வரன்). யாழ்ப்பாணம்: தினைப்புனம் வெளியீடு, 1வது பதிப்பு, ஓகஸ்ட் 2008. (யாழ்ப்பாணம்: மதுரன் கிராப்பிக்ஸ், அல்வாய்).
xiii, 78 பக்கம், ஓவியங்கள், விலை: ரூபா 150., அளவு: 21x14.5 சமீ.

யாழ். அம்பன் அமெரிக்க மிஷனரியின் தமிழ் கலவன் பாடசாலையில் ஆசிரியராகப் பணியாற்றும் சுப்பிரமணியம் குணேஸ்வரன் தொண்டைமானாறு கெருடாவிலில் பிறந்தவர். 1999இல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கலைமாணிச் சிறப்புப் பட்டத்தைப் பெற்றவர். தனது முது தத்துவமாணிப் பட்டத்திற்கான ஆய்வாக 20ம் நூற்றாண்டில் ஈழத்திலிருந்து புலம்பெயர்ந்தவர்களின் கவிதை புனைகதைகள் என்ற ஆய்வினை மேற்கொண்டவர். சமூக இயல்பை, அதன் இருப்பை, ஏற்ற இறக்கங்களை அழகுறச் சுமந்து கவிதைகளாகப் பிரசவித்துள்ளார். போர்ச்சூழலுக்கு வெளியே வாழ்ந்துகொண்டு போர் பற்றிப்பிடித்த வாழ்வினை தமது அறிதல்களினால் கவிதைகளாக்கும் இன்றைய இலக்கிய வாழ்வியலில் தான் வாழ்ந்தனுபவித்த உணர்வுகளை அந்த மண்ணிலிருந்தே கவிதைகளாக்கித் தந்துள்ளார். 1996 முதல் 2008 வரையிலான காலகட்டத்தில் எழுதப்பட்ட கவிதைகள் இவை. கோ.கைலாசநாதன், தா.சனாதனன், எஸ்.நேசன் ஆகியோரின் ஓவியங்கள் பக்கம்தோறும் கவிதைக்குத் துணைபோகின்றன.

5569

மெல்லத் தமிழ் இனித் துளிர்க்கும்: டென்மார்க் இளைய தலைமுறையின் கவிதைத் தொகுப்பு. வி.ஜீவகுமாரன் (தொகுப்பாசிரியர்). சென்னை 600024: மித்ர வெளியீடு, 32/9, ஆற்காடு சாலை, கோடம்பாக்கம், 1வது பதிப்பு, ஜுன் 2008. (சென்னை 600024: மித்ர ஆர்ட்ஸ் அன் கிரியேஷன்ஸ், 32/9, ஆர்க்காடு சாலை, கோடம்பாக்கம்).

272 பக்கம், வண்ணப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 11.5x18 சமீ., ISBN: 81-89748-56-4.

டென்மார்க்கில் இயங்கும் vaanam.dk என்ற இணையத்தளத்தில் இலக்கியப் பக்கத்தில் வெளியான புலம்பெயர்ந்த ஈழத்தமிழர்களின் முதலாம் இரண்டாம் தலைமுறையினரின் கவிதைகள் எண்ணச் சிதறல்களாகத் தொகுக்கப்பட்டிருக்கின்றன. கணனிவடிவமைப்பில் பக்கம்தோறும் வண்ணக் கலவைகொண்டு உருவாக்கப்பட்ட கையடக்க நூல் இது. பாசம், நட்பு, காதல் போன்ற உறவுகள் சம்பந்தப்பட்ட கவிதைகளாகவும், சமுதாயச் சிந்தனைகளைத் தத்தமது மனவளர்ச்சிக்கேற்ப வெளிப்படுத்துவதாகவும், இயற்கை, கடவுள் பற்றிய தத்தமது பார்வைக் கோணங்களைப் பிரகடனப்படுத்துவதாகவும், புலம்பெயர் வாழ்வில் ஏற்படும் மன உளைச்சல்கள், தனிமை, முதுமை போன்ற வாழ்நிலைகளைப் புலப்படுத்துவதாகவும் கவிதைகள் இடம்பெறுகின்றன.

5570

மேகதூதம். மகாகவி காளிதாசர் (வடமொழி மூலம்), சோ.நடராசன் (தமிழாக்கம்). கொழும்பு: கொழும்பு அப்போத்திகரீஸ் கம்பெனி வெளியீட்டாளர்கள், குமாரவீதி, கோட்டை, 1வது பதிப்பு, 1954. (கொழும்பு: கொழும்பு அப்போத்திகரீஸ் கம்பெனி லிமிட்டெட் அச்சியந்திரசாலை).
87 பக்கம், விலை: ரூபா 1.75

மகாகவி காளிதாசர் இயற்றிய இம் மேகதூதம் வடமொழியில் மந்தாக் கிராந்தம் (மெல்ல நடப்பது என்று பொருள்படும்) விருத்தப் பாவாலியைந்தது. இந்நூல் இரு பிரிவுகளைக் கொண்டது. முற்பகுதி பூர்வமேகம் எனப்படும். பிற்பகுதி உத்தரமேகமெனப்படும். சிவபெருமானின் தோழனாகிய குபேரன் இட்ட சாபம் காரணமாக் கடமையிற் பிழைத்த இயக்கன் ஒருவன், தன் காதல் மனைவியைப் பிரிந்து சித்திரகூட மலைச்சாரலில் எட்டுத்திங்கள் பெருந் துயருற்ற நிலையில் தான் கண்டதொரு கார்மேகத்தை அவளிடம் தூதாக அனுப்பிவைப்பதை மேகதூதத்தின் 119 செய்யுள்களும் வர்ணிக்கின்றன. (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5571

மேகவாழ்வு. வெலிமடை ரபீக் (இயற்பெயர்: எஸ்.எச்.மொஹமட் ரபீக்). கொழும்பு 6: புரவலர் புத்தகப் பூங்காவுக்காக ஞானம் பதிப்பகம், 3B, 46ஆவது ஒழுங்கை, 1வது பதிப்பு, ஏப்ரல் 2009. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ் பிரைவேட் லிமிட்டெட், 48 B, புளுமெண்டால் வீதி).
xii, 60 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 22.5x14.5 சமீ., ISBN: 978-955-8354-31-5.

யதார்த்தத்தைப் புரிந்துகொண்டு உண்மையான உள்ளத்திலிருந்து வெளிக்கிளம்பும் உணர்வுகளின் உணர்ச்சிப் பிரவாகத்தினை இதிலுள்ள 28 கவிதைகளிலும் தரிசிக்கமுடிகின்றது. மனித நேயம்மிக்க இக்கவிஞன் போரை வெறுக்கிறான், சமாதானத்தை விரும்புகின்றான். இக்கவிஞனின் பெரும்பாலான கவிதைகள் போரின் கொடுமைகளை வெளிச்சமிட்டுக் காட்டுகின்றன. தினகரன் வாரமலர், இலங்கை வானொலி ஆகியவற்றில் தன் கவிதைக்குக் களம்தேடிய இக்கவிஞரின் முதலாவது கவிதைத் தொகுப்பு இதுவாகும். வெலிமடை கோட்டக் கல்வி அலுவலகத்தில் ஆசிரிய ஆலோசகராகக் கடமையாற்றுகின்றார். புரவலர் புத்தகப் பூங்காவின் நூல்வெளியீட்டுத் திட்டத்தில் 16ஆவது பிரசுரம் இது.

5572

மௌன முகாம். கந்தையா நவரேந்திரன். London E 17 9DB: கந்தையா நவரேந்திரன், 22, Copeland Road, Walthamstow, 1வது பதிப்பு, ஜுன் 2001. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ் பிரைவேட் லிமிட்டெட், 48 B, புளுமெண்டால் வீதி).
viii, 40 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22x14.5 சமீ.

கந்தையா நவரேந்திரனின் 24 புதுக்கவிதைகளின் தொகுப்பாக இந்நூல் வெளிவந்துள்ளது.

5573

வல்வை கமலா கவிதைகள். வல்வை கமலா பெரியதம்பி. வல்வெட்டித்துறை: சிவசக்தி, சிவன் கோவில் தெரு, 1வது பதிப்பு, தை 2002. (தமிழ்நாடு: கண்ணன் ஒப்செட் பிரின்டர்ஸ், அபிராமி கொம்பிளெக்ஸ், திருச்சிராப்பள்ளி 17).
(14), 132 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18.5x12.5 சமீ.

கனடாவில் புலம்பெயர்ந்து வாழும் வல்வை கமலா பெரியதம்பி, இசைத்துறையில் பட்டமும் பயிற்சியும் பெற்றவர். தனது இளமைக்காலம் முதல் தான் எழுதி அவ்வப்போது பிரசுரமாக்கிவந்த கவிதைகளை இத்தொகுதியில் தேர்ந்து வழங்கியிருக்கிறார். பக்தி மலர்கள், பாமலர்கள், கதம்பமாலை, கீர்த்தனை மலர்கள், நடனப் பாடல்கள், சிந்தனைத் தேரினிலே, சரிதைப் பாமாலை, ஆங்கிலப்பாடல்கள், தமிழீழப் பாடல்கள் ஆகிய தலைப்புகளில் இவரது இராக தாளக் குறிப்புடன் பிரசுரமாகியுள்ளன.

5574

வளர்பிறை: கவிதைத் தொகுதி. மு.செல்லையா. பருத்தித்துறை: மு.செல்லையா, காந்தி நிலையம், அல்வாய், 1வது பதிப்பு, ஆவணி 1952. (யாழ்ப்பாணம்: ஆனந்தா அச்சகம், காங்கேசன்துறை வீதி).
68 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18.5x12 சமீ.

தமிழக அறிஞர்களான திரு வி.க., நாமக்கல் வெ.இராமலிங்கம்பிள்ளை, யாழ்ப்பாணம் பரமேஸ்வரா கல்லூரி அதிபர் சு.நடேசபிள்ளை ஆகியோரின் அணிந்துரைகளுடன் வெளிவந்துள்ள அல்வாயூர்க் கவிஞர் மு.செல்லையாவின் கவிதைத் தொகுதி. 33 தலைப்புகளில் ஆசிரியர் படைத்துள்ள சகல பாடல்களும் இந்நூலில் சேர்க்கப்பட்டுள்ளன. இவற்றில் வைகறை, பூஞ்சோலை என்னும் இரண்டு தலைப்புகளில் உள்ள பாட்டுக்கள் சிறுவர்க்கு ஏற்றவை. தேவரையாளி கல்விக்கூடத்தின் தலைமை ஆசிரியராக விளங்கியவர் இந்நூலாசிரியர். அநுசூயா என்ற புனைபெயரிலும் எழுதியிருக்கிறார். இவரது ஜனன நூற்றாண்டுவிழா 06.07.2008இல் ஞானம் சஞ்சிகையின் ஏற்பாட்டில் கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் நடைபெற்றிருந்தது.

5575

விழிகள் சுவாசிக்கும் இரவுகள். ஏ.எம்.எம்.ஜாபீர். கொழும்பு 6: ஞானம் பதிப்பகம், 3B, 46ஆவது ஒழுங்கை, 1வது பதிப்பு, ஏப்ரல் 2008. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ் பிரைவேட் லிமிட்டெட், 48 B, புளுமெண்டால் வீதி).
72 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 22x14.5 சமீ., ISBN: 978-955-8354-21-6.

சாய்ந்தமருதை பிறப்பிடமாகவும் சம்மாந்துறையை வசிப்பிடமாகவும் கொண்டவர் அப்துல் மஜீத் முஹம்மது ஜாபீர். சம்மாந்துறை அறபா வித்தியாலயத்தில் ஆசிரியராகப் பணியாற்றும் இவரது முதலாவது கவிதைத் தொகுப்பு இது. 1993இலிருந்து எழுத்துப் பணிகளில் ஈடுபடும் இவரது முதலாவது கவிதை வேஷங்கள் என்ற தலைப்பில் மித்திரன் வார மலரில் பிரசுரமாகியது. மனித வாழ்வின் கூறுகளைக் கூர்ந்து நோக்கிய பார்வையின் பதிவுகளாக இக்கவிதைத் தொகுதியில் அமைந்துள்ள 36 கவிதைகளும் அமைந்துள்ளன. இயற்கையின் தத்துவம், ஆன்மீக உணர்வு, சமுதாய நோக்கு, மக்கள் வாழ்நிலை ஆகியவற்றைக் கருப்பொருளாகக் கொண்ட அழகான கவிதைகள் இவை. புரவலர் புத்தகப் பூங்காவின் நூல் வெளியீட்டுத் திட்டத்தில் வெளியாகிய ஒன்பதாவது நூல் இது.

5576

வெள்ளைக் கமலம். அரியாலையூர் வே.ஐயாத்துரை. யாழ்ப்பாணம்: யாழ். இலக்கிய வட்டம், 1வது பதிப்பு, தை 1975. (சுன்னாகம்: திருமகள் அழுத்தகம்).
xviii, 68 பக்கம், விலை: ரூபா 3.50, அளவு: 18x12.5 சமீ.

யாழ். இலக்கிய வட்டத்தின் 21ஆவது நூல். சொல்நயம், கவிதைநயம், பொருள்நயம், ஆகியவற்றைக் கொண்ட 30 பாக்கள் அன்பிதழ், ஆய்விதழ், அருளிதழ், அரங்கிதழ் ஆகிய தலைப்புகளின்கீழ் அடங்கியுள்ளன. அரியாலையூர் கதிர்காமு வேலுப்பிள்ளை அவர்களின் கனிஷ்ட புதல்வரான இந்நூலாசிரியர் அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாசாலையில் கல்வி பயின்று பண்டிதர் மு.வேதநாயகம் அவர்களின் மாணாக்கராயிருந்தவர். கவித்திறனுடன், இசைத்திறனும், அரங்கியல் திறனும் பெற்ற இவர் அரியாலை ஸ்ரீ கலைமகள் நாடகசபாவின் இயக்குநராகவும் சுண்டிக்குளி யாழ். நாடகக் கலாமன்றத்தின் செயலாளராகவும், நடிகராகவும் இருந்தவர்.

5577

வெளிப்பு. க.தணிகாசலம். கொழும்பு 11: தேசிய கலை இலக்கியப் பேரவை, சவுத் ஏஷியன் புக்ஸ், 47, 3வது மாடி, கொழும்பு மத்திய சந்தைக் கூட்டுத் தொகுதி, 1வது பதிப்பு, மே 2002. (கொழும்பு 13: கௌரி அச்சகம், 207, ஆட்டுப்பட்டித் தெரு).
x, 63 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 21.5x14 சமீ., ISBN: 955-8637-02-5. (மேலட்டையில் ISBN 955-8637-11-4 என்று குறிப்பிடப்பட்டுள்ளது).

காலப்பெறுமானமும் கலைப்பெறுமானமும் வாய்ந்த நல்லதோர் அறுவடையாய் இக் கவிதைத் தொகுதி அமைகின்றது. 1975 தொடக்கம் மிக அண்மைக்காலம் வரையிலான காலப்பகுதியைத் தழுவிநிற்கும் இவரது ஆக்கங்களில் ஊடுருவி நிற்கும் பண்புகளில் பிரதானமானவை, காலப்பெயர்ச்சியினது ஓட்டங்களின் சுவடுகளைப் பதிவுசெய்திருத்தல், உழைக்கும் மக்களின் நலன் பற்றிய ஊன்றிய அவதானிப்பு, உடனியற் சூழலின் இன்ப துன்பங்கள் மீதான அக்கறை, ஒடுக்கலுக்கும் சுரண்டலுக்கும் உள்ளாகி உழலும் மாந்தர்கள் யாவரும் ஒருங்கு திரளக் கூடியவர்கள், திரட்டப்பட வேண்டியவர்கள் என்னும் எண்ணத்துணிவு, மேலாதிக்க அடாத்துகளுக்கு எதிரான விழிப்பினைத் தூண்டும் தணியாத ஆவல், மாறுபட்டும் வேறுபட்டும் தொடர்ந்தியங்கும் உலக வரலாறு பற்றிய தெரிந்துணர்வு ஆகியவையாகும்.

5578

வேட்டைக்குப் பின். ஓட்டமாவடி அறபாத். வாழைச்சேனை: சுஹா பப்ளிகேஷன்ஸ், இல.159, எம்.பி.சீ.எஸ். முன் வீதி, மாவடிச்சேனை, 1வது பதிப்பு, ஓகஸ்ட் 2004. (கொழும்பு: டெக்னோ கிராப்பிக்). 64 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 20.5x13 சமீ., ISBN: 955-8409-08-1.

இக் கவிதைத் தொகுதி, 90களின் பின் எழுந்த முஸ்லீம்களின் வாழ்வியலைச் சுட்டுகின்ற ஓர் குறிப்பிடத்தக்க ஆவணமாகக் கருதப்படுகின்றது. பெரும்பாலான கவிதைகள் இஸ்லாமிய அடையாளத்தையும், முஸ்லீம்களின் பண்பாட்டுத் தனித்துவங்களையும் கொண்டு விளங்குகின்றன. முஸ்லிம் மக்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டம், அவர்களுக்கெதிரான இனச்சுத்திகரிப்பு நடவடிக்கைகள், பேரினவாத இயக்கங்களின் அத்துமீறல், முஸ்லிம்களின் வாழ்வியல் இருப்பு, கருத்துச் சுதந்திரம் மறுதலிக்கப்படுகின்ற அடக்குமுறை போன்றவற்றை உள்ளடக்கிய கவிதைகளின் தொகுப்பு இது.

5579

வேருடன் பிடுங்கிய நாளிலிருந்து. நீ.பீ.அருளானந்தம். கல்கிசை: திருமகள் பதிப்பகம், இல.7, லில்லியன் சாலை, 1வது பதிப்பு, ஆனி 2008. (தெகிவளை: ஏ.ஜே.பிரின்ட்ஸ், 44, புகையிரதநிலைய வீதி). xiv, 132 பக்கம், ஓவியங்கள், விலை: ரூபா 300., அளவு: 21x14.5 சமீ., ISBN: 978-955-1055-05-9.

தனது முதலாவது சிறுகதைத் தொகுப்பை 2002இல் வெளியிட்ட நீ.பீ.அருளானந்தம், கவிதை புனைகதை, தொலைக்காட்சி நாடகம், நடிப்பு என்று பல்வேறு தளங்களில் காலூன்றியவர். மண்வாசனை, யதார்த்த நிலை என்பவற்றைத் தனது கவிதைகளில் பதித்து, அனுபவரீதியாகத் தான் கண்டனுபவித்தவைகளையே கருவாகப் பயன்படுத்துவதால் வாசகனை நிதர்சன உலகில் சஞ்சரிக்க வைக்கிறார். இவரது கவிதைகளில் சமூக அவலங்களும் தாக்கங்களும் அழுத்தமாகப் பதியப்பெறுகின்றன. 101 கவிதைகள் இத்தொகுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன. மதி புஷ்பாவின் ஓவியங்கள் கவிதைகளுக்கு மெருகூட்டுகின்றன.

5580

ஸ்ரீலங்கா சுதந்திரகீதம் அல்லது மரதன் ஓட்ட மணிஒலி. ச.த.மு.சதக்குத் தம்பிப் பாவலர். மாத்தளை: எஸ்.டி.எம்.சாஹிபு, 24, முகாந்திரம் வீதி, 1வது பதிப்பு, ஏப்ரல் 1970. (கொழும்பு 13: ரெயின்போ பிரின்டர்ஸ், 231 ஆதிருப்பள்ளித் தெரு).
60 பக்கம், விலை: ரூபா 1.25

பல்வளமும் கலைநலமும் நிறைந்த இலங்கைத் தீவின் சிறப்புகள் பற்றி உணர்ச்சி பொங்கக்கூறும் 155 பாக்கள் கொண்ட இந்நூலை இயற்றியவர் மாத்தளை மறுமலர்ச்சிக் கவிஞர் ச.த.மு.சதக்குத் தம்பிப் பாவலராவார். இந்நாடு பண்புபெற்று இன்புற்று நல்லறம் ஓங்கி நல்வாழ்வு வாழவேண்டும் என்ற தனது பேரவாவை எளிமையான கவிவரிகளினூடு புலப்படுத்துகின்றார். இந்நூலுக்கான அணிந்துரைகளை ஏ.எம்.ஏ.அஸீஸ், வித்துவான் ஏ.பெரியதம்பிப்பிள்ளை ஆகியோர் வழங்கியுள்ளனர். சாற்றுகவியை பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளையும், வாழ்த்துரையை கவியோகி சுத்தானந்த பாரதியாரும் வழங்கியுள்ளனர். (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5581

ஹைக்கூ கவிதைகள். கப்டன் மலரவன். மாங்குளம்: மலரன்னை வெளியீடு, மலராலயம், கொல்லர் புளியங்குளம், 1வது பதிப்பு, சித்திரை 1998. (மல்லாவி: வவுனியா வடக்கு ப.நோ.கூ.சங்கப் பதிப்பகம்). (12), 40 பக்கம், சித்திரங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 17.5x13.5 சமீ.

மாவீரரான கப்டன் மலரவன் (லியோ), மாங்குளத்தைச் சேர்ந்தவர். இயற்பெயர் காசிலிங்கம் விஜித்தன். ஒரு மாவீரனின் கனிந்த மனவெளிப்பாடு இந்தக் கவிதைத் தொகுப்பில் பதிவாகியுள்ளது. அவனது எண்ணச் சிதறல்களும் சிந்தனையோட்டத்தின் வெளிப்பாடும் ஹைக்கூ வடிவத்தில் சிந்தனை முத்துக்களாகக் குவிகின்றன. தத்துவ விசாலமாக, சிந்தனைக் கூர்மையாக, புதுமையின் பொலிவும், மெருகுமாக ஒவ்வொரு கவிதையும் சிந்திக்கத் தூண்டுகின்றன.

மேலும் பார்க்க: 5795, 5797

894.8(2) தமிழ் நாடகங்கள்

5582

அகங்கார மங்கையின் அடக்கம்: ஓர் இனிய தமிழ் நாடகம். ஜி.எஸ்.துரைராஜ் ஆபிரகாம். தர்கா நகர்: ஜி.எஸ்.துரைராஜ் ஆபிரகாம், அழுத்கம, 1வது பதிப்பு, ஐப்பசி 1955. (மத்துகம: விஜயஸ்ரீ அச்சகம்).
60 பக்கம், விலை: ரூபா 1.25.

தமிழகத்தில் மதுரையிலும் வேலூரிலும் கதை நிகழ்வதாகச் சித்திரிக்கப்படும் இந்நாடகம் வில்லியம் ஷேக்ஸ்பியரின் Taming of the Shrew என்னும் நாடகத்தைத் தழுவி எழுதப்பட்டுள்ளது. தமிழர் வீரம், விகடம், காதல், கற்பு, மாண்பு, மரபு முதலான பண்புகள் பொலிந்து காணப்படும் இந்நாடகம் நான்கு அங்கங்களில் 12 காட்சிகளில் 17 கதாபாத்திரங்களின் துணையுடன் உருவாக்கப்பட்டுள்ளது. இந்நூலாசிரியர் அழுத்கம, தர்காநகர் சாஹிராக் கல்லூரியின் ஆசிரியராவார். இந்நூலுக்கான மதிப்புரையை பண்டிதர் த.சுப்பிரமணியன், பண்டிதர் இ.நமசிவாயம், வி.ரி.அரியநாயகம் ஆகியோர் வழங்கியுள்ளனர். முன்னுரையை பூண்டுலோயா கந்தசாமி ஆங்கிலப் பாடசாலையின் ஓய்வுபெற்ற அதிபர் ஜீ.ஏ.இரத்தினவரதர் எழுதியுள்ளார். (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5583

அசோகமாலா. மு.இராமலிங்கம் (புனைபெயர்: முருகரம்மான்). கொழும்பு 6: மு.இராமலிங்கம், அயோத்தியா, ஹாமர்ஸ் அவென்யு, வெள்ளவத்தை, 1வது பதிப்பு, 1943.((தமிழ்நாடு: Cooperative Press, கீழ ராஜவீதி, புதுக்கோட்டை).
55 பக்கம், விலை: ரூபா 1.00.

இருபது களங்களையும், பதினொரு நாடக பாத்திரங்களையும் கொண்டு உருவாக்கப்பட்ட வரலாற்று நாடக நூல். அனுராதபுரம் இலங்கையின் தலைநகராயிருந்த கி.மு.161- கி.மு.137 காலப்பகுதியில் நிகழ்ந்ததான கதை. இலங்கை அரசன் துட்டகைமுனு, அவனது நண்பன் சத்தாதீசன், துட்டகைமுனு மன்னனின் மகன் இளவரசன் சாலி, அவனது தோழன் மாலி, இளவரசன் சாலியின் காதலியான சண்டாள மங்கை அசோகமாலா மற்றும் அசோகமாலாவின் சினேகிதி சங்கமாலா ஆகியோரைச் சுற்றி கதை நகர்த்தப்படுகின்றது. (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5584

அர்த்தமுள்ள உறவுகள்: பரிசுபெற்ற நாடகங்கள். மரியம்பீபி சுல்தான். கண்டி: கண்டி கலைக் கழகம், 1வது பதிப்பு, ஒக்டோபர் 2008. (Kengalle: Dilu Enterprises).
144 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 21x14 சமீ.

பாடசாலை ஆசிரியையான மரியம்பீபி சுல்தான், தான் எழுதி மாணவியரைக்கொண்டு தனது பாடசாலையில் மேடையேற்றி வாழ்த்துப்பெற்ற 36 நாடகங்களில், அஸ்தமனத்தில் ஓர் உதயம், துன்பம் நேர்கையில், காரிருள் நீங்கியபோது, விதியின் வழியிலே, அந்திம காலத்துப் புஷ்பங்கள், அர்த்தமுள்ள உறவுகள் ஆகிய ஆறு நாடகங்களை இந்நூலில் தொகுத்திருக்கிறார். ஹட்டன் நகரைப் பிறப்பிடமாகக் கொண்ட நூலாசிரியை, 1979ம் ஆண்டு முதல் கண்டி மோபிறே மகளிர் கல்லூரியில் ஆசிரியராகப் பணிபுரிகிறார்.

5585

அலங்கார ரூபன் நாடகம்: தென்மோடிக் கூத்து. சு.வித்தியானந்தன் (பதிப்பாசிரியர்). பேராதனை: இலங்கைக் கலைக்கழகத் தமிழ் நாடகக் குழு வெளியீடு, 1வது பதிப்பு, ஐப்பசி 1962. (மட்டக்களப்பு: கத்தோலிக்க அச்சகம்).
114 பக்கம், விலை: ரூபா 2.00.

அதிவீரசூரன், அழகவல்லி, அலங்காரரூபன், செகதனையாளி, அலங்காரரூபி, அரசனின் மனைவி, மந்திரிமார், சேனாபதிகள், தூதுவர்கள் என்று இன்னோரன்ன பாத்திரங்களைக் கொண்டு உருவாக்கப்பட்ட தென்மோடிக் கூத்து. வரகவி கணபதி ஐயரின் (1709-1784) மட்டக்களப்புக் கூத்துப் பிரதியொன்றின் நூலாக்கம் இதுவாகும். மிகச் சுவைசெறிந்த பாட்டுக்கள் நிறைந்த இந்நாடகம் மட்டக்களப்பிற் பெரிதும் கொண்டாடப்படும் தென்மோடிக் கூத்துகளில் சிறந்ததொன்றாகும். இந்நாடகத்துக்குரிய முக்கிய ஏட்டைத் தந்துதவியவர் காரைதீவைச் சேர்ந்த திரு.வைரமுத்து கைலாயபிள்ளை கப்புகனார். கிடைத்துள்ள ஏட்டுப்பிரதிகளில் மூலஆசிரியர் பெயர் குறிப்பிடப்படவில்லை. அவர் உதவிய பிரதியுடன் வேறு கிடைத்த சில பிரதிகளையும் ஒப்பிட்டே பதிப்பாசிரியர் இந்நூலை அச்சுருவில் கொண்டுவந்துள்ளார். (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5586

அன்பில் மலர்ந்த அமரகாவியம். நீ.மரியசேவியர். யாழ்ப்பாணம்: திருமறைக் கலாமன்றம், 1வது பதிப்பு, பதிப்பு விபரம் தரப்படவில்லை. (யாழ்ப்பாணம்: ஆசீர்வாதம் அச்சகம்).
iv, 56 பக்கம், வண்ணத்தகடு, விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14 சமீ.

இயேசுவின் திருப்பாடுகளின் காட்சிகள் அடங்கிய இசை-உரை-நாடகச் சித்திரம். கிறிஸ்துவின் திருப்பாடுகளைப் பற்றி நற்சிந்தனைகளைத் தூண்டும் முத்தமிழ்ப் படைப்பாக உரும்பிராயில் 1969ஆம் ஆண்டு நோன்பு காலத்தில் நடிக்கப்பெற்ற நாடகம் இது. (இந்நூல் School of Oriental and African Studies (SOAS), University of London நூலகத்தில் பார்வையிடப்பட்டது. பதிவிலக்கம் 374953).

5587

இடிகரை மண்: நாடகங்கள். தே.தேவானந்த் (இயக்குநர், செயல்திறன் அரங்க இயக்கம்). யாழ்ப்பாணம்: செயல்திறன் அரங்க இயக்கம், அருளகம், ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி, 1வது பதிப்பு, 2007. (யாழ்ப்பாணம்: யுனைட்டெட் மேர்ச்சன்ட்ஸ்).
71 பக்கம், விலை: ரூபா 85., அளவு: 18.5x13 சமீ.

இங்கு ஏழு நாடகங்கள் தொகுக்கப்பட்டுள்ளன. இடிகரை மண் (சி.நந்தன்), நித்திய தரிசனமும் நாளைய நிதர்சனமும் (த.நித்திகா), நிழல் தேடும் மரங்கள் (க.சீலன்), சமதாளம் (ரி.கில்மன்), உயிர்தேடும் ஜடங்கள் (க.சுபாஜினி), விடியலைத் தேடி (க.தாரணி), பாரதி தேசம் (மாவை நா.கஜேந்திரா), சாத்திரம் ஏதுக்கடி (ப.கோமா) ஆகிய இந்நாடகங்கள் ஒரு குழுநிலையில் இயங்கிய இளையோரால் உருவாக்கப்பட்டவை. ஒவ்வொன்றும் ஒவ்வொரு வடிவம் சார்ந்தவை. பாடல் முதன்மை பெற்ற படிமக்காட்சித் தொகுப்பு, யதார்த்தபாணி சார்ந்த நாடகங்கள், மோடிமை சார்ந்த நாடகங்கள் என்று வகைப்படுத்த முயன்றாலும் திட்டவட்டமான ஒரு வடிவத்துக்குள் இவற்றை அடக்கமுடியாதுள்ளது. பயில்கள நாடகங்களாகப் பயன்படுத்தத்தக்கவை.

5588

இராம நாடகம்: விளக்கங்களுடன். வி.சி.கந்தையா (பதிப்பாசிரியர்). மட்டக்களப்பு: பிரதேச கலாமன்றம், 1வது பதிப்பு, 1969. (மட்டக்களப்பு: கத்தோலிக்க அச்சகம்).
193 பக்கம், விலை: ரூபா 1.75.

வான்மீகி இராமாயணம், கம்பராமாயணம், அருணாசலக் கவிராயரது இராமாயணக் கீர்த்தனைகள் என்பவற்றைப் பின்பற்றியே இராம நாடகத்தினைத் தாம் எழுதியதாக நூலாசிரியர் தமது அவையடக்கத்தில் குறிப்பிடுகின்றார். இராமாயணப் பேரிலக்கியத்தின் அனைத்துக் கிளை நிகழ்ச்சிகளையும் நாடக உருவில் வெளிக்கொண்டுவரமுடியாத நிலையில் குறிப்பாக மந்தரை, கைகேயி என்போரது சூழ்ச்சி நூலில் மிகவும் சுருக்கப்பட்டுள்ளது. பாதுகாபட்டாபிஷேகம், குகனைப் பற்றிய செய்தி, வாலிவதம், அங்கதன் தூது முதலான பல செய்திகள் இராம நாடகத்துள் விரிவஞ்சி இடம்பெறாது போயுள்ளது. இந்த வடமோடி நாட்டுக்கூத்தைப் பாடிய மூல ஆசிரியரது பெயர் முதலியன பற்றி நூலில் தெளிவாகக் குறிப்பிடப்படவில்லை. இப்பதிப்பு நூலுக்கான அணிந்துரையை புலவர்மணி ஏ.பெரியதம்பிப்பிள்ளை வழங்கியுள்ளார். (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5589

இரு நாடகம்: பொருளோ பொருள், தவறான எண்ணம். க.கணபதிப்பிள்ளை. கொழும்பு: க.கணபதிப்பிள்ளை, தமிழ்ப் பேராசிரியர், இலங்கைப் பல்கலைக்கழகம், 1வது பதிப்பு, 1952. (சாவகச்சேரி: இலங்காபிமானி அச்சியந்திரசாலை).
111 பக்கம், விலை: ரூபா 3.00, அளவு: 20x14.5 சமீ.

ஈழத்துத் தமிழர் சமுதாய நிலையைச் சித்திரிக்கும் இரு சமூக நாடகங்கள் இத்தொகுப்பில் இடம்பெறுகின்றன. **பொருளோ பொருள்** அல்லது கார்த்திகேயன் வீழ்கை என்ற நாடகத்தின் கதை நிகழுமிடம் யாழ்ப்பாணமும் கொழும்புமாகும். **தவறான எண்ணம்** என்ற நாடகம் நாகபுரி என்ற இடத்தில் இடம்பெறுவதாகச் சித்திரிக்கப்படுகின்றது. இவ்விரு நாடகங்களும் இலங்கைப் பல்கலைக்கழகத் தமிழ்ச் சங்கத்து ஆண்டுவிழாக்களில் சங்கத்து அங்கத்தவரினால் கழக அரங்கில் மேடையேற்றப்பட்டவையாகும்.

5590

இறுதி மூச்சு: வரலாற்று நாடகம். த.சண்முகசுந்தரம். மாவிட்டபுரம்: வித்துவான் கணேசையர் தமிழ்ச் சங்கம், 1வது பதிப்பு, ஜுலை 1965. (தெல்லிப்பழை: குகன் அச்சகம்).
72 பக்கம், விலை: ரூபா 1.00, அளவு: 18x12.5 சமீ.

கி.பி. 1620இல் யாழ்ப்பாணத்தில் உள்ள போர்த்துக்கேயரின் கோட்டையிலும், வன்னிக் காடுகளிலும் நிகழ்வதாக அமையும் வரலாற்று நாடகம். யாழ்ப்பாணத்தரசன் பரராசசேகரன், அரசனின் மெய்ப்பாதுகாவலன், வரோதயசிங்கன், யாழ்ப்பாணத்தரசரின் வேதியர் - அந்தணர் அருணாசலம், யாழ்ப்பாணத்து முதலி எதிர் நாயகம், போர்த்துக்கேயப் படைத்தலைவன் பிலிப்பு தி ஒலிவீரொ, யாழ்ப்பாணத்தரசின் பிரசித்தகாரன் வள்ளுவன் வைரவன் ஆகியோரை முக்கிய பாத்திரங்களாகக் கொண்டு கதை நகர்த்தப்படுகின்றது. குவைரோஸ் எழுதிய வரலாற்று நூலின்படி அந்தணன் ஒருவன் வெள்ளைத் துண்டைப் பிடித்துச் சைகை காட்டி யாழ்ப்பாணத்தரசனைப் போர்த்துக்கேயரிடம் சிக்கவைத்தான் எனப்படுகின்றது. செவிவழிக்கதைகளின் படி போர்த்துக்கேயர் அந்தணனைக் கருவியாக வைத்துச் சூழ்ச்சிசெய்தே பரராசசேகரனைப் பிடித்தனர் எனத் தெரிகின்றது. தமது சூழ்ச்சியை போர்த்துக்கேயர் தாம் எழுதிய வரலாற்றில் மறைப்பதில் விந்தை ஏதும் இல்லை என்பதே நாடகத்தின் கருத்தாகும்.

5591

இறுதிப் பரிசு. ஏ.ரி.பொன்னுத்துரை. யாழ்ப்பாணம்: யாழ் இலக்கிய வட்டம், 1வது பதிப்பு, 1967. (சுன்னாகம்: திருமகள் அழுத்தகம்).
91 பக்கம், விலை: ரூபா 2.00

குமணன் புகழ்பூத்த கொடைவள்ளல். புலவர் பணியும் சால்பு வாய்ந்தவன். அவனை ஒழித்துப் பதவிக்குவர ஆசைப்படுகின்றான் இளங்குமணன். குமணனது கொடையே அவனுக்குப் பகையாக மாறுகின்றது. இறுதியில் புலவர் சாத்தனார் சகோதரர் இருவரையும் இணைத்துவைக்கிறார். ஒரு சிறு இலக்கியக் கருவை ஆதாரமாகக் கொண்டு புனையப்பெற்ற இந்நாடகம். பதினொரு காட்சிகள் கொண்டது. இந்நாடகத்தில் முறையே குமணனின் கொடைத்தன்மை, புலவரின் பெருமிதம், சூழ்ச்சி, போலிப் புலவர்களின் தன்மை, இளங்குமணனின் கோபம், பிடிவாதம், குடிமக்களின் குமுறல். சோகம், குமணனின் தியாகம், இளங்குமணனின் உக்கிர ஆட்சி, மக்களின் மன வேதனை, சாத்தனாரின் வறுமை, தலையையே இறுதிப் பரிசாக ஈயமுன்வரும் குமணனின் இதயம், இளங்குமணன் மனமாற்றம், மங்கல முடிவு என்பவற்றைப் பெரும்பாலும் உயரிய நடையில் காட்ட முனைந்துள்ளார் காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரி ஆசிரியரான நாடகாசிரியர் ஏ.ரி.பொன்னுத்துரை. இந்நூலுக்கான அணிந்துரையை கலாஜோதி செ.சண்முகநாதன் (சானா) அவர்களும், கலாநிதி சு.வித்தியானந்தனும் வழங்கியுள்ளனர். (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5592

உணர்வுகள். ரி.தயாநிதி. பாரிஸ்: ரஜனி வெளியீடு, 1வது பதிப்பு, புரட்டாதி 1992. (பாரிஸ்: தமிழாலயம்).
(4), 39 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18.5x13 சமீ.

அப்புக்குட்டி இராஜகோபால் என்ற ஈழத்துக் கலைஞனின் உடன்பிறப்பாகிய நூலாசிரியரின் நாடகம். ஐரோப்பிய சுகபோகங்களில் வாழும் ஒரு ஈழத் தமிழ்க் குடும்பத்தில் ஐரோப்பாவிலேயே பிறந்த ஒரு

குழந்தை வளர்ந்து, தன்னடைய தமிழ் இனத்தின் விடுதலைப் போராட்டத்தைப் பற்றி, தனது ஐரோப்பிய நண்பி ஒருத்தியின் வாயிலாக அறிந்து உணர்வுபெறுவதாக இந்நாடகம் அமைக்கப்பட்டுள்ளது.

5593

உயிரிளங்குமரன்: நாடகம். நவாலியூர் க.சோமசுந்தரப் புலவர். சுன்னாகம்: க.வேலுப்பிள்ளை, திரு நிலையம், உடுவில், 1வது பதிப்பு, பெப்ரவரி 1936. (சுன்னாகம்: திருமகள் அழுத்தகம்).
152 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18.5x12.5 சமீ.

சைவ சித்தாந்த சாஸ்திரங்களின் அகத்தே புதைந்துள்ள உண்மைகளையெல்லாம் நாடகத்திற்கு வேண்டிய பல அங்கங்களோடும் காட்சிகளோடும், பாட்டும் உரையும் விரவ அமைத்து இந்நாடக நூல் தயாரிக்கப்பட்டுள்ளது. வெள்ளியங்கிரி வேந்தன் திருநீலகண்டனின் மகனே உயிரிளங்குமரனாவான். இந்நூலுக்கு அணிந்துரையை முதலியார் செ.இராசநாயகமும், சிறப்புப் பாயிரங்களை வித்துவான் பிரம்மஸ்ரீ சி.கணேசையர். மாவைக் கவுணியன் வெண்ணெய்க் கண்ணனார், பண்டிதர் வே.மகாலிங்கசிவம், வட்டுக்கோட்டை பண்டிதர் அ.தில்லைநாதர், ப.இராமநாதபிள்ளை ஆகியோர் வழங்கியுள்ளனர்.

5594

எஸ்தாக்கியர் நாடகம். வ.ம.சூசைப்பிள்ளை. யாழ்ப்பாணம்: ம.யோசேப்பு, ஈச்சமோட்டை வீதி, 1வது பதிப்பு, 1962. (யாழ்ப்பாணம்: ஆசீர்வாதம் அச்சகம், 29. கண்டி வீதி).
164 பக்கம், விலை: ரூபா 1.50, அளவு: 21x14.5 சமீ.

பாரம்பரியக் கலைவடிவமான கூத்தில் மிகுந்த பற்றுக்கொண்ட யாழ்ப்பாணத்து ம.கி.பொன்னுத்துரை அவர்கள் மாதகல் மதுரகவிப் புலவர் வ.ம.சூசைப்பிள்ளை (1877-1955) அவர்களைக் கொண்டு அர்ச். எஸ்தாக்கியர் சரித்திரத்தை நாடகமாகப் பாடுவித்தார். நல்லூர் வண. சுவாமி ஞானப்பிரகாசரினால் பார்வையிடப்பெற்ற இப்பிரதியை நடிப்பதற்கான அனுமதி 1928இல் பெற்றுக்கொள்ளப்பட்டது. (மேலும் பார்க்க: எஸ்தாக்கியர் நாடகம். எஸ்.தம்பிமுத்துப் பிள்ளை வழங்கியது. நூல்தேட்டம் பதிவிலக்கம் 3286).

5595

ஒரு கலைஞனின் கதை. கலைச்செல்வன். கொழும்பு 6: ஞானம் பதிப்பகம், 3B, 46ஆவது ஒழுங்கை, 1வது பதிப்பு, ஜூலை 2008. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ் (பிரைவேட்) லிமிடெட், 48B, புளுமெண்டால் வீதி).
90 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 22.5x14.5 சமீ., ISBN: 978-955-8354-27-8.

இந்த மேடை நாடக நூல், கலாஜோதி சண்முகம் என்ற பாத்திரப் படைப்பினூடாக நாடகக் கலைஞர்களின் வாழ்வுண்மையை மிக நேர்த்தியாகச் சித்திரிக்கின்றது. பாத்திர வார்ப்புகள் யதார்த்தத்தோடு ஒட்டியவை. பார்வையாளர்களோடு நேரடியாகப் பேசுபவை. கொழும்பில் அரை நூற்றாண்டுக்கும் மேலாகக் கலைப்பணியாற்றிவரும் கலைச்செல்வன் அறுபதுகளிலிருந்து தமிழ் நாடகத்துறையில் தடம்பதித்து வந்துள்ளார். நான் உங்கள் தோழன் என்ற இலங்கைத் தமிழ்த் திரைப்படத்தின் திரைக்கதை வசனம் உள்ளிட்ட பல வானொலி தொலைக்காட்சி நாடகங்களை எழுதியுள்ளவர். நூலுருவில் வெளிவரும் இவரது முதலாவது நாடகநூல் இது. இந்நூல் புரவலர் புத்தகப் பூங்காவின் பிரசுரத் தொடரில் பன்னிரண்டாவது வெளியீடாகும்.

5596

ஒரு துளி. நீ.மரியசேவியர். யாழ்ப்பாணம்: திருமறைக் கலாமன்றம், 1வது பதிப்பு, பதிப்பு விபரம் தரப்படவில்லை. (யாழ்ப்பாணம்: ஸ்ரீபார்வதி அச்சகம்).
16 பக்கம், வண்ணத்தகடு, விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x13.5 சமீ.

எலியேசர், எபநேசர் என்ற பணக்காரர்களைப் பற்றியும் அவர்களது வீட்டு வாசலில் அவர்களின் ஏளனத்துக்குள்ளாகிக் கிடக்கும் ஏழை இலாசரஸ் பற்றியும் இந்நாடகம் பேசுகின்றது. பிச்சைக்காரர்களையும் வறியோரையும் துன்புறுத்தும் பணக்காரர்கள் ஈற்றில் நரகத்திற்கும், அவர்களால் இம்சைப்படுத்தப்படும் ஏழைகள் நல்வாழ்வுபெற்று ஆண்டவனால் சொர்க்கத்துக்கும் அழைக்கப்படுவர் என்பதே நாடகத்தின் அறமாகின்றது. (இந்நூல் School of Oriental and African Studies (SOAS), University of London நூலகத்தில் பார்வையிடப்பட்டது. பதிவிலக்கம் 374952).

5597

கன்னி பெற்ற கடவுள்: வானொலி இசை உரை நாடகச் சித்திரம். நீ.மரியசேவியர். யாழ்ப்பாணம்: திருமறைக் கலாமன்றம், 1வது பதிப்பு, பதிப்பு விபரம் தரப்படவில்லை. (யாழ்ப்பாணம்: ஸ்ரீ பார்வதி அச்சகம்).
(2), 28 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x13.5 சமீ.

வானொலி இசை உரை நாடகச் சித்திரமாக எழுதி வழங்கப்பட்ட இக்கலைவடிவம், கிறீஸ்தவத்தில் கன்னி மேரி ஈன்றெடுத்த தவப் புதல்வன் இயேசு கிறீஸ்து பற்றிய சிறிய சம்பவமொன்றை பின்னணியாகக் கொண்டு வளர்த்துச் செல்லப்படுகின்றது. (இந்நூல் School of Oriental and African Studies (SOAS), University of London நூலகத்தில் பார்வையிடப்பட்டது. பதிவிலக்கம் 374952).

5598

கோபுர வாசல். இ.முருகையன். கொழும்பு 4: செய்யுட்கள வெளியீடு, 149/3 காலி வீதி, 1வது பதிப்பு, 1969. (கொழும்பு 12: குமரன் அச்சகம், 201, டாம் வீதி).
56 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை.

நந்தனார் என்ற திருநாளைப்போவார் சரிதை தமிழகத்திற்குப் புதியதன்று. சேக்கிழார் பெருமான் ஒரு சில திருவிருத்தங்களிலே இச்சரிதையைப் பாடியுள்ளார். அண்மைக் காலத்திலே கோபாலகிருஷ்ண பாரதியார் இக்கதையைக் கீர்த்தனைகளாக அமைத்துப் பாடிப் பிரசங்கம் செய்தார். இப்போது நந்தனார் கதை நாடகமாக உருவாகியுள்ளது. மூன்று அங்கங்களில் இடம்பெறும் இந்நாடகத்தின் முதலாம் அங்கம் திருப்புன்கூர்ச் சிவாலயத்திலும், இரண்டாம் அங்கத்தின் முதலாம் காட்சி ஆதனூரில் நந்தனார் வீட்டின் அயலிலும், இரண்டாம் மூன்றாம் காட்சிகள் வேதியர் வீட்டிலும், மூன்றாம் அங்கம் சிதம்பரம் நடேசர் கோவிலிலும் இடம்பெறுவதாக காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. 2007இல் சாஹித்திய இரத்தினம் விருது பெற்ற கவிஞர் இராமுப்பிள்ளை முருகையன் சாவகச்சேரி, கல்வயல் கிராமத்தில் 23.4.1935இல் பிறந்தவர். தன் 12ஆவது வயதில் கவிதை புனையத் தொடங்கியவர். 1950 முதல் கவிதை எழுதிவரும் இவர் பல பிறமொழிக் கவிதைகளையும் தமிழுக்குத் தந்துள்ளார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கௌரவ கலாநிதிப் பட்டமும் இவருக்குக் கிடைத்திருந்தது. (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5599

சங்கிலி இராசன் டிறாமா அல்லது தன்வினை தன்னைச் சூழ்ந்த நாடகம். அச்சுமாநகர அதிவினோத சபாக் காரியஸ்தர். (வெளியீட்டு விபரம் தரப்படவில்லை). 1வது பதிப்பு, 1903. (யாழ்ப்பாணம்: ஞானப்பிரகாச யந்திரசாலை, அச்சுவேலி).
102 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை.

வெண்பா, வசனம், விருத்தம் கொண்டு அமைக்கப்பட்ட நாடகம். கங்கைசூழ் யாழ்ப்பாணக் காவலனாய் வீற்றிருந்த சங்கிலி மன்னவனின் சரிதையினைக் கூறும் நூல் என்ற குறிப்புடன் வெளிவந்துள்ளது. நூல் பற்றிய ஆக்கியோன் குறிப்பில் "யாழ்ப்பாணத்திலே திசையெங்கு மிசைபரப்பி அரசியற்றிய சிங்கையாரிய குலத்தை முடிப்பதற்குப் பிறந்து அரசுரிமையை அநியாயமாய்க் கவர்ந்து பற்பல கொடுமைகளைச் செய்து ஈற்றில் தான் விதைத்ததையே அறுத்த பான்மையாய்க் கொல்லப்பட்ட சங்கிலியரசன் காதையை யாவர்க்கும் இன்பமும் நல்லறிவுமுண்டாக்கும் நோக்கமாய் நாடகமாய் இயற்றினோம்" என்று நூலாசிரியர் குறிப்பிடுகின்றார். (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5600

சத்தியேஸ்வரி: ஒரு தமிழ் நாடகம். சாரா (இயற்பெயர்: க.வே.சாரங்கபாணி). சுன்னாகம்: க.வே.சாரங்கபாணி, உரும்பராய், 1வது பதிப்பு, 1938. (சுன்னாகம்: திருமகள் அழுத்தகம்).
202 பக்கம், விலை: ரூபா 1.25.

சத்தியேஸ்வரி என்ற தலைப்பில் ஈழகேசரி பத்திரிகையில் வெளிவந்த கற்பனை நாடகப் படைப்பின் நூலுரு இதுவாகும். இரத்தினபுரி வியாபாரியான நகுலேஸ்வரப் பிரபு, அமரசிங்கம் என்ற அமுதமலை ஓவர்சியர், வீரவாகு என்ற கள்வர் தலைவன் போன்றோர் பிரதான பாத்திரங்களாவர். மொத்தம் 18 பாத்திரங்களுடன் ஐந்து அங்கங்களும் 18 களங்களுமாக இந்நாடகம் விரிகின்றது. ஸ்ரீவர்த்தனபுரி (கண்டி), இரத்தினபுரி, அமுதமலை, கோமாரி ஆகிய பிரதேசங்கள் கதை நிகழும் இடமாகச் சித்திரிக்கப்படுகின்றது. அந்நாளிலே இந்நூலில் 1200 பிரதிகள் அச்சிடப்பட்டுள்ளதான குறிப்பும் நூலில் காணப்படுகின்றது. (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5601

சலங்கையின் நாதம்: வரலாற்று நாடகம். எம். உதயகுமார். கொழும்பு 6: ஞானம் பதிப்பகம், 3B, 46ஆவது ஒழுங்கை, 1வது பதிப்பு, நவம்பர் 2007. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ் பிரைவேட் லிமிட்டெட், 48 B, புளுமெண்டால் வீதி).
xii, 42 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 22x14.5 சமீ., ISBN: 978-955-8354-15-5.

கொழம்பு மனோரஞ்சித கானசபா எனும் கலாஷேத்திரத்தில் உருவானவர் கலைஞர் உதயகுமார். கடந்த 50 ஆண்டுகளுக்கு மேலாக மேடை நாடகங்களிலும், வானொலி. சினிமா, தொலைக்காட்சித்துறைகளிலும் தன் தடத்தைப் பதித்து வருபவர். இலங்கை கலாச்சார அமைச்சின் கலாபூஷணம் விருது வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டவர். இந்த வரலாற்று நாடக நூல் இவரால் 10 தடவைகளுக்கு மேல் இலங்கையில் மேடையேறிய சலங்கையின் நாதம் என்ற நாடகத்தின் எழுத்துருவை உள்ளடக்கியுள்ளது. புரவலர் புத்தகப் பூங்காவின் மாதம் ஒரு நூல்திட்டத்தின் கீழ் வெளிவந்த மூன்றாவது நூல் இதுவாகும்.

5602

சாந்திரகாசம். வண. பிரான்சீஸ் கிங்ஸ்பரி. யாழ்ப்பாணம்: ரொபர்ட் கிங்ஸ்பரி, 23/4, ஸ்டான்லி வீதி, 3வது பதிப்பு, 1953. 1வது பதிப்பு, 1940, 2வது பதிப்பு, 1945. (சாவகச்சேரி: இலங்காபிமானி அச்சியந்திரசாலை).
39 பக்கம், விலை: சதம் 65., அளவு: 17.5x12 சமீ.

தமிழறிஞர் சீ.வை.தாமோதரம்பிள்ளை அவர்களின் மகனான வண.பிரான்சீஸ் கிங்ஸ்பரி அவர்கள் எழுதிய முதலாவது நாடகத் தமிழ் நூல். எவர்க்கும் விளங்கும் தெள்ளிய நடையில் எழுதிய இந்தத் தமிழ் வசன நாடகம் எட்டுக் களங்களைக் கொண்டது. கேரள தேசத்தரசன் சுதர்மிகன், அவனது மகன் சந்திரகாசன், குந்தல தேசத்து இளவரசி சம்பகமாலினி, குந்தல தேசத்து மந்திரி மகள் விஷயை, விஷயைக்குத் தமையன் மதனன் ஆகியோரைக் கதாபாத்திரங்களாகக் கொண்டு எழுதப்பட்ட இந்நாடகம் குந்தல இராசதானி, குளிந்த ராசதானி மற்றும் பூங்கா, காடு ஆகிய இடங்களைக் களமாகக் கொண்டது. வடமொழியில் மகாபாரதத்தில் உள்ள கிளைக்கதைகளுள் ஒன்றான சந்திரகாசன் கதையை திரித்தும் விரித்தும் நாடகஉருவில் எழுதியுள்ளார்.

5603

சிங்ககிரிக் காவலன். சொக்கன் (இயற்பெயர்: க.சொக்கலிங்கம்). யாழ்ப்பாணம்: கலைவாணி புத்தக நிலையம், 10, பிரதான வீதி, 1வது பதிப்பு, ஏப்ரல் 1963. (யாழ்ப்பாணம்: கலைவாணி அச்சகம், 10 பிரதான வீதி).
95 பக்கம், விலை: ரூபா 1.50, அளவு: 18x12.5 சமீ.

சீகிரி மன்னன் காசியப்பன் பற்றிய நாடக நூல். கி.பி. ஐந்தாம் நூற்றாண்டில் இலங்கையில் அரசோச்சியவன் சிங்கள மன்னன் காசியப்பன். ஆட்சியுரிமையைக் கைப்பற்றுவதற்காகவும், அதனைக் காப்பாற்றுவதற்காகவும் கொடுஞ்செயல்கள் சிலவற்றைச் செய்த அம்மன்னன் இலங்கை வரலாறு கண்ட கலையுணர்வு நிரம்பப்பெற்ற மன்னருள் ஒருவனாகவும் விளங்குகின்றான். முரண்பாடுகள் நிறைந்த அவனது வாழ்க்கை, வரலாற்றாசிரியரிடையே மாறுபட்ட கருத்துக்களைத் தோற்றுவித்தமை தவிர்க்கமுடியாததாகும். வரலாறுகளின் அத்திவாரத்திலேயே காசியப்பனின் சிகிரியாவையும் தமிழகத்தையும் பிணைத்தபடி சிங்ககிரிக் காவலன் என்ற இந்நாடகம் எழுகின்றது. இது இலங்கை கலைக்கழகத்தின் தமிழ் நாடகக்குழுவினரின் முதற்பரிசை 1961இல் பெற்றது. இலங்கைத் தமிழ்ப் புத்தக வெளியீட்டுக் கழகத்தினரால் இந்நாடகம் யாழ்.மாநகரசபை மண்டபத்தில் 6.3.1962, 10.3.1962 ஆகிய இரு தினங்களில் மேடையேற்றப்பட்டது. இந்நூலுக்கான முன்னுரையை கலாநிதி சு.வித்தியானந்தன் எழுதியுள்ளார். நாடக நூலின் அநுபந்தமாக **சிகிரி ஒரு வரலாற்றுக் குறிப்பு** என்ற தலைப்பில் இலங்கைப் பல்கலைக்கழகத் தமிழ் விரிவுரையாளர் க.கைலாசபதி அவர்களது கட்டுரையும் இடம்பெற்றுள்ளது.

5604

சிலம்பு பிறந்தது. சொக்கன் (இயற்பெயர்: க.சொக்கலிங்கம்). பேராதனை: இலங்கைக் கலைக்கழகத் தமிழ் நாடகக் குழு, 1வது பதிப்பு, 1962. (யாழ்ப்பாணம்: ஆசீர்வாதம் அச்சகம், 32 கண்டி வீதி).
82 பக்கம், விலை: ரூபா 1.25, அளவு: 18x12.5 சமீ.

சிலப்பதிகாரக் கதையைத் தழுவிய நாடக நூல். சிறந்த இலக்கிய நடையில் எழுதப்பட்ட இந்நாடகம் குறிப்பிடத்தக்க சில அம்சங்களுடன் விளங்குகின்றது. கவந்தி, சேரலாதனின் இரண்டாவது மகனான

இளங்கோவின் காதலியாகக் காட்சியளிக்கிறாள். இளங்கோ தமிழ்நாட்டின் உயர்வைக் கூறவே சிலப்பதிகாரத்தைப் பயன்படுத்தினார் என்பது பலரது கருத்து. ஆனால் தமிழ்நாட்டின் இழிவையும் எடுத்துரைக்கவே சிலப்பதிகாரத்தை இளங்கோ எழுதினாரென்பதை இந்நூலாசிரியர் பல இடங்களில் காட்டிச் செல்கிறார். இளங்கோ வஞ்சிக் காண்டத்தை எழுதவில்லை என்பதையும் இந்நூல் வலியுறுத்துகின்றது. இந்நூலாசிரியர் தமிழறிஞர் சொக்கன் புத்தளம் சாஹிறா மகாவித்தியாலயத்தில் ஆசிரியராக இருந்த வேளையில் இந்நாடகம் எழுதப்பட்டது. இந்நூலுக்கான தோற்றுவாயை கலாநிதி சு.வித்தியானந்தன் வழங்கியுள்ளார். இலங்கை கலைக்கழகத்தின் தமிழ் நாடகக் குழுவினரின் முதற்பரிசை 1960இல் இந்நாடகம் பெற்றது.

5605

சேரன் சமாதி: இலக்கிய நாடகம். முத்து சிவஞானம். கொழும்பு: இலங்கை கலைக்கழக வெளியீடு, 1வது பதிப்பு, புரட்டாதி 1966. (அச்சக விபரம் தரப்படவில்லை).
84 பக்கம், விலை: ரூபா 1.50, அளவு: 17.5x12 சமீ.

இலங்கைக் கலைக்கழகத் தமிழ் நாடகக் குழு 1966ம் ஆண்டு நடாத்திய நாடக எழுத்துப் போட்டியில் முதற்பரிசு பெற்ற நூல். நூலாசிரியர் பலாலி தெற்கு வசாவிளானைச் சேர்ந்தவர். இந்நூலுக்கான அணிந்துரையை இலங்கைக் கலைக்கழக நாடகக் குழுத் தலைவர் கலாநிதி சு.வித்தியானந்தன் வழங்கியள்ளார். உறையூரில் அரசு புரிந்த சோழ வேந்தன் செங்கணான், அவனது மனைவி இராசமாதேவி ஆகியோரைப் பிரதான பாத்திரங்களாகக் கொண்டு இந்நாடகம் உருவாக்கப்பட்டுள்ளது. கோச்செங்கணானைத் தலைமகனாகக் கொண்டு, அவனுக்கும் சேரமான் கணைக்காலிரும்பொறைக்கும் கழுமலத்தில் மூண்ட போரினையும், அப்போரிலே செங்கணானிடம் சேரமான் சிறைப்பட்டுச் சிறையிலிருந்த காலத்தில் உண்ணுநீர் கேட்டுச் சிறைக் காவலரால் அவமதிக்கப்பட்டுத் தன்மானம் அஞ்சித் தன் உயிர்நீத்த செய்தியினைக் கருவாகக் கொண்டது.

5606

ஞானசவுந்தரி நாடகம்: தென்பாங்குக் கூத்து. சு.வித்தியானந்தன் (பதிப்பாசிரியர்). மன்னார்: மன்னார் மாவட்ட உள்ளூராட்சி மன்றங்களின் வெளியீடு, 1வது பதிப்பு, ஆனி 1967. (யாழ்ப்பாணம்: கலைவாணி அச்சகம்).
236 பக்கம், விலை: ரூபா 3.00

ஞானசவுந்தரி நாடகத்தைத் தென்பாங்குக் கூத்துவடிவில் தமிழிற் பாடியவர் மாதோட்டப் புலவர் சூசைப்பிள்ளை மரிசாற்பிள்ளை. இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் கலாநிதி சு.வித்தியானந்தனால் பின்னர் பதிப்பிக்கப்பெற்று 1967 ஜுன் மாதம் 5-7ம் திகதிகள் நடந்தேறிய முருங்கன் கலைவிழா மகாநாட்டில் வெளியிடப்பட்டது. புலவர் மரிசாற்பிள்ளை மன்னார் முசலிப் பகுதி புதுவெளிக் கிராமத்தில் வாழ்ந்த பிரசித்த நொத்தாரிசும் வித்துவானுமாகிய மு.நெயினா முகம்மது மரைக்காயருடன் கல்வித்தொடர்பு கொண்டிருந்தவர். ஆயுர்வேதம், சோதிடம் போன்றவற்றில் ஈடுபாடுகொண்டிருந்தவர். 1905ம் ஆண்டில் தம் வாசஸ்தலத்தை கற்கிடந்த குளத்திலிருந்து நானாட்டானுக்கு மாற்றிக்கொண்ட பின்னர் பெரியகட்டைக்காடு சின்ன வயித்தியாம்பிள்ளை என்னும் பெருமகனார் கேட்டுக்கொண்டதற்கிணங்க இந்நாடகத்தைப் பாடினார். இந்நாடகம் 1910ம் ஆண்டில் பெரியகட்டைக்காட்டிலும், 1920ம் ஆண்டில் நானாட்டானிலும், 1942இல் அடம்பனிலும் மேடையேற்றப்பட்டது. இது இரண்டு இரவுகளாகத் தொடர்ந்து ஆடப்பெறும் கூத்தாகும். (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5607

தணியாத தாகம். கரவைக்கிழார் (இயற்பெயர்: க.கந்தசாமி). அடம்பன்: நாக. பத்மநாதன், இசங்கன்குளம், 2வது பதிப்பு, 1970, 1வது பதிப்பு, 1968. (யாழ்ப்பாணம்: கலைவாணி அச்சகம், இல.10, மெயின் வீதி).
86 பக்கம், விலை: ரூபா 2.00, அளவு: 18x12.5 சமீ.

இலங்கையை டச்சுக் காரர் ஆண்ட காலத்தில் விடுதலை வேட்கை தணியாமல், மாற்றான் தாள் பணியாமல் பனங்காமத்தை ஆட்சிசெய்த குறுநில வன்னி மன்னனான கயிலை வன்னியனின் கதை நாடகமாக உருவாக்கப்பட்டுள்ளது. நாடு செழிப்புடன் மட்டுமல்ல விழிப்புடனும் இருக்கவேண்டும் என்ற கருத்தை வலியுறுத்துவதுடன் தாய்நாட்டைக் காக்க உயிரையும் தரச் சித்தமாக இருக்கவேண்டும் என்ற உயர்நோக்கை இந்நாடகம் வலியுறுத்துகின்றது. 18 காட்சிகளில் தயாராகியுள்ள இந்நாடகத்தில் கயிலை வன்னியன், வேல்நம்பி, டச்சு கவர்னர், மருதப்பிள்ளை, தளபதி, அமைச்சர், செட்டிகுள வன்னியன்,

செஞ்சொற்கவி, கோதண்டம், சின்னப்பா, பொன்னப்பா, புலவர் இளங்கீரன், புலவர் அருட்கவி, இளவரசி கோமளவல்லி நாச்சியார், செண்பகவல்லி, கோதை ஆகிய 16 பாத்திரங்கள் இடம்பெறுகின்றனர். மன்னார், சித்தி விநாயகர் கோவிலடியைச் சேர்ந்த கரவைக்கிழார் என்ற புனைபெயரினுள் வாழும் படைப்பாளி கவிஞர் க.கந்தசாமியின் இந்த நூலுக்கு முகவுரையை மட்டுநகர் முதலாவது பாராளுமன்ற உறுப்பினர் செ.இராசதுரையும், அணிந்துரையை கலையரசு க.சொர்ணலிங்கமும், மதிப்புரையை மன்னார் அரச அதிபர் தேவநேசன் நேசையாவும் வழங்கிச் சிறப்பித்துள்ளனர்.

5608

தணியாத தாகம்: ஒரு திரைப்படச் சுவடி. சில்லையூர் செல்வராசன். கொழும்பு 3: நவகலா மன்றம், Modern Arts Society, 14ம் எண், 23ஆம் ஒழுங்கை, 1வது பதிப்பு, ஏப்ரல் 1971. (கொழும்பு 2: ராஜமணி அச்சகம், 50, மலே வீதி).
152 பக்கம், விலை: ரூபா 4.50, அளவு: 17x12.5 சமீ.

எதிலும் என்றும் தணிவு காணாத வடபுலத்து தமிழ் மக்களுடைய மன அவசங்களின் குறிப்புணர்த்திடும் கதை அம்சம் கொண்ட நாடகம். கதையில் வரும் பங்குக் கிணறு அதே மக்களின் தண்ணீர்த் தவிப்புக்கு மட்டுமல்லாது, அவர்களுடைய மன வரட்சிக்கும், கிணற்றுத் தவளைப் பாங்கான முழுச் சமூக வாழ்க்கை முறை வரட்சிகளுக்கும்கூட ஒரு சுட்டுச் சின்னமாக அமைகின்றது. தீபா என்ற சிங்களப் பெண், முனியாண்டி என்னும் மலையகப் பாட்டாளி, முருகன் என்னும் சீவல் தொழிலாளி, ஊரடிபட்ட பென்சனியர் மணியத்தார் போன்ற பாத்திரங்கள் கதையுடன் நெருங்கிப் பதிகின்றன. (இந்நூல் School of Oriental and African Studies (SOAS), University of London நூலகத்தில் பார்வையிடப்பட்டது. பதிவிலக்கம் 544407).

5609

தமயந்தி திருமணம். சோ.இளமுருகனார். யாழ்ப்பாணம்: உடுவில் மகளிர் கழகம், 1வது பதிப்பு, 1955. (யாழ்ப்பாணம்: அருட்திரு சூசைமாமுனிவர் அச்சகம்).
73 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x13.5 சமீ.

3000 பிரதிகள் வரை அச்சிடப்பட்ட இந் நாடக நூல், உடுவில் மகளிர் கழக முதல்வர் செல்வி அ.க.பரமசாமி அவர்களின் வேண்டுகோளுக்கேற்ப பாடசாலைச் சிறுவர்கள் நடிப்பதற்கேற்ற வகையில் உருவாக்கப்பட்டது. பழந்தமிழர் தம் வாழ்வில் கடைப்பிடித்த நல்லறங்களில் ஒன்றான மனைவாழ்க்கையின் மாட்சியை பள்ளிப் பிள்ளைகள் அறிதற்பொருட்டு, நளன்-தமயந்தி கதையை நாடக நூலுருவாக்கியுள்ளனர். இந்நூலுக்கான சிறப்புப் பாயிரத்தை புலவர்மணி ஏ.பெரியதம்பிப் பிள்ளை பாடியுள்ளார். முன்னுரையை யாழ்ப்பாண ஆயர் இல்லத்தைச் சேர்ந்த வண. L.A.சிங்கராயர் வழங்கியுள்ளார்.

5610

துயரப் பாறை. முத்து இராதாக்கிருஷ்ணன். திருக்கோணமலை: திருமதி கே.இராதாக்கிருஷ்ணன், மதுஷா பதிப்பகம், 164/1 திருஞானசம்பந்தர் வீதி, திருக்கோணமலை, 1வது பதிப்பு, 2006. (திருக்கோணமலை: ரெயின்போ மினி லாப்).
iv, (5), 76 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 21x15 சமீ.

1995 யாழ்ப்பாண இடப்பெயர்வு, 2006 சுனாமியின் தாக்கம், கண்ணிவெடி அபாயம் என்பவற்றைக் கருப் பொருளாகக் கொண்டு எழுதப்பட்ட மூன்று நாடகங்கள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. இலங்கையின் தேசிய சாகித்திய விழாவில் 2007ம் ஆண்டுக்குரிய சிறந்த நாடகநூலுக்கான விருதினைப் பெற்றது.

5611

தெய்வப் பாவை. சொக்கன் (இயற்பெயர்: க.சொக்கலிங்கம்). யாழ்ப்பாணம்: வரதர் வெளியீடு, 226, காங்கேசன்துறை வீதி, 1வது பதிப்பு, ஜனவரி 1968. (யாழ்ப்பாணம்: ஆனந்தா அச்சகம்).
88 பக்கம், விலை: ரூபா 1.25, அளவு: 21x15 சமீ.

பெரியபுராணத்தில் கூன்பாண்டியனின் (நின்ற சீர்நெடுமாறனின்) மனைவியாரும், சோழமன்னன் மகளாருமான மங்கையர்க்கரசியார் தம் கணவனைச் சமணத்தினின்றும் சைவத்திற்குத் திருப்ப, திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரை மதுரைக்கு அழைத்தது முதல், கூன்பாண்டியனின் வெப்புநோய் நாயனாரால் போக்கப்படுவதும், பாண்டியநாட்டில் மீண்டும் சைவசமயம் நிலவுவதுமான வரலாற்றைக் கருப்பொருளாகக் கொண்ட நாடகம். 14 காட்சிகளில் அமைந்த இந்நாடக நூலுக்கு அணிந்துரையை அகில இலங்கைச் சேக்கிழார் மன்றப்

பொதுச்செயலாளரும் தமிழறிஞருமான வண்ணார்பண்ணை பண்டிதர் வித்துவான் க.கி.நடராஜன் வழங்கியுள்ளார்.

5612

நகுலமலைக் குறவஞ்சி நாடகம். நா.விசுவநாத சாஸ்திரிகள். (மூலம்), அ.குமாரசுவாமிப் புலவர் (பரிசோதித்தவர்). யாழ்ப்பாணம்: அராலியூர் ச.க.கணேசக் குருக்கள், 1வது பதிப்பு, மன்மத வருடம் (1895). (கொக்குவில்: சோதிடப் பிரகாச யந்திரசாலை).
59 பக்கம், விலை: சதம் 30.

யாழ்ப்பாணத்து வட்டுக்கோட்டையைச் சார்ந்த அராலியூர் பிரம்மஸ்ரீ நா.விசுவநாத சாஸ்திரிகள் ஆக்கிய இந்நாடக நூல் சுன்னாகம் ஸ்ரீ அ.குமாரசுவாமிப் புலவரவர்களால் பரிசோதிக்கப்பெற்று அராலியூர்ச் சிவன்கோயிற் பூசகர் ஸ்ரீலஸ்ரீ ச.கங்காதரக் குருக்களின் குமாரர் கணேசக் குருக்களால் பதிப்பிக்கப்பட்டது. யாழ்ப்பாணத்தில் வாசஞ்செய்த பிரபுக்கள், பிராமணக் குருக்கள், நாட்டுக்கோட்டை நகரத்தார் முதலியோர்களையும் ஆங்காங்கே உள்ள ஊர்கள், தடாகங்கள் முதலியவைகளையும் இடையிடையே வர்ணித்தும், மடக்கு, யமகம், சிலேடை, தொனி முதலிய அலங்காரங்களை அமைத்தும் நகுலமலை மீதும் மாவைக் கந்தசுவாமி மீதுமாக செந்தமிழில் செய்த குறவஞ்சி நாடகம் இதுவாகும். (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5613

நாடக மாலை. ஐயன்னா (இயற்பெயர்: ஐ.இராசரத்தினம்). சுன்னாகம்: சனசமூக நிலையம், கந்தரோடை, 1வது பதிப்பு, ஆனி 1962. (சுன்னாகம்: கலாதேவி அச்சகம்).
96 பக்கம், விலை: ரூபா 1.50.

சுன்னாகம், அம்பனையைச் சேர்ந்த நூலாசிரியரின் இந்நூலில் பத்து நாடகங்கள் இடம்பெற்றுள்ளன. மலர்ந்தது தவம் (கதாபாத்திரங்கள் 7, காட்சிகள் 7), பெருமிதம் (கதாபாத்திரங்கள் 4, காட்சிகள் 4), சீதனம் (கதாபாத்திரங்கள் 9, காட்சிகள் 7), காதல் முறிவு (கதாபாத்திரங்கள் 4, காட்சிகள் 3), கறுப்பு (கதாபாத்திரங்கள் 6, காட்சிகள் 6), சகோதர பாசம் (கதாபாத்திரங்கள் 5, காட்சிகள் 5), பெட்டகம் வாழ்க (கதாபாத்திரங்கள் 3, காட்சிகள் 3), சந்தேகம் (கதாபாத்திரங்கள் 6, காட்சிகள் 6), நல்ல பாடம் (கதாபாத்திரங்கள் 8, காட்சிகள் 8), அங்கவினை நாடகம் (கதாபாத்திரங்கள் 7, காட்சிகள் 4) ஆகிய நாடகங்களே இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. இந்நூலுக்கான முன்னுரையை யாழ். தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் தலைவர், இ.மகாதேவா (தேவன்-யாழ்ப்பாணம்) வழங்கியுள்ளார். இந்நூலுக்கான மேலட்டையை ஓவியர் மேடம் (கே.இராசரத்தினம்) வரைந்துள்ளார். மேலட்டை கொழும்பு மெய்கண்டான் அச்சகத்தில் அச்சிடப்பட்டுள்ளது. (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5614

நாடகம்-நாட்டியம். புனிதவதி சண்முகலிங்கம். வல்வெட்டித்துறை: நாடக மன்றம், யாழ்/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, 1வது பதிப்பு, பெப்ரவரி 2009. (நெல்லியடி: தமிழ்ப் பூங்கா அச்சகம்).
(10), 98 பக்கம், விலை: ரூபா 200, அளவு: 21x15 சமீ.

ஈழத்து எழுத்தாளர் குப்பிழான் ஐ.சண்முகத்தின் துணைவியாரான இந்நூலாசிரியர் உடுப்பிட்டி மகளிர் கல்லூரியில் நீண்டகாலம் ஆசிரியராகப் பணியாற்றியவர். இவர் கல்லூரி விழாக்களுக்காக எழுதி மாணவர்களால் மேடையேற்றப்பட்ட நாடகங்களின் தொகுப்பாக இந்நூல் வெளிவந்துள்ளது. 1998-2008 காலப்பகுதியில் எழுதப்பெற்ற எட்டு மேடை நாடகங்களினதும், மூன்று நாட்டிய நாடகங்களினதும் தொகுப்பு இது. எம்மைப் பிடித்த பிசாசுகள் போயின, கெட்டதிலும் நல்லது இருக்கும், எங்களுக்கும் வாழ்வு உண்டு, வியாபார சூட்சுமம், குடை, எதிர்பார்ப்புகள் ஏமாற்றங்கள், நீ பாதி நான் பாதி, அறத்தொடு நின்ற அன்பினள், கங்குலும் பகல்பட வந்தாள், தமயந்தியின் இரண்டாம் சுயம்வரம், பாதுகா பட்டாபிஷேகம் ஆகிய 11 நாடகங்கள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன.

5615

நானே குற்றவாளி: நாடகம். சுவாமி எல்.டெசி. மானிப்பாய்: சுவாமி எல்.டெசி, சந்தனமாதா கோவில், 2வது பதிப்பு, 1962. (யாழ்ப்பாணம்: அர்ச்.சூசைமாமுனிவர் கத்தோலிக்க அச்சகம்).
124 பக்கம், விலை குறிப்பிடப்படவில்லை, அளவு: 18.5x12.5 சமீ.

பிரதம குரு, வண.சுவாமி இராசநாயகம், வண.சுவாமி பாக்கியநாதர், வண.சுவாமி அருளானந்தர், திரு. சுவாமிநாதர், பரஞ்சோதி, அமிர்தநாதர், சிங்கராயர், மரியதாஸ், ஞானப்பிரகாசம், ஓர் அந்நியன், செல்லையா, வீரசிங்கம், கிராம விதானையார், பாடகர்கள் மற்றும் தேவதூதர், பிசாசு என்று பல்வேறு கதாபாத்திரங்களுடன் ஐந்து அங்கங்களில் இடம்பெறும் இந்நாடகம் கத்தோலிக்க கிறிஸ்தவர்கள் பாவசங்கீர்த்தனத்தின் மட்டில் பற்றுதலும் அபிமானமும் கொள்ளும்படியாகவும் பாவ சங்கீர்த்தனம் கொடுக்கும் குருவானவரில் நம்பிக்கை உள்ளவர்களாகவும் இருக்கும்படி வலியுறுத்துகின்றது. இந்நூலுக்கான மதிப்புரை அமரர் வண.சூ.ஆசீர்வாதம் சுவாமிகளால் வழங்கப்பட்டுள்ளது.

5616

பக்த பூஜை: நாடகம். என்.மணிவாசகன். (புனைபெயர்: மணிக்கவிராயர்).அக்கரைப்பற்று: மகாசக்தி வெளியீட்டகம், சாகாமம் வீதி, 1வது பதிப்பு, ஜனவரி 2007. (அக்கரைப்பற்று: நியு செலெக்ஷன் பிரின்ரர்ஸ்).
(4), 41 பக்கம், விலை: ரூபா 50., அளவு: 17x12 சமீ.

ஆயிரம் ரூபாய், நீதியின் நியதி போன்ற சமூக நாடகங்களை 1960களில் எழுதி நடித்து மேடையேற்றிய நூலாசிரியர் பாடசாலை மாணவர்களுக்காக எழுதிய நாடகம் இது. பாண்டவரும் கௌரவர்களும் வாழ்ந்த காலகட்டத்தில், பாண்டவர்களுக்காக கிருஷ்ணன் துரியோதனனிடம் தூதுசென்ற காலப்பகுதியில் கதை நிகழ்கின்றது. ஒரு ஏழைத் தச்சனுக்கும், அரச அதிகாரிகளுக்குமிடையே நடந்த போராட்டத்தை மையமாக வைத்து எழுதப்பட்டுள்ளது. அடக்கத்திற்கும் அதிகாரத்துக்கும் இடையே நடக்கும் இந்தப் போராட்டத்தின் இறுதியில் அடக்கம், மெய்மை, மெஞ்ஞானம், ஆன்மீகம் வெற்றியீட்டுகின்றது. அரசன்-அரசி, கண்ண பகவான், அமைச்சர்கள், அதிகாரிகள், தச்சன், சிறுவன், சிறுமியர் என்று 12 கதாபாத்திரங்களுடன் இந்நாடகம் இயக்கப்படுகின்றது.

5617

பணத்தைப் பார். பாரதநேச ஈழச்செல்வன். அரணாயக்க: தேன்துளி பதிப்பகம், இல.51, வில்பொல, 1வது பதிப்பு, 1966. (கொழும்பு 12: சுதந்திரன் அச்சகம்).
39 பக்கம், விலை: ரூபா 1.00.

தொழிற்சாலையொன்றின் முதலாளி-தொழிலாளிப் பிரச்சினையைப் பின்னணியாகக்கொண்டு 17 காட்சிகளில் நகர்த்தப்படும் நாடகம் இது. பாக்டரி முதலாளியான ஜமிந்தார் தங்கராசா, பாக்டரி தொழிலாளியான முத்தையன், முத்தையனின் மகன் மகேஸ், ஜமீந்தாரின் மகள் மல்லிகா, பாக்டரி மனேஜர் சுந்தரம் மற்றும் வேலைக்காரன் வேணு ஆகியோர் பாத்திரங்களாக அமைகின்றனர். (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5618

பதிவிரதை விலாசம். J.W.Barr குமாரகுலசிங்க முதலியார். வலிகாமம் வடக்கு: R.R.B. குமாரகுலசிங்கம், மணியகாரர், 1வது பதிப்பு, சௌமிய வருடம் (1909). (வயாவிளான்: சுதேச நாட்டிய அச்சியந்திரசாலை).
104 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை.

செந்தமிழ்ப் பதங்களால் மோனை, எதுகை, சந்தம் சிறக்க இயற்றப்பட்ட நாடகம். நேபாள தேசத்தின் விசயரங்க மகாராசனின் மகன் வித்தியாசன மன்னன், வணிககுல இளங்குமாரத்தி பதிவிரதை, குரு வித்துவாம்சன், குரு சிரேஷ்டர் மற்றும் அயோத்தி அரசன் மனுநீதிசேகரன் மகள் மனோன்மணி ஆகியோரைப் பாத்திரங்களாகக் கொண்டு இயற்றப்பட்ட நாடகம். ஆண்-பெண் இருபாலாருள் எப்பருவத்தினரும், எம்மதத்தினரும் வாசித்துக் கற்பிலக்கணத்தை நன்குணர்ந்தொழுகும் வண்ணம் செந்தமிழ்ப் பதங்களால் மோனை எதுகை சந்தம் சிறக்க இயற்றப்பட்ட ஒரு நவீனமான விலாசமாக அமைந்துள்ளது. இந்நூலாசிரியர், யாழ்ப்பாணத்தின் மல்லாகம் பொலிஸ் கோர்ட்டுச் சக்கிடுத்தாரும், துவிபாஷிதருமாயிருந்து காலஞ்சென்றவர். இந்நாடக நூலுக்கான சாற்றுகவிகளை வட்டுக்கோட்டை ஆசிரியர் உவில்லியம் நெவின்ஸ், உடுப்பிட்டி சிவசம்புப் புலவர், சுன்னாகம் அ.குமாரசுவாமிப் புலவர், ச.தம்பிமுத்துப் பிள்ளை, க.வேலுப்பிள்ளை ஆகியோர் வழங்கியுள்ளனர். இந்நூல் 1859இல் இயற்றப்பட்டு 1909இல் அச்சிடப்பட்டுள்ளது. (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5619

மறக்குடி மாண்பு: ஓரங்க நாடகங்கள். தொல்புரக்கிழார். (இயற்பெயர்: நா.சிவபாதசுந்தரம்). யாழ்ப்பாணம்: கலைச்செல்வி வெளியீடு, கந்தரோடை, சுன்னாகம், 1வது பதிப்பு, அக்டோபர் 1963. (யாழ்ப்பாணம்: சைவப் பிரகாச அச்சியந்திரசாலை).
116 பக்கம், விலை: ரூபா 1.50, அளவு: 18x12.5 சமீ.

பழைய தமிழ் நூல்களிலிருந்து சந்தர்ப்பங்களைத் தேர்ந்தெடுத்து, அவற்றைச் சிறந்த முறையில் நாடகங்களாக்கியுள்ளார். சங்க நூல்களிலிருந்த தமிழர் பண்புக்குச் சிறப்பை விளைவிக்கும் குணங்களைத் தேடி இச்சிறு நாடகங்களின் பாத்திரங்கள் மூலமாகவும் கதைப் போக்கின் மூலமாகவும் தெளிவுபடுத்தியுள்ளார். இந்நூலுக்கான அணிந்துரையை இலங்கைத் தமிழ் எழுத்தாளர் சங்கத் தலைவர் சீ.ஸ்ரீநிவாசன் வழங்கியுள்ளார். மறக்குடி மாண்பு என்ற நாடகம் மறக்குடிமனையைக் களமாகவும், நற்றமிழ்க் காவலன் என்ற நாடகம் அரச அரண்மணையைக் களமாகவும், மான மரணம் என்ற நாடகம் சிறைக்கூடத்தைக் களமாகவும், பறம்பு மன்னன் என்ற நாடகம் பாரி அரண்மனையைக் களமாகவும், பொருளும் கலையும் என்ற நாடகம் வீட்டைக் களமாகவும், கருத்தும் கருமமும் என்ற நாடகம் வீட்டின் புறத்தே அமைந்த சோலையைக் களமாகவும், இல் இன்பம் என்ற நாடகம் இல்லறத்தானின் வீட்டைக் களமாகவும், காதல் என்ற நாடகம் பூங்காவைக் களமாகவும், இன்பப் பிரிவு என்ற நாடகம் தலைமகளின் இல்லத்தைக் களமாகவும், உணர்வும் உறவும் என்ற நாடகம் வீட்டின் ஒரு பக்கத்தைக் களமாகவும் கொண்டு ஓரங்க நாடகங்களாகப் படைக்கப்பட்டுள்ளன.

5620

மனோன்மணி நாடகம். வண.பிரான்சீஸ் கிங்ஸ்பரி. சாவகச்சேரி: ரொபர்ட் கிங்ஸ்பரி, இலங்காபிமானி அச்சியந்திரசாலை, 1வது பதிப்பு, 1950. (சாவகச்சேரி: இலங்காபிமானி அச்சியந்திரசாலை).
48 பக்கம், விலை: சதம் 65., அளவு: 18.5x12.5 சமீ.

மனோன்மணீயம் என்ற நாடகம் பற்பல துறைகளில் பல்வேறு அறங்களையும் போதிப்பது. இந்நூலின் வழிவந்த நூலாக மனோன்மணி நாடகம் அமைகின்றது. தமிழகத்தின் திருநெல்வேலியும், திருவனந்தபுரமும் கதைகளின் களமாகவுள்ளது. சீவகன், மனோன்மணி, சுந்தர முனிவர், குடிலன், நாராயணன், பலதேவன், வாணி, சகடன், நடராசன் புருடோத்தமன், அருள்வரதன் ஆகியோர் இந்நாடகத்தின் பாத்திரங்களாவர். இந்நூலுக்கான முன்னுரையை இலங்கைப் பல்கலைக்கழக பதிவாளராக இருந்த ஏ.எம்.கே. குமாரசாமி வழங்கியுள்ளார்.

5621

மாணிக்க மாலை: நாடகம். க.கணபதிப்பிள்ளை. யாழ்ப்பாணம்: க.கணபதிப்பிள்ளை, பருத்தித்துறை, 2வது பதிப்பு, 1953, 1வது பதிப்பு, 1950. (சாவகச்சேரி: இலங்காபிமானி அச்சியந்திரசாலை).
126 பக்கம், விலை: ரூபா 2.50, அளவு: 18.5x12.5 சமீ.

மொழிபெயர்ப்பு நாடகம். இது கி.பி.ஏழாம் நூற்றாண்டில் கன்னோசி (Kanouj) நாட்டை ஆண்ட ஹர்ஷவர்த்தனன் (Harsha Vardhana) என்னும் புலமைமிகுந்த மன்னரால் வடமொழியில் எழுதப்பட்ட "இரத்தினாவளி" என்னும் நாடகநூலைப் பின்பற்றித் தழுவி எழுதப்பட்டதாகும். மூலநூலில் உள்ளவாறே உரைப்பகுதியை உரைநடையிலும், செய்யுட்பகுதியை செய்யுள் நடையிலும் யாத்துள்ளார்.

5622

மார்க்கண்டன் நாடகம்: வாளபிமன் நாடகம். கா.சிவத்தம்பி (பதிப்பாசிரியர்). கொழும்பு: இலங்கைப் பல்கலைக்கழக வைத்தியப் பகுதி, இந்து மாணவர் சங்கம், இலங்கைப் பல்கலைக்கழகம், 1வது பதிப்பு, 1963. (கொழும்பு 11: ஸ்டான்காட் பிறின்டேர்ஸ் லிமிட்டெட், 196 செட்டியார் தெரு).
274 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை.

இப்பதிப்பில் இடம்பெறும் இரு நாடகங்களும் வடமொழி மரபில் வரும் தமிழ்க் கூத்துக்களாகும். இவை வடமோடி வகையுள் அடங்குவன. பழைய விதானையாரும், சிறந்த அண்ணாவியாருமாகிய மருதங்குளம் இ.சே.தினகரம்பிள்ளை அவர்கள் வழங்கிய ஏட்டுப் பிரதிகளிலிருந்து நூலாக்கம்பெற்றவை. வாளபிமன் நாடகம் கணபதி ஐயரின் சுற்றத்தாரில் ஒருவராகிய சண்முக ஐயர் என்பவரால் சுந்தரி நாடகம் என்னும் பெயரால் பாடத் தொடங்கப்பட்டதெனவும், பாடி முடிக்கும் ஆற்றல் இல்லாது இடையில் அவர் நிறுத்திவிட வட்டுக்கோட்டையைச் சேர்ந்த கணபதி ஐயரால் வாளபிமன் நாடகம் என மாற்றி அமைக்கப்பட்டதெனவும் குறிப்பிடப்படுகின்றது. அர்ச்சுனனின் மகனான அபிமன்னன் வாட்போரினால் பலராமனின் மகள் சுந்தரியை (சசிரேகையை) அடைந்த வரலாற்றை இந்நூல் கூறுகின்றது. நாடகத்தின் பெயர் வாள் அபிமன்னன்

என்பதாக இருந்து திரிந்து வாளபிமன் எனப் பின்னர் மருவியதாக இந்நூலுக்கு முன்னுரை வழங்கிய சு.வித்தியானந்தன் குறிப்பிடுகின்றார். (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5623

முத்தொள்ளாயிரம். திமிலைத்துமிலன் (இயற்பெயர்: சின்னையா கிருஷ்ணபிள்ளை). மட்டக்களப்பு: கவிமணி வெளியீட்டுக் குழு, முத்தமிழ் மன்றம், ஆசிரியர் கலாசாலை, 1வது பதிப்பு, நவம்பர் 1992. (மட்டக்களப்பு: புனித செபஸ்தியார் அச்சகம், 65 லேடி மனிங் டிரைவ்).
(6), 96 பக்கம், விலை: ரூபா 50., அளவு: 17.5x12 சமீ.

இலக்கியச்சுவை கொண்ட நாடகம். இலங்கை வானொலியில் தொடராக ஒலிபரப்பப்பட்டது. 1000 ஆண்டுகளுக்கு முன்னர் பல்லவர் காலத்தில் எழுதப்பட்ட பழந்தமிழ் இலக்கியம் முத்தொள்ளாயிரம். யாரால் எப்போது பாடப்பெற்றது என்ற வரலாறு அழிந்த நிலையில், அது 900 முதல் 3000 வரையான எண்ணிக்கையிலமைந்த செய்யுட்களைக் கொண்டிருந்திருக்கலாம் என்று ஆராய்ச்சியாளர்கள் கருதியபோதிலும், இன்று கைக்கெட்டியுள்ளவை 108 பாடல்களே. புறத்திரட்டு என்னும் ஏட்டிலே தொகுக்கப்பட்டிருந்த முத்தொள்ளாயிரப் பாடல்கள் முதலில் கிடைத்தன. அவற்றை ரா.இராகவையங்கார் 1905இல் செந்தமிழ் பத்திரிகையில் வெளியிட்டார். முத்தொள்ளாயிரம் சேர சோழ பாண்டியர் எனும் மூவேந்தர்களின் பெருமையைப் பேசுகின்றது. முத்தொள்ளாயிரத்தின் பிறப்பைக் கற்பனைவளம்கொண்டு ஒரு நாடகமாக்கியிருக்கிறார் திமிலைத்துமிலன். கவிமணி வெளியீட்டுத் தொடரில் நான்காவது நூலாக இது வெளிவருகின்றது.

5624

யார் கொலைகாரன்? அ.பொ.செல்லையா. மீசாலை: வேலணை வீரசிங்கம், தாய்நாடு பதிப்பகம், 1வது பதிப்பு, மே 1968. (கொழும்பு 13: இரஞ்சனா அச்சகம், விவேகானந்தர் மேடு).
54 பக்கம், விலை: ரூபா 1.50.

மாறன், வழக்குரைஞர், மணிவண்ணன், சபாபதி, சொக்கன், நஞ்சப்பன், சங்கரன், பாதுகாவலர், திலகம், கலா ஆகிய பத்துக் கதாபாத்திரங்களுடன் இயங்கும் இந்நாடகத்தின் களங்கள் வழக்குரைஞர், மணிவண்ணன், சபாபதி ஆகியோரின் வீடுகளாக அமைந்துள்ளன. சுந்தர காண்டத்தின் நிந்தனைப் படலத்தில் கம்பரின் கவின்தமிழ்க் கவிதைகள் தரும் காட்சியில் காணும் கருத்துக்களைவிட இந்நாடகப் பாத்திரமான சபாபதியின் செயல்கள் வேறுபட்டதல்ல என்று கூறும் நாடக ஆசிரியர், கம்பன் காவியத்தில் காமத்தால் காயப்பட்ட காரிகையைக் காணும் நாம் இந்நாடகத்தில் மனத்தாலும் மறுவடையாத மாண்புமிகு மங்கையைக் காண்கிறோம் என்கிறார். கம்பனின் பாத்திரத்தில் காமரசத்தால் வெறிகொள்ளும் காளையர் உலகம் சித்திரிக்கப்பட இந்நாடகத்தில் காளையரால் உள்வாங்கப்பட்ட காமவெறி தறிக்கப்படுவதாகக் குறிப்பிடுகிறார். ஓவியர் ரமணியின் முன்னட்டை ஓவியத்துடன் இந்நூல் வெளிவந்துள்ளது. (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5625

வலை + முள். எஸ்.பொன்னுத்துரை. சென்னை 600024: மித்ர ஆர்ட்ஸ் அன் கிரியேஷன்ஸ், 375/8-10, ஆர்க்காடு சாலை, கோடம்பாக்கம், 1வது பதிப்பு, ஒக்டோபர் 2002. (சென்னை 24: மித்ர ஆர்ட்ஸ் அன் கிரியேஷன்ஸ், 375/8-10, ஆர்க்காடு சாலை).
136 பக்கம், விலை: ரூபா 40., அளவு 18x12 சமீ., ISBN: 1-876626-50-X.

எஸ்.பொ எழுதிய இரண்டு வரலாற்று நாடகங்களின் தொகுப்பு. **வலை-** மகதநாட்டுப் பேரரசன் அசோகனின் வாழ்வின் சில பக்கங்களைக் காட்டுகின்றது. இதில் மகத நாட்டு மாமந்திரி சாணக்கியன், அசோகச் சக்கரவர்த்தி, அசோகனின் காதலி காரூவகி, மகத நாட்டு இளவரசன் சுசீமன், தளபதி அஜாதசத்ரு, மகதத்தின் கீர்த்திபெற்ற பௌத்த துறவி உபகுப்தர் ஆகியோர் பாத்திரங்களாக வருகின்றனர். **முள் -** இலங்கைச் சிங்கள மன்னன் துட்டகைமுனு பற்றியது. இதில் துட்டகைமுனு, சேனாதிபதியான நந்தி மித்தன், கைமுனுவின் மனைவி ராணி, கைமுனுவின் தம்பி சதாரீசன், அவரது மகன் சாலி ராஜகுமாரன், சாலியின் காதலி அசோகமாலா, விகார நாயக்கர் மொகலிபுத்த தேரர் ஆகியோர் பாத்திரங்களாக வலம்வருகின்றனர்.

5626

வனவாசத்தின் பின். சி.மௌனகுரு. மட்டக்களப்பு: விபுலம் வெளியீடு, 7 ஞானசூரியம் சதுக்கம், 1வது பதிப்பு, டிசம்பர் 2002. (சென்னை 600014: தி பார்க்கர், 293 அகமது வணிக வளாகம், 2வது தளம், இராயப்பேட்டை நெடுஞ்சாலை).
(4), 92 பக்கம், விலை: இந்திய ரூபா 35., அளவு: 21x14 சமீ.

தங்கள் வனவாசத்தின் பின் என்ன செய்யலாம் என்று பஞ்ச பாண்டவரிடையே நடைபெற்ற கருத்து-உணர்வுப் போராட்டம் தான் இந்த நாடகத்தின் மையப்பொருளாகின்றது. 1959இல் அசாதாரண ஆற்றல் மிக்க கூத்துக் கலைஞராக இனம்காணப்பட்ட சி.மௌனகுரு, கடந்த 36 வருடங்களாக அரங்கியற் செயற்பாடுகளில் ஆளுமையுடன் ஈடுபட்டு வருகின்றார். கூத்து மரபினை நவீன நாடக மரபின் இன்றியமையாத அங்கமாக ஆக்கியமையில் கலாநிதி மௌனகுருவின் இடம் முக்கியமானது.

5627

வாழ்வு பெற்ற வல்லி: மாருதப் புரவல்லி நாடகம். த.சண்முகசுந்தரம். மாவிட்டபுரம்: மகாவித்துவான் கணேசையர் சங்கம், 1வது பதிப்பு, ஜுலை 1962. (தெல்லிப்பழை: குகன் அச்சகம்).
48 பக்கம், விலை: சதம் 75., அளவு: 21.5x14 சமீ.

தெல்லிப்பழை கந்தசுவாமி கோயிலடியைச் சேர்ந்த நூலாசிரியர், மாவிட்டபுரத்தில் முருகன் திருக்கோவில் தோன்றியமை பற்றிய கதையை நாடகமாக்கியிருக்கிறார். வரலாறும் அன்புநெறியும் ஒருங்கே இயைந்துள்ள இதன் மூலக்கதை யாழ்ப்பாண வைபவமாலையில் கூறப்பெற்றது. சோழ மண்டலத்தில் தேசாதிபதி திசையுக்கிரசோழனின் அரண்மனையையும், ஈழ மண்டலத்தின் கீரிமலை, மாவிட்டபுரம் போன்ற பகுதிகளையும் களமாகக் கொண்டு அமையும் இந்நாடகத்தில் அமைச்சர் அருணாசலம்பிள்ளை, திசையுக்கிர சோழன், வைத்தியர் வைத்தியநாதன், நாதசுர வித்துவான் முருகவேள், அருண்மொழிவல்லி, தளபதி விக்கிரமன், துறவி சாந்தலிங்கன், நகுல முனிவர், உக்கிரசிங்கன் ஆகியோரை கதாபாத்திரங்களாகச் சித்திரித்துள்ளார். இந்நூலுக்கான ஆசியுரையை தமிழ்ப் பேராசிரியர் க.கணபதிப்பிள்ளையும், அணிந்துரைகளை சு.வித்தியானந்தன், கலையரசு க.சொர்ணலிங்கம் ஆகியோரும் வழங்கியுள்ளனர்.

5628

வேதாளம் சொன்ன கதை. அம்பி (இயற்பெயர்: இ.அம்பிகைபாகன்). கொழும்பு 4: செய்யுட் களம், 149/3, காலி வீதி, 1வது பதிப்பு, செப்டெம்பர் 1970. (தெல்லிப்பழை: குகன் அச்சகம்).
60 பக்கம், விலை: ரூபா 2.00, அளவு: 18.5x12.5 சமீ.

இசை, கவிதை, கூத்து ஆகிய மூன்றையும் சீரிய மெய்ப்பாட்டில் ஏற்றிக் காட்டும் வகையில் அமைந்துள்ள இந் நாடக நூல், மனிதனுக்கு அடிப்படையாய் அமைந்த இரண்டுவகைப் பசியையும் அரங்கில் மோதவிட்டு அறமொழிகளில் அதனைத் தீட்டிச் சிந்தனையைத் தூண்டுகின்றது. இருவேறு பசிகளால் இருவேறு வகுப்பை ஆசிரியர் படைத்து இடையில் தன் அந்தண்மையால் அவ்விரு பசியையும் ஒருங்கு தீர்த்த ஒரு சிறுவனின் சிரிப்பினைப் புகுத்தி அதன் பொருளைப் புரியவைக்கிறார். இந்நூலுக்கான முன்னுரையை கவிஞர் இ.முருகையனும், வெளியீட்டுரையை (தந்துரை) செய்யுட்களம் தாபகர் இ.இரத்தினமும் வழங்கியுள்ளனர். இந்நாடகத்தின் பாத்திரங்களாக வேதாளம், செல்வி, அமைச்சர், மனைவி, விக்கிரமாதித்தன், முனிவர், புலவர், மகன், மன்னர், பிசாசு, ஏழை, சேவகன் ஆகியோர் இடம்பெறுகின்றனர்.

894.8(3) தமிழ்க்கவிதை நாடகங்கள்-காவியங்கள்

5629

ஆசிய ஜோதி. சி.தேசிகவிநாயகம்பிள்ளை. சென்னை 600108: பாரி நிலையம், 184, பிராட்வே, 20ஆவது பதிப்பு, ஜனவரி 1990, 1வது பதிப்பு, பெப்ரவரி 1941. (சென்னை 600086: சாலை அச்சகம், 11, திருவீதியான் தெரு, கோபாலபுரம்).
88 பக்கம், விலை: இந்திய ரூபா 7.50, அளவு: 18x12.5 சமீ.

உலகுக்கு வழிகாட்டியாகத் தோன்றிய கௌதம புத்தரின் சரித்திரத்தை இக்காவியம் பதிவுசெய்கின்றது. ஆங்கில மொழியில் எட்வின் ஆர்னால்ட் என்பவர் ஆசிய ஜோதி (Light of Asia) என்னும் பெயரில் கவிதை நூல் ஒன்றை வெளியிட்டிருக்கிறார். அந்த நூலைத் தழுவித் தமிழ்மணம் கமழக் கவிமணி அவர்கள் பழகு தமிழில் ஆசிய ஜோதியை பாடியருளியிருக்கிறார். புத்தர் அவதாரம், அருள் உரிமை, காதல் பிறந்த கதை, சித்தார்த்தன் கேட்ட தேவகீதம், சித்தார்த்தன் துறவு, புத்தரும் ஏழைச் சிறுவனும்,

கருணைக்கடல், புத்தரும் சுஜாதையும், புத்தரும் மகனிழந்த தாயும் ஆகிய 9 தலைப்புக்களில் இவ்வரலாறு காவியமாகின்றது.

5630

கருமணியிற் பாவாய். திமிலைத்துமிலன் (இயற்பெயர்: சின்னையா கிருஷ்ணபிள்ளை). மட்டக்களப்பு: எழுத்தாளர் ஊக்குவிப்பு மையம், இல. 64, கதிர்காமர் வீதி, அமிர்தகழி, 1வது பதிப்பு, 2008. (தெகிவளை: ஏ.ஜே.பிரின்ட்ஸ், 44, ஸ்டேஷன் வீதி).
261 பக்கம், விலை: ரூபா 400., அளவு: 21.5x15 சமீ., ISBN: 978-955-8715-48-2.

கவிஞர் திமிலைத்துமிலன் படைத்த இக்காவியத்தில் ஈழ விடுதலைப் போராட்டத்தின் பின்பலத்தில் விளைந்த காதல் கதையொன்று பேசப்படுகின்றது. 32 அத்தியாயம் கொண்ட இக்காவியம், மரபுக்கவிதை வரிகளுள் இலக்கிய நயத்துடன் பதிகின்றன. மட்டக்களப்பு மாவட்டத்தின் திமிலதீவு கிராமத்தில் வசித்துவரும் சின்னையா கிருஷ்ணபிள்ளை இலங்கையில் மூத்த எழுத்தாளர்களுள் ஒருவர். கவிதைத்துறையில் திமிலைத்துமிலன், சிறுகதைத்துறையில் மாலதி, மொழியிலக்கியத்துறையில் ஆழையடிச்சோலையான், பேய் மகன், இளமாலதி ஆகிய பெயர்களில் எழுதிவரும் கிருஷ்ணபிள்ளை "திமிலைத்துமிலன்" எனும் பெயரிலே இலக்கியத்துறையில் நன்கு பிரபல்யமானவராவார். ஏறாவூரில் 1933ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 25ஆம் திகதி பிறந்த கிருஷ்ணபிள்ளை மட்டக்களப்பு மெதடிக்ஸ் மத்திய கல்லூரியின் பழைய மாணவராவார். தொழில்சார் கல்வியினை மட்டக்களப்பு ஆசிரியர் கலாசாலையில் மேற்கொண்டார். பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கலைமாணிப் பட்டப்படிப்புப் பெற்ற இவர் கொழும்பு பல்கலைக்கழகத்தில் கல்வித்துறை டிப்ளோமா பட்டமும் பெற்றவர்.

5631

குலமலர்: காவியம். ச.அமிர்தநாதர். நுவரேலியா: கலை மன்ற வெளியீடு, 1வது பதிப்பு, 1969. (இறாகலை: அசோகா அச்சகம்).
68 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18.5x13 சமீ.

பதினொரு அத்தியாயங்களில் விரியும் குலமலர் காவியம் அழகூட்டும் உள்ளம், தோழியருடன் சாந்தி, இல்லற வாழ்வு, தம்பதிகள் கண்ட தமிழ்மாநாடு, அன்புப் புதையல், மழலைச் செல்வம், வாழ்வில் மலர்ந்த நாவல், கனவுலகில் சாந்தி, குழந்தை உலகு, நன்மைச் செயல், வாழும் சாவு ஆகிய தலைப்புகளில் விரிகின்றது. இந்நூலுக்கான அணிந்துரையை கொழும்பு, இலங்கைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை விரிவுரையாளர் கலாநிதி க.கைலாசபதி வழங்கியுள்ளார்.

5632

சரித்திரத்தினிலே சகோதரிகள் ஐவர் (கவிதைக் கதை). முருகு (இயற்பெயர்: ச.முருகையா). யாழ்ப்பாணம்: வாஹினி வெளியீடு, 90 மணிக்கூட்டு வீதி, 1வது பதிப்பு, மார்ச் 2008. (யாழ்ப்பாணம்: ஜெயஸ்ரீ பிரிண்டர்ஸ், 50 கல்லூரி வீதி, நீராவியடி).
ix, 33 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 120., அளவு: 20x14 சமீ.

தாயாகிநின்று தன் தம்பியை வளர்த்த நாவுக்கரசரின் அக்கா திலகவதியார், அருணகிரிநாதரின் அக்கா ஆதிலட்சுமி, இராஜராஜ சோழனின் அக்கா குந்தவைப் பிராட்டியார், இராவணன் தங்கை சூர்ப்பனகை, பட்டினத்தாரின் அக்கா ஆகியோர் பற்றிய வரலாறு கூறும் இலக்கியப்பதிவை கவிதைக் கதையாக இந்நூலில் கவிஞர் முருகு அள்ளித் தெளித்துள்ளார்.

5633

முற்றுப்பெறாத காவியம். வெல்லவூர்க் கோபால் (இயற்பெயர்: எஸ்.கோபாலசிங்கம்). மட்டக்களப்பு: விபுலம் வெளியீடு, 7 ஞானசூரியம் சதுக்கம், 1வது பதிப்பு, மார்ச் 1995. (மட்டக்களப்பு: புனித செபஸ்தியார் அச்சகம், 65 லேடி மன்னிங் டிரைவ்).
vi, 62 பக்கம், விலை: ரூபா 50., அளவு: 18.5x12 சமீ.

ஐந்தாவது விபுலம் வெளியீடு. கிழக்கிலங்கையின் குறிப்பிடத்தக்க கவிஞர்களுள் ஒருவரான வெல்லவூர்க் கோபால் கன்னிமலர், முல்லை, ஒரு கண்ணீர்க் காவியம் போன்ற கவிதை நூல்களை ஏற்கெனவே வழங்கியிருக்கிறார். சாமான்யரின் சாமான்ய வாழ்வுக்குள் ஓர் அர்த்தப்பாட்டைக் காட்டுகின்ற காதல் காவியம் இதுவாகும்.

5634

வந்து சேர்ந்தன: தரிசனம் (கவிதை நாடகங்கள்). இ.முருகையன். கொழும்பு 4: செய்யுட்கள வெளியீடு, 149/3, காலி வீதி, 1வது பதிப்பு, 1965. (கொழும்பு 13: இரஞ்சனா அச்சகம், 98 விவேகானந்தா மேடு).
26 பக்கம், விலை: ரூபா 1.00, அளவு: 20x13.5 சமீ.

கவிஞர் முருகையனின் இரண்டு கவிதை நாடகங்களின் தொகுப்பு இந்நூலாகும். **வந்து சேர்ந்தன** என்ற நாடகம், பலருக்கும் தெரிந்த திருவாதவூரர் குதிரை வாங்கிய கதையைப் புதிய கோணத்தில் நோக்கி, அதனை அழகோடும் அர்த்தத்தோடும் கவிதை நாடகமாக்கியுள்ளார். பாண்டியனின் துணை அமைச்சர் அறவாணன், அவரது மனைவி அங்கயற்கண்ணி, அங்கயற்கண்ணியின் தம்பி மைவணன், வாதவூரடிகள் மற்றும் மதுரை மன்னன் பாண்டியன் ஆகியோர் கதாபாத்திரங்களாவர். **தரிசனம்** கவிதை நாடகத்தின் நாடக பாத்திரங்கள் ஒருவனும் ஒருத்தியுமே. "விடுவோமா எங்களது லட்சியத்தை விழுந்துவிட்டோம் வாயிலிலே என்பதற்காய்?" என்று ஒருவனும் ஒருத்தியும் காத்துக் கிடப்பதைச் சித்திரிப்பது தரிசனம் என்ற இந்நாடகம். இந்நாடக நூலுக்கான முன்னுரையை பேராதனைப் பல்கலைக்கழகத்திலிருந்து சு.வித்தியானந்தன் வழங்கியுள்ளார். பின்னாளில் 2007இல் சாஹித்திய இரத்தினம் விருது பெற்ற கவிஞர் இராமுப்பிள்ளை முருகையன் சாவகச்சேரி, கல்வயல் கிராமத்தில் 23.4.1935இல் பிறந்தவர். தன் 12ஆவது வயதில் கவிதை புனையத் தொடங்கியவர். 1950 முதல் கவிதை எழுதிவரும் இவர் பல பிறமொழிக்கவிதைகளையும் தமிழுக்குத் தந்துள்ளார். **நோக்கு** என்ற காலாண்டுக் கவிதை இதழின் (1964-1965) இணை ஆசிரியராகவும் பணியாற்றியுள்ளார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கௌரவ கலாநிதிப் பட்டமும் இவருக்குக் கிடைத்திருந்தது.

5635

விவேகானந்தர் காவியம் (முதலாம் பாகம்). சுப்பிரமணியம் சிவலிங்கம். செங்கல்லடி: சு.சிவலிங்கம், குமாரவெளியர் வீதி, 1வது பதிப்பு, 2006. (வத்தளை: கிறிப்ஸ், 70/7 கனல் வீதி, ஹெந்தளை).
400 பக்கம், விலை: ரூபா 350., அளவு: 18x12.5 சமீ., ISBN: 955-99258-1-4.

மட்டக்களப்பைச் சேர்ந்த இந்நூலாசிரியர் ஒரு ஓய்வுபெற்ற கட்டிடப் பொறியியலாளர். கிழக்குப் பல்கலைக்கழகத்தில் பராமரிப்புப் பிரிவில் பணியாற்றியவர். 18 வயதிலிருந்து எழுத்துத் துறையில் ஈடுபாடுகொண்டவர். சுவாமி விவேகானந்தரின் பிரபல்யம்மிக்க சிக்காகோ நகரத்துச் சொற்பொழிவுகள், யாழ்ப்பாணச் சொற்பொழிவுகள் ஆகியன இந்நூலில் எளிமையான கவிதைவடிவில் இடம்பெறுகின்றன. அவற்றின் மையக்கருத்தைச் சிதறவிடாது எளிய கவிதை உருவில் ஆசிரியர் அவற்றை வழங்கியிருக்கிறார். நூலுருவில் வெளிவந்துள்ள இவரது முதலாவது படைப்பும் இதுவாகும்.

894.8(4) தமிழ்ச் சிறுகதைகள்

5636

அன்னை மண். ச.வே.பஞ்சாட்சரம். கனடா: வெண்ணிலா சண்முகானந்தம், ப.வேழத்தெழிலன், ஸ்காபரோ, 1வது பதிப்பு, ஓகஸ்ட் 2008. (கனடா: A&S Graphics, Scarborough).
vi, 106 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14 சமீ.

ஆசிரியரின் 51 சிறுகதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. சமூகப் பிரக்ஞையுள்ள ஒரு படைப்பாளியிடம் அறநெறித் தியானமும், சமுதாயப் பொறுப்புணர்ச்சியும் மிகுதியாக இருக்கவேண்டும் என்று விரும்பும் ச.வே.ப., படைப்பாளியின் சிந்தனைகள், செயல்கள், படைப்புக்கள் யாவும் சமுதாய நலிவுகளைப் போக்கி, ஆரோக்கியப்படுத்தும் தீவிர முனைப்புக் கொண்டவையாக எழவேண்டும் என்ற நோக்கின் அடிப்படையில் இக்கதைகளை எழுதியிருக்கிறார். கதைகள் அளவில் சிறிதாயிருந்த போதிலும், அறநெறியை ஆழமாகப் போதிக்கும் தன்மைகொண்டனவாக அவை அமைந்துள்ளன.

5637

அன்னை வீடு. செ.யோகநாதன். சென்னை 600026: படைப்பாளிகள் பதிப்பகம், 72, முதலாவது தெரு, குமரன் காலனி, வடபழநி, 1வது பதிப்பு, 1995. (சென்னை 14: ஜோதி ஆப்செட், 1/159, வி.எம்.தெரு, இராயப்பேட்டை).
176 பக்கம், விலை: இந்திய ரூபா 40., அளவு: 17.5x12.5 சமீ.

இலங்கை சாகித்திய மண்டலப் பரிசை இரு தடவைகளும், தமிழக அரசின் விருதுகளை மூன்று முறையும் பெற்றவர் செ.யோகநாதன். இறுதிக் காலத்தில் இலங்கையில் வாழ்ந்து மறைந்தாலும், தமிழகத்தில் நீண்டகாலம் வாழ்ந்து தன் இலக்கியப் படைப்புகளை வெளிக்கொண்டுவந்தவர். இவரது கதைகளில் மானிட மேன்மை, ஒடுக்குமுறைகளுக்கு எதிரான போர்க்குரல் என்பன காத்திரமாக ஒலிக்கும். தாக்குதல், செங்கமலம், வெய்யில், அங்கோர் கண்ணற்ற தீவினிலே, அன்னை வீடு, பெண், செய்தி, புன்னகையும் இன்னிசையும் எங்கு ஒளித்துப் போயினவோ, வசந்தமலர், புழு, சொல்லக் கொதிக்குது நெஞ்சம், தீயினில் தூசு, மலரும் முள்ளும், காலம், கேட்டிருப்பாய் காற்றே, வீடு ஆகிய 16 சிறுகதைகளை உள்ளடக்கிய தொகுப்பு இதுவாகும்.

5638

ஆத்ம விசாரம். அ.ச.பாய்வா. மட்டக்களப்பு: மறுகா வெளியீடு, ஆரையம்பதி 03, 1வது பதிப்பு, 2008. (அச்சக விபரம் தரப்படவில்லை).
77 பக்கம், விலை: ரூபா 200., msT: 22x14.5 rkP.

கிழக்கிலங்கையில் மூதூரைப் பிறப்பிடமாகவும், மட்டக்களப்பை வசிப்பிடமாகவும் கொண்டவர் அ.ச.பாய்வா. இவர் வாழ்ந்திருந்த கதிரவெளிக் கிராமத்தை கதைக்களனாகக் கொண்ட ஆறு சிறுகதைகளும், இலங்கை அரசியல் பற்றி வெளிப்படையாகவும், மறைமுகமாகவும் பேசும் நான்கு சிறுகதைகளும், இன்னும் நான்கு கதைகளுமாக மொத்தம் பதினான்கு சிறுகதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. தேனகம், வீரகேசரி, தினக்குரல், ஞானம், போன்ற இதழ்களில் இவரது பல கதைகள் பிரசுரமாகியுள்ளன.

5639

ஆத்மாவைத் தொலைத்தவர்கள். ஆவூரான். அவுஸ்திரேலியா: அவுஸ்திரேலிய தமிழ்-இலக்கிய கலைச் சங்கம், ATLAS, P.O.Box 620, Preston, Victoria 3072, 1வது பதிப்பு, ஏப்ரல் 2008. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ் பிரைவேட் லிமிட்டெட், 48 B, புளுமெண்டால் வீதி).
136 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 22x14.5 சமீ.

நெடுந்தீவில் பிறந்த ஆவூரான் அவுஸ்திரேலியாவில் மெல்பேர்ண் நகரில் புலம்பெயர்ந்து வாழ்கிறார். இந்நூலில், ஆத்மாவைத் தொலைத்தவர்கள், ஏக்கங்கள், அறம் செய்ய, அவளுக்கு அளந்தது, இந்தக் கோடுகள் ஒரு நாள், எமக்கென்றொரு பிள்ளை, கனவு மெய்ப்படலாச்சு, திசை தேடும் பறவைகள், எனப் பதினைந்து சிறுகதைகள் இடம்பெற்றுள்ளன. நாட்டுப் பற்றையும், விடுதலை வேட்கையையும் தூண்டும் வலிமை இவரது கதைகளுக்குள்ளது. சமுதாயத்தில் தான் கண்ட சாதிக்கொடுமை, சீதனம், ஒருவரை ஒருவர் குற்றம்சாட்டிக் குளிர்காயும் தன்மை, ஆங்கில மொழி மோகத்தால் எமது தமிழ்மொழிப் புறக்கணிப்பு போன்ற அம்சங்களை இக்கதைகளின் கருப்பொருளாகக் கொண்டுள்ளார்.

5640

இது எங்கள் தேசம். ச.முருகானந்தன். கரவெட்டி: கலை ஒளி வெளியீடு, ஜனசக்தி சனசமூக நிலையம், கரணவாய் கிழக்கு, 1வது பதிப்பு, சித்திரை 2004. (கொழும்பு 13: U.K.Printers, 103 Vivekananda Hill).
xiv, 108 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 22x14.5 சமீ.

20 சிறுகதைகளின் தொகுப்பு. தமிழர் போராட்டம், போராட்டத்தின் பின் விளைவுகள், சாதியம் முதலான வேறு பொது விடயங்கள் என இரு பிரிவுகளுக்குள் அடங்கும் இக்கதைகள், வன்னிப்பெருநிலப்பரப்பில் ஆசிரியர் வாழ்ந்துபெற்ற அனுபவங்களாக அமைகின்றன. முருகானந்தன் தன் மாணவப் பருவத்தில் 1976இல் தினகரனில் தன் முதலாவது சிறுகதையை வெளியிட்டு இலக்கிய உலகில் கால்பதித்தவர். பின்னாளில் மல்லிகை இலக்கிய இதழில் அதிகம் எழுதியவர். இன்று இவரது படைப்புக்கள் வெளிவராத ஊடகங்களே இல்லை என்னுமளவிற்கு ஈழத்து இலக்கியத்துறையில் ஆழக்கால் பதித்து நிற்பவர்.

5641

இளமை எனும் பூங்காற்று. ஷமீலா இஸ்மத். கொழும்பு 6: புரவலர் புத்தகப் பூங்காவுக்காக ஞானம் பதிப்பகம், 3B, 46ஆவது ஒழுங்கை, 1வது பதிப்பு, பெப்ரவரி 2009. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ் பிரைவேட் லிமிட்டெட், 48 B, புளுமெண்டால் வீதி).
viii, 72 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 22x14.5 சமீ., ISBN: 978-955-8354-29-2.

அன்பே சங்கீதா என்ற தனது முதலாவது தினகரன் சிறுகதையுடன் இலக்கிய உலகில் நுழைந்த ஷமீலா இஸ்மத் 1970இல் பிறந்தவர். கொள்ளுப்பிட்டி சென்ற் அந்தனீஸ் மகளிர் கல்லூரியில் உயர்கல்விபெற்றவர். இவரது முதலாவது சிறுகதைத் தொகுப்பாக அமையும் இந்நூல், புரவலர் புத்தகப் பூங்காவின் நூல்வெளியீட்டுத் திட்டத்தில் 14ஆவது பிரசுரமாகும். இந்நூலில் இளமை எனும் பூங்காற்று, உறவு சொல்ல ஒருத்தி, சொல் கண்மணி, திருமகள் தேடி வந்தாள், இரு மனங்கள் இரு மதங்கள், முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும், கீதா சங்கீதா, இனிமை தந்த உணர்வு, இறைவன் விட்ட வழி, மெதுவாய் ஒரு துரோகம், பிளாட்பாரப் பிச்சைக்காரன், மன்னித்து விடுங்கள், நினைப்பதெல்லாம் நடந்து விட்டால், ராதா நீ எங்கே, வாழ்க்கை, மறப்போம் மன்னிப்போம், ஆயிரத்தில் ஒருத்தி ஆகிய 17 சிறுகதைகள் இடம்பெற்றுள்ளன.

5642

இளவேனில் மீண்டும் வரும். தாட்சாயணி. (இயற்பெயர்: பிரேமினி சபாரத்தினம்). கொழும்பு 6: மீரா பதிப்பகம், 191/23 ஹைலெவல் வீதி, கிருலப்பனை, 1வது பதிப்பு, மே 2007. (கொழும்பு 13: ஈகுவாலிட்டி கிராப்பிக்ஸ், 315, ஜம்பட்டா வீதி).
x, 199 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 17X12.5 சமீ.

1997-2000 காலப்பகுதிகளில் எழுதிப் பத்திரிகைகளில் பிரசுரமான சிறுகதைகள். மீரா பதிப்பகத்தின் 61ஆவது வெளியீடு. அடிமட்ட மக்களின் வாழ்க்கைப் பிரச்சினைகள், தமிழீழப் போராட்டத்தினால் ஏற்பட்ட மனித அவலங்கள், இளம்பெண்களின் காதல்-திருமண உறவுகளுக்கிடையிலுள்ள உளவியல் சார்ந்த தர்க்கரீதியான மனவெழுச்சிகள் என மூன்று பெரும்பிரிவுகளுக்குள் இவரது கதைகள் உள்ளடக்கப்படலாம். ஒரு புல்லாங்குழல் ஊமையானது, அந்தப் பத்து நிமிடங்கள், அவளும் இவளும், சிவப்புத் துளிகள், பிஞ்சுமனம், அன்புள்ள அம்மாவுக்கு, சலனம், உறவுகள் தொடர்கதை, கண்ணீர்ப் பூக்கள், மழையில் உதிர்ந்த மலர், அவள் கண்ணகி இல்லை, இளவேனில் மீண்டும் வரும் ஆகிய 12 கதைகள் இததொகுப்பில் இடம்பெறுகின்றன.

5643

ஈழநாடு சிறுகதைகள்: தொகுதி1. செங்கை ஆழியான். திருக்கோணமலை: இ.இளங்கோவன், செயலாளர், கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சு, வடமாகாணம், 1வது பதிப்பு, 2008. (திருக்கோணமலை: ரெயின்போ மினி லாப், 113 வித்தியாலயம் வீதி).
420 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x14.5 சமீ.

ஈழத்துத் தமிழ் இலக்கியத்தை 1930களிலிருந்து 1958வரை ஆரோக்கியமாக முன்னெடுத்துச் சென்ற ஈழகேசரி வார இதழின் தொடர்ச்சியாக, இலக்கியப்பணி ஆற்றுவதற்காக யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்த ஏடாக ஈழத்து இலக்கியவாதிகளினால் ஈழநாடு மதிக்கப்பட்டது. 1959 பெப்ரவரி 09இலிருந்து வெளிவரத்தொடங்கிய ஈழநாடு 90களின் நடுப்பகுதிவரை 36 ஆண்டுகள் வெளிவந்தது. அக்காலகட்டத்தில் 17 நாவல்கள், 12 குறுநாவல்கள், 799 சிறுகதைகள் இப்பத்திரிகையில் வெளிவந்தன. அவற்றில் தேர்ந்த 53 கதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன.

5644

எங்கே போகிறோம். கே.எஸ்.சுதாகர். அவுஸ்திரேலியா: அவுஸ்திரேலிய தமிழ்-இலக்கிய கலைச் சங்கம், ATLAS, P.O.Box 620, Preston, Victoria 3072, 1வது பதிப்பு, மார்கழி 2007. (சென்னை 600026: குமரன் பப்ளிஷர்ஸ், 3(12), மெய்கை விநாயகர் தெரு, குமரன் காலனி, 7வது தெரு, வடபழநி).
254 பக்கம், விலை: இந்திய ரூபா 90., அளவு: 18x12.5 சமீ., ISBN: 978-955-659-108-7.

தெல்லிப்பழை வீமன்காமத்தைச் சேர்ந்த சுதாகர் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பொறியியல் பட்டதாரி. நியுசிலாந்தில் 6 ஆண்டுகள் புலம்பெயர்ந்து வாழ்ந்தபின் அவுஸ்திரேலியாவுக்குக் குடிபெயர்ந்து மெல்பேர்ண் மாநிலத்தில் வாழ்ந்துவருகிறார். அவுஸ்திரேலிய தமிழ் இலக்கியக் கலைச்சங்கத்தின் தாபக உறுப்பினர். சுருதி என்ற புனைபெயரிலும் அறியப்பட்டவர். இத்தொகுப்பிலுள்ள 18 சிறுகதைகளும் ஏறக்குறைய 25 வருடகாலத்தை உள்ளடக்கியது. பெரும்பாலானவை பல்வேறு பிரசுரங்களிலும் உலகளாவியரீதியில் பிரசுரமானவையும் பரிசுபெற்றவையுமாகும்.

5645

எரிகின்ற தீபங்கள்: சிறுகதைத் தொகுப்பு. பாயிஸா கைஸ். மாவனல்ல: எக்மி பதிப்பகம், இல.19, கமன்தெனிய வீதி, கிருங்கதெனிய, 1வது பதிப்பு, ஒக்டோபர் 2007. (மாவனல்ல: எம்.ஜே.எம்.பிரின்டர்ஸ், 119 பிரதான வீதி).
65 பக்கம், விலை: ரூபா 120., அளவு: 21x14 சமீ., ISBN: 978-955-1825-00-3.

களுத்துறை மாவட்டத்தின் பேருவளை சீனன்கோட்டையை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட ஹாஜா பாயிஸா கைஸ், 1988இல் ஆனந்தக்கண்ணீர் என்ற கவிதையின் மூலம் எழுத்துலகில் நுழைந்தவர். இவரது முதலாவது நூல் 2003இல் வெளிச்சம் என்ற தலைப்பில் கவிதைத் தொகுப்பாக வெளிவந்தது. இது இவரது 12 சிறுகதைகளுடன் இவரது இரண்டாவது நூலாக வெளிவருகின்றது.

5646

எஸ்.பொ கதைகள். எஸ்.பொன்னுத்துரை. சென்னை 600024: மித்ர வெளியீடு, 32/9, ஆற்காடு சாலை, கோடம்பாக்கம், 1வது பதிப்பு, டிசம்பர் 2005. (சென்னை 600024: மித்ர ஆர்ட்ஸ் அன் கிரியேஷன்ஸ், 32/8-10, ஆர்க்காடு சாலை, கோடம்பாக்கம்).
864 பக்கம், தகடு, விலை: இந்திய ரூபா 500., அளவு: 22.5x15 சமீ., ISBN: 81-89748-01-7.

ஈழத்து முன்னணி எழுத்தாளர் எஸ்.பொன்னுத்துரை முன்னர் எழுதித் தொகுப்புகளாக வெளிவந்த சிறுகதைகளின் பெருந்தொகுப்பு இது. வீ, பூ, அவா, ஆண்மை, ஆகிய நூல்களில் இடம்பெற்ற அனைத்துச் சிறுகதைகளும் இத்தொகுப்பில் அடங்கியிருக்கின்றன.

5647

ஏதிலிகள்: சிறுகதைகள். தாழை செல்வநாயகம். சென்னை 600017: மணிமேகலைப் பிரசுரம், தபால் பெட்டி எண் 1447, இல.7, தணிகாசலம் சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2007. (சென்னை 94: ஸ்கிரிப்ட் ஆப்செட்).
140 பக்கம், விலை: இந்திய ரூபா 40., அளவு: 18x12 சமீ.

கிழக்கு மாகாணம், வாழைச்சேனையைச் சேர்ந்த செல்வநாயகம் 1946இல் பிறந்தவர். ஆரம்பத்தில் சுதந்திரன் பத்திரிகையில் எழுதிய இவர், 1963இல் வாழைச்சேனையில் கம்பன் கலாமன்றம் என்ற அமைப்பை நிறுவி பல நாடகங்களை மேடையேற்றியவர். நீண்ட காலம் எழுதிவந்தாலும் நூலுருவில் வெளிவரும் இவரது முதலாவது நூல் இதுவாகும். இந்நூலில் கரடிக்காடு, முகாமில் ஒரு சடங்கு, மாதா கோயில், தமிழ் வாத்தியாரு, மாரிப்போடி, ஏதிலிகள், இதுதான் முடிவு, அறுபதில் கிடைத்த வாழ்வு, பணத்திற்கு வேலை, கலைஞன் ஆகும் எழுத்தாளன் ஆகிய பத்துக் கதைகள் இடம்பெற்றுள்ளன. வனபரிபாலன அதிகாரியாகப் பணியாற்றிய அனுபவம் கதைகளில் ஆங்காங்கே தெரிகின்றது. விலங்குகளின் கானக வாழ்க்கை, அவற்றின் குணங்கள், மனிதர் வருகையை அறியும் சக்தி, வேடர்களின் வேட்டையாடல் தொடர்பான விடயங்கள் ஆங்காங்கே சுவாரஸ்யமாக விபரிக்கப்பட்டுள்ளன.

5648

ஏன் வந்தாய்? ச.அருளானந்தம். (புனைபெயர் கேணிப்பித்தன்). திருக்கோணமலை: அருள் வெளியீட்டகம், 37/7, மத்திய வீதி, உவர்மலை, 1வது பதிப்பு, ஏப்ரல் 2009. (கொழும்பு: நிஷான் பிரின்டர்ஸ்).
(6),86 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 21x15 சமீ., ISBN: 978-955-51451-4-5.

கேணிப்பித்தனின் நான்காவது சிறுகதைத் தொகுப்பு. ஏன் வந்தாய், அவளும் அவனும், செவ்வந்தி மாலைப் பொழுது, மாமனிதர்கள், பொறுமைக்கும் ஒரு எல்லை, கரோலின், சலனமற்ற வாழ்க்கை, தவம் கலைகிறது, சௌந்தரம்மா, மணல்திட்டு, வேட்டை, அம்மா ஆகிய 12 சிறுகதைகள் இடம்பெற்றுள்ளன. அவளும் அவனும் என்ற கதை குடும்பத்தின் பொருளாதாரச் சுமையை இணைந்து தாங்கும் கணவன்-மனைவியருக்கிடையே ஏற்படும் சிக்கல்களைச் சொல்கின்றது, சலனமற்ற வாழ்க்கை என்னதான் கல்வி வளர்ச்சியும் சமூக வளர்ச்சியும் ஏற்பட்டாலும், கிராமப்புற மக்களைச் சமூகக் கட்டுமானங்களிலிருந்து மாற்ற முடியாது என்ற உண்மையை எடுத்துரைக்கிறது. பொறுமைக்கும் ஓர் எல்லை என்ற சிறுகதை ஈழத்தின் யுத்தம் தந்த வலிகளைப் பறைசாற்றுகின்றது. இவ்வாறு சமூக பொருளாதார அரசியல் பிரச்சினைகளை கருப்பொருளாகக் கொண்டு 12 கதைகளும் சுவையாகப் பின்னப்பட்டுள்ளன.

5649

ஒரு பெண்ணென்று எழுது. நீ.பீ.அருளானந்தம். கல்கிசை: திருமகள் பதிப்பகம், இல.7, லில்லியன் சாலை, 1வது பதிப்பு, ஆனி 2008. (தெகிவளை: ஏ.ஜே.பிரின்ட்ஸ், 44, புகையிரதநிலைய வீதி).
xviii, 188 பக்கம், விலை: ரூபா 350., அளவு: 21.5x14 சமீ., ISBN: 978-955-1055-04-2.

ஆசிரியரின் 16 சிறுகதைகளை உள்ளடக்கிய தொகுப்பு. அன்றாட உணவிற்கே ஏங்கும் வறுமைநிலைக் குடும்பமொன்றின் கதையாகத் தலைப்புக்கதை அமைகின்றது. உண்மை உறங்குவதில்லை என்ற கதை மட்டக்களப்பிலிருந்து வெளிவரும் செங்கதிர் சஞ்சிகையின் முதல் இதழில் வெளிவந்தது. புதிய உத்திமுறைகளைக் கையாண்டு ஒரு மரமும் அரிக்கன் லாம்பும் முன்னிலைப்படுத்தப்பட்டு, அதன்மூலம் அக்கால மக்களின் வாழ்வின் அடிநாதம் பற்றிப் பேசப்படுகின்றது. தனது முதலாவது சிறுகதைத் தொகுப்பை 2002இல் வெளியிட்ட நீ.பீ.அருளானந்தம், புனைகதை, தொலைக்காட்சி நாடகம், நடிப்பு என்று பல்வேறு தளங்களில் காலூன்றியவர். மண்வாசனை, யதார்த்த நிலை என்பவற்றைத் தனது கதைகளில் பதித்து, அனுபவரீதியாகத் தான் கண்டனுபவித்தவைகளையே கருவாகப் பயன்படுத்துவதால் வாசகனை நிதர்சன உலகில் சஞ்சரிக்க வைக்கிறார்.

5650

ஒரு மணல்வீடும் சில எருமை மாடுகளும். சிவனு மனோஹரன். கொழும்பு 6: ஞானம் பதிப்பகம், 3B, 46ஆவது ஒழுங்கை, 1வது பதிப்பு, பெப்ரவரி 2008. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ் பிரைவேட் லிமிட்டெட், 48 B, புளுமெண்டால் வீதி).
80 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 22x14.5 சமீ., ISBN: 978-955-8354-23-0.

தனது மண்ணில் பரவலாகக் காணப்படும் சமூகப் பிரச்சினைகளின் யதார்த்தங்கள், மூடத்தனமான நடைமுறைகள், பலரது வாழ்க்கையில் மறைந்திருக்கும் இருள்சூழ்ந்த பகுதிகள், மனித விழுமியங்கள் போன்றவை இந்தப் படைப்பாளியின் 15 சிறுகதைகளில் பதிவாகியுள்ளன. தான் சார்ந்த மலையக மண்ணின் மக்களின் அறியாமையைப் போக்கும் ஆயுதங்களாகத் தன் சிறுகதைகளைக் கையிலெடுத்திருக்கிறார். இந்நூலின் தலைப்புக்கதை கொழுந்து பத்திரிகை நடத்திய புதுமைப்பித்தன் நூற்றாண்டு சிறுகதைப் போட்டியில் பரிசுபெற்ற கதை. கொடாப்பு, பெரிய சல்லி, பாடமாத்தி, ஒரு மணல் வீடும் சில எருமைமாடுகளும், மலினங்கள், பொட்டக்கழுத, சாமிக் குத்தம், கருமாதி, கட்டமொய், ரேங்குப்பெட்டி, நொட்டாங்கை, கட்டத்துள் விளையாட்டு, விடியாத இரவுகள், கூண்டுப் பறவைகள், பொய் முகங்கள் ஆகிய இவரது தேர்ந்த கதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. புரவலர் புத்தகப் பூங்காவின் நூல் வெளியீட்டுத் திட்டத்தில் வெளியாகிய ஏழாவது நூல் இது.

5651

கண்ணில் தெரிகின்ற வானம். செ.யோகநாதன். சென்னை 600026: படைப்பாளிகள் பதிப்பகம், 89/6 நடராசன் தெரு, தனலட்சுமி குடியிருப்பு விரிவு, வடபழநி, 1வது பதிப்பு, டிசம்பர் 1996. (சென்னை 600005: மாசறு, 75. திருவல்லிக்கேணி நெடுஞ்சாலை).
192 பக்கம், விலை: இந்திய ரூபா 45., அளவு: 18x12 சமீ.

இன்றைய முதலாளித்துவ சமூகத்தில் அடக்குமுறைக் கருவிகளாக விளங்கும் அதிகார வர்க்கம், நீதித்துறை, சட்டங்கள் போன்றவை எவ்வாறு மக்களை அழுத்திக்கொண்டிருக்கின்றன என்பதைத் தமது பல்வேறு கதைகளினூடாகவும் கதாசிரியர் காட்டமுனைகின்றார். இச் சிறுகதைத் தொகுப்பில் யோகநாதன் எழுதிய இணை, கண்ணில் தெரிகின்ற வானம், அடிமையின் மோகம், யாவுமாகி நின்றாய், இன்றும் நாளையும், வித்தியா, பெண்ணென்ன ஆணென்ன, வசீகரா, சிநேகிதி, சிறை, போர்வை, தோல்வி, இரு வேறு உலகங்கள், பொய்யின் பின்னே, வஞ்சம், வீடு, சத்தியசீலன், புயலும் படகும் ஆகிய 18 கதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன.

5652

கருமுகில் தாண்டும் நிலவு. தி.ஞானசேகரன் (தொகுப்பாசிரியர்). கொழும்பு 6: ஞானம் பதிப்பகம், 3B, 46ஆவது ஒழுங்கை, 1வது பதிப்பு, ஆகஸ்ட் 2009. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ் பிரைவேட் லிமிட்டெட், 48 B, புளுமெண்டால் வீதி).
xii, 100 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 17x12 சமீ., ISBN: 978-955-8354-34-6.

கலாபூஷணம் புலோலியூர் க.சதாசிவம் ஞாபகார்த்தச் சிறுகதைப் போட்டியில் 2007ம் ஆண்டு பரிசுபெற்ற படைப்பாளிகளின் சிறுகதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. கருமுகில் தாண்டும் நிலவு (கார்த்திகாயினி சுபேஸ்), ஒடுக்கம் (கார்த்திகா பாலசுந்தரம்), கற்றுக்கொள்வதற்கு (கே.எஸ்.சுதாகர்), நான்

சாகமாட்டேன் (ச.முருகானந்தன்), மீளாமகன் (தர்மராஜா அஜந்தகுமார்), பாடமாத்தி (சிவனு மனோகரன்), கல்லடிப் பாலம் (தீரன்-ஆர்.எம்.நௌசாத்), அறம்செய்ய (ஆவூரான்), தவம் கலைகிறது (கேணிப்பித்தன் ச.அருளானந்தம்), தேடல் (கயிலை-தம்பையா கயிலாயர்), ஒரு நாள் (பிரமிளா பார்த்திபன்), கனவு கனவாயே (நிரஞ்சனி சபாரத்தினம்) ஆகிய பன்னிரு பரிசுச் சிறுகதைகள் இத்தொகுதியில் இடம்பெற்றுள்ளன.

5653

கலாசார விலங்குகள்: சிறுகதைத் தொகுப்பு. சோ.ராமேஸ்வரன். கொழும்பு 5: சோ.ராமேஸ்வரன், E 2/4, அன்டர்சன் தொடர்மாடி, 1வது பதிப்பு, 2007. (மஹரகம: தரஞ்ஜி பிரின்ட்ஸ், 501, ஹைலெவல் வீதி, நாவின்ன).
vi, 114 பக்கம், விலை: ரூபா 180., அளவு: 21.5x14 சமீ., ISBN: 978-955-99222-4-7.

யுத்தச் சூழலினால் தமிழர்களின் கலை, கலாசாரம், பண்பாடு, பழக்க வழக்கங்கள், ஒழுக்கம் என்பன சீர்கேடடைந்து விட்டன என்ற கூறும் ஆசிரியர் கலாச்சார விலங்குகளை உடைத்தெறிந்துவிட்டு எப்படியும் வாழலாம் என்ற நிலைக்குத் தள்ளப்பட்டுவிட்ட அவர்களிடையே விவாகரத்து, சோரம் போதல், கற்பு நெறி பிறழ்தல், திருமணமாகாமலேயே தாய்மையடைதல், ஆகியன அவர்களது வாழ்க்கையுடன் பின்னிப்பிணைந்து விட்டன என்கிறார். இத்தகைய தனது கருத்துக்களை அடிப்படையாகவைத்து உருவாக்கிய 12 கதைகளை இத்தொகுப்பில் இணைத்திருக்கிறார்.

5654

கன்னியாதானம். ராணி சீதரன். திருக்கோணமலை: யது வெளியீடு, 136 மத்திய வீதி, 1வது பதிப்பு, மே 2001. (கொழும்பு 13: பேஜ் செட்டர்ஸ், 113 ஜிந்துப்பிட்டி வீதி).
viii, 88 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 21x14.5 சமீ.

மாங்கல்யம் தந்து நீயே என்ற சிறுகதைத் தொகுப்பினை 1999இல் வழங்கிய ராணி சீதரனின் இரண்டாவது சிறுகதைத் தொகுப்பு இது. உள்ளத்தின் கதவுகள், பாவங்களே சாபங்களாய், ஒரு எழுத்தாளனின் பயணம், பிறந்த மண், கொடை, பேதையே போதியோ, மீண்டும் நளாயினி, அவளுக்குத் தான் தெரியும், கன்னியாதானம் ஆகிய ஒன்பது சிறுகதைகள் இத்தொகுதியில் இடம்பெற்றுள்ளன. இன்று தாயகப் பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பலவற்றை நெஞ்சைத்தொடும் வகையில் கதைகளாக்கித் தந்துள்ளார்.

5655

கனகசெந்தி கதாவிருது பெற்ற சிறுகதைகள்: தொகுதி 1 (2003-2007). செங்கை ஆழியான் (தொகுப்பாசிரியர்), ஆ.இரத்தினவேலோன் (பதிப்பாசிரியர்). கொழும்பு 6: மீரா பதிப்பகம், 191/23 ஹைலெவல் வீதி, கிருலப்பனை, 1வது பதிப்பு, ஜுலை 2008. (வத்தளை: Page and Image, 202/2B Royal Pearl Garden).
x, 189 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 22X14.5 சமீ.

யாழ். இலக்கிய வட்டத்தின் பிதாமகரான அமரர் இரசிகமணி கனக.செந்திநாதன் ஆவார். அவரது ஞாபகார்த்தமாக அவ்வப்போது வெளிவரும் சிறுகதைகளில் தரமானவற்றைத் தேர்ந்து கனகசெந்தி கதாவிருது வழங்கப்படுகின்றது. அவ்வகையில் பரிசுபெற்ற 17 சிறுகதைப் படைப்புகளை இத்தொகுப்பு பதிவுசெய்கின்றது. 75ஆவது மீரா பதிப்பக வெளியீடாக வெளிவந்துள்ள இத்தொகுப்பில் எம்.எஸ். அமானுல்லா (கருவேலங்காடுகள் தாண்டி), ஆ.இரத்தினவேலோன் (வேட்டை), ஏ.எஸ்.உபைத்துல்லா (ஜலசமாதி), சி.கதிர்காமநாதன் (வீடு), ஜுனைதா ஷெரீப் (முள்ளை முள்ளால்), செம்பியன் செல்வன் (மாயாவதியின் கனவு), சாந்தன் (மீள்தல்), நீர்வை பொன்னையன் (ஜென்மம்), குந்தவை (நாடும் நம் மக்களும்), க.சட்டநாதன் (பொழுது), செங்கை ஆழியான் (ஓ வெள்ளவத்தை), பன் பாலா (பெரியவன்), திருமலை வீ.என்.சந்திரகாந்தி (சம்ஹாரம்), ஆ.இரத்தினவேலோன் (நெஞ்சாங்கூட்டு நினைவுகள்), யோகேஸ்வரி சிவப்பிரகாசம் (காணவில்லை), கனகசபை தேவகடாட்சம் (பிணங்கள் விற்பனைக்கு), பவானி தேவதாஸ் (என் இனிய தோழனே) ஆகியோரின் சிறுகதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன.

5656

காற்றினில் ஏறி விண்ணையும் சாடலாம். செ.யோகநாதன். சென்னை 600017: திருமகள் நிலையம், 55, வெங்கட்நாராயணா ரோடு, தி.நகர், 1வது பதிப்பு, ஜுன் 1987. (சென்னை 600017: தமிழோசை அச்சகம், 84, ஹபிபுள்ளா சாலை, தி.நகர்).

204 பக்கம், விலை: இந்திய ரூபா 16., அளவு: 18x12.5 சமீ.

காற்றினில் ஏறி விண்ணையும் சாடலாம், அமோதியோஸ், விடியும் ஒரு புதிய நாள், அடிமைகள் இல்லாத இடத்தில், சாளரங்கள், தாயாகி வந்தவள், இனிவரும் விடுதலை ஆகிய ஏழு தலைப்புகளில் குறுநாவல்களாகவும் சிறுகதைகளாகவும் எழுதப்பட்ட யோகநாதனின் படைப்புகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன.

5657

கேணிப்பித்தன் கதைகள். ச.அருளானந்தம். திருக்கோணமலை: அருள் வெளியீட்டகம், 37/7, மத்திய வீதி, உவர்மலை, 1வது பதிப்பு, ஒக்டோபர் 2003. (திருக்கோணமலை: றெயின்போ மினி லாப், 361பீ, நீதிமன்ற வீதி).
90 பக்கம், விலை: ரூபா 120., அளவு: 20.5x14.5 சமீ., ISBN: 955-98211-4-8.

மாகாண மட்டத்திலும் தேசிய மட்டத்திலும் பல விருதுகளைப்பெற்ற இந்நூலாசிரியர், கிழக்கிலங்கையின் ஆலங்கேணியைப் பிறப்பிடமாகக் கொண்டவர். கேணிப்பித்தன் என்ற புனைபெயரிலும் இலக்கிய உலகில் உலவியவர். இவர் எழுதிய அந்த ஒரு நாள், திருப்பம், இதனை இதனால், விபுலானந்த அலை, இராவணன் கண்ணீர், தாங்குவேர்கள், இது இலத்திரனியல் யுகம், இரக்கமில்லாதவர்கள், தவித்த முயலடிப்போர், சூரன்போர் ஆகிய 10 சிறுகதைகள் இத்தொகுப்பில் இடம் பெற்றுள்ளன.

5658

கோபதி சிறுகதைகள். ப.தெய்வேந்திரன் (புனைபெயர்: கோபதி). யாழ்ப்பாணம்: யாழ் இலக்கிய வட்டம், 1வது பதிப்பு, ஜனவரி 2008. (யாழ்ப்பாணம்: பாரதி பதிப்பகம், 430 காங்கேசன்துறை வீதி).
vi, 84 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 20x14.5 சமீ.

ப.தெய்வேந்திரன் எழுதிய அவசரம், தவறு, மான நட்டம், மனச்சாட்சி, மனமாற்றம், சாரதாவின் கணவன், இரும்புக்கரம், உறுதி, நான் செத்துப்போனேன், விடை, லவ் லேன், வேதனைகள் காப்பாற்றப்படுகின்றன, நிம்மதி அற்ற ஊரில் ஆகிய 13 சிறுகதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன.

5659

சிறகுகள் விரித்தோம்: பெண்களின் கதைகள். விஜயலட்சுமி சேகர் (தொகுப்பாசிரியர்). மட்டக்களப்பு: சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம், 20, டயஸ் வீதி, 1வது பதிப்பு, டிசம்பர் 2004. (மட்டக்களப்பு: வணசிங்கா பிரிண்டர்ஸ்).
x, 75 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 20.5x14.5 சமீ.

நிலாபாரதி, வாணி சைமன், சே.விஜயலட்சுமி, ஹில்டா ரூபினி, விஜயலட்சுமி சேகர், சுகிர்தராணி சின்னத்தம்பி, விஜயலட்சுமி, ப.பரமேஸ்வரி, T.வாசுகி குணரெத்தினம், T.உருத்திரா, கமலா வாசுகி, தனுஜா பூபாலசிங்கம், ஆகியோரின் எழுத்தில் உருவாகிய பெண்ணியக் கதைகள் 18இன் தொகுப்பு.

5660

செவ்வரளிப் பூக்கள்: கதைத் தொகுதி. ந.கிருஷ்ணசிங்கம். Norway: N.Krishnasingam, V.O.T. Publications, Hellerud veien 53, 0672 Oslo, 1வது பதிப்பு, மே 2003. (Norway: R.Gunathasan, KPJ Graphics, Oslo).
(10), 138 பக்கம், விலை: ரூபா 140., அளவு: 20.5x13.5 சமீ.

நோர்வேயில் புலம்பெயர்ந்து வாழும் அரியாலையூர் ந.கிருஷ்ணசிங்கத்தின் 18 சிறுகதைகள் கொண்ட தொகுப்பு. புலிகளின் குரல் வானொலியில் நீண்டகாலம் இலக்கியப் பங்களிப்பு வழங்கிவந்தவர். இவரது புயல் சிறுகதை குறும்படமாகவும் வெளிவந்துள்ளது. ஈழத்தமிழர்களின் பல்வேறு வாழ்வியல் கூறுகளையும், புலம்பெயர் வாழ்வியலின் அவலங்களையும் இக்கதைகளில் இவர் பதிவுசெய்துள்ளார். ஏற்கெனவே இவர் செவ்வரத்தம்பூ என்ற சிறுகதைத் தொகுதியையும் வெளியிட்டவர். அறுபதுகளில் எழுதத்தொடங்கிய ந.கிருஷ்ணசிங்கம், இடையில் நாடகத்துறையிலும் ஈடுபட்டு உழைத்தவர். நாடகாசிரியராக, இயக்குநராக, நடிகராக என்று பல்பரிமாணங்களில் தன்னை இனம்காட்டியவர். சுதந்திரன், ஈழநாடு, தினகரன், ஈழமுரசு, ஈழநாதம், வெளிச்சம், கற்பகம் ஆகிய இதழ்களில் இவரது படைப்புகள் வெளிவந்துள்ளன.

5661

தண்ணீரும் கண்ணீரும். டொமினிக் ஜீவா. சென்னை 14: வ.விஜயபாஸ்கரன், சரஸ்வதி வெளியீடு, 1வது பதிப்பு, ஜுலை 1960. (சென்னை: சரஸ்வதி பிரஸ்).
xii, 125 பக்கம், விலை: ரூபா 2.00, அளவு: 18.5x13 சமீ.

சென்னை சரஸ்வதி சஞ்சிகை வெளியீட்டாளர்களின் முதலாவது சிறுகதைத்தொகுதியாக வெளிவந்த சிறப்பு இத்தொகுப்பிற்குண்டு. 1960ம் ஆண்டுக்கான ஸ்ரீலங்கா சாகித்திய மண்டலப் பரிசுபெற்ற சிறுகதைத் தொகுப்பு. இத்தொகுப்பில் இவர்களும் அவர்களும், கொச்சிக்கடையும் கறுவாக்காடும், வெண்புறா, தண்ணீரும் கண்ணீரும், செய்தி வேட்டை, காலத்தால் சாகாதது, தீர்க்கதரிசி, சிலுவை, முற்றவெளி, ஞானம், கரும்பலகை ஆகிய பதினொரு சிறுகதைகள் இடம்பெற்றுள்ளன.

5662

தரிசனங்கள். முத்து (இயற்பெயர்: இராமு சரவணமுத்து). கொடிகாமம்: தட்டான்குளம், அருள்மிகு திருநீலகண்டப் பிள்ளையார் ஆலய பரிபாலன சபை, மீசாலை வடக்கு, 1வது பதிப்பு, பெப்ரவரி 2003. (யாழ்ப்பாணம்: பாரதி பதிப்பகம், 430, காங்கேசன்துறை வீதி).
xxxiv, 104 பக்கம், விலை: ரூபா 150, இயூரோ 5., அளவு: 20x14 சமீ.

சமகால இலங்கைத் தமிழரின் வாழ்நிலையைப் பகைப்புலமாகக்கொண்ட 16 சிறுகதைகள் இத்தொகுப்பில் அடங்கியுள்ளன. கொழும்பு, மீசாலை, சுண்டிக்குளம், சாவகச்சேரி என்று பல இடங்களில் கதை நிகழ்கின்றன.

5663

தாம்பூலராணி. அருள் செல்வநாயகம். சென்னை: அன்புப் பண்ணை, 1வது பதிப்பு, நவம்பர் 1958. (நாகை: தாரா அச்சகம்).
178 பக்கம், விலை: சாதாரண பதிப்பு, ரூபா 2.50. நூலகப் பதிப்பு, ரூபா 3.00.

மட்டக்களப்பு குருமண்வெளியைச் சேர்ந்த அருள் செல்வநாயகம் வரலாற்றுச் சிறுகதைகள், நாவல்கள், நாடகங்கள் மற்றும் இலக்கியக் கட்டுரைகளின் வழி அறியப்பெற்றவர். இவரது முதலாவது சிறுகதை விதியின் கொடுமை, 1946இல் மின்னொளி சஞ்சிகையில் வெளிவந்தது. இவரது முதலாவது சிறுகதைத் தொகுப்பு இதுவாகும். இதில் 12 சிறுகதைகள் இடம்பெற்றுள்ளன. இவை கலைமகள், அமுதசுரபி, காவேரி, உமா, கல்கி ஆகிய இதழ்களில் வெளிவந்துள்ளன. (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5664

திணைக் கதைகள். வ.அ.இராசரத்தினம். கொழும்பு 11: எம்.டிகுணசேனா, 217, ஒல்கொட் மாவத்தை, 1வது பதிப்பு, 2000. (கொழும்பு 11: எம்.டிகுணசேனா).
(16), 143 பக்கம், விலை: ரூபா 170., அளவு: 18.5x12 சமீ., ISBN: 955-21-1085-8.

நெய்தல், குறிஞ்சி, மருதம், முல்லை, பாலை என ஐந்திணைகளிலும் உள்ள சங்கப்பாடல்களில் திணைக்கு நான்காக 20 பாடல்களைத் தேர்ந்து அவற்றை பின்னணியாகக் கொண்டு நவீன சிறுகதைகளை படைத்திருக்கிறார். நெய்தற் கதைகளாக முன்னெச்சரிக்கை, அன்றில், பகலிலே கண்ட கனவு, அள்ளல் உள்ளம் ஆகியனவும் குறிஞ்சிக் கதைகளாக வசிய மருந்து, அந்த நினைவு, கட்டுவிச்சி, வாட்டம் என்பனவும், மருதக் கதைகளாக முதலை, ஊரன் அல்லன், தோழியின் துயர், மாட்டுக்காரன் என்பனவும், முல்லைக் கதைகளாக பாசறை, அவர் வருகிறார், நானும் மகிழ்கிறேன், காரும் கதிரும் என்பனவும், பாலைக் கதைகளாக தடுப்பு, உடன் போக்கு, வருகை, துன்பத்தில் இன்பம் என்பனவும் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன.

5665

திருப்பம். மா.கி.கிறிஸ்ரியன். தமிழ்நாடு: அருளகம், வடகரை 609314, ராஜ்மத் வீதி, 1வது பதிப்பு, ஒக்டோபர் 1998. (சென்னை 600007: Ravi D P Tech).
158 பக்கம், விலை: இந்திய ரூபா 40., அளவு: 18x12.5 சமீ.

1982இல் பிரான்ஸ் தேசத்திற்குப் புலம்பெயர்ந்த மா.கி.கிரிஸ்ரியன், படைப்பிலக்கியத்துறையுடன், கூத்து, நாடகம் ஆகிய துறைகளிலும் அக்கறை கொண்டவர். அவ்வப்போது பிரசுரமான இவரது 14 கதைகளைக்கொண்ட சிறுகதைத் தொகுப்பு இது. யார் பைத்தியம், ஊர்போய்ச் சேர்ந்தவன், வழியனுப்பி

வைத்தவள், திருப்பம், போராளியாக, இரு பறவைகள், கடல்மேல் ஆணையாக, கிளித்தட்டு, ஊர்க்கடிதம், சந்திப்புகள், துவேசம், கணவன், தனிமையும் இனிமையும், மீண்டும் பாலன் பிறப்பாரா? ஆகிய கதைகளே இத்தொகுப்பில் இடம்பெறுகின்றன.

5666

தீபதோரணம். அ.பாலமனோகரன். முள்ளியவளை: அ.பாலமனோகரன், தண்ணீரூற்று, 1வது பதிப்பு, ஜுலை 1977. (சாவகச்சேரி: திருக்கணித அச்சகம், மட்டுவில்).
(6), 111 பக்கம், விலை: ரூபா 3.75, அளவு: 18x12 சமீ.

நிலக்கிளி, குமாரபுரம் நாவல்களை வன்னி மண் மணம்கமழத் தந்த நாவலாசிரியரின் தேர்ந்த பதினொரு சிறுகதைகளைக் கொண்ட தொகுதி. இவை சிந்தாமணி, வீரகேசரி, தினகரன், இலங்கை வானொலி ஆகிய ஊடகங்களில் பிரசுரமானவை. தீப தோரணம், மழை வந்தது, ஒரு கவிதை சிதைகிறது, ஒரு சொட்டுத் தேன், கிழக்கு வெளுக்கிறது, வால் வெள்ளி, ஒரு பச்சை மரம் பற்றி எரிகின்றது, இளங்கன்று, பனைகளின் நடுவே, ஒரு ஆகாயத் தாமரை பூமிக்கு வருகிறது, காயாம்பூ ஆகிய 11 கதைகள் இத்தொகுப்பில் அடங்குகின்றன. இந்நூல் 1977ம் ஆண்டுக்கான சாகித்திய மண்டலப் பரிசினைப் பெற்றதுடன் இத்தொகுப்பிலுள்ள 7 கதைகள் டேனிஷ் மொழியில் மொழிபெயர்க்கப்பட்டு Navaltraeet என்ற தலைப்புடன் 1991இல் டென்மார்க்கில் நூலுருவிலும் வெளிவந்தது.

5667

தூரப் போகும் நாரைகள். தாட்சாயணி. (இயற்பெயர்: பிரேமினி சபாரத்தினம்). கொழும்பு 6: மீரா பதிப்பகம், 191/23 ஹைலெவல் வீதி, கிருலப்பனை, 1வது பதிப்பு, நவம்பர் 2008. (வத்தளை: பேஜ் அன்ட் இமேஜ், 202/2B, ரோயல் பேர்ள் கார்டன்).
xi, 139 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 18x13 சமீ.

ரங்கநாதனும் ரஞ்சித் பெரேராவும் என்ற சிறுகதை மூலம் இலக்கிய உலகில் இனம்காணப்பட்ட தாட்சாயணி தனது பதினேழாவது வயதிலிருந்து எழுத்துலகில் ஈடுபட்டுவருகிறார். இவர் இளவயதிலேயே உதவிப் பிரதேச செயலர் பதவிநிலையினை எட்டியவர். இலண்டன் பூபாள இராகங்கள் முதற்பரிசு மற்றும் வடமாகாண சாகித்திய விருது உட்பட சிறுகதைக்காக பல பரிசில்களை பெற்றவர். இது தாட்சாயணியின் மூன்றாவது சிறகதைத் தொகுதியாகும். ஓ என் அழகிய கிராமமே, ஒரு வருஷத் துக்கம், பொறி, சுழல், தூரப் போகும் நாரைகள், தொடரும் இலக்குகள், முடிவா தொடக்கமா?, சிறகிழந்தவன், கெடுபிடி, வேர் துளைத்த மண், கட்டை விரல், ஏன்?, காணாமல் போனவனுக்கு ஒரு கடிதம், கடைசிக் காலடி ஆகிய 14 சிறுகதைகளைக்கொண்ட இத்தொகுப்பிலுள்ள கதைகளில், வாழ்க்கையில் காணப்படும் பலதரப்பட்ட அம்சங்களையும் பல்வேறு கோணங்களிலும் பார்க்கும் தன்மை காணப்படுகின்றது. போரின் வடு, தனி மனித அவலம், காதலின் காயம், போன்ற கருப்பொருட்களை கதைகளில் காணமுடிகின்றது. மீரா பதிப்பகத்தின் 76ஆவது பிரசுரமாக இந்நூல் வெளிவந்துள்ளது.

5668

தேடலே வாழ்க்கையாய். பவானி சிவகுமாரன். கொழும்பு 6: ஆ.இரத்தினவேலோன், மீரா பதிப்பகம், 191/23, ஹைலெவல் வீதி, கிருலப்பனை, 1வது பதிப்பு, ஜுலை 2008. (வத்தளை: Page and Image, 202/2B, Royal Pearl Garden).
xvi, (4), 134 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 17.5x12 சமீ., ISBN: 978-955-1022-02-0.

பழசுகள் ஒழுங்கை, புதைமணலா நீ டானியலா, கனவுலகின் வெளியே, மரணங்கள் நடுவே ஜனனம், விலகும் மழை மேகம், வரலாறு படைக்கும் வரலாறு, விழியோரம் ஈரம் மாறும், சீண்டச் சீண்டத் தொடரும், சொல்லி வருவதில்லை சொந்தம், இரகசியமாகத் தவித்திட வா, தேடலே வாழ்க்கையாய் ஆகிய 11 சிறுகதைகளின் தொகுப்பு. ஒவ்வொரு கதையின் முடிவிலும் **காதோடு** என்ற சிறு குறிப்பு இடம்பெறுகின்றது. கதை பிறந்த பின்னணி அங்கு பதிவாகியுள்ளது. தனது கதைகளில் உலவவிட்டுள்ள பாத்திரங்கள் சமூக அநீதிகளைக் கண்டு துடித்தெழும் பாங்கு ஈழமண்ணில் எங்கோ ஒரு மூலையில் வாழ்ந்துகொண்டிருக்கும் ஜீவனுள்ள மனிதர்களாக அவர்களை மனதில் இருத்துகின்றன.

5669

தொலையும் பொக்கிஷங்கள். வதிரி இ.இராஜேஸ்கண்ணன். கொழும்பு 6: மீரா பதிப்பகம், 79ஆவது வெளியீடு, 291/6-5/3A, எட்வேர்ட் அவென்யூ, 1வது பதிப்பு, ஏப்ரல் 2009. (வத்தளை: பேஜ் அன்ட் இமேஜ், 202/2B, ரோயல் பேர்ள் கார்டின்ஸ்).

xvi, 90 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 17.5x12.5 சமீ., (மீரா பதிப்பக வெளியீடு 79)

முதுசொமாக (2002) சிறுகதைத் தொகுப்பு, போர்வைக்குள் வாழ்வு (2008) கவிதைத் தொகுப்பு ஆகியவற்றினைத் தொடர்ந்து நூலாசிரியரின் மூன்றாவது நூல் இது. தொலையும் பொக்கிஷங்கள் (2007இல் அறிமுகமான தமிழ்மொழியும் இலக்கியமும் 10ம் வகுப்புக்கான புதிய பாடத்திட்டத்துக்கான ஆசிரியர் வழிகாட்டியில் இடம்பெற்ற கதை), பூர்வீக பந்தம், தூவானம், தொற்றாத உணர்வு, குதறப்படும் இரவுகள் (செம்பியன் செல்வன் ஞாபகார்த்த பரிசினை 2007இல் பெற்றது), மானக்கேடு, சங்கார தரிசனம் (அல்வையூர் கவிஞர் மு.செல்லையா ஞாபகார்த்த பரிசினை 2008இல் பெற்றது), இறுக்கம், ஒரு மாமனின் கதை, துகிலுரிப்பு (அமரர் கலாபூஷணம் புலோலியூர் க.சதாசிவம் ஞாபகார்த்த பரிசினை 2008இல் பெற்றது), ஆகிய சிறுகதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன.

5670

தோணி. வ.அ.இராசரத்தினம், கொழும்பு 13: அரசு வெளியீடு, 231 ஆதிருப்பள்ளித் தெரு, 1வது பதிப்பு, ஜுலை 1962. (கொழும்பு 13: ரெயின்போ பிரிண்டர்ஸ், ஆதிருப்பள்ளித் தெரு).
124 பக்கம், விலை: ரூபா 2.00, அளவு: 19x12 சமீ.

1950-1954 காலகட்டத்தில் எழுதப்பட்ட 14 சிறுகதைகளின் தொகுப்பு. அவ்வாண்டின் சிறுகதைத்துறைக்கான சாகித்தியமண்டலப் பரிசினை அது வென்றது. சொந்தமாக ஒரு தோணியைத் தனதாக்கித் தொழில்செய்ய ஆசைப்படும் ஒரு தொழிலாளியின் கனவுகளை தோணி என்ற தலைப்புக்கதை சித்திரிக்கிறது.

5671

நடுகல்: சிறுகதைத் தொகுதி. ராணி சீதரன். திருக்கோணமலை: செ.சீதரன், 136, மத்திய வீதி, 1வது பதிப்பு, நவம்பர் 2002. (திருக்கோணமலை: ரெயின்போ மினிலாப், 113, வித்தியாலயம் வீதி).
111 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 21x14 சமீ., ISBN: 955-97102-2-2.

ராணி சீதரன் யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர். திருக்கோணமலை மாவட்டத்தை வாழிடமாகக் கொண்டவர். இவரது கதைக்களன்கள் வடக்கு கிழக்கு தெற்கு என இலங்கையின் பல்வேறு பிராந்தியங்களாகவும் அமைகின்றன. இவரது கதைகளில் போர்ச் சூழலின் தாக்கம், பெண்ணியச் சிந்தனை, மன உணர்வுகளின் புலப்பாடுகள் என்பன முக்கியத்துவம் பெறுகின்றன. இச்சிறுகதைத் தொகுப்பில் இடம்பெறும் ஒன்பது கதைகளிலும் இத்தன்மையே விரவிக் காணப்படுகின்றன. குருதட்சணை, நடுகல், ஒரு கிராமம் அழுகின்றது, காலச் சுவடுகள், மச்சம், ஞாபகங்கள், ஒட்டுமா, எச்சங்கள், வாழ்தல் என்பது ஆகிய ஒன்பது கதைகள் இத்தொகுப்பில் இடம்பெறுகின்றன.

5672

நந்தியின் சிறந்த சிறுகதைகள் 12. நயினை கி.கிருபானந்தா (தொகுப்பாசிரியர்). யாழ்ப்பாணம்: நயினை கி.கிருபானந்தா, பூரணி பதிப்பகம், 512/9, பருத்தித்துறை வீதி, நல்லூர், 1வது பதிப்பு, ஏப்ரல் 2005. (யாழ்ப்பாணம்: திருவள்ளுவர் அச்சகம், 593, பருத்தித்துறை வீதி, நல்லூர்).
x, 110 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 20.5x14.5 சமீ., ISBN: 955-1203-00-3.

பேராசிரியர் செ.சிவஞானசுந்தரம் (நந்தி) எழுதிய நூற்றுக்கும் மேற்பட்ட சிறுகதைகளுள் தேர்ந்தவையான ஊர் நம்புமா, காப்பு, சம்பந்தப்பட்டவர்களுக்கு, கேள்விகள் உருவாகின்றன, பதுங்குகுழி, மீண்டும் கேள்விகள் உருவாகின்றன, ஒரு பாவாடை கொடியாகின்றது, உணர்ச்சிகள் உணர்ச்சிகள், தரிசனம், அசுரனின் தலைகள், மருந்துக்கு அப்பால், பார்வைகள் ஆகிய 12 கதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. நந்தியின் முதல் சிறுகதை சஞ்சலமும் சந்தோஷமும் வீரகேசரியில் 1947களில் வெளிவந்தது. முற்போக்குக் காலகட்டத்திலும் பின்னர் புத்தெழுச்சிக் காலகட்டத்திலும் அவரது எழுத்துக்கள் தொடர்ந்தன. அது போர்க்கால இலக்கியம் வரை வளர்ந்து ஜுன் 2005இல் அவரது மறைவுடன் அது நின்றது. நந்தி ஒரு மருத்துவர். அவரது படைப்பியல் தொழிற்பாட்டுக்கு வேண்டிய சக்தியாக, தளமாக, அதுவே அமைந்துள்ளது. நந்தியின் கதைகளில் மனித இன்னல்கள், மனித அவலங்கள் நேரடியாக எடுத்துப் பேசப்படுகின்றன.

5673

நாளை உன் தேசம். முல்லை கோணேஸ் (இயற்பெயர்: நடராஜா கோணேஸ்வரன்).முல்லைத் தீவு: முல்லை கலை இலக்கிய வட்ட வெளியீடு, 1வது பதிப்பு, வைகாசி 1995. (யாழ்ப்பாணம்: மாறன் பதிப்பகம்).
(4), viii, 60 பக்கம், விலை: ரூபா 50., அளவு: 20x14 சமீ.

தமிழ் மக்களின் உணர்வையும், தமிழ் மண்ணின் விடிவை நோக்கிய அவர்களின் நெடும் பயணத்தையும் சிறுகதைகளாக்கியிருக்கிறார். மண்ணை இழந்த சோகம் பெரும்பான்மையான கதைகளில் இழையோடுகின்றது. உயிர் மூச்சு, துணிந்துகொண்டாள், இரத்தாறு, நாளை உன் தேசம், குரு தர்மம், அவலங்கள் விடிவதில்லை, கரைந்து போன கனவுகள் ஆகிய ஏழு கதைகள் இச் சிறுகதைத் தொகுப்பில் இடம்பெற்றுள்ளன.

5674

நான் கொலை செய்யும் பெண்கள். லதா (இயற்பெயர்: கனகலதா). சிங்கப்பூர்: கனகலதா, இணை வெளியீடு: Singapore National Arts Council, 1வது பதிப்பு, டிசம்பர் 2007. (சிங்கப்பூர்: Gemini Graphics and Printers).
125 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14.5 சமீ., ISBN: 978-981-05-9382-7.

இலங்கையில் நீர்கொழும்பைப் பிறப்பிடமாகக்கொண்ட கனகலதா, சிங்கப்பூரில் புலம்பெயர்ந்து, 1990 முதல் சிங்கப்பூர் தேசிய தினசரியான தமிழ்முரசுவில் செய்தி ஆசிரியராகப் பணியாற்றுகின்றார். தனது கவிதை, விமர்சனம், சிறுகதைகளின் வாயிலாகவும் பிரபல்யமானவர். தீவெளி (2003), பாம்புக்காட்டில் ஒரு தாழை (2004) ஆகிய இரு கவிதைத் தொகுதிகளை பிரசுரித்தவர். லதாவின் சிறுகதைகளின் தொகுப்பாக இந்நூல் வெளிவந்துள்ளது. அடையாளம், மழை-அப்பா, நாளை ஒரு விடுதலை, இதுவரை, பயணம், தமிழுக்கு அமுதென்று பேர், முகாந்திரம், வீடு, அறை, படுகளம் ஆகிய தலைப்புகளில் இவர் எழுதிய 10 சிறுகதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன.

5675

நான் நீ கடவுள்: உருவகக் கதைகள். எம்.ஸீ.எம். இக்பால். கொழும்பு 6: ஞானம் பதிப்பகம், 3B, 46ஆவது ஒழுங்கை, 1வது பதிப்பு, பெப்ரவரி 2008. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ் பிரைவேட் லிமிட்டெட், 48 B, புளுமெண்டால் வீதி).
viii, 72 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 22x14 சமீ., ISBN: 978-955-8354-20-9.

கலாபூஷணம் இக்பால் எழுதி வெளிவந்த முதலாவது நூல். சிந்தனையைத் தூண்டும் 31 உருவகக் கதைகள் கொண்ட தொகுப்பு இது. தலைப்புக் கதையில், பஞ்சபூதங்களின் ஆணவத்தையும், கர்வத்தையும் அடக்கும் வகையில் படைப்புக் கடவுள் தோன்றி பஞ்சபூதங்களின் மாயையை விளக்குகின்றார். பெற்றால் தான் பிள்ளையா என்ற கதையில் புளூட்டோ ஒரு கிரகமல்ல என்ற விஞ்ஞானிகளின் கருத்தை அடிப்படையாகக்கொண்டு, சூரியக் குடும்பத்துக்குள் நடந்ததாகக்கூறும் சம்பவங்களை கற்பனை வளத்துடன் உருவகப்படுத்துகின்றார். ஒவ்வொரு கதையும் நூலாசிரியரின் ஆழ்ந்தகன்ற அறிவியல், இலக்கியச் செழுமையை எடுத்துக்காட்டுகின்றன. புரவலர் புத்தகப் பூங்காவின் மாதம் ஒரு நூல்திட்டத்தின் கீழ் வெளிவந்த ஆறாவது நூல்.

5676

நினைவழியா நாட்கள். பரன் (இயற்பெயர்: முருகேசு தயாபரன்). கொழும்பு 13: மல்லிகைப் பந்தல், 201/4, ஸ்ரீ கதிரேசன் வீதி, 1வது பதிப்பு, மார்ச் 2009. (கொழும்பு 13: லக்ஷ்மி அச்சகம், 103 ஏ, விவேகானந்த மேடு).
xiv, 90 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 22x14.5 சமீ., ISBN: 978-955-8250-43-3.

நினைவழியா நாட்கள் என்ற மகுடத்தின் கீழ் மல்லிகை சஞ்சிகையில் பிரசுரமான இவரது படைப்புக்கள் நூலுருப் பெற்றுள்ளன. இவை அனைத்தும் இவரது வாழ்வனுபவங்களைக் களமாகக் கொண்டவை. தனது கடந்தகால வாழ்வின் நிகழ்வுகளை வாழ்க்கை என்ற வட்டத்தின் புறநிலை நின்று நோக்குகின்றார். தனது வாழ்வின் நினைவுத் தடங்களை மிகத் தெளிவாகவும், ஆழமாகவும் அதேவேளை அங்கதச் சுவையுடனும் அவர் படம்பிடித்துக் காட்டியுள்ளார். வடமராட்சியின் மண்வளம், மனவளம், பண்பாடு, சொல்லாட்சி என்பன ஒவ்வொரு காட்சியிலும் இழைந்து வருகின்றன. சிறுகதைகள் வாசிப்பின் உணர்வு இப்பதிவுகளை வாசிப்பவருக்கு ஏற்படும்.

5677

நிஷ்டை: புகலிடச் சிறுகதைகள். க.கலாமோகன். பிரான்ஸ்: எக்சில் வெளியீடு, 94 Rue de La Chapelle, 75018, Paris, 1வது பதிப்பு, ஏப்ரல் 1999. (தமிழ்நாடு: செய்யது ஸ்கிரீன்ஸ் அன் கிரா.ஃபிக்ஸ் A.M.S.P. காம்பிளெக்ஸ், திருநெல்வேலி).
108 பக்கம், விலை: இந்திய ரூபா 45., அளவு: 22x14 சமீ.

மழை, நிழல், மூன்று நகரங்களின் கதை, உருக்கம், இரா, இழப்பு, எனது தேசம், கோடை, நிஷ்டை, ஈரம், தெரு, கனி ஆகிய தலைப்புகளிலான இவரது 12 சிறுகதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றிருக்கின்றன. 1960இல் வட இலங்கையைப் பிறப்பிடமாகக் கொண்ட கந்தசாமி கலாமோகன் இலங்கையில் பத்திரிகையாளராகப் பணியாற்றியவர். 1983இன் இனப்படுகொலையிலிருந்து தப்பி பிரான்சில் அரசியல் தஞ்சம் கோரியவர். சிறந்த இலக்கிய விமர்சகரான இவர் பிரெஞ்சு மொழியிலும் பாண்டித்தியம் பெற்றவர். **நாளையும்** என்ற தலைப்பிலான இவரது கவிதைத் தொகுப்பு நூலொன்று (Et Demain) பிரெஞ்ச் மொழியிலும் மொழிபெயர்க்கப்பட்டது.

5678

பச்சைப் பாவாடை. எம்.ஐ.எம்.தாஹிர். கொழும்பு 6: புரவலர் புத்தகப் பூங்காவுக்காக ஞானம் பதிப்பகம், 3B, 46ஆவது ஒழுங்கை, 1வது பதிப்பு, ஜனவரி 2009. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ் பிரைவேட் லிமிட்டெட், 48 B, புளுமெண்டால் வீதி).
vii, 72 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 22x14.5 சமீ., ISBN: 978-955-8354-28-5.

திருக்கோணமலை மாவட்டத்தின் பெரிய கிண்ணியாவைப் பிறப்பிடமாகக் கொண்டவர் எம்.ஐ.எம்.தாஹிர். வித்தியோதய பல்கலைக்கழகத்தின் வணிகமானி விஷேட பட்டம்பெற்ற இவர் ஆசிரியராகவும், பாடசாலை அதிபராகவும் பணியாற்றி ஓய்வுபெற்றவர். சீலதரன் என்ற புனைபெயரிலும் அறியப்பட்டவர். 50 ஆண்டு இலக்கியப் பணியின் நிறைவில் இவரது முதலாவது நூலாக வெளிவரும் இச்சிறுகதைத் தொகுதி, புரவலர் புத்தகப் பூங்காவின் நூல்வெளியீட்டுத் திட்டத்தில் 13ஆவது பிரசுரமாகவும் அமைந்துள்ளது. இத்தொகுப்பில் சாகவில்லை, பச்சைப் பாவாடை, ஒரு பிடி சோறு, புது வீடு, இரும்புத்திரை கிழிந்தது, இப்படியும் ஒரு வாழ்க்கையா?, உலகமறியாத உண்மை, கடைசியில் கண்டது, தாய்மை நாதம், படிக்கல், வேதனை ஆகிய 11 கதைகள் இடம்பெற்றுள்ளன.

5679

பசியடங்கா இருளிலிருந்து ஒன்பது கதைகள். ந.வினோதரன் (தொகுப்பாசிரியர்). யாழ்ப்பாணம்: கலைப்பீட மாணவர் ஒன்றியம், கலைப்பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், 1வது பதிப்பு, மார்ச் 2008. (அச்சக விபரம் தரப்படவில்லை).
iv, 62 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 20.5x14.5 சமீ.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீட மாணவர்களின் சிறுகதைத் தொகுப்பு. உதிர்வு (ச.நிரஞ்சனி), பதம் (ப.உதயசாந்தினி), விரட்டப்பட்ட கனவுகள் (சி.கோகிலவாணி), பரிபாஷையின் சுற்றோட்டத்தில் குதிரைக்காரன் (த.அஜந்தகுமார்), ஒரு தனியன் இறுமாப்படைகிறான் (ந.வினோதரன்), கோடிட்ட இடம் (க.சிவதாரணி), இழப்புகள் (சி.சிவாகர்), பசியடங்கா இருள் (ந.மயூரரூபன்), தாய் மனசு (ஜெ.கவிதா) ஆகிய ஒன்பது சிறுகதைகள் இடம்பெற்றுள்ளன. தொகுப்புக்கான கதைகளை மூத்த படைப்பாளிகளான செ.யோகநாதன், சோ.பத்மநாதன், குப்பிழான் ஐ,சண்முகலிங்கம் ஆகியோர் தெரிவுசெய்து உதவியுள்ளனர். ஓவியங்களை கோ.கைலாசநாதன் வரைந்துள்ளார்.

5680

புதிய கதவுகள்: சிறுகதைகள். மாரி.மகேந்திரன். கொழும்பு 6: ஞானம் பதிப்பகம், 3B, 46ஆவது ஒழுங்கை, 1வது பதிப்பு, ஜுன் 2008. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ் (பிரைவேட்) லிமிடடெட், 48B, புளுமெண்டால் வீதி).
70 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 22x14 சமீ., ISBN: 978-955-8354-25-4.

பொகவந்தலாவையில் 1974இல் பிறந்த மாரி மகேந்திரன் கண்டி அசோகா வித்தியாலயத்திலும், கம்பளை ஸாஹிரா கல்லூரியிலும் தனது உயர்கல்வியைப் பெற்றவர். திரைப்படம், குறும்படத் தயாரிப்பில் ஈடுபாடு காட்டிய இவர் தமிழகத்திலும் சின்னத்திரை இயக்கத்தில் அனுபவம் பெற்றவர். இவரது கதைகள் பெரும்பாலும் சமூக விழிப்புணர்வைத் தட்டியெழுப்புவதாக அமைந்துள்ளன. மண்வாசனை, யதார்த்தம்,

சமூகப் பயன் பற்றியெல்லாம் இவர் சிந்திக்கின்றார். தான் சார்ந்த சமூகத்தில் புரையோடிப்போயுள்ள பிரச்சினைகள் தீர்வுகாணப்படவேண்டும் என்ற வேட்கை இவரது கதைகளுள் பொதிந்துள்ளன. மனிதர்கள், ப்ரிய எதிரி, கலா நீ என் நிலா, நெருடல், நித்திரையாகும் நிஜங்கள், நெஞ்சு பொறுக்குதில்லையே, புதிய கதவுகள், நீ தான் தம்பி தலைவன் ஆகிய 8 சிறுகதைகளைக்கொண்ட இத்தொகுப்பு புரவலர் புத்தகப் பூங்காவின் பிரசுரத் தொடரில் பதினொராவது வெளியீடாகும்.

5681

பூ (சிறுகதைகள்). எஸ்.பொன்னுத்துரை. சென்னை 600024: மித்ர வெளியீடு, 32/9, ஆற்காடு சாலை, கோடம்பாக்கம், 1வது பதிப்பு டிசம்பர் 2003. (அவுஸ்திரேலியா: மித்ர வெளியீடு, 1/23, Munro Street, Eastwood 2122).
208 பக்கம், விலை: இந்திய ரூபா 75., அளவு: 18x12 சமீ., ISBN: 1-876626-28-3.

ஈழத்தின் முதுபெரும் படைப்பாளியான எஸ்பொவினால் அவ்வப்போது எழுதப்பட்டு ஊடகங்களில் பிரசுரமான ஏராளமான சிறுகதைகளுள் தேர்ந்த 20 கதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. பூ, நிழல், அமரத்துவம், அநித்தியம், களரி, சாந்தி, தேர், கடன், பசி, கடவுள் அடிமையானார், எச்சில், வட்டம், சங்காரம், பலிபீடம், ஊசிப்போன காதல்கதை, புதுமெய், ஊண், பாசக் கயிறு, சொந்தச் செலவு, மேடைக் கதைகள் ஆகிய கதைகளே அவை.

5682

பூபாள ராகங்கள்: சிறுகதைத் தொகுதி, 2007. மகாலிங்கம் சுதாகரன் (பதிப்பாசிரியர்). இலண்டன் UB4 0PF: கம்பர்மலை வித்தியாலயம், கொம்மந்தறை பழைய மாணவர் சங்கம், ஐக்கிய இராச்சியம், Selva Sikaram, 72 Minterne Waye, Hayes, Middlesex, 1வது பதிப்பு, ஏப்ரல் 2008. (வத்தளை: பேஜ் அன்ட் இமேஜ் 202/2B, ரோயல் பேர்ள் கார்டன்).
xvii, 119 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 21.5x15 சமீ.

இலண்டனில் கடந்த 2000ம் ஆண்டு முதல் வருடாந்தம் நிகழும் முத்தமிழ் கலை நிகழ்ச்சி பூபாள ராகங்கள். யாழ்ப்பாணத்தின் கொம்மந்தறை என்ற சிற்றூரின் பாடசாலையின் வளர்ச்சிக்கான தொடர் நிதிஉதவியைப் பெறும் நோக்கோடும், அப்பாடசாலையின் பெயரை உலக அரங்கில் உச்சரிக்க வைக்கும் வனப்போடும் இயங்கும் பழைய மாணவர் சங்கத்தினர் கடந்த 2004ம் ஆண்டு இலக்கியத்துறையையும் அவர்களது பட்டியலில் இணைத்துள்ளார்கள். கொழும்பு தினக்குரல் பத்திரிகையுடன் இணைந்து உலகளாவியரீதியில் நடத்தப்பட்ட சிறுகதைப்போட்டியில் பரிசுபெற்ற 13 சிறுகதைகளும் இந்நூலில் தொகுக்கப்பட்டுள்ளன. துணைவியூர் கேசவன், வாணி ஸ்ரீதர், சரஸ்வதி முருகையா ஆகியோர் முதல் மூன்று பரிசில்களையும் வென்றனர். ஆறதல் பரிசுகள் ச.முருகானந்தன், எஸ்.ராமேஸ்வரன், சுகன்யா வீராச்சாமி, சிவனு மனோகரன், பவானி சிவகுமாரன், சந்திரகாந்தா முருகானந்தன், தர்மினி பத்மநாதன், எஸ்.ஐ.எம்.ஆஸ்டீன், கிண்ணியா ஏ நஸ்புல்லாஹ், சுகுணா குமார் ஆகியோருக்கு வழங்கப்பட்டன.

5683

பூபாள ராகங்கள்: சிறுகதைத் தொகுதி, 2008. மகாலிங்கம் சுதாகரன் (பதிப்பாசிரியர்). இலண்டன் UB4 0PF: கம்பர்மலை வித்தியாலயம், கொம்மந்தறை பழைய மாணவர் சங்கம், ஐக்கிய இராச்சியம், Selva Sikaram, 72 Minterne Waye, Hayes, Middlesex, 1வது பதிப்பு, ஜனவரி 2009. (வத்தளை: பேஜ் அன்ட் இமேஜ் 202/2B, ரோயல் பேர்ள் கார்டன்).
xvi, 111 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 21x15 சமீ.

இலண்டனில் கடந்த 2000ம் ஆண்டு முதல் வருடாந்தம் நிகழும் முத்தமிழ் கலை நிகழ்ச்சி பூபாள ராகங்கள். கடந்த 2004ம் ஆண்டு இலக்கியத்துறையையும் அவர்களது பட்டியலில் இணைத்துள்ளார்கள். கொழும்பு தினக்குரல் பத்திரிகையுடன் இணைந்து உலகளாவியரீதியில் நடத்தப்பட்ட சிறுகதைப்போட்டியில் பரிசுபெற்ற 13 சிறுகதைகளும் இந்நூலில் தொகுக்கப்பட்டுள்ளன. காஞ்சனா வரதரூபன், கார்த்திகா பாலசுந்தரம், எஸ்.டேவிட் ஆகியோர் முதல் மூன்று பரிசில்களையும் வென்றனர். ஆறதல் பரிசுகள் நெடுந்தீவு இரா. தர்மலிங்கம், தர்மினி பத்மநாதன், ரீ.எல்.ஜவ்பார்கான், யோகேஸ்வரி சிவப்பிரகாசம், பவானி சிவகுமாரன், ஸபீர் ஹாபிஸ், கேணிப்பித்தன் ச.அருளானந்தம், பருத்தியூர் பாலவைரவநாதன், சந்திரகாந்தா முருகானந்தம், சி.கதிர்காமநாதன் ஆகியோருக்கு வழங்கப்பட்டன.

5684

பொழுது போக்கு எஸ்.பி.கே. (இயற்பெயர்: S.P.கிருஷ்ணன்). யாழ்ப்பாணம்: மலர்விழி வெளியீடு, 1வது பதிப்பு, மார்ச் 1972. (யாழ்ப்பாணம்: நாவலன் பதிப்பகம், 535 பருத்தித்துறை வீதி, நல்லூர்).
x, 90 பக்கம், விலை: ரூபா 2.00, அளவு: 18.5x12.5 சமீ.

1966 முதல் 1971 வரை எழுதிப் பிரசுரிக்கப்பட்ட தேவை ஒரு பூசாரி, வேண்டாம் வீடு, காதல் வெறி, பொழுதுபோக்கு, விடுங்கள் கையை, அரைநாள் உழைப்பு, சட்டத்தின் பாதுகாவலர்கள், பஸ் யாத்திரை, குழந்தை உள்ளம் ஆகிய ஒன்பது நகைச்சுவை உணர்வூட்டும் சிறுகதைகளும், கி.பி.2020, இராவணாயணம்-யுத்தகாண்டம், புத்தகக் கலியநாயனார் ஆகிய மூன்று பிரசுரமாகாத கதைகளும் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. தீப்பொறி, ஜோதி, ஈழநாடு, வீரகேசரி, சிரித்திரன், செங்கதிர் ஆகியவற்றில் இவரது கதைகள் வெளிவந்தன. வளவன் என்ற புனைபெயரிலும் இவர் எழுதியுள்ளார். (இந்நூல் School of Oriental and African Studies (SOAS), University of London நூலகத்தில் பார்வையிடப்பட்டது. பதிவிலக்கம் 497212).

5685

போர்க்காலக் கதைகள். தி.ஞானசேகரன் (தொகுப்பாசிரியர்). கொழும்பு: ஞானம் பதிப்பகம், இணை வெளியீடு, சென்னை 600024: மித்ர வெளியீடு, 32/9, ஆற்காடு சாலை, கோடம்பாக்கம், 1வது பதிப்பு, ஓகஸ்ட் 2007. (சென்னை 600024: மித்ர ஆர்ட்ஸ் அன் கிரியேஷன்ஸ், 32/9, ஆர்க்காடு சாலை, கோடம்பாக்கம்).
144 பக்கம், விலை: இந்திய ரூபா 80., அளவு: 21x13.5 சமீ., ISBN: 89-89748-31-9.

அரை நூற்றாண்டுக்கால போர்க்கால வரலாற்றைச் சித்திரிக்கும் 20 கதைகளைத் தொகுத்து இந்நூலை உருவாக்கியிருக்கிறார். போரின் பல்வேறு வகைப்பட்ட தாக்கங்களை வெவ்வேறு பிரதேசங்களைச் சார்ந்த படைப்பாளிகளின் பன்முகப்பட்ட பார்வையில் தொகுப்பாசிரியர் தேர்ந்து பதிவு செய்திருக்கின்றார். டிலான் ஜெயந்தன், ராணி ஸ்ரீதரன், தி.ஞானசேகரன், புலோலியூர் செ.கந்தசாமி, ஓ.கே.குணநாதன், தாமரைச் செல்வி, சுதர்ம மகாராஜன், குமுதினி கலையழகன், முல்லையூரான், யோகேஸ்வரி சிவப்பிரகாசம், வதிரி சி.இராஜேஸ்கண்ணன், செங்கை ஆழியான், ச.முருகானந்தன், முல்லைமணி, தாட்சாயணி, கே.விஜயன், முத்து, நீரங்க விக்ரமசிங்க, லோ.சுதர்மன், சந்திரகாந்தா முருகானந்தன் ஆகிய இருபது படைப்பாளிகளின் கதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன.

5686

மகாராஜாவின் ரயில்வண்டி. அ.முத்துலிங்கம். நாகர்கோவில் 629001: காலச்சுவடு பதிப்பகம், 669 கே.பி.சாலை, 1வது பதிப்பு, டிசம்பர் 2001. (சென்னை 600005: மணி ஆப்செட்).
174 பக்கம், விலை: இந்திய ரூபா 50., அளவு: 21.5x14 சமீ., ISBN: 81-87477-14-8.

அ.முத்துலிங்கத்தின் கதைகள் நாம் அறிந்த உலகங்களுக்கு நாம் அறிந்திராத பாதைகளில் நம்மை இட்டுச் செல்பவை. நாம் அறிந்திராத உலகங்களின் கதவுகளையும் ஜன்னல்களையும் காதல்களையும் ஓசைப்படுத்தாமல் மெல்லத் திறப்பவை. நவீன தமிழ்ச் சிறுகதை நடைகளுக்கு ஒரு புதிய பரிமாணத்தையும் வசீகரத்தையும் சேர்த்தவை இவரது எழுத்துக்கள். வாழ்வின் வியப்பும் நெகிழ்ச்சியும் கொண்ட தருணங்களை மிக நேர்த்தியான காட்சிகளாக்கும் இவரது கதைகள் வாசிப்பின் தீராத இன்பத்தை நெஞ்சில் பெருகச்செய்கின்றன. புலம்பெயர்ந்து வாழ்வதால் எதிர்கொள்ளும் இழப்புக்களின் ஈடுகட்டலாக இவரது கதைகளில் மொழியின் மீதான இம் மீள்பயணம் நிகழ்கின்றது.

5687

மனதைக் கழுவும் மகா சமர்த்தர்கள்: சீர்மியச் சிறுகதைகள். கோகிலா மகேந்திரன் (தொகுப்பாசிரியர்). சென்னை 600017: மணிமேகலைப் பிரசுரம், தபால் பெட்டி எண் 1447, இல.7 (ப.எ.4), தணிகாசலம் சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2008. (சென்னை 600014: பி.வி.ஆர். பிரிண்டர்ஸ்).
viii, 164 பக்கம், விலை: இந்திய ரூபா 50., அளவு: 17x12 சமீ.

கல்வி உலகிலும், படைப்பிலக்கிய உலகிலும், உளவளத்துணை (சீர்மியத்துறை)யிலும் நன்கு அறியப்பட்டவர் கோகிலா மகேந்திரன். சிறந்த விஞ்ஞான ஆசிரியரான இவர் பல்துறைப் பரிமாணம் மிக்கவர். உளவளத்துணையாளர்களை மனத்தில் இருத்தி இவர் வெளியிட்ட மனச்சோர்வு, எங்கே நிம்மதி, சிறுவர் உளநலம், மகிழ்வுடன் வாழ்தல், போன்ற நூல்களைத் தொடர்ந்து சீர்மியச் சிறுகதைகளை உள்ளடக்கிய இத்தொகுப்பினை வெளியிட்டுள்ளார். இவரது சில கதைகளுடன், மயூரன், புவிராஜா, சி.கதிர்காமநாதன், செல்வி, பகீரதி, தமயந்தி ஆகியோரது கதைகளும் இத்தொகுதியை

அலங்கரிக்கின்றன. மனதையே கழுவி, ஸ்கொலர்ஷிப், அவளால் முடியும், உங்களுடன் இருக்கிறேன், வருத்தம் அவளுக்கல்ல, மானுடம் செத்துப்போன, பூவொன்று புயலாகின்றது, அப்பா மாறுவாரா?, உலகங்கள் மாறும், பிரிவு, கண்கள் விரியட்டும், வலி, எனக்குள் ஒருவன், கருகிக்கொண்டிருக்கும் பூக்களில் ஒன்று, பிறழும் நெறிகள், பிறழ்வின் தோற்றம் ஆகிய 16 சிறுகதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன.

5688

மனிதர்கள். சசிபாரதி சு.சபாரத்தினம். சென்னை 600024: மித்ர வெளியீடு, 375/8-10, ஆற்காடு சாலை, கோடம்பாக்கம், 1வது பதிப்பு, டிசம்பர் 2000. (சென்னை 600024: மித்ர ஆர்ட்ஸ் அன் கிரியேஷன்ஸ், 375/8-10, ஆர்க்காடு சாலை, கோடம்பாக்கம்).
112 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18x12 சமீ., ISBN: 1-876626-25-9.

அறிவாலும் அற்புத ஆற்றலினாலும் இப்பூவுலகைச் சொர்க்கமாக்கவல்ல மனிதர்கள் பற்றிய 29 குறுங்கதைகள் இத்தொகுதியில் இடம்பெற்றுள்ளன. இக்குறுங்கதைகளில் மனித சமூகத்தின் ஆசாபாசங்களும், அவலங்களும் அங்கலாய்ப்புகளும், எடுத்துக்காட்டப்படுகின்றன. சிலவற்றில் நினைப்புக்கும் நிகழ்வுக்குமிடையேயுள்ள முரண்பாடுகள் காட்டப்படுகின்றன. 1963ம் ஆண்டுக்கும் 1968ம் ஆண்டுக்கும் இடைப்பட்ட ஐந்து ஆண்டுக் காலத்தில் இவை எழுதப்பட்டவை. இதன் முதற் பதிப்பு கலை இலக்கிய பத்திரிகை நண்பர்கள் வட்டத்தினால் 1986இல் **சசிபாரதி கதைகள்** என்ற தலைப்பில் வெளியிடப்பட்டது. இது இரண்டாவது பதிப்பாகவிருப்பினும், கால ஓட்டத்தில் நூலாசிரியரின் முதிர்ந்த அனுபவத்துடன் பழைய கதைகள் புதுப்பிக்கப்பட்டும், சில புதிய கதைகள் சேர்க்கப்பட்டும் உள்ளதால் முற்றிலும் புதிய பதிப்பாகின்றது. இலங்கைநாதனின் ஓவியங்கள் கதைகளுக்கு மேலும் மெருகூட்டுகின்றன.

5689

மாற்றங்களுக்காக. வாசுகி ஜெயசங்கர், ஸ்ரீசித்திரா கதிரவேலு. மட்டக்களப்பு: PGBV செயற்றிட்டம், கெயார் சர்வதேசம், 221 பார் வீதி, 1வது பதிப்பு, சித்திரை 2006. (மட்டக்களப்பு: வனசிங்கா பிரிண்டர்ஸ், திருக்கோணமலை வீதி).
(6), 102 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20x14.5 சமீ.

Prevention of Gender based violence Project (PGBV) செயற்றிட்ட உதவியுடன் வெளியிடப்பட்ட சிறுகதைத் தொகுப்பு. இதிலுள்ள ஒன்பது கதைகளில் 7 கதைகள் காதலில் தொடங்கி வன்முறையில் முடிந்தவை. காதல், திருமணம், குடும்ப உறவு என்பவை பற்றிய புரிதல் எம்மத்தியில் எவ்வாறு உள்ளது? பெண்களைக் குடும்ப உறவுகள் கட்டுப்படுத்துவதற்கான சமூகரீதியான அதிகாரத்தை ஆண்கள் பெற்றிருப்பினும் இவ்வாறு கொடூரமாக நடந்து கொள்வதற்கான மன இயல்பு அவர்களிடம் எவ்வாறு வளர்ந்து சென்றது என்பன போன்ற கேள்விகளை இக்கதைகள் எழுப்புகின்றன. மேலும், இத்துயரங்களையெல்லாம் தாண்டி வாழ்க்கையைத் தொடர்ந்து நடத்துவதற்கும் தடைகளைத் தாண்டி வருவதற்கும் உதவிய உறவுகள், சமூகக் கட்டமைப்புகள் பற்றியும் இக்கதைகளின் வாயிலாக அறிந்துகொள்ள முடிகின்றது.

5690

முகவரியைத் தேடுகிறார்கள். சோ.ராமேஸ்வரன். கொழும்பு 5: சோ.ராமேஸ்வரன், மீரா பதிப்பகம், E 2/4, அன்டர்சன் தொடர்மாடி, 1வது பதிப்பு, 2004. (மஹரகம: தரஞ்ஜி பிரின்ட்ஸ், 501, ஹைலெவல் வீதி, நாவின்ன).
iv, 100 பக்கம், விலை: ரூபா 140., அளவு: 21.5x13.5 சமீ.

2005ம் ஆண்டிற்கான இலங்கை சாஹித்திய மண்டலப்பரிசு பெற்ற சிறுகதைத் தொகுப்பு நூல். இதில் பல்வேறு சந்தர்ப்பங்களில் பரிசுபெற்ற 9 சிறுகதைகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. அனைத்தும் ஏதோ வகையில் இலங்கை இனப்பிரச்சினைபற்றிப் பேசுகின்றன. அனைத்திலும் சிங்களக் கதாபாத்திரங்களும் அங்கங்கே ஊடாடுகின்றன. நூலாசிரியரின் ஆறாவது சிறுகதைத் தொகுப்பு இது.

5691

முதுசொம். நயினை கி.கிருபானந்தா (பதிப்பாசிரியர்). யாழ்ப்பாணம்: பூரணி பதிப்பகம், 521/9, பருத்தித்துறை வீதி, நல்லூர், 1வது பதிப்பு, ஜூலை 2005. (யாழ்ப்பாணம்: திருவள்ளுவர் அச்சகம், 593 பருத்தித்துறை வீதி, நல்லூர்).

xviii, 102 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 20.5x14.5 சமீ.

ஈழத்து எழுத்தாளர்களின் பத்து சிறுகதைகளின் தொகுப்பு. மூதறிஞர் கலாநிதி க.சொக்கலிங்கம் (சொக்கன்) அவர்களின் மறைவின் ஓராண்டு நினைவாக வெளியிடப்பட்ட இந்நூலில், சாட்சிகளுக்கு அப்பால் (நந்தி), ஊனம் (சொக்கன்), சோறும் மானமும் (சிற்பி), இந்திரன்கள் (தெணியான்), அறுவடை (ச.வே.பஞ்சாட்சரம்), நாளைக்கும் பூ மலரும் (அகளங்கள்), வெம்மையை உணராமலே (யோகேஸ்வரி சிவப்பிரகாசம்), யுகங்கள் கணக்கல்ல (சேகு இஸத்தீன்), நிஜங்கள் (அராலியூர் ந.சுந்தரம்பிள்ளை), நன்றி மறக்காத ஒருவன் (நவாலியூர் நா.செல்லத்துரை) ஆகிய பத்துக் கதைகளும் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன.

5692

மூடுதிரை: சிறுகதைத் தொகுப்பு. மஸீதா புன்னியாமீன். உடத்தலவின்னை 20802: சிந்தனை வட்டம், 14 உடத்தலவின்னை மடிகே, 1வது பதிப்பு, நவம்பர் 2008. (உடத்தலவின்னை 20802: சிந்தனை வட்ட அச்சீட்டுப் பிரிவு, 14, உடத்தலவின்னை மடிகே).
132 பக்கம், விலை: ரூபா 200., அளவு 22 x14 சமீ., ISBN: 978-955-1779-26-9.

தென்மாகாணத்தின் காலி- கட்டுகொடையைச் சேர்ந்த மஸீதா புன்னியாமீன் உடத்தலவின்ன கிராமத்தில் வாழ்பவர். கணித-விஞ்ஞான பயிற்றப்பட்ட ஆசிரியையான இவரது கன்னிச் சிறுகதை 1979இல் முஸ்லிம் சஞ்சிகையில் பிரசுரமானது. சிந்தனை வட்டம் பணிப்பாளர்களுள் ஒருவரான இவர், தன் கணவர் பீ.எம்.புன்னியாமீனுடன் இணைந்து 79 புலமைப்பரிசில் நூல்களை எழுதியுள்ளார். இவரது ஒன்பது சிறுகதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. இவை தினகரன், சிந்தாமணி, நவமணி, ஞானம், வல்லினம், தினக்குரல், பிரகாசம், ஹஸனா மலர் ஆகியவற்றில் ஏற்கெனவே பிரசுரமானவை.

5693

மேலோர் வட்டம். செ.யோகநாதன். கோடம்பாக்கம்: சத்யபாரதி பதிப்பகம், 1வது பதிப்பு, டிசம்பர் 1993. (சென்னை 600014: சித்ரா பிரிண்டோகிராப்பி, 24 பொன்னுச்சாமி தெரு, இராயப்பேட்டை).
144 பக்கம், விலை: இந்திய ரூபா 20., அளவு: 18x12.5 சமீ.

போட்டோ, நியாயங்கள், வீழ்வேன் என்று நினைத்தாயோ, தர்மங்கள், மகாராணி மீண்டும் வருவாள் ஆகிய ஐந்து சிறுகதைகளுடன் மேலோர் வட்டம் என்ற குறுநாவலையும் உள்ளடக்கிய தொகுப்பு இது. மேலோர் வட்டம் - அரச இயந்திரத்தினை பின்னணியில் நின்று இயக்கும் அதிகாரிகளின் வட்டத்தை மேலோர் வட்டமாக உருவகிக்கின்றது. இன்றைய உலகில் மக்கள் தீர்ப்பு, மக்கள் முடிவு என்ற கருத்தியலுக்கு அர்த்தமில்லாமல் செய்வதாக இம் மேலோர் வட்டத்தின் அதிகாரம் இயங்குவதாக இக்குறுநாவல் விபரிக்கின்றது.

5694

யாதுமாகி நின்றாள். சுமதி ரூபன். சென்னை 600024: மித்ர வெளியீடு, 375/8-10, ஆற்காடு சாலை, 1வது பதிப்பு, டிசம்பர் 2003. (சென்னை 600024: மித்ர ஆர்ட்ஸ் அன் கிரியேஷன்ஸ், 375/8-10, ஆர்க்காடு சாலை).
96 பக்கம், விலை: இந்திய ரூபா 30., அளவு: 21x14 சமீ. ISBN: 1-876626-93-3.

யாழ்ப்பாணம் கோண்டாவிலைச் சேர்ந்த இந்நூலாசிரியர் புலம்பெயர்ந்து தற்போது கனடாவில் வாழ்கிறார். பெண்ணியச் சிந்தனைகளில் உருப்பெற்ற இவரது சிறுகதைப் படைப்புக்கள் பெண்கள் பிரச்சினைகளை வெளிப்படுத்தும் போக்கில் வீச்சு மிக்க எழுத்துக்களால் புனையப்பட்டுள்ளன. 13 சிறுகதைகள் இதில் அடங்கியுள்ளன. சிறுவயதில் இருந்து பெண் என்ற காரணத்தால் ஆணாதிக்கத்தின் பிடிக்குள் அல்லலுறும் கதாமாந்தர்களை இக்கதைகளில் காணமுடிகின்றது. பயண இடைவெளிகளின்போது உடலும் உள்ளமும் சிதைக்கப்பட்ட பெண், தமிழ்ச் சமூக மரபிலே தமது தனித்தன்மைகளை இழந்த பெண், தனி மனித, குடும்ப மற்றும் சமூக வாழ்வில் ஆணாதிக்க ஒடுக்குமுறைக்கு உள்ளாகும் பெண், சமூகத் தளைகளை உடைத்து வெளியேறும் பெண் ஆகியோர் சுமதி ரூபனின் இக்கதைகளில் தம் உணர்வுகளைப் பகிர்ந்துகொள்கின்றனர்.

5695

ரயிலில் ஒரு ராகம். கா.அருளானந்தம். கரவெட்டி: கலை ஒளி பிரசுரம், கரணவாய் கிழக்கு, 1வது பதிப்பு, மார்ச் 2005. (கொழும்பு 6: டெக்னோ பிரின்டர்ஸ்).

77 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 19x13 சமீ.

இலங்கை வடமாகாணத்தில் வடமராட்சிப் பிரதேசத்தில் கரணவாயில் பிறந்த இப்படைப்பாளி ஆசிரியராகப் பணியாற்றி ஓய்வுபெற்றவர். தனது அறுபதுகளில் இரண்டாண்டு காலமே எழுத்துப்பணியில் ஈடுபட்டிருந்தாலும், அக்காலகட்டத்தில் பெரிதும் பேசப்பட்ட சிறுகதைகளை வழங்கியவர். இத்தொகுதியில் இவரது ஏழு சிறுகதைகள் இடம்பெற்றுள்ளன. முதற்பாடம், ஆஹா பரீட்சை நிலையமே, வரவேண்டாம் தலைச்சுற்று, ரயிலில் ஒரு ராகம், ஒண்ணு ரெண்டு தொண்ணூத்தெட்டில் அவரைச் சந்தித்தேன், ஒரு கும்பராசியின் வாரபலன், பிரேமைகளும் வருத்தும் ஆகிய ஏழு சிறுகதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. இது எங்கள் தேசம் (ச.முருகானந்தன்), முதியோர் வாழ உதவுவோம் (எம்.அனுசயா), நாளை நமதே (ச.முருகானந்தன்) ஆகிய நூல்களைத் தொடர்ந்து கலை ஒளி பிரசுரத்தின் நான்காவது வெளியீடாக இந்நூல் வெளிவந்துள்ளது.

5696

ரயிலுக்கு நேரமாச்சு. கவிப்பிரியா நிஷா. (இயற்பெயர்: திருமதி ரூஹின் நிஷா ஹஸன்).கொழும்பு 6: ஞானம் பதிப்பகம், 3B, 46ஆவது ஒழுங்கை, 1வது பதிப்பு, மார்ச் 2008. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ் பிரைவேட் லிமிட்டெட், 48 B, புளுமெண்டால் வீதி).
80 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 22x14.5 சமீ., ISBN: 978-955-8354-22-3.

1987களில் சிறுவர் மலர் வானொலி நிகழ்ச்சியின் வாயிலாக எழுத்துத் துறைக்குள் நுழைந்தவர் கவிப்பிரியா நிஷா. இவரது 18 கதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. காரமும் கருத்தாழமும் கொண்ட சிறுகதைகளாக- கடுகுக் கதைகளாக பெரும்பாலான கதைகள் அமைந்துள்ளன. மித்திரன் வாரமலர், தினமுரசு வாரமலர், ஆகிய ஊடகங்களில் 1994-1996கால கட்டத்தில் இக்கதைகளில் பல வெளிவந்திருந்தன. புரவலர் புத்தகப் பூங்காவின் நூல் வெளியீட்டுத் திட்டத்தில் வெளியாகிய எட்டாவது நூல் இது.

5697

வானம் ஏன் மேலே போனது? விஜயலட்சுமி சேகர். மட்டக்களப்பு: சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம், இணைந்து வெளியிடுவோர், சென்னை 600014: பனிக்குடம் பதிப்பகம், பெண்ணிலக்கிய வெளியீட்டாளர்கள், 137(54), இரண்டாவது தளம், ஜானி ஜான்கான் சாலை, இராயப்பேட்டை, 1வது பதிப்பு, ஒக்டோபர் 2006. (சென்னை 600005: மீனா ஒப்செட்).
48 பக்கம், விலை: இந்திய ரூபா 30., அளவு: 22x14.5 சமீ.

வலி, கருகும் நாளை, நியாயம், அந்தரத்தில், அவளுக்கென்று, பெண்ணும் ஆணும் சரிநிகர் சமானமாக, தீக்குள் தீ, அவள் நானாகி நாமாக, மௌனமாய்க் கரையும் மேகங்கள், கண்ணாடி வாழ்க்கை, சந்தர்ப்ப மிருகம், மொட்டுக்கள் மலரட்டும் 1, மொட்டுக்கள் மலரட்டும் 2, வானம் ஏன் மேலே போனது, தாகம் ஆகிய தலைப்புகளில் விஜயலட்சுமி எழுதிய 15 சிறுகதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன.

5698

வெள்ளரிவண்டி. பொ.சண்முகநாதன். அச்சுவேலி: தமயந்தி பதிப்பகம், 1வது பதிப்பு, ஜனவரி 1968. (அச்சுவேலி: சிவகுமாரன் அச்சகம்).
110 பக்கம், விலை: ரூபா 1.50.

கலைச்செல்விப் பண்ணையில் வளர்ந்த ஈழத்துப் படைப்பாளி பொ.சண்முகநாதனின் பன்னிரண்டு சிறுகதைகளைக் கொண்ட தொகுப்பு. (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5699

வெளிநாட்டுக் கதைகள். க.குணேஸ்வரன். (தொகுப்பாசிரியர்). யாழ்ப்பாணம்: இராசையா தவமணிதேவி நினைவு வெளியீடு, ஐங்கரபதி, மயிலிட்டி, அல்வாய், 1வது பதிப்பு, மே 2007. (அல்வாய்: மதுரன் கிராப்பிக்ஸ்).
xii, 64 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x14.5 சமீ.

தன் தாயார் இராசையா தவமணிதேவி (1946-2007) அவர்களின் 31ம்நாள் நினைவாக சுவிஸ் நாட்டில் வாழும் இராசையா ஐங்கரன், இந்நூலை வெளியிட்டுள்ளார். அ.முத்துலிங்கம் (கனடா), கி.பி.அரவிந்தன்(பாரிஸ்), க.கலாமோகன் (பாரிஸ்), அருண் விஜயராணி (அவுஸ்திரேலியா), பார்த்தீபன்

(ஜேர்மனி), ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம் (லண்டன்), சுருதி (சுவிட்சர்லாந்து), கோவிலூர் செல்வராஜன் (நோர்வே), ஆகியோரின் கதைகள் இதில் இடம்பெற்றுள்ளன. அ.முத்துலிங்கத்தின் அம்மாவின் பாவாடை என்ற கதை மாத்திரம் யாழ்ப்பாணச் சூழலில் நகர்வதாயுள்ளது. மற்றையவை புலம்பெயர் வாழ்வியல் பற்றிக் கூறுபவை.

5700

வேப்பமரம். மாவை வரோதயன். கொழும்பு 11: தேசிய கலை இலக்கியப் பேரவை, வசந்தம் புத்தக இல்லம், 44, 3வது மாடி, மத்திய கொழும்பு கூட்டுச் சந்தைத் தொகுதி, 1வது பதிப்பு, நவம்பர் 2002. (கொழும்பு 13: கௌரி அச்சகம், 207, சேர. இரத்தினஜோதி சரவணமுத்து மாவத்தை).
xiv, 154 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 18x12.5 சமீ., ISBN: 955-8637-14-9.

தேசிய கலை இலக்கியப் பேரவையின் கொழும்புக் கிளையின் இலக்கியச் செயலாளர் மாவை வரோதயனின் பன்னிரண்டு சிறுகதைகளைக் கொண்ட தொகுப்பு. சப்பாத்தும் சப்பாத்தியும், உரித்துகள், பெருவாழ்வு, மறைத்தல், புரிதல் என்பது, வேப்ப மரம், ஒற்றைத் திருக்கல், அடகு மோதிரம், விலகல், உள்ள வயல், அந்தகம், குருக்கன் ஆகிய தலைப்புக்களில் அமைந்த இக்கதைகளில் சமகாலப் பிரச்சினைகள் சுவையாகப் பின்னப்பட்டுள்ளன. மண்வாசனையும் பிரதேச சொற்பிரயோகங்களும் பல்வேறு குணாதிசயங்களைக் கொண்ட மக்களும் கதாமாந்தர்களாக வந்து போகின்றார்கள். ஒவ்வொரு கதையும் எமக்கு ஒவ்வொரு படிப்பினையை விட்டுச் செல்கின்றன.

5701

வேரறுந்த நாட்கள். ஜின்னாஹ் ஷெரிபுத்தீன். மருதமுனை: அன்னை வெளியீட்டகம், 1வது பதிப்பு, 2008. (தெகிவளை: ஏ.ஜே.பிரின்ட்ஸ், 44, புகையிரதநிலைய வீதி).
xvi, 105 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 19x13 சமீ., ISBN: 978-955-96932-2-2.

பெற்ற மனம் என்ற தனது முதலாவது சிறுகதைத் தொகுப்பினை 2003இல் வெளியிட்ட மருத்துவக் கலாநிதி ஜின்னாஹ் ஷெரிபுத்தீனின் இரண்டாவது சிறுகதைத் தொகுப்பு இதுவாகும். தனது சொந்த வாழ்வனுபவங்களைக் கற்பனையுடன் கூட்டிக் கதைகளாக்கியுள்ளார். மாற்றுவழி, தீண்டத்தகாத தானம், பச்சக் கஞ்சன், வருமுன் காப்போன், பெருநாள் பரிசு, அன்னையும் பிதாவும், வேரறுந்த நாட்கள், கானல் நீர், பாவ பரிகாரம், ஒரு விடிவினுக்காய், ஹராம், தேட்டம் ஆகிய 12 கதைகள் இதில் உள்ளன.

5702

வேலி. K.V.நடராஜா. சென்னை 600024: மித்ர வெளியீடு, 375/8-10, ஆற்காடு சாலை, கோடம்பாக்கம், 1வது பதிப்பு, டிசம்பர் 2000. (சென்னை 600024: மித்ர பதிப்பகம், 375/8-10, ஆற்காடு சாலை).
312 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18x12.5 சமீ., ISBN: 1-876626-37-2.

யாழ்ப்பாண மண்ணின் இதயத்தைத் தேடும் 22 சிறுகதைகளின் தொகுப்பு. தனது 40 ஆண்டு எழுத்துப் பயிற்சியின் அறுவடையான கதைகளுள் சிலவற்றையே ஆசிரியர் இத்தொகுப்பில் உள்ளகப்படுத்துகின்றார். நூலாசிரியர் K.V.நடராஜா அவர்கள் விடிவு, எனக்குள் ஆயிரம், தேர் ஆகிய கதைகள் மூலம் தனது பார்வையை விரிவாக்கி உலகத்திலுள்ள பல வர்ணங்களையும் காண விழைகிறார். இக்கதைகள் சிலவற்றில் ஓர் எதிர்மறைத் தன்மையையும் யன்னலுக்கூடாக எட்டிப்பார்த்து, காணக்கூடாதவற்றைக் கண்டுவிட்டு இன்பங் காணும் ஒரு உளப்பாங்கையும் நாம் அனுபவிக்கின்றோம். யதார்த்தப் பண்பும், உருவகப் பாணியும் கலந்திருக்கும் வேலி என்ற கதை ஒரு காலகட்டத்து யாழ்ப்பாணத்தை வெற்றிகரமாகக் காட்சிப்படுத்துகின்றது.

5703

ஜோதி நிலா. என்.விஜயலட்சுமி. குருத்தலாவ: என்.விஜயலட்சுமி, செயின்ட் தோமஸ் கல்லூரி, 1வது பதிப்பு, ஜுலை 2007. (Kengalla: N N Printers, 90/3 Kandy Road).
88 பக்கம், விலை: ரூபா 125., அளவு: 18x12 சமீ.

மித்திரன், செங்கோல் ஆகிய பத்திரிகைகளில் வெளிவந்த 16 சிறுகதைகளின் தொகுப்பு. அறமும் மறமும் கொண்ட தமிழர்கள் இன்று எதிர்நோக்கும் பிரச்சினைகளை மையமாக வைத்துப் புனையப்பட்ட கதைகள் இவை. இத்தொகுப்பில் பொய் முகங்கள், தண்டிக்கப்படும் நியாயங்கள், குருதட்சணை, ஜோதி நிலா, கிறிஸ்மஸ் மரம், மயிலிறகாய், சிகப்புக்கல் தோடு, குட்டக் குட்ட, வசந்தம் வருமா, சூதாட்டம், அவள் மனைவியாகின்றாள், கல்யாணப் பரிசு, பூஞ்சோலைப் பூங்குயில், கரடிப் பொம்மை, மண் குடிசை, சூரியன்

நிறத்தை மாற்றிக் கொள்வதில்லை ஆகிய கதைகள் இத்தொகுப்பில் இடம்பிடித்துள்ளன. வட இலங்கையைப் பிறப்பிடமாகக்கொண்ட விஜயலட்சுமி தெமட்டகொட தேவபாலா கல்லூரியில் ஆசிரியர் பணியைத் தொடங்கி, தற்போது குருத்தலாவ புனித தோமையர் கல்லூரியில் ஆசிரியராகப் பணியாற்றுகின்றார்.

மேலும் பார்க்க: 5721, 5795, 5797

894.8(5) தமிழ் நாவல்கள், குறுநாவல்கள்

5704

அகிலா உனக்காக. ந.பாலேஸ்வரி. சென்னை 600101: மகராஜி பதிப்பகம், 809, 12ஆவது தெரு, சின்டிகேட் பாங்க் கொலனி, அண்ணா நகர் மேற்கு விரிவு, 1வது பதிப்பு, மே 2003. (சென்னை 14: ரவிராஜா ஓப்செட்).
152 பக்கம், விலை: ரூபா 45., அளவு: 18x12 சமீ.

தொண்டன் சஞ்சிகையில் தொடராக வெளிவந்த இந்நாவல், 1992இல் சாகித்திய விருதைப் பெற்ற ந.பாலேஸ்வரியின் ஒன்பதாவது நாவலாகும். தனி மனித மேம்பாடு, சமூகக் கொடுமை, தெய்வ நம்பிக்கை, விடுதலை வேட்கை, போராட்ட எண்ணம், உறுதியான கொள்கைப் பிடிப்பு ஆகியவற்றை பகைப்புலமாகக் கொண்டு நகரும் இந்த நாவல் பொருளாதாரம், சீதனம், ஏழ்மை இவற்றினடிப்படையில் பிறக்கும் சிக்கல்கள் என்பனவற்றயும் சுட்டிக்காட்டுகின்றது.

5705

அந்த நதியும் அதன் மக்களும்... நீர்கொழும்பூர் முத்துலிங்கம். நீர்கொழும்பு: ஜெயகாந்தன் முத்துலிங்கம், R 22, ஜெயரத்தின வீதி, 1வது பதிப்பு, ஜுலை 2005. (கொழும்பு 13: UK Printers, 103, Vivekananda Hill).
xiv, 98 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 22x15 சமீ.

நீர்கொழும்பூர் முத்துலிங்கம் 09 ஜனவரி 2000 அன்று சுகவீனம் காரணமாக மறைந்தவர். அவர் மறையும் முன்னர் இறுதியாக எழுதிய இந்நாவல் தினக்குரலில் வாராந்தம் பிரசுரமாகிவந்த வேளையிலேயே அவரது மரணமும் நிகழ்ந்தது. கதை நிகழும் களம் சிலாபம், சித்தாமடம், மாயவன் ஆற்று மையம். சிலாபத்திலிருந்து புத்தளம் செல்லும் பாதையில் தெதுரு ஓயா என்ற மாயவன் ஆற்றின் ஒரு கரையை எல்லையாகக் கொண்டிருக்கும் சித்தாமடம் என்னும் கிராமமும் அக்கிராமத்து பால்பண்ணையும், அப்பண்ணையோடிணைந்த மக்களும் அப்பிரதேசத்தை ஆட்டிப்படைத்த 1957 பெருவெள்ளமும் நாவலை விறுவிறுப்பாக்கக் காரணமாகின்றன.

5706

ஆண்கள் விற்பனைக்கு. பார்த்திபன். ஜேர்மனி: தென்னாசிய நிறுவனம், Sudasien Buro, GroBe HeimstraBe-58, 4600 Dortmund 1, 1வது பதிப்பு, டிசம்பர் 1988. (ஜேர்மனி: கல்லச்சுப் பிரதியாக்கம்).
130 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x15 சமீ.

ஓவியர் ரமணியின் அட்டைப் படத்துடன் கல்லச்சுப் பிரதியாக்கம் செய்யப்பட்டு வெளியிடப்பட்டுள்ள இந்நாவல், சீதனப் பிரச்சினையை ஆழமாக விமர்சிக்கின்றது. இது பார்த்திபனின் ஐந்தாவது வெளியீடாகும். ஏற்கெனவே நிஜங்கள், ஜனனம், வித்தியாசப்படும் வித்தியாசங்கள், பாதி உறவு ஆகிய நாவல்களை இவர் இதே வெளியீட்டகத்தின்மூலம் வழங்கியிருக்கிறார். ஜேர்மனியிலிருந்து வெளிவரும் தூண்டில் என்ற புகலிடச் சஞ்சிகையின் ஆசிரியர்களுள் இவரும் ஒருவர்.

5707

ஆறுகள் பின்நோக்கிப் பாய்வதில்லை. K.R.டேவிற். யாழ்ப்பாணம் முரசொலி வெளியீடு, 1வது பதிப்பு, மே 1987. (யாழ்ப்பாணம்: முரசொலி அச்சகம், ஆர்.ஜி.கட்டிடம், ஸ்ரான்லி வீதி).
(4), 78 பக்கம், விலை: ரூபா 10., அளவு: 18x13 சமீ.

1986இல் யாழ்ப்பாணம், முரசொலி பத்திரிகையில் தினசரி தொடராக வெளிவந்த குறுநாவல். அரசியல் காரணங்களுக்காகத் தான் சிங்களச் சிறையில் அனுபவித்த எட்டு வருட சிறைவாழ்க்கையின் பின்னர் விடுதலையாகித் தாய் மண் திரும்பும் செல்லப்பா தான் தரிசிக்கும் மக்களும் போராளிகளும், மண் மீட்புப்

போராட்டத்தில் தன்னை ஈடுபடுத்தி நிற்கும் சூழலைக் காண்கிறார். பாரிய சமூக மாற்றங்களுக்கு உட்பட்டு வீரம் செறிந்த மண்ணாகக் காட்சி தருகின்றது யாழ்ப்பாணம். இராணுவ அடக்குமுறையற்ற அந்த யாழ்ப்பாண மண்ணிலிருந்து தான் விட்டுச்சென்ற கடந்த காலத்தை ஒப்பிட்டுப் பார்க்கிறார். தேசியத்தின் விடுதலைப் போராட்டத்தின் சுவடுகளைப் பதிவு செய்வதாக இக்குறுநாவல் அமைந்துள்ளது.

5708

இரவல் தாய்நாடு. செ.யோகநாதன். சென்னை 600017: நர்மதா பதிப்பகம், 10, சோமசுந்தரம் தெரு, தி.நகர், 2வது பதிப்பு, நவம்பர் 1986, 1வது பதிப்பு, நவம்பர் 1982. (சென்னை 600017: தமிழோசை அச்சகம், 84, ஹபிபுள்ளா சாலை, தி.நகர்).
iv, 388 பக்கம், விலை: இந்திய ரூபா 29., அளவு: 18x12.5 சமீ.

இரவல் தாய்நாடு, சாதிகள் இல்லையடி பாப்பா, இருள் கொண்ட அறைகள், கண்ணில் தெரியுதொரு தோற்றம், இருபது வருஷங்களும் மூன்று ஆசைகளும், தோழமை என்றொரு சொல் ஆகிய ஆறு குறுநாவல்கள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. இவை ஈழத்தின் நிலையை மட்டும் சித்திரிக்கின்ற நாவல் தொகுப்பல்ல. சர்வதேச இலக்கியப் பார்வையில் மானிடத்தின் காயங்களை குறுகிய தேசிய நோக்கு என்ற கண்ணாடியின் வழியாக மட்டும் நோக்காது மொத்த மனித குலத்தின் மேன்மைக்காக ஆத்மசுத்தியுடன் பரிசீலனை செய்கின்ற மீளாய்வாக இவை அமைகின்றன.

5709

உள்ளத்தில் மட்டும். மா.கி.கிறிஸ்ரியன். இலண்டன்: அருள் அருளானந்தம், 1வது பதிப்பு, சித்திரை 1998. (பாரிஸ் 75010: ரஜிஸ்தான் அழுத்தகம், 21, rue Perdonnet).
128 பக்கம், விலை: 30 பிராங்குகள், அளவு: 17.5x12.5 சமீ.

உள்ளத்தில் மட்டும், கடலோரக் காற்று ஆகிய இரண்டு குறுநாவல்கள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. உள்ளத்தில் மட்டும் - எமது நாட்டில் இடம்பெற்றுவரும் இனப்பிரச்சினையின் தாக்கங்களினால் தங்கள் கனவுகளைச் சிதைத்துவிட்டு ஐரோப்பாவிற்கு இடம்பெயர்ந்துவிட்ட இரு இளைஞர்களின் மனப்போராட்டங்கள், காதல், அவர்களின் இருவரது குடும்பங்களின் உறவுகள், அந்நிய மண்ணில் ஏற்படும் பிரச்சினைகள் என்பன பற்றிப் பேசுகின்றது. கடலோரக் காற்று- அதில் வரும் நாயகனுக்கு ஏற்பட்ட உடல் ஊனம், அவனது திருமண வாழ்வைத் தடைப்படுத்துகின்றது. அதனால் அவனுக்கு ஏற்படும் மன உழைச்சல், பக்கத்து வாழும் மனிதர்களின் கேலிப் பேச்சுகள் போன்றவற்றால் ஊனமுற்றவர்கள் அடையக்கூடிய வேதனைகள் பற்றிச் சொல்கின்றது.

5710

ஊருக்கு நாலு பேர். திக்குவல்லை கமால். பண்டாரகம: திக்குவல்லை கமால், 104, அத்துலுகம, 1வது பதிப்பு, 2007. (தெகிவளை: ஏ.ஜே.பிரின்ட்ஸ், 44, புகையிரதநிலைய வீதி).
(4), 112 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 21x15 சமீ., ISBN: 978-955-95926-9-3.

உலகம் சகல துறைகளிலும் வேகவேகமாய் முன்னேறி வந்தாலும், ஊர்களென்னவோ ஒரு சில கருத்தோட்டங்களில் சிக்கி, சிக்கவிழ்த்துக்கொள்ள முடியாமல் முகம் சரிந்துபோய்க் கிடக்கின்றது. இளம் சந்ததியினரின் துடிப்பான செயற்பாடுகளுக்கு எதிராக சமூக மேலாதிக்கம் எவ்வாறெல்லாம் எதிர்வினை காட்டுகின்றதென்பதையும் துணிச்சல்மிக்க நான்குபேர் முன்வந்துவிட்டால் எல்லாவற்றையும் முறியடித்து முன்னேறலாம் என்பதையும் இந்நாவலில் சித்திரித்துள்ளார். சமூகப் பிரச்சினைகளோடு பின்னிப்பிணைந்த மண்வாசனை கமழும் யதார்த்தமான படைப்புலகத்தை தனதாக்கிக்கொண்ட திக்கவல்லை கமால், ஒளிபரவுகிறது, நச்சுமரமும் நறுமலர்களும், பாதை தெரியாத பயணம், உதயக் கதிர்கள் ஆகிய நாவல்களை ஏற்கெனவே வெளியிட்டவர்.

5711

ஒரு காவியத்தின் தலைவி. பங்கேஸ்வரி சங்கரப்பிள்ளை. சென்னை 600024: இளவழகன் பதிப்பகம், 4, இரண்டாவது தெரு, ஆண்டவர் நகர், கோடம்பாக்கம், 1வது பதிப்பு, டிசம்பர் 1996. (சென்னை: பார்க்கர் கம்பியுட்டர்ஸ்).
119 பக்கம், விலை: இந்திய ரூபா 50., அளவு: 18x12.5 சமீ.

ஈழத்து இலக்கிய உலகில் சங்கரி என்ற புனைபெயரில் அறியப்பட்டவர் இந்நூலின் ஆசிரியை. சமூகத்தின் பண்பார்ந்த தேவைகள் சிலவற்றினை இக்குறுநாவல் ஓரளவு அறிமுகம் செய்கின்றது. காதலென்று ஒன்று

வந்தாலே அதற்கு எதிர்ப்பு என்ற பின்னணியும் தியாகங்களும் திடீர் உயர்வு தாழ்வுகளும் மானதப் பின்னடைவுகளும். பின்னடைவில் இருந்து மறைந்து வாழ்வதற்கான தப்பல் சாட்டுகளும் (Escapism) என்ற நிகழ்வுகளின் முக்கிய பாத்திரங்களாயுள்ள இராஜன், மனைவி பூமலர் ஆகியோரைச் சுற்றியே நாவல் நகர்கின்றது. தமிழ் முஸ்லிம் புரிந்துணர்வுக்கு உயிர் கொடுத்த கதாபாத்திரமாக இஸ்லாமியப் பெண் ஸபீக்கா உருவாக்கப்பட்டுள்ளார். இக்கதையில் மட்டக்களப்பு மரபுவழிப் பழக்க வழக்கங்களையும் கிராமியப் பேச்சு மொழியையும் அறிமுகஞ்செய்ய ஆசிரியர் ஆங்காங்கே முயன்றுள்ளார்.

5712

ஓ கனடா. பாரதிநேசன் (இயற்பெயர்: வீ.சின்னத்தம்பி). வட்டுக்கோட்டை: வீ.சின்னத்தம்பி, சம்பந்தர் வீதி, வட்டு மேற்கு, 1வது பதிப்பு, மார்ச் 1994. (யாழ்ப்பாணம்: அருண் பிரிண்டர்ஸ், 15, 2வது ஒழுங்கை, மின்சார நிலைய வீதி).
(4), 95 பக்கம், விலை: ரூபா 40., அளவு: 20.5x14.5 சமீ.

மார்க்சிய கோட்பாட்டில் பற்றுறுதி கொண்ட நூலாசிரியர், மக்கள் சீனக் குடியரசில் 15க்கும் மேலான ஆண்டுகள் பணியாற்றிய அனுபவம் கொண்டவர். சமூக பொருளாதாரம் தொடர்பான வீட்டுப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு வெளிநாடு செல்வதே ஏற்புடையது என்ற கருத்தைக்கொண்ட ஈழத்தமிழர்களிடையே நாட்டின் பொருளாதார விடிவும் இப்பிரச்சினையைத் தீர்க்க முக்கியம் என்ற கருத்தை இந்நாவலில் வலியுறுத்துகின்றார். சாதாரண வாழ்க்கையில் தமிழ் எழுதுவினைஞர் ஒருவர் எதிர்நோக்கும் பொருளாதாரப் பிரச்சினைகளையும், அவரது வாழ்க்கையில் சமுதாய ரீதியில் ஏற்படும் நிகழ்வுகளையும், அந்த நிகழ்வுகள் அவரில் ஏற்படுத்தும் தாக்கங்களையும் இந்நாவல் விபரிக்கின்றது. இந்திய இராணுவத்தின் ஈழமண் ஆக்கிரமிப்பும் கதையில் பின்னிச்செல்கின்றது.

5713

ஓர் அபலையின் டயரி: சமூக நாவல். ஏ.சீ.ஜரீனா முஸ்தபா. மாவனல்லை: எக்மி பதிப்பகம், 19, கமன்தெனிய வீதி, கிருங்கதெனிய, 1வது பதிப்பு, மார்ச் 2008. (மாவனல்ல: எம்.ஜே.எம். அச்சகம், 119 பிரதான வீதி).
138 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 20x14 சமீ., ISBN: 978-955-1825-01-0.

மேல் மாகாணத்தின் கொழும்பு கடுவெலவைப் பிறப்பிடமாகக் கொண்ட ஏ.சீ.ஜரீனா முஸ்தபா, தனது முதலாவது ஆக்கத்தை ஒரு முடிவில் ஒரு தொடர் என்ற தலைப்பில் நாடகமாக இலங்கை வானொலி முஸ்லிம் சேவையில் 20.08.1985இல் ஒலிபரப்பக் கண்டவர். மித்திரன் வாரமலரில் 31.08.2003 முதல் 16.05.2004 வரை 38 வாரங்களாக தொடர்ந்து பிரசுரமாகிய விறுவிறுப்பான நாவல் இது.

5714

கலைந்துபோன மேகங்கள். விஜி பிரபாகரன். கொழும்பு: ஜேசுவா பப்ளிக்கேஷன்ஸ், தபால் பெட்டி எண் 2012, 1வது பதிப்பு, ஓகஸ்ட் 2001. (கொழும்பு 6: Print Graphics, P.O.Box 2012).
72 பக்கம், விலை: ரூபா 75., அளவு: 21.5x14 சமீ.

கலைந்துபோன மேகங்கள், இந்தப் பூவுக்குள் இனி இல்லை பூகம்பம் ஆகிய இரண்டு குறுநாவல்களைக் கொண்ட நூல். கலைந்துபோன மேகங்கள் - எதையுமே உணர்ந்துகொள்ள முடியாத நிலைக்குள்ளாகிவிட்ட காதலிக்காகத் தனது வாழ்க்கைகையே அர்ப்பணிக்கும் ஒரு இளைஞனின் தியாக உணர்வினைப் படம்பிடித்துக் காட்டுகின்றது. இந்தப் பூவுக்குள் இனி இல்லை பூகம்பம்- உடலால் இவ்வுலகைவிட்டுப் பிரிந்துவிட்ட தன் காதலியை உள்ளத்திலேயே தாங்கிக்கொண்டு வாழும் ஓர் இளைஞனின் தியாக உணர்வினைப் புடமிட்டுக் காட்டுகின்றது.

5715

கள்ளத் தோணிக்குத் தீர்ப்பு. M.P.M.முகம்மது காசிம் புலவர். விடத்தல்தீவு: அன்சாரி நூல்நிலையம், 1வது பதிப்பு, ஜனவரி 1955. (யாழ்ப்பாணம்: ஆனந்தா அச்சகம்).
56 பக்கம், விலை: சதம் 75.

1948இன் இந்திய பாக்கிஸ்தானிய பிரஜாவுரிமைச் சட்டத்தின் பகைப்புலத்தில் நின்று எழுதப்பட்ட குறுநாவல். “அல்லும் பகலும் தன் உதிரத்தைப் பிழிந்து உரமாக்கி, மலைகள், மடுக்கள், காடுகள், மேடுகள், தேயிலை, றப்பர், தென்னைத் தோட்டங்கள், வயல்கள், வாருதி போன்று காட்சி தரும் காட்டாறுகள் பலதும் வெட்டிக் கட்டிச் செப்பனிட்டு, செல்வம் கொழிக்க, ஈழவள இலங்கை நாட்டைப்

பொன் கொழிக்கும் புதுமை நாடாக்கி இன்று இங்கிருந்து துரத்தப்படும், துரத்தப்பட்டிருக்கும், துரத்தப்படப்போகும் இந்தியத் தமிழ் மக்களின் இதயத்தினடியிலிருந்து பொங்கியெழுந்து இரத்தக் கண்ணீராக வடியும் செங்குருதித் திவலைகளுக்கு நினைவுச் சின்னமாக, சற்று மன ஆறுதலுக்காகச் சமர்ப்பிக்கும் சிறியோனின் இந்த எழுத்தோவியம் பாட்டாளி இந்திய மக்கள் பத்து லட்சம் பேருக்கும் அர்ப்பணம்" என்று நூலாசிரியர் சமர்ப்பணம் செய்துள்ளார். (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5716

கனகு. சோ.ராமேஸ்வரன். கொழும்பு 10: எஸ்.கொடகே சஹ சஹோதரயோ, 675, மருதானை வீதி, 1வது பதிப்பு, 2003. (வெல்லம்பிட்டிய: சதுர அச்சகம், 142 அவிசாவளை வீதி).
120 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 955-20-6195-4.

ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் ஆசாபாசங்கள், மனிதாபிமானம் போன்ற உணர்வுகள் பொதிந்தே இருக்கின்றன. இம்மனித விழுமியங்களை எத்தகைய துன்ப வேளைகளிலும் சமுதாய வரையறைகளுக்குள் மீறாது வைராக்கியத்துடன் புனிதப்பயணத்தை மேற்கொள்ளும் கனகசபை, மங்களம், யோகமலர், உபாலி ஆகிய பாத்திரங்களின் வார்ப்புடன் இந்நாவல் நகர்த்திச்செல்லப்படுகின்றது.

5717

கனவு மெய்ப்பட வேண்டும்: நாவல். ச.அருளானந்தம். (புனைபெயர்: கேணிப்பித்தன்).
திருக்கோணமலை: அருள் வெளியீட்டகம், 37/7, மத்திய வீதி, உவர்மலை, 1வது பதிப்பு, ஜுலை 2009. (கொழும்பு: நிஷான் பிரின்டர்ஸ்).
(4), 151 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 21x15 சமீ., ISBN: 978-955-51451-3-8.

இந்நாவலில் வரும் நிகழ்வுகள் 1984-86 வரையான காலப்பகுதிக்குரிய இலங்கையின் சமூக அரசியல் பொருளாதார நிலைமைகளுடாக நகர்த்தப்படுகின்றன. இக்காலப்பகுதிக்கு முன்னதான 1959-1976 அரசியல் நிலைமைகளும் தேவைகருதி எடுத்தாளப்படுகின்றன. ஈழத்து இளைஞர்களின் துயரங்களும் அதனால் அல்லலுற்ற பெற்றோரின் அவலங்களும் இந்நாவலில் விபரிக்கப்படுகின்றன. சேர சோழ பாண்டியர்கள் சேர்ந்தொன்றாய் வாழாத தமிழினத்தில் தமிழனுக்குத் தமிழனே எதிரி என்பதையும் தமிழனின் ஒற்றுமையே விடிவுக்கு வழி என்பதையும் இந்நாவலின் வாயிலாக பதிவுசெய்கின்றார். மாகாண மட்டத்திலும் தேசிய மட்டத்திலும் பல இலக்கிய விருதுகளைப்பெற்ற இந்நூலாசிரியர், கேணிப்பித்தன் என்ற புனைபெயரிலும் இலக்கிய உலகில் உலவிவருபவர்.

5718

காந்தீயத்தில் மலர்ந்தது அவள் வாழ்வு. பழ.சிவபாக்கியம் குமாரவேல். நாவலப்பிட்டி: நா.முத்தையா, ஆத்மஜோதி நிலையம், 1வது பதிப்பு ஏப்ரல் 1962. (நாவலப்பிட்டி: ஸ்ரீ ஆத்மஜோதி அச்சகம்).
38 பக்கம், விலை ரூபா 1.15

காந்தியத்தை சமூக மட்டத்தில் எடுத்துச் சொல்லும் நோக்கில் அதன் முக்கியத்துவத்தை பிரதிபலிக்கும் வகையில் உருவாக்கப்பட்ட சமூக நாவல். இந்நூலுக்கான முகவுரையை அத்மஜோதி அதிபர் நா.முத்தையா வழங்கியுள்ளார். (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5719

குமாரபுரம். அ.பாலமனோகரன். கொழும்பு: வீரகேசரி வெளியீடு, த.பெ.எண் 160, 1வது பதிப்பு, டிசம்பர் 1974. (கொழும்பு 14: Express Newspapers (Cey) Ltd, 185, Grandpass Road).
(8), 132 பக்கம், விலை: ரூபா 3.40, அளவு: 17.5x12 சமீ.

மண்ணுக்கும் பெண்ணுக்கும் நெருங்கிய ஒற்றுமையும் தொடர்பும் உண்டு என்று கூறும் இந்நாவல் இவை இரண்டுமே மதிக்கப்பட வேண்டும் என்று போதிக்கின்றது. வவுனியா மாவட்ட, குமாரபுரக் கிராமத்தில் மதிப்புடன் வாழ்ந்த வன்னியர் குடும்பத்தின் வாரிசான சித்ரா, பல தோல்விகளுக்கும் மத்தியில் தன் குலப்பெருமையை நிலைநாட்டும் முயற்சியிலும் சகோதரிகளுக்கு நல்வாழ்வளிக்கும் முயற்சியில் வெற்றிபெறுகின்றாள். சந்தர்ப்பவசத்தால் தன் அத்தானான காதலனால் ஏமாற்றப்பட்டதாக உணர்ந்து வேறொருவரை மணந்து விதவையாகி மீண்டும் அத்தான் வாழ்வளிக்க முன்வந்தபோது அதனை ஏற்காமல் உயிர்துறக்க முனைகிறாள். செவிவழிக்கதைகள் பல கதையின் விறுவிறுப்பான போக்குக்கு உதவுகின்றன.

28ஆவது வீரகேசரி பிரசுரமான இந்நாவல் நிலக்கிளி ஆசிரியரின் மற்றுமொரு சிறந்த நாவலாகக் கருதப்படுகின்றது.

5720

கே.டானியல் படைப்புகள்: தொகுதி ஒன்று. கே.டானியல். (மூலம்), டானியல் வசந்தன் (பதிப்பாசிரியர்). தமிழ்நாடு: அடையாளம் பதிப்பகம், 1205/1, கருப்பூர் சாலை, புத்தாநத்தம் 621310, 1வது பதிப்பு, 2005. (சென்னை 5: மணி ஒப்செட்).
xii, 1132 பக்கம், விலை: இந்திய ரூபா 540., அளவு: 22x15 சமீ., ISBN: 81-7720-020-8.

சமூகமாற்றம், வர்க்க ஒருமைப்பாடு, சாதீயத் தகர்ப்பு, அடிமட்ட மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தல் என்ற மானுடம் சார்ந்த விடயங்களில் அக்கறை கொண்ட படைப்பாளி கே.டானியலின் பஞ்சமர், கானல், கோவிந்தன், அடிமைகள், பஞ்சகோணங்கள், தண்ணீர் ஆகிய ஆறு நாவல்களின் தொகுப்பாக இந்நூல் வெளிவந்துள்ளது. 1890ம் ஆண்டிலிருந்து ஈழத் தேசியச் சிந்தனை வெடித்த எழுபதுகள் வரைக்கான காலப்பகுதியில் யாழ்ப்பாணக் குடாநாட்டின் வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமம் போன்ற குறிச்சிகளில் வாழ்ந்த மக்கள் மத்தியில் அரசியல், சாதீயம், கல்வி ஆகிய விடயங்களில் ஏற்பட்ட விழிப்புணர்வு, பலவீனங்கள் என்பவைகளின் தொகுப்பாக இந்நாவல்கள் கணிப்பைப் பெறுகின்றன. இந்நாவல்கள் தனித்தனி நூல்களாக 1982-1986 காலகட்டத்தில் வெளியிடப்பட்டபோது அவற்றுக்கு எழுதிய முன்னுரைகளும் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன.

5721

சங்கானைச் சண்டியன். வி.ஜீவகுமாரன். சென்னை 600024: மித்ர ஆர்ட்ஸ் அன் க்ரியேஷன்ஸ், 32/9, ஆற்காடு சாலை, கோடம்பாக்கம், 1வது பதிப்பு, செப்டெம்பர் 2009. (சென்னை 600024: மித்ர ஆர்ட்ஸ் அன் க்ரியேஷன்ஸ், 32/9, ஆற்காடு சாலை, கோடம்பாக்கம்).
448 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18x12 சமீ., ISBN: 978-81-89748-78-4.

பத்துச் சிறுகதைகளும் இரண்டு குறுநாவல்களும் கொண்ட இத்தொகுப்பு டென்மார்க்கில் புலம்பெயர்ந்து வாழும் ஈழத்துப் படைப்பாளி வி.ஜீவகுமாரனின் மூன்றாவது நூலாகும். *யாவும் கற்பனை அல்ல* என்ற சிறுகதைத் தொகுப்பினையும் *மக்கள், மக்களால், மக்களுக்காக* என்ற நாவலையும், ஏற்கெனவே வழங்கியவர். இங்கு இவரது சிறுகதைகளான வேட்டை, நானும் ஒரு அகதியாக, மெயில் லோஞ்ச், சீட்டு, கழிப்பு, கிராமத்து பெரியவீட்டுக்காரி, மொழிபெயர்ப்பு, வலி, அகால மரணம், செல்வி ஏன் அழுகின்றாள்? ஆகிய பத்து கதைகளும் கோமதி, சங்கானைச் சண்டியன் ஆகிய இரண்டு குறுநாவல்களும் இடம்பெற்றுள்ளன. கோமதி- இலங்கையிலிருந்து முகமறியா ஒருவனுடன் திருமண பந்தத்தில் இணையவென்று டென்மார்க் செல்லும் ஒரு அபலைப்பெண்ணின் கனவுகளும் உணர்வுகளும் சிதைந்து மனநோயாளியாக்கப்படுவதாக கதை அமைகின்றது. சங்கானைச் சண்டியன் - ஒரு ஊர்ச்சண்டியன் எப்படி உள்ளூர் அரசியலில் உள்வாங்கப்பட்டு அவனைச் சார்ந்தவர்களால் அந்நியமாக்கப்படுகின்றான் என்பது சமகால அரசியல்வாடையுடன் சொல்லப்படுகின்றது.

5722

சிறகொடிந்த வண்ணக்கிளி. ஆர்.இராஜலிங்கம். சென்னை 600017: மணிமேகலைப் பிரசுரம், தபால் பெட்டி எண் 1447, இல.7 (ப.எ.4), தணிகாசலம் சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2005. (சென்னை 94: ஸ்கிரிப்ட் ஆ.ப்செட்).
vi, 194 பக்கம், விலை: இந்திய ரூபா 50., அளவு: 18x12.5 சமீ.

காதலி தேடிக்கொடுத்த மனைவி என்ற தனது முதல் நாவலுடன் இலக்கிய உலகில் அறிமுகமான இந்நாவலாசிரியரின் இரண்டாவது நாவல் இது. வீரகேசரியில் இசையும் கலையும் என்ற பகுதியை நீண்டகாலம் நடத்திய இவர் சித்ரா என்ற சித்திரக் கதைப் பத்திரிகையினதும், ஹரே கிருஷ்ணா என்ற ஆன்மீக ஏட்டினதும் ஆசிரியராகவும், தினபதி-சிந்தாமணி, வீரகேசரி-மித்திரன் பத்திரிகைகளின் உதவி ஆசிரியராகவும் பணியாற்றிய பின்னர் விஜய் பத்திரிகையின் உதவி ஆசிரியராகப் பணிபுரிந்தவர்.

5723

சுருதி பேதமடைகிறது. வவுனியூர் இரா.உதயணன். கொழும்பு 8: அருணா வெளியீட்டகம், A 15, 1/1, மனிங் ரவுண் வீடமைப்புத் தொகுதி, மங்கள வீதி, 1வது பதிப்பு, மார்ச் 2008. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ் பிரைவேட் லிமிட்டெட், 48 B, புளுமெண்டால் வீதி).
viii, 156 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 17x12 சமீ., ISBN: 978-955-1347-03-1.

உதயணன் ஸ்ரீ இராமகிருஷ்ணா இலங்கையின் வவுனியாவில் குடியிருப்பு கிராமத்தில் பிறந்தவர். 1960ம் ஆண்டு பிறந்த இவர் 20ஆவது வயதில் படைப்பிலக்கியத் துறையில் கால்பதித்தவர். கணக்கியல், நிர்வாக முகாமைத்துவத் துறைகளில் உயர்கல்வி பெற்றவர். 25 வருடங்களாகத் தொடர்ந்து வவுனியூர் இரா உதயணன் என்ற பெயரில் எழுதிவரும் இவரது கதைகள் பல இலங்கையிலும் புலம்பெயர் நாடுகளிலும் வெளிவந்துள்ளன. பிரித்தானியாவின் ஸ்கொட்லண்ட் பின்னணியில் இந்நாவல் காதல் கதையாக ஆரதி, பிரசன்னா, பைரவி, அகல்யா ஆகிய பிரதான பாத்திரங்களினூடாக நகர்த்தப்படுகின்றது. பட்டப்படிப்பு, வெளிநாடு என்று பல்வேறு சூழல்களிலும் சிரமப்படும் ஒரு சிலரின் மனோநிலையை இந்நாவல் எடுத்துச்சொல்ல முனைகின்றது.

5724

ஞானக் கவிஞன். சொக்கன் (இயற்பெயர்: க.சொக்கலிங்கம்). யாழ்ப்பாணம் ஆசீர் வெளியீடு, 32 கண்டி வீதி, 1வது பதிப்பு, ஜனவரி 1966. (யாழ்ப்பாணம்: ஆசீர்வாதம் அச்சகம், 32 கண்டி வீதி). 102 பக்கம், விலை: ரூபா 2.00.

கவிச்சக்கரவர்த்தி கம்பனின் வாழ்வைக் கற்பனைசெய்து எழுதிய நாவல். இது 1963இல் தினகரனில் கம்பன் என்ற தலைப்பில் வெளிவந்தது. அவனுடைய பிரச்சினைக்குரிய கவிதை ஒன்று எவ்வாறு பிறந்தது என்பதை விளக்கும் வகையில் "கவிதை பிறந்த கதை" என்ற கவிதை நாடகமும் இணைந்துள்ளது. (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5725

நாகம்மாள்: நாவல். ஆர்.ஷண்முகசுந்தரம். கொழும்பு 12: லங்கா புத்தகசாலை, G.L.,1-2, டயஸ் பிளேஸ், குணசிங்கபுர, 1வது பதிப்பு, அண்டு விபரம் தரப்படவில்லை. (அச்சக விபரம் தரப்படவில்லை). (4), 84 பக்கம், விலை: ரூபா 75.00, அளவு: 20.5x14 சமீ.

தமிழகத்தின் பிரபல எழுத்தாளர் அமரர் ஆர்.ஷண்முகசுந்தரம் எழுதிய இந்நாவல், தமிழகத்தின் கோவை மாவட்டத்தின் சிவியார் பாளையம் கிராமத்தின் விவசாயக் குடும்பம் ஒன்றில் நிகழ்ந்த பிரச்சினைகளை மையமாக வைத்து 1942இல் படைக்கப்பட்டது. கொங்கு நாட்டின் பசுமையை நுகரும்வகையில் படைக்கப்பட்ட இந்நாவலில் விவசாயக் குடும்பங்களின் நாளாந்த வாழ்க்கை முறை, பழக்க வழக்கங்கள், நம்பிக்கைகள், உரையாடல்கள் என்பன பதிவுக்குள்ளாகின்றன. நாவலில் பயன்படுத்தப்பட்ட பிரதேசச் சொற்களுக்கான விளக்கக் குறிப்புப் பட்டியல் ஒன்றும் இலங்கை வாசகர்களுக்காகத் தரப்பட்டுள்ளது. 1995ம் ஆண்டு முதல் இலங்கையில் நடைமுறைப்படுத்தப்படும் கல்விப் பொதுத் தராதர உயர்தர வகுப்புப் புதிய பாடநெறியில் சேர்த்துக்கொள்ளப்பட்டது. புதிய பாடத்திட்டத்திற்கமைய தமிழ் 1 பாடத்திற்கான பாடநூல்களில் ஒன்றாக இலங்கை கல்வி அமைச்சினால் தேர்ந்தெடுக்கப்பட்ட இந்நூல் வர்த்தக நோக்கில் ஸ்ரீலங்கா புத்தகசாலையினால் அச்சிட்டு விற்பனை செய்யப்பட்டுள்ளது. போதிய நூலியல் தரவுகள் நூலிலிருந்து பெற முடியவில்லை.

5726

நியாயப்படுத்தப்பட்ட கொலைகள். செ.யோகநாதன். சென்னை 600108: ஆதி பதிப்பகம், 27, சிங்கர்ஸ் தெரு, பிராட்வே, 1வது பதிப்பு, டிசம்பர் 1997. (சென்னை 600005: Sri Yeses Print House) (6), 161 பக்கம், விலை: இந்திய ரூபா 30., அளவு: 18x12 சமீ.

பத்தாண்டுக் காலத்திற்கு முந்தைய (1984இன்) ஈழத்தமிழர் வாழ்வினைத் தொட்டுக்காட்டுகின்ற இந்த நாவல் தமிழகத்தில் வைத்து எழுதப்பட்டு தினமணிக்கதிரில் தொடராக வெளியிடப்பட்டது. ஒடுக்கப்பட்ட ஒரு சிறுபான்மை இனம் படும் அல்லல்களையும் அகதிகளையும் உண்மைப்பட கிராமம் ஒன்றினது வாழ்வினூடாகச் சொல்லப்படுகின்றது. உண்மை நிகழ்ச்சிகளின் பதிவுகள் இவை. பேரினவாதமும் அரச பயங்கரவாதமும் மானிடத்தின் பசுமையான முகத்தை கோர நகம் கொண்டு கீறிக் கிழித்ததொரு வரலாறு இங்கு பதிவாகின்றது.

5727

நெஞ்சில் நிறைந்தவள். சீ.சிவஞானசுந்தரம். சுன்னாகம்: ஆசிரியர், ஸ்ரீகாந்த கமலபவனம், ஏழாலை மேற்கு, 1வது பதிப்பு, ஜுலை 1966.(யாழ்ப்பாணம்: ஆனந்தா அச்சகம்). 82 பக்கம், விலை: ரூபா 1.25.

அண்ணன்-அண்ணியாராலும் உறவினராலும் பல்வேறு சோதனைகளை எதிர்கொள்ளும் பார்த்திபன் இறுதியில் தன் காதலி சுந்தரியை மணந்து கொள்ளுவதாக அமையும் சமூகக் கதையமைப்பினைக் கொண்ட நாவல். (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5728

பனை நாடு அல்லது பிளந்த உலகம். அ.மரியதாசன். கொழும்பு: அ.மரியதாசன், 120, ஹல்ஸ்ட்ரொப் வீதி, 1வது பதிப்பு, ஒக்டோபர் 1953. (கொழும்பு: வீரகேசரி அச்சியந்திரசாலை).
52 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை.

1952ம் ஆண்டின் முன்னரைப் பகுதிகளில் தினகரன் ஞாயிறு இதழ்களில் தொடராக வெளிவந்த நாவல் இது. (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5729

மக்கள்... மக்களால்... மக்களுக்காக.... வி.ஜீவகுமாரன். சென்னை 600024: மித்ர வெளியீடு, 32/9, ஆற்காடு சாலை, கோடம்பாக்கம், 1வது பதிப்பு, மார்ச் 2009. (சென்னை 600024: மித்ர வெளியீடு, 32/9, ஆற்காடு சாலை, கோடம்பாக்கம்).
352 பக்கம், விலை: இந்திய ரூபா 190., அளவு: 18x12 சமீ., ISBN: 978-81-89748-73-9.

ஈழத்தில் தமிழினத்தை அடிமைகளாக்க நடைபெறும் வலோற்காரம் எவ்வாறு தமிழ் மக்களுடைய வாழ்க்கைப் போக்குகளைப் பாதிக்கின்றது என்பதை நேர்மையாகவும் நேர்த்தியாகவும் இந்நாவலில் சித்திரித்துள்ளார். அத்துடன் அந்த அரசியலின் நீட்சியாகப் புலம்பெயர்ந்த நாடுகளில் உருவாகிக்கொண்டிருக்கும் அவலச் சூழலையும் ஜீவகுமாரன் தமது நாவலுக்கான பேசுபொருளாக்கியுள்ளார். சகோதரச்சண்டை புலம்பெயர்ந்த நாடுகளுக்குக் கடத்தப்பட்டுள்ளது என்பது போன்ற ஒரு கோலம் காட்டினாலும் இறுதியில், அனைத்துக் குளறுபடிகளையும் உற்பவித்து, பிரசவித்து, ஆட்சிக்குக் கொண்டுவந்துள்ளதில் கண்ணுக்குச் சடுதியாகப் புலனாகாத ஓர் அமைப்புக்குப் பங்குண்டு என்பது சுட்டிக்காட்டப்படுகின்றது. ஆழமாகச் சமுத்திரத்திலே அமிழ்ந்துள்ள பனிக்கட்டிப்பாறையின் சிறிய முகடு மேலே தெரிவதுபோல அந்த அமைப்பினைச் சார்ந்தவர்களை ஜீவகுமாரன் அடையாளம் காட்டியுள்ளார். சரியான வழிகாட்டலின் பின்னாலோ அன்றில் பிழையான வழிகாட்டலின் பின்னாலோ வீட்டைவிட்டு வெளியேறி வீதிக்கு வந்து தமது வாழ்வை நாட்டுக்காக அர்ப்பணித்த அனைவருக்கும் இந்நாவல் சமர்ப்பணமாக்கப்பட்டுள்ளது.

5730

மஞ்சு நீ மழைமுகில் அல்ல (பாகம் 2). திமிலைத்துமிலன் (இயற்பெயர்: சின்னையா கிருஷ்ணபிள்ளை). மட்டக்களப்பு: கவிமணி வெளியீட்டுக் குழு, முத்தமிழ் மன்றம், ஆசிரியர் கலாசாலை, 1வது பதிப்பு, நவம்பர் 1991. (மட்டக்களப்பு: புனித செபஸ்தியார் அச்சகம், 65 லேடி மனிங் டிரைவ்).
(4), 96 பக்கம், விலை: ரூபா 25., அளவு: 18x12 சமீ.

1988இல் ஆசிரியரால் எழுதப்பட்ட நாவலின் (நூல்தேட்டம் பதிவிலக்கம் 704) இரண்டாவது பாகம். ஏறாவூரில் 1933ஆம் ஆண்டு செப்டெம்பர் 25ஆம் திகதி பிறந்த கிருஷ்ணபிள்ளை (திமிலைத்துமிலன்) மட்டக்களப்பு மெதடிஸ்ட் மத்திய கல்லூரியின் பழைய மாணவராவார். தொழில்சார் கல்வியினை மட்டக்களப்பு ஆசிரியர் கலாசாலையில் மேற்கொண்ட இவர், பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கலைமாணிப் பட்டப்படிப்பினை மேற்கொண்டு பின்னர் கொழும்பு பல்கலைக்கழகத்தில் கல்வித்துறை டிப்ளோமா பட்டம் பெற்றவர். கவிதைக்கான சாகித்திய மண்டலப்பரிசு பெற்றவரான திமிலைத்துமிலன், மகாகவி, நீலவாணன், முருகையன் போன்ற கவிஞர்கள் வரிசையில் வைத்து எண்ணக்கூடியவராக விளங்குகின்றார்.

5731

மாது என்னை மன்னித்துவிடு. ந.பாலேஸ்வரி. திருக்கோணமலை: ஸ்ரீ பத்திரகாளி அம்மன் தேவஸ்தான இலக்கிய வெளியீடு, 1வது பதிப்பு, ஜனவரி 1993. (மட்டக்களப்பு: புனிதவளனார் கத்தோலிக்க அச்சகம்).
(8), 214 பக்கம், விலை: ரூபா 50., அளவு: 18x12.5 சமீ.

திருக்கோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த திருமதி பாலேஸ்வரி நல்லரெட்ணசிங்கன் பெண்மையின் தனித்துவத்தைப் பிரதிபலிக்கும் ஆக்கங்களை எழுதிவரும் ஈழத்துப் பெண் நாவலாசிரியைகளுள்

முதன்மையானவராகக் கருதப்படுபவர். அதிக நாவல்களை எழுதிய ஈழத்துப் பெண் எழுத்தாளரான ந.பாலேஸ்வரியின் மற்றுமொரு நாவல் இது. இலங்கையில், மித்திரனில் 1972இல் தொடராக வெளிவந்திருந்தது. இவரின் எழுத்துத்துறை சேவையைக் கருத்திற்கொண்டு 1992ம் ஆண்டில் இந்து சமய கலாச்சார அமைச்சினால் '**தமிழ் மணி**' என்னும் பட்டமும், 1996ம் ஆண்டில் மட்டக்களப்பு ஆசிரியர் கலாசாலை முத்தமிழ் மன்றத்தினால் '**சிறுகதை சிற்பி**' என்ற பட்டமும் அளித்து கௌரவிக்கப்பட்டவர். 17.10.1999இல் வடக்கு கிழக்கு மாகாணக் கல்வி, பண்பாட்டு அலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சு இவரின் சேவையை மெச்சி 1999ம் ஆண்டிற்கான வடக்கு கிழக்கு **ஆளுனர் விருதினை** வழங்கியது. இலங்கையின் கலைத்துறைக்கு ஆற்றிய மேலான சேவையினைப் பாராட்டி, கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் வழங்கப்படுகின்ற உயரிய அரச விருதான கலாபூஷண விருது 26.12.2002 வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

5732

மைதிலி. ரஜனி. (இயற்பெயர்: K.V.S.வாஸ்). கொழும்பு: வீரகேசரி வெளியீடு தபால் பெட்டி எண் 160, 1வது பதிப்பு, மே 1972. (கொழும்பு 14: Express Newspapers Ceylon Ltd., 185, Grandpass Road).
(4), 285 பக்கம், விலை: ரூபா 2.90, அளவு: 18x12.5 சமீ.

மித்திரன் தினசரியில் தொடராக வெளிவந்த மர்மநாவல். வில்லியம் சிங்கோ, பொன்னுத்துரை முதலியோர் மர்மமான முறையில் கொள்ளை, கொலை முயற்சிகளில் ஈடுபடுகிறார்கள். துப்பறியும் நிபுணர் சரத்பாபு அவர்களது முயற்சிகளை முறியடிக்கிறார். சொக்கலிங்கம் பிள்ளையின் மகள் மைதிலி சரத்பாபுவைக் காதலிக்கிறாள். விஞ்ஞானக் கண்டுபிடிப்பான உருவத்தை மறைக்கும் மர்மக் கருவியொன்று கதையில் அறிமுகமாகின்றது. கணையாழி, பூஜைக்கு வந்த மலர், கதைக்கனிகள், குந்தளப் பிரேமா ஆகிய வீரகேசரி வெளியீடுகளைத் தொடர்ந்து ஐந்தாவதாக வெளிவரும் நூல். (இந்நூல் School of Oriental and African Studies (SOAS), University of London நூலகத்தில் பார்வையிடப்பட்டது. பதிவிலக்கம் 575053).

5733

யாரிந்த வேடர்? க.தா.செல்வராசகோபால். களுவாஞ்சிக்குடி: நா.சா.கதிர்காமத்தம்பி, ஜீவா பதிப்பகம், பிரதான வீதி, தோற்றாத்தீவு, 1வது பதிப்பு, மே 1965. (களுவாஞ்சிக்குடி: மனோகரா அச்சகம், பிரதான வீதி, தோற்றாத்தீவு).
xxiv, 88 பக்கம், விலை: ரூபா 2.50, அளவு: 17.5x12 சமீ.

ஈழத்து வரலாற்று அடிப்படையிலமைந்ததான வரலாற்று நாவல். குவேனி என்ற இயக்க ராணிக்கும் விஜயனுக்கும் ஏற்பட்ட உறவு வேடர்குலத்தை எவ்வாறு தோற்றுவித்ததென்பதைக் கதைவடிவில் கூறுகின்றது. 1963ம் ஆண்டு கலைஞர் ஜயசேனவினால் தயாரிக்கப்பட்டு இலங்கைக் கலைக்கழகத்தினது பரிசுபெற்ற குவைனீ என்னும் சிங்கள மேடை நாடகத்தின் சிறப்பு விபரம் 1964ம் ஆண்டு Times of Ceylon-Annual வெளியீட்டில் இடம்பெற்றிருந்தது. அந்தக் கட்டுரையின் பாதிப்பில் நூலாசிரியர் மகாவம்சத்தை ஆராய்ந்து கதைக்கருவை பெற்றதாகக் கூறுகின்றார்.

5734

யாழினி. சோ.ராமேஸ்வரன். கொழும்பு 5: சோ.ராமேஸ்வரன், E 2/4 அண்டர்சன் தொடர்மாடி, 1வது பதிப்பு, 2007. (நாவின்ன: தரஞ்ஜி பிரின்ட்ஸ், 501, ஹைலெவல் வீதி).
(4), 140 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 21.5x14 சமீ., ISBN: 978-955-99222-3-0.

இலங்கையின் இன ஐக்கியமானது இனத் தனித்துவத்தைப் பேணுதல், மனித அடிப்படை உரிமைகளை மதித்தல், ஒவ்வொரு இனமும் ஏனைய இனங்களை மதித்தல் முதலானவற்றின் மூலமே சாத்தியப்படும் என்பதே நாவலின் அடிப்படையாகின்றது. இதற்கானதொரு சிறந்த சூழ்நிலையினை, சரியான தேசபக்த அரசியல் மூலமும் கலை இலக்கியங்கள் மூலமும் ஏற்படுத்த முடியும் என்ற வகையில் கலை இலக்கியங்களைப் பயன்படுத்துகின்ற ஒரு முயற்சியாக இந்நாவல் உருவாகியுள்ளது. இந்நாவலில் இடம்பெறும் சிங்கள மொழி உரையாடல்கள் தூய தமிழிலும், தமிழ் கதாபாத்திரங்களுக்கிடையே இடம்பெறும் உரையாடல்கள் யாழ்ப்பாணப் பேச்சுவழக்குத் தமிழிலும் இடம்பெறுகின்றன.

5735

வன்னியின் செல்வி. கச்சாயில் இரத்தினம். யாழ்ப்பாணம்: ஆசீர்வாதம் அச்சகம், புத்தகசாலை, 32 கண்டி வீதி, 1வது பதிப்பு, ஆனி 1962. (யாழ்ப்பாணம்: ஆசீர்வாதம் அச்சகம்).
119 பக்கம், விலை: ரூபா 1.50, அளவு: 20.5x14 சமீ.,

இது முன்னர் விவேகியில் தொடராக வெளிவந்த நாவல். வரலாற்று நாவல் என்ற பெயரில் அமைந்த கற்பனைக்கதை. வீரம், காதல், காமம், வஞ்சம் ஆகிய பண்புகள் கொண்ட கதாமாந்தரை உலவவிட்டு இறுதியில் காதல்-வீரத்தை வெல்லவைக்கும் கதை. வன்னிப் பிராந்தியப் பகைப்புலத்தில் அமைந்தது. நூலாசிரியர் தெகியோவிற்ற, தேவாலக்கந்தையில் வாழ்ந்த காலத்தில் யாழ்ப்பாணம் சுண்டிக்குளியைச் சேர்ந்த விடிவெள்ளி க.பே.முத்தையாவின் முன்னுரையுடன் வெளிவந்தது.

5736

விஷத்தைப் பொழியும் நிலவே. வி.எஸ்.நவமணி. இரத்தினபுரி: வி.எஸ்.நவமணி, அதிபர், தேல தமிழ் மகாவித்தியாலயம், 1வது பதிப்பு, ஏப்ரல் 2006. (கொழும்பு 6: ரெக்னோ பிரின்டர்ஸ், வெள்ளவத்தை).
88 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 19.5x13 சமீ.

1983ம் ஆண்டு இனக்கலவரம் நடந்து 22 ஆண்டுகள் கழிந்த நிலையில் அந் நிகழ்வுகளுடன் தொடர்புடையதாக இந்நாவல் எழுதப்பட்டுள்ளது. மொத்தம் நான்கு நாட்களுக்குள் நடந்து முடியும் சம்பவங்களைக்கொண்டதாக வளர்க்கப்படும் இந்நாவல் மலையகப் பிரதேசத்தின் ஒரு சிறு பகுதியைக் களமாகக்கொண்டு நகர்த்தப்படுகின்றது. இடதுசாரிச் சித்தாந்தத்தில் ஈடுபாடுள்ள வீ.எஸ்.நவமணி, மலைமடல், மலையகம், நவமலையகம் போன்றவற்றின் ஆசிரியர் குழுவில் பணிபுரிந்துள்ளார். இவரது முதலாவது சிறுகதை மாணிக்கம் சஞ்சிகையில் வெளிவந்தது.

5737

வெறுக்கத் தெரிந்த மனம். அருணா செல்வம். சென்னை 600017: மணிமேகலைப் பிரசுரம், தபால் பெட்டி எண் 1447, இல.7, தணிகாசலம் சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2000. (சென்னை 94: ஸ்கிரிப்ட் ஆப்செட்).
168 பக்கம், விலை: இந்திய ரூபா 34., அளவு: 18x12 சமீ.

நம்பிக்கைக்கும் அன்புக்கும் பாத்திரமானவன், சந்தர்ப்பத்தால் துரோகம் செய்யும்போது அவனை வெறுத்துவிடும் மனது, அவன் வருந்தி, திருந்தும்போதுகூட வெறுப்பைத்தான் காட்டுமா? அவனை வெறுத்துவிட்ட மனத்தால் திரும்பவும் அவனிடம் அன்புகாட்ட முடியுமா என்ற கேள்விகளை எழுப்பி இந்நாவல் அதற்கான பதிலையும் தருகின்றது.

5738

வேதபுரியின் இரகசியம். முதற் பாகம். வேதபுரியான். கொழும்பு 11: மெக்காதர்ஸ், இல.5, கெய்சர் தெரு, 1வது பதிப்பு, மார்ச் 1959. (கொழும்பு 10: ஹோ அன் கம்பெனி அச்சகம், 123, மருதானை வீதி).
227 பக்கம், விலை: ரூபா 3.00

தெய்வத்தையும், தெய்வத்துக்கும் மனிதனுக்குமுள்ள தொடர்பையும் விளக்கமுயலும் கதை. இந்து, கிறிஸ்தவ, இஸ்லாமிய கதாபாத்திரங்கள் இடம்பெற்றுள்ளன. பல்வேறு சமய, அரசியல் தத்துவங்களும் ஆராயப்பட்டுள்ளன. 20ம் நூற்றாண்டு நடுப்பகுதியில் தமிழ்நாட்டு ஆஸ்திக-நாஸ்திகவாதங்களின் போராட்டச் சூழலின் பின்னணியில் நின்று எழுதப்பட்ட நூல். 2ம் பாகம் வெளிவந்ததாகக் குறிப்பேதும் இல்லை. (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5739

ஜனநாயகர்கள். ஜுனைதா ஷெரீப். (இயற்பெயர்: K.M.M.Sheriff). சென்னை 600026: குமரன் பதிப்பகம், 3 மெய்கை விநாயகர் தெரு, குமரன் காலனி, 7வது தெரு, வடபழநி, 1வது பதிப்பு, செப்டெம்பர் 2000. (சென்னை 600026: குமரன் பதிப்பகம், 3 மெய்கை விநாயகர் தெரு, குமரன் காலனி).
viii, 283 பக்கம், விலை: இந்திய ரூபா 85., அளவு: 21.5x14 சமீ., ISBN: 955-95096-5-9.

இந்நாவலில் சில யதார்த்தமான சமூக பொருளாதார அரசியல் நிலைமைகள் குறிப்பிட்ட வரலாற்றுக் காலப்பகுதியோடு ஒட்டி எழுதப்பட்டுள்ளன. குறிப்பிட்ட காலப்பகுதியில் இந்நாட்டு அரசியலில் பெருமளவில் ஆதிக்கம் செலுத்திய வர்க்கங்கள், அவர்களின் போலித்தனங்கள், அட்டூழியங்கள், சுயநலங்கள், மக்களின் முதுகில் ஏறி அவர்கள் நடத்திய குதிரையோட்டங்கள் ஆகியவற்றை எதிர்த்து எழும் ஒருபகுதி இளைஞர்களின் நவீன பிரதிநிதியாக வரும் கதாநாயகன்- என்று மிகுந்த யதார்த்த நிலைமைகளை

அநுபவபூர்வமாக உணர்ந்து தனது நாவலுக்குப் பயன்படுத்தியுள்ளார். நூலாசிரியர் ஜுனைதா ஷெரீப் இலங்கையில் அரசாங்க அதிகாரியாகப் பணியாற்றியவர்

894.8(6) இலக்கியக் கட்டுரைகள், திறனாய்வுகள்

5740

அண்மைக்கால ஈழத்துச் சிறுகதைத் தொகுப்புகள். கே.எஸ்.சிவகுமாரன். கொழும்பு 6: கே.எஸ்.சிவகுமாரன், 21 முருகன் பிளேஸ், 1வது பதிப்பு, ஓகஸ்ட் 1998. (கொழும்பு 12: யாசீன் பிரின்டர்ஸ், 17/1 ஹல்ஸ்டொப் வீதி).
v, 103 பக்கம், விலை: ரூபா 125., அளவு: 19.5x13.5 சமீ.

பத்தி எழுத்துக்களும் பல்திரட்டுகளும் வரிசையில் இது நான்காவது நூல். திறனாய்வுக் குறிப்புகளுடன் கூடியது. ஈழத்தில் வெளிவந்த 18 சிறுகதைத் தொகுப்புகள் பற்றிய திறனாய்வுக் கட்டுரைகளை இந்நூல் உள்ளடக்குகின்றது. பிரம்படி (க.தணிகாசலம்), நிர்வாணம் (உடுவை தில்லை நடராஜா), பெண்மை (அருண் விஜயராணி), சுமைகள் (முஸ்லிம் மாதர் ஆராய்ச்சிச் செயல் முன்னணி), வதங்காத மலரொன்று (ஹசினா வஹாப்), சுதந்திரக் காற்று (சோ. ராமேஸ்வரன்), காலச் சாளரம் (ராஜஸ்ரீகாந்தன்), திகட சக்கரம் (அ.முத்துலிங்கம்), கடலும் கரையும் (மு.பொன்னம்பலம்), அவர்களின் தேசம் (மாத்தளை சோமு), புதிய பயணம் (புலோலியூர் அ.இரத்தினவேலோன்), வாழ்வு ஒரு வலைப்பந்தாட்டம் (கோகிலா மகேந்திரன்), விபச்சாரம் செய்யாதிருப்பாயாக (யோ.பெனடிக்ட் பாலன்), காணிக்கை (யூ.எல்.ஆதம்பாவா), பாதை (நீர்வை பொன்னையன்), வாழ்தல் என்பது (திருக்கோவில் கலியுவன்), மோகவாசல் (ரஞ்சகுமார்) ஆகிய சிறுகதைத் தொகுப்புக்கள் இங்கு திறனாய்வு செய்யப்பட்டுள்ளன.

5741

அண்மைக்கால நவீன இலக்கியப் போக்குகள் (வட மாகாணம்). நந்தினி சேவியர் (தொகுப்பாசிரியர்). திருக்கோணமலை: கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சு, வடமாகாணம், 1வது பதிப்பு, 2008. (திருக்கோணமலை: ரெயின்போ மினி லாப், 113 வித்தியாலயம் வீதி).
80 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x14.5 சமீ.

2007இல் வவுனியா இலக்கிய விழா ஆய்வரங்கில் சமர்ப்பிக்கப்பட்ட அண்மைக்கால நவீன இலக்கியப் போக்குகள் என்னும் தலைப்பிலான கட்டுரைகளின் தொகுப்பு. இதில் வவுனியா மாவட்டத்தின் அண்மைக்கால நவீன இலக்கியப் போக்கு பற்றிய முருகேசு கௌரிகாந்தனின் (விரிவுரையாளர், தேசிய கல்வியியற் கல்லூரி, வவுனியா) ஆய்வுக்கட்டுரையும், வன்னிப் பிராந்தியத்தின் அண்மைக்கால நவீன இலக்கியப் போக்கு பற்றிய சுப்பிரமணியம் ஜெயச்சந்திரனின் (ஆசிரியர் நிலைய முகாமையாளர், வவுனியா வடக்கு கல்வி வலயம், புளியங்குளம்) ஆய்வுக்கட்டுரையும், யாழ்ப்பாண மாவட்டத்தின் அண்மைக்கால நவீன இலக்கியப் போக்கு பற்றிய கலாநிதி செ.யோகராஜாவின் (முதுநிலை விரிவுரையாளர், கிழக்குப் பல்கலைக்கழகம், வந்தாறுமூலை, செங்கல்லடி) ஆய்வுக்கட்டுரையும், கிளிநொச்சி மாவட்டத்தின் அண்மைக்கால நவீன இலக்கியப் போக்கு பற்றிய ச.மணிசேகரனின் (ஆசிரியர், மட்டக்களப்பு மஞ்சந் தொடுவாய் பாரதி வித்தியாலயம்) ஆய்வுக்கட்டுரையும், மன்னார் மாவட்டத்தின் அண்மைக்கால நவீன இலக்கியப் போக்கு பற்றிய கலைவாதி கலீலின் (முன்னைநாள் உப பீடாதிபதி, தர்காநகர் தேசிய கல்வியியற் கல்லூரி) ஆய்வுக்கட்டுரையும் இடம்பெற்றுள்ளன.

5742

இலக்கிய அமுதம். மட்டுவில் நா.நல்லதம்பி. சாவகச்சேரி: நா.நல்லதம்பி, இளைப்பாறிய தலைமை ஆசிரியர், மட்டுவில் வடக்கு, 1வது பதிப்பு, ஐப்பசி 2001. (சுன்னாகம்: திருமகள் அழுத்தகம்).
xvi, 95 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18.5x13 சமீ.

தமிழ் இலக்கியக் கட்டுரைகள் 14 நூலில் இடம்பெற்றுள்ளன. மகாபாரதம், கம்பராமாயணம், திருக்குறள், நாலடியார், ஆகிய நூல்களை அடிப்படையாகக்கொண்டு தமிழ் இலக்கியங்கள் பலவற்றின் சுவையினையும் கலந்து அமுதமாகத் தருகின்றார் நூலாசிரியர். பழந்தமிழ் இலக்கியத்தில் காணப்படுகின்ற பண்புசார் கருத்துக்களை அழகு தமிழில் வழங்கியுள்ளார்.

5743

இலக்கியத் திறனாய்வுக் கோட்பாடுகள். சபா.ஜெயராசா. கொழும்பு 11: சேமமடு பொத்தகசாலை, U.G.50, Peoples Park, 1வது பதிப்பு, ஆடி 2008. (கொழும்பு 11: சேமமடு பதிப்பகம்).

124 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 22x15சமீ., ISBN: 978-955-1857-16-5.

இலக்கியத் திறனாய்வின் பன்முகப் பரிமாணங்களைக் கண்டறியும் ஆய்வாக இந்நூல் அமைகின்றது. திறனாய்வுக் கலையின் வளர்ச்சி, மார்க்சியத் திறனாய்வு, இருப்பியத் திறனாய்வு, உளப்பகுப்புத் திறனாய்வு, தொல்வடிவத் திறனாய்வு, அமைப்பியலும் பின் அமைப்பியலும், பெண்ணியத் திறனாய்வு, பின்னவீனத்துவம், சூழலியல் திறனாய்வு, கதை உரைப்பியல், எழுநடையியல், குறியியல், பின் காலனியத் திறனாய்வு, புதிய வரலாற்றியலும் பண்பாட்டுப் பொருணமியவாதமும், தாராண்மை மானிடவாதம், பெண்பால் இணைவு மற்றும் மகிழ்விலகல் திறனாய்வு, உரையாசிரியரும் திறனாய்வும், மரபுவழி இந்தியத் திறனாய்வு, திறனாய்வும் மத்தியதர வகுப்பினரும், திறனாய்வுக் கலைச்சொற்கள் ஆகிய 20 தலைப்புகளில் இவ்வாய்வு விரிகின்றது.

5744

இலக்கியத் தென்றல். சு.வித்தியானந்தன். கொழும்பு 11: சேமமடு பொத்தகசாலை, U G 50, People's Park, 2வது பதிப்பு, சித்திரை 2008, 1வது பதிப்பு, 1953. (கொழும்பு 11: சேமமடு பதிப்பகம்).
112 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-955-1857-11-0.

கல்ஹின்ன தமிழ்மன்றத்தின் 2வது வெளியீடாகவும் மன்றத்தின் முதலாவது தமிழ் வெளியீடாகவும் 1953இல் முதலில் வெளியான இந்நூல் 55 வருடங்களுக்குப் பின்னர் மீள்பிரசுரம் பெறுகின்றது. தமிழ் இலக்கிய வரலாற்றின் சில பகுதிகளை இந்நூல் 6 தலைப்புகளில் விளக்குகின்றது. தமிழ் இலக்கியத்தின் பரப்பு, தொல்காப்பியம் முதல் வெளியிடப்பட்ட இலக்கண நூல்கள், ஐம்பெருங் காப்பியங்கள், முஸ்லிம்களின் தமிழ்த்தொண்டு, ஈழநாட்டுப் பெரியார்களின் தமிழ்த்தொண்டு, 20ம் நூற்றாண்டுத் தமிழ்க்கவிதை ஆகிய ஆறு தலைப்புக்களில் பல அரிய தகவல்களை இந்நூல் வழங்குகின்றது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராகப் பணியாற்றியவர் அமரர் சு.வி. அவர்கள்.

5745

இளங்கோவின் கனவு. இணுவையூர் செ.நடராசன். நாவலப்பிட்டி: நா.முத்தையா, ஆத்மஜோதி பதிப்பகம், 1வது பதிப்பு, ஐப்பசி 1961. (நாவலப்பிட்டி: ஆத்மஜோதி அச்சகம்).
154 பக்கம், விலை: ரூபா 2.25, அளவு: 18.5x12.5 சமீ.

கோலாலம்பூர், மலாயாப் பல்கலைக்கழகத்தில் பணியாற்றிவந்த அருட்திரு சேவியர் தனிநாயகம் அடிகளாரின் அருளுரையுடன் வெளிவந்துள்ள நூல்.

5746

இஸ்லாமும் தமிழும். எஸ்.பொன்னுத்துரை. சென்னை 600024: மித்ர வெளியீடு, 375/8-10, ஆற்காடு சாலை, கோடம்பாக்கம், 1வது பதிப்பு, ஒக்டோபர் 2002. (சென்னை 600024: மித்ர ஆர்ட்ஸ் அன் கிரியேஷன்ஸ், 375/8-10, ஆர்க்காடு சாலை, கோடம்பாக்கம்).
144 பக்கம், விலை: இந்திய ரூபா 45., அளவு: 17.5x12 சமீ.

"நூல் விமர்சனம்" என்ற பெயரில் 80 பக்கம் கொண்ட சிறுநூல் ஒன்று எம்.எஸ்.எம்.இக்பால், ஏ.இக்பால், எம்.எச்.எம்.ஷம்ஸ், ஆகிய மூவராலும் எழுதித் தொகுத்து அந்நாளில் வெளியிடப்பட்டிருந்தது. அந்த நூலில் காணப்பட்ட பல்வேறு குற்றச்சாட்டுகளுக்குப் பதிலளிக்கும் வகையிலேயே இந்நூல் எஸ்.பொவினால் எழுதப்பட்டுள்ளது. இஸ்லாமிய வாலிபர் இயக்கத்தினால் 26.7.1975 இல் கொழும்பு ஸாஹிறாக் கல்லூரியில் நடைபெற்ற இஸ்லாமியர் எழுச்சி மாநாட்டில் அன்றைய இலங்கையின் கல்வி அமைச்சர் அல்ஹாஜ் பதியுத்தீன் மஹ்மூத் தலைமையில் முதற்பதிப்பாக இந்நூல் ஏற்கெனவே வெளியிடப்பட்டது.

5747

ஈழத்தில் தமிழ் நாவல் வளர்ச்சி. சில்லையூர் செல்வராசன். சென்னை 17: அருள் நிலையம், 12 உஸ்மான் ரோடு, 1வது பதிப்பு, 1967. (சென்னை 17: சௌந்தரா பிரிண்டர்ஸ்).
(16), 5-74 பக்கம், விலை: ரூபா 2.00, அளவு: 18.5x13 சமீ.

இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் 1962இல் நடத்திய முதலாவது அகில இலங்கைத் தமிழ் எழுத்தாளர் மாநாட்டையொட்டி வெளியிடப்பட்ட மலரில் இடம்பெற்றுள்ள நெடுங்கட்டுரை நூல்வடிவம் பெற்றுள்ளது. அதனால் 1967இல் வெளிவந்த போதிலும் இந்நூலில் 1962வரையிலுமான வரலாற்றுப்பதிவே

காணப்படுகின்றன. இலங்கையில் வெளிவந்த முதலாவது நாவலாக 1890இல் எஸ்.இன்னாசித்தம்பி எழுதிய ***ஊசோன் பாலந்தை கதை*** என்ற நாவல் என்று குறிப்பிடுகின்றார். இந்நூலுக்கு தான் எழுதியுள்ள முன்னுரையில் மு.கணபதிப்பிள்ளை அவர்கள் 1856இல் யாழ்ப்பாணத்திலிருந்து மூர் என்பார் எழுதிய ***காவலப்பன் கதையே*** முதலாவது நாவல் என்று மறுதலித்துக் குறிப்பிடுகின்றார். Parley the Porter என்ற ஆங்கில நூலின் தழுவல் என்றும் அவர் இதனை ஆதாரங்களுடன் குறிப்பிடுகின்றார். ஈழத்தின் தமிழ் நாவல் வளர்ச்சி பற்றிய பல்வேறு அரிய தகவல்களை இந்நூல் வழங்குகின்றது. அநுபந்தங்களாக, ஈழத்துத் தமிழ் நாவல்களின் உரைநடைப் போக்கினை விளக்கும் வகையில் மாதிரிப் பந்திகளையும், 1962 வரையான ஈழத்துத் தமிழ் நாவல்களின் பட்டியலையும் தொகுத்து வழங்கியிருக்கின்றார். (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5748

ஈழத்து அரசியல் நாவல்: விவாதத்திற்கான சில அடிப்படைகள். மு.புஷ்பராஜன், யமுனா ராஜேந்திரன். சென்னை 600116: அம்ருதா பதிப்பகம், 5, 5ஆவது தெரு, எஸ்.எஸ்.அவென்யு, சக்தி நகர், போரூர், 1வது பதிப்பு, 2006. (சென்னை 600042: சங்கர் பிரின்டர்ஸ்).
128 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x13.5 சமீ.

இந்நூலில் அ.சிவானந்தனின் when memory dies, ஷியாம் செல்லத்துரையின் Funny Boy, மைக்கல் ஒந்தாஜியின் Anil's Ghost ஆகிய மூன்று ஆங்கில நாவல்களையும் பற்றிய தமது விமர்சனங்களை முன்வைத்திருக்கின்றார் யமுனா ராஜேந்திரன். அந்நாவல்களை மேலும் ஒரு பரிமாணத்தில் விளங்கிக்கொள்ளத் துணையாக அவர்களுடனான பேட்டிகளையும் அபிப்பிராயங்களையும் இந்நூலில் மேலதிகமாக இணைத்திருப்பதன்மூலம் வாசிப்பிற்கான பரிமாணத்தை விரிவுபடுத்தியிருக்கின்றார். ஈழத்துப் படைப்பாளியான மு.புஷ்பராஜனுடனான உரையாடல்களும் இந்நூலுக்கு மேலும் வலுச்சேர்க்கின்றது.

5749

ஈழத்து நவீன கவிதை: புதிய உள்ளடக்கங்கள், புதிய தரவுகள், புதிய போக்குகள். செல்லையா யோகராசா. கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், 361, 1/2, டாம் வீதி, 1வது பதிப்பு, 2007. (கொழும்பு 12: குமரன் பிரின்டர்ஸ், 361, 1/2, டாம் வீதி).
(x), 220 பக்கம், விலை: ரூபா 500., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-955-659-101-x.

இந்நூல் ஈழத்து நவீன கவிதையின் வளர்ச்சி பற்றி முழுமையாக விபரிக்கின்றது. இந்நூலிலுள்ள 24 கட்டுரைகளும் ஈழத்து நவீன கவிதையின் தோற்றம் குறித்தும், முக்கியமான முன்னோடிகள், ஆளுமைகள் சில குறித்தும், பிரதேச அடிப்படையிலும் கோட்பாட்டு நிலையிலும் பொதுப்பார்வையிலும் ஈழத்து நவீன கவிதை பற்றிப் பேசுகின்றன. இந்நூல் ஈழத்து நவீன கவிதையின் புதிய உள்ளடக்கங்களையும் புதிய போக்குகளையும் விபரிப்பதுடன் புதிய தரவுகளையும் தருகின்றன. நூலாசிரியர் செல்லையா யோகராசா 1949இல் யாழ்ப்பாணம் கரணவாய் கிராமத்தில் பிறந்தவர். இளங்கலைமாணிக் கற்கையை கொழும்புப் பல்கலைக்கழகத்திலும் (1968-1972), முதுகலைமாணிக் கற்கையை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும் பெற்ற இவர் 1999இல் கலாநிதிப் பட்டத்தைப் பெற்றார். கிழக்குப் பல்கலைக்கழக மொழியியல்துறை முதுநிலை விரிவுரையாளராகப் பணியாற்றுகின்றார்.

5750

ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாறு: சங்க காலம் முதல் 19ஆம் நூற்றாண்டு வரை: பாகம் 1. த.துரைசிங்கம். கொழும்பு 6: உமா பதிப்பகம், 521/1B, காலி வீதி, 1வது பதிப்பு, ஏப்ரல் 2004. (கொழும்பு 12: Perfect Printers, 130 Dias Place).
(8), 100 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 22x15 சமீ., ISBN: 955-98551-4-X.

சங்க காலம் முதல் இன்றைய புத்தெழுச்சிக் காலம் வரை ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாற்றினை இரு பாகங்களாக நூலுருவில் தந்துள்ளார். வடக்கு கிழக்கு மாகாண கல்வி, பண்பாட்டு, விளையாட்டுத்துறை அமைச்சின் சிறுவர் இலக்கியத்துறைக்கான விருதினைப் பெற்ற கவிஞர் த.துரைசிங்கம், யாழ் இலக்கிய வட்டம் நடத்திய மதுரகவி இ.நாகராசன் நினைவுக் கவிதைப் போட்டியில் பரிசும் பெற்றவர்.

5751

ஈழத்துத் தமிழ் நாவல்: வளமும் வளர்ச்சியும். செ.யோகராசா. கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், 361, 1/2, டாம் வீதி, 1வது பதிப்பு, 2008. (கொழும்பு 12: குமரன் பிரின்டர்ஸ், 361, 1/2, டாம் வீதி).

x, 92 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 21.5x15 சமீ., ISBN: 978-955-659-116-8.

ஈழத்து நாவல் இலக்கிய வளர்ச்சி தொடர்பாக வெளிவந்த நூல்கள் எழுபதுகள் வரையான நாவல் வளர்ச்சி பற்றிக் கூறுவதுடன் நின்றுவிட, பிற்பட்ட கால நாவல் வளர்ச்சி பற்றி நூலுருவில் எவையும் வெளிவராத ஆரோக்கியமற்ற சூழலில் அத்தகைய குறைபாட்டினைப் பூர்த்திசெய்யும் வகையில் இந்நூல் வெளிவருகின்றது. ஈழத்துத் தமிழ் நாவல் வளர்ச்சியினை முழுமையாக விபரிக்கும் இந்நூல் 70களுக்குப் பின்னர் ஏற்பட்ட வளர்ச்சியினை மேலும் நுண்மையாக ஆராய்கின்றது. வளர்ச்சிப் போக்கு என்ற முதற் பிரிவில், ஈழத்துத் தமிழ் நாவலின் தோற்றமும் 70கள் வரையிலான வளர்ச்சியும் பற்றிய மறுமதிப்பீடு, 70களில் ஈழத்துத் தமிழ் நாவல்கள், 80 களில் ஈழத்துத் தமிழ் நாவல்கள், 80 களில் ஈழத்துத் தமிழ் நாவல்கள்: ஒரு புதிய அலை, 90களில் ஈழத்துத் தமிழ் நாவல்கள்: புதிய போக்குகள் ஆகிய ஐந்து தலைப்புகளில் அமைந்த கட்டுரைகளும், சிறப்பு நோக்கு என்ற இரண்டாவது பிரிவில், மட்டக்களப்பின் முதல் நாவல் அரங்கநாயகி, நாற்பதுகளில் எழுதப்பட்ட ஈழத்து நாவல் அனிச்சமலரின் காதல், மாரக்சிய நோக்கில் ஈழத்துத் தமிழ் நாவல்கள்: செ.கணேசலிங்கனின் நாவல்கள் பற்றிய அவதானிப்பு, ஈழத்துச் சாதிய நாவல்களின் பின்புலத்தில் டானியலின் நாவல்கள்: கானல், அடிமைகள் பற்றிய சில குறிப்புகள், எண்பதுகளில் வெளிவந்த ஒரு நாவல் மரக்கொக்கு ஆகிய ஐந்து கட்டுரைகளுமாக மொத்தம் 10 கட்டுரைகள் இடம்பெறுகின்றன. நூலாசிரியர் செல்லையா யோகராசா 1949இல் யாழ்ப்பாணம் கரணவாய் கிராமத்தில் பிறந்தவர். இளங்கலைமாணிக் கற்கையை கொழும்புப் பல்கலைக்கழகத்திலும் (1968-1972), முதுகலைமாணிக் கற்கையை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும் பெற்ற இவர் 1999இல் கலாநிதிப் பட்டத்தைப் பெற்றார். கிழக்குப் பல்கலைக்கழக மொழியியல்துறை முதுநிலை விரிவுரையாளராகப் பணியாற்றுகின்றார்.

5752

ஈழநாட்டுச் செஞ்சொற் கவி இன்பம். நவாலியூர் வே.க.ப.நாதன். யாழ்ப்பாணம்: நவீன வெளியீட்டாளர், 102, பெரிய தெரு, 1வது பதிப்பு, ஓகஸ்ட் 1960. (யாழ்ப்பாணம்: அர்ச். பிலோமினா அச்சகம், 102, பெரிய தெரு).
108 பக்கம், விலை: ரூபா 2.50

ஈழத்துக் கவிஞர்களும் புலவர்களும் எழுதிய பண்டைய இலக்கியங்களின் தேர்ந்த தொகுப்பாக இந்நூல் வெளிவந்துள்ளது. நவாலியூர் சோமசுந்தரப் புலவரின் நாமகள் புகழ்மாலை, பண்டிதராசரின் தக்ஷிணகைலாச புராணம், சுன்னாகம் முருகேச பண்டிதரின் நீதி நூறு, அரசகேசரியின் இரகு வம்மிசம், அளவெட்டி கனகசபைப் புலவரின் திருவாக்குப் புராணம், தெல்லிப்பளை பூலோகசிங்க அருளப்ப நாவலரின் திருச்செல்வர் காவியம், சுன்னாகம் அ.குமாரசுவாமிப் புலவரின் இராமோதந்தம், மேகதூதக் காரிகை, பிரான்சிஸ்குப் பிள்ளையின் பாலன் பிள்ளைத்தமிழ், சுன்னாகம் வரத பண்டிதரின் கிள்ளைவிடு தூது, திருக்கோணமலை த.சரவணமுத்துப்பிள்ளையின் தத்தை விடு தூது, நல்லூர் சின்னத்தம்பிப் புலவரின் கரவைவேலன் கோவை, கல்வளைய மகவந்தாதி, இருபாலைச் சேனாதிராய முதலியாரின் நல்லை வெண்பா, வல்லிபட்டிக் குமாரசுவாமி முதலியாரின் நல்லைக் கலித்துறை, பேரம்பலப்புலவர் குமாரசாமிப் புலவர் போன்றோரின் சீட்டுக் கவி, மட்டுநகர் ச.பூபாலபிள்ளையின் குவனி மாலை, சுவாமி விபுலானந்தரின் நீரர மகளிர், கிங்ஸ்பரி தேசிகரின் சுத்தவந்தி, மற்றும் அந்தகக் கவி வீரராகவன், புகழேந்திப் புலவர், முத்துக்குமார கவிராயர் போன்ற பலரின் தனிப்பாடல்கள், ஈழமண்டல சதகம் என்று பழம்பெரும் தமிழ் இலக்கியங்களை மீட்டுச் சுவை குன்றாது இந்நூலில் வழங்கியிருக்கின்றார் நூலாசிரியர். (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5753

ஈழநாட்டுத் தமிழ் விருந்து. மருணீக்கியார். யாழ்ப்பாணம்: ஸ்ரீ சண்முகநாத அச்சகம், வண்ணார்பண்ணை, 1வது பதிப்பு,1960. (யாழ்ப்பாணம்: ஸ்ரீ சண்முகநாத அச்சகம்).
160 பக்கம், விலை: ரூபா 2.50.

ஆசிரியரின் பதினான்கு இலக்கியக் கட்டுரைகளைக் கொண்ட தொகுப்பு. இந்நூலுக்கான அணிந்துரையை திருநெல்வேலி, பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை வழங்கியுள்ளார். (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5754

உரையாடல்: கவிதை அனுபவம். இந்திரன், வ.ஐ.ச.ஜெயபாலன். சென்னை 600 083: சந்தியா பதிப்பகம், 57 A, 53ஆவது தெரு, அசோக் நகர், 1வது பதிப்பு, ஜுன் 2004. (சென்னை 600033: ஸ்ரீ விக்னேஷ் பிரிண்டர்ஸ்).
144 பக்கம், சித்திரங்கள், விலை: இந்திய ரூபா 60., அளவு: 21.5X14 சமீ.

அறைக்குள் வந்த ஆபிரிக்க வானம் (1983) என்ற நூலின் மூலமாக கருப்பு இலக்கியத்தைத் தமிழுக்குக் கொண்டு வந்த இந்திரன், தமிழகத்தின் மிகமுக்கியமான கலை விமர்சகர். தமிழ்நாடு லலிதகலா அக்காடமியின் நுண்கலை இதழின் ஆசிரியர். வ.ஐ.ச.ஜெயபாலன், ஈழத்துக் கவிஞர்களில் முக்கியமானவர். யாழ்ப்பாணம் உடுவில் கிராமத்தில் பிறந்த இவர் கவிஞரும் புனைகதையாளருமாவார். நோர்வே நாட்டில் புலம்பெயர்ந்து வாழ்பவர். இவ்விரு படைப்பாளிகளும் தங்களைச் சுற்றி இயங்கும் கவிதை உலகையும், தங்களையும் புதிய கண்களோடு கொஞ்சம் தள்ளி நின்று மறுபரிசீலனை செய்யும் வித்தியாசமான முயற்சியாக இந்நூல் அமைகின்றது. தற்காலக் கவிதையுடன் வரலாற்று, சமூக, உளவியல் உள்கட்டுமானங்களைப் பற்றிய அக்கறையுடன் கூடிய ஒரு உரையபாடல் இந்நூலில் பதிவாகியுள்ளது.

5755

எனது பயணங்களில். ஜெயந்தன். (இயற்பெயர்: செபஸ்தியாம்பிள்ளை போல் ஜெயந்தன் பச்சேக்). வவுனியா: அமலமரித் தியாகிகள் வெளியீடு, அமைதியகம், 1வது பதிப்பு, சித்திரை 2008. (வவுனியா: அமைதி அச்சகம், இல.26, Goods Shed Road).
xii, 100 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 21x14.5 சமீ., ISBN: 978-955-50884-0-4.

அருட்பணியாளர் செ.ஜெயந்தன் பச்சேக் அமதி தனது பல்வேறு பயணங்களை ஓய்வுநேரக் கதைத் தொகுப்பாக்கியிருக்கிறார். நடையில் ஒரு பிரத்தியேக நகைச்சுவைப்பாணி இழையோட, ஒரு பயணக் கட்டுரையாக அல்லாது அவ்வப்போது இடம்பெற்ற இவரது பயணங்களின்போது ஏற்பட்ட சுவாரஸ்யமான 50 அனுபவங்களின் தொகுப்பாக இந்நூல் அமைகின்றது. இவரது சொந்த வரலாறும் இப்பயண அனுபவங்களின் ஊடாக ஆங்காங்கே இலக்கியமாகின்றது.

5756

54 பழந்தமிழ் இலக்கிய நூல்களில் உள்ள சிறப்புத் தகவல்கள். இ.சிறிஸ்கந்தராசா. கொழும்பு 6: இராமசாமி சிறீஸ்கந்தராசா, 93, பீட்டர்சன் லேன், ஈ 15, பீட்டர்சன் தொடர்மாடி, 1வது பதிப்பு, ஜனவரி 2008. (கொழும்பு 6: ரெக்னோ பிரிண்டர்ஸ்).
104 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 19.5x12.5 சமீ.

பழந்தமிழ் இலக்கியங்களில் உள்ளதும் அவை பற்றியதுமான சிறப்புத் தகவல்களை உள்ளடக்கியதாக இந்நூல் தொகுக்கப்பட்டுள்ளது. சங்க இலக்கியங்களான பத்துப்பாட்டு நூல்கள் தொடக்கம் சிறுகாப்பியங்கள் வரையிலான 54 நூல்கள் பற்றிய ஏராளமான தகவல்கள் இத்தொகுப்பில் பரவிக் கிடக்கின்றன. நூலாசிரியரின் 14ஆவது நூல் இதுவாகும். சிந்தனையைத் தூண்டும் நகைச்சுவைத் தொகுப்புக்கள் பல இவரால் முன்னதாக வெளியிடப்பட்டுள்ளன.

5757

கம்பனது கதாபாத்திரங்கள். கி.லக்ஷ்மணன். சென்னை 5: பழனியப்பா பிரதர்ஸ், 1வது பதிப்பு, ஜனவரி 1959. (சென்னை 5: ஏஷியன் பிரிண்டர்ஸ்).
66 பக்கம், விலை: ரூபா 1.00

கம்பனது கவிநயத்தைச் சுவைக்க உதவும் இந்நூலில் உள்ள 5 கட்டுரைகளிலும் கம்பன் சிருஷ்டித்த பல்வேறு கதாபாத்திரங்கள் பற்றி விரிவாகவும் சுவைததும்பவும் கூறப்பட்டுள்ளது. (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5758

சமூகவியலும் இலக்கியமும். க.கைலாசபதி, சென்னை 600026: குமரன் பப்ளிஷர்ஸ், 3(12), மெய்கை விநாயகர் தெரு, குமரன் காலனி, 7வது தெரு, வடபழநி, 3வது பதிப்பு, ஏப்ரல் 2002. 1வது பதிப்பு செப்டெம்பர் 1979, 2வது பதிப்பு, பெப்ரவரி 1988. (சென்னை 94: சிவா கிராப்பிக்ஸ்).
236 பக்கம், விலை: இந்திய ரூபா 65., அளவு: 18x12 சமீ.

இன்று மனிதப் பண்பியல் துறைகளுடன் சமூக விஞ்ஞானத் துறையாக வளர்ந்துவரும் சமூகவியலும் இலக்கிய ஆய்வுகளுக்கு உட்பட்டுவந்துள்ளது. இந்நூலில் சமூகவியலும் இலக்கியமும் தனிக்கட்டுரையாக விளக்கப்படுகின்றன. இப்புதிய நோக்கில் தன்னுணர்ச்சிப் பாடல்கள், இசைத் தமிழ், நாட்டார் பாடல்கள், இலக்கியத் திறனாய்வு நலன் ஆகிய துறைகள் தனித்தனியாக ஆராயப்பட்டுள்ளன. சமூகவியலும் இலக்கியமும், தன்னுணர்ச்சிப்பாடல்களும் தனிமனித வாதமும், தமிழிலக்கிய மரபில் வளர்ந்த பொதுமைச் சிந்தனைகள், இசைத்தமிழ் வளர்ச்சியில் நாட்டார் பாடல்களின் பங்கு, இலக்கியத் திறனாய்வும் உணர்வும் நலனும் ஆகிய 5 கட்டுரைகள் இந்நூலில் இடம்பெறுகின்றன. அமரர் கைலாசபதியின் இந்நூலின் மூன்றாவது பதிப்பு, குமரன் புத்தக இல்லத்தின் 1வது பதிப்பாக நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

5759

செ.கணேசலிங்கன் நாவல்கள்: ஓர் ஆய்வு. அமிர்தலிங்கம் பௌநந்தி. கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், 361, 1/2, டாம் வீதி, 1வது பதிப்பு, 2009. (கொழும்பு 12: குமரன் பிரின்டர்ஸ், 361, 1/2, டாம் வீதி).
xvi, 255 பக்கம், விலை: ரூபா 500., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-955-659-144-6.

யாழ்ப்பாணம் கரவெட்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட அ.பௌநந்தி 1976இல் பிறந்தவர். கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி ஆசிரியராகப் பணியாற்றும் இவர் 2006இல் தன் முதுதத்துவமாணிப் பட்டத்திற்காக மேற்கொண்ட ஆய்வின் நூல் வடிவம் இதுவாகும். கணேசலிங்கனின் பல நாவல்கள் 1950களின் பின்னுள்ள யாழ்ப்பாணச் சமூகத்தின் ஒரு பக்கத்தைக் காட்டும் சமூக ஆவணங்களாகும். இவ்வாய்வின் ஆறு பிரிவுகளிலும், செ.கணேசலிங்கனின் ஆளுமைப் பின்னணி, அவரது நாவல்களின் சாதியம், அவரது நாவல்களின் பெண்ணிலைநோக்கு, அவரது நாவல்களில் அரசியல், பொருளாதாரப் பிரச்சினைகள், அவரது நாவல்களில் ஆக்கக்கூறுகள், மதிப்பீடு என்பன விரிவாக ஆராயப்பட்டுள்ளன.

5760

செ.கணேசலிங்கனின் படைப்புலகம். கா.சிவத்தம்பி, சோ.யோகராசா, லறீனா ஏ.ஹக், என்.செல்வராஜா. கொழும்பு: குமரன் புத்தக இல்லம், 361, ½ டாம் வீதி, 1வது பதிப்பு, 2008. (கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், 361, 1/2, டாம் வீதி).
(4), 76 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22.5x14.5 சமீ., ISBN: 978-955-659-114-1.

செ.கணேசலிங்களின் வாழ்க்கைப் பின்னணியும் இலக்கியப் படைப்புகளும் (லறீனா ஏ.ஹக்), நவீன இலக்கிய வளர்ச்சியில் செ.கணேசலிங்கனது தடங்கள் (கலாநிதி செ.யோகராசா), தமிழ் நாவலின் யதார்த்த மரபின் வளர்ச்சியில் செ.கணேசலிங்கன் பெறும் இடம் பற்றிய குறிப்பு (பேராசிரியர் கா.சிவத்தம்பி), செ.கணேசலிங்கன் அவர்களின் படைப்புக்கள் (என்.செல்வராஜா) ஆகிய நான்கு ஆக்கங்களின் வாயிலாக ஈழத்து எழுத்தாளரும், வெளியீட்டாளருமான செ.கணேசலிங்கன் அவர்களின் வாழ்வும் பணியும் பதிவுக்குள்ளாகியுள்ளன.

5761

தமிழ் நூற் பதிப்பு பணியில் உ.வே.சா.: பாடவிமர்சனவியல் நோக்கு. கார்த்திகேசு சிவத்தம்பி. கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், 361, 1/2, டாம் வீதி, 1வது பதிப்பு, 2007. (கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், 361, 1/2, டாம் வீதி).
x, 58 பக்கம், விலை: இந்திய ரூபா 45., அளவு: 21.5x14 சமீ., ISBN: 978-955-659-104-4.

தமிழ்நூற் பதிப்புத்துறையில் முக்கிய இடம்பெற்றவரான உ.வே.சாமிநாதையரை மையப்படுத்தி அவரது பணிகளையும், அவர் காலத்திலேயே முக்கிய இடம்பெற்றிருந்த சி.வை.தாமோதரம்பிள்ளை பற்றியும் இவர்களுக்கு முன்னோடியாக விளங்கிய ஆறுமுகநாவலரின் பதிப்புப்பணி பற்றியும் இந்நூல் எடுத்துரைக்கின்றது. தமிழ்நூற் பதிப்புப் பணியினை இவர்களோடு மாத்திரம் நிறுத்திவிடாது இவர்களுக்குப் பின் தமிழ்நூற் பதிப்புப் பணியிற் பேரிடம் பெறவேண்டிய பேராசிரியர் வையாபுரிப்பிள்ளையின் பதிப்புப் பணிகளையும் இது குறிப்பிட்டுச் செல்கின்றது. Textual Criticism என்னும் பதத்துக்கான தமிழ் மொழிபெயர்ப்பு பாடவிமர்சனவியல் என்பதே என நிறுவி, அத்துறையின் வரையறைகளுக்குள் நின்றுகொண்டு மேற்கூறிய அறிஞர்கள் பற்றிய ஓர் சிற்றாய்வினை இந்நூல் மேற்கொள்கின்றது.

5762

தமிழ் மொழியில் இலக்கியச் சிறப்பு. எஸ்.தில்லைநாதன். சென்னை 600017: மணிமேகலைப் பிரசுரம், தபால் பெட்டி எண் 1447, இல.7 (ப.எ.4), தணிகாசலம் சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2005. (சென்னை 94: ஸ்கிரிப்ட் ஆ.ப்செட்).
xviii, 150 பக்கம், விலை: இந்திய ரூபா 45., அளவு: 18x12 சமீ.

துறைநீலாவணையைப் பிறப்பிடமாகக் கொண்ட சைவப்புலவர் சா.தில்லைநாதன், தமிழ் இலக்கியத்திலும் இலக்கணத்திலும் புலமைமிக்கவர். பயிற்றப்பட்ட முதலாம்தர தமிழ் ஆசிரியரான இவர் பின்னாளில் பட்டிருப்பு கல்வி வலயத்தில் போரதீவுப்பற்றுக் கோட்டக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றியவர். மண்டூர் ஆலயத்தின் அறங்காவலர் சபை உறுப்பினருமாவார். இந்நூலில் பாட்டும் தொகையும், காவியங்களும் பிரபந்தங்களும், புராண இதிகாச இலக்கியங்கள், திருமுறை இலக்கியம், இலக்கிய வரலாற்றுச் செல்நெறி, தமிழில் நாடகமும் கூத்தும், தமிழரல்லாதோரின் தமிழ்ப்பணிகள் ஆகிய ஏழு தலைப்புகளில் தமிழ் இலக்கியத்தின் சிறப்பினை பதிவுசெய்திருக்கிறார்.

5763

தமிழ் மொழியும் இலக்கியமும்: சில சிந்தனைகள் (கட்டுரைத் தொகுதி). லறீனா ஏ.ஹக். Muruthagahamula 20526: வர்தா பதிப்பகம், 85 C Pitunugama, 1வது பதிப்பு, டிசம்பர் 2003. (அச்சக விபரம் தரப்படவில்லை).
(2), 76 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 20.5x14.5 சமீ., ISBN: 955-98241-4-7.

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறையில் விரிவுரையாளராகப் பணியாற்றும் நூலாசிரியர் எழுதிய ஏழு கட்டுரைகள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. தமிழ் இலக்கியச் செல்நெறியும் பாரதியும், இஸ்லாமியத் தமிழிலக்கியத்தில் திருக்குறள் மாண்பு, திராவிட மொழிக் குடும்பம் பற்றிய ஆய்வு முயற்சிகளும் ஆய்வாளர்களும்: சில அறிமுகக் குறிப்புகள், இஸ்லாமியத் தமிழிலக்கியத்தில் ஏகத்துவக் கொள்கை: ஒரு நோக்கு, அகநானூற்றில் கருப்பொருள், தாயுமானவர்-குணங்குடி மஸ்தான் சாஹிபு பாடல்கள்: ஓர் ஒப்பீடு, நூற்றாண்டுகள் தோறும் தமிழ் வரிவடிவம் பெற்றுவந்த மாற்றங்களும் அவற்றுக்கான காரணங்களும் ஆகிய ஏழு கட்டுரைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன.

5764

தமிழ்த் தோணி: தமிழிலக்கியம் கற்போர்க்கு ஒரு கைநூல். மனோன்மணி சண்முகதாஸ், அருணாசலம் சண்முகதாஸ். யாழ்ப்பாணம்: கோகுலம் வெளியீடு, 1வது பதிப்பு, மார்கழி 2005. (யாழ்ப்பாணம்: ஹரிகணன் பிரின்டர்ஸ், 424, காங்கேசன்துறை வீதி).
iv, 200 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x14 சமீ., ISBN: 955-99434-0-5.

அகநானூற்றுப் பாடல்களில் அகத்திணைச் செய்திகள், எத்திசைச் செலினும் அத்திசைச் சோறே, நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம், அமுதொடு கலந்த நஞ்சு, கடலாடு காதை ஒரு வாழ்வியல் திருப்புமுனை, கானல்வரி காட்டும் கலைவாழ்வு, திருக்குறள் ஒரு தமிழர் கையேடு, வள்ளுவர் காட்டும் நாட்டு வாழ்வு, பக்தியின் மொழி நாச்சியார் திருமொழி, நாச்சியார் திருமொழி காட்டும் வாழ்க்கை நெறி, கோதையின் கோலவிளக்கு, சாதலின் சிறந்தது ஒன்றுமில்லை, தொண்டர் புராணம் விரித்துரைத்த சேக்கிழார் பக்திநெறி, சேக்கிழாரின் காப்பியல் புனைவுத்திறன், பொருவில் அன்புருவம் ஆகிய 15 சுவைமிகு தமிழ் இலக்கியக் கட்டுரைகளின் தொகுப்பு இது.

5765

தமிழா தமிழைக் காத்திடு (கட்டுரைகள்). மகேசன் இராசநாதன். சென்னை 600017: மணிமேகலைப் பிரசுரம், தபால் பெட்டி எண் 1447, இல.7 (ப.எ.4), தணிகாசலம் சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2001. (சென்னை 14: BVR ஆ.ப்செட்).
x, 114 பக்கம், விலை: இந்திய ரூபா 27., அளவு: 18x12 சமீ.

நியுசிலாந்தில் 27 ஆண்டுகளாக வாழ்ந்துவரும் நூலாசிரியர் இலங்கையில் கொழும்புக்கு அருகேயுள்ள கந்தானை என்னும் கிராமத்தில் பிறந்தவர். கொழும்பு மருத்துவக் கல்லூரியில் பயின்று 1967முதல் வைத்தியராகப் பணியாற்றியவர். 1974இல் நியுசிலாந்தக்குப் புலம்பெயர்ந்து சென்று அங்கேயே வாழ்ந்துவருகின்றார். இவரது கட்டுரைகளில் தமிழ், தமிழர், தமிழிசை, புலவர்கள், கவிதைகள், வரலாற்று முக்கியத்துவமான வாழிடங்கள், எனப் பல செய்திகள் காணக் கிடைக்கின்றன. தமிழ்மண்ணிலிருந்து வெகுதூரத்தில் வாழும் ஒரு தமிழனின் மன ஓலங்கள் ஆக்கங்களின் ஊடுபரவிநிற்கின்றன.

5766

தமிழியல்சார் சிந்தனைத் துளிகள்: தொகுதி 1. சு.சுசீந்திரராஜா. கொழும்பு 11: சேமமடு பொத்தகசாலை, U.G.50, Peoples Park, 1வது பதிப்பு, 2009. (கொழும்பு 11: சேமமடு பதிப்பகம்).
224 பக்கம், விலை: ரூபா 560., அளவு: 21 x15 சமீ., ISBN: 978-955-1857-39-4.

தமிழியல் கட்டுரைகள் 50 இன் தொகுப்பே இந்நூல். அவ்வப்போது பேராசிரியரின் உள்ளத்தில் வெவ்வேறு பொருள் குறித்து தோன்றி நிலைத்த சிந்தனைத் துளிகளை சிறு கட்டுரைகளாக இந்நூலில் வழங்கியுள்ளார். தமிழகத்தின் பேச்சுத் தமிழுக்கும், இலங்கையில் நிலவும் பேச்சுத் தமிழுக்கும் இடையே காணப்படும் ஒற்றுமை வேற்றுமைகளைப் பல கட்டுரைகள் இனம் கண்டு பதிவுசெய்துள்ளன. சுவாமிநாதன் சுசீந்திரராஜா யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் மொழியியல் மற்றும் ஆங்கிலத்துறையின் தலைவராகவும் பேராசிரியராகவும் இருந்து பணி ஓய்வு பெற்றவர்.

5767

திருவள்ளுவர் திடுக்கிடுவார். திக்கவயல் சி.தர்மகுலசிங்கம். மட்டக்களப்பு: சுவைத்திரள், 481 பார் வீதி, 1வது பதிப்பு, பெப்ரவரி 2004. (மட்டக்களப்பு: சண் அச்சகம், 5, இருதயபுரம் மேற்கு).
iv, 100 பக்கம், சித்திரங்கள், விலை: சிறப்புப் பதிப்பு, ரூபா 175., சாதாரண பதிப்பு ரூபா 150., அளவு: 20.5x15 சமீ.

திருக்குறள் பற்றியும், அதன் ஆசிரியர் திருவள்ளவர் பற்றியும் சுவையான கருத்தாடலுக்கு வழிவகுக்கும் 17 கட்டுரைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. இந்நூலின் தலைப்பினை ஏற்கெனவே தமிழகத்தில் நாமக்கல் கவிஞர் வே.இராமலிங்கம்பிள்ளையவர்கள் பயன்படுத்தியிருக்கிறார். திக்கவயல் சி.தர்மகுலசிங்கம் கிழக்கிலங்கையில் சுவைத்திரள் என்ற நகைச்சுவை சஞ்சிகையொன்றை நீண்டகாலமாக நடத்திவருபவர். இக்கட்டுரைகளிலும் நகைச்சுவை ஆங்காங்கே வாசகரைக் கவர்கின்றன.

5768

தீப்பிடித்த பூக்கள். ரா.ப.அரூஸ். கிண்ணியா: K.E.Media Group, c/o R.F.Arooz, மஹரூப் நகர், 1வது பதிப்பு, டிசம்பர் 2009. (கொழும்பு: ஏ.ஜே.பிரின்ட்ஸ்).
vi, 102 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 18x12.5 சமீ., ISBN: 978-955-52299-0-6.

கிழக்கிலங்கையின் கிண்ணியா நகரைச் சேர்ந்த அரூஸ் தனது பள்ளிக் காலத்திலேயே கவிதை நூலொன்றை வெளியிட்டவர். பதினாறு இலக்கிய உரைவீச்சுக்கள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. நான் மண்டலம், சட்டம், பொய்ப் பாகுபாடு, தீப்பிடித்த பூக்கள், தாய் சொல் தட்டு, வாழ்க்கைப் பிச்சை போடுங்க, புது ரத்தம் பாய்ச்சுவோம், முகமூடிகள், பெரிய மனுசர்கள், நீரும் நெருப்பும், காலம் உயிரானது, பணங்கொடுத்து உயிர் விற்றல், வரம்பு தாண்டும் நரம்பில்லாத் துண்டம், புன்னகைப் பூக்கள், உன்னை உயர்த்திக் காட்டு, கூட்டமாய்க் கூத்தடித்தல் ஆகிய தலைப்புகளில் சமூக விழிப்புணர்வுக் கட்டுரைகளாக இவை அமைந்துள்ளன.

5769

தொல்காப்பியத் தேன்துளிகள். கா.விசயரத்தினம். ஐக்கிய இராச்சியம்: Century House, 35 Brandreth Court, Harrow, Middlesex HA1 2JU. 1வது பதிப்பு, 2008. (சென்னை 600017: மணிமேகலைப் பிரசுரம், தபால் பெட்டி எண் 1447, இல.7, தணிகாசலம் சாலை, தியாகராய நகர்).
xxiv, 200 பக்கம், விலை: இந்திய ரூபா 100., அளவு: 21x14 சமீ., ISBN: 978-1-873265-57-4.

தமிழ் மொழிக்கு இலக்கண வரம்பை வழங்கிய முதல் நூலாக தொல்காப்பியம் கருதப்படுகின்றது. அகத்திய மாமுனிவரால் ஆக்கப்பட்ட அகத்தியம் என்ற தமிழ் இலக்கண நூலை அடியொற்றியே அவரது தலைமைச் சீடரான தொல்காப்பியரால் தொல்காப்பியம் எழுதப்பட்டது. முதலாம் தமிழ்ச்சங்கம் இருந்த பிரதேசம் கடல்கோளினால் அழிக்கப்பட்டபோது அகத்தியமும், அக்காலத்தைய தமிழ் நூல்களும் இல்லாது போயின. இந்நிலையில் இரண்டாம் தமிழ்ச்சங்க காலத்தில் எழுந்த தொல்காப்பியமே இன்று கைக்கெட்டிய முதலாவது தமிழ் இலக்கண நூலாக எம்மிடையே வாழ்கின்றது. தொல்காப்பியம் இலக்கண நூலாக வகைப்படுத்தப்பட்டபோதிலும், அதிலும் இலக்கியச் சுவை பெரிதும் காணப்படுகின்றது. இந்நூலாசிரியர் நுணாவிலூர் கா.விசயரத்தினம் அவர்கள், தொல்காப்பியத்தில் காணப்படும் இலக்கியச் சுவை பற்றி இந்நூலில் குறிப்பிடுகின்றார். தொல்காப்பியர் காலத்தில் தமிழகத்தில் நிலவியிருந்த சமூக அமைப்புகள், ஒழுக்க விழுமியங்கள், தனிமனிதப் பண்புகள், ஆடை அணிகலன்கள், மக்களிடையே வழக்கிலிருந்த கற்பொழுக்கம், களவொழுக்கம், கைக்கிளை, பெருந்திணை மற்றும் அக்காலத்தில்

காணப்பட்ட சாதிய வளமைகள், திருமணங்களும் சீதனப் பரிமாற்றங்களும் என்று ஏராளமான விடயங்கள் இந்நூலில் எளிமையான நடையில் வாசித்து வியக்கமுடிகின்றது.

5770

தொல்காப்பியமும் கவிதையும். கார்த்திகேசு சிவத்தம்பி. கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், 361, 1/2, டாம் வீதி, 1வது பதிப்பு, 2007. (கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், 361, 1/2, டாம் வீதி). xiv, 93 பக்கம், விலை: இந்திய ரூபா 75., அளவு: 21.5x14 சமீ., ISBN: 978-955-659-109-5.

தமிழின் முதல் இலக்கண நூலான தொல்காப்பியம் கவிதை (பா) பற்றிக் கூறுவனவும், அவை தொடர்ந்துவரும் தமிழ் இலக்கிய மரபில் எவ்வாறு போற்றப்பட்டுள்ளன என்பது பற்றியும் விவரிக்கும் ஆய்வுக்கட்டுரைகளை இந்நூல் கொண்டுள்ளது. தமிழர் சிந்தனை மரபில் தொல்காப்பியம், பாவும் கவிதையும், பத்துப் பாட்டின் கவிதையியல், தமிழ்க் கவிதை வரலாற்றிலே தொல்காப்பியக் கவிதையியல் - சில வினாக்களும் சிக்கல்களும் ஆகிய நான்கு கட்டுரைகளும், பின்னிணைப்பாக தொல்காப்பியப் பொருளதிகாரப் பொருளடைவு, தமிழிற் கவிதை பற்றிய இலக்கணமயப்படுத்தப்பட்ட நோக்குகளும், தமிழிலக்கியத்தின் உள்ளார்ந்த படைப்பாற்றல் நெகிழ்வுணர்வும் ஆகிய இரண்டு பகுதிகளும் இடம்பெறுகின்றன.

5771

நமது இலக்கியச் சொத்து. பூரணம் ஏனாதிநாதன். காரைநகர்: புலவர் திருமதி பூரணம் ஏனாதிநாதன், சின்னாலடி, 1வது பதிப்பு, ஜுலை 2002. (கொழும்பு 6: Techno Print, 581, 2/1 காலி வீதி). 120 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 21x14 சமீ.

இந்நூலில் 30 இலக்கியக் கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. தமிழர் பெருமையின் பல்வேறு அம்சங்களை இவை எடுத்துக் கூறுவன. சங்க இலக்கியங்கள் குறித்த அறிமுகமாகவும் இக்கட்டுரைகள் அமைந்துள்ளன. மேலைநாட்டு மோகத்திலிருந்து விடுபட்டு தமிழர்களுக்கேயுரிய சிறந்ததொரு பண்பாட்டின் வழிநின்று வாழ சங்க இலக்கியங்கள் பெருந்துணையாகும் என்ற கருத்தை இக்கட்டுரைகளில் சில போதிக்கின்றன. நூலாசிரியர் திருமதி பூரணம் ஏனாதிநாதன் சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் புலவர் பட்டம் பெற்றவர். பயிற்றப்பட்ட ஆசிரியையாக காரைநகர் யாழ்/கலாநிதி தியாகராசா மத்திய மகாவித்தியாலயத்தில் பணியாற்றியவர்.

5772

நாவலர்: ஆளுமையும் புலமைத்துவமும். இரா.வை.கனகரத்தினம். கொழும்பு: ஐ.இரத்தினம் ஞாபகார்த்த வெளியீடு, 1வது பதிப்பு, ஆவணி 2007. (கொழும்பு 6: Techno Print, 581, 2/1 காலி வீதி). (10), 224 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 20x12.5 சமீ.

ஆறுமுகநாவலர் பற்றிய ஏழு ஆய்வுக் கட்டுரைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. ஆறுமுகநாவலர் ஒரு மதிப்பீடு, ஈழநாட்டின் உரையின் தோற்றமும் வளர்ச்சியும்: ஓர் அறிமுகம், நாவலர் உரைநெறி: திருமுருகாற்றுப்படை உரையினை அடிப்படையாகக் கொண்ட ஓர் ஆய்வு, நாவலர் உரைநெறி: கோயில் புராண உரையினை அடிப்படையாகக் கொண்ட ஓர் ஆய்வு, ஆத்திசூடியும் ஆறுமுக நாவலரும்: ஓர் ஆய்வு முன்னோட்டம், நாவலரின் கொன்றை வேந்தன் உரைவளம், நாவலரின் பணிகளுள் சைவம் சைவசித்தாந்தம் பற்றிய கருத்து நிலைகள் ஆகிய ஏழு கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. இவை ஊற்று, பல்கலை, இளங்கதிர், பண்பாடு, நாவலர் நூற்றாண்டு மலர் ஆகியவற்றில் முன்னர் பிரசுரமானவை.

5773

நாவலர் நடைப்பாங்கு. சி.சரவணனார். கொழும்பு: திருவருள் நிலையம், 1வது பதிப்பு, 1932. (கொழும்பு: The Robert Press, 44 Green Lane). 18 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை.

நாவலர் பெருமானின் உரைநடை நூல்களின் பாங்கினை அவர் தந்த வசன நூல்களின் வழியாக ஆராய்ந்து சிறு நூலுருவில் வழங்கியுள்ளார். (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5774

நாவலர் வசனநடை (கட்டுரை). சோ.ராமஸ்வாமி சர்மா. கொழும்பு: விவேகானந்த சபை, 1வது பதிப்பு, நவம்பர் 1932. (கொழும்பு: The Robert Press, 44 Green Lane).

26 பக்கம், விலை: சதம் 25.

வசன நடையுற்பத்தி, நாவலர் வசனத் தூய்மை, பொருணயம், முடிவுரை ஆகிய பிரிவுகளாக வகுத்து இக்கட்டுரை வரையப்பெற்றுள்ளது. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்களின் வசனநடைச் சிறப்பினை பலரும் அறியும் வண்ணம் தூண்டப்பட வேண்டும் என்ற வேண்டுகோளுடன், நாவலர் வசனநடை தொடர்பானதொரு கட்டுரைப் போட்டியின் சிறந்த கட்டுரையாளருக்கு பரிசளிக்கவும் முன்வந்தவர் திருநெல்வேலிச் சைவாசிரியர் பயிற்சிக் கழகத்து வித்தியாதிபர் சைவத் திருவாளர் பொ.கைலாசபதி அவர்கள். அவ்வகையில் முதற்பரிசு பெற்ற இக்கட்டுரையை எழுதியவர் கொழும்பு விவேகானந்த வித்தியாலய ஆசிரியராவார். (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5775

நிகழ்வுகளும் நினைவுகளும். நா.சோமகாந்தன். சென்னை 600026: குமரன் பதிப்பகம், 3 மெய்கை விநாயகர் தெரு, குமரன் காலனி, 7வது தெரு, வடபழநி, 1வது பதிப்பு, மார்கழி 2001. (சென்னை 600026: குமரன் பதிப்பகம், 3 மெய்கை விநாயகர் தெரு, குமரன் காலனி).
xii, 243 பக்கம், விலை: இந்திய ரூபா 250., அளவு: 21X14 சமீ.

தினகரன் வார இதழில் 1996 ஏப்ரல் முதல் 1999 நடுப்பகுதி வரை நூறு வாரங்களுக்கு மேல் எழுதப்பட்ட காந்தனின் கண்ணோட்டம் என்ற பத்தி எழுத்துக்களின் தேர்ந்த தொகுப்பு இதுவாகும். எண்பத்தியேழு கட்டுரைகளைக்கொண்ட இத்தொடரில் சமயம், இலக்கியம், சமூகம், வரலாறு, ஆளுமை, கலை நிகழ்ச்சிகள், மனித உறவுகள் போன்ற பல பொருள்கள் பற்றி எழுதியிருக்கிறார்.

5776

நீர்வை பொன்னையன் இலக்கியத் தடம். எம்.கே.முருகானந்தன் (தொகுப்பாசிரியர்). கொழும்பு 6: இலங்கை முற்போக்கு கலை இலக்கியப் பேரவை, 11 இராஜசிங்க வீதி, 1வது பதிப்பு, ஜனவரி 2007. (கொழும்பு 6: டெக்னோ பிரின்ட், 55 டாக்டர் ஈ.ஏ. குரே மாவத்தை).
xvi, 204 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 22x14.5 சமீ., ISBN: 978-955-1810-05-4.

ஐந்து தசாப்தங்களாக முற்போக்கு இலக்கியத்தோடும், இடதுசாரி அரசியலோடும் உறுதியாக நின்ற ஈழத்தின் முதுபெரும் எழுத்தாளர் நீர்வை பொன்னையனின் இலக்கிய ஆளுமையை பல கோணங்களில் நின்று தரிசித்தவர்களின் 19 ஆக்கங்களைத் தொகுத்து இந்நூல் வெளிவந்துள்ளது.

5777

பண்டைத் தமிழர் வரலாறும் இலக்கியமும். சி.மௌனகுரு. சென்னை 600024: அலைகள் வெளியீட்டகம், 25, தெற்கு சிவன் கோவில் தெரு, கோடம்பாக்கம், 1வது பதிப்பு, டிசம்பர் 2006. (சென்னை 600024: அலைகள் அச்சகம்).
216 பக்கம், அட்டவணைகள், விலை: இந்திய ரூபா 95., அளவு: 21.5x14 சமீ.

அரசர் வரலாறு சமூக வரலாறாக மாறிய கதை, சங்க காலம் எனப்படும் காலமும் சங்க இலக்கியங்கள் எனப்படும் இலக்கியங்களும் - மீள்பார்வை, பெண் நிலை வரையறைகளின் மீறலா? ஒடுக்கமா? சோழர் கால ஆட்சி முறையும் தமிழர் சமூக அமைப்பும், கம்பராமாயணம் ஓர் அரச எதிர்ப்புக் காவியம், அடையாளமும் தமிழ் அடையாளமும், ஈழத்தில் தமிழ் பேசும் மக்களின் வரலாற்றுருவாக்கம்: கிழக்கிலங்கையிலிருந்து எழும் பதிற்குறிகள், ஈழத்தின் தமிழ் கூத்தியல் ஆய்வும் ஈழத்துத் தமிழ்க் கூத்தும் ஆகிய எட்டுக் கட்டுரைகள் இத்தொகுப்பில் அடங்கியுள்ளன.

5778

பணம் பேசுகிறது. ஏ.எம்.ஹாபில், கே.ஏ.ஷரிப்தீன். பனைக்குளம்: கே.ஏ.ஷரிப்தீன், 1வது பதிப்பு, ஆகஸ்ட் 1953. (கொழும்பு: வீரகேசரி அச்சியந்திரசாலை).
48 பக்கம், விலை: ரூபா 1.00

பூர்வபீடிகை, ஸ்டர்லிங், அரசியல், பிரச்சாரம், சூழ்நிலை, அறிவு, தத்துவம், தேவை, போராட்டம், சூதாட்டம், பைத்தியம், கடல், பணப்புழக்கம், பெண், கடன், தொழில், குடும்பம், அபிப்பிராயம், இஸ்லாமியம் ஆகிய தலைப்புகளில் அமைந்த சிறு கட்டுரைகளின் தொகுப்பு. இந்நூலுக்கான மதிப்புரையை தமிழ்நாடு, கீழக்கரை வடக்குத்தெருவைச் சேர்ந்த கே.கே.ஹாமித் முஹம்மத் வழங்கியுள்ளார். (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5779

பாவலர் ஆகலாம். திமிலைத்துமிலன் (இயற்பெயர்: சின்னையா கிருஷ்ணபிள்ளை). மட்டக்களப்பு: இராஜம் பிரசுரம், திமிலதீவு, 1வது பதிப்பு, ஓகஸ்ட் 2005. (மட்டக்களப்பு: எவகிறீன் அச்சகம், 93, திருமலை வீதி).
(8), 208 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 18x13 சமீ.

மரபுக் கவிதைக்கான ஒரு வழிகாட்டி நூல். மரபுவழிப்பாடலை இசையோடு பாடவும், அதன் பொருளை அறிந்து ரசிக்கவும் செய்யுள் இலக்கண அறிவு அவசியமல்ல எனினும், அத்தகைய பாடலை இயற்றுவதற்கு இலக்கண அறிவு அவசியம். பாவினங்களைத் தொகுத்தும் வகுத்தும் இலகுவான முறையில் விளக்கும் இந்நூல், செய்யுளியற்ற விரும்புவோரைத் தூண்டும் வகையில் எழுதப்பட்டுள்ளது. ஏறாவூரில் 1933ஆம் ஆண்டு செப்டெம்பர் 25ஆம் திகதி பிறந்த கிருஷ்ணபிள்ளை மட்டக்களப்பு மெதடிஸ்ட் மத்திய கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவராவார். தொழில்சார் கல்வியினை மட்டக்களப்பு ஆசிரியர் கலாசாலையில் மேற்கொண்டார். பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கலைமாணிப் பட்டப்படிப்புப் பெற்ற இவர் கொழும்பு பல்கலைக்கழகத்தில் கல்வித்துறை டிப்ளோமா பட்டம் பெற்றவர். கவிதைக்கான சாகித்திய மண்டலப்பரிசு பெற்றவரான திமிலைத்துமிலன், மகாகவி, நீலவாணன், முருகையன் போன்ற கவிஞர்கள் வரிசையில் வைத்து எண்ணக்கூடியவராக விளங்குகின்றார்.

5780

பின்நவீனத்துவமும் அழகியலும். ந.இரவீந்திரன். வவுனியா: கலை இலக்கிய நண்பர்கள் வட்டம், 49/38சீ, கோவில் வீதி, குருமண்காடு, 1வது பதிப்பு, கார்த்திகை 1997. (வவுனியா: ஒன்லைன் பிரிண்டர்ஸ், 62, பஸ்நிலையம்).
(4), viii, 96 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 19x13 சமீ.

பின்நவீனத்துவமும் அழகியலும் என்ற முன்னுரையுடன் தொடங்கும் இந்நூலில் பெரியாரின் கோபாவேசமான மதவிரோதக் கோட்பாடு தமிழ்க் கலாச்சாரத்தில் ஏற்படுத்திய தாக்கம், மக்கள் கலை இலக்கியத்துக்குத் தனித்துவமான அழகியல் உண்டா?, ஈழத் தமிழிலக்கிய பயன்பாட்டுவாதமும் அழகியல்வாதமும் ஆகிய மூன்று கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன.

பின்நவீனத்துவமும் அழகியலும். ந.இரவீந்திரன். சென்னை 600 002: சவுத் விஷன், 6 தாயார் சாஹிப் 2ஆவது சந்து, 1வது பதிப்பு, பெப்ரவரி 2002. (சென்னை 5: மணி ஆப்செட்).
184 பக்கம், விலை: இந்திய ரூபா 60., அளவு: 21.5x13.5 சமீ.

முன்னைய பதிப்பில் இடம்பெற்ற மூன்று கட்டுரைகளுடன் மேலதிகமாக பஞ்சமர் இலக்கியம் (ஈழத்தமிழ் தலித் இலக்கியம்), பிரதியும் உண்மையும், பின்நவீனத்துவமும் அழகியலும், ஆகிய மூன்று கட்டுரைகளையும், பின்னிணைப்பாக அ.மார்க்ஸ், தமிழவன், அன்னதா சங்கர் ராய், வி.இ.லெனின், மா ஓ சே துங், ஆனந்த குமாரசுவாமி, இந்திரன், ஆகியோரது பின் நவீனத்துவமும் அழகியலும் சார்ந்த கருத்துரைகளும் இடம்பெற்றுள்ளன. நூலாசிரியர் வவுனியா கல்வியியல் கல்லூரியில் விரிவுரையாளராகப் பணியாற்றுகின்றார்.

5781

பின்னவீனத்துவ உரையாடல். சபா.ஜெயராசா. கொழும்பு 11: சேமமடு பொத்தகசாலை, U.G.50, Peoples Park, 1வது பதிப்பு, 2009. (கொழும்பு 11: சேமமடு பதிப்பகம்).
120 பக்கம், விலை: ரூபா 260., அளவு: 21.5x15 சமீ., ISBN: 978-955-1857-34-9.

1960ஆம் ஆண்டைத் தொடர்ந்து ஐரோப்பாவின் அறிகை விசையாக மேலெழத் தொடங்கிய பின்னவீனத்துவச் சிந்தனைகள் கடந்த நூற்றாண்டின் பிற்கூற்றிலிருந்து தமிழில் வேகமாகப் பரவத் தொடங்கின. ஒவ்வொருவரும் தத்தமது அகவயப் பாங்கோடு பின்னவீனத்துவத்தை அணுகுதல் தமிழிற் பழக்கமான பாடமாகியும் விட்டது. பின்னவீனத்துவத்தைப் பல பரிமாணங்களினூடாக நோக்கல் இந்நூலாக்கத்திலே 21 இயல்களில் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

5782

புனைகதை இயல். சபா. ஜெயராசா. கொழும்பு 11: சேமமடு பொத்தகசாலை, U.G.50, Peoples Park, 1வது பதிப்பு, தை 2009. (கொழும்பு 11: சேமமடு பதிப்பகம்).

120 பக்கம், விலை: ரூபா 260., அளவு: 21.5x15 சமீ., ISBN: 978-955-1857-31-8, CBCN: 2009-01-02-032.

கிராமத்துக் கதைசொல்லிகள்-ஆராயப்படாத ஆளுமைகள், புனைவின் நீட்சி, சிறுகதையின் கோட்பாட்டு வளர்ச்சி, புனைகதையும் சமூகச் சித்திரிப்புக் கருத்தியலும், புனைகதையும் படிம உலகமும், புனைவும் காண்பிய ஆக்கமும், வரலாற்றுப் புனையங்கள், அறிவியற் புனையங்கள், நகைச்சுவைப் புனையங்கள், புவியியல் மற்றும் பண்பாட்டு அலகுகள் சார்ந்த புனைவுகள், புனைவும் எழுநடையும், கற்பனையியல், புனைகதையும் நுகர்வோர் சமூகமும், ஆக்க மலர்ச்சிப் பதிவுகள், நவீன இலக்கியப் புலப்பாடுகள், ஆங்கில இலக்கியங்களும் தமிழின் முன்னோடிப் புனையங்களும் ஆகிய 16 அத்தியாயங்களில் புனைகதைகள் பற்றிய கருத்தியல்ரீதியான ஆய்வினை நூலாசிரியர் மேற்கொண்டுள்ளார்.

5783

பெரும்பாணாற்றுப்படை: ஆராய்ச்சியுரை. சு.அருளம்பலம். காரைநகர்: பண்டிதர் சு.அருளம்பலம், திருமகள் விலாசம், 1வது பதிப்பு, 1937. (யாழ்ப்பாணம்: ஸ்ரீ சண்முகநாத அச்சியந்திரசாலை).
192 பக்கம், விலை: ரூபா 1.25.

பெரும்பாணாற்றுப்படை என்பது சங்கச் செய்யுள்களுள் அடங்கிய பத்துப்பாட்டுகளுள் நான்காவதாயுள்ளது. இது பெரும் பாணன் ஒருவனை காஞ்சிநகரத்தை அரசாண்ட தொண்டமான் இளந்திரையனிடத்தே ஆற்றுப்படுத்தியதாக அவ்விளந்திரையனையிட்டு கடியலூர் உருத்திரங்கண்ணனார் பாடிய பாட்டாகும். இப்பாடல்களினூடாக காஞ்சிமாநகரின் பெருமைகளும், பல்வேறு மரபுகளின் இருக்கைகளும் சுவைபடக் கூறப்பட்டுள்ளன. பண்டிதர் அருளம்பலத்தின் இவ்வாராய்ச்சி நூல் பாணர் வரலாறு, யாழ்கள், பெரும்பாணாற்றுப்படையின் இயல்பு, பாட்டின் பொருட்சுருக்கம், பெரும்பாணாற்றுப்படைச் செய்யுள், பொருட்பாகுபாடு, ஆக்கியோன் வரலாறு, பாட்டின் பொருள்நலம், பாவும் பாட்டின் நடையும், வரலாற்றுக் குறிப்புகள், விளக்கவுரைக் குறிப்புகள், அருஞ்சொற் பொருள் ஆகிய தலைப்புகளில் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5784

மருதூரந்தாதி: மூலமும் உரையும். தலைமலைகண்ட தேவர் (மூலம்), ஆறுமுக நாவலர் (உரையாசிரியர்). சிதம்பரம்: விசுவநாத பிள்ளை, சிதம்பர சைவப் பிரகாச வித்தியாசாலைத் தரும பரிபாலகர், 5வது பதிப்பு, 1919. (சென்னை: வித்தியாநுபாலனயந்திரசாலை).
61 பக்கம், விலை: சதம் 30.

100 செய்யுட்களைக் கொண்ட மருதூரந்தாதி, தலைமலை கண்ட தேவரால் இயற்றப்பட்டது. அந்நூலுக்கான ஆறுமுக நாவலரின் உரையுடன் இது வெளியாகியுள்ளது. (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5785

யாழ்ப்பாணத்தின் புலமைத்துவ மரபு: ஓர் இலக்கிய வரலாற்றுக் கண்ணோட்டம். கார்த்திகேசு சிவத்தம்பி. நுகேகொட: சுதந்திர இலக்கிய விழா அமைப்புக் குழு, இல. 61, பழைய கொட்டாவ வீதி, மிரிஹான, 1வது பதிப்பு, பெப்ரவரி 1995. (தெகிவளை: டெக்னோ பிரின்ட், 6, ஜெயவர்த்தன அவென்யூ).
(32) பக்கம், விலை: ரூபா 30., அளவு: 21.5x14.5 சமீ.

யாழ்ப்பாணத்து இலக்கிய வரலாற்றைச் சில ஆசிரியர்களதும், சில நூல்களினதும் கால வரன்முறைப்பட்ட பதிகையாகக் கொள்ளும் ஒரு மரபு வலிமையுடன் நிலவுகின்றது. அந்த இலக்கிய வரலாற்றை யாழ்ப்பாணத்தின் சிந்தனை மரபின் பின்புலத்தில் வைத்து எடுத்துக்கூறுவதற்கான ஓர் அறிமுக முயற்சி இது. யாழ்ப்பாணத்து இலக்கிய வரலாற்றில் பல புலமைத்துவப் போக்குகள் முக்கிய இடம் பெற்றுள்ளன என்பதை வற்புருத்துவதாக இவ்வுரை அமைந்துள்ளது. யாழ்ப்பாணம் ஈவ்லின் இரத்தினம் பல்லினப் பண்பாட்டியல் நிறுவனத்தில் ஆற்றிய உரையின் திருத்திய பதிப்பு இதுவாகும்.

5786

யாழ்ப்பாணத்துத் தமிழ்ப் பிரபந்த இலக்கியங்கள். கனகசபாபதி நாகேஸ்வரன். கொழும்பு 13: கொழும்பு விவேகானந்த சபை, 1வது பதிப்பு, 2005. (கொழும்பு 13: லக்ஷ்மி அச்சகம், 195, ஆட்டுப்பட்டித் தெரு).
(32), 250 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 500., அளவு: 22x14.5 சமீ., ISBN: 955-98962-2-9.

யாழ்ப்பாணத்துத் தமிழ்ப் பிரபந்த இலக்கியங்களை ஆராயும் இந்நூல் நல்லூர், மாவிட்டபுரம், யாழ்ப்பாண இராசாக்களின் சேது நாணயங்கள், மாவை இரட்டை மணிமாலை இயற்றிய சுன்னாகம் அ.குமாரசாமிப்புலவர் பற்றி முதலாம் இயலில் தெரிவிக்கிறது. இரண்டாவது இயல் பொதுவாக பிரபந்த இலக்கியங்கள் பற்றிக் குறிப்பிடுகின்றது. பிரபந்தங்களிலே பக்திப்பாடல்களுக்குரிய இடம் முருக வழிபாடு, திருமுறைகளில் பக்திநலன், அடியார் பெருமை என்பன பற்றி மூன்றாவது இயல் கூறுகின்றது. தமிழில் கீர்த்தனை மரபு, சாகித்திய கர்த்தாக்கள், பக்தி நலன்கள், அந்தாதி, பிள்ளைத் தமிழ், சதுரகராதி, புராண காவியங்கள், தலபுராணங்களின் சிறப்பு என்பன பற்றி இவரது கருத்துக்கள் நூலுக்கு மெருகூட்டுகின்றன. தமிழ்ப் பிரபந்த இலக்கியங்களிலே காணப்படும் கவித்துவ வளம், கவிநயம் என்பன நான்காவது இயலில் உதாரணங்களுடன் விளக்கப்பட்டுள்ளன. ஈழத்து நல்லூர், மற்றும் மாவிட்டபுரத்துத் தலங்கள் மீது பாடப்பெற்ற மொத்தம் 39 பிரபந்தங்கள் இந்நூலில் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. இவ்வாய்வேடு தமிழில் முதுகலைமாணிப் பட்டப்பின் (எம்.ஏ) பட்டத் தகைமைக்காக 1988ம் ஆண்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைக்குச் சமர்ப்பிக்கப்பட்டது.

5787

வள்ளுவர் வழியில் வீரம் மானம். நாக பத்மநாதன். தமிழீழம்: தமிழ்த்தாய் பதிப்பகம், 1வது பதிப்பு, ஏப்ரல் 1992. (யாழ்ப்பாணம்: மாறன் பதிப்பகம், 164 மருத்துவமனை வீதி).
(8), 85 பக்கம், விலை: ரூபா 20., அளவு: 9.5x13 சமீ.

அன்பையும் அறத்தையும் விளக்கும் அளவுக்கு திருக்குறள் வழங்கியுள்ள வீரத்தையும் மானத்தையும் பற்றிய கருத்துக்களை நாம் கையாள்வதில்லை என்பது இலக்கியர்களிடையேயுள்ள பொதுவானதொரு குறைபாடாகும். குறள் கூறும் ஆற்றல், துணிவு, வீரம், மானம் ஆகியவற்றை நாம் மெய்யாக உணரவேண்டும் என்பதை மனதிற்கொண்டு இக் கையடக்கப் பதிப்பு வெளியாகியுள்ளது. தேர்ந்தெடுத்த திருக்குறள் வரிகளுக்கு பொழிப்புரை, விளக்கவுரை என்பன இந்நூலில் தரப்பட்டுள்ளன.

5788

வித்தியின் இலக்கிய முன்னீடுகள். சு.வித்தியானந்தன் (மூலம்), திருநாவுக்கரசு கமலநாதன். தெட்சணாமூர்த்தி மதுசூதனன் (தொகுப்பாசிரியர்). கொழும்பு 11: சேமமடு பொத்தகசாலை, U.G.50, Peoples Park, 1வது பதிப்பு, 2009. (கொழும்பு 11: சேமமடு பதிப்பகம்).
120 பக்கம், விலை: ரூபா 260., அளவு: 21.5x15 சமீ., ISBN: 978-955-1857-37-0.

பேராசிரியர் சு.வித்தியானந்தன் நினைவுக்குழு, பேராசிரியர் சு.வி. அவர்களது நூல்களை வெளியிடும் திட்டத்தை நடைமுறைப்படுத்தி வருகின்றது. இந்த வகையில் அவர் பல்வேறு நூல்களுக்கு எழுதிய முன்னரைகளையும் அணிந்துரைகளையும் தொகுத்துத் தனிநூலாக வெளியிட்டுள்ளது. பேராசிரியர் முன்னுரை வழங்கியுள்ள பல நூல்கள் அவருக்கு நன்கு பரீட்சயமான துறைகளான நாடகம், நாட்டாரியல், தமிழ் இலக்கணம் சார்ந்தவை. அதனால் அவற்றுக்கு வழங்கிய முன்னுரைகளினூடாக நமக்கு பேராசிரியரின் துறைசார் நுண்ணறிவு பற்றிய ஆழமான புரிதல்களை ஏற்படுத்துகின்றன. இந்நூலில் தமிழ்மொழி இலக்கண இயல்புகள், கடலும் படகும், சி.வை.தாமோதரம்பிள்ளை, வடமராட்சியின் கல்விப் பாரம்பரியமும் இலக்கிய வளமும், அஞ்சா நெஞ்சம், நெஞ்சே நினை, முப்பெரும் சித்தர்கள், புறப்பொருள் வெண்பாமாலை ஆராய்ச்சி, பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை, சங்கிலியம், ஈழத்தில் நாடகமும் நானும், காத்தவராயன் நாடகம், வாழ்வுபெற்ற வல்லி, பண்டார வன்னியன், சேரன் சமாதி, சிலம்பு பிறந்தது, தென்னவன் பிரமராயன், வன்னிவள நாட்டுப்பாடல்கள், இராசநாயக பிரபந்தம், நாவலர் பிள்ளைத் தமிழ், வந்து சேர்ந்தன தரிசனம், செய்னம்பு நாச்சியார் மான்மியம், டானியல் கதைகள், செங்கை ஆழியானின் இலக்கிய நோக்கும் போக்கும், ஈழத்துத்தமிழ் நாவல் இலக்கியம், தமிழர் சால்பு, ஈழத்திலே தமிழ்க் கல்வியும் பல்கலைக்கழகமும் ஆகிய தலைப்புகளில் 27 நூல்களுக்காக பேராசிரியர் எழுதிய முன்னுரைகள் இத்தொகுப்பில் இடம்பெறுகின்றன.

5789

விபுலானந்த ஆராய்வு. அருள் செல்வநாயகம் (தொகுப்பாசிரியர்). சென்னை 4: கலைமகள் காரியாலயம், மயிலாப்பூர், 1வது பதிப்பு, ஜுலை 1963. (சென்னை 4: M.L.J.Press, மயிலாப்பூர்).
140 பக்கம், விலை: ரூபா 2.00.

விபுலானந்தர் பற்றிய பதினொரு கட்டுரைகளைக் கொண்ட தொகுப்பு. நூலின் தொகுப்பாசிரியர் மட்டக்களப்பு, குருமண்வெளியைப் பிறப்பிடமாகக் கொண்டவர். இந்நூலுக்கு மதிப்புரையை நாவற்குழியூர் க.செ.நடராசா வழங்கியுள்ளார். (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5790

வேரோடி விழுதெறிந்து: ஒரு நூலகவியலாளரின் தமிழ் இலக்கியப் பதிவு. என்.செல்வராஜா. கொழும்பு 6: ஞானம் பதிப்பகம், 3B, 46ஆவது ஒழுங்கை, 1வது பதிப்பு, ஜுலை 2009. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ் (பிரைவேற் லிமிட்டெட்), 48B, புளுமெண்டால் வீதி).
viii, 192 பக்கம், விலை: ரூபா 450., அளவு: 22x14 சமீ., ISBN: 978-955-8354-32-2.

புலம்பெயர்ந்த ஒரு ஈழத்து நூலகவியலாளனின் பார்வையில் உலகத் தமிழரின் இலக்கிய முயற்சிகளும், தான் சார்ந்த சமூகம் தழுவிய பல்வேறு இலக்கியம், நூலியல் சார்ந்த நோக்குகளும் இந்நூலில் பதிவாகியுள்ளன. இலங்கை, மலேசியா, ஐரோப்பா உள்ளிட்ட பல்வேறு நாடுகளிலும் வெளியாகிய சஞ்சிகைகளிலும், வார இதழ்களிலும், இணையத் தளங்களிலும், வானலைகளிலும் அவ்வப்போது வெளியாகிய இவரது பல்வேறு கட்டுரைகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட இருபது கட்டுரைகள் தாயகம், அயலகம், புகலிடம் என்ற மூன்று பிரிவுகளுக்குள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன.

மேலும் பார்க்க: 5795

894.8(7) பலவினத் தொகுப்பு

5791

அந்த நாள் எந்த நாளோ: பாடல்கள், சிறுகதைகள். கா.சுஜந்தன். (புனைபெயர்: சுஜோ/ஓவியன்). மாங்குளம்: கா.சுஜந்தன், மலரன்னை வெளியீடு, மலராலயம், கொல்லர் புளியங்குளம், 1வது பதிப்பு, நவம்பர் 2003. (கிளிநொச்சி: கன்னி நிலம் பதிப்பகம், ஸ்கந்தபுரம்).
(6), 76 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 20.5x14 சமீ.

தொன்னூறுகளில் நிதர்சனம் நடத்திய சிறுகதைப் பட்டறை, கவிதைப் பட்டறைகளில் பங்குபற்றித் தனது இலக்கிய ஆர்வத்தை வளர்த்துவந்த சுஜந்தன், கல்லறைக்குள் தீபம் ஒன்று என்ற தனது முதலாவது சிறுகதையை 1987இல் சஞ்சீவி வார இதழில் (உதயன் பத்திரிகையின் வார இதழ்) பிரசுரித்தவர். இவரது விடுதலை உணர்வுமிக்க பாடல்களையும், ஓயாத அலைகள் 3 என்ற தலைப்பில் தாளலயம் கவிதையையும், இவர்கள் புலிகள் (ஈழநாதம் 1992 பரிசுக்கதை), அவலங்கள் (புலிகளின் குரல்), நிழல் ஓவியங்கள், வானம் வெளிக்கிறது, சுவடுகள் (சுடர் 2002) ஆகிய சிறுகதைகளையும், அந்தநாள் எந்தநாளோ என்ற சிறுவர் நாடகத்தையும், மனவடு என்ற இசையும் கதையும் கொண்ட படைப்பையும் இந்நூல் கொண்டுள்ளது.

5792

உனக்கொன்றுரைப்பேன்: கடிதங்கள். யோகேஸ்வரி சிவப்பிரகாசம். யாழ்ப்பாணம்: பாரதி பதிப்பகம், 430, காங்கேசன்துறை வீதி, 1வது பதிப்பு, மாசி 2009. (யாழ்ப்பாணம்: பாரதி பதிப்பகம்).
iv, 94 பக்கம், விலை: ரூபா 190., அளவு: 18x12.5 சமீ.

யோகேஸ்வரி சிவப்பிரகாசம் 2002ம் ஆண்டு **நமது ஈழநாடு** செய்தி இதழில் வெள்ளிக்கிழமைகளில் வெளியாகும் பெண்கள் பகுதியான சினேகிதியே என்ற பிரிவில், **அன்புள்ள சிந்திக்கு** என்ற தலைப்பில் எழுதிய கடிதங்களின் தொகுப்பு இதுவாகும். இந்நூலில் 25 கடிதங்கள் இடம்பெறுகின்றன. இக்கடிதங்களின் வாயிலாக ஆசிரியர் சீதனக்கொடுமையைச் சாடுகின்றார். ஆடம்பரமான நகையை அணிந்து ஆபத்தைத் தேடிச்செல்லும் பெண்கள் பற்றிக் குறிப்பிடுகிறார். வதந்திகளைப் பரப்பி, பொழுதை அவமாகக் கழிக்காது பெண்கள் பயனுள்ள பணிகளை மேற்கொள்ளலாம் என்ற ஆலோசனையைக் கடிதங்களின் வாயிலாக வழங்குகின்றார். பொதுவாக தமிழ்க் குடும்பப் பெண்களைச் சிந்திக்கவைக்க முயன்றிருக்கிறார். அதுவே இவரது பெண்பாத்திரமான சிந்தியாக உருவெடுத்துள்ளது.

5793

எண்ணக் கோலங்கள். எஸ்.சந்திரபோஸ். சென்னை 600024: மித்ர ஆர்ட்ஸ் அன் க்ரியேஷன்ஸ், 32/9, ஆற்காடு சாலை, கோடம்பாக்கம், 1வது பதிப்பு, நவம்பர் 2007. (சென்னை 600024: மித்ர ஆர்ட்ஸ் அன் க்ரியேஷன்ஸ், 32/9, ஆற்காடு சாலை, கோடம்பாக்கம்).

232 பக்கம், விலை: இந்திய ரூபா 125., அளவு: 18x12 சமீ., ISBN: 81-89748-39-4.

அவ்வப்போது ஆசிரியரால் எழுதப்பட்ட கட்டுரைகள், ஆய்வுகள், குறுநாடகம், சிறுகதை என்பவற்றின் கதம்பமாக இந்நூல் அமைகின்றது. தமிழீழத் தேசியமும் கனடா வாழ் தமிழர்களும், பாலர் கல்வியும் விஞ்ஞான அணுகுமுறையும், மானிட தரிசனம், தமிழ்ச் சமூகத்தில் மாற்றம், புதிய பதியம், ஆழ்கடல் நடுவே அகதிகளாக, பாதைகள், பயணங்கள், பயனுள்ள பாடங்கள், காதலர் தினம், சமாதானம் சமாதானம், இனியவர் இலங்கையன் செல்வா, கல்விச் சிகரம், கலாநிதி க.கைலாசபதியின் கல்விச் சிந்தனைகள், உளவியல் உபாசகர், பதுளை பாரதி கல்லூரியும் இராமசாமியும், பவளவிழாக் காணும் எஸ்பொ., கலாநிதியானார் கல்வி அதிகாரி சிவநாயகமூர்த்தி, சலசலப்பற்ற சமூக சேவையாளன் அமரர் சந்திரசேகரன், கலாநிதி கமலநாதன் அவர்களுடன் ஒரு நேர்காணல், சுதந்திரம் சுதந்திரம் சுதந்திரம் (நாடகம்), பசுஞ்சோலையில் ஒரு பட்டமரம் (சிறுகதை), நழுவிய சீதேவி (சிறுகதை), வானத்து மேகம் (சிறுகதை), மத்தளம் (குறும்படப் பிரதி), இருபதாம் நூற்றாண்டில் தாழ்த்தப்பட்ட தமிழரின் கல்வி வளர்ச்சி (1989இல் பிரசுரமான ஆய்வு நூலின் மீள்பிரசுரம். நூல்தேட்டம் பதிவிலக்கம் 189)ஆகிய படைப்புக்கள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன.

5794

என் கல்லறையில் தூவுங்கள். கப்டன் மலரவன். மாங்குளம்: மலர் அன்னை வெளியீடு, மலராலயம், கொல்லர் புளியங்குளம், 1வது பதிப்பு, நவம்பர் 1998. (மல்லாவி: வவுனியா வடக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கப் பதிப்பகம்).
(16), 102 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14 சமீ.

24.11.1992இல் தனது 20ஆவது வயதில் வீரமரணமடைந்த விடுதலைப் போராளியான கப்டன் மலரவனின் மறைவின் ஆறாவது ஆண்டு நினைவாக இந்நூல் வெளியிடப்பட்டுள்ளது. **போர் உலா** என்ற நூலின் மூலம் இலக்கிய உலகில் பிரபல்யமான கப்டன் மலரவன் எழுதிய 13 கவிதைகளும், மேஜர் லம்பா பற்றிய ஒரு கட்டுரையும், மனசாட்சி, நள்ளிரவில் நடந்த நான்கு கொலைகள், யார் பயந்தாங்கொள்ளி, ஒரு போராளியும் மூன்று குழந்தைகளும், பரம்பரையைத் தேடி, சுமைகள் ஆகிய ஆறு கதைகளும் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன.

5795

குருநகர் யோகியின் படைப்புகள். S.N.J. மரியாம்பிள்ளை. யாழ்ப்பாணம்:
S.N.J. மரியாம்பிள்ளை, 645/1 கடற்கரை வீதி, குருநகர், 1வது பதிப்பு, ஏப்ரல் 2008. (யாழ்ப்பாணம்: ஏ.சி.எம். அச்சகம், 464, வைத்தியசாலை வீதி).
x, 54 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 20.5x14.5 சமீ.

ஆசிரியர் கடந்த காலங்களில் எழுதி ஊடகங்களில் வெளியிட்ட கட்டுரைகள், கவிதைகள், சிறுகதைகள் போன்றவற்றை தொகுத்து தனிநூலாக வெளியிட்டுள்ளார். இத்தொகுப்பில் இருக்கும் விடயங்கள் யாவும் சமூக அபிவிருத்தியை நோக்காகக் கொண்டும், நாளாந்த சமூகப் பிரச்சனைகளை மூலக் கருவாகக் கொண்டும் உருவாக்கப்பட்டவை.

5796

சார்வாகன்: பேராசிரியர் சி.மௌனகுரு அவர்களது படைப்புக்கள் சில. சி.மௌனகுரு. கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், 201 டாம் வீதி, 1வது பதிப்பு, 2004. (கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், 201, டாம் வீதி).
vi, 65 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x14.5 சமீ.

கிழக்கிலங்கைப் பல்கலைக்கழகத்தின் நுண்கலைத்துறைத் தலைவராகப் பணியாற்றும் பேராசிரியர் சி.மௌனகுருவின் ஆக்கங்களின் மாதிரிக்கொன்றான சிறியதொரு தொகுப்பு இது. பாண்டவரின் குருஷேத்திரப் போரின் பின்னணியில் எழுந்த சார்வாகன் என்ற குறுநாவலுடன் தொடங்கும் இந்நூல், வாழ்வின் சுவை, பிரசவம், வெற்றிக்குரல், ஏனோ எழுதுகிறாய், எதைப்பாட, ஆகிய தேர்ந்த கவிதைகளையும், சின்னச் சின்னக் குயில்கள் என்ற இசைப் பாடலையும், உலகங்கள் மூன்று, என்ற சிறுகதையினையும், எறிகணைத் தாலாட்டு என்ற கவிதை நூலுக்கான முன்னுரையையும், கலாசாரப் பக்குவம் என்ற பத்தி எழுத்தையும் உள்ளடக்கியதாக இத்தொகுப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

5797

சி.புஸ்பராஜா படைப்புகள்: சிறுகதைகளும் கவிதைகளும். மீரா புஷ்பராஜா (தொகுப்பாசிரியர்). தமிழ்நாடு: அடையாளம் பதிப்பகம், 1205/1, கருப்பூர் சாலை, புத்தாநத்தம் 621310, 1வது பதிப்பு, 2007. (சென்னை 5: மணி ஓப்செட்).
208 பக்கம், விலை: இந்திய ரூபா 130., அளவு: 22x14 சமீ., ISBN: 81-7720-076-3.

ஈழத்துத் தமிழ் இலக்கியத்தை, மாற்று அரசியல் கருத்தியலை கட்டமைத்தவர்களுள் சி.பஸ்பராஜா ஒரு முன்னோடி. துயரம் தோய்ந்த வார்த்தைகளை எழுதி, துயரம் மிகுந்த வாழ்வின் மையத்தைக் கடக்க முயற்சிக்கும் இவரது படைப்புகள் முறிந்த வாழ்வின் கேவலையும் தொடரும் சமரின் இரைச்சலையும், அதிர்வு நிறைந்த நிலப்பரப்பையும் பின்புலமாகக் கொண்டு இயங்குபவை. தமிழ் இலக்கியத்தின் உலகளாவிய எல்லைக்கு இட்டுச்செல்லும் இவரது ஆக்க இலக்கியப் படைப்புக்களின் முழுத்தொகுதி இது. 20 சிறுகதைகளும், 23 கவிதைகளும் இதில் அடங்குகின்றன.

5798

சிரிப்போம் சிந்திப்போம். பொ.சண்முகநாதன். சென்னை 600017: மணிமேகலைப் பிரசுரம், தபால் பெட்டி எண் 1447: இல.7, தணிகாசலம் சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2006. (சென்னை 94: ஸ்கிரிப்ட் ஆ.ப்செட்).
xviii, 214 பக்கம், விலை: இந்திய ரூபா 65., அளவு: 18x12 சமீ.

வாசகர்களை எப்படியாவது சிரிக்கவைக்கவேண்டும் என்பதற்காக அபத்தமான, யதார்த்தமற்ற கற்பனைகளைச் சோடிக்காமல், தான் கண்ட, கேட்ட சம்பவங்களின் பின்னணியில் அமைந்த நகைச்சுவை அம்சங்களை உணர்ந்து அவற்றை சுவையாகவும் எளிமையாகவும் ஆசிரியர் 49 சிறிய கட்டுரைகளாக வழங்கியுள்ளார். 2004ம் ஆண்டுக்குரிய சிறந்த பத்தி எழுத்தாளருக்கான விருதினைப் பெற்றவர் இவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

5799

நகைச்சுவை இலக்கிய முன்னோடிகள். பொ.சண்முகநாதன். சென்னை 600017: மணிமேகலைப் பிரசுரம், தபால் பெட்டி எண் 1447: இல.7, தணிகாசலம் சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2007. (சென்னை 94: ஸ்கிரிப்ட் ஆ.ப்செட்).
176 பக்கம், விலை: ரூபா 175., அளவு: 18x12 சமீ.

கொழும்புப் பெண், பெண்ணே நீ பெரியவள் தான், நினைக்க சிரிக்க சிந்திக்க, சிரிப்போம் சிந்திப்போம் ஆகிய நகைச்சுவை நூல்களை வழங்கிய பொ.சண்முகநாதனின் நகைச்சுவை இலக்கிய முன்னோடிகளின் வரலாறு பற்றிய இந்நூல், இரு பகுதிகளைக் கொண்டது. தான் படித்துச் சுவைத்த சுயா, அநுசுயா, சானா, கல்கி, தேவன், நாடோடி, ஆகிய நகைச்சுவை எழுத்தாளர்களின் எழுத்தைப்பற்றிய தனது மனப்பதிவுகளை கட்டுரைகளாக எழுதியுள்ளார். இரண்டாவது பகுதி இவரது நகைச்சுவைக் கட்டுரைகள் 15 அடங்கிய தொகுப்பாகும். நம்மிடையே நடமாடும் பாத்திரங்களைக் கொண்டு அவர்களது கிறுக்குத்தனமான எண்ணங்கள், ஆசைகள், குறுகிய மனப்பான்மை போலித்தனம் என்பவற்றை தனக்கேயுரிய பாணியில் எழுதி சிரிக்கவும் சிந்திக்கவும் பின்னர் வருத்தப்படவும் வைக்கிறார்.

5800

பூந்துணர்: தொகுப்பு மலர் 2007. பிரித்தானிய ஈழவர் இலக்கியச் சங்கம். லண்டன்: Eelavar Literature Academy of Britain (ELAB), 1A, Rookery Close, Colindale, London NW9 6QJ, 1வது பதிப்பு, 2007. (சென்னை 600024: ஏ.ஆர்.பிரின்ட்ஸ்).
210 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14 சமீ., ISBN: 1 873265 52 2.

நல்ல கலை இலக்கியங்களை வளம்படுத்தவெண்ணி கலையார்வம் கொண்டவர்களால் உருவாக்கப்பட்டது தான் பிரித்தானிய ஈழவர் இலக்கியச் சங்கம். எழுத்தாளர்களின் ஒருங்கிணைப்பினால் மாதாமாதம் இலக்கிய நிகழ்வுகளை நடாத்தி அதன்மூலம் பெறப்பட்ட இலக்கிய வடிவங்களை புடம்போட்டு கனகச்சிதமாக பூந்துணர் என்னும் நூலாக வெளியிட்டுள்ளனர். இத்தொகுப்பில் கோபன் மகாதேவா, எஸ்.கருணானந்தராஜா, கதிரித்தம்பி சிவானந்தன், மீ.ராஜகோபாலன் ஆகியோரின் கவிதைகளும், கோபன் மகாதேவா, கா.விசயரத்தினம், சீதாதேவி மகாதேவா, தயா கருணானந்தராசா ஆகியோரின் கட்டுரைகளும் தொகுக்கப்பெற்றுள்ளன. மொத்தம் 41 கவிதைகளும், 19 கட்டுரைகளும் இத்தொகுப்பில் பதிவாகியுள்ளன. அனைத்தும் பிரித்தானிய ஈழவர் இலக்கியச் சங்கம் அவ்வப்போது ஒழுங்குசெய்த சந்திப்புகளில் படிக்கப்பெற்றவை.

5801

யாவும் கற்பனை அல்ல. வி.ஜீவகுமாரன். சென்னை 600024: மித்ர வெளியீடு, 32/9, ஆற்காடு சாலை, கோடம்பாக்கம், 1வது பதிப்பு, ஏப்ரல் 2008. (சென்னை 600024: மித்ர வெளியீடு, 32/9, ஆற்காடு சாலை).
247 பக்கம், சித்திரங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18x12 சமீ., ISBN: 81-89748-52-1.

டென்மார்க்கில் புலம்பெயர்ந்து வாழும் இப்படைப்பாளியின் கதைகளும் கவிதைகளும் தான் சார்ந்த சமூகத்தின் பாரம்பரிய விழுமியங்களை பக்கச்சார்பின்றி விமர்சிக்கின்றன. புலம்பெயர்ந்த வாழ்வின் நிகழ்கால வாழ்வியலை எள்ளலுடன் நகையாடும் வரிகளில் அங்கதச்சுவை மிளிர்கின்றது. இந்நூலில் சிறுகதைகளும் கவிதைகளும் கலந்து காணப்படுகின்றன. கவிதையான சிறுகதைகளும், சிறுகதையான கவிதைகளும் நூலில் இடம்பெற்றிருப்பதை தலைப்பிலேயே குறிப்பிட்டுவிடுகின்றார். 20 கதையாடல்களும், காலங்களும் கருத்தோட்டங்களும் என்ற தலைப்பில் பல்வேறு சிறு தலைப்புகளிலான நீண்ட கதையாடலும் இடம் பெற்றுள்ளன. வினோத் காமராஜின் கோட்டுச் சித்திரங்கள் ஆங்காங்கே நூலுக்குக் கவர்ச்சியை அதிகமாக்குகின்றன.

899 பிறமொழி இலக்கியங்கள்

899.(1) பிறமொழிக் கவிதைகள்

5802

உமர் கய்யாம்: நாலடி. கோப்பாய் சி.கதிரவேலுப்பிள்ளை. யாழ்ப்பாணம்: நியாயவாதி சி.கதிரவேலுப்பிள்ளை, 113, கடற்கரை வீதி, 1வது பதிப்பு, 1963. (யாழ்ப்பாணம்: ஈழநாடு அச்சகம்).
44 பக்கம், சித்திரங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை.

ஓவியர் செ.சிவப்பிரகாசத்தின் சித்திரங்களுடன் வெளிவந்துள்ள இந்நூலில், உமர் கய்யாமின் பாடல்களில் சில தொகுக்கப்பட்டுள்ளன. அறியொணாததாய், வெல்லமுடியாததாய் விதி, தெய்வம் என்று ஒன்றுண்டு. ஆனால் அதுபற்றி மதியைக் கலங்கவிடாது உள்ளதை நுகர்ந்து வாழ்வது இலட்சியம் என்பதுதான் இப்பாடல்களின் வெளிப்படைக் கருத்தாகின்றது. 16ம் நூற்றாண்டில் வாழ்ந்த பார்சிய ஸுபிக் கவிஞரான உமர் கய்யாம் ஒரு வானசாஸ்திர மேதையுமாவார். அவர் காலத்தில் அவர் பெரும் கவிஞராகக் கருதப்படவில்லை. இஸ்லாத்திலே யோகஞான சாதனைகளைக் கையாண்ட சூபிகள் உமரைத் தங்களுள் ஒருவராகக் கருதினார்கள். அவர்கள் உமருடைய பாடல்களுக்கு விசேட விளக்கம் செய்து பாடிப் போற்றினார்கள். பிற்சு ஜெரால்டீன் (Fitzgeraldeen) பற்றி ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த நூலே அவரை ஒரு பெருங்கவியாக உலகிற்கு அறிமுகம் செய்துவைத்தது. அந்த ஆங்கிலப் பாக்களைத் தமிழில் மொழிபெயர்த்த முயற்சிதான் இந்நூலாக வெளிவந்துள்ளது. (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

899.(2) பிறமொழி நாடகங்கள்

5803

சமூக விரோதி. ஹென்றிக் இப்சன் (மூலம்), சி.சிவசேகரம் (தமிழாக்கம்). கொழும்பு 11: தேசிய கலை இலக்கியப் பேரவை, வசந்தம் புத்தக நிலையம், இல. 44, 3வது மாடி, CCSM Complex, 1வது பதிப்பு, ஓகஸ்ட் 2002. (கொழும்பு 13: கௌரி அச்சகம், 207, ஆட்டுப்பட்டித் தெரு).
viii, 84 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 21.5x14 சமீ., ISBN: 955-8637-07-6.

தேசிய கலை இலக்கியப் பேரவை வெளியீடு 94. ஆதர் மில்லரின் ஆங்கிலத் தழுவலான An Enemy of the People என்ற நூலின் தமிழாக்கம். இந்த நாடகத்தின் மூலம், நவீன உலகின் நாடக மேதைகளுள் ஒருவராகக் கருதப்படும் ஹென்றிக் இப்சன் (Henrik Ibsen)எழுதிய மக்களின் எதிரி என்ற நோர்வேஜிய நாடகமாகும். இதன் சமூக அரசியல் முக்கியத்துவம் கருதி, அமெரிக்காவின் முற்போக்குச் சிந்தனையாளரும் முக்கியமான நாடகாசிரியர்களுள் ஒருவருமான ஆதர் மில்லர் இதை ஆங்கிலத்தில் தழுவினார். ஊர்க்கிணறு ஒன்றில் நச்சுத் தண்ணீர் இருந்ததைக் கண்டறியும் ஹங்கேரிய விஞ்ஞானி அதை வெளிப்படுத்தியமைக்காகக் கடுமையாகத் தாக்கப்பட்ட ஒரு சம்பவத்தின் பின்னணியில் இந்நாடகக் கதை நகர்கிறது.

899.(3) பிறமொழிக் கவிதை நாடகங்கள், காவியங்கள்

5804

இரவிந்திரநாத் தாகூரின் கீதாஞ்சலி. நவாலியூர் சோ.நடராஜன் (தமிழாக்கம்). கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், 361 ½ டாம் வீதி, 2வது பதிப்பு, 2008, 1வது பதிப்பு, 1950. (கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், 361 ½ டாம் வீதி).
xiv, 97 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 22 x14.5 சமீ., ISBN: 978-955-659-125-7.

அமரகவி தாகூரின் பாடல்கள் அழியாப்புகழ் கொண்டவை. வங்க இலக்கியம் தாகூரின் பாடல்களால் ஒரு மறுமலர்ச்சியைப் பெற்றது. இத்தகைய மாபெரும் கவிஞரை உலகுக்குக் காட்டிய படைப்பு கீதாஞ்சலி. அவருக்கு நோபல் பரிசையும் பெற்றுக்கொடுத்தது. இவ்வற்புதப் படைப்பை கவிநயம் சொட்டும் சரளமான மொழிநடையில் படிப்போருக்குப் புரியும் விதத்தில் தமிழ்ப்படுத்தித் தந்துள்ளார் நவாலியூர் சோ.நடராஜன் (1910-1988). தங்கத்தாத்தா சோமசுந்தரப் புலவரின் இரண்டாவது புதல்வரான இவர் யுத்தமுனை என்ற தமிழ்ப் பத்திரிகையின் ஆசிரியராகத் தன் தமிழ்ப்பணியைத் தொடங்கியவர். இலங்கை வானொலியின் முதல் அறிவிப்பாளராகவும், கல்வி இலாகாவில் வித்தியாதரிசிகராகவும் பணிபுரிந்தார். தொடர்ந்து கல்வித் திணைக்களத்தில் பல்வேறு பணிகளைப்புரிந்து பின்னர் கல்வி நூல்வெளியீட்டுத் திணைக்களத்தின் பணிப்பாளராகப் பணியாற்றியவர்.

899.(4) பிறமொழிச் சிறுகதைகள்

5805

ஒரே இரத்தம். திக்குவல்லை ஸப்வான். கொழும்பு 6: மீரா பதிப்பகம், 191/23 ஹைலெவல் வீதி, கிருலப்பனை, 1வது பதிப்பு, டிசம்பர் 2007. (வத்தளை: Page and Image, 202/2B Royal Pearl Garden).
xx, 190 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 22.5x15 சமீ.

பல்லின மக்களின் வரலாறு, கலை கலாசாரம், மனப்பாங்குகள், சமூகப் பார்வைகள், அபிலாஷைகள், விருப்பு வெறுப்புகள் முதலியவற்றைப் புரிந்துகொள்ள இதிலுள்ள மொழிபெயர்ப்புக் கதைகள் உதவுகின்றன. சிங்களப் படைப்பாளிகளான யசவர்த்தன ருத்ரிகு (ஒரே இரத்தம், ஒரு பெட்டகத்தின் கதை, புதல்வன் பிறந்தான், ராலஹாமியும் இரண்டு பெஞ்சுகளும்), ஜயசிங்க கோறளகம (பண்டாரம், மனச் சலனங்கள்), தெனகம சிறிவர்த்தன (டோஸன், தண்ணீரிலே போய்விட்ட தயிர்ச் சட்டிகள்), தர்சனாஸம்மி விஜேதிலக்க (நாட்டைக் கட்டியெழுப்புவோம்), எரெவ்வல நந்திமித்ர (ஓர் எழுத்தாளனின் கடைசிப் படைப்பு), விமலதாச சமரசிங்க (குடை), பந்துநாத தசநாயக்க (குணரத்தினம்), ஹேமரத்ன லியனராச்சி (சிறுத்தைப் பொம்மை), குணசேன விதான (எம்.பி.துரை அவர்கள்), நிசங்க ரணவக்க (பிரியாவிடை), நந்தசேன ஹேரத் (சம்பளநாள்), சிட்னி மார்க்கஸ் டயஸ் (வெண்புறாக்களின் ஓலம்), உபாலி வணிகசூரிய (புலம் பெயர்ந்தவர்கள், தந்தை பாதம் போற்றி), பியசிரி கொடித்துவக்கு (சாரதாவும் பேமசிரியும்), முதலானோரின் கதைகள் இங்கே தமிழாக்கம் செய்யப்பட்டுள்ளன. மீரா பதிப்பகத்தின் 73ஆவது பிரசுரமாக இந்நூல் வெளிவந்துள்ளது.

5806

சேது பந்தனம். த.கனகரத்தினம் (தமிழாக்கம்). சென்னை 600098: New Century Book House, 41 B, சிட்கோ இன்டஸ்ட்ரியல் எஸ்டேட், அம்பத்தூர், 2வது பதிப்பு, செப்டெம்பர் 2003, 1வது பதிப்பு, நவம்பர் 1979. (பெரம்பூர்: சொந்தம் பிரின்டர்ஸ், எண் 64, மதுரைசாமி மடம் தெரு).
xiv, 187 பக்கம், விலை: இந்திய ரூபா 55., அளவு: 18x12 சமீ., ISBN: 81-234-0803-X.

12 சிங்களச் சிறுகதைகளின் தமிழ் மொழிபெயர்ப்பு நூல். எழுபதுகளில் சிங்கள இலக்கியவானில் பிரபல்யமாகியிருந்த மார்ட்டின் விக்கிரமசிங்க (அடிமைகள்), குணதாச அமரசேகர (அபூர்வ சம்பவம்), ஒஸ்வின் த அல்விஸ் (இளம் பாளையின் கள்), மடவளை எஸ்.ரத்நாயக்க (சந்தவதி), கே.ஜயத்திலக்க (தண்டனை), எதிரிவீர சரத்சந்திர (காலம் கடந்த பிறகு), குணசேன வித்தான (துயர ஏணிகள்), ஏ.வீ.சரவீர (எங்களுக்கும் ஒரு நாள் பொழுது விடியாதோ), லீல் கணசேகரா (மறுபிறப்பு), ஜயலத் மனோரத்ன (கல்), லட்சுமி போம்புவல (பூக்காரி), சி.டி.நாணயக்கார (ஏன் முதலாளி) ஆகிய இலக்கியவாதிகளின் சிறுகதைகளின் தமிழ் மொழிபெயர்ப்புக்களை இந்நூல் உள்ளடக்கியுள்ளது.

5807

பிற மொழிச் சிறுகதைகள் சில. கே.எஸ்.சிவகுமாரன். கொழும்பு 6: மீரா பதிப்பகம், 191/23, ஹைலெவல் வீதி, கிருலப்பனை, 1வது பதிப்பு, ஒக்டோபர் 2007. (வத்தளை: பேஜ் அண்ட் இமேஜ், 202/2B, ரோயல் பேர்ள் கார்டின்ஸ்).
54 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 21.5x15 சமீ.

fP.b.மோப்பசான் (பிரான்ஸ்), அன்டன் செக்கோவ் (ருஷியா), நிக்கோலா மாக்கியவெல்லி (இத்தாலி), முல்க்ராஜ் ஆனந்த் (இந்தியா), ஹியு வோல்பொல் (இங்கிலாந்து), கத்தரின் மான்ஸ்பீல்ட் (நியுசிலாந்து), ஏ. கோனனோவ் (ருஷ்யா) ஆகிய உலகப்புகழ்பெற்ற எழுத்தாளர்களின் 11 கதைகள் இத்தொகுப்பில் அடங்கியுள்ளன. 1960 முதல் 80 வரையிலான காலத்தில் வெளிவந்த இப்பிறமொழிக் கதைகளைத் தமிழாக்கம் செய்து அவ்வப்போது, தமிழின்பம், மித்திரன் வாரமலர், போன்றவற்றில் எஸ்.சிவகுமாரன், ஈஸ்வரபுத்ரா போன்ற புனைபெயர்களில் வெளியிட்டு வந்தார். அவையே இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன.

5808

யுத்தத்தின் சாபம்: போர்க்கால மொழிபெயர்ப்புச் சிங்களச் சிறுகதைகள்.
வ.ஆ.தங்கவேலாயுதம். கொழும்பு 6: ஞானம் பதிப்பகம், 3B, 36வது ஒழுங்கை, 1வது பதிப்பு, ஜுன் 2008. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ் பிரைவேட் லிமிட்டெட், 48 B, புளுமெண்டால் வீதி).
viii, 96 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 22x14 சமீ. ISBN: 978-955-8354-24-7.

ஞானம் சஞ்சிகையில் வெளிவந்த ஆசிரியரின் கதைகளின் தொகுப்பாக இந்நூல் வெளிவருகின்றது. போர்க்காலச் சூழலைச் சித்திரிக்கும் 13 சிங்களக் கதைகளைத் தமிழில் மொழிபெயர்த்துத் தந்துள்ளார். சிங்கள எழுத்தாளர்கள் போர்க்காலச் சூழலை எவ்வாறு பார்க்கிறார்கள் என்ற எண்ணக்கருவை இக்கதைகள் எமக்கு ஊட்டுகின்றன. இந்நூலில் யுத்தத்தின் சாபம், முடிவில்லாத கண்ணீர், தலைவிதி, கொட்டி கந்தவுற (புலிகளின் முகாம்), ஜனவரி 31ம் திகதி, எதிரொலி, புஸ்பலதா, புயலுக்குப் பின், சரஸ்வதி, மட்ட யுத்தய எப்பா, பரமேஸ்வரி பொலிசுக்குப் போனாள், அதுவும் சிகப்பு இரத்தம் தான், ஒரு இராணுவச் சிப்பாயின் மரணம் ஆகிய கதைகள் இடம்பெற்றுள்ளன. வல்வையூரான் என்ற புனைபெயரிலும் அறிமுகமாகியிருக்கும் வ.ஆ.தங்கவேலாயுதம் வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். வல்வை சிவகுரு வித்தியாசாலை, சிதம்பராக் கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவர். 1967இல் தினபதி-சிந்தாமணி பத்திரிகைகளில் எழுத ஆரம்பித்த இவரது முதலாவது நூல் வாழ்க்கையின் சுவடுகள் 2005இல் வெளிவந்தது. சிறுவயதிலிருந்தே நாடகத்துறையில் ஈடுபாடு காட்டிவந்துள்ள இவர் 40 ஆண்டுகளுக்கு மேலாக நடிகராகவும், நெறியாளராகவும், தயாரிப்பாளராகவும் செயற்பட்டு பல மேடை நாடகங்களையும் குறும்படங்களையும் வழங்கியவர். கலைத்துறை ஈடுபாட்டுக்காக கலாபூஷணம் விருதினை 2007இல் பெற்றுக்கொண்டவர்.

899.(5) பிறமொழி நாவல்கள், குறுநாவல்கள்

5809

ஏர் விழா. சோமரத்ன பாலசூரிய (சிங்கள மூலம்), மடுளுகிரியே விஜேரத்ன (தமிழ் மொழிபெயர்ப்பு). கொழும்பு 10: எஸ்.கொடகே சகோதரர்கள், 675, மருதானை வீதி, 1வது பதிப்பு, 2006. (நுகேகொட: பியஸ்ரீ பிறின்ரிங் சிஸ்ரம்ஸ், 32 ஸ்ரீ சாரதா மாவத்தை, கங்கொடவில).
160 பக்கம், விலை: ரூபா 350., அளவு: 21.5x14 சமீ., ISBN: 955-20-9086-5.

களனி பல்கலைக்கழகத்தின் சிங்களப் பிரிவில் பேராசிரியராகக் கடமையாற்றும் சோமரத்ன பாலசூரியவின் **வப் மகுல** சிங்கள நாவலின் தமிழ் வடிவம். சிங்கள மூல நூல் 1986இல் எழுதப்பட்டது. இலங்கையில் சிங்கள மக்களின் கிராமிய வாழ்வியலையும் சமகால அரசியல் நிலைப்பாட்டையும் இந்நாவல் பேசுகின்றது.

5810

சித்தார்த்த யசோதரா: சிங்கள சரித்திர நாவல். சோமா ஜயக்கொடி (சிங்கள மூலம்), சரோஜினிதேவி அருணாசலம் (தமிழாக்கம்). கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், 361 ½ டாம் வீதி, 1வது பதிப்பு, 2008. (கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், 361 ½ டாம் வீதி).
x, 246 பக்கம், விலை: ரூபா 600., அளவு: 21.5x14 சமீ., ISBN: 978-955-659-106-0.

இந்நூல் **சிதுஹத் யசோதரா** என்ற சிங்கள வரலாற்று நாவலின் தமிழாக்கம். சித்தார்த்த யசோதரா தேரவாதம், மகாயானம் ஆகிய இரண்டு சம்பிரதாயங்களிலுமிருந்து பெற்றுக்கொண்ட தகவல்களை

ஆதாரமாக வைத்து பகவான் புத்தருடைய இல்லற வாழ்க்கையைப் பற்றிப் புனையப்பட்டதாகும். சித்தார்த்தர் வாழ்ந்த காலத்தில் வட இந்திய சமுதாய நிலவரங்கள், அங்கே நிலவிய சமய நம்பிக்கைகள், மதச் சடங்காசாரங்கள், தத்துவ தரிசனங்கள் என்பவை பற்றிய பல தகவல்கள் கதையுடன் பின்னப்பட்டுள்ளன. சித்தார்த்தரும் யசோதராவும் சம்பந்தப்பட்ட காதல் செய்திதான் நாவலின் கருப்பொருள். சித்தார்த்தர் யசோதராவைத் திருமணம் செய்து அவள் ஒரு குழந்தையைப் பெற்றெடுத்த தினத்தில் துறவறம் பூண்டமை அவர்மீது பாரிய பழியைச் சுமத்தக்கூடிய நிகழ்வாக வரலாற்றில் பதிவுபெற்றுள்ளது. இந்நிகழ்வின் பின்னணியை இந்நாவல் நியாயப்படுத்துகின்றது. இந்நூலாசிரியர் சோமா ஜயக்கொடி சிங்கள வாசகர் மத்தியில் பிரபல்யமானவர். சுமார் 250 நூல்களைத்தாண்டிய படைப்புலகப் பின்புலம் கொண்டவர். 1994இல் சிறந்த பெண் எழுத்தாளருக்கான வனிதா விருதை லங்காதீபவும், 2004இல் நவலிய விருதை திவயின பத்திரிகையும் இவருக்கு வழங்கியிருந்தன. மொழிபெயர்ப்பாளர் சரோஜினிதேவி அரசகரும மொழிகள் திணைக்களத்தில் மொழிபெயர்ப்பு அத்தியட்சகராகவும் கொழும்புப் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராகவும் பணியாற்றி ஓய்வுபெற்றவர். 2007ம் ஆண்டின் சிறந்த மொழிபெயர்ப்பாளருக்கான அரச விருதினைப் பெற்றவர்.

5811

மெலியார் மிடுக்கு. குமாரதுங்க முனிதாச. (சிங்கள மூலம்), சரோஜினிதேவி அருணாசலம் (தமிழாக்கம்). கொழும்பு 11: எம்.டி.குணசேனா, 217, ஒல்கொட் மாவத்தை, 1வது பதிப்பு, 1973. (கொழும்பு 11: எம்.டி.குணசேனா, 217, ஒல்கொட் மாவத்தை).
xxii, 106 பக்கம், சித்திரங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18x13 சமீ.

தமிழ் அறிஞர் உலகுக்கு நன்கு அறிமுகமான குமாரதுங்க முனிதாச சிங்கள மொழியின் மறுமலர்ச்சி இயக்கத்தின் முன்னோடி. எழுத்திலும் பேச்சிலும் பழமையுடன் தனிச் சிங்கள நடையைத் தீவிரமாகக் கையாண்டவர். இவரது ஹத்பன, மகுல்காம, ஹீன்சரய ஆகிய மூன்று சிறுவர் கதைகளும் டென்மார்க்கின் எச்.சி.அனசனின் இறவாப் புகழுடைய தேவதைக் கதைகளுடன் ஒப்புநோக்கப்படுபவை. **ஹீன்சரய** என்ற சிறுவர் கதையின் தமிழாக்கமே மெலியார் மிடுக்காகும். சாது மிரண்டால் காடு கொள்ளாது, கடுகு சிறிதானாலும் காரம் பெரிது ஆகிய பழமொழிகளை விளக்குவதாக இதன் கதைச்சாரம் அமைகின்றது. மிருகங்களே இக்கதையின் கதாபாத்திரங்கள். ஓணான் யானையுடன் பகைமை கொள்கின்றது. தந்திரக்காரியான நரி இவர்களிடையே புகுந்து ஓணானின் துணையுடன் சாகசங்கள் புரிகின்றது. நூலாசிரியை சரோஜினியின் தந்தை சோ.நடராசன் சிங்கள இலக்கியமான செலலிஹினி சந்தேசயவை தமிழாக்கம் செய்தவர். பாட்டனார் ஈழத்துக் கவிஞர் நவாலியூர் சோமசுந்தரப்புலவராவார்.

5812

வீழ்ச்சி. சினுவா ஆச்செபி. (மூலம்), என்.கே.மகாலிங்கம் (தமிழாக்கம்). கனடா: காலம், 16, Hampstead Court, Markam, Ontario L3R 3S7, 1வது பதிப்பு, ஜுலை 2007. (சென்னை 600 005: மணி ஆப்செட்).
182 பக்கம், விலை: இந்திய ரூபா 110., அளவு: 21.5x14 சமீ.

ஒரு நாடே தார்மீகமாக வீழ்ச்சியடைந்து இருளில் துழாவுகையில் ஒரு தனி மனிதன் அதனுடன் இணைந்து விழ்ச்சியடைகிறான் என்ற கருத்தை சித்திரிக்கும் நைஜீரிய நாவல். சுதந்திரத்திற்குப் பிந்தைய நைஜீரியாவின் சித்திரத்தை இது வழங்குகின்றது. ஒக்கொங்வா இனக்குழுவைச் சேர்ந்த ஓபி திறமையான மாணவன். அரசாங்கத்தினதும், தனது சாதிச்சங்கத்தினதும் ஆதரவுடன் லண்டன் சென்று பயின்று பின்னர், ஊழல் மலிந்த நாட்டைத் திருத்தும் புத்துணர்வுடன் தனது தாயகம் திரும்பி அரச வேலையில் அமர்கிறான். லஞ்ச ஊழல் இல்லாத ஒரு நைஜீரியாவை அமைக்கவேண்டும் என்ற கனவுகாணும் ஓபி தன்னை ஒரு போராளியாகக் காண்கிறான். தாழ்த்தப்பட்ட இனக்குழுவைச்சேர்ந்த கிளாராவைக் காதலித்து அதன் மூலம் ஏற்படும் குடும்ப நெருக்கடிகளால் அவளை கைவிடுகிறான். அவளது கருக்கலைப்பிற்கும், அவளிடம் தான் முன்னர் பட்ட கடனை மீளளிக்கவும் லஞ்சம் பெறத்தூண்டப்பட்டு மாட்டிக்கொண்டு குற்றவாளியாகிறான். 1930இல் நைஜீரியாவில் பிறந்த சினுவா ஆச்செபி ஈபோ இனத்தைச் சேர்ந்தவர். நைஜீரியாவிலும், அமெரிக்காவிலும் ஆங்கிலப் பேராசிரியராகப் பணியாற்றியவர். தற்போது அமெரிக்காவிலேயே புலம்பெயர்ந்து வாழ்கிறார். இவரது முன்னைய நாவலான சிதைவுகளும் தமிழாக்கம் செய்யப்பட்டுள்ளது. (பார்க்க: நூல்தேட்டம் பதிவு 1844)

899.(6) மொழிபெயர்ப்புக் கட்டுரைகள்

5813

போர்க்காலச் சிந்தனைகள். லூஷுன் (மூலம்), க.நடனசபாபதி (தமிழாக்கம்). கொழும்பு 11: தேசிய கலை இலக்கியப் பேரவை, சவுத் ஏஷியன் புக்ஸ், 44, 3வது மாடி, மத்திய கொழும்பு கூட்டுச் சந்தைத் தொகுதி, 1வது பதிப்பு, மார்கழி 1999. (தெகிவளை: டெக்னோ பிரின்ட்).
120 பக்கம், விலை: ரூபா 100. அளவு: 21.5X14 சமீ.

சீனாவின் நவீன இலக்கியவாதிகள் எனக் காணப்படுவோருக்கு முன்னோடி லூஷுன். தமிழுக்குப் பாரதியும் புதுமைப்பித்தனும் எவ்வாறோ அவ்வாறே லூஷுனைக் கொள்ள இயலும். சீனப் புரட்சியில் லூஷுன் ஆற்றிய இலக்கியப் பணி பெரியது. அதனால் தான் மா ஓ சேதுங் அவரைக் கட்சியில் இல்லாத கம்யூனிஸ்ட் என்று குறிப்பிட்டார். மொழிபெயர்ப்பாளர் நடனசபாபதி பருத்தித்துறை புலோலியச் சேர்ந்தவர். 25.02.1936இல் பர்மாவில் பிறந்தவர். தென் இந்தியாவில் தமிழ்நாட்டில் வாழ்ந்து கல்விகற்றுப் பட்டதாரியானவர். தனது 28ஆவது வயதில் இலங்கை நீர்ப்பாசனத் திணைக்களத்தில் இரசாயனத்துறையில் பணியாற்றியவர். 1985இல் இவர் அரச பணியிலிருந்து ஓய்வுபெற்றார்.

900 புவியியல், வரலாறுகள்

5814

ஸ்கோர்ஸனியின் சிறப்பு நடவடிக்கைகள். ஓட்டோ ஸ்கோர்ஸனி (மூலம்), மார்ஷல் (தமிழாக்கம்). கிளிநொச்சி: பந்தர் பிரசுரம், 1வது பதிப்பு. மே 2004. (கிளிநொச்சி: அன்பு அச்சகம், யாழ். சாலை).
284 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு 21x15 சமீ.

Skorzeny's Special Missions என்ற நூலின் தமிழாக்கம் இது. கேர்ணல் ஓட்டோ ஸ்கோர்ஸனி, தனது பல துணிச்சல்மிகும் அருஞ் செயல்களை இங்கே முழுமையாகவும் உயிரோட்டமாகவும் சொல்கின்றார். 1943இல் அவர் ஒரு சிறப்புப் பட்டாலியனின் தளபதியாக்கப்படுகின்றார். பிரபல்யம் மிக்க முசொலினி மீட்பு, புடாபெஸ் கோட்டையில் இருந்து ஹேர்த்தியை அகற்றியது போன்ற பணிகளை இந்தப் படைகளை வைத்துத் தான் அவர் சாதித்தார். கடந்த காலங்களில் யுத்தம் பற்றி வெளியான மிகச்சுவையான படைப்புகளுள் இந்நூலும் ஒன்று.

909 நாகரீகங்கள்

5815

உலக வரலாறு: முதற் பாகம். த.இராமநாதபிள்ளை. யாழ்ப்பாணம்: த.இராமநாதபிள்ளை, பருத்தித்துறை, 1வது பதிப்பு, 1951. (யாழ்ப்பாணம்: சைவப் பிரகாச அச்சியந்திரசாலை).
382 பக்கம், விலை: ரூபா 5.00, அளவு 22x14.5 சமீ.

இந்நூலின் முதலாவது பகுதி முதல் ஆறு அதிகாரங்களைக் கொண்டு பிரசுரமாகியுள்ளது. 49 பாடங்களை உள்ளடக்கிய இந்நூல், ஆதிகால மக்கள் (பூமியின் உற்பத்தி, கற்கால மனிதர், சீர்திருந்திய மக்கள், எகிப்தியர், யூதர், யவனர், யவனரும் பார்சியரும், சீனர், சீனர் அரசியல், ஜப்பானியர்), தமிழர் (இந்து தேசம், பண்டைக்காலத் தமிழர், தமிழ் நாகரீகமும் தொல்காப்பியமும், கடைச்சங்கம், தமிழர் வணிகமும் குடியேற்றமும்), ஆரியர் (ஆரியர் நாகரீகம், இந்த நேமிவேந்தர், கௌதம புத்தர், மாவீரர், கிரேக்கர் வருகை, மோரியர், அசோகன், குழப்பகாலம், குப்தர்கள், கருஷனும் சிற்றரசுகளும்), சிங்களர் (இலங்கை மகாவம்சம், பண்டைய அரசர்களும் பௌத்த மதமும், தமிழர் படையெடுப்பும் துட்டகமுனுவும், சிங்களர் அரசியல்), உரோமர் குடியரசு (இத்தாலிய தேயப் பழங்குடிகள், அரசர்கள், இலத்தின் ஐக்கிய நகரங்கள், உரோமாபுரியின் உள்நாட்டு வரலாறு, பினீசியர், மசிடோனியர், ஆதிகால இலத்தீன் நூல் வரலாறு, கமவியக்கமும் உண்ணாட்டுக் கலகமும், மிதிருடாற்றிஸ், யூலியஸ் கைசர்), உரோமர் தனிக்கோல் (கைசர் அகஸ்தர், இலத்தின் செம்மொழிக்காலம், உரோமரின் வாழ்க்கை, உரோமருடைய தமிழ்நாட்டு வாணிகம், கைசர் குடும்பத் தனிக்கோலர், பிளாவிய குடும்பத் தனிக்கோலர், நேர்வா-திராசன்-அத்திரியன், பிற்கால இலத்தின் நூல் வரலாறு, அந்தோநயினார், கலகக் காலம்) ஆகிய பிரதான தலைப்புகளின் கீழ் இந்நூல் உலக வரலாற்றைப் பதிவுசெய்துள்ளது.

5816

உலக வரலாறு: இரண்டாம் பாகம். த.இராமநாதபிள்ளை. யாழ்ப்பாணம்: த.இராமநாதபிள்ளை, பருத்தித்துறை, 1வது பதிப்பு, 1953. (யாழ்ப்பாணம்: சைவப் பிரகாச அச்சியந்திரசாலை).
287 பக்கம், விலை: ரூபா 3., அளவு 22x14.5 சமீ.

இந்நூல் ஏழாம் அதிகாரம் முதல் 15ம் அதிகாரம்வரை ஒன்பது அதிகாரங்களையும், 47 பாடங்களையும் உள்ளடக்கியது. தமிழ் வேந்தர், இலங்கை சுலவட்சம். உரோமர் தனிக்கோல் இறுதிக் காலம், முகமதியர், ஆங்கிலர், முகம்மதியரும் இந்துக்களும், இலங்கை மலைநாட்டரசர், ஆங்கிலர் முடியும் குடியும், பிரித்தானிய இராச்சியம் ஆகிய தலைப்புகளில் உலக வரலாறும் இலங்கை வரலாறும் சொல்லப்படுகின்றன.

5817

மனிதன் எப்படித் தோன்றினான்?. ந.சி.கந்தையாபிள்ளை. சென்னை 1: எம்.சக்கரவர்த்தி நயினார், முத்தமிழ் நிலையம், 75, வரதா முத்தியப்பன் தெரு, 1வது பதிப்பு, ஜுலை 1947. (Madras 1: The Royal Printing Works).
44 பக்கம், விலை: அணா 8.

மனிதன் எப்படித் தோன்றினான்?. ந.சி.கந்தையாபிள்ளை. சென்னை 1: ஆசிரியர் நூற்பதிப்புக் கழகம், 53-56 பவழக்காரத் தெரு, 3வது பதிப்பு, 1956, 1வது பதிப்பு, ஜுலை 1947. (அச்சக விபரம் தரப்படவில்லை).
64 பக்கம், விலை: அணா 8.

யாழ்ப்பாணத்து நவாலியூர் ந.சி.கந்தையாபிள்ளை என்று அந்நாளில் தமிழகத்திலும், மலேயாவிலும் பிரபல்யமாகியிருந்தவர் பன்னூலாசிரியர் ந.சி.கந்தையாபிள்ளை. இவ்வுலகில் தோன்றிய உயிர்கள் அறிவு வளர்ச்சிக்கு ஏற்ப அடுத்தடுத்த பிறவிகளில் மேலான உடல்களைப் பெற்று இறுதியில் மனிதனாகப் பரிணாமம் பெற்றுள்ளன என்பதை திருவாசகத்தின் "புல்லாகிப் பூண்டாய்.." என்ற வரிகள் விளக்குகின்றன. அதே கருத்தையே இன்றைய நவீன அறிஞர்களும் கூறுகின்றனர். இப்பரந்த உலகில் ஆங்காங்கு வாழும் மக்கள் எல்லோரும் நாகரிக வளர்ச்சியில் ஒரே வகையான பல படிகளைத் தாண்டி வந்துள்ளனர். மனித சமூகத்தில் தோன்றியுள்ள மொழி, சமயம், முதலியனவும், இசை, கூத்து, மருந்து, கணிதம், போன்ற எல்லாக் கலைகளும் பரந்த உலகில் ஆங்காங்கே ஒரே வகையாகத் தோன்றி வளர்ச்சியடைந்துள்ளன. மனித வரலாற்றைக் கற்பதால் நாம் சரித்திரத் தொடர்பான பல பொருட்களை எளிதில் விளங்கிக்கொள்ளலாம் என்பதால் மேல்நாட்டறிஞர்கள் மனித வரலாற்றை மிகச் சிறப்புடையதெனக்கொண்டு அதனை ஒரு கலையாக வளர்த்து வந்துள்ளனர். அவர்களிடையே இதனால் மூட நம்பிக்கைகள் மறைந்துவருகின்றன. இச்சிறு நூலில் மனித வரலாற்றை இயன்ற அளவு சுருக்கியும் விளக்கியும் நூலாசிரியர் கூறியிருக்கிறார். (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

910 பொதுப் புவியியல்

5818

புதிய புவியியல்: இலங்கை. க.குணராசா (பதிப்பாசிரியர்). யாழ்ப்பாணம்: புவியியல் வெளியீடு, புவியியற் கலைக் கழகம், 1வது பதிப்பு, டிசம்பர் 1970. (யாழ்ப்பாணம்: ஸ்ரீலங்கா புத்தகசாலை, 234 காங்கேசன்துறை வீதி).
176 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 4., அளவு: 21x14 சமீ.

புவியியற் கலைக் கழகத்தைச் சேர்ந்த எட்டு புவியியல் ஆசிரியர்கள் இணைந்து ஆக்கியுள்ள நூல். 18 அத்தியாயங்களில் இலங்கையின் தரைத்தோற்றம், அமைப்பு, காலநிலை, காலநிலைப் பிரதேசங்களும் இயற்கைத் தாவரங்களும், சுயதேவைக்குரிய பயிர்கள், வர்த்தகப் பயிர்கள், கனிப்பொருட்கள், கைத்தொழில்கள், விலங்கு வேளாண்மை, மீன்பிடித் தொழில், குடிப்பரம்பல், வர்த்தகமும் போக்குவரத்து வசதிகளும், தென் மேல் தாழ்நிலம், மலைநாடு, உலர் பிரதேசத் தாழ்நிலங்கள், பொருளாதார அபிவிருத்தித் திட்டங்கள், யாழ்ப்பாணக் குடாநாடு ஆகிய பிரிவுகளில் இலங்கையின் புவியியல் விளக்கப்பட உதவியுடன் விபரிக்கப்பட்டுள்ளது. (இந்நூல் School of Oriental and African Studies (SOAS), University of London நூலகத்தில் பார்வையிடப்பட்டது. பதிவிலக்கம் 521936).

5819

பூமித் தாய். செங்கை ஆழியான் (இயற்பெயர்: க.குணராசா). யாழ்ப்பாணம்: புதிய உயர் கல்லூரி வெளியீடு, பட்டப் படிப்புகள் பிரிவு, ஆரியகுளம் சந்தி, 1வது பதிப்பு, டிசம்பர் 1994. (யாழ்ப்பாணம்: மணி ஓசை அச்சகம், சென் பற்றிக்ஸ் வீதி).
(8), 92 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14.5 சமீ.

சூழலை அழிக்கும் மானிடச் செயற்பாடுகளையும், அதனால் தோன்றியுள்ள அவலங்களையும் இந்நூல் விளக்குகின்றது. மனிதனின் தேவைகளின் அதிகரிப்பும், பேராசையும் ஒன்றுதிரண்டு பூமியின் அளப்பரிய வளங்களைத் திட்டமிடப்படாத முறையில் எதிர்விளைவுகளைக் கருத்தில்கொள்ளாது அழித்து வருகின்ற நிலையில் விரைந்து வரும் உலக அழிவைத் தடுத்து நிறுத்தமுடியாவிட்டாலும்கூட தாமதப்படுத்தலாம் என்ற மன உணர்வினையும் விழிப்புணர்வினையும் ஏற்படுத்தும் வகையில் சுற்றுச்சூழலியல் தொடர்பான இந்நூல் தனது 20 அத்தியாயங்களின் வாயிலாகவும் சில உணர்வலைகளைத் தோற்றுவிக்கின்றது.

911 பிரயாண நூல்கள், வழிகாட்டிகள்

5820

ஆபிரிக்க அனுபவங்கள்: பிரயாணக் கட்டுரைகள். ஏ.எம்.ஏ.அஸீஸ். சென்னை 1: திரீயெம் பப்ளிஷர்ஸ், 36 அரண்மனைக்காரத் தெரு, 1வது பதிப்பு, டிசம்பர் 1969. (சென்னை 1: திரீயெம் பிரிண்டர்ஸ், 36 அரண்மனைக்காரத் தெரு).
230 பக்கம், விலை: ரூபா 3.50.

இந்நூலில் இடம்பெற்றிருக்கும் முப்பத்தைந்து கட்டுரைகளும் நூலாசிரியரின் மத்திய ஆபிரிக்க, தென்னாபிரிக்க அனுபவங்களை விவரிப்பன. ஆசிரியரின் முன்னைய நூலான **கிழக்காபிரிக்கக் காட்சிகளின்** இரண்டாம் பாகமாக அமைந்துள்ள இந்நூலில் உள்ள கட்டுரைகளும் தினகரன் வார மஞ்சரியில் தொடராக வெளியிடப்பட்டன. மலேசியாவின் பினாங்கு மாநிலத்திலுள்ள தாவூத் ரெஸ்டாரண்ட் உரிமையாளர் எம்.என்.எம்.யூசுப் அவர்களின் நிதியுதவியுடன் இந்நூல் வெளியிடப்பட்டதாகக் குறிப்புள்ளது. (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5821

இலங்கைத் தீவு. ஜே.விஜயதுங்கா (மூலம்), கே.வி.இராமச்சந்திரன் (தமிழாக்கம்). சென்னை 14: அருணோதயம் வெளியீடு, 65 அருணோதயம், இராயப்பேட்டை, 1வது பதிப்பு, செப்டெம்பர் 1959. (சென்னை 2: மெட்ரோபொலிட்டன் பிரிண்டர்ஸ்).
142 பக்கம், விலை: ரூபா 1.40, அளவு: 18x12.5 சமீ.

யுனெஸ்கோ உதவியுடன் தென்மொழிகள் புத்தக டிரஸ்ட் ஆதரவில் பதிப்பிக்கப்பெற்ற இந்நூல் உத்தர பிரதேச கவர்னராக இருந்த வி.வி.கிரி அவர்களினது முன்னுரையுடனும், சென்னைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் டாக்டர் ஏ.எல்.முதலியாரின் அணிந்துரையுடனும் வெளிவந்துள்ளது. இந்நூலில் முதல் தோற்றம், அற்புத அழகு, தந்தமும் இலவங்கப் பட்டையும், என் உறவினர் சிலர், அலுத் அவுருத்த அல்லது புத்தாண்டு, வைசாகம், புண்ணிய ஸ்தலங்களும் திருவிழாக்களும், சிலோன் கலாச்சாரம், சிங்களக் கவிதை, காம கதா: சிங்களக் கிராமியக் கதை, விளையாட்டுக்கள், இசை-நடனம்-நாடகம் ஆகிய தலைப்புகளில் சுதந்திரத்திற்குப் பின்னைய இலங்கை பற்றிய விவரணம் காணப்படுகின்றது. இலங்கை நாட்டையும், அதன் **சிங்கள** மக்களையும், அவர்களது கலை, கலாச்சாரம் ஆகியவற்றையும் நூலாசிரியர் இந்நூலில் விபரித்துச் செல்கிறார்.

5822

இலங்கையின் புராதன நகரங்களும் சரித்திரச் சான்றுகளும். S.T.G.சம்பந்தன். கோப்பாய்: எஸ்.ஆர்.கனகசபை, இளைப்பாறிய ஓவிய வித்தியாதரிசி, பெரிய வீடு, 1வது பதிப்பு, 1959. (யாழ்ப்பாணம்: ஸ்ரீ சண்முகநாத அச்சகம்).
147 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை.

யாழ்ப்பாணக் குடாநாடு, அக்கரைப்பற்று, அனுராதபுரம், அம்பாறை, கண்டி, கல்ஓயா, கொழும்பு, சீகிரிய, பொலந்நறுவை, மிஹிந்தலை, நுவர எலிய, சிவனொளிபாதமலை, யாப்பாஹுவ, காலி, கதிர்காமம் ஆகிய பழம்பெருமைவாய்ந்த இலங்கையின் புராதன நகரங்களையும் இற்றைவரை சான்றாக எஞ்சியுள்ள சரித்திரச் சின்னங்களையும் பள்ளிச் சிறாரும் தெளிவாக அறியும் வகையிலும், கல்விச் சுற்றுப் பிரயாணங்களின்போது நேரில் சென்று காண்போருக்கு தேவையான பின்புல அறிவினை வழங்கும் வகையிலும் இயன்றளவு படங்களுடன், செறிவாகவும் சுருக்கமாகவும் விடயங்களை இந்நூல் பதிவுசெய்துள்ளது. நூலாசிரியர் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் விரிவுரையாளராவார். (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5823

கிழக்காபிரிக்கக் காட்சிகள்: பிரயாணக் கட்டுரைகள். ஏ.எம்.ஏ.அஸீஸ். சென்னை 1: பாரி நிலையம், 59, பிராட்வே, 1வது பதிப்பு, டிசம்பர் 1967. (சென்னை 5: ஜீவன் பிரஸ்).
203 பக்கம், விலை: ரூபா 5.

இலங்கை அரசாங்க சேவைக் கமிஷன் உறுப்பினராகப் பணியாற்றிய இந்நூலாசிரியர், தான் கிழக்காபிரிக்காவில் ஒரு மாதம் சுற்றிப் பிரயாணம் செய்து பெற்ற அனுபவங்களைத் தினகரன் வாரமஞ்சரியில் எழுதிவந்தார். அவை முப்பத்தொரு கட்டுரைகளாக விரிந்திருந்தன. அவற்றின் நூல்வடிவமே இதுவாகும். பொரும்பாலும் ஆங்கிலத்தில் எழுதப்பட்ட கட்டுரைகளை காவலூர் இராசதுரை தமிழாக்கம் செய்து வழங்கியிருந்தார். (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5824

கைலாசம் கண்டேன். ஸ்வாமி சச்சிதானந்தா. கண்டி: திவ்ய ஜீவன சங்கம், சச்சிதானந்த தபோவனம், தன்னக்கும்பரை, 1வது பதிப்பு, 1960. (கொழும்பு 12: சுதந்திரன் அச்சகம்).
196 பக்கம், விலை: ரூபா 3.00.

ஆன்மீகச் சுற்றுலா தொடர்பான பிரயாண நூல் இது. இமயம் சார்ந்த பிரதேசங்களின் கிராமங்களின் பூகோள அமைப்பு, சீதோஷ்ண நிலை, அங்கு வதியும் மக்களின் வாழ்க்கை, ஆலயங்களின்-கைலாயங்களின் நிலை ஆகியவற்றை விளக்கும் சமூக, சமய வரலாற்று இலக்கியமாகவும் அமைகின்றது. இந்நூலில் கைலையங்கிரியின் தோற்றம், கைலை செல்லத் தீர்மானம், காத்கோடத்தில் பஸ் பிரயாணம், இராணிகேட், பாகேஸ்வரம், ராம் கங்கா, ரேதி, மிலம், மலை மக்கள் பண்பு, உண்டதுராக் கணவாய், குதிரைகள் கஷ்டம், தீபெத், கைலைநாதன் திருமுடி, கைலைத் தரிசனம், கைலையும் கதைகளும், கௌரிகுண்டம், மானச சரோருவம், லிப்புக் கணவாய், கைலை நடையின் கடைசிக்கட்டம், அமரநாதம் ஆகிய தலைப்புகளில் "யோகிராஜ்" சுவாமி சச்சிதானந்தா அவர்கள் சுவையாகத் தன் பிரயாண அனுபவத்தை விபரித்துள்ளார். திவ்ய ஜீவன சங்கத்தின் தாபகரும் தலைவருமான ஸ்ரீ சுவாமி சிவானந்தா இந்நூலுக்கான ஆசியுரையையும், சேர்.கந்தையா வைத்தியநாதன் அணிந்துரையையும், கே.பி.ஹரன் அவர்கள் பாராட்டுரையையும், சுதந்திரன் ஆசிரியர் எஸ்டி.சிவநாயகம் மதிப்புரையையும் வழங்கியுள்ளனர். (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5825

சிந்தையள்ளும் சிவனொளிபாதமலை. சாரல்நாடன். கொட்டகலை: சாரல் வெளியீட்டகம், இல.60, ரொசிட்டா வீடமைப்புத் திட்டம், 1வது பதிப்பு, மார்ச் 2009. (கொழும்பு 6: டெக்னோ பிரிண்டர்ஸ், 55 டாக்டர் ஈ.ஏ.குரே மாவத்தை).
72 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 150., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-955-8589-16-8.

இலங்கையின் மத்திய மலைப்பிரதேசத்தில் சீர்பெற்று விளங்கும் சிவனொளிபாதமலை பற்றிய வரலாற்றினை சுவைபடக்கூறும் நூல். வண்ணத்துப்பூச்சிகள், மலைச்சிகரத்தில், காலடிச் சின்னம், இரு மார்க்கங்கள், சமந்தகூடம், யாத்திரிகைப் பருவம், பார்வை தோற்றமும் சூரிய உதயமும், சிவனொளிபாத மலையின் மாற்றுப் பெயர்கள், சிவனொளிபாத மலைக்கு சிறப்பச் சேர்த்த மன்னர்கள், சிவனொளிபாத மலையடிவாரத்தில் ஊற்றெடுக்கும் பிரதான நதிகள் ஆகிய தலைப்புகளின்கீழ் சுவையான பல தகவல்கள் இந்நூலில் தரப்பட்டுள்ளன. சுமார் 16 உசாத்துணை நூல்களின் ஆதாரங்களுடன் இந்நூல் கறுப்பு வெள்ளை புகைப்படங்கள் சகிதம் பதிவாகியுள்ளது.

5826

நவ இலங்கை. எச்.ஏ.ஜே.ஹுலுகல்ல (மூலம்), குல.சபாநாதன் (தமிழாக்கம்). கொழும்பு: இலங்கை பிரசுர கட்டுப்பாட்டுப் பகுதியினர், 1வது பதிப்பு, 1951. (கொழும்பு: இலங்கை அரசினர் அச்சியந்திரசாலை).
88 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x13.5 சமீ.,

பல நூற்றாண்டுகளுக்கு முந்தைய ஆரியர் குடியேற்றம், பௌத்தம், முடிக்குரிய குடியேற்ற நாடு, மக்கள், இந்தியர், பொருளாதார வளம், கல்வியும் சமுதாய சேவையும், சுதந்திர உதயம், அரசியற் சீர்திருத்தம், கபினெற் முறை, கபினெற் ஆட்சிமுறை, புதிய டொமினியன், சுதந்திர இலங்கை, ஈழநாட்டு ஸ்தலங்கள், பிரதானமான கத்தோலிக்க கோயில்கள், போன்ற பல்வேறு தலைப்புகளில் நீங்கள் இலங்கையைத்

தரிசிக்க விரும்பினால், முன்னோடியாக என்னென்ன விடயங்களை அறிந்துகொள்ள விரும்புவீர்களோ அவை அனைத்தும் பெரும்பாலும் இந்நூலில் பதிவுசெய்யப்பட்டுள்ளன.

5827

ஸ்ரான்புள்ளில் இருந்து கெய்ரோ வரை: ஒரு தரைவழிப் பயணம். இ.குருநாதன். New Malden KT3 3EE: நான்குரச வெளியீடு, 36, Beechcroft Avenue, 1வது பதிப்பு, 2005. (நுவர எலியா: ஜெயதிஸ்ஸ பிரின்டர்ஸ்).
(6), 74 பக்கம், வரைபடம், புகைப்படங்கள், விலை: ஸ்டேர்லிங் பவுண் 2., அளவு: 22x15 சமீ.

இந்நூல் ஒரு தரைவழிப் பயணமான பிரயாண அனுபவத்தினை மற்றையவர்களுடன் பகிர்ந்துகொள்ளும் எண்ணத்தின் வெளிப்பாடாகும். 14பேருடன் சேர்ந்து சென்ற ஒரு கூட்டுப் பயணத்தின் ஒத்துழைப்பான நட்புணர்வையும், கூட்டுச் செயற்பாட்டினையும் பற்றி ஆசிரியர் சிலாகித்துக் குறிப்பிட்டுள்ளார். நூலாசிரியர் காவலூர் கரம்பனைச் சேர்ந்தவர். யாழ்.சென் ஜோன்ஸ் கல்லூரியின் பழைய மாணவர். உதவி மருத்துவராக (RMP) தொழில்புரிந்து பின்னர் 1975இல் இலண்டனில் குடியேறியவர்.

915 பிரதேசப் புவியியல்

5828

இலங்கைப் புவியியல். க.குணராசா. யாழ்ப்பாணம்: கமலம் பதிப்பகம், 82, பிரவுண் வீதி, நீராவியடி, புதிய பதிப்பு, செப்டெம்பர் 2002, 1வது பதிப்பு, ஆகஸ்ட் 1963, திருத்திய 22ம் பதிப்பு, செப்டெம்பர் 1995. (அச்சக விபரம் தரப்படவில்லை).
265 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 21x14 சமீ.

கடந்த மூன்று தசாப்தங்களாக இலங்கைப் பாடசாலைகளின் தமிழ்மூல புவியியல் மாணவர்களின் ஏகபோக உப பாடநூலாக விளங்கிய நூல் இது. இலங்கையின் அமைப்பியல், இலங்கையின் காலநிலையியல், இலங்கையின் மக்களியல், இலங்கையின் பொருளாதார நடவடிக்கைகள், இலங்கையின் அபிவிருத்தியியல் ஆகிய 5 தலைப்புகளின் கீழ் இலங்கைப் புவியியல் பதிவுக்குள்ளாக்கப்பட்டுள்ளது.

5829

சேது சமுத்திரம் கப்பற் கால்வாய்: அமைவிடம் மற்றும் பௌதிகச் சூழல் பற்றி ஓர் ஆய்வு. எஸ்.அன்ரனி நோர்பேட். கொழும்பு 6: இலங்கை முற்போக்குக் கலை இலக்கியப் பேரவை, இல.5 B, 1ம் சப்பல் ஒழுங்கை, 1வது பதிப்பு, ஏப்ரல் 2009. (கொழும்பு 6: ரெக்னோ பிரின்ட், 55 டாக்டர் ஈ.ஏ.குரே மாவத்தை).
74 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 22 x14.5 சமீ., ISBN: 978-955-1319-17-5.

2008 ஆகஸ்ட் மாதத்தில் நிகழ்த்தப்பட்ட மலையகப் படைப்பாளி கே.கணேஷ் நினைவுப் பேருரையின் நூல்வடிவம். சேது சமுத்திரக் கப்பற் கால்வாய் செயற்றிட்ட விருத்திகள், சேது சமுத்திரக் கப்பற் கால்வாயின் அமைவிடமும் பௌதிகச் சூழலும், இராமர் பாலத்தினை விஞ்ஞானரீதியாக விளங்கிக் கொள்ளல், கால்வாய் திட்டத்தினால் ஏற்படும் நன்மைகள், கால்வாய் திட்டத்தினால் ஏற்படும் பாதிப்புகள் ஆகிய 5 தலைப்புகளில் இந்நூல் விரிகின்றது. கொழும்பு பல்கலைக்கழகத்தில் பேராசிரியராகப் பணியாற்றும் சூசைப்பிள்ளை அன்ரனி நோர்பேட், புவியியல் கற்கையின் சமகாலச் செல்நெறிகளையும் மாற்றங்களையும் உடனுக்குடன் உள்வாங்கி கற்றல் கற்பித்தல் செயற்பாட்டின் புதிய நுட்பங்களை விருத்தி செய்து வருபவர். அவ்வகையிலேயே இந்நூலின் வரவும் அமைந்துள்ளது.

920 வாழ்க்கை வரலாறு, ஞாபகார்த்த மலர்கள்

5830

தந்தையார் பதிற்றுப் பத்து (மூலம்). க.சோமசுந்தரம்பிள்ளை. பேராதனை: க.கதிரவேலுப்பிள்ளை, 1வது பதிப்பு 1933. (சுன்னாகம்: திருமகள் அழுத்தகம்).
59 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை.

தந்தையார் பதிற்றுப் பத்து (மூலம்). க.சோமசுந்தரம்பிள்ளை. யாழ்ப்பாணம்: செ.யே.இளையதம்பி, தமிழ்ப் பாதுகாப்புக் கழகம். நவாலி, 2வது பதிப்பு 1961, 1வது பதிப்பு 1933. (சுன்னாகம்: திருமகள் அழுத்தகம்).

68 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை.

1207 பாடல்வரிகளைக் கொண்ட இந்நூலில் வளர்த்த பத்து, கற்பித்த பத்து, ஒழுக்கமுரைத்த பத்து, தெய்வத் திறனுரைத்த பத்து, விதித்ததுரைத்த பத்து, விலக்கியதுரைத்த பத்து, முதுமொழிப் பத்து, பழங்கதைப் பத்து, இரங்கற் பத்து, கடவுட்பராவிய பத்து ஆகிய தலைப்புகளில் அவை பதிவுபெற்றுள்ளன. தம்மைப் பெற்று வளர்த்த தந்தையார் நவாலிப் பழங்குடித் தோன்றல் அருமையினார் கதிர்காமரது செய்நன்றியை மறவாத பாராட்டுமுகத்தால் அவர் தம்மைப் பெற்று வளர்த்துக் கற்பித்தவற்றையும், அவருக்கு நல்லருள் கொடுக்கவேண்டுமென்று கடவுளைப் பராவியதையும் பத்து வகையாக அடைவுபடுத்தி, ஒவ்வொன்றுக்கும் பத்துப் பத்து அகவற் பாக்களாக நூறு அகவற் பாக்களால் தந்தையார் பதிற்றுப்பத்து என்ற இந்நூலை புலவரவர்கள் ஆக்கித் தந்துள்ளார். இந்நூலின் பின்னிணைப்புகளாக கையறுநிலைக் கலிவெண்பாட்டு, நவாலியூர் அருமையினார் வன்னியசேகர முதலி மரபு ஆகியவை இடம்பெற்றுள்ளன. (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

920.01 துறைசாரா வாழ்க்கை வரலாறுகள்

5831

கம்பிகள் ஊடாக. பாரிஸ் குடும்பி (இயற்பெயர்: வெற்றிவேலு ஜெயேந்திரன்). பாரிஸ்: திருமதி வெற்றிவேலு யோகசோதி, யோகா பதிப்பகம், 1வது பதிப்பு, 2005. (வெள்ளவத்தை: சக்திவேல் வெற்றிவேலு, 98, மனிங் பிளேஸ்).
(8), 123 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x15 சமீ., ISBN: 955-98997-0-8.

“இது வியாபார நூல் அல்ல-வாழ்ந்த வழி மாறியவனின் சொந்தக் கதை” என்ற உப தலைப்புடன் எழுதப்பட்ட சுய வரலாற்று நூல். “பிரான்ஸ் வாழ் தமிழர்களிலே எல்லாவற்றிலும் முதன்மையாகத் திகழ்ந்து, பிரெஞ்சுக்காரர்களே பொறாமையால் பெருமூச்சு விடுமளவிற்கு பெருமையாக வாழ்ந்து காட்டியதோடு, தமிழினத்தையும், தாயகத்தையும் உளமார நேசித்து தாய்மண் விடுதலைக்காக பொருண்மியப் பங்களிப்பை நல்கிய நல்லிதயம் உள்ள ஒருவனை சூழ்ச்சிக்காரர் கூட்டமொன்று வீழ்த்திய சரித்திரம் இது” என்று பதிப்புரை பதிவுசெய்கின்றது. முகவுரையில் ஆசிரியர் “இக்கதையில் எவையும் கற்பனை இல்லை என்பதையும், முழுமையான சொந்தக் கதை என்பதையும் அவன், இவன் என்று அழைக்கப்படும் கதாநாயகனான தான் தனது கடந்தகால பல தவறுகளைச் சுயதணிக்கை செய்ததையும், நிகழ்காலத் தவறுகளைச் சேர்க்கத் தவறியதையும் வெளிப்படையாகவே குறிப்பிட்டுள்ளார்.

5832

சந்திப்பும் சிந்திப்பும். கே.பி.நடனசிகாமணி. தெகிவளை: இலங்கை மக்கள் பொதுப்பணி மன்றம், 44 அல்பேர்ட் பிளேஸ், 1வது பதிப்பு, நவம்பர் 1999. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ் பிரைவேட் லிமிட்டெட், 48 B, புளுமெண்டால் வீதி).
(12), 184 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 200., அளவு: 22x14 சமீ.

சிரேஷ்ட பத்திரிகையாளரும் கவிஞருமான கே.பி.நடனசிகாமணி, தான் அறிந்த வீரமாமுனிவர், ஜவஹர்லால் நேரு, ம.பொ.சிவஞானம், சி.சுந்தரலிங்கம், ஒரேற்றர் சுப்பிரமணியம், ஆர்.என்.சிவப்பிரகாசம், தங்கம்மா அப்பாக்குட்டி, வி.பொன்னம்பலம் ஆகியோர் பற்றி ஊடகங்களில் எழுதிய முக்கிய கட்டுரைகளையும், சமகாலத்தில் தான் சந்தித்த மேலும் 36 தமிழ் ஆர்வலர்களுடனான நேர்காணல்களையும் இந்நூலில் தொகுத்து வழங்கியிருக்கிறார்.

920.1 ஊடகவியலாளர், ஒலிபரப்புத்துறையினர்

5833

இலங்கை எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், கலைஞர்களின் விபரத்திரட்டு: தொகுதி 9. பீ.எம். புன்னியாமீன், உடத்தலவின்னை 20802: சிந்தனை வட்டம், 14 உடத்தலவின்னை மடிகே, 1வது பதிப்பு, நவம்பர் 2007. (உடத்தலவின்னை: 20802: சிந்தனை வட்ட அச்சீட்டுப் பிரிவு, 14, உடத்தலவின்னை மடிகே).
112 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 240., அளவு 21x14.5 சமீ., ISBN: 978-955-8913-67-3.

சிந்தனைவட்டம் வெளியிட்டுள்ள 275ஆவது நூல் இதுவாகும். புலம்பெயர்ந்த ஈழத்து எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், கலைஞர்களின் விபரத்திரட்டு இரண்டாம் பாகமாக இது வெளிவந்துள்ளது. ஈழத்தைப்

பிறப்பிடமாகக் கொண்டு தற்போது கனடா, நோர்வே, பிரித்தானியா, ஜெர்மனி, டென்மார்க், பிரான்ஸ், இந்தியா ஆகிய நாடுகளில் புலம்பெயர்ந்து வசித்துவரும் 15 எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், கலைஞர்களின் விபரங்கள் அவர்களின் புகைப்படங்களுடன் இந்நூலில் சேர்க்கப்பட்டுள்ளன. வள்ளிநாயகி இராமலிங்கம் (கனடா), பொன்னரசி கோபாலரட்ணம் (நோர்வே), பத்மன் பசுபதிராஜா (ஜேர்மனி), இணுவை சக்திதாசன் (டென்மார்க்), ஆ.மகேந்திரராஜா (ஜேர்மனி), வைத்தீஸ்வரன் ஜெயபாலன் (ஐக்கிய இராச்சியம்), முகத்தார் எஸ்.ஜேசுரட்ணம் (பிரான்ஸ்), தர்மலிங்கம் ரவீந்திரன் (ஜேர்மனி), செல்லத்தம்பி சிறீக்கந்தராசா (ஐக்கிய இராச்சியம்), எம்.என்.எம்.அனஸ் (ஐக்கிய இராச்சியம்), மட்டுவில் ஞானக்குமாரன் (ஜேர்மனி), சகாதேவன் இராஜ்தேவன் (நோர்வே), மனோன்மணி பரராஜசிங்கம் (ஜேர்மனி), சீ.பன்னீர்செல்வம் (இந்தியா), இராஜேஸ்வரி சிவராஜா (ஜேர்மனி) ஆகிய 15 பிரமுகர்களின் பணிகள் கட்டுரையுருவில் தரப்பட்டுள்ளன. இவை (பதிவு இலக்கம் 226-240) இலங்கையில் வெளிவரும் ஞாயிறு தினக்குரல் இதழில் பிசுரமானவையாகும்.

5834

உயிர் நிழல் கலைச்செல்வன். மலர்க்குழு. பாரிஸ்: உயிர்நிழல் வெளியீடு, 1வது பதிப்பு 2005. (பாரிஸ்: அச்சக விபரம் தரப்படவில்லை).
26 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14.5 சமீ.

உயிர்நிழல் ஆசிரியர் கலைச்செல்வன் 05.03.2005, அதிகாலை இரண்டு மணியளவில் பாரிஸ் நகரில் மாரடைப்பினால் காலமாகியபோது அவரது கலை, இலக்கிய நண்பர்கள் வழங்கிய இரங்கலுரைகளின் தொகுப்பு. 28.03.1960இல் யாழ்ப்பாணம், வலிகாமம் வடக்கு, வறுத்தலைவிளானில் பிறந்த இவர் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியின் பழைய மாணவர். புலம்பெயர்ந்த பின்னர் 20 வருடகால பாரிஸ் வாழ்க்கையின்போது கலை, இலக்கியம், திரைப்பட முயற்சிகளுக்காகவும் மற்றும் ஜனநாயக மறுப்புகளுக்கு எதிரான செயற்பாடுகளுக்காகவும் மாற்றுக்கருத்துகளை உருவாக்குவதற்காகவும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டவர்.

5835

உயிரின் நிழலாய்... கலைச்செல்வன். மலர்க்குழு. கனடா: தேடக நண்பர்கள், ரொரன்டோ, 1வது பதிப்பு, மார்ச் 2005.(கனடா: அச்சக விபரம் தரப்படவில்லை).
36 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14 சமீ.

உயிர்நிழல் ஆசிரியர் கலைச்செல்வன் 05.03.2005 அன்று பாரிஸ் நகரில் மாரடைப்பினால் காலமாகியபோது கனடாவிலுள்ள அவரது கலை, இலக்கிய நண்பர்கள் வழங்கிய இரங்கலுரைகளின் தொகுப்பு. இதில் அவரது சகோதரர் திருமாவளவன், பா.அ.ஜயகரன், பொ.விவேகானந்தன், கருணா, வ.ந.கிரிதரன், வை.கே.நாதன், செழியன், தங்கராசா சிவபாலு, க.நவம், ஜீவன், தேடகம் சிவம், குட்டி, அ.முத்துலிங்கம், கோவை சகாப்தன், சு.இராசரத்தினம், பார்வதி, திவ்வியராஜன், சேரன், இரவி, சக்கரவர்த்தி, கற்சுறா, எஸ்.வி.ர.ஃ.வ்பேல், அசை சிவதாசன், சுமதி ரூபன், பொ.கனகசபாபதி, ஜோர்ஜ். இ.குருஷ்ஷேவ், செல்வம் அருளானந்தம் ஆகியோர் இம்மலரில் தத்தம் மனப்பதிவுகளை மீட்டெடுத்துள்ளனர்.

5836

என் மனப் பதிவுகள்: வி.என்.மதிஅழகன் பேசுகிறேன். வி.என்.மதிஅழகன். சென்னை 600035: சித்தன் கலைக்கூடம், இல.39, 2வது தளம், வடக்கு தெரு, சீ.ஐ.டி நகர் மேற்கு, 1வது பதிப்பு, டிசம்பர் 2007. (சென்னை 600035: சித்தன் கலைக்கூடம்).
215 பக்கம், புகைப்படங்கள், விலை: இந்திய ரூபா 125., அளவு: 22x14 சமீ.

மூன்று தசாப்தங்களுக்கும் மேலாக ஒலிபரப்பு, ஒளிபரப்புத் துறைகளில் அறிவிப்பாளராகவும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் பிரதிப் பணிப்பாளராகவும், கனடாவின் TVI தொலைக்காட்சியின் வளர்ச்சியில் முக்கிய பணியாற்றியவருமான வி.என்.மதியழகன் அவர்கள் இந்நூலில் தனது துறைசார் அனுபவங்களைப் பகிர்ந்துகொள்கின்றார்.

5837

மறைந்தும் மறையாத நவமணி அஸ்வர். பீ.எம்.புன்னியாமீன் (தொகுப்பாசிரியர்).
உடத்தலவின்ன 20802: சிந்தனை வட்டம், 14, உடத்தலவின்ன மடிகே, 1வது பதிப்பு, ஒக்டோபர் 2008. (உடத்தலவின்ன 20802: அச்சீட்டுப் பிரிவு, சிந்தனை வட்டம், 14, உடத்தலவின்ன மடிகே).

80 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-955-1779-19-1.

06.07.1947இல் கொழும்பில் பிறந்த அஸ்ஹர் (முகைதின் பிச்சை முஹம்மது அஸ்ஹர்) 20ம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் பத்திரிகைத்துறையினூடாக முஸ்லிம் சமூக எழுச்சிக்கு வித்திட்டவர் என்ற பெருமையைப் பெற்றவர். 28.08.2008 அன்று காலம் சென்ற அல்ஹாஜ் எம்.பி.எம்.அஸ்ஹர் அவர்களின் 40ம் நாள் கத்தமுல் குர்ஆன் தமாம் நிகழ்வை முன்னிட்டு வெளியிடப்பட்ட தொகுப்பு இது. சிந்தனை வட்டத்தின் 295ஆவது வெளியீடாக வெளிவரும் இந்த நூலில் இலங்கையின் இஸ்லாமிய தமிழ் ஊடகவியலாளரும், இலங்கை முஸ்லிம்களுக்கான தமிழ்த் தேசிய இதழான நவமணி என்ற பத்திரிகையின் ஆசிரியராகவும் இருந்த எம்.பி.எம்.அஸ்ஹர் பற்றிய பல்வேறு தமிழ் சிங்கள பிரமுகர்களின் மனப்பதிவுகள் இடம்பெற்றுள்ளன.

922 சமயத் தலைவர், சிந்தனையாளர்

5838

ஆறுமுக நாவலர் புராணம். வே.சிவக்கொழுந்து. பருத்தித்துறை: கலாபவனம் பிரசுரம், 1வது பதிப்பு, 1961. (அச்சக விபரம் தரப்படவில்லை).
8 பக்கம், விலை: சதம் 10.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் (1822-1879) அவர்களின் வாழ்வையும் பணியையும் விதந்து கூறும் புராணம். நாட்டுப் படலம், தோற்றப் படலம், வளர்ச்சிப் படலம், தொண்டுப் படலம், சமயப் போர்ப் படலம், சிவபதப் படலம் ஆகிய பகுதிகளாக அவரது வாழ்க்கை வகுத்துத் தரப்பட்டுள்ளது. நூலாசிரியர் **யாழ்ப்பாணன்** என்ற புனைபெயரிலும் எழுதியிருக்கிறார். (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம்.அலி, கொழும்பு 14).

5839

எமது குருநாதர் சிவயோக சுவாமிகள். சரவணமுத்து கந்தையா (தொகுப்பாசிரியர்). கொழும்பு: மெய்கண்டான் வெளியீடு, 1வது பதிப்பு, 1965. (கொழும்பு: மெய்கண்டான் அச்சியந்திரசாலை).
79 பக்கம், விலை: அன்பளிப்பு.

இந்நூலில் எமது குருநாதர் (சரவணமுத்து கந்தையா), ஸ்ரீ யோகர் சுவாமிகள் (க.இராமச்சந்திரன்), தோன்றாத் துணையாய் இருந்தனன் (நா.முத்தையா), யோக சுவாமிகள் (எஸ்.இராமநாதன்), யோகநாத வருக வருகவே (இலந்தைக் குளத்தான்), சிந்தனைத் துணுக்கு (ஸ்ரீரங்கானந்த சுவாமிகள்), குருநாதர் நினைப்பு (சுத்தானந்த பாரதியார்) ஆகிய ஏழு ஆக்கங்கள் இடம்பெற்றுள்ளன. 29.05.1872 இல் மாவிட்டபுரத்தில் பிறந்த யோகர் சுவாமிகளின் இயற்பெயர் சதாசிவம். யாழ்.சம்பத்திரிசியார் கல்லூரியில் கல்வி கற்றவர். இலங்கை நீர்ப்பாசனத் திணைக்களத்தில் களஞ்சியக் காப்பாளராக கிளிநொச்சி இரணைமடுக் குளப்பகுதியில் பணியாற்றியவர். மார்ச் 1964இல் தனது 91ஆவது வயதில் கொழும்புத்துறையிலுள்ள தனது ஆசிரமத்தில் அமரத்துவமடைந்தவர். இவரது மறைவின் ஓராண்டு பூர்த்தியைக் குறிக்குமுகமாக மெய்கண்டான் இலவச வெளியீடாக இந்நூல் வெளியிடப்பட்டது. (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5840

சமய குரவர் சந்தான குரவர் சரித்திரச் சுருக்கம். ம.வே.திருஞானசம்பந்த பிள்ளை. யாழ்ப்பாணம்: சைவ பரிபாலன சபையார், 4வது பதிப்பு, மன்மத வருடம், வைகாசி 1955. (யாழ்ப்பாணம்: சைவப்பிரகாச யந்திரசாலை).
136 பக்கம், விலை: சதம் 75.

சைவ பரிபாலன சபைப் பிரசுர இலக்கம் 48. திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார், திருநாவுக்கரசு நாயனார், சுந்தரமூர்த்தி நாயனார், மாணிக்கவாசக சுவாமிகள், சந்தான குரவர், மெய்கண்டதேவர், அருணந்தி சிவாசாரியார், மறைஞானசம்பந்த சிவாசாரியார், உமாபதி சிவாசாரியார் ஆகியோர் பற்றிய வாழ்க்கை வரலாற்றை இந்நூல் உள்ளடக்கியுள்ளது. இலங்கையிலுள்ள கலாசாலைகளிலே தமிழ் ஆங்கிலம் என்னும் இரு மொழிகளிலும் பயிலும் எஸ்.எஸ்.சி. வகுப்புச் சைவ மாணவர்களுக்குச் சமய பாடங்களுளொன்றாக விதிக்கப்பெற்றுமிருந்துள்ளது. (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5841

சமயாசாரியர் சந்தனாசாரியர் சரித்திர சங்கிரகம். திருமயிலை சே.வெ.ஜம்புலிங்கம் பிள்ளை. கொழும்பு: விவேகானந்த சபையார், 1வது பதிப்பு, 1951. (கொழும்பு: மெய்கண்டான் அச்சியந்திரசாலை).

43 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை.

சைவ சமயாசாரியராகிய சம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகிய நால்வருடைய சரித்திரங்களையும் 1923ம் ஆண்டில் எழுதித் தனித்தனியாக துண்டுப் பிரசுரங்களாக வெளியிட்ட நூலாசிரியர், பின்னர் 1926ம் ஆண்டில் அவற்றை ஒன்றாகச் சேர்த்து சிறு புத்தக அளவில் அச்சிட்டு இலவசப் பிரசுரமாக வழங்கியிருந்தார். சுருக்க வரலாறாக வெளியாகியிருந்த அந்த நூலை விரித்து இந்நூல் விரிவான பதிப்பாக வெளிவந்துள்ளது. (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5842

நாவலர் சமயப்பணி. சி.சீவரத்தினம். யாழ்ப்பாணம்: ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்களின் 83ஆவது குருபூசைத் தின ஞாபக வெளியீடு, நாவலர் வித்தியாசாலை, வண்ணார்பண்ணை, 1வது பதிப்பு, நவம்பர் 1962. (யாழ்ப்பாணம்: சைவப் பிரகாச அச்சியந்திரசாலை, வண்ணார்பண்ணை).
40 பக்கம், விலை: ரூபா 1.00.

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் சைவப் பிரகாச வித்தியாசாலையின் தலைமையாசிரியராகவிருந்த பண்டிதமணி வித்துவான் ந.சுப்பையாபிள்ளை, திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலை முன்னைநாள் தமிழ்ப் பேராசான் பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை ஆகியோரின் அணிந்துரைகளுடனும், வண்ணார்பண்ணை நாவலர் வித்தியாசாலை பண்டிதர் வித்துவான் இ.திருநாவுக்கரசு அவர்களின் மதிப்புரையுடனும் கூடிய இந்நூலில், ஆறுமுக நாவலரின் தோற்றம், கல்வியறிவும் சமய ஞானமும், பிரசாரத்தின் பயன், கடல் கடந்தும் புகழ், எதிர்ப்புக்கு எதிர்ப்பு ஆகிய தலைப்புகளில் நாவலரின் வரலாறும் அவரது இலட்சியங்களின் வேட்கையும் பதிவாகியுள்ளன. இந்நூலில் அனுபந்தமாக நாவலரின் கடைசிப் பிரசங்கம், நாவலர் நற்செயல்கள், உலகம் உய்ய வழி, சைவன் அவசியம் கற்க வேண்டியன, நாவலர் விக்கியாபனம், சைவதூஷண பரிகாரம், உபோற்காதம், சிவபுண்ணியம், யாழ்ப்பாணச் சமய நிலை ஆகிய கட்டுரைகளும் இடம்பெற்றுள்ளன. இந்நூலாசிரியர் வண்ணார்பண்ணை நாவலர் வித்தியாசாலையைச் சேர்ந்தவர். (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5843

நாவலர் பெருமான். ஸ்ரீ சுத்தானந்த பாரதியார். தமிழ்நாடு: புதுயுக நிலையம், புதுச்சேரி, 1வது பதிப்பு, மே 1948. (புதுச்சேரி: ஸ்ரீ அரவிந்தாஸ்ரம அச்சுக்கூடம்).
234 பக்கம், விலை: ரூபா 3.00

கவியோகி சுத்தானந்த பாரதியார் சிவகங்கையில் 11.05.1897இல் பிறந்தவர். 07.03.1990 இல் மறைந்தவர். காப்பியங்கள், கட்டுரைகள், நாவல்கள் கவிதைகள், தமிழிசைப் பாடல்கள், மேடை நாடகங்கள் என இவரது இலக்கியப் பரப்பு விரிந்தது. இவர் ஆறுமுக நாவலர் பற்றி எழுதிய நூல் இதுவாகும். (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

923 சமூகவியல்துறை சார்ந்தோர்

5844

தொல்சீர் சமூகவியல் சிந்தனையாளர். என். சண்முகலிங்கன். யாழ்ப்பாணம்: சமூகவியல் சமூகம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, 1வது பதிப்பு, மே 2002. (யாழ்ப்பாணம்: ஹரிகணன் அச்சகம்).
(6), 126 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 20.5x14.5 சமீ.

அகஸ்ற் கொம்ற் (August Comte), ஹேர்பேர்ட் ஸ்பென்சர் (Herbert Spencer), கார்ள் மார்க்ஸ் (Karl Marx), எமில் டூர்கைம் (Emile Durkheim), மக்ஸ் வெபர் (Max Weber) ஆகிய தொல்சீர் சமூகவியல் சிந்தனையாளர்களின் வாழ்வும் பணிகளும் இந்நூலில் தனித்தனியாகப் பேசப்படுகின்றது.

923.2 அரசியல் துறையினர்

5845

அமரர் மகேஸ்வரன் அவர்களுக்குப் பாராளுமன்றம் சூட்டிய புகழாரம். விஜயகலா மகேஸ்வரன் (தொகுப்பாசிரியர்). கொழும்பு: திருமதி விஜயகலா மகேஸ்வரன், 1வது பதிப்பு, 2008. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48B புளுமென்டால் வீதி).

xiii, 167 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24.5x17 சமீ.

முன்னாள் இந்து கலாச்சார அமைச்சரும், கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான தியாகராஜா மகேஸ்வரனின் அரசியல் வரலாறு குறுகியதான போதிலும், தமிழ்மக்கள் மத்தியிலும், அரசியல்வாதிகள் மத்தியிலும் அவரது செல்வாக்கு பரந்து விரிந்தது. அவரது பாராளுமன்ற, சமூக வாழ்வு பற்றிய மனப்பதிவுகளை அவரது மறைவையொட்டி, பாராளுமன்றத்தில் இடம்பெற்ற அனுதாபப் பிரேரணையின்போது தமிழ் சிங்கள ஆங்கில மொழிகளில் இலங்கைப் பாராளுமன்ற உறுப்பினர்கள் முன்வைத்த கருத்துகள் இந்நூலில் தொகுக்கப்பட்டுள்ளன.

5846

தடுப்புக் காவலில் நாம். புதுமைலோலன். யாழ்ப்பாணம்: அன்பு வெளியீடு, 27D, பெரியகடை, 1வது பதிப்பு, ஏப்ரல் 1969. (யாழ்ப்பாணம்: ஸ்ரீலங்கா அச்சகம், ஆனந்தா அச்சகம், ஸ்ரீ சண்முகநாத அச்சகம்). 174 பக்கம், விலை: ரூபா 2.00.

நூலாசிரியர் தடுப்புக்காவலில் இருந்து தன் அன்பு மகள் அன்பரசிக்கு எழுதிய மடல்கள் இவை. தமிழரசு இயக்கம் நடத்திய சத்தியாக்கிரகப் போராட்டத்தில் தாக்குதலுக்குள்ளாகி 18.4.1961 முதல் 26.7.1961 வரை 100 நாட்கள் சிறையிலிருந்து பின்னர் விடுதலையானவர். தான் தடுப்புக்காவலில் இருந்த வேளையில் தமது சிறை அனுபவங்களையும் சமகால அரசியலையும் தனது அன்பு மகள் அன்பரசிக்கு கடித வாயிலாக எழுதிவந்த அரசியல் மடல்கள் இவை. (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5847

தடுப்புக் காவலில் பத்து நாட்கள். கா.பொ.இரத்தினம். கொழும்பு 12: சுதந்திரன் வெளியீட்டகம், 194 ஏ, பண்டாரநாயக வீதி, 1வது பதிப்பு, ஆண்டு விபரம் தரப்படவில்லை. (கொழும்பு 12: சுதந்திரன் அச்சகம்).
(4), 30 பக்கம், விலை: ரூபா 1.00, அளவு: 20.5x14.5 சமீ.

இலங்கையில் 1972ல் புதிய அரசியலமைப்புச் சட்டம் கொண்டு வந்ததை எதிர்த்து தமிழ் பா.உ.கள் 1976ல் தமழீழப் பிரகடனம் செய்து அதனைத் துண்டுப் பிரசுரமாக 1972 மே 22ம் திகதி யாழ்ப்பாணத்தில் விநியோகம் செய்த போது ஆசிரியர் உட்பட 04 பா.உ.கள் கைது செய்யப்பட்டு கொழும்பில் 10 நாட்கள் தடுத்து வைக்கப்பட்டனர். அக்காலத்தில் நடைபெற்ற சம்பவங்களை ஆசிரியர் இந்நூலில் விளக்கியுள்ளார். சுதந்திரன் வெளியீடு இலக்கம் 09 ஆகப் பிரசுரமானது.

5848

தரும பூஷணம்: அமரர் தியாகராஜா மகேஸ்வரன் அவர்களின் வரலாற்று நினைவு மலர். சு.செல்லத்துரை, தே.செந்தில் வேலவர் (தொகுப்பாசிரியர்கள்). கொழும்பு: அமரர் தி.மகேஸ்வரன் வரலாற்று நினைவு மலர் வெளியீட்டுக்குழு, 1வது பதிப்பு, பெப்ரவரி 2008. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ் பிரைவேட் லிமிட்டெட், 48 B, புளுமெண்டால் வீதி).
362 பக்கம், வண்ணப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22x14.5 சமீ.

காரைநகரைப் பிறப்பிடமாகக் கொண்ட தியாகராஜா மகேஸ்வரன் (10.01.1966-01.01.2008) முன்னாள் இந்து சமய கலாச்சார அமைச்சராகப் பணியாற்றியவர். அவரது மறைவையொட்டி 15.2.2008 அன்று வெளியிடப்பெற்ற சிறப்பு மலர். இம்மலரின் உருவாக்கத்தின் பின்னணியில் ஆண்டிக்கேணி ஐயனார் புராண உரையாசிரியர் சைவப்புலவர் சு.செல்லத்துரை. கொழும்பு இந்து இளைஞர் மன்றத் தலைவரும், தினகரன் வார மஞ்சரியின் முன்னாள் ஆசிரியருமான திரு.தே.செந்தில் வேலவர், மற்றும் மூதறிஞர் சிவஸ்ரீ க.வைத்தீஸ்வரக் குருக்கள் ஆகியோர் இடம்பெறுகின்றனர்.

5849

தலைமைத்துவ ரகஸ்யங்கள்: தலைவர் நினைவுகள் பாகம் 1. அப்துல் மஜீத் ஆலிம் (மூலம்), எஸ்.எச்.எம்.ஜமீல் (பதிப்பாசிரியர்). கொழும்பு 2: புதிய வெளிச்சங்கள் வெளியீடு, 56 வக்சோல் ஒழுங்கை, 1வது பதிப்பு, மே 1998. (கொழும்பு 2: Crescent Publications, 119 Justice Akbar Mawatha). 275 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 21.5x14 சமீ.

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் M.H.M. அஷ்ரப் அவர்களின் வாழ்க்கை வரலாறும் அவரது சமூகப் பணிகளும், பல்வேறு சம்பவக் கோவைகளினூடாக எடுத்துச் சொல்லப்படுகின்றது. நூலாசிரியர்

மாத்தளை மாவட்டத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர். பள்ளிவாசல்களின் மூலம் இஸ்லாமிய விழிப்புணர்வினை ஏற்படுத்திய இவர் பல பள்ளிவாசல்களின் உருவாக்கத்திற்கும் காரணமாயமைந்துள்ளார். 1979இல் சன்மார்க்கப் பிரசாரத்திற்காக தங்கப்பதக்கம் பெற்றவர். ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அரசியல் கட்சியின் முதலாவது மாகாணசபைத் தேர்தலில் 1988இல் கொழும்பு மாவட்டத்தில் ஆகக்கூடிய தெரிவு வாக்குகளுடன் முஸ்லிம் காங்கிரசின் தலைமைப் பிரதிநிதியாகத் தேர்வுசெய்யப்பட்டவர்.

5850

பத்திரிகைகளின் பார்வையில் எங்கள் மகேஸ்வரன். விஜயகலா மகேஸ்வரன். சென்னை 17: மணிமேகலைப் பிரசுரம், த.பெ. 1447, தணிகாசலம் சாலை, தி.நகர், 1வது பதிப்பு, 2008. (சென்னை 600094: பி.வி.ஆர்.ஆப்.ஃசெட்).
xxii, 346 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22x14.5 சமீ.

முன்னாள் இந்து கலாச்சார அமைச்சரும், கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான தியாகராஜா மகேஸ்வரனின் அரசியல் வரலாறு குறுகியதான போதிலும், தமிழ்மக்கள் மத்தியிலும், பத்திரிகையாளர் மத்தியிலும் அவரது செல்வாக்கு பரந்தது. பத்திரிகையாளர்களின் பார்வையில் அமரர் மகேஸ்வரனின் அரசியல் சமூக வாழ்வு எப்படிப் பார்க்கப்பட்டது என்பதை இந்நூல் விரிவாகப் பதிவுசெய்கின்றது. அமரர் மகேஸ்வரன் அரசியல்வாதியாக இருந்த வேளையில் பாராளுமன்றத்துக்கு உள்ளேயும் வெளியே பொது மேடைகளிலும் அவரது உரைகள் பத்திரிகைகளில் வெளிவந்தவாறாக இந்நூலில் திகதிவாரியாக ஆவணப்படுத்தப்படுகின்றது. பத்திரிகையாளர்களின் அஞ்சலியுரைகளும் இணைக்கப்பட்டு அவர்களின் தனிப்பட்ட உணர்வுகளும் இங்கு பதிவுசெய்யப்பட்டுள்ளன.

5851

மகேஸ்வரன்: அரசியல் வாழ்வும் தமிழர் பிரச்சினையும். ஐ.தி.சம்பந்தன். லண்டன் E7 8PQ: சுடரொளி வெளியீட்டுக் கழகம், 15, Rutland Road, 1வது பதிப்பு, டிசம்பர் 2008. (சென்னை 600 094: உலகத் தமிழர் பதிப்பகம், 4 சௌராட்டிரா நகர், ஏழாவது தெரு, சூளைமேடு).
224 பக்கம், புகைப்படங்கள், விலை: இந்திய ரூபா 75., அளவு: 21.5x14 சமீ., ISBN: 978-0-955539-1-9.

வர்த்தகராக வளர்ந்து ஈழத்து அரசியலில் புகுந்து நாடாளுமன்ற உறுப்பினராகவும், அமைச்சராகவும் பணியாற்றி 8 ஆண்டுகள் தமிழ்மக்களுக்குப் பெரும் சேவைபுரிந்தவர் தி.மகேஸ்வரன். 1999, 2001 ஆகிய இரு தடவைகளிலும் பாராளுமன்றத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் யாழ்ப்பாணத்தில் நின்று போட்டியிட்டு வெற்றிபெற்ற தியாகராசா மகேஸ்வரன், இந்து சமய கலாசார அமைச்சராகப் பணியாற்றியவர். பின்னர் 2005இல் கொழும்பு மாவட்டத்தில் போட்டியிட்டும் 58000 வாக்குகள் பெற்று வெற்றியீட்டியவர். ஜனவரி 1, 2008 புதுவருட தினத்தன்று கொழும்பு கொச்சிக்கடை பொன்னம்பலவாணேஸ்வரர் கோவிலில் வைத்து இனந்தெரியாதோரால் சுட்டுக்கொலைசெய்யப்பட்டவர். இக்கட்டான அரசியல் சூழ்நிலையில் இலங்கை அரசியலில் துணிச்சலுடன் ஈடுபட்டுப் பல நன்மைகளைத் தமிழர்களுக்கும் தான் சார்ந்த காரைநகர் மண்ணுக்கும் பெற்றுத்தந்தவர். இந்து சமய கலாசார அமைச்சராக அமரர் மகேஸ்வரன் பணியாற்றிய வேளையில் அவரது பிரத்தியேக செயலாளராகப் பணியாற்றிய நூலாசிரியர், இந்நூலில், மக்களதும், ஊடகங்களதும், நாடாளுமன்ற உறுப்பினர்களதும் பார்வையில் மகேஸ்வரன் எவ்வாறு நோக்கப்பட்டார் என்பதை தொகுத்திருப்பதுடன், நாடாளுமன்றத்தில் அமைச்சராகவும், பாராளுமன்ற உறுப்பினராகவும் செயற்பட்ட மகேஸ்வரனின் தமிழர்சார்ந்த பிரச்சினைகள் தொடர்பான விவாத உரைகளின் 31 ஹன்சார்ட் பதிவுகளையும், அவரது மறைவின்போது வழங்கப்பட்ட இரங்கலுரைகளையும் தொகுத்திருக்கிறார். இந்நூல் அமரர் தி.மகேஸ்வரன் பற்றிய பரவலானதொரு பார்வையை வழங்கும் வகையில் சிரத்தையுடன் தயாரிக்கப்பட்டுள்ளது.

5852

லெனின்: வி.ஐ.லெனின் வாழ்க்கை வரலாறு. வி.ஐ.லெனின். கொழும்பு 2: ட்ரிபியூன் பிரசுர வெளியீடு, 43, டோசன் வீதி, 1வது பதிப்பு, பெப்ரவரி 1970. (கொழும்பு: கொழும்பு கூட்டுறவு அச்சாளர் சங்கம், 72, கியு வீதி).
174 பக்கம், விலை: சதம் 50.

விளாடிமிர் இலீச் லெனின் *Vladimir Ilyich Lenin* (22.4.1870- 21.01.1924) ஒரு ரஷ்யப் புரட்சியாளரும், போல்செவிக் கட்சியின் தலைவரும், சோவியத் ஒன்றியத்தின் முதல் அதிபரும், பின்னாளில் ஜோசப் ஸ்டாலினினால் மார்க்சியம்-லெனினிசம் என்று விரிவுபடுத்தப்பட்ட லெனினிசக் கோட்பாட்டின் தாபகருமாவார். லெனின் என்பது ரஷ்யப் புரட்சிக்காக அவர் இட்டுக்கொண்ட புனைபெயர். பின்னாளில் அவரது

இயற்பெயரான விளாடிமிர் உலியனொவ் என்ற பெயரை விளாடிமிர் லெனின் என்று மாற்றிக்கொண்டார். ரஷ்யப் புரட்சியினூடாக லெனினின் வாழ்க்கை வரலாறு இந்நூலில் விரிவாகப் பதிவுக்குள்ளாகியுள்ளது. (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

923.6 சமூக சேவகர்கள்

5853

அறிவஞ்சலி: தோழர் தம்பு இளையதம்பி நினைவுமலர். மலர்க்குழு. கொழும்பு 11: தம்பு இளையதம்பி நினைவுக்குழு, 47, மூன்றாம் மாடி, மத்திய கொழும்பு சுப்பர் மார்க்கெட் கட்டிடத் தொகுதி, 1வது பதிப்பு, செப்டெம்பர் 2000. (கொழும்பு 13: யூ கே. பிரின்டர்ஸ், 98 A, விவேகானந்தா மேடு).
52 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14.5 சமீ.

புதிய ஜனநாயகக் கட்சியின் தேசிய அமைப்பாளர் சட்டத்தரணி இ.தம்பையாவின் தந்தையார் தம்பு இளையதம்பி 31.7.2000 அன்று தலவாக்கலை பாமஸ்டன் குரூப் இரட்ணகிரி டிவிஷனில் மறைந்தார். அவரது மறைவின் 31ம் நாள் நினைவின்போது வெளியிடப்பட்ட இம்மலரில், நாடகக் கலைஞரான அவரது வாழ்வும் பணிகளும் பற்றியும், தோட்டப்புறக் கல்வி வளர்ச்சிக்கு அவர் ஆற்றிய இரவுப் பாடசாலைப் பங்களிப்பு பற்றியும் பல்வேறு மனப்பதிவுகள் இடம்பெறுகின்றன. மேலும் சமூக மாற்றமும் பெற்றோர்களும் (உதயா), பகுத்தறிவு இயக்கமும் பாட்டாளி வர்க்கமும் (பேராசிரியர் சி.சிவசேகரம்), மலையகத் தமிழர் பண்பாடு: சில குறிப்புகள் (இ.தம்பையா), சமூகச் சூழலும் மனித சிந்தனையும் (சி.கா.செந்திவேல்) ஆகிய சமூகவியல் கட்டுரைகளும், இராகலை பன்னீர், நதி, ச.ஜேசுநேசன், வள்ளி, மு.நாகராஜன், இரா.சடகோபன், பொ.கா.சிவஞானம், மிருதுளா, பிருத்வி ஆகியோரின் கவிதைகளும் இடம்பெற்றுள்ளன.

5854

ஆத்ம ஜோதி: செல்வி மகேஸ்வரி வேலாயுதம் நினைவு மலர். மலர் வெளியீட்டுக் குழு. கொழும்பு: செல்வி மகேஸ்வரி வேலாயுதம் நினைவுமலர் வெளியீட்டுக் குழு, 1வது பதிப்பு, ஜுலை 2008. (அச்சக விபரம் தரப்படவில்லை).
106 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 26x19 சமீ.

கரவெட்டியைச் சேர்ந்த சட்டத்தரணியும், மனித உரிமைகள் ஆர்வலரும், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (EPDP) யினதும் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சின் ஆலோசகருமான அமரர் செல்வி மகேஸ்வரி வேலாயுதம் (17.7.1953-13.5.2008) அவர்களின் மறைவையிட்டு 13.07.2008 அன்று வெளியிடப்பட்ட நினைவு மலர். அமரர் மகேஸ்வரி வேலாயுதத்தின் சமூக, ஆன்மீக, அரசியல் பணிகள் பற்றிய பதிவாகவும், அவருடன் பரிச்சயமான பிரமுகர்களின் அஞ்சல் உரைகளாகவும் இம்மலர் தொகுக்கப்பட்டுள்ளது.

5855

தோழர் நவம்: பொதுவுடைமைப் போராளியின் நினைவுகள். நினைவு மலர்க் குழு. யாழ்ப்பாணம்: தோழர் சின்னத்துரை நவரத்தினம் நினைவுக் குழு, 1வது பதிப்பு, 2004. (அச்சக விபரம் தரப்படவில்லை).
144 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20x14.5 சமீ.

பொதுவுடைமை இயக்கத்தின் பிரிவான வாலிபர் இயக்கத்தில் 1964இல் இணைந்துகொண்ட தோழர் நவம் பின்னர் 1965இல் பரட்சிகர பொதுவுடைமைக் கட்சியில் இணைந்து 1966இல் தீவிரமடைந்து கொண்டிருந்த சாதியத்துக்கு எதிரான போராட்டங்களில் தீவிரமாகத் தன்னையும் ஈடுபடுத்திக்கொண்டவர். யாழ்ப்பாணம், கந்தர்மடம் அத்திசூடி வீதியைச்சேர்ந்த சின்னத்துரை நவரத்தினம் (28.02.1945 – 08.10.2004) மாரடைப்பால் காலமானபோது அவரது தோழர்களால் வெளியிடப்பட்ட நினைவு மலர் இது.

5856

பொன்விழா மலர்: வட இலங்கை சர்வோதய அறங்காவலர் சமூக சேவகி பொன். ஜமுனா அவர்களின் சேவை பாராட்டு விழா. கா.குகபாலன் (மலராசிரியர்). புங்குடுதீவு: பொன். ஜமுனா அவர்களின் சேவை பாராட்டு விழாக் குழு, 1வது பதிப்பு, செப்டெம்பர் 2008. (யாழ்ப்பாணம்: ஹரிகணன் பிரிண்டர்ஸ், காங்கேசன்துறை வீதி).
128 பக்கம், வண்ணத் தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24.5x19 சமீ.

வட மாகாண சர்வோதய சங்கம், புங்குடுதீவில் அமரர் கந்தையா திருநாவுக்கரசு அவர்களால் 23.7.1972இல் தாபிக்கப்பட்டதன் பின் தன் 18ஆவது வயதில் 1978இல் தன்னையும் சர்வோதய அமைப்பில் இணைத்துக்கொண்டு, சர்வோதய அமைப்பின் நிர்வாகப் பொறுப்பாளராகத் தன் பணியைத் தொடர்ந்தவர் பொன்னம்பலம் ஜமுனாதேவி. 3.10.2001இல் அமைப்பாளர் க.திருநாவுக்கரசுவின் அமரத்துவத்தை அடுத்து அமைப்பின் தலைமைப்பொறுப்பை ஏற்று தனது மண்ணுக்குத் தன்னாலான சேவையினை சர்வோதயக் குடும்பத்துடன் இணைந்து ஆற்றி வருகின்றார். அவரது சமூக சேவையின் பல்பரிமாணத்தையும் சர்வோதய அமைப்பினதும் அதன் தாபகர் திருநாவுக்கரசுவினதும் வரலாற்றையும் பல்வேறு பிரமுகர்களின் பார்வையில் இம்மலர் பதிவுசெய்கின்றது.

923.61 விடுதலைப் போராளிகள்

5857

ஈழவர் திசைகாட்டி: தேசபிதா தோழர் இரட்ணா. ஈழப் புரட்சி அமைப்பு. இலங்கை: ஈழப் புரட்சி அமைப்பு (Eelam Revolutionary Organisation), 1வது பதிப்பு, 2006. (அச்சக விபரம் தரப்படவில்லை).
20 பக்கம், புகைப்படம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20x13 சமீ.

தோழர் ரட்ணா என்று விடுதலை இயக்கப் போராளிகளால் அன்புடன் அழைக்கப்பட்ட இளையதம்பி இரத்தினசபாபதி (23.11.1938-12.12.2006) தமிழ் இளைஞர்களுக்கு விழிப்புணர்வினை ஊட்டிய **ஈழவர் இடர்தீர** என்ற நூலின் ஆசிரியராவார். **ஈழம், தர்க்கிகம்,** ஆகிய இரு இதழ்களின் ஆரம்பகர்த்தாவான இவர், இலண்டனிலிருந்து பல இளைஞர்களை ஈழப் போராட்டத்தின்பால் நாட்டம் கொள்ளச் செய்தவர். ஈழப் போராட்டத்திற்கு மார்க்சிய வடிவம் தந்த முன்னோடியாகக் கருதப்பட்ட தோழர் ரட்ணா அதனை வென்றெடுக்க ஈழப் புரட்சி அமைப்பை உருவாக்கிய தாபகருமாவார். இலங்கையின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரான இ.இரத்தினசபாபதி அவர்களின் மறைவையொட்டி வெளியான சிறு நூல் இதுவாகும். தோழர் ரட்ணா பற்றி அவரது வாழ்வும் பணிகளும் பற்றிய கட்டுரை ஒன்றும், இலங்கைப் பாராளுமன்றத்தில் ஈழவர் ஜனநாயக முன்னணி உறுப்பினர்களின் பிரவேசத்தின் பின்னர் 21.7.1989 அன்று சபையில் ஈரோஸ் நிலைப்பாடு பற்றி தோழர் இரத்தினசபாபதி ஆற்றிய உரையும் இந்நூலில் இடம்பெற்றுள்ளன.

5858

சூரியப் புதல்வர்கள் 2003. தமிழீழ விடுதலைப் புலிகள். பாரிஸ்: வெளியீட்டுப் பிரிவு, அனைத்துலகத் தொடர்பகம், தமிழீழ விடுதலைப் புலிகள், 1வது பதிப்பு, நவம்பர் 2003. (அச்சக விபரம் அறிய முடியவில்லை).
96 பக்கம், வண்ணப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21X21 சமீ.

27 நவம்பர் 2003 இல் இடம்பெற்ற மாவீரர் நாள் நினைவாக வெளியிடப்பெற்ற மலர். மாவீரரான போராளிகள் பலரின் வாழ்க்கைக் குறிப்புகளுடன் விடுதலை உணர்வூட்டும் எழுச்சிக் கவிதைகளையும் கட்டுரைகளையும் கொண்டதாக இம்மலர் வெளியிடப்பட்டுள்ளது.

5859

சூரியப் புதல்வர்கள் 2007.தமிழீழ விடுதலைப் புலிகள். தமிழீழம்: வெளியீட்டுப் பிரிவு, அனைத்துலகத் தொடர்பகம், தமிழீழ விடுதலைப் புலிகள், 1வது பதிப்பு, நவம்பர் 2007. (அச்சக விபரம் அறிய முடியவில்லை).
128 பக்கம், வண்ணப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 19.5X20 சமீ.

27 நவம்பர் 2007 இல் இடம்பெற்ற மாவீரர் நாள் நினைவாக வெளியிடப்பெற்ற மலர். மாவீரரான போராளிகள் பலரின் வாழ்க்கைக் குறிப்புகளுடன் இந்நூல் வெளியிடப்பட்டுள்ளது. விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வன் மற்றும் அவருடன் மரணித்த ஆறு விடுதலைப் போராளிகளின் நினைவும், மாவீரரான வீரவேங்கைகளின் பட்டியலும், 2006இல் பன்னாடுகளிலும் நினைவுகூரப்பட்ட மாவீரர் எழுச்சி நிகழ்வுகளின் புகைப்படங்களும் பதிவாக்கப்பட்டுள்ளன.

5860

போராளியின் குருதிச் சுவடுகள்: தொகுப்பு 1. வெளியீட்டுப் பிரிவு. தமிழீழம்: வெளியீட்டுப் பிரிவு, தமிழீழ விடுதலைப் புலிகள், தமிழீழ மாவீரர் பணிமனை, 1வது பதிப்பு, கார்த்திகை 1992. (அச்சக விபரம் தரப்படவில்லை).

(4), 136 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 90., அளவு: 27x18 சமீ.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் அதிகாரபூர்வ ஏடான விடுதலைப் புலிகள் இதழ்களில் வெளிவந்த மாவீரர் நினைவுக் கட்டுரைகளின் முழுமையான தொகுப்பு இது. ஒவ்வொரு போராளியினதும் புகைப்படமும், வாழ்க்கைக் குறிப்பும் இத்தொகுப்பில் முக்கிய இடம்பெறுகின்றது.

5861

போரும் வாழ்வும். மணலாறு விஜயன். அம்பாறை: சுஜி கணனிப் பிரிவு, மட்டு-அம்பாறை மாவட்டம், 1வது பதிப்பு, ஆண்டு விபரம் தரப்படவில்லை. (அச்சக விபரம் குறிப்பிடப்படவில்லை).
(8), 122 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20x14.5 சமீ.

புலிகளின் குரல் வானொலியில் வெளியான உரைத்தொகுப்பு. வட-கிழக்கு மாகாணங்களில் யுத்தத்தின்போது அனுபவித்தவர்களின் பிரதிபலிப்பாக வெளிவந்துள்ள போரும் வாழ்வும் என்ற இவ்வுண்மைப் பதிவில் தம் வாழ்வோடு உயிரையும் அர்ப்பணித்த போராளிகள் சிலரது நினைவுகள் 17 கட்டுரைகளில் பதிவுசெய்யப்பட்டுள்ளன. அடிப்படை நூலியல் அம்சங்கள் தரப்படாத இந்நூலின் இரண்டாம் பாகமாகக் கருதக்கூடிய **மௌனப் புதைகுழிக்குள்** என்ற நூல் 2004இல் வெளியிடப்பட்டதற்கான குறிப்புக் கிடைத்துள்ளதால் இந்நூல் அதற்குச் சிலகாலங்களுக்கு முன்னர் வெளியிடப்பட்டிருக்கவேண்டும் என்று கருத முடிகின்றது.

923.7 கல்வியியலாளர்கள்

5862

யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சு.வித்தியானந்தன் மணிவிழா மலர். எஸ்.திருச்செல்வம் (தொகுப்பாசிரியர்). கொழும்பு 5: கலை இலக்கிய பத்திரிகை நண்பர்கள், 215, R/3/9, பார்க் வீதி, 1வது பதிப்பு, மே 1984. (யாழ்ப்பாணம்: அபிராமி அச்சகம், 17B, ஜும்மா பள்ளிவாசல் வீதி).
(12),8+26+23+28 பக்கம், வண்ணத் தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24.5x18.5 சமீ.

12.05.1984 அன்று சு.வித்தியானந்தன் அவர்களின் மணிவிழா நினைவாக வெளியிடப்பட்ட மலர். ஐந்து பிரிவுகளில் தனித்தனி பக்க எண்களுடன் இம்மலர் வடிவமைக்கப்பட்டுள்ளது. தமிழறிஞர்களின் வாழ்த்துக்கள் முதற் பிரிவிலும், இ.சிவகுருநாதன், ஆ.சிவநேசச் செல்வன் ஆகியோர் எழுதிய சு.வி.பற்றிய அறிமுகம் நுழைவாயில் பிரிவிலும், அறிஞர்கள் சி.தில்லைநாதன், ஆ.வேலுப்பிள்ளை, கா.சிவத்தம்பி, அ.சண்முகதாஸ், பொ.பூலோகசிங்கம், எஸ்.இராசரத்தினம், சொக்கன் ஆகியோரின் கட்டுரைகள் பேராசிரியரின் பணிகள் என்ற மூன்றாவது பிரிவிலும், ம.முகம்மது உவைஸ், எஸ்.பத்மநாதன், நந்தி ஆகியோரின் கருத்துக்கள் பணித்தலங்களில் பேராசிரியர் என்ற நான்காவது பிரிவிலும், த.சண்முகசுந்தரம், எஸ்.டி.சிவநாயகம், சி.மௌனகுரு, சிற்பி, செம்பியன் செல்வன், கல்வயல் வே.குமாரசாமி, எஸ்.திருச்செல்வம் ஆகியோரின் கட்டுரைகள் இறுதிப் பிரிவான நிறைமுகம் என்ற ஐந்தாம் பிரிவிலும் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் School of Oriental and African Studies (SOAS), University of London நூலகத்தில் பார்வையிடப்பட்டது. பதிவிலக்கம் 493296).

923.8 வர்த்தகர்கள்

5863

அண்ணா பொன் ஏடு 1959-2009: அண்ணா தொழிலக பொன்விழா வெளியீடு. சு.செல்லத்துரை (தொகுப்பாசிரியர்). யாழ்ப்பாணம்: அண்ணா தொழிலகம், இணுவில், 1வது பதிப்பு, ஏப்ரல் 2009. (கொழும்பு 13: கீதா பதிப்பகம்).
200 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25x19 சமீ., ISBN: 978-955-51657-0-9.

இணுவில் அண்ணா தொழிலகத்தின் உரிமையாளர் பொன்னையா நடராசா அவர்களின் வாழ்வும் பணிகளும் இந்நூலில் பதிவுக்குள்ளாவதினூடாக யாழ்ப்பாண மண்ணில் உருவாகி வளர்ந்த ஒரு கைத்தொழில் நிறுவனத்தின் வரலாறும் பதிவுக்குள்ளாகியுள்ளது. அண்ணாமலைப் பரிகாரியாரின் ஞாபகமாக அண்ணாமலை ஆயர்வேத பற்பொடியின் உற்பத்தியுடன் ஆரம்பமாகி, அண்ணா என்ற பெயர் நிலைத்து-யாழ்ப்பாணத்தின் மற்றுமொரு கைத்தொழில் அதிபர் மில்க்வைற் கனகராசாவின் ஆதரவுடன்

தளைத்து வளர்ந்து பல்வேறு கிளை நிறுவனங்களையும் சர்வதேச வர்த்தகத்தினையும் முன்னெடுத்துச் சென்ற அண்ணா தொழிலகத்தின் தாபகரது தொழில்துறை வளர்ச்சி இந்நூலில் புகைப்பட ஆவணங்களுடன் பதிவாகியுள்ளது. நவீன தொழில்வள ஆய்வுக் கட்டுரைகள் சிலவற்றையும் இந்நூல் உள்ளடக்கியுள்ளது. ஆசியும் வாழ்த்தும், அண்ணா தொழில்வளம் ஒரு வரலாற்றுப் பார்வை, ஆய்வறிவாளர் பார்வையில் அண்ணா தொழிலகம், ஊடகங்களின் பார்வையில் அண்ணா தொழில்வளம், நவீன தொழில்வள ஆய்வுக் கட்டுரைகள் ஆகிய 5 இயல்களில் இம்மலர் விரிகின்றது.

924 மொழியியலாளர்கள்

5864

தனிநாயகம் அடிகளார். அ.சண்முகதாஸ், அமுதன் அடிகள், ஆ.தேவராசன். கொழும்பு: குமரன் புத்தக இல்லம், 361, ½ டாம் வீதி, 1வது பதிப்பு, 2008. (கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், 361, 1/2, டாம் வீதி).
58 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-955-659-129-x.

இந்நூல் பேராசிரியர் அ.சண்முகதாஸ் எழுதிய இலங்கைப் பேராசிரியர்களின் தமிழியற் பணிகள், முனைவர் அமுதன் அடிகளார் எழுதிய தனிநாயகம் அடிகளார், திரு ஆ.தேவராசன் எழுதிய தமிழ்த்திரு தனிநாயகம் அடிகளார் ஆகிய நூல்களிலிருந்து தேர்ந்த பகுதிகளை உள்ளடக்கித் தயாரிக்கப்பட்டுள்ளது. வாழ்வும் வளமும், தமிழ்மொழிப் போராட்டம், அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாடுகள், அடிகளாரின் தமிழியலாய்வு, அடிகளாரின் படைப்புக்கள், அடிகளாரின் தமிழியல் ஆய்விதழியல் முயற்சிகள், தமிழியல் ஆய்வுகளில் ஒரு தனி சகாப்தம், ஆகிய பிரதான இயல்களாக இத்தரவுகள் வகைபிரித்துத் தரப்பட்டுள்ளதுடன், தனிநாயகம் அடிகளாரின் வாழ்வின் முக்கிய திகதிகள், அடிகளாரின் நூல்கள் ஆகிய இரு பின்னிணைப்புத் தகவல்களும் இடம்பெற்றுள்ளன. Iyq;ifj; jkpo;r; Rlu;kzpfs; njhlu; ,y. 09.

926 பிரயோக விஞ்ஞானிகள், மருத்துவர்கள்

5865

என்றும் எங்கள் இதயங்களில். மலர்க்குழு. மானிப்பாய்: வைத்திய கலாநிதி நவமலர் கனகரத்தினம் நினைவு மலர்க்குழு, சுதுமலை மேற்கு, 1வது பதிப்பு, ஜுன் 2008. (யாழ்ப்பாணம்: ஹரிகணன் பதிப்பகம்).
32 பக்கம், விலை: அன்பளிப்பு, அளவு: 20.5x14.5 சமீ.

வைத்திய கலாநிதி நவமலர் கனகரத்தினம் (26.11.1935-11.05.2008) யாழ்ப்பாண போதனா வைத்தியசாலைப் பணிப்பாளராக 1991-2000 இக்கட்டான காலப்பகுதியில் பணியாற்றியவர். பின்னர் 2000ம் ஆண்டு முதல் இறுதிவரை தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரியாகப் பணியாற்றியவர். இவரது சபிண்டீகரண நிகழ்வின் நினைவாக வெளியிடப்பட்ட இந்நூலில், அவரது வாழ்வும் மருத்துவப் பணிகளும் பதிவுக்குள்ளாகியுள்ளன. நூலின் பிரதான அம்சமாக, புற்றுநோய் பற்றிய நீண்ட அறிவியல் கட்டுரையொன்று இடம்பெறுகின்றது.

5866

பொன் ஒளி: சுப்பிரமணியம் பொன்னம்பலம் நினைவு வெளியீடு. மலர்க்குழு. யாழ்ப்பாணம்: யாழ் போதனா வைத்தியசாலை, 1வது பதிப்பு, ஒக்டோபர் 1994. (யாழ்ப்பாணம்: புனித வளவன் கத்தோலிக்க அச்சகம்).
62 பக்கம், புகைப்படத் தகடு, விலை: அன்பளிப்பு, அளவு: 24x19 சமீ.

யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையில் பணியாற்றி மறைந்த சத்திரசிகிச்சை நிபுணர் கலாநிதி சுப்பிரமணியம் பொன்னம்பலம் (16.1.1928 – 16.9.1994) அவர்களின் மறைவினை ஒட்டி 17.10.1994 அன்று 31ம் நாள் நினைவாக வெளியிடப்பட்ட அஞ்சலி மலர். இவர் காங்கேசன்துறை- கருகம்பனையில் பிறந்தவர். இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயத்தில் ஆரம்பக்கல்வியையும் தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரியிலும், யாழ். இந்துக் கல்லூரியிலும் உயர் கல்வியையும் கற்று, இலங்கைப் பல்கலைக்கழக மருத்துவபீடத்திலிருந்து 1957இல் MBBS மருத்துவராக வெளியேறியவர். எடின்பரோ பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் FRCS பட்டத்தை 1971இல் பெற்றவர். மொனராகலை மாவட்டத்தில் மாவட்ட வைத்திய அதிகாரியாக 1959-60 காலகட்டத்தில் சேவையாற்றிய இவர், பின்னர் புத்தளம் சுகாதார வைத்திய அதிகாரியாக 1960-65 காலகட்டத்திலும், கொழும்பு பொது மருத்துவமனையின்

சிரேஷ்ட வைத்திய அதிகாரியாக 1965-68 வரையும் பணியாற்றினார். குருணாகல் பொது மருத்துவமனையில் சத்திரசிகிச்சை நிபுணராக 1972 முதல் 1976 வரை பணியாற்றியபின் யாழ்ப்பாணம் வந்து 1976 தொடக்கம் 1994இல் சுகவீனம் காரணமாக மரணிக்கும்வரை அங்கு சேவையாற்றினார். அவரது வாழ்வும் பணிகளும் பிற வைத்தியர்களாலும், வைத்தியசாலை ஊழியர்களாலும் இம்மலரில் நினைவுகூரப்பட்டுள்ளது.

மேலும் பார்க்க: 5417

927 கலைஞர்கள்

5867

கலைஞானம்: நல்லூர் பிரதேசக் கலைஞர் விபரத் திரட்டு. ரஜனி கந்தசாமி (தொகுப்பாளர்), அரியாலையூர் சி.சிவதாசன் (எழுத்தாக்கம்). யாழ்ப்பாணம்: நல்லூர்ப் பிரதேசக் கலாசாரப் பேரவை, பிரதேசச் செயலகம், நல்லூர், 1வது பதிப்பு, ஜுலை 2009. (யாழ்ப்பாணம்: அன்ரா பதிப்பகம், கோண்டாவில் மேற்கு).
xx, 210 பக்கம், புகைப்படங்கள், தகடு, விலை: ரூபா 300., அளவு: 21.5x15 சமீ.

நல்லூர் பிரதேசத்தில் வாழ்ந்த, வாழ்கின்ற கலைஞர்கள், எழுத்தாளர்கள் பற்றிய விபரத்தொகுப்பு. பண்பாட்டியல், சிற்பம், ஓவியம், மிருதங்கம், நாதஸ்வரம், வயலின், தவில், ஆர்மோனியம், புல்லாங்குழல், வீணை, மெல்லிசை வாத்தியம், வாத்தியக் கருவிகள், புலவர், நாடகம், நடனம், கர்நாடக இசை, கதாப்பிரசங்கம், பண்ணிசை, கவிதை, புனைகதை, ஆய்வு இலக்கியம் ஆகிய துறைகளில் புலமைபெற்ற 221 கலைஞர்கள், இலக்கியவாதிகளின் வாழ்வும் பணியும் பற்றிய ஒரு பக்கக் குறிப்புகளைத் தாங்கி வெளிவந்துள்ளது.

927.3 சிற்பக்கலைஞர்

மேலும் பார்க்க: 5867

927.5 ஓவியக்கலைஞர்கள்

மேலும் பார்க்க: 5867

927.8 இசைக்கலைஞர்கள்

5868

நித்தி நினைவுகள்: நாட்டுப்பற்றாளர் து.நித்தியானந்தன். நினைவுமலர்க் குழு. மல்லாகம்: திருமதி நித்தியானந்தன் புஸ்பதேவி, 1வது பதிப்பு, 1994. (மல்லாகம்: ஏ.எஸ்.ஜே. பிறிண்டிங் வேக்ஸ்).
22 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22x14 சமீ.

இந்த மண் எங்களின் சொந்த மண் போன்ற தமிழீழ எழுச்சிப் பாடல்கள் பலவற்றின் ஒலிப்பதிவாளராக இருந்து பணியாற்றிய கலைஞர் து.நித்தியானந்தன் 21.6.1994 அன்று காலமானதையொட்டி அவரது நினைவாக வெளியிடப்பட்ட மலர். ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகள், வண. நீ.மரியசேவியர், சு.ப.தமிழ்ச்செல்வன், புதுவை இரத்தினதுரை, நா.தமிழன்பன் (ஜவான்), பேராசிரியர் கா.சிவத்தம்பி, சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, கம்பவாருதி இ.ஜெயராஜ், குழந்தை ம.சண்முகலிங்கம், கவிஞர் சோ.பத்மநாதன், எஸ்.ரி.அரசு, பொன் சுந்தரலிங்கம் மற்றும் பல சமய, சமூக, கலை, இலக்கிய, அரசியல் பிரமுகர்களின் நினைவஞ்சலி உரைகளுடன் இம்மலர் வெளிவந்துள்ளது.

மேலும் பார்க்க: 5436, 5867

927.91 நாட்டியக் கலைஞர்கள்

5869

ராகினி ராஜகோபாலின் சதங்கை நாதம் நாட்டியாலயா 30வது ஆண்டு மலர். ஈ.கே.ராஜகோபால் (பதிப்பாசிரியர்). லண்டன்: புதினம் வெளியீட்டாளர்கள், 38 Moffat Road, London SW17 7EZ, 1வது பதிப்பு, ஜுலை 2008. (சென்னை 5: ஸ்ரீ இராகவேந்திரா லேசர் பிரின்டர்ஸ், திருவல்லிக்கேணி).

152 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 26x19 சமீ.

தாயகத்தில் பத்து ஆண்டுகளும், புலம்பெயர்ந்து லண்டனில் இருபது ஆண்டுகளும் ராகினி ராஜகோபாலின் நாட்டியாலயா நடனப்பள்ளி ஆற்றிய கலைப்பணியை கௌரவிக்கும் முகமாக 19.07.2008 அன்று லண்டன் குரொய்டன் Fairfield Hall இல் நடந்த நாட்டியாலயா மாணவிகளின் நடனத் திருவிழாவில் இந்நூல் வெளியிடப்பட்டது. திருமதி ராகினி ராஜகோபாலின் சேவை நலம் பாராட்டும் ஏராளமான கட்டுரைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன.

மேலும் பார்க்க: 5867

927.92 நாடகக் கலைஞர்கள்

5870

கலைஞனை பாடும் குயில்கள். மா.கி.கிறிஸ்ரியன். பிரான்ஸ்: மா.கி.கிறிஸ்ரியன், 3, Villa De Maupassant, 91860 Epinay Sous Senart, 1வது பதிப்பு, பெப்ரவரி 2000. (பிரான்ஸ்: முத்துமணி அச்சகம், 3 Rue Simart, 75018 Paris).
(64) பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18x13 சமீ.

திருமறைக் கலாமன்றத்தின் ஆரம்பகால உறுப்பினராக இருந்தவர் கலைஞர் கிரகரி தங்கராஜா. யாழ்ப்பாணம் பழைய பூங்கா வீதியைச் சேர்ந்த இவர் பின்னாளில் புலம்பெயர்ந்து பாரிசில் வாழ்ந்த வேளையில் 06.01.2000 அன்று மரணமடைந்தார். அவரது மறைவின் 31ஆவது நாள் நினைவாக அவரது நண்பர்கள், கலையுலகப் பிரமுகர்கள் எழுதி வழங்கிய கவிதைகளின் தொகுப்பே இந்நூலாகும்.

மேலும் பார்க்க: 5867, 5875

927.94 விளையாட்டு வீரர்கள், பிரமுகர்கள்

5871

நீச்சு வீரன் வாழ்க்கைச் சித்திரம். ஜி.எம்.செல்வராஜ். கனடா: வல்வை வரலாற்று ஆவணக் காப்பகம், 2வது பதிப்பு, ஏப்ரல் 2009, 1வது பதிப்பு, ஏப்ரல் 1954. (அச்சக விபரம் தரப்படவில்லை).
32 பக்கம், புகைப்படம், விலை: சதம் 30., அளவு: 18x12 சமீ.

யாழ்ப்பாணக் குடாநாட்டின் தொண்டைமானாறைச் சேர்ந்த முருகுப்பிள்ளை நவரத்தினசாமி அவர்கள் வல்வெட்டித்துறை ரெகு துறைமுகத்திலிருந்து தமிழகத்தின் கோடிக்கரைக்கு முதன்முதலாக 1954இல் நீந்திக் கடந்து உலகசாதனையை ஏற்படுத்தினார். இந்த வரலாற்றை காவலூர் கவிஞர் செல்வராஜ் அவர்கள் 21.4.1954 விரிவாக எழுத, அதை கொழும்பிலிருந்து ரி.லேயோன்பிள்ளை, (575 புளுமண்டால் வீதி) நூலுருவில் வெளியிட்டிருந்தார். அந்நூலுக்கு அணிசேர்க்கும்வகையில் ஆவணக்காப்பகப் புகைப்படங்களையும் இணைத்து இந்நூல் மீள்பதிப்பாகியுள்ளது.

5872

றொகான் என்னும் காவியம். மொய்றா றொகான் ராஜசிங்கம். சென்னை 600041: Mrs.M.R.Rajasingam, No 63, 2nd Main Road, V.G.P.Layout Part 2, Palavakkam, 1வது பதிப்பு, மார்ச் 2008. (சென்னை 600024: மித்ர ஆர்ட்ஸ் அன் க்ரியேஷன்ஸ், 32/9, ஆர்க்காடு சாலை, கோடம்பாக்கம்).
144 பக்கம், தகடுகள், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24x18 சமீ.

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் பழைய மாணவரான றொகான் உதைபந்தாட்டம், ஹொக்கி, கிரிக்கெட் ஆகிய விளையாட்டுக்களில் திறமைமிக்கவராகத் தேர்ந்தவர். 1978இல் அகில இலங்கை சிங்கர் கேடயச் சுற்றுப்போட்டியில் கல்லூரியின் சார்பில் தமது அணிக்குத் தலைமைதாங்கி வெற்றியீட்டியவர். 1987இல் விளையாட்டுத்துறையில் டிப்ளொமா பட்டம் பெற்று தெல்லிப்பழை பிரதேச விளையாட்டு அதிகாரியாகப் பணியாற்றியவர். 08.02.2008 இல் நிகழ்ந்த அவரது மறைவையொட்டி வெளியிடப்பட்ட சிறப்பு மலர் இது.

928 இலக்கிய அறிஞர்கள்

5873

அ.ந.க. ஒரு சகாப்தம். அந்தனி ஜீவா. கண்டி: மலையக வெளியீட்டகம், தபால் பெட்டி எண் 32, 1வது பதிப்பு, பெப்ரவரி 2009. (கொழும்பு 6: டெக்னோ பிரின்ட்).
48 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 21x13.5 சமீ., ISBN: 978-955-9084-23-5.

ஈழத்து இலக்கியவாதியும், மறுமலர்ச்சிக்கால எழுத்தாளர் பரம்பரையின் முன்னோடியாகக் கருதப்பட்டவருமான அ.ந.கந்தசாமியின் வாழ்வும் பணிகளும் பற்றிய நூல். இது தினகரனில் "சாகாத இலக்கியத்தின் சரித்திர நாயகன்" என்ற தலைப்பில் 12 பெப்ரவரி 1984 இலிருந்து 01 ஏப்ரல் 1984 வரை தொடராக முன்னர் வெளியிடப்பட்டது. 08.08.1924இல் பிறந்து 14.2.1968இல் மறைந்த அளவெட்டி நடராசா கந்தசாமி (அ.ந.க.) 44 வருடங்களே வாழ்ந்திருந்தாலும், ஈழத்துத் தமிழ்ப் படைப்பிலக்கியத்துக்கு அவர் வழங்கிய சேவை மகத்தானது.

5874

அமரன்: கலாபூஷணம் த.சித்தி அமரசிங்கம் அவர்களின் கலைவாழ்வு. தில்லை முகிலன். திருக்கோணமலை: இம்பீசா திரிசாரணர் குழுவினர், 1வது பதிப்பு, 2009. (திருக்கோணமலை: அஸ்ரா பிரின்ரர்ஸ் பிரைவேட் லிமிட்டெட், இல. 43, திருஞானசம்பந்தர் வீதி).
120 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20x14.5 சமீ.

திருக்கோணமலை, ஈழத்து இலக்கிச் சோலை தாபகர் அமரர் சித்தி அமரசிங்கம் அவர்களின் நினைவாக அவரது அன்பர்களால் உருவாக்கப்பட்ட மலர். அமரர் சித்தி அமரசிங்கத்துடன் நெருக்கமாகவும், இணக்கமாயுமிருந்த 32 அன்பர்களின் எண்ணங்கள் கட்டுரைகளாகவும் கவிதைகளாகவும் இந்நூலில் இடம்பெற்றுள்ளன.

5875

இலக்கியப் பூக்கள். முல்லை அமுதன். (இயற்பெயர்: இ.மகேந்திரன்). லண்டன்: காற்றுவெளி, 34 Redriffe Road, Plaistow E13 0JX, 1வது பதிப்பு, ஆவணி 2008. (சென்னை 600002: காந்தளகம், 68 அண்ணா சாலை).
371 பக்கம், புகைப்படங்கள், விலை: இந்திய ரூபா 200., அளவு: 22.5x14.5 சமீ., ISBN: 978-0-9559585-0-2.

லண்டனில் புலம்பெயர்ந்து வாழும் ஈழத்து எழுத்தாளர் முல்லை அமுதன், ஈழத்துத் தமிழ் நூல்களைச் சேகரித்து ஆண்டுதோறும் லண்டனில் கண்காட்சிகளையும், மறைந்த எழுத்தாளர்கள் பற்றிய காட்சிப்படுத்தல்களையும் தொடர்ந்து மேற்கொண்டுவருபவர். இந்நூலில், அமரத்துவமடைந்த ஈழத்து எழுத்தாளர்களின் வாழ்வும் பணியும் பற்றிப் பல்வேறு தமிழறிஞர்கள் எழுதிய 44 கட்டுரைகளைத் தொகுத்து நூலுருவாக்கியுள்ளார். ஈழத்துப் பூதன்தேவனார், ம.க.வேற்பிள்ளை, சு.சிவபாதசுந்தரனார், ம.வே.திருஞானசம்பந்தபிள்ளை, ம.வே.மகாலிங்கசிவம், சி.கணபதிப்பிள்ளை, தனிநாயகம் அடிகள், த.க.ஞானப்பிரகாசம், தேவசகாயம்பிள்ளை, கனக செந்திநாதன், ச.பஞ்சாட்சரசர்மா, வ.இராசையா, பண்டிதர் வடிவேல், கிருஷ்ணா வைகுந்தவாசன், சிவ.விவேகானந்த முதலியார், சு.வேலுப்பிள்ளை, அ.செ.முருகானந்தன், அ.ந.கந்தசாமி, தி.ச.வரதராசன் (வரதர்), நந்தி, தில்லைச்சிவன், சொக்கன், மிக்கேல்பிள்ளை, க.கைலாசபதி, யாழ்வாணன், ஏ.ஜே.கனகரத்தினா, அப்பச்சி மகாலிங்கம், நாவண்ணன், மு.தளையசிங்கம், தருமு சிவராம், செ.கதிர்காமநாதன், அங்கயன் கைலாசநாதன், செ.யோகநாதன், செம்பியன் செல்வன், அ.சிவராஜா, சிலோன் விஜயேந்திரன். ராஜ ஸ்ரீகாந்தன், சு.வில்வரத்தினம், சி.புஷ்பராஜா, சிவலிங்கம் சிவபாலன், கணபதி கணேசன், முல்லையூரான், குமார் மூர்த்தி, சுபாஷ் சந்திரபோஸ் ஆகிய 44 எழுத்தாளர்கள் பற்றிய பதிவுகள் இப்பாரிய தொகுப்பில் இடம்பெற்றுள்ளன.

5876

இவர்கள் நம்மவர்கள் பாகம் 1. பீ.எம்.புன்னியாமீன். உடத்தலவின்னை 20802: சிந்தனை வட்டம், 14 உடத்தலவின்னை மடிகே, 1வது பதிப்பு, மே 2008. (உடத்தலவின்னை 20802: சிந்தனை வட்ட அச்சீட்டுப் பிரிவு, 14, உடத்தலவின்னை மடிகே).
xiv, 100 பக்கம், விலை: ரூபா 200., அளவு 20 x14.5 சமீ., ISBN: 978-955-1779-12-2.

இலங்கையிலிருந்து வெளிவரும் ஞாயிறு தினக்குரல் இதழில் 25.11.2007 முதல் 16.3.2008 வரை பிசுரமான 10 இலங்கை எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், கலைஞர்களின் விபரங்கள் 276 முதல் 285 வரையிலான பதிவு எண்களைக் கொண்டு இந்நூலில் பதிவாக்கப்பட்டுள்ளன. இலங்கை எழுத்தாளர்கள்,

ஊடகவியலாளர்கள், கலைஞர்களின் விபரத்திரட்டு தொகுதி – 11 ஆகவும் வெளிவந்துள்ள இந்நூல் **இவர்கள் நம்மவர்கள்** என்ற புதிய தொடரில் பாகம் 1 ஆகத் தொடர்கின்றது. இந்நூலில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள 10 பேரினதும் புகைப்படங்களும் அவர்களது குறிப்பிடத்தக்க நூல்களின் அட்டைப் படங்களும் இந்நூலில் இடம்பெறுகின்றன. தம்பி ஐயா தேவதாஸ், எஸ்.எச்.எம்.ஜெமீல், அராலியூர் ந.சுந்தரம்பிள்ளை, அந்தனி ஜீவா, பாலா சங்குப்பிள்ளை, ஜே.மீரா மொஹிதீன், வை.அநவரதவிநாயகமூர்த்தி, சாரல்நாடன், வீ.வீரசொக்கன், நா.தர்மராஜா (அகளங்கள்) ஆகியோர் பற்றிய குறிப்புகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன.

5877

இவர்கள் நம்மவர்கள் பாகம் 2. பீ.எம். புன்னியாமீன். உடத்தலவின்னை 20802: சிந்தனை வட்டம், 14 உடத்தலவின்னை மடிகே, 1வது பதிப்பு, ஜுன் 2008. (உடத்தலவின்னை 20802: சிந்தனை வட்ட அச்சீட்டுப் பிரிவு, 14, உடத்தலவின்னை மடிகே).
viii, 108 பக்கம், விலை: ரூபா 200., அளவு 20 x14.5 சமீ., ISBN: 978-955-1779-13-9.

இலங்கையிலிருந்து வெளிவரும் ஞாயிறு தினக்குரல் இதழில் 30.12.2007 முதல் 15.6.2008 வரை பிசுரமான 15 இலங்கை எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், கலைஞர்களின் விபரங்கள் 286 முதல் 300 வரையிலான பதிவு எண்களைக் கொண்டு இந்நூலில் பதிவாக்கப்பட்டுள்ளன. இலங்கை எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், கலைஞர்களின் விபரத்திரட்டு தொகுதி – 12 ஆகவும் வெளிவந்துள்ள இந்நூல் **இவர்கள் நம்மவர்கள்** என்ற புதிய தொடரில் பாகம் 2 ஆகத் தொடர்கின்றது. இந்நூலில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள 15 பேரினதும் புகைப்படங்களும் இந்நூலில் இடம்பெறுகின்றன. செபஸ்தியான் செபமாலை, பாலேஸ்வரி நல்லரெட்ணசிங்கம், சந்திரகௌரி சிவபாலன், சாந்தி முஹியித்தீன், கிச்சிலான் அமதுர் றஹீம், வண.பிதா தமிழ்நேசன் அடிகள், சி.என்.துரைசிங்கம், மானா மக்கீன், சு.ஸ்ரீகந்தராசா, ராஜா ஜென்கின்ஸ், ச.முருகானந்தன், த.சந்திரசேகரன், அன்புமணி நாகலிங்கம், கே.எம்.பாரூக், சின்னத்தம்பி இரவீந்திரன் ஆகியோர் பற்றிய குறிப்புகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன.

5878

இவர்கள் நம்மவர்கள் பாகம் 3. பீ.எம்.புன்னியாமீன். உடத்தலவின்னை 20802: சிந்தனை வட்டம், 14 உடத்தலவின்னை மடிகே, 1வது பதிப்பு, நவம்பர் 2008. (உடத்தலவின்னை 20802: சிந்தனை வட்ட அச்சீட்டுப் பிரிவு, 14, உடத்தலவின்னை மடிகே).
108 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 200., அளவு 21.5 x14 சமீ., ISBN: 978-955-1779-15-3.

இலங்கையிலிருந்து வெளிவரும் ஞாயிறு தினக்குரல் இதழில் 22.6.2008 முதல் பத்து வாரங்கள் வரை தொடர்ந்து பிசுரமான 10 இலங்கை எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், கலைஞர்களின் விபரங்கள் 301 முதல் 310 வரையிலான பதிவு எண்களைக் கொண்டு இந்நூலில் பதிவாக்கப்பட்டுள்ளன. இலங்கை எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், கலைஞர்களின் விபரத்திரட்டு தொகுதி – 13 ஆகவும் வெளிவந்துள்ள இந்நூல் **இவர்கள் நம்மவர்கள்** என்ற புதிய தொடரில் பாகம் 3 ஆகத்தொடர்கின்றது. இந்நூலில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள 10 பேரினதும் புகைப்படங்களும் இந்நூலில் இடம்பெறுகின்றன. தங்கேஸ்வரி கதிராமன், எம்.வை.எம்.மீஆது, ஆ.மு.சி.வேலழகன், க.இரத்தினசிங்கம், சி.தர்மகுலசிங்கம், கே.எம்.எம்.காசிம்ஜீ, ஞானசெல்வம் மகாதேவா, க.செல்லத்தம்பி, இராசவல்லவன் இராசயோகன், முருகர் செல்லையா ஆகியோர் பற்றிய குறிப்புகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன.

5879

இவர்கள் நம்மவர்கள் பாகம் 4. பீ.எம். புன்னியாமீன். உடத்தலவின்னை 20802: சிந்தனை வட்டம், 14 உடத்தலவின்னை மடிகே, 1வது பதிப்பு, நவம்பர் 2008. (உடத்தலவின்னை 20802: சிந்தனை வட்ட அச்சீட்டுப் பிரிவு, 14, உடத்தலவின்னை மடிகே).
168 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 240., அளவு 22 x14 சமீ., ISBN: 978-955-1779-16-0.

இலங்கையிலிருந்து வெளிவரும் ஞாயிறு தினக்குரல் இதழில் தொடர்ந்து பிசுரமான 15 இலங்கை எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், கலைஞர்களின் விபரங்கள் 311 முதல் 325 வரையிலான பதிவு எண்களைக் கொண்டு இந்நூலில் பதிவாக்கப்பட்டுள்ளன. இலங்கை எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், கலைஞர்களின் விபரத்திரட்டு தொகுதி – 14 ஆகவும் வெளிவந்துள்ள இந்நூல் **இவர்கள் நம்மவர்கள்** என்ற புதிய தொடரில் பாகம் 4 ஆகத்தொடர்கின்றது. இந்நூலில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள 15 பேரினதும் புகைப்படங்களும் இந்நூலில் இடம்பெறுகின்றன. சந்திரகாந்தா முருகானந்தம், கோ.லோகநேசன், வதிரி இ.இராஜேஸ்கண்ணன், வ.தம்பிமுத்து. மாரி.மகேந்திரன், இ.பாலகிருஷ்ணன், அமரர் சி.விஸ்வலிங்கம்,

பொ.சுகந்தன், எம்.எஸ்.ஏ.மஜீத், ஏ.முஹம்மது சமீம், ஏ.எம்.முஸ்தகீம், உஸ்மான் பைலா, முக்தார் ஏ.முஹம்மத், ஏ.என்.எம்.ஷாஜஹான், எம்.ஏ.ஏ.ஹஸன் ஆகியோர் பற்றிய குறிப்புகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. சிந்தனை வட்டம் தொடரில் 300ஆவது நூலாகவும், அதன் தாபகர் புன்னியாமீன் எழுதித் தொகுத்த 150ஆவது நூலாகவும் இது அமைகின்றது.

5880

ஈழத்தில் யான் கண்ட சொற்செல்வர்கள். ஈழத்துச் சிவானந்தன் (புனைபெயர்: பொன்கையூர்ப் பர்வதன்). புங்குடுதீவு: ஐ.கைலாசநாதக் குருக்கள், அடிகளார் பதிப்பகம், 1வது பதிப்பு, மார்ச் 1962. (யாழ்ப்பாணம்: ஸ்ரீகாந்தா அச்சகம், 213, கே.கே.எஸ். வீதி).
82 பக்கம், விலை: ரூபா 1.25.

பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை, முதலியார் செ.சின்னத்தம்பி, கலாநிதி சு.வித்தியானந்தன், க.வேந்தனார், சத்தியதேவி துரைசிங்கம், பொன் அ.கனகசபை, வித்துவான் க.ந.வேலன், வ.பொன்னம்பலம், பொன் முத்துக்குமாரன், புஷ்பா செல்வநாயகம், இ.மகாதேவன், டி.எம்.பீர் முகம்மது, புதுமைப் பிரியை, இளங்கீரன், த.நாவேந்தன், செ.இராசதுரை, க.பே.முத்தையா, புதுமைலோலன், சி.ஆறுமுகம், அ.அமிர்தலிங்கம், க.சிவராமலிங்கம், ஆகிய பேச்சாளர்கள் பற்றிய வாழ்க்கைக் குறிப்புகள் அடங்கிய நூல். இந்நூலுக்கான அணிந்துரையை ஈழநாடு பத்திரிகையின் பிரதம ஆசிரியர் கி.பி.ஹரன் அவர்கள் வழங்கியுள்ளார். (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5881

எஸ்.எம்.ஏ.ஹசன்: தற்கால முஸ்லிம் சமூக-பண்பாட்டியல் வரலாற்றில் ஓர் அத்தியாயம். எம்.எஸ்.எம். அனஸ். கண்டி: S.M.A.ஹசன் பாராட்டு விழா ஏற்பாட்டுக் குழு, 1வது பதிப்பு, செப்டெம்பர் 2004. (கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், 201, டாம் வீதி).
x, 142 பக்கம், விலை: ரூபா 350., அளவு: 22x14.5 சமீ.

அல்ஹாஜ் S.M.A.ஹசன், பேராசிரியர் அல்லாமா உவைஸ் அவர்களின் இஸ்லாமியத் தமிழ் இலக்கிய இயக்கத்துடன் தம்மை ஒன்றிணைத்துக்கொண்டவர். இஸ்லாமியத் தமிழ் இலக்கிய ஆய்வுகளிலும், இலங்கை முஸ்லிம் வரலாறுகளை ஆராய்வதிலும் தமது வாழ்வின் பெரும்பகுதியைச் செலவிட்டவர். அவரது வாழ்வும் பணியும் பற்றிய பதிவே இந்நூலாகும். இந்நூலின் முக்கிய அனுபந்தங்களாக S.M.A.ஹசன் எழுதிய நூற்பட்டியல், S.M.A.ஹசன் நினைவுகள், அவரது கடிதங்கள், பிரசுரங்கள் என்பன இடம்பெறுகின்றன.

5882

ஒரு படைப்பாளியின் வாழ்வும் நினைவுகளும்: அமரர் எம்.நாமதேவன் நினைவு மலர். இரா.அ.இராமன். கண்டி: திருமதி நாமதேவன், ஆசிரியர், விவேகானந்தா தமிழ் மகா வித்தியாலயம், 1வது பதிப்பு, ஒக்டோபர் 2008. (கண்டி: சண் பிரின்ட்ஸ், இல.67, மாப்பாணவத்துற ஒழுங்கை).
112 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22x14 சமீ.

மலையகப் படைப்பாளிகளுள் ஒருவராக, கல்வியாளராக, 1976ம் ஆண்டில் கண்டி இந்து சிரேஷ்ட பாடசாலையில் விவசாய ஆசிரியராக, 1988இல் கண்டி விவேகானந்தா தமிழ் வித்தியாலயத்தில் கல்லூரி அதிபராக, 1997இல் அட்டன் கல்வி வலயத்தில் கோட்டக் கல்விப் பணிப்பாளராக, மலையக மண்ணில் வலம்வந்தவர் அமரர் எம்.நாமதேவன். மலையகத் தமிழ் மாணவர்களின் உயர்வே தமது குறிக்கோளென வாழ்ந்த அவரது மறைவின் இரங்கலுரைகளினதும் நினைவஞ்சலிகளினதும் தொகுப்பாக இம்மலர் வெளியாகியுள்ளது. நாமதேவன் எழுதிய நான்கு சிறுகதைகளும், கவிதைகளும் இத்தொகுப்பில் சிறப்பிடம் பெற்றுள்ளன.

5883

காசிவாசி சி.செந்திநாத ஐயர். சி.கணேசையர், க.சி.குலரத்தினம். கொழும்பு: குமரன் புத்தக இல்லம், 361, ½ டாம் வீதி, 1வது பதிப்பு, 2008. (கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், 361, 1/2, டாம் வீதி).
54 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-955-659-142-7.

இந்நூல், வித்துவசிரோமணி சி.கணேசையர் எழுதிய ஈழநாட்டுத் தமிழ்ப் புலவர் சரித்திரம் என்ற நூலில் இடம்பெற்ற காசிவாசி செந்திநாதையர் என்ற கட்டுரையையும், சைவத் தமிழறிஞர் அமரர் க.சி.குலரத்தினம் எழுதிய சைவம் வளர்த்த சான்றோர்கள்: மகான் க.சி.செந்திநாத ஐயர் என்னும் நூலையும் பெருமளவில்

பயன்படுத்தி கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் அவர்களின் துணையுடன் உருவாக்கப்பட்டது. தோற்றமும் இளமைக்காலமும், திருமணமும் கல்வி யாத்திரையும், மீண்டும் தமிழ்நாட்டில், கந்தபுராண நவநீதம், சைவசித்தாந்த பாடம், காசிவாசி, தமிழ்நாட்டிற் பணி, நூல்கள் இரண்டு, சித்தாந்த சமயப் பங்களிப்பும் ஆய்வு அறிவும் ஆகிய ஒன்பது தலைப்புக்களில் இத்தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன. செந்திநாதையர் வாழ்க்கைக் குறிப்பு, செந்திநாதையர் நூல்கள் ஆகிய இரண்டு பின்னிணைப்புகளும் இடம்பெற்றுள்ளன. ,yq;ifj; jkpo;r; Rlu;kzpfs; njhlu; ,y. 10.

5884

காலச் சுவடுகள். துறையூர் க.செல்லத்துரை. சென்னை 600017: மணிமேகலைப் பிரசுரம், தபால் பெட்டி எண் 1447, தணிகாசலம் சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2008. (சென்னை 94: ஸ்கிரிப்ட்ஸ் பிரிண்டர்ஸ்).
xvi, 208 பக்கம், புகைப்படங்கள், விலை: இந்திய ரூபா 70., அளவு: 18x12 சமீ.

2005இல் பாச்சரம் என்ற நூலை வழங்கிய இந்நூலாசிரியரின் இரண்டாவது நூல் இது. 1955இல் கவிதை உலகில் அறிமுகமான துறையூர் க.செல்லத்துரை தனது சுயசரிதையாக இந்நூலை வழங்கியிருக்கிறார். இந்நூலில் எனது கிராமமும் அக்கால நிலையும், எனது இளமைக்காலமும் சேவையும், எனது பிரயாணங்கள் ஆகிய மூன்று பகுதிகள் இடம்பெறுகின்றன. தனது ஊரான துறைநீலாவணையின் வரலாற்றை விளக்கி அங்குள்ள மக்கள் வீரமறவர் சீர்பாத தேவியின் வம்சத்தவர் என்று எடுத்துரைக்கின்றார். அக்கால கிராமவாழ்க்கை, இருப்பிடம், விவசாயம், மக்களின் பழக்க வழக்கம், சமய வாழ்வு, மூட நம்பிக்கைகள், என்பவற்றைப் படம்பிடித்துக்காட்டுகின்றார். முதலாம் உலகயுத்த காலத்தில் இலங்கையர் அடைந்த துன்பம், அரசியல்வாதிகளால் 1956இல் நுழைக்கப்பட்ட சிங்கள மொழிச்சட்டம், தமிழ் அரசியல்வாதிகள் காலிமுகத் திடலில் மேற்கொண்ட அஹிம்சைப் போராட்டம், 1958 முதல் இன்றுவரை நடைமுறைப்படுத்தப்படும் இனஒதுக்கல் முறைகள், என்று தான் அனுபவவழியிலும், அறிவுசார்ந்தும் கண்டும் கேட்டும் அறிந்த வாழ்நாள் செய்திகள் இந்தக் காலச்சுவடுகளில் தன் சயசரிதையினூடாகப் பதிவுக்குள்ளாக்கியிருக்கிறார்.

5885

தமிழ் புலமை நாகரீகத்தின் ஓர் இழப்பு: இணுவையூர் கா.செ.நடராசா நினைவு மலர். 2006. மலர் வெளியீட்டுக் குழு. சென்னை 600042: இணுவையூர் கா.செ.நடராசா நினைவு மலர் வெளியீட்டுக் குழு, 1வது பதிப்பு ஜுலை 2006. (கொழும்பு 6: டெக்னோ பிரின்ட், 55 டாக்டர் ஈ.ஏ. குரே மாவத்தை).
(90) பக்கம், விலை குறிப்பிடப்படவில்லை, அளவு: 22x15 சமீ.

இணுவிலில் 21.3.1930இல் பிறந்து தமிழகத்தில் வேளச்சேரியில் 27.06.2006இல் மறைந்த அமரர் கா.செ.நடராசா அவர்களின் நினைவாக வெளியிடப்பட்ட நினைவஞ்சலி மலர். 1958இல் தனது முதலாவது நூலான தமிழா விழித்தெழு என்ற நூலை டாக்டர் மு.வரதராசனாரின் முன்னுரையுடன் வெளியிட்டவர். 1977இல் இணுவை அப்பர் என்ற நூலையும் பின்னர் வெளியிட்டிருந்தார். ஆத்மஜோதி மாத இதழில் சமயக் கட்டுரைகள் பலவற்றையும் எழுதியவர். மலையகத்தில் ஆசிரியராகவும், இலங்கைத் தமிழ் அரசுக்கட்சியின் ஆதரவாளராகவும் பணியாற்றியவர்.

5886

நினைவில் நிறைந்தவை. கனகரத்தினம் செபரத்தினம். கனடா: க.செபரத்தினம், 31 Muskox Avenue, Scarborough, Ontario, M1B 6E7, 1வது பதிப்பு, ஜுலை 2009. (கனடா: விவேகா அச்சகம்).
325 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14 சமீ.

இந்நூல் வாழையடி வாழை, ஈழத்துத் தமிழ்ச் சான்றோர்கள், தமிழ்நாடும் ஈழத்துத் தமிழ்ச் சான்றோர்களும் போன்ற அரிய நூல்களை வழங்கிய தமிழ் ஒளி, வித்துவான் கனகரத்தினம் செபரத்தினம் அவர்களின் வாழ்க்கைச் சரிதத்தோடு, தனது இலக்கிய, சமய, சமூகப் பணிகளையிட்டும் தமது நன்றிக்குரியவர்களின் விரிவான செய்திகளையிட்டும் தம்முடன் தொடர்புடைய அன்பர்களின் இலக்கியப் பணிகளையிட்டும் கூறுவதாக அமைந்துள்ளது. மேலும் இங்கிலாந்து, அவுஸ்திரேலியப் பயணங்களின் போது தமக்கு உதவியவர்களை விரிவாக நினைவுகூர்வதாகவும் இந்நூல் அமைந்துள்ளது.

5887

பண்டிதமணியின் பேரும் புகழும். சு.சுசீந்திரராஜா, யாழ்ப்பாணம்: யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளியீடு, திருநெல்வேலி, 1வது பதிப்பு, 1993. (யாழ்ப்பாணம்: மஹாத்மா அச்சகம், ஏழாலை). (8), 65 பக்கம், தகடு, விலை: ரூபா 90., அளவு: 18.5x12.5 சமீ.

நூலாசிரியர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் மொழியியல்துறைப் பேராசிரியராக விளங்கியவர். ஆய்வுநெறிமுறைகளுக்கமைய எழுதப்பட்டுள்ள இந்நூல், வரலாறு தழுவிய அரிய செய்திகள் பலவற்றை உள்ளடக்கியது. பண்டிதமணியின் கலைப் பயில்வு, புலமை ஈடுபாடுகள், கல்வி நிறுவனங்களுடன் அவர் கொண்டிருந்த தொடர்பு, சங்கங்கள், சபைகள் வாயிலாக அவர் ஆற்றிய பணிகள் முதலான பின்னணிகள் இந்த வெளியீட்டில் விளக்கமாகக் குறிப்பிடப்பட்டுள்ளன.

5888

புன்னகை இளவரசன்: எழுத்தாளர் சிவலிங்கம் சிவபாலன். மலர்க்குழு. பாரிஸ்: கலை இலக்கிய நண்பர்கள், 1வது பதிப்பு, ஜுன் 2008. (பாரிஸ்: கிருஷ்ணா அச்சகம்). 40 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 26.5x19.5 சமீ.

எழுத்தாளர் அமரர் சிவலிங்கம் சிவபாலன் (06.04.1954-22.05.2008) அவர்களது நினைவாக கலை இலக்கிய நண்பர்களால் 22.06.2008 பாரிசில் நடாத்தப்பட்ட அஞ்சலி நினைவரங்கில் வெளியிடப்பட்ட சிறப்புமலர். யாழ்ப்பாணம் உரும்பிராயில் பிறந்த சிவபாலன் 1985முதல் பிரான்சில் புலம்பெயர்ந்து வாழ்ந்தவர். **கரங்கள் மாறி** என்ற இவரது சிறுகதைத் தொகுப்பு இவரது மறைவின்பின் வெளிவந்தது.

5889

பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி பவளவிழா மலர். தி.ஞானசேகரன் (பதிப்பாசிரியர்). கொழும்பு 6: ஞானம் பதிப்பகம், 3B, 46ஆவது ஒழுங்கை, 1வது பதிப்பு, கார்த்திகை 2007. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ் பிரைவேட் லிமிட்டெட், 48 B, புளுமெண்டால் வீதி). viii, 120 பக்கம், விலை: ரூபா 280., அளவு: 22x14 சமீ., ISBN: 978-955-8354-17-9.

நவீன இலக்கியச் செல்நெறியில் ஆழத்தடம் பதித்த பேராசிரியர் கா.சிவத்தம்பியின் 75ஆவது அகவை நிறைவை முன்னிட்டு வெளியிடப்பட்ட பவள விழா மலர். பேராசிரியரின் பன்முகத் திறமைகளை பல்வேறு தளங்களில் விமர்சிக்கும் கட்டுரைகள் இம்மலரை நிறைத்துள்ளன. சி.மௌனகுரு, அ.சண்முகதாஸ், எஸ்.சந்திரசேகரன், பெ.மாதையன், நாகராச ஐயர் சுப்பிரமணியன், செ.யோகராசா, க.இரகுபரன், அ.முகம்மது சமீம், வே.விமலராஜா, தெணியான், செங்கை ஆழியான், அ.இரவி, எஸ்.மேசேஸ், அந்தனி ஜீவா, எஸ்.எச்.எம்.ஜெமீல், ஆகியோரின் கட்டுரைகளும் ஞானம் நேர்காணலின் சில பகுதிகளும் இம்மலரில் மணம் பரப்புகின்றன. நூலின் இறுதியில் பேராசிரியரின் வாழ்வும் பணியும் பற்றிய சுருக்கக் குறிப்பும் காணப்படுகின்றது.

5890

பேராசிரியர் கோபன் மகாதேவாவுக்கு 75ஆவது ஆண்டு நிறைவு: வாழ்த்து மலர். ஐ.தி.சம்பந்தன், பொன். பாலசுந்தரம், என்.சச்சிதானந்தன், ஈ.கே.ராஜகோபால், நுணாவிலூர் கே.விஜயரத்தினம் (பதிப்பாசிரியர்கள்). லண்டன்: Century House (Nom de plume), 35 Brandreth Court, Sheepcote Road, Harrow, Middlesex HA1 2JU, 1வது பதிப்பு 2009. (அச்சக விபரம் தரப்படவில்லை). 144 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22x14 சமீ., ISBN: 978-1-873265-62-8.

இலங்கையில் சாவகச்சேரி, மட்டுவிலில் 05.01.1934இல் பிறந்தவர் கோபன் (கோபாலபிள்ளை) மகாதேவா. தற்போது லண்டனில் புலம்பெயர்ந்து வாழும் அவரது 75ஆவது ஆண்டு நிறைவினை முன்னிட்டு அவருடன் தொடர்புள்ள நண்பர்கள், உறவினர், மற்றும் ஊடகவியலாளர்கள், தமிழ் ஆங்கில அறிஞர்கள் ஆகியோரின் மனப்பதிவுகள் வாழும்போது வாழ்த்தும் நோக்கில் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. மொத்தம் 88 பதிவுகள் இடம்பெற்றுள்ளன.

5891

பேராசிரியர் நந்தியும் மலையகமும். ப.ஆப்டீன், கே.பொன்னுத்துரை. கொழும்பு 11: சேமமடு பொத்தகசாலை, U.G.50, Peoples Park, 1வது பதிப்பு, 2008. (கொழும்பு 11: சேமமடு பதிப்பகம்). 146 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 260., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-955-1857-21-9.

பேராசிரியர் நந்தி யாழ்ப்பாணம் இணுவிலில் 30.03.1928இல் பிறந்து, நல்லூரில் 04.06.2005இல் அமரத்துவம் அடைந்தவர். தமது வாழ்நாளின் சில காலத்தை மலையகத்தில் குறிப்பாக 1959-60 காலப்பகுதிகளில் கழித்தவர். நாவலப்பிட்டி சுகாதார வைத்திய அதிகாரியாக அக்காலத்தில் பணிபுரிந்ததுடன் பல்வேறு இலக்கிய முயற்சிகளையும் அந்த மண்ணில் மேற்கொண்டு வரலாறு படைத்தவர். அவரது வெற்றிகரமான முக்கிய படைப்புகள் பல மலையகத்தைப் பகைப்புலமாகக் கொண்டவை. அமரர் நந்தி பற்றிய மனப்பதிவுகளை இன்றைய மலையக இலக்கியவாதிகள் இந்நூலில் முன்வைக்கின்றனர். சாரல்நாடன், தெளிவத்தை ஜோசப், அந்தனி ஜீவா, ப.ஆப்டீன், சு.முரளிதரன், கே.பொன்னுத்துரை, ச.சந்தனப் பிச்சை, கே.ராஜேஸ்வரி, கா.சிவத்தம்பி, மேமன் கவி, மல்லிகை ஜீவா, தி.ஞானசேகரன், இர.சந்திரசேகரசர்மா, நா.நடேசன், பர்சானா நயீம், குறிஞ்சிநாடன், பத்மா சோமகாந்தன். வசந்தி அரசரத்தினம், ச.முருகானந்தன் ஆகியோரின் கருத்துக்கள் இந்நூலில் இடம்பெறுகின்றன. நந்தியின் ஊர் நம்புமா, யானையின் காலடியில், பாத தரிசனம் ஆகிய கதைகளும் பின்னிணைப்பில் தரப்பட்டுள்ளன.

5892

மகாகவி பாப்லோ நெருடா-வாழ்வும் படைப்பும். சு.முரளிதரன். பத்தரமுல்ல: கலாசார அலுவல்கள் திணைக்களம், 8வது மாடி, செத்சிறிபாயா, 1வது பதிப்பு, ஆகஸ்ட் 2008. (பன்னிபிட்டிய: விஸ்வ கிரப்பிக்ஸ், 439/3/3, ஹோகந்தர பாதை).
vi, 79 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x15 சமீ., ISBN: 978-955-1777-60-9.

சிலி நாட்டுக் கவிஞன் பாப்லோ நெருடாவையும் (Ricardo Neftali Reyes Basoalto) அவரது படைப்புகளையும் தமிழ் வாசகருக்கு அறிமுகப்படுத்தும் வகையில் உருவாக்கப்பட்ட நூல். சிலியின் மத்திய பகுதியின் Parral என்ற நகரத்தில் 12.7.1904இல் பிறந்து தென் பகுதியின் Temuco நகரில் வளர்ந்தவர் கவிஞர் பாப்லொ நெருடா. டிசெம்பர் 1928இல் இலங்கைக்கான சிலி ராஜரீக உறுப்பினராகவும் நியமிக்கப்பட்டவர்.

5893

வித்தியின் பார்வையும் பதிவும். சு.வித்தியானந்தன் (மூலம்), திருநாவுக்கரசு கமலநாதன், தெட்சணாமூர்த்தி மதுசூதனன் (தொகுப்பாசிரியர்கள்). கொழும்பு 11: சேமமடு பொத்தகசாலை, U.G.50, Peoples Park, 1வது பதிப்பு, 2009. (கொழும்பு 11: சேமமடு பதிப்பகம்).
124 பக்கம், விலை: ரூபா 280., அளவு: 21.5x15 சமீ., ISBN: 978-955-1857-33-2., CBCN: 2009-04-01-034.

பேராசிரியர் சுப்பிரமணியம் வித்தியானந்தன் நினைவுக்குழு பேராசிரியரின் நூல்களை வெளியிடும் திட்டத்தினைக் கொண்டது. இருபதாம் நூற்றாண்டின் ஈழத்துத் தமிழியல் ஆய்வில் ஒர நிறுவனமாகக் கருதப்பட்டவர் பேராசிரியர் சு.வி. இவரது பணிகள் பன்முகப் பரிமாணம் கொண்டவை. குறிப்பாகப் பல்கலைக்கழகத்தைச் சமூகத்துடன் இணைத்துப் பல்வேறு புத்தாக்கக் கட்டங்கள் உருவாகக் காரணமாக இருந்துள்ளார். அவரது இலக்கியத் தென்றல் நூலை வித்தியானந்தன் நினைவுக்குழு 2008இல் இரண்டாம் பதிப்பாக வெளியிட்டது. அதனைத் தொடர்ந்து அவர் பல்வேறு மலர்களிலும் எழுதிய தமிழறிஞர் பற்றிய கருத்துரைகளைத் தொகுத்து இந்நூல் உருவாக்கப்பட்டுள்ளது. இதில் ஆறுமுக நாவலர், சுவாமி விபுலானந்தர், பாவலர் துரையப்பாபிள்ளை, பேராசிரியர் க.கணபதிப்பிள்ளை, தவத்திரு தனிநாயகம் அடிகள், பேராசிரியர் பேரம்பலம் கனகசபாபதி, பேராசிரியர் க.கைலாசபதி, பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை, பேராசிரியர் அ.சின்னத்தம்பி, புலவர் சிவங்.கருணாலய பாண்டியனார் ஆகிய பத்துத் தமிழறிஞர்கள் பற்றிய சு.வி.யின் கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன.

மேலும் பார்க்க: 5013, 5867

940 ஐரோப்பிய வரலாறு

941 பிரித்தானிய வரலாறு

5894

பிரித்தானிய சக்ராதிபத்தியச் சரித்திரச் சுருக்கம். சி.சுவாமிநாதன். சுன்னாகம்: நா.பொன்னையா, தனலட்சுமி புத்தகசாலை, 3வது பதிப்பு, 1931, 1வது பதிப்பு, 1925. (சுன்னாகம்: T.M.Press).
152 பக்கம், விலை: ரூபா 1.00.

கி.மு.55 முதல் கி.பி.1485 வரையிலான பூர்வகால வரலாற்றை முதலாவது பிரிவாகவும், சக்ராதிபத்திய ஆரம்பகாலம், சக்ராதிபத்திய குடியேற்ற காலம், சக்ராதிபத்திய வெற்றிக்காலம், சக்ராதிபத்திய வளர்ச்சிக்காலம் ஆகிய அம்சங்களை உள்ளடக்கிய கி.பி. 1500-1600 காலப்பகுதி வரலாற்றை இரண்டாம் பிரிவாகவும் கொண்டு இந்த நூல் வெளிவந்துள்ளது. மயிலிட்டியைச் சேர்ந்த நூலாசிரியர் சி.சுவாமிநாதன், யாழ்ப்பாணம் திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலையின் அதிபராகப் பணியாற்றியவர். இந்நூலின் முதலாவது பதிப்பு ஆசிரியர் திரு. மா.பீதாம்பரம்பிள்ளையினால் பதிப்பிக்கப்பெற்று வெளிவந்தது. இந்நூலுக்கான மதிப்புரையை திருக்கோணமலை ஸ்ரீ ராமகிருஷ்ண ஆச்சிரமத்திலிருந்து சுவாமி விபுலானந்தர் வழங்கியுள்ளார். அவர் தனது உரையில் பின்வருமாறு குறிப்பிடுகின்றார். "மன்னர் மன்னராகிய ஐந்தாம் ஜோர்ஜ் சக்கரவர்த்தி மகிபாலரே தமது ஆணை நடக்கும் பரிதி மறையாப் பரந்த நாடனைத்தினுக்கும் உயிரென விளங்குகின்றார். மலர்தலை உலகினுக்கு உயிரெனத் திகழும் மன்னர் பெருமானது செங்கோற் சிறப்பையும், வரன்முறையையும் அவரது முன்னோராகிக் குடதிசை யாளுங் கொற்றவர் தம்முள் அடலரிக் கொடியுடை யாங்கில மன்னர் "அறனு மறனு மாற்றலு மவர்தம்பழவிளன் மூதூர்ப் பண்புமேம் படுதலு மொடியா வின்பத் தருவறை நாட்டுக் குடியின் செல்வமுங் கூழின் பெருக்கும்" என் றின்னை பலவாய பொருட்டுறைகளையு மாராய்ந் துணர்வது அகன்மதியாளர்க் கின்றியமையாதது. இவற்றை யெல்லாந் தொகுத்து இளமாணவரு மெளிதிலுணரத் தக்க தெள்ளிய தமிழ்நடையில் எழுதித் தந்த புலமை மிக்க திருவாளர் சுவாமிநாத போதகாசிரியருக்குத் தமிழுலகம் கடப்பாடு பூண்டுள்ளது." (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

950 ஆசிய வரலாறு

954 இந்திய வரலாறு

5895

தமிழகம். ந.சி.கந்தையாபிள்ளை. மதராஸ்: ஒற்றுமை ஆபீஸ், சைதாப்பேட்டை, 1வது பதிப்பு, 1934. (Madras: The Royal Printing Works, Mount Road).
282 பக்கம், விலை: ரூபா 2.25, அளவு: 21.5x14 சமீ.

யாழ்ப்பாணத்து நவாலியூர் திரு. ந.சி.கந்தையாபிள்ளை ஒரு பன்னூலாசிரியர். இந்நூலில் மூன்று இயல்களில் தமிழ்நாட்டின் தொன்மை நிலை, மொழியியல், தமிழர் நாகரீகம் ஆகிய விடயங்களை விரிவாக ஆராய்ந்துள்ளார். சிறியனவும் பெரியனவுமாகிய நூல்களிலும், பத்திரிகைகளிலும், ஆராய்ச்சி அறிஞர்கள் தமிழகத்தைப் பற்றிய பொருளுரைகளை காலந்தோறும் வெளியிட்டுள்ளார்கள். அன்னோர் முடிபுகளை இயன்றவரையில் தொகுத்துக் கோவைப்படுத்துவதாகவே இந்நூல் அமைவதாக நூலாசிரியர் குறிப்பிடுகின்றார். தமிழ்நாட்டின் நாகரீகம் பரந்து வேறுநாடுகளுக்குச் சென்றதென்பதைத் தெளிவாக இந்நூல் விளக்குகின்றது,

5896

திராவிட இந்தியா. ந.சி.கந்தையாபிள்ளை. சென்னை 1: ஆசிரியர் நூற்பதிப்புக் கழகம், பவழக்காரத் தெரு, 1வது பதிப்பு, சித்திரை 1949. (சென்னை 1: பிரீ பிரின்டர்ஸ், 147, பவழக்காரத் தெரு).
84 பக்கம், விலை: ரூபா 1.00.

யாழ்ப்பாணத்து நவாலியூர் ந.சி.கந்தையாபிள்ளை எழுதிய இந்நூல் பற்பல ஆராய்ச்சி அறிஞர் ஆராய்ந்து கண்ட உண்மைகளை ஆதாரமாகக் கொண்டு கற்போர் எளிதில் படித்துப் பொருள் விளங்கும் வகையில் திராவிடர்களின் வரலாற்றை தொகுத்துத் தருகின்றது. (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5897

தீண்டப்படாதவர்களால் தீண்டப்படாத புதிய கட்சி. அ.கௌரிகாந்தன். தர்மபுரி 636701: சுடர் பதிப்பகம், 4, கந்தசாமி வாத்தியார் தெரு, 1வது பதிப்பு, நவம்பர் 2002, (தருமபுரி: மல்டிமீடியா ஆப்செட், 4. கந்தசாமி வாத்தியார் தெரு).
103 பக்கம், விலை: இந்திய ரூபா 40., அளவு: 22x14.5 சமீ.

சுடர் பதிப்பகத்தின் முதலாவது வெளியீடு. இந்நூல் இந்திய சுதந்திரப் போராட்ட காலத்தில் ஏற்பட்ட நிகழ்வுகளின் பதிவுகளை, கவனிக்கப்படாத அல்லது கண்டுகொள்ளப்படாத அல்லது மறைக்கப்பட்ட பதிவுகளை தற்கால இளஞ் சமூகத்திற்கு ஒரு விவாதப் பொருளாக முன்வைக்கின்றது. இந்திய

வரலாற்றில் புதிய கட்சியின் எழுச்சியும் பின்னடைவும், 1900-1919 வரையிலான காலகட்டத்தின் பின்புலமாக இந்நூலில் விரிகின்றது. காங்கிரஸ்ஸில் இருந்து 1907இல் விடுபட்டுச் சென்ற தேசியக் கட்சியின் தீவிரவாத இயக்கம் குறித்துப் பேசும் ஒரு நூல் என்ற வகையில் முக்கியத்துவம் பெறுகின்றது. இந்நூலாசிரியர் கௌரிகாந்தன் இலங்கையில் இடதுசாரி இயக்கத்தில் பணியாற்றியவர். இனப்பிரச்சினை காரணமாக தமிழகத்தில் புலம்பெயர்ந்து வாழ்ந்துவருபவர்.

5898

நாடு தரும் ஏடு. கு.ம.திரவியம். ஊர்காவற்றுறை: கு.ம.திரவியம், 1வது பதிப்பு, ஜனவரி 1967. (வெள்ளவத்தை: ராஜா அச்சகம்).
128 பக்கம், விலை: ரூபா 1.50.

இருபதாண்டு காலமாக தமிழகத்தில் காங்கிரஸ் கட்சியின் குடியரசு ஆட்சி நடந்தும், ஏழைகளுக்கு அதனால் எவ்விதப் பயனும் இல்லை என்பதை நன்கு அறிந்தும், தாய்மொழிக்கு ஆபத்து அணுகிக்கொண்டு வருவதைக் கண்ட நூலாசிரியர், காங்கிரஸால் நாட்டில் ஏற்பட்டுள்ள கொடுமைகளை மீண்டும் வளரவிடாது தடுத்து, 1967இல் பொதுத் தேர்தலில் காங்கிரஸை பூண்டோடு ஒழித்துக்கட்டிட திராவிட முன்னேற்றக் கழகம் தீவிர முயற்சி எடுத்து வருவதோடு, தேர்தல் நிதியும் திரட்டி வருகின்றமையை அவதானிக்கிறார். தமிழகத்தில் காங்கிரஸ் ஆட்சியை ஆழக் குழிதோண்டிப் புதைத்துவிட்டு, திராவிட முன்னேற்றக் கழகத்தை வெற்றிபெறச் செய்து, அண்ணாவை ஆட்சிபீடத்தில் அமர்த்தி நாடு நலம் பெற நல்லவர்கள் வாழவேண்டும் என்ற ஒரே இலட்சியத்திற்காக தான் இந்நூலை எழுதியதாகக் குறிப்பிடுகின்றார். இந்நூலுக்கான முன்னுரையை ஆர்.எம்.அப்துல் ரஹீம் அவர்களும், மதிப்புரையை திருத்தணி வேலனும் எழுதியுள்ளனர். (விற்பனை உரிமை: கொழும்பு 5: சாந்தி ஸ்டோர், 67 ஹவ்லொக் வீதி, திம்பிரிகஸ்யாய). (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம்.அலி, கொழும்பு 14).

5899

பொங்கியெழும் பாரதம். முதலூர் ஞானதாசன். தென் இந்தியா: முதலூர் ஞானதாசன், நெல்லை மாவட்டம், 1வது பதிப்பு ஆண்டு விபரம் தரப்படவில்லை. (கொழும்பு 12: சுதந்திரன் அச்சகம், 194 ஏ, பண்டாரநாயக்கா வீதி).
54 பக்கம், விலை: ரூபா 1.00

வளரும் பாரதம், படையெடுப்பின் நோக்கம், மக்மோகன் வரலாறு, ஜனநாயகத்தின் நம்பிக்கை, ஜனநாயகமா சர்வாதிகாரமா, சர்வதேச நீதிமன்றம், சீனம் நம்மைத் தாக்குமா, சங்ககால வரலாறு ஆகிய தலைப்புகளில் கடித உருவில் சொல்லப்படும் இந்திய-சீனப் போர் பற்றிய சமகால வரலாற்றுக் கட்டுரைகள். "அணைத்து வஞ்சித்த சீனன் ஆயுதப் படை தாங்கி எல்லையில் ஆக்கிரமித்தபொழுது, பாரதம் பொறுத்திருந்ததா? நேரு கைகட்டி வாளாவிருந்தாரா? இல்லை. இல்லவேயில்லை. பொங்கி எழுந்தது பாரதம். போர் போர் என்றார் நேரு. மக்கள் புறப்பட்டனர் களம் நோக்கி. அந்தக் கதைதான் இந்தப் புத்தகம்" என்று நூலாசிரியர் தனது நூல் பற்றிக் குறிப்பிடுகின்றார். (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

954.93 இலங்கை வரலாறு

954.93(1) இலங்கையின் பொது வரலாறு

5900

அகத்திய மாமுனிவராற் சொல்லப்பட்ட அகத்தியர் இலங்கை அல்லது அதிபூர்வீக இலங்கைச் சரித்திரம்: முதற் பகுதி. வ.நாதர் (பதிப்பாசிரியர்). யாழ்ப்பாணம்: வ.நாதர், பிரசித்த நொத்தாரிசு, புத்தூர், பல்லவம் (யாழ்ப்பாணம்), 1வது பதிப்பு, 1936. (Madurai: The Nadar Press, East Veli Street).
45 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை.

சிங்களவருடைய முதல் அரசனான விஜயன் இலங்கைக்கு வந்த காலத்திலும், அதற்கு முன்பும் இலங்கையில் வாழ்ந்த சகல மக்களும் அவர்களையாண்ட எல்லா அரசர்களும் தமிழர்களே என்று வாதிடும் இந்நூல், பிற்காலத்தில் சிங்களவர் பிரதேசத்திலிருந்து வந்து, இலங்கையிற் குடியேறிய அந்நியரேயாவர் என்றும் குறிப்பிடுகின்றது. சிங்களவர் இலங்கையில் முதலில் குடியேறுவதற்கு முன்னர் இலங்கையை ஆண்ட தமிழரசர்களுடைய பெயர்கள் இந்நூலில் காணப்படுகின்றன. யாழ்ப்பாண

மாவட்டத்தின் புத்தூரைச் சேர்ந்த சட்டத்தரணியான நூலாசிரியர் மதுரைக்குச் சென்றிருந்த வேளை தனது சினேகிதரான ஸ்ரீ கந்தசாமி செட்டியார் வழங்கிய **அகத்தியர் இலங்கை** என்ற நூலின் கையெழுத்துப்பிரதியின் அச்சுவடிவம் இந்நூலாகும் என்றும் குறிப்பிட்டுள்ளார். (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5901

இலங்கைச் சரித்திரம்: இரண்டாம் பகுதி: ஒல்லாந்தர் காலம் 1658-1796. F.X.C.நடராசா. கொழும்பு 11: கலைமகள் கம்பெனி, 124 செட்டியார் தெரு, 1வது பதிப்பு, ஜனவரி 1956. (சென்னை 1: ஸ்ரீமகள் அச்சகம்).
76 பக்கம், விலை: ரூபா 1.00.

இலங்கையின் வரலாற்றை பகுதிகளாகப் பிரித்து நூலாக வெளியிடும் முயற்சியின் பயனாக 1955இல் முதலாவது பகுதி **இலங்கைச் சரித்திரம்: போர்த்துக்கீசர் காலம்- 1505-1657** என்ற தலைப்பில் வெளிவந்தது. அதன் தொடர்ச்சியாக வெளிவரும் இரண்டாவது பகுதியில் ஐக்கிய கிழக்கு இந்திய வர்த்தக சங்கம், இரண்டாம் இராசசிங்கனின் உள்ளூராட்சி முறைகள், வேற்றரசுகளுடன் செய்துகொண்ட தொடர்புகள், 2ஆம் இராசசிங்கனின் இறுதிக்காலம் 1635-1687, விமலதரும சூரியன் -2 (1687-1706), ஸ்ரீ வீர நரேந்திரசிங்கன் (1706-1739), இலங்கை அரசர் பரம்பரையில் மாற்றம் (ஸ்ரீ விஜய இராசசிங்கன் 1739-1747), கீர்த்தி ஸ்ரீ இராசசிங்கன் 1747-1782, ஒல்லாந்தரின் பரிபாலன முறை 1698-1796, ஒல்லாந்த தேசாதிபதிகள் 1640-1796 ஆகிய தலைப்புகளில் இலங்கையின் வரலாறு பதியப்பட்டுள்ளது. (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5902

இலங்கைச் சரித்திரம்: மூன்றாம் பகுதி: ஆங்கிலேயர் காலம் 1795-1947. F.X.C.நடராசா. கொழும்பு 11: கலைமகள் கம்பெனி, 124 செட்டியார் தெரு, 1வது பதிப்பு, ஜனவரி 1957. (சென்னை 1: ஸ்ரீமகள் அச்சகம்).
182 பக்கம், விலை: ரூபா 2.00.

இலங்கையின் வரலாற்றை பகுதிகளாகப் பிரித்து நூலாக வெளியிடும் முயற்சியின் பயனாக 1955இல் முதலாவது பகுதி **இலங்கைச் சரித்திரம்: போர்த்துக்கீசர் காலம்- 1505-1657** என்ற தலைப்பில் வெளிவந்தது. அதன் இரண்டாவது பகுதி ஒல்லாந்தர் காலத்தை பதிவுசெய்வதாக 1956இல் வெளிவந்தது. இது மூன்றாவது பகுதி. இந்நூலில் இராசாதி ராசசிங்கன் (1782-1798), இலங்கையின் கரையோர மாகாணங்களில் ஆங்கிலேய கிழக்கிந்திய வர்த்தக சங்கத்தாரின் ஆட்சி (1795-1798), கரையோர மாகாணங்களில் இரட்டை ஆட்சி (1798-1801), முடிக்குரிய குடியேற்ற நாட்டாட்சி முறை இலங்கையில் தாபிக்கப்படல் (1802-1811), பிரித்தானியரும் கண்டி இராச்சியமும் (1801), ஆங்கிலேயர் கண்டிக்கு எதிராகச் செய்த முதற் போர் (1803), கண்டியரசின் சீர்கேடும் அதனை ஆங்கிலேயர் வெற்றிகொள்ளலும் (1815), கண்டி நாட்டில் கபிற்றிப் பொலை கலகமும் குழப்பமும் (1818), கண்டியரசின் ஆட்சிமுறை, இலங்கையில் ஆங்கிலேய நீதாசான முறையின் வளர்ச்சி, காணி உரிமையும் ஆட்சியும், இராசகாரிய வேலை அல்லது ஊழியம், கல்வி வளர்ச்சி, இலங்கையிற் பத்திரிகை வளர்ச்சி, இல்கையிற் போக்குவரத்து வசதிகளின் வளர்ச்சி, வெளிநாட்டுப் போக்குவரத்து விருத்தி, கப்பல்களும் துறைமுகங்களும், விவசாய விருத்தி, அரசாங்க பகுதிகளும் அவற்றின் பரபாலனமும், வர்த்தகம்-சுங்கவரி-ஆயம்-அரசிறை, அரசியலமைப்பு விசாரணைச் சபைகள், ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் ஏற்பட்ட கலகங்கள், ஆங்கிலேய தேசாதிபதிகள் ஆகிய தலைப்புகளில் விரிவான முறையில் பதிவுசெய்யப்பட்டுள்ளது. (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5903

ஈழ வரலாற்று மரபில் யாழ்ப்பாண வைபவமாலை. சி.பத்மநாதன். தெல்லிப்பழை: பாவலர் தெ.அ.துரையப்பாபிள்ளை நினைவுப் பேருரை, மகாஜனக் கல்லூரி, 1வது பதிப்பு, ஜுன் 1977. (யாழ்ப்பாணம்: செட்டியார் அச்சகம்).
14 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x13.5 சமீ.

பாவலர் தெ.அ.துரையப்பாபிள்ளை நினைவுப் பேருரை வரிசையில் மூன்றாவதாக இடம்பெற்ற இவ்வுரை, இலங்கைப் பல்கலைக்கழகத்தின் வரலாற்று விரிவுரையாளராகவிருந்த கலாநிதி சி. பத்மநாதன் அவர்களால், 24.06.1977 அன்று வழங்கப்பட்டது.

5904

கைலாயமாலை. முத்துராச கவிராயர். தமிழ்நாடு: சே.வெ.ஜம்புலிங்கம்பிள்ளை, திருமயிலை, 1வது பதிப்பு, 1939. (சென்னை: சாந்தி அச்சுக்கூடம்).
64 பக்கம், விலை: அணா 8.

உறையூர்ச் செந்தியப்பரின் மகனான முத்துராச கவிராசர் இயற்றிய கைலாயமாலையின் மூலம் 310 செய்யுள்களைக் கொண்டது. மூலம், விஷய வரலாறு, அரும்பதக் குறிப்பு, ஆங்கில மொழிபெயர்ப்பு, சரித்திர ஆராய்ச்சி முதலியவற்றுடன் இந்நூல் அச்சிடப்பெற்றுள்ளது. ஆராய்ச்சி முன்னுரையை முதலியார் செ.இராசநாயகம் எழுதியுள்ளார். விஷய வரலாறு மற்றும் அரும்பத விளக்கத்தினை, முதலியாரின் சகோதரியார் க.இராஜராஜேசுவரி அம்மையார் எழுதியுள்ளார். ஆங்கில மொழிபெயர்ப்பினை அமரர் A.முத்துத்தம்பிப் பிள்ளையவர்கள் எழுதியிருக்கிறார். இந்நூல் யாழ்ப்பாணத்து நல்லூரில் பிரபல்யமுற்றிருந்ததும் பிற்காலத்தில் பறங்கியரால் இடிக்கப்பட்டு முற்றாயொழிக்கப்பட்டதுமான கைலாயநாதர் கோவிலைச் சிங்கையாரியன் என்னுந் தமிழ்மன்னன் கட்டிப் பிரதிட்டை செய்த வரலாற்றைச் சிறப்பாக எடுத்துக் கூறுகின்றது. மாதகல் மயில்வாகனப் புலவர் எழுதிய வைபவமாலையின் உருவாக்கத்திற்கு உசாத்துணையாக கைலாயமாலை நூல் இருந்துள்ளது.

கைலாயமாலை. முத்துராச கவிராயர் (மூலம்), சே.வெ. ஜம்புலிங்கம்பிள்ளை (பதிப்பாசிரியர்). கனடா: வல்வை வரலாற்று ஆவணக் காப்பகம், 3947 lawrence Ave East #413, Scarborough, Ontario, மீள்பதிப்பு, மார்ச் 2009,1வது பதிப்பு, ஒக்டோபர் 1939. (சென்னை: காந்தளகம், அண்ணாசாலை).
xvi, (8), 59 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5 x13.5 சமீ.

சென்னை சாந்தி அச்சுக்கூடத்தில் 1939இல் அச்சிடப்பெற்று எட்டு அணாவுக்கு விற்பனையான கைலாயமாலையின் மூலப்பிரதியை உள்ளவாறு நகல்மீளுருவாக்கம் செய்யப்பட்ட பதிப்பு இதுவாகும். கனடாவில் இயங்கும் நகுலசிகாமணி அவர்களின் வல்வை வரலாற்று ஆவணக் காப்பகத்தின் பல்வேறு மீள்பதிப்பு முயற்சிகளுள் இதுவும் ஒன்று.

கைலாயமாலை. முத்துராச கவிராயர் (மூலம்), சே.வெ. ஜம்புலிங்கம்பிள்ளை (பதிப்பாசிரியர்). கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், 201 டாம் வீதி, 2வது பதிப்பு, ஒக்டோபர் 2002, 1வது பதிப்பு, ஒக்டோபர் 1939. (கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், 201, டாம் வீதி).
63 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5 x14.5 சமீ.

முத்துராச கவிராயர் கி.பி.16ம் நூற்றாண்டுகளில் வாழ்ந்தவர். நல்லூரிலிருந்த பண்டைய கைலாயநாதர் கோயில் கட்டப்பட்டு பிரதிஷ்டை செய்யப்பட்ட வரலாறும், இக்கோயிலைக் கட்டுவித்த சிங்கை ஆரியன் என்ற முதல் அரசன் நல்லூரைத் தலைநகராகக் கட்டுவித்த வரலாறும் இந்நூலில் கூறப்படுகின்றது. கவிதைவடிவில் 310 கண்ணிகளைக் கொண்ட கலிவெண்பா இது. இது ஆறுமுகநாவலரின் தமையனார் புத்திரனான ஸ்ரீ.த.கைலாயபிள்ளை அவர்கள் அச்சிட்ட மிகப்பழையநூல் என்றும் கருதப்படுகின்றது. இவ்விரண்டாம் பதிப்பு, மூல நூலுடன், விஷய வரலாறு, அரும்பதக் குறிப்பு, ஆங்கில மொழிபெயர்ப்பு, சரித்திர ஆராய்ச்சி முதலியவற்றுடன் கூடியது.

954.93(2) இலங்கை இனப்பிரச்சினை வரலாறு

5905

அமெரிக்க-கத்தோலிக்க நடவடிக்கை: கூட்டுச்சதி. எச்.எம்.பி.முகிதீன். கொழும்பு 14: இலங்கை வாலிபர் சங்க சம்மேளனம், 19/1 மகா குமாரகே மாவத்தை, 1வது பதிப்பு, ஆண்டு விபரம் தரப்படவில்லை. (கொழும்பு 10: பிரஜா பிரசுராலயம்).
42 பக்கம், விலை: சதம் 50.

ஸ்ரீமாவோ கூட்டரசாங்கத்தை உடைக்க அமெரிக்கா, பிரிட்டிஷ் ஏகாதிபத்திய வெறியர் செய்த சதிகளையும் அதற்கான பின்னணிகளையும் இந்த நூலில் தான் விஸ்தரிக்க முனைந்துள்ளதாக நூலாசிரியர் குறிப்பிடுகின்றார். (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5906

அனைத்துலக நீதிச்சபைமுன் இலங்கைத் தமிழர் பிரச்சினை. சா.ஜே.வே.செல்வநாயகம் (ஆங்கில மூலம்). இரா.சச்சிதானந்தன் (தமிழாக்கம்). கொழும்பு: வி.தர்மலிங்கம், தமிழர் கூட்டணி, 1வது பதிப்பு, ஜுலை 1974. (கொழும்பு 12: சிலோன் நியுஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட், 194 ஏ பண்டாரநாயக்க வீதி). vi, 48 பக்கம், விலை: ரூபா 2.00, அளவு: 20.5x13.5 சமீ.

"சிங்கள ஏகாதிபத்தியம் பற்றி அனைத்துலக நீதிச்சபை முன் தமிழர் கூட்டணி சமர்ப்பித்த முறையீடு" என்ற உட்தலைப்புடன் இவ்வறிக்கை தமிழாக்கம் செய்யப்பட்டுள்ளது. சிறுபான்மையினரைப் பாதுகாத்தல் பற்றியும் பாகுபாட்டைத் தடுப்பது பற்றியும் உலக நாடுகள் அவையில் துணை ஆணைக்குழுவொன்றுள்ளது. இவ்வாணைக்குழுவுக்கு அனைத்துலக நீதி ஆணைக்குழு சமர்ப்பிக்கவிருந்த ஒரு முக்கிய அறிக்கைக்காக, இலங்கையின் சிறுபான்மைத் தமிழர் பற்றிய கேள்விக்கொத்தொன்றினை அதன் சட்ட அலுவலரான லீ சுவெப்சிரன் தமிழர் கூட்டணி தலைவர் சா.ஜே.வே.செல்வநாயகம் அவர்களிடம் 15.5.1973இல் ஒப்படைத்திருந்தார். அதற்குப் பதிலாக ஈழத்தமிழர் பிரச்சினை தொடர்பான விரிவானதொரு ஆங்கில அறிக்கையினை தொகுப்புரையாக தந்தை செல்வா 4.9.1973இல் அவருக்கு அனுப்பிவைத்திருந்தார். இலங்கைத் தமிழர் வரலாறு, இன ஒடுக்குமுறை அரசியல் மற்றும் எதிர்நோக்கியிருக்கும் சிக்கல் அனைத்தையும் விரிவாகப் பட்டியலிட்ட அவ்வறிக்கையின் தமிழாக்கமே இதுவாகும்.

5907

ஆசிய ஜோதி ஸ்ரீ நேருவுக்கு. என்.எஸ்.தமிழ்மாறன். கொழும்பு 4: தமிழ் மன்றம், 387-14, காலி வீதி, பம்பலப்பிட்டி, 2வது பதிப்பு, ஏப்ரல் 1955, 1வது பதிப்பு, மே 1954. (கொழும்பு 10: ருத்ரா அச்சகம், 72, டீன்ஸ் ரோட்).
37 பக்கம், விலை: சதம் 50.

இலங்கை வாழ் மலையக மக்களின் இன்னல்களையும், இலங்கை-இந்திய ஒப்பந்தத்தின் விளைவுகளைப் பற்றியும் இந்நூலில் ஆசிரியர் விளக்கியுள்ளார். இந்தியத் தமிழர்களின் உணர்வுகளை உருக்கமாக அதில் உணர்த்தியிருக்கிறார். இந்தியப் பிரதமர் ஜவகர்லால் நேருவிடம் மலையக மக்களின் துயரை நேரில் எடுத்துரைப்பதாக இந்நூல் அமைகின்றது. இந்நூலுக்கான முன்னுரையை இலங்கை ஜனநாயக காங்கிரஸ் முன்னாள் தலைவர் ஸ்ரீ கே.ராஜலிங்கம் அவர்கள் வழங்கியுள்ளார். (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5908

இரத்தச் சுவடு. எருக்கலம்பிட்டி கே.எஸ்.ஏ.கபூர். யாழ்ப்பாணம்: அன்பு வெளியீடு, 9/1 அரசடி ஒழுங்கை, 1வது பதிப்பு, ஆடி 1962. (யாழ்ப்பாணம்: சுதந்திரநாத அச்சகம், திருநெல்வேலி).
84 பக்கம், விலை: சதம் 75.

பனாகொடை தடுப்புக்காவல் முகாமிலிருந்து கே.எஸ்.ஏ.கபூர் எழுதியுள்ள இந்நூலுக்கான மதிப்புரையை அதே தடுப்பு முகாமிலிருந்து, திருக்கோணமலை பாராளுமன்ற உறுப்பினர் என்.ஆர்.இராஜவரோதயனும், யாழ்ப்பாணத்திலிருந்து எழுத்தாளர் புதுமைலோலனும் வழங்கியுள்ளனர். தமிழ் பேசும் இனத்தின் நிலையில் ஏற்பட்ட மாறுதல்கள், அதற்குக் காரணமாயமைந்த வகுப்புவாத ஆட்சிபீடம், அவ்வாட்சிபீடம் தமது ஆட்சியை நிலைக்கச் செய்வதற்காகக் கையாண்ட வழுநிறைந்த பாதை என்பவற்றைத் தெளிவாகவும் ஆய்வுநோக்கிலும் இந்நூல் பதிவுசெய்கின்றது. (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5909

இலங்கை: இயற்கைப் பேரழிவு தேசத்தின் சீரழிவு. பி.இரயாகரன். பிரான்ஸ்: சமர் வெளியீடு, 32, Rue Trouillet Derel, 92600 Asnieres sur-seine, 1வது பதிப்பு, டிசம்பர் 2005. (சென்னை 24: எழில் பிரின்டர்ஸ், 63, என்.எஸ்.கே. சாலை, கோடம்பாக்கம்).
320 பக்கம், விலை: இந்திய ரூபா 150., அளவு: 21.5x14 சமீ.

இலங்கையில் சுநாமி ஆழிப்பேரலை ஏற்படுத்திய பாதிப்பின் உண்மை அரசியல் நிலையைக் காண முயலும் முயற்சியாக இந்நூல் எழுந்துள்ளது. இதிலுள்ள 21 கட்டுரைகளும் பொதுவாக ஆழிப்பேரலையின் பின்னதாக எழுந்த அரசியல் அலைகளை ஆராய்கின்றன. www.tamilcircle.net என்ற இணையத்தளத்தில் முன்னதாக வெளியிடப்பட்ட இவ்விமர்சனக் கட்டுரைகள் பெரும்பாலும் இலங்கையையே மையமாகக் கொண்டது. சுநாமி, இலங்கையில் தொடரும் படுகொலைகள், சிலரின் மரணங்கள், விடுதலைப் புலிகளின்

பேச்சுவார்த்தைகள், இழுபறியான மக்கள் விரோதப் பேரங்கள் முதல் ஏகாதிபத்தியங்களின் அரசியல் காய் நகர்த்தல்கள் எனப் பல்வேறு விடயங்கள் இக்கட்டுரைகளில் ஆராயப்பட்டுள்ளன.

5910

இலங்கை இனமோதுகையின் சர்வதேசப் பரிமாணம். நீதியான சமாதானத்திற்கும் ஜனநாயகத்திற்குமான நடுவம். சுவிட்சர்லாந்து: நீதியான சமாதானத்திற்கும் ஜனநாயகத்திற்குமான நடுவம், CJPD, Bahnofstrasse 13, 6020 Emmenbrucke, 1வது பதிப்பு, நவம்பர் 2008. (Switzerland: CJPD, Bahnofstrasse 13, 6020 Emmenbrucke).
100 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 30x21 சமீ., ISBN: 978-3-9523172-4-2.

2007 ஜுன் 17இல் Centre for Just Peace and Democracy நடுவம், Transcend International என்னும் சர்வதேச நிறுவனத்துடன் இணைந்து சுவிஸ் லுசான் நகரில் இலங்கை இன மோதுகையின் சர்வதேசப் பரிமாணம் தொடர்பான கருத்தரங்கொன்றை நடத்தியது. அக்கருத்தரங்கில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரைகளின் தமிழாக்கம் இது. இங்கு இடம்பெறும் கட்டுரைகள் இலங்கை இனச்சிக்கல் பற்றிய வெவ்வேறு விதமான பார்வைகளை உள்ளடக்குகின்றன. இதன் சர்வதேச பரிமாணம் பற்றிய பல்வேறு கோட்பாடுகளை பரிசீலிக்கின்றன. பேராசிரியர் குல்டங் இலங்கை இனச்சிக்கலில் "எங்களுக்குத் தெரிந்ததிலும் பார்க்க ஏராளமான தலையீடுகள் இடம்பெறுகின்றது" என்று சர்வதேச இயங்குபரப்பில் நின்று விபரிக்கிறார். பேராசிரியர் சுமந்திரா போஸ் ஏன் இந்திய அரசு தமிழ்மக்களின் சுயநிர்ணய உரிமைக் கோட்பாட்டினை அசௌகரியமாகப் பார்க்கின்றது என்பதை ஆய்வுசெய்கின்றார். மூத்த தமிழ்ப் புத்திஜீவி சத்யேந்திரா இந்து சமுத்திரப் பிராந்தியப் பின்புலத்தில் இலங்கைத் தீவினை மையப்படுத்தி இடம்பெறும் சர்வதேச மோதுகையை விரிவாக, யதார்த்தவாத அரசியல் தளத்திலிருந்து விபரிக்கின்றார். பேராசிரியர் குட்ஹாண்ட் மேற்குலக சமாதான முன்முயற்சிகளின் கோட்பாடுகளை எமக்கு அறிமுகப்படுத்தி விபரிக்கிறார். பேராசிரியர் லியனகே, பிராந்தியம் தொடர்புபட்ட உறவுச் சிக்கலை ஆழமாக விவாதிக்கிறார். பேராசிரியர் நவரட்ண பண்டார, கலாநிதி சதானந்தன், பேராசிரியர் நீல்சன், அனா பரராஜசிங்கம் போன்றவர்கள் ஒவ்வொரு கோணத்தின் ஊடாக பரிமாணத்தினை புலமைசார் ஆய்வுக்குட்படுத்தியுள்ளனர்.

5911

இலங்கை தமிழரின் எழுச்சி வரலாறு. இ.நாகராசா. வேலணை: இ.நாகராசா, பதிப்பு விபரம் தரப்படவில்லை. (அச்சக விபரம் அறியமுடியவில்லை).
52 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x14.5 சமீ.

உலகத் தமிழரின் வீழ்ச்சியைப் பொதுவாகவும், ஈழத்தமிழரின் நாடற்ற நிலையை சிறப்பாகவும் முன்வைத்து அதற்கான காரணங்களை ஆராயும் கட்டுரை இது. பிரித்தாழும் சூழ்ச்சிக்கு உட்பட்டு நாமே எம்மைக் கூறுகளாக்கி, எதிரிக்கு வெல்லும் வாய்ப்பினை வழங்கும் போக்கை இந்நூலாசிரியர் உணர்வுபூர்வமாகக் கண்டிக்கின்றார். இந்நூலின் அச்சீட்டின்போது எவ்வித அடிப்படை நூலியல் தரவுகளையும் வழங்குவதில் அக்கறை காட்டப்படவில்லை.

5912

இலங்கைத் தமிழர் வரலாற்றின் சில பக்கங்கள். சமாதிலிங்கம் சத்தியசீலன். கொழும்பு 11: சேமமடு பொத்தகசாலை, U G 50, People's Park, 1வது பதிப்பு, சித்திரை 2008. (கொழும்பு 11: சேமமடு பதிப்பகம்).
180 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-955-1857-10-3.

பேராசிரியர் சத்தியசீலன் கடந்த 32 வருடங்களாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வரலாற்றுத்துறையில் பணிபுரிந்து வருகின்றார். இலங்கையில் புரையோடியுள்ள இனவாத அரசியலைப் புரிந்துகொள்வதற்கான அறிவு ஆய்வு சார்ந்த பணிகளில் முழு மூச்சுடன் ஈடுபட்டு வருகின்றார். இலங்கையில் இனவாதமும் வளர்ச்சிப்போக்குகளும் பற்றித் தான் அவ்வப்போது எழுதிய கட்டுரைகளின் தொகுப்பாக இந்நூலை வழங்கியுள்ளார். ஈழத்தமிழர் வரலாற்றின் நவீன காலப்பகுதியில் அடையாளம் காணப்பட்ட இலங்கையின் தேசக்கட்டுமானம், இலங்கைத் தமிழர் தேசியவாதம், யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸ், 20ம் நூற்றாண்டு இலங்கையில் இந்து மதத்தின் வளர்ச்சிப் போக்குகள், இலங்கைத் தமிழர்-இந்திய வம்சாவளித் தமிழர் இடையிலான உறவுகள் பிரித்தானியர் ஆட்சியில் நல்லூரை மையமாகக் கொண்ட ஈழத்தமிழரின் அடையாளங்கள், 13ம் நூற்றாண்டு வரையிலான இலங்கையின் வெளிநாட்டு வர்த்தகம் என்பன பற்றி இக்கட்டுரைகள் பேசுகின்றன.

5913

இலங்கையில் இன முரண்பாடும் பௌத்தமும் சமாதானமும். மஹிந்த தீகல்லே (பதிப்பாசிரியர்). ஒஸ்லோ: நோர்வே பௌத்த ஐக்கிய ஸ்தாபனம், இணை வெளியீடு, இங்கிலாந்து: மதங்கள் தொடர்பான ஆராய்ச்சிப் பிரிவு, வரலாற்று கலாசார ஆய்வுத்துறை, பாத் ஸ்பா பல்கலைக்கழகக் கல்லூரி, நியுட்டன் பார்க், பாத், 1வது பதிப்பு, 2005. (கொழும்பு 11: எம்.டி.குணசேனா, 217, ஒல்கொட் மாவத்தை).
(16), 215 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x13.5சமீ., ISBN: 955-98053-1-2.

இந்நூல் ஒரு ஆய்வுக்கட்டுரைத் தொகுப்பாகும். இலங்கையின் இன முரண்பாட்டின் மூலங்கள் (RALH குணவர்த்தன), வன்முறை பற்றிய தேரவாத மனப்பாங்குகள் (வண.மஹிந்த தீகல்ல), ஒரு நாடு இரண்டு ஆட்சிகள்: பௌத்தர்கள் கொண்டுள்ள அச்சம் (ஆ.வேலுப்பிள்ளை), இலங்கை முரண்பாட்டில் சங்கத்தின் பங்கு (அசங்க திலகரத்ன), முரண்பாடுகளின் காரணங்களும் தீர்மானங்களும் தேரவாத பௌத்தச் சிந்தனையின் நோக்கு (மஹிந்த பலிகவதன), பௌத்த மரபினுள் இனப்பிரச்சினைக்கான தீர்வினைக் காணமுடியும் (வண. மாகெலுவாவே சோபித), பௌத்த அடிப்படைவாதம்? பௌத்த வன்முறை இலங்கையின யுத்தம் (ரிச்சர்ட் கொம்ரிச்), இனமுரண்பாடு – ஒரு பௌத்த ஆய்வு (வண. அத்துரலிய ரத்ன), தேரவாத பௌத்தத்தில் வன்முறை நியாயப்படுத்தப்படுகின்றதா? (வண மஹிந்த தீகல்ல), பௌத்தத்தில் தர்ம யுத்தத்திற்கான இடம் (பீ.டீ.பிரேமசிரி), சர்வோதயாவின் சமாதானமானதும் அஹிம்சையானதுமான சமூகப் புரட்சிக்கான அழைப்பு (ஜோர்ஜ் டீ பொன்ட்), பௌத்தம் இனத்துவம் அடையாளம் பௌத்த வரலாற்றின் ஒரு சிக்கல் (கணநாத் ஒபயசேகர) ஆகிய 12 ஆய்வுக் கட்டுரைகள் இத்தொகுப்பை சிறப்பிக்கின்றன. இந்நூலின் பதிப்பாசிரியர் வண மஹிந்த தீகல்லே பேராதனைப் பல்கலைக் கழகத்தில் கலைமாணிப் பட்டத்தையும், ஹார்வார்ட் பல்கலைக்கழகத்தில் M.T.S. பட்டத்தையும், சிக்காகோ பல்கலைக்கழகத்தில் கலாநிதிப் பட்டத்தையும் பெற்றவர்.

5914

இலங்கையில் இனவாதமும் சாதிபேதமும். மு.தர்மலிங்கம். பருத்தித்துறை: மு.தர்மலிங்கம், வத்தனை, புலோலி மேற்கு, 1வது பதிப்பு, ஜனவரி 1968. (பருத்தித்துறை: கலாபவன அச்சகம்).
72 பக்கம், விலை: ரூபா 1.50.

இலங்கை வரலாற்றின் ஆரம்ப காலத்தில் இருந்தே சிங்கள-தமிழ் இனப்பகைமையைக் காணலாம். பின்னாளில் தேசிய அரசு உருவாக்கப்பட்ட பின்னரும் உண்மையான இன ஒற்றுமை நிலவவில்லை. இனப்பகை சிங்களவர்களுக்கும் தமிழர்களுக்கும் இடையில் மாத்திரம் நிகழவில்லை. 1915இல் கம்பளைப் பகுதியில் நடந்த சிங்கள-முஸ்லிம் இனக்கலவரமும், மட்டக்களப்புப் பகுதியில் இன்றும் (1968இல்) நடைபெறும் தமிழ்-முஸ்லிம் சண்டைகளும் இதற்கு உதாரணம். இலங்கையில் முஸ்லிம்களை விடச் சிங்களவர்களும் தமிழர்களுமே பெரும்பான்மையினராக வாழ்கின்ற காரணத்தினாலும், சிங்கள-தமிழ் இனமுரண்பாடே, தமிழ்-முஸ்லிம் மற்றும் சிங்கள-முஸ்லிம் இன முரண்பாட்டைவிட முக்கிய பிரச்சினையாக வளர்ந்திருப்பதாலும் இந்நூலின் ஆசிரியர் சிங்கள-தமிழ் இனவாதத்தை மட்டுமே விரிவாக ஆராய்ந்துள்ளார். (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5915

இலங்கையின் அரசியல் நிலை: சொற்பொழிவு. டீயெம்பி. கொழும்பு: நல்வழிப் பதிப்பகம், 22 டயஸ் பிளேஸ், 1வது பதிப்பு, செப்டெம்பர் 1956. (கொழும்பு 2: அடானா பிரஸ், 39-41, கிளனி வீதி).
12 பக்கம், விலை: சதம் 20.

26.08.1956இல் கொழும்பு சாஹிறா மண்டபத்தில் நடைபெற்ற ஆண்டுவிழாவில் இலங்கையின் அரசியல் நிலை என்ற தலைப்பில் ஆற்றிய சொற்பொழிவு இது. (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5916

இலங்கையின் இன்றைய அரசியல் நிலைமையும், தேசிய சிறுபான்மை இனப் பிரச்சினையும். சி.சிவசேகரம். கண்டி: பொறியியல் பீடம், பேராதனைப் பல்கலைக்கழக வளாகம், 1வது பதிப்பு, 1976. (அச்சக விபரம் தரப்படவில்லை).
16 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x14.5 சமீ.

இலங்கையில் எழுபதுகளில் நிலவிய புதிய ஜனநாயகப் புரட்சிக் காலகட்ட அரசியல் நிலவரம் பற்றிய கணிப்பீடாகவும், சமகால உலக அரசியல் சக்திகளின் நிலைப்பாடு தொடர்பான அவதானிப்பாகவும் அமையும் கட்டுரையைக்கொண்டு சிறுநூல் இதுவாகும்.

5917

இனத்துவ முரண்பாடும் மலையக மக்களும்: பல்பக்கப் பார்வை. தை.தனராஜ், ஏ.எஸ்.சந்திரபோஸ் (பதிப்பாசிரியர்கள்). கொழும்பு 8: அமரர் இர.சிவலிங்கம் ஞாபகார்த்தக் குழு, BQ 2/2, மெனிங் டவுன், மங்கள வீதி, 1வது பதிப்பு, செப்டெம்பர் 2007. (கொழும்பு 6: டெக்னோ பிரின்டர்ஸ், 55 Dr. E.A.கூரே மாவத்தை).
248 பக்கம், வரைபடம், அட்டவணை, விலை: ரூபா 200., அளவு: 21.5 x14.5 சமீ.

ஒன்பது ஆய்வுகளைக்கொண்ட இவ்வாய்வுக் கட்டுரைத் தொகுப்பானது மலையக சமூகம் ஒரு இனக்குழு என்ற அடிப்படையில் இன முரண்பாட்டில் எவ்வாறு படிப்படியாக உள்வாங்கப்பட்டுள்ளது என்பதைப் பதிவுசெய்வதாக அமைகின்றது. இவ்வகையில் இவ்வாய்வுகள், இனப்பிரச்சினையுடன் தொடர்புபடாது இன அடக்குமுறைக்குள்ளாகின்ற மலையக மக்களின் நிலைப்பாட்டினை வெளிக்கொணர்தல், மலையக மக்களின் அன்றாடப் பிரச்சினைகளை வெளிக்கொணர்தல், விழிப்புணர்வினை மலையகத்திலும் ஏனைய சமூகங்களிலும் ஏற்படுத்தல், மலையகத்தினது பிரச்சினைகளை இனங்கண்டு அவற்றிற்கு தேவையான கட்டமைப்புரீதியான மாற்றங்களை முன்வைத்தல், மேலதிக ஆய்வுகளுக்கான தளங்களைக் கண்டறிதல் போன்ற விடயங்களைச் சமர்ப்பிக்கின்றது. சு.விஜயகுமார், மூ.சந்திரகுமார், ஆ.கலையரசு, சு.அமிர்தலிங்கம், வெ.கணேசலிங்கம், பெ.சரவணகுமார், அ.சண்முகவடிவு, சி.புஷ்பராஜ், ரெ.புனிதா, நான்சி பி.மைக்கேல் மெத்யூ, க.விஜயசாந்தினி, பெ.இராமகிருஷ்ணன், பா.பானுமீரா, ப.ஷோபா, த.விமலேஸ்வரி ஆகியோர் இக்கட்டுரைகளை தனியாகவும், கூட்டாகவும் சமர்ப்பித்திருந்தனர்.

5918

ஈட்டிமுனையில் இரும்பு மனிதன். புதுமைலோலன். யாழ்ப்பாணம்: செந்தமிழ் வெளியீடு, 154, நாவலர் வீதி, 1வது பதிப்பு, 1961. (யாழ்ப்பாணம்: மகேஸ்வரன் அச்சகம்).
22 பக்கம், விலை: சதம் 25.

1956ம் ஆண்டு சிங்களம் மட்டும் சட்டம் மசோதாவாகும்போது காலிமுகத் திடலில் நடந்த முதலாவது அறப்போராட்டத்தின் போதும், சிங்கள ஸ்ரீ மோட்டார் வண்டிகளில் நுழையும் போது நடந்த இரண்டாவது அறப்போராட்டத்தின்போதும், சிங்கள மொழியைத் தமிழ்ப் பிரதேசங்களில் திணிக்கும்போது 20.2.1961இல் நடந்த மூன்றாவது அறப்போராட்டத்தின் போதும் இரும்பு மனிதன் என்று அழைக்கப்படும் அரசியல்வாதி கலாநிதி E.M.நாகநாதன் அவர்கள் எடுத்துள்ள பங்கினை விளக்கும் நூல். (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5919

ஈழத்து அறப்போரும் உரிமை மறுப்போரும்: இலங்கைத் தமிழ்பேசும் மக்களின் சத்தியாக்கிரக வரலாறு. பொ.அப்பையா. யாழ்ப்பாணம்: பொ.அப்பையா, கொக்குவில், 1வது பதிப்பு, 1962. (யாழ்ப்பாணம்: நாஷனல் அச்சகம்).
134 பக்கம், விலை: ரூபா 2.00

இலங்கைத் தமிழர்களின் சத்தியாக்கிரகப் போராட்டம் கூர்மையடைந்திருந்த வேளையில் வெளிவந்த இந்நூலில் மறியல் போராட்டம் தொடங்குவதற்கு உரிய காரணங்களையும், பின்னர் உண்டான விளைவுகளையும், பிறர் அபிப்பிராயங்களையும், விளக்கியிருக்கின்றார். தமிழ் உரிமை இயக்கத்தின் வரலாறு, முதல்நாள் கச்சேரி முன் மறியல், பொலிஸ் தாக்குதல் திட்டமிட்டுச் செய்த செயலா? மட்டக்களப்பிலும் திருமலையிலும் மறியல், சனப் பிரதிநிதிகள் சபையில் இப்பிரச்சினை, அறப்போருக்கு முஸ்லிம் பெருமக்கள் பேராதரவு, பட்டினி போட்டுப் பணியவைக்கும் திட்டம். பிறநாட்டுப் பிரமுகர்கள், பத்திரிகைகளின் அபிப்பிராயம். தபாற்சேவை, அவசரகாலமும் சத்தியாக்கிரகத் தடையும் ஆகிய விடயங்களின் கீழ் இலங்கைத் தமிழரின் சத்தியாக்கிரக வரலாறு பதிவுசெய்யப்பட்டுள்ளது. (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5920

ஈழப் புரட்சி அமைப்பு 30 ஆண்டுகள். ஈழப் புரட்சி அமைப்பு. இலங்கை: ஈழப் புரட்சி அமைப்பு (Eelam Revolutionary Organisation), 1வது பதிப்பு, மே 2006. (அச்சக விபரம் தரப்படவில்லை).

16 பக்கம், புகைப்படம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x15 சமீ.

ஈரோஸ் அமைப்பு - ஈழப் போராட்டத்தில் முனைப்புடன் செயற்பட்ட பல்வேறு போராட்டக் குழுக்களில் ஒன்று. இவ்வமைப்பின் கடந்த காலச் செயற்பாடுகள், அனுபவங்களிலிருந்து அவற்றைப் பக்கச் சார்பற்ற ரீதியில் மீள்சிந்தனைக்கு உட்படுத்தி, அவற்றில் இருந்து நடைமுறைக்குப் பொருத்தமான படிப்பினைகளை ஏற்றுக்கொள்வதாக அவ்வறிக்கை உணர்த்துகின்றது.

5921

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் இரண்டாவது காங்கிரசில் செயலாளர் நாயகம் தோழர் சுரேஷ் பிரேமச்சந்திரன் அவர்கள் ஆற்றிய தொடக்கவுரை. சுரேஷ் பிரேமச்சந்திரன். கொழும்பு: வெளியீட்டுப் பிரிவு, ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, 1வது பதிப்பு, மாசி 1993. (அச்சக விபரம் தரப்படவில்லை).
(2), 46 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x14 சமீ.

1993 மாசி 5-9 திகதிகளில் நடந்துமுடிந்த ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி EPRLF அமைப்பின் இரண்டாவது காங்கிரஸ் கூட்டத்தின் தொடக்கவுரை.

5922

சமாதானத்திற்கான ஒரு குரல். குமார் ரூபசிங்க. கொழும்பு 5: சகவாழ்வு மன்றம், 146/20, ஹவ்லொக் வீதி, 1வது பதிப்பு, 2007. (கொழும்பு 6: Fast Printers, 289-1/2, காலி வீதி, வெள்ளவத்தை). xii, 446 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24x16.5 சமீ., ISBN: 978-955-1358-13-6.

இலங்கையின் சமாதானம், பாதுகாப்பு, மற்றும் சகவாழ்வுக்கான மன்றத்தின் தலைவரான கலாநிதி குமார் ரூபசிங்க, International Alert என்ற நிறுவனத்தின் முன்னாள் செயலாளர் நாயகமாகவும் பணியாற்றியவர். முரண்பாட்டுத் தவிர்ப்பு என்ற கோட்பாட்டை மேம்படுத்துவதில் அதிக அக்கறை காட்டிவந்தவர். இந்நூலில் குமார் ரூபசிங்க 2003 இறுதிப்பகுதியிலிருந்து, 2007 ஜுன் வரை எழுதி தினக்குரல், வீரகேசரி, சுடரொளி ஆகிய பத்திரிகைகளில் பிரசுரமான 67 கட்டுரைகள் தொகுக்கப்பெற்றுள்ளன. இலங்கை இனப்பிரச்சினையினதும், அதற்கான சமாதான நடவடிக்கைகளினதும் அரசியல் பொருளாதார மற்றும் சமூகப் பரிமாணங்களை ஆராய்வதாக இக்கட்டுரைகள் அமைகின்றன.

5923

சிங்களமே சீறிப்பார். எருக்கலம்பிட்டி கே.எஸ்.ஏ.கபூர். பனாகொடை: கே.எஸ்.ஏ.கபூர், தடுப்புக்காவல் முகாம், பனாகொடை இராணுவ முகாம், 1வது பதிப்பு, ஜுலை 1961. (யாழ்ப்பாணம்: ஆனந்தா அச்சகம்). 48 பக்கம், விலை: சதம் 65.

1961ம் ஆண்டு தமிழரசுக்கட்சி நடத்திய சத்தியாக்கிரகப் போராட்டத்தில் கைதுசெய்யப்பட்ட எழுபத்திரண்டு கைதிகளில் கே.எஸ்.ஏ.கபூரும் ஒருவர். பனாகொடை தடுப்புக்காவல் முகாமில் தடுத்துவைக்கப்பட்டிருந்த இவர் தன் எண்ணங்களில் ஊறிய கருத்துக்களை எழுத்தில் கொண்டுவந்திருக்கிறார். இந்நூலுக்கு அறிமுக உரையை மன்னார் பாராளுமன்ற உறுப்பினர் வி.ஏ.அழகக்கோன் வழங்கியிருக்கிறார். முன்னுரையை செ.இராசதுரை வழங்கியுள்ளார். (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5924

சிறீ அளித்த சிறை. நாவேந்தன் (இயற்பெயர்: V.T.திருநாவுக்கரசு). யாழ்ப்பாணம்: தமிழ்க் குரல் பதிப்பகம், மானிப்பாய், 1வது பதிப்பு, மே 1959. (யாழ்ப்பாணம்: ஸ்ரீ சண்முகநாத அச்சகம்). 30 பக்கம், விலை: சதம் 50.

சிங்கள மொழிச் சட்டத்தை எதிர்த்து நடந்த கிளர்ச்சி பற்றிய நூல். இந்நூலாசிரியரின் சிறை அனுபவங்களையும், சிறைவாசத்தின்போது எழுந்த உணர்ச்சியலையினையும் இந்நூல் பதிவுசெய்கின்றது. தமிழரசுக்கட்சித் தலைவரும், கோப்பாய்த் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினருமான கு.வன்னியசிங்கம் அவர்களின் வாழ்த்துரையும், நான் கண்ட நாவேந்தன் என்ற தலைப்பில் வட்டுக்கோட்டைத் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் அ.அமிர்தலிங்கம் அவர்கள் 15.5.1959இல் வழங்கிய அறிமுக உரையும் இடம்பெற்றுள்ளன. (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம்.அலி, கொழும்பு 14).

5925

சுதந்திர இலங்கைவாழ் வீரத் தமிழனின் குமுறும் நெஞ்சம். ஞா.ம.செல்வராஜா. ஊர்காவற்றுறை: ஞா.ம.செல்வராஜா, 1வது பதிப்பு, 1961. (யாழ்ப்பாணம்: ஆசீர்வாதம் அச்சகம், 32. கண்டி வீதி).
15 பக்கம், விலை: சதம் 25.

காவலூர்க் கவிஞர் ஞா.ம.செல்வராஜாவின் அரசியல் கவிதைகளின் தொகுப்பு இது. அமரர் வன்னியசிங்கம் அவர்களைக் குறித்துச் சொல்லிய இரங்கற் கண்ணிகள், மக்கள் ஆட்சி, பண்டாவும்-மக்கள் ஆட்சியும், ஒற்றையாட்சி 1958, உன் பெருமையைச் சிந்தித்துப்பார், தமிழ்த் தாய்க்குலப் பெருமை, மொழித் தகராறு, வீறுகொண்டெழு ஆகிய தலைப்புகளில் கவிஞரின் அரசியல் மற்றும் இன உணர்வுப் படையல்கள் இடம்பெற்றுள்ளன. (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5926

தமிழ் ஈழப் போராட்டம். கா.பொ.இரத்தினம். சென்னை 600111: பன்னாட்டுத் தமிழுறவு மன்றம், 12, சாயி நகர் இணைப்பு, ஐயப்பா நகர், 1வது பதிப்பு டிசம்பர் 1996. (சென்னை 600014: மூவேந்தர் அச்சகம், இராயப்பேட்டை)
88 பக்கம், விலை: இந்திய ரூபா 20., அளவு: 18x12.5 சமீ.

தமிழ் ஈழப் போராட்டம், ஈழத் தமிழருக்கு ஆட்சி உரிமை கிடைக்குமா?, ஈழத் தமிழர் ஆட்சி உரிமையும் இந்தியாவின் கடப்பாடும், இலங்கையில் தமிழர் ஆட்சி, இலங்கையின் பழங்குடியினர் தமிழரே, இது நியாயமா?, ஆகிய தலைப்புகளில் ஈழத்தமிழரின் விடுதலைப் போராட்டம் பற்றிய பண்டிதர் கா.பொ.இரத்தினம் அவர்களின் கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. பண்டிதர் கா.பொ.இரத்தினம் இலங்கையில் தமிழரசுக்கட்சியில் இணைந்து நீண்டகாலம் தீவுப்பகுதியின் பாராளுமன்ற உறுப்பினராகப் பணியாற்றியவர். தற்போது புலம்பெயர்ந்து தமிழகத்தில் வாழ்ந்து வருகின்றார்.

5927

தமிழரின் கண்ணீர். சாந்திப் பிரியன் (ஆங்கில மூலம்), தேயிலைச் செழியன் (தமிழாக்கம்). அப்புத்தளை: குமார் பதிப்பகம், பிட்ராத்தமலை, 1வது பதிப்பு, அக்டோபர் 1963. (கொழும்பு 12: சபீனா அச்சகம்).
பக்கம், விலை: (மலிவுப் பதிப்பு) சதம் 60, (சிறப்புப் பதிப்பு) சதம் 90.

ஈழநாட்டின் பல்வேறு பிரச்சினைகளில் ஒன்று நாடற்றவர் பிரச்சினையாகும். நாடற்றவர் என்ற இழிசொல்லின் வரலாறு பற்றிய சில குறிப்புகளை இந்நூல் தருவதுடன் பிரஜாவுரிமை பறிக்கப்பட்ட மலையகத் தமிழர்களின் வாழ்க்கை பற்றியும் இந்நூல் பதிவுசெய்கின்றது. நாடாண்ட ஒரு இனம் எப்படி இலங்கைக்கு அழைத்துவரப்பட்டு நாடற்ற இனமாக்கப்பட்டது என்ற வரலாற்றுக் குறிப்புகளும் இந்த இழிநிலை நீங்க சில நல்ல திட்டங்களும் இந்நூலில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. மூலநூல் The Indian Tamils at Cross Roads என்ற தலைப்பில் வெளிவந்திருந்தது. (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5928

நம்பிக்கையில்லா தீர்மானமும் நானும். செ.இராசதுரை. மட்டக்களப்பு: மட்டக்களப்பு மாநகர சங்க வரியிறுப்பாளர் சங்கம், பாஞ்சாலை வீதி, 1வது பதிப்பு, ஜுலை 1968. (கொழும்பு 12: சுதந்திரன் அச்சகம்).
16 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை.

04.07.1968 அன்று மட்டக்களப்பு மாநகரசபையில் கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின்போது மட்டக்களப்பு முதலாவது பாராளுமன்றப் பிரதிநிதியும் மாநகரசபை முதல்வருமாகிய திரு. செல்லையா இராசதுரை ஆற்றிய உரையின் தொகுப்பு. 15.07.1968 அன்று வெளியிடப்பட்டது. (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5929

பாராளுமன்றத்தில் மகேஸ்வரன். திருமதி விஜயகலா மகேஸ்வரன் (தொகுப்பாசிரியர்). கொழும்பு 6: திருமதி விஜயகலா மகேஸ்வரன், 32, 36ஆவது ஒழுங்கை, வெள்ளவத்தை, 1வது பதிப்பு, 2008. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ் பிரைவேட் லிமிட்டெட், 48 B, புளுமெண்டால் வீதி).
(10), 374 பக்கம், வண்ணத் தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14 சமீ.

கொழும்பு மாவட்ட பாராளுமன்றப் பிரதிநிதியாகவும், இந்து சமய கலாச்சார அமைச்சராகவும் இருந்த தியாகராசா மகேஸ்வரன் இலங்கை பாராளுமன்றத்தில் அவ்வப்போது ஆற்றிய உரைகள் அடங்கிய தொகுப்பு. 9.11.2000 அன்று பாராளுமன்றத்தில் அவர் நிகழ்த்திய கன்னிப் பேச்சு முதல் 4.10.2007 அன்று நிகழ்த்திய இறுதிப்பேச்சு வரையிலான உரைகள் அனைத்தும் அவரது துணைவியாரால் தொகுக்கப்பட்டுள்ளன. தி.மகேஸ்வரன் 01.01.2008 அன்று இனம்காணப்படாத ஆயுததாரிகளால் கொல்லப்பட்ட பின்னர் இந்நூல் அவரது சமூகப்பணியை பிரதிபலிக்கும் வகையில் வெளியிடப்பட்டுள்ளது.

5930

போர் நிறுத்தமும் பொய்மைகளும். பார்த்திபன். யாழ்ப்பாணம்: சுகந்தம் வெளியீடு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், 1வது பதிப்பு, ஜூலை 1985. (அச்சக விபரம் தரப்படவில்லை).
26 பக்கம், விலை: ரூபா 2., அளவு: 19x13 சமீ.

“போர் நிறுத்த உடன்படிக்கை (Ceasefire) எனப் பொதுவாகவும், இது போர் நிறுத்த உடன்படிக்கையல்ல, இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்றைக் காண்பதற்காக பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கான ஒரு சூழ்நிலையை உருவாக்கும் பொருட்டு பகைமையை வளர்க்கும் வன்செயல்களைக் கைவிடல்” எனத் தேசிய பந்தோபஸ்து அமைச்சர் லலித் அத்துலத் முதலியால் வர்ணிக்கப்பட்டதான அரசியல் நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளப்படாதிருப்பதான ஒரு சூழ்நிலையில் அச்சூழ்நிலை பற்றிய வரலாற்றுப் பின்னணிகளுடன் கூடியதான ஒரு கண்ணோட்டமே இந்நூலின் பிரதான உள்ளடக்கமாகும். யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் குழுக்களினால் வெளியிடப்பட்ட சிறு நூல் இது.

5931

மலைநாட்டுத் தமிழருக்கு துரோகம் இழைத்தது யார்? த.இளங்கோவன். யாழ்ப்பாணம்: தமிழன் வெளியீடு, இல.6, பிரதான வீதி, 1வது பதிப்பு, ஜனவரி 1970. (கொழும்பு 3: நடராஜா அச்சகம்).
38 பக்கம், விலை: சதம் 50., அளவு: 21.5x14 சமீ.

இந்நூலில் சரித்திரச் சான்றுகள், ஈழத்தமிழர் முன்னேற்றம், இலங்கை பிரஜாவுரிமைச் சட்டம், இந்தியர் பாக்கிஸ்தானியர் பிரஜாவுரிமைச் சட்டம், மலைநாட்டுத் தமிழர் பிரஜாவுரிமை பெறாமலிருப்பதற்கு மூலகாரணர் யார்?, நேருஜி-டட்லி சமரச முயற்சி, மலைநாட்டுத் தமிழர்களுக்கு சமஷ்டிக் கட்சியினர் இழைத்த துரோகம் ஆகிய தலைப்புகளில் மலையகத் தமிழர்களின் பிரஜாவுரிமைப் பறிப்பு தொடர்பான பல்வேறு தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன. இந்த நூல் அரசாங்க சபை உறுப்பினராகத் தெரிவுசெய்யப்பெற்ற காலத்திலிருந்து 1970வரை திரு. ஜீ.ஜீபொன்னம்பலம், மலையகத் தமிழர்களுக்கு சிறப்பாக ஆற்றிய பணிகளைத் திட்டவட்டமாக விளக்கும் ஒரு நோக்கத்துடன் வெளியிடப்பட்டிருந்தது. நூலாசிரியர், தமிழன் பத்திரிகையின் ஆசிரியராகப் பணியாற்றியவர்.

5932

மழையைத் தராத வானம்: திம்பு முதல் டோக்கியோ வரை. பால நடராச ஐயர் (புனைபெயர்: சின்னபாலா). கொழும்பு 5: ஜனநாயக உரிமைகளுக்கான பதிப்பகம், 121 பூங்கா வீதி, 1வது பதிப்பு, டிசம்பர் 2005. (அச்சக விபரம் தரப்படவில்லை).
xx, 232 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 300., அளவு: 21.5x14.5 சமீ.

இவ்வாவணம் ஈழப் போராட்ட வரலாற்றில் முக்கியத்துவம் பெற்றிருக்கும் ஒன்றாகும். 28 அத்தியாயங்களினூடாக, விடுதலைப் போராட்ட காலத்தில் திம்புவில் ஆரம்பித்து, பெங்களூர், புதுடில்லி, நோர்வே, பேர்லின் வழியாக டோக்கியோவுக்குச் சென்றடைந்த சமாதானப் பேச்சுவார்த்தைகள் பற்றிய ஒரு உள்ளக வரலாற்றை இந்நூலில் பதிவுசெய்துள்ளார். ஈழ விடுதலைப் போராட்டத்தின் ஆரம்பம் முதல் தன்னை இணைத்துக்கொண்டு அமைப்புரீதியாகச் செயற்பட்டவர் இவர். பால நடராஜ ஐயர் என்று இளவயதில் அறியப்பட்ட இவர் ஈழப் புரட்சி அமைப்பில் சின்னபாலா என்றும், கலை இலக்கியப் படைப்புக்களினூடாக சின்னவன், இளையவன், அம்பி மகன் என்ற அடையாளங்களோடும் இனம்காணப்பட்டவர். ஊரெழுவைப் பிறப்பிடமாகக்கொண்ட சின்னபாலா **காணி உறுதி** என்ற சிறுகதை மூலம் இலக்கிய உலகிலும் நன்கு அறியப்பட்டவர். வடக்கு-கிழக்கு தாயகம் தாண்டியும் தென்னிலங்கை-தமிழகம் வரை இவரது தடங்கள் விரிந்துள்ளன. 16.08.2004 அன்று கொழும்பு, வெள்ளவத்தையில் இவர் படுகொலை செய்யப்பட்ட பின்னதாக இந்நூல் வெளிவந்துள்ளது.

5933

மாற்றுநிலைப்படுத்தலின் அரசியல்: தமிழீழ விடுதலைப் புலிகள்∴ 2002-2006ல் சிறீலங்காவில் இடம்பெற்ற அமைதி முயற்சிகள். சுதாகரன் நடராஜா, லக்சி விமலராஜா (ஆங்கில மூலம்), இளங்கோ (தமிழாக்கம்). சுவிட்சர்லாந்து: நீதியான சமாதானத்திற்கும் ஜனநாயகத்திற்குமான நடுவம், CJPD, Bahnofstrasse 13, 6020 Emmenbrucke, 1வது பதிப்பு, 2008. (Switzerland: CJPD, Bahnofstrasse 13, 6020 Emmenbrucke).
55 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 29.5x20.5 சமீ., ISBN: 978-3-927783-90-4.

இந்தக் கற்கையானது, 2002இல் சர்வதேச ஆதரவுபெற்று நோர்வே அனுசரணையுடன் பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாகியதன் பின்னர் புலிகளின் குறிப்பிடத்தக்களவு இராணுவம் சாராத நடவடிக்கைகளை போரிலிருந்து சமாதானத்திற்கு மாற்றுநிலைப்படுத்தல் என்கின்ற விரிவான கோணத்தில் பரிசோதிக்கின்றது. மாற்றுநிலைப்படுத்தும் அரசியல், சனநாயகம் பற்றியதொரு கேள்வி, சிறீலங்கா மோதுகை, தேர்தல் களம், அரசுக்குள்-அரசு பற்றிய மேலோட்டம், புலிகளும் 2002 அமைதி வழிமுறைகள், சர்வதேச பாத்திரம் ஆகிய ஏழு அத்தியாயங்களில் இவ்வாய்வு விரிகின்றது.

5934

மௌனப் புதைகுழிக்குள்: பாகம் 1. மணலாறு விஜயன். அம்பாறை: சுஜி கணனிப்பிரிவு, மட்டு-அம்பாறை மாவட்டம், 1வது பதிப்பு, 2004. (அச்சக விபரம் தரப்படவில்லை).
104 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x14.5 சமீ.

மட்டக்களப்பு-அம்பாறை மாவட்டங்களில் இடம்பெற்ற போர்க்காலப் படுகொலைகளை ஆவணப்படுத்தும் முதல்முயற்சி. கொக்கட்டிச்சோலை, மகிழடித் தீவு, தோணிதாட்ட மடு, புல்லுமலை, சித்தாண்டி, வந்தாறுமூலை, புனாணை, பெண்டுகல்சேனை, உடும்பன்குளம், சத்துருக்கொண்டான், அட்டப்பள்ளம், வீரமுனை ஆகிய இடங்களில் இடம்பெற்ற படுகொலைகள் பற்றிய தகவல்கள் புகைப்பட ஆதாரங்களுடன் இந்நூலில் தொகுக்கப்பட்டுள்ளன. மணலாறு விஜயன், ஏற்கெனவே போரும் வாழ்வும் என்ற தலைப்பில் ஒரு நூலை வெளியிட்டிருந்தார்.
புலிகளின் குரல் வானொலி கட்டுரைத்தொகுப்பாக வெளிவந்த அந்நூலில், வட-கிழக்கு மாகாணங்களில் யுத்தத்தின்போது அனுபவித்தவர்களின் பிரதிபலிப்புகள் பதிவாகி இருந்தன. போரும் வாழ்வும் இரண்டாவது பாகமாக – அதன் தொடர்ச்சியாக இந்நூல் வெளியிடப்பட்டுள்ளதாக ஒரு குறிப்புக் காணப்படுகின்றது.

5935

யாழ்.கோட்டையினுள் 107 நாட்கள். ஈழமுரசு வெளியீட்டுப் பிரிவு. பிரான்ஸ்: பூபாளம், 22 Rue Perdonnet, 75010 Paris, 1வது பதிப்பு, செப்டெம்பர் 2008. (லண்டன்: வாசன் அச்சகம், மிச்செம்).
x, 70 பக்கம், வரைபடம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14.5 சமீ.

ஒல்லாந்தர் காலத்தில் கட்டப்பட்ட யாழ்ப்பாணக் கோட்டை இரண்டாம் ஈழப்போரின்போது, 1990இல் விடுதலைப்புலிகளினால் முற்றுகையிடப்பட்டது. 107நாட்கள் முற்றுகையின் பின்னர் யாழ். கோட்டை புலிகளினால் 26.09.1990 அன்று விடுவிக்கப்பட்டது. இம்முற்றுகைக் காலத்தில் ஸ்ரீலங்கா காவல்துறையில் பணியாற்றிய ரி.என்.நடா என்ற தமிழரும் கோட்டையினுள் அகப்பட்டுக்கொண்டவர். முற்றுகையின்போது கோட்டைக்குள் என்ன நடந்தது என்ற விபரத்தை பின்னர் ஈழமுரசுவில் தொடராக எழுதியிருந்தார். அவரது தொடருடன், கோட்டை கைப்பற்றப்பட்ட பின்னர் விடுதலைப்புலிகளால் வெளியிடப்பட்ட யாழ். கோட்டையை எவ்வாறு கைப்பற்றினோம் என்ற நூலின் சில முக்கிய பகுதிகளும் இந்நூலில் இணைக்கப்பட்டுள்ளன.

5936

ஸ்ரீ லங்கா வெலிக்கடைச் சிறைப் படுகொலைகள். தோழர் ஜெயக்கொடி. சென்னை 600 094: ஈழமக்கள் செய்தி தொடர்பு நிலைய வெளியீடு, த.பெ.எண் 5551, 1வது பதிப்பு, ஒக்டோபர் 1983. (சென்னை 600 002: சிண்டிகேட் பிரிண்டர்ஸ், 50, எல்லீஸ் ரோடு).
24 பக்கம், விலை: இந்திய ரூபா 1.00, அளவு: 18.5x12 சமீ.

1983 ஜுலையில் ஸ்ரீ லங்காவின் கொழும்பு, வெலிக்கடைச் சிறைச்சாலையில் ஈழவிடுதலைப் போராளிகள் பூட்டப்பட்ட அறைகளில் வைத்துப் படுகொலைசெய்யப்பட்ட சம்பவம் இது. உதவிப் பிரதம ஜெயிலர் றெஜஸ், ஜெயிலர் சமிதரத்தின, லொக்கெஷன் அதிகாரி பாலித ஆகிய மூவரது திட்டமிடலுடன் இப்படுகொலை நடத்தப்பட்டதாக இந்நூல் பதிவுசெய்கின்றது. ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியைச் சேர்ந்த தோழர் ஜெயக்கொடி 1976இல் ஆறுமாதங்கள் வெலிக்கடைச் சிறையில் அரசியல் விசாரணைக் கைதியாகவும், 1981, 1982, 1983 ஆகிய மூன்றாண்டுகளிலும் பத்தாண்டுக்

கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட கைதியாகவும் இருந்தவர். சிறைப்படுகொலைகளின் கண்கண்ட சாட்சியான இவர் சிங்களக் கைதிகளுடன் வைக்கப்பட்டிருந்ததால் அச்சம்பவத்தில் அகப்படாமல் உயிர்தப்பியிருந்தார். பாதுகாப்புக் கருதி எஞ்சிய தமிழ்க் கைதிகள் மட்டக்களப்புச் சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டபின்னர் இவரும் அங்கு கொண்டுசெல்லப்பட்டார். படுகொலை நடந்த சில நாட்களுக்குள் இந்நூலை மட்டக்களப்புச் சிறைக்கூண்டுகளுக்குள் இருந்து எழுதிமுடித்து பாதுகாப்பாக வெளியே அனுப்பிவைக்கமுடிந்துள்ளது.

954.93(3) இனங்கள் இன உறவுகள்

5937

அடங்காப்பற்று (வன்னி) வரலாறு: பாகம் 4: மாப்பாண வன்னியர், மடப்பளி வன்னியர் (கி.பி.1625-1800). அருணா செல்லத்துரை. கொழும்பு 8: அருணா வெளியீட்டகம், A 15, 1/1, மனிங் ரவுண் வீடமைப்புத் தொகுதி, மங்கள வீதி, 1வது பதிப்பு, ஓகஸ்ட் 2007. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ் பிரைவேட் லிமிட்டெட், 48 B, புளுமெண்டால் வீதி).
xii, 142 பக்கம், விலை: ரூபா 350., அளவு: 22x14.5 சமீ., ISBN: 955-1147-00-5.

அடங்காப்பற்று (வன்னி) வரலாற்று வரிசையில் இது நான்காவது பாகமாகும். இந்நூலில் அடங்காப்பற்றில் அதிகாரம் செலுத்திய மாப்பாண வன்னியர்கள் மற்றும் மடப்பளி வன்னியர்கள் பற்றிய வரலாறுகள் இடம்பெறுகின்றன. அறிமுக ஆதாரங்கள், வன்னியரின் எல்லைகள், அடங்காப்பற்றில் மாப்பாணர், போர்த்துக்கேயர் காலம், போர்த்துக்கேயர் கால மாப்பாண வன்னியர், ஒல்லாந்தர் காலம், வரலாற்றில் மடப்பளியார், பனங்காமத்தில் மாப்பாணர் மடப்பளியார், மன்னாரில் டச்சுக்காரர், கிறிஸ்தவப் பெயர்கள், வன்னியர்களுக்கான கௌரவம், ஆராய்ச்சித் தெளிவுகள் ஆகிய பன்னிரு தலைப்புகளில் இந்நூல் தொகுக்கப்பட்டுள்ளது.

5938

இருபதாம் நூற்றாண்டின் நவீன அடிமைத்தனம்: மலையக மக்களின் வரலாறு. க.மோகன்ராஜ். ஐக்கிய இராச்சியம்: ஈழம் ஆய்வு நிறுவனம், 179, Norval Road, North Wembley, Middlesex, 1வது பதிப்பு, ஜுன் 1984. (சென்னை 600 024: விசாலம் பிரிண்டிங் ஹவுஸ், 25, தெற்கு சிவன்கோவில் தெரு).
220 பக்கம், விலை: இந்திய ரூபா 10., அளவு: 16x10.5 சமீ.

இலங்கையின் மலையக மக்களின் சோக வரலாறு இந்நூலில் ஆய்வுக்குட்படுத்தப்பட்டுள்ளது. ஏறத்தாழ 180 வருடங்களுக்கு முன்னர் ஏமாற்றத்துடனும் ஏக்கத்துடனும் தம் வாழ்வை இலங்கையில் தொடங்கியவர்கள் இவர்கள். காலடி படாத காடுகள், பனி படர்ந்த மலை முகடுகளெல்லாம் இவர்களின் கைகளினால் வளமானது. தலைமன்னார் துறையிலிருந்து கண்டிச்சீமை வரை இவர்கள் கால்நடையாக வந்துசேர்ந்த சோகக் கதையை இந்நூல் பதிவுசெய்வதுடன், அவர்களின் வரலாறு எவ்வாறு நீண்டகாலமாக மறைக்கப்பட்டும், திரிக்கப்பட்டும் வந்துள்ளது என்பதையும் ஓரளவு வெளிச்சமிட்டுக் காட்டுகின்றது. இவர்களின் உழைப்பை அனுபவித்த அதிகார வர்க்கம் 1948இல் எவ்வித நன்றி உணர்வுமின்றி இவர்களது வாக்குரிமையைப் பறித்த கதை, ஒவ்வொரு அரசியல்வாதியும், தமிழரசுக் கட்சி, இலங்கை இடதுசாரிகள் உள்ளிட்ட அனைத்துக்கட்சிகளும் தமது அரசியல் நலன்களுக்காக இவர்களைப் பயன்படுத்திவிட்டு நட்டாற்றில் விட்ட கதை என்று இந்நூல் மலையகத் தமிழர்களின் அடிமைத்தனத்தை விபரிக்கின்றது.

5939

இலங்கையில் தமிழர்: ஒரு முழுமையான வரலாறு (கி.மு.300-கி.பி.2000). முருகர் குணசிங்கம். அவுஸ்திரேலியா: எம்.வி.வெளியீடு, தென் ஆசியவியல் மையம், த.பெ.எண் 5317, சுலொறா, சிட்னி, நியு சவுத் வேல்ஸ் 2190, 1வது பதிப்பு, 2008. (Germany: Walter Perspektives GmbH).
x, 676 பக்கம், புகைப்படம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x15 சமீ., ISBN: 978-0-646-49455-5.

பத்து இயல்களுக்குள் ஈழத்தமிழரின் முழுமையான வரலாற்றை இந்நூலில் நூலாசிரியர் மு.குணசிங்கம் விளக்கியுள்ளார். பன்னாட்டு நூலகங்களில் பெறப்பட்ட மூலாதார வளங்களுடன் இந்நூலை எழுதியுள்ளார். தமிழர் தோற்றமும் ஆரம்ப வரலாறும் (கி.மு.300 – கி.பி.300), இருண்ட வரலாற்றுக் காலம் (கி.பி.300 – கி.பி.900), சோழர் ஆக்கிரமிப்பும் அதன் விளைவுகளும் (கி.பி.900 – கி.பி.1200), யாழ்ப்பாண இராச்சியமும் வன்னிச் சிற்றரசுகளும் (கி.பி.1200 – கி.பி.1500), போர்த்துக்கீசரின் ஆக்கிரமிப்பும் தமிழ்ப் பிரதேசங்களின் அழிவும் (கி.பி.1505 – கி.பி.1658), டச்சுக்காரரின் ஆக்கிரமிப்பும் தமிழ்ப் பிரதேசங்களைச் சுரண்டியமையும்

(கி.பி.1658 – கி.பி.1796), பிரித்தானியரின் ஆரம்ப ஆட்சியும் தமிழரும் (கி.பி.1796 – கி.பி.1850), தமிழர்களின் விழிப்புணர்வும் எழுச்சியும்: சமயம், கலாச்சாரம், மொழி, சமூகம், பொருளாதாரம் (கி.பி.1850 – கி.பி.1900), பிரித்தானியர் அதிகாரமும் தமிழரின் ஆட்சி உரிமை நிராகரிப்பும் (கி.பி.1833 – கி.பி.1948), சுதந்திரத்தின் பின் இலங்கை அரசின் நடவடிக்கைகளும் தமிழ்த் தேசியவாதத்தின் எழுச்சியும் (கி.பி.1948 – கி.பி.1983) ஆகிய பத்து இயல்களில் விடுதலைப் போராட்டம் முகிழ்த்தெழுவது வரையிலான இலங்கைத் தமிழரின் முழுமையான வரலாற்றை இந்நூல் பதிவுசெய்கின்றது. இது ஆங்கில மொழியிலும் Tamils in Sri Lanka: A comprehensive History c300 BC – c 2000 AD என்ற தலைப்புடன் சமகாலத்தில் அ.பாலமனோகரனின் மொழிபெயர்ப்பில் வெளியிடப்பட்டுள்ளது.

5940

கறுப்பு யூலை '83: குற்றச்சாட்டு: கறுப்பு யூலை 83 நினைவுகள், வரலாற்றுப் பதிவுகள். ஐ.தி.சம்பந்தன் (தொகுப்பாசிரியர்). London E7 8PQ: சுடரொளி வெளியீட்டுக் கழகம்;> 15 Rutland Road, Eastham, 1வது பதிப்பு, ஏப்ரல் 2009. (South India: Era Mathivaanan, Ulaga ThamizharPathippagam, Choolaimedu, Chennai 600094).

480 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 750., இந்திய ரூபா 300, £ 10.00,. அளவு: 22.5x15 சமீ., ISBN: 978-0-9555359-2-5.

இலங்கையில் 1983 யூலை மாதத்தில் நாடளாவிய முறையில் தமிழர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட வன்செயல்கள் பற்றிய விரிவான பதிவு இதுவாகும். பத்திரிகைச் செய்திகளாகவும், அறிக்கைகளாகவும், ஆய்வுக் கட்டுரைகளாகவும் உலகெங்கணுமிருந்து இனக்கலவரம் பற்றி எழுதப்பட்ட தமிழ் ஆங்கிலக் கட்டுரைகளும், சர்வதேச அறிக்கைகளும், பிரபல பத்திரிகைகளின் ஆசிரியத் தலையங்கங்களும் இதில் இடம்பெற்றுள்ளன. 2009 வரையான காலப் பகுதியில் இடம்பெற்ற அரசியல் விழிப்புணர்வு நடவடிக்கைகளும் ஆங்காங்கே இணைக்கப்பட்டுள்ளன. 45 ஆங்கில ஆவணங்களினதும், 18 தமிழ் ஆவணங்களினதும் தொகுப்பாக புகைப்பட ஆதாரங்களுடன் இந்நூல் வெளிவந்துள்ளது. இந்நூலின் முதல் 326 பக்கங்கள் ஆங்கிலத்திலும், பக்கங்கள் 327முதல் 480வரை தமிழிலும் ஆவணங்கள் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன.

5941

தமிழ நாகரிகமும் சிந்துவெளி நாகரிகமும். அலெக்சாண்டர் காந்திரதாவ் (ரஷ்ய மூலம்), பி.இராமநாதன் (தமிழாக்கம்). கொழும்பு 11: சேமமடு பொத்தகசாலை, U.G.50, Peoples Park, 1வது பதிப்பு, 2009. (கொழும்பு 11: சேமமடு பதிப்பகம்).

116 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 240., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-955-1857-41-7.

சோவியத் அறிஞர் அலெக்சாண்டர் காந்திரதாவ் ஆசியவியலாளர். பண்டைய நாகரிகங்களின் எழுத்துக்களைப் படித்தறியும் முயற்சிகளில் ஈடுபட்டவர். அறிவியல் செய்திகளைப் பொதுமக்களுக்குப் புரியும் வகையில் எழுதியவர். சிந்துவெளி நாகரிக முத்திரை எழுத்துக்களைத் திராவிடம் எனக் கண்டுணர்ந்த சோவியத் அறிஞர் குழுவினருள் ஒருவர். 17 நூல்களையும் ஏராளமான கட்டுரைகளையும் இவர் எழுதியுள்ளார். இந்நூல் அவரது ரஷ்ய மொழி மூலப்படைப்பின் ஒரு பகுதியின் ஆங்கிலவழித் தமிழாக்கமாகும். இவர் எழுதியுள்ள The Riddles of the Oceans (முப்பெருங் கடல் புதிர்கள்) (1974) என்ற ஆய்வு நூலில் பசுபிக் பெருங்கடல், இந்தியப் பெருங்கடல், அட்லாண்டிக் பெருங்கடல் ஆகியவற்றைச் சார்ந்து அவற்றுக்கிடையே இருந்த தொடர்புகள் பற்றிப் பேசப்படுகின்றது. அந்நூலின் இரண்டாம் பகுதி இந்தியப் பெருங்கடல் என்று இன்று குறிப்பிடப்படும் தென் பெருங்கடல் பற்றியதாகும். அப்பகுதியின் தமிழாக்கமே இந்நூலாகும்.

5942

தமிழர் சரித்திரம். ந.சி.கந்தையாபிள்ளை. சென்னை 1: ஆசிரியர் நூற்பதிப்புக் கழகம், பவழக்காரத் தெரு, 4வது பதிப்பு, 1964, 1வது பதிப்பு, 1939, 2வது பதிப்பு, 1945, 3வது பதிப்பு, 1950 (சென்னை 1: The Progressive Printers).

312 பக்கம், விலை: இந்திய ரூபா 5., அளவு: 21.5x14 சமீ.

பல பதிப்புகள் கண்டுள்ள அமரர் ந.சி.கந்தையா பிள்ளையின் பிரபல்யமான தமிழர் வரலாற்று நூலின் ஆரம்பகாலப் பதிப்புகளுள் ஒன்று இதுவாகும். தமிழக அறிஞர்களான டாக்டர் மா.இராசமாணிக்கனார்,

கா.அப்பாத்துரை, கே.சுப்பிரமணியபிள்ளை வே.வெங்கடராஜுலு ரெட்டியார் ஆகியோரின் மதிப்புரைகளுடனும், நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசரின் முன்னுரையுடனும் இந்நூல் வெளிவந்துள்ளது. பழமை, மக்கள், கடவுட்கொள்கை, மொழி, தமிழர் நாகரீகச் சிறப்பு, தமிழர் ஆரியக் கலப்பு, ஆகிய பிரிவுகளுடனும், பின்னிணைப்புகளுடனும் வெளிவந்த நூல் இது.

தமிழர் சரித்திரம். ந.சி.கந்தையாபிள்ளை (மூல ஆசிரியர்), இ.இனியன் (பதிப்பாசிரியர்). சென்னை 600014: அமிழ்தம் பதிப்பகம், 328/10, திவான் சாஹிப் தோட்டம், டி.டி.கே சாலை, இராயப்பேட்டை, 2வது பதிப்பு, 2002, 1வது பதிப்பு, 1940. (சென்னை 600014: Prompt Offset Printers, 34 திப்புத் தெரு).
xvi, 136 பக்கம், விலை: இந்திய ரூபா 65., அளவு: 21.5x14 சமீ.

யாழ்ப்பாணத்து நவாலியூர்ப் பெரும் புலவராகிய அமரர் ந.சி.கந்தையாபிள்ளை இயற்றிய தமிழர் சரித்திரம் என்ற நூல், மக்களின் தோற்றத்தைப் பற்றிய தொன்னூல்கள் பலவற்றின் ஆராய்ச்சியின் பயனாகவும், எகிப்தியர், சுமெரியர். பழைய சிந்து நாட்டினர் முதலிய பண்டைய நாகரிக மக்களின் வரலாற்றினைப் பண்டைத் தமிழர் வரலாற்றினோடு ஒப்பிட்டு ஆராய்ந்ததன் பயனாகவும் உருவாகியுள்ளது. ஐந்துவகை நில மக்கள், நால்வகை மரபினர், சங்க நூற்றெய்வங்கள், பண்டைத் தொழில் வகைகள், தமிழர் ஆரியக் கலப்பு என்பனவற்றைப் பற்றிய அரிய பல கருத்துக்கள் இந்நூலில் காணப்படுகின்றன. (இந்நூல் பின்னாளில் 2003இல் உருவான ந.சி.கந்தையா நூற்றிரட்டிலும் 14வது நூலாக இடம்பெற்றுள்ளது. பார்க்க: நூல்தேட்டம் பதிவிலக்கம் 3970).

5943

தமிழரின் தோற்றமும் பரவலும். வி.ஆர்.இராமச்சந்திர தீட்சிதர் (ஆங்கில மூலம்), பி.இராமநாதன் (தமிழாக்கம்). கொழும்பு 11: சேமமடு பொத்தகசாலை, U.G.50, Peoples Park, 1வது பதிப்பு, 2009. (கொழும்பு 11: சேமமடு பதிப்பகம்).
103 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 240., அளவு: 21.5 x15 சமீ., ISBN: 978-955-1857-42-4.

தமிழரின் தாயகம் பற்றிய அரிய நூல் தமிழகத்தின் வரலாற்றறிஞர் வி.ஆர். இராமச்சந்திர தீட்சிதர் வரைந்த Origin and Spread of the Tamils என்ற ஆங்கில நூலாகும். இந்நூலின் மொழிபெயர்பே இதுவாகும். 1940 நவம்பரில் 29-30 திகதிகளில் தீட்சிதர் ஆற்றிய இரண்டு ஆங்கில உரைகளின் நூலுரு 1947இல் 53 பக்கங்களில் வெளியாகியது. தமிழரின் தாயகம் தென்னாடே. இங்கிருந்தே பழந்தமிழ (திராவிட) நாகரிகம் சிந்துவெளி, சுமேரியம், எகிப்து ஆகிய பகுதிகளுக்குப் பரவியது என்பது அவ்வுரைகளின் முடிபாகும். இப்பொழிவுகளுக்கான அடிக்குறிப்புகள் மூலநூலின் 47 பக்கங்களில் தரப்பட்டிருந்தன. 1940களுக்கு முன்னர் வெளியிடப்பட்டிருந்த பல்துறை நூல்களிலிருந்து அப்பொழிவுகளின் முடிவுக்கான விரிவான ஆதாரங்களை அடிக்குறிப்புகள் தந்தன. தீட்சிதரின் முடிவுகள் 1940-2006 கால அளவில் வேறு துறைகளில் ஏவப்பட்டுள்ள வளர்ச்சி நிலைகளின்படி எவ்வாறு மேலும் வலுப்படுத்தப்பட்டுள்ளன என்பதை முன்னுரையில் அறியமுடிகின்றது.

5944

தமிழா விழித்தெழு. இணுவையூர் செ.நடராசன். யாழ்ப்பாணம்: வள்ளுவர் இல்லம், இணுவில், 1வது பதிப்பு, 1959. (தமிழ்நாடு: முத்தமிழ் அச்சகம், காஞ்சீபுரம்).
79 பக்கம், விலை: ரூபா 1.25.

சென்னை பச்சையப்பன் கல்லூரித் தமிழ்த்துறைத் தலைவர் மு.வரதராசனாரின் அறிமுக உரையுடன் வெளிவந்துள்ள இந்நூல், ஏன் வாழவேண்டும், தமிழா நினைத்துப் பார், என்ன செய்ய வேண்டும், இலங்கைத் தமிழர், இலங்கையின் பொருளாதாரம் ஆகிய தலைப்புகளில் கட்டுரைகளை உள்ளடக்கியது. வரலாற்று முறையிலும், இன்றைய பொருளியல் முறையிலும் தமிழர் சமுதாயத்தின் பெருமை சிறுமைகளை இந்நூலில் செ.நடராசன் நன்கு எடுத்துரைத்துள்ளார். தமிழர் தம் உரிமைகளுக்காகப் போராடவேண்டும் என்றும் அதற்காக ஒன்றுபட்டு விழிப்புடன் செயலாற்ற வேண்டும் என்றும் விளக்குகின்றார். ஆயின், அவர் காட்டும் முறை அன்பு நெறியை- அகிம்சையை- அடிப்படையாகக் கொண்டது. (நூல் விநியோக உரிமை: பாரி நிலையம், பிராட்வே, சென்னை, தமிழ்நாடு). (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5945

திராவிட மக்கள் வரலாறு: ஆதிகாலம் தொடக்கம் கி.பி.1800 வரையும். E.L.தம்பிமுத்து (ஆங்கில மூலம்), ஜீ.சுப்பிரமணியம்பிள்ளை (மொழிபெயர்ப்பு). கொழும்பு: ஜெனரல் பப்ளிஷர்ஸ் லிமிட்டெட், 1வது பதிப்பு, 1946. (Colombo: Ceylon Printers Ltd., Parson's Road, Fort).
108 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x14 சமீ.

மட்டக்களப்பு ஈ.எல். தம்பிமுத்து அவர்கள் ஆங்கிலத்தில் எழுதிய மூலநூலை அண்ணாமலைச் சர்வகலாசாலைத் தமிழாசிரியர் வித்துவான் ஜீ.சுப்பிரமணியம்பிள்ளை அவர்கள் தமிழாக்கம் செய்துள்ளார். இந்நூலுக்கான முகவுரையை பேராசிரியர் கே.ஏ.நீலகண்ட சாஸ்திரி வழங்கியுள்ளார். இரண்டு பாகங்களில் அமையும் இந்நூலின் முதற் பாகத்தில் சரித்திரத்துக்கு முந்தைய காலம்-இந்திய மக்கள்-ஆரியர் வருகை, ஆரியாவர்த்தம்-தட்சிணபாதம், சரித்திர காலத் தொடக்கம் (கி.மு.600-கி.பி.1) தமிழ் இலக்கிய வரலாறு, கடைச்சங்க நூல்கள், சங்க காலத்துத் தமிழ் அரசர்கள், திராவிட நாட்டின் அரசியல் வரலாறு (கி.பி.300-900), தமிழ் இலக்கிய வரலாறு என்பன விபரிக்கப்பட்டுள்ளன. இரண்டாம் பாகத்தில் சோழர் பேரரசாட்சி, சோழரும் பாண்டியரும் (கி.பி.1070-1216), பாண்டியர் பேரரசாட்சி (1216-1310), தமிழ் அரச குடும்பங்களின் வீழ்ச்சி, பிந்திய சோழ பாண்டியர் காலத் தமிழ் இலக்கியம், நாயக்கர் ஆட்சியும் ஆங்கிலேயர் ஆட்சியும் ஆகிய விடயங்கள் ஆராயப்பட்டுள்ளன. திராவிடர்களென்னும் தமிழர்களின் கலாசார, நாகரீக, சமூகப் பொருளாதார சரித்திரத்தைப் பற்றிய பல மேற்கோள்களுடன் கூடிய விரிவான நூல் இதுவாகும்.

5946

மட்டக்களப்புக் குகன்குல முற்குகர் வரலாறும் மரபுகளும். ஞா.சிவசண்முகம். மட்டக்களப்பு: விபுலம் வெளியீடு, 33 பாடசாலை வீதி, ஜெயந்திபுரம், 1வது பதிப்பு, ஏப்ரல் 2000. (மட்டக்களப்பு: ஈஸ்ரன் கிராப்பிக்ஸ் அச்சகம், 230 திருமலை வீதி).
xvi, 174 பக்கம், வரைபடங்கள், புகைப்படங்கள், அட்டவணை, விலை: ரூபா 120., அளவு: 21.5x14.5 சமீ.

மட்டக்களப்பின் பூர்வீகமான சமூகக் குழுவினருள் பிரதானமான ஒரு குழுமமான முற்குகரின் வரலாறும், மரபுகளும் இந்நூலில் விரித்துரைக்கப்படுகின்றன. வரலாறும் குடியேற்றமும், முற்குக வன்னியரும் சிற்றரசர்களும், முக்குவச் சட்டம், மரபுகள், போடி கல்வெட்டு, மட்டக்களப்பில் வதனமார் சடங்கு, ஆகிய இயல்களில் முற்குகரின் வரலாறும், குடியேற்றமும், முற்குக குல அரசர்கள், போடிமார் எனப்படும் முற்குகத் தலைவர்கள், முற்குகச் சட்டம், மரபுகள், ஆகிய விடயங்கள் ஆராயப்பட்டுள்ளன. நூலாசிரியர் ஞானமுத்துப் போடி சிவசண்முகம் மட்டக்களப்புக் கன்னங்குடாவிலுள்ள இலுப்படிச்சேனையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். மட்டக்களப்பு சிவானந்தா வித்தியாலயத்தில் கல்விபயின்ற இவர் ஒரு சமாதான நீதவானாகப் பணியாற்றுகின்றார்.

5947

யாழ்ப்பாண முஸ்லிம்கள்: வரலாறும் பண்பாடும். எம்.எஸ்.அப்துல் ரஹீம். யாழ்ப்பாணம்: மு.ஜமால்தீன், 75. அபூபக்கர் வீதி, 1வது பதிப்பு, டிசம்பர் 1979. (யாழ்ப்பாணம்: நாமகள் அச்சகம், 319 காங்கேசன்துறை வீதி).
xiv, 167 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 19.5x13 சமீ.

இந்நூலாசிரியர் முகம்மது சுல்தான் அப்துல் ரஹீம் பேராதனைப் பல்கலைக்கழகப் பட்டதாரியும் பயிற்றப்பட்ட ஆசிரியருமாவார். யாழ்ப்பாணத்து முஸ்லிம்களின் வரலாற்றினையும் தனித்துவமான பண்பாட்டையும் அங்கே வாழ்ந்த முஸ்லிம் புலவர்கள், கல்விமான்கள், எழுத்தாளர்கள் மற்றும் பிற மக்கள் பற்றி யாவரும் அறிந்துகொள்ள இந்நூல் உதவுகின்றது. இந்நூல் இரண்டு பாகங்களாக விரிகின்றது. முதற் பாகத்தில் யாழ்ப்பாண முஸ்லிம்களின் வரலாறு விபரிக்கப்படுகின்றது. அவர்கள் குடியேறிய இடங்கள், அவர்களுக்கும் தமிழர்களுக்கும் இடையே இருந்த தொடர்புகள் ஆகியன இப்பிரிவில் சுருக்கமாக ஆராயப்பட்டுள்ளன. இரண்டாம் பாகத்தில் யாழ்ப்பாண முஸ்லிம்களின் பண்பாடு விபரிக்கப்பட்டுள்ளது. அம்மக்களின் பேச்சுவழக்கு, தமிழ் இலக்கியத்துக்கு அவர்கள் ஆற்றிய பணி, அரபு இலக்கியத்துக்கு அவர்களின் பங்களிப்பு, கல்வி வளர்ச்சி, திருமண சம்பிரதாயங்கள், விழாக்கள், அவர்களிடையே காணப்பட்ட சமூக இயக்கங்கள் ஆகியன விரிவாக இப்பிரிவிற் கூறப்பட்டுள்ளன.

மேலும் பார்க்க: 5271

954.93(4) பிரதேச வரலாறு

5948

ஏறாவூர் வரலாறு. நூலாக்கக் குழு. ஏறாவூர்: ஏறாவூர் வரலாற்று ஆய்வு மையம், 1வது பதிப்பு, செப்டெம்பர் 2005. (கொழும்பு 12: Com Print System, H L ½, Dias Place).
xxiii, 580 பக்கம், புகைப்படம், விலை: ரூபா 475., அளவு: 21.5x15 சமீ., ISBN: 955-1261-00-3.

ஏறாவூர் "றஹ்மானியா கல்வி, சமூக அபிவிருத்தி அமைப்பு" எனப்படும் RESDO வின் கருவில் உருவானதொரு பாரிய பணி இது. ஏறாவூரின் பூர்வீக வரலாறு, சுதந்திரத்துக்கு முற்பட்ட காலப்பகுதி, மட்டக்களப்பு-ஏறாவூர் பிரதேச முஸ்லிம்களின் பூர்வீகம் பற்றிய ஓர் ஆய்வு, ஏறாவூரின் கல்வி வரலாறு, ஏறாவூரின் கலாசார பாரம்பரியங்கள், ஆத்மீகம், ஏறாவூரின் பொருளாதாரம் (விவசாயம், கைத்தொழில்), கலை இலக்கியப் பாரம்பரியம், ஏறாவூரின் வைத்தியத்துறை, விளையாட்டுத்துறை, அரசியல் வரலாறு, சமூக முன்னோடிகள், சமூக சேவை நிறுவனங்கள், அரச நிறுவனங்கள், நீதிசார் அமைப்புகள், அனர்த்தங்களும் விளைவுகளும், தேசிய மட்டத்தில் கௌரவிக்கப்பட்டோர், வரலாற்றில் சில நினைவுகள் ஆகிய பல்வேறு தலைப்புகளின் கீழ் ஏறாவூரின் வரலாறு இந்நூலில் விரிவாகப் பதிவுபெற்றுள்ளது.

5949

காத்தான்குடி வரலாறு: ஓர் அறிமுகம். எம்.எச்.எம்.புஹாரி, ஏ.எல்.அப்துல் ஜவாத், எஸ்.எம்.எம்.சுபைர் (பதிப்பாசிரியர்கள்). காத்தான்குடி: பள்ளிவாயல்கள் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளனம், FKMMI, 1வது பதிப்பு, 2004. (காத்தான்குடி: Dotcom Offset Printers).
(6), 232 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 20.5x14 சமீ., ISBN: 955-1144-00-7.

மட்டக்களப்பு மாவட்டத்தின் பிரதான முஸ்லிம் கிராமங்களில் காத்தான்குடி முக்கியமானது. காத்தான்குடி முஸ்லிம்களின் வாழ்வியலும், பண்பாடும், கல்வி வரலாறு, முக்கியமான கல்விமான்கள், அம்மக்களின் இலக்கியப் பங்களிப்பு, மார்க்க கல்வி வளர்ச்சி, மக்களின் தொழில் வளம், அவர்கள் சார்ந்த அரசியல், அப்பிரதேசத்தில் இயங்கும் முக்கியமான நிறுவனங்கள் போன்ற இன்னோரன்ன தகவல்களைத் தொகுத்து இந்நூலில் வழங்கப்பட்டுள்ளது.

5950

காற்றுவழிக் கிராமம் 2005. kyu; ntspaPl;Lf; FO. gpupj;jhdpah: Gq;FLjPT eyd;Gupr; rq;fk;> 1tJ gjpg;G> 2005. (yz;ld;: N[.Mu;. gpupd;l;).
(68) gf;fk;> Gifg;glk;> tpiy: Fwpg;gplg;gltpy;iy> msT: 29.5x20.5 rkP.

rpd;dj;Jiu fpUghde;jNty; jiyikapy; gpupj;jhdpahtpy; ,aq;Fk; Gq;FLjPT eyd;Gupr; rq;fk; 2005,y; jdJ Mz;Ltpohit nfhz;lhba Ntisapy; ntspaplg;gl;l rpwg;G kyu;> jhafj;jpd; gy;NtW jPtf Ntiyj;jpl;lq;fSf;Fk; epjptoq;Fk; Nehf;fk;nfhz;l ,t;tikg;gpd; gzpfSk;> ,t;tikg;gpdhy; gad;ngw;w jPtf mikg;Gfspd; tho;j;JiufSk; gy;NtW epfo;Tg; Gifg;glq;fSk; ,k;kyupy; ,lk;ngw;Ws;sd.

5951

சங்கானைப் பட்டினம். இ.அப்பாத்துரை. சங்கானை: பட்டினசபை, 1வது பதிப்பு 1968. (யாழ்ப்பாணம்: சி.தியாகராஜா, கலைவாணி அச்சகம், பிரதான வீதி).
(22), 63 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18x12.5 சமீ.

யாழ்ப்பாண மாவட்டத்தில் அமைந்துள்ள சங்கானை என்ற பட்டினத்தைப் பற்றிய பிரதேச புவியியில், வரலாற்றுக் கூறுகளை இந்நூல் பதிவுசெய்கின்றது. புதிய வாழ்வு, நில அமைப்பு, எல்லை, வரலாறு, விவசாயம், கைத்தொழில், மின்வலு, கல்வி, கலை, போக்குவரத்து, நிர்வாகம், சுகாதார சேவை, ஆலயங்கள், குடியிருப்புகள் ஆகிய பல விடயங்களை இந்நூல் பதிவுசெய்கின்றது. School of Oriental and African Studies (SOAS), University of London நூலகத்தில் இந்நூல் பார்வையிடப்பட்டது. பதிவிலக்கம் 499100.

5952

தொண்டைமானாறும் செல்வச் சந்நிதியும். செ.நாகலிங்கம். கனடா: வல்வை வரலாற்று ஆவணக் காப்பகம், 2வது பதிப்பு, ஏப்ரல் 2009, 1வது பதிப்பு, ஏப்ரல் 1985. (அச்சக விபரம் தரப்படவில்லை).
32 பக்கம், புகைப்படம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18x12 சமீ.

கொழும்பு தேசிய நூதனசாலையின் ஓய்வுபெற்ற உதவிப் பணிப்பாளரான செ.நாகலிங்கம் ஆங்கிலத்தில் எழுதி 1974ம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் இக்கட்டுரையை சமர்ப்பித்திருந்தார். யாழ்ப்பாணக் குடாநாட்டின் வடகரையில் உள்ள தொண்டைமானாறு பிரதேச மக்களின் வரலாறு, கலாச்சாரம், பண்பாடு பற்றிய இவ் வரலாற்றுக்கட்டுரை பின்னர் 1985இல் தமிழில் நூலுருவாகியிருந்தது.

5953

நூறு வருட மட்டுநகர் நினைவுகள். எஸ்.பிரான்சிஸ். ஆரையம்பதி 1: அன்பு வெளியீடு, 1வது பதிப்பு, டிசம்பர் 1994. (மட்டக்களப்பு: சென் ஜோசப் கத்தோலிக்க அச்சகம்).
(4), x, 56 பக்கம், தகடுகள், விலை: ரூபா 40., அளவு: 21.5x14 சமீ.

மட்டக்களப்பு மாவட்டத்தின் சுருக்க வரலாற்றை இந்நூல் விளக்க முற்படுகின்றது. வாழ்க்கை வசதிகள், சனமும் சாதியமும், மட்டக்களப்புப் பிரதேசத்தில் கிறிஸ்தவ சமயம், அப்பிரதேசத்தில் கத்தோலிக்க சமயம், கத்தோலிக்க சமயம் பற்றிய தெளிவு, பாத யாத்திரைகள், மற்றும் நினைவை விட்டு அகலாத நிகழ்ச்சிகள் என்று பல விடயங்களை இந்நூலில் நூலாசிரியர் உள்ளடக்கியிருக்கிறார். சங்கீத ஆசிரியர் சான்றிதழை 1935இல் பெற்றுக்கொண்ட இந்நூலாசிரியர் பயிற்றப்பட்ட முதலாம் தர ஆசிரியராக 1936இல் பணியைத் தொடங்கி, பாலபண்டிதர் பரீட்சையில் 1937இல் சித்தியெய்தி முழுநேர ஆசிரியப்பணியை மேற்கொண்டு வந்தவர்.

5954

பாவலர் துரையப்பாபிள்ளையும் யாழ்ப்பாண வரலாற்று நோக்கும்: ஒரு மீள்பார்வை. சி.க.சிற்றம்பலம். தெல்லிப்பழை: மகாஜனக் கல்லூரி, 1வது பதிப்பு, ஒக்டோபர் 2001. (அச்சக விபரம் தரப்படவில்லை).
28 பக்கம், விலை: அன்பளிப்பு, அளவு: 18.5X14 சமீ.

பாவலர் தெ.அ.துரையப்பாபிள்ளை அவர்களின் புதல்வன் அமரர் தெ.து.ஜயரத்தினம் நினைவு தின உரை 29.10.2001. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வரலாற்றுத்துறைத் தலைவரான பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் வழங்கியது.

5955

மட்டக்களப்பு வரலாறு: ஒரு அறிமுகம். வெல்லவூர்க் கோபால். (இயற்பெயர்: சீ.கோபாலசிங்கம்). மட்டக்களப்பு: மனுவேதா, 143/23, எல்லை வீதி, 1வது பதிப்பு, செப்டெம்பர் 2005. (மட்டக்களப்பு: ஆதவன் அச்சகம், அரசடி).
xvi, 203 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 19.5x14.5 சமீ.

ஆரியச் சுவடுகள் பதிந்திராத பண்டைய தமிழர்களது சமூகத் தளத்தின் விழுதுகள் நிலமோடி வேர்களாகி நிலையாகிவிட்ட சிறப்பம்சம் மட்டக்களப்பின் தனித்தன்மை கொண்ட மண்வாசனையாக இருப்பதை இந்நூலாசிரியர் தெளிவுபடுத்துகின்றார். ஈழமும் அதன் மொழிவழிப் பாரம்பரியமும், மட்டக்களப்பின் எல்லைகளும் நில அமைவும், மட்டக்களப்பின் பூர்வீகக் குடிகளும் குடியேற்றங்களும், மட்டக்களப்பின் பிரதேச ஆட்சியாளர்களும் செயற்பாடுகளும், மட்டக்களப்புச் சமூகங்களும் அவற்றின் விரிவாக்கமும், மட்டக்களப்புச் சமூக அமைப்பிலிருந்து மாறுபடும் பண்டைய மரபவழிச் சமூகங்கள், மரபுவழிச் சமூகங்கள், சிங்களவர்கள் ஆகிய ஒன்பது இயல்களில் மட்டக்களப்பின் வரலாறு இந்நூலில் விரிகின்றது. இந்நூல் 2005ம் ஆண்டுக்கான வடக்கு கிழக்கு மாகாண அரசின் சாஹித்திப் பரிசினை பல்துறை நூலுக்காகப் பெற்றது.

5956

மட்டக்களப்பு வாழ்வும் வழிபாடும். க.மகேஸ்வரலிங்கம் (மூலம்), க.இரகுபரன், (தொகுப்பு). கொழும்பு 6: கொழும்புத் தமிழ்ச் சங்கம், 1வது பதிப்பு, 2008. (கொழும்பு 13: கௌரி அச்சகம், 207, சேர் இரத்தினஜோதி சரவணமுத்து மாவத்தை).
viii, 226 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 22x15 சமீ.

அமரர் கலாபூஷணம் க.மகேஸ்வரன் (மகிழை மகேசன்) ஒரு சமூக ஆர்வலர். மட்டக்களப்புத் தமிழகத்தின்மீது மிகுந்த பற்றுறுதி கொண்டவர். அத்தேசத்தின் பௌதீக, அபௌதீக அடித்தளங்களை ஆய்வுசெய்தவர். மட்டக்களப்பின் சமூக, சமய, பண்பாடுசார்ந்த முக்கிய கூறுகளை தமிழில்

முதன்முதலாக ஆய்வுக்குட்படுத்தியவர் என்று மதிப்பளிக்கப்பட்டவர். அவர் அவ்வப்போது எழுதி வெளியிட்ட கட்டுரைகளின் தொகுப்பாய் அவரது மறைவின் பின்னர் தொகுக்கப்பெற்ற இந்நூல் அமைகின்றது. மட்டக்களப்பார் பண்பாட்டில் வீடும் வாழ்வும், மட்டக்களப்பின் பண்டைய சமயநிலை, மட்டக்களபபின் பாரம்பரிய வழிபாட்டு முறைகள், வீரசைவ நெறியும் மட்டக்களப்பில் அதன் இன்றைய நிலையும், மட்டக்களப்பு மாநிலத்தில் வீரசைவம், கொக்கட்டிச் சோலை தான்தோன்றீஸ்வரர் கோவில், தான்தோன்றீச்சரத்தின் பூசைகளும் விழாக்களும், நாதனை வில்லை கட்டுச் சடங்கு, மட்டக்களப்புக் கோயில்கள் வளர்த்த நுண்கலைகள், மட்டக்களப்பு நாட்டுக் கூத்து, மட்டக்களப்பின் பாரம்பரிய விளையாட்டுக்கள், கொம்பு விளையாட்டு விழாவின் மரபுகளும் நிகழ்வுகளும், தாந்தாமலை மறுமலர்ச்சியின் ஆரம்பம், மண்முனை தென்மேற்குப் பிரதேசம், அம்பிளாந்துறை பற்றிய ஓர் ஆய்வுமுயற்சி, விபுலாநந்த அடிகளாரின் இரு தளபதிகள், சைவப் புலவர்கள் கா.அருணாசல தேசிகர் ஆகிய 17 தலைப்புகளில் இவரது கட்டுரைகள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. இக்கட்டுரைகளின் தொகுப்பாசிரியர் இரகுபரன், தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளராவார்.

5957

யாழ்ப்பாண வைபவம். நா.சி.பாலசுப்பிரமணிய சர்மா. சங்கானை: சு.பொன்னுச்சாமிப் பிள்ளை, 2வது பதிப்பு, 1927, 1வது பதிப்பு, 1916. (சங்கானை: சச்சிதானந்த யந்திரசாலை).
42 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை.

யாழ்ப்பாண வைபவம் என்னும் இந்தச் சிறு சரித்திரம் வட்டுக்கோட்டை நா.சி.பாலசுப்ரமண்ய சர்மா அவர்களால் பல ஏட்டுப் பிரதிகளின் உதவிகொண்டு எழுதப்பெற்று வட்டுக்கோட்டை ப்ரம்மஸ்ரீ சி.பாலசுப்பிரமணிய சர்மாவினால் பரிசோதிக்கப்பெற்று 1916ம் ஆண்டு வெளியிடப்பட்டது. யாழ்ப்பாணத்திற் சம்பவித்தவைகளைக் கூறுவதால் யாழ்ப்பாண வைபவம் என்று பெயரிடப்பட்டதாக ஆசிரியர் குறிப்பிடுகின்றார். (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5958

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் யாழ்ப்பாண இராச்சியம் நூலும் இபன் பத்தூத்தாவின் இலங்கைப் பயணக் குறிப்புகளும்: பகுதி 1. ஓர் விமர்சனம்.
ஏ.எஸ்.உதயகுமார். உடுவில்: Institute of Historical Studies, 1வது பதிப்பு, ஜுலை 1994. (யாழ்ப்பாணம்: Arun Printers and Publishers).
xliii, (5), 104 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14 சமீ.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கைத் தமிழரின் வரலாறு தொடர்பாக 1992இல் ஒரு நூலை வெளியிட்டிருந்தது. வரலாற்றுத்துறைத் தலைவர் சி.க.சிற்றம்பலம் பதிப்பாசிரியராக இருந்து தொகுக்கப்பட்ட அந்நூல் (பார்க்க: நூல்தேட்டம் பதிவு 2960) பற்றிய கருத்தியல் தவறுகளைச் சுட்டிக்காட்டும் நூலாக இந்நூல் வெளியிடப்பட்டுள்ளது. இரு பகுதிகளாக அமைந்துள்ள இந்நூலின் முதற் பகுதி யாழ்ப்பாண இராச்சியம் என்ற நூலில் இபன் பத்தூத்தாவின் இலங்கைப் பயணம் தொடர்பாக விபரிக்கப்பட்டவை தரப்பட்டு, இபன் பத்தூத்தாவின் பயணக் குறிப்புகள் பற்றியும், அவரின் இலங்கைப் பயணக் குறிப்புகள் பற்றியும் தரப்பட்டு அவை ஒப்பிடப்பட்டு, அறிவு வளர்ச்சி, ஆராயும் தன்மை வளர்ச்சி என்பவைகள் தொடர்பாக யாழ்ப்பாண இராச்சியம் நூலின் நிலைப்பாடு என்ன என்பவை ஆராயப்படுகின்றன. பகுதி 2இல் இபன் பத்தூத்தாவின் இலங்கைப் பயணக் குறிப்புகளில் கூறப்பட்ட பல விடயங்கள் பற்றியும், அதில் குறிப்பிடப்பட்ட இடங்கள் பற்றியும் ஆராயப்படுகின்றன. மேலும் இபன் பத்தூத்தாவின் இலங்கைப் பயணக் குறிப்புகளை யாழ்ப்பாண இராச்சிய வரலாறு பற்றியும், இலங்கையின் வரலாறு பற்றியும் ஆராய்வதற்கும், மாணவர்களது ஆராயும் தன்மையை வளர்க்கவும் எப்படிப் பயன்படுத்தலாம் எனவும் விளக்கப்பட்டுள்ளது.

5959

வல்வை, வல்வெட்டித்துறை, வல்வைநகர். K.T.பெரியதம்பி. வல்வெட்டித்துறை: சிவசக்தி, சிவன் கோவில் தெரு, 2வது பதிப்பு, பெப்ரவரி 2001, 1வது பதிப்பு, செப்டெம்பர் 2000. (தமிழ்நாடு: கண்ணன் ஓப்செட் பிரின்டர்ஸ், அபிராமி கொம்பிளெக்ஸ், குமரன் நகர், திருச்சிராப்பள்ளி 620 017).
(6), 176 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18.5x12.5 சமீ.

வல்வை ந.நகுலசிகாமணி 1997இல் எழுதி கனடாவில் வெளியிட்ட **வல்வெட்டித்துறை வரலாற்றுச் சுவடுகள்** என்ற வரலாற்று நூலில் தான் கண்ட தவறுகளை அடிப்படையாகக்கொண்டு இந்த விமர்சன நூலை நூலாசிரியர் எழுதியுள்ளார். முன்னைய நூலின் வரலாற்றுத் தவறுகளைச் சீர்செய்யும் வகையில்

இந்நூலை வெளியிட்டுள்ளார். இவரும் இலங்கையிலிருந்து கனடாவில் புலம்பெயர்ந்து சென்று வாழ்பவர். ஈழத்துப் படைப்பிலக்கியவாதியான வல்வை கமலா பெரியதம்பி அவர்களின் துணைவர். (வல்வெட்டித்துறை வரலாற்றுச் சுவடுகள் என்ற நூலுக்கான நூல்தேட்டம் பதிவு: 2963).

5960

வன்னியின் கதை. முல்லைமணி வே.சுப்பிரமணியம். கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், 361, 1/2, டாம் வீதி, 1வது பதிப்பு, 2007. (கொழும்பு 12: குமரன் பிரின்டர்ஸ், 361, 1/2, டாம் வீதி).
xiv, 200 பக்கம், விலை: ரூபா 400., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-955-659-066-8.

வன்னியின் கதை 22 அத்தியாயங்களைக் கொண்டது. முதல் 12 அத்தியாயங்களில் வன்னியின் வரலாற்றை சான்றாதாரங்களுடன் நிறுவுகின்றது. ஏனைய 10 அத்தியாயங்களும் வன்னி மண்ணின் வாழ்க்கை, பொருளாதாரம், அரசியல், கலைகள், தொழில் வளர்ச்சி, கல்வி, வழிபாட்டுத் தலங்கள், நாட்டார் பாடல்கள் என்பனவற்றை பதிவுசெய்கின்றன. வரலாற்றுரீதியில் 2500 ஆண்டுக்காலம் பழமையான வன்னி வரலாறு, நாகர் இயக்கர் காலம், அவர்கள் பரவிவாழ்ந்த இடங்கள், தென்னிலங்கையில் வன்னியர் வருகை, அவர்கள் தாபித்த அரசுகள், பண்டாரவன்னியனின் தோற்றம், அவனது ஆட்சித்திறன், அந்நியருக்கு எதிரான போர், கட்டிய கோட்டைகள், மக்களுடன் கொண்ட தொடர்பு, அரசியல் நிர்வாகம் என்பன விரிவாக விளக்கப்பட்டுள்ளன.

954.93(5) தொல்லியலாய்வு

5961

கள்ளியங்காட்டுச் செப்பேடுகள்: பாகம் 1. செல்லத்துரை குணசிங்கம். பேராதனை: செ.குணசிங்கம், வரலாற்றுத்துறை, இலங்கைப் பல்கலைக்கழகம், 1வது பதிப்பு, நவம்பர் 1970. (கண்டி: நேஷனல் பிரிண்டர்ஸ்).
76 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை.

இந்நூலின் பொருளாக அமைவது கயிலாய வன்னியனார் சிதம்பர தருமசாதனப் பட்டையம் (1722) ஆகும். செப்பேட்டிலுள்ள பாடப் பிரதி, அடிக்குறிப்பு, பிற்சேர்க்கை மற்றும் செப்பேட்டின் படங்கள் என்பன நூலில் காணப்படுகின்றன. இது இற்றைக்கு 250 ஆண்டுகளுக்கு முன்னர் எழுதப்பட்டது. வட இலங்கையின் வன்னிச் சிற்றரசுகளைச் சேர்ந்த அதிகாரிகள் சிலர், சிதம்பரத்திலிருந்த மடம் ஒன்றுக்கு அளித்த தானத்தைப் பற்றியது இப்பட்டையம். இக்காரணத்தினால் ஈழத்து வன்னிச் சிற்றரசுகளின் வரலாற்றுக்கு இது பயனுள்ள ஓர் ஆதாரமாக முக்கியத்துவம் பெறுகின்றது. 17ம் நூற்றாண்டின் இறுதிக்காலிலும், 18ம் நூற்றாண்டின் முதற்காலிலும் வன்னிப் பிரதேசத்தில் இருந்த அரசியல், பொருளாதார நிலை சம்பந்தமான தகவல்கள் பலவற்றை இந்நூல் வெளிப்படுத்தியுள்ளது. வன்னியின் வரலாற்றை ஆராய முனைபவர் எதிர்கொள்ளும் பிரச்சினைகளும் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன. இந்நூலுக்கான அணிந்துரையை கலாநிதி கா.இந்திரபாலா வழங்கியுள்ளார். செப்பேடுகளை கல்வியங்காட்டைச் சேர்ந்த ஓதுவார் சிவக்கொழுந்து ஆராய்ச்சிக்கென வழங்கியுள்ளார். (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14)

999 இலங்கை தொடர்பான பன்னாட்டவரின் தமிழ்ப் படைப்புகள்

5962

அனைத்துலக இஸ்லாமியத் தமிழ் இலக்கிய மூன்றாவது மாநாட்டுச் சிறப்பு மலர்: இஸ்லாமியத் தமிழ் இலக்கியக் கட்டுரைகள். சீ.நயினார் முகம்மது, அர.அப்துல் ஜப்பார் (பதிப்பாசிரியர்கள்). திருச்சிராப்பள்ளி 20: இஸ்லாமியத் தமிழ் இலக்கியக் கழகம், ஜமால் முஹம்மது கல்லூரி, 1வது பதிப்பு, ஜனவரி 1978. (சென்னை 600001: மில்லத் பிரின்டர்ஸ், 34, அப்பு மேஸ்திரி தெரு).
(6), 248 பக்கம், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5X13.5 சமீ.

தமிழ்நாடு காயல்பட்டினத்தில் நடைபெற்ற அனைத்துலக மூன்றாவது இஸ்லாமியத் தமிழ் இலக்கிய மாநாட்டில் வெளியிடப்பட்ட இஸ்லாமிய மாநாட்டுக் கட்டுரைகள் 24 இத்தொகுப்பில் இடம்பெறுகின்றன. இலங்கை, இந்தியா, மலேசியா நாடுகளைச் சேர்ந்த இஸ்லாமிய, தமிழ் அறிஞர்கள் பலர் இவ்வாய்வுக் கட்டுரைகளைப் படைத்துள்ளனர். சி.நயினார் முகம்மது, ஹாபிஸ் எம்.கே.செய்யிது அஹமது, அ.ஸ.அப்துஸ் ஸமது, ம.மு.உவைஸ், எம்.எச்.எம்.ஷம்ஸ், ஓ.அ.காஜா முகைதின், க.ப.அறவாணன், இளம்பிறை எம்.ஏ.ரஹ்மான், தக்கலை எம்.எஸ்.பஷீர், எம்.ஏ.ஹைதர் அலி, சீ.எம்.ஏ.அப்துல் காதிர்,

சு.வித்தியானந்தன், த.நூ.அல்லாப் பிச்சை, ஜே.எம்.சாலி, எஸ்.ஏ.சுலைமான், எம்.கே.ஈ.மவ்லானா, வி.எம்.நயினார் முகம்மது, எஸ்.டி.வெள்ளைத்தம்பி, கே.டீ.எம்.சேக்னா லெப்பை, W.K.S.முகம்மது நாசர், காயல்முத்து முகம்மது, என்.ஏ.அமீர் அலி ஆகியோரது இஸ்லாமியத் தமிழ் இலக்கிய ஆய்வுக்கட்டுரைகள் இதில் அடங்கியுள்ளன. இந்நூல் School of Oriental and African Studies (SOAS), University of London நூலகத்தில் பார்வையிடப்பட்டது. பதிவிலக்கம் 562736.

5963

1948 முதல் 1996 வரை: ஈழத்தமிழர்களின் உரிமைப்போர் வரலாறு. கு.வே.கி.ஆசான். சென்னை 600007: திராவிடர் கழகம், பெரியார் திடல், 3ஆவது பதிப்பு, 1998. 1வது பதிப்பு விபரம் இல்லை. (சென்னை 600007: விடுதலை ஆப்செட் பிரிண்டர்ஸ்).
48 பக்கம், விலை: இந்திய ரூபா 6.00, அளவு: 20x13.5 சமீ.

தந்தை செல்வா தலைமையில் அறப்போர், தன்னாட்சியும் தனியாட்சியும், அறப்போரா மறப்போரா, அடக்குமுறைத் தொடர்கள், போராளிகள் தோற்றம், இந்தியாவின் பங்களிப்பு என்ன, திம்புவில் வீம்பு, இழப்பை ஈந்த ஒப்பந்தம், எம்.ஜி.ஆர்., தொல்லைகளிடையே தொடரும் போர், தீர்வு, ஆகிய தலைப்புகளில் ஈழத்தமிழர்களின் விடுதலைப் போராட்ட வரலாறு தமிழ்நாட்டவரின் பார்வையில் இந்நூலில் விரிகின்றது.

5964

இந்தியம், ஈழம், நக்சலியம். சாலய் இளந்திரயன். சென்னை 86: சாலய் வெளியீடு, பேரவய் இல்லம், 11, திருவீதியான் தெரு, கோபாலபுரம், 2வது பதிப்பு, அக்டோபர் 1989, 1வது பதிப்பு, மே 1989. (சென்னை 86: சாலை அச்சகம், 11 திருவீதியான் தெரு, கோபாலபுரம்).
192 பக்கம், விலை: இந்திய ரூபா 7.50, அளவு: 18x12.5 சமீ.

தமிழகத்தில் வீரநடை அறிவியக்கம் மாத இதழில் வெளிவந்த கட்டுரைகளின் தொகுப்பு. இந்தியம், ஈழம், நக்சலியம் ஆகிய மூன்று பிரிவுகளில் இதிலுள்ள 18 கட்டுரைகளும் பகுக்கப்பட்டுள்ளன. ஈழம் என்ற பிரிவில் ஈழத்தமிழர் பிரச்சினையை இந்திரைமகன் தீர்ப்பாரோ? ஈழத்தமிழர் பிரச்சினை வெறும் சோற்றுப் பிரச்சினையா? தமிழனின் முதுகிலே மீண்டும் ஒரு குத்து, இதுதானா ஐயா ஈழத்தமிழருக்கு ஆதரவு? பின்னணி தெரியாமல் பேரம் பேசுவதா? யார் தேசப் பக்தர்கள்-யார் தேசத் துரோகிகள்? இந்தியா நடத்தி வைத்த ஒரு ஜிகினா நாடகம் ஆகிய ஏழு கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. இவை பெரும்பாலும் சமகாலத்தில் நிகழ்ந்த இந்திய இலங்கை உடன்படிக்கை, இந்திய அமைதி காக்கும் படையின் செயற்பாடு ஆகியவற்றை பின்னணியாகக் கொண்டவை.

5965

இலங்கை அச்சத்திற்குள் வாழ்தல்: இலங்கையில் வடக்குக் கிழக்கில் சிறார் படையினர். மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு. New York: Human Rights Watch, 350 Fifth Avenue, 34th Floor, 1வது பதிப்பு, 2004. (அச்சக விபரம் தரப்படவில்லை).
(4), 110 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 27.5x21.5 சமீ.

இவ்வறிக்கை மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பின் சிறார் உரிமைகள் பிரிவின் பிரச்சாரப் பணிப்பாளர் ஜோ பெக்கர் (Jo Becker), மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பின் ஆசியப் பிராந்தியத்துக்கான தென்னாசிய ஆய்வாளர் Tejshree Thapa ஆகிய இருவரும், 2004ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் இலங்கையில் மேற்கொண்ட ஆய்வின் அடிப்படையிலும், சிறார்கள் உரிமைப் பிரிவின் சட்ட ஆலோசகர் சாமா கோர்சன் நெவ் (zama Coursen-Neff) என்பவரின் ஆலோசனையுடனும் தயாரிக்கப்பட்டது.

5966

ஈழ விடுதலைக்கு முட்டுக்கட்டைகள் அமெரிக்க-இந்திய வல்லரசுகளே.
தொல்.திருமாவளவன். (மூலம்), வன்னி அரசு (பதிப்பாசிரியர்). சென்னை 600017: தாய்மண் பதிப்பகம், 16. சின்னையா தெரு, தியாகராய நகர், பதிப்பு விபரம் தரப்படவில்லை, (அச்சக விபரம் தரப்படவில்லை).
72 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x13.5 சமீ.

28.06.2005 அன்று இலங்கை அரசுடனான ஒப்பந்த முயற்சியைக் கைவிடக் கோரி தொல். திருமாவளவன் தலைமையில் நடைபெற்ற இந்திய அரசுக்கெதிரான உண்ணாவிரத அறப் போராட்டம் பற்றியும், பிற ஈழத் தமிழர் பிரச்சினைகள் குறித்த உரைகளின் எழுத்து வடிவத்தையும் கொண்டதாக இந்நூல் அமைகின்றது.

5967

ஈழ வேந்தன் சங்கிலி. கௌதம நீலாம்பரன். சென்னை 600014: சாரதா பதிப்பகம், ஜி 4, சாந்தி குடியிருப்பு, எண் 3, ஸ்ரீ கிருஷ்ணாபுரம் தெரு, இராயப்பேட்டை, 1வது பதிப்பு, டிசம்பர் 2000. (சென்னை 5: தேவா ஆப்செட் பிரஸ்).
208 பக்கம், விலை: இந்திய ரூபா 50., அளவு: 21.5x14 சமீ.

தமிழக எழுத்தாளர் கௌதம நீலாம்பரன் தீபம், இதயம் பேசுகிறது, ஞானபூமி, ஆனந்த விகடன், குங்குமம் இதழ்களில் பணியாற்றியவர். இவரது சேது பந்தனம், மோகினிக்கோட்டை, வெற்றி மகுடம், கலிங்க மோகினி, மன்னன் மாடத்து நிலவு, பாண்டியன் உலா, பல்லவ மோகினி, மருதநாயகம் போன்ற வரலாற்று நாவல்கள் புகழ்பெற்றவை. அந்த வரிசையில் ஈழமன்னன் சங்கிலியின் வரலாற்றை சுவையான நாவலாக்கியிருக்கிறார். கலைமகள் மாத இதழில் **ராஜகங்கணம்** என்ற பெயரில் தொடராக வெளிவந்து நூல்வடிவம் பெற்றது. அதன் திருத்திய இரண்டாவது பதிப்பாக 12 ஆண்டுகளின் பின்னர் ஈழவேந்தன் சங்கிலி என்ற பெயரில் வெளிவந்துள்ளது.

5968

ஈழத் தமிழரைக் காப்போம். வைகோ (இயற்பெயர்: வை.கோபாலசாமி). இலண்டன்: தமிழினி குலேந்திரன், தமிழினி பதிப்பகம், 112, Bickley Street, London SW17 9NE, 1வது பதிப்பு, ஜனவரி 2006. (சென்னை: ராகவேந்திரா லேசர் பிரிண்டர்ஸ், 15, தானப்பன் தெரு, திருவல்லிக்கேணி).
48 பக்கம், விலை: இந்திய ரூபா 10., அளவு: 21.5x14 சமீ.

ஈழத்தமிழர் பிரச்சினை பற்றி இந்திய அரசியல்வாதியான வை.கோபாலசாமி (வைகோ) அவர்கள் ஆற்றிய உரையும், இலங்கைத் தமிழர் தொடர்பாக இந்தியப் பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் அவர்களுக்கு வைகோ எழுதிய நான்கு கடிதங்களும் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன.

5969

ஈழத் தமிழறிஞர் தாமோதரம்பிள்ளை. ப.தாமரைக்கண்ணன். சென்னை 600026: குமரன் பப்ளிஷர்ஸ், 3(12), மெய்கை விநாயகர் தெரு, குமரன் காலனி, 7வது தெரு, வடபழநி, 1வது பதிப்பு, மார்ச் 2004. (அச்சக விபரம் தரப்படவில்லை).
208 பக்கம், விலை: இந்திய ரூபா 60., அளவு: 18x12.5 சமீ.

பழந்தமிழ் நூல்களை ஏட்டுப் பிரதிகளிலிருந்து அச்சுவாகனமேற்றி நூலுருவில் கொண்டுவந்தவர்களுள் சீ.வை.தாமோதரம்பிள்ளை முதன்மையானவர். தமிழ்ப் பதிப்பு வரலாறு, தாமோதரனார் வாழ்க்கைப் பின்னணி, அவர் பதிப்பித்த நூல்கள், பதிப்பு முறைகள் யாவற்றையும் இந்நூல் பதிவுசெய்கின்றது. சிறந்த தமிழறிஞரான நூலாசிரியர் தமிழகத்தைச் சேர்ந்தவர். வை.எம்.சீ.ஏ. பட்டிமன்றத்தினை நீண்டகாலம் நடத்திய பக்தவத்சலம் அவர்களின் மகன் இவர்.

5970

ஈழப் பிரச்சினையில் இந்திய உளவு நிறுவனங்களின் சதி. விடுதலை க.இராசேந்திரன். சென்னை: பெரியார் திராவிடர் கழகம், 1வது பதிப்பு, 2007. (சென்னை 600024: கிரியேட்டிவ் கிராப்பிக்ஸ்).
112 பக்கம், விலை: இந்திய ரூபா 25., அளவு: 21x13.5 சமீ.

இலங்கையின் இனப்பிரச்சினையில் ரா, அய்.பி. உளவு நிறுவனங்கள் உருவாக்கிய குழப்பங்களையும் அரங்கேற்றிய வன்முறைப் படுகொலைகளையும் வெளிச்சப்படுத்தும் நூல் இதுவாகும். உளவு நிறுவனங்களின் இரகசிய செயற்பாடுகளை மக்கள் மன்றத்தின் பகிரங்க விவாதத்திற்குக் கொண்டுவரும் நோக்கத்தோடு இந்நூல் வெளிவந்துள்ளது. பெரியார் திராவிடர் கழகத்தின் வார ஏடான **புரட்சிப் பெரியார் முழக்கத்தில்** பிரசுரமாகியிருந்த கட்டுரைகளின் தொகுப்பு முற்பகுதியிலும், அவை தொடர்பான விரிவான தகவல்கள் இரண்டாம் பகுதியில் பிற்சேர்க்கையாகவும் இணைக்கப்பட்டுள்ளன.

5971

ஈழம்: தமிழரின் தாயகம். க.ப.அறவாணன். புதுச்சேரி 605005: தமிழர் கோட்டம், 11 இரண்டாம் தெரு, மோகன் நகர், 1வது பதிப்பு, ஓகஸ்ட் 2000. (சென்னை 600004: யுனைட்டெட் பைண்ட் கிராப்பிக்ஸ், 101-D, இராயப்பேட்டை நெடுஞ்சாலை, லஸ், மயிலாப்பூர்).
202 பக்கம், விலை: இந்திய ரூபா 60., அளவு: 22x14.5 சமீ.

ஈழம்: தமிழரின் தாயகம், ஈழம்: ஆதி வரலாற்று இயல், ஈழம்: வணிக இயலும் ஆதி மதவியலும், ஈழம்: தமிழ்ச் சங்கவியல், ஈழம்: ஆதித் தமிழர் ஆட்சி இயல், யாழ்ப்பாணத் தமிழ் அரசு இயல், தமிழர் குடியேற்ற இயல், தமிழ் இனப் படுகொலை இயல், ஈழச் சிக்கலும் இந்தியத் தீர்வும் ஆகிய தலைப்புக்களில் தமிழக எழுத்தாளரின் பார்வையில் அமைந்த கட்டுரைகளைக்கொண்ட நூல்.

5972

ஈழம் என்றால் புலிகள், புலிகள் என்றால் ஈழம்: திருமாவளவனின் உரைவீச்சு. தொல்.திருமாவளவன் (உரையாசிரியர்), வன்னி அரசு (தொகுப்பாசிரியர்). சென்னை 600017: தாய்மண் பதிப்பகம், 16. சின்னையா தெரு, தியாகராய நகர், 2வது பதிப்பு, ஜனவரி 2004, 1வது பதிப்பு, ஜுலை 2003. (அச்சக விபரம் தரப்படவில்லை).

56 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22x14 சமீ.

தமிழீழ விடுதலைக்கு தமிழகத்தின் விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பு கருத்தியல்ரீதியாக உதவுவது குற்றமாகாது என மக்கள் மன்றத்தில் முழக்கமிட்ட தொல்.திருமாவளவன் அவ்வப்போது ஊடகங்களுக்கு வழங்கிய மூன்று விரிவான நேர்காணல்கள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. தினக்குரல் நாழிதழுக்கு பொ.ஐங்கரநேசனுக்கு வழங்கிய பேட்டி, உலகத் தமிழர் பேரமைப்புத் தொடக்கவிழா மகாநாட்டில் திருமாவளவன் ஆற்றிய உரை, சாதிய வன்கொடுமைகளைக் கண்டிக்காத தமிழனோடு எப்படி ஒன்றுபடமுடியும் என்று கேள்வி எழுப்பி எரிமலை இதழுக்கு வழங்கிய பேட்டி என ஈழப் போராட்டம், ஈழத்தமிழரின் இனச்சிக்கல் ஆகியன தொடர்பான மூன்று நேர்காணல்கள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன.

5973

ஈழம் தந்த இனிய தமிழ்க்கொடை. இரா.இளங்குமரனார். சென்னை 600017: தமிழ்மண் பதிப்பகம், 2 சிங்காரவேலர் தெரு, தியாகராய நகர், இணை வெளியீட்டாளர் கொழும்பு 11: சேமமடு பொத்தகசாலை, UG 49,50,52 Peoples Park, Gas Works Street, 1வது பதிப்பு, 2005. (சென்னை 6: வெங்கடேசுவரா ஆ.ஃப்செட் பிரின்டர்ஸ், ஆயிரம் விளக்கு).

xii, 100 பக்கம், விலை: ரூபா 342., அளவு: 22x14 சமீ.

ஈழத்தமிழர்கள் வரலாற்று ரீதியில் தமிழுக்கு ஆற்றிய மொழியியல், இலக்கியப் பணிகளை இந்நூல் ஒரு தமிழக அறிஞரின் பார்வையில் பதிவுசெய்கின்றது.

5974

உண்மை சார்ந்த உரையாடல்: காலச்சுவடு நேர்காணல்கள் 1998-1999. கண்ணன் (தொகுப்பாசிரியர்). நாகர்கோவில் 629001: காலச்சுவடு பதிப்பகம், 669, கே.பி.சாலை, 1வது பதிப்பு, ஒக்டோபர் 2003. (சென்னை 600005: மணி ஆப்செட்).

288 பக்கம், விலை: இந்திய ரூபா 140., அளவு: 21.5x13.5 சமீ., ISBN: 81-87477-48-2.

1998,1999 ஆண்டுகளில் காலச்சுவடில் வெளிவந்த எட்டு நீண்ட நேர்காணல்களின் தொகுப்பு இந்நூல். சிந்தனை உலகின், பண்பாட்டு உலகின், தத்துவ உலகின் எட்டு துருவங்களின் கருத்துத் தொகுப்பாக இது வெளிவந்துள்ளது. இந்நேர்காணல்களை காலச்சுவடு இதழுக்காக மனுஷ்யபுத்திரன், ஜெயமோகன், க.பூரணச்சந்திரன், மு.புஷ்பராஜன் ஆகியோர் மேற்கொண்டுள்ளனர். கலைஞர் தாசீசியஸ், மு.பொன்னம்பலம், சேரன், ஆகிய ஈழத்துத் தமிழ் பிரமுகர்களுடன் ஆற்றூர் ரவிவர்மா, எஸ்.ராமகிருஷ்ணன், நித்ய சைதன்ய யதி, சின்னக் குத்தூசி, ரமேஷ்-பிரேம் ஆகிய தமிழகப் பிரமுகர்களின் நேர்காணல்களும் இந்நூலில் இடம்பெற்றுள்ளன.

5975

உறவைக் காக்க எழுக. வை.கோபாலசாமி. தமிழ்நாடு: மக்கள் தொண்டன், இரா.மாணிக்கவாசகம் பதிப்பகம், 1, ராக்காட்சி நகர் விரிவு, மணியகாரம்பாளையம், கோவை 641006, 1வது பதிப்பு, ஜுலை 2006. (சிவகாசி: சிவசக்தி அச்சகம்).

68 பக்கம், புகைப்படங்கள், விலை: இந்திய ரூபா 15., அளவு: 21x14 சமீ.

ஈழத்தமிழர்களின் விடுதலைப் போராட்டத்திற்கு ஆதரவாகக் குரல்கொடுத்துவந்த தமிழக அரசியல்வாதியான வைகோ என்னும் வை.கோபாலசாமி ஆற்றிய உரையுடன் வேறும் பல ஈழத்தமிழர் ஆதரவுக் கட்டுரைகள் உள்ளடங்கிய நூல். 06.07.2006 அன்று கோவையில் நடைபெற்ற கொங்குமண்டல

மறுமலர்ச்சி தி.மு.க. செயல்வீரர்கள் கூட்டத்தில் இந்நூல் வெளியிடப்பட்டது. வைகோவின் செயலாளர் அருணகிரி (கிழக்கு வெளுக்குமா?), வை.கோ (உறவைக்காக்க எழுக), தமிழீழ விடுதலைப் புலிகளின் சு.ப.தமிழ்ச்செல்வனின் ஆனந்த விகடன் செவ்வி (எமது கனவு, மரணபயம் அற்ற தமிழ் ஈழம்), இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம் சங்கொலி அருணகிரிக்கு 24.5.2006 இல் வழங்கிய நேர்காணல், தமிழினி வ.மா குலேந்திரன் அவர்களுடன் அருணகிரி மேற்கொண்ட நேர்காணல் (9.6.2006), ஆனந்த விகடன் 9.7.2006 இதழில் வெளியான ஈழ அகதிகளின் சோகக் கதை என்பன இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன.

5976

கார்த்திகேசு சிவத்தம்பியின் நேர்காணல்கள்: தொகுதி 1. மேது.ராசுகுமார், ரா.வசந்தா (பொதுப் பதிப்பாசிரியர்). சென்னை 600002: மக்கள் வெளியீடு, 49 உனிசு அலி சாஹிப் தெரு, எல்லிசு சாலை, 1வது பதிப்பு, டிசம்பர் 2003. (சென்னை 600005: தேவா ஆப்செட், 62/1, திருவல்லிக்கேணி நெடுஞ்சாலை).
320 பக்கம், விலை: இந்திய ரூபா 100., அளவு: 21.5x14 சமீ.

கலை, இலக்கியம், இதழியல் தொடர்பான ஆய்வாளரும் திறனாய்வாளரும், பொதுவாழ்வில் தம்மை முழுமையாக ஈடுபடுத்திக்கொண்டவருமான ஈழத்தமிழறிஞர் பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி அவர்கள் 1978இல் தீபம் சஞ்சிகைக்கு வழங்கிய நேர்காணல் தொடங்கி 2002இல் Front Line சஞ்சிகைக்கு வழங்கிய நேர்காணல் வரையிலான 24 நேர்காணல்கள் இந்நூலில் தொகுத்து வழங்கப்பட்டுள்ளன. மொழி, இலக்கியம், திரைப்படம், நாடகம், ஈழப் போராட்டம், புலம்பெயர்ந்தோர், தேசிய இனம், அரசியல், புதிய தத்துவப் போக்குகள், மார்க்சியம் போன்ற பரந்துபட்ட விடயங்களை இந்நேர்காணல்கள் தமது பேசுபொருளாகக் கொண்டுள்ளன.

5977

காலச்சுவடு நேர்காணல்கள் 1995-1997. கண்ணன் (தொகுப்பாசிரியர்). நாகர்கோவில் 629 001: காலச்சுவடு பதிப்பகம், 669, கே.பி.சாலை, 1வது பதிப்பு, டிசம்பர் 2001. (சென்னை 600 005: மணி ஒப்செட்).
286 பக்கம், விலை: இந்திய ரூபா 120., அளவு: 21x14 சமீ., ISBN: 81-87477-16-4.

தமிழகத்தின் **காலச்சுவடு** இதழில் 1995 முதல் 1997 வரை வெளியான 8 நேர்காணல்களின் தொகுப்பு. தமிழகத்திலும் இலங்கையிலும் பிரபல்யமான இலக்கிய ஆர்வலர்களுடனான இந் நேர்காணல்களில் இலங்கையைச் சேர்ந்த பேராசிரியர் சி.சிவசேகரம், உதயம் புத்த நிலையத்தின் உரிமையாளர் திரு. துரைராஜகுலசிங்கம், ஆகியோருடன் தமிழகத்தின் எஸ்.என்.நாகராஜன், கே.சச்சிதானந்தன், டி.ஆர்.நாகராஜா, அம்பை, முத்தம்மா, ஓவியா ஆகியோரின் நேர்காணல்கள் இடம்பெற்றுள்ளன.

5978

கே.டானியல் கடிதங்கள். அ.மார்க்ஸ். (தொகுப்பாசிரியர்). தமிழ்நாடு: அடையாளம் பதிப்பகம், 1204-05, 2வது மாடி, கருப்பூர் சாலை, புத்தாநத்தம் 621310, 1வது பதிப்பு, டிசம்பர் 2003. (சென்னை: சேகர் ஒப்செட்).
192 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 21.5x14 சமீ., ISBN: 81-7720-022-4.

தமிழில் தலித் இலக்கிய முன்னோடியும் ஈழத்தின் புகழ்பூத்த எழுத்தாளருமான கே.டானியல் எழுதிய கடிதங்களின் தொகுப்பு. பெரும்பாலானவை இந்நூலின் தொகுப்பாசிரியர் அ.மார்க்சுக்கு எழுதப்பட்டவை. தன் வாழ்நாள் முழுவதையும் சாதி எதிர்ப்பிற்கும் சாதி எதிர்ப்பு இலக்கியங்களுக்கும் அர்ப்பணித்த ஒரு தலித் போராளி ஈழப்பிரச்சினையை எப்படிப் பார்க்கிறார் என்பதை அறிந்துகொள்வதற்கோர் ஆவணமாக இக்கடிதத் தொகுப்பு அமைகின்றது. கே.டானியலின் வாழ்வின் இறுதிக்காலங்களில் இக்கடிதங்கள் எழுதப்பட்டவை என்பது குறிப்பிடத்தக்கது.

5979

கேள்விகள். ஞானி. சென்னை 600041: ஞானபாநு, 22 பத்திரிகையாளர் குடியிருப்பு, திருவான்மியூர், 1வது பதிப்பு, ஜனவரி 2004. (சென்னை 600005: சேகர் ஒப்செட்).
208 பக்கம், புகைப்படம், விலை: இந்திய ரூபா 60., அளவு: 21x13.5 சமீ.

தமிழகத்தைச் சேர்ந்த பத்திரிகையாளர் ஞானிக்கு, பல்வேறு கலை இலக்கியப் பிரமுகர்கள் வழங்கிய நேர்காணல்களின் தொகுப்பு இது. புலம்பெயர்ந்து வாழும் ஈழத் தமிழர்களான நிர்மலா நித்தியானந்தன், வ.ஐ.ச.ஜெயபாலன் ஆகியோருடன் தமிழகத்தைச் சேர்ந்த கமலஹாசன், அஜித், ரஜ்னி கோத்தாரி, வள்ளுவன் வாலாம்பாள், கே.வி.சுப்பண்ணா, கோமல் சுவாமிநாதன், அசோகமித்திரன், சிட்டி, சோ, கலைஞர் கருணாநிதி, யாசின் மாலிக், நெடுமாறன், பிரபஞ்சன், அக்னிபுத்திரன் ஆகியோருடனான சுவையான உரையாடல்கள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன.

5980

கொடுங்கோலன் ஜயவர்த்தனே. எல். கணேசன். தமிழ்நாடு: செவ்வானம் பதிப்பகம், இராம் நகர், தஞ்சாவூர், 1வது பதிப்பு, 1983. (சென்னை 14: நாவல் ஆர்ட் பிரிண்டர்ஸ்).
10 பக்கம், விலை குறிப்பிடப்படவில்லை, அளவு: 18x12.5 சமீ.

28.7.1983 அன்று தமிழக நாடாளுமன்றத்தின் மேலவையில் இலங்கைத் தமிழர் பிரச்சினையில் பாராளுமன்ற உறுப்பினர் எல்.கணேசன் அவர்கள் ஆற்றிய முக்கியமானதொரு உரையின் நூல்வடிவம்.

5981

சந்மார்க்க போதினி: ஒன்பது பாகங்கள் அடங்கியது. ஜீ.சுப்பிரமணியம். சிதம்பரம்: ஜீ.சுப்பிரமணியம், தர்ம பரிபாலகர், சிதம்பரம் நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலை, 1வது பதிப்பு, 1953. (சென்னை: ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் வித்தியாநுபாலன அச்சகம், நெ.300, தங்க சாலை வீதி).
107 பக்கம், விலை: ரூபா 1.25.

நீதிநூல் திரளில் சிலவற்றை ஆராய்ந்து, சாதி, சமய, சாகித்திய சம்பந்தமான பாகங்களை விலக்கி, வகுப்பு வளர்ச்சிக்கு ஏற்றவாறு பொறுக்கியெடுத்து, வகுப்பு முறையில் தொகுத்துப் பிரசுரிக்கப்பட்டுள்ளது. ஆராயப்பட்ட நூல்களாவன: ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரவர்களால் செய்யப்பட்ட பாலபாடம் இரண்டாம் புத்தகமும், அவராலே உரை செய்யப்பட்ட ஆத்திச்சூடி, கொன்றைவேந்தன், வாக்குண்டாம், நல்வழி, நன்னெறி, நாலடியார், நீதிவெண்பா முதலிய நூல்களிலமைக்கப்பட்டிருக்குந் தாற்பரியங்களும், இன்னும் நீதிநெறி விளக்கம், திரிகடுகம், நான்மணிக் கடிகை, சிறுபஞ்ச மூலம், திருக்குறள் முதலிய நூல்களில் சில பாகங்களுமாகும். இந்நூலுக்கான முன்னுரையை அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேராசிரியர் அ.சிதம்பரநாதச் செட்டியார் வழங்கியுள்ளார். (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5982

சிதம்பர சுப்பிரமணியன் புகழ்க் கதம்பம். கி.வா.ஜகந்நாதன் (மூலம்), செ.தனபாலசிங்கன் (பதிப்பாசிரியர்). உரும்பிராய்: சிதம்பர சுப்பிரமணிய சுவாமி கோவில், 1வது பதிப்பு, 1966. (யாழ்ப்பாணம்: ஸ்ரீலங்கா அச்சகம், 234 காங்கேசன்துறை வீதி).
140 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை.

சென்னை 28, காந்தமலை, கல்யாண நகரிலிருந்து, தமிழறிஞர் கி.வா.ஜகந்நாதன் ஈழத்துத் திருத்தலம் ஒன்றின் பேரில் பாடப்பட்ட 1028 பாடல்கள் கொண்ட இத்தொகுப்பில் சிதம்பர சுப்பிரமணியன் உயிர்வருக்க மாலை (120 பாடல்), சேவடி மாலை (100 பாடல்), அபிடேக மாலை (100 பாடல்), அருச்சனை மாலை (100 பாடல்), பழமொழி மாலை (100 பாடல்), தூது மாலை (100 பாடல்), இருசீர் அந்தாதி (100 பாடல்), முச்சீர் அந்தாதி (100 பாடல்), நாற்சீர் அந்தாதி (100 பாடல்), வெண்பா அந்தாதி (108 பாடல்) ஆகிய தலைப்புக்களின்கீழ் இவை ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன. 1964 டிசம்பரில் தனக்கு வெப்பு நோய் (டைபொயிட்) உண்டாயிற்றென்றும், அக்காலங்களில் படுக்கையில் இருந்தபடியே பல தலங்களுக்கும் சென்று வந்ததாகவும் அக்காலகட்டத்தில் ஈழத்து அன்பர் செ.தனபாலசிங்கனின் வேண்டுகோளின் பேரில் உரும்பராய் சிதம்பர சுப்பிரமணியன் பேரில் பாடப்பட்ட பாடல்கள் இவை என்றும் கி.வா.ஜகந்நாதன் அவர்கள் குறிப்பிட்டுள்ளார். (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

5983

சேது கால்வாய்: ஒரு பார்வை. கே.எஸ்.இராதாகிருஷ்ணன். சென்னை 600041: பொதிகை-பொருநை-கரிசல், 4/359 ஸ்ரீ சைதன்ய அவென்யூ, பாலவாக்கம், 1வது பதிப்பு, 2005. (சென்னை 600015: வைகை பிரின்டர்ஸ் அன் பப்ளிஷர்ஸ்).
80 பக்கம், விலை: இந்திய ரூபா 30., அளவு: 21.5x14 சமீ.

உயர் நீதிமன்ற வழக்கறிஞரான கே.எஸ்.இராதாகிருஷ்ணன், தமிழ்நாடு கோவில்பட்டி அருகில் உள்ள குருஞ்சாக்குளம் கிராமத்தில் பிறந்தவர். 1860ம் ஆண்டு வகுக்கப்பட்ட சேது கால்வாய் திட்டம் பற்றிய வரலாற்று நோக்காக இந்நூலை இவர் எழுதியிருக்கிறார். 150 ஆண்டுகளுக்குப் பின்னர் 2500 கோடி ரூபா செலவில் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ள சேது கால்வாய்த் திட்டத்தின் பின்புலம் பற்றிய பல அடிப்படைத் தகவல்களை இந்நூல் வழங்குகின்றது. இலங்கைக்கும் இந்தியாவின் தென் பகுதிக்கும் இடையே மேற்கொள்ளப்படவிருக்கும் இப்பாரிய திட்டத்தின் அரசியல், பொருளாதார பின்புலங்கள் பற்றிய ஆய்வினை மேற்கொள்பவர்களுக்கு இந்நூல் ஒரு மூலாதார நூலாகப் பயன்படும்.

5984

சொல்லப்படாத உலகம். யமுனா ராஜேந்திரன். சென்னை 600116: அம்ருதா பதிப்பகம், எண் 5, 5ஆவது தெரு, S.S.அவென்யூ, சக்தி நகர், போரூர், 1வது பதிப்பு, 2006. (சென்னை 600083: ஸ்ரீ விக்னேஷ் பிரின்ட்ஸ்).
108 பக்கம், விலை: இந்திய ரூபா 60., அளவு: 21.5x14 சமீ.

தமிழர் வாழ்வு பற்றிய நம்பிக்கையைச் சொல்வதாகவும், மாற்றுச் சினிமாவுக்கான வேர்களையும், கூறுகளையும் தன்னுள் சுமந்து நிற்கின்றவையாகவும் காணப்படுகின்ற குறும்படங்கள், விவரணப்படங்கள் ஆகியவற்றைப் பற்றிய தனது கருத்துக்களை இந்நூலில் விளக்குகின்றார். தமிழகத்திலும், ஈழத்திலும், புகலிட நாடுகளிலும் தயாரிக்கப்பட்டு பேசப்பட்ட முக்கியமான பல குறும்படங்களை ஒரு இரசிகனாகவும், விமர்சகனாகவும் நின்று நுணுக்கமாக இக்கட்டுரைகளில் ஆராய்ந்திருக்கிறார். தமிழகத்தைச் சேர்ந்த ஜமுனா இராஜேந்திரன், புலம்பெயர்ந்து லண்டனில் வாழ்கின்றவர். ஈழத்தமிழர்களுடன் நெருங்கிய கலை இலக்கியத் தொடர்புகளைப் பேணிவருபவர்.

5985

தம்பி. ஓவியர் நடராசா. சென்னை 14: நக்கீரன் பப்ளிக்கேஷன்ஸ், 105, ஜானி ஜான்கான் ரோடு, 1வது பதிப்பு, 2009. (சென்னை 14: சாருப்ரபா பிரிண்டர்ஸ்).
72 பக்கம், புகைப்படங்கள், விலை: இந்திய ரூபா 50., அளவு: 21.5x14 சமீ.

விடுதலைப்புலிகள் இயக்கத்துடன், குறிப்பாக தலைவர் பிரபாகரனுடன் நெருங்கிப்பழகும் வாய்ப்பினைப் பெற்றவர் தமிழகத்தின் மதுரையைச் சேர்ந்த அமரர் ஓவியர் நடராசா. விடுதலைப் புலிகள் இயக்கத்தின் புலிச்சின்னத்தை வரைந்துகொடுத்தவரும் இவரே. தனது பார்வையில் விடுதலைப் போராட்டத்தையும், விடுதலைப் புலிகளையும் அதன் தலைமைத்துவத்தையும் பற்றிய உணர்வலைகளை இந்நூலில் விரிவாகப் பதிவுசெய்கின்றார். அவரது பேட்டி, மற்றும் அனுபவக் குறிப்புகளிலிருந்து இந்நூல் நக்கீரன் கோபால் அவர்களால் வடிவமைக்கப்பெற்றுள்ளது.

5986

தமிழர் வாழும் அண்டை நாடுகளில் தமிழ்க் கல்வி. தி.முருகரத்தனம். தஞ்சாவூர்: தமிழ்ப் பல்கலைக்கழகம், 1வது பதிப்பு, ஜுன் 1986. (தஞ்சாவூர்: தமிழ்ப் பல்கலைக்கழக மறுதோன்றி அச்சகம்).
(6), 188 பக்கம், விலை: இந்திய ரூபா 57., அளவு: 21X14.5 சமீ.

தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் 57ஆவது வெளியீடாக வெளிவந்துள்ள இந்நூலின் ஆசிரியர் முனைவர் தி.முருகரத்தனம் தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் விரிதமிழ் இயக்குநரும், பின்னாளில் மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தின் தமிழ்ப் பேராசிரியராக விளங்கியவருமாவார். இந்நூலின் முதல் 76 பக்கங்களிலும் இலங்கையும், பக்கம் 77 முதல் 109 வரை சிங்கப்பூரும், பக்கம் 110 முதல் 184 வரை மலேசியாவுமாக மூன்று நாடுகளிலும் இடம்பெறும் தமிழ்க் கல்வித்துறைசார் முயற்சிகள் விரிவாக பதிவுசெய்யப்பட்டுள்ளன. இலங்கையில் திரு. தி. முருகரத்தனம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தரான பேராசிரியர் சு.வித்தியானந்தன் உள்ளிட்ட பல தமிழறிஞர்களைச் சந்தித்து உரையாடியது பற்றி குறிப்பிட்டுள்ளார். (இந்நூல் School of Oriental and African Studies (SOAS), University of London நூலகத்தில் பார்வையிடப்பட்டது. பதிவிலக்கம் 568748).

5987

தலைவன்: ஓர் இனப்போராட்டத்தின் எழுச்சிமிகு வரலாறு. ஆதனூர் சோழன். சென்னை 14: நக்கீரன் பப்ளிக்கேஷன்ஸ், 105, ஜானி ஜான்கான் ரோடு, 1வது பதிப்பு, 2009. (சென்னை 14: சாருப்ரபா பிரிண்டர்ஸ்).
256 பக்கம், புகைப்படங்கள், விலை: இந்திய ரூபா 120., அளவு: 21.5x14 சமீ., ISBN: 978-81-906346-1-8.

“ஏழு நாடுகளின் உதவியுடன் ஒரு இனத்தை முற்றிலுமாக அடையாளம் இல்லாமல் அழிக்கும் முயற்சியில் முதற்கட்டமாக வெற்றிபெற்றிருக்கிறது இலங்கை. தந்தை செல்வாவின் தலைமையில் அரசியல் ரீதியாக தமிழீழத் தனியரசு அமைக்கும் போராட்டம் தொடங்கப்பட்டது. அது நிறைவேறவில்லை. பிரபாகரன் தலைமையில் ஆயுதமேந்திய போராட்டம் நடைபெற்று வந்தது. அதுவும் முடிவுக்கு வந்துவிட்டதாக இலங்கை அரசு கூறுகின்றது. அது நிஜம்தானா என்கிற கேள்விக்கு பதில்காணும் நோக்கில் இந்த நூல் விஷயங்களை அலசுகின்றது. ஈழப்போரின் வேர்கள் எங்கிருந்து தொடங்குகின்றன? ஒன்றுபட்ட இலங்கை என்று கூப்பாடு போடுகிறவர்களின் வாதம் நியாயமா? அதற்கு ஏதேனும் ஆதாரம் இருக்கிறதா? என்ற கேள்விகளுக்கு இந்நூல் விடையளிக்கும் என்று நம்புகின்றேன்” – ஆதனூர் சோழன்.

5988

தூக்குக் கொட்டடியிலிருந்து ஒரு முறையீட்டு மடல். அ.ஞா.பேரறிவாளன். (மூலம்), கோ.மோகன் (தொகுப்பாசிரியர்). தமிழ்நாடு: திருவள்ளுவர் பெரியார் மானுட ஒன்றியம், 11, கே.கே.தங்கவேல் தெரு, பெரியார் நகர், சோலையார் பேட்டை 635 851, 4வது பதிப்பு, மார்ச் 2007, 1வது பதிப்பு, ஜுலை 2006, (சென்னை 2: ஆவல் வடிவமைப்பு).
176 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22x14 சமீ.

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டு தூக்குத்தண்டணைக் கைதியாக வேலூர் சிறையில் இருக்கும் அ.ஞா.பேரறிவாளன் தன் மேல் சுமத்தப்பட்ட குற்றத்திற்கு எதிராக முன்வைத்த முறையீட்டு மனுவைப் பிரதானமாகவும், பொதுவாக இந்தியாவில் தூக்குத் தண்டனைக்கு எதிரான பிரச்சாரமாகவும் இந்நூல் வெளிவந்துள்ளது. நீதியரசர்களான வி.ஆர்.கிருஷ்ணய்யர், எச்.சுரேஷ், மற்றும் அரசியல் தலைவர்களான பழ.நெடுமாறன், மருத்துவர் இராமதாஸ், வைகோ, தா.செ.மணி, சுப வீரபாண்டியன் உள்ளிட்ட 11 பேரின் அணிந்துரைகள் இந்நூலில் இடம்பெறுகின்றன. கவிஞர் காசி ஆனந்தனின் கவிதையொன்றும், பின்னிணைப்பாக பணிவன்புடன் ஒரு மீளாய்வு மடல், தீர்ப்பில் முரண்பாடுகள் ஆகிய இரண்டு கட்டுரைகளும் இடம்பெறுகின்றன. இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் கொலை பற்றிய பல்வேறு விடயங்களையும் கருத்துகளையும் இந்நூல் பதிவுசெய்துள்ளது.

5989

பன்னாட்டுத் தமிழரும் பண்பாடும். இராசு பவுன்துரை (தொகுப்பாசிரியர்). தஞ்சாவூர் மாவட்டம்: காந்தி பதிப்பகம், 1/86, வடக்குத் தெரு, நாட்டுச் சாலை, 614906, பட்டுக்கோட்டை வட்டம், 1வது பதிப்பு, டிசம்பர் 2001. (சென்னை 14: ஜெம் ஆப்செட்).
192 பக்கம், விலை: இந்திய ரூபா 60., அளவு: 21.5x14 சமீ.

ஈழத்து எழுத்தாளர் இராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம் அவர்களின் படைப்புலகம் குறித்ததான இக்கட்டுரைத் தொகுப்பில் அவரது புனைகதைகள் பற்றிய திறனாய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கால ஒழுங்கில் இராஜேஸ் பாலாவின் ஆக்க இலக்கியங்களில் வேறுபட்ட புனைவுகள் இடம்பெற்றிருப்பதை ஆய்வாளர்கள் வெளிப்படுத்துகிறார்கள். இவரது ஆரம்பகாலப் புனைகதைகளில் கல்விபெற்ற, நடுத்தரவர்க்க, மேல்தட்டுப் பெண்களைக் குறித்த புனைவுகள் விரிவாக மேற்கொள்ளப்பட்டுள்ளன. பிற்காலப் புனைவுகளில் ஈழத்தமிழர்கள் சிங்களப் பேரினவாதத்திற்கு எதிராகப் போராடும் பல்வேறு கூறுகளையும் பதிவுசெய்துள்ளார். அகதிகளின் சோகம், போராளிக் குழுக்களின் உள் முரண்பாடு, போரினால் ஏற்பட்ட மனச் சிதைவு என்று பல நிலைகளில் இவரது புனைவுகள் ஆக்கப்பட்டுள்ளதை இக்கட்டுரைகள் புலப்படுத்துகின்றன. லண்டனில் புலம்பெயர்ந்து வாழும் ஈழத்து எழுத்தாளர் ஒருவரின் கடந்த கால் நூற்றாண்டுப் படைப்புலகப் போக்குகளை இத்தொகுப்பு மதிப்பீடு செய்கின்றது. நாளைக்கு இன்னொருத்தன், பனி பெய்யும் இரவுகள், தில்லையாற்றங்கரை, வசந்தம் வந்து போய்விட்டது, உலகமெல்லாம் வியாபாரிகள், அரைகுறை அடிமைகள், தேம்ஸ் நதிக்கரையில், ஒரு கோடை விடுமுறை, அம்மா என்றொரு பெண், ஆகிய கதைகள் பல்வேறு தமிழக ஆய்வாளர்களால் இத்தொகுப்பில் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளன.

5990

பாலமாகி நிற்கும் பணி: எட்டு உரையாடல்கள். யமுனா இராஜேந்திரன். சென்னை 600116: அம்ருதா, எண் 5, 5ஆவது தெரு, எஸ்.எஸ்.அவென்யு, சக்தி நகர், போரூர், 1வது பதிப்பு, 2006. (சென்னை சரவணா கிராப்பிக்ஸ்).
191 பக்கம், விலை: இந்திய ரூபா 100., அளவு: 21.5x14 சமீ.

ஈழத்திலும் தமிழகத்திலும் பிரபல்யமான படைப்பாளிகளுடனானதொரு நேர்காணல் தொகுப்பு. பேராசிரியர் கா.சிவத்தம்பி, ராம் மகாலிங்கம், ஓவியர் புகழேந்தி, பத்மநாப ஐயர், கோவை ஞானி, தியாகு, திலகவதி, அ.சிவானந்தன் ஆகியோருடன் நூலாசிரியர் யமுனா ராஜேந்திரன் மேற்கொண்ட உரையாடல்களின் பதிவு இவை.

5991

பிரபாகரன்: வாழ்வும் மரணமும். பா.ராகவன். சென்னை 600 018: கிழக்கு பதிப்பகம், New Horizon Media Pvt. Ltd, No.33/15, Eldams Road, Alwarpet, 1வது பதிப்பு, மே 2009. (சென்னை 600 018: கிழக்கு பதிப்பகம்).
206 பக்கம், விலை: இந்திய ரூபா 100., அளவு: 21.5x14 சமீ., ISBN: 978-81-8493-150-1.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரனின் மரணம் அவரது வாழ்வைக்காட்டிலும் அதிகம் செய்தியானது. பிரபாகரன் என்னும் ஆளுமையை, அது உருவான விதத்தை, அதன் தாக்கத்தை, விளைவுகளை, சற்றும் நடுநிலை பிசகாமல் அலசி ஆராய்கிறது இந்நூல். ஈழப் போராட்டத்தின் இறுதித் தோல்விகளுக்கான காரணங்களை பிரபாகரன் என்னும் தனிமனிதரின் ஆளுமையை முன்வைத்துக் கண்டறியும் ஒரு முயற்சி இதுவாகும். ஈழப் போராட்டம் வன்னியில் அதன் இறுதிக்கட்டத்தில் இருந்த சமயம் எழுதப்பட்டுக் கொண்டிருந்த இந்நூலின் சில அத்தியாயங்கள் **குமுதம்** வார இதழில் தொடராக (s/o வல்வெட்டித்துறை திருவேங்கிடம் வேலுப்பிள்ளை என்னும் தலைப்பில்) வெளிவந்திருந்தன.

5992

பிரான்சில் அரசியல் புகலிடம். ஆர்.சகாதேவன். பிரான்ஸ்: சிசிலி பதிப்பகம், 1வது பதிப்பு, ஓகஸ்ட் 2000. (சென்னை 600024: மித்ர வெளியீடு, 375/8-10, ஆற்காடு சாலை, கோடம்பாக்கம்).
136 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18x12 சமீ.

பாரிஸ் TRT வானொலியில் **உதவுவோமா** என்ற தலைப்பில் அகதி அந்தஸ்து கோருவோருக்கான சட்ட ஆலோசனை வழங்கும் நிகழ்ச்சியொன்று தொடராக அர்.சகாதேவனால் நிகழ்த்தப்பட்டது. பின்னாளில் அது பாரிஸ்-ஈழநாடு பத்திரிகையில் தொடர்ந்து 19 கட்டுரைகளாகவும் இடம்பெற்றிருந்தது. பிரான்சில் அகதி அந்தஸ்து பெறும் முறைகளும் அகதிகளின் உரிமைகளும் பற்றிய பல்வேறு தகவல்களைத் தரும் இக்கட்டுரைத் தொடரின் நூல்வடிவம் இதுவாகும். நூலாசிரியர் சகாதேவன், இந்தியாவின் சென்னை மாவட்டத்தைச் சேர்ந்தவர். சென்னை லயோலாக் கல்லூரியிலும், சென்னைப் பல்கலைக்கழகத்திலும் உயர்கல்வி பெற்றவர். அகதிகளுக்கான மேன்முறையீட்டுக் குழுவில் மொழிபெயர்ப்பு நிபுணராகப் பணியாற்றி வருகின்றார்.

5993

புதிய காக்கைகளும் பழைய நரிகளும். அறிவுமதி. கிளிநொச்சி: அறிவு அமுது பொத்தகசாலை, பிரதான சாலை, 1வது பதிப்பு, 2002. (யாழ்ப்பாணம் ஹரிஹரணன் பிறிண்டேர்ஸ், 424, காங்கேசன்துறை வீதி).
16 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20x14 சமீ.

தமிழகக் கவிஞர் அறிவுமதியின் பார்வையில் காக்கையும் வடையும் நரியும் சிறுவர் கதை நவீனமயப்படுத்தப்பட்டுள்ளது. காகம் பசிக்கொடுமையிலும் திருடித் தின்னாமல், பாட்டிக்கு சுள்ளிகளைப் பொறுக்கிக் கொடுத்து ஊதியமாக இரண்டு வடைகளைப் பெறுவதும், திருந்தவே திருந்தாத நரியும் அதன் கூட்டத்தினரும் அந்த உழைப்பாளியின் வடையை ஏமாற்றிப் பறிப்பதும், இறுதியில் உழைப்பாளிகள் வர்க்கமான காக்கைக் கூட்டம் மூர்க்கமாக எதிர்த்து நரிகளை மண்டியிடவைத்து இழந்த வடையைத் திரும்பப் பெற்றுத்தருவதுமாக புதிய பார்வையில் கதை நகர்த்தப்படுகின்றது.

5994

பெயல் மணக்கும் பொழுது: ஈழப் பெண் கவிஞர்கள் கவிதைகள். அ.மங்கை (தொகுப்பாசிரியர்). சென்னை 94: மாற்று, இல.1, இந்தியன் வங்கி காலனி, வள்ளலார் தெரு, பத்மநாபா நகர், சூளைமேடு, 1வது பதிப்பு, மே 2007. (சென்னை 15: வைகை பிரிண்டர்ஸ்).
280 பக்கம், விலை: இந்திய ரூபா 130., அளவு: 21.5x14 சமீ.

இது ஒரு ஈழப் பெண் கவிஞர்களின் கவிதைகளின் தொகுப்பு. கண்டங்கள் மாறினாலும் மாறாமல் தொடரும் தந்தைமை ஆதிக்க மதிப்பீடுகள், பல பெண்களது அகவழிப் பயணம், வாக்குமூலங்கள், நாளை

நிச்சயமற்றுப் போனதால் இன்றே காதல்செய்ய வேண்டிய தவிப்பு, அந்தத் தவிப்பிலும் சுயம் இழக்காமல் இருக்க விரும்பும் உறுதி, பெயர் தெரியாத பூக்கள்-மரங்கள் மத்தியில் நகரும் வாழ்க்கை, பெயர் தெரிந்தவை எல்லாம் மாறிப்போன கொடுமை என ஈழத்துப் பெண் கவிஞர்களின் கவிதா உலகம் இத்தொகுப்பில் விரிகின்றது. வெவ்வேறு அரசியல் சார்பும், சிந்தனையும் கொண்டவர்கள் என்ற வகையில் இத்தொகுப்பில் இணையும் இவர்களின் குரல்கள் தமிழக வாசகர்களை ஒரு நூலின் வழி எட்டும் சிறப்பு பெயல் மணக்கும் பொழுதுக்கு உண்டு.

5995

மகாவம்சம். மகாநாம தேரர் (தொகுப்பாசிரியர்), ஆர்.பி.சாரதி (தமிழாக்கம்). சென்னை 600018: கிழக்கு வெளியீடு, New Horizon Media Private Ltd., 33/15, Eldamd Road, Alwarpet, 1வது பதிப்பு, ஜனவரி 2007. (தமிழ்நாடு: அச்சக விபரம் தரப்படவில்லை).
238 பக்கம், விலை: இந்திய ரூபா 100., அளவு: 22x14 சமீ., ISBN: 81-8368-279-0.

இது கி.பி. 5ம் நூற்றாண்டில் மஹாநாம தேரரினால் தொகுக்கப்பட்ட இலங்கையின் பூர்வ வரலாற்றைக் கூறும் நூல். இன்றைய இலங்கையின் இனப்பிரச்சினைகள் அனைத்திற்குமான ஆதி காரணம் இதில் கிடைக்கின்றது. நமக்குப் பெயரளவில் மட்டுமே பரிச்சயமான இலங்கையின் வரலாற்றைச் சொல்லும் மகாவம்சம் பாளி மூலமொழியிலிருந்து ஆங்கிலத்திற்கு மொழிபெயர்க்கப்பட்டதன் தமிழ்வடிவமே இது. பல்வேறு புத்த பிக்குகளால் நாட்குறிப்பு வடிவில் எழுதப்பட்டவை கி.பி. 5ம் நூற்றாண்டில் மகாநாம தேரோவால் முதன்முறையாக நூலாகத் தொகுக்கப்பட்டது. கி.மு. 6ம் நூற்றாண்டு தொடங்கி கி.மு. 4ம் நூற்றாண்டு வரையிலான இலங்கையின் வரலாற்றைச் சொல்லும் மகாவம்சம் சிங்களவர்களின் புனித நூலாகவும், கொண்டாடப்படுகின்றது. அவர்களது ஆதிகால வரலாறு மட்டுமன்றி இலங்கையில் பௌத்த மதத்தின் தோற்றம், வளர்ச்சி குறித்த துல்லியமான மதிப்பீட்டையும் இந்நூல் முன்வைக்கின்றது. இந்திய வரலாற்றின் ஆரம்பகால அத்தியாயங்கள் பலவற்றையும் மகாவம்சத்தில் காணமுடிகின்றது.

5996

மண்ணே, உயிரே...: ஈழப் பயண அனுபவங்கள். அக்கினி. (இயற்பெயர்: வெ.சுகுமார்.). மலேசியா: உமா பதிப்பகம், No.85, Jalan Perhentian, Sentul, 51100, Kuala Lumpur, 1வது பதிப்பு, 2007. (கோலாலம்பூர்: Advanco).
(12), 245 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14 சமீ., ISBN: 978-967-910-518-6.

2002ம் ஆண்டு ஏப்ரல் 10ஆம் திகதி தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் திரு. வே.பிரபாகரனின் அழைப்பினை ஏற்று அனைத்துலக செய்தியாளர் மகாநாட்டுக்குச் சென்று வந்தவர் அக்கினி. அவரது பயண அனுபவம் இந்நூலில் புகைப்பட ஆதாரங்களுடன் விரிகின்றன. ஈழ மண்ணின் தாகங்கள், உரிமைப் போரின் தாக்கங்கள், தமிழரின் உயிர்த் தியாகங்கள், தமிழ் மண்ணின் சோகங்கள், என பக்கம் தோறும் எளிய தமிழ்நடையில் இந்நூலில் பதிவாகியுள்ளன. அக்கினியுடன் கூடவே பயணித்த புகைப்படப்பிடிப்பாளர் பி.மலையாண்டியின் ஏராளமான புகைப்படங்கள் நூலுக்கு அதிக கனதியைத் தருகின்றன. மக்கள் ஓசை பத்திரிகையில் தொடராகப் பிரசுரமானது. பத்திரிகையாளர் அக்கினி, 1970களில் தமிழ் மலரில் ஆசிரியர் பிரிவில் ஊழியராகச் சேர்ந்த அக்கினி புதுக்கவிதைத்துறையினூடாக 1973இல் மலேசிய இலக்கியத்துக்குள் நுழைந்தவர். கவிதையுடன், கட்டுரை, சிறுகதை என்று தொடர்ந்தவர். வானம்பாடி, தமிழ் ஓசை, மலேசிய நண்பன், மக்கள் ஓசை என்று பல மலேசிய ஊடகங்களிலும் பணியாற்றியவர்.

5997

விடுதலைப் புலிகள். மருதன். சென்னை 600 018: கிழக்கு பதிப்பகம், New Horizon Media Pvt. Ltd, No.33/15, Eldams Road, Alwarpet, 1வது பதிப்பு, டிசம்பர் 2007. (சென்னை 600 018: கிழக்கு பதிப்பகம்).
207 பக்கம், விலை: இந்திய ரூபா 90., அளவு: 21.5x14 சமீ., ISBN: 978-81-8368-638-9.

விடுதலைப் புலிகள் இயக்கம், அதனை உருவாக்கிய தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன், இலங்கையில் கடந்த பல ஆண்டுகளாக நடந்துவரும் மொழி/இனப் போரின் பின்னணி, இந்தியாவின் தலையீடு எனப் பலவற்றையும் தொகுத்து புரியும் வகையில் எளிமையாகத் தருகின்றது இந்நூல்.

5998

விடுதலைப் புலிகளின் வீரவரலாறு: சிறப்பு மலர். மலர்க்குழு. தமிழ்நாடு: விடுதலைப் புலிகள் தோழமைக் கழகம், 1வது பதிப்பு, 1985. (தமிழ்நாடு: அச்சக விபரம் தரப்படவில்லை).
(40) பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x15 சமீ.

விடுதலைப் புலிகள் அமைப்பின் ஆரம்பகால வரலாற்றைக் குறிக்கும் பத்திரிகைச் செய்திகள், குறிப்புகளின் தொகுப்பாக தமிழகத்திலிருந்து இம்மலர் வெளியிடப்பட்டுள்ளது. யாழ்ப்பாணத்தில் திருநெல்வேலிப் பகுதியில் நடைபெற்ற இராணுவத் தொடரணித் தாக்குதல், ஆரம்பகாலக் கொலைகள், பற்றியும், போராட்டத்தின் வளர்ச்சியைப் பற்றிய செய்திகளுமாக இவ்வாவணம் தமிழ்நாட்டில் தொகுக்கப்பட்டுள்ளது.

5999

வீரம் விளைந்த ஈழம். அருட்தந்தை ஜெகத் கஸ்பார். சென்னை 14: நக்கீரன் பப்ளிக்கேஷன்ஸ், 105, ஜானி ஜான்கான் ரோடு, 1வது பதிப்பு, 2009. (சென்னை 14: சாருப்ரபா பிரிண்டர்ஸ்).
200 பக்கம், புகைப்படங்கள், சித்திரங்கள், விலை: இந்திய ரூபா 150., அளவு: 21.5x14 சமீ., ISBN: 978-81-906346-0-1.

தமிழகத்தின் நக்கீரன் இதழ்களில் "மறக்க முடியுமா" என்ற பகுதியில் தான் எழுதிய கட்டுரைகளைத் தொகுத்து இந்நூலை வெளியிட்டிருக்கிறார். தனது பின்புலம் பற்றிய எளிய அறிமுகத்துடன் தொடங்கும் கஸ்பார், ஈழப்பிரச்சினை மீது தனக்கு அக்கறை ஏற்பட்டதன் பின்னணியை விபரித்துச் செல்கிறார். உயிரும் ரத்தமும் சதையும் வேதனைக் குரல்களும் நிறைந்த விரமிகு தியாகப் போராட்டத்தின் பதிவுகளான வரலாற்று ஆவணம் இது.

6000

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் 125ஆவது ஆண்டு நினைவு விழாமலர். இரா.செல்வ கணபதி (பதிப்பாசிரியர்). அவுஸ்திரேலியா: தமிழ்ச் சங்கம், மெல்பர்ண், 1வது பதிப்பு. 2004. (மயிலாடுதுறை: பரணி ஆப்செட் பிரிண்டர்ஸ்).
88 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14 சமீ.

ஈழத்திற்கும் தமிழகத்துக்கும் இடையே கலாச்சாரப் பாலம் அமைத்த தமிழ்ச் சித்தராக யாழ்ப்பாணம், நல்லூர், ஆறுமுக நாவலர் நோக்கப்படுகின்றார். அவரது 125ஆவது ஆண்டு நிறைவினையொட்டி 04.12.2004 அன்று தமிழகத்தில் இடம்பெற்ற விழாவொன்றில் இம்மலர் வெளியிடப்பட்டது. தமிழக அறிஞர்களின் பார்வையில் ஆறுமுகநாவலர் எவ்வாறு சித்திரிக்கப்படுகின்றார் என்பதற்கு இதிலுள்ள கட்டுரைகள் ஆதாரமாகின்றன.

மேலும் பார்க்க: 5169

பின்னிணைப்பு

இப்பிரிவில் உள்ள நூல்கள் ஏற்கெனவே நூல்தேட்டம் முன்னைய தொகுதிகளில் பதியப்பெற்றவை. மூலநூற்பதிவுக்குப் பின்னர் வெளியாகிய திருத்திய பதிப்புக்களை ஆவணப்படுத்தும் நோக்கில் இத்தொகுதியின் கீழுள்ள நூல்கள் இடம்பெறுகின்றன. அடைப்புக்குறிக்குள் இந்நூல்களுக்கான நூல்தேட்டத்தின் முன்னைய பதிவிலக்கங்கள் தரப்பட்டுள்ளன. இவற்றுக்குத் தனியான நூல்தேட்டம் தொடரிலக்கம் வழங்கப்படவில்லை.

6 A 01

அகதி: நெடுங்கவிதை. nfsup. fdlh: Social Research Circle, 31, St Dennis Drive, #718, Don Mills, M3C 1G7, Ontario, 1tJ gjpg;G> Vg;uy; 1991. (fdlh: Reflex Printing, 1108 Bay street, Toronto, Ontario M5S 2W9)
90 gf;fk;> tpiy: fNdba nlhyu; 3.> msT: 17x12 rkP.

புலம் பெயர்ந்த இளம் தமிழன் ஒருவனின் துன்பியல் வாழ்வு இந்த நெடுங்கவிதையில் விரிகின்றது. உயிர்ப் பாதுகாப்பு, பொருளாதார வசதி, போலி அந்தஸ்து, இப்படிப் பல்வேறு காரணங்களுக்காகப் புலம் பெயர்ந்து சென்று அந்நிய தேசமொன்றில் அடைக்கலம் தேடும் ஈழத்தமிழனின் கனவுகள், உண்மையில் நிஜமாகின்றனவா என்ற கேள்வியை சுயசித்திரமான இந்நெடுங்கவிதை எழுப்புகிறது. சிங்கள அரசு பற்றிய, அந்த அரசை எதிர்க்கும் போராளிக் குழுக்கள் பற்றிய, உலகைப் பல நாடுகளாகப் பிரித்து எல்லைகளை மாற்றி அமைத்த சர்வதேச அரசியல் பற்றியெல்லாம் இந்நூல் பேசுகின்றது. (முன்னைய பதிவிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 499).

6 A 02

அடங்காப்பற்று (வன்னி) வரலாறு: பாகம் 2: பண்டாரவன்னியன் (கி.பி.1750-1811). அருணா செல்லத்துரை. கொழும்பு 8: அருணா வெளியீட்டகம், ஏ 15, 1/1, மனிங் ரவுண் வீடமைப்புத் திட்டம், மங்கள வீதி, 2வது பதிப்பு, 2006, 1வது பதிப்பு, 2002. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ் பிரைவேட் லிமிட்டெட், 48B, புளுமெண்டால் வீதி).
xviii, 155 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 22X14.5 சமீ., ISBN: 955-96159-5-5.

இலங்கையின் வடபகுதியில் வடக்கே ஆனையிரவு பரவைக்கடலையும் தெற்கே நுவரகலாவிய மாவட்டத்தையும், கிழக்கே முல்லைத்தீவுக் கடலையும், மேற்கே மன்னார் கடலையும் எல்லைகளாகக் கொண்டது அடங்காப்பற்றுப் பிரதேசம். இப்பிரதேசம் பற்றிய சரித்திர வரலாறுகள் மிகவும் குறைவான நிலையில், அடங்காப்பற்று வன்னியில் கி.பி.1750ம் ஆண்டுக்குப் பின் இடம்பெற்ற வரலாற்றுச் சம்பவங்கள், தமிழ் ஆங்கில டச்சு நூல்களிலிருந்தும் அறிக்கைகளிலிருந்தும் எடுத்துத் தொகுத்து இங்கு ஆவணமாக்கியிருக்கின்றார் நூலாசிரியர். இந்நூலின் முதலாவது பதிப்பு **அடங்காப்பற்று பண்டார வன்னியன் வரலாறு கி.பி. 1750-1895** என்ற தலைப்பில் முன்னதாக 2002இல் வெளிவந்திருந்தது. (முன்னைய பதிவிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 1966).

6 A 03

இரு மகாகவிகள். க.கைலாசபதி. சென்னை 2: N.C.B.H.Private Ltd., 6 நல்லதம்பி செட்டித் தெரு, மவுண்ட் ரோடு, 1வது பதிப்பு, செப்டெம்பர் 1962. (சென்னை 1: ஜனசக்தி பிரஸ், 32 பிராட்வே).
114 பக்கம், விலை: ரூபா 1.50.

ஒப்பியல் இலக்கிய ஆய்வின் தொடக்க முன்னோடிகளில் ஒருவரான பேராசிரியர் க. கைலாசபதியின் முதலாவது ஒப்பியல் ஆய்வு முயற்சி. பாரதியையும் இரவீந்திரநாத் தாகூரையும் ஒப்பிட்டு இரு கவிஞர்களுடைய கவிதைகளையும் ஆராய்ந்து எழுதப்பட்ட நூல் இதுவாகும். இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வங்கத்தில் தோன்றி, பின்னர் நாடு முழுவதும் பரவிய தேசிய எழுச்சியாலும், தேசிய மறுமலர்ச்சியாலும் இவ்விருவருமே ஆகர்ஷிக்கப்பட்டவர்கள். அதனால் தேசிய கவிஞர்களாக மலர்ந்தவர்கள். உலகம் தழுவிய மனிதாபிமானத்தை இருவருமே வெளியிட்டாலும், பாரதியின் மனிதாபிமானம் உணர்வு தழுவியதாகவும், தாகூரின் மனிதாபிமானம் அறிவுபூர்வமானதாகவும் இருந்தது. அப்பழுக்கற்ற தாய்மொழிப் பற்றுக்கொண்ட இரு மகா கவிகள் பற்றிய இவ்வாய்வு சுவையான பல தகவல்களை சிந்தனைக்கு உட்படுத்துகின்றது. (பின்னைய பதிப்பிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 4701). (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

6 A 04

இலக்கிய உலகம். வி.கந்தவனம். கொழும்பு 13: அரசு வெளியீடு, 231 ஆதிருப்பள்ளித் தெரு, 1வது பதிப்பு, டிசம்பர், 1964, (கொழும்பு 13: ரெயின்பொ பிரிண்டர்ஸ்).
68 பக்கம், விலை: ரூபா 1.40, அளவு: 20X13.5 சமீ.

இலங்கை எழுத்தாளர்கள் அனைவரும் ஒன்றுபட்டுத் தமிழ் மரபு பிறழாதவாறு இலக்கியங்கள் பலவற்றை இயற்றித் தமிழையும் தமிழ் இலக்கியத்தையும் இலங்கையில் மேன்மையுறச்செய்யவேண்டும் என்ற கருத்தை சீரிய ஓசைச் சிறப்புள்ள செய்யுள்களின் வழியாக இந்நூலில் வலியுறுத்தியுள்ளார். முதலாவது பகுதியில் இலக்கியம் என்றால் என்ன, அது ஏன் யாரால் எங்கே எப்போது எப்படிப் பிறக்கின்றது என்று மரபுக்கவிதைகளின் வடிவில் விளக்குகின்றார். இரண்டாவது பகுதியில் மரபு என்றால் என்ன? மரபை மீற வேண்டுமா? புதுமை வேண்டும், இரவல் புதுமையாகாது, புதியது மரபிலிருந்தே வந்திட வேண்டும் ஆகிய தலைப்புகளில் தனது கருத்தை கவிதையுருவில் தருகிறார். மூன்றாவது பிரிவில் ஆற்றல் இல்லையென்று

காட்டுவதேன்? நல்லறிவாண்மை இருக்கிறதா? நிலையான இலக்கியம் வேண்டும், பயனிலக்கியம் படையும், தனித்துவம் வேண்டும், பெரியோர், செந்தமிழ் எழுதுக, ஒற்றுமை வேண்டும் இலக்கியத்தைச் சமைத்துத் தாரும் ஆகிய தலைப்புகளினூடாகத் தன் கவிவரிகளால் இலக்கிய உலகம் பற்றித் தனது கருத்துக்களை விதைத்துச்செல்கிறார். நான்காவது பிரிவில் ஈழத்து மக்களே, மதிப்புடன் சுவைப்பவர் வேண்டும், கொள்கையற்றோர் படைப்பைப் படித்துப் பயனென்ன, இலக்கிய உலகம் ஆகிய தலைப்புகளில் தன் கருத்தை கவிதையாக்கியிருக்கிறார். மொத்தம் 24 தலைப்புகளில் இவரது மரபுக்கவிதைகளினூடாக ஒரு இலக்கிய உலகம் இந்நூலில் விரிகின்றது. (பின்னைய பதிப்பிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 2476) (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

6 A 05

இலக்கிய வழி. சி.கணபதிப்பிள்ளை. உரும்பிராய்: திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலை, பழைய மாணவர் சங்கம், 2வது திருத்திய பதிப்பு, 1964. (சுன்னாகம்: திருமகள் அழுத்தகம்)
195 பக்கம், விலை: ரூபா 3.00. அளவு: 18x13 சமீ.

பண்டிதமணி அவர்களின் சமயச் சொற்பொழிவுகளும் கட்டுரைகளும் தொகுக்கப்பெற்று ***சமயக் கட்டுரைகள்*** என்ற பெயரில் வெளிவந்திருந்தது. அதன் திருத்தப் பதிப்பாக, இலக்கியக் கட்டுரைகளும் சேர்க்கப்பட்டு இருபது கட்டுரைகளுடனும் இரசனைக் குறிப்புகளுடனும் இலக்கியவழி என்ற பெயரில் நூலுருவில் வெளிவந்துள்ளது. (பின்னைய பதிப்பிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 741) (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம்.அலி, கொழும்பு 14).

6 A 06

இலங்கையின் அரசியல் யாப்புகள். rp.m.Nahjpypq;fk;. nfhOk;G 12: Fkud; Gj;jf ,y;yk;> 210 lhk; tPjp> 2tJ gjpg;G> 2004> 1tJ gjpg;G> 1999. (nfhOk;G 12: Fkud; mr;rfk;> 210 lhk; tPjp). xiv> 242 gf;fk;> tpiy: Fwpg;gplg;gltpy;iy> msT: 22x15 rkP.> ISBN: 955-9429-49-3.

இன்று இலங்கை அரசியல் யாப்பு மாற்றங்களை வேண்டிநிற்கின்ற காலத்திலிருப்பதால், அரசறிவியல் கற்கும் மாணவர்கள் மட்டுமின்றி அரசியல்வாதிகள், சாதாரண பொதுமக்கள் என்போரும் இலங்கையின் யாப்புகளை அறிந்திருக்கவேண்டிய கட்டாயம் உள்ளது. இந்த வகையில் இந்நூல் மாணவர்களை மட்டுமல்லாமல், அரசியல் யாப்பு அறிவின் தேவையை வேண்டி நிற்கின்ற அனைவருக்கும் உதவும். இந்நூலில் அரசியல் யாப்புகள் பற்றிய அறிமுகம், இலங்கையின் அரசியல் வரலாற்றுப் பின்னணி, கோல்புறூக் அரசியல் சீர்திருத்தம், குறுமக்கலம் அரசியல் சீர்திருத்தம், 1912இலிருந்து 1920 வரை இலங்கையின் அரசியல் நிலை, மனிங் அரசியல் சீர்திருத்தம், மானிங்-டிவன்சயர் அரசியல் சிர்திருத்தம், டொனமூர் அரசியல் யாப்பு, சோல்பரி அரசியல் யாப்பு, முதலாவது குடியரசு அரசியல் யாப்பு, 2ஆவது குடியரசு அரசியல் யாப்பு, 1978ஆம் ஆண்டின் குடியரசு யாப்பில் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்கள், அரசியல் அமைப்பிற்கான 17ஆவது திருத்தம் ஆகிய பகுதிகளை உள்ளடக்கியது. யாழ். மாவட்டத்தின் குப்பிளானைப் பிறப்பிடமாகக்கொண்ட ஆசிரியர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் அரசறிவியல் துறையில் சிறப்பு கலைமாணிப் பட்டத்தைப் பெற்றவர். கொட்டாஞ்சேனை நல்லாயன் கன்னியர் மடத்தில் ஆசிரியராகப் பணியாற்றுகிறார். (முன்னைய பதிவிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 183).

6 A 07

ஈழத்து தமிழ்ச் சிறுகதை வரலாறு. செங்கை ஆழியான் (இயற்பெயர்: க.குணராசா). கொழும்பு 11: சேமமடு பொத்தகசாலை, U G 50, People's Park, 2வது பதிப்பு, 2009, 1வது பதிப்பு, டிசம்பர் 2001. (கொழும்பு 12: சேமமடு பதிப்பகம், பீப்பிள்ஸ் பார்க்).
272 பக்கம், விலை: ரூபா 500., அளவு: 21 x14.5 சமீ., ISBN: 978-955-1857-49-3.

ஈழத்துச் சிறுகதைகள் சரியான வடிவமைப்பில் எழுதத் தொடங்கிய 1930களின் பிற்பகுதியிலிருந்து 2001ம் ஆண்டு வரை வெளிவந்த பத்திரிகைகள், சஞ்சிகைகளில் வெளிவந்த 800 வரையிலான சிறுகதைகளையும் வாசித்து, சுமார் 274 சிறுகதைத் தொகுதிகளையும் 400 சிறுகதைப் படைப்பாளிகளையும் கணிப்பீடு செய்து ஒரு பாரிய நூலை ஈழத்துச் சிறுகதை வரலாற்றுக்குத் தந்திருக்கிறார். சமுதாய சீர்திருத்தக்காலம் (1930-49), முற்போக்குக்காலம் (1950-60), புத்தெழுச்சிக்காலம் (1961-83), தமிழ்த் தேசிய உணர்வுக்காலம் (1983-) என நான்கு பெரும்பிரிவாக வகுத்து சிறுகதைகளை நூலாசிரியர் மதிப்பீடு செய்துள்ளார். 2001வரை ஈழத்தில் வெளிவந்த சிறுகதைத் தொகுதிகளின் பெயர்கள் ஆண்டுவாரியாகப் பட்டியலிட்டு பின்னிணைப்பாகத் தரப்பட்டுள்ளது. இந்நூலின் முதலாவது பதிப்பு, மூதறிஞர் தி.ச.வரதராஜன் (வரதர்)

அவர்களின் பவளவிழா நினைவாக **ஈழத்துச் சிறுகதை வரலாறு** என்ற தலைப்பில் வெளிவந்துள்ளது. (முன்னைய பதிவிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 1775).

6 A 08

ஈழத்துச் சித்தர்கள். eh.Kj;ijah. rhtfr;Nrup: Mj;kN[hjp epiyak;> FU gtdk;> fz;b tPjp> 2tJ gjpg;G> Vg;uy; 1988> 1tJ gjpg;G> brk;gu; 1980. (Vohiy: k`hj;kh mr;rfk;).
129 gf;fk;> tpiy: &gh 18.> msT: 21.5x14 rkP.

fle;j fhyq;fspy; <oj;jpy; tho;e;j gjpdhW <oj;Jr; rpj;ju;fis ,e;E}y; mwpKfg;gLj;Jfpd;wJ. கடையிற் சுவாமிகள், பரமகுரு சுவாமிகள், குழந்தைவேற் சுவாமிகள், அருளம்பல சுவாமிகள், யோகர் சுவாமிகள், நவநாத சித்தர், பெரியானைக்குட்டி சுவாமிகள், சித்தானைக்குட்டி சுவாமிகள், சடைவரத சுவாமிகள், ஆனந்த சடாட்சர குரு, செல்லாச்சி அம்மையார், தாளையான் சுவாமிகள், மகாதேவ சுவாமிகள், சடையம்மா, நாகநாத சித்தர், நயினாதீவுச் சுவாமிகள் ஆகிய 16 சித்தர்கள் பற்றிய விரிவான வாழ்க்கை வரலாறு கட்டுரைவடிவில் இடம்பெற்றுள்ளன. இந்நூல் 1980ம் ஆண்டுக்குரிய சாகித்திய மண்டலப் பரிசினைப் பெற்றது. (இது பின்னாளில் ஜுன் 1994இல் சென்னை குமரன் பதிப்பகத்தினரால் முதற்பதிப்பாக வெளியிடப்பட்டுமுள்ளது. முன்னைய பதிவிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 855).

6 A 09

எம்.சி. ஒரு சமூக விடுதலைப் போராளி. எஸ்.சந்திரபோஸ் (தொகுப்பாசிரியர்). சென்னை 600024: மித்ர ஆர்ட்ஸ் அன் க்ரியேஷன்ஸ், 32/9, ஆற்காடு சாலை, கோடம்பாக்கம், 1வது பதிப்பு, மே 2008. (சென்னை 600024: மித்ர ஆர்ட்ஸ் அன் க்ரியேஷன்ஸ், 32/9, ஆற்காடு சாலை, கோடம்பாக்கம்).
296 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22x14.5 சமீ., ISBN: 81-89748-43-2.

எம்.சி.சுப்பிரமணியம் அவர்களின் வாழ்வும் பணியும் இந்நூலின் கட்டுரைகளின் வழியாகப் பதிவுசெய்யப்பட்டுள்ளன. சிறுபான்மைத் தமிழர்கள் நடத்திய போராட்டங்களில் எம்.சியின் பங்கும் பணியும், அவர் இணைந்து செயலாற்றிய ஸ்தாபனங்களின் செயற்பாடுகளும், அதனால் வென்றெடுக்கப்பட்ட சாதனைகளும் முப்பத்தைந்து கட்டுரைகளில் பல்வேறு துறைசார் அறிஞர்களால் ஆய்வுக்குட்படுத்தப்பட்டுள்ளன. அவ்வப்போது வெளியான பத்திரிகைச் செய்திகள் சிலவும், அகில இலங்கைச் சிறுபான்மைத் தமிழர் மகாசபையின் ஆண்டு மலரில் பிரசுரமான தலைமை உரையும், செயலாளர்களின் அறிக்கையும் மறுபிரசுரமாகியுள்ளன. பிரபல படைப்பாளி கே.டானியல் மறைந்தபோது எம்.சி.அவர்களால் ஈழநாடு பத்திரிகையில் எழுதப்பட்ட கட்டுரையும் சேர்க்கப்பட்டுள்ளது. எம்.சியின் நினைவஞ்சலியாகப் பிரசுரமான கவிதைகள் சிலவும் அநுபந்தத்திலே சேர்க்கப்பட்டுள்ளன. எம்.சி.அமரரான 10ஆம் ஆண்டின் நினைவாகத் தொகுத்து 1999இல் வெளியிடப்பட்ட **எம்.சி.ஒரு சமூக விடுதலைப் போராளி** (நூல்தேட்டம் பதிவிலக்கம் 2825) என்ற நூலின் விரிவான திருத்திய பதிப்பு இதுவாகும். மூல நூலில் 15 கட்டுரைகளே இடம்பெற்றிருந்தன.

6 A 10

கல்வி நிறுவன நூலகங்கள். விமலாம்பிகை பாலசுந்தரம். கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், 361, 1/2, டாம் வீதி, 2வது பதிப்பு, 2009, 1வது பதிப்பு, 1987. (கொழும்பு 12: குமரன் பிரின்டர்ஸ், 361, 1/2, டாம் வீதி).
xii, 84 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-955-659-143-9.

ஆரம்பப் பாடசாலைகள், கனிஷ்ட இடைநிலைப் பாடசாலைகள், சிரேஷ்ட இடைநிலைப் பாடசாலைகள், உயர்கல்வி நிறுவனங்களான தொழில்நுட்பக் கல்லூரிகள், ஆசிரியர் பயிற்சிக்கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள், பல்வேறு ஆய்வகங்கள் ஆகியவற்றில் இயங்கும் நூலகங்களின் நூற்சேகரிப்பு, நூலகங்களின் பயன்பாடு, நூலக சேவைப் பகுதிகள் முதலியன விபரிக்கப்பட்டுள்ளன. இந்நிறுவனங்கள் எதிர்நோக்கக்கூடிய பிரச்சினைகள், அவற்றை நிவர்த்தி செய்ய நூலகர் கையாளக்கூடிய வழிமுறைகள் என்பனவும் இந்நூலில் ஆராயப்பட்டுள்ளன. இந்நூல் முன்னர் ஆனைக்கோட்டை அயோத்தி நூலக சேவையினால் 1987இல் வெளியிடப்பட்டது. நூலாசிரியை பேராதனைப் பல்கலைக்கழகத்தின் தமிழ் சிறப்புக்கலைப் பட்டதாரியாவார். வித்தியோதய பல்கலைக்கழகத்தில் உதவி நூலகராகவும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் சிரேஷ்ட உதவி நூலகராகவும் பணியாற்றியவர். தற்போது புலம்பெயர்ந்து கனடாவில் வாழ்கின்றார். (முன்னைய பதிவிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 006).

6 A 11

கிருகுவேலி. செங்கைஆழியான். (இயற்பெயர்: க.குணராசா) யாழ்ப்பாணம்: கமலம் பதிப்பகம், 75/10A பிரவுண் வீதி, 4வது பதிப்பு, ஏப்ரல் 2003, 1வது பதிப்பு, 1984, 2வது பதிப்பு, 1989, 3வது பதிப்பு, 1992. (யாழ்ப்பாணம்: Higher Education Press).
(16), 96 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 19.5x14.5 சமீ.

ரஜனி வெளியீடாக சிலகாலம் வெளியிடப்பட்ட மாதநாவல் வரிசையில் மே- ஜுன் 1984க்குரிய முதலாவது இதழில் (மலர் 1, இதழ் 1) இந்நாவல் முன்னதாகப் பிரசுரமாகியிருந்தது. இரண்டாவது பதிப்பு யாழ் இலக்கிய வட்டத்தினால் நவம்பர் 1989இலும், மூன்றாவது பதிப்பு ஜனவரி 1992இல் யாழ்ப்பாணம் கமலம் பதிப்பகத்தினாலும் இந்நூல் வெளியிடப்பட்டுள்ளது. யாழ்ப்பாணக் கலாச்சாரம் புறக்காரணிகளால் எவ்வாறு மாறுபடுகின்றது என்றும், மனித உறவுகளில் பணவசதி எப்படி மாற்றத்தைக் கொண்டு வருகின்றது என்பதையும் கணவன் மனைவி உறவுகள் எவ்வாறு பூசி மெழுகலின்றி நேரடியாக வார்த்தைகளில் பரிணமிக்கின்றன என்பதையும் ஆசிரியர் இந்த நாவலில் காட்டுகின்றார். ஈழநாடு வாரமலரில் தொடராக வெளிவந்ததுடன் 1982-85 காலப்பகுதியில் வெளியான சிறந்த குறுநாவலுக்கான 'தகவம்' பரிசையும் பெற்ற நாவல். (முன்னைய பதிவிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 654, 5A09).

6 A 12

கீதை நிழலில். எஸ்.பொன்னுத்துரை. சென்னை 600024: மித்ர வெளியீடு, 375/8-10, ஆற்காடு சாலை, கோடம்பாக்கம், 1வது பதிப்பு, டிசம்பர் 2000. (சென்னை 600024: மித்ர ஆர்ட்ஸ் அன் கிரியேஷன்ஸ், 375/8-10, ஆர்க்காடு சாலை, கோடம்பாக்கம்).
216 பக்கம், விலை: இந்திய ரூபா 75., அளவு: 18x12 சமீ., ISBN: 1-876626-78-X

கீதையின் தாக்கத்தினால் விளைந்த சிந்தனைகள் இங்கே பதிவாகின்றன. எஸ்பொவின் கற்பனைகள் கீதைக்கு எதிர்த் துருவமான கருத்துக்களையும் சமகால அவதிகளின் குரல்களையும் வெளிப்படுத்துகின்றன. பாரதியின் **ஞானரதம்** நடையொழுகு, வசன கவிதையின் சொற்சூத்திரம்-சித்திரம், பகவத்கீதை- பாஞ்சாலியோக சூத்திர உரைவிளக்கத் திட்பநுட்பம் ஆகியவற்றையெல்லாம் நினைக்கத் தூண்டும் நடையை இந்நூலிலும் காணமுடிகின்றது. (முன்னைய பதிப்பிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 051)

6 A 13

குவேனி. செங்கைஆழியான். யாழ்ப்பாணம்: கமலம் பதிப்பகம், 82 பிரவுண் வீதி, நீராவியடி, 2வது பதிப்பு, செப்டெம்பர் 2001, 1வது பதிப்பு, தை 1991. (யாழ்ப்பாணம்: அச்சகம் குறிப்பிடப்படவில்லை)
(8),136 பக்கம். வரைபடம். விலை: ரூபா 150., அளவு: 21x14 சமீ.

மஹாவம்சத்தின் கதாபாத்திரங்களினூடாக இலங்கைக்குச் சிங்களவர் வந்து குடியேறுவதற்கு முன்னர் திராவிடர் இந்நிலத்தின் ஆதிமக்களாக இருந்துள்ளனர் என்பதையும், எமது மூதாதையர் விட்ட தவறுகள் எவ்வாறு இன்று எமது தலைகளில் விடிந்திருக்கின்றன என்பதையும் சுட்டிக்காட்டும் வரலாற்று நாவல். (முன்னைய பதிவிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 658).

6 A 14

கௌதமபுத்தர் அடிச்சுவட்டில். சோ.சிவபாதசுந்தரம். சென்னை 18: அமுத நிலையம் பிரைவேற் லிமிட்டெட், தேனாம்பேட்டை, 1வது பதிப்பு, மே 1960. (சென்னை 18: நேஷனல் ஆர்ட் பிரஸ், தேனாம்பேட்டை).
334 பக்கம், 49 புகைப்படங்கள், அட்டவணை, விலை: இந்திய ரூபா 12.00, அளவு: 21.5x14 சமீ.

கௌதம புத்தர் பிறந்த இடத்தையும் அவர் வாழ்ந்த இடங்களையும் ஞானோதயம் பெற்று உபதேசித்த இடங்களையும் நேரில் சென்று தரிசிக்கும் நோக்கிலான பயணத்தில் கங்கைப் பள்ளத்தாக்கிலும், வடக்கே நேபாளத்திலுமுள்ள பௌத்த ஷேத்திரங்களை அடைந்து, விபரங்களை நேரில் சேகரித்தும் நூல்களின் வாயிலாகப் பெற்ற சரித்திர உண்மைகளை அவற்றுடன் இணைத்தும் இந்நூலை சுவையாக எழுதியுள்ளார். (பின்னைய பதிப்பிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 1848).

6 A 15

சங்கிலி. க.கணபதிப்பிள்ளை. பேராதனை: க.கணபதிப்பிள்ளை, தமிழ்ப் பேராசிரியர். இலங்கைப் பல்கலைக்கழகம், 1வது பதிப்பு, மார்கழி 1956. (கொழும்பு 12: சுதந்திரன் அச்சகம், 194ஏ, தட்டா தெரு). 138 பக்கம், விலை: ரூபா 3.00, அளவு: 22x14 சமீ.

ஈழத்துத் தமிழருடைய வரலாறு பற்றிப் பல இருட்டடிப்புகள் நடைபெற்று தமிழருடைய உரிமைகள் படிப்படியாகப் பறிபோய்க்கொண்டிருந்த ஒரு காலகட்டத்தில், ஈழத்தமிழர் தம்முடைய வரலாற்றை ஒருதடவை முறையாகப் பின்னோக்கிப் பார்க்கவேண்டிய தேவை ஏற்பட்டிருந்த வேளையில் அதற்குத் தூண்டுகோலாக அமைந்தது இந்த நூல். இலங்கைப் பல்கலைக்கழகத்தின் தமிழ்ப் பேராசிரியராக இருந்தவர் இந்நூலாசிரியர். இந்நூலின் முதலாம் பாகத்தில் சரித்திர காலத்துக்கு முந்திய யாழ்ப்பாணம், உக்கிரசிங்கன் தொடக்கம் பாணன் வரை, பாணன் தொடக்கம் ஆரியச் சக்கரவர்த்தி வரை, ஆரியச்சக்கரவர்த்திகள் முதலாம் பரம்பரை, பிற்கால யாழ்ப்பாணத்தரசர், விடுதலைப் போராட்டம் ஆகிய ஆறு இயல்களில் இலங்கை வாழ் தமிழர் வரலாறு சுருக்கமாக விபரிக்கப்பட்டுள்ளது. இது சங்கிலி நாடகத்திற்கான உறுதியான பின்புலமாக அமைகின்றது. (2ம் பதிப்பிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 3527).

6 A 16

சிவபூசை விளக்கம். ச.குமாரசுவாமிக் குருக்கள். திருக்கேதீச்சரம்: சிவானந்த குருகுலம், 1வது பதிப்பு, 1965. (யாழ்ப்பாணம்: கலைவாணி அச்சகம், 10 பிரதான விதி).
262 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை.

திருக்கேதீச்சரம் குருகுலத்தைச் சேர்ந்த அச்சுவேலி சிவஸ்ரீ ச.குமாரசுவாமிக் குருக்கள் எழுதிய இந்நூல் 1928ம் ஆண்டில் பருத்தித்துறை கலாநிதி யந்திரசாலையில் முதலில் பதிப்பிக்கப்பெற்றது. 5வது குருகுல வெளியீடாக இப்பதிப்பு வெளிவந்துள்ளது. சைவ சமய நூல்கள் பலவற்றை ஆதாரமாகக் கொண்டு, சிவபூசைக் கிரமத்தையும் அதனோடு சார்ந்த பல விடயங்களினதும் விரிவான விளக்கத்தையும் விளக்கத்திற்கு மேற்கோளாகச் சமய சாஸ்திரங்களிலிருந்தும் தமிழ் வேதமாகிய திருமுறைகளிலிருந்தும் சமயோசிதமாகத் தெரிந்தெடுத்த பல பாடல்களையும் நூலாசிரியர் பயன்படுத்தியுள்ளார். (பின்னைய பதிப்பிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 1077). (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

6 A 17

சிவானந்த நடனம். ஆனந்த குமாரசுவாமி (மூலம்), நவாலியூர் சோ.நடராசன் (தமிழாக்கம்). கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், 361, ½ டாம் வீதி, 2வது பதிப்பு, 2008, 1வது பதிப்பு, 1980. (கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், 361, 1/2, டாம் வீதி).
xvi, 209 பக்கம், புகைப்படத் தகடுகள், விலை: ரூபா 500., அளவு: 22x14.5 சமீ., ISBN: 978-955-659-137-0.

The Dance of Shiva என்ற ஆங்கில மூலநூலின் தமிழாக்கம். நடராஜ தத்துவத்தில் புதைந்து கிடக்கும் விஞ்ஞான உண்மைகளையும், ஆனந்த ரகசியங்களையும் திருமூலர் முதலிய மெய்ஞ்ஞானிகளுடைய பாடல்கள் மூலம் உலகத்திற்கே விளக்கிக் காட்டியவர் கலாயோகி ஆனந்த குமாரசுவாமி அவர்கள். நவாலியூர் சோ.நடராசன் அவர்களின் தமிழாக்கத்தில் வெளிவந்துள்ள இந்நூல் ரோமெய்ன் ரோவாண்ட் அவர்களின் மூலநூலுக்கான முன்னுரையையும் கொண்டுள்ளது. மனித இனத்தின் நன்மைக்கு இந்தியா செய்த தொண்டு, இந்துக்களின் கலைக் கோட்பாடு, அழகியல் வரலாறு, அவர்களின் அழகு பற்றிய கொள்கை, அழகென்பது ஒரு நிலை, பூர்வ பௌத்த வடிவங்கள், சிவ நடனம், பல கைகளையுடைய இந்தியச் சிலைகள், இந்தியச் சங்கீதம், இந்திய மாதரின் நிலை, சகச நெறி, அறிவாளர் கூட்டம், நீட்சேயின் பரந்த நோக்கு, நவ பாரதம், தன்னியல் தன்னாட்சி தன்னறம் ஆகிய பல்வேறு தலைப்புகளை இவ்வரிய நூல் கொண்டுள்ளது. (முன்னைய பதிவிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 3329).

6 A 18

சுமையின் பங்காளிகள். லெ.முருகபூபதி. அவுஸ்திரேலியா: முகுந்தன் பதிப்பகம், P.O.Box 350, Craigieburn, Victoria 3064, 2 வது பதிப்பு, டிசம்பர் 2007, 1வது பதிப்பு, நவம்பர் 1975. (கொழும்பு 6: க்ரிப்ஸ்).
104 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 21.5x15 சமீ., ISBN: 978-955-51068-0-1.

நீர்கொழும்பு இலக்கிய வட்டத்தின் முதுகெலும்பாக இருந்து, ஈழத்து இலக்கிய உலகில் 1972இலிருந்து எழுதிவரும் லெ.முருகபூபதியின் முதலாவது சிறுகதைத் தொகுதியின் மீள் பதிப்பு இதுவாகும். 1976இன் சிறந்த சிறுகதைத் தொகுதிக்கான இலங்கை அரசின் சாகித்திய மண்டலப் பரிசை வென்றது. ஈழத்துத் தேசியத்தின் ஒரு கூறாக அமையும் பிரதேச வட்டாரப் பண்புகள் பொருந்திய ஆக்கங்கள் 10 இக்கதைத் தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. குறிப்பாக, நீர்கொழும்புத் தமிழின் பேச்சுவழக்கில் அமைந்த விரல்விட்டெண்ணக்கூடிய சில நூல்களில் இது முக்கியமானது. கனவுகள் ஆயிரம் (மல்லிகை 1972), தரையும் தாரகையும் (புதுயுகம் 1972), நான் சிரிக்கிறேன் (மித்திரன் 1972), அந்தப் பிறவிகள் (பூரணி 1972), எதற்காக (மல்லிகை 1974), நம்பிக்கைகள் நம்பிக்கையற்றன (மல்லிகை 1974), சுமையின் பங்காளிகள் (மல்லிகை 1974), விழிப்பு (புதுமை இலக்கியம் 1974), விடிவை நோக்கி (மல்லிகை 1974), பேரலைகள் மடிகின்றன (மல்லிகை 1975) ஆகிய 10 கதைகள் இத்தொகுதியில் இடம்பெற்றுள்ளன. (முன்னைய பதிப்பிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 4598).

6 A 19

சுவாமி ஞானப்பிரகாசர். கா.இந்திரபாலா (பதிப்பாசிரியர்). கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், 361, ½ டாம் வீதி, 1வது பதிப்பு, 2008 (கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், 361, 1/2, டாம் வீதி).
57 gfகம், தகடுகள், விலை: &gh 150.> msT: 21.5x15 rkP.> ,yq;ifj; jkpo;r; Rlu;kzpfs; njhlu; ,y. 11>
ISBN: 978-955-659-128-1.

சுவாமி ஞானப்பிரகாசரின் பன்முகப்பட்ட பங்களிப்புக்கள் ஆய்வுக்குட்படுத்தப்பட்டுள்ளன. வரலாற்றாராய்ச்சித்துறை, மரபுவழித் தமிழ்க் கல்வி, கத்தோலிக்க தமிழிலக்கியம், மொழியாய்வு, சமயப்பணி ஆகியவற்றில் சுவாமி ஞானப்பிரகாசரின் பங்களிப்பை க.அருமை நாயகம், க.கைலாசபதி, கா.சிவத்தம்பி, அ.சண்முகதாஸ், வே.அந்தனி ஜான் அழகரசன் அடிகள் ஆகியோர் ஆராய்ந்துள்ளனர். இந்நூல் **சுவாமி ஞானப்பிரகாசர் சிந்தனையும் பணியும்** என்ற தலைப்புடன் யாழ்ப்பாணம் சுவாமி Qhdg;gpufhru; epidT tpoh mikg;Gf; FOtpduhy; முதற்பதிப்பாக 1981இல் வெளியிடப்பட்டது. ,J Gjpa gpw;Nru;f;iffSld; $ba> Kd;ida E}ypd; RUf;fg;gjpg;G. (முன்னைய பதிவிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 886).

6 A 20

சூடாமணி நிகண்டு: மூலமும் உரையும். மண்டல புருடர் (மூலம்), ஆறுமுகநாவலர் (பதிப்பாசிரியர்). சென்னை 18: திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், 154 டி.டி.கே.சாலை, 1வது பதிப்பு, டிசம்பர் 1996. (சென்னை 600 108: அப்பர் அச்சகம்).
iv, 216+82+42 பக்கம், விலை: இந்திய ரூபா 85., அளவு: 21.5x14 சமீ.

1969ஆவது கழக வெளியீடாக வெளிவந்துள்ள பதிப்பு இதுவாகும். தமிழின் சொல்வளத்தைப் பாதுகாக்கும் வங்கிகளாக நிகண்டுகள் விளங்கிவந்துள்ளன. ஒரு சொல்லுக்கு எத்தனை பொருள், ஒரு பொருளுக்கு எத்தனை சொல் என்று வியக்கவைக்கும் இந்நிகண்டுகள் நல்ல தமிழ்ச் சொற்களை காலம் காலமாக எமக்குக் காவித்தந்துள்ளன. யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுக நாவலர் பதிப்பித்த சூடாமணி நிகண்டு 12 பிரிவுகளில் தேவப்பெயர்த் தொகுதி, மக்கட் பெயர்த் தொகுதி, விலங்கின் பெயர்த் தொகுதி, மரப் பெயர்த் தொகுதி, இடப் பெயர்த் தொகுதி, பல்பொருட் பெயர்த் தொகுதி, செயற்கை வடிவப் பெயர்த் தொகுதி, பண்பு பற்றிய பெயர்த் தொகுதி, செயல் பற்றிய பெயர்த் தொகுதி, ஒலி பற்றிய பெயர்த் தொகுதி, ஆகியனவும் இரண்டாம் பகுதியில் ஒருசொற்பல்பொருட் பெயர்தொகுதி, பல்பெயர்க் கூட்டத்தொரு பெயர்த் தொகுதி ஆகியனவும் வகுத்துத் தரப்பட்டுள்ளன. (முன்னைய பதிவிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 4255).

6 A 21

செவ்வேள். M.fe;ijah. nfhOk;G 7: ,yq;ifj; Njrpa E}yfNritfs; rig> 1tJ gjpg;G> 1985. (nfhOk;G: murhq;f mr;Rj; jpizf;fsk;;).
xii> 156 gf;fk;> tpsf;fg;glq;fs; 10. tpiy: Fwpg;gplg;;gltpy;iy. msT: 21x15 rkP.

சைவபக்தி இலக்கிய ஆய்வினை மேற்கொண்ட ஆசிரியர் பரிபாடலில்- செவ்வேளுக்குரிய எட்டுப் பாடல்களையும் ஆழ்ந்து கற்று, அவற்றைத் தனியாக நூலுருவில் வெளியிட்டுள்ளார். பரிபாடல் தொடர்பான 4 ஆராய்ச்சிக் கட்டுரைகளின் உதவியுடன் இது விளக்கப்பட்டுள்ளது. **செவ்வேள்** - செவ்வேள் மேற்

பாடப்பெற்ற 8 பாடல்களின் வாயிலாக அறிந்து கொள்ளக்கூடிய முக்கிய விடயங்களை சுருக்கமாகக் குறிப்பிடுகின்றது. **வேலன் கடிமரம்** - சங்ககாலத்தில் நிலவி வந்த கடிமரம் பற்றிய கொள்கை, பரிபாடல் காலத்தில் எவ்வாறு சமயச் சார்புடையதாக மாறியது என்பதை எடுத்துரைக்கின்றது. **பரிபாடற் காலப் பரங்குன்றம்** - செவ்வேளைப் பாடிய புலவர்களின் பார்வையில் எவ்வாறு திருப்பரங்குன்றம் நோக்கப்பட்டது என்பதை ஆராய்கின்றது. **அகப்பொருள் அறிமுகம்-** அகப்பொருள் அம்சங்கள் சமயப் பாடல்களில் குறிப்பாக, செவ்வேள் மேற் பாடப்பெற்ற பாடல்களில் இடம்பெறுகின்றன என்பதை ஆய்கின்றது. இந்நூல் School of Oriental and African Studies (SOAS), University of London நூலகத்தில் பார்வையிடப்பட்டது. பதிவிலக்கம் 547928. (முன்னைய பதிவிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 093).

6 A 22

சைவ சமய சாரம். சு.சிவபாதசுந்தரம். சென்னை: இராவ்பகதூர் கோ.இராசகோபாலபிள்ளையவர்கள், 8ஆவது பதிப்பு, மே 1956, முதற்பதிப்பு விபரம் அறியமுடியவில்லை. (சென்னை 1: ஆறுமுகநாவலர் வித்தியாநுபாலன அச்சகம், 300 தங்கசாலைத் தெரு).
32 பக்கம், விலை: அணா 6, அளவு: 18.5x12.5 சமீ.

யாழ்ப்பாணம் புலோலியூரைச் சேர்ந்தவர் நூலாசிரியர். சைவசமயத்தை அனைவரும் எளிதில் அறிய வேண்டும் என்ற நோக்கில் இலகுவான தமிழ் வசனநடையில் இச்சிறுநூல் இவரால் ஆக்கப்பட்டுள்ளது. ஏழு பாடங்கள் கொண்டுள்ள இந்நூலில் கடவுள் என்ற முதலாவது இயலில் கடவுளின் பெருமையையும் அவரது எல்லையில்லா அன்பையும், என்றும் துணையானவர் என்பதையும் விளக்குகின்றார். ஆன்மாக்கள் என்ற இரண்டாமியலில் ஆன்மாக்களின் இயல்பையும், நமது பிறவியின் நோக்கம் சிவனை அடைவதென்பதையும் அதனால் நாம் திருவடி யாத்திரைக்காரரெனவும் அதில் கண்ணாயிருக்கவேண்டுமெனவும் கூறுகின்றது. கடவுள் வழிபாடு என்ற இயல் கடவுளை வழிபடும் முறையைக் கூறுகின்றது. நல்வினை தீவினைகள் என்ற நான்காமியல் நல்வினை தீவினையின் இயல்பையும் அவற்றின் பயனையும், தீவினையிலிருந்து நாம் விலகும் மார்க்கங்களையும் காட்டுகின்றது. சைவ வாழ்க்கை என்ற இயலில் சைவ வாழ்க்கையிலேயே துன்பத்துக்காயினும் துக்கத்துக்காயினும் இடம்வராது என்று காட்டப்படுகின்றது. ஆறாவது இயல் சைவ ஒழுக்கங்கள் என்பதாகும். இது சைவ சமயிகளின் நித்திய கடன்களை விபரிக்கிறது. ஏழாம் இயலில் சைவத்தின் மேன்மை என்ற தலைப்பில் சைவசமயத்தின் மகத்துவம் கூறப்படுகின்றது. (பின்னைய பதிப்பிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 1084) (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

6 A 23

சைவ போதம்: முதற் புத்தகம். சு.சிவபாதசுந்தரம். யாழ்ப்பாணம்: சைவ பரிபாலன சபை, 23வது பதிப்பு, சார்வரி வருடம், 1960. (யாழ்ப்பாணம்: சைவப்பிரகாச யந்திரசாலை).
120 பக்கம், விலை: சதம் 50., அளவு: 17X12 சமீ.

சைவபோதம் பல தொகுதிகளில் வெளிவந்தது. முதற் புத்தகத்தில், 33 சமயக் கதைகளின் வழியாக சிவபிரான் ஆன்மகோடிகளை எவ்விதம் இரட்சித்து வருகின்றார் என்று விளக்கப்படுகின்றது. புராணக்கதை வாயிலாகச் சிறார்களுக்கு சைவ வாய்மைகளைப் புகட்டுவது இந்நூலின் குறிக்கோளாகும். (பின்னைய பதிப்பிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 1089). (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

6 A 24

சைவ போதம்: இரண்டாம் புத்தகம். சு.சிவபாதசுந்தரம். யாழ்ப்பாணம்: சைவ பரிபாலன சபை, 4வது பதிப்பு, ஆனி 1962. (யாழ்ப்பாணம்: சைவப்பிரகாச அச்சியந்திரசாலை).
131 பக்கம், விலை: சதம் 60.

இந்நூலில் சைவ சமயம் (சைவசமய மாட்சி, சைவ சமயத்தின் பிரமாண நூல்கள், சைவாபிமானம்), உயிரின் நிலைமை (ஆன்மா, கடவுள், பாசம், மனிதப்பிறவியின் சிறப்பு), பாசங்கள் (ஆணவம், கன்மம், மாயை), ஆன்மா, பதி, முப்பொருள்கள் (கடவுளின் பரிபூரணம், அத்துவிதம், சத்து, சித்து, ஆநந்தம்), சிவபெருமானின் மூர்த்தங்கள், சைவ சாதனங்கள் (திருநீறு, உருத்திராட்சம், பஞ்சாட்சரம்), சிவாலய தரிசனம், நித்திய கருமம், கடவுள் வழிபாடு, அறம், தோத்திரத் திரட்டு ஆகிய தலைப்புகளில் விடயங்கள் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன. இது யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையின் பிரசுரத் தொடரில் 13வது பிரசுரமாக வெளிவந்தது. (பின்னைய பதிப்பிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 1090). (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

6 A 25

சைவக் கிரியை விளக்கம். சு.சிவபாதசுந்தரம். யாழ்ப்பாணம்: சைவ பரிபாலன சபை, 2வது பதிப்பு, விபவ வருடம் 1928. (யாழ்ப்பாணம்: சைவப்பிரகாச யந்திரசாலை).
80 பக்கம், விலை: சதம் 25. அளவு: 18.5x13.5 சமீ.

சைவ சமயவியல், கிரியையுறுப்பியல், தீட்சையியல், விவாகவியல், கோயிலியல், அபரக்கிரியையியல் ஆகிய தலைப்புகளில் இந்நூல் விரிகின்றது. இந்நூலின் உருவாக்கத்திற்கு காமிகம், சுப்பிரபேதம், காரணம் வாதுளமாகிய ஆகமங்களும், அகோர சிவாசாரியார் பத்ததியும் சித்தாந்த சாராவலியுமாகும். எமது நித்தியானுஷ்டானங்களில் பலவற்றை நாம் காரணமறியாமலே இயந்திரம் போல் செய்துவருகின்றோம். மணச்சடங்கு, பிணச்சடங்கு, சிரார்த்தம், சந்தியாவந்தனம், முதலிய கருமங்கள் எப்படிச் செய்யப்பட வேண்டும் ஏன் செய்யப்பட வேண்டும் என்பன இந்நூலில் நன்கு விபரிக்கப்பட்டுள்ளது. நூலாசிரியர் யாழ்ப்பாணம் சுழிபுரம் விக்ரோரியாக் கலாசாலைத் தலைமை ஆசிரியரராவார். (பின்னைய பதிப்பிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 1083). (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

6 A 26

சைவத் திருக்கோவிற் கிரியை நெறி. கா.கைலாசநாதக் குருக்கள். கொழும்பு: இந்து கலாவிருத்திச் சங்கம், 1வது பதிப்பு, ஜுலை 1963. (கொழும்பு 11: மெய்கண்டான் அச்சியந்திரசாலை, 161, செட்டியார் தெரு).
xxi, 299 பக்கம், விலை: ரூபா 5.00, அளவு: 18x12.5 சமீ.

இந்நூல் ஆகமக் கிரியைகளையும், அவற்றுடன் தொடர்புடைய விடயங்களையும் சுருக்கிக் கோவைப்படுத்தித் தருகின்றது. தொடர்ச்சியாக வாசிக்கத்தக்க இயல்பு வாய்ந்ததாக இருக்கவேண்டும் என்பதால் மேற்கோள்கள் தவிர்க்கப்பட்டுள்ளன. இந்நூலில் கிரியைகளின் புராதன வரலாறு, இதிகாச புராணங்கள் கூறும் கிரியைகள், திருக்கோவில், திருவுருவங்கள், கிரியைகள், பரிவார தெய்வங்கள், கிரியைகளின் உட்பொருளும் உயர் நோக்கும் ஆகிய அம்சங்கள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. சைவத் திருக்கோயில்களில் அன்றாடக் கிரியைகளை நிகழ்த்த இன்றியமையாத அம்சங்களைச் சுருக்கமாக விளக்கிக் கூறும் நூல இதுவாகும். (பின்னைய பதிப்பிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 0098). (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

6 A 27

தமிழ் இந்தியா. ந.சி.கந்தையாபிள்ளை. சென்னை 1: திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், மூன்றாவது பதிப்பு, 1959, 1வது பதிப்பு, பெப்ரவரி 1945, 2வது பதிப்பு, டிசம்பர் 1949. (சென்னை 1: அப்பர் அச்சகம், 2/140, புரோட்வே).
314 பக்கம், விளக்கப்படங்கள், விலை: இந்திய ரூபா 5., அளவு: 18.5x13 சமீ.

ஈழத்தமிழ் அறிஞர் ந.சி.கந்தையாபிள்ளை (1893-1967) அவர்கள் எழுதிய இந்நூல் தொன்மைக்காலம், ஆரியருக்கு முற்பட்ட தமிழ் நாகரீகம், புத்தருக்கு முற்பட்ட இந்தியா, புத்தருக்குப் பிற்பட்ட இந்தியா, தமிழ் வேந்தரும் அவர் ஆட்சியும், கிழக்கே தமிழரின் குடியேற்ற நாடுகள், தமிழர் சமய வரலாறு, இந்தியாவும் மேற்கு உலகமும், மொழி ஆகிய ஒன்பது இயல்களில் இந்தியப் பெருங்கண்டத்தில் தமிழரின் வரலாறு ஆராயப்பட்டுள்ளது. கழக வெளியீட்டுத் தொடரில் 384ஆவது நூலாக இப்பதிப்பு வெளிவந்துள்ளது. (பின்னைய பதிப்பிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 3957).

6 A 28

தமிழ் இலக்கணம். ஆறுமுக நாவலர். சென்னை 600017: முல்லை நிலையம், 9 பாரதி நகர், முதல் தெரு, தி.நகர், 2வது பதிப்பு 2001, 1வது பதிப்பு, டிசம்பர் 1993. (சென்னை 13: பாரி ஆப்செட், 7B, கொடிமரத் தெரு).
216 பக்கம், விலை: இந்திய ரூபா 40., அளவு: 18x12.5 சமீ.

1873இல் முதற்பதிப்பாக தவத்திரு ஆறுமுகநாவலர் அவர்களால் வெளியிடப்பட்ட அரியநூலான இலக்கணச் சுருக்கம், பல்வேறு மாற்றுத் தலைப்புகளுடன் வியாபார நோக்கம் கருதி தமிழகத்தில்

அச்சிடப்பட்டு முதற்பதிப்புகளாக வெளியிடப்பட்டு வந்துள்ளது. அவ்வகையில் அண்மைக்காலத்தில் வெளிவந்த நூல் இது. (முன்னைய பதிவிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 1259).

6 A 29

தமிழ் ஈழம் நாட்டு எல்லைகள். ஜே.ஆர்.சின்னத்தம்பி (ஆங்கில மூலம்), திருமதி இரா.சச்சிதானந்தன் (தமிழாக்கம்). யாழ்ப்பாணம்: ஸ்ரீ காந்தா அச்சகம், புத்தகசாலை, 213 காங்கேசன்துறை வீதி, 1வது பதிப்பு, செப்டெம்பர் 1977. (கொழும்பு: நியு லீலா அச்சகம், 62, பண்டாரநாயக்க மாவத்தை). (6), 30 பக்கம், வரைபடங்கள், விலை: ரூபா 5., அளவு: 28X21.5 சமீ.

1965இல் இலங்கை நிலஅளவைத் திணைக்களத்தில் இணை நிலஅளவை முதல்வராக இருந்து இளைப்பாறிய நூலாசிரியர், வரலாறு, புவிவியல் பற்றிய ஆக்கங்கள் பல எழுதியவர். இலங்கைத் தீவிலுள்ள தமிழரின் நிலப்பகுதிகள் பற்றியும், தமிழ் மக்கள் பற்றியும் நேரடியாகவோ மறைமுகமாகவோ எடுத்துக்கூறும் வரலாற்றுக் குறிப்புகளையும், தமிழ்ப் பிரதேசத்தின் புவிவியல் தன்மைகளையும் இந்நூல் ஆராய்கின்றது. மூல நூலின் மொழிபெயர்ப்பாளர் திருமதி இரா.சச்சிதானந்தன் என்று குறிப்பிடப்பட்டிருப்பினும், பின்னைய பதிப்புகளில் அது க.சச்சிதானந்தன் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (முன்னைய பதிவிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 1849, தொகுதி 5 பின்னிணைப்பு 12).

6 A 30

தமிழிலக்கணமும் உரையமைப்பும். வ.பொன்னையா. யாழ்ப்பாணம்: வ.பொன்னையா, கொக்குவில், 1வது பதிப்பு, 1958. (யாழ்ப்பாணம்: சைவப் பிரகாச யந்திரசாலை).
428 பக்கம், விலை: ரூபா 3.50, அளவு: 18x12.5 சமீ.

இலக்கணப் பிழைகளை விலக்கி நல்லுரைநடையில் எழுதுவதற்கான வழிகாட்டி. கொக்குவிலைச் சேர்ந்த கலாநிதி வ.பொன்னையா 1958இல் இந்நூலை எழுதி, பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளையின் முன்னுரையுடன் வெளியிட்டிருந்தார். இரு பெரும் பகுதிகளைக் கொண்டுள்ள இந்நூலின் முதற் பகுதி வழக்கின் கண்ணதான வாக்கிய ஆக்கத்தில் தொடங்கி, சொல், எழுத்து ஆகியவற்றின் இலக்கணங்களையும் மரபுகளையும் தூய நெறியில் வகுக்கின்றது. இரண்டாவது பகுதி, முதலாவது பகுதியின் பயனாய் எழுத்துப் பிழை, சொற்பிழை, புணர்ச்சிப் பிழை, வாக்கியப் பிழை, பொருட்பிழை, மரபுப் பிழை முதலிய பிழைகளின்றி வாக்கியங்களைத் தொடுக்கவும் அவற்றைப் பல்வேறு இலக்கிய வகைகளில் பயன்படுத்தவும் வழிசெய்கின்றது. (பின்னைய பதிப்பிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 4257)

6 A 31

திறவுகோல்: விஞ்ஞானக் கட்டுரைகள். பொ.கனகசபாபதி. கொழும்பு 11: சேமமடு பொத்தகசாலை, U.G.50, Peoples Park, 2வது பதிப்பு, 2008, 1வது (வெற்றிமணி) பதிப்பு, நவம்பர் 2007. (கொழும்பு 11: சேமமடு பதிப்பகம்).
136 பக்கம், விளக்கப்படங்கள், சித்திரங்கள், விலை: ரூபா 250., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-955-1857-13-4.

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் முன்னாள் அதிபரான நூலாசிரியர் தற்போது கனடா, ஸ்கார்பரோவில் புலம்பெயர்ந்து வாழ்கின்றார். யாழ்ப்பாணப் பிரதேச வழக்கில் புரியாத, தெரியாத விடயங்களைப் பேசும் பேர்வழிகளை "விண்ணாணம் பேசுவோர்" என்று அழைப்பர். அந்த விண்ணாணத்தை (விஞ்ஞானத்தை) இலகுவாகப் புரியும்வண்ணம் இங்கு அறிவியல் சார்ந்த விஞ்ஞானக் கட்டுரைகளாக அலசியுள்ளார். வாசிப்பவருக்கு சோர்வூட்டாத வகையில் நகைச்சுவை உணர்வுடன், புராண இதிகாச வாழ்வியல் நடைமுறை உதாரணங்களை இணைத்து சிக்கலான விடயங்களையும் சுவையான விடயத் தலைப்புடன் இலகுநடையில் எழுதியிருக்கிறார். இதன் மூலப் பதிப்பு ஜேர்மனி நாட்டில் வெற்றிமணி வெளியீடாக **திறவுகோல்: இது ஒரு விண்ணாணம்** என்ற தலைப்பில் பல்வர்ணப் பதிப்பாக 2007இல் வெளியிடப்பட்டிருந்தது. சேமமடு பதிப்பு இந்நூலின் திருத்திய பதிப்பாக மேலும் பல புதிய தகவல்களுடன் வெளிவந்துள்ளது. (முன்னைய பதிவிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 4320).

6 A 32

தூரத்துப் பச்சை. கோகிலம் சுப்பையா. சென்னை 5: தமிழ்ப் புத்தகாலயம், 576 பைகிராப்ட்ஸ் ரோடு, 1வது பதிப்பு, செப்டெம்பர் 1964. (மதறாஸ் 3: ஜெனரல் பிரின்டர்ஸ்).

328 பக்கம், விலை: இந்திய ரூபா 5., அளவு: 18x12 சமீ.

தமிழ்நாட்டிலுள்ள சேத்தூர் கிராமத்திலிருந்து பஞ்சம், பட்டினி, வரட்சி என்பவற்றின் பாதிப்புக்களிலிருந்து தப்புவதற்காக கப்பலேறிய வேலனுடன் அவன் மகள் வள்ளி என்ற சிறுமியும் இலங்கைக்கு வருகிறாள். வரும்போது வள்ளி பட்ட துன்பத்தையும், அவர்கள் இலங்கையில் ஹமில்டன் தோட்டத்தை அடைவதையும் விபரிக்கும் இந்நாவல், வள்ளி வளர்ந்து பெரியவளாகி செங்கமலை என்பவனைத் திருமணம் செய்து ராசீக் கொள்ளைராசாத் தோட்டத்துக்கு குடியிருக்க வருவதைப் பற்றியும் விபரிக்கிறது. வள்ளிக்குப் பிள்ளைகள் பிறந்து அப்பிள்ளைகளுக்குப் பிள்ளைகள் பிறக்கும் வரையிலான 4 தலைமுறைகள் பற்றி எழுதப்பட்ட இந்நாவல் ஒரு தோட்டத்துப் பெண் தன் வாழ்நாளில்படும் துன்பங்கள் அத்தனையையும் விபரிக்கின்றது. அரசியல்ரீதியில் தோட்டங்களில் தொழிற்சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்ட ஒரு காலகட்டத்தை இந்நாவலின் பிற்பகுதி பின்னணியாகக் கொண்டிருக்கின்றது. இந்நூலுக்கான முன்னுரையை செயின்ட் ஜோர்ஜ் கோட்டையிலிருந்து தமிழ்நாடு அரசின் பிரதம காரியதரிசி எஸ்.கே.செட்டூர் அவர்கள் வழங்கியிருக்கிறார். (பின்னைய பதிப்பிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 2692). (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

6 A 33

தேசபக்தன் கோ. நடேசையர் - ஒரு வரலாற்று ஆய்வு. rhuy; ehld;. (,aw;ngau;: fUg;igah ey;iyah). கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், 361 ½ டாம் வீதி, 2வது திருத்திய பதிப்பு, 2008, 1வது பதிப்பு, 1988. (கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், 361 ½ டாம் வீதி).
xii, 180 பக்கம், விலை: ரூபா 450., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-955-659-118-4.

இலங்கை வாழ் பெருந்தோட்டத் தமிழரின் கடந்த 170 வருடகால வரலாற்றிலே யுகப்புயல் ஒன்றை ஏற்படுத்திய மாமனிதர் கோதண்டராம நடேசையரின் (14.1.1887-7.11.1947) வாழ்க்கை வரலாறு இந்நூலில் விரிவாகத் தரப்பட்டுள்ளது. இலங்கையின் தொழிற்சங்க வரலாற்றிலும் அரசியல் நடவடிக்கைகளிலும், பத்திரிகை வெளியீட்டுத் துறையிலும், மலையகத் தமிழ் இலக்கிய முயற்சிகளிலும் தனது பாரிய பங்களிப்பினை வழங்கியவர் நடேசையர். பல்பரிமாண ஆளுமை கொண்ட நடேசையரின் வாழ்வும் பணிகளும் மலையகத்தின் ஒரு காலகட்ட வரலாற்றையும் இங்கு பதிவுசெய்கின்றது. நூலாசிரியர் சாரல்நாடன் மலையக கலை இலக்கியப் பேரவையின் தலைவராக இருந்தவர். மலையகத்தில் அறுபதுகளில் ஏற்பட்ட இலக்கிய எழுச்சியில் மலர்ந்தவர். இலக்கியம், வரலாறு, நாட்டாரியல் போன்ற துறைகளிலும் தன் ஆளுமையை வெளிக்காட்டிவருபவர். நுவரெலிய மாவட்டத்திலுள்ள தேயிலைத் தோட்ட தொழிற்சாலையொன்றில் அதிகாரியாகக் கடமையாற்றி ஓய்வுபெற்றுள்ள இவர் பல நூல்களை எழுதியிருக்கிறார். மூன்று முறை சாகித்திய மண்டலப் பரிசினையும் பெற்றிருக்கிறார். இந்நூலும் தேசிய சாகித்திய மண்டலப் பரிசினை இவருக்குப் பெற்றுக்கொடுத்தது. (முன்னைய பதிவிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 863).

6 A 34

நற்சிந்தனை. யோகர் சுவாமிகள். யாழ்ப்பாணம்: சிவதொண்டன் நிலையம், 2வது பதிப்பு, 1962, 1வது பதிப்பு, 1959. (யாழ்ப்பாணம்: ஸ்ரீலங்கா அச்சகம்).
408 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை.

கொழும்புத்துறைக் குருபரன் யோகசுவாமிகள் பாடியருளிய செய்யுள்கள் முதலில் நற்சிந்தனை என்ற தலைப்பில் சிவதொண்டன் சஞ்சிகையில் திங்கள் தோறும் வெளிவந்தன. நற்சிந்தனை என்னும் பெயரோடு முதன்முதலாக வெளியான செய்யுள்கள் இவை. பின்னர் நூலுருவில் அதே தலைப்புடன் 1959இல் வெளியிடப்பட்டது. இரண்டாம் பதிப்பில் முதற்பதிப்பில் சேர்க்கத் தவறிய செய்யள்களை இணைத்து புதுக்கிய பதிப்பாக வெளியிடப்பட்டது. (பின்னைய பதிப்பிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 1106). (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

6 A 35

நனவிடை தோய்தல். எஸ்.பொன்னுத்துரை. சென்னை 600024: மித்ர வெளியீடு, 32/9, ஆற்காடு சாலை, கோடம்பாக்கம், 1வது பதிப்பு, நவம்பர் 2003. (சென்னை 600024: மித்ர ஆர்ட்ஸ் அன் கிரியேஷன்ஸ், 375/8-10, ஆர்க்காடு சாலை, கோடம்பாக்கம்).
xvi, 304 பக்கம், விலை: இந்திய ரூபா 100., அளவு: 18x12 சமீ., ISBN: 1-876626-27-5.

நனவிடை தோய்தல் சாமான்ய மக்களுடைய சங்கதிகளைச் சொல்லும் ஒரு நூல். தான் வாழ்ந்த யாழ்ப்பாணத்து மண்ணினதும், அதன் மக்களினதும் வரலாற்றை பிறிதொரு கோணத்தில் சொல்ல முனைகின்றது. போர், பணம், பஞ்ஞீலம், ரதம், புதுசு, வெளி, கல்வி, பேர், கோலம், பாடு, சுவை, குளம், கோயில், கரை ஆகிய 14 தலைப்புகளில் நனவிடை தோய்தல் நகர்த்தப்படுகின்றது. (முன்னைய பதிப்பிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 1797).

6 A 36

நாடகம்-அரங்கியல்: பழையதும் புதியதும். சி.மௌனகுரு. கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், 361, 1/2, டாம் வீதி, 2வது பதிப்பு, 2005. 1வது பதிப்பு, 1992. (கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், 361, 1/2, டாம் வீதி).
xxiv, 196 பக்கம், விலை: ரூபா 350., அளவு: 22 x14.5 சமீ., ISBN: 955-9429-69-8.

இந்நூல் ஈழத்தில் தமிழரிடையே வழங்கும் மரபுவழி நாடகங்கள் பற்றிய பன்னிரு ஆய்வுக் கட்டுரைகளைக் கொண்டது. யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, மன்னார். முல்லைத்தீவு, மலையகம் முதலாம் பிரதேசங்களில் தமிழரிடையே பயில்நிலையிலிருந்த மரபுவழி நாடகங்கள், பாரம்பரிய நாடகங்கள் தங்களிடையே ஏற்பட்ட அரசியல், சமூக, பொருளாதார, பண்பாட்டு மாற்றங்களின் காரணமாகப் பல்வேறு மாற்றங்களைப் பெற்றுவந்துள்ளதை இக்கட்டுரைகள் ஆய்வுரீதியாகப் பதிவுசெய்கின்றன. 1992இல் விபுலம் வெளியீடாக வெளிவந்த **பழையதும் புதியதும்-நாடகம் அரங்கியல்** என்ற தலைப்பிலான நூலின் திருத்திய மீள்பதிப்பே இதுவாகும். முன்னைய பதிப்பில் 10 கட்டுரைகள் இடம்பெற்றிருந்தன. குமரன் பதிப்பில் திருத்தங்கள் பல மேற்கொள்ளப்பட்டுள்ளன. கூத்தின் அழகியல், ஈழத்துத் தமிழ்க் கூத்தியல் ஆய்வும் ஈழத்துத் தமிழ்க் கூத்தும் ஆகிய இரண்டு முக்கியமான புதிய கட்டுரைகள் இதில் இடம்பெற்றுள்ளன. (முன்னைய பதிப்பிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 298).

6 A 37

நாவலர். தி.ச.வரதராசன். யாழ்ப்பாணம்: வரதர் வெளியீடு, 288 ஆஸ்பத்திரி வீதி, 1வது பதிப்பு, ஆவணி 1949. (யாழ்ப்பாணம்: ஸ்ரீ பார்வதி அச்சகம்).
36 பக்கம், விலை: சதம் 30.

முகவுரை, இளமையும் படிப்பும், பிரசங்க மேகம், ஒரு பெரிய இலட்சியம், கண்டனப் புலி, சில பொதுக் காரியங்கள், சில சம்பவங்கள், ஐந்தாம் குரவர் ஆகிய அத்தியாயங்களாகப் பிரித்து ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரின் வாழ்வும் பணியும் (18.12.1822-5.12.1879) இச்சிறுவர்களுக்கான நூலில் தரப்பட்டுள்ளது. மூதறிஞர் வரதர் தனது 15வது வயதிலே (1939இல்) எழுதிய "நாவலர்கோன்" என்ற நூலின் விரிவுப் பதிப்பு இது. த.கைலாசபிள்ளையின் நாவலர் சரித்திரம் நூலின் தழுவலாக அவர் எழுதியது. அந்நூல் சுமார் 10 ஆண்டுகளுக்குப் பின் திருத்திய பதிப்பாக நாவலர் என்ற பெயரில் வெளியாகியுள்ளது. (பின்னைய பதிப்பிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 4868). (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

6 A 38

நிறைநிலா. இ.நாகராஜன். சென்னை 600024: மித்ர வெளியீடு, 375/8-10, ஆற்காடு சாலை, 2வது பதிப்பு, டிசம்பர் 2001, 1வது பதிப்பு, நவம்பர் 1965 (சென்னை 600024: மித்ர ஆர்ட்ஸ் அன் கிரியேஷன்ஸ், 375/8-10, ஆர்க்காடு சாலை).
192 பக்கம், விலை: இந்திய ரூபா 65., அளவு: 17.5x12 சமீ., ISBN: 1-876626-20-8.

ஈழகேசரி வளர்த்துத் தந்த ஈழத்தின் சிறுகதைப் படைப்பாளர்களுள் நன்கு அறியப்பட்டவரான மதுரகவி இ.நாகராஜனின் சிறுகதைகள் கொண்ட தொகுப்பு. துணை, எரிந்த திரி, வேலி, பிரயத்தனம், திரை, கண்கள், கடன், மாஜி மனிதர்கள், நம்பிக்கை, வர்ண ஜாலம், வேஷம். மின்மினி, வட்டி, நிறைநிலா ஆகிய 14 கதைகள் இத்தொகுப்பில் இடம்பெறுகின்றன. ஈழகேசரியிலும், தமிழினியிலும் பணிபுரிந்துள்ள இவர் பின்னாளில் சுன்னாகம் வடஇலங்கை தமிழ்நூற் பதிப்பகத்திலும் பணியாற்றியுள்ளார். (முன்னைய பதிவிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 3618).

6 A 39

நோத் முதல் கோபல்லவா வரை: இலங்கையின் அரசியல் வரலாறு: 1798-1947. க.சி.குலரத்தினம். கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், 361 ½ டாம் வீதி, 2வது பதிப்பு, 2008, 1வது பதிப்பு, 1966. (கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், 361 ½ டாம் வீதி).
(16), 469 பக்கம், புகைப்படங்கள், சித்திரங்கள், விலை: ரூபா 400., அளவு: 21.5X14 சமீ., ISBN: 978-955-659-120-6.

நோத் முதல் கோபல்லவா வரை. க.சி.குலரத்தினம். கொழும்பு 11: சேமமடு பொத்தகசாலை, U.G.50, Peoples Park, 2வது பதிப்பு, ஆவணி 2008, 1வது பதிப்பு, 1966. (கொழும்பு 11: சேமமடு பதிப்பகம்).
428 பக்கம், புகைப்படங்கள், சித்திரங்கள், விலை: ரூபா 550., அளவு: 21.5X14 சமீ., ISBN: 978-955-1857-18-9.

1798 இலிருந்து 1947 வரையான காலப்பகுதியின் இலங்கையின் அரசியல் வரலாற்றினை இந்நூல் விபரிக்கின்றது. பிரித்தானிய காலனித்துவ காலப்பகுதியில் ஏற்பட்ட அரசியல் மாற்றங்களையும், கோல்புறுக் கமரன் திருத்தத்தில் இருந்து டொனமூர் திருத்தம் வரை யாப்பு ரீதியாக மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களையும், இலங்கையரினால் சுதந்திரத்தை நோக்கி மேற்கொள்ளப்பட்ட அரசியல் முயற்சிகளையும் மிக ஆழமாக இந்நூல் ஆராய்கின்றது. க.சி.குலரத்தினம் (1916-1994) யாழ்ப்பாணம் கந்தர்மடத்தில் பிறந்தவர். திருநெல்வேலி, பரமேஸ்வராக் கல்லூரியில் கல்வி கற்ற பின்னர் பலாலி ஆசிரியப் பயிற்சிக் கலாசாலையிலும், திருநெல்வேலி சைவாசிரியர் பயிற்சிக் கலாசாலையிலும் பயின்றவர். திருநெல்வேலி செங்குந்தா இந்துக் கல்லூரி, சைவப்பிரகாச வித்தியாசாலை உட்பட பல கல்லூரிகளில் ஆசிரியராகப் பணியாற்றிய பின்னர் கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தில் பணியாற்றி ஓய்வுபெற்றவர். (முன்னைய பதிவிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 2915).

6 A 40

பண்டாரவன்னியன்: வரலாற்று நாடகம். முல்லைமணி (இயற்பெயர்: வேலுப்பிள்ளை சுப்பிரமணியம்). முள்ளியவளை: பண்டாரவன்னியன் கழகம், 1வது பதிப்பு, ஜுன் 1970, (முள்ளியவளை: சக்தி அச்சகம்).
95 பக்கம், விலை: ரூபா 2.50, அளவு: 22x12 சமீ.

17 காட்சிகளில் அமையும் பண்டாரவன்னியன் என்னும் வரலாற்று நாடகத்தில் மக்கள் நலனை மனதுட் கொண்டு தேசப்பற்றுடன் ஆண்ட ஒரு தலைவனை அவனது நற்பண்புகள் மக்களுக்கு விளங்குமாறு நேருக்கு நேராக இந்நாடகப் பாத்திரத்தின் மூலம் ஆசிரியர் முன்நிறுத்தியிருக்கின்றார். பண்டார வன்னியன், கைலாயவன்னியன், பெரிய மெயினார், நல்லநாச்சன், பெருவன்னிச்சி, குமாரசிங்க வன்னியன், காக்கை வன்னியன், ஒல்லாந்த தேசாதிபதி வொன் அங்கிள் பீக், ஆங்கிலத் தளபதி கப்டன் வொன்டிறிபேக், தளபதி யுவெல், சேனைத் தலைவன் எட்வர்ட் மெட்சி, ஆங்கிலத் தேசாதிபதி நோர்த் ஆகியோர் கதாபாத்திரங்களாவர். ஆங்கிலேய ஆட்சிக்கு எதிராகப் போர்முரசு கொட்டிப் போரிட்ட வீரமன்னனின் தியாக வரலாறு இது. இந்நூலுக்கான முகவுரையை வவுனியா பாராளுமன்ற உறுப்பினர் தா.சிவசிதம்பரமும், அணிந்துரைகளை கலாநிதி சு.வித்தியானந்தன், கலையரசு க.சொர்ணலிங்கம், சிவநேசன் வே.கந்தையா ஆகியோரும் வழங்கியுள்ளனர். அட்டைப்பட ஓவியத்தை பண்டாரவன்னியன் கழகச் செயலாளர் இ.வரதராசா வரைந்துள்ளார். (பின்னைய பதிப்பிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 2571).

6 A 41

பலிக்களம். நீ.மரியசேவியர். யாழ்ப்பாணம்: திருமறைக் கலாமன்ற வெளியீடு, 1வது பதிப்பு, மார்ச் 1973, (யாழ்ப்பாணம்: ஆசீர்வாதம் அச்சகம்).
iv, 37 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14 சமீ.

பலிக்களம், இயேசுவின் பாடுகளையும், மரணத்தையும் சித்திரிக்கும் ஒரு காவியம். உலகெங்கும் வன்முறையில் சிக்கித் தவிக்கும் மக்களுக்கு நம்பிக்கைச் சுடரைப் பிரகாசிக்கச் செய்வதே பலிக்களத்தின் முக்கிய நோக்கமாக அமைகின்றது. கடந்த முப்பது ஆண்டுகளுக்கும் மேலாக மேடையேறிய இந்நாடகம் யாழ்ப்பாணத்தில் தயாரிக்கப்பட்ட முதலாவது ஒளிப்பதிவு நாடகப்பிரதியாகவும் விநியோகிக்கப்பட்டது. இந்நூல் School of Oriental and African Studies (SOAS), University of London நூலகத்தில் பார்வையிடப்பட்டது. பதிவிலக்கம் 374954. (முன்னைய பதிவிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 3530).

6 A 42

பாதுகை. டொமினிக் ஜீவா. சென்னை 14: தமிழ்ப் புத்தகாலயம், 393 பைகிராப்ட்ஸ் ரோடு, 1வது பதிப்பு, ஆகஸ்ட் 1962. (சென்னை 14: மங்கை அச்சகம், இராயப்பேட்டை).
131 பக்கம், விலை: இந்திய ரூபா 2., அளவு: 18x12 சமீ.

மல்லிகை ஆசிரியர் டொமினிக் ஜீவாவின் பதினொரு சிறுகதைகளின் தொகுப்பு. பாதுகை, நகரத்தின் நிழல், தாளக்காவடி, பாபச் சலுகை, மனத்தத்துவம், மிருகத்தனம், குறளிவித்தை, கைவண்டி, சவாரி, வாய்க்கரிசி, காகிதக்காடு ஆகிய கதைகள் இதில் இடம்பெற்றுள்ளன. இத்தொகுதியின் தலைப்புக் கதையான பாதுகையின் நாயகனான செருப்புத் தைக்கும் தொழிலாளியான முத்து முகம்மதுவே இந்நூலுக்கான முன்னுரையையும் எழுதியிருப்பது குறிப்பிடத்தக்கது. (பின்னைய பதிப்பிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 577). (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

6 A 43

பால பாடம்: நான்காம் புத்தகம். ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர். சென்னை: முதலியார் ஜி.சுப்பிரமணியம், தருமபரிபாலகர், சிதம்பர சைவப்பிரகாச வித்தியாசாலை, 29வது பதிப்பு, விகிர்தி வருடம், 1950. (சென்னை: வித்தியாநுபாலனயந்திரசாலை, நெ.300, தங்கசாலை வீதி).
382 பக்கம், விலை: இந்திய ரூபா 1-12-0.

ஆறுமுக நாவலரின் 39 மூலக் கட்டுரைகள் (வசனபாடங்கள்) இந்த நூலில் உள்ளன. அத்துடன் 40ஆவது கட்டுரையாக ஆறுமுகநாவலரவர்கள் பிரபந்தத் திரட்டு என்ற நூலில் உள்ள தமிழ்ப் புலமை என்ற கட்டுரையையும் இப்பதிப்பில் இணைத்துள்ளனர். தமிழ்ப்பள்ளிகளில் 6ம், 7ம் வகுப்புகளில் பயன்படுத்தத் தக்கதாக நாவலர் அவர்கள் இச்சிறு கட்டுரைகளை இயற்றித் தந்துள்ளார். நூலின் இறுதியில் கட்டுரைகளுக்கான குறிப்புரையும், பயிற்சி வினாக்களும் இடம்பெற்றுள்ளன. செய்யுள்களுக்கு புலோலிவாசி ஸ்ரீ மா.சுப்பிரமணியம் பதவுரை வழங்கியுள்ளார். (பின்னைய பதிப்பிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 1286). (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

6 A 44

மட்டக்களப்பு மான்மியம். எப்.எக்ஸ்.சி.நடராஜா (பதிப்பாசிரியர்). கொழும்பு: சி.பத்மநாப ஐயர், முகாமையாளர், கலாநிலையம், 175. செட்டியார் தெரு, 1வது பதிப்பு ஆகஸ்ட் 1962. (கொழும்பு 11: ஸ்டான்காட் பிரிண்டர்ஸ் லிமிட்டெட், 196 செட்டியார் தெரு).
113 பக்கம், விலை: ரூபா 1.50, அளவு: 18.5x12.5 சமீ.

இந்நூல் மட்டக்களப்பின் பண்டைய சரித்திரத்தைக் கூறுகின்றது. ஒல்லாந்தர் காலம் வரையுமுள்ள மட்டக்களப்பின் சரித்திரம் இந்நூலில் வந்தடைகின்றது. அம்பலான்துறை பாலிப்பொடி ஆசிரியர் வழங்கிய கொக்கட்டிச்சோலை தான்தோன்றீசுபரன் கோயிலிலுள்ள ஏட்டுப்பிரதி, செட்டிபாளையம் கணபதிப்பிள்ளைப் புலவர் வழங்கிய மட்டக்களப்பு மான்மியம் ஏட்டுப்பிரதி ஆகிய இப்பிரதேசத்தில் உலவிய ஏட்டுப் பிரதிகளின் அச்சுப்பதிப்பாக பதிப்பாசிரியரால் இந்நூல் வெளியிடப்பட்டது. (பின்னைய பதிவுக்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 991). (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

6 A 45

மலையகத் தமிழாராய்ச்சி மாநாடு: ஆய்வுக் கட்டுரைகள். மலர் வெளியீட்டுக் குழு. கண்டி: மலையகத் தமிழராய்ச்சி மாநாட்டு செயற்பாட்டுக்குழு, மத்திய மாகாண கல்வி (தமிழ்) இந்து கலாச்சார அமைச்சு, த.பெ.இலக்கம் 132, 2வது பதிப்பு, 2007, 1வது பதிப்பு, 1997. (கொழும்பு 14: The Prestige Printer, 138 Layards Broadway).
xii, 253 பக்கம், தகடுகள், விளக்கப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 21x14 சமீ.

திரு டி.வி.மாரிமுத்துவைத் தலைவராகக் கொண்டு எழுந்த மலையகத் தமிழாராய்ச்சி மாநாட்டின் ஆறு அமர்வுகளில் சமர்ப்பிக்கப்பட்ட 12 ஆய்வுக் கட்டுரைகள் இதில் தொகுக்கப்பட்டுள்ளன. 18.11.1996 முதல் கண்டி, மாத்தளை நாவலப்பிட்டி ஆகிய இடங்களில் இடம்பெற்ற இந்த அமர்வுகளில் மலையக சமூகம் ஒரு பன்முக ஆய்வு, மலையகத் தமிழரின் பிரச்சினை மையங்கள், இந்திய வம்சாவளியினரும் அடிப்படை

உரிமைகளும், மலையக நாட்டார் வழக்கியல், மலையக மக்கள் இலக்கியம் போன்ற அம்சங்களில் ஆய்வுக்கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட்டன. (முன்னைய பதிவிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 1256).

6 A 46

முரசம் 2008: பிரித்தானிய தமிழர் தகவல் ஏடு. இலண்டன் IG1 9RY: Murasam Publications Limited, P.O.Box 2203, Ilford, 7வது பதிப்பு, 2008. (இலண்டன்: வாசன் அச்சகம், மிச்சம்).
592 பக்கம், வண்ணத் தகடுகள், விலை: இலவசம், அளவு: 21X15 சமீ.

முரசம் 2009: பிரித்தானிய தமிழர் தகவல் ஏடு. இலண்டன் IG1 9RY: Murasam Publications Limited, P.O.Box 2203, Ilford, 8வது பதிப்பு, 2009. (இலண்டன்: வாசன் அச்சகம், மிச்சம்).
608 பக்கம், வண்ணத் தகடுகள், விலை: இலவசம், அளவு: 21X15 சமீ.

பிரித்தானியாவில் வெளியாகும் வர்த்தக வழிகாட்டி. பயனுள்ள பிரித்தானிய தொலைபேசி இலக்கங்கள், மற்றும் பல்வேறு உசாத்துணைத் தகவல்களுடன் 2002 முதல் ஆண்டுதோறும் வெளிவரும் வழிகாட்டி. வர்த்தகத் துறைகள் அகரவரிசையில் தொகுக்கப்பட்டுள்ளன. புகலிடத்தில் குறுகிய காலத்தில் தொழில், வர்த்தகம், தொழில்நுட்பம், தகவல் தொடர்பு, மருத்துவம், கல்வி போன்ற பல்வேறு துறைகளில் தமிழ்மக்கள் காட்டிவருகின்ற ஈடுபாடும், கடின உழைப்பும் திறமையும் வெற்றியும் ஒவ்வொரு பக்கங்களிலும் விரவிக்கிடக்கின்றன. (முன்னைய பதிவிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 1028).

6 A 47

முஸ்லிம் தேசமும் எதிர்காலமும். விக்ரர். தமிழ்நாடு: அடையாளம் பதிப்பகம், H15/193, 2வது மாடி, திருப்பூர் சாலை, புத்தாநத்தம் 621310, 1வது பதிப்பு April 2001. (சென்னை 4: Multicraft).
144 பக்கம், விலை: ரூபா 70., அளவு: 21.5X14 சமீ., ISBN: 81-7720-003-8.

இலண்டனிலிருந்து வெளிவரும் *உயிர்ப்பு* சஞ்சிகையின் முஸ்லிம் தேசம் பற்றிய சிறப்பிதழில் இடம்பெற்ற ஒரு ஆய்வின் நூலுருவாக்கம். இது இலங்கையின் வட-கிழக்கு முஸ்லீம்கள் ஒரு தனியான தேசம் என்ற கருத்தை ஏற்றுக்கொள்வதோடு, வடகிழக்கில் தமிழ் முஸ்லிம் மக்களிடையே இனிமேல் ஏற்படவிருக்கும் உறவுகள் சமத்துவமுள்ள இரு தேசங்களுக்கிடையிலான உறவுகளாகவே அமையவேண்டும் என்ற முடிவை முன்வைப்பதாகவும் அமைகின்றது. இந்நூலின் முன்னைய பதிப்பொன்று பெப்ரவரி 1997 இல் அக்கரைப்பற்றில் இருந்து மூன்றாவது மனிதன் வெளியீடாக வெளியிடப்பட்டுள்ளது. (முன்னைய பதிவிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 1948).

6 A 48

யாழ்ப்பாணச் சரித்திரம். செ.இராசநாயகம். யாழ்ப்பாணம்: முதலியார் செ.இராசநாயகம், 1வது பதிப்பு, 1933. (யாழ்ப்பாணம்: ஸ்ரீ சண்முகநாத அச்சகம். வண்ணார் பண்ணை).
267 பக்கம், விலை: ரூபா 1.75, அளவு: 22.5x14.5 சமீ.

நாகர் காலம், கலிங்கர் காலம், ஆரியச் சக்கரவர்த்திகள் காலம், ஆரியவரசர் இறுதிக் காலம், போர்த்துக்கேயர் ஆட்சிக்காலம், ஒல்லாந்தர் காலம் ஆகிய காலகட்டத்து யாழ்ப்பாண வரலாறு கூறும் நூல் இது. இந்நூலாக்கம் பற்றி நூலாசிரியரின் குறிப்பு பின்வருமாறு: "எம்மால் சில வாண்டுகளுக்கு முன் ஆங்கில மொழியில் Ancient Jaffna (புராதன யாழ்ப்பாணம்) என்னும் ஆராய்ச்சி நூலொன்று வெளியிடப்பட்டது. இத்தமிழ் நூல், அவ்வாங்கில நூலைத் தழுவியும், கொழும்பு, யாழ்ப்பாணமாகிய இடங்களில் அரசினர் நிலையங்களிலுள்ள புத்தகக் குறிப்புக்களைக் கொண்டும் யாக்கப்பட்டது. இந்நூலில் முதல் மூன்று அதிகாரங்களும் அதிகமாய் எமது ஆங்கில வாராய்ச்சி நூலைப் பின்பற்றியே யெழுதப்பட்டன. நான்காம், ஐந்தாம் அதிகாரங்களாகிய போர்த்துக்கேயர் காலம், வண. ஞானப்பிரகாச சுவாமியவர்கள் ஆராய்ந்தெழுதியிருப்பதைப் பின்பற்றினும், சிறப்பாக ஆங்கிலத்தில் மொழிபெயர்த்திருக்கும் போர்த்துக்கேய நூல்கள் யாவற்றையும் ஆராய்ந்து, உண்மையோடு பட்டதையே தெளிந்தெழுதியிருக்கின்றோம். ஆறாம் அதிகாரமாகிய ஒல்லாந்தர் காலம் அவ்வக்கால யாழ்ப்பாணக் கம்மந்தோர்கள் (கமாண்டர்கள்) எழுதிய அறிக்கைப் பத்திரங்களையும், அவர்கள் ஆட்சிக் காலத்தைப் பற்றிப் பிறவாசிரியர்கள் எழுதியிருக்கும் ஆங்கில நூல்களையும் ஆராய்ந்தே எழுதினோம்."(இந்நூலுக்கான பின்னைய பதிப்பிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 995).

6 A 49

யாழ்ப்பாணச் சரித்திரம். ஆ.முத்துத்தம்பிப்பிள்ளை. யாழ்ப்பாணம்: க.வைத்தியலிங்கம், நாவலர் கோட்டம், 3வது பதிப்பு, செப்டெம்பர் 1933, 1வது பதிப்பு, ஜுலை 1912, 2ம் பதிப்பு, ஓகஸ்ட் 1915. (யாழ்ப்பாணம்: நாவலர் அச்சகம்).
152 பக்கம், விலை: ரூபா 1.25, அளவு: 22x14 சமீ.

"யாழ்ப்பாணவரசு இற்றைக்கு இரண்டாயிரம் வருஷத்துக்கு முன்னர் (கி.மு.161) அரசுசெய்த ஏலேலன் காலத்திலே தொடங்கியது. இடையிடையே அரசின்றிச் சில காலமும், வழிவழியரசோடு நெடுங்காலமும் பின்னருமிடையிடையே சிங்களவரசு சில காலமும், பின்னரும் தமிழரசு வழிமுறையாகச் சிலகாலமுமாக 1700 வருஷம் சுவதேசவரசு நடந்தது. அதன்மேற் பறங்கியரசு 40 வருஷமும், ஒல்லாந்தவரசு 150 வருஷமும் நடந்தொழிய, 1796இல் ஆங்கிலவரசு வந்து நடக்கின்றது. இப்படியே யாழ்ப்பாணம் ஏறக்குறைய 2000 வருஷ சரித்திரமுடையது." (நூலாசிரியர் குறிப்புரையிலிருந்து). (இந்நூலுக்கான பின்னைய பதிப்பிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 994).

யாழ்ப்பாணச் சரித்திரம். நாவலர் கோட்டம் ஆ.முத்துத்தம்பிப்பிள்ளை. சென்னை 600017: தமிழ்மண் பதிப்பகம், 2 சிங்காரவேலர் தெரு, தியாகராய நகர், 3வது பதிப்பு, 2005. 1வது பதிப்பு, 1912, 2வது பதிப்பு, 1915. (சென்னை 6: வெங்கடேசுவரா ஆ.ப்செட் பிரின்டர்ஸ், ஆயிரம் விளக்கு).
xx, 124 பக்கம், விலை: இந்திய ரூபா 90., அளவு: 22x14 சமீ.

யாழ்ப்பாணச் சரித்திரம். நாவலர் கோட்டம் ஆ.முத்துத்தம்பிப்பிள்ளை. கொழும்பு 11: சேமமடு பொத்தகசாலை, U.G.50, Peoples Park, 3வது பதிப்பு, 2008. 1வது பதிப்பு, 1912, 2வது பதிப்பு, 1915. (கொழும்பு 11: சேமமடு பதிப்பகம்).
xx, 124 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 21x14 சமீ.

1915 இல் யாழ்ப்பாணம் நாவலர் அச்சுக்கூடத்தில் அச்சிடப்பெற்று வெளியிடப்பெற்ற வரலாற்று நூலின் மறுபதிப்பு. இதன் மீள்பதிப்பொன்று 2001இல் NewDelhi: Asian Educational Services என்ற வெளியீட்டு நிறுவனத்தினால் வெளியிடப்பட்டிருந்தது. (முன்னைய பதிவிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 994).

6 A 50

யுத்த காண்டம். தூயவன் (இயற்பெயர்: சுரேஷ்குமார்). கிளிநொச்சி: தமிழ்த் தாய் வெளியீடு, நிலா பதிப்பகம், யாழ்.சாலை, 1வது பதிப்பு, ஜுலை 2004. (கிளிநொச்சி: நிலா பதிப்பகம்).
(8), 73 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 80., அளவு: 20x14.5 சமீ.

யுத்தகாண்டம் விடுதலைப் போராளிகளின் ஒரு படையணியின் 32 கிலோமீற்றர் நகர்வினை நூணுக்கமாகச் சித்திரிக்கும் நாவலாக அமைகின்றது. ஜெயசிக்குறு இராணுவ நடவடிக்கையின் பின்புலத்தில் கதை நகர்த்தப்படுகின்றது. இந்தச் சமரில் விடுதலைப் போராட்டப் படையணி புரியும் சமர், அச்சமரிலே காயமுற்ற வீரவேங்கைகளை மருத்துவப் போராளிகள் பராமரிக்கும் பக்குவம் என்பன இந்நாவலிலே அனுபவபூர்வமாகச் சித்திரிக்கப்படுகின்றன. நூலாசிரியர் தூயவன் ஒரு மருத்துவப் போராளி. தனது போரியல் மருத்துவ அனுபவங்களை நூணுக்கமாகவும் கச்சிதமாகவும் இந்நாவலில் இழையோடவிட்டிருக்கிறார். இந்நூல் 2006இல் பாரிசில் எரிமலை வெளியீடாக மீள்பதிப்புக் கண்டது. (முன்னைய பதிவிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 4692).

6 A 51

வரகவிப் புலமை வரதபண்டிதர் அருளிச்செய்த பிள்ளையார் கதை: மூலம்.
ஆ.வரதபண்டிதர் (மூல ஆசிரியர்), வ.மு.இரத்தினேசுவர ஐயர் (பரிசோதித்தவர்). யாழ்ப்பாணம்: சண்முகநாதன் புத்தகசாலை, 1வது பதிப்பு, 1958. (யாழ்ப்பாணம்: ஸ்ரீ சண்முகநாத அச்சகம்).
32 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 21x14 சமீ.

யாழ்ப்பாணத்துச் சுன்னாகம் வரத பண்டிதர் அவர்கள், கந்தபுராணம், இலிங்க புராணம், உபதேச காண்டம், முதலிய நூல்களில் சொல்லப்பட்ட விநாயகர் மகிமைகளையும் அருட்செயல்களையும் திரட்டிப் பிள்ளையார் கதை என்னும் நூலாக்கியுள்ளார். இது பிள்ளையார் கதை, போற்றித் திருவகவல், வருக்கக்

கோவை, தத்துவஞானத் திருவகவல் ஆகிய நான்கு பிரிவுகளாக வழங்கப்பட்டுள்ளது. (பின்னைய பதிப்பிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 1113). (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

6 A 52

வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்ட பழந்தமிழர். ந.சி.கந்தையாபிள்ளை. சென்னை: ந.சி.கந்தையாபிள்ளை, 3வது பதிப்பு, 1957, 1வது பதிப்பு, 1943. (சென்னை 1: The Progressive Printers.) 166 பக்கம், விலை: இந்திய ரூபா 2.25.

ஆரியர் நாகரீகமே மேலானது என்ற பிற்போக்கு மாய்கையில் ஆழ்ந்துள்ளோருக்கு, திராவிட நாகரீகத்தின் தொன்மையை எடுத்துக்கூறுவதாக அமைந்துள்ள இந்நூல், மனிதரின் ஆரம்பகாலம், தமிழரின் கிளையினர், வழிபாடு, மொழி, தமிழர் நாகரீகம் ஆகிய 5 இயல்களில் அதைப் புரியவைக்கிறது. இந்நூல் மக்கள் ஒரு மத்திய இடத்தில் தோன்றி, காலக்கிரமத்தில் உலகின் பல பாகங்களில் சென்று வாழ்ந்ததையும், அவ்வாறு வாழத்தலைப்பட்ட வேளையில் குலங்களாகப் பிரிய நேர்ந்ததையும், பண்டைய மக்களின் ஐதீகங்களும் நாகரீகப் பாங்கும் ஒரே வகையின என்பதையும், உலக மொழிகள் எல்லாம் ஒரு ஆதி மொழியில் நின்றும் பிரிந்த சில மொழிகளிலிருந்து கிளைத்த கூட்டம் கூட்டமாகிய மொழிகள் என்றும், உலக மக்கள் குலங்கள் தோன்றுவதற்கு அடிப்படையிலுள்ளோர் தமிழர் என்றும், உலக மொழிகளுக்கெல்லாம் ஆதி மொழி தமிழ் என்றும், இந்திய நாட்டில் வாழ்ந்த தமிழ் மக்களின் பழைய கற்கால புதிய கற்கால வெண்கல நாகரிகங்கள் பற்றியும், ஆரியர் இந்தியாவுக்குள் நுழைந்த காலத்துத் தமிழரின் நாகரிகம் எது என்பது பற்றியும் விரிவான ஆங்கில நூலாதாரங்களுடன் இந்நூலில் ஈழத்துத் தமிழறிஞர் ந.சி.கந்தையாபிள்ளை அவர்கள் ஆய்வுசெய்துள்ளார். (பின்னைய பதிப்பிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 4973). (நூலியல் தகவல் - ஓ.எஸ்.எம். அலி, கொழும்பு 14).

6 A 53

வல்வெட்டித்துறை வரலாற்றுச் சுவடுகள். வல்வை ந.நகுலசிகாமணி (தொகுப்பாசிரியர்). கனடா: வல்வை வரலாற்று ஆவணக் காப்பகம், 2வது பதிப்பு, 2006, 1வது பதிப்பு, 1997. (கனடா: விவேகா அச்சகம்).
(7), 85 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25X19 சமீ.

வல்வை நகர மக்களின் பாரம்பரியம், அரசியல், கலாச்சாரம், பண்பாடு பற்றிய வரலாறு கூறும் இந்நூலின் முதலாவது பதிப்பில் 53 ஆக்கங்கள் தொகுக்கப்பட்டிருந்தன. 9 ஆண்டுகளுக்குப் பின்னர் வெளிவரும் இவ்விரண்டாம் பதிப்பில் பின்னைய 9 ஆண்டுகளிலும் சேகரித்தவை உள்ளிட்ட 100 ஆக்கங்கள் இடம்பெற்றுள்ளன. அனைத்தும் வல்வை நகரையும் அந்த மண்ணின் மக்களையும், அங்கு இடம்பெற்ற வரலாற்றுச் சம்பவங்களையும் ஆவணப்படுத்தும் பத்திரிகைத் தகவல்கள், கட்டுரைகள் என்பனவாகும். ஒரு பிரதேசத்தின் சமூக வரலாற்றை ஆவணப்படுத்தும் பாரிய முயற்சி இது. (முன்னைய பதிப்பிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 2963).

6 A 54

வழிகாட்டலும் ஆலோசனையும். விமலா கிருஷ்ணபிள்ளை. கொழும்பு 11: சேமமடு பொத்தகசாலை, U.G.50, Peoples Park, 4வது பதிப்பு, 2009, 1வது பதிப்பு, 2001, 2வது பதிப்பு, 2003, 3வது பதிப்பு, 2006. (கொழும்பு 11: சேமமடு பதிப்பகம்).
276 பக்கம், விளக்கப்படம், விலை: ரூபா 500., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 955-1857-35-6, CBCN: 2009-04-02-035.

பாடசாலைகள் கல்வி அறிவையும், சிறந்த உளப்பாங்கையும், பயனுள்ள திறன்களையும் வழங்கும் இலக்குகளுடன் இயங்கிவருகின்றபோதிலும், இன்றைய சமூக, பொருளாதார, கலாச்சார மாற்றங்கள் காரணமாக, மாணவர்களுக்கு இன்று பல்வேறு துறைகளில் வழிகாட்டலும் ஆலோசனைகளும் தேவைப்படுகின்றன. தொழில், கல்வி, பாடப் பிரிவுகளைத் தெரிதல் போன்றவற்றில் மட்டுமன்றி மாணவர் அடைகின்ற விரக்திகள், பதட்டங்கள், அவர்களிடம் எழுகின்ற அந்தரங்கமான பிரச்சினைகள் பற்றி அவர்களுக்கு நல்வழிகாட்ட, இப்பணியில் கோட்பாட்டு அறிவும் செயற்பாட்டு அனுபவமும் மிக்க ஆசிரியர்கள் தேவைப்படுகின்றனர். இத்துறைசார் சேவையை இந்நூல் பூர்த்திசெய்கின்றது. முன்னைய பதிப்புகள் நூலாசிரியரால் வெளியிடப்பட்டன. சேமமடு பதிப்பகத்தினால் வெளியிடப்படும் முதற் பதிப்பு இந்நூலாகும். (முன்னைய பதிவிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 4221).

6 A 55

விட்டுணு சன்மாவின் இதோபதேசம். நவாலியூர் சோ.நடராசன். யாழ்ப்பாணம்: சோ. நடராசன், நவாலி, 2வது பதிப்பு, 1963, 1வது பதிப்பு, 1961. (யாழ்ப்பாணம்: வனிதா அச்சகம், 49, கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்).
209 பக்கம், விலை: ரூபா 2.50, அளவு: 18.5x12.5 சமீ.

விட்டுணு சர்மா உத்தரப் பிரதேசத்தில், வாரணாசியில் கி.மு. மூன்றாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். சமஸ்கிருதத்தில் துறைபோகக் கற்றிருந்த இவர் காசி இளவரசரின் ஆஸ்தான குருவாகப் பணியாற்றிச் சிறப்புப் பெற்றவர். பஞ்சதந்திரக்கதைகள் இவரால் தனது மாணாக்கர்களுக்கு அரசியல் அறிவினை வளர்ப்பதற்காக உருவாக்கப்பட்டன. Mitrabhed, Mitrasamprapti, sandhi, vigraham and Apareekshitkarakam ஆகிய ஐந்து பெருந் தலைப்புகளுள் (பஞ்சதந்திரங்கள்) படிப்பினையூட்டும் குறுங்கதைகளை அவர் இயற்றியிருந்தார். இந்நூலினுள் இடம்பெற்றுள்ள மித்திரலாபம் (நண்பரையடைதல்), சுகிர்ப்பேதம் (நண்பரைப் பிரிதல்), விக்கிரகம் (போர்), சந்தி (சமாதானம்) ஆகிய நான்கு அங்கங்களில் சமஸ்கிருத இலக்கியமான இதோபதேசம் தரும் குறுங்கதைகள் (பஞ்சதந்திரக் கதைகள்) சொல்லப்பட்டுள்ளன. (பின்னைய பதிப்பிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 3049).

□□□□□□□

தலைப்பு வழிகாட்டி

அ.ந.க. ஒரு சகாப்தம். 5873
அக்கினி காரிய விதி 5089
அக்கினி காரியம். 5090
அகங்கார மங்கையின் அடக்கம் 5582
அகத்திய மாமுனிவராற் சொல்லப்பட்ட அகத்தியர் இலங்கை அல்லது அதிபூர்வீக இலங்கைச் சரித்திரம்: முதற் பகுதி. 5900
அகத்திய முனிவர் அருளிச்செய்த வைத்திய பூரணம் 5419
அகதி: நெடுங்கவிதை. 6 A 01
அகிலா உனக்காக. 5704
அச்சு ஊடக செய்தி அறிக்கையிடல். 5020
அசோகமாலா. 5583
அடங்காப்பற்று (வன்னி) வரலாறு: பாகம் 2. 6 A 02
அடங்காப்பற்று (வன்னி) வரலாறு: பாகம் 4. 5937
அடியார் கதைத் தொகுதி 1-4. 5091-5094
அடியார்க்கு நல்லார் வரலாற்று ஆராய்ச்சி. 5095
அண்டவெளியிலே அதிசய யாத்திரை. 5473
அண்ணல் வருவானா? 5494
அண்ணா பொன் ஏடு 1959-2009. 5863
அண்மைக்கால ஈழத்துச் சிறுகதைத் தொகுப்புகள். 5740
அண்மைக்கால நவீன இலக்கியப் போக்குகள் (வட மாகாணம்). 5741
அதிபர் உயர்திரு அம்பலவாணர் விஸ்வநாதர் இராசரத்தினம் அவர்தம் மாட்சிமை நல்கும் பொன்விழா மலர் 1939-1989. 5417
அந்த நதியும் அதன் மக்களும்... 5705
அந்த நாள் எந்த நாளோ. 5791
அந்த நாளை அடைவதற்காய்: பாகம் 1. 5495
அபிராமியந்தாதி மூலமும் உரையும். 5096
அபிவிருத்தியும் கல்வியும். 5325

அம்பாள் கீர்த்தனைகள். 5423
அம்மா என் ஹைக்கூ: ஹைக்கூ கவிதைகள். 5496
அம்மா: தேர்ந்த கவிதைகள் சில. 5497
அமரர் மகேஸ்வரன் அவர்களுக்குப் பாராளுமன்றம் சூட்டிய புகழாரம். 5845
அமரன்: கலாபூஷணம் த.சித்தி அமரசிங்கம் அவர்களின் கலைவாழ்வு. 5874
அமுத மொழிகள் ஆயிரம் (மேற்கோளாயிரம்). 5043
அமெரிக்க-கத்தோலிக்க நடவடிக்கை: கூட்டுச்சதி. 5905
அர்த்தமுள்ள உறவுகள்: பரிசுபெற்ற நாடகங்கள். 5584
அரசறிவியல். 5277
அரசறிவியல். 5278
அரசறிவியலின் அடிப்படைத் தத்துவங்கள். 5279
அரசியல் அறிக்கை: தமிழீழ தேசிய விடுதலை முன்னணி. 5280
அருட்கொடை: நபி பெருமானாரின் பொன்மொழிக் களஞ்சியம். 5225
அருட்பா (மூலம்). 5097
அருள் படைத்த வேலவா. 5098
அருளமுத வள்ளம். 5099
அல்-ஹிக்மா: வெள்ளிவிழா மலர். 5354
அலங்கார ரூபன் நாடகம்: தென்மோடிக் கூத்து. 5585
அழகியது: பாட்டும் குறிப்பும். 5498
அழகியல். 5029
அழகு: கவிதைகள். 5499
அழியாத கோலங்கள் 2006. 5355
அற்புதமான வானம்: சிறுவர் சிந்தனைக் கதைகள். 5484
அறிவஞ்சலி: தோழர் தம்பு இளையதம்பி நினைவுமலர். 5853
அறிவியல் சிந்தனை அலைகள். 5001
அறிவுக் கட்டுரைகள்: பகுதி 1. 5002
அறிவுச் சுரங்கம். 5003
அறிவுசார் பொருளாதாரமும் கல்வியும். 5295
அறுவடை. 5500
அன்பில் மலர்ந்த அமரகாவியம். 5586
அன்னை மண். 5636
அன்னை மாமரி வியாகுல புலம்பலும் ஒப்பாரியும் துக்கராகமும் ஒப்பும். 5084
அன்னை லலிதாம்பிகை அருட்பேராயிரம். 5100
அன்னை வீடு. 5637
அனர்த்த முகாமைத்துவ திட்டம். 5322
அனர்த்த முகாமைத்துவம் ஒரு அனுபவ அணுகுமுறை. 5323
அனைத்துலக இஸ்லாமியத் தமிழ் இலக்கிய மூன்றாவது மாநாட்டுச் சிறப்பு மலர்: இஸ்லாமியத் தமிழ் இலக்கியக் கட்டுரைகள். 5962
அனைத்துலக நீதிச்சபைமுன் இலங்கைத் தமிழர் பிரச்சினை 5906
அனைவரின் மேம்பாடு அல்லது சர்வோதயம். 5315
ஆசாரக் கோவை. 5226
ஆசிய ஜோதி. 5629
ஆசிய ஜோதி ஸ்ரீ நேருவுக்கு. 5907
ஆசிரியத் தொழில். 5326
ஆசிரியரை விளைதிறன் மிக்கவராக்கல். 5327
ஆண்கள் விற்பனைக்கு. 5706
ஆணாதிக்கமும் சமூக ஒடுக்குமுறைகளும். 5251
ஆணாதிக்கமும் மார்க்சியமும். 5252
ஆத்ம விசாரம். 5638
ஆத்ம ஜோதி: செல்வி மகேஸ்வரி வேலாயுதம் நினைவு மலர். 5854

ஆத்மாவைத் தொலைத்தவர்கள். 5639
ஆதிசங்கரர் அருளிய சிவானந்த லகரி. 5101
ஆபஸ்தம்ப பூர்வப்பிரயோகம் (முதற் பாகம்). 5050
ஆபிரிக்க அனுபவங்கள்: பிரயாணக் கட்டுரைகள். 5820
1948 முதல் 1996 வரை: ஈழத்தமிழர்களின் உரிமைப்போர் வரலாறு. 5963
1999ம் ஆண்டு சர்வதேச மகளிர் தினவிழா சிறப்பு மலர். 5253
ஆருத்திரா தரிசனம் (சூரியோதய வழிபாடு). 5102
ஆறுகள் பின்நோக்கிப் பாய்வதில்லை. 5707
ஆறுமுக நாவலர் புராணம். 5838
ஆறுமுகமான பொருள். 5103
இக்கால வாணிபமுறை. 5359
இசையால் இளகா இதயமெது. 5424
இசையும் சமூகமும். 5425
இடிகரை மண்: நாடகங்கள். 5587
இணைப் பழமொழிகள் (சிங்களம்-தமிழ்). 5369
இதய மொழி. 5501
இதயமுள்ள பாரதி (கவிதைகள்). 5502
இது எங்கள் தேசம். 5640
இது ஒரு வாக்குமூலம். 5503
இது நதியின் நாள். 5504
இதோபதேசம். 5044
இந்திய அழகியல். 5030
இந்தியம், ஈழம், நக்சலியம். 5964
இந்து ஒளி: அகில இலங்கை இந்து மாமன்றம் பொன்விழா சிறப்பு மலர் பாகம் 1. 5198
இந்து ஒளி: அகில இலங்கை இந்து மாமன்றம் பொன்விழா சிறப்பு மலர் பாகம் 2. 5199
இந்து சமய வரலாறு. 5104
இந்துத்துவம், இந்துசமயம், சமூக மாற்றங்கள். 5105
இந்துத்துவமும், இந்து விடுதலை நெறியும். 5200
இயற்கை அனர்த்தங்களும் இடர் முகாமைத்துவமும். 5397
இரத்தச் சுவடு. 5908
இரவல் தாய்நாடு. 5708
இரவிந்திரநாத் தாகூரின் கீதாஞ்சலி. 5804
இராம காதை: கம்பராமாயணக் கதைச் சுருக்கம். 5490
இராம நாடகம்: விளக்கங்களுடன். 5588
இராமன் கதை. 5462
இராமாயண சமூகம். 5235
இராமாயணச் சுருக்கம்: பாலபோதினி உப பாடப் புத்தகம் -4. 5384
இராஜா தேசிங்கு: பாலபோதினி உப பாடப் புத்தகம் -2. 5385
இரு நாடகம்: பொருளோ பொருள், தவறான எண்ணம். 5589
இரு மகாகவிகள். 6 A 03
இருண்ட காலத்தில் தொடங்கிய என் கனவுகளும் எஞ்சி இருப்பவைகளும். 5505
இருது சங்கார காவியம்: குறிப்புரையுடன். 5488
இருபதாம் நூற்றாண்டின் நவீன அடிமைத்தனம்: மலையக மக்களின் வரலாறு. 5938
இல்லறச் சோலையில் கணவன் - மனைவி. 5360
இலக்கணத் தொகுப்பு. 5378
இலக்கிய அமுதம். 5742
இலக்கிய உலகம். 6 A 04
இலக்கிய வழி. 6 A 05
இலக்கியத் திறனாய்வுக் கோட்பாடுகள். 5743

இலக்கியத் தென்றல். 5744
இலக்கியப் பூக்கள். 5875
இலங்கை அச்சத்திற்குள் வாழ்தல்: இலங்கையில் வடக்குக் கிழக்கில் சிறார் படையினர். 5965
இலங்கை அரசியலும் பொருளாதாரமும். 5281
இலங்கை: இயற்கைப் பேரழிவு தேசத்தின் சீரழிவு. 5909
இலங்கை இனமோதுகையின் சர்வதேசப் பரிமாணம். 5910
இலங்கை எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், கலைஞர்களின் விபரத்திரட்டு: தொகுதி 9. 5833
இலங்கை தமிழரின் எழுச்சி வரலாறு. 5911
இலங்கை: விமர்சனக் கருத்துகளை ஒடுக்குதல். 5021
இலங்கைச் சரித்திரம்: இரண்டாம் பகுதி: ஒல்லாந்தர் காலம் 1658-1796. 5901
இலங்கைச் சரித்திரம்: மூன்றாம் பகுதி: ஆங்கிலேயர் காலம் 1795-1947. 5902
இலங்கைத் தமிழர் வரலாற்றின் சில பக்கங்கள். 5912
இலங்கைத் தீவு. 5821
இலங்கைப் புவியியல். 5828
இலங்கைப் பெருந்தோட்ட தொழிற்சங்க இயக்கங்கள். 5298
இலங்கையில் இன முரண்பாடும் பௌத்தமும் சமாதானமும். 5913
இலங்கையில் இனவாதமும் சாதிபேதமும். 5914
இலங்கையில் உயர்கல்வி: பல்கலைக்கழகக் கல்வியின் வளர்ச்சியும் பிரச்சினைகளும். 5328
இலங்கையில் தமிழ்ப் படங்கள். 5447
இலங்கையில் தமிழர்: ஒரு முழுமையான வரலாறு (கி.மு.300-கி.பி.2000). 5939
இலங்கையின் அரசியல் நிலை: சொற்பொழிவு. 5915
இலங்கையின் அரசியல் யாப்புகள். 6 A 06
இலங்கையின் அரசியலும் அரசியற் கட்சிகளும்: பொதுமக்கள் கைநூல். 5282
இலங்கையின் அரசியற் திட்டங்களின் பரிணாம வளர்ச்சி. 5309
இலங்கையின் இன்றைய அரசியல் நிலைமையும், தேசிய சிறுபான்மை இனப் பிரச்சினையும். 5916
இலங்கையின் கல்வி வரலாறு. 5329
இலங்கையின் புராதன சைவாலயங்கள்: கதிர்காமம். 5202
இலங்கையின் புராதன சைவாலயங்கள்: நயினை நாகேஸ்வரி. 5201
இலங்கையின் புராதன நகரங்களும் சரித்திரச் சான்றுகளும். 5822
இலங்கையின் வளங்களும் பயன்பாடுகளும். 5302
இலண்டன் சைவ மாநாடு (பதினொராவது) சிறப்புமலர். 5203
இலையுதிர் வசந்தம். 5506
இவர்கள் நம்மவர்கள் பாகம் 1-4. 5876-5879
இளங்கோவின் கனவு. 5745
இளமை எனும் பூங்காற்று. 5641
இளமைப் பருவத்திலே. 5485
இளவேனில் மீண்டும் வரும். 5642
இறுதி மூச்சு: வரலாற்று நாடகம். 5590
இறுதிப் பரிசு. 5591
இறையியல் தத்துவமும் வழிபடும் முறைகளும்: பகுதி 2. 5051
இறையியல் தத்துவமும் வழிபடும் முறைகளும்: பகுதி 3. 5052
இன்பத் திருப்புகழ். 5106
இன்றைய இதழியல். 5022
இனத்துவ முரண்பாடும் மலையக மக்களும்: பல்பக்கப் பார்வை. 5917
இனந்தெரியாதவர்கள்: கவிதைகள். 5507
இஸ்லாமிய கலாச்சாரம். 5275
இஸ்லாமும் தமிழும். 5746
ஈச்சுர நிச்சயம். 5107

ஈட்டிமுனையில் இரும்பு மனிதன். 5918
ஈமானின் கிளைகள். 5227
ஈழ நாட்டுத் திருப்புகழ்த் திருவமுதம். 5108
ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி: கட்சியின்- ஸ்தாபன அமைப்பு, ஒழுங்குமுறைகள், சட்டங்கள் தொடர்பான அடிப்படை விதிகள். 5283
ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் இரண்டாவது காங்கிரசில் செயலாளர் நாயகம் தோழர் சுரேஷ் பிரேமச்சந்திரன் அவர்கள் ஆற்றிய தொடக்கவுரை. 5921
ஈழ மண்டலத் திருத்தல தேவாரமும் திருப்புகழும். 5109
ஈழ வரலாற்று மரபில் யாழ்ப்பாண வைபவமாலை. 5903
ஈழ விடுதலைக்கு முட்டுக்கட்டைகள் அமெரிக்க-இந்திய வல்லரசுகளே. 5966
ஈழ வேந்தன் சங்கிலி. 5967
ஈழத் தமிழரைக் காப்போம். 5968
ஈழத் தமிழறிஞர் தாமோதரம்பிள்ளை. 5969
ஈழத்தில் தமிழ் நாவல் வளர்ச்சி. 5747
ஈழத்தில் நாடகமும் நானும். 5443
ஈழத்தில் யான் கண்ட சொற்செல்வர்கள். 5880
ஈழத்து அரசியல் நாவல்: விவாதத்திற்கான சில அடிப்படைகள். 5748
ஈழத்து அறப்போரும் உரிமை மறுப்போரும். 5919
ஈழத்து இதழியலின் வரலாறும் மதிப்பீடும்: ஆய்வரங்கக் கட்டுரைகள் 2003. 5023
ஈழத்து தமிழ்ச் சிறுகதை வரலாறு. 6 A 07
ஈழத்து நவீன கவிதை: புதிய உள்ளடக்கங்கள், புதிய தரவுகள், புதிய போக்குகள். 5749
ஈழத்து நாட்டார் பாடல்கள். 5364
ஈழத்து நாடோடிப் பாடல்கள். 5365
ஈழத்துச் சித்தர்கள். 6 A 08
ஈழத்துச் சிதம்பரம். 5204
ஈழத்துச் சிறுவர் இலக்கியக் களஞ்சியம். 5451
ஈழத்துச் சிறுவர் பாடல் களஞ்சியம். 5452
ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாறு: சங்க காலம் முதல் 19ஆம் நூற்றாண்டு வரை: பாகம் 1. 5750
ஈழத்துத் தமிழ் நாவல்: வளமும் வளர்ச்சியும். 5751
ஈழநாட்டுச் செஞ்சொற் கவி இன்பம். 5752
ஈழநாட்டுத் தமிழ் விருந்து. 5753
ஈழநாடு சிறுகதைகள்: தொகுதி1. 5643
ஈழப் பிரச்சினையில் இந்திய உளவு நிறுவனங்களின் சதி. 5970
ஈழப் புரட்சி அமைப்பு 30 ஆண்டுகள். 5920
ஈழம் என்றால் புலிகள், புலிகள் என்றால் ஈழம்: திருமாவளவனின் உரைவீச்சு. 5972
ஈழம் தந்த இனிய தமிழ்க்கொடை. 5973
ஈழம்: தமிழரின் தாயகம். 5971
ஈழவர் திசைகாட்டி: தேசபிதா தோழர் இரட்ணா. 5857
உடல்நல தொகுப்பு: உடல்நல மேம்பாட்டுத் திட்டம். 5404
உண்மை சார்ந்த உரையாடல்: காலச்சுவடு நேர்காணல்கள் 1998-1999. 5974
உண்மை நெறி விளக்கம். 5053
உணர்வுகள். 5508, 5592
உணவாதாரம் உயர உழைப்போம். 5303
உபநிடதச் சிந்தனைகள். 5054
உமர் கய்யாம்: நாலடி. 5802
உமாபதி சிவாசாரியார் அருளிய திருவருட்பயன்: உரையுடன். 5055
உயிர் நிழல் கலைச்செல்வன். 5834
உயிரிளங்குமரன்: நாடகம். 5593

உயிரின் நிழலாய்... கலைச்செல்வன். 5835
உராய்வு. 5509
உரையாடல்: கவிதை அனுபவம். 5754
உல்லாசப் பயணம். 5474
உலக வரலாறு: முதற் பாகம். 5815
உலக வரலாறு: இரண்டாம் பாகம். 5816
உலகத் தமிழர் கையேடு. 5018
உலகமயம் பண்பாடு சமூக மாற்றம். 5236
உலகின் மூன்றாவது கண். 5024
உள்மன யாத்திரை. 5510
உள்ளத்தில் மட்டும். 5709
உள்ளுக்குள்: குறுங்கவிதைத் தொகுப்பு. 5511
உளவியல் முகங்கள். 5032
உறவைக் காக்க எழுக. 5975
உனக்கொன்றுரைப்பேன். 5792
ஊராண்மை: சென் ஜோன்ஸ் முதலுதவி அணி ஆண்டு மலர் 1992. 5356
ஊருக்கு நாலு பேர். 5710
ஊறும் அமைதி. 5512
எங்கள் வழி. 5513
எங்கே போகிறோம். 5644
எண்ணக் கோலங்கள். 5793
எண்ணங்களின் வண்ணங்கள். 5514
எண்ணெய்ச் சிந்து: மூலம். 5366
எம்.சி. ஒரு சமூக விடுதலைப் போராளி. 6 A 09
எமது குருநாதர் சிவயோக சுவாமிகள். 5839
எரிகின்ற தீபங்கள்: சிறுகதைத் தொகுப்பு. 5645
எரிச்சல்: கவிதைத் தொகுப்பு. 5515
எரிநெருப்பிலிருந்து. 5516
எழுதாத உன் கவிதை: தமிழீழப் பெண்கள் கவிதைகள். 5517
என் கல்லறையில் தூவுங்கள். 5794
என் பிரிய ராஜகுமாரிக்கு. 5518
என் மனப் பதிவுகள்: வி.என்.மதிஅழகன் பேசுகிறேன். 5836
என்றும் எங்கள் இதயங்களில். 5865
எனது பயணங்களில். 5755
எஸ்.எம்.ஏ.ஹசன்: தற்கால முஸ்லிம் சமூக-பண்பாட்டியல் வரலாற்றில் ஓர் அத்தியாயம். 5881
எஸ்.பொ கதைகள். 5646
எஸ்தாக்கியர் நாடகம். 5594
ஏதிலிகள்: சிறுகதைகள். 5647
ஏர் விழா. 5809
ஏறாவூர் வரலாறு. 5948
ஏன், எப்படி? நாளாந்த விஞ்ஞான சாஸ்திர விளக்கம். 5395
ஏன் வந்தாய்? 5648
ஏனிந்தப் பெருமூச்சு? 5519
54 பழந்தமிழ் இலக்கிய நூல்களில் உள்ள சிறப்புத் தகவல்கள். 5756
ஒப்பியல் பொதுநிர்வாகம்: தெரிவுசெய்யப்பட்ட நாடுகளின் சிவில் நிர்வாக முறைமை. 5311
ஒரு அகதியின் கைரேகை. 5520
ஒரு கலைஞனின் கதை. 5595
ஒரு காவியத்தின் தலைவி. 5711
ஒரு துளி. 5596

ஒரு படைப்பாளியின் வாழ்வும் நினைவுகளும்: அமரர் எம்.நாமதேவன் நினைவு மலர். 5882
ஒரு பெண்ணென்று எழுது. 5649
ஒரு மணல்வீடும் சில எருமை மாடுகளும். 5650
ஒரு வட்டத்துள் சில புள்ளிகள். 5521
ஒரே இரத்தம். 5805
ஓ கனடா. 5712
ஓநாய்க் குருளை. 5324
ஓர் அபலையின் டயரி: சமூக நாவல். 5713
ஓவிய அறநெறி. 5422
கட்டிளம்பருவம்: வாழ்வில் ஒரு வசந்தகாலம். 5415
கட்டுநாயக்க ஏற்றுமதி பதனிட்டு வலயத்தின் உழைப்புப் படை முகங்கொடுக்கும் சமூக பொருளாதார பிரச்சினைகள் பற்றிய அறிக்கை. 5296
கடமையே கண்ணாக: கவிதைகள். 5522
கடல்கோள் காவுகொண்ட சமூக உளம். 5405
கடவுள் வாழ்த்துப் பா. 5110
கண்ணகி: மணிவாசக உப பாட புத்தகம். 5386
கண்ணகி கதை. 5491
கண்ணன் கதை: மணிவாசகம் உப பாட புத்தகம். 5387
கண்ணனும் இராமனும்: சிறுவர் கதைகள். 5463
கண்ணாடி முகங்கள். 5523
கண்ணில் தெரிகின்ற வானம். 5651
கண்ணீர்ப் பயணங்கள்: கவிநூல் பாகம் இரண்டு. 5524
கதிர்காம மாலை. 5111
கதிர்காம மான்மியம். 5205
கதிரேசன் பாமாலை. 5112
கதிரைச் சிலேடை வெண்பா. 5113
கதைக் கோலங்கள். 5464
கந்த புராண கலாசாரம். 5056
கந்த புராண போதனை. 5114
கந்த புராணம் யுத்த காண்டம். 5115
கந்தக் கதம்பம். 5116
கந்தவனநாதர் நான்மணிமாலையும் பதிகமும் திருப்பள்ளி எழுச்சியும். 5206
கம்பனது கதாபாத்திரங்கள். 5757
கம்பிகள் ஊடாக. 5831
கர்நாடக சங்கீதம்: பகுதி 1. 5426
கர்னாடக சங்கீதம்: தரம் 10: வழிகாட்டற் குறிப்புகள். 5427
கர்னாடக சங்கீதம்: வழிகாட்டற் குறிப்புகள். 5428
கருமணியிற் பாவாய். 5630
கருமுகில் தாண்டும் நிலவு. 5652
கல்வளையந்தாதி. மூலமும் உரையும். 5117
கல்வி செயற்பாட்டில் புதிய செல்நெறிகள். 5330
கல்வி நிர்வாகமும் முகாமைத்துவமும். 5331
கல்வி நிறுவன நூலகங்கள். 6 A 10
கல்விச் சமூகவியல். 5332, 5333
கல்வியியலும் கணிப்பீட்டியலும். 5334
கல்வியியலும் நிகழ்பதிவுகளும். 5335
கல்வியியற் பதிவுகளும் பண்புசார் விருத்தியும். 5336
கல்வியும் உளவியலும் பகுதி 2. 5337
கல்வியும் பால்நிலைச் சமத்துவமும். 5338

கலாசார விலங்குகள்: சிறுகதைத் தொகுப்பு. 5653
கலைஞனை பாடும் குயில்கள். 5870
கலைஞானம்: நல்லூர் பிரதேசக் கலைஞர் விபரத் திரட்டு. 5867
கலைத் திட்டம். 5339
கலைந்துபோன மேகங்கள். 5714
கவிதைகளால் அர்ச்சனைப் பூக்கள். 5525
கவிதைச் செல்வம். 5526
கள்ளத் தோணிக்குத் தீர்ப்பு. 5715
கள்ளியங்காட்டுச் செப்பேடுகள்: பாகம் 1. 5961
கற்பூர விநாயகர். 5207
கற்றல் கற்பித்தல்: மேம்பாட்டுக்கான வழிமுறைகள். 5340
கறுப்பு யூலை '83: குற்றச்சாட்டு. 5940
கன்னி பெற்ற கடவுள்: வானொலி இசை உரை நாடகச் சித்திரம். 5597
கன்னியாதானம். 5654
கனகசெந்தி கதாவிருது பெற்ற சிறுகதைகள்: தொகுதி 1 (2003-2007). 5655
கனகி புராணம். 5527
கனகு. 5716
கனடா துர்க்கேசுவரம் அன்னை துர்க்கை அடிதொழு வெண்பா. 5208
கனலாய் எரிகிறது. 5528
கனவு மெய்ப்பட வேண்டும். 5717
காசத்தினை நிறுத்தும் உத்தி. 5412
காசி ஆனந்தன் பக்திப் பாடல்கள். 5529
காசியாற்றுப் படை. 5118
காசிவாசி சி.செந்திநாத ஐயர். 5883
காட்டில் கலவரம். 5475
காத்தான்குடி வரலாறு: ஓர் அறிமுகம். 5949
காந்திய நோக்கு. 5237
காந்தீயத்தில் மலர்ந்தது அவள் வாழ்வு. 5718
கார்த்திகேசு சிவத்தம்பியின் நேர்காணல்கள்: தொகுதி 1. 5976
காரைநகர் களபூமி திக்கரை முருகன் இராஜகோபுர கும்பாபிஷேக மலர் 2008. 5209
காரைநகர் திண்ணபுர மான்மியம். 5210
காலச் சுவடு நேர்காணல்கள் 1995-1997. 5977
காலச் சுவடுகள். 5884
காற்றின் குழந்தைகள். 5465
காற்றினில் ஏறி விண்ணையும் சாடலாம். 5656
காற்றுவழிக் கிராமம் 2005. 5950
காற்றைக் கானமாக்கும் புல்லாங்குழல். 5530
கிடுகுவேலி. 6 A 11
கிம் இல் சுங். 5025
கிராதார்ச்சுனீயம் (காப்பியம்). 5489
கிரிஜா: சிறுவர் கதை. 5476
கிழக்காபிரிக்கக் காட்சிகள்: பிரயாணக் கட்டுரைகள். 5823
கிறீஸ்தவக் கீர்த்தனைகள். 5429
கிறீஸ்துவர் ஆராய்ச்சியும் சைவநன்மக்கள் கொள்கையும்: இரண்டாம் பாகம். 5119
கீதை அமுதம். 5045
கீதை நிழலில். 6 A 12
குடும்ப ஆற்றுப்படுத்தல். 5033
குடும்ப உறவுகள். 5238
குடையும் அடைமழையும். 5531

குமரகுருபர சுவாமிகள் அருளிச்செய்த திருச்செந்தூர்க் கந்தர் கலிவெண்பா. 5120
குமாரபுரம். 5719
குருதி வரையும் தேசம். 5532
குருநகர் யோகியின் படைப்புகள். 5795
குருவும் சீடர்களும். 5453
குலமலர்: காவியம். 5631
குவேனி. 6 A 13
குழந்தை உளவியலும் கல்வியும். 5341
குறள் கூறும் மலையகம். 5533
குறிஞ்சித் தென்னவன் கவிச்சரங்கள். 5534
கூட்டாட்சி பரிமாணங்களும் இலங்கை சிறுபான்மையினரும். 5284
கூட்டுறவு அல்லது ஐக்கிய வாழ்வு. 5300
கூடியே முன்னேறுவோம். 5454
கெரில்லாப் போர் விரகுகள். 5314
கே.டானியல் கடிதங்கள். 5978
கே.டானியல் படைப்புகள்: தொகுதி ஒன்று. 5720
கேணிப்பித்தன் கதைகள். 5657
கேணிப்பித்தன் கவிதைகள். 5535
கேள்விகள். 5979
கைலாசம் கண்டேன். 5824
கைலாயமாலை. 5904
கொடுங்கோலன் ஜயவர்த்தனே. 5980
கோபதி சிறுகதைகள். 5658
கோபுர வாசல். 5598
கௌதமபுத்தர் அடிச்சுவட்டில். 6 A 14
சக்தி: அவள் தோற்றமும் மாற்றமும். 5121
சகலகலாவல்லி மாலை. 5122
சகுந்தலை சரிதை: பாலபோதினி உபபாட புத்தகம்-10. 5388
சங்ககாலத் திருமண நடைமுறைகள். 5361
சங்கானைச் சண்டியன். 5721
சங்கானைப் பட்டினம். 5951
சங்கிலி. 6 A 15
சங்கிலி இராசன் டிறாமா அல்லது தன்வினை தன்னைச் சூழ்ந்த நாடகம். 5599
சட்டமும் சமூகமும்: பெண்களின் உரிமைகள். 5304
சட்டமும் தமிழும். 5305
சத்தியேஸ்வரி: ஒரு தமிழ் நாடகம். 5600
சதியை வென்ற சாதுரியம். 5477
சதுர்வேத தாற்பரிய சங்கிரகம் (மூலம்): விருத்தம் உஅஎ (287). 5057
சந்திப்பும் சிந்திப்பும். 5832
சந்மார்க்க போதினி: ஒன்பது பாகங்கள் அடங்கியது. 5981
சம்மதமில்லாத மௌனம். 5536
சமகால கல்வி முறைகள் ஒரு விரிநிலை நோக்கு. 5342
சமய ஒழுக்கம் 5058
சமய குரவர் சந்தான குரவர் சரித்திரச் சுருக்கம். 5840
சமயக் கட்டுரைகள். 5123
சமயங்களின் தாயனைய சிவநெறி. 5124
சமயாசாரியர் சந்தனாசாரியர் சரித்திர சங்கிரகம். 5841
சமாதானத்திற்கான ஒரு குரல். 5922
சமாதானத்தின் பகைவர்கள். 5537

சமூக விஞ்ஞான ஆய்வுகள். 5239
சமூக விரோதி. 5803
சமூகக் கல்வியும் வரலாறும்: தரம் 11. 5240
சமூகவியல் கோட்பாட்டு மூலங்கள்: அமைப்பும் இயங்கியலும். 5241
சமூகவியல் கோட்பாட்டுத் தடங்கள்: பாகம் 1. 5242
சமூகவியலும் இலக்கியமும். 5758
சர்வதேச தாபனங்களும் ஒப்பந்தங்களும். 5294
சரித்திரத்தினிலே சகோதரிகள் ஐவர். 5632
சலங்கையின் நாதம். 5601
சாத்திரி: ஓர் அரிய சோதிடநூல். 5080
சாதித் தாயின் சிலம்பொலி. 5266
சாதியா சதியா? 5267
சாதியின்மையா சாதிமறைப்பா? 5268
சாந்திரகாசம். 5602
சார்புநிலைப் பொருளாதாரம்: ஓர் அறிமுகம். 5297
சார்வாகன்: பேராசிரியர் சி.மௌனகுரு அவர்களது படைப்புக்கள் சில. 5796
சாவித்திரி: பாலபோதினி உபபாட புத்தகம்-8. 5389
சான்றோன் எனக்கேட்ட தாய். 5478
சி.புஸ்பராஜா படைப்புகள்: சிறுகதைகளும் கவிதைகளும். 5797
சிங்ககிரிக் காவலன். 5603
சிங்கள தமிழ் பேச்சுப் பயிற்சி 1. 5375
சிங்களமே சீறிப்பார். 5923
சித்தார்த்த யசோதரா: சிங்கள சரித்திர நாவல். 5810
சித்திரச் சுடரொளி: கலைமகள் விளக்கம். 5125
சித்திரிப்பு எழுத்துக்கள்: ஓர் அறிமுகம். 5026
சிதம்பர சுப்பிரமணியன் புகழ்க் கதம்பம். 5982
சிதம்பர மான்மியம். 5211
சிதம்பர மும்மணிக் கோவை. 5126
சிந்தையள்ளும் சிவனொளிபாதமலை. 5825
சிராத்த தீபிகை. 5362
சிரிப்போம் சிந்திப்போம். 5798
சிலம்பு பிறந்தது. 5604
சிவஞானபோத சாரம். 5059
சிவநெறிச் சிந்தனைகள். 5127
சிவபூசாவிதி. 5128
சிவபூசை விளக்கம். 6 A 16
சிவபெருமான் திருநடனம். 5129
சிவயோகம்: கும்பாபிஷேக மலர் 2008. 5212
சிவராத்திரி விரத மகிமை. 5130
சிவன். 5131
சிவஷேத்திராலய மகோத்ஸவ உண்மை விளக்கம். 5132
சிவாலய தரிசன விதி. 5133
சிவானந்த நடனம். 6 A 17
சிறகு வைத்த கதைகள்: சிறுவர் இலக்கியம். 5466
சிறகுகள் விரித்தோம்: பெண்களின் கதைகள். 5659
சிறகொடிந்த வண்ணக்கிளி. 5722
சிறீ அளித்த சிறை. 5924
சிறுவர் உளவியல்: பாகம் 1. 5034
சிறுவர் பா அமுதம்: சிறுவர் பாடல்கள். 5455

சின்னச் சித்திரங்களில் சூரியன். 5538
சின்னத் தேவதைகள்: சிறுவர் கதைகள். 5467
சீர்மிய உளவியல். 5343
சுக வாழ்க்கை பாகம் 3. 5407
சுக வாழ்வு: சிறப்பு மலர். 5408
சுகமான வாழ்விற்கு நிறைவான போசாக்கு. 5409
சுகவலம்புரி. 5413
சுகாதாரக் கும்மி. 5539
சுட்டும் சுடரொளி 99. 5010
சுடர்: கிளிநொச்சி மாவட்ட சமூக, சுகாதார அபிவிருத்திச் சபையின் 5ஆவது ஆண்டு நிறைவுச் சிறப்பிதழ். 5316
சுத்தானந்த மலர் 2: ஆத்ம நாதம். 5060
சுதந்திர இலங்கைவாழ் வீரத் தமிழனின் குமுறும் நெஞ்சம். 5925
சுதந்திர வாழ்வின் விடிவலைகள். 5540
சுப்ரீம் கோட்டுக்குப் புதிய இடம். 5306
சுமையின் பங்காளிகள். 6 A 18
சுருதி பேதமடைகிறது. 5723
சுவாமி ஞானப்பிரகாசர். 6 A 19
சுவேதாசுவதரம் (உபநிடதம்) மூலமும் உரையும். 5061
சுன்னாகம் சந்திரசேகரப் பிள்ளையார் இரட்டைமணி மாலை: மூலம். 5134
சுனாமி சொல்லாத சோகங்கள். 5400
சூடாமணி நிகண்டு: மூலமும் உரையும். 6 A 20
சூபித்துவத்தின் உண்மை நிலை. 5228
சூரியப் புதல்வர்கள் 2003. 5858
சூரியப் புதல்வர்கள் 2007. 5859
செ.கணேசலிங்கன் நாவல்கள்: ஓர் ஆய்வு. 5759
செ.கணேசலிங்கனின் படைப்புலகம். 5760
செட்டியார் இயற்றிய வைத்தியத் தெளிவு. 5420
செட்டை கழற்றிய நாங்கள். 5541
செந்தமிழ் இலக்கண விளக்கம்: 1ம் பாகம். 5379
செந்தமிழ் இலக்கண விளக்கம்: 3ம் பாகம். 5380
செய்தித் தலைப்புக்கள் ஓர் அறிமுகம். 5027
செல்லக்கை கொடுத்தல். 5285
செல்லையா தாத்தாவும் செல்லக் குழந்தைகளும். 5468
செல்வச் சந்நிதியான் கும்மி. 5135
செவ்வரளிப் பூக்கள்: கதைத் தொகுதி. 5660
செவ்வேள். 6 A 21
சேது கால்வாய்: ஒரு பார்வை. 5983
சேது சமுத்திரம் கப்பற் கால்வாய்: அமைவிடம் மற்றும் பௌதிகச் சூழல் பற்றி ஓர் ஆய்வு. 5829
சேது பந்தனம். 5806
சேரன் சமாதி: இலக்கிய நாடகம். 5605
சைவ காலப் பகுப்பு. 5136
சைவ சமய சாரம். 6 A 22
சைவ சமய புண்ணியகாலம். 5137
சைவ சமய வரலாறு. 5138
சைவ சித்தாந்த சங்கிரகம். 5062
சைவ சித்தாந்தம்: ஓர் அறிமுகம். 5063
சைவ சிரார்த்த விதி: கிரந்த மூலம். 5139
சைவ தூஷண பரிகாரம். 5140

சைவ போதம்: முதற் புத்தகம். 6 A 23
சைவ போதம்: இரண்டாம் புத்தகம். 6 A 24
சைவ வாழ்வியற் சிந்தனைகள். 5141
சைவ வேதாந்த சித்தாந்த ஆராய்ச்சி. 5064
சைவக் களஞ்சியம் 4ம் பாகம். 5142
சைவக் களஞ்சியம் 6ம் பாகம். 5143
சைவக் கிரியை விளக்கம். 6 A 25
சைவக் கிரியைகள். 5144
சைவத் திருக்கோவிற் கிரியை நெறி. 6 A 26
சைவத் திருமணம். 5363
சைவத் தோத்திர மஞ்சரி. 5145
சொல்லப்படாத உலகம். 5984
ஞானக் கவிஞன். 5724
ஞானசவுந்தரி நாடகம்: தென்பாங்குக் கூத்து. 5606
ஞானம் 100ஆவது இதழ்: ஈழத்து நவீன இலக்கியச் சிறப்பிதழ். 5011
ஞானயோகம். 5065
ஞானாமிர்தம். 5066
டெனிஸ்-ஆங்கில-தமிழ் மருத்துவக் கையேடும் அகராதியும். 5402
டெனிஸ்-தமிழ் அகராதி. 5371
தங்க மாம்பழம். 5469
தங்கக் கலசம்: சிறுவர் பாடல்கள். 5456
தசாவதார புருஷோத்தமா. 5146
தடயங்கள்: கவிதைகள். 5542
தடுப்புக் காவலில் நாம். 5846
தடுப்புக் காவலில் பத்து நாட்கள். 5847
தண்ணீருக்குள் தாகமா: இறைவனின் இனிய இயல்புகள். 5085
தண்ணீரும் கண்ணீரும். 5661
தணியாத தாகம். 5607
தணியாத தாகம்: ஒரு திரைப்படச் சுவடி. 5608
தந்தையார் பதிற்றுப் பத்து (மூலம்). 5830
தப்லீக் அன்றும் இன்றும்: பாகம் 2: த.ஃலீம் தொகுப்பு குர் ஆனுக்கு எதிரானதா? 5229
தம்பி. 5985
தமயந்தி: பாலபோதினி உபபாட புத்தகம்-3. 5390
தமயந்தி திருமணம். 5609
தமிழ் இந்தியா. 6 A 27
தமிழ் இலக்கணம். 6 A 28
தமிழ் இலக்கணம்: வினா-விடை. 5381
தமிழ் இலக்கியக் களஞ்சியம்: சங்ககாலம் முதல் இக்காலம் வரையான தகவல்களின் தொகுப்பாக்கம்: பாகம் 1. 5450
தமிழ் ஈழப் போராட்டம். 5926
தமிழ் ஈழம் நாட்டு எல்லைகள். 6 A 29
தமிழ் எங்கள் ஆயுதம். 5543
தமிழ் நடந்த தடங்கள். 5544
தமிழ் நூற் பதிப்பு பணியில் உ.வே.சா.: பாடவிமர்சனவியல் நோக்கு. 5761
தமிழ் புலமை நாகரீகத்தின் ஓர் இழப்பு: இணுவையூர் கா.செ.நடராசா நினைவு மலர். 2006. 5885
தமிழ் மக்களும் தழுவிய மதங்களும். 5082
தமிழ் மலர்: சிறுவர் பாடல்கள். 5457
தமிழ் மொழியில் இலக்கியச் சிறப்பு. 5762
தமிழ் மொழியும் இலக்கியமும்: சில சிந்தனைகள். 5763

தமிழ்த் தோணி. 5764
தமிழ நாகரிகமும் சிந்துவெளி நாகரிகமும். 5941
தமிழகம். 5895
தமிழர் சரித்திரம். 5942
தமிழர் திருநாள். 5545
தமிழர் புனர்வாழ்வுக் கழக நோர்வேக் கிளையின் உதவியுடனான கோப்பாய் போஷாக்குப் புனர்வாழ்வு நிலையம்: செய்திட்ட விபரம். 5410
தமிழர் புனர்வாழ்வுக் கழகம் 1985-1995: 10ஆவது ஆண்டு நிறைவு மலர். 5317
தமிழர் வரலாறும் பண்பாடும்: தெரிந்ததும் தெரியாததும். 5248
தமிழர் வாழ்வில் சைவநெறி. 5147
தமிழர் வாழும் அண்டை நாடுகளில் தமிழ்க் கல்வி. 5986
தமிழரின் கண்ணீர். 5927
தமிழரின் தோற்றமும் பரவலும். 5943
தமிழா தமிழைக் காத்திடு (கட்டுரைகள்). 5765
தமிழா விழித்தெழு. 5944
தமிழிசையின் அடிப்படைகள்: புலம்பெயர்ந்த தமிழ் மாணவர்களுக்கான கைநூல். 5430
தமிழியல்சார் சிந்தனைத் துளிகள்: தொகுதி 1. 5766
தமிழிலக்கணமும் உரையமைப்பும். 6 A 30
தமிழீழ எழுச்சிப் பாடல்கள்: பாகம் 1. 5431
தமிழீழ எழுச்சிப் பாடல்கள்: பாகம் 4-5. 5432, 5433
தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கான அடிப்படைக் கல்வி. 5391
தரிசனங்கள். 5662
தருக்க சங்கிரகமும் அதனுரையாகிய தருக்க சங்கிரக தீபிகையும். 5042
தரும பூஷணம்: அமரர் தியாகராஜா மகேஸ்வரன் அவர்களின் வரலாற்று நினைவு மலர். 5848
தலைசிறந்த தலைப்புகள். 5230
தலைமைத்துவ ரகஸ்யங்கள்: தலைவர் நினைவுகள் பாகம் 1. 5849
தலைமைத்துவக் கோட்பாடுகள். 5039
தலைவன்: ஓர் இனப்போராட்டத்தின் எழுச்சிமிகு வரலாறு. 5987
தவயோகி ஸ்ரீ சத். சித்ரமுத்து அடிகளார் திருவாய் மலர்ந்தருளிய அருளொளி. 5067
தளிர்கள். 5546
தனிநாயகம் அடிகளார். 5864
தாம்பூலராணி. 5663
தாய்மொழிக் கல்வியும் கற்பிக்கும் கலையும். 5344
தாயும் சேயும். 5416
திணைக் கதைகள். 5664
திமிலைத்துமிலன் கவிதைகள்: காதல். 5547
திமிலைத்துமிலன் கவிதைகள்: சமூகம். 5548
தியான காலம். 5035
திராவிட இந்தியா. 5896
திராவிட மக்கள் வரலாறு: ஆதிகாலம் தொடக்கம் கி.பி.1800 வரையும். 5945
திருக்கருவைப் பதிற்றுப்பத்தந்தாதி. 5148
திருக்குறள் கீர்த்தனைகள். 5434
திருக்குறளில் இருந்து திருமந்திரம் வரை. 5046
திருக்கேதீச்சர நாதர் கிள்ளைவிடு தூது. 5149
திருக்கேதீச்சரத் திருப்பதிகம் மூலமும் உரையும். 5150
திருக்கேதீச்சரம். 5213
திருக்கேதீஸ்வர வெளியீடுகள். 5214
திருக்கேதீஸ்வரம். 5215
திருக்கோணமலைத் திருவுருவங்கள். 5216

திருச்செந்தூர் முருகன் கீர்த்தனைகள். 5435
திருஞானசம்பந்த மூர்த்தி நாயனாரும் சுந்தரமூர்த்தி நாயனாரும் அருளிச்செய்த திருக்கேதீச்சரத் திருப்பதிகங்கள்: உரையுடன். 5151
திருப்பம். 5665
திருப்பள்ளியெழுச்சியுரை. 5152
திருமந்திர விளக்கம்: சன்மார்க்கப் பகுதி. 5068
திருமாவளவன்: சோழர் குலக் கொழுந்து. 5392
திருமுருகாற்றுப்படை ஆராய்ச்சியுரை. 5153
திருமுருகாற்றுப்படை: மூலமும் உரையும். 5154
திருமுறைக் காட்சி: பகுதி 1. 5155
திருவள்ளுவர் திடுக்கிடுவார். 5767
திருவாசக மணிகள். 5156
திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, பெரியபுராணச் செய்யுட்டிரட்டு: உரையுடன். 5157
திருவிளையாடற் புராணம்: வசனம். 5158
திருவுந்தியார் சிவப்பிரகாசர் உரை விளக்கம். 5069
திருவுந்தியார் மூலமும் உரையும். 5070
திருவெண்ணெய் நல்லூர் மெய்கண்டதேவர் அருளிச்செய்த சிவஞானபோதமும் வார்த்திகமென்னும் பொழிப்புரையும். 5071
திருவெம்பாவை உரை. 5159
திவ்யவதார புருஷோத்தமா. 5160
திறவுகோல்: விஞ்ஞானக் கட்டுரைகள். 6 A 31
தீண்டப்படாதவர்களால் தீண்டப்படாத புதிய கட்சி. 5897
தீண்டாமை. 5269
தீப்பிடித்த பூக்கள். 5768
தீபதோரணம். 5666
தீராத மயக்கத்திலே: சந்தப் பாடல்கள். 5436
துயரப் பாறை. 5610
துர்க்காபுரம்-தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தான நிர்வாகசபை 25 ஆண்டு நிறைவு வெள்ளிவிழா மலர். 5217
துர்க்காபுரம் மகளிர் இல்லம்: பதினைந்து ஆண்டுகள் நிறைவு விழா சிறப்பு மலர். 5318
துர்க்கேஸ்வரம் தல புராணம். 5218
தூக்குக் கொட்டடியிலிருந்து ஒரு முறையீட்டு மடல். 5988
தூரத்து விடிவெள்ளி. 5549
தூரத்துப் பச்சை. 6 A 32
தூரப் போகும் நாரைகள். 5667
தூவானம். 5550
தெய்வத் தன்மை விளங்கிய குகை நமசிவாய தேவர் அருளிச்செய்த அருணகிரியந்தாதி: மூலம். 5161
தெய்வப் பாவை. 5611
தெய்வீக வாழ்வு. 5072
தெரிந்திருக்க வேண்டிய சட்டங்கள். 5307
தென்கிழக்கு முஸ்லிம் தேசத்தாரின் நாட்டாரியல். 5367
தென்றல் வரும் தெரு. 5551
தென்னாசியாவின் அரசியல் கலாசாரம். 5286
தேசபக்தன் கோ. நடேசையர் - ஒரு வரலாற்று ஆய்வு. 6 A 33
தேடலே வாழ்க்கையாய். 5668
தேன் கூடு: பாலர் கவிதைகள். 5458
தொட்டிக்கலை ஸ்ரீ சுப்பிரமணிய முனிவர் இயற்றிய கலைசைச் சிலேடை வெண்பா. 5382
தொண்டமானாறு செல்வச்சந்நிதி தோத்திரப் பாமாலை. 5162

தொண்டைமானாறும் செல்வச் சந்நிதியும். 5952
தொல்காப்பியத் தேன்துளிகள். 5769
தொல்காப்பியம்: எழுத்ததிகார மூலமும் மதுரையாசிரியர் பாரத்துவாசி நச்சினார்க்கினியருரையும். 5383
தொல்காப்பியமும் கவிதையும். 5770
தொல்சீர் சமூகவியல் சிந்தனையாளர். 5844
தொலைக்காட்சிச் செய்திகள்: தொழில்நுட்பங்களும் பயிற்சிகளும். 5028
தொலையும் பொக்கிஷங்கள். 5669
தொன்மைச் செம்மொழி தமிழ். 5376
தோணி. 5670
தோத்திர மஞ்சரி. 5163
தோரணங்களின் நிலைகள். 5552
தோழர் நவம்: பொதுவுடைமைப் போராளியின் நினைவுகள். 5855
நகுலமலைக் குறவஞ்சி நாடகம். 5612
நகை. 5553
நகைச்சுவை இலக்கிய முன்னோடிகள். 5799
நடுகல்: சிறுகதைத் தொகுதி. 5671
நடைமுறை பிரஞ்சு. 5372
நடைமுறைக் காசநோய்க் கட்டுப்பாடு. 5414
நந்திக் கொடியின் முக்கியத்துவமும் பெருமைகளும். 5164
நந்தியின் சிறந்த சிறுகதைகள் 12. 5672
நபிகள் நாயகம் சல்லல்லாகு அலைகிவசல்லம் அவர்களின் பேரில் பிள்ளைத் தமிழ். 5231
நபிமொழி நாற்பது. 5232
நம்பிக்கையில்லா தீர்மானமும் நானும். 5928
நமது இலக்கியச் சொத்து. 5771
நல்ல தீர்வுகள்: சிறுவர்க்கான உத்திக் கதைகள். 5470
நல்லூர்க் கந்தன் பாமாலை. 5165
நல்லைச் சண்முக மாலை. 5166
நவ இலங்கை. 5826
நவராத்திரி மாலை. 5167
நவீன இராசதந்திரம். 5287
நவீன இலக்கியங்களைக் கற்பித்தல். 5345
நவீன கற்றல் கற்பித்தல் முறையியல்கள். 5346
நவீனத்துவத்தின் நெருக்கடிகளும் சிறந்த மானுட உலகை நிர்மாணிப்பதற்கான வாய்ப்புகளும். 5243
நற்சிந்தனை. 6 A 34
நனவிடை தோய்தல். 6 A 35
நாகம்மாள்: நாவல். 5725
நாடக அரங்கியலுக்கான ஆற்றுப்படை. 5444
நாடக மாலை. 5613
நாடக வழக்கு: அரங்கக் கட்டுரைகளும் நேர்காணல்களும். 5445
நாடகம்-அரங்கியல்: பழையதும் புதியதும். 6 A 36
நாடகம்-நாட்டியம். 5614
நாடற்றவனின் குறிப்புகள். 5554
நாடு தரும் ஏடு. 5898
நாலு கோழிக் குஞ்சுகள். 5479
நாவலர். 6 A 37
நாவலர்: ஆளுமையும் புலமைத்துவமும். 5772
நாவலர் சமயப்பணி. 5842

நாவலர் நடைப்பாங்கு. 5773
நாவலர் பெருமான். 5843
நாவலர் வசனநடை. 5774
நாவலர்கோன். 5486
நாளை உன் தேசம். 5673
நான் கொலை செய்யும் பெண்கள். 5674
நான் நீ கடவுள்: உருவகக் கதைகள். 5675
நானே குற்றவாளி: நாடகம். 5615
நிகரிலா நெஞ்சன். 5555
நிகழ்வுகளும் நினைவுகளும். 5775
நித்தி நினைவுகள்: நாட்டுப்பற்றாளர் து.நித்தியானந்தன். 5868
நித்திய பாராயண சைவத் திருமுறைத் தொகுப்பு: மலர் 1. 5168
நியாயப்படுத்தப்பட்ட கொலைகள். 5726
நிலையக் குரல். 5169
நிறைநிலா. 6 A 38
நினைவழியா நாட்கள். 5676
நினைவில் நிறைந்தவை. 5886
நிஜங்கள். 5556
நிஷ்டை: புகலிடச் சிறுகதைகள். 5677
நீங்களும் எழுதலாம்: ஓராண்டுச் சிறப்பிதழ். 5012
நீச்சு வீரன் வாழ்க்கைச் சித்திரம். 5871
நீதிக்கதைகளில் ஆத்திசூடி. 5471
நீர்வை பொன்னையன் இலக்கியத் தடம். 5776
நீலன் திருச்செல்வத்தின் கட்டுரைகள்: மனித உரிமைகள், அரசமைப்புவாதம், பன்மைத்துவமும் பல்வகைமையும். 5310
நூல்தேட்டம்: தகவல் கையேடு. 5005
நூல்தேட்டம்: தொகுதி 5. 5006
நூலக தகவல் அறிவியல் ஆய்வுக்கோவை. 5007
நூலகர் கைந்நூல்: சிறுவர், பாடசாலை, கிராம நூலகர்களுக்கு. 5008
நூறு வருட மட்டுநகர் நினைவுகள். 5953
நெஞ்சில் நிறைந்தவள். 5727
நெஞ்சுறுத்தும் கனல். 5557
நெதர்லான்ட் முதலாவது சைவ மாநாடு சிறப்புமலர். 5219
நேர முகாமைத்துவம். 5312
நோத் முதல் கோபல்லவா வரை. 1798-1947. 6 A 39
பக்த பூஜை: நாடகம். 5616
பக்திரசக் கிர்த்தனைகள். 5437
பகவத் கீதை விளக்க வசனம். 5047
பகவத் கீதை வெண்பா: முதலாம் பாகம்: கரும யோகம் விளக்கக் குறிப்புடன். 5048
பகவான் சிவானந்தரின் ஞானவிருந்து. 5073
பகிர்வு. 5558
பச்சைப் பாவாடை. 5678
பசியடங்கா இருளிலிருந்து ஒன்பது கதைகள். 5679
பஞ்சமரும் சமூகத் தொடர்புகளும். 5270
படித்தவர்கள். 5244
படைவீடு உடைய பரமன். 5170
பண்டாரவன்னியன்: வரலாற்று நாடகம். 6 A 40
பண்டிதமணியின் பேரும் புகழும். 5887
பண்டைத் தமிழர் வரலாறும் இலக்கியமும். 5777

பண்பாடு: வேரும் விழுதும். 5249
பணத்தைப் பார். 5617
பணம் பேசுகிறது. 5778
பத்திரிகைகளின் பார்வையில் எங்கள் மகேஸ்வரன். 5850
பத்று வீரர்கள். 5233
பதிவிரதை விலாசம். 5618
பந்திக்கு வராத பந்திகள். 5559
பயங் கொள்ளலாகாது பாப்பா: சிறுவர் நாவல். 5480
பரத நாட்டியம் கற்பித்தல் முறைகள். 5440
பரீட்சையில் சித்தி எய்துவது எப்படி? இப்படி. 5347
பலிக்களம். 6 A 41
பறாளை விநாயகர் பள்ளு. 5171
பன்றித் தலைச்சியில் கண்ணகி வழிபாட்டுக் கோலங்கள். 5220
பன்னாட்டுத் தமிழரும் பண்பாடும். 5989
பனை நாடு அல்லது பிளந்த உலகம். 5728
பாடசாலை மேம்பாட்டுப் பங்குதாரர்களுக்கான கைந்நூல். 5348
பாடசாலைகளை முகாமை செய்தல்: சமகால அணுகுமுறை. 5349
பாடசாலையும் சமூகமும். 5350
பாடியாடு பாப்பா: மழலையர் பாடல்கள். 5459
பாண்டவர் கதை. 5393
பாதுகை. 6 A 42
பாம்பு வணக்கம். 5083
பாராளுமன்றத்தில் மகேஸ்வரன். 5929
பால பாடம்: இரண்டாம் புத்தகம். 5394
பால பாடம்: நான்காம் புத்தகம். 6 A 43
பாலமாகி நிற்கும் பணி: எட்டு உரையாடல்கள். 5990
பாலர் கல்வியும் நவீன செல்நெறிகளும். 5351
பாவலர் ஆகலாம். 5779
பாவலர் துரையப்பாபிள்ளையும் யாழ்ப்பாண வரலாற்று நோக்கும்: ஒரு மீள்பார்வை. 5954
பாவாரம். 5172
பிரபாகரன்: வாழ்வும் மரணமும். 5991
பிரமோத்தர காண்டம்: வசனம். 5173
பிரயோக விவேகம். 5031
பிராசாத சட்சுலோகி: கிரந்த மூலமும் தமிழ் உரையும். 5074
பிராசாத சட்சுலோகித் தமிழுரை: மூலமும் தமிழுரையும். 5075
பிராயச்சித்த சமுச்சயம். 5076
பிரான்சில் அரசியல் புகலிடம். 5992
பிரான்ஸ் தமிழர் வழிகாட்டி 2008. 5019
பிரித்தானிய சக்ராதிபத்தியச் சரித்திரச் சுருக்கம். 5894
பிள்ளையார் வழிபாடு. 5174
பிற மொழிச் சிறுகதைகள் சில. 5807
பிறந்த மண்ணும் புகலிடமும்: சில அவதானிப்புகள். 5250
பின்நவீனத்துவமும் அழகியலும். 5780
பின்னவீனத்துவ உரையாடல். 5781
பீஜிங் பிரகடனமும் செயற்பாட்டுக்கான களமும். 5254
புகலிடத் தமிழ் சினிமா. 5448
புத்த தர்மச் சுருக்கம். 5087
புதிய கதவுகள்: சிறுகதைகள். 5680
புதிய காக்கைகளும் பழைய நரிகளும். 5993

புதிய புவியியல்: இலங்கை. 5818
புதிய வண்டுவிடு தூது. 5560
புதிய ஜனநாயகப் புரட்சி ஏன்? 5288
புதிய ஜனநாயகம் பற்றி. 5289
புதுச் சைவம். 5175
புதைந்துவிட்ட புலமை. 5561
புவியியல்: சூழலியல் முகாமைத்துவம். 5398
புள்ளி: சித்திரக்கதை. 5487
புள்ளிவிபரவியல்: அலகு 01. 5276
புன்னகை இளவரசன்: எழுத்தாளர் சிவலிங்கம் சிவபாலன். 5888
புனைகதை இயல். 5782
பூ (சிறுகதைகள்). 5681
பூந்துணர்: தொகுப்பு மலர் 2007. 5800
பூபாள ராகங்கள் 2008. 5357
பூபாள ராகங்கள்: சிறுகதைத் தொகுதி, 2007. 5682
பூபாள ராகங்கள்: சிறுகதைத் தொகுதி, 2008. 5683
பூமித் தாய். 5819
பூவை விடு தூது. 5562
பெண். 5255
பெண்கள் சந்திப்பு மலர் 1995. 5256
பெண்கள் சந்திப்பு மலர் 5: 1996. 5257
பெண்கள் சந்திப்பு மலர் 2002: பால்வினைத் தொழிலாளர்கள். 5258
பெண்கள் சந்திப்பு மலர் 9: 2005. 5259
பெண்களின் வாய்மொழி இலக்கியம்: தாலாட்டு ஒப்பாரி பற்றிய ஒரு சமூகவியல் நோக்கு. 5368
பெண்களுக்கான சட்டவியல் விளக்கம். 5308
பெண்களும் சினிமாவும்: சினிமா பற்றிய கட்டுரைகள். 5449
பெண்ணிலைவாதமும் தேசியவாதமும். 5260
பெண்மையின் சுவடுகள். 5261
பெயல் மணக்கும் பொழுது: ஈழப் பெண் கவிஞர்கள் கவிதைகள். 5994
பெரும்பாணாற்றுப்படை: ஆராய்ச்சியுரை. 5783
பேரலையும் பேரழிவும் 2004. 5401
பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி பவளவிழா மலர். 5889
பேராசிரியர் கோபன் மகாதேவாவுக்கு 75ஆவது ஆண்டு நிறைவு: வாழ்த்து மலர். 5890
பேராசிரியர் நந்தியும் மலையகமும். 5891
பொங்கியெழும் பாரதம். 5899
பொது அறிவுடன் சமகால நிகழ்வுகள். 5004
பொது ஆட்சிஇயல். 5290
பொழுது போக்கு. 5684
பொன் ஒளி: சுப்பிரமணியம் பொன்னம்பலம் நினைவு வெளியீடு. 5866
பொன் சிவானந்தன் கவிதைகள். 5563
பொன்விழா மலர்: வட இலங்கை சர்வோதய அறங்காவலர் சமூக சேவகி பொன். ஜமுனா அவர்களின் சேவை பாராட்டு விழா. 5856
போதையின் பிடியில் பேதைகள். 5406
போர் நிறுத்தமும் பொய்மைகளும். 5930
போர்க்காலக் கதைகள். 5685
போர்க்காலச் சிந்தனைகள். 5813
போர்ப் பறைப் பாடல்கள். 5438
போர்வைக்குள் வாழ்வு. 5564
போராளியின் குருதிச் சுவடுகள்: தொகுப்பு 1. 5860
போரும் வாழ்வும். 5861

மக்கள்... மக்களால்... மக்களுக்காக....5729
மக்கள் மத்தியிலான முரண்பாடுகளைச் சரியாகக் கையாள்வது பற்றி (தோழர் மாஓ சே-துங் அவர்களின் சொற்பொழிவின் நூலாக்கம்). 5291
மகாகவி பாப்லோ நெருடா-வாழ்வும் படைப்பும். 5892
மகாராஜாவின் ரயில்வண்டி. 5686
மகாவம்சம். 5995
மகாவுக்கிர வீரபத்திராஸ்திரம். 5176
மகேஸ்வரன்: அரசியல் வாழ்வும் தமிழர் பிரச்சினையும். 5851
மகோற்சவ சந்திரிகை. 5177
மகோற்சவ விளக்கம். 5178
மஞ்சு நீ மழைமுகில் அல்ல (பாகம் 2). 5730
மட்டக்களப்பு மான்மியம். 6 A 44
மட்டக்களப்பு வரலாறு: ஒரு அறிமுகம். 5955
மட்டக்களப்பு வாழ்வும் வழிபாடும். 5956
மட்டக்களப்புக் குகன்குல முற்குகர் வரலாறும் மரபுகளும். 5946
மட்டுநகரின் மருத்துவச் சமூகம்: பேசப்படாத வரலாறு. 5271
மண்ணே, உயிரே...: ஈழப் பயண அனுபவங்கள். 5996
மணல் வீடு: கே.டானியல் சிறப்பிதழ். 5013
மதனரதி ஒப்பாரி என்னும் பெரிய நவரத்தின ஒப்பாரி-மூலம்: எரிந்த காட்சி எரியாத காட்சி அடங்கியது. 5492
மயிலணி முருகவேள் மும்மணிக் கோவை. 5179
மருத்துவம். 5403
மருதூரந்தாதி: மூலமும் உரையும். 5784

மல்லிகை: 44ஆவது ஆண்டு மலர். 5014
மலைநாட்டுத் தமிழருக்கு துரோகம் இழைத்தது யார்? 5931
மலையகத் தமிழாராய்ச்சி மாநாடு: ஆய்வுக் கட்டுரைகள். 6 A 45
மழலைப் பா. 5460
மழையைத் தராத வானம்: திம்பு முதல் டோக்கியோ வரை. 5932
மறக்குடி மாண்பு. 5619
மறுபிறப்புத் தூஷண பரிகாரக் கிலிகோலம். 5181
மறுபிறப்புத் தூஷண பரிகாரம். 5180
மறைந்தும் மறையாத நவமணி அஸ்ஹர். 5837
மன்னார் மாதோட்ட கத்தோலிக்க நாடகங்கள்: ஓர் ஆய்வு. 5446
மன பலம். 5036
மனதினிலே உறுதி வேண்டும்: சிறுவர் நாவல். 5481
மனதுக்கினிய பாட்டு: சிறுவர் பாடல்கள். 5461
மனதைக் கழுவும் மகா சமர்த்தர்கள்: சீர்மியச் சிறுகதைகள். 5687
மனம் எங்கே போகிறது? 5037
மனமெனும் தோணி. 5038
மனித உரிமைகள்: ஓர் அறிமுகம். 5292
மனித, பெண், சிறுவர் உரிமைகள். 5293
மனித மேம்பாட்டுச் சிந்தனைகள். 5040
மனிதர்கள். 5688
மனிதன் எப்படித் தோன்றினான்?. 5817
மனிதனோடு நடந்தபடி. 5565
மனோன்மணி நாடகம். 5620
மாணவரின் மறுபக்கம். 5352
மாணிக்க மாலை: நாடகம். 5621

மாணிக்கவாசக சுவாமிகள் அருளிச்செய்த திருவாசகம். 5182
மாணிக்கவாசக சுவாமிகள் சரித்திரம். 5183
மாது என்னை மன்னித்துவிடு. 5731
மார்க்கண்டன் நாடகம்: வாளபிமன் நாடகம். 5622
மார்க்சீயமும் பெண்நிலைவாதமும்: மிக முற்போக்கான ஒரு கூட்டிணைவை நோக்கி….5262
மாவைப் பதிகம், மாவை இரட்டைமணி மாலை. 5184
மாற்றங்களுக்காக. 5689
மாற்றுநிலைப்படுத்தலின் அரசியல்: தமிழீழ விடுதலைப் புலிகள்.·. 2002-2006ல் சிறீலங்காவில் இடம்பெற்ற அமைதி முயற்சிகள். 5933
மீறல்கள்: கவிதைத் தொகுதி. 5566
முகவரியைத் தேடுகிறார்கள். 5690
முகாமைத்துவக் கொள்கைகள்: ஓர் அறிமுகம். 5313
முத்தொள்ளாயிரம். 5623
முதலாளித்துவத்தின் மரண ஓலமும் நான்காம் அகிலத்தின் பணிகளும்: இடைமருவு வேலைத்திட்டம். 5299
முதுசொம். 5691
முதுமை. 5245
முதுமை நினைவு: செய்யுள்-பதவுரை-விளக்கம். 5567
முப்பொருள் விளக்கம். 5077
முரசம் 2008: பிரித்தானிய தமிழர் தகவல் ஏடு 6 A 46
முருக வணக்கம்: ஆய்வு நூல். 5185
முருகன் கீர்த்தனைகள். 5439
முருகன் திருப்புகழ்மாலை. 5186
முருகன் மணவாளன். 5187
முற்றுப்பெறாத காவியம். 5633
முஸ்லிம் தேசமும் எதிர்காலமும். 6 A 47
மூச்சுக்காற்றால் நிறையும் வெளிகள். 5568
மூடுதிரை: சிறுகதைத் தொகுப்பு. 5692
மூத்தோர் பராமரிப்பு. 5246
மூலிகைகளை அறிவோம். 5418
மூன்றாம் உலகில் பெண்ணியமும் தேசியமும்: 1ம் பாகம். 5263
மூன்றாவது கண்: சமகால விவகாரங்களில் பெண்ணியலாளர்களின் கண்ணோட்டம். 5264
மெய்ஞ்ஞான போத தீபிகை. 5078
மெல்லச் சாகுது மனிசம். 5247
மெல்லத் தமிழ் இனித் துளிர்க்கும். 5569
மெலியார் மிடுக்கு. 5811
மேகதூதம். 5570
மேகவாழ்வு. 5571
மேலோர் வட்டம். 5693
மைதிலி. 5732
மைவிழிப் பார்வையில். 5265
மொழிக் காலனித்துவமும் பரத நாட்டியமும். 5441
மொழியும் பிற துறைகளும். 5370
மௌன முகாம். 5572
மௌனப் புதைகுழிக்குள்: பாகம் 1. 5934
யாதுமாகி நின்றாள். 5694
யார் கொலைகாரன்? 5624
யாரிந்த வேடர்? 5733
யாவும் கற்பனை அல்ல. 5801

யாழ் கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயம் 125ஆவது ஆண்டு நிறைவு விழா மலர் வெளியீடு. 5358
யாழ்.கோட்டையினுள் 107 நாட்கள். 5935
யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சு.வித்தியானந்தன் மணிவிழா மலர். 5862
யாழ்ப்பாண அகராதி. 5377
யாழ்ப்பாண நூலகம் அதன் சாம்பலிலிருந்து எழுகின்றது. 5009
யாழ்ப்பாண முஸ்லிம்கள்: வரலாறும் பண்பாடும். 5947
யாழ்ப்பாண வைபவம். 5957
யாழ்ப்பாணச் சமூகம்: சாதி, இனத்துவம் முதலாய கட்டுரைகள். 5272
யாழ்ப்பாணச் சரித்திரம். 6 A 48
யாழ்ப்பாணச் சரித்திரம். 6 A 49
யாழ்ப்பாணத்தின் புலமைத்துவ மரபு: ஓர் இலக்கிய வரலாற்றுக் கண்ணோட்டம். 5785
யாழ்ப்பாணத்து நல்லூர் சின்னத்தம்பிப் புலவர் அருளிச்செய்த மறைசையந்தாதி. 5493
யாழ்ப்பாணத்து நாட்டிய மரபுகள். 5442
யாழ்ப்பாணத்து மரபுக் கல்வியும் பண்பாடும். 5353
யாழ்ப்பாணத்துத் தமிழ்ப் பிரபந்த இலக்கியங்கள். 5786
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் யாழ்ப்பாண இராச்சியம் நூலும் இபன் பத்தூத்தாவின் இலங்கைப் பயணக் குறிப்புகளும்: பகுதி 1. ஓர் விமர்சனம். 5958
யாழ்ப்பாணம் இருபாலைச் செட்டியார் இயற்றிய வைத்திய விளக்கம் என்னும் அமிர்தசாகரம், பதார்த்த சூடாமணி-மூலம். 5421
யாழ்ப்பாணம் உரும்பராய் பரத்தைப்புலக் கருணாகர விநாயகர் தோத்திரப் பாமாலை: 1ம்பாகம். 5188
யாழினி. 5734
யுகவதார புருஷோத்தமா: ஓர் அறிமுகம். 5189
யுத்த காண்டம். 6 A 50
யுத்தத்தின் சாபம்: போர்க்கால மொழிபெயர்ப்புச் சிங்களச் சிறுகதைகள். 5808
ரயிலில் ஒரு ராகம். 5695
ரயிலுக்கு நேரமாச்சு. 5696
ராகினி ராஜகோபாலின் சதங்கை நாதம் நாட்டியாலயா 30வது ஆண்டு மலர். 5869
லெனின்: வி.ஐ.லெனின் வாழ்க்கை வரலாறு. 5852
வசன இரத்தினாமிர்தம்: கடவுள், அன்பு, அறம், கல்வி. 5190
வட இலங்கையில் ஆலயப் பிரவேச இயக்கம். 5273
வடக்கில் இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மாணவர்களுக்கான கல்வி நிவாரணச் செயற்திட்டம். 5319, 5320
வந்து சேர்ந்தன: தரிசனம் (கவிதை நாடகங்கள்). 5634
வர்க்கம் சாதி பெண்நிலை பண்பாடு: பெரியாரின் சிந்தனைகள் பற்றிய ஒரு சமூக நோக்கு. 5274
வரகவிப் புலமை வரதபண்டிதர் அருளிச்செய்த பிள்ளையார் கதை: மூலம். 6 A 51
வரதபண்டிதம். 5191
வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்ட பழந்தமிழர். 6 A 52
வல்வெட்டித்துறை வரலாற்றுச் சுவடுகள். 6 A 53
வல்வை கமலா கவிதைகள். 5573
வல்வை, வல்வெட்டித்துறை, வல்வைநகர். 5959
வலை + முள். 5625
வழிகாட்டலும் ஆலோசனையும். 6 A 54
வள்ளுவர் வழியில் வீரம் மானம். 5787
வளர்பிறை: கவிதைத் தொகுதி. 5574
வளிமண்டலவியலும் காலநிலையியலும். 5399
வன்செயல்களின் பாதிப்புகளை மதிப்பீடு செய்தலும் அவற்றிற்கான புனர்வாழ்வு நடவடிக்கைகளை இனங்காணலுக்குமான ஆய்வுப் பட்டறை. 5321

வன்னிப் பெருநிலப் பரப்பில் நுளம்புகளில் ஆய்வு. 5411
வன்னியின் கதை. 5960
வன்னியின் செல்வி. 5735
வனவாசத்தின் பின். 5626
வாக்கினிலே இனிமை வேண்டும். 5482
வாழ்வு நலம்பெற நற்சிந்தனைகள். 5041
வாழ்வு பெற்ற வல்லி: மாருதப் புரவல்லி நாடகம். 5627
வாழ நினைத்தால் வாழலாம்: சிறுவர் கதைகள். 5472
வான வெளியிலே...! 5396
வானம் ஏன் மேலே போனது? 5697
விக்னேசுவர பூஜாவிதி. (ஸ்ரீ விக்கினேசுவர ஸ்நபந கும்பபூஜா விதி). 5192
விசுவாசமாலை, போதனைமாலை, றமழான்மாலை, பதிஞானக்கீதம். 5234
விட்டுணு சன்மா செய்த பஞ்சதந்திரம். 5049
விட்டுணு சன்மாவின் இதோபதேசம். 6 A 55
விடுதலைப் புலிகள். 5997
விடுதலைப் புலிகளின் வீரவரலாறு: சிறப்பு மலர். 5998
வித்தியின் இலக்கிய முன்னீடுகள். 5788
வித்தியின் பார்வையும் பதிவும். 5893
விநாயக பரத்துவம். 5193
விநாயக மஹோற்சவ விளக்கம். 5194
விபுலானந்த ஆராய்வு. 5789
விவேகானந்த சுவாமிகள் சொற்பொழிவின் சாரம். 5079
விழிகள் சுவாசிக்கும் இரவுகள். 5575
விளக்கமான நல்ல பிரெஞ்சு: அடங்கல் 1-2. 5373, 5374
வினோதனின் சாகசம். 5483
விஷத்தைப் பொழியும் நிலவே. 5736
வீரகேசரி ஆண்டு மலர்: 2002 நிகழ்வுகள். 5015
வீரம் விளைந்த ஈழம். 5999
விவேகானந்தர் காவியம் (முதலாம் பாகம்). 5635
வீழ்ச்சி. 5812
வீழ்ச்சிப் பாதையில் ஸ்டாலினிசம். 5301
வெள்ளரிவண்டி. 5698
வெள்ளைக் கமலம். 5576
வெளிச்சத்தின் வேர்கள். 5086
வெளிநாட்டுக் கதைகள். 5699
வெளிப்பு. 5577
வெறுக்கத் தெரிந்த மனம். 5737
வேட்டைக்குப் பின். 5578
வேதபுரியின் இரகசியம். முதற் பாகம். 5738
வேதமாதா காயத்ரி மந்திர மகிமைகள். 5195
வேதாகம நிரூபணம்: முதலாம் பாகம் 5196
வேதாகம நிரூபணம்: இரண்டாம் பாகம். 5197
வேதாளம் சொன்ன கதை. 5628
வேப்பமரம். 5700
வேரறுந்த நாட்கள். 5701
வேருடன் பிடுங்கிய நாளிலிருந்து. 5579
வேரோடி விழுதெறிந்து: ஒரு நூலகவியலாளரின் தமிழ் இலக்கியப் பதிவு. 5790
வேலி. 5702
றொகான் என்னும் காவியம். 5872

ஜனநாயகர்கள். 5739
ஜாதக பாஸ்கரன். 5081
ஜீவநதி: முதலாம் ஆண்டு நிறைவு மலர். 5016
ஜீவநதி: இரண்டாம் ஆண்டு நிறைவு மலர். 5017
ஜோதி நிலா. 5703
ஸ்ரீ புத்தர் புராணம்: முதற் காண்டம். 5088
ஸ்ரீ முன்னேஸ்வர மான்மியம். 5221
ஸ்ரீ முன்னேஸ்வர வரலாறு. 5222
ஸ்ரீ முன்னேஸ்வர ஷேத்திர (வயல்) விநாயகர் கோவில் மகா கும்பாபிஷேக மலர். 5223
ஸ்ரீ லங்கா சுதந்திரகீதம் அல்லது மரதன் ஓட்ட மணிஒலி. 5580
ஸ்ரீ லங்கா வெலிக்கடைச் சிறைப் படுகொலைகள். 5936
ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய வரலாறு. 5224
ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் 125ஆவது ஆண்டு நினைவு விழாமலர். 6000
ஸ்கோர்ஸனியின் சிறப்பு நடவடிக்கைகள். 5814
ஸ்ரான்புள்ளில் இருந்து கெய்ரோ வரை: ஒரு தரைவழிப் பயணம். 5827
ஹைக்கூ கவிதைகள். 5581

ஆசிரியர் வழிகாட்டி

அக்கரையூர் அப்துல் குத்தூஸ். 5536
அக்கினி 5996
அதிவீரராம பாண்டியர் 5148
அநவரதவிநாயக மூர்த்தி, வை. 5127, 5224
அப்பாத்துரை, இ. 5951
அப்பையா, பொ. 5919
அபிராமிப் பட்டர் 5096
அம்பலவாணர், கு. 5273
அம்பிகைபாகன், இ. 5628
அமலநாதன், சிதம்பரப்பிள்ளை 5401
அமிர்தநாதர், ச. 5499, 5631
அமிர்தலிங்கம், சொ. 5312
அமீர்தீன், வி. 5292
அமீன், சீ.எம்.ஏ. 5473
அமுதன் அடிகள் 5864
அயூப்கான் 5308
அரதத்தாசாரியர் 5057
அரியநாயகம், M. 5549
அரியநாயகம், வி. 5464
அருணா செல்வம். 5737
அருணாசல ஆசிரியர், கா. 5142-43
அருணாசலம், சரோஜினிதேவி 5810, 5811
அருந்ததி 5448, 5537
அருள்சுப்பிரமணியம், சபா. 5456-57, 5459
அருளம்பலம் அ. 5300
அருளம்பலம், சு. 5153, 5783
அருளானந்தம், கா. 5695
அருளானந்தம், ச. 5323, 5461, 5463, 5466-67, 5469, 5474-75, 5480-82, 5484, 5535, 5648, 5657, 5717
அருளானந்தம், நீ.பீ. 5579, 5649
அரூஸ், ரா.ப. 5768
அல்பௌஸான், அஷ்ஷெய்க் ஸாலிஹ் பின் பௌஸான் பின் அப்துல்லாஹ் 5228
அலி, கிண்ணியா ஏ.எம்.எம். **பார்க்க** கிண்ணியா ஏ.எம்.எம்.அலி.
அறநிலா **பார்க்க** நிஹ்மத்துல்லா, ஏ.ஆர்.
அறபாத், ஓட்டமாவடி **பார்க்க** ஓட்டமாவடி அறபாத்.
அறவாணன், க.ப. 5971
அறிவுமதி 5993
அன்புராசா, செபமாலை 5400, 5446
அனஸ், எம்.எஸ்.எம். 5881
அஸீஸ், ஏ.எம்.ஏ. 5820, 5823
அஸீஸ், கே.எம்.ஏ. 5528
அஸுமத், இப்னு 5507
ஆச்செபி, சினுவா 5812
ஆசான், கு.வே.கி. 5963

ஆத்மநாத சர்மா, க.வை. 5100, 5194
ஆதனூர் சோழன் 5987
ஆதி சங்கரர் 5101
ஆப்டீன், ப. 5891
ஆபிரகாம், ஜி.எஸ்.துரைராஜ் 5582
ஆரியரட்ன, ரொக்கி 5308
ஆலிம், அப்துல் மஜீத் 5849
ஆவூரான் 5639
ஆறுமுக நயினார்பிள்ளை, த. 5119
ஆறுமுக நாவலர் 5031, 5042, 5051, 5071, 5097, 5126, 5133, 5140, 5154, 5158, 5161, 5211, 5394, 5493, 5784, 6A20, 6A28, 6A43
ஆறுமுகம், பண்டிதர் அ. 5099
ஆன்சிலின், ம.யாழ் 5524
ஆனந்தன், கா.சி. **பார்க்க** காசி. ஆனந்தன்.
இக்பால், எம்.ஸீ.எம். 5675
இணுவை க.சக்திதாசன் 5520, 5530
இணுவையூர் செ.நடராசன் **பார்க்க** நடராசன் இணுவையூர் செ.
இதயராசன் 5566
இந்திரபாலா, கா 6A19
இந்திரன் 5754
இப்சன், ஹென்றிக் 5803
இயல்வாணன் **பார்க்க** ஸ்ரீகுமரன், சு.
இரகுபரன், க. 5191, 5956
இரத்தினவேலோன், ஆ. 5655
இரத்தினம், கச்சாயில் **பார்க்க** கச்சாயில் இரத்தினம்
இரத்தினம், கா.பொ. 5847, 5926
இரத்தினேசுவர ஐயர், வ.மு. 5190, 6A51
இரயாகரன், பி. 5251-52, 5909
இரவீந்திரன், ந. 5105, 5200, 5780
இராசதுரை, காவலூர் **பார்க்க** காவலூர் இராசதுரை.
இராசதுரை, செ. 5928
இராசதுரை, பொன்மயில் 5411
இராசநாதன், மகேசன் 5765
இராசநாயகம், செ. 6A48
இராசரத்தினம், ஐ. 5613
இராசரத்தினம், க. 5422
இராசரத்தினம், சி. 5165
இராசரத்தினம், சுப்பிரமணியம் 5249
இராசரத்தினம், வ.அ. 5664, 5670
இராசேந்திரன், எஸ். 5299
இராசேந்திரன், விடுதலை க. 5970
இராதாகிருஷ்ணன், கே.எஸ். 5983
இராதாகிருஷ்ணன், கேந்திரேஸ்வரி 5397
இராதாகிருஷ்ணன், முத்து 5610
இராமகிருஷ்ண ஐயர், வை. 5070
இராமச்சந்திர தீட்சிதர், வி.ஆர். 5943
இராமச்சந்திரன், கே.வி. 5821
இராமசாமி சர்மா, வை. 5489
இராமசாமி நாயுடு, காஞ்சி 5157

இராமநாதபிள்ளை, த. 5815-16
இராமநாதன், பி. 5376, 5941, 5943
இராமலிங்கம், நா. 5235
இராமலிங்கம், மு. 5583
இராமன், இரா.அ. 5882
இராமானந்தா, சுவாமி 5073
இராஜ்மோகன், எம்.ஆர். 5198-99
இராஜதுரை, எஸ்.வி. 5297
இராஜநாயகம், எஸ்.ஜே. 5033
இராஜலிங்கம், ஆர். 5722
இராஜேந்திரன், யமுனா **பார்க்க** ராஜேந்திரன், யமுனா
இராஜேஸ்கண்ணன், வதிரி இ. 5242, 5564, 5669
இராஜேஸ்வரி, பண்டிதை த. 5384
இருபாலைச் செட்டியார் 5420-21
இளங்குமரனார், இரா. 5973
இளங்கோ 5554, 5933
இளங்கோவன், த. 5931
இளங்கோவன், வலன்ரீனா 5442
இளங்கோவன், வி.ரி. 5503
இளந்திரயன், சாலய் **பார்க்க** சாலய் இளந்திரயன்
இளமுருகனார், சோ. 5609
இஸ்மத், ஷமீலா 5641
இஸ்மாயீல், காயல்நகர் A.H.N.M. 5360
ஈழத்துச் சிவானந்தன் 5880
ஈழப் புரட்சி அமைப்பு 5857, 5920
ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி 5283
ஈஸ்வரன், தெ. 5174
உதயகுமார், எம். 5601
உதயகுமார், ஏ.எஸ். 5958
உதயகுமார், நாவல்நகர் ப. **பார்க்க** நாவல்நகர் ப.உதயகுமார்.
உதயகுமார், பா. 5532
உதயசந்திரன், V.N.S. 5391
உதயணன், வவுனியூர் இரா. **பார்க்க** வவுனியூர் இரா.உதயணன்
உமா 5259
உமாபதி சிவாசாரியார் 5053, 5055
உய்யவந்த தேவ நாயனார், திருவியலூர் 5069-70
உவில்சன், ஏ.ஜே.5281
உவைஸ், அல்லாமா ம.முகம்மது 5226
ஏகாம்பரம், நா. 5120
ஏனாதிநாதன், பூரணம் 5771
ஐயாத்துரை, அரியாலையூர் வே. 5576
ஓட்டமாவடி அறபாத். 5227-29, 5516, 5578
கங்கை மகன் **பார்க்க** ஸ்ரீகந்தராஜா, செல்லத்துரை
கச்சாயில் இரத்தினம் 5735
கண்ணன் 5974, 5977
கணபதிப்பிள்ளை, க. 5589, 5621, 6A15
கணபதிப்பிள்ளை, சி. 5056, 5114, 5123, 6A05
கணபதீசுவரக் குருக்கள், ச. 5204
கணேசலிங்கம், கே.ரீ. 5286, 5290

கணேசன், எல். 5980
கணேசையர், சி. 5383, 5883
கத்தோலிக்க தமிழ் இளைஞர் ஒன்றியம், நோர்வே. 5010
கதிர்காமு, சண்முகலிங்கம் 5404
கதிரவேலு, ஸ்ரீசித்திரா 5689
கதிரவேலுப்பிள்ளை, கோப்பாய் சி. 5802
கதிரைவேற்பிள்ளை, நா. 5062, 5132
கந்தசாமி, க. 5607
கந்தசாமி, சுகந்தி 5308
கந்தசாமி, ரஜனி 5867
கந்தசுவாமி, வ. 5043
கந்தப்பு, நீலாம்பிகை 5418
கந்தவனம், வி. 5172, 5519, 6A04
கந்தையா, ஆ. 5213, 6A21
கந்தையா, சரவணமுத்து 5839
கந்தையா, பொ. 5567
கந்தையா, வி.சி. 5588
கந்தையாபிள்ளை, ந.சி. 5002, 5083, 5104, 5131, 5138, 5817, 5895-96, 5942, 6A27, 6A52
கபூர், எருக்கலம்பிட்டி கே.எஸ்.ஏ. 5908, 5923
கமலநாதன், தி. 5336, 5788, 5893
கமலாம்பிகை, மு. 5186
கமால், திக்குவல்லை **பார்க்க** திக்குவல்லை கமால்.
கரவைக்கிழார் 5607
கருணாநிதி, மா. 5295, 5313, 5333, 5340
கருணாலய பாண்டியனார், சிவங். 5498, 5527
கல்லொளுவை பாரிஸ் 5458
கலாமோகன், க. 5677
கலைச்செல்வன் 5595
கவிப்பிரியா நிஷா **பார்க்க** ஹஸன், ரூஹின் நிஷா
கவுரியல், செபஸ்தியான் 5271
கனகசபாபதி, பொ. 5037, 6A31
கனகசபை, பொன். அ. 5069
கனகசூரியர், அ. 5198-99
கனகநாயகம், சிவானந்தவல்லி 5091-94
கனகரத்தினம், இரா.வை. 5772
கனகரத்தினம், த. 5806
கனகலதா 5674
கனி, உவைஸ் 5565
கஸ்பார், ஜெகத் 5999
காசி. ஆனந்தன். 5529
காசிம் புலவர், M.P.M. முகம்மது 5715
காந்திரதாவ், அலெக்சாண்டர் 5941
கார்த்திகேசு சுவாமிகள், ச.5065
கார்த்திகேசு யோகி, க. 5115
காராளசிங்கம், வி. 5301
காவலூர் இராசதுரை. 5009
காளிதாசர் 5570
கிங்ஸ்பரி, பிரான்சிஸ் 5110, 5393, 5462, 5602, 5620
கிண்ணியா ஏ.எம்.எம்.அலி 5531

கிராஸ், குன்ரர் 5285
கிருபானந்தா, நயினை கி. 5672, 5691
கிருஷ்ணசந்தர் 5473
கிருஷ்ணசாமி, மஞ்சுளா 5522
கிருஷ்ணசிங்கம், ந. 5660
கிருஷ்ணபிள்ளை, சின்னையா **பார்க்க** திமிலைத்துமிலன்
கிருஷ்ணபிள்ளை, விமலா 6A54
கிருஷ்ணமோகன், தனபாலசிங்கம் 5298, 5311
கிருஷ்ணராஜா, சோ. 5029
கிருஷ்ணவேணி, ஏ.என். 5030, 5063
கிருஷ்ணன், S.P. 5684
கிருஷ்ணா 5019
கிளிநொச்சி மாவட்ட சமூக சுகாதார அபிவிருத்திச் சபை 5316
கிறிஸ்ரியன், மா.கி. 5665, 5709, 5870
குகபாலன், கா. 5856,
குணசிங்கம், செல்லத்துரை 5961
குணசிங்கம், முருகர் 5939
குணரத்தினம், வேலுப்பிள்ளை 5278, 5309
குணராசா, க. **பார்க்க** செங்கை ஆழியான்
குணேஸ்வரன், க. 5699
குணேஸ்வரன், சு. 5497, 5568
குத்தூஸ், அக்கரையூர் அப்துல் **பார்க்க** அக்கரையூர் அப்துல் குத்தூஸ்.
குமர குருபர சுவாமிகள் 5120, 5122, 5126
குமார், மா.சின்னத்தம்பி 5550
குமாரகுலசிங்க முதலியார், J.W.Barr 5618
குமாரசுவாமி, ஆனந்த 6A17
குமாரசுவாமிக் குருக்கள், ச. 5075, 5077, 5128, 5136, 5139, 5177-78, 5193, 5196-97, 5362, 6A16
குமாரசுவாமிப் பிள்ளை, த. 5168
குமாரசுவாமிப் புலவர், அ. 5044, 5184, 5382, 5491, 5612
குமாரவேல், பழ.சிவபாக்கியம் 5718
குருகூர்ச் சுப்பிரமணிய தீக்ஷிதர் 5031
குருகே, ஆனந்த 5235
குருநாதன், இ. 5827
குருமூர்த்தி ஐயர், க. 5057, 5173
குலரத்தினம், க.சி. 5883, 6A39
குலரத்ன, W.G. 5348
குறிஞ்சித்தென்னவன் 5534
கேணிப்பித்தன் **பார்க்க** அருளானந்தம், ச.
கைலாசநாதக் குருக்கள், கா. 6A26
கைலாசபதி, க. 5758, 6A03
கைலாசபிள்ளை, த. 5076
கைஸ், பாயிஸா 5645
கொலின், வி.மைக்கல் 5518
கொலொடிக்கே, கார்லோ 5483
கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயம் 5358
கோகிலம் சுப்பையா 6A32
கோணேஸ்வரன், நடராஜா 5673
கோபதி **பார்க்க** தெய்வேந்திரன், ப.
கோபாலசாமி, வை. 5968, 5975

கோபாலசிங்கம், எஸ். **பார்க்க** வெல்லவூர்க் கோபால்
கோவிந்தசாமி, கே. 5088
கௌதம நீலாம்பரன். 5967
nfsup 6A01
கௌரிகாந்தன், அ. 5897
சக்திதாசன், இணுவை **பார்க்க** இணுவை சக்திதாசன்
சகாதேவன், ஆர். 5992
சங்கர பண்டிதர், சிவ. 5075, 5139
சங்கரப்பிள்ளை, பங்கேஸ்வரி 5711
சச்சிதானந்தன், இரா. 5906
சச்சிதானந்தன், என். 5890
சச்சிதானந்தன், ச. 5373-74
சச்சிதானந்தா, ஸ்வாமி 5824
சசிபாரதி 5688
சஞ்சீவ்காந்த், எல். 5509
சண்முகசுந்தரம், ஆர். **மேலும் பார்க்க** ஷண்முகசுந்தரம், ஆர்.
சண்முகசுந்தரம், த. 5590, 5627,
சண்முகதாஸ், அ. 5370, 5764, 5864
சண்முகதாஸ், மனோன்மணி 5361, 5764
சண்முகநாதன், ச.கா. 5290
சண்முகநாதன், பொ. 5698, 5798-99
சண்முகலிங்கம், குழந்தை ம. 5445
சண்முகலிங்கம், புனிதவதி 5614
சண்முகலிங்கன், என். 5241, 5478, 5844
சத்தியசீலன், சமாதிலிங்கம் 5912
சதக்குத் தம்பிப் பாவலர், ச.த.மு. 5580
சதாசிவ ஐயர், தி. 5488
சதாசிவப்பிள்ளை 5148
சதாசிவம்பிள்ளை, சி.இ. 5149
சந்திரசேகரப் பண்டிதர் 5377
சந்திரசேகரன், எஸ். 5348
சந்திரசேகரன், சோ. 5295, 5313, 5325, 5328, 5330, 5335, 5342
சந்திரபோஸ், எஸ். 5793, 6A09
சந்திரபோஸ், ஏ. எஸ். 5917
சபாநாதன், குல. 5201-02, 5216, 5826
சபாபதி ஐயர், வி. 5081
சபாபதி நாவலர் 5066
சபாரத்தின முதலியார், ச. 5107
சபாரத்தினம், சசிபாரதி சு. **பார்க்க** சசிபாரதி
சபாரத்தினம், பிரேமினி **பார்க்க** தாட்சாயணி.
சம்பந்தன் 5386-87
சம்பந்தன், S.T.G. 5822
சம்பந்தன், ஐ.தி. 5851, 5890, 5940
சமீம், முகம்மது 5275
சமுத்திரன் 5288
சமூகநிலை மாற்ற நிறுவனம் 5284
சர்வதேச பொது மன்னிப்புச் சபை 5021
சரவணபவன், கதிர் 5540
சரவணமுத்து, இராமு 5662

சரவணமுத்துப் பிள்ளை 5377
சரவணனார், சி. 5266, 5773
சரீஸ், தங்கவேலு 5551
சலாஹுத்தீன், முகம்மது 5230
சவுத் விஷன் 5236
சாந்திப் பிரியன் 5927
சாம்பசிவ சர்மா, இரா.சிவ. 5392
சாம்பசிவ சிவாச்சாரியார், க. 5050
சாரங்கபாணி, க.வே. 5600
சாரதி, ஆர்.பி. 5995
சாரல்நாடன் 5534, 5825, 6A33
சாலய் இளந்திரயன் 5964
சாஹிபுப் புலவர், செய்யிது அனபிய்யா 5231
சித்தாந்த மாணவன் 5059
சித்திரலேகா, மௌ. 5262
சித்ரமுத்தடிகள் 5065, 5067
சில்லையூர் செல்வராசன். 5608, 5747
சில்வா, காலிங்க டியுடர் 5268
சில்வா, சி.சி.டி. 5416
சிவக்கொழுந்து, வே. 5838
சிவகரன், வி.எஸ். 5556
சிவகுமாரன், கே.எஸ். 5740, 5807
சிவகுமாரன், பவானி 5668
சிவகுரு, சி.வே. 5121
சிவகுரு-தையல்நாயகி, சிவநாயகி 5150
சிவகுருநாதன், எஸ். 5243
சிவகுருநாதன், பத்மா 5260, 5263-64
சிவங். கருணாலய பாண்டியனார். **பார்க்க** கருணாலய பாண்டியனார், சிவங்.
சிவசண்முகம், ஞா. 5946
சிவசேகரம், சி 5803, 5916
சிவஞான சுவாமிகள், திருவாவடுதுறை 5042
சிவஞானசுந்தரம், இ.க. 5240
சிவஞானசுந்தரம், சி. 5447
சிவஞானசுந்தரம், சீ. 5727
சிவஞானம், முத்து 5605
சிவத்தம்பி, கார்த்திகேசு 5622, 5760, 5761, 5770, 5785
சிவதாசன், அரியாலையூர் சி. 5867
சிவநேசன், கிருஷ்ணபிள்ளை 5207
சிவப்பிரகாசம், பி.பி. 5268
சிவப்பிரகாசம், யோகேஸ்வரி 5792
சிவபாதசுந்தரம், சு. 5156, 6A22, 6A23, 6A24, 6A25
சிவபாதசுந்தரம், சோ. 6A14
சிவபாதசுந்தரன், நா. 5237, 5315, 5619
சிவபாதம், லக்ஷ்மி 5454
சிவபாலன், ஆ. 5403
சிவபாலன், பா. 5553
சிவயோகன், சா. 5245
சிவராமகிருஷ்ண சர்மா, பா. 5222-23
சிவலிங்கம், சுப்பிரமணியம் 5635

சிவலிங்கம், த. 5273
சிவானந்தன், பொன். 5563
சிவானந்தா, சுவாமி 5073
சிற்றம்பலம், சி.க. 5954
சிறீக்கந்தராசா, செ. 5305
சிறீஸ்கந்தராசா, இ. 5003, 5756
சின்ன பாலா **பார்க்க** பாலநடராச ஐயர்
சின்னத்தம்பி, மா. 5327, 5349-50
சின்னத்தம்பி, வீ. 5712
சின்னத்தம்பி, ஜே.ஆர். 6A29
சின்னத்தம்பிப் புலவர் 5117, 5171, 5493
சின்னையா சிவம், அ. 5205
சீதரன், ராணி 5654, 5671
சீவரத்தினம், சி. 5842
சுகுமார், வெ. **பார்க்க** அக்கினி
சுசீந்திரராஜா, சு. 5766, 5887
சுசீந்திரன், நடராஜா 5285
சுத்தானந்த பாரதியார் 5060, 5068, 5106, 5843
சுதாகர், கே.எஸ். 5644
சுதாகரன், மகாலிங்கம் 5357, 5682-83
சுந்தரம்பிள்ளை, அராலியூர் ந. 5345
சுந்தரம்பிள்ளை, சி. 5047, 5078, 5180
சுந்தரராஜன், அ.சே. 5490
சுப்பிரமணிய தேசிகர், சி. 5144, 5152, 5159
சுப்பிரமணியம், ச. 5101
சுப்பிரமணியம், த. 5137
சுப்பிரமணியம், வே. **பார்க்க** முல்லைமணி
சுப்பிரமணியம், ஜீ. 5981
சுப்பிரமணியம்பிள்ளை, ஜீ. 5945
சுப்பிரமணியன், சந்திரிகா 5022
சுப்பையபிள்ளை, ந. 5151
சுப்பையா, கோகிலம் **பார்க்க** கோகிலம் சுப்பையா
சுபாஷினி, ஜெ. 5558
சுபைர், எஸ்.எம்.எம். 5949
சுமதி ரூபன் **பார்க்க** ரூபன், சுமதி
சுல்தான், மரியம்பீபி 5584
சுவாமிநாதன், சி. 5894
சுஜந்தன், கா. 5495, 5791
சூசைப்பிள்ளை, வ.ம. 5594
சூரியன், மு.க. 5112
சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம் 5255
செகந்நாதன், பொ. 5095
செங்கை ஆழியான் 5643, 5655, 5818-19, 5828, 6A07, 6A11, 6A13
செந்திநாதையர், ஸ்ரீகாசிவாசி 5176
செந்தில்வேலவர், தே. 5848
செபரத்தினம், கனகரத்தினம் 5886
செல்லத்துரை, அருணா 5028, 5937, 6A02
செல்லத்துரை, இ. 5053
செல்லத்துரை, சு. 5848, 5863

செல்லத்துரை, துறையூர் க. 5884
செல்லப்பா, நா. 5125
செல்லையா, அ.பொ. 5624
செல்லையா, நெ.வை. 5111, 5166
செல்லையா, மு. 5560, 5574
செல்வகணபதி, இரா. 6000
செல்வநாயகம், அருள் 5663, 5789
செல்வநாயகம், சா.ஜே.வே. 5906
செல்வநாயகம், தாழை **பார்க்க** தாழை செல்வநாயகம்
செல்வராசகோபால், க.தா. 5733
செல்வராசன், சில்லையூர் **பார்க்க** சில்லையூர் செல்வராசன்
செல்வராஜ், ஜி.எம். 5871
செல்வராஜன், காவலூர் ஞா.ம. 5135, 5925
செல்வராஜா, என். 5006, 5008, 5760, 5790
செல்வராஜா, லீலாம்பிகை 5440
சென் ஜோன்ஸ் முதலுதவி அணி 5356
சேகர், விஜயலட்சுமி 5523, 5659, 5697
சேவாலங்கா 5415
சொக்கலிங்கம், க. 5603-04, 5611, 5724
சொக்கன் **பார்க்க** சொக்கலிங்கம், க.
சொர்ணலிங்கம், க. 5443
சோதிநாதன், செ. 5080
சோமகாந்தன், நா. 5775
சோமசுந்தரப் புலவர், க. 5113, 5206, 5389, 5539, 5593
சோமசுந்தரம், க. 5269
சோமசுந்தரம், குமாரசாமி 5040-41, 5141
சோமசுந்தரம், தயா 5245
சோமசுந்தரம்பிள்ளை, க. 5830
சோமசுந்தரம்பிள்ளை, க. **மேலும் பார்க்க** சோமசுந்தரப் புலவர், க.
சோழன், ஆதனூர் **பார்க்க** ஆதனூர் சோழன்
சோமானந்த, பிக்கு 5087
சோமாஸ்கந்தக் குருக்கள், மு. 5221
ஞானசம்பந்தன், நா. 5122
ஞானசேகரக் குருக்கள், இ. 5074
ஞானசேகரன், தி. 5011, 5652, 5685, 5889
ஞானதாசன், முதலூர் 5899
ஞானப்பிரகாசர், வண.எஸ். 5175
ஞானராசா, செ. 5455
ஞானி 5979
ட்ரொட்ஸ்கி, லியொன் 5299
டானியல், கே. 5720
டானியல், ஜெ. 5557
டீயெம்பி 5915
டெசி, சுவாமி எல். 5615
டேவிற், K.R. 5707
டொமினிக் ஜீவா **பார்க்க** ஜீவா, டொமினிக்
தங்கவேலாயுதம், வ.ஆ. 5808
தங்கேஸ், பரம்சோதி 5268, 5272
தணிகாசலம், க. 5261, 5577

தம்பிமுத்து, E.L. 5945
தம்பு, இராஜேஸ்வரி 5072
தம்பு, B.N. 5304
தமிழ்நேசன் **பார்க்க** நேசரட்ணம், பாவிலு கிறிஸ்து
தமிழ்மாறன், என்.எஸ். 5907
தமிழர் புனர்வாழ்வுக் கழகம் 5317, 5321, 5410
தமிழீழ தேசிய விடுதலை முன்னணி 5280
தமிழீழ விடுதலைப் புலிகள் 5287, 5303, 5431-33, 5517, 5858-60
தயாநிதி 5258
தயாநிதி, ரி. 5592
தயாபரன், முருகேசு 5676
தயானந்த, மீகொட பத்திரனகே 5289
தர்மகுலசிங்கம், திக்கவயல் சி. 5767
தர்மலிங்கம், மு. 5914
தலைமலைகண்ட தேவர் 5784
தனசீலன், த. 5552
தனபாலசிங்கம், எஸ்.ஆர். 5012
தனபாலசிங்கன், செ. 5045, 5054, 5103, 5170, 5187, 5982
தனபாலன், பாலசுப்பிரமணியம் 5001, 5346, 5351
தனபாலா, சின்னத்துரை 5164
தனராஜ், தை. 5039, 5917
தாட்சாயணி. 5642, 5667
தாமரைக்கண்ணன், ப. 5969
தாழை செல்வநாயகம் 5647
தாஹிர், எம்.ஐ.எம். 5678
திக்கவயல் சி. தர்மகுலசிங்கம் **பார்க்க** தர்மகுலசிங்கம், திக்கவயல் சி.
திக்குவல்லை கமால் 5710
திக்குவல்லை ஸப்வான் 5805
திமிலைத்துமிலன். 5547-48, 5623, 5630, 5730, 5779
தியாகராசா, கந்தழி 5102
தியாகராசா, ச. 5124
தியாகராஜா, சிவ. 5082
திரவியம், கு.ம. 5898
திருச்சந்திரன், செல்வி 5274, 5368
திருச்சிற்றம்பலம், சு. 5145
திருச்செல்வம், எஸ். 5862
திருச்செல்வம், நீலன் 5310
திருஞானசம்பந்தபிள்ளை, ம.வே. 5117, 5183, 5840
திருநாவுக்கரசு, சிவசிதம்பரம் 5051-52
திருநாவுக்கரசு, V.T. **பார்க்க** நாவேந்தன்
திருமாவளவன், தொல். 5966, 5972
திரேஸ்குமார், த. 5561
தில்லைநாதன், எஸ். 5762
தில்லைமுகிலன் 5874
தீகல்லே, மஹிந்த 5913
துர்க்காதேவி தேவஸ்தானம் 5217
துர்க்காபுரம் மகளிர் இல்லம் 5318
துரைசிங்கம், த. 5381, 5450, 5750
துரைராஜா, வி.எஸ். 5009

துவாரகன் **பார்க்க** குணேஸ்வரன், சு.
தூயவன் 6A50
தெய்வேந்திரன், ப. 5658
தெல்லியூர், தமிழ்மணி 5324
தேசிகவிநாயகம்பிள்ளை, சி. 5629
தேயிலைச் செழியன் 5927
தேவ அபிரா 5505
தேவதாஸ், தம்பிஐயா 5369
தேவராசன், ஆ. 5864
தேவராஜ், வி. 5015
தேவன்-யாழ்ப்பாணம். 5396
தேவா 5259
தேவானந்த், தே. 5587
தொல்புரக்கிழார் **பார்க்க** சிவபாதசுந்தரன், நா.
நக்கீர தேவர் 5154
நகுலசிகாமணி, வல்வை ந. 6A53
நட்டுவச் சுப்பையனார் 5527
நடராசன் இணுவையூர் செ. 5745, 5944
நடராசன், நவாலியூர் சோ. 5049, 5483, 5562, 5570, 5804, 6A17, 6A55
நடராசா, அ. 5067
நடராசா, ஆ. 5220
நடராசா, F.X.C. 5281, 5364-66, 5901-02, 6A44
நடராசா, ஓவியர் 5985
நடராஜபிள்ளை. பண்டித 5129
நடராஜன், பண்டிதர் வ. 5388
நடராஜா, K.V. 5702
நடராஜா, சுதாகரன் 5933
நடனசபாபதி, க. 5813
நடனசிகாமணி, கே.பி. 5832
நடேசபிள்ளை, மு. 5244
நந்தா, கார்மேகம் 5436
நந்தினி சேவியர் 5741
நமசிவாயதேவர், குகை 5161
நல்லதம்பி, மட்டுவில் நா. 5742
நவமணி, வி.எஸ். 5736
நவரத்தினம், க. 5359
நவரத்தினம், மாவை.செ. 5185
நவரேந்திரன், கந்தையா 5512, 5572
நவாலியூர் சோ. நடராசன் **பார்க்க** நடராசன், நவாலியூர் சோ.
நவீனன் 5510
நஜீபா, எம்.ஐ. **பார்க்க** பெண்ணியா
நஜுமுத்தீன், ஜனாப் ஏ.ஸீ. 5354
நாகதர்மா 5559
நாகநாத பண்டிதர், அ. 5044
நாகராசா, இ. 5911
நாகராஜன், அநு.வை. 5470
நாகராஜன், இ. 6A38
நாகலிங்கம், க. 5379-80
நாகலிங்கம், சி. 5273

நாகலிங்கம், செ. 5952
நாகேந்திரன், சிசு. 5250
நாகேஸ்வரன், கனகசபாபதி 5786
நாதர், வ. 5900
நாதன், நவாலியூர் வே.க.ப. 5108, 5752
நாரத, பிக்கு 5087
நாவல்நகர் ப.உதயகுமார் 5508
நாவேந்தன் 5924
நிஹ்மத்துல்லா, ஏ.ஆர். 5521
நீதியான சமாதானத்திற்கும் ஜனநாயகத்திற்குமான நடுவம் 5910
நீர்கொழும்பூர் முத்துலிங்கம் 5705
நீலகண்டன், கந்தையா 5198-99
நேசரட்ணம், பாவிலு கிறிஸ்து 5085-86
நோர்பேட், சூசைப்பிள்ளை அன்ரனி 5398-99, 5829
பச்சேக், செபஸ்தியாம்பிள்ளை போல் ஜெயந்தன் **பார்க்க** ஜெயந்தன்
பஞ்சாட்சரம், ச.வே. 5208, 5218, 5526, 5636
பத்மநாதன், க.மு. 5403
பத்மநாதன், சி. 5903
பத்மநாதன், நாக. 5787
பர்சினி, B.S. 5146, 5160, 5189
பரஞ்சோதி முனிவர் 5158
பரணீதரன், க. 5016-17
பரந்தாமன், வி. 5314, 5544
பரமசிவன், தொ. 5104
பரமேஸ்வரன், கா. 5426
பரன் **பார்க்க** தயாபரன், முருகேசு
பவுன்துரை, இராசு 5989
பளீல், ஏ.சீ.எம். 5277,
பளீல், A.L.M. 5307
பற்றிமாகரன், றீற்றா 5378
பாக்கியநாதன், விக்னா 5496
பாய்வா, அ.ச. 5638
பார்த்திபன் 5706, 5930
பாரதநேச ஈழச்செல்வன் 5617
பாரதிநேசன் **பார்க்க** சின்னத்தம்பி, வீ.
பாரிஸ், கல்லொளுவை **பார்க்க** கல்லொளுவை பாரிஸ்.
பாரிஸ் குடும்பி **பார்க்க** ஜெயேந்திரன், வெற்றிவேலு
பாலசுந்தரக் குருக்கள், கு. 5363
பாலசுந்தரம், பொன். 5203, 5209, 5212, 5890
பாலசுந்தரம், விமலாம்பிகை 6A10
பாலசுப்பிரமணிய சர்மா, நா.சி. 5957
பாலசூரிய, சோமரத்ன 5809
பாலநடராச ஐயர் 5932
பாலமனோகரன், அ. 5371, 5666, 5719
பாலமோகன் 5541
பாலரவி 5514
பாலேஸ்வரி, ந. 5704, 5731
பாஸ்கரன், இ.த. 5276
பிரகலாதன், தேவராஜா 5372

பிரகலாதன், வசந்தி 5372
பிரபா 5515
பிரபாகரன், மோகனா 5264
பிரபாகரன், விஜி 5714
பிரான்சிஸ், எஸ். 5953
பிரித்தானிய ஈழவர் இலக்கியச் சங்கம் 5800
பிரேமச்சந்திரன், சுரேஷ் 5921
பிறேம்நாத், P. 5304
புதுமைலோலன். 5846, 5918
புவனேந்திரன், தெட்சணாமூர்த்தி 5505
புன்னியாமீன், பீ.எம். 5319-20, 5833, 5837, 5876-79
புன்னியாமீன், மஸீதா 5692
புஷ்பராஜன், மு. 5748
புஷ்பராஜா, சி. 5797
புஷ்பராஜா, மீரா 5797
புஹாரி, எம்.எச்.எம். 5949
பூர்ணானந்தேசுவரக் குருக்கள், இ.கு. 5090, 5192
பூரணானந்தா, கு. 5305
பெண்கள் சந்திப்பு 5256-59
பெண்ணியா 5504
பெரியதம்பி, K.T. 5046, 5959
பெரியதம்பி, வல்வை கமலா **பார்க்க** வல்வை கமலா பெரியதம்பி.
பெரியதம்பிப்பிள்ளை, ஏ. 5048
பேரறிவாளன், அ.ஞா. 5988
பேரின்பநாதன், ஆ. 5408
பொன் பூபாலன். 5502
பொன்கையூர்ப் பர்வதன் **பார்க்க** ஈழத்துச் சிவானந்தன்
பொன்னுத்துரை, எஸ். 5625, 5646, 5681, 5746, 6A12, 6A35
பொன்னுத்துரை, ஏ.ரி. 5591
பொன்னுத்துரை, கே. 5891
பொன்னையா, ஏழாலை ஐ. 5061, 5419
பொன்னையா, நா. 5109
பொன்னையா, வ. 6A30
பொன்னையாபிள்ளை, அ. 5420-21
பௌநந்தி, அமிர்தலிங்கம் 5759
மகா உத்தமன், ம. 5297
மகாநாம தேரர் 5995
மகாலிங்கம், இந்திராணி 5253
மகாலிங்கம், என்.கே. 5812
மகாலிங்கம், சு. 5043
மகேந்திரன், இ. **பார்க்க** முல்லை அமுதன
மகேந்திரன், கோகிலா 5038, 5687
மகேந்திரன், மாரி. 5680
மகேஸ்வரலிங்கம், க. 5956
மகேஸ்வரன், விஜயகலா 5845, 5850, 5929
மங்கை, அ. 5994
மட்டுவில் நா.நல்லதம்பி **பார்க்க** நல்லதம்பி, மட்டுவில் நா.
மடுளுகிரியே விஜேரத்ன 5809
மண்டல புருடர் 6A20

மணலாறு விஜயன் 5861, 5934
மணிக்கவிராயர் **பார்க்க** மணிவாசகன், என்.
மணிவாசகன், என். 5293, 5453, 5500, 5513, 5525, 5616
மதிஅழகன், வி.என். 5836
மதுசூதனன், தெட்சணாமூர்த்தி 5788
மதுரம் 5487
மயில்வாகனம், க. 5546
மயில்வாகனம், கிருஷ்ணவேணி 5427-28, 5437
மரியசேவியர், நீ. 5586, 5596-97, 6A41
மரியதாசன், அ. 5728
மரியாம்பிள்ளை, S.N.J. 5795
மரியாம்பிள்ளை, ரூபன் 5020, 5026-27,
மருணீக்கியார் 5753
மருதன் 5997
மருதூர் ஜமால்தீன் 5542
மல்லாவி மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கம் 5355
மலரவன், கப்டன் 5581, 5794
மனோஹரன், சிவனு 5650
மஜீத், மருதூர் ஏ. 5367
மஜீது, மு.அ.க.அப்துல் 5226
மஹ்ரூப், எஸ்.எல்.எம். 5004
மாஓ சே-துங் 5291
மாகம சேகர 5487
மாதகலான் **பார்க்க** அருள்சுப்பிரமணியம், சபா
மார்க்ஸ், அ. 5013, 5978
மார்ஷல் 5814
மாவை வரோதயன் 5700
முகம்மது, சி.நயினார் 5231, 5962
முகிதீன், எச்.எம்.பி. 5905
முத்து **பார்க்க** சரவணமுத்து, இராமு
முத்துக்குமாரசுவாமிப் பிள்ளை, கு. 5118, 5134, 5163, 5179
முத்துத்தம்பிப்பிள்ளை, ஆ. 6A49
முத்துமீரான், எஸ். 5494
முத்துராச கவிராயர். 5904
முத்துலிங்கம், அ. 5686
முத்துலிங்கம், ச. 5337
முத்துலிங்கம், நீர்கொழும்பூர் **பார்க்க** நீர்கொழும்பூர் முத்துலிங்கம்.
முத்தையன், சி.மு. 5064
முத்தையா, எஸ். 5284
முத்தையா, நா. 5116, 5155, 6A08
முரளிதரன், சு. 5892
முருகபூபதி, லெ. 6A18
முருகரத்தனம், தி. 5986
முருகரம்மான் **பார்க்க** இராமலிங்கம், மு.
முருகவேள், சி. 5061
முருகானந்தன், எம்.கே. 5776
முருகானந்தன், ச. 5640
முருகுப்பிள்ளை, சி. 5182
முருகையன், இ. 5598, 5634

முருகையா, ச. 5632
முல்லை அமுதன் 5875
முல்லை கோணேஸ் **பார்க்க** கோணேஸ்வரன், நடராஜா
முல்லை றிஸானா. 5347
முல்லைச் செல்வன். 5438
முல்லைமணி 5960, 6A40
முனிதாச, குமாரதுங்க 5811
முஸ்தபா, ஏ.சீ.ஜரீனா 5713
முஹிதீன், எச்.எம்.பீ. 5025
மூக்கையா, மா.செ. 5302
மோகன், கோ. 5988
மோகன்ராஜ், க. 5938
மோகன் றாஸ், சீ.ஏ. 5023
மௌலானா, எஸ்.எம்.முஸ்தபா 5233
மௌலானா, கா.பு,மு.யூ.செய்யிது முஹம்மது அப்துற் றஹ்மான் புகாரி 5234
மௌனகுரு, சி. 5248, 5626, 5777, 5796, 6A36
யமுனாநந்தா, சி. 5405, 5412-14
யாக்கோபு, பீ.எம். 5181
யாகூப், நூர்தீன் 5352
யாழ் சமூக செயற்பாட்டு மையம். 5406
யாழ்ப்பாணத் தமிழ் எழுத்தாளர் சங்கம் 5543
யாழ்ப்பாணம் சுகாதாரத் திணைக்களம். 5322
யோகநாதன், செ. 5449, 5465, 5637, 5651, 5656, 5693, 5708, 5726
யோகர் சுவாமிகள் 6A34
யோகராசா, செ. 5451-52, 5749, 5751
யோகராசா, சோ. 5760
யோதிலிங்கம், சி.அ. 6A06
ரஞ்சகுமார், குமாரலிங்கம் 5279
ரஞ்சி 5259
ரபீக், எஸ்.எச்.மொஹமட் **பார்க்க** வெலிமடை ரபீக்
ரஜனி. 5732
ரஜா, S.F.L. மொஹிடீன் 5479
ரஹ்மான், எம்.ஏ. 5485
ரஹீம், எம்.எஸ்.அப்துல் 5947
ராகவன், பா. 5991
ராசுகுமார், மேது. 5976
ராணி சீதரன் **பார்க்க** சீதரன், ராணி
ராமஸ்வாமி சர்மா, சோ. 5774
ராமேஸ்வரன், சோ. 5472, 5477, 5653, 5690, 5716, 5734
ராஜகவி றாஹில். 5538
ராஜகோபால், ஈ.கே. 5869, 5890
ராஜசிங்கம், மொய்றா றொகான் 5872
ராஜதுரை, எம்.டி. 5254
ராஜபக்ஷ, திலானி 5308
ராஜேந்திரன், யமுனா 5448, 5748, 5984, 5990
ரூசென், ரோபன் 5371
ரூபசிங்க, குமார் 5922
ரூபசிங்கம், செ. 5239
ரூபன், சுமதி 5694

லக்சுமி 5258
லக்ஷ்மணன், கி. 5757
லங்கா சித்த ஆயுள்வேத வைத்தியக் கல்லூரி 5417
லதா **பார்க்க** கனகலதா
லிங்கதாசன், க.ப. 5533
லூஷுன் 5813
லெனின், வி.ஐ. 5852
லெஸ்லி, B.ஹென்றி 5375
லோகநாதன், செ. 5296
வச்சிரவேல் முதலியார், க. 5055, 5151
வசந்தன் 5501
வசந்தன், டானியல் 5720
வசந்தா, ரா. 5976
வசீகரன். 5545
வரத பண்டிதர், ஆ. 5191, 6A51
வரதராசன், தி.ச. 5486, 6A37
வரதராசா, நா. 5326
வரோதயன், மாவை **பார்க்க** மாவை வரோதயன்
வல்வை கமலா பெரியதம்பி 5471, 5573
வவுனியூர் இரா.உதயணன் 5723
வன்னி அரசு 5966, 5972
வாமதேவன், க. 5098, 5169
வாஸ், K.V.S. **பார்க்க** ரஜனி.
விக்கிரமசிங்க, வை.எம். 5239
விக்ரர் 6A47
விசயரத்தினம், கா. 5769
விசாலாட்சி மாதாஜி, ஸ்ரீ விசுவாம்பா 5215
விசுவநாத சாஸ்திரிகள், நா. 5612
விசுவநாதன், நாலிஸ் 5416
வித்தியானந்தன், சு. 5585, 5606, 5744, 5788, 5893
விமலராஜா, லக்சி 5933
விமலன், சி. 5016-17
வில்சன், ஏ.ஜே. **பார்க்க** உவில்சன், ஏ.ஜே.
விவேக் 5506
விவேகானந்தர், சுவாமி 5079
விவேகானந்தன், திலகா 5454
வினோதரன், ந. 5679
விஜயதுங்கா, ஜே. 5821
விஜயலட்சுமி, என். 5703
விஜயன், மணலாறு **பார்க்க** மணலாறு விஜயன்
விஜேசிறிவர்த்தன, சுனில் 5243
விஜேந்திரன், காவலூர் இ. 5024
விஜேரத்ன, மடுளுகிரியே **பார்க்க** மடுளுகிரியே விஜேரத்ன
வீமன்ராஜு. 5511
வீரமணி ஐயர், ம.த.ந. 5423, 5429, 5434-35, 5439
வெல்லவூர்க் கோபால் 5633, 5955
வெலிமடை ரபீக் 5571
வேதநாயகம்பிள்ளை, சி.ஆ. 5162
வேதபுரியான். 5738

வேல்முருகு, சி. **பார்க்க** வேலழகன், ஆ.மு.சி.
வேல்முருகு, சே. 5058
வேலழகன், ஆ.மு.சி. 5267
வேலன், க.ந. 5130
வேலாயுதம், மேனகா 5268
வேலுப்பிள்ளை, க. 5188
வேற்பிள்ளை, ம.க. 5096
வைத்தியநாதன், கந்தையா 5214
வைத்தியலிங்கம், இ. 5210
வைத்தீஸ்வரக் குருக்கள், கு. 5089
வைத்தீஸ்வரன், கா. 5238, 5246, 5407
றஹீம், ஏ.ஆர்.றிஸானா **பார்க்க** முல்லை றிசானா
றாஹில், ஏ.சி. **பார்க்க** ராஜகவி றாஹில்.
றோயிட்ஸ், இ.ஸாங்கி ஆல்பன் 5395
ஜகந்நாதன், கி.வா. 5982
ஜப்பார், அர.அப்துல் 5962
ஜம்புலிங்கம் பிள்ளை, திருமயிலை சே.வெ. 5841
ஜமால்தீன், மருதூர் **பார்க்க** மருதூர் ஜமால்தீன்.
ஜமீல், எஸ்.எச்.எம். 5849
ஜயக்கொடி, சோமா 5810
ஜவாத், ஏ.எல்.அப்துல் 5949
ஜவுபர், எஸ்.எம். 5225
ஜாபீர், ஏ.எம்.எம். 5575
ஜீவகுமாரன், வி. 5402, 5569, 5721, 5729, 5801
ஜீவா, அந்தனி 5873
ஜீவா, டொமினிக் 5014, 5661, 6A42
ஜுனைதா ஷெரீப் 5739
ஜெகநாதன், இரா. 5444
ஜெயக்கிருஷ்ணன், துரையப்பா 5195
ஜெயக்கொடி 5936
ஜெயசங்கர், சி. 5476
ஜெயசங்கர், வாசுகி 5689
ஜெயசிங்கம், W.L. 5282
ஜெயந்தன் 5755
ஜெயப்பிரபா, பாக்கியராசா 5401
ஜெயபாலன், தம்பிராஜா 5005, 5319-20
ஜெயபாலன், வ.ஐ.ச. 5754
ஜெயபாலன், வாசுகி 5430
ஜெயராசா, சபா. 5032, 5329, 5331-32, 5334-35, 5338-39, 5341, 5343-44, 5353, 5425, 5441, 5743, 5781-82
ஜெயராஜா, பெஞ்சமின் 5270
ஜெயவர்த்தனா, குமாரி 5260, 5263
ஜெயேந்திரன், வெற்றிவேலு 5831
ஜோர்ஜ், ஏ.சி. 5294
ஸ்ரீஇராமகிருஷ்ண மடத்தார். 5035
ஸ்ரீகணேசன், கந்தையா 5445
ஸ்ரீகந்தராஜா, செல்லத்துரை 5147
ஸ்ரீகாந்தலட்சுமி, அருளானந்தம். 5007
ஸ்ரீகுமரன், சு. 5468

ஸ்ரீசவிரிக் குரூஸ் 5084
ஸ்ரீசுப்பிரமணிய முனிவர் 5382
ஸ்ரீபதி, சிவனடியான் 5018, 5424
ஸ்ரீராகுல மகாதேரர் 5562
ஸ்கோர்ஸனி, ஓட்டோ 5814
ஸ்டீவன், ஷாமலா 5265
ஸப்வான், திக்குவல்லை **பார்க்க** திக்குவல்லை ஸப்வான
ஷண்முகசுந்தரம், ஆர். 5725
ஷரிப்தீன், கே.ஏ. 5778
ஷரிபுத்தீன், ஆ.மு. 5232
ஷெரிபுத்தீன், ஜின்னாஹ் 5701
ஷெரீப், K.M.M. **பார்க்க** ஜுனைதா ஷெரீப்,
ஹக், லறீனா ஏ. 5760, 5763
ஹரிகிருஷ்ணன், மு. 5013
ஹன்சன், ஜென்ஸ் ஓகொட் 5402
ஹஸன், ஆதில் 5034, 5036
ஹஸன், ரூஹின் நிஷா 5696
ஹாபில், ஏ.எம். 5778
ஹார்ட்மன், ஹெய்டி 5262
ஹுலுகல்ல, எச்.ஏ.ஜே. 5826
ஹெட்டி ஆராய்ச்சி, ரி. 5296

என் முயற்சிக்கு உரமூட்டும் வாசகங்கள்

சசீவன் கணேஷானந்தன் Editor: Noolaham.net
(நூலகம்.நெட் - நூலக இணையத்தளப் பராமரிப்பாளர், கொழும்பு)
தகவல்கள் (Information) என்பதைவிட அறிவு (Knowledge) என்பது மிகவும் முக்கியமானது. நீங்கள் ஒன்றிணைக்கப்பட்ட தகவல்களினூடாக அறிவுருவாக்கம் ஒன்றைச் செய்துகொண்டிருக்கிறீர்கள். இது முக்கியமானது. இதிலிருந்தே சமூகம் தன்னை எதிர்காலத்தில் வளப்படுத்திக்கொள்ள முடியும். அவ்வகையில் உங்களது முயற்சிகள் மிகவும் முக்கியமானவை. உங்களது முயற்சிகள் அனைத்தும் முறையாக ஆவணப்படுத்தப்பட வேண்டியவை.
(நூலகம்டெற்நெற் இணையத்தளத்தின்) பங்களிப்பாளர் பக்கத்தில் உங்களது பங்களிப்புகளைச் சேர்த்துக்கொள்கின்றேன்.
(நூல்தேட்டம் கடிதக்கோவையிலிருந்து 30.05.2008)

Dr.M.S.Shri Lakshmi, Singapore

You are bringing Nool Thettam 5. It is an excellent job.Actually this kind of job should be done by an organaisation not by an individual.Unfortunately no such organaisation for Tamils.So you have taken this difficult task and succeed .As a researcher I find the value of your job.My heartiest congrats to you.Go ahead.We will support you.Take care of your health.Convey my regards and Deepavali wishes to your family members.
"Lakshmi Shri" <visaka_2004@yahoo.com>
(நூல்தேட்டம் கடிதக்கோவையிலிருந்து 07.10.2008)

ஏ.சீ.தாசீசியஸ், அரங்கியல் நாடகவியல் அறிஞர், லண்டன்.
ac.tarci@googlemail.com
தங்கள் ஊக்கம் குன்றா முயற்சி என்னை மலைக்க வைக்கிறது. தங்கள் பணியின் கனதியைப் புரிந்துகொண்டு தங்களுக்கு உறுதுணையாக நிற்கும் தங்கள் துணைவியாரையும் சிந்தனா வளம் நிறைந்த தங்கள் புதல்வியையும், ஊக்கப் படுத்தும் தங்கள் நண்பர்களையும், தங்களைப் பாராட்டும் அதே வேளையில் அன்பு மீதுர பாராட்டுகின்றேன்.
ஒரு பெரிய திணைக்களமோ ஒரு பெரிய நூலகப் பின்னல் அமைப்போ புரிய வேண்டிய பெரும் பணியைத் தங்கள் குடும்பம் நம் இனத்தின் வளத்துக்காக, தியாக உணர்வோடு புரிந்துகொண்டிருக்கிறது. தங்களுடைய இந்தப் பணி, என்னை மலைக்க வைக்கிறது. என் இனத்துப் புரவலர்கள் முன்வந்து, கொடை புரிந்து, தங்கள் கரங்களைப் பலப்படுத்த வேண்டுமாய் உள்ளாரப் பிரார்த்திக்கிறேன்.
(நூல்தேட்டம் கடிதக்கோவையிலிருந்து 17.11.2008)

என்.மணிவாசகன் (மணிக்கவிராயர்), நாவலர் ஒழுங்கை, அக்கரைப்பற்று, இலங்கை
மின்னஞ்சல்: mahasakthi@eureka.lk
தமிழ்கூறும் நல்லுலக இலக்கிய வரலாற்றில் “நூல்தேட்டம்” எனும் முனைப்பும் முன்னெடுப்பும் அருமை பெருமையாகப் பேசப்படும்-பேசவேண்டிய விடயமாகும். அதற்காக என் பாராட்டுக்கள். சாதாரணமாக கிழக்கிலங்கையில் அதுவும் குறிப்பாக அம்பாறை மாவட்டக் கரையோரப் பகுதிகளில் வாழ்கின்ற தமிழார்வம்-எழுத்தார்வம் மிக்கவர்களின் எழுத்தாக்க முயற்சிகள்-குடத்துக்குள் வைத்த விளக்காக பிரபல்யம் அடையாமல் அல்லது அடையாளம் தெரியாமல் இருப்பதை எண்ணி என்போலும்- பலர் கவலையடைந்திருப்பது மறைத்துக் கூறவேண்டிய ஒன்றல்ல. இத்தகைய குறையை-பின்னடைவை-பிற்போக்குநிலையை-புறந்தள்ளும் ஒரு புனிதமான, புரட்சிகரமான போக்காகவே நான் இந்த நூல்தேட்டம் முயற்சியைப் பார்க்கிறேன். என் வாழ்த்துக்களை மீண்டும் தெரிவித்துக்கொள்கின்றேன்.
(நூல்தேட்டம் கடிதக்கோவையிலிருந்து 18.08.2009)

ஓ.எஸ்.எம். அலி

கலாபூஷணம் பீ.எம். புன்னியாமீன்

படைப்பிலக்கியங்களால் மாத்திரமே தமிழ் இலக்கியம் வளர்ச்சி பெறுகின்றது எனும் ஒருவித மாயை வளர்க்கப்பட்டுள்ள இந்நிலையில் ஈழத்துத் தமிழ் இலக்கியத்தை வளர்க்கவும், பாதுகாக்கவும் பல வழிகளில் பல தியாகங்களைப் புரிந்து வரும் பலர் தமிழ் வளர்ப்போர் என்று தம்மைப் பறைசாற்றிக் கொண்டிருப்போரால் திட்டமிட்ட வகையில் உதாசினப்படுத்தப்படுவதாலும், இனங்காட்ட விரும்பம் கொண்டிராமை காரணமாகவும் இத்தகையோர் செய்த பணிகள் அடுத்து வரக்கூடிய தலைமுறையினருக்குத் தெரியாமலே போய் விடுகின்றன.

இலங்கையில் சிங்கள மொழி இலக்கியப் பரப்பை விட, தமிழ் மொழி இலக்கிய பரப்பிலே இதனை வெகுவாக அவதானிக்கலாம். இலங்கையில் தமிழ் வளர்ப்போர் எனும் பட்டியலை பட்டம், பதவிகள் ஒரு புறம் தீர்மானிக்கையில், மறுபுறம் அரசியல்வாதிகளையும், ஊடகங்களையும் காக்காய் பிடிப்போராலேயே பெருமளவில் நிர்ணயிக்கப்படுகின்றன.

ஒரு மொழியின் இலக்கியம் வளரவேண்டும் என்றால் படைப்பாளிகளால் மாத்திரமே அது சாத்தியப்படப் போவதில்லை. ஒரு மொழியின் ஆக்கங்கள் இன்னுமொரு தலைமுறையினரைச் சென்றடையக்கூடிய வகையில் அவை பாதுகாக்கப்பட வேண்டியதும், ஆவணமாக்கப்பட வேண்டியதும் அத்தியாவசியமானதாகும். இத்தகைய பணிகளைப் புரிபவர்களாலேயே எதிர்கால சந்ததியினருக்கு முன்னைய பரம்பரையினரின் ஆளுமைகளையும், ஆற்றல்களையும் இனங்கண்டு கொள்ளக் கூடியதாக இருக்கும். எனவே ஒரு மொழியின் வளர்ச்சிப் போக்கில் இத்தகையவர்களை இனங்காண வேண்டியது மிக மிக அவசியமானதொன்றாகும்.

பெரிய கல்விமான்களாக இல்லாமலும், பட்டம் பதவிகளை வகிக்காமலும் தமது அன்றாடப் பொருளாதாரத்தேவையை சிரமத்துடன் நிவர்த்தித்துக் கொண்டும் தமிழ் இலக்கியத்தை பாதுகாக்க வேண்டும் என்று உழைக்கும் ஒரு சிலர் எம்மிடத்தில் இருக்கின்றார்கள். இவர்களாலும் தமிழ் இலக்கிய வளர்ச்சிப் போக்கு பாதுகாக்கப்பட்டுள்ளதென்ற உண்மையை மறைக்க முனைவதை கௌரவமாகக் கருதமுடியாது. அவை எமது இயலாமையின் வெளிப்பாடாகவே இருக்கப்போகின்றன.

இந்த அடிப்படையில் ஈழத்துத் தமிழ் எழுத்தாளர்களினதும், தமிழை வளர்க்கும் கலைஞர்கள், ஊடகவியலாளர்களினதும் விபரங்களைத் தொகுத்து வரும் என்னால் தமிழ் நூல்களைப் பாதுகாக்கவென பல வழிகளில் பாடுபட்டு, பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி சேவை புரிந்த ஓ.எஸ்.எம். அலி அவர்களை இனங்காட்டாமல் இருக்க முடியாது.

ஓ.எஸ்.எம். அலி அவர் எழுதவில்லை -
ஆனால், ஈழத்துத் தமிழ் எழுத்துக்களைப் பாதுகாக்க அரும்பாடுபட்டுள்ளார்.

ஓ.எஸ்.எம். அலி அவர் பெரிதாகக் கற்கவில்லை -
ஆனால், பல கல்விமான்களுக்கு ஒத்துழைப்பாளராக இருந்துள்ளார்.

ஓ.எஸ்.எம். அலி அவர் நூல்களை வெளியிடவில்லை -
இருப்பினும் இலங்கையில் வெளியிடப்படக்கூடிய நூல்களை தேசிய ரீதியிலும் சர்வதேச ரீதியிலும் சந்தைப்படுத்துவதில் தனது வாழ்நாளில் பெரும்பகுதியை செலவழித்துள்ளார்.

இப்படிப்பட்டவர்களின் தியாகங்களாலும், தமிழ் இலக்கியத்தைப் பாதுகாக்க வேண்டும் என்ற உண்மையான மனோநிலையினாலுமே தமிழ் இலக்கியம் பாதுகாக்கப்பட்டு வருகின்றது என்று கூற நாம் வெட்கப்படவோ அல்லது போலி கௌரவத்திற்காக - வரட்டுத்தனமான முறையில் அதனை மூடி மறைக்கவோ தேவையில்லை. ஓ.எஸ்.எம். அலி போல இன்னும் எத்தனையோ பேர் இருக்கலாம். இவர்களையும் எமது ஆய்வாளர்கள் தேடி இவர்களின் பணிகளை மதிப்பீடு

செய்வார்களாயின் அதுவும் இலங்கைத் தமிழ் வளர்ச்சி பற்றிய ஆய்வுக்குச் செய்யும் மாபெரும் பணியாகவே இருக்கும்.

ஓ.எஸ்.எம். அலி அவர்கள் ஒசைன் மொஹிடீன், ஹசன் பாத்துமா தம்பதியினரின் புதல்வராக 1933ம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் இலங்கையின் மலையகப் பகுதியான பசறையில் பிறந்துள்ளார். கிடைக்கும் தகவல்களின்படி இவரின் தந்தையார் இவர் பிறக்கும் போது ஓரளவு வசதியான நிலையில் இருந்தாலும்கூட, 1936ம் ஆண்டு உலக பொருளாதார மந்தநிலையால் பெருமளவு பாதிக்கப்பட்டதாகவே தெரியவருகின்றது. இதனால் இவர் பாடசாலைக் கல்வியை பெற்றிருப்பார் எனக் கருத முடியாது. இவரின் சிறு வயது அனுபவங்களை பெறுவதற்கு பல முயற்சிகளை மேற்கொண்ட போதிலும்கூட, ஆரம்பப் பகுதி குழப்பங்கள் நிறைந்த பகுதியாக இருப்பதன் காரணமாக ஆரம்பப் பகுதியை தொட்டுச் செல்ல ஓ.எஸ்.எம். அலி விருப்பம் காட்டவில்லை. அவை ஒரு மறக்கப்பட்ட சம்பவமாகவே அவருக்கிருந்தது.

1936ம் ஆண்டில் அல்லது அதற்குப் பின்னால் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி காரணமாக கூடிய மன உழைச்சல்களுக்கும், வேதனைகளுக்கும் மத்தியில் அகப்பட்டிருந்த ஒரு ஜீவனாக தனது பாலர் பராயத்தைக் அனுபவித்துள்ள ஓ.எஸ்.எம். அலி சுமார் ஆறாண்டுகள் தென்னிந்தியாவில் இருந்துள்ளதாகவும் அறியமுடிகின்றது. அதன் பின்பு 12ஆவது வயதில் கண்டி மாவட்டத்தின் அலதெனிய எனுமிடத்துக்கு இவர் அழைத்து வரப்பட்டு ஒரு கடையில் கொக்கோ விதைகளுக்குச் சாயம் ஊட்டுவதற்கும், சமயற்காரர்களுக்கு உதவியாளனாக இருப்பதற்கும் பயிற்சியளிக்கப்பட்டுள்ளார்.

சிறுபராயத்தில் வேலை செய்த இடத்தில் முதலாளிமாரின் கடினமான போக்கினால் படிக்க வேண்டும் என்று இவரிடம் காணப்பட்ட ஆர்வம் அடக்கப்பட்டுள்ளது. இவரது 13வது வயதில் இவர் கொழும்புக்கு அழைத்து வரப்பட்டுள்ளார். அன்று முதல் இன்று வரை கொழும்பு நகரை வசிப்பிடமாகக் கொண்டு பல பகுதிகளில் வாழ்ந்து தற்போது கஹடோவிட்ட ஒகடபொலயில் தனது மகளுடன் வசித்து வருகின்றார்.

இது பற்றி இவர் குறிப்பிடுகையில் ‘‘பல தொழில்துறைகளில் என்னை ஈடுபடுத்தி, பயன்கண்டு, எனக்கு அனுபவ அறிவினைப் பெற்றுத் தந்த தொழில் உரிமையாளர்கள் - நீ படித்து உத்தியோகத்திற்கா போகப் போகின்றாய்? அதைவிட நாங்கள் தரக்கூடிய அனுபவ அறிவு உனது வாழ்க்கையை வளப்படுத்த உதவுமென’’ உபதேசித்துள்ளனர்.

‘‘கல்வி வளர்ச்சியில் சிரத்தை கொள்ளாது என்னை பாடசாலைக்கு அனுப்புவதற்கும் மறுத்துவிட்டனர். எனது முதலாளிமார் அனைவரும் குறைந்தளவு கல்வி கற்று தொழில் அதிபர்களாக வளர்ச்சிகண்டவர்கள். எனது ஆதங்கத்தைப் புரிந்துகொள்ளக்கூடிய நிலையில் அவர்கள் இருக்கவில்லை. அதனால் 1960ம் ஆண்டு வரை அவர்களின் கட்டுப்பாட்டினுள் முடங்கிக் கிடந்தேன் ’’ என்று கூறும் ஓ.எஸ்.எம். அலி ‘‘1960ல் நான் நானாக தனித்து நின்று செயல்பட்டு இலக்கியத் தேட்டத்தில் வளம்காண முற்பட்டேன். அதற்கு உற்ற துணையாக டாக்டர் மு. வரதராசன், கி.ஆ.பெ.விஸ்வநாதன், பெ. திருகூட சுந்தரம்பிள்ளை, காண்டேகர், சரச்சந்திரன் ஆகியோரின் நூல்கள் உதவின. இதனால் நூல்கள் தேடலில் ஆர்வம் கொண்டேன். இலக்கிய தாகம் என்னுள் மேலோங்கியது. ’’ என்கிறார்.

ஓ.எஸ்.எம். அலியின் ஆரம்ப கால அனுபவங்களைப் பார்க்குமிடத்து அவர் கற்கவில்லை. ஆனாலும், எழுத வாசிக்க கற்றுக் கொண்டதன் பலனாக தனது சுயமுயற்சியினால் எழுத்து வாசிப்புத்துறையை தானே அபிவிருத்தி செய்து கொண்டுள்ளார். முயற்சி இருந்தால் ஒரு மனிதனால் எதனையும் சாதிக்க முடியும், வாசிப்பு ஒரு மனிதனின் அறிவுச் சிந்தனையை துலக்கமடையச் செய்யும் என்பதற்கு இவரின் செயற்பாடுகள் ஒரு சிறந்த எடுத்துக்காட்டு.

1955ம் ஆண்டில் COLOMBO, FORT, CHATHAM ST, பணிபுரிந்த காலப்பகுதியில் தான் ஆங்கில வார்த்தைகளை உச்சரிப்பதற்கு பழகியுள்ளார். அதிகமான ஆங்கிலப் படங்களை வாரத்திற்கு இருமுறை பார்த்ததன் பயனாக ஆங்கில வசனங்களை ஓரளவு புரிந்து கொள்ளக்கூடிய நிலை ஏற்பட்டது. தன் சுய தேடலால் அறிவைப் பெற்றுவந்த இவர், 1960ல் ஏ.ஸீ.ஜெய்லான் எனும் மார்க்கப் போதகரிடம் மார்க்க அறிவினைப் பெற்றுக்கொண்டு தெளிவான சிந்தனைக்குட்பட்டு தன்னைத்தானே செப்பனிட்டுக் கொண்டார்.

பல தொழில் துறைகளில் பெற்ற, பயிற்சி அனுபவத்தின் காரணமாக முயற்சி எடுத்தால் எதனையும் சாதிக்க முடியும் என்ற மனோநிலை இவருள் வளர்ந்துள்ளது. கெமராக்களை விற்பனை செய்வதன் மூலம் அதனை கையாள்வதற்கும் இவர் பயிற்சி பெற்றுள்ளார். இக்கால கட்டத்தில் ஒரு படப்பிடிப்பாளராக ஆர்வத்துடன் செயற்பட்டு வந்த இவர் இளம்பிறை எம்.ஏ. ரஹ்மானுடன் நெருக்கமான நட்புறவினை வளர்த்துக் கொண்டுள்ளார். இலக்கியக் கூட்டங்களில் பங்குகொண்டு படப்பிடிப்பாளராக பணிபுரியும் வாய்ப்புக்கள் கிடைத்தமை இவரின் பிற்கால செயற்பாடுகளுக்கு உறுதுணையாக அமைந்துள்ளன.

இத்தகைய பின்னணியில் இருந்தபோது இலங்கையில் பிரபல நாடகத்தயாரிப்பாளர் ''சானா'' தயாரித்தளித்த **பதியூர் ராணி, காற்று** போன்ற நாடகங்களின் நிகழ்வுகளை படம்பிடிக்கும் கடமையில் ஈடுபட்டுள்ளார். சானாவினால் ரேடியோ மாமா சரவணமுத்து, நடராசா, பண்டிதர் இ. இரத்தினம், என்.எஸ்.எம். ராமையா போன்றோரின் அறிமுகம் இவருக்குக் கிடைத்துள்ளது. மேலும் முற்போக்கு இலக்கியக் கூட்டங்களில் இவர் மனநிறைவுடன் பணியாற்றியமையினால் க. கைலாசபதி, கா. சிவத்தம்பி, சில்லையூர் செல்வராஜன், காவலூர் ராசதுரை, பிரேம்ஜீ, இளங்கீரன், எச்.எம்.பி. முஹைதீன், அ.நா. கந்தசாமி, டொமினிக் ஜீவா, ராமநாதன், ஊர்கவி, நீர்வை பொன்னையன், எஸ். பொன்னுத்துரை, கனகசெந்திநாதன், எப்.எக்ஸ்.ஸீ. நடராசா, நவாலியூர் சோ. நடராசன், நாவற்குழியூர் நடராசன், ஈழத்துசோமு, சி. லட்சுமண ஐயர், எஸ்.எம். கமால்தீன், எம்.எம். சமீம் போன்றோருடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பும் உருவாக்கியுள்ளது.

இத்தகையோரின் அறிமுகம் பிற்காலப் பகுதியில் அலியும் செ. கணேசலிங்கமும் இணைந்து செயற்பட்ட இலக்கிய வளர்ச்சியின் பங்களிப்புக்கு உந்துதலாக அமையுமென அன்று தான் உணரவில்லை எனக் கூறும் ஓ.எஸ்.எம். அலியின் கருத்திலிருந்து பிற்காலத்தில் இவரால் நிகழ்த்தப்பட்ட செயற்பாடுகளுக்கும், இலக்கிய ஆர்வம், இலக்கிய பாதுகாப்பு போன்ற நடவடிக்கைகளுக்கும் முற்போக்கு எழுத்தாளர் செ. கணேசலிங்கம் காரணகர்த்தாவாக இருந்துள்ளார் என்பதை உணர முடிகின்றது.

முற்போக்கு எழுத்தாளர் செ. கணேசலிங்கம் அவர்களின் வழிகாட்டல்களுடன், தான் 1960ம் ஆண்டுகளில் இலக்கியக் காப்பாளராக மாறிய விதம் பற்றி ஓ.எஸ்.எம். அலி பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

''ஈழத்து சோமு, எம்.ஏ. ரஹ்மான் ஆகியோருடன் நானும் இணைந்து வரதரின் வெளியீடான **செய்தி** இதழுக்கு கொழும்பு மாநகர நிகழ்வின் தகவல்களை சேகரித்துக் கொடுக்கும் பணியில் ஈடுபட்டோம். இது எனக்கு மிகவும் பயனுள்ள ஒரு செயற்பாடாக அமைந்தது. அதனால் மகிழ்ச்சியுடன் பணிபுரிந்தேன். செயல்திறன் கொண்ட ஆற்றல் உள்ள மனிதனுக்கு அவனது ஆற்றலை வெளிப்படுத்தக்கூடிய ஒரு களம் அமையாதபட்சத்தில் அவன் முடங்கிக்கிடப்பான் என்ற உண்மையை உணர்ந்தேன். சென்னை பேனா நண்பர்கள் சங்கத்தின் ஓர் அங்கத்தினராக 1961ல் இணைந்தேன். பல நண்பர்களின் தொடர்பும் ஏற்பட்டது. அவர்களுடன் ஏற்பட்ட தொடர்பு எனது எழுத்தாற்றலை வளம்படுத்தியது. பேனா நண்பர் சங்கத்தின் செயலாளர் அன்பு பழநீ அவர்கள் ஒரு நிகழ்வில் பங்குபற்றுவதற்காக கொழும்பு மாநகருக்கு வருவகை தந்தார். என்னை நேரில் சந்தித்த அவரின் சந்திப்பு என் வாழ்கையில் ஒரு திருப்பத்தை ஏற்படுத்தியது. அக்கறை கொண்டு செ.கணேசலிங்கத்தை அறிமுகம் செய்து அவரே எங்களின் இணைப்பிற்கு வழியமைத்து உதவினார். இந்நிகழ்வினை என் வாழ்நாளிலே மறக்க முடியாது. ''

''1962ல் இடக்கையில் கேமராவை தூக்கிக் கொண்டு ஓடித்திரிந்த என்னை செ.கணேசலிங்கம் அழைத்துச் சென்று பாரதி புத்தகசாலை, விஜயலட்சுமி புத்தகசாலை ஆகியவற்றில் அமர்த்தினார். புத்தகசாலைகள் இலக்கியச் சோலைகளாக மிளிர்ந்தன. புத்துணர்வுபெற்று செயற்பட்டேன். உண்மையும், நேர்மையும் செயலில் தென்படும் பொழுது வெற்றிகரமான முன்னேற்றம் நிச்சயம் உண்டு என்பதை தெளிவாக உணர்ந்தேன். ''

புத்தகசாலை பொறுப்பு அனுபவம் இவருக்குப் புதிதாக இருந்தாலும் கூட திரு. செ. கணேசலிங்கம் எதிர்பார்த்ததைப் போல அலி சிறப்பாகச் செயலாற்றினார். எந்த ஒரு தொழில்துறையிலும் நம்பிக்கையுடன் உள்நுழைந்து விசுவாசத்துடனும், முயற்சியுடனும் செயற்பட்டால் வெற்றிபெறலாம். என்பதை இவரது நடவடிக்கைகள் உணர்த்தின. இதனால் இவரின்

பொறுப்புணர்வும் உத்வேகமும் செ.கணேசலிங்கம் அவர்களை வெகுவாகக் கவர்ந்தது இருவரிடையேயும் இறுக்கமான நட்பு பரிணமித்தது.

''எங்களின் நோக்கம் தொழில் வளர்ச்சி, செ.க. எனது செயற்பாடுகள் எதிலும் தலையிடாது சுயமாக நான் செயற்பட இடமளித்து உதவிக்கரம் நீட்டினார். அதன் பயனாக பல கோணங்களில் நான், வளர்ச்சி பெற்றேன். எங்களிடையே எந்தவிதமான பிரச்சினைகளும் எழுந்ததில்லை. அரவணைப்புடன் செயற்பட்டேன் '' என்று கூறும் போது அலியின் விழிகளில் இன்றும் நன்றியுணர்வுடன் கண்ணீர் கசிகின்றது. எந்த ஒரு மனிதனையும் சரியான முறையில் நெறிப்படுத்தி அவனது திறமைகளைச் சரியான முறையில் எடைபோட்டு சுயமாக செயற்பட விடுமிடத்து சிறந்த பலாபலன்களை தானும் அடையலாம். தனது சமூகமும் அடையலாம். என்பதற்கு கணேசலிங்கம் அவர்கள் ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக இங்கு விளங்குகின்றார்.

செ.க.வின் அழுத்தத்தின் காரணமாகவே ஓ.எஸ்.எம். அலி அவர்கள் 08.05.1966ல் திருமண பந்தத்தில் இணைந்தார். இவரின் திருமணத்தை செ.க. முன்னின்று நடத்தி வைத்து மகிழ்ந்தார். இவரின் மனைவி ஒரு நடுத்தர குடும்பத்தைச் சேர்ந்தவர். ஒரு கொள்கைவாதிக்கு ஏற்ற பண்பாக மனைவியின் குடும்பத்தாரிடம் பணத்தையோ, பொருட்களோ எதிர்பாராமல் வாழ்க்கையில் இணைந்தார். தற்போது இத்தம்பதியினருக்கு மூன்று ஆண் மக்களும், ஒரு மகளும் உள்ளனர். அனைவரும் திருமணம் முடித்து தனிக்குடித்தனம் நடத்துகின்றனர். மகளின் குடும்பத்துடன் இவரும், இவரது மனைவியும் இணைந்துள்ளனர். இவரின் இரண்டாவது மகன் M.A. பட்டதாரி. மகள் Nursury Training Diploma தகுதிபெற்ற ஆசிரியை. மற்றைய இருவரும் தொழில் நிறுவனங்களில் பணிபுரிந்து வருகின்றனர்.

இலங்கைத் தமிழ் நூல்களை சந்தைப் படுத்தும் வசதி வாய்ப்புகள் 1960ம் ஆண்டுகளில் எவ்வாறு இருந்தன என்று ஓ.எஸ்.எம். அலியிடம் நான் கேட்ட போது ''கொழும்பு மா நகரிலுள்ள தமிழ் புத்தக விற்பனையாளர்கள் பாட நூல்கள், உப பாட நூல்கள் தவிர்ந்த ஏனைய இலக்கிய நூல்கள், இலங்கை வெளியீடுகளின் விற்பனைக்கு இடமளிக்க மறுத்தனர். நூல்களை விருப்பத்துடன் ஏற்றுக்கொள்வதற்கும் மறுத்தனர். அதன் விளைவாக இலங்கை வெளியீடுகள் அவர்களின் மத்தியில் மதிப்பிழந்து கிடந்தன. தமிழகத்து நூல்களுக்கு கொடுக்கின்ற விற்பனைச் சிரத்தை இலங்கை வெளியீடுகளுக்கு கொடுப்பதில்லை. அவர்களிடையே ஏற்பட்ட இந்த அலட்சியப் போக்கு வேதனையைத் தந்தது. ஈழத்து இலக்கிய முன்னோடிகளின் நூல்கள் 1966ம் ஆண்டுவரை விற்பனைக்குக் கிடைக்கக் கூடியதாக தேங்கிக் கிடந்தன. இது மிகவும் வேதனையாக இருந்தது. இதைப் பற்றி முற்போக்கு சிந்தனையுள்ள ஆக்க இலக்கிய கர்த்தாக்கள் சிந்தித்தார்களா? இல்லையே. ஆனால் இந்த நூல்களின் விற்பனைக்கு நாங்கள் உதவினோம் '' என்கிறார்.

இலங்கையின் தமிழ் நூல் விற்பனையை நன்கு அறிந்து வைத்திருந்த அலி, திரு. கணேசலிங்கம் அவர்களுடன் இணைந்து இலங்கையில் பதிப்பித்த இலக்கிய நூல்களின் விற்பனை விநியோகம், அறிமுகத்தில் கூடிய கவனஞ் செலுத்தி வந்தார். இதற்காக இவர் கடுமையாக உழைத்தார். ஈழத்து தமிழ் நூல்களைத்தேடி அவற்றை சந்தைப்படுத்த முற்பட்ட ஓ.எஸ்.எம். அலி இங்கு கொமிசன் வலையின் கீழ் விழவில்லை. ஈழத்து எழுத்தாளர்களுக்கு உதவ வேண்டும் என்பது மாத்திரமே அவரின் ஒரே குறிக்கோளாக இருந்தது.

தமிழ் நூல்களைச் சந்தைப்படுத்தல்

இந்நிலையில் 1968ல் U.S. LIBRARY OF CONGRESS இலங்கையில் பதிப்பித்த நூல்களின் மீது கவனஞ் செலுத்தினர். ஆங்கில, சிங்கள, தமிழ் நூல்களை (சிறுவர் நூல்கள் மொழிபெயர்ப்பு நூல்கள் தவிர்த்து) விலை கொடுத்து வாங்குவதற்கு முன் வந்தனர். நூற்பிரதிகள் அனைத்தையும் சேகரித்து அனுப்பி வைக்கும் பொறுப்பு LAKE HOUSE BOOK SHOP நிறுவனத்திற்குரியதாக இருந்தது. அவர்கள் தமிழ் நூல்களின் சேகரிப்பில் அக்கறை கொள்வதில்லை என்ற தகவல்களை நிறுவனத்தில் காசாளராக பணிபுரிந்த தென்புலோலியூர் மு.கணபதிப்பிள்ளையின் சகோதரர் மு. திருநாவுக்கரசு மூலமாக அறியக் கூடியதாக இருந்துள்ளது.

பொதுவாக ஆங்கில நூல்களின் விநியோகத்தின் மூலமாக கிடைக்கக்கூடிய ஆதாயப் பெறுமானம் தமிழ் நூல்களின் மூலமாக கிடைப்பதற்கு வாய்ப்பில்லை. தமிழ் நூல்களின் மூலமாக அதிக இலாபத்தை எதிர்கொள்ள முடியாது என்பதுதான் லேக்ஹவுஸ் கண்ட உண்மை.

U.S. LIBRARY OF CONGRESS இலங்கை பிரதிநிதியாக பணியாற்றிய MR. WILFRED M. GUNASEKARA என்பவரை அலி நேரில் சந்தித்து தமிழ் நூல்களின் விநியோக சிரமத்தை விளக்கமாக எடுத்துரைத்து அவரது ஆதரவைப் பெற்றெடுத்துள்ளார். நூல் பிரதிகளை அவரிடம் நேரடியாக கைளித்ததன் பயனாக தமிழ் நூல்களின் விநியோகப் பொறுப்பினை இவர் ஏற்றுக்கொண்டு W.M. GUNASEKARA வின் உதவியாளராகவும் பணிபுரிந்துள்ளார். U.S.L.C. NEW DELHI கிளையில் FIELD DIRECTOR ஆக பணியாற்றியவர் MR. JERRY R. JAMES என்பவர்.

1964 முதல் 1979 வரை இலங்கையில் பதிப்பித்த தமிழ் நூல்களை (சிறுவர் இலக்கியம், மொழிபெயர்ப்பு தவிர்த்து) சிறுகதை, நாவல், கவிதை, இலக்கிய கட்டுரைகள், சமய நூல்கள் அரசியல், வரலாற்று நூல்கள் எனப் பல தரப்பட்ட 781 நூல்களை அலி 1968 முதல் 1980 வரை சேகரித்துக் கொடுத்துள்ளார். தொடர்ந்தும் இப்பணியாற்ற இவரது உடல் நிலையும், பொருளாதார நெருக்கடியும் இடந்தரவில்லை.

MISS. PAULINE TINALESNIK (NEW YORK PUBLIC LIBRARY, ORIENTAL DIVISION) என்பவருடன் 1977ல் இவருக்கு தொடர்பு ஏற்பட்டது. 18.11.1977ல் அவர் இலங்கை வந்த போது அலி அவரைச் சந்தித்துள்ளார். இந்த சந்திப்பிற்கு நூலகர் தம்பிராஜா (U.S. LIBRARYல் அன்று பணிபுரிந்தவர்) உதவியாக இருந்தார் என்று அலி கூறுகின்றார். அந்த பெண்மணியிடம் இலங்கையில் பதிப்பித்த தமிழ் நூல்களில் (நாவல், சிறுகதை, நாடகம், கவிதை, இலக்கியக் கட்டுரைகள், சமய நூல்கள், அரசியல், வரலாறு, வாழ்க்கை சரிதம்) 184 பிரதிகளைக் கையளித்துள்ளார். அவை இன்றும் நியுயோர்க் பொது நூலகத்தில் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

இவ்வாறாக இலங்கை நூல்களின் பதிப்பு, விற்பனை, விநியோகம், அறிமுக வளர்ச்சிக்கு செ. கணேசலிங்கம் - ஓ.எஸ்.எம். அலியின் கூட்டுப் பங்களிப்பினை இன்றைய ஆக்க இலக்கிய ஆர்வலர்கள், விற்பனையாளர்கள் அறிந்திருக்கிறார்களா என்பது கேள்விக்குரிய விடயம் தான்.

தமிழமுது, சிரித்திரன், இளந்தென்றல், நுட்பம், களனி, கதம்பம், தாயகம், மல்லிகை, நெய்தல், சிந்தனை, இளங்கதிர், அமுதா, குமரன், மாணிக்கம், மலர், ஏடு, குங்குமம், காரை ஒளி, பகுத்தறிவு, இந்து மாணவன், செய்தி, சுதந்திரன் ஆகிய இதழ்களையும் சேகரித்து U.S. LIBRARY OF CONGRESS நிறுவனத்திற்கு இவர் அனுப்பியுள்ளார்.

ஆவணவாக்கல் முயற்சி

U.S. LIBRARY OF CONGRESS நிறுவனத்திற்கு இலங்கையில் பதிப்பித்த தமிழ் நூல்களை சேகரித்து அனுப்பிக் கொண்டிருந்த காலப்பகுதியில் நூல்களைப் பற்றிய தகவல் திரட்டு ஒன்றினை ஒழுங்குபடுத்த வேண்டும் என்ற ஆர்வம் இவருள் எழுந்தது. அதன் காரணமாக நூல்களைச் சேகரித்து அதற்குரிய தகவல்களையும் குறிப்பெடுத்து வந்துள்ளார். இவரின் இந்த நூல் விபரங்கள் ஆவணப்படுத்தும் முயற்சிக்கு குல. சபாநாதன் அவர்கள் தன்னிடமிருந்து பழைய நூல்கள் அனைத்தையும் கொடுத்துதவியுள்ளார். இவரின் இந்த முயற்சியைத் தொடர்ந்தும் மேற்கொள்ள சி. வைத்தியலிங்கம், க.கைலாசபதி போன்றோரும் ஆர்வமூட்டியுள்ளனர்.

1978ல் ஆரம்பித்து 1988 வரை கடுமையாக உழைத்து திரட்டிய சுமார் 1000 நூல்களுக்கான தகவல்கள் அனைத்தையும் முழுமையாக இவரால் பாதுகாத்துக்கொள்ள முடியாமல் போயுள்ளது. எஞ்சியுள்ள குறிப்புக்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற கவன ஈர்ப்பினால் குமரன் பதிப்பக உரிமையாளர் குமரன் அவர்களிடம் அவற்றை அண்மையில் இவர் கையளித்துள்ளார். இச்சந்தர்ப்பத்தில் தான் குமரன் லண்டனில் வசித்து வரும் நூல்தேட்ட ஆசிரியர் திரு. என். செல்வராஜா அவர்களுடன் தொடர்புகொண்டு அக்குறிப்புக்களை அவருக்கு வழங்கியுள்ளார்.

அத்தகவல்கள் செல்வராஜாவுக்கு விலைமதிக்க முடியாத ஒரு பொக்கிஷமாக இருந்துள்ளன. உடனடியாக அவற்றை தனது நூல்தேட்டத்தில் சேர்க்காமல் அந்நூல்கள் பற்றி தனது பாணியில் ஆராய்ந்தார். இதற்கென்றே ஒருமாத விடுகை பெற்று லண்டனிலிருந்து இலங்கை வந்து பேராதனைப் பல்கலைக்கழக நூலகத்தில் ஏழாவது நூல்தேட்டத்திற்கான விபரங்களைத் திரட்டிய அதேநேரம், அலியின் குறிப்புகளையும் பரிசீலித்து அவற்றை நூல்தேட்டம் 06இல் சேர்த்திருக்கின்றார். நூல்தேட்டம் பாகம் 06இல் 300க்கும் மேற்பட்ட நூல்கள் பற்றிய குறிப்புகள் அலியினால் வழங்கப்பட்டவையாகும். உரியவரிடம் போய்ச் சேர்ந்தமையினால் ஓ.எஸ்.எம். அலியின் முயற்சி இங்கு வீண்போகவில்லை. மேலும் ஒரு தொகுதி பதிவுக் குறிப்புகளை அலி என்னிடம் கையளித்துள்ளார்.

இந்த விபரங்களைத் திரட்டும்போது அலி எத்தகைய மனோநிலையில் திரட்டினாரோ தெரியவில்லை. அவரால் திரட்டப்பட்டுள்ள பல நூல்கள் இன்று ஆவணவாக்கல் சபையிலோ, தேசிய சுவடிகள் கூடத்திலோ, பேராதனைப் பல்கலைக்கழகத்திலோ இருப்பில் இல்லை. இந்த அடிப்படையில் அழிந்துபோன நூல்கள் என்று கூறக்கூடிய பல நூல்களின் விபரங்களை அலி சேகரித்து வைத்திருந்தமை தமிழ் இலக்கியப் பரப்பில் உன்னதமான பணியென்றால் மிகையாகாது. இதுமாத்திரமல்லாமல் இலங்கைப் பாராளுமன்றத்தில் சிறுபான்மையினத்தவர்களின் பிரதிநிதித்துவம் பற்றியும் இலங்கை அரசியல் நிலைமைகள் பற்றியும் பெறுமதியான தகவல்களை அவர் திரட்டி வைத்துள்ளார். இத்தகைய சில தகவல்கள் இன்று சிலரால் பேர் குறிப்பிடப்படாமல் பயன்படுத்தப்பட்டும் வருகின்றன. ஆனால், நூலகவியலாளர் என். செல்வராஜா தனது ஒவ்வொரு குறிப்பிலும் பின்னால் அலியின் பெயரைப் பிரஸ்தாபித்திருப்பது ஒரு சிறப்பம்சமாகவே கருதலாம். ஓ.எஸ்.எம். அலியின் குறிப்பிட்ட பணியின் பெருமானத்தையும், பெறுமதியையும் உணர்ந்தவர் என்ற வகையில் செல்வராஜாவின் இந்த முன்மாதிரியை இவரின் தேடல்களைப் பயன்படுத்துபவர்களும் பின்பற்றுவது சாலப்பொருத்தமாக இருக்கும்.

ஓ.எஸ்.எம். அலி ஒரு படிக்காத மேதையாக ஈழத்து தமிழ் இலக்கிய வரலாற்றுப் பரப்பில் ஒரு உச்ச பணியினை ஆற்றியுள்ளார் என்பதை எதிர்கால சந்ததியினர் தெரிந்துகொள்வர். அலியின் இந்த முயற்சிகள் இன்றைய தலைமுறையினருக்கும் ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும். தமிழ் நூல்கள் பாதுகாக்கப்பட வேண்டும், தமிழ் நூல்களின் வரலாறுகள் பாதுகாக்கப்பட வேண்டும், அவை திரட்டப்பட்டு ஆவணவாக்கப்பட வேண்டும் என்று மேடைகளில் வாய்கிழிய கோசமிடுபவர்களும், எழுத்துக்களில் பதிப்பவர்களும் இத்தகைய முயற்சிகளில் எத்தகைய வழிகளில் ஈடுபட்டுள்ளனர் என்பது இதுவரை ஒரு கேள்விக்குறியாகவேயுள்ளது.

ஓ.எஸ்.எம். அலியின் தொடர்ச்சியான இலக்கியப் பங்களிப்புகள்

ஏப்ரல் 1998ல் தினகரன் வாரமஞ்சரியில் தொடராக வெளிவந்த தெளிவத்தை ஜோசப்பின் மலையகச்சிறுகதை வரலாறு என்ற ஆய்வுக்கட்டுரை பற்றிய இவரது அபிப்பிராயத்தையும் ஆலோசனைகளையும் மிகவும் ஆர்வத்துடன் அவருக்கு வெளிப்படுத்தியுள்ளார். கட்டுரைத் தொகுதி பெப்ரவரி 2000ல் நூல்வடிவம் பெற்றதன் பின் அந்நூலில் தெளிவத்தை ஜோசப் பின்வருமாறு குறிப்பிட்டிருந்தார்.

“இவ்வளவு பேர் இந்தக் கட்டுரைத் தொடரை விடாமல் வாசித்து வருகின்றார்களே என்னும் நினைவே ஓர் இலக்கிய இனிமையாக இருந்தது. அவர்களுக்கெல்லாம் என் மனமார்ந்த நன்றி உரித்தாகிறது. தொடராகவரும் நாவல் மட்டுமா காத்திருந்து வாசிக்கச் செய்யும், கட்டுரைத் தொடரும் கூடத்தான் என்பதற்கு இந்தத் தொடர் ஒரு சான்று என்று ஓர் அன்பர் எழுதி இருந்தார். மகிழ்ச்சியாக இருந்தது. ஒரு ஞாயிறு தினகரனில் இந்தக் கடிதம் வந்திருந்தது. அடுத்தநாள் திங்கள் ஆபீசுக்குள் நுழையும் போதே கேட்டில் செக்கியூரிட்டி ஆபீசர் ஒரு கடித உறையைக் கொடுத்து நேற்று மாலை ஒருவர் கொடுத்துவிட்டுப் போனதாகக் கூறினார். கடிதவுறை அசாதாரண மொத்தமாக இருந்தது. பிரித்துப் பார்த்தால் பத்துப் பன்னிரண்டு புல்ஸ்கேப் தாள்கள். இந்தத் தொடர் ஆரம்பித்த முதல் வாரத்தில் இருந்து அதுவரை வெளிவந்திருந்த பத்துவாரக் கட்டுரைகள் பற்றிய ஒரு விமர்சனம் அது. எனக்குப் பிரமிப்பாக இருந்தது.”

“பேசபடாத ஒரு மக்கள் இலக்கியம் பற்றி பேசத் தொடங்கியிருக்கின்றீர்கள். உரத்துப் பேசுங்கள். வாழ்த்துக்கள். என்னிடம் சில பழைய புத்தகங்கள் இருக்கின்றன. அடுத்தவாரம் கொண்டு வந்து கேட்டில் கொடுப்பேன். பயன்படும் என்றால் சந்தோசப்படுவேன். புத்தகங்கள் வைத்துக்கொள்ள

அல்ல வாசிப்பதற்கு மட்டுமே'' என்று கடிதத்தை முடித்திருந்தார். அதன் பிறகும் அவருடைய விமர்சனங்கள் தொடர்ந்து வந்து கொண்டே இருந்தன. கட்டுரைத் தொடரை வாசிப்பதென்பது வேறு. நேரத்தை ஒதுக்கி அது பற்றி எழுதி என்னிடம் கொண்டு வந்து சேர்ப்பிப்பது என்பது எத்தனை ஆர்வம்! ஓ.எஸ்.எம். அலி என்னும் அந்த நண்பருக்குப் பிரத்தியேகமாக நன்றி கூறக்கடமைப்பட்டுள்ளேன். '' *(நூல்: மலையகச்சிறுகதை வரலாறு, தெளிவத்தைஜோசப், துரைவி வெளியீடு, பெப்ரவரி 2000)*

இத்தகவல் ஓ.எஸ்.எம். அலியின் மற்றுமொரு பக்கத்தைக் காட்டுகின்றது. தமிழ் இலக்கியமென்னும் பரப்பில் அவருக்கிருந்த ஆற்றலையும் ஆர்வத்தையும் உணர்த்தக்கூடிய சிறு உதாரணத்தையே மேலே சேர்த்துள்ளேன். அதாவது தமிழ் இலக்கியப் பரப்பில் இவருக்கு இருக்கும் ஆர்வத்தை வெளிப்படுத்தக் கூடிய நிகழ்வாக இது அமையலாம்.

ஓ.எஸ்.எம். அலி அவர்கள் அண்மைக்காலமாக செ. கணேசலிங்கம் அவர்களின் மகனான க. குமரன் அவர்களின் பதிப்பக நூல்களுக்கு மெய்ப்புத் திருத்துனராக (2002ல்) செயற்பட்டுள்ளார். ''பேராசிரியர் கா. சிவத்தம்பியின் **பண்டைய தமிழ்ச் சமூகத்தில் நாடகம்**- என்ற நூலின் மெய்ப்பு திருத்துனராக மூன்று மாத காலம் பேராசிரியருடன் இணைந்து அவருக்கு உதவியாளராகப் பணிபுரிந்தேன். அவருடன் இணைந்து செயற்பட்டதன் மூலமாக மனநிறைவு, தெளிவு, மகிழ்ச்சி, புத்துணர்வு பெற்றதுடன் விடயதானங்களை அமைதியாக உள்வாங்கிச் சிந்திக்கும் ஆற்றலையும் பெற்றேன். அந்த இணைப்பின் செயற்பாடு மிகவும் பயன்தரக்கூடியதாக எனக்கு அமைந்தது. அச்சமயம் எனது வசிப்பிடம் கொழும்பு 14 லும், பேராசிரியரின் வசிப்பிடம் கொழும்பு 06லும் இருந்தன. அவரது இல்லத்திற்கு சென்றடையும் பொழுது சிறிது காலதாமதம் ஏற்படுவதுண்டு. அந்த நேரத்தில் பேராசிரியர் - எனக்காக பலர் காத்துக் கொண்டிருக்கின்றனர். நான் அலிக்காகக் காத்துக் கொண்டுயிருக்கின்றேன் என்று கூறுவார். எனது ஆற்றலை உணர்ந்து மிகவும் பரிவுடன் அரவணைக்கும் உணர்வின் வெளிப்பாடாக அச்சொல்லாடல் இருந்தது. மனநிறைவை தந்தது. பேராசிரியர் தனது நூலில் இத்தொடர்பினை பின்வருமாறு வெளிப்படுத்தியிருந்தார். **தமிழ் நூலின் ஆக்கத்தின் பொழுது மிகப் பெரிதும் உதவியாளர்களில் முக்கியமானவர்கள் நண்பர் ஓ.எஸ்.எம். அலி ஆவார்கள். நீண்டகால நண்பரான இவர் மிகமிக நுண்ணிதாக இந்நூலினை வாசித்து வேண்டிய மாற்றங்களை செய்வதற்கு உதவினார். நண்பர் அலியின் உதவி மிகப் பெரியது**. ''

இந்நூலை கிழக்குப் பல்கலைக்கழக, கலைப் பண்பாட்டுப் பீட மொழித்துறையைச் சேர்ந்த அம்மன்கிளிமுருகதாஸ் தமிழில் மொழிபெயர்த்திருந்தார். அவர் ஓ.எஸ்.எம். அலியைப் பற்றி பின்வருமாறு குறிப்பிட்டிருந்தார்: **குமரன் அச்சக மெய்ப்புத் திருத்துனர் திரு. ஓ.எஸ்.எம். அலி அவர்களுக்கு எனது விசேட நன்றிகள். எனது நிர்வாகப்பளு காரணமாக கொழும்புக்கு சென்று வேலைகளை முடிக்க முடியாத சந்தர்ப்பத்தில் திரு. அலி அவர்கள் பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்களுடன் இணைந்து மிகக் கவனமாக சொற்களை அவதானித்துத் திருத்தினார். அவர்களை என்றும் மறக்க முடியாது.**

நவீன கால தமிழ் இலக்கிய கார்த்தாக்களின் நூல்கள் பற்றி ஓ.எஸ்.எம். அலியிடம் வினவிய போது அவர் கூறிய பதில் சற்று சிந்திக்க வைத்தது.

''ஆக்க இலக்கிய கர்த்தாக்கள் தங்களது ஆக்கங்களை நூல் வடிவம் பெறுவதற்காக பதிப்பகத்தாரிடம் கையளிக்கின்றனர். பதிப்பகத்தினர் அதனை பந்திகளாக அமைப்பதற்கும், பக்கங்களாக அமைவதற்கும் கணினியில் பணிபுரிபவர்களிடம் கொடுக்கின்றனர். அவர்கள் கையெழுத்துப் பிரதிகளின் எழுத்துக்களை தெளிவாக விளங்கிக் கொள்ள முடியாத சிரமத்தினால் தங்களுக்குத் தோன்றிய விதத்தில் வசனங்களை அமைத்துவிடுகின்றனர். பிழைகளும் மலிந்து விடுகின்றன'' என்றார்.

தமிழ் நூல் விற்பனை, ஆவணப்படுத்தல், மெய்த்திருத்தல் பணிகளை மேற்கொண்டு வந்த அலி உடல் நிலை குறைவு காரணமாக 2009ம் ஆண்டுடன் தனது பணியினை நிறைவு செய்துகொண்டார். தற்பொழுது இலங்கை வானொலி தேசிய சேவை முஸ்லிம் நிகழ்ச்சியில் கவிஞர் அமீர் அலியினால் நிகழ்த்தப்படும் கவிதைக்களம் நிகழ்ச்சிக்கு கவிதைகளை எழுதிவருகின்றார். இவரின் கவிதைகள் தற்போது வானொலியில் அடிக்கடி ஒலித்தவண்ணம் உள்ளன.

நூல்தேட்டம்
(தொகுதி 6)

நூல்தேட்டத்தின் முதல் ஆறு தொகுதிகளிலும் இடம்பெறத்தவறிய நூல்களின் விபரங்களை அடுத்து வெளிவரவுள்ள ஏழாவது தொகுதியில் சேர்த்துக்கொள்ள விரும்பும் நூலாசிரியர்கள், பதிப்பாசிரியர்கள், தொகுப்பாளர்கள் மற்றும் வெளியீட்டாளர்கள் தங்கள் நூலின் பிரதியொன்றை கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

N.Selvarajah
48 Hallwicks Road, Luton, Bedfordshire, LU2 9BH
United Kingdom
Telephone: (0044) 1582 703 786 E-mail: selvan@ntlworld.com

நூலின் பிரதியை லண்டனுக்கு நேரில் அனுப்பி வைக்க இயலாதவிடத்து கொழும்பிலுள்ள கீழ்க்கண்ட முகவரியிலும் நூல்களை ஒப்படைக்கலாம். காலக்கிரமத்தில் அவை லண்டனுக்கு விமானத்தபால் மூலம் எடுப்பிக்கப்படும்.

V.T.Rajaram
C/1/6 Veluvanarama Govt. Flats, Off Hampden Lane,
Wellawathe, Colombo 6.

நூல்தேட்டம் தொகுப்புகளின் பிரதான விநியோகஸ்தர்

கலாபூஷணம் பீ.எம்.புன்னியாமீன்.
சிந்தனை வட்டம், 14 உடத்தலவின்னை மடிகே, உடத்தலவின்னை 20802.
Mr. P.M.Puniameen,
No. 14, Udatalawinna Madige, Udatalavinna 20802
Telephone: 0094 812 493 892
pmpuniyameen@yahoo.com